A. M. D. G.

வருஷானுதின

அனுசரணைக்குரிய

புதுத்தியானங்கள்

முதற் புத்தகம்

TRICHINOPOLY:

...INDUSTRIAL SCHOOL PRESS

1931

Q6:444
N31
59829

✠

வருஷானுதின அனுசரணைக்குரிய புதுத்தியானங்கள்.

நமது ஆண்டவராகிய இயேசுக்கிறீஸ்து
நாதரின் சீவியத்தையும் போதகத்தையும்
ஆதாரமாகக்கொண்டு
பிரதானமாய் துறவறத்தார் உபயோகத்துக்காக

சங். புருனே வேர்க்குரிஸ்

என்னும் இயேசுசபைக் குருவானவர் இயற்றின இந்நூல்
அச்சபையைச் சேர்ந்த மற்றொருவர் தமிழில்
மொழிபெயர்த்தது.

திருத்தி எழுதப்பட்ட இரண்டாம் பதிப்பு

[முதற் புத்தகம்]

Printed and Published by Rev. Br. Joseph, S.J.,
Superintendent, St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY

1931

59829

Cum Permissu Superiorum

Imprimatur:

+ AUGUSTINUS, S. J.,

Ep. Trichinopolit

பாயிரம்

சந்நியாசிகள் கன்னியாஸ்திரிகள் பிரயோகத்துக்காக நாம் இயற்றிய இப்புதுத் தியானங்களில் நவமாய்ச் சில காரியங்களைச் சேர்க்க மனதானோம். இதின் பிரயோசனத்தை யாதோர் ஆக்ஷேபனையின்றி யாவரும் ஒப்புக்கொள்ளுவார்களென்று நம்பியிருக்கிறோம்.

முந்தமுந்த இத்தியானங்களின் கால முறைமையைப்பற்றிய விஷயத்தில் அந்தந்த ஞாயிறுக்கும் அல்லது வாரத்துக்கும், மாதத்துக்கும் நாள் அட்டவணைக்கும் இசைந்த பக்ஷ தியானங்களை எழுதுவதற்கு வெகு விக்கினம் நேரிட்டதால் இவ்விரண்டு வகையில் ஒன்றையும் நாம் பின்செல்லவில்லை. ஆனால் நாம் ஆழ்ந்து யோசித்து, மேற்சொன்ன இருவகைகளிலுமுள்ள விக்கினங்களை நீக்கி, அவ்விரு வகைகளில் அடங்கிய பிரயோசனங்களை இணைத்துக் காட்டும் ஓர் புதி வகையைத் தெரிந்துகொண்டோம்.

நாம் இயற்றிய தியானமெல்லாம் இரண்டு புஸ்தகமாக வகுத்திருக்கிறோம். ஜனவரி மாதமுதல் ஜூன் மாதக் கடைசிவரையிலும் ஆக ஆறுமாதத் தியானங்கள் ஒரு புஸ்தகத்திலும், ஜூலை மாதமுதல் டிசம்பர் மாதக் கடைசி வரையிலும் ஆக ஆறுமாதத் தியானங்கள் மற்றொரு புஸ்தகத்திலும் காணலாம்.

தபசுகாலத்துக்குத் துவக்கமாகிய விபூதித் திருநாள் சில வருஷங்களில் பெப்ரவரி மாதம் நாலாந்தேதி வரக்கூடுமென்கிறதினாலே இந்த முதற் புஸ்தகத்தில் ஜனவரி மாதமுதல் மேற்சொன்ன பெப்ரவரி மாதம் நாலாந்தேதி வரையி

லும் மாதத்தின் நாள் அட்டவணைப் பிரகாரம் தியானங்கள் எழுதியிருக்கிறோம். அதன்பின் விபூதித் திருநாள் முதல் இயேசுநாதருடைய திரு இருதயத் திருநாள் வரையிலும் வாரங்களின் முறையைப் பின்சென்று தியானங்களை எழுதியிருக்கிறோம்.

ஆனால் விபூதித் திருநாளும் திரு இருதயத் திருநாளும் வருஷா வருஷம் தேதி மாறி வருகிறபடியால் அந்தத் திருநாட்களுக்கு முந்தியும் பிந்தியுமாக ஜூன் மாத முடிவு வரையில் 33 நாள் மிச்சமிருக்கும். ஆகையால் 33 நாளுக்கு வேண்டிய தியானங்களை ஒரு மாதத் தியானம்போல் தொகுத்து, இந்த முதல் புஸ்தகத்தின் கடைசியில் சேர்த்திருக்கிறோம். காலத்துக்குத் தக்கதுபோல இவைகளில் சிலதை விபூதித் திருநாளுக்கு முன்னும் சிலதைத் திரு இருதயத் திருநாளுக்குப் பின்னுமாக உதவிக்கொள்ளலாம். இவ்விதமே முதல் ஆறு மாதத்துக்கு வேண்டிய தியானமெல்லாம் முதற் புஸ்தகத்திற் காணலாம்.

இரண்டாம் புஸ்தகத்தில் முதல் துவக்கிக் கடைசி மட்டும் மாத அட்டவணையைப் பின்பற்றியிருக்கிறோம்.

தியானப் பொருட்களின் ஒழுங்கு விஷயத்தில், அநேகரைப்போல நாமும் நமது கர்த்தராகிய இயேசுக் கிறீஸ்துநாதர்சுவாமியுடைய சீவியத்தையே தியானப் பொருளாகத் தெரிந்துகொண்டபோதிலும், அதைவிட்டு அக்கம்பக்கம் விலகக்கூடாதென்று அவர்கள் எண்ணினதுபோல் நாம் எண்ணவுமில்லை, அதில் அவர்கள் செல்லும் ஒழுங்கை நாம் பின்செல்லவுமில்லை. ஏனென்றால் சகல காரியங்களிலும் சமயத்துக்குச் சமயம் கொஞ்சம் மாற்றுகிறது யாவருக்கும் பிரியமாயிருக்கிறதுமல்லாமல், கவனத்தைத் தூண்டி எழுப்புவதற்கும் ஏதுவாயிருக்கிறபடியினாலே, சுவிசேஷத்திலே தொடர்ச்சியாய்ச் சொல்லி

யிருக்கிற வர்த்தமானங்களைச் சில சமயங்களில் நிறுத்தி, நல்லொழுக்கத்துக்கடுத்த புண்ணியங்கள், சந்நியாச அந்தஸ்தின் கடமைகள் இவைகளைப்பற்றியும், சந்நியாச சபைகளை ஏற்படுத்தின முக்கியமான அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரத்தின்மேலும், வருஷத்தில் வரும் பிரதான திருநாட்களைப்பற்றியும் தியானங்கள் எழுதியிருக்கிறோம். இன்னமுஞ் சில திருநாட்களுக்குமுன் நவநாட்களிலும், வேறு சில திருநாட்களுக்குப் பின்வரும் எட்டுநாட்களிலுஞ் செய்யத்தக்கதாக முழுதும் புதிதான தியானங்களையுஞ் சேர்த்திருக்கிறோம்.

தபசுகாலமுழுதும் இயேசுநாதர்சுவாமியுடைய வியாகுலம் நிறைந்த பாடுகளைத் தியானிக்கும்படி குறித்திருக்கிறது சரியே. ஆயினும் திருச்சபையின் கருத்துக்கு ஒத்துப்போகும்படியாக, தபசு செய்யவேண்டிய முகாந்தரத்தையும் விதத்தையும்பற்றித் தபசுகாலத்திலுள்ள சகல திங்கட்கிழமைகளுக்கும் தியானம் எழுதலானோம்.

அந்தந்த மாதத்தின் தலை வெள்ளிக்கிழமைகள் இயேசுநாதர்சுவாமியுடைய திரு இருதய வணக்கத்துக்குக் குறிக்கப்பட்ட நாட்களாகையால், ஒவ்வொரு தலை வெள்ளிக்கு ஒரு தியானத்தையும் மாதாமாதம் தன்னைச் சோதித்துத் திருத்திக்கொள்வதற்கான ஆறு தியானங்களையும், ஒவ்வொரு புஸ்தகத்தின் கடைசியிலே குறித்திருக்கிறதுமல்லாமல் திவ்விய நன்மை வாங்கும் நாட்களில் செய்யத்தக்க சில தியானங்களை எழுதி முதல் புஸ்தகத்தில் சேர்த்திருக்கிறோம்.

தியானப் பிரிவுகளை எடுத்துக்காட்டுவதில் நாம் செல்லும் நடையானது வழக்கமானதாகவும் ஞாபகத்துக்கு அதிக உதவியானதாகவும் மற்றவர்களுக்கு எடுத்து விப

ரிக்கவேண்டியவர்களுக்குச் சுளுவானதாகவும் இருக்குமென்று நினைக்கிறோம்.

தியான நேரத்தில் மனதில் எழுப்பவேண்டிய பற்றுதல்களையும் செய்யவேண்டிய பிரதிக்கினைகளையும் வெகு சொற்பமாய்க் காண்பித்திருக்கிறோமொழிய மற்றப்படியல்ல. ஒவ்வொருவனும் தானே தன் மனதில் அவைகளை விபரித்து ஸ்திரப்படுத்திக்கொள்ளவேண்டியது. அன்றியும் தியானிக்கிறவனுக்கு வேறு அநேக சுகிர்த பற்றுதல்களும் பிறக்கும். இவைகள் தன் சுய புத்தியினாலாவது தேவ ஏவுதலினாலாவது ஆத்துமத்தில் பிறக்கிறபடியால் மகா நன்மை பிரயோசனமாயிருக்கும்.

ஒவ்வொரு தியானத்தின் மூன்று பிரிவுகளில் அடங்கியிருக்கிற பொருள் சில சமயங்களில் ஜாஸ்தியாயிருக்கலாம். தியானம் அரைமணி நேரமாத்திரஞ் செய்கிறதாயிருந்தால், பொருள் மிச்சமாகவேயிருக்கும். அப்பொழுது அந்தப் பிரிவுகளில் ஒன்றிரண்டை எடுத்துத் தியானித்துச் சம்பாஷணை செய்து முடிக்கலாம்.

கடைசியாய் இந்தத் தியானங்களை உதவிக்கொள்ளுகிறவர்களுக்கு சர்வேசுரன் திரளான ஆசீர்வாதத்தைத் தந்தருளும்படி நாம் அவரை இரந்து மன்றாடுகிறதுமல்லாமல், அவர்களும் இத்தியானங்களை இயற்றிய நம்மைத் தங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

தியானத்தின் பலனை அடைவதற்கு மிகவும் உதவியான சில குறிப்புகள்

1-வது. தியானத்தின்பேரிலும் அதைத் தன் நடக்கைக்கு ஒத்ததாய் யோசித்துப் பார்ப்பதின்பேரிலும் :

இந்தத் தியானப் புஸ்தகத்தை ஓர் ஞான வாசகப் புஸ்தகம்போல் வாசித்துக்கொண்டு போகாமல் தியானங்கள் அவைகளைச் சேர்ந்த யோசனைகள் இவைகளிலடங்கிய ஒவ்வொரு முக்கியமான வசனத்துக்குப் பின்னும் சற்று நேரம் புத்தியை நிறுத்தி ஒவ்வொன்றிலும் ஒரு விசேஷ பொருளிருக்கிறதாக ஆழ்ந்து பார்க்கவேண்டியது. மற்றவர்களுடைய தூண்டுதலால் உனக்கு வரும் யோசனையைவிட நீயே யோசித்துக் கண்டுபிடிப்பது உனக்கு அதிக தெளிவாயிருப்பதுமன்றி, உன் மனதிலும் அதிக நன்றாய்ப் பதியும்.

2-வது. மனப்பற்றுதலின்பேரில் :

ஜெபப் புஸ்தகத்தை வாசிக்கிறதினால் உண்டாகும் பற்றுதலைவிடத் தியானத்தினால் இருதயத்தினின்று பிறக்கும் பத்திநிறைந்த பற்றுதல்கள், ஜெபங்கள், வேகமான ஆவல்கள் இவைகளில் வெகுநேரஞ் செலவழிக்கப் பயப்படலாகாது. ஏனென்றால் இவ்வித பற்றுதல்களால்தான் நமது இருதயத்தில் தேவசிநேகமாகிற அக்கினியை மூட்டி வளர்க்கவேண்டியது. இவைகளால்தான் நமது தியானத்தை உருக்கமுள்ளதாக்கித் தியானத்தில் அடைந்த பத்தி சுறுசுறுப்பை நாள்முழுதும் காப்பாற்றவேண்டியது; இதுவுந் தவிர, தியானிக்கிறவனுக்கு வேறு அநேக சுகிர்த பற்றுதல்களும் பிரதிக்கினைகளும் வரலாம். இவை

கள் எவ்வளவுக்கு அவனவன் இருதயத்திலிருந்து அல்லது தேவ ஏவுதலால் பிறக்குமோ அவ்வளவுக்கு அதிக உத்தமமாயிருக்கும்.

3-வது. பிரதிக்கினைகளின்பேரில் :

பிரதிக்கினை செய்வதுமாத்திரம் போதுமென்று எண்ணப்படாது; நமது இருதயத்தில் நன்றாய்ப் பதியக்கூடிய சில முகாந்தரங்களை உற்று யோசித்து, அந்தப் பிரதிக்கினைகளில் பிரமாணிக்கமாயிருக்கும்படி நம்மைத் தூண்டிக்கொள்ளவேண்டியது. அவ்வித முகாந்தரங்களாவன: முதலாவது, நாம் பிரமாணிக்கமாயிருந்தால், இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் பலத்த நன்மைகள் நமக்கு உண்டாகும். 2-வது, இது நீதிக்கும் யோக்கியத்துக்கும் அடுத்தது: ஏனெனில், நமது சந்நியாச அந்தஸ்து, நாம் கொடுத்திருக்கிற வார்த்தைப்பாடுகள், உத்தம சாங்கோபாங்கத்தை நாம் நாடித் தேடவேண்டிய கடமை, நாம் உலகத்திலிருக்குஞ் சொற்பமும் விலையறப்பெற்றதுமான காலமாகிய இவைகளால் நமதுமேல் சுமந்திருக்குங் கடமை எவ்வளவோ பெரிது! 3-வது, இது எளிது: ஏனென்றால், இதற்காக நாம் செய்யவேண்டியதெல்லாம் தேவ வரப்பிரசாத உதவியால் இலகுவான சில சொற்பப் பிரயாசத்திலும் வருத்தத்திலும் அடங்கும். 4-வது, சந்தோஷத்துக்குரியது: ஏனென்றால், சர்வேசுரனைக் குறித்துக் கொஞ்சம் பிரயாசப்பட்டபின், அல்லது யாதொரு சொற்ப வருத்தத்தைச் சகித்தபின் மனதுக்கு எவ்வளவோ இன்பமான திருப்தி உண்டாகிறது! விசேஷமாய் மரண சமயத்தில் இதினால் எம்மாத்திரம் ஆறுதல் உண்டாகும்! 5-வது, இது அவசியமானது: ஏனென்றால், இயேசுநாதர் திருவுளம்பற்றின படியே ஒரே காரியம் நமக்கு அவசரம். அதாவது: என் ஆத்துமம் இரக்ஷணியம் அடைகிறதும் நான் அர்ச்சியசிஷ்டவனாகிறதுமாம். இதற்கு நான் செய்கிற பிரதிக்கினைகள் மிகவும் ஒத்தாசையாயிருக்கவேண்டும்.

4-வது. பக்திக்கடுத்த சம்பாஷணையின்பேரில் :

ஒவ்வொரு தியானத்தின் முந்தின இரண்டு பிரிவுகளில் அடங்கிய பற்றுதல்களும் பிரதிக்கினைகளும் வேண்டியபோதெல்லாம் சம்பாஷணை செய்வதற்குக் குறையற்ற பொருளாகும். அன்றியும் அந்தந்தச் சமயத்தில் உண்டாகும் பக்திக்கும் ஞான ஏவுதலுக்கும் தக்காப்போல் அநேக சம்பாஷணைகள் செய்யலாம். தியானத்தில் குறிக்கப்பட்டவர்களையுமல்லாமல் மற்றவர்களையும் நோக்கிச் சம்பாஷணை செய்துகொள்ளலாம். கடைசிச் சம்பாஷணையில் அன்றையத்தினம் தான் அநுசரிக்கவேண்டிய பிரதிக்கினைகளைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறதும் அவைகளில் பிரமாணிக்கமாயிருக்கும்படி வேண்டிய தேவாநுக்கிரகத்தை ஆவலோடு மன்றாடுகிறதும் மகா பிரயோசனமாயிருக்கும். அன்றன்றைக்கு வேண்டிய பிரதிக்கினை செய்யாமலும், செய்த பிரதிக்கினைகளைப் பிரமாணிக்கமாய் அநுசரிக்கத் தங்கள் சொந்தப் பலன் போதுமென்றாற்போலத் தேவ உதவியை மன்றாடாமலும் தியானத்தை முடித்துவிட்டால், அந்தத் தியானத்தினால் பிரயோசனம் விளையாது. கடைசியாய் ஒரு பரமண்டல மந்திரம் அல்லது பிரியதத்த மந்திரம் செபித்துத் தியானத்தை முடிக்கவும்.

5-வது. விழித்திருந்து ஜெபஞ்செய்யுங்கள் என்ற வாக்கியத்தின்பேரில் :

இந்த வாக்கியம் தியானப் பிரிவுகளை வாசிக்கக் கேட்கிறவர்களை நோக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒவ்வொருவனும் தனியே தியானஞ்செய்யும்போது, தன்னை நோக்கி: என் ஆத்துமமே, விழித்திருந்து ஜெபஞ் செய்வாயாக என்று சொல்லிக்கொள்ளவேண்டியது.

தியானத்துக்கு முந்திச் செய்யவேண்டிய ஜெபம்

என் கர்த்தாவாகிய சர்வேசுரா சுவாமி, தேவரீர் இவ்விடத்தில் பிரசன்னராயிருக்கிறீரென்றும் என்மேல் உமது திருக்கண்ணோக்கியிருக்கிறீரென்றும் விசுவசித்து உம்மை ஆராதிக்கிறேன். தேவரீருடைய திருச் சமுகத்தில் வந்து நிற்க நான் முழுதும் அபாத்திரவானாயிருந்தாலும் தேவரீருடைய அளவில்லாத தயையை நம்பிக்கொண்டு தேவரீருக்குத் தோத்திரமாகவும் எனது ஆத்தும நன்மையை விருத்தியாக்கவும், இந்த ஒரு மணி (அல்லது அரை மணி) நேரம் நன்றாய்த் தியானஞ் செய்ய எனக்கு அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று மன்றாடத் துணிகிறேன். தேவரீரை நான் அதிக நன்றாய் அறிந்து அதிகமதிகமாய்ச் சிநேகித்து அதிக பிரமாணிக்கமாய்த் தேவரீருக்கு ஊழியஞ் செய்யும்படி என் புத்திக்குப் பிரகாசமும் இருதயத்துக்குத் தூண்டுதலும் மனதுக்கு உறுதியும் தந்தருளுஞ் சுவாமி.

இந்த மன்றாட்டை அர்ச். தேவமாதா, நான் பேர் கொண்ட அர்ச்சியசிஷ்டவர், எனக்குக் காவலான சம்மனசானவர் இவர்களுடைய வேண்டுதலினாலே எனக்குக் கட்டளையிட்டருளவேணுமென்று மன்றாடுகிறேன்.

ஆமென் சேசு.

நன்றாய்த் தியானஞ் செய்வதற்கு ஜெபத்தோடு நமது பிரயாசையையுஞ் சேர்த்து ஞானத்தில் தேர்ந்தவர்கள் காண்பித்திருக்கும் வழிவகைகளையும் பக்திக்கடுத்த உபாயங்களையும் அநுசரித்துவரவேணும்.

வழிவகைகள்.—மறுநாட் காலமே தான் மற்றவர்களுக்குத் தியானங் கொடுக்கவேண்டியிருந்தாற்போலத் தியானப் பிரிவுகளை நன்றாய் ஆயத்தஞ் செய்கிறது;—

படுத்து நித்திரைவருமட்டும் அதின்மேல் நினைவாயிருக்கிறது;—காலையில் கண் விழித்தவுடன் அதை ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறது;—காலமே திவ்வியநற்கருணை சந்திக்கும்போது அல்லது அதிகாலைச் செபஞ் செய்யும்போது நன்றாய்த் தியானஞ் செய்யும்படி வேண்டிய தேவாநுக்கிரகங் கேட்கிறது.—தியான ஆயத்தச் செபம் செய்யுமுன், நான் யார் சமுகத்தில் நிற்கப்போகிறேன், என்ன செய்யப்போகிறேனென்று தன்னைத்தானே வினவிக் கேட்கிறது. கடைசியாய்த் தியானத்தை ஓர் பரமண்டல மந்திரம் சொல்லி முடித்தபின், சற்றுநேரம் தனக்குள் புகுந்து, அந்தத் தியானத்தைச் சரியாய்ச் செய்தேனோ அல்லவோவென்றும் அதற்குக் காரணம் என்னவென்றுஞ் சோதித்து இனிமேல் அதிக நன்றாய்ச் செய்வதற்கு எது உதவியாயிருக்குமென்று பார்த்துக்கொள்ளுகிறது.

பக்திக்கடுத்த உபாயங்கள்.—சரீர அசௌக்கியத்தினாலாவது புத்திக் களைப்பினாலாவது சரியாய்த் தியானஞ் செய்யக்கூடாத சமயத்தில் செய்யவேண்டியதென்னவென்றால், தான் அன்று செய்யவேண்டிய கிரிகைகளை ஒன்றுக்குப்பின் ஒன்றாய் நினைத்து, சர்வேசுரன் சமுகத்திலும் மனுஷர் முன்பாகவும் அவைகளை எப்படி நன்றாய்ச் செய்யலாமென்று யோசித்து, அந்தப்பிரகாரம் அவைகளைச் செய்யப் பிரதிக்கினை பண்ணிக்கொண்டு ஒவ்வொரு கிரிகையின்பேரிலும் தேவ ஆசீர்வாதம் வரவேணுமென்று கேட்கவேணும். மேலும் தியானஞ் செய்யத் தனக்குத் திராணியில்லையென்பதின்பேரிலும் ஞானக்காரியத்தில் தனக்குண்டான இன்னின்ன வருத்தங்களின்பேரிலும் தனக்குக் குறைவாயிருக்கிற இன்னின்ன புண்ணியங்களின்பேரிலும் விபரமாய் ஆத்தும

குருவினிடத்தில் சொல்லுகிறதுபோல சர்வேசுரனிடத்தில் உருக்கமாய்ச் சொல்லிக் காண்பிக்கலாம். இப்படித் தன்னை ஒன்றுமில்லாமையாகத் தாழ்த்தித் தான் இருக்கும் மட்டத்தில் சொற்ப இடம் தனக்குக் கிடைப்பதற்கும் ஓர் அற்ப அலுவல் முதலாய்ப் பார்ப்பதற்கும் தான் பாத்திரமல்லவென்று நன்றாய் உணர்ந்து, எந்தெந்தக் கண்டனை சிட்சையையும் பெற்றுக்கொள்வதற்குத் துணிந்த மனதாய்த் தியானத்தை முடித்தால், இந்தத் தியானம் மகா உத்தமமான தியானமாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. "கனியினால் மரத்தை அறியலாம்" என்று இயேசுநாதர்தாமே திருவுளம்பற்றியிருக்கிறார் (மத். 12-3).

நமது ஆண்டவராகிய

இயேசுக்கிறீஸ்துநாதருடைய

சீவியத்தைக்குறித்து நாம் செய்யத்தக்கும்

தியானங்கள்

ஜனவரி மாதம்

முதல் தேதி

இந்த நாளின் மூன்று விசேஷங்களாகிய விருத்தசேதனம், இயேசுவென்னும் திருநாமம், புதுவருஷத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—பாலனான இயேசுநாதர் தாம் முதல் தட்வையாகச் சிந்தின திருவிரத்தத்தை நமக்காகத் தமது பரம பிதாவுக்கு ஒப்புக்கொடுத்ததை நாம் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—சுறுசுறுப்பையும், உதாரத்தனத்தையும் புதுப்பித்து இந்தப் புது வருஷத்தைத் துவக்க வரப்பிரசாதம் கேட்போமாக.

முதல் பிரிவு

பாலனான இயேசுநாதர் விருத்தசேதனம் அடைந்ததின்பேரில்

தியானம்.—கர்த்தர் பிறந்த எட்டாம் நாள் வருஷப் பிறப்பானதினாலும் நம்மைப்பற்றி ஆண்டவர் இன்றைக்கு விருத்தசேதனம் அடைந்ததினாலும் திருச்சபை இந்த

நாளைப் பெரிய திருநாளாக ஸ்தாபித்திருக்கின்றது. பாவத்தின் அடையாளத்தையும் அதற்குண்டான ஆக்கினைகளையும் அதின் கடமைகளையும் இயேசுநாதர் தமதுபேரில் சுமந்துகொண்டு அவைகளுக்குப் பலியாகத் தம்மை ஒப்புக்கொடுத்து நமக்காக இத்தினத்தில் கொஞ்சம் இரத்தம் சிந்தி தாம் மத்தியஸ்தரென்கிற தொழிலை நிறைவேற்றத் துவக்கினார். விலைமதியாத இந்தக் காணிக்கையோடு தம்மையும் தாம் துவக்கின இந்தச் ஜீவியத்திலுண்டான ஒவ்வொரு நிமிஷத்தையும் வசீகரம் பண்ணினார். சர்வேசுரன் மனுஷர் பேரில் வைத்த சிநேகம் எவ்வளவென்று பார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சிநேகத்துக்குப் பிரதிசிநேகம் அவருக்குச் செலுத்துவோமாக. இன்று புது வருஷமானதினாலே சிநேகம் நிறைந்த இந்தச் சர்வேசுரனுக்கு இதின் முதற் கிரியைகளையெல்லாம் காணிக்கை கொடுத்து இந்த வருஷத்திலுள்ள ஒவ்வொரு நாளையும் அதிலுள்ள ஒவ்வொரு க்ஷணத்தையும் அவருடைய திரு ஊழியத்தில் அவருக்கு மிகவும் தோத்திரமாகச் செலவழிக்க இந்த வருஷ முழுமையும் அவருக்கே வசீகரம்பண்ணுவோமாக. இதோடேகூட நமது ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் இதிலுள்ள இரத்தமெல்லாத்தையும் அவருக்குக் காணிக்கையாகக் கொடுத்து நமது பிரமாணிக்கத்துக்கும் சிநேகத்துக்கும் அத்தாட்சியாக நமது இரத்தத்தைக் கடைசித்துளி பரியந்தஞ் சிந்தவேணுமானாலும், அதற்கும் ஆயத்தமாயிருப்போமாக.

மனப்பற்றுதல்.—இந்தக் காணிக்கையையும் வசீகரத்தையும் விபரமாய்ச் செய்கிறதில் இந்த மனப்பற்றுதல் அடங்கியிருக்கின்றது.

பிரதிக்கினை.—என் நடக்கையெல்லாம் இந்தக் காணிக்கைக்கு ஒத்திருக்க இந்த வருஷத்தின் முதல் நாளில்தானே சரியான கருத்தோடு பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுவென்கிற திருநாமஞ் சூட்டினதின்பேரில்

தியானம்.—சம்மனசானவர் சூசையப்பருக்குச் சொன்னதாவது: மரியாயி ஓர் குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இயேசுவென்கிற பெயரைக் கொடுப்பீர்; ஏனென்றால் அவர் தமது ஜனங்களை இரட்சிப்பாரென்றார் (மத். 1). ஆண் குழந்தை பிறந்த எட்டாம் நாள் அதற்கு விருத்தசேதனஞ் செய்து பேரிடுவது இஸ்ராயேல் ஜனங்களுக்குள்ளே நடந்துவந்த முறைமையாம். மேலும் பிள்ளை பிறந்தபோது, நடந்த விசேஷத்தினாலும் அந்தப் பிள்ளைக்குப் பிற்காலத்தில் உண்டாகப்போகிற குணத்தின் நம்பிக்கையினாலும் அதற்குப் பொருந்தின பேர் கொடுப்பது வழக்கம். மாம்சமான வார்த்தையானவருக்குப் பொருந்திய வாக்குக்கெட்டாத சுகிர்த குணங்களைப் பிதாவாகிய சர்வேசுரன் மாத்திரம் அறிந்திருந்ததினாலே, அவருடைய மேலான அலுவலுக்குப் பொருந்தின பேரை அவர் மாத்திரங் கொடுக்கக்கூடும். ஆகவே அவருக்கு இயேசுவென்கிற பேரைக் கொடுக்கத் திருவுளமானார். இந்தப் பேருக்கு இரட்சகரென்று அர்த்தமாகும். திவ்விய குழந்தையானவர் மகா மகிமை சோபனம் பொருந்திய இந்தத் திருநாமத்தின் கருத்தை ஒரு நிமிஷமுதலாய் நிறைவேற்றாமலிராதபடி, இந்தத் திரு நாமத்தை அவருக்குக் கொடுக்கும் போதுதானே நம்மைப்பற்றித் தமது இரத்தத்தைச் சிந்தி நம்மை இரட்சிக்க வந்தவரென்று காண்பித்தார். இதில் ஒரு துளி இரத்தமாத்திரம் இந்த உலகத்தையெல்லாம் மீட்டிரட்சிக்கப் போதுமாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பழைய வேதத்தில் பிறந்த பிள்ளைகள் விருத்தசேதனத்தினாலே அபிரகாமுக்குப் பிள்ளைகளும் அவர் அடைந்த வாக்குத்தத்தத்துக்குப் பங்காளிகளுமானார்கள். நாமோவென்றால், அவர்களைப் பார்க்கப் பாக்கியமுள்ளவர்கள்; முன் அடையாளமாயிருந்த விருத்தசேதனத்தினாற் குறிக்கப்பட்ட பரிசுத்த ஞானஸ்நானத்தினாலே சர்வேசுரனுக்குச் சுவீகாரப்

பிள்ளைகளும் அவருடைய இராட்சியத்துக்குப் பங்காளிகளுமல்லாமல் நாம் கிறீஸ்துவர்களென்கிற அவருடைய நாமத்தைத் தரித்துக்கொண்டதினாலே இயேசுநாதருக்குச் சிஷர்களும் அவருக்குச் சகோதரரும் உடன் பங்காளிகளும் ஆகிறோம். ஆ! இந்த நாமம் எவ்வளவோ மகிமையுள்ளது! இதில் எவ்வளவு ஞான அர்த்தம் நிறைந்திருக்கின்றது! ஆனால் இயேசுநாதர் காண்பித்த திவ்விய மாதிரிகைக்கு நாம் முழுதும் விரோதமாய் நடந்து இதிலடங்கிய மேலான கருத்தை நிறைவேற்றாமல் அந்தப் பேரை வீணாய்த் தரித்துக்கொண்டு நமது துர்நடத்தையால் அதை அவமானப்படுத்துவோமாகில், அந்தப் பேர் நமக்கு மகா கண்டிப்பான தீர்வைக்கும் ஆக்கினைக்கும் காரணமாயிருக்குமென்பதை எப்போதைக்கும் நினைத்துக்கொள்ளுவோமாக.

மனப்பற்றுதல்.—தேவ பயபத்தியோடு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக.

பிரதிக்கினை.—நாம் தரித்திருக்கிற மகத்தான பேருக்கு உகந்தவண்ணம் இந்த வருஷத்தில் சகலமும் நம்மிடத்தில் யோக்கியமான பிரகாரமாயிருக்கும்படி நடந்துகொள்ளுவோமாக.

3-ம் பிரிவு

புது வருஷத்தின்பேரில்

தியானம்.—இயேசுநாதர் விருத்தசேதனத்திலே நமக்காகச் சிந்தின திரு இரத்தம் புதிய உடன்படிக்கையின் இரத்தமாமே (மத். 26). இந்த உடன்படிக்கையானது அடையாளங்களால் காண்பிக்கப்பட்டதை நிறைவேற்றி அடிமைத்தனத்தை மாற்றிச் சர்வேசுரனுக்குச் சுவீகாரப்பிள்ளைகளென்கிற சுவாதீனத்தைக் கொடுத்து இதற்கு அடையாளமாயிருந்த பழைய உடன்படிக்கையின் கண்டிப்பான சடங்கு முறைகளை மாற்றிச் சிநேக முறைகளைத் தந்து பூமியைப் புதிப்பிக்கவேண்டியதாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ ஊழியத்திலே அதிக பத்தி ஒடுக்கத்தைக்கொண்டு நமது இருதயத்தைப் புதுப்பிக்கத்தக்கதாக இந்த நாளிலே சம்பவித்த இந்தப் பரமரகசியத்தினாலே உலகத்தில் நடந்த மகா அற்புதமான புதுப்பித்தல் நம்மிடத்திலுமுண்டாகப் பிரயாசப்படுவோமாக. நமக்கு இந்த வருஷத்தில் மிகுந்த பத்தியும் புண்ணியத்திலே வளர்ச்சியும் உண்டாகக்கடவது. இப்போது கடந்துபோன வருஷத்தைப்போல இந்த வருஷமும் வெகு சீக்கிரமாய்க் கடந்துபோகும். இந்த வருஷக் கடைசிபரியந்தம் நாம் உயிரோடிருக்க ஆண்டவர் உதவிசெய்து, இதையும் பரிசுத்தமாய்ப் போக்கினோமென்று சொல்லக்கூடுமாகில் எவ்வளவோ பாக்கியமுஞ் சந்தோஷமும் அடைவோம்!

சம்பாஷணை.—தமது திருக்குமாரன் விருத்தசேதனமடைந்ததிலே நிறைவேறின வாக்குக்கெட்டாத பரமரகசியங்களைக் கண்ணுற் கண்டிருந்த பரிசுத்த கன்னியாஸ்திரியோடே சம்பாஷணை செய்வோமாக.

2-ம் தேதி

இயேசுவென்கிற திருநாமத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—அனுப்பப்பட்ட சம்மனசானவர் சூசையப்பரைப் பார்த்து, பிள்ளைக்கு இயேசுவென்கிற பெயர் இடுவீர்; ஏனென்றால் அவர் தமது பிரசைகளை இரட்சிப்பாரென்றதைக் கேட்கிறதாக உருபிகரித்துக் கொள்வேணுக. (மத். 1.)

தியானச் சேபம்.—இயேசுவென்கிற பெயரின் மகத்துவத்தையும் பேறுபலனையும் வல்லமையையும் நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதம் கேட்பேணுக.

முதல் பிரிவு

இயேசுவென்கிற திருநாமத்தின் மகத்துவம்

தியானம்.—இயேசுவென்கிற திருநாமம் வந்த வகையைக் கவனித்தால் இது பெரிய நாமம் என்று சொல்லவேண்டும்; ஏனென்றால் சர்வேசுரன்தாமே ஒரு அதிதூதன் வழியாய் இந்தப் பெயரைத் தந்தருளினார். இதின் அர்த்தத்தைப் பார்க்குமிடத்திலும் இது பெரிய நாமந்தான்; அதேதென்றால் மனுஷர் தங்கள் நன்றியறிதலைக் காண்பிக்கிறதற்காக சிலருக்குத் தங்கள் ஊரைக் காப்பாற்றி இரட்சித்தவரென்று பெயரிட்டிருந்தாலும், உலக இரட்சகரென்கிற பெயர் இது வரையிலும் ஒருவருக்குங் கொடுத்ததில்லை. மனுஷனான தேவ சுதன் ஒருவருக்கு மாத்திரம் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டு இவர் இந்தப் பெயருக்குள்ள அர்த்தத்தை மகா உத்தம பிரகாரமாய்ச் சரிவர நிறைவேற்றினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதுபோல, சகல நாமத்துக்கும் மேலான இந்தப் பரிசுத்த நாமத்தை நாம் எவ்வளவோ பத்தி வணக்கத்தோடே உச்சரிக்கவேணும்! (பிலி. 2.) திருச்சபையின் துவக்கமுதல் இந்தத் திருநாமத்தை உச்சரிக்கும்போதும் கேட்கும்போதும் தலைகுனிந்து வணங்கி ஆசாரம்பண்ணுவது வழக்கம். நீ இந்த நாமத்தை உச்சரிக்கும்போதும் ஜெபம் பண்ணும்போதும் சிலவேளைகளில் இந்த நாமத்துக்குத் தகுந்த பத்தி கவனமில்லாமலிருக்கவில்லையோ?

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் பிரமாணிக்கமுள்ளவர்; தமது குமாரனும் நமது ஆண்டவருமாகிய இயேசுநாதருடைய சபையிலே நம்மை வரவழைக்கச் சித்தமானதை நினைத்து அவர் செய்த உபகாரத்துக்காகச் சந்தோஷத்தோடு நன்றியறிந்திருப்போமாக (1 கொரி. 1).

பிரதிக்கினை.—இயேசுநாதருடைய திருநாமத்தை நாமும் சங்கித்துப் பிறருஞ் சங்கிக்க இந்த வருஷம் நம்மாலானமட்டும் பிரயாசப்படுவோமாக.

2-ம் பிரிவு

இயேசுவென்கிற திருநாமத்தின் பேறுபலன்

தியானம்.—உலகத்திலே ஒரு பெரிய பிரபுவின் மகன் தன் சந்ததியாலே கொண்டிருக்கிற பெரிய பேரானது முந்தியிருந்தவர்கள் பட்ட பிரயாசத்தின் பலனானதினால், இவனுக்கு இப்போது இந்தப் பேரால் பேறுபலனிராது. தேவசுதனானவர் தரித்திருந்த பெரிய நாமம் அப்படிப்பட்டதல்லவே; ஏனென்றால் பாவத்துக்கு ஆக்கினையாய் வந்த சாவில் நின்று மனுக்குலத்தைத் தமது மரணத்தால் இரட்சித்துத் திரும்பவும் பரலோக இராட்சியத்துக்குச் சுதந்தரமுள்ளதாக்கி தமது பேறுபலனாலே இவர்தாமே இந்தப் பேரை அடைந்தாரல்லவோ? இவ்வளவு பேறுபலனுள்ள பேர் எப்போதாகிலும் இருந்ததுண்டோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ சர்வேசுரனுக்கு சுவீகாரப்பிள்ளை, இயேசுநாதருக்கு சகோதரன் சகோதரியென்கிற பேர் மகா பேறுள்ள பேராயிருந்தாலும், அது நீ பட்ட பிரயாசத்தினாலே வந்ததல்லவே; ஞானஸ்நானத்தின் இஷ்டப்பிரசாதத்தினாலுஞ் சர்வேசுரன் உன்னைத் தெரிந்துகொண்டு உனக்குக் கொடுத்த விசேஷ வரப்பிரசாதத்தினாலும் இந்தப் பேர் உனக்குக் கிடைத்ததல்லாமல் வேறல்ல. ஆனால் அந்தப் பேரைக் கெடுத்துக் கொள்ளாமலிருக்கிறது உன்மேற் சுமந்த கடமை; நீ மகிமையோடு தரித்திருக்கிற இந்தப் பட்டப்பேருக்கு யோக்கியமுள்ளவனாயிருக்கத் தேவ வரப்பிரசாதத்தோடு ஒத்துப் பிரயாசப்படுவாயாக. இதுவரையில் இந்தத் தேவ வரப்பிரசாதம் உனக்குக் குறைவில்லாமலிருந்தது மெய்தான்; ஆனால் நீ இதற்குச் சரியாய் நடந்தாயோ? நீ இதற்கு நிலைமையோடு பிரயாசப்பட்டாயோ? உனக்கிருக்கிற இந்த மகிமையுள்ள பட்டத்துக்குத் தகுந்த பிரகாரம் நடந்தாயோ?

மனப்பற்றுதல்.—தேவ வரப்பிரசாதத்தினாலே நமது ஆண்டவராகிய இயேசுக்கிறீஸ்துநாதருடைய திரு நாமம்

உங்களிடத்தில் மகிமைப்படவேணுமென்று அர்ச். சின்னப்பர் தெசலோனியருக்குச் சொன்னவண்ணம் என்னிடத்திலும் நிறைவேறவேணுமென்கிற ஆசையை என துள்ளத்தில் எழுப்புவேணுக (2 தெச. 1).

பிரதிக்கினை.—இந்தக் கருத்து நிறைவேற இந்த வருஷமுழுதுங் கொஞ்சமாகிலும் அசட்டையில்லாமல் பிரயாசப்படுவேணுக.

3-ம் பிரிவு

இயேசுவென்கிற திருநாமத்தின் வல்லமையின்பேரில்

தியானம்.—இயேசுவென்கிற திருநாமத்துக்கு பரலோகத்திலும் பூலோகத்திலும் பாதாளங்களிலுமுள்ள யாவரும் முழந்தாட்படியிடுவார்களென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறார் (பிலி. 2). இயேசுவென்கிற திருநாமத்தை உச்சரிக்கும்போது, சகலமும் கீழ்ப்படியவேண்டியது. இந்தத் திருநாமத்தின் உச்சாரணத்தினாலல்லவோ அப்போஸ்தலர்கள் மகா பிரபலியமான அற்புதங்களைச் செய்தார்கள்; கிறீஸ்துவர்கள் முதலாய் அஞ்ஞானிகளிடத்தில் பிடித்திருந்த பேயை ஓட்டினார்கள்; எக்காலத்திலும் உள்ள வேதசாட்சிகள் வேதனையில் நின்று ஜெயம் அடைந்தார்கள்; ஸ்துதியர்களும் கன்னியர்களும் உலக மாய்கைகளைச் செயித்தார்கள். இயேசுவென்கிற திருநாமத்தை உச்சரித்தல்லவோ திருச்சபை தான் செய்யும் ஜெபங்களை முடித்துவருகின்றது; இந்தத் திருநாமத்தினாலல்லவோ நாம் மரண அவஸ்தையாயிருக்கும்போது, நமக்குத் திடனும் ஆறுதலுமுண்டாகத் திருச்சபை ஆசைப்படுகின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமக்குச் சோதனை வரும்போதும் வருத்தப்படும்போதும் தத்தளிக்கும்போதும் யாதொரு காரியம் துவக்கும்போதும் மகா நம்பிக்கையோடே இந்தத் திருநாமத்தை உச்சரிப்போமாக. என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் நீங்கள் கேட்பதெல்லாம் பெற்றுக்கொள்வீர்களென்று இயேசு

நாதர் வெளிப்படுத்தினதில்லையோ? (அரு. 14). ஆகையால் இயேசுவென்னும் பெயருள்ள யாதொரு மனவல்லயச் செபத்தை நீ அடிக்கடி சொல்லி அப்பியாசப்படுகிறதுமன்றி உனக்கு இக்கட்டான வேளையிலேயும் விசேஷமாய் உனக்கு மரண அவஸ்தையான சமயத்திலேயும் அதை உச்சரிக்கிறதற்காக இப்போதே அந்த வார்த்தையை அடிக்கடி சொல்லிக்கொண்டு வருவாயாக. இயேசுவே, இயேசுவே, எனக்கு நீர் இயேசுவாயிரும்மென்கிற வாக்கியம் உன் கடைசி வார்த்தையாயிருக்கவேணும்.

சம்பாஷணை.—இந்தத் தியானத்தில் உனக்குண்டாகும் பத்தியுள்ள நினைவுக்குத் தக்கபடி திவ்விய பாலனாகிய இயேசுவோடு சம்பாஷணை செய்வாயாக.

3-ம் தேதி

இயேசுவென்கிற திருநாமங் கொடுத்தபோது நடந்த விசேஷங்கள்

ஆயத்தச் சிந்தனை.—கபிரியேலென்கிற சம்மனசானவர் பரிசுத்த மரியாயை நோக்கி: நீர் ஒரு குமாரனைப் பெறுவீர்; அவருக்கு இயேசுவென்கிற பெயர் கொடுப்பீரென்றதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக (லூக். 1).

தியானச் செபம்.—உனக்கு ஞானஸ்நானத்திற் கொடுக்கப்பட்ட பெயருக்கு யோக்கியமானபிரகாரமாய் நடக்க வரப்பிரசாதத்தைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுவென்கிற திருநாமம் திவ்விய பாலன் காண்பித்த தாழ்ச்சிக்குச் சம்பாவனையாம்

தியானம்.—அவருக்கு இயேசுவென்கிற பெயர் கொடுத்தார்கள் (லூக். 2). அதற்கு அர்த்தம் இரட்சகராம்.

மகிமையான இந்தப் பெயர் அவருக்கு எப்போது கொடுக்கப்பட்டதென்றால், அவர் பிறந்து சம்மனசுக்களால் ஸ்துதித்துக் கொண்டாடப்பட்டு இடையர்களால் ஆராதிக்கப்பட்டபோதோ? இல்லையே. அவர் பாவத்தின் அடையாளத்தைத் தமது திருச்சரீரத்திலே அடைந்து பாவிகளுக்குச் சரியொத்தவராயிருக்க அத்தியந்த பிரகாரமாய்த் தம்மைத் தாழ்த்தி விருத்தசேதனம் அடைந்த சமயத்திலே இவர் காண்பித்த வாக்குக்கெட்டாத தாழ்ச்சிக்குச் சம்பாவனையாக இந்தப் பெயர் அவருக்குக் கொடுக்கப்பட்டது. இதைப்பற்றி அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதாவது: ஆண்டவர் அடிமையின் வேஷம் எடுத்து அத்தியந்த பிரகாரமாய்த் தம்மைத் தாழ்த்திக்கொண்டார்... இதைப்பற்றிச் சர்வேசுரன் சகல நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார். (பிலி. 2.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் ஞானஸ்நானம் பெற்றபோதும் உறுதிபூசுதல் அடைந்தபோதும் சந்நியாச வார்த்தைப்பாடு கொடுத்தபோதும் நமது நெற்றியிலே பதிக்கப்பட்ட இயேசுவின் திருநாமத்தை நாம் யோக்கியமான பிரகாரமாய்க் கொண்டிருக்கவேணுமானால், நமது மனதிலும் இருதயத்திலும் தாழ்ச்சியுள்ளவர்களாயிருக்கவேணும். நமக்கு எவ்வித நிந்தையும் அவமானமும் உண்டாகும்போது, பொறுமையோடிருக்கவேணும். இயேசுநாதர் அடைந்த நிந்தை அவமானத்தில் பங்கடைவதற்கேற்றவண்ணம் அவருடைய மகிமைப்பிரதாபத்திலும் பங்காளிகளாயிருக்க நமக்கு நம்பிக்கையுண்டாகும்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுடைய எண்ணத்தில் நீ வளரவும் இயேசுநாதருக்குச் சரிசாயலாயிருக்கவேணுமென்று அவரைப்பற்றி நீ மனம்பொருந்தித் தாழ்ச்சியுள்ளவனாயிருக்கவும் உன்னை நீ சற்றாகிலும் மதியாமலிருக்கவேணுமென்று மிகுந்த ஆசை உன் உள்ளத்தில் எழுப்புவாயாக.

பிரதிக்கினை.—சர்வேசுரன் எனக்கு அனுப்பச் சித்தமாயிருக்கிற நிந்தை அவமானங்களைப்பற்றி சந்தோஷப்பட முடியாவிட்டாலும், பொறுமையோடாகிலும் அவைகளைக் கையேற்றுக்கொள்வேனாக.

2-ம் பிரிவு

இயேசுவென்கிற திருநாமம் அவர் காண்பித்த கீழ்ப்படிதலுக்குச் சம்பாவனையாம்

தியானம்.—அவருக்கு இயேசுவென்கிற பெயரிட்டார்கள். எப்போது இந்தப் பெயரிட்டார்களென்றால், அவர் மனம்பொருந்தி விருத்தசேதன முறைமைக்குக் கீழ்ப்படிந்து தமது சீவியகாலபரியந்தம் மோயீசன் கொடுத்த மகா கண்டிப்பான வேத முறைமைக்கெல்லாம் தாம் ஒத்து நடக்கச் சம்மதித்துத் தமது சொந்த மனதையும் மனச்சுதந்தரத்தையும் தமது பிதாவுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தபோது, இந்த நாமம் அவருக்குக் கொடுத்தார்கள். அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்குமாப்போலே, விருத்தசேதனத்துக்குட்பட்டவன் பழைய வேதத்தின் சகல முறைமைகளையும் அதின் பிரமாணங்களையும் அநுசரிக்க உடன்பட்டவனாயிருக்கிறான் (கலா. 5). இயேசுவென்கிற நாமத்தைத் தரித்துக்கொள்ளுகிறதற்காக மாம்சமான வார்த்தையானவர் பட்ட பிரயாசம் எவ்வளவென்று பார். அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறதாவது: அவர் மரணபரியந்தம் கீழ்ப்படிதலுள்ளவராகித் தம்மைத் தாழ்த்தினார்; ஆதலால் சர்வேசுரன் அவரை உயர்த்திச் சகல நாமத்துக்கும் மேலான நாமத்தைக் கொடுத்தருளினார் (பிலி. 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதருக்கும் நமக்கும் உள்ள சாயல் எவ்வளவு பாக்கியமுள்ளது! நாம் கொடுத்த கீழ்ப்படிதலென்கிற வார்த்தைப்பாட்டினாலே நமது மனச்சுதந்தரத்தைப் பலியாக ஒப்புக்கொடுத்தோம்; சந்நியாச ஒழுங்குகளை அநுசரிக்க எப்போதைக்கும் நமது மனதைக் கட்டுப்படுத்துகிறோம். மோயீசன் கொடுத்த முறைமைகளைப்பார்க்க நமது சந்நி

யாச ஒழுங்குகள் எவ்வளவு மதுரமும் அநுசரிக்கச் சுளுவுமாயிருக்கின்றன! என்ன வருத்தம் உண்டானாலும், உதாரத்தோடும் மாறாத நிலைமையோடும் அவைகளில் பிரமாணிக்கமாயிருப்போமாக. அல்லாவிடில் நமக்கு உள்ள மகிமைபரன பெயர் விசேஷ மேன்மையும் சம்பாவனையும் இல்லாததாகும்.

மனப்பற்றுதல்.—ஆ! என் இயேசுவே, சொற்ப முகாந்தரத்தைப்பற்றி எளிதான காரியங்களிலே முதலாய் நான் அநேகந்தரம் பிரமாணிக்கம் தவறிப்போனேனே! இதைப்பார்த்து என்னை மிகவும் தாழ்த்தி உதாரமான இருதயம் எனக்கு உண்டாக உம்மை மன்றாடுகிறேன்.

பிரதிக்கினை.—இன்றுமுதல் இனிமேல் அதிக உதாரமும் பிரமாணிக்கமுமுள்ளவனாய் இருக்கிறதுந்தவிர விசேஷமாய் இன்னின்ன ஒழுங்குகளை எச்சரிக்கையோடு அநுசரிப்பேன்.

3-ம் பிரிவு

இயேசுவென்கிற திருநாமம் அவருடைய ஒறுத்தலுக்குச் சம்பாவனையாம்

தியானம்.—அவருக்கு இயேசுவென்னும் நாமத்தைக் கொடுத்தார்கள். எப்போது, எந்தச் சமயத்திலென்றால், அவர் நமக்காகத் தம்மைப் பலிகொடுக்கும் காலம் வருந்தனையுஞ் சகல துன்பதுரிதங்களும் ஒறுத்தல் இக்கட்டுகள் முதலிய வருத்தங்களும் நிறைந்தவராயிருக்க உடன்பட்டு விருத்தசேதனம் அடைந்து தமது இரத்தத்தைச் சிந்தி வருத்தப்பட்டபோதுதான் அவருடைய பரமபிதா அவருக்கு இரட்சகரென்று அர்த்தமுள்ள இயேசுவென்னும் மகா மகிமையுள்ள இந்த நாமத்தைக் கொடுத்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீங்கள் மன ஒறுத்தலையும் தவத்தையும் அநுசரித்து இயேசுநாதர் நடந்த பாதையிலே நடக்கவும் உங்களுக்குப் பலத்த மாதிரிகை காண்பிக்கவும் அவர் உலகத்தில் பிரவேசித்த

வுடனே, நமக்காக வருத்தப்பட்டாரென்று அர்ச். இராயப்பர் வசனித்திருக்கிறார் (முதல் நிரு. 2). இதை நமக்கு மேலான யோசனையாகமாத்திரம் அர்ச். இராயப்பர் சொன்னாரென்று நினைக்கவேண்டாம்; ஏனென்றால் இயேசுநாதர் சொல்லியிருக்கிறதைக் கேள்: யாதொருவன் என் பிறகே வர மனதானால், அவன் தன்னைத்தான் பரித்தியாகஞ் செய்து தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லக்கடவான். மேலும்: தன் சிலுவையைச் சுமந்து என் பிறகே வராதவன் எனக்குப் பாத்திரவானல்லவென்றார் (மத். 16-10). ஆகையால் நமது திவ்விய குருவின் தயவு நமக்குக் கிடைக்கவும் அவர் தமது மெய்யான சீஷருக்கு வாக்களித்திருக்கிற மேலான சம்பாவனைக்கு நாம் பாத்திரவான்களாகவும் சிலுவையை நேசித்து இருதய விருத்தசேதனமென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிற ஓயாத ஒறுத்தலைக்கொண்டு நாம் அவருடைய சாயலாயிருப்பது அவசியம். நாம் நம்மைத்தாமே சோதித்துப் பார்த்து நாம் முன்னே சுறுசுறுப்போடே நடந்த காலத்தில் நம்மிடத்தில் விளங்கின ஒறுத்தலுக்குரிய ஆவல் இப்போது குறைந்துபோகவில்லையாவென்று நம்மைத் தாமே வினவிக் கேட்போமாக.

சம்பாஷணை.—தாம் அடைந்த நிந்தை அவமானங்களினாலும் கீழ்ப்படிதலினாலும் பாடுகளினாலும் தம்மைப் பின்செல்ல மனதுள்ளவர்களுக்கெல்லாம் மகிமையும் பாக்கியமுமுள்ள மெய்யான பாதையைக் காண்பிக்கிற இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக.

4-ம் தேதி

காலத்தை மதிப்பதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—நமக்குக் காலமிருக்கும்போதே நன்மை செய்யவேணுமென்று அர்ச். சின்னப்பர் சொல்வதாக உருபிகரித்துக்கொள்வாயாக (கலா. 6).

தியானச் செபம்.—காலத்தின் மதிப்பை நன்றாய் அறியவும் இந்தப் புது வருஷத்தில் அதைப் பரிசுத்தவிதமாய்ச் செலவழிக்கவும் வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

தியானம்.—"இக்காலத்தின் விலை பரலோகத்தின் விலை" என்று அர்ச். பெர்நர்துஸ் சொல்லியிருப்பது மெத்தவும் உண்மை. ஏனெனில், இக்காலத்து சோதனைகள் வழியாயன்றி எவனும் மோட்சத்தை அடையமாட்டான்; அன்றியும் சர்வேசுரன் வாக்களித்திருக்கிற பிரகாரம், காலத்தின் நற்பிரயோகத்துக்குச் சம்பாவனையாகவே மோட்சம் கிடைக்கும். இந்த நித்திய சம்பாவனை கிடைப்பதும் ஒரேயொரு நிமிஷத்தின் நற்பிரயோகத்தில் அடங்கியிருக்கலாம். நல்ல கள்ளனுக்குச் சம்பவித்ததைப் பார்; அவனது சீவியம் துர்நடத்தையுள்ளது; சாகுந் தறுவாயிலிருக்கிறான்; ஆனால் இந்தக் கடைசி வேளையில் தேவ வரப்பிரசாதத்தால் ஒளி அடைந்து, தன் தவறுதல்களைத் தாழ்ச்சியாய் உணர்ந்து, திவ்விய இரட்சகருடைய தயவை இரந்து மன்றாடுகிறான்; அக்ஷணமே மோட்சம் அவனுக்கு நிச்சயமாகிறது; இயேசுநாதர் அவனை நோக்கி: "இன்றே என்னோடு பரகதியிலிருப்பாய்" என்கிறார் (லூக். 23-43).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆகையால் நமக்குக் கொடுக்கப்பட்ட காலத்தை நாம் எவ்வளவோ பெரிதாய் மதிக்கவேணும்! ஒரு இராச்சியம் பெறுமான மாணிக்கத்தைப்பார்க்கிலும் இதை அதிகமாய் மதிக்கவேணும். ஏனென்றால் பரலோக இராச்சியத்துக்கு முன்னே இந்தப் பூலோக இராச்சியமானது எவ்வளவோ சொற்பம்! இந்தக் காலத்தை நன்றாய்ச் செலவழித்தால், மேலான அந்த இராச்சியத்தை நித்தியமாய் அநுபவிக்கலாம். மேலும் நன்றாய்ச் செலவழித்த ஒவ்வொரு க்ஷணத்துக்கும் மோட்சத்திலே நமக்குப் புதிதான மகிமையும் பாக்கியமுங் கிடைக்கும், மோட்சத்திலேயே ஒரு நூதன மோட்சம் நமக்குக் கிடைத்தாற்போலாகும்.

மனப்பற்றுதல்.—மகா தைரியம் வருவிக்கிற இந்தச் சத்தியத்தை விசுவசித்து இதுவரையில் வீண்காலம் போக்கினதற்காகக் கஸ்திப்படுவாயாக.

பிரதிக்கினை.—இந்தக் காலத்தில் மெய்யான பிரயோசனம் அடைகிறதற்காக என் காலப் பிரயோகத்தை ஒழுங்குபடுத்துவேனாக. ஒழுங்குக்குறைவால் காலம் வீணாய்ப்போகிறது; காலக்கிரமத் திட்டத்தால் வெகு பிரயோசனம் உண்டாகிறது.

2-ம் பிரிவு

தியானம்.—இயேசுநாதருடைய திரு இரத்தம் எவ்வளவு விலைபெற்றதோ அவ்வளவு இக்காலம் விலைபெற்றதென்று அர்ச். பெர்நர்துஸ் சொல்லியிருக்கிறார். ஏனென்றால் இக்காலத்தில் நாம் செய்யும் நற்கிரியைகள் சர்வேசுரன் சமுகத்தில் பேறுள்ளவைகளாவது இரட்சண்ணியத்தினிமித்தமே. இரட்சண்ணியமோ இயேசுநாதரது இரத்தக் கிரயம். ஆகையால் அவருடைய இரத்தத்தினால் இந்தக் காலம் பலன்பெற்றதாயிருக்கிறது. சர்வேசுரனுடைய திரு இரத்தமானது இந்தக் காலத்தை மதிக்கும் நாணயம்போலாகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுவின் விலைமதியாத திரு இரத்தமே, சகல பாஷைகளாலும் ஸ்துதிக்கப்பட்ட திரு இரத்தமே, உன்னைவிட அதிக விலைபெற்றதென்ன? இதில் ஒரு துளி இரத்தமாத்திரம் உலகத்தை மீட்டிரட்சிக்கப் போதுமென்று அர்ச். தோமாஸ் சொல்லியிருக்கிறார். ஆகையால் ஒரு நிமிஷமாகிலும் வீணிலே செலவழிக்காமல் காலத்தின்மட்டில் கவலையாயிருப்போமாக. சர்வேசுரன்தாமே இதற்கு மாதிரிகை கொடுக்கிறார். அதெப்படியென்றால், தமது கொடைகளையும் தமது வரப்பிரசாதங்களையும் திரளாய் நமக்கு அவர் கொடுத்திருக்க, காலத்தையோவென்றால் அவர் நமக்குக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கொடுத்துவருகிறார். எவனுக்கும் ஒரேதடவையில் இரண்டு நேரத்தை

அடைந்ததில்லை. இவ்வளவு விலைமதியாத இந்தக் காலத்தை மனிதர் வீணிலும் விளையாட்டிலும் செலவழித்துப் பொழுதைச் சுருக்காய்ப் போக்குகிறதற்காகப் பிரயாசப்பட்டு சர்வேசுரனுக்கு ஏற்காத துரோகங்களைக் கட்டிக்கொள்ளவும் தாங்கள் கெட்டுப்போகவும் காலத்தை வீணாய் உதவிக்கொள்ளுகிறார்களே !

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் கொடுத்த கொடைகளுக்குள்ளே விலைமதியாத இந்தக் காலத்தை வீணாய்ச் செலவழித்துக்கொண்டுவருகிற இத்தனை ஆயிரம் ஜனங்களின் குருட்டாட்டத்தைப் பார்த்துக் கஸ்திப்பட்டு நீயும் சிலவிசை இப்படி நடந்ததினால் அதிக விதனப்பட்டு பொறுத்தல் கேட்பாயாக.

பிரதிக்கினை.—காலத்தைப் பிரயோசனமாய் செலவழிப்பதற்காகத் தாங்கள் செய்ததெல்லாம் போதாதென்று நினைத்திருந்த அர்ச்சியசிஷ்டவர்களைக் கண்டுபாவிப்பாயாக. அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரும் அநேக மகாத்துமாக்களும் மனம்பொருந்தி வீண்காலம் போக்குகிறதில்லையென்று வார்த்தைப்பாடு கொடுத்து அதின்படி நடந்து வந்தார்கள்.

3-ம் பிரிவு

தியானம்.—சர்வேசுரன்தாமே எவ்வளவு பெறுமானவரோ அவ்வளவும் காலமானது பெறும். அதெப்படியென்றால், நன்றாய்ச் செலவழித்த ஒவ்வொரு க்ஷணமும் நித்திய தேவ தரிசனத்தை நமக்கு அடைந்துதரக்கூடும் என்று அர்ச். பெர்நர்துஸ் சொல்லியிருக்கிறார். ஆகையால், இதற்கு எவ்வளவோ கண்டிப்பான கணக்குச் சொல்லவேணும். ஒரு வீண் வார்த்தை சொல்ல ஒரு நிமிஷம் போதும். நமக்கு அற்பமாய்த் தோன்றுகிற இந்தக் காலச்சேதத்தைச் சர்வேசுரன் கவனியாமல் விட்டுவிடமாட்டார். இதைப்பற்றி இயேசுநாதர் திருவுளம்பற்றியிருக்கிறதைக் கேள்: "மனிதர் பேசும் ஒவ்வொரு வீண் வார்த்தைக்கும் தீர்வைநாளிலே கணக்குக் கொடுப்பார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 12:36).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ இதை விசுவசிக்கிறாயே; ஆனால் உன் விசுவாசத்துக்குத் தக்கபிரகாரம் நடக்கிறாயோ; நீ ஆத்தும சோதனை செய்யும்போது, காலத்தை உபயோகப்படுத்துகிறதையும் அல்லது அதைச் சேதப்படுத்துகிறதையும் இந்தக் காலச்சேதமுகாந்தரத்தையும் குறித்துக் கண்டிப்பாய் கணக்குப் பார்க்கிறாயோ? இதற்காக உத்தம மனஸ்தாபப்பட்டு இதைத் திருத்திக்கொள்ள மெய்யான பிரதிக்கினை செய்கிறாயோ? பாவசங்கீர்த்தனத்தில் இதை வெளிப்படுத்துகிறாயோ? இதெல்லாம் விபரமாய் சோதித்துப்பார். இந்தப் புது வருஷத்திலேயாகிலும் காலத்தை நன்றாய் உபயோகப்படுத்தும்படி முந்தின காலத்தை எப்போது, எவ்விடத்தில், என்ன விதமாய் வீணிலே போக்கினாயென்று பார்.

மேலும் இதை மகா பிரயோசனமாகவும் நன்மையாகவும் செலவழிப்பதற்கு உத்தம உபாயமேதென்றால், காலக்கிரமம் ஒன்று திட்டப்படுத்திக்கொண்டு அதன்படி பிரமாணிக்கமாய் நடக்கவேண்டும். இவ்வித ஒழுங்கு சந்நியாசிகளுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளிலும் குறிக்கப்பட்ட நேரத்தில் எல்லாரும் செய்யவேண்டிய கடமைகள் உண்டு. பொது முயற்சி ஒவ்வொன்றும் துவக்குமுன் மடத்தில் மணியடிப்பார்கள்; ஆனால் இதினிடையில் நமக்கு ஒழிந்த நேரமும் உண்டு. இதைத்தான் நாம் ஒழுங்குபடுத்தவேணும். அப்படிச் செய்யாவிட்டால் காலத்தை வீணாய்ச் செலவழிக்கிறதுமல்லாமல் அதினால் இடைவிடாத மனக்கலக்கமும் ஐயுறவும் உண்டாகும். இதெல்லாம் நீ அநுபவத்தினால் அறிந்திருக்கிறாயல்லவா?

சம்பாஷணை.—அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரோடே சம்பாஷணை செய்வாயாக. இவர் வீண்காலம் போக்குகிறதில்லையென்று செய்த வார்த்தைப்பாட்டிற்குப் பிரமாணிக்கமாய்ச் சாகுந்தனையும் புத்தகங்கள் எழுதுகிறதிலேயும் மற்ற ஞானக் காரியங்களைச் செய்வதிலேயும் செலவழித்துக்கொண்டு வந்தார்.

5-ம் தேதி

காலத்தை நன்றாய் உதவிக்கொள்ளுகிறதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இதோ அநுக்கிரககாலம், இதோ இரட்சணிய நாளென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக (2 கொரி. 6 : 2).

தியானச் செபம்.—இந்தத் தியானத்தின் பலனாகக் காலத்தைப் பிரயோசனப்படுத்தவும் அர்ச்சிக்கவும் அவசியமான வழிகளை நன்றாய் அநுசரிக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

தியானம்.—காலத்தை அர்ச்சிக்கவும் அதைக் கொஞ்சமாகிலும் வீணாய்ப் போக்காமலிருக்கவும், எப்போதும் தேவ இஷ்டப்பிரசாதத்தோடு இருப்பது அவசியம்.

எந்தக் கிரியையும் தன்னிலே எவ்வளவு சுகிர்தமானாலும், அதைச் செய்கிறவன் சாவான பாவத்தோடிருப்பானாகில், அது நித்திய சீவனை அடைவதற்குப் பேறுள்ளதாகாதென்று விசுவாசம் நமக்குப் படிப்பிக்கிறது. ஆதலால் மனதறிய சாவான பாவத்தோடிருக்கிற காலமெல்லாம் மோட்சத்தை இழந்துபோன காலமாயிருக்குமென்பது யாவரும் அறிந்த காரியம். ஆ! இது எவ்வளவு சேதமும் நிர்ப்பாக்கியமுமுள்ளது! கிறீஸ்துவர்களுக்குள்ளே அநேகம் பேர் இந்த நிர்ப்பாக்கியத்துக்குள்ளாயிருக்கிறார்களே! துவக்கியிருக்கிற இந்த வருஷம் அல்லது இந்த வருஷத்திலுள்ள அநேக நாள் எத்தனையோ பேருக்கு வீணாயிழந்துபோன காலமாயிருக்கும்? இதைக் குறித்து ஒருநாள் எவ்வளவோ கஸ்திப்படுவார்கள்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சந்நியாச அந்தஸ்திலே இந்த நிர்ப்பாக்கியம் ஒன்றுக்கு மாத்திரம் தப்பித்துக்கொள்ள இடமுண்டானால், சந்நியாசியாயிருக்கிற உனக்கு எவ்வளவோ பாக்கியமென்று சொல்லவேணும்! நீ சாகுந்தனையும் இத்தகைய நன்மையில் நிலைத்திருப்பதற்கு எவ்வளவுதான் வருத்தப்படவேண்டியிருந்தாலும் பின்வாங்கலாகாது.

மனப்பற்றுதல்.—ஆ! என் ஆண்டவரே, என் பரிசுத்தமான அந்தஸ்தை நான் அதிகமாய் மதிக்கவும் சிநேகிக்கவும் செய்தருளும் சுவாமி.

பிரதிக்கினை.—மற்றவர்கள் பாவமென்கிற நிர்ப்பாக்கிய அந்தஸ்தை விட்டுவிடவும் நான் அநுபவிக்கிற பாக்கியம் அவர்களுக்குக் கிடைக்கவும் என்னால் இயன்றமட்டும் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

தியானம்.—காலத்தை அர்ச்சிப்பதற்கும் அதில் சிறிதேனும் இழந்துபோகாதிருப்பதற்கும், தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தோடு நமது சுகிர்த கருத்தும் சேர்ந்திருக்கவேணும்.

நமது கிரியைகளெல்லாம் இயல்பாகவே நன்மையுள்ளவைகளாயினும் அல்லது நன்மை தின்மை இல்லாதவைகளாயினும் சுபாவத்துக்கு மேற்பட்ட முகாந்தரமாய்ச் சர்வேசுரனுக்காக அல்லது சர்வேசுரனைப்பற்றி அவைகளைச் செய்யவேணும். மனிதன் வெளியில் தோன்றுவதைப் பார்க்கிறான்; சர்வேசுரனோ மனதின் உள்ளாந்தரங்க கருத்தைப் பார்க்கிறார். நாம் செய்யுங் காரியம் அவரைப்பற்றி இல்லாவிடில் அவர் சம்பாவனை கொடுக்கமாட்டார். வேதபாரகரும் பரிசேயரும் வீண் சிலாக்கியத்துக்காகவும் ஜனங்கள் தங்களைப் புகழ்ந்துகொள்வதற்காகவும் அநேக நன்மையான காரியங்களைச் செய்துவந்தார்கள். இவைகளுக்கு மறுலோகத்தில் சம்பாவனை கிடையாதென்றும் இவர்கள் காலத்தை வீணிலே செலவழித்து வீண் பிரயாசப்பட்டார்

களென்றும் இயேசுநாதர் சுவிசேஷத்தில் அறிவித்திருக்கிறார் (மத். 6).

இதிலே விசேஷமாய் யோர்சிக்கத்தக்கது.—சுயபட்சம், வீண் சிலாக்கியம், மனிதருக்குப் பிரியப்படவேணுமென்கிற ஆசை இவை முதலானவைகள் நீ செய்யும் கிரியைகளுக்கு முகாந்தரமாயிருக்குமானால், நீ செய்யும் அநேக நன்மையான காரியங்கள் பேறுபலனில்லாமற் போகுமென்று நினைக்கவேண்டியதில்லையோ? அல்லது அவைகளில் சிலதென்கிலும் பலன் இல்லாமற்போகும் என்பது நிச்சயமில்லையோ? ஆகையால் உன் இருதயத்துக்குள் இருக்கிறதெல்லாம் ஆராய்ந்து தைரியத்தோடே உன்னைத்தானே வினவி பாரபட்சமில்லாமல் உனக்கே மாறுத்தரஞ் சொல்லிக்கொள்வாயாக.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, என் நற்கிரியைகள் எல்லாத்தையும் தேவரீர் சமுகத்திலே அநந்தம் விசை கெடுத்துப்போடுகிற என் ஆகாத இச்சையை ஜெயிக்கும்படி எனக்கு வேண்டிய உதவிசெய்தருளும் சுவாமி.

பிரதிக்கினை.—தன்னிலே நன்மையும் தின்மையும் இல்லாத கிரியைகளைச் செய்கிறதற்குச் செலவழிக்கும் நெடுநேரமெல்லாம் பிரயோஜனமுள்ளதும் அர்ச்சிக்கப்பட்டதுமாயிருக்கத்தக்கதாக ஒவ்வொரு நாளிலும் அடிக்கடி நல்ல கருத்தைப் புதுப்பிக்கவேணும்.

3-ம் பிரிவு

தியானம்.—நேரத்தைப் பரிசுத்தமாக்கவும் அதை அற்பமென்கிலும் வீணில் இழந்துபோகாதிருக்கவும் நமது கிரியைகளையெல்லாம் சர்வேசுரனுக்கு யோக்கியமான பிரகாரம் பத்தி சுறுசுறுப்புடனே செய்யவேணும்.

நீ செய்யும் அநேக நற்கிரியைகளைச் சாதாரணமாய் நல்ல கருத்தோடே செய்தபோதிலும், சுறுசுறுப்பில்லாமல் அசட்டையோடும் குற்றங்குறையோடும் செய்கிறதி-

னாலே, அவைகளில் செலவழிக்கும் நேரம் பெரும்பாலும் வீணாய்ப் பலனில்லாமற் போகிறது. இதனிமித்தம் நாம் செய்யும் கிரியைகளிலெல்லாம் கவனமாகவும் பழுதில்லாமலுமிருக்கும்படி இஸ்பிரீத்து சாந்துவானவர் வெகு வாய்ப் புத்தி சொல்லுகிறார், கற்பிக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—எச்சரிக்கையோடும் உதாரத்தனத்தோடும் இந்தத் தேவ கற்பனைக்குச் சரியாய் நடக்கிற கிறீஸ்துவனும் சந்நியாசியும் பாக்கியம் பெற்றவர்களாம். இவர்கள் கொஞ்சநாளைக்குள்ளாக எவ்வளவோ பேறுபலன் அடையலாம்! நீதிமான் கொஞ்சநாளைக்குள் நெடுநாள் சீவித்தவனைப்போல் இருப்பான்.

இந்தப் பாக்கியத்துக்கு நாமும் பங்காளியாகலாம். இதை அடைகிறதற்கான அநேக உபாயங்களுக்குள்ளே ஒரு உபாயமேதென்றால், நாம் சிலுவையடையாளம் வரையும்போது சொல்கிற வார்த்தைகளோடு இந்தக் கிரியையை உத்தம பிரகாரமாய்ச் செய்ய விரும்புகிறேனென்கிற வார்த்தைகளையும் சேர்த்துக்கொள்ளப் பழகுகிறதுமல்லாமல் அந்தந்தக் கிரியைக்குப்பின் அதை நன்றாய்ச் செய்தேனோ இல்லையோவென்று பரிசோதித்துப் பார்க்கவேணும்.

சம்பாஷணை.—அர்ச். ஸ்தனிஸ்லாசோடு சம்பாஷணை செய். இவர் சந்நியாச சபையில் உட்படுவதற்கு முந்தியே சொற்பக்காலத்தில் அர்ச்சியசிஷ்டதனத்தின் உன்னத படியை அடைந்தார். இதற்காக அவர் பிரபலியமான கிரிகைகள் செய்யவில்லை; அவர் தாம் செய்த சகல கிரிகைகளையும், மகா அற்பமானவைகளை முதலாய் மகா சுத்த கருத்தோடும் உருக்கமான சிநேகத்தோடும் செய்து வந்ததினால், அற்ப நேரத்தையும் வீணாக்காமல் பரிசுத்தப் படுத்தி அர்ச்சியசிஷ்டவரானார். அவரைக் கண்டுபாவிப்பதற்கான வரத்தை எனக்கு அவர் அடைந்து தரும்படி உருக்கமாய் மன்றாடுவேன்.

6-ம் தேதி

மூன்று இராஜாக்கள் திருநாளின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இந்த மூன்று இராஜாக்கள் வானத்திற் கண்ட நட்சத்திரத்தின் ஒளியைப் பின்சென்று நடக்கிறதைக் காண்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—இந்தத் திருநாள் எத்தகைய விசேஷத்தையும் உபகாரத்தையும் கடமைகளையும் நமக்கு ஞாபகப்படுத்துகிறதென்பதை நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

இந்தத் திருநாள் நமக்கு ஞாபகப்படுத்துகிற விசேஷத்தின்பேரில்

தியானம்.—திருச்சபையானது எக்காலத்திலும் இந்தத் திருநாளை எட்டுநாள் பரியந்தம் மகா ஆரவாரமாய்க் கொண்டாடி வருகிறது. ஏனெனில், இயேசுநாதர் அந்த மூன்று இராஜாக்களுக்கும் அவர்களிடமாய் அவர்களைப் போல அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருந்த உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் தம்மைக் காண்பித்த பாக்கியமான இம்மாபெரிய விசேஷத்தை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. இன்று பூசையில் வாசிக்கும் சுவிசேஷத்திலே இதின் சரித்திரம் விபரமாய் எழுதப்பட்டிருக்கின்றது. அதேதென்றால், ஏரோது இராஜா காலத்தில் யூதேயா நாட்டிலுள்ள பெத்லேம் ஊரிலே இயேசுநாதர் பிறந்திருக்கையில், இதோ கிழ்த்திசையினின்று இராஜாக்கள் எருசலேம் பட்டணத்துக்கு வந்து பிறந்திருக்கிற யூதர்களுடைய இராஜா எங்கேயென்று கேட்டார்கள்; ஏனெனில் கிழ்த்திசையில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரை ஆராதிக்க வந்தோமென்றார்கள் (மத். 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இன்றையத்தினம் கொண்டாடும் இந்த முக்கியமான சம்பவம்

நமக்குப் பிரயோசனமான படிப்பினையுள்ள வேறே சில விசேஷங்களையும் ஞாபகப்படுத்துகின்றது. எப்படியெனில், மதுரமும் உறுதியுமான உபாயங்களைக்கொண்டு இயேசுநாதர் தம்மைச் சகலருக்கும் வெளிப்படுத்தச் சித்தமானார். அப்படியே விசுவாசிகளான யூதர்களுக்குச் சம்மனசைக்கொண்டு தம்மை அறிவிக்கிறார்; அற்புதமான நட்சத்திரத்தின் வழியாய் அஞ்ஞானிகளுக்குத் தம்மை அறியப்பண்ணுகிறார். அதுபோல நாமும் எவ்வித ஜனங்களுக்கும் யாதொரு வித்தியாசமில்லாமல் சர்வேசுரனை அறிவிப்பதில் சுறுசுறுப்புள்ளவர்களாய் இருக்கவேணுமென்று படிப்பிக்கிறார். மனிதர்களுடைய பற்பல அந்தஸ்துக்குத் தகுந்தாப்போல் இரட்சண்ணிய வழியைக் காட்டுகிறார். இதில் தேவ பராமரிக்கையின் ஆச்சரியமுள்ள தயாளத்தை நமக்கு அவர் காண்பிக்கிறதுமன்றி அதின்பேரில் நாம் மாறாத நம்பிக்கை வைக்கவேணுமென்றும் படிப்பிக்கிறார்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் கண்டு ஆச்சரியப்பட்டு ஆண்டவரை வாழ்த்தி தேவ பராமரிக்கைக்கு நம்மைக் கையளிப்போமாக.

பிரதிக்கினை.—இந்தத் திருநாளையும் இதைச்சார்ந்த மகத்தான விசேஷங்களையும் இன்றைக்கு அடிக்கடி நினைத்துக்கொள்வோமாக.

2-ம் பிரிவு

இந்தத் திருநாள் சர்வேசுரன் செய்த பெருத்த உபகாரங்களை நமக்கு நினைப்பூட்டுகிறதின்பேரில்

தியானம்.—அஞ்ஞானிகளுக்குள்ளே மெய்யான கடவுளின் விசுவாசத்தையும் ஆராதனையையும் காப்பாற்றி வரத்தக்கதாக அபிரகாமென்பவருடைய சந்ததியார் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். ஆனால் உலகத்திலுள்ள சகல ஜனங்களும் இயேசுநாதரிடத்தில் ஒரே பிரஜையாயிருக்கத்தக்கதாக ஒரே விசுவாசத்துக்கு அழைக்கப்படும்

ஒரு நாள் வரவேண்டியதாயிருந்தது. இதைக் குறித்து ஆண்டவர் அபிரகாமென்பவருக்கு முன்னமே வாக்குக் கொடுத்திருந்தார். நமது முன்னோர்களாகிற சகல அஞ்ஞான ஜனங்களை அழைக்கும் குறிப்பாக மூன்று இராஜாக்களை இயேசுநாதர் அழைத்ததினாலே அன்றையத்தினம் அந்த வாக்கு நிறைவேறினது. ஆகையால் மெய்யான விசுவாசத்துக்கு நாம் அழைக்கப்பட்டோமென்கிற மேலான உபகாரத்தையும் மெய்யான விசுவாசமானது பழுதில்லாமல் காப்பாற்றப்பட்ட தேசத்திலே நாம் பிறக்க ஆண்டவர் செய்த பெரிய உபகாரத்தையும் பக்தியும் விசுவாசமுமுள்ள தாய் தகப்பனிடத்திலே நாம் பிறந்து வேதத்துக்கு ஒத்தபிரகாரம் நாம் வளர்க்கப்பட அவர் செய்த உபகாரத்தையும் இந்தத் திருநாளானது நமக்கு ஞாபகப்படுத்துகிறதல்லவோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மகா பெரிய இந்த உபகாரங்களின் நினைவானது எப்போதும் நமது புத்தியிலிருக்கவேண்டியது; விசேஷமாய் இன்றையத்தினம் அது முக்கியமாயிருக்கவேணும். அந்த உபகாரங்கள் சர்வேசுரன் நமக்கு இலவசமாய் அருளிய நன்கொடைகளானதுபற்றி நாம் மெத்தவும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நன்றிகெட்டதனம் ஏற்படாதபடி பயந்து நடக்கவேண்டும்; வரப்பிரசாத ஊற்று வறண்டுபோக அது காரணமாகும்.

மனப்பற்றுதல்.—திருச்சபை இன்றையத்தினம் செய்யும் ஜெபத்திலே நாம் சந்தோஷம் அடைந்து நன்றியுள்ளவர்களாயிருக்க நம்மைத் தூண்டுகிறதினாலே, இன்று செய்யும் தியானத்திலேயும் இந்த நாள்முழுதும் இந்த நினைவோடிருப்போமாக.

பிரதிக்கினை.—இன்றையத்தினம் செய்யும் பூசையிலேயும் பிரார்த்தனையிலேயும் விசேஷமாய் தேவநற்கருணை வாங்கும்போதும் முன் சொன்ன கருத்து நம்மைவிட்டு அகலாதிருக்கக்கடவது.

3-ம் பிரிவு

இந்தத் திருநாள் இன்பமான பெருங் கடமைகளை நமக்கு நினைப்பூட்டுகிறதின்பேரில்

தியானம்.—விசுவாசம் மூன்று இராஜாக்களிடத்தில் மகத்தான காரியங்களை நிறைவேற்றினது. அது அவர்களைப் புது மனுஷராகவும் ஞானிகளாகவும் அர்ச்சியசிஷ்டவர்களாகவும் அப்போஸ்தலர்களாகவும் வேதசாட்சிகளாகவும் ஆக்கினது. அவர்கள் அப்போஸ்தலரான அர்ச். தோமையாரிடத்தில் ஞானஸ்நானம் பெற்று அவர்களும் விசுவாசப் பரம்புதலின் அப்போஸ்தலர்களும் வேதசாட்சிகளுமானார்கள் என்று பூர்வீக பாரம்பரை கூறுகிறது. திருச்சபை அவர்களை அர்ச்சியசிஷ்டவர்களாகக் கொண்டாடிவருகிறதுமன்றி, கொலோனியா பட்டணத்தின் பிரதான கோவிலிலே அவர்களுடைய அர்ச்சியசிஷ்ட பண்டங்கள் பூச்சியமாய்க் காப்பாற்றப்பட்டு அவைகளை 12-ம் நூற்றாண்டுமுதல் இதுவரையிலும் ஜனங்கள் சங்கித்துக்கொண்டு வருகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—விசுவாசத்தின் மகா ஒளியுள்ள பிரகாசத்தினால் நம்மையும் இயேசுநாதர் பிரகாசித்துக்கொண்டு வருகிறாரல்லவோ? அந்த விசுவாசம் நம்மோடே பிறந்து நம்மோடே வளர்ந்துகொண்டு வருகிறதென்றும் சொல்லலாம். அது எப்படியென்றால், நமக்குச் சிறுபத்திலேதானே விசுவாசத்தைச் சேர்ந்த பலத்த பரம இரகசியங்களையும் அதைச் சேர்ந்த கடமைகளையும் நமக்குப் படித்துக்கொடுத்தார்களல்லவோ? இதற்கு நாம் நன்றியறிந்தவர்களாய் நாளுக்குநாள் அதிக மதிகமான ஞானக்கனிகள் நம்மிடத்தில் உண்டாக பிரயாசப்படவேணும். இது நம்மெல்லாருக்கும் இனிய பெருங் கடமை. விசுவாசமானது சிநேகத்தினால் கிரியைகளைச் செய்யுமென்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார் (கலா. 5). சிநேகம் இருக்குமிடத்திலே பலதத காரியமும் உண்டாகுமென்று அர்ச். கிறகோரி பாப்பானவர் சொல்லுகிறார். இது உன்னிடத்திலும் விளங்குகிறதா?.

சம்பாஷணை.—அஞ்ஞானிகளுக்குள் முதல் கனியாகிற மூன்று இராஜாக்களோடே சம்பாஷணை செய்து இவர்களை ஸ்துதித்துப் பாராட்டி நம்மிடத்தில் சிநேகமும் விசுவாசமும் எப்போதும் வளர்ந்துவர இவர்கள் நமக்காக மன்றாடும்படி கேட்போமாக.

7-ம் தேதி

(மூன்று இராஜாக்கள் திருநாளுக்குப்பின் இரண்டாம் நாள்)

தேவ வரப்பிரசாத ஏவுதலுக்குக் கீழ்ப்படிகிறதிலே மூன்று இராஜாக்கள் காண்பித்த பிரமாணிக்கத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இரட்சகர் பிறந்த ஸ்தலத்துக்குக் கூட்டிக்கொண்டுபோன நட்சத்திரத்தை மூன்று இராஜாக்கள் பின்சென்று போகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—தேவ வரப்பிரசாத ஏவுதலுக்குப் பிரமாணிக்கமாயிருக்க மன்றாடுவேனாக.

முதல் பிரிவு

மூன்று இராஜாக்கள் சுறுசுறுப்போடே தேவ வரப்பிரசாதத்துக்குக் கீழ்ப்படிகிறார்கள்

தியானம்.—தேவ வரப்பிரசாதத்துக்குப் பிரமாணிக்கமாயிருக்க வேணுமானால், முந்த முந்த அதின் ஏவுதலைப் பின்செல்லுகிறதற்குச் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும். மூன்று இராஜாக்களிடத்தில் விளங்கின சுறுசுறுப்பு மெத்த ஆச்சரியத்துக்குரியது:—மகா அபூர்வமான ஒளியுள்ள ஒரு நட்சத்திரம் அவர்கள் கண்களுக்குத் தோன்றவே, அந்தரங்-

கக் குரலொன்று அதின் அர்த்தம் இன்னதென்று அவர்கள் கண்டுபிடிக்கச் செய்தது. உடனே அவர்கள் தங்களைத் தாமதப்படுத்தக்கூடிய விக்கினங்களையெல்லாம் நீக்கி அதைப் பின்சென்றுபோகத் தலைப்பட்டார்கள். ஆகையால் நாங்கள் அதைக் கண்டமாத்திரத்திலே புறப்பட்டு வந்தோமென்று ஏரோது இராஜாவுக்கு அவர்கள் உண்மையாய்ச் சொல்லக்கூடுமாயிருந்தது (மத். 2).

இவர்களைப்போல் சோதிட சாஸ்திரங்களை அறிந்த வேறநேகர் நவமான இந்த நட்சத்திரத்தைக் கண்டு தாங்களும் அதைப் பின்செல்லவேணுமென்கிற ஏவுதல் அடைந்தார்களென்று நம்ப இடமுண்டு; ஆனால் அதை இன்னமும் துலக்கமாய் அறிந்து பார்க்கவேணுமென்று தாமதித்ததினாலே, உலக இரட்சகரைக் கண்ணாலே காணும் மேலான பாக்கியம் அவர்களுக்குக் கிடையாமற்போயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் உனக்கு வருவிக்கும் நல்ல எண்ணத்தின்படி நடக்க நீ தாமதித்ததினாலே, சிலவிசை எத்தனையோ வரப்பிரசாதங்களையும் பேறுபலன்களையும் இழந்துபோயிருக்கிறாய்! ஏனெனில் தாமதிக்கிறது சாதாரணமாய் செய்யத்தவறுவதாகும். அநுவலில்லாத சமயத்திலே பிறர்சிநேகத்துக்கடுத்த யாதொரு காரியம் செய்யவும் தேவநற்கருணை சந்திக்கவும் மற்ற யாதொரு தர்மக்கிரியை புரியவும் உனக்கு எத்தனை விசை நல்ல எண்ணம் வந்திருந்தாலும், நீ தாமதம் செய்ததினாலே ஒன்றும் நடவாமற்போயிற்று. முன் நீ நடந்ததைப் பார்க்கையில், இது மெய்தானென்று நீயே அறிந்துகொள்ளலாம்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் உண்மை என்று ஒத்துக்கொண்டு துக்கப்படுவேனாக.

பிரதிக்கினை.—சர்வேசுரன் எனக்கு வருவிக்கும் நல்ல எண்ணங்களை சுறுசுறுப்போடே நிறைவேற்றுகிறதிலே மூன்று இராஜாக்கள் காண்பித்த மாதிரிகையைப் பின்சென்று நடப்பேனாக.

2-ம் பிரிவு

மூன்று இராஜாக்கள் உதாரத்தோடே தேவ வரப்பிரசாதத்துக்குக் கீழ்ப்படிகிறார்கள்

தியானம்.—இரண்டாவது, தேவ வரப்பிரசாதத்திற்கிசைய பிரமாணிக்கமாய் நடப்பதற்கு உதாரத்தனம் வேண்டியது. நமது சுயபட்சமும் கோழைத்தனமும் நம்மைப் பயமுறுத்தி நமக்குத் தோற்றுவிக்கிற கஷ்டங்களையும் விக்கினங்களையும் பொருட்படுத்தாமல் அவைகளை மேற்கொள்வது உதாரத்தனமென்று சொல்லப்படும். இவ்வித உதாரத்தனம் மூன்று இராஜாக்களுக்கு அவசியமாயிருந்ததென்பதில் சந்தேகமில்லை. அவர்கள் தொடங்கின பயணம் வெகுதொலையானது, காலமோ மிகக் கடினமானது, பாதையோ சீரில்லாதது; மேலும் காணப்பட்ட நட்சத்திரம் அவர்களைக் கூட்டிக்கொண்டுபோகும் இடம் யாதென்றும் தங்கள் குடும்பத்தையும் அலுவலையும் விட்டு எவ்வளவுகாலம் பிரிந்திருக்க நேரிடுமென்றும் அவர்களுக்குத் தெரியாது. தங்கள் தேசத்தார் இதைக்கண்டு தங்களை நகைப்பார்களென்று அறிந்திருந்தும், அதையெல்லாம் அவர்கள் சட்டைபண்ணாமல் காணப்பட்ட அடையாளத்தைக்கொண்டு தங்களை அழைப்பித்தவர்பேரில் முழு நம்பிக்கை வைத்து அவர் கையில் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நான் அநேகந் தருவாயிலே தேவ வரப்பிரசாதத்துக்குப் பிரமாணிக்கம் தவறிப்போவதேன்? தியான காலத்திலே நான் யோசித்துச் செய்த பிரதிக்கினைகளில் தவறிப்போவானேன்? எனக்குப் பிரயோசனமும் அவசியமுமானதென்று தெரிந்துள்ள பக்திக்கிருத்தியங்களிலும் ஒறுத்தல் முயற்சிகளிலும் பிரமாணிக்கம் இல்லாமற்போனதேன்? என்னிடத்தில் உதாரத்தனமில்லாமல் வீண் பயத்துக்கு இடம் கொடுத்ததினாலல்லவோ இப்படி நடந்துவருகிறேன்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் சமுகத்திலே தாழ்ச்சியோடே இதெல்லாத்தையும் உணர்ந்து கஸ்திப்பட்டு அழுது எவ்விடத்திலே, எச்சமயத்திலே உதாரத்தனம் எனக்கு இல்லாமற்போயிற்றென்று பார்த்து இனிமேல் சரியாய் நடக்க நல்ல பிரதிக்கினை செய்துகொள்வேனாக.

பிரதிக்கினை.—இந்தச் சமயத்திலே சர்வேசுரன் உனக்குக் கொடுக்கிற ஞானத் தெளிவுக்குத் தகுந்த பிரதிக்கினை செய்துகொள்வாயாக.

3-ம் பிரிவு

மூன்று இராஜாக்கள் நிலைமையோடு தேவ வரப்பிரசாதத்துக்குக் கீழ்ப்படிகிறார்கள்

தியானம்.—மூன்றாவது, தேவ வரப்பிரசாதத்துக்குப் பிரமாணிக்கமாயிருக்கவேணுமானால், கடைசிபரியந்தம் நிலைத்திருக்கவேண்டும். ஏனெனில், தேவ வரப்பிரசாதத்தினாலே நமக்குண்டாகும் சுகிர்த கருத்தை உடனே நிறைவேற்றுவது எப்போதும் சாத்தியப்படாது. பெரும்பாலும் அநேக நாள் அல்லது அநேக மாதம் வரையும் வெகுவாய்ப் பிரயாசப்படவேண்டியிருக்கும்.

மூன்று இராஜர்க்களிடத்தில் விளங்கின நிலைமையானது வீரத்துவமுள்ளதாயிருந்தது. காலக்கொடுமையும் வேண்டிய பொருட்குறைவும் நெடும் பயணமும் காணப்பட்ட நட்சத்திரம் மறைந்துபோனதும், எருசலேம் பட்டணத்தார் நட்சத்திரம் தோன்றினதை அறிந்தும் அதைச் சட்டைபண்ணாதிருந்ததும் இவர்களுடைய உறுதியை அசைக்கக்கூடாமற்போயிற்று. சர்வேசுரன் அதற்குச் சம்பாவனை அளித்தார். மறைந்த நட்சத்திரம் திரும்பவும் தோன்றி தேவ பாலன் அண்டையில் இவர்களைக் கூட்டிக்கொண்டு போயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நம்மிடத்தில் உள்ள நிலைமை எவ்வளவோ குறைவானது. இது வழக்கமாய் நீளித்திருப்பது வெகு வெகு சொற்பக்

காலந்தான். காலையில் செய்த பிரதிக்கினை மத்தியானத்துக்குள்ளாக மாறிப்போகிறது. சில கிரிகைகளைத் துவக்கும்போது செய்த பிரதிக்கினைகளில், அக்கிரிகைகளை முடிப்பதற்குள்ளாகவே அநேகமாய்த் தவறிப்போகிறதில்லையோ? இப்படியிருக்க, நாம் புண்ணியத்திலே விருத்தியடையாமலிருக்கிறது ஆச்சரியமோ? இது முதல் இனிமேல் நன்றாய் நடந்துகொள்ளப் பிரயாசப்படுவோமாக. நமக்கு அவசரமான தைரியத்தையும் உதாரத்தனத்தையும் மூன்று இராஜாக்கள் மன்றாட்டினால் ஆண்டவரிடத்தில் கேட்கவேணும்.

சம்பாஷணை.—தேவ வரப்பிரசாதத்தின் ஏவுதலுக்குச் சரியாய் நடக்கத்தக்கதாக மிகுந்த சுறுசுறுப்பையும் விசேஷமாய் சர்வேசுரன் நமக்கு வருவிக்கிற நல்ல எண்ணத்தை நிறைவேற்றுகிறதில் உதாரத்தனத்தையும் உறுதியையும் மூன்று இராஜாக்கள் நமக்காக இரந்து மன்றாடக் கேட்போமாக.

8-ம் தேதி.

(மூன்று இராஜாக்கள் திருநாளுக்குப்பின் மூன்றாம் நாள்)

மூன்று இராஜாக்கள் பிரயாணம் செய்தபோது, சம்பவித்த மூன்று விசேஷங்கள்

ஆயத்தச் சிந்தனை.—நட்சத்திரம் மறைந்துபோனதைக்கண்டு மூன்று இராஜாக்கள் கிலேசப்பட்டதைப் பார்க்கிறதாக உருப்பிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—இவர்கள் செய்த பயணத்திலே நடந்த பற்பல காரியங்களை யோசித்து நமது ஆத்தும பிரயோசனம் அடைகிறதற்கான வரப்பிரசாதம் கேட்போமாக.

முதல் பிரிவு

நட்சத்திரம் மறைந்துபோனதின்பேரில்

தியானம்.—மூன்று இராஜாக்கள் எருசலேம் பட்டணத்தை அடுத்துப் போகும்போது, நட்சத்திரம் மறைந்துபோயிற்று. இதுவரையிலும் இவர்களுக்கு வழி காண்பித்து ஆறுதலாயிருந்த பரலோக ஒளியானது மறைந்துபோனதைக் கண்டு கிலேசப்பட்டாலும், இவர்கள் மனத்திடன் அற்றுப்போகாமல் பட்டணத்தில் பிரவேசித்து ஏரோது இராஜாவின் அண்டையிற்போய் இரட்சகர் பிறக்கவேண்டிய ஸ்தலம் எங்கேயென்று வேதபாரகரைக் கொண்டு ஆராய்ந்து சொல்லும்படி கேட்டார்கள். பெத்லேம் ஊரில் அவர் பிறக்கவேண்டியதென்று அவ்வேதபாரகர் வழியாய் இவர்கள் அறிந்தவுடனே, அங்கே போகத் தொடங்கினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் மூன்று இராஜாக்களை நடப்பித்த பிரகாரம் தமது பிரிய தாசர்களையும் நடப்பித்துக்கொண்டு வருகிறார். அதெப்படியென்றால், ஒரு சமயத்தில் வெகு ஞானப் பிரகாசத்தையும் ஆறுதலையும் கொடுப்பார். மற்றொரு சமயத்தில் இவர்களுடைய விசுவாசத்தையும் சிநேகத்தையும் சோதித்துப்பார்க்கவும் அதை அர்ச்சிக்கப்பண்ணவும் கொடுத்த ஞானப் பிரகாசத்தை நீக்கி ஒருவித அந்தகாரத்தில் விட்டுவிடுவார். அந்தச் சமயத்திலே நாம் செய்யவேண்டியதென்ன? மூன்று இராஜாக்களைக் கண்டுபாவித்து மனம் தத்தளியாமல் தேவ சித்தத்தை ஆராதித்து நாம் செய்யவேண்டிய காரியத்திலும் பக்திக்கடுத்த முயற்சியிலும் ஒன்றும் விட்டுவிடாமல் திரும்பவும் அந்த ஞான ஒளி நமக்கு வருந்தனையும் நமது ஆத்தும குரு சொல்லுகிற புத்தியைத் தாழ்ச்சியோடேயும் சிரவணத்தோடேயும் கேட்கவேணும். நீ இப்படி நடந்துவந்ததுண்டோ?

மனப்பற்றுதல்.—ஆண்டவர் உன்னை நடப்பிக்கச் சித்தமாயிருக்கிற பற்பல அந்தஸ்தைப்பற்றி நீ சமநிலையாயிருப்பேனென்று உறுதியாய்ச் சொல்லுவாயாக.

பிரதிக்கினை.—அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியார் சொன்னதுபோல, எல்லாவற்றிலும் எல்லாத்துக்கு முந்தியும் தேவ ஆறுதலைத் தேடாமல் அவ்வாறுதலைத்தரும் சர்வேசுரனை மாத்திரம் தேட தாற்பரியமாயிருக்கிறேனென்று சொல்லுவேனாக.

2-ம் பிரிவு

திரும்பவும் நட்சத்திரம் காணப்பட்டதின்பேரில்

தியானம்.—மூன்று இராஜாக்களிடத்திலே விளங்கின தாழ்ச்சியுள்ள நம்பிக்கையையும் சிரவணத்தையும் சர்வேசுரன் பார்த்து இவர்களுக்கு உடனே சம்பாவனை அளித்தார். இவர்கள் தங்களுக்கு அறிவிக்கப்பட்டபடி பெத்லேம் ஊருக்குப் போகிறதற்காக எருசலேம் பட்டணத்தை விட்டுப் புறப்பட்ட மாத்திரத்திலே திரும்பவும் நட்சத்திரம் காணப்பட்டு இவர்கள் மனதைச் சந்தோஷத்தினால் நிரப்பி பிறந்த பாலன் இருந்த ஸ்தலம் வரையிலே இவர்களுக்கு வழிகாண்பித்து அவ்விடத்தில் அசையாமல் நின்றது (மத். 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் மூன்று இராஜாக்களுடைய விசுவாசத்தையும் நிலைமையையும் கண்டுபாவிப்போமானால், சர்வேசுரன் நமக்கு அனுப்பச் சித்தங்கொள்ளுகிற பற்பல இக்கட்டு சோதனைகளிலேயும் எப்போதும் இந்தப்பிரகாரம் நடந்துவரும். ஆனால் அநேகந் தருவாயிலே நாம் பிரமாணிக்கம் தவறி நிலைமையில்லாமற்போகிறோம். முந்தி நாம் செய்த நல்ல பிரதிக்கினையில் நிலைத்து, ஆத்தும குரு சொல்லும் புத்தியைக் கேட்பதற்குமாறாய் புண்ணியத்தைக் கைவிட்டு பற்பல பராக்குகளுக்கு இடங் கொடுக்கிறோம்; சிருஷ்டிகளிடம் ஆறுதலைத் தேடித் திரிகிறோம்! இதெல்லாம் மெய்யென்று நீயே ஒத்துக்கொள்வாயல்லவோ?

மனப்பற்றுதல்.—தாழ்ச்சியோடே இதை ஒத்துக்கொண்டு வெட்கி மனஸ்தாபப்படுவாயாக.

பிரதிக்கினை.—உனக்கு வரும் இக்கட்டுகளிலே மனநிலைமை தவறாமல் இருப்பாயாக.

3-ம் பிரிவு

நட்சத்திரம் தங்கின இடத்தின்பேரில்

தியானம்.—நட்சத்திரம் தங்கின இடத்தைப் பார்க்கையில், மூன்று இராஜாக்களுக்கு எவ்வளவு ஆச்சரியம் உண்டாகவேண்டியது! அது ஒரு பாழுங் குடிலின்பேரில் தங்கினது. அவர்கள் அதனுள்ளே கண்டதென்ன? ஒரு முன்னிட்டியில் கொஞ்சம் வைக்கோலின்பேரில் கந்தைத் துணியால் போர்த்தப்பட்டிருந்த ஒரு பச்சைக் குழந்தையையும் மற்றப் பெண்பிள்ளைகளைப்போலொத்த ஒரு தாயையும் ஒரு தச்சனையும் அடிக்கடி அந்தக் குகையைச் சந்தித்துத் திருக்குடும்பத்துக்கு ஒத்தாசை செய்துவந்த ஏழைகளான இடையர்களையும் அதில் கண்டார்கள். இவைகளைப் பார்க்கையில், அவர்களுடைய விசுவாசத்துக்கு எத்தகைய சோதனை உண்டாயிருக்கவேணும்! இந்தப் பாலன்தான் இஸ்ராயேலின் ஜனத்துக்கு அறிவிக்கப்பட்ட இராஜாவென்று நம்புவதெப்படி? மனிதரிடத்தில் சுபாவமாயுள்ள ஆங்காரத்தை அதிகரிக்கவும் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் இருந்த விசுவாசத்தை முதலாய்க் குறைக்கவும் இவைகள் போதுமல்லவோ? ஆனால் மூன்று இராஜாக்கள் தாழ்ச்சியுள்ளவர்களாயிருந்ததினாலே, சர்வேசுரன் அவர்களுக்கு மிகுந்த தயவைக் காண்பித்தார். ஏனென்றால் அர்ச். இயாகப்பர் சொல்லுமாப்போலே, சர்வேசுரன் மனத்தாழ்ச்சியுள்ளவர்களுக்குக் கிருபையை அளிக்கிறார் (இயாக. 4). திடீரென்றாற்போல அவர்கள் தேவ வரப்பிரசாதத்தினால் புத்தி தெளிந்து தெய்வீக இரட்சகர் மனம்பொருந்தி அடைந்த நீசத்தனத்தின் பரம இரகசியங்களைக் கண்டறிந்து அவரைச் சாஷ்டாங்கமாக விழுந்து ஆராதிக்கிறார்கள்; அவர்களுடைய ஆத்துமம் வாக்குக்கெட்டாத பேரின்ப வெள்ளத்தில் அமிழ்ந்துகிறது; அந்தக் குடிலானது அவர்களுக்கு மோக்ஷம்போலாகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரனை மாத்திரம் தேடி அவரைப்பற்றி ஜீவிக்க ஆசைப்படும் மெய்யான தாழ்ச்சியுள்ளவர்களுக்குச் சர்வேசுரன் கொடுத்தருளச் சித்தமாயிருக்கிற தாழ்ச்சியென்கிற புண்ணியத்தின்பேரிலும் மேன்மையின்பேரிலும் உன்னதமான வரங்களின்பேரிலும் விசேஷமான தேவ வரப்பிரசாதங்களின்பேரிலும் நீ அநேகம் விசை வாசித்துத் தியானித்திருக்கிறதையெல்லாம் இவ்விடத்தில் நினைத்துக் கொள்வாயாக.

சம்பாஷணை.—மூன்று இராஜாக்களோடே நீயும் ஞானவிதமாய்ப் பாலனான இயேசுநாதர் பாதத்திலே சாஷ்டாங்கமாய் விழுந்து ஆராதித்துத் தாழ்ச்சியில் எப்போதும் வளரவும், ஆறுதலிருக்கும்போதும் இல்லாதபோதும், எந்நேரமும் உத்தமதனத்தில் விருத்தியடையவும் வரப்பிரசாதம் கேட்பாயாக.

9-ம் தேதி

(மூன்று இராஜாக்கள் திருநாளுக்குப்பின் நான்காம் நாள்)

ஏரோது இராஜா புத்தி கலங்கினதும்
அவன் காண்பித்த கள்ளஞானமும்
அவன் காலக்குறிப்பில் தவறிப்போனதும்

ஆயத்தச் சிந்தனை.—கள்ளஞானிகளாகிய உங்களுக்கு நிர்ப்பாக்கியமென்று இயேசுநாதர் சொன்னதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக (மத். 23).

தியானச் செபம்.—நேர்மையான மனதையும் சுத்தமான கருத்தையும் கேட்பேனாக.

முதல் பிரிவு

ஏரோது இராஜா புத்தி கலங்கினது

தியானம்.—மூன்று இராஜாக்கள் ஏரோது இராஜாவண்டையில் வந்து யூதர்களுடைய இராஜா பிறந்திருக்கிற

இடம் எங்கே? ஏனென்றால் கீழ்த்திசையில் அவருடைய நட்சத்திரத்தைக்கண்டு வந்தோமென்று சொன்னபோது, அவனும் அவனோடுகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள். (மத். 2.) இந்த இராஜா திடீரென்றாற்போலே புத்தி கலங்கினதேது? இவன் சீமைக்கு ஏதேனும் அபாயம் வந்ததோ? அவன் குடிகளுக்கு யாதொரு மோசம் நேரிட்டதோ? ஒன்றுமில்லையே. ஆசாபாசமாகிற சுயபட்சமும் பேராசையும் காய்மகாரமும், அவன் கலங்கினதற்குக் காரணமல்லாமல் மற்றப்படியல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீதானே உன்னைப் பற்றும்பற்றாய் விசாரித்துப்பார். நீயும் சிலவிசை புத்தி கலங்கிக் கஸ்தியில் அமிழ்ந்தித் திடனற்றுப்போகிறாயல்லவோ? இதற்குக் காரணம் என்ன? இதற்கு யாதொரு விசேஷ முகாந்திரம் உண்டோ? சர்வேசுரனுக்கு ஏற்காத பாவங்களைச் செய்தாயென்கிறதினாலேயோ? அல்லது ஆத்துமாக்கள் மோசம் போகிறதைப்பற்றியோ? அல்லது திருச்சபைக்கு வந்த இக்கட்டைப்பற்றியோ? யோசித்துப் பார். அப்படியல்லவென்றால், உன்னை மற்றவர்கள் நிந்தித்துக் கண்டித்துக் கோபித்து உன் மனம்போலே நடக்கவொட்டாமற் செய்து உன் கருத்து நிறைவேறாமற்போனதைப்பற்றியோ? அல்லது அப்படி வருமென்கிற பயத்தினாலேயோ? எதினாலே நீ கலங்கிக் கஸ்திப்படுகிறாய்? பிந்தின முகாந்தரமானால், உன் ஆசாபாசமும் ஆங்காரமும் வீண் சிலாக்கியமும் சுயபட்சமும் காய்மகாரமும் அல்லது உன்பேரிலும் உன் சுகத்தின்பேரிலும் நீ வைத்திருக்கிற ஆகாத பற்றுதலுமே இதற்கு மூலகாரணமாயிருக்கலாம். இதை நன்றாய் யோசித்துப்பார்.

மனப்பற்றுதல்.—உனக்கே நீ முழுதும் செத்தவனைப்போலிருக்கச் சர்வேசுரன் உனக்குப் படிப்பிக்கவேணுமென்று கேட்கிறதும் தவிர நாம் எப்போதும் ஆசாபாசத்தை அடக்கிக்கொண்டு வந்தால், வெகு ஞான சமாதானம் அடையலாமென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தில்

சொல்லியிருக்கிறதை நன்றாய்க் கண்டுபிடிக்க சர்வேசுரனைப் பார்த்து மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—கிரமந்தப்பின நினைவு உண்டான மாத்திரத்திலே அதை அடக்கி ஆத்தும சமாதானத்தை அடையப் பிரயாசப்படுவாயாக.

2-ம் பிரிவு

ஏரோது இராஜாவினிடத்தில் விளங்கின கள்ளஞானம்

தியானம்.—இதைக்குறித்து அர்ச். மத்தேயு சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறதாவது: ஏரோதென்பவன் மூன்று இராஜாக்களை இரகசியமாய் அழைப்பித்து நட்சத்திரம் அவர்களுக்குக் காணப்பட்ட காலத்தை மெத்த நுணுக்கமாய்க் கேட்டறிந்து பின்பு அவர்களைப் பெத்லேம் ஊருக்கு அனுப்புகையில், அவர்களை நோக்கி: நீங்கள் போய்ப் பிறந்த பாலனைத் திட்டமாய் விசாரித்துப் பாருங்கள்; நீங்கள் அவரைக் கண்டு தரிசித்தபின், நானும் வந்து அவரைத் தரிசித்து ஆராதிக்கும்பொருட்டு எனக்கு வந்து அறிவியுங்களென்றான் (மத். 2). அவன் வெளிக்கு இவ்வளவு சங்கையும் பத்தியும் காண்பித்தாலும், மெய்யாகவே அவன் நினைத்திருந்த கருத்து இன்னதென்று பின்னால் சம்பவித்த காரியத்தினாலே வெளியாயிற்று. அதேதென்றால், அந்தப் பிள்ளையைக் கொலைசெய்யும்படி அதின் வயதையும் இருக்குமிடத்தையும் அறியப் பிரயாசப்பட்டான்; பின்னும் அந்தப் பிள்ளையைத் திட்டமாய் அறிந்துகொள்ளக்கூடாவிடில் பெத்லேம் ஊரிலேயும் அதின் சுற்றுப்புறத்து எல்லைகள் யாவற்றிலுமுள்ள அதே வயது ஆண் குழந்தைகளையெல்லாம் கொலைசெய்துபோடவும் கருத்துக்கொண்டிருந்தான். இதைவிட வஞ்சகமான கள்ளஞானம் உண்டா?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பாவமில்லாத காரியத்திலே முதலாய்க் கள்ளஞானமானது சர்வேசுரனுக்கும் மனுஷருக்கும் அருவருப்புள்ளதாமே. ஆகிலும் இப்பேர்க்கொத்த கள்ளஞானம் ஓர் வகையில் வெகு சாதாரணமானது. மெய்யாகவே புண்ணியவானாயிருக்கப் பிரயாசப்படாமல் புண்ணியத்துக்கடுத்த வெளிவேஷங்களை மாத்திரம் காட்டுகிறதும், கண்டால் மாத்திரம் கற்பனைகளை அநுசரிக்கிறவனைப்போல காட்டுகிறதும், சிரேஷ்டர் முன்பாக அவரைச் சங்கித்து அவர் இடும் கட்டளையைப் புகழ்ந்து கொண்டாடி அவர் இல்லாதவிடத்திலே அவரை நிந்திக்கிறதும், தான் ஆசைப்படும் காரியத்தை அடைகிறதற்காக மனதில் நினைத்ததற்கு முழுதும் விரோதமாய்ப் பேசுகிறதும், தன்னை மற்றவர்கள் புகழும்படியாய் வெளிக்குத் தன்னைத்தானே நிந்தித்துப் பேசுகிறதும் ஆகிய இவைகள் கள்ளஞானமென்று சொல்லப்படும்.

மனப்பற்றுதல்.—கபடம், வஞ்சகம், கள்ளஞானம் முதலியவைகளையெல்லாம் சர்வேசுரன் சமுகத்தில் அருவருத்துத் தள்ளுவாயாக.

பிரதிக்கினை.—இதோ மெய்யான இஸ்ராயேலித்தான்; இவனிடத்தில் மனவஞ்சகம், கபடு இல்லையென்று இயேசுநாதர் நத்தானியேலைக் குறித்துச் சொன்ன புகழ்ச்சிக்கு நாமும் பங்காளிகளாகப் பிரயாசப்படுவோமாக.

3-ம் பிரிவு

ஏரோது இராஜா காலக்குறிப்பில் தவறிப்போனது

தியானம்.—கள்ளஞானியின் நம்பிக்கை பாழாய்ப் போகுமென்று இஸ்பிரீத்து சாந்துவானவர் வசனித்திருக்கிறார் (யோபு. 8). இதற்கு ஏரோதென்பவனே அத்தாட்சி: ஏனெனில், ஆண்டவருடைய சம்மனசானவர் மூன்று இராஜாக்களுக்குத் தரிசனையாகி தாங்கள் வந்த வழியாய் திரும்பிப்போகாமல் வேறு வழியாய் தங்கள் தேசத்துக்குப்போகக் கட்டளையிட்டதுமன்றி சூசையப்பருக்கும் தரிசனையாகி குழந்தை இயேசுநாதரை எஜிப்து இராச்சியத்துக்குக் கொண்டுபோகக் கட்டளையிட்டார். இதினாலே ஏரோது நினைத்த நினைவெல்லாம் வியர்த்தமாய்ப் போனது; பெத்லேமிலும் அதின் சுற்றுப்புறங்

களிலுமுள்ள குழந்தைகளையெல்லாம் அவன் கொலைசெய்தது, அவர்களெல்லாரும் பரலோக பாக்கியம் அடையவும் அவனைச் சகலரும் கொடிய துஷ்டனென்று தலைமுறை தத்துவமாய் நிந்திக்கவும் வழியாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதரையும் திருச்சபையையும் கிறீஸ்துவர்களையும் இடைவிடாமல் பகைத்து வருகிற பொல்லாத துஷ்டர்கள் சர்வேசுரனுடைய அநுமதியில்லாமல் நமக்கு யாதொரு பொல்லாப்பும் செய்யமாட்டார்கள். ஆகையால் நமது நம்பிக்கையெல்லாம் சர்வேசுரனிடத்தில் மாத்திரம் வைக்கவேணும். அவர்கள் நினைத்த துர்க்கருத்தெல்லாம் அவர்களுக்கே கேடாகவும் நமக்கு அநுகூலமாகவும் மாற்றிப்போட அவருக்குத் தெரியும். திருச்சபை சரித்திரத்தை வாசித்துப் பார்ப்போமானால், ஆறுதலான இந்தச் சத்தியம் நன்கு விளங்கும். திருச்சபையைப் பகைத்தவர்களாலே அநேக லட்சம்பேர்கள் வேதசாட்சிகளாகி மோட்சமுடிபெற்று அளவில்லாத பாக்கியத்தை அநுபவிக்கிறார்களென்று அறிந்துகொள்ளலாம்.

சம்பாஷணை.—இந்தத் தியானம் செய்கையில், உன்னிடத்தில் உண்டாகும் பலவித நல்ல எண்ணத்துக்கு ஏற்றப்போல் பாலனான இயேசுநாதரோடே சம்பாஷணை செய்வாயாக.

10-ம் தேதி

(மூன்று இராஜாக்கள் திருநாளுக்குப்பின் ஐந்தாம் நாள்)

மூன்று இராஜாக்கள் காணிக்கை கொடுத்தது

ஆயத்தச் சிந்தனை.—மூன்று இராஜாக்கள் குழந்தை இயேசுநாதருடைய பாதத்திலே விழுந்து ஆராதித்துத் தாங்கள் கொண்டுவந்த காணிக்கைகளைச் செலுத்துகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்.—இவர்களிடத்திலே விளங்கின விசுவாசம், உதாரத்தனம், சிநேகமுதலிய முயற்சிகளிலே இவர்களைக் கண்டுபாவிக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

இவர்கள் கொடுத்த காணிக்கைகளின்பேரில்

தியானம்.—கீழ்த்திசையார் ஒரு இராஜா அல்லது ஒரு பெரிய பிரபுவைக் காணப் போகும்போது, அவருக்கு யாதொரு காணிக்கை செலுத்துகிறது எக்காலமும் நடந்துவரும் வழக்கம். ‘அப்படியே மூன்று இராஜாக்களும் செய்தார்கள். இவர்கள் பாலனான இயேசுவைச் சாஷ்டாங்கமாக விழுந்து ஆராதித்துப் பொன், தூபம், மீறையை அவருக்குக் காணிக்கையாக வைத்தார்களென்று சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தக் காணிக்கை அவர்கள் சீமையிலே விளையும் பொருட்களுக்குள்ளே மகா விலையேறப்பெற்றதாயிருந்தது. ஆனால் தேவபராமரிக்கையின் இரகசியமான திட்டத்தினாலே மெசியாவின் பிரதானமான மூவித இலட்சணங்களுக்கு இது குறிப்பாயிருந்தது:—பொன்னானது அவருடைய நித்திய இராஜாங்கத்தையும், தூபமானது அவருடைய தெய்வீகத்தையும், மீறையானது அவருடைய மனுஷீகத்தையும் குறிப்பிட்டது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது சமுகத்திலே வரும்போது, வெறுங்கையோடே வராதேயுங்களென்பது ஆண்டவர் எஜிப்து இராச்சியத்தின் ஐசுவரியங்களினால் நிறைந்திருந்த இஸ்ராயேல் ஜனங்களுக்குக் கொடுத்த கட்டளையாம். அதுபோல அவர் தமது பட்சம் நிறைந்த திருக்குமாரனுடைய மரணத்தின் பேறுபலனாகிய திரவியங்களினால் நிரப்பிய நமக்கும் இந்தக் கட்டளையைத் தான் தந்திருக்கிறார். இது முகாந்தரமாக ஆண்டவருக்குக் காணிக்கை செலுத்தாமல் அவருக்கு ஆராதனை செய்கிறது பத்திக்குறைவென்று அர்ச். கிரிசோலோகு இராயப்பர் சொல்லியிருக்கிறார். ஆகையால் நாம் தேவநற்கருணைக்கு

முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து ஆராதிக்கும்போதெல்லாம், நமது ஆராதனையோடு யாதொரு தபசு நல்ல பிரதிக்கினை முதலிய காணிக்கைகளை ஆண்டவருக்குச் செலுத்துவோமாக.

மனப்பற்றுதல்.—நீயும் அதிகமதிகமாய் ஆண்டவருக்குப் பிரியப்படவேணுமென்கிற ஆசையோடே உன்னை ஒப்புக்கொடுப்பாயாக.

பிரதிக்கினை.—நீ கோவிலிலே ஜெபம் பண்ணும்போதும் அல்லது பூசை காணும்போதும், ஜெபத்தோடு தபத்தையும் காணிக்கை கொடுப்பதற்காகச் சிறிதுநேரமாகிலும் சாய்மானமின்றி உட்கார்ந்திரு அல்லது முழந்தாளிலிரு.

2-ம் பிரிவு

இவர்கள் காணிக்கை செலுத்தின விதத்தின்பேரில்

தியானம் :—மூன்று இராஜாக்கள் காணிக்கை செலுத்துகையில், அவர்கள் உள்ளத்தில் ஊன்றியிருந்த உணர்ச்சிகள்தான் அக்காணிக்கையை விசேஷ பேறுபலனுள்ளதாக்கின. அந்த உணர்ச்சிகள் எத்தகையன? சந்தோஷமும் உதாரமும் பொருந்தியன: தங்களிடம் இருந்த விலையுயர்ந்த பொருட்களை மனமுவந்து சமர்ப்பித்தார்கள்; தாழ்ச்சியும் அவர்களிடம் விளங்கினது: அவருக்குச் சமர்ப்பிக்கத் தங்களிடம் இன்னும் ஆயிரமடங்கு அதிக விலையுயர்ந்த காணிக்கைகள் இல்லையேயென்று துக்கித்தார்கள்; சிநேகமும் பிள்ளைக்குரிய உருக்கப் பற்றுதலும் காண்பித்தார்கள்: தங்கள் அரசனும் தேவனுமென்று அவரை அங்கீகரித்து, எப்போதைக்கும் அவரது ஊழியத்துக்குத் தங்களைக் கையளித்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் சந்நியாசிகளாயிருக்கிறதினாலே, அக்காலத்தில் மூன்று இராஜாக்கள் கொடுத்த காணிக்கையிலும் உச்சிதமான காணிக்கை செலுத்தும் பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்

கின்றது. தரித்திரம், கற்பு, கீழ்ப்படிதலென்கிற மாறாத மூன்று வார்த்தைப்பாடுகளை நாம் கொடுத்ததினாலே, தேவசிநேகமாகிய பீடத்திலே நாம் நம்மைத்தானே பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறோம். இந்தப் பலி உத்தமமுள்ளதாயிருக்கவேணுமானால், இடைவிடாமல் நம்மைத்தாமே பரித்தியாகம் செய்யவேண்டியது. மூன்று இராஜாக்கள் கொடுத்த காணிக்கையோடு சேர்ந்திருந்த சுத்த கருத்து நம்மிடத்திலும் இருக்குமாகில், இதெல்லாம் சர்வேசுரன் சமுகத்தில் விலையேறப்பெற்றதாயிருக்கும்.

மனப்பற்றுதல்.—தாவீது இராஜா மகா பத்தி சுறுசுறுப்பாயிருக்குஞ் சமயத்தில், ஆண்டவரை நோக்கி ஞான சந்தோஷத்தோடு சொன்னவண்ணம் நாமும் "என் ஆண்டவரே, சுவாமி, நேர்மையான இருதயத்தோடும் சந்தோஷத்தோடும் எனக்குள்ளதெல்லாம் தேவரீருக்குக் காணிக்கையாக வைக்கிறேன்" என்று சொல்லவேணும் (1 நாளாகமம் 29).

பிரதிக்கினை.—வேதசாஸ்திரிகளில் அநேகர் சொல்லியிருக்கிறபடி பொன், தூபம், மீறை மூன்று வார்த்தைப்பாடுகளுக்கு அடையாளமாயிருக்கின்றன. நான் கொடுத்த இவ்வார்த்தைப்பாடுகளை அடிக்கடி புதுப்பிப்பேனாக.

3-ம் பிரிவு

இவர்கள் கொடுத்த காணிக்கையை இயேசுநாதர் எவ்விதமாய் ஏற்றுக்கொண்டார் என்பதின்பேரில்

தியானம்.—சர்வேசுரன் நாம் செலுத்தும் காணிக்கையின் விலைமதிப்பைப் பாராமல் நமது நல்ல மனதைப் பார்த்து அந்தக் காணிக்கையைக் கையேற்றுக்கொள்ளுகிறதினாலே, தேவபாலனானவர் மூன்று இராஜாக்கள் செலுத்தின காணிக்கையை எவ்வளவோ தயவாய் ஏற்றுக்கொண்டார் என்று சொல்லத் தேவையில்லை. இவர் உதாரத்தனத்திலே எல்லாரையும் பார்க்க மேற்பட்டவரானதினாலே, அவர்கள் செலுத்தின காணிக்கையைப்பார்க்க அளவில்லாததும் விலை

மதியாததுமான தேவ இஷ்டப்பிரசாத வரத்தையும் நித்திய பேரின்பத்துக்கு அச்சாரமாய் சாகும்பரியந்தம் புண்ணிய நெறியில் நிலைமையாயிருக்கும் வரத்தையும் அவர்களுக்கு அவர் கொடுத்திருப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்வித சிந்தனைகள் எவ்வளவோ ஆறுதலும் திடனும் நிறைந்தவை! "மிகவும் அற்பரான இவர்களில் ஒருவனுக்கு எவனாகிலும் ஒரு பாத்திரம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுத்தாலும், தனது சம்பாவனையை இழந்து போகான்" என்னும் வாக்கியத்தால், நாம் செய்யும் அற்ப நற்கிருத்தியத்துக்கும் சம்பாவனை அளிப்பதாக இயேசுநாதர்தாமே வாக்களித்திருப்பதை இந்த சிந்தனைகள் நமக்கு நினைப்பூட்டுகின்றன. நம்முடைய கிரியைகள் யாவும் மோக்ஷ சம்பாவனைக்குப் பேறுள்ளவைகளாகவும் சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளவைகளாகவும் இருக்கத்தக்கதாக, விசுவாசத்தோடேயும் ஆண்டவர் கொடுத்த வாக்கின்பேரில் நம்பிக்கையோடும் நாள்தோறும் காலைச் செபத்தில் நாம் காட்டின நல்ல கருத்தை அடிக்கடி புதுப்பிப்போமாக.

சம்பாஷணை.—திவ்விய பாலனான இயேசுநாதரோடே சம்பர்ஷணை செய்து நீ சந்நியாசத்தில் கொடுத்த வார்த்தைப்பாடுகளைத் திரும்பவும் புதுப்பித்து நல்ல இருதயத்தோடு உன்னை முழுதும் ஆண்டவருக்குப் பலியாக ஒப்புக்கொடு. உன் நல்ல ஆசைகளையும் பிரதிக்கினைகளையும் விசேஷமாய் மிகுந்த பரிசுத்தமான கருத்தினாலும் உருக்கமான சிநேகத்தினாலும் உன் கிரியைகள் அவருக்கு அதிக பிரியமாயிருக்கும்படி இடைவிடாமல் பிரயாசப்படுவேன் என்னும் பிரதிக்கினையை அவருக்கு ஒப்புக்கொடு.

11-ம் தேதி . . .

(மூன்று இராஜாக்கள் திருநாளுக்குப்பின் ஆறம் நாள்)

மூன்று இராஜாக்களுக்குக் கிடைத்த பர்க்கியம்

ஆயத்தச் சிந்தனை.—மூன்று இராஜாக்கள் இயேசுநாதர் பாதத்தில் பாக்கியத்தினாலும் ஞான சந்தோஷத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—அவர்கள் அடைந்த ஞான சந்தோஷத்தில் நமக்கு ஏதாகிலும் பங்கு கிடைக்க வரப்பிரசாதம் கேட்போமாக.

முதல் பிரிவு

மூன்று இராஜாக்கள் இயேசுநாதரை அறியும் பாக்கியம் அடைந்ததின்பேரில்

தியானம்.—மூன்று இராஜாக்கள் அழைக்கப்பட்டதைக்குறித்துச் சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறதை வாசிக்கும்போது அவர்களுக்குக் கிடைத்த பாக்கியத்தின் நினைவுதான் முதன்மையாக நமது புத்தியில் தோன்றுகின்றது. அஞ்ஞான அந்தகாரத்திலிருந்தவர்கள் மாம்சமான சத்திய சுரூபியின் தெய்வீக பிரகாசத்துக்கு அற்புதமாய் அழைக்கப்பட்டதும், மற்றச் சனங்களுக்கு சுவிசேஷம் போதிக்கப்படுமுன்னே அச்சுவிசேஷ உத்தம போதனைக்கு அவர்கள் அழைக்கப்பட்டதும் எவ்வளவு பாக்கியம்! அஞ்ஞான அந்தகாரத்திலும் பாவத்திலும் ஜீவித்து இறந்துபோன கணக்கற்ற ஜனங்களுக்குக் கிடைக்காத மேலான இந்தப் பாக்கியம் மூன்று இராஜாக்களுக்குக் கிடைப்பதற்குக் காரணம் யாது? இரட்சகராகிய சர்வேசுரனுடைய தயவும் பட்சமுமேயன்றி வேறல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கிறீஸ்துவர்களான தாய் தகப்பனிடத்திலே பிறந்து சிறுபத்திலே தானே இயேசுநாதரை அறியவும் சிநேகிக்கவும் உனக்கு

அவர்கள் படிப்பித்துக்கொடுக்கவும் செய்தது சர்வேசுரனுடைய விசேஷ சிநேகமும் தயவுமல்லவோ? எண்ணிக்கையில்லாத மற்ற ஜனங்களைப்போலே நீயும் அஞ்ஞானி, யூதர், அல்லது துலுக்கரான தாய் தகப்பனிடத்தில் பிறந்திருந்தால், இம்மையிலேயும் மறுமையிலேயும் உனக்கு எவ்வளவு நிர்ப்பாக்கியம் உண்டாயிருக்கும்? ஆத்தும இரட்சணியத்துக்கும் அர்ச்சியசிஷ்டதனத்துக்கும் ஏற்ற நானாவித எத்தனங்கள் ஏராளமாய்ப்பெற்று, முன் சொன்ன தின்மையில் நீ அகப்படாமலிருந்தது ஆண்டவர் உனக்குச் செய்த விசேஷ உபகாரமல்லவோ?

மனப்பற்றுதல்.—இதற்காக நீ சந்தோஷப்பட்டு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

பிரதிக்கினை.—எவனுக்கு மிகுதியாய்க் கொடுக்கப்பட்டதோ அவனிடத்தில் மிகுதியாகவுங் கேட்கப்படுமென்று இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றியிருக்கிறதை அடிக்கடி நினைத்துக்கொள்ளுவாயாக (லூக். 12).

2-ம் பிரிவு

மூன்று இராஜாக்கள் இயேசுநாதர் சபையிலே சேர்க்கப்பட்டதின்பேரில்

தியானம்.—மூன்று இராஜாக்கள் நெடுநாள் கடின பயணம்செய்து, வந்துசேர்ந்த இடத்தில் ஒருநாளுக்கு அதிகமாய்த் தங்கினார்கள் என்றும், இதுவரை தேவமாதா, அர்ச். சூசையப்பர், சில இடையராகிய இவர்களுக்கு மாத்திரம் கிடைத்திருந்த மேலான பாக்கியம், அதாவது இயேசுநாதரோடு இருக்கும் பாக்கியம் மூன்று இராஜாக்களுக்கும் கிடைத்ததென்றும் நம்பக் காரணமுண்டு. அவரோடேகூட அவர்கள் வாசம்பண்ணின நேரம் எவ்வளவு பாக்கியமானது! அவ்விடத்தில் எத்தனையோ தேவ வரப்பிரசாதங்களையும் அடைந்திருப்பார்கள்! காணப்பட்ட நட்சத்திரத்தின் அழைப்புக்கு இவர்கள் கீழ்ப்படிந்து வந்ததினால் தங்களுக்கு இவ்வளவு பாக்கியங் கிடைத்ததென்று நினைத்திருப்பார்களல்லவோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்வித பாக்கியம் அவர்களுக்குக் கிடைத்ததுபோலே, உனக்கும் கிடைத்திருக்கின்றது. அதெப்படியென்றால், தேவ ஏவுதலாகிய நட்சத்திரமானது சந்நியாச சபையில் உன்னைக் கூட்டிவந்ததல்லவோ? சிலவிசை தமது பேர்கொண்டிருக்குஞ் சபையில்தானே நீ பிரவேசிக்கும்படி செய்து தமது கருத்தின்படி நீ நடக்கவும் ஆச்சரியமான பராமரிக்கையினால் தமது சன்னதியின் அடையாளத்தைக் காண்பித்து, அதில் தமது வரங்களையும் தயவையும் திரளாய்ப் பொழிந்து விசேஷமாய் துஷ்டர்களுடைய பகைக்குத் தம்மைப்போலே நீ ஆளாயிருக்கும்படி இயேசுநாதர் உனக்குச் செய்த இந்த உபகாரம் சிறிதென்று சொல்லலாமோ? மேலும் கடைசி நிலைமை என்னும் வரமானது பரலோகத்தில் மகிமைப்பிரதாபம் அடைந்திருக்கிற இயேசு சபையில் உன்னைக் கூட்டிக்கொண்டுபோகுந்தனையும் பாக்கியமும் புண்ணிய பேறுபலன்களும் நிறைந்த எத்தனையோ நாள் இதிலே நீ செலவழிக்கக் கொடுக்கப்பட்டிருக்கின்றது!

மனப்பற்றுதல்.—மூன்று இராஜாக்களைத் துதித்துக் கொண்டாடு; சந்நியாச அழைத்தலாகிய நட்சத்திரத்தைப் பிரமாணிக்கமாய் பின்தொடர்ந்ததைப்பற்றி நீயே சந்தோஷம் கொண்டாடிக்கொள்.

பிரதிக்கினை.—சர்வேசுரன் உன்னைச் சந்நியாச அந்தஸ்துக்கு அழைத்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்யாமலும், அதில் கடைசிமட்டும் நிலைத்திருப்பதற்கான வரத்தை மன்றாடாமலும் ஒருநாளும் போக்கவேண்டாம்.

3-ம் பிரிவு

மூன்று இராஜாக்கள் குழந்தை இயேசுநாதரைக் கையிலேந்தி முத்திசெய்ய ஏற்றுக்கொள்ளப்பட்டதின்பேரில்

தியானம்.—மூன்று இராஜாக்கள் திவ்விய குழந்தையின் ஆச்சரியமான திருவடிவைப் பார்த்துத் தங்கள் மனம் பூரிப்படைந்ததுமல்லாமல் தேவதாயாரின் பரிசுத்தமான

கரங்களில் நின்று அத்திவ்விய குழந்தையைத் தங்கள் கரத்திலேந்தி நெஞ்சோடு அணைத்து அவரை அநந்தம் விசை முத்திசெய்தார்களென்பது நம்பத்தக்க விசேஷமாகும். இந்த நேரத்திலே அவர்கள் எவ்வளவோ இன்பமும் திரளான ஞானப்பிரகாசமும் சிநேகமும் பரிசுத்ததனமும் அடைந்திருப்பார்கள்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அவர்களுக்குக் கிடைத்த பாக்கியம் உனக்கு இல்லாமற்போனதென்று நீ நினைப்பாயல்லவோ? ஆனால் நீ தேவநற்கருணை வாங்கும்போதெல்லாம், அவர்களைப்போலே உனக்கும் இந்தப் பாக்கியங் கிடைக்கிறதே. அப்போது இயேசுநாதரை உன் கரங்களிலேந்தி உன் நெஞ்சோடு அவரை அணைக்கிறதுமாத்திரமல்ல, உன் இருதயத்துக்குள்ளே அவரை வரவழைத்து அவரும் நீயும் ஐக்கியமாகி ஒரு விதத்தில் அவரோடு ஒரே பொருளாயாகிறாயல்லவோ? எத்தனையோவிசை நீ தேவநற்கருணை வாங்கியிருந்தும் இயேசுநாதருடைய அன்னியோன்னிய சிநேகம் உன்னிடம் விர்த்தியடையாதிருப்பதேன்? நீ பத்திக்குறைவாகவும் அசட்டைத்தனமாகவும் தேவநற்கருணை வாங்குவதே இதற்குக் காரணமாகும். நீ அடிக்கடி அதை வாங்குகிறதினால் இந்தக் குறைவானது உனக்கு வழக்கமாய்ப்போனதல்லோ? ஐயையோ! மகா பரிசுத்தமான காரியத்திலே முதலாய் பயபத்தியில்லாமல் நடக்கிறதும் அதில் சங்கைக்குறைவாயிருக்கிறதும் மனுஷ சுபாவத்துக்குரிய பலவீனம்தான். ஆனால் இவ்வித நிர்ப்பாக்கியம் உனக்கு நேரிடாதிருக்கவும் தேவநற்கருணை வாங்குகிறதினுள்ள பலனை நீ இழந்துபோகாதிருக்கவும் இந்தப் புஸ்தகத்தின் கடைசியிலே சொல்லப்போகிற ஆறு தியானங்களில் முந்தின தியானத்தை அடிக்கடி யோசித்துப்பார்; தேவநற்கருணையைக்குறித்து எழுதிய பத்திக்கடுத்த புஸ்தகங்களில் ஏதாகிலும் கவனமாய் வாசி, அல்லது கிறீஸ்துநாதர் அநுசாரம் நாலாங் காண்டத்தில் தேவநற்கருணை வாங்கு முன்னும் வாங்கினபின்னும் செபிக்கும்படி எழுதியிருக்கிறதை அடிக்கடி வாசி.

சம்பாஷணை.—மூன்று இராஜாக்கள் குழந்தை இயேசுநாதரிடத்தில் உன்னைக் காண்பித்து அவர்கள் அடைந்த உபகாரங்களில் உனக்கும் பங்கு கிடைக்கும்படி இரந்து மன்றாடக் கேட்பாயாக.

12-ம் தேதி

(மூன்று இராஜாக்கள் திருநாளுக்குப்பின் ஏழாம் நாள்)

மூன்று இராஜாக்களை அழைத்த தேவ வரப்பிரசாதத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—உங்களைத் தெரிந்துகொண்டது நாமே என்று இயேசுநாதர் சொன்னதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனுக (அரு. 15).

தியானச் செபம்.—எனது பரிசுத்த அழைத்தலை அதிகமதிகமாய் மதிக்கவும் சிநேகிக்கவும் வரப்பிரசாதம் கேட்பேனுக.

முதல் பிரிவு

சர்வேசுரன் மூன்று இராஜாக்களை அழைத்தது முழுதும் இலவசமாய்க் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதமாயிருந்தது

தியானம்.—மூன்றிராஜாக்களுக்கு உபகாரமாகச் சர்வேசுரன் தமது பராமரிக்கையின் சட்டங்களை விலக்கி அற்புத நட்சத்திரத்தைக்கொண்டு அவர்களை அழைத்து, அது அவர்களுக்கு வழிகாட்டச் செய்யக் கடமைப்பட்டவரல்ல; அன்றியும் அத்தனை கோடி ஜனங்களுக்குள், அவர்களைப்போலவும் அவர்களைவிட அதிகமாகவும் அற்புத அழைத்தலுக்கு உரிமையுள்ளவர்கள் அநேகர் இருந்திருக்கக்கூடுமென்று சந்தேகமறச் சொல்லக்கூடும். அவர்களை மாத்திரம் ஆண்டவர் தெரிந்துகொள்ளக் காரணம் என்ன? அவரது இலவசமான விசேஷ சிநேகமே இதற்குக் காரணம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நான் சந்நியாச அந்தஸ்துக்கு அழைக்கப்பட்டதற்குக் காரணம் என்ன? சிறுபத்தில் என்னிடம் விளங்கின மாசின்மையும் பரிசுத்ததனமும் இதற்குக் காரணமாகுமோ?... இல்லை; என் மனச்சாட்சியே இல்லை என்று பதிலுரைக்கும். என் ஆத்தும சரீர இலட்சணங்களின் மேன்மை இதற்குக் காரணமாகுமா? அதுவும் இல்லை; எனக்குத் தெரிந்த வேறநேகர் இவ்விஷயத்தில் என்னிலும் அதிக சிறந்தவர்களாயிருந்திருக்கிறார்கள். ஆகையால் எனக்குக் கிடைத்த அழைத்தலுக்குக் காரணம் யாது? ஆண்டவரது இலவசமான விசேஷ சிநேகமும் உபகாரமுமே இதற்குக் காரணம். "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை; நானே உங்களைத் தெரிந்துகொண்டேன்" (அரு. 15, 16) என்று இயேசுநாதர்தாமே சொல்கிறார்.

மனப்பற்றுதல்.—"நான் இருக்கும் அந்தஸ்தில் தேவ வரப்பிரசாதத்தினால் இருக்கிறேன்" என்று அர்ச். சின்னப்பரோடே மனப்பூரணமாயும் நன்றியறிதலோடுஞ் சொல்லுவாயாக (1கொரி. 15).

பிரதிக்கினை.—ஆனால் "அவருடைய வரப்பிரசாதமும் என்னிடத்தில் வீணாய்ப்போனதில்லை" என்று அர்ச். சின்னப்பரைப்போலே நானும் உண்மையாய்ச் சொல்லப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

சர்வேசுரன் மூன்று இராஜாக்களை அழைத்தது அவர்கள் மனந்திரும்புதலுக்கான வரப்பிரசாதமாகும்

தியானம்.—மூன்று இராஜாக்கள் அஞ்ஞான அந்தகாரத்திலே பிறந்து வளர்ந்தவர்களானதினாலே, மற்றவர்களைப்போலே அவர்களும் கேட்டுக்குரிய விஸ்தாரமான பாதையில் நடந்து திரிந்தவர்களென்று உள்ளபடி நாம் நினைக்கலாம். அவ்வித அந்தஸ்தில் இருந்தவர்களைக் கைதூக்கிவிட்டு, நீதியாகிற செவ்வழியில் நிறுத்தி, நமது

இரட்சகரான இயேசுநாதரிடத்தில் புது மனுஷர்களாக்கினது அவர்களை அழைக்கச் சித்தமான தேவ வரமே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ அழைத்தலென்கிற நட்சத்திரம் உனக்குப் பிரகாசிக்கு முன்னே, நீ எங்கே இருந்தாய்? மாய சுகபோக அக்கிரமம் நிறைந்த இவ்வுலக நடுவிலேயல்லவோ இருந்தாய்! உலக மயக்கத் தூர்க்குணமாகிற பெருவெள்ளம் உன்னை எவ்வளவு தூரம் இழுத்துக்கொண்டுபோனது! உனது பழைய சீவியத்தை யோசித்துப்பார். எத்தனை பாவங்களிலும் அசுத்தப் பழக்கங்களிலும் புரண்டு திரிந்தாய்! அத்தகைய சீவியம் நித்திய கேட்டுக்குத்தானே உன்னை இட்டுக்கொண்டு போயிருக்கும்! சர்வேசுரன் உன்னை அழைக்கச் சித்தமான தேவ வரப்பிரசாதமானது உன்னை அதில் நின்று மீட்டுப் புண்ணியமும் இரட்சணியமுமுள்ள நெருக்கமான ஞானப் பாதையிலே நிலைநிறுத்தினது. ஓ! பாக்கியமான அழைத்தல்! அது உன் மனந்திரும்புதலுக்கான தேவ வரப்பிரசாதமல்லவோ?

மனப்பற்றுதல்.—அர்ச். இராயப்பர் சொல்லுமாப்போலே, அந்தகாரத்தில் நின்று ஆச்சரியமான தமது சோதிப்பிரகாச ஒளியில் உன்னைப் பிரவேசிக்கச்செய்த சர்வேசுரனுடைய மட்டற்ற தயவுக்கு நன்றியறிந்தவனாய் அவர்பேரில் மாறாத நம்பிக்கையோடிருப்பாயாக (1இரா. 2).

பிரதிக்கினை.—நீ முன் நடந்ததற்குப் பரிகாரஞ்செய்யப் பிரயாசப்படுவதுமன்றி ஆண்டவர் உனக்குச் செய்த உபகாரத்துக்கு ஒத்து அவரது ஊழியத்தில் மகா உதாரமாய் நடப்பாயாக.

3-ம் பிரிவு

சர்வேசுரன் மூன்று இராஜாக்களை அழைத்தது அவர்களைப் பரிசுத்தமுள்ளவர்களாக்கும் வரப்பிரசாதமாயிருந்தது

தியானம்.—சர்வேசுரனல்லாத மற்றெந்தக் காரியத்திலும் உள்ள ஒன்றுமில்லாததனத்தை தேவ வரப்பிரசாதமானது அவர்களுக்குத் துலக்கமாய்க் காண்பித்து

சிநேகமென்கிற பரிசுத்த உஷ்ணத்தினாலே அவர்கள் இருதயத்தை நிரப்பவே, அதுமுதல் அவர்களும் மகா அபூர்வமான புண்ணியங்களை நாளுக்குநாள் அதிகமதிகமாய் அநுசரித்து, அர்ச்சியசிஷ்டவர்களாகித் திருச்சபையில் வெகு காலமாய் சங்கிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் உன்னை அழைத்த வரப்பிரசாத ஒளியினாலும், மதுரத்தினாலும் உலக அநித்திய வாழ்வை நீ அறிந்து, அதின் கட்டுகளை முறித்துத் தள்ளிப் புண்ணிய உத்தம சாங்கோபாங்கம் விளங்கும் சந்நியாச அந்தஸ்திலே பிரவேசித்திருக்கிறாய். மனுஷருடைய நிலையற்றதனத்துக்கு அணையாக மாறாத வார்த்தைப்பாடுகளைக்கொண்டு நிலையுள்ள அந்தஸ்திலே ஏற்பட்டிருக்கிறாய். இந்த வார்த்தைப்பாடுகளினாலே நீ பரிசுத்ததனத்தைத் தேடக் கடமைப்பட்டிருக்கிறாய். அதை அடைவதற்கு உனக்கு அவசியமான உபாயங்களைத் தரத்தக்க தேவ வரப்பிரசாதத்துக்கு நீ ஒத்து நடந்தால், பரலோகத்திலே நீயும் ஒருநாள் சென்று மூன்று இராஜாக்களுடைய பேரின்ப பாக்கியத்துக்குப் பங்காளியாவாய்.

சம்பாஷணை.—பரலோகத்திலே வாழும் மூன்று இராஜாக்களோடே சம்பாஷணை செய்து அவர்களுக்குக் கிடைத்த பாக்கியத்தைக் கண்டு நீயும் சந்தோஷப்படு. பின்னும் உன் பரிசுத்தமான அந்தஸ்தை அதிகம் அதிகமாய் மதித்துச் சிநேகிக்கத்தக்க வரப்பிரசாதத்தையும் நாளுக்குநாள் புண்ணிய வழியிலே வர்த்தித்துக் கடைசிபரியந்தம் அதில் நிலைத்திருக்கும் வரத்தையும் அவர்கள் உனக்கு இரந்து மன்றாடக் கேட்பாயாக.

13-ம் தேதி.

(மூன்று இராஜாக்கள் திருநாளுக்குப்பின் எட்டாம் நாள்)

மூன்று இராஜாக்கள் தங்கள் இராச்சியத்துக்குத் திரும்பிப் போனதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—அவர்கள் புறப்படுகிறதற்கு முன்னே இயேசுநாதர் பாதத்தில் விழுந்து வணங்குகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் சேபம்.—நாமும் தேவநற்கருணையின் சமுகத்தைவிட்டுப் பிரியுமுன் அவர்களிடமிருந்த பக்தி பற்றுதலுக்குரிய உணர்ச்சிகளால் நிறைந்திருக்க வரப்பிரசாதம் கேட்போமாக.

முதல் பிரிவு

மூன்று இராஜாக்கள் பிரயாணப்பட்டது

தியானம்.—மூன்று இராஜாக்கள் குழந்தை இயேசுநாதரோடு இருந்தபோது, அவர்கள் அடைந்த ஆனந்த சந்தோஷ பாக்கியம் எவ்வளவென்று சொல்லவும் நினைக்கவுமுதலாய் நம்மால் இயலாது. அவ்விடத்தில்தானே தங்கள் ஆயுசுபரியந்தம் இருக்க வெகுவாய் ஆசித்திருப்பார்கள். ஆனால் கடைசியாய் அவரைவிட்டுப் பிரிந்துபோக வேண்டியதாயிருந்தது. அவரைவிட்டு எவ்விதம் பிரிந்தார்கள்? மிகுந்த கஸ்தி வருத்தத்துடன் பிரிந்தார்கள். ஆண்டவர் தங்களை அற்புதமான விதமாய் அழைத்ததற்காக அவருக்கு முழுமனதோடே நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்து அவருடைய மகிமை தோத்திரத்துக்காக தங்களை முழுதும் வசீகரம்பண்ணி சகலரும் அவரை அறிந்து சிநேகிக்கும்படி பிரயாசப்படவேணுமென்கிற ஆசையோடே அவருடைய ஆசீர்வாதத்தையும். உதவி சகாயத்தையும் இரந்து மன்றாடினபின், புறப்பட்டுப் போனார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமும் தேவநற்கருணை சந்தித்தபின்னும் அதை வாங்கின்

பிறகும் இயேசுநாதருடைய சமுகத்தை விட்டுப்பிரியும்போது இந்த மூன்று இராஜாக்களைப்போல போகவேணும். இப்படி நடந்தோமோ? அநந்தம் விசை இப்படி யாதொரு காரியமும் செய்யாமல் வெளியே புறப்பட்டுப்போனதில்லையோ? இருதயம் சிநேகத்தினால் பற்றியெரியாமலும் யாதொரு நல்ல சிந்தனை இல்லாமலும் கோவிலைவிட்டு புறப்பட்டுப் போனதில்லையோ? சிலவிசை விசுவாசமும் பத்தியும் இல்லாமல் தேவநற்கருணை வாங்கினதினாலல்லவோ இப்படி நேரிட்டது?

மனப்பற்றுதல்.—இதெல்லாம் கண்டு வெட்கிக் கஸ்திப்படுவாயாக.

பிரதிக்கினை.—உன் முந்தின நடத்தையிலுள்ள குறையைப் பரிகரிக்க அவிழ்தம் தேடுவாயாக.

2-ம் பிரிவு

மூன்று இராஜாக்கள் திரும்பிப்போனது

தியானம்.—இவர்கள் நித்திரை செய்கையில், ஏரோதிடத்தில் திரும்பிப் போகவேண்டாமென்று சம்மனசானவரால் எச்சரிக்கப்பட்டு வேறே வழியாய்த் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப் போய்விட்டார்கள் (மத். 2). அப்போது அவர்களிடத்தில் முந்தியிருந்த கருத்தைவிட உத்தமமான கருத்தும், வினோதப்பிரிய நினைவின்றி பரித்தியாக எண்ணமும் இலௌகீக ஆசைகளின்மட்டில் வெறுப்பும் இயேசுநாதர்மட்டில் உத்தம சிநேகமும் அவருக்காக உழைக்கவும் மிகுந்த துன்பப்படவும் வேணுமென்கிற ஆவலும் அவர்களிடத்தில் இருந்தன. சகல நன்மைக்கும் பரிசுத்ததனத்துக்கும் கர்த்தரானவரோடு இவர்கள் ஒன்றித்திருந்ததினால் விளைந்த ஆச்சரியத்துக்குரிய பலன் இது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் தியானம் பண்ணும்போதும் பூசை காணும்போதும் தேவநற்கருணை சந்திக்கும்போதும் விசேஷமாய் தேவநற்கருணை வாங்கும்போதும், சர்வேசுரனோடே ஒன்றித்து

இப்பேர்ப்பட்ட நன்மையும் பலனும் அடைய நம்மாலான பிரயாசப்படுவோமாக. நாம் இப்படிப்பட்ட நன்மை அடையாததேன்? மூன்று இராஜாக்களுடைய புத்தியிலும் மனதிலும் இவ்வளவு பாக்கியமான நன்மை வருவித்த சர்வேசுரனோடு நாமும் மேற்சொன்ன பரிசுத்த முயற்சிகளினால் ஒன்றிக்கிறோமல்லவா? அவ்விதம் ஒன்றித்த பின்னர் அத்தகைய பலனை நாம் அடையாமற்போவதற்கு ஏதாவது ஒரு விக்கினம் இருக்கவேணும்; அந்த விக்கினம் ஏதென்று விசாரித்துப்பார்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, நான் இந்த விக்கினத்தை அறிந்து அதைத் தள்ளிப்போட எனக்கு ஒத்தாசை செய்தருளும் சுவாமி.

பிரதிக்கினை.—இதிலே நீ அநுகூலம் அடைவதற்குத் தகுந்த வழிகளைத் தேடிக்கொள்வாயாக.

3-ம் பிரிவு

மூன்று இராஜாக்கள் கடைசிபரியந்தம் நிலைத்திருந்தது

தியானம்.—திருச்சபையானது மூன்று இராஜாக்களுக்குச் செலுத்துகிற வணக்கமும் அவர்களுடைய பிரதான அர்ச்சியசிஷ்ட பண்டங்களைப் பூச்சியமாய் வைத்துச் சங்கிப்பதும், அவர்கள் பெத்லேமூர் கொட்டிலில் அடைந்த பத்திவிநயமுள்ள கருத்தில் சில மாதங்கள் மாத்திரமல்ல, சுவிசேஷம் போதிக்கப்படும் வரைக்கும் உள்ள முப்பத்து மூன்று வருஷமும் நிலைத்திருந்து அப்போஸ்தலர்கள் கையால் ஞானஸ்நானம் பெற்று வேதத்துக்காக தங்கள் இரத்தத்தைச் சிந்தினார்கள் என்பதற்கு நிச்சயமான அத்தாட்சியாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உனக்குள்ளே நீ பிரவேசித்து நவசந்நியாசத்தின் பாக்கியமான காலத்திலே உன்னிடத்தில் எவ்வளவு பத்தி சுறுசுறுப்பு இருந்ததென்று நினைத்துப்பார். உன் ஆத்தும குரு அது முதல் உனக்குச் சொன்ன புத்தியினால் அந்தப் பத்தி சுறு

சுறுப்பு நாளுக்குநாள் அதிகப்பட்டிருக்கவேண்டியது; அதற்கு விரோதமாய் சம்பவித்ததில்லையோ? முந்தின பத்தி சுறுசுறுப்புமுதலாய்க் குறைந்து ஞான முயற்சிகளை நன்றாய்ச் செய்யாமலும், தாழ்ச்சி, ஒறுத்தல், பிறர்சிநேகம் முதலிய புண்ணியங்களை அநுசரிக்கிறதற்கான சமயங்களை ஆசையோடே தேடாமலும் நீ கைவிட்டதில்லையா? இப்படி ஆராய்ந்து பார்க்கிறதினால் உனக்கு வெட்கம் உண்டானாலும், மனந்தளராதே; இதினால் உனக்கு நன்மையுண்டாகும். இதுவே உன்னை நல்ல பாதையில் கூட்டிக்கொண்டு போய் புண்ணியத்தில் வர்த்திக்கும்படி செய்யும்.

சம்பாஷணை.—உன் காவலான சம்மனசோடு சம்பாஷணை செய்து உனக்கு அவர் நல்ல புத்தியைக் கொடுத்து உன்னிடத்தில் முன்னிருந்த பத்தி சுறுசுறுப்பு திரும்ப உண்டாகவும் அதைவிட்டு நீ தவறிப்போனால், இரட்சணியமுள்ள பயத்தை உன் மனதில் எழுப்பவும் அவரை மன்றாடுவாயாக.

14-ம் தேதி

பத்தி சுறுசுறுப்பு உன்னிடத்தில் அதிகம் அதிகமாய் உண்டாவதற்காக, தினந்தோறும் எழுந்திருந்தவுடன் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டிய மூவித யோசனைகளின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இந்த நாளில் உனக்குக் கொடுக்கப்பட்ட தேவ வரத்தை நீ அறிந்திருப்பாயாகவென்று இயேசுநாதர் திருவுளம்பற்றிய வாக்கியத்தைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக (அரு. 4: லூக். 19).

தியானச் செபம்.—இந்த வருஷமுழுதும் பத்தி சுறுசுறுப்பில் வளருகிறதற்கான வரப்பிரசாதத்தைக் கேட்பேனாக.

முதல் பிரிவு

தியானம்.—மூன்று இராஜாக்களைக் குறித்து எட்டு நாள் உற்சவம் கொண்டாடினதற்குப் பலனாக நமது பத்தி சுறுசுறுப்பு மிகுதியும் வளரவேண்டியதல்லவோ? தினந்தோறும் காலமே எழுந்திருக்கும்போது, இப்போது நாம் தியானிக்கப்போகிற மூவித நினைவைக்கொண்டு மேற்சொன்ன பத்தி சுறுசுறுப்பைத் தூண்டுகிறதற்குப் பிரயாசப்படுவோமாக.

முதலாவது: தேவதோத்திர மகிமைக்காகவும் மோக்ஷம் அடைய பேறுபலன்களைச் சேகரிக்கத்தக்கதாகவுமே இன்றைய நாள் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நேற்று என்கிற நாள் என்னைவிட்டு அகன்றுபோயிற்று; நாளை என்பது எனக்கு நிச்சயமில்லை; ஆகையால் இன்றையத்தினம் மாத்திரம் என் கையில் இருக்கிறது. இன்று முழுதும் நான் பரிசுத்தமாய் நடந்து கொஞ்சநேரமுதலாய் வீணாய்ச் செலவழியாதிருந்தால், இன்று அஸ்தமித்தமாத்திரத்தில் எவ்வளவோ சந்தோஷம் அடைவேன்! தேவதோத்திர மகிமைக்காகவும் என் நித்திய பேரின்ப பாக்கியத்துக்குப் பிரயோசனமாகவும் அந்தந்த நாளை நான் செலவழிக்கவேண்டியதினாலே, சர்வேசுரன் எனக்குக் கொடுத்த இன்றையத்தினத்தைப்பற்றி கண்டிப்பாய்க் கணக்குக் கேட்பார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—காலமே நான் கண்விழித்து எழுந்திருந்தவுடன் இந்த நினைவு என் புத்தியில் வருகிறதா? நான் இந்த நினைவோடு வஸ்திரம் அணிந்துகொள்ளுகிறேனோ? என்னிடத்தில் பத்தியுள்ள நினைவு உண்டாகவும் நான் சுறுசுறுப்பாய் நடக்கவும் இந்த நினைவானது எனக்குப் பிரயோசனமுள்ளது. அர்ச்சியசிஷ்டவர்களிடத்தில் இந்த நினைவே புண்ணியத்தை விளைவித்தது; தங்கள் ஆத்தும விர்த்தியின்பேரில் கவனமாயிருக்கிற அநேகங் கிறீஸ்துவர்களிடத்திலும் சந்நியாசிகளிடத்திலும் இன்னம் தினந்தினம் இந்த நினைவானது எவ்வளவு நன்மையை வருவிக்கின்றது!

மனப்பற்றுதல்.—ஆ! என் சர்வேசுரா, நான் காலமே எழுந்திருந்தக்ஷணத்தில் இப்படிப்பட்ட நல்ல நினைவுக்கு இடங்கொடாமல் வீணில் நேரத்தைச் செலவழித்தேனென்று கண்டு மெத்த விதனப்படுகிறேன்.

பிரதிக்கினை.—காலமே எழுந்திருக்கும்போது, அசட்டைக்கு இடங்கொடாமலிருக்கப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

தியானம்.—இரண்டாவது :—நான் புண்ணியத்திலே வர்த்தித்துக் கடைசிபரியந்தம் நிலைமையாயிருக்க வல்லமையுள்ள தேவ வரப்பிரசாதங்களையும் விசேஷமான உதவி ஒத்தாசைகளையும் இன்றையத்தினம்தான் சிலசமயம் சர்வேசுரன் கட்டளையிட்டிருக்கிறாராக்குமென்று நினைக்கவேணும். இதற்குச் சரியானபிரகாரம் நான் நடக்க அசட்டையாயிருந்தால், எத்தனையோ ஆபத்துக்குள்ளாவேன்! அதினால் பிற்காலம் நான் எவ்வளவோ கஸ்திப்படவேண்டியதிருக்கும்! இம்மையிலும் மறுமையிலும் ஆத்துமத்துக்கு எவ்வளவோ பொல்லாப்பு உண்டாகக்கூடும்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த நினைவானது இன்றைய நாள் முழுதும் தேவ வரப்பிரசாத ஏவுதலுக்கு நம்மைக் கவனமுள்ளவர்களும் கீழ்ப்படிதலுள்ளவர்களுமாயிருக்கச் செய்யும்; ஆகிலும் பலவீசுபராக்கினாலாவது அசட்டைத்தனத்தினாலாவது நாம் எப்போதும் இப்படி நடக்கிறதில்லையென்பது உள்ளதுதான்; அனந்தம்விசை சர்வேசுரன் நமக்குக் கொடுக்கும் வரத்தை வீணாக்கிக்கொள்ளுகிறோம். இதை நினைக்கையில், நன்றிகெட்டவர்களுக்கு வரப்போகிற அவமானமும் ஆக்கினையும் நமக்குங் கிடைக்குமென்று பயப்படவேண்டியதில்லையோ?

மனப்பற்றுதல்.—தேவ வரப்பிரசாதத்தை வீணாக்கினதினால் பயந்து நடுநடுங்கவேண்டியதுமல்லாமல், புண்ணிய பேறுபலன்களிலும் பரிசுத்ததனத்திலும் வளருகிறதற்கான அநேகம் சமயத்தை வீணாய் இழந்துபோனேனென்று மனம் நொந்து கஸ்திப்படுவேனாக.

பிரதிக்கினை.—இந்நாளில் உங்களுக்குக் கொடுத்துவைத்திருக்கிற தேவ உபகாரத்தை அறிந்திருப்பீர்களாகில், நீங்கள் எவ்வளவோ பாக்கியவான்களென்று கீழ்ப்படியாத எருசலேம் பட்டணத்தின் ஜனங்களைப்பார்த்து இயேசுநாதர் அழுகையோடே சொன்னதை அடிக்கடி நினைத்துக்கொள்ளுவேனாக (அரு. 4).

3-ம் பிரிவு

தியானம்.—மூன்றாவது :—இன்றையத்தினம் எனக்குக் கடைசி நாளாயிருக்கலாம். இரவு பகல் அறுபது நாழிகைக்குள்ளாக இறந்துபோகிற சுமார் ஓர் இலட்சம் ஜனங்களுக்கு இன்றையத்தினம் கடைசிநாள்தானே. இவர்களுக்குள்ளே நானும் ஒருவனாயிருக்கமாட்டேனென்று எனக்கு உறுதியாய்ச் சொல்லக்கூடியவனார்? இன்றையத்தினம் எனக்குக் கடைசி நாளென்று நான் அறிந்திருந்தால், நான் என்னதான் செய்திருக்கமாட்டேன்? நான் எவ்வளவோ எச்சரிக்கையோடே பாவத்துக்குத் தப்பித்துக்கொள்ளுவேன்! எவ்வளவோ சுறுசுறுப்போடு எனது அற்ப சொற்பக் கிரியைகளையும் நன்றாய்ச் செய்யப் பிரயாசப்படுவதுமன்றி, சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமுள்ளவனாயிருக்க யாதொன்றையும் அசட்டை பண்ணாதிருப்பேன்! அர்ச்சியசிஷ்டவனாய்ப் போகிறதற்கு இதைப்பார்க்க நான் செய்யவேண்டியது ஒன்றுமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்வித நன்மைகளை அடைகிறதற்கு நல்ல உபாயம் ஒன்று உண்டு! அர்ச். வனத்து அந்தோனியார் தமது சீஷர்களுக்குச் சொன்ன புத்திதான் அது. அவர் அவர்களைப் பார்த்து: என் பிரியமான பிள்ளைகளே, ஒவ்வொரு நாளும் உங்கள் ஜீவியத்தின் கடைசி நாளென்று யோசித்து அதற்குத்தக்கது எச்சரிக்கையாய் நடங்களென்று புத்தி சொல்லுவார். இந்தப் புத்தியைக்கேட்டு நடந்ததினால் அநேகம் மகாத்துமாக்கள் வெகுகாலம் புண்ணிய வழியில் நடந்தவர்களைப்போல் சொற்பகாலத்தில் திரளான பலனை அடைந்தார்கள். அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பர் இளம்

பிராயத்திலே இயேசுசபையில் நவசந்நியாசியாயிருக்கும்போது, தமது சிரேஷ்டர் அர்ச். அந்தோனியாருடைய வசனத்துக்குச் சொன்ன வியாக்கியானத்தைக்கேட்டு அதின்படி தானும் நடக்கப் பிரதிக்கினை செய்துகொண்டார். இதற்கு அத்தாட்சியாக நாளை என்பதை நினையாமல் அன்றன்று முழுதும் உத்தமபிரகாரமாய் நடந்து வருவேன் என்று தமது கைப்பட எழுதிவைத்துக்கொண்டார். நாமும் அப்படியே காலமேதோறும் எழுந்திருந்தவுடன் இன்று நமக்குக் கடைசி நாளென்று நினைத்துக்கொள்ளுவோமாகில், வாலிபனான அந்த மகாத்துமாவைப்போலே புண்ணியத்தில் ஞான விர்த்தி அடையலாம். தாவீது இராஜா 72-ம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறதுபோல், நமது நாட்கள் கிரியைகளினாலும் பேறுபலன்களினாலும் நிறைந்த நாட்களாயிருக்கும்.

சம்பாஷணை.—உன் காவலான சம்மனசானவரோடே சம்பாஷணை செய்வாயாக. இதுவரையில் சொன்ன மூவித நினைவில் ஒன்றைக் காலமேதோறும் உனக்கு நினைப்பூட்டி அப்பியாசப்பட அவர் உதவிசெய்யும்படி மன்றாடுவாயாக.

இன்று திருச்சபை கொண்டாடும் வேதபாரகரும் மேற்றிராணியாருமான அர்ச். இலாரியூசென்பவருடைய பலமான மன்றாட்டை நாடிப் போவாயாக.

15-ம் தேதி

(குழந்தை இயேசுநாதர் பிறந்தபின் நாற்பதாம் நாள் எருசலேம் பட்டணத்தின் தேவாலயத்தில் நிறைவேறின பரம இரகசியங்கள்)

தேவமாதா சுத்திகரச் சடங்கை நிறைவேற்றும்போது அவள் காண்பித்த சுகிர்த புண்ணியங்களின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—தேவாலயத்தின் வாசலில் பரிசுத்த கன்னியாஸ்திரி தாழ்ச்சியோடிருக்கிறதைக் காண்கிறதாக உரூபிகரித்துக்கொள்ளுவோமாக.

தியானச் செபம்.—அப்போது அவள் காண்பித்த புண்ணியங்களை நாமும் கண்டுபாவிக்க வரப்பிரசாதம் கேட்போமாக.

முதல் பிரிவு

மரியாயிடத்தில் விளங்கின கீழ்ப்படிதல்

தியானம்.—இயேசுநாதர் பிறந்த நாற்பதாம் நாள் மோயீசன் முறைப்படி பாவத்தின் சுத்திகரத்துக்கு அல்ல, ஆனால் பிள்ளையைப்பெற்ற மற்றப் பெண்பிள்ளைகளைப்போல வேதப் பிரமாணத்தை அநுசரிக்கும்படியாக மரியமாள் எருசலேம் பட்டணத்துத் தேவாலயத்தில் பிரவேசித்தாள். மெய்யாகவே இவளிடத்தில் அசுசியானது ஒன்றுமில்லை. இஸ்பிரீத்துசாந்துவானவருடைய அநுக்கிரகத்தினாலே தாயாராகி எப்போதும் கன்னியாஸ்திரியாயிருந்ததினால், இவளிடத்தில் அசுத்தமானது ஒன்றுமில்லை; சுத்திகரத்தின் கட்டளைக்கும் இவள் உட்படவேண்டியதில்லை. ஆகிலும் வேத முறைமையின்பேரில் இவள் வைத்த பட்சத்தைக் காண்பிக்கவும் இவளிடத்தில் விளங்கின பலத்த பரம இரகசியத்தை அறியாதிருந்த யூதர்கள் இடறல்படாதிருக்கவும் அந்தக் கட்டளைக்கு உட்பட்டாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மகா பரிசுத்த கன்னியாஸ்திரி காண்பித்த கீழ்ப்படிதலுக்கும் உன் கீழ்ப்படிதலுக்கும் எவ்வளவோ தூர வித்தியாசம் உண்டு? அவள் அந்தக் கற்பனைப்படி நடவாதிருக்க எவ்வளவோ நியாயமிருந்தும் அதற்கு அவள் கீழ்ப்படிந்தாள்; நீயோவென்றால், வீணான போக்குகள் சொல்லி சுளுவானதும் மதுரமுள்ளதுமான கற்பனைக்கு முதலாய்க் கீழ்ப்படியாமலிருக்கிறாய்! இப்படி எத்தனையோவிசை உனக்குச் சம்பவித்தது? உன் சகோதரர்களுக்குத் துர்மாதிரிகையாக சிலவேளை ஒரு விசைக்கு அதிகமாய் நீ இப்படி நடந்ததில்லையோ?

மனப்பற்றுதல்.—இதெல்லாம் கண்டு வெட்கிக் கஸ்திப்படுவாயாக.

பிரதிக்கினை.—சபை ஒழுங்குகளிலும் கீழ்ப்படிதலுக்கடுத்த காரியங்களிலும் தேவமாதாவைக் கண்டுபாவித்து தேவசித்தத்தின் திட்டத்தை நினைத்துப் பார்ப்பேனாக.

2-ம் பிரிவு

மரியாயிடத்தில் விளங்கின தாழ்ச்சி

தியானம்.—தேவதாயார் சுத்திகரத்தின் கற்பனைக்குக் கீழ்ப்படிந்ததினாலே, தனது விசேஷ சுதந்தரத்தின் மாட்சிமையை மறைக்கச் சம்மதப்பட்டாள். அசுத்தப்பட்ட மற்றப் பெண்பிள்ளைகளோடு கோவிலின் தலைவாசலிலே தானும் கலந்திருந்ததினாலே, தனக்கு மிகவும் உச்சிதமான கன்னிமையின் மகிமையை இழந்துபோனவளைப்போல் மனிதருக்குத் தோன்றலானாள். இன்னமும் கோவிலுக்குள் பிரவேசிக்குமுன்னே, மற்றப் பெண்பிள்ளைகளைப் போல தானும் சுத்திகரம் செய்யவேண்டியவளைப்போல் காணப்பட்டாள். ஆனால் பரிசுத்த கன்னியாஸ்திரி தாழ்ச்சியுள்ளவளாயிருந்ததினாலே, தாழ்ச்சிக்கு அடுத்த விஷயத்தில் மெத்தப் பிரியம் கொண்டிருந்தாள். தனது நிர்மலமான கன்னிமை சர்வேசுரனுக்குத் தெரிந்திருக்கிறதே போதுமென்று இருந்தாளல்லாமல் மனிதர் என்ன நினைப்பார்களென்று கவலைப்பட்டவளல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் யோசிக்கிறது இப்படித்தானா? ஐயோ! சர்வேசுரன் சமுகத்திலே எப்படியிருந்தாலும் பாரமல்லவென்றாற்போல் மனிதர் முன்பாக குற்றமில்லாதிருக்க வேண்டியமட்டும் பிரயாசப்படுகிறோம். சிரேஷ்டர் நம்மைக் கண்டியாமலும் நம்மோடு இருக்கிறவர்கள் நம்மை இகழாமலும் இருந்தால் போதுமென்கிற நினைவோடே மற்றதெல்லாம் சர்வேசுரன் முன்பாக ஒழுங்காயிருக்கிறதுபோல எண்ணிக்கொண்டு திரிகிறோம். ஆ! இதென்ன குருட்டாட்டம்!

மனப்பற்றுதல்.—நானோ திரவிய சம்பன்னனாயிருக்கிறேன், எனக்கு ஒரு குறைவுமில்லை என்கிறாய்; நீ நிர்ப்

பாக்கியனாகவும் குருடனாகவும் ஒரு புண்ணிய பேறுமில்லாத நிர்வாணனாகவும் இருக்கிறதை அறியாயோவென்று அர்ச். அருளப்பர் காட்சியாகமத்தில் சொல்லியிருக்கிற தேவ வசனத்தை நினைத்துக்கொள்வேனாக (காட்சி. 3).

பிரதிக்கினை.—என்னைப்பற்றி சர்வேசுரன் என்ன நினைக்கிறார்? இப்போது அவருடைய அளவில்லாத நீதி சிம்மாசனத்தின் முன்பாக நான் கணக்குச் சொல்லப் போனால், எனக்கு என்ன தீர்வை கிடைக்கும்? இதுவரையில் நான் நடந்ததைப் பார்த்துச் சந்தோஷப்படுவேனா, அல்லது கஸ்திப்படுவேனா என்று யோசித்துப் பார்ப்பேன்.

3-ம் பிரிவு

மரியாயிடத்தில் விளங்கின தரித்திரப்பற்றுதல்

தியானம்.—குருவின் கையால் பலியிடும்படி தாயானவள் ஒரு வருஷத்துச் செம்மறியாட்டுக்குட்டியும் ஒரு மாடப்புறாவும் அல்லது இரண்டு மாடப்புறா அல்லது இரண்டு மாடப்புறாக் குஞ்சாகிலும் காணிக்கை கொடுக்க வேணுமென்று சுத்திகர முறைமையில் கட்டளையிட்டிருந்தது. முந்தி சொல்லப்பட்டது ஐசுவரியவான்கள் கொடுக்கும் காணிக்கையும் பிந்தி சொல்லப்பட்டது ஏழைகள் கொடுக்கும் காணிக்கையுமாம். பரிசுத்த மரியாயியோவென்றால், மூன்று இராஜாக்கள் கொடுத்த பொன்னைக்கொண்டு ஐசுவரியவான்களுக்கு ஒப்பந்தமான காணிக்கையைச் செலுத்தியிருக்கக்கூடும்; ஆகிலும் எளிமையின்பேரில் அவள் வைத்த பட்சத்தினால் ஏழைகளைப்போல அவளும் காணிக்கை செலுத்தப் பிரியப்பட்டாள். இதுவரையிலும் யூதேயா நாட்டுப் பெண்பிள்ளைகள் காண்பித்திராத மனத்தரித்திரத்தின் சிநேகமும் மதிப்பும் இவளுக்கு எப்படி வந்ததென்றால், தமது தேவ குமாரன் மனம்பொருந்தி மகா தரித்திரவேஷமாய் ஒரு மாட்டுக்குடிலில் பிறக்கச் சித்தமாகி அவர் காண்பித்த திவ்விய மாதிரிகையை இவளும் கண்டுபாவித்தாளென்பதற்குச் சந்தேகமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவமாதாவைப்போல நாமும் தலைசாய்க்க இடமில்லாத விதமாய் தரித்திரப்பட்ட பரலோக பூலோக இராஜாவாகிய இயேசுநாதரை எப்போதும் நமது கண்முன்பாக வைத்துக்கொள்வதுமல்லாமல் தேவமாதாவையும் நாம் கண்டுபாவித்து தரித்திரத்தை நமது தாயைப்போல் சிநேகிப்போமாக. இப்படிச் செய்தால், சில சமயங்களில் தரித்திரத்தினால் வரும் இக்கட்டைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளக்கூடுமாயிருக்கும்.

சம்பாஷணை.—பரிசுத்த கன்னியாஸ்திரியோடே சம்பாஷணை செய்து கீழ்ப்படிதல், தாழ்ச்சி, சந்நியாசிக்கு அடுத்த தரித்திரம் இவைகளைப் பெரிதாயெண்ணவும் சிநேகிக்கவும் அத்தேவதாயார் வழியாய் இரந்து மன்றாடுவோமாக.

உலகமெங்கும் இன்று ஸ்துதித்துக் கொண்டாடப்படும் முதல் வனவாசியான அர்ச். சின்னப்பர் அந்த ஆண்டவளிடத்தில் நமக்காக மன்றாடக் கேட்போமாக.

16-ம் தேதி

குழந்தை இயேசுநாதரைத் தேவாலயத்தில் காணிக்கை கொடுத்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—பரிசுத்த கன்னியாஸ்திரி நித்திய பிதாவுக்குக் குழந்தை இயேசுநாதரை காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக் கொள்வாயாக.

தியானச் சேபம்.—சர்வேசுரனுக்கு யோக்கியமான காணிக்கை செலுத்துவதற்கான வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

பரிசுத்த மரியாயி குழந்தை இயேசுநாதரைத் தேவாலயத்துக்குக் கொண்டுபோகிறாள்

தியானம்.—மோயீசன் முறைமைப்படி ஆண்டவருக்குக் காணிக்கை கொடுக்க எருசலேம் பட்டணத்திற்கு திவ்விய குழந்தையைக் கொண்டுபோனார்கள் (லூக். 2). சுத்திகரம் செய்யவேணுமென்கிற கற்பனையோடு இணைக்கப்பட்ட இந்த முறைமையின்படி, தாய் தகப்பன் தலைச்சன் பிள்ளையைக் கோவிலுக்குக் கொண்டுபோய், சம்மனசானவர் எஜிப்துப் பிரஜைகளுடைய தலைச்சன் பிள்ளைகளையெல்லாம் கொன்றுபோட்ட அன்று இராத்திரி தானே எபிரேய ஜனத்துத் தலைச்சன் பிள்ளைகளைக் கொல்லாமல் காப்பாற்றின உபகாரத்துக்கு நன்றியறிந்த தோத்திரமாகச் சர்வேசுரனுக்கு அந்தப் பிள்ளையை ஒப்புக்கொடுத்து ஐந்து சிக்கலென்னும் நாணயத்தினால் மீட்டுக்கொள்ளவேண்டியவர்களாயிருந்தார்கள் (லேவி. 12).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் தின்மைகளினின்று நம்மைக் காப்பாற்றினதற்காகவும், நமக்குச் செய்திருக்கிற உபகாரங்களுக்காகவும் நன்றியறிதலாக அவைகளின் ஞாபகம் நம்மிடம் எப்போதும் இருந்துவரவேண்டுமென்று அவர் விரும்புகிறார், எதிர்பார்க்கிறார் என்பதே மேற்கூறின சட்டத்தின் நோக்கம். சர்வேசுரன் உன் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் நேரிட்ட எத்தனையோ பொல்லாப்புகளினின்று உன்னைக் காப்பாற்றியிருக்கிறாரென்றும், சுபாவமுறையிலும் வரப்பிரசாத முறையிலும் எத்தனையோ உபகாரங்கள் புரிந்திருக்கிறாரென்றும் இச்சமயம் ஞாபகப்படுத்திக்கொண்டு, அவைகளுக்கெல்லாம் தகுந்தபிரகாரம் நன்றிசெலுத்தியிருக்கிறாயாவென்று உன்னைத்தானே வினவி, அவைகளைப்பற்றி நன்றியறிதலான நினைவாகிலும் உன்னிடம் உண்டாவென்று பார்.

மனப்பற்றுதல்.—ஆண்டவர் எனக்குச் செய்த சகல நன்மைகளுக்கும் நான் என்ன பதில் செலுத்தப்போகிறேன்? (சங். 115).

பிரதிக்கினை.—குருவானவர் பூசை நேரத்தில் சாங்துஸ் மணி அடிக்குமுன்னே, இரண்டு கைகளையும் விரித்துக்கொண்டு நமது ஆண்டவராகிய சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்வோமாக என்று சொல்வதைக் கேட்கும்போது நானும் நன்றியறிந்த பற்றுதலை எழுப்பிக்கொள்வேன்.

2-ம் பிரிவு

பரிசுத்த மரியாயி குழந்தை இயேசுநாதரைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறள்

தியானம்.—பரிசுத்த தேவதாயார் தமது திருக்குமாரனைக் காணிக்கையாகக் கொடுத்தது மற்றத் தாய்மார்கள் ஒப்புக்கொடுத்ததைப்பார்க்க உத்தமமாயிருந்தது. மற்றத் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளைக் காணிக்கையாகக் கொடுத்து மீட்டுக்கொண்டு ஒரு சடங்கைப்போல மாத்திரம் கற்பனையை நிறைவேற்றி தங்கள் வீட்டில் விருந்து முதலான ஆரவாரம் செய்துகொள்வார்கள். தேவமாதாவோவென்றால், உலக இரட்சணியத்தினிமித்தம் ஒருநாள் கையளிக்கவேண்டிய பலியாக ஆண்டவருக்குத் தமது பட்சமுள்ள திருக்குழந்தையைக் காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்து இருதயத்தில் மேலான பத்திவிநயம் நிறைந்தவளாய் அன்று முழுதும் செபத்தியானம் முதலிய நற்கிரியைகளிலே செலவழித்தாள்; வழக்கப்பிரகாரம் செய்யவேண்டிய மற்றக் காரியங்களையும் சரியாய் நிறைவேற்றினுள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமும் தேவமாதாவைக் கண்டுபாவித்து ஆண்டவருக்குப் பிரியமான காணிக்கைகளை விசுவாசத்தோடும் சிநேகப்பற்றுதலோடும் நிறைவேற்றி ஞாயிற்றுக்கிழமை முதலிய விசேஷ திருநாட்களைப் பரிசுத்தமானவிதமாய் அநுசரித்து யோக்கியமான பிரகாரமாய்க் கொண்டாடப் பிரயாசப்படுவோமாக. ஐயோ! இந்தப் பரிசுத்தமான நாட்கள் அநேகம் கிறீஸ்துவர்களுக்கு ஓய்வு

நாளும் சந்தோஷம் கொண்டாடுகிற நாளும் விருந்து செய்கிற நாளுமாயிருக்கிறதல்லாமல் மற்றப்படியல்ல. திருச்சபையின் ஆராதனைமுறை சடங்குகள் அவர்கள் கண்ணுக்குப் பத்திக்கடுத்த வேடிக்கைபோலிருக்கும். அர்ச்சிக்கப்பட்ட அந்த நாட்களைப் பரிசுத்தமான விதமாய் அநுசரிக்கிறவர்கள் எவ்வளவு கொஞ்சம்பேர்! இது விஷயமாய் உன்னிடத்தில் யாதொரு குற்றம் குறை உண்டோவென்று விசாரித்துக் குற்றம் உண்டானால், சர்வேசுரன் சமுகத்திலே வெகுவாய் உன்னைத் தாழ்த்திக்கொள்வாயாக.

பிரதிக்கினை.—இனிமேல் திருநாட்களில் வெளிச் சடங்குகளை மாத்திரம் கவனியாமல் அவைகளிலுள்ள பிரதான நோக்கத்தைக் கவனிப்பேன். இதைக்குறித்து நமது ஆண்டவர் கஸ்தியோடு சொன்னதாவது: உணவைவிடச் சீவன் மேன்மையுள்ளதல்லவா? (லூக். 12). அர்ச். சின்னப்பர், சர்வேசுரனுடைய இராச்சியம் அன்னமும் பானமும் அல்லவென்கிறுர் (உரோ. 14 : 17).

3-ம் பிரிவு

குழந்தை இயேசுநாதர் தமது பரிசுத்த தாயாரின் கரங்களினுல் தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்கிறர்.

தியானம்.—பரிசுத்த மாதாவானவள் தம்மால் மிகவும் நேசிக்கப்பட்ட திருக் குழந்தையைப் பிதாவாகிய சர்வேசுரனுக்குப் பலியாக காணிக்கை கொடுக்கும்போது, பாலனுன இயேசுநாதர் வெளியில் ஒன்றும் காட்டிக்கொள்ளாவிடினும் புத்தி விபரம் முழுதும் பழுதற அறிந்தவராய் இதுவரையில் செலுத்தப்பட்ட காணிக்கைகளால் குறிக்கப்பட்ட பொருள்களுக்குள் உ[...]ம காணிக்கையாகத் தம்மைத்தாமே தமது தாயி[ன்] கரங்களின் வழியாய் தமது பரம பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் தமது பாலத்துவமுதல் தமது சீவியகாலமுழுதும் இடைவிடாத பலியாகவும் ஓயாத சிநேகமுயற்சியாகவும்

இருக்கச் சித்தமானார். நாமோவென்றால், வெகுகாலத் தாக்குப்பின் அவரைச் சிநேகிக்கவும் அவருடைய திரு ஊழியத்துக்குட்படவும் துவக்கியிருக்கிறோம்! ஆகிலும் அந்தக் காலந்துவக்கி யாதொரு அசட்டையில்லாமல் பிரமாணிக்கமாய் நடந்தோமானால், எவ்வளவோ நன்மை! அப்படி நடவாமலிருந்தாலும், தைரியமற்றுப்போகாமல் தேவ ஒத்தாசையைக்கொண்டு நமது அசட்டைத்தனத்தையெல்லாம் பரிகரித்து இனிமேல் பத்தி சுறுசுறுப்போடே நடக்க இன்றுமுதல் நல்ல பிரதிக்கினை செய்வோமாக.

சம்பாஷணை.—பரிசுத்த கன்னியாஸ்திரியோடே சம்பாஷணை செய்து இயேசுநாதருக்கு நம்மைக் கையளிப்பதுமன்றி ஒறுத்தல், பத்தி, சுறுசுறுப்பு முதலான புண்ணியங்கள் நம்மிடத்தில் உண்டாகும்படி அவள் வழியாய்க் கேட்போமாக.

17-ம் தேதி

தேவாலயத்தில் சிமையோனும் குழந்தை இயேசுநாதரும் சந்தித்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—மகாத்துமாவான சிமையோன் என்பவர் குழந்தை இயேசுநாதரைத் தமது கரங்களில் ஏந்திக்கொண்டிருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக் கொள்ளுவாயாக.

தியானச் செபம்.—விருத்தாப்பியரான இந்த மகாத்துமா அடைந்த உபகாரங்களில் உனக்கும் பங்கு கிடைக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இந்த மகாத்துமா இஸ்பிரீத்து சாந்துவினால் ஏவப்பட்டு தேவாலயத்தில் பிரவேசிக்கிறார்

தியானம்.—அக்காலத்தில் எருசலேம் நகரில் சிமையோனென்னும் பேர்கொண்ட ஒருவர் இருந்தார். இவர்

நீதிமானும் பயபக்தியுடையவருமாய், இஸ்ராயேலின் தேற்றரவுக்கு எதிர்பார்த்திருக்கிறவருமாய் இருந்தார். இஸ்பிரீத்து சாந்துவானவரும் அவரிடத்தில் இருந்தார். குழந்தையாகிய இயேசுநாதருக்காக வேத முறைமைப்படி செய்வதற்கு அவருடைய பிதா மாதா அவரைத் தேவாலயத்தில் கொண்டுவரும்போது, சிமையோனும் உள்ளே பிரவேசிக்க நேர்ந்தது. (லூக். 2). தேவதாயார் குழந்தை இயேசுநாதரைத் தேவாலயத்துக்குக் கொண்டுபோன நாள், மணி, சமயம் பார்த்து இந்த மகாத்துமாவானவரும் அங்கே பிரவேசிக்க நேர்ந்தது எப்படி? இது இஸ்பிரீத்துசாந்துவானவரின் விசேஷ ஏவுதலால் ஆனது. மேலும் இந்த மகாத்துமாவின் பத்தியினாலும் விசுவாசத்தினாலும் அவர் தேவ வரப்பிரசாத ஏவுதலுக்கு எப்போதும் கீழ்ப்படிந்து வந்ததினாலும், இந்தப் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இஸ்பிரீத்து சாந்துவானவர் வழிகாட்டி நடப்பிக்கிற மனிதனும் சந்நியாசியும் பாக்கியம்பெற்றவர்களாம். இவர்கள் எத்தனையோ ஆபத்துக்குத் தப்பித்துக்கொள்ளுகிறார்கள்! புண்ணியத்தை அநுசரிக்கவும் மோட்ச பேறுபலன்களில் வளரவும் தினந்தினம் இவர்களுக்கு எத்தனையோ சமயம் கிடைக்கிறது! உலக ஆசைப்பற்றுதலோடு திரிகிறவனோவென்றால், தவறுதலுக்குமேல் தவறுதல் செய்து படுகுழியில் போய் விழுவான். இந்தச் சத்தியங்களெல்லாம் அநுபோகத்தினால் கண்டதில்லையோ?

மனப்பற்றுதல்.—ஆ! என் ஆண்டவரே, எந்தக் காரியத்திலும் உமது ஞானத்துக்கு ஒத்தபிரகாரம் என்னை நடப்பித்துக்கொண்டு வாரும் சுவாமி.

பிரதிக்கினை.—பத்தி அடக்க ஒடுக்கத்தினாலும் தேவ வரப்பிரசாத ஏவுதலுக்குக் கீழ்ப்படிவதினாலும் இந்தச் சகாயத்தை அடையப் பாத்திரவானாகும்படி பிரயாசப்படுவேன்.

2-ம் பிரிவு

சிமையோனென்கிற மகாத்துமா இஸ்பிரீத்து சாந்துவினால் பிரகாசிக்கப்படுகிறார்

தியானம்.—பரிசுத்த மரியாயின் கையிலிருந்த திவ்விய குழந்தைக்கும் மற்றக் குழந்தைகளுக்கும் மனுஷர் கண்ணுக்கு வித்தியாசம் ஒன்றும் தோன்றவில்லை. அவருடைய தெய்வீகமானது பலவீனமான நமது மனுஷீகத்தின் போர்வையினாலே மறைக்கப்பட்டிருந்தது. இதனிமித்தம் குருக்களும் கூடவிருந்த மனிதர்களும் இவரை இன்னாரென்று அறியாமற்போனார்கள். சிமையோனென்கிற மகாத்துமா ஒருவர் மாத்திரம் திடீரென்றாற்போல இஸ்பிரீத்து சாந்துவினாற் பிரகாசிக்கப்பட்டு இந்தக் குழந்தையைக் கண்டதும் மாம்சமான வார்த்தையும் நாலாயிரம் வருஷமாய் மனுஷர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த மெசியாவும் இவரேயென்று தாம் கண்டறிந்து சொன்னதாவது: ஆண்டவரே, இப்போது உமது வாக்கியத்தின்படியே உமது தாசனை சமாதானத்தோடு போகவிடுவீர்; ஏனெனில் ஜனங்களைப் பிரகாசிப்பதற்கான ஒளியாகவும் உமது பிரஜைகளாகிய இஸ்ராயேலுக்கு மகிமையாகவும் நீர் ஏற்படுத்திய இரட்சணியத்தை என் கண்கள் கண்டுகொண்டன என்றார் (லூக். 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உலகத்தில் உள்ள மகா பெரிய சாஸ்திரிக்கும் தேவ அருளின் ஒளியைப்பெற்ற புண்ணியவானுக்கும் எவ்வளவோ தூர வித்தியாசம்! உலக சாஸ்திரி சரீரக் கண்களினால் மாத்திரம் பார்க்கிறான்; ஞானியோவென்றால், விசுவாசக் கண்களினாலே காண்கிறான்; உலகத்தான் படைக்கப்பட்ட வஸ்துக்களிலே கண்டிப்பானதையும் கண்ணுக்குப் பிரியமானதையும் கண்டு அவைகளின்பேரில் மனப்பற்றுதலை வைக்கிறான்; ஞானியோவென்றால், அவைகளிலே அளவில்லாத தேவ இலட்சணங்களை உற்றுப்பார்த்துப் படைக்கப்பட்ட வஸ்துக்கள் வழியாய் படைத்தவருடைய அளவில்லாத சௌந்

தரியத்தின்மட்டில் இடைவிடாமல் தன் மனதை எழுப்புகிறான். இவ்விரண்டுபேர்களில் நீ யாரைச் சார்ந்தவன்?

மனப்பற்றுதல்.—இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் எழுந்தருளி வாரும்; பரலோகத்திலே நின்று உமது தெய்வீகப் பிரகாசத்தின் கதிரை வரவிடும்; என் பாத அடிகளைச் செவ்வழி நடத்தும்; இரட்சணியத் துறையில் என்னைக் கூட்டிக்கொண்டுபோம்.—(திருச்சபைச் செபம்)

பிரதிக்கினை.—எனக்கு வரும் சந்தேகங்களிலேயும் மனத் தத்தளிப்பிலேயும் இஸ்பிரீத்து சாந்துவை மன்றாடுவேன். படைக்கப்பட்ட வஸ்துக்களிலே சர்வேசுரனுடைய இலட்சணங்களைக் கண்டு ஆச்சரியப்படுவேன்.

3-ம் பிரிவு

மகாத்துமாவான சிமையோன் இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களினால் நிரப்பப்படுகிறார்

தியானம்.—நீதிமானும் தேவ பயபத்தியுடையவருமாயிருந்த சிமையோன் கிறீஸ்துவைத் தன் கண்களால் காணாமல் மரணம் அடைவதில்லையென்று இஸ்பிரீத்து சாந்துவினால் அறிவிக்கப்பட்டிருந்தார் (லூக். 2). சர்வேசுரன் தமது வாக்குத்தத்தத்தில் பிரமாணிக்கமுள்ளவர்; வழக்கமாய்த் தாம் வாக்களித்ததற்கு அதிகமாகவே கொடுத்துவருகிறார். இதற்கு அத்தாட்சியாகக் குழந்தை இயேசுநாதரைச் சிமையோன் தமது கண்களினாலே பார்த்ததுந்தவிர தமது கரங்களில் அவரை ஏந்திக்கொள்ளும் பாக்கியமும் அடைந்தார் (லூக். 2). அந்தச் சமயத்தில் அவருடைய இருதயம் எவ்வளவோ வாக்குக்கெட்டாத பேரின்ப மகிழ்ச்சியில் அமிழ்ந்தியிருந்தது! அந்தச் சமயத்தில் எத்தனையோ வரப்பிரசாதங்களினாலும் சகாயங்களினாலும் அலங்கரிக்கப்பட்டவரானார்! அவருடைய மரணமானது ஆண்டவர் சமுகத்திலே எவ்வளவோ விலையேறப்பெற்றதும், ஆனந்த சந்தோஷமும் ஆறுதலும் நிறைந்ததாயுமிருந்திருக்கும்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவசிநேகத்திலும் திரு ஊழியத்திலும் இவர் தமது காலமெல்லாம் செலவழித்ததினாலே, இவருக்கு அபூர்வமான இத்தனை வரங்கள் கிடைத்தன. இதுவரையிலும் உன் சீவியகாலம் இப்படி இராவிட்டாலும், இனிமேலாகிலும் மேற்சொன்னபடி உன் சீவிய காலத்தைச் செலவழிக்க வேணும்; அப்படி நடப்பாயாகில், நீயும் சர்வேசுரனுடைய சமாதானத்திலே மகிழ்ச்சியோடு மரணம் அடைவதற்கு உறுதியும் நம்பிக்கையும் உனக்கு உண்டாகும்.

சம்பாஷணை.—இந்தத் தியானத்திலே உன் மனதில் உண்டாகிற பக்திக்குரிய ஆசைக்குத் தகுந்தாப்போல் பாக்கியவானான சிமையோனோடே சம்பாஷணை செய்வாயாக.

18-ம் தேதி

இப்போது உமது ஊழியனைச் சமாதானத்தில் போகவிடுமென்று சிமையோன் சொன்ன வசனத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இந்த வாக்கியத்தை அவர் சொல்லும்போது, அவர் இருந்த மேரையைப் பார்க்கிறதாய் உருபிகரித்துக்கொள்ளுவேனாக.

தியானச் சேபம்.—இந்த மகாத்துமா மரிக்கும் வேளையில் அவரிடமிருந்த நல்ல ஆயத்தத்தில் எனக்கும் பங்கு கிடைக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

மரணத்துக்குரிய இருவகை ஆயத்தம்

தியானம்.—இப்போது உமது ஊழியனைச் சமாதானத்தில் போகவிடுமென்றார். சிமையோன் வாக்களிக்கப்பட்ட இரட்சகரைத் தமது கண்களால் கண்டபின், இச்சீவியத்தை விட்டு விலகிக்கொள்ள அநுமதி கேட்கிறார். சிறையில் அடைக்கப்பட்டவன் அதை விட்டு விலக ஆசைப்படுகிறதுபோல, இவரும் நினைக்கிறார். ஆதித்தகப்பன் பாவத்தில் விழாமுன்னே, பரிசுத்தமான அந்தஸ்தில் ஆத்துமத்துக்கு மாளிகைபோலிருந்த இந்தச் சரீரம் அவன் பாவத்தில் விழுந்த நேரமுதல் அந்தகாரமும் துன்பமும் நிறைந்த சிறைச்சாலைபோலாயிற்று. தங்கள் கடமைக்கொத்தப்பிரகாரம் நடவாத கிறீஸ்துவனும் சந்நியாசியும், தனக்கு மரணத் தீர்வையிடப்போகும் நியாயாதிபதியின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற இராஜதுரோகியைப்போல் கஸ்தியோடே இந்தச் சரீரத்தை விட்டுப் புறப்படுவார்கள். புண்ணியவான்களான கிறீஸ்துவர்களும் சந்நியாசிகளுமோவென்றால், அநியாயமாய்ச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட ஒருவன் கடைசியாக மகிமையோடு விடுதலையாகிறதற்கு நியாயாதிபதியிடத்தில் போகிறதுபோல, சர்வேசுரனுடைய சமுகத்தில் மகா சந்தோஷத்தோடே சரீரத்தை விட்டுப் புறப்படுவார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மேற்சொன்ன இருதிறத்தாரில் யார் சாயலாயும் எவ்வித அந்தஸ்திலும் உன் கடைசிக்காலத்தில் இருப்பாயென்று கேட்டால், பின்வருங் காரியம் நமக்கு எப்படித் தெரியுமென்பாயல்லவோ? இது உள்ளதுதான். ஆகிலும் அவனவன் சீவியகாலத்தில் நடந்த நடக்கைக்குத் தக்கது அவனவனுக்கு மரணமுங் கிடைக்குமென்கிறதினால், என்னை நடுத்தீர்க்க இப்போது ஆண்டவர் எழுந்தருளி வந்தால், நான் எவ்வித அந்தஸ்தில் இருப்பேனென்று உன்னையே கேள். முந்தின கேள்விக்கு மறுமொழி கிடைப்பதுமல்லாமல் நீ சாகும்போது, ஒன்றுக்கும் பயப்படாமல் முழு நம்பிக்கையோடு இருப்பதற்கு இன்னம் செய்யவேண்டியது என்னவென்று உனக்குத் தெரியவரும்.

மனப்பற்றுதல்.—உன்னைத்தானே நீ நன்றாய் அறியவும் உத்தம சர்ங்கோபாங்கத்தை அடையவும் நல்ல ஆசையைக் காண்பிப்பாயாக.

பிரதிக்கினை.—ஆகாத இலௌகீகப்பற்றுதல் என் மனதிலிருந்து நாளுக்குநாள் அதிகமாய் அகன்றுபோகப் பிரயாசப்படுவேன்.

2-ம் பிரிவு

சாவை விரும்புகிறதுக்கான இரண்டு முகாந்தரங்கள்

தியானம்.—சாவுக்குரிய இச்சரீரத்தைவிட்டு என்னை விடுதலையாக்குகிறவன் யார்? (உரோ. 7). இந்தச் சீவியத்தைவிட்டுப் பிரிந்து இயேசுநாதரோடுகூடவிருக்க விரும்புகிறேன் (பிலி. 1) என்று அர்ச். சின்னப்பர் சொன்ன இவ்விரு வாக்கியங்களினாலே சாவை விரும்ப நமக்கு நியாயமான இரண்டு முகாந்தரங்கள் உண்டு. முதலாவது, இந்தச் சீவியத்தில் உள்ள துன்ப துரிதங்களோடும் விசேஷமாய்ச் சரீர ஆசையால் கெட்டுப்போன பஞ்சேந்திரியங்களோடும் நாம் செய்யவேண்டியிருக்கிற ஓயாத போரினின்று மீட்கப்படவும், இரண்டாவது, நமது ஆத்துமபத்தாவான இயேசுநாதரை மகிமைப் பிரதாபத்தில் கண்டு தரிசித்து அவரோடே அன்னியோன்னியமாய் ஒன்றித்து உத்தம விதமாய் அவரைச் சிநேகிக்கவுமாம். இவ்விரு முகாந்தரங்களும் நியாயமானவை; ஆனால் இரண்டாவது மிகவும் உத்தமமானது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் சந்நியாசிகளானபோதே, இலௌகீக ஆஸ்திபாஸ்திகளெல்லாம் துறந்துவிட்டோம். இச்சீவியத்தைச்சார்ந்த ஆத்தும சரீர வருத்தங்கள் நாம் இடைவிடாமல் அழுது பிரலாபிப்பதற்குப் போதுமானவை; ஆயினும் உலக ஆசை நம்மைவிட்டு இன்னும் நீங்கவில்லை. இயேசுநாதர் நமக்குவாக்களித்திருக்கிற மோட்சானந்த சந்தோஷத்துக்கு நம்மை அழைப்பது மரணம். இதற்கு நாம் பயந்து இவ்வுலகத்தை விட்டுப் பிரிய வருத்தப்படுகிறோம். இது நமது அற்ப விசுவாசத்தினாலும் அற்ப நம்பிக்கையினாலும் உண்டாகிறதல்லாமல் மற்றப்படியல்ல. அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்

டாயென்று (மத். 14) இயேசுநாதர் அர்ச். இராயப்பரை நோக்கிச் சொன்னதுபோல் நமக்குஞ் சொல்லுகிறாரல்லவோ?

மனப்பற்றுதல்.—வாக்குக்கெட்டாத மோட்சானந்த பேரின்ப பாக்கியத்தை நாம் கண்டு தரிசிக்கும் வரையும், விசுவாசமென்கிற இரக்கைகளைக்கொண்டு எழும்பி இயேசுநாதரோடே அன்னியோன்னியமாய் ஒன்றித்திருக்கும் நேரத்தை நினைத்துப் பெருமூச்சுவிடுவோமாக.

பிரதிக்கினை.—மோக்ஷானந்த பாக்கியம் வருந்தனையும், இப்பிரபஞ்ச துன்ப துரிதங்களைத் தைரியத்தோடே சகித்துக்கொள்வோமாக.

3-ம் பிரிவு

நல்ல மரணம் அடைவதற்கு இரு உபாயங்கள்

தியானம்.—புண்ணிய வழியில் நடந்தவன் அவலமாய்ச் சாகமாட்டான் என்று அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருக்கிறார். ஆகையால் நல்ல மரணம் அடைகிறதற்குப் பிரதானமும் உறுதியுமான வழி, புண்ணியவானாய் நல்ல கிறீஸ்துவனாய் உத்தம சந்நியாசியாய் நடப்பதுதான். இவ்விதம் நடவாமல் நல்ல மரணம் அடையலாமென்று எண்ணுவது வீணான குருட்டாட்டம்; ஏனென்றால் பாவியானவன் நல்ல மரணம் அடைகிறது அபூர்வமென்று மேற்சொன்ன அர்ச்சியசிஷ்டவர்தாமே சொல்லியிருக்கிறார். "மரண நேரம் எப்போதும் தன் கண்முன்பாக இருக்கிறதுபோல நாள்தோறும் சாவுக்கு ஆயத்தம் செய்கிறவன் பாக்கியவான்" என்று சொல்லியிருக்கிறது (கிறீஸ்துநாதர் அநுசாரம் 1-ம் காண்டம் 23-ம் அதிகாரம்). அடிக்கடி சாவை நினைத்து அதற்கு ஆயத்தம் செய்கிறதுமல்லாமல் விசேஷமாய் பலத்த சோதனை நேரிடும்போது, நான் சாகிற சமயத்தில் இதைக்குறித்து என்ன நினைப்பேனென்று தன்னைத்தானே வினவிக் கேட்டு நடப்பது நல்ல மரணத்துக்கான இரண்டாவது வழி.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சகல நன்மைகளிலும் மேலான நன்மையாகிற நல்ல மரணம் அடைகிறதற்கான இவ்வுபாயங்களை உபயோகிப்பதில் உனக்குள்ள கவலையும் பிரமாணிக்கமும் எவ்வளவென்று பார். இது எவ்வளவு அவசியம் என்று நன்றாய் யோசித்துப் பார்ப்பாயாகில், அதில் பிரமாணிக்கமாயிருப்பாய்; சாகிறவேளையில் எப்படியிருக்க ஆசைப்படுவாயோ, அதற்குத் தகுந்தாப்போல் தினந்தினம் நடக்கப் பிரயாசப்படு.

சம்பாஷணை.—நல்ல மரணத்துக்குப் பாதுகாவலான அர்ச். சூசையப்பரோடே சம்பாஷணை செய்வாயாக.

19-ம் தேதி

மகாத்துமாவான சிமையோன் சொன்ன தீர்க்கதரிசனம்

ஆயத்தச் சிந்தனை.—அவர் சொன்ன வசனங்களைத் தேவமாதா கேட்டுக்கொண்டிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்ளுவேன்.

தியானச் சேபம்.—விசுவாசத்தினால் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட பரம இரகசியங்களைக் கண்டுபிடிக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதரைப்பற்றின தீர்க்கதரிசனங்கள்

தியானம்.—மகாத்துமாவாகிய சிமையோன் குழந்தை இயேசுநாதரைத் தேவமாதாவிடத்தில் திரும்பக் கொடுத்தபோது, "இப்பாலகன் இஸ்ராயேலில் அநேகருக்குக் கேடாகவும் உத்தானமாகவும் விரோதிக்கப்படுங் குறிப்பாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்" என்று (லூக். 2) பின்வரும் காரியங்களை அறிவித்தார்.

இந்தத் தீர்க்கதரிசன வாக்கியம் அந்நாள்முதல் இதுவரையிலும் சரியாய் நிறைவேறிவருகின்றது. இக்காலத்தில் முதலாய் அப்போஸ்தொலிக்கு குருக்கள் அநேகர்படும் பிரயாசத்தினால் எத்தனையோபேர் ஆச்சரியமான விதமாய் மனந்திரும்பி ஞான உத்தானம் அடைகிறதையும், திருச்சபையின் பிள்ளைகளென்று சொல்லப்படுகிறவர்களே திருச்சபைக்கு முழுதும் விரோதமான காரியங்களை அக்கிரமமான நிஷ்டூரத்தோடு நடத்திக்கொண்டு வருகிறதையுங் கண்டுவருகிறோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சந்நியாசியாகிற நீயே தவறி நடந்தால் நேசத்துக்குரிய இரட்சகரான இயேசுநாதர் உனக்கும் ஆத்துமக் கேடாகவும் மிகவும் பலத்த பொல்லாப்பாகவும் இருப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை. திருச்சபை சரித்திரத்தில் இதற்கு அநேகம் திருஷ்டாந்தங்கள் உண்டு. எத்தனையோ சந்நியாசிகள் தங்கள் பரிசுத்த அந்தஸ்தைவிட்டுக் கொஞ்சங் கொஞ்சமாய் உலக மாய்கையில் விழுந்து தாங்கள் முந்தி எவ்வளவுக்கு தேவ வரப்பிரசாதங்களை அடைந்தார்களோ அவ்வளவுக்கு இப்போது பயங்கரமானவிதமாய்த் தவறித் திரிகிறார்கள்!

மனப்பற்றுதல்.—நம்மை ஒருபோதும் நம்பாமல் சர்வேசுரனுக்கு உகந்தவர்களாய் நடக்கத்தக்கதாக அவரை நோக்கி மன்றாடவேணும்.

பிரதிக்கினை.—வீணான மாய்கையிலும் ஞானக் குருட்டாட்டத்திலும் அசட்டைத்தனத்திலும் விழாமல் ஆண்டவருடைய சர்வ வல்லமையுள்ள கரத்தின்கீழ் எப்போதும் கீழ்ப்படிதலோடும் தாழ்ச்சியோடும் நடந்துவருவாயாக.

2-ம் பிரிவு

பரிசுத்த மரியாயியைப்பற்றின தீர்க்கதரிசனம்

தியானம்.—மகாத்துமாவான சிமையோன் குழந்தை இயேசுநாதரைக் குறித்து தீர்க்கதரிசனம் சொன்னபிறகு, அவருடைய திருத்தாயாரைப் பார்த்து உரைத்த வியா

குலம் நிறைந்த வாக்கியமாவது: உம்முடைய ஆத்துமத்தையும் ஓர் வாள் ஊடுருவும் என்றார் (லூக். 2). தேவதாயார் தம்முடைய திவ்விய குமாரன் சிலுவையில் அறையுண்டு மரிக்கிறதைப் பார்க்கையில், அவரோடு சாகக்கூடாமல், கபாலமலையில் மகா துக்க வேதனை அநுபவித்த பொழுது தான் இந்தத் தீர்க்கதரிசனம் சரிவர நிறைவேறிற்று. ஆனால், இதை அவள் ஏற்கனவே அறிந்திருந்ததினால் இதுமுதல் முப்பத்துமூன்று வருஷகாலமாய் மனுஷர் புத்திக்கும் வாக்குக்கும் எட்டாத இந்த வியாகுல வேதனை அநுபவித்தாள். ஒருவரும் இதை அறியவும் அவள்பேரில் இரக்கமாயிருந்து ஆறுதல் வருவிக்கவுங் கூடாமையால் தன் உள்ளத்தில் அவள் மாத்திரம் இதெல்லாம் அநுபவிக்க வேண்டியதாயிருந்தது. ஆகையால் இக்ஷணமே அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறத் துவக்கிற்று என்று சொல்லலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மனிதருக்குத் தெரியாமலும் ஆறுதல் அடையக்கூடாமலும் உன் ஆத்தும சரீரத்திலே வேதனை அநுபவிக்குங்காலத்தில், தேவதாயாரைப்போல் இதை அநுபவிக்கிறேனென்று நினைத்து ஆறுதல் அடைவாயாக. நீ படும் வருத்தமெல்லாம் சர்வேசுரனுக்குத் தெரியுமென்றும் உன் சீவியகாலமெல்லாம் அவரைப்பற்றி இதை அநுபவிக்க நீ சம்மதித்திருக்கிறதை அவர் ஏற்றுக்கொள்ளுகிறாரென்றும் நினைத்துத் தேவதாயாரோடே நீயும் ஆறுதல் அடைவாயாக. ஒருவரும் அறியாமல் படும் வேதனை சர்வேசுரன் சமுகத்திலே மகா பேறுள்ளதாயிருக்கும். சர்வேசுரன் ஒருவர் மாத்திரம் அதை அறிந்தால் போதுமென்றிருக்கிற சந்நியாசிக்குங் கிறீஸ்துவனுக்கும் இது எவ்வளவோ வாக்குக்கெட்டாத மதுரத்தை வருவிக்கும்! சோதனையும் நெருக்கிடையும் நேர்ந்தபோது நீ என்ன செய்தாய், எவ்விதம் நடந்தாயென்று பார்.

மனப்பற்றுதல்.—வேதசாட்சிகளுக்கு இராக்கினியே, எனக்கு வருத்தமான வேளையில் நான் வாய் திறவாமல் வேதனை அநுபவிக்கவும் மனிதருடைய ஆறுதல் இல்லாமலிருக்கவும் எனக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரதிக்கினை.—நான் வருத்தப்படும்போது, மவுனத்தோடும் மன ஒறுத்தலோடுமிருந்து ஆச்சரியத்துக்குரிய வியாகுலதாயாரை இனி அதிக நன்றாய்க் கண்டுபாவிப்பேனாக.

3-ம் பிரிவு

மனுஷரைப்பற்றின தீர்க்கதரிசனம்

தியானம்.—மேலும் சிமையோன் சொன்னதாவது: அநேகர் இருதயங்களில் நின்று நினைவுகள் வெளியரங்கமாகும் (லூக். 2). இதற்கு அர்த்தம் ஏதென்றால், இயேசுநாதருக்கும் அவருடைய சீஷர்களாகிய கிறீஸ்துவர்களுக்கும் விரோதமாய் வேத கலகம் நடக்கும்போது, அவருடைய பிள்ளைகளென்று சொல்லப்படுகிறவர்கள் இருதயங்களில் உள்ள மெய்யான அந்தரங்க சிந்தனைகள் வெளியாகுமென்பதாம். அப்போது அவர்கள் சர்வேசுரனை மெய்யாகவே சிநேகித்தார்களோ இல்லையோவென்றும் பாவத்தினால் அவருக்குத் துரோகிகளாய் அவரை விட்டு அவரையுந் தங்களையுந்தானே இழந்துபோகிறதைப் பார்க்கத் தங்கள் ஆஸ்தி, சுகசெல்வம், கீர்த்தி, உயிரைமுதலாய் மெய்யாகவே இழந்துபோக ஆயத்தமாயிருக்கிறார்களோ இல்லையோவென்றும் அறியலாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஐயா! சர்வேசுரன்பேரில் உனக்குள்ள சிநேகம், புறத்தியார் உனக்குச் செய்யும் ஆகடியம், நிந்தை, உன்மட்டில் கொண்ட சமுசயம் இவைகளினால் தவறிப்போனதோ? இப்படித் தைரியமற்று உதாரத்தனமில்லாமற் போனதைக் கண்டு சர்வேசுரன் சமுகத்திலே உன்னைத் தாழ்த்திக்கொள்ளக்கடவாய். ஆத்துமத்தைக் கொலைசெய்யக்கூடாமல் சரீரத்தை மாத்திரம் கொலைசெய்கிறவர்களுக்கு நீங்கள் அஞ்ச வேண்டாம்; ஆத்துமத்தையும் சரீரத்தையும் நரகத்திலே

தள்ள வல்லவராயிருக்கிறவருக்கு மாத்திரம் பயந்து நடங்களென்று இயேசுநாதர் சொன்ன வாக்கியத்தை எந்நேரமும் உன் மனதிலே பதித்துக்கொள் (மத். 10). உனக்குப் பிரதான காரியமாகிற உன் ஆத்தும இரட்சணியம் அநுகூலமாகிறதற்கு வேண்டிய திடாரிக்கமும் பெலனும் மேற்சொன்ன வாக்கியத்தினால் உன் இருதயத்தில் உண்டாகும்.

சம்பாஷணை.—நமது இரட்சணியத்துக்குக் காரணமான இயேசுநாதரோடும் அவருடைய வரப்பிரசாதத்தை யாவருக்கும் பகிர்ந்து கொடுக்கிறவளாய் நியமிக்கப்பட்ட பரிசுத்த மாதாவோடும் சம்பாஷணை செய்வாயாக.

20-ம் தேதி

ஆத்தும இரட்சணியத்தின் அவசரம்

ஆயத்தச் சிந்தனை.—நீங்கள் எல்லாத்தையும் பார்க்கச் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் முந்தமுந்தத் தேடுங்களென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக (மத். 6).

தியானச் சேபம்.—இந்த தேவகற்பனைக்கு உன் நடக்கை ஒத்திருக்கும்படி உனக்குத் திடனுள்ள மனதைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

தியானம்.—ஆத்தும இரட்சணிய அலுவலானது நித்தியகால அலுவலானதினால் சந்தேகமின்றி இது எல்லாத்திலும் முக்கியமான காரியமாம்.

இவ்வுலகத்தை விட்டுப் பாக்கியமான நித்திய பேரின்பத்தை அடைகிறதும் நித்திய ஆக்கினைக்குத் தப்பித்துக் கொள்ளுகிறதும் தன் ஆத்தும இரட்சணியத்தைத் தேடுகிறதென்று சொல்லப்படும். ஆகையால் ஆத்தும இரட்சணியத்தின் அலுவல் நமது ஆத்தும சரீரத்தின் நித்திய காலத்தைச் சேர்ந்த அலுவலாயிருக்கின்றது. மற்ற அலுவல்களெல்லாம் எவ்வளவு முக்கியமானவைகளாயிருந்தாலும், இலௌகீக காரியமல்லாமல் மற்றப்படியல்ல. நித்திய காலத்துக்கு முன்பாக அறுபது எண்பது நூறு வருஷங்கள் ஓர் இணையாகுமா?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நித்தியத்துக்கடுத்த காரியங்களைத் தேடுகிறதைவிட்டு இலௌகீக காரியங்களைத் தேட இரவு பகலாய் உழைத்துப் பிரயாசப்படுகிறதும், அழிந்துபோகிற அற்ப சுக நன்மைக்காக ஒருபோதும் அழியாத மோட்ச பாக்கியத்தை இழந்துபோகிறதும் எத்தனைய குருட்டாட்டம்! ஆகிலும் எத்தனை ஆயிரம்பேர் உலக மாய்கையில் சிக்கி மயங்கித் திரிகிறார்கள்! உன்னைச் சுற்றிலுமுள்ள காரியங்கள் நடக்கிற விதத்தைப் பார். உன்னிடத்திலும் இந்த விபரீதப் புத்தி எப்போதாவது இருந்ததில்லையோ? இன்னமும் சில காரியத்தில் இப்படி நீ தவறி நடப்பதில்லையோ?

மனப்பற்றுதல்.—மனுஷர் இப்படிக் கெட்டுப்போகிறதைக் கண்டு அழவேண்டியதுமல்லாமல் நீ முன் தவறி நடந்ததையும் இன்னமும் புத்தியில்லாமல் சில காரியங்களில் தவறி நடக்கிறதையுங் கண்டு அழுது மனஸ்தாபப்படுவாயாக.

பிரதிக்கினை.—எல்லாத்துக்கு முந்தி சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்களென்று இயேசுநாதர் கற்பித்தபிரகாரம், இந்த வருஷத்தில் சென்ற இருபதுநாள் போக இன்னம் இருக்கிற நாட்களில் எல்லாத்துக்கு முந்தி சர்வேசுரனுக்குப் பிரியமாய் நடந்து ஊழியுள்ளகாலம் நிலைநிற்கும் ஞானத் திரவியங்களைத் தேடுவாயாக (மத். 6).

2-ம் பிரிவு

தியானம்.—ஆத்தும இரட்சணியத்துக்கடுத்த காரியம் ஒருவிசை தவறிப்போனால் திரும்பவும் அது கிடையா

மற்போமென்கிறதினாலே, எல்லாத்தையும் பார்க்க இது பிரதானமான காரியமென்று சந்தேகமின்றி சொல்ல வேணும்.

மற்றெவ்வித பொல்லாப்புக்கும் அவிழ்தம் உண்டு: யாதொரு வேலை கெட்டுப்போனால், திரும்பவும் அதை நன்றாய்ச் செய்யலாம்; ஆஸ்தி சம்பத்தை இழந்துபோனால், திரும்பவும் வேறுவிதமாய் அதைச் சம்பாதித்துக்கொள்ளலாம்; தீப்பட்ட வீட்டைத் திரும்பக் கட்டுவதுண்டு. ஆனால் ஆத்தும இரட்சண்ணியம் ஒருவிசை தவறிப்போனால், அதற்கு அவிழ்தம் இல்லையே; இதை ஒருவிசை இழந்துபோனால், ஒருபோதும் திரும்பமாட்டாதே. ஏனென்றால் செத்தவன் திரும்ப உயிரோடே வருகிறதுமில்லை; நரகத்தில் விழுந்தவர்களில் ஒருவனும் அதைவிட்டு வெளியில் புறப்படப்போகிறதுமில்லை; அவர்கள் நித்திய ஆக்கினை அநுபவிக்கப்போவார்களென்று இயேசுநாதர்தாமே திருவுளம்பற்றியிருக்கிறார் (மத். 25).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதைத் தியானித்துப் பார்த்துத் தீர்மானிக்கவேண்டியதேதென்றால், அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதுபோல, அச்சத்தோடும் நடுக்கத்தோடும் ஆத்தும இரட்சணியம் அடையப் பிரயாசப்படவேணும் (பிலி. 2). நீ சந்நியாசியாயிருக்கிறதினாலே அதற்கு அவ்வளவு பிரயாசப்படவேண்டியதில்லையென்று நினையாதே; ஏனென்றால் அர்ச். சின்னப்பர் தேவ இஷ்டப்பிரசாதத்தில் திடப்பட்டவராயிருந்தாலும், அவர்தானே சொல்லியிருக்கிறதைக் கேள்: உங்கள் நடுவே நான் எந்நேரமும் அச்சத்தோடும் நடுநடுக்கத்தோடும் இருந்தேன். நான் மற்றவர்களுக்குப் புத்தி சொன்னபின், நானே கெட்டு மோசம்போகாதபடி என் சரீரத்தைத் தண்டித்து அதை அடிமையாக்குகிறேனென்றார் (1 கொரி. 2-ம், 9-ம் அதி). நித்திய காலத்துக்குரிய அலுவலைப் பார்க்கும்போது, அதற்குப் போதுமானமட்டும் பிரயாசப்பட்டிருக்கிறேன் என்று ஒருபோதும் நினைக்கக்கூடாதென்று அர்ச். கிறகோரி பாப்பானவர் சொல்லியிருக்கிறார்.

மேலும் சம்மனசுக்கள் பரமண்டலத்தில் தானே பாவத்தைக் கட்டிக்கொள்ளவில்லையோ? அவர்கள் அங்கேயிருந்து நரகத்தில் விழவில்லையோ?

மனப்பற்றுதல்.—நம்மை ஒருக்காலும் நம்பாமல் தேவ பயத்தோடிருக்கவேண்டும்.

பிரதிக்கினை.—ஆத்தும இரட்சணியத்துக்கு மிகவும் விக்கினமான கிரமமற்ற நாட்டங்களை நன்றாய் அறிந்து அவைகளை ஜெயிக்க வழி தேடுவாயாக.

3-ம் பிரிவு

தியானம்.—ஆத்தும இரட்சணியத்தின் அலுவல் எல்லாத்தையும் பார்க்க மிகவும் முக்கியமானது. ஏனெனில், அதுவே திட்டமாய் அவசியமான ஏக காரியம்.

அநேகம் காரியங்கள் ஒரு வகையில் அவசியமென்று சொல்லலாம்: அப்படியே உனக்கு ஒரு அலுவல் இருந்தால், உன்னாலானமட்டும் அதை மனச்சாட்சியோடே செய்ய உன்பேரில் கடமை உண்டு. இது அவசியம் என்றாலும், அறவே அவசியமானதன்று. உன்னையல்லாமல் சர்வேசுரன் அதைச் செய்யக்கூடும்; உனக்குப் பதிலாய் மற்றவர்களும் அதைச் செய்யலாம்; ஆனால் நீ நரகத்துக்குத் தப்பித்துக்கொள்ளவும் உன் ஆத்துமம் இரட்சணியம் அடையவும் பிரயாசப்படுவது உன்னை மாத்திரம் பொறுத்தது. உன் சிரேஷ்டராகிலும் உன் சகோதரராகிலும் மற்றவரென்கிலும் சர்வேசுரன் முதலாய் உனக்குப் பதிலாக இதைச் செய்யக்கூடாது: உன்னையன்றி உன்னைப் படைத்தவர் உன்னையன்றி உன்னை இரட்சிக்கமாட்டாரென்று அர்ச். அகுஸ்தீன் எழுதிவைத்திருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தன்னைத்தானே அர்ச்சித்துக்கொள்ளவேணுமென்கிற ஆசையும் கோட்பாடும் இல்லாத சந்நியாசிக்கு ஐயோ கேடாம்! சிரேஷ்டர் அவன்பேரில் கண்காணிப்பாயிருப்பதினால் வெளிக்கடுத்த காரியங்களில் ஒழுங்குப்படி அவனை நடத்திக்கொண்டு வரக்கூடும், அவனை இரட்சிக்கவும் அவனை

அர்ச்சியசிஷ்டவனுக்கவும் அவரால் கூடாது; இரட்சணியம் அடைகிறதற்கான வழி வகைகள் எத்தனை இருந்த போதிலும், அவைகளைக்கொண்டு அவன்தானே பிரயாசப்படாமற்போனால், அவன் ஆத்துமம் இரட்சணியம் அடையாது. இதைப்பற்றிக் கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிறதைக் கேள்: மற்றவர்கள் காரியம் எப்படியிருந்தாலும், உன்மட்டில் நீ அசட்டையாயிராதே; உன்பேரில் கண்ணுண்டாயிரு, எப்போதும் உன் கடைசிக் கதியை நினைத்துக்கொள்; இழந்துபோன காலம் திரும்பாதென்று யோசித்து உன்னைத்தானே நீ தூண்டிக்கொண்டு வருவாயாக (கிறீஸ்துநாதர் அநுசாரம் முதல் காண்டம், 25-ம் அதிகாரம்).

சம்பாஷணை.—இன்றையத் திருநாளுக்குரிய பேர்போன அர்ச். செபஸ்தியாரோடே சம்பாஷணை செய்வாயாக. இவர் தன் ஆத்தும இரட்சணியத்தை இழந்துபோகாதபடி உரோமாபுரி இராயனுடைய சிநேகத்தை முதலாய்ச் சட்டைபண்ணாமல் அம்புகளால் எய்யப்பட்டு மகா நிஷ்டூரமான வேதனை அநுபவித்து, சந்தோஷத்தோடே பிராணனைக் கொடுத்தார் (288-ம் ஷை).

21-ம் தேதி

ஆத்தும இரட்சணியம் முக்கியமானதென்பதை உணர்ந்து நடக்கிறோமாவென்று எப்படி அறியக்கூடும் என்பதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—சர்வேசுரனுடைய இராச்சியம் பலவந்தப்படுகின்றது என்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக (மத். 11).

தியானச் செபம்.—ஆத்தும இரட்சணியத்தின் பேரில் என் கருத்து என்னவென்று நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

தியானம்.—மற்றெல்லாத்தையும் பார்க்க ஒரு காரியத்தின்பேரில் ஒருவனுக்குப் பற்றுதலிருந்தால், அதை எவ்விடத்திலும் எவ்வேளையிலும் நினைப்பானல்லவோ? அப்படியே தன் ஆஸ்தி பொருட்களின்பேரில் ஒரு வழக்கிருந்தால், இரவும் பகலும் அதின்பேரிலே நினைவாயிருப்பான். விளையாடும்போதும் மனுஷரோடு பேசும்போதும் சாப்பிடும்போதும் வேலைசெய்யும்போதும், தன்னை அறியாமலே அந்த நினைவானது அவனை எப்போதும் பின்தொடர்ந்துபோகும். காலமே எழுந்திருக்கும்போது, அதுவே அவனுக்கு முதல் நினைவாயிருக்கும்; நித்திரை செய்யப்போகும்போதும், அதுவே அவன் கடைசி நினைவாயிருக்கும்; அந்த நினைவு அவனை விட்டு மாறாது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—எல்லாத்திலும் பிரதானமான உன் ஆத்தும இரட்சணியத்தின் பேரில் இவ்வித நினைவு உன்னிடத்தில் உண்டோ? சொல். நீ போகிற இடங்களில் எல்லாம் இந்த முக்கியமான நினைவு உன்னைப் பின்தொடர்ந்து வருகின்றதோ? நீ விழிக்கும்போது, உனக்கு இது முதல் நினைவாயும் நீ நித்திரை செய்யக் கண்ணை மூடும்போது உனக்கு இது கடைசி நினைவாயும் இருக்கிறதோ இல்லையோவென்றும், அடிக்கடி வீண் காரியத்தின்பேரிலும் இலௌகிக காரியத்தின்பேரிலும் உன் புத்தி வெகுவாய் சார்ந்திருக்கிறதோவென்றும் அல்லது உன் ஆத்தும இரட்சணிய காரியம் மற்ற அலுவலைப்பார்க்க உன் இருதயத்திலே மெய்யாகவே பதிந்திருக்கிறதோவென்றும் பார். இவ்விதம்செய்தால் உன் நித்தியத்தைக் குறித்து நம்பிக்கையாயிருக்கலாம் அல்லது பயப்படவேண்டும் என்பதை நீயே அறிந்துகொள்ளலாம்.

மனப்பற்றுதல்.—நான் என் ஆத்தும இரட்சணியத்தையும் அதற்கடுத்த நன்னடக்கைகளையுங் குறித்து வெகு அபூர்வமாய் நினைக்கிறதையும் வீண் காரியங்களின்பேரில் எந்நேரமும் கவலையாயிருக்கிறதையும் பார்த்து வெட்கி ஆச்சரியப்படக்கடவேனாக.

பிரதிக்கினை.—என் ஆத்தும இரட்சணியத்துக்கு இதினால் வரும் லாபம் என்னவென்று அர்ச். ஞானப்பிரகாசியாருக்கு அப்பியாசமாயிருந்த இந்த நினைவு என்னிடத்திலும் வழக்கமாயிருக்கப் பிரயாசப்படுவேன்.

2-ம் பிரிவு

தியானம்.—மற்றக் காரியத்தைப்பார்க்க ஒரே காரியத்தின்பேரில் மனக் கவலையாயிருக்கிறவன் அது அநுகூலமாகாமல் எங்கே தவறிப்போகிறதோவென்று பயந்திருப்பானல்லவோ? அந்த அலுவல் பெரிதாயிருக்கிறதற்குத் தக்கது அதின்பேரில் கவலையும் அச்சமும் பெரிதாயிருக்கும். இது தினந்தினம் அநுபோகத்தினால் கண்டறியுங் காரியம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் ஆத்தும இரட்சணியத்தைப் பார்க்க உனக்குப் பிரதானமான காரியம் வேறொன்றுமில்லை. இது மெய்யென்று நீயே சொல்லுகிறாய்; மற்றக் காரியத்தின்பேரில் உனக்கு எப்போதும் கவலையுண்டாயிருந்தும், உன் ஆத்தும இரட்சணியத்தின்பேரில் மாத்திரம் உனக்கு அச்சமுங் கவலையும் இல்லாமற்போவதென்ன? ஒன்றில் நீ இது முக்கியமானதென்று நினைப்பதில்லை அல்லது உன் மனதில் மற்றதைப்பார்க்க அதிகமாய்ப் பதிந்திருப்பதில்லையென்று சொல்லவேண்டியதாகும். இதில் உனக்கு மோசம் இல்லையென்பாயாகில், வீண் நம்பிக்கை வைத்துத் திரிகிறாயென்று சொல்லவேணும்; இது காரியத்தில் பயப்படாமலிருக்கிறதே நீ மிகவும் பயப்படவேண்டியதற்குக் காரணமாகும். ஏனென்றால் தனக்கு மோசமில்லையென்று பயமற்றிருக்கிறவன் அது அநுகூலமாகிறதற்கான உபாயங்களைத் தேடமாட்டான்; அதைப்பற்றி யாதொரு பிரயாசப்படவுமாட்டான்; ஆகிலும் பரலோக இராச்சியம் பலவந்தத்தினால் கிடைக்கும்; பலவந்தம் பண்ணுகிறவர்களே அதைக் கைப்பற்றிக்கொள்ளுவார்களென்று இயேசுநாதர் திருவுளம்பற்றியிருக்கிறபடி ஆத்தும இரட்சணியத்தை அடைய உதாரமாய்த் தன்னால் கூடிய பிரயாசமெல்லாம் படவேணும் (மத். 11).

மனப்பற்றுதல்.—மரணமென்கிற நித்திரையிலே நான் அச்சமற்று உறங்காமல் இரட்சணியத்துக்கடுத்த பயத்தினால் என் சரீரத்தை ஊடுருவச்செய்யும் சுவாமியென்று தாவீது இராஜா சொன்னதுபோல, நான் வீண் நம்பிக்கையால் மோசம்போகாதிருக்க எனக்கு ஒத்தாசை செய்தருளும் சுவாமியென்று கேட்பேனாக (சங்கீதம், 118 : 12).

பிரதிக்கினை.—சர்வேசுரனுக்கு நீ முழுதும் பயந்து நடப்பாயானால், உன் கடைசி நாளில் உனக்கு முழு நம்பிக்கை உண்டாகுமென்று இஸ்பிரீத்து சாந்துவானவர் சொன்ன புத்திக்கு ஒத்தபிரகாரம் நடக்கப் பிரயாசப்படுவேனாக (சலோ. நீதிமொழி, 23-ம் அதிகாரம்).

3-ம் பிரிவு

தியானம்.—மற்றதைப் பார்க்க ஒரே காரியத்தின் பேரிலே எப்போதும் கவலையாயிருக்கிறவன் அது அநுகூலமாவதற்கு என்ன பிரயாசப்பட்டாலும் போதாதென்று நினைப்பானல்லவோ? அப்படியே தன் ஆஸ்திபாஸ்தியைக் குறித்து வழக்காடுகிறவன் அதற்கு மோசம் வராதபடி எந்நேரமும் அதற்கான உபாயங்களையெல்லாம் தேடித் திரிவான்; பிறரிடத்தில் எவ்வளவு ஆலோசித்தாலும், திரும்பவும் ஆலோசனை கேட்பான்; எவ்வளவு பிரயாசப்பட்டாலும், அதெல்லாம் போதாதென்று இன்னமும் பிரயாசப்படுவான். வழக்கிலே தேர்ந்தவர்கள் என்ன திடன் சொன்னாலும், அவனுக்கு உறுதியிராது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு க்ஷணமும் அவனுக்கு அதின்பேரில் எவ்வளவு தெளிவும் புதிதான ஞானங்களும் காணப்பட்டாலும், அவன் மனதுக்குத் திருப்தி இராது. இப்போது சொன்னதெல்லாம் உண்மையோ அல்லவோவென்று நீயே யோசித்துக்கொள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இது இவ்வாறிருக்க, உன் ஆத்தும இரட்சணிய காரியம் உன் இருதயத்தில் நன்றாய்ப் பதிந்திருந்தால், சற்று நேரமாகி

னும் வீணில் செலவழிப்பாயோ? கண்டிப்பாய்க் கட்டளையிடப்பட்ட காரியத்தை மாத்திரம் செய்தால் போதுமென்றிருக்கிற பத்திக்குறைவுள்ள சந்நியாசியைக் கண்டுபாவியாமல், ஆத்தும இரட்சணியமே நித்தியமான காரியமென்று அதை அடைகிறதற்கு கடைசிபரியந்தம் எத்தனையோ உபாயங்களைத் தேடுவாய்! இதுவரையில் சொன்னதெல்லாம் சரியான நியாயமென்று நீ ஒத்துக்கொண்டாலும், உன் நடக்கை இதற்கு ஒத்திருக்கிறதோ? இதற்கான மறுவுத்தரம் நீயே தேடிக்கொள். இதைக்குறித்து நீ செய்யும் ஆத்தும சோதனை தேவ ஊழியத்தில் உன்னை அதிகம் அதிகமாய் உதாரத்தனமுள்ளவனாக்குகிறதற்கு உதவியாயிருக்கும்.

சம்பாஷணை.—அர்ச். ஞானப்பிரகாசியாரோடே சம்பாஷணை செய்வாயாக. இவர் இளம்பிராயத்திலேதானே மாசற்றவராயும் ஆச்சரியமான பத்தி சுறுசுறுப்புள்ளவராயுமிருந்தாலும், மகா கடின தபசு செய்துகொண்டுவருவார்; தன் ஆத்தும இரட்சணியத்தை உறுதிப்படுத்துகிறதற்காகத் தான் செய்யும் நன்மையெல்லாம் போதாதென்று பயந்திருப்பார். சிலவிசை நீ செய்த எண்ணிக்கையில்லாத கனமான பாவங்களினால் அநேகம்விசை ஆபத்துக்குள்ளான உனக்குத் தபசென்கிற வரத்தை அர்ச். ஞானப்பிரகாசியார் அடைந்துகொடுக்கும்படியாக அவரை மன்றாடு.

22-ம் தேதி

திருக்குடும்பம் எஜிப்து தேசத்துக்குப் போனதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—எஜிப்து தேசத்துக்குப் போகும்படி திருக்குடும்பத்துக்குக் கொடுத்த கட்டளையைக் கேட்கிறதாக உருபித்துக்கொள்வோமாக.

தியானச் சேபம்.—இந்தத் திருக்குடும்பம் காண்பித்த விசுவாசத்தையும் சிரவணத்தையும் நாமும் அடைய வரப்பிரசாதம் கேட்போமாக.

முதல் பிரிவு

திருக்குடும்பம் ஓடிப்போகக் கட்டளை பெற்றதின்பேரில்

தியானம்.—ஆண்டவருடைய தூதன் சூசையப்பருக்குச் சொர்ப்பனத்தில் காணப்பட்டு, நீர் எழுந்திருந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போமென்றார் (மத். 2).

சூசையப்பரும் மரியாயும் எளியவர்களாயிருந்தாலும், இயேசுநாதரோடேகூடப் பாக்கியவான்களாய்ச் சஞ்சரித்துப் பயமும் அவநம்பிக்கையும் இல்லாதிருந்தார்கள். அப்படியிருக்க, ஏரோது இராஜா மூன்று இராஜாக்கள் தன்னை ஏய்த்துப்போட்டார்களென்று எண்ணிக் குழந்தை இயேசுநாதரைக் கொல்லுகிறதற்கு வழிதேடினான். ஆனால் சர்வேசுரன் இந்தப் பிள்ளையைக் காப்பாற்ற நியமிக்கப்பட்டவர்கள்பேரில் கண்ணுண்டாயிருந்து அவன் கொண்ட துர்க்கருத்தை இவர்களுக்கு வெளிப்படுத்தி அதற்குத் தப்பித்துக்கொள்ளும் உபாயத்தைத் தெரிவித்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் தமது தாசர்களிடத்தில் காண்பிக்கிற தேவ பராமரிப்பைக் கண்டுணர்வோமாக. அவர்களுக்குத் துன்ப துரிதம் வராமல் தடுக்காவிட்டாலும் அவர்கள்பேரில் கரிசனைகொண்டு [illegible] வழியாய் அவர்களை நடப்பித்து, சகலமும் அவர்களுக்கு நன்மையாய் முடிய அநுக்கிரகம் செய்கிறார். மகா ஆபத்தான சமயத்திலே முதலாய் துஷ்டர்கள் நினைத்ததற்கு மாறாய் முடியும்படி செய்வார். திருக்குடும்பம் எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போனதே இதற்குப் போதுமான அத்தாட்சி. வேதாகமங்களிலும் திருச்சபைச் சரித்திரத்திலும் இதைப்போன்ற வேறு அநேக வர்த்தமானங்களும் உண்டு.

மனப்பற்றுதல்.—தேவ பராமரிக்கையின்பேரில் உயிருள்ள விசுவாசமும் முழு நம்பிக்கையும் நமக்கிருக்கவேண்டும்.

பிரதிக்கினை.—பொதுவான துன்ப துரிதங்களிலும் எனக்கு நேரிடுகிற இக்கட்டுகளிலும் விசுவாசத்தின் மாறுத யோசனைகளின்படி நடந்துகொள்வேனாக.

2-ம் பிரிவு

ஓடிப்போகவேணுமென்கிற கட்டளை சூசையப்பர் வழியாய்த் தேவமாதாவுக்குக் கொடுக்கப்பட்டது

தியானம்.—ஆண்டவருடைய தூதனானவர் சூசையப்பருக்குச் சொர்ப்பனத்தில் தரிசனையாகி எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போங்களென்றார். சூசையப்பரைப் பார்க்க மகா பரிசுத்தமுள்ளவளும், சர்வேசுரனுக்கு உகந்தவளுமாயிருந்த மரியம்மாளுக்குத் தேவதூதன் இந்தக் கட்டளையைக் கொடாமல் போனதென்ன? சூசையப்பர் பரிசுத்த மரியாயிக்குப் பத்தாவானதினாலே, அவரே திருக்குடும்பத்தின் தலைவர். கீழ்ப்பட்டவர்கள் புண்ணியத்தில் எவ்வளவு உயர்ந்தவர்களாயிருந்தாலும், சிரேஷ்டர் வழியாய் அவர்கள் நடப்பிக்கப்படுவதே கிரமம்; ஏனென்றால், மனிதனுடைய பேறுபலனை முன்னிட்டு நமது ஆத்தும காரியத்தை சிரேஷ்டர் கையில் ஒப்படைப்பதில்லை; ஆனால், "உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான்" (லூக். 10-16) என்று சொல்லியிருக்கிறவண்ணம் ஆண்டவர் ஸ்தானத்தில் இருக்கிறவர்கள் வழியாய் அவரிடமே நமது காரியத்தை ஒப்படைக்கிறோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் திருவுளம்பற்றிய போதனைக்கும் அவர் நியமித்திருக்கிற இந்த ஒழுங்குக்கும் ஏற்றபிரகாரமாய் நான் எப்போதும் நடந்துவருகிறேனா? சிலவிசை என் சிரேஷ்டர் என்னிலும் கொஞ்சப் பிராயமுள்ளவரென்றும் அவர் சந்நியாசியாகி கொஞ்சகாலமாச்சுதென்றும் என்னைப்பார்க்கச் சாமர்த்தியமுள்ளவரல்லவென்றும் நான் எண்ணி நல்ல மனதோடு அவருக்குக் கீழ்ப்படியாமற்போனேனோ? அவருக்கான சங்கை செய்யாமலிருந்தேனோ? இப்படி நடந்தேனானால், சர்வேசுரனால் நியமிக்கப்பட்ட ஒழுங்கை நான் கண்டுபிடியாமற்போனேனென்றும் கீழ்ப்படிதலென்கிற புண்ணியத்தை நான் நன்றாய் அறியாமலிருந்தேனென்றும் இதுவரையில் நான் கீழ்ப்படிந்தது மோக்ஷ சம்பாவனைக்குப் பாத்திரமாய்ச் சுபாவத்துக்கு மேற்பட்ட புண்ணிய முயற்சியாயிராமல் அநேகம் தருவாயிலே மேரை மரியாதைக்கான முயற்சியாயிருந்ததென்றும் சொல்லவேணுமல்லாமல் மற்றப்படியல்ல.

மனப்பற்றுதல்.—சர்வேசுரனால் நியமிக்கப்பட்ட ஒழுங்கில் தவறாதிருப்பேனாக.

பிரதிக்கினை.—சிரேஷ்டர்கள் சர்வேசுரனது பிரதிநிதிகள் என்றுணரப் பிரயாசப்படுவேன்; குற்றமில்லாத மனுஷன் உலகத்தில் ஒருவனும் இல்லையென்பதினாலே, அவர்களிடத்தில் இருக்கக்கூடிய குற்றங்களை நான் கவனிக்கமாட்டேன்.

3-ம் பிரிவு

சம்மனசு சூசையப்பருக்குக் கொடுத்த கட்டளையின்பேரில் யோசனை

தியானம்.—நீர் எஜிப்து தேசத்துக்குப்போய் நான் உமக்குச் சொல்லுந்தனையும் அங்கே இரும் என்றார் (மத். 2). இதில் நான் உமக்குச் சொல்லுந்தனையும் அங்கே இருக்கவேணுமென்று கட்டளையிட்டு அவர்கள் பரதேசத்தின் முடிவை அவர்களுக்கு அறிவியாமல் மறைத்து வைத்ததினாலே, ஒரு பக்கத்தில் சூசையப்பரும் தேவமாதாவும் திட்டந் தெரியாமல் அதற்குக் கீழ்ப்படியவேண்டியிருந்ததையும், மற்றொரு பக்கத்தில் ஏரோது குழந்தையைக் கொலைசெய்ய நினைக்கிறதினால் அவர்கள் பரதேசத்துக்குப் போகவேண்டும் என்ற முகாந்தரத்தை சம்மனசானவர்

எந்தப்பிரகாரமாய் அவர்களுக்கு அறிவிக்கிறாரென்பதையும் இவ்விடத்தில் கிரகித்துக்கொள்ளவேணும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சிரேஷ்டர்கள் தாங்கள் கொடுக்கும் கட்டளைக்கான முகாந்தரத்தைச் சொல்லலாம், சொல்லாமலுமிருக்கலாம். அநேகந்தருவாயிலே தாங்கள் நடந்துகொள்ளும் விதத்தைப் பற்றி முகாந்தரம் சொல்லிக்கொள்வது நியாயம் ஆகாது. வேறே சமயத்திலே தாங்கள் கொடுத்த கட்டளையை நிறைவேற்றுகிறதற்குத் தீவிரப்படவேணுமென்றும், இதை இன்னின்ன பிரகாரம் செய்யவேணுமென்றும், அல்லது தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களுடைய பலவீனத்தையும் குறையான குணத்தையும் பார்த்து அவர்கள் பேரில் இரக்கமாயிருக்கவேணுமென்றும் தெரிவிக்கும்படி அந்த முகாந்தரங்களை வெளிப்படுத்துகிறது நியாயமாயிருக்கும். ஆனால் இவர்கள் கீழ்ப்படிதலின் பேறுபலனை நன்றாய்க் கண்டுபிடித்தால், சிரேஷ்டர்கள் தங்களுக்குக் கொடுக்கும் கட்டளைகளுக்கு முகாந்தரஞ் சொல்லாமலிருப்பதே தாவிளையென்று எண்ணுவார்கள். புண்ணியத்தில் தேர்ந்த சந்நியாசிகள் அவ்விதம் எண்ணுகிறதுமல்லாமல் சிரேஷ்டர்கள் தங்களுக்கு அந்தப்பிரகாரமே செய்யும்படி ஆசிக்கிறார்களென்று அறிவோம். ஆகையால் நாம் அவர்களைக் கண்டுபாவித்து கீழ்ப்படிதலில் மிகவும் பேறுள்ளதாயிருக்கிறதை எப்போதும் தேடுவோமாக.

சம்பாஷணை.—பரிசுத்த கன்னியாஸ்திரியோடேயும் சூசையப்பரோடேயும் சம்பாஷணை செய்வோமாக. உத்தம விதமாய்க் கீழ்ப்படிய எப்போதும் நாம் ஆசைப்படவும் சர்வேசுரன் சிரேஷ்டர்கள் வழியாகக் கொடுக்கிற கட்டளையை விசுவாசத்தோடும் நேர்மையோடும் சிரவணத்தோடும் நாம் கையேற்றுக்கொள்ளவும் வேண்டிய வரப்பிரசாதத்தை நமக்கு அடைந்து தரும்படி மன்றாடுவோமாக.

23-ம் தேதி

சூசையப்பரும் தேவமாதாவும் ஆச்சரியமான விதமாய்க் கீழ்ப்படிந்ததின்பேரில்.

ஆயத்தச் சிந்தனை.—திருக்குடும்பம் எஜிப்து தேசத்தை நோக்கிப் போகிறதைப் பார்க்கிறதாக உரூபீகரித்துக்கொள்ளுவோமாக.

தியானச் சேபம்.—கீழ்ப்படிதலில் உத்தமராயிருக்க வரப்பிரசாதம் கேட்போமாக.

முதல் பிரிவு

தியானம்.—சூசையப்பரும் தேவமாதாவும் தங்கள் புத்தி யோசனைகளை முழுதும் உத்தம்பிரகாரமாய்த் தாழ்த்தி ஒன்றும் தெரியாதவர்களைப்போல் கீழ்ப்படிகிறார்கள். சர்வேசுரன் தங்களைப் பரதேசத்துக்குப் போகச் சொல்லாமல், ஏரோது இராஜாவின் ஆங்காரத்தை அடக்கக்கூடாதோவென்றும், அல்லது அப்படிப் போகவேண்டியதிருந்தாலும், இஸ்ராயேல் ஜனங்களுக்கு முழுதும் விரோதிகளான எஜிப்தார் இராச்சியத்துக்குப் போகாமல் தங்களுக்கு அறிமுகமான மூன்று இராஜாக்கள் சீமைக்குப் போகச் செய்யக்கூடாதோவென்றும், அதுவும் இல்லையாகில், பயணத்துக்கு வேண்டிய முஸ்திப்பெல்லாம் செய்யும்வண்ணம், சில நாட்களுக்குமுன்னரே அந்தக் கட்டளையை ஏன் கொடுக்கவில்லையென்றும் கேட்டவர்களல்ல. சர்வேசுரன் தமது ஸ்தானாபதியைக்கொண்டு தங்களுக்கு அறிவித்தது போதுமென்றும் அவருடைய சித்தப்பிரகாரம் நடக்கிறது மகா உத்தமமென்றும் நினைத்துக் கீழ்ப்படிந்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமக்குக் கொடுக்கும் கட்டளைகளுக்கு நாம் முகாந்தரத்தைத் தேடாமல் தேவமாதா, சூசையப்பரைப் பின்பற்றி தைரியத்தோடு ஒன்றும் தெரியாதவர்களைப்போல் கீழ்ப்படிய பிரயாசப்படவேணும்; ஏனென்றால் நமக்குக் கொடுக்கும்

கட்டளையின் முகாந்தரத்தை அறிந்து அது நன்மையானதோ பிரயோசனமுள்ளதோவென்று பார்த்தபின் மாத்திரம் கீழ்ப்படிவோமாகில், சர்வேசுரன் சித்தத்தின்படி நாம் கீழ்ப்படியாமல் நமது புத்திக்கொத்தபடி கீழ்ப்படிகிறதுபோலாகும்; சர்வேசுரன் சித்தப்பிரகாரம் நாம் கீழ்ப்படியாததினாலே, நமது கீழ்ப்படிதலானது மிகவும் குறைவுள்ளதாய்த் தனக்குள்ள பலனை வெகுவாய் இழந்துபோம்.

மனப்பற்றுதல்.—நம்மிடத்தில் விசுவாசத்தைப் பலப்படுத்திக்கொண்டு, என் பிதாவே, உமக்கு இப்படிச் சித்தமாயிருக்கிறதினாலே, அப்படியே ஆகட்டுமென்று வருத்தமான காரியங்களிலே முதலாய் இயேசுநாதரோடே கூட நாமும் சொல்லி நமது மனத் தைரியத்தை விடாதிருப்போமாக (மத். 11).

பிரதிக்கினை.—பொதுவாய் சந்நியாசத்துக்குரிய கீழ்ப்படிதலின் போதகத்துக்கும் கீழ்ப்படிதலின் முயற்சிக்கும் வித்தியாசம் உண்டு. கீழ்ப்படிதலின் போதகத்தைக் குறித்துத் தர்க்கம் செய்கிறது பிரயோசனமாயிருந்தாலும், கீழ்ப்படிதலின் முயற்சியைக் குறித்துத் தர்க்கிக்கக்கூடாது.

2-ம் பிரிவு

தியானம்.—கட்டளை கொடுத்த மாத்திரத்திலே, தாமதமில்லாமல் உடனே கீழ்ப்படிந்தார்கள். எப்படியெனில், அர்ச். மத்தேயு சொல்லுமாப்போலே, சூசையப்பர் எழுந்திருந்து தமக்குக் கொடுத்த கட்டளையைத் தேவமாதாவுக்கு அறிவிக்கவே, அவளும் உத்தமபிரகாரமாய் அதற்குக் கீழ்ப்படிந்து, உடனே குழந்தையைக் கையிலே ஏந்திக்கொண்டு இருவரும் விடியுந்தனையும் காத்திராமல் அந்த இராத்திரியில்தானே வெகு துரிதமாய்ப் பிரயாணப்பட்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்பேர்ப்பட்ட சுறுசுறுப்புள்ள கீழ்ப்படிதலுக்கும் நம்முடைய கீழ்ப்படிதலுக்கும் அநேகமுறை எவ்வளவோ வித்தியாசம்! மடத்திலுள்ள அந்தந்த முயற்சிகளை நிறை

வேற்றுகிறதில் எவ்வளவோ தத்தளித்துத் தாமதம் செய்கிறோம்! நாம் நமது மனச்சாட்சியில் ஒருவித கிலேசப்பட்டு, அல்லது கிலேசம் உண்டாகாமலே நமது சுயபிரியத்துக்கு அல்லது சுயவிச்சைக்குத் தக்கது வீண் போக்குகளைச் சொல்லி மணி அடித்தமாத்திரத்திலே உடனே கீழ்ப்படிகிறதற்கு எவ்வளவு அசட்டையாயிருக்கிறோம்! விசேஷமாய் நமது பராமரிப்பின்கீழ் இருக்கிறவர்களைக் கவனிப்பதில் இத்தகைய அசட்டைத்தனம் இருக்குமாகில், எவ்வளவோ கனமான பொல்லாப்பு நேரிடும்! சூசையப்பர் சம்மனசானவர் கொடுத்த கட்டளைக்கு உடனே கீழ்ப்படியாதிருந்தால், தன் பராமரிப்புக்குள்ளிருந்த திருக்குழந்தைக்கு எவ்வளவோ பொல்லாப்பு நேரிட்டிருக்கும்!

மனப்பற்றுதல்.—சூசையப்பரும் தேவமாதாவும் மகா வருத்தமான காரியங்களிலே வெகு சுறுசுறுப்போடு உத்தம பிரகாரமாய்க் கீழ்ப்படிந்திருக்க நான் கீழ்ப்படிதல் விஷயத்தில் எத்தனையோ கனமான குற்றங்களைச் செய்திருக்கிறேன் என்று யோசித்து சர்வேசுரன் சமுகத்திலே வெட்கிப் பொறுத்தல் கேட்பேனாக.

பிரதிக்கினை.—இன்றுமுதல் மகா சுறுசுறுப்போடே சொற்பக் காரியங்களிலேமுதலாய்க் கீழ்ப்படிய மனதாயிருக்கிறேன்.

3-ம் பிரிவு

தியானம்.—அவர்கள் முறைப்பாடான யாதொரு வார்த்தை சொல்லாமல் திடீரென்று தங்கள் உறவினரையும் சிநேகிதரையும் விட்டுப் போகிறதில் கஸ்தி துக்கத்தைக் காண்பியாமலும் மனங்கலங்காமலும் பின்னும் ஏது சம்பவிக்குமோ என்கிற ஏக்கமில்லாமலும் மன உதாரத்தோடே கீழ்ப்படிந்தார்கள். ஏனென்றால் இயேசுநாதர் ஒருவரே தங்களுக்குப் போதுமென்று நினைத்து அவர் தங்களுடன் இருந்தால் எல்லா துன்பத்தையும் ஜெயிக்கலாமென்றும் தங்களுக்கு யாதொரு குறையிராதென்றும் ஒருவரும் தங்களுக்குப் பொல்லாப்புச் செய்யமுடியாதென்றும் நம்பியிருந்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது மனதையும் மனச் சுதந்தரத்தையும் சர்வேசுரனைப்பற்றி நாம் வெறுத்துவிடுகிறதற்கு அளவாக நமது சிரேஷ்டர் வழியாய் நமது சொந்த இராச்சியமாகிற பரலோகத்துக்கு அவர் நம்மைத் தவறாமல் கூட்டிக்கொண்டு போவாரென்று எப்போதும் நிச்சயமாயிருக்கவேணும். இந்த நினைவினால் சகல பயமும் சந்தேகமும் நீங்கிவிடும்; நாம் எப்போதும் உதாரத்தோடேயும் வெற்றியோடேயும் கீழ்ப்படியலாம். நம்மால் இயலாதென்று தோன்றும் சமயத்திலுங்கூட, சர்வ வல்லவருடைய ஒத்தாசையின் உறுதியைக்கொண்டு, என்னைத் திடப்படுத்துகிறவரால் எல்லாம் செய்ய என்னால் ஆகுமென்று அர்ச். சின்னப்பரோடு நாமும் சொல்லக்கூடும். இத்தகைய கருத்தைக் கடைப்பிடித்து அதில் நிலைத்திருப்போமாக.

சம்பாஷணை.—எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போகத் திருக்குடும்பத்துக்குக் கட்டளை கொடுக்கையில், அவர்கள் காண்பித்த ஆச்சரியமான கீழ்ப்படிதலைப் பார்த்திருந்த சம்மனசானவரோடு சம்பாஷணை செய்து பரிசுத்த தேவதாயாரும் சூசையப்பரும் இவ்விடத்தில் நமக்குக் காண்பித்த மாதிரிகையிலே நமது படிப்பினைக்கடுத்தவைகளெல்லாம் நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்கான வரத்தையும் இவர்களை சகல காரியத்திலும் கண்டுபாவித்து நமது கீழ்ப்படிதலைத் திடப்படுத்தத்தக்க தைரியத்தையும் நமக்கு அவர் அடைந்து தந்தருளப் பிரார்த்தித்துக்கொள்வோமாக.

24-ம் தேதி

மூவகைக் கீழ்ப்படிதலின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, நீங்கள் நேரான மனதோடு கீழ்ப்படியுங்களென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இந்தத் தியானத்தின் பலனாக மெய்யான கீழ்ப்படிதலின் பற்றுதல் உன்னிடத்தில் உண்டாகக் கேட்பாயாக.

முதல் பிரிவு

அடிமைக்குரிய கீழ்ப்படிதல்

தியானம்.—அடிமைக்குரிய முதல்வகைக் கீழ்ப்படிதல் ஏதென்றால், அந்த வார்த்தையிலேயே விளங்குகிறதுபோல், இது தேவ பயத்தினால் உண்டாகாமல், மனிதர் தண்டிப்பார்கள், கண்டிப்பார்கள், அவமானப்படுத்துவார்கள், தனக்கு யாதோர் சகாயஞ் செய்யமாட்டார்கள் என்பதினாலே உண்டாகும் கீழ்ப்படிதலாம். எஜமான் பார்த்துக்கொண்டிருக்கையில், அவன் கட்டளைப்பிரகாரம் ஊழியன் நடந்துகொள்வான்; எஜமான் இல்லையென்று அறிந்தால், ஊழியன் தன் இஷ்டம்போல் நடப்பான். இதில் கீழ்ப்படிதலென்கிற புண்ணியமும் அதற்கான பலனும் இல்லையென்பது வெளிப்படை. கட்டாயமும் நீசத்தனமும் மாத்திரம் இதிலே உண்டு.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் சந்நியாசிகளானதினாலே மனம்பொருந்தி கீழ்ப்படிய வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிறோம். ஆகையால் நீச அடிமைக்குரிய அந்தப் பொய்யான கீழ்ப்படிதலுக்கும் சந்நியாசிக்கடுத்த கீழ்ப்படிதலுக்கும் சம்பந்தமிருக்கக்கூடாது. ஆயினும் அவனவன் தன் மனதறிய தன்னைச் சோதித்துப் பார்ப்பானாகில், என்ன சொல்லுவான்? கீழ்ப்படிதல் அல்லது சபை ஒழுங்கு எனக்குக் கட்டளையிட்டிருப்பதைச் சிரேஷ்டர் கண்பார்வையில் நான் செய்வதுபோல், நான் தனித்திருக்கும்போதும் சரியாய்ச் செய்துவருகிறேனா? அவ்விதம் செய்வதில்லை என்று என் மனச்சாட்சி சொல்லுமாகில், நான் கீழ்ப்படிவதற்கான முகாந்தரம் அடிமைக்குரிய பயம்தான் என்று சந்தேகிக்க நியாயம் உண்டல்லவா?

மனப்பற்றுதல்.—இதெல்லாம் பார்த்து வெட்கி மனஸ்தாபப்படுவேனாக.

பிரதிக்கினை.—என் கடமைகளை நிறைவேற்றுகிறதில் மனுஷருக்கடுத்த யாதொரு பயம் அல்லது நேசத்தனம் கலந்திராதபடி என்னைப் பரிசோதித்துப் பார்ப்பேனாக.

2-ம் பிரிவு

முகப்பிரீதிக்கடுத்த கீழ்ப்படிதல்

தியானம்.—நமது சிரேஷ்டர்களோடே ஒத்திருக்கிறது எப்போதும் பிரயோசனமுள்ள காரியம்; அதினால் அநேக கஸ்திகளுக்குத் தப்பித்துக்கொள்வதுமல்லாமல், அவர்களிடமிருந்து அற்பசொற்ப சகாயமும் அடையலாம். இதனிமித்தம் அவர்களுக்குப் பிரியப்படத் தேடுகிறோம். இந்தக் கருத்துடன் கீழ்ப்படிவது புண்ணியமல்ல, வெறும் முகத்தாட்சணியமேயாகும். அன்றியும், சுயநலத்தைப் பற்றிய கருத்து கலந்திருப்பதால், இது சுயபட்சமன்றி வேறல்ல. மனிதர் இவ்வித நடத்தையைச் சாமர்த்தியமென்று எண்ணலாம்; ஆனால் சர்வேசுரன் சமுகத்தில் இது கபடமென்றுதான் சொல்லத்தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—முகப்பிரீதியும் கபடமும் உன் கீழ்ப்படிதலில் கலந்திருந்ததில்லையோ? உன் சிரேஷ்டருக்குக் கீழ்ப்படியும்போது, சர்வேசுரனைப்பற்றி அவருக்குப் பிரியப்படத் தேடுகிறாயா அல்லது உன்னைப்பற்றியா? சிரேஷ்டரைக் குறித்து நீ பேசுகிற வார்த்தை உன் உள்ளத்திலுள்ள நினைவுக்கு ஒத்திருக்கிறதா? அவர் சொல்லுவதுதான் சரியென்று அவர் முன்னிலையில் ஏற்றுக்கொண்டு அவரை விட்டுப் போனபிறகு, அதை இகழ்ந்து பேசினதில்லையா? இத்தகைய கேள்விகளுக்கு உன் மனச்சாட்சி பகரும் மறுமொழியிலிருந்து உன் கீழ்ப்படிதல் எத்தகையதென்று அறிந்துகொள்ளலாம்.

மனப்பற்றுதல்.—உன் கீழ்ப்படிதலிலுள்ள மிகுந்த குறைகளைக்கண்டு சர்வேசுரன் முன்பாக அத்தியந்த விதமாய் உன்னைத் தாழ்த்தி அவரிடத்தில் பொறுத்தல் கேட்பாயாக.

பிரதிக்கினை.—மனுஷருக்கும் மனுஷரென்கிற முறையிலே உன் சிரேஷ்டருக்கும் பிரியப்படவேணுமென்று நீ யாதொன்றும் செய்யாதே. கீழ்ப்படிதலிலே முகப்பிரீதியையும் உன் சுயநன்மையையும் தேடாதே.

3-ம் பிரிவு

சுபாவத்துக்கு மேற்பட்ட கீழ்ப்படிதல்

தியானம்.—இந்த மூன்றாம் வகைக் கீழ்ப்படிதல் மெய்யான கீழ்ப்படிதல். இதுவே பேறுள்ளதும் சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளதும், மனுஷருக்கு யோக்கியமுள்ளதுமாகும். மனுஷன் எவனும் மட்டில்லாத நன்மைச் சுரூபியாயிருக்கிற சர்வேசுரனுக்கு அமைந்து நடக்கும்படி அவர் தமக்குப் பதிலாய் நியமித்திருக்கிறவர்கள் வழியாய்ச் சகலரையும் நடப்பித்துக்கொண்டுவரச் சித்தமாயிருக்கிறார் என்பது விசுவாசப் பிரமாணம். இந்த விசுவாசமே மெய்யான கீழ்ப்படிதலுக்கு அஸ்திவாரம். இப்படிக் கீழ்ப்படிகிறவன் மனுஷரிடமாய்ச் சர்வேசுரனுக்குத்தானே கீழ்ப்படிகிறானல்லாமல் தன்னைப்போலொத்த மனுஷனுக்குக் கீழ்ப்படிகிறேனென்று சொல்லக்கூடாது. எனக்கு மேற்பட்டவர் சர்வேசுரன் ஒருவர்தான்; அவருக்கு மாத்திரம் நான் கீழ்ப்படிகிறதல்லாமல் மற்றப்படியல்லவென்று சொல்லக்கூடும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்படி கீழ்ப்படிகிற சந்நியாசி எவ்வளவோ மேலானவன்! இவனுடைய கீழ்ப்படிதல் அற்பக்காரியங்களிலே முதலாய் சர்வேசுரனுக்கு எவ்வளவோ பிரியமும் பேறுள்ளதுமாயிருக்கும்! இப்படிப்பட்ட கீழ்ப்படிதலோடு பொருந்தாத எதையும் எச்சரிக்கையாய் விலக்கி நடக்க பிரதிக்கினை செய்துகொள்; விசுவாசமும் தேவசிநேகமும் பொருந்திய இந்தக் கீழ்ப்படிதலில் உண்டான மேன்மை, ஆறுதல், பேறுபலன் முதலியதெல்லாத்தையும் நீ கண்டுபிடிக்கும்படி சர்வேசுரன் செய்த உபகாரத்துக்கு நன்றியறிந்திரு

சம்பாஷணை.—எப்போதும் சர்வேசுரனைத் தரிசித்து அவர் சித்தத்தின்படி மிகவும் உத்தம விதமாய் நடந்துவருகிற உன் காவலான சம்மனசோடு சம்பாஷணை செய்; அல்லது இன்றையத் திருநாளுக்குரிய அர்ச். திமோத்தேயு என்பவரோடே சம்பாஷணை செய். இவர் அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பருக்கு உகந்த சீஷனாயிருந்து அவரால் எபேசு பட்டணத்தின் மேற்றிராணியாராக நியமிக்கப்பெற்று அவருக்கு உத்தம்பிரகாரமாய்க் கீழ்ப்படிந்து வந்ததினாலே, பெரிய மகாத்துமாவாய் வேதசாட்சிமுடி பெற்றார்.

25-ம் தேதி

திருக்குடும்பம் யூதேயா நாட்டுக்குத் திரும்பி வந்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—திருக்குடும்பம் இஸ்ராயேல் நாட்டை நோக்கி வருகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—தேவ பராமரிக்கையின் தீர்மானத்துக்கு முழுதும் கீழ்ப்படிந்து நடக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

அர்ச். சூசையப்பரிடத்தில் விளங்கின மனத்திடன்

தியானம்.—சூசையப்பர் குழந்தை இயேசுநாதரோடும் தேவமாதாவோடும் ஏரோது இராஜா சாகுந்தனையும் எஜிப்து தேசத்தில் வசித்திருந்தார் (மத். 2). இந்த ஏரோது மாசில்லாத குழந்தைகளைக் கொலைசெய்த நாலாம் வருஷம் இறந்துபோனான். ஆகிலும் இவன் இறந்துபோன மூன்று வருஷத்துக்குப்பின் மாத்திரம்

எஜிப்து தேசத்தை விட்டுத் திரும்பிவர இவருக்குக் கட்டளையானதென்று நினைக்கிறார்கள். இத்தனை காலம் பரதேசத்தில் இவர்கள் இருந்ததினாலே, தேவமாதாவுக்கும் சூசையப்பருக்கும் வெகு விக்கினம் நேரிட்டிருக்குமென்றும் இதை விட்டு எப்போது திரும்பிப்போகலாமென்றும் ஆவலோடே நினைத்திருப்பார்கள் என்று நினைக்கிறாயோ? அப்படியல்ல. சர்வேசுரன் நம்மை வைத்தவிடத்தில் இருக்கிறோமென்கிற நினைவானது அவ்விடத்தில் தங்கியிருந்ததினால் அவர்களுக்கு வருத்தத்தைக் கொடாமல் பிரியத்தைத் தந்தது. மேலும் அங்கே அவர்களுக்கு அவசியமானது எதுவும் குறைவுபட்டதாக சுவிசேஷத்தில் சொல்லக் காணோம்; ஆகையால், தேவபராமரிக்கையானது அவர்களுக்கு வேண்டியதெல்லாம் சவரட்சணை செய்து வந்ததென்று நம்பத்தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் சிரேஷ்டர்களைக்கொண்டு நம்மை நடப்பித்து வருகிறார். கீழ்ப்படிதலால் நமக்கு இப்போது குறித்திருக்கிறதும் இனிமேல் குறிக்கப்போகிறதுமான இடங்களிலேயும் அலுவல்களிலேயும் நாம் அமரிக்கையாயிருப்பதற்கு இந்த யோசனையே போதும். நம்மை ஓர் இடத்தை விட்டு வேறோர் இடத்துக்கு மாற்றும்போதும் நமக்கு வெவ்வேறு அலுவல் கொடுக்கிறபோதும் நமக்கு அது ஒத்துக்கொள்ளாதென்று துவக்கத்தில் தோன்றினாலும் அப்பேர்க்கொத்த நினைவைத் தள்ளிப்போட்டுக் கொஞ்சநாள் நாம் நம்மைத்தானே ஜெயிக்கப் பிரயாசப்பட்டால், அது வரவர முழுதும் நம்மை விட்டு விலகிப்போம். இந்த நினைவு நமக்குச் சுபாவமாயிருக்கிறதினாலே, பலமாய் அதோடே எதிர்த்து யுத்தஞ்செய்யவேணும். அநேக சந்நியாசிகள் இதைப் பின்சென்று நடவாததினாலே, பற்பல மாய்கையில் அகப்பட்டுத் தங்கள் சந்நியாச அந்தஸ்தையும் இழந்து போனார்கள். வெவ்வேறு இடத்திற்குப் போகவேணுமென்கிற வீண் நினைவால் வெகுபேர் மோசம்போனார்களென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் எழுதப்பட்டிருக்கின்றது (முதல் காண்டம் 9-ம் அதி.).

மனப்பற்றுதல்.—தேவரீர் என்னைச் சிநேகிக்கிறீரென்று நான் அறிந்திருக்கிறதினாலே, உமக்குச் சித்தமானதெல்லாம் என்னிடம் நிறைவேற்றியருளும் சுவாமி, என்று அர்ச். அகுஸ்தீனோடே சொல்லவேணும்.

பிரதிக்கினை.—என்னை எங்கே வைத்தாலும், பின் வருங் காரியத்தைப்பற்றிக் கவலைப்படாமல் எனக்குக் கொடுக்கப்பட்ட அலுவலை முழுதும் நிறைவேற்றுவேன். சர்வேசுரனுக்குச் சித்தமான இடத்திலே நான் இருக்கிறேன்; அவருக்குச் சித்தமாயிருக்கிறதைச் செய்கிறேனென்று அந்தந்தச் சமயத்திலே நினைத்து மனந் தேறவேணும்.

2-ம் பிரிவு

அர்ச். சூசையப்பரிடத்தில் விளங்கின சமநிலையான குணம்

தியானம்.—சம்மனசு எஜிப்து தேசத்தில் சூசையப்பருக்குத் தரிசனையாகி அவரை நோக்கிச் சொன்னதாவது: பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ராயேல் தேசத்துக்குப் போமென்றார் (மத். 2). சில வேதபாரகர் சொல்லுவதுபோல, சூசையப்பர் தமக்குப் பிரயோசனமாகத் தன் தொழிலை எஜிப்து தேசத்தில் நடத்தி வருகையிலே அநேகம்பேர் அவருக்கு ஒத்தாசையாயிருக்கச் சர்வேசுரன் திட்டப்படுத்தியிருப்பாரென்றும் நாள்வட்டத்திலே அவர்களோடு பழக்கமாயிருந்ததினாலே அவ்விடத்தில் இருக்கப் பிரியப்பட்டாரென்றும் எண்ணலாம். ஆகையால் திரும்பவும் அதைவிட்டு வேறிடத்துக்குப் போகிறதும் நெடுநாள் பயணஞ்செய்கிறதும் இவருக்கு வருத்தமாயிருந்ததுந்தவிர, எங்கே போய்க் குடியிருக்கலாமென்று இவர் அறியாததினாலே, இவருக்கு மெத்த கிலேசமுண்டாயிருக்குமென்றும் நினைக்கத்தகும். ஆகிலும் சம்மனசானவர் கட்டளையிட்ட மாத்திரத்திலே வருங்காரியத்தின்பேரில் யாதொரு கவலையில்லாமல் எல்லாத்தையும் விட்டுப் புறப்பட்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ வாசம்பண்ணின மடத்தையும் தொழிலையும் உன்னோடே

பழகியிருந்த சகோதரரையும் திடீரென்றாற்போல விட்டுப் புறப்படும்படி நேரிடலாம். மேலும் உனக்கு வயது சென்றிருக்கும்போது, வீடு, அறை, தொழில், சிரேஷ்டரை முதலாய் விட்டுப் போகவேண்டியதாயிருந்தால், இப்பேர்க்கொத்த மாற்றுதலினாலே அநேகமுறை வெகு வருத்தமுண்டாகலாம்; இதை முழு இருதயத்தோடு சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடு. அப்போது அர்ச். சூசையப்பருக்கு சம்பாவனை கிடைத்ததுபோல உனக்கும் சம்பாவனை கிடைக்கும்.

மனப்பற்றுதல்.—என் சர்வேசுரா, என் ஆண்டவரே, தேவரீருடைய பராமரிக்கையின் திட்டத்துக்கொத்தபடி எப்போதைக்கும் என்னை முழுதும் ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.

பிரதிக்கினை.—வயதுசென்ற காலத்திலேயும் வருத்தமான சமயத்திலேயும் சுபாவத்துக்கு அருவருப்பானதை ஜெயிக்க இப்போதுதானே அதை எனக்கு இலேசானதாய் நினைத்துக்கொண்டு அதெல்லாத்தையும் சர்வேசுரனைப் பற்றி உதாரமாய் ஜெயிக்கப் பழகிக்கொள்ளுவேனாக.

3-ம் பிரிவு

அர்ச். சூசையப்பரிடத்தில் விளங்கின விவேகம்

தியானம்.—அற்கேலாவுஸ் யூதேயா நாட்டை ஆண்டு வருகிறானென்று கேள்விப்பட்டு சூசையப்பர் அங்கே போகத் துணியவில்லை; ஏனென்றால் இவன் ஏரோது இராஜாவின் குமாரனானதினாலேயும், இராச்சியபாரம்பண்ணுவதில் தகப்பனைப்போல நிஷ்டூரனாயிருந்ததினாலேயும் இவன் கைக்குள்ளே போனால், குழந்தை இயேசுநாதருக்குப் பொல்லாப்பு வரக்கூடுமென்று பயந்திருந்தார். மேலும் சம்மனசானவர் தமக்கு அறிவித்த இஸ்ராயேல் பூமியை அநேகம் சிற்றரசர்கள் ஆண்டுவந்ததினால், பிள்ளைக்கு மோசம் வராதபடி எவ்விடத்தில் போய் குடியிருக்கலாமென்று அவர் அறியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தார். கடைசியாய் அவருக்கு வந்த சந்தேகம் ஜெபத்தைக்

கொண்டு நிவாரணமாயிற்று. அதெப்படியென்றால், அவர் தேவ அறிக்கையினால் எச்சரிக்கப்பட்டுக் கலிலேயா நாட்டில் போய் நசரேத்தென்னும் ஊரிலே வாசம்பண்ணினார் (மத். 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சமயத்திலே அர்ச். சூசையப்பர் நடந்ததைப் பார்த்து நாமும் எந்தக் காரியத்திலும் எச்சரிக்கையோடே நடக்க வேணும். நமக்குண்டாகிற சந்தேகங்களிலும் மனக்கலக்கங்களிலும் நன்றாய் யோசித்துப் பார்த்தபின், யாதொரு காரியத்தைப்பற்றித் தீர்மானம் பண்ணுகிறதற்குமுன் தாழ்ச்சியோடேயும் சுறுசுறுப்போடேயும் ஜெபம் பண்ண வேணும். இந்தப் பிரகாரம் நாம் எப்போதும் நடந்து வந்தால், இதினாலே நமக்கு மனக்கலக்கம் தீருகிறதுமல்லாமல் இதைக் குறித்துப் பின்னுக்குக் கஸ்திப்பட இடமிராது.

சம்பாஷணை.—அர்ச். சூசையப்பரோடே சம்பாஷணை செய், அல்லது இன்று அர்ச். சின்னப்பர் மனந்திரும்பின நாளானதினாலே, அவரோடே சம்பாஷணை செய்வாயாக.

26-ம் தேதி

திருக்குடும்பம் எருசலேம் பட்டணத்தின் தேவாலயத்துக்குப் போனதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—தேவாலயத்தில் சர்வேசுரன் சமுகத்திலே திருக்குடும்பம் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்குகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் இயேசுநாதரை ஆராதித்து வணங்கும்போது, உயிருள்ள விசுவாசமும் மிகுந்த பத்தியும் உண்டாகவேணுமென்று கேட்பாயாக.

முதல் பிரிவு

அர்ச். சூசையப்பர் எருசலேம் பட்டணத்தில் பாஸ்கா பண்டிகை கொண்டாடப் போகிறார்

தியானம்.—அவருடைய தாய் தகப்பன் தேவாலயத்தில் போய் ஆண்டவரை வணங்கித் தோத்திரம் பண்ணுகிறதற்காக பாஸ்கா பண்டிகை கொண்டாடும் நாளில் வருஷந்தோறும் எருசலேம் பட்டணத்துக்குப் போவார்கள் (லூக். 2). அஞ்ஞானத்தின்பேரில் நாட்டமாயிருந்த இஸ்ராயேல் ஜனங்களுக்கு ஒரே தெய்வம் உண்டென்றும் அவருக்கு மாத்திரம் ஆராதனை பொருந்தினதென்றும் சகலமும் நினைப்பூட்டத்தக்கதாய் எருசலேம் பட்டணத்தில் மாத்திரம் ஒரே தேவாலயம் இருக்கக் கட்டளையிட்டிருந்தது. மேலும் புருஷரும் தகுந்த வயதுள்ள ஆண்பிள்ளைகளும் வருஷத்தில் உண்டான பிரதான திருநாட்களாகிற பாஸ்காத் திருநாளுக்கும் ஐம்பதாம் நாளாகிற பத்துக்கற்பனை திருநாளுக்கும் கூடாரத் திருநாளுக்கும் எருசலேம் பட்டணத்துக்குப் போகும்படி வேதமுறைமையில் கற்பித்திருந்தது. இது சொற்பக் காரியமானாலும், அநேகம்பேர் மெத்த வருத்தத்தோடு வெகுநாள் பயணஞ்செய்ய வேண்டியதினாலே, இது சிரமத்துக்குரியதென்றே சொல்லவேணும். மேலும் சூசையப்பரைப்போலொத்த புண்ணியவான்கள் அடிக்கடி தங்கள் பத்திமுயற்சியை நிறைவேற்றத் தேவாலயத்துக்குப் போகக்கூடாததினால் மனவருத்தப்படவேண்டியதாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இஸ்ராயேல் ஜனங்களைவிட அதிக பாக்கியம் பெற்றவர்களாகிய நமக்கு ஆண்டவரைக்குறித்து அநேக இடங்களில் கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆண்டவர் எருசலேம் ஆலயத்தில் ஞானவிதமாய் மாத்திரம் இருந்தார், இப்போதோவென்றால், அந்தந்த ஸ்தலங்களிலுள்ள ஆலயங்களில் நமது கண்ணுக்குக் காணப்படாதவிதமாயிருந்தாலும், மெய்யாகவே ஆண்டவர்தாமே எழுந்தருளியிருக்கிறார். நாம் அந்த ஆலயங்களுக்குப் போகச் சில அடி தூரம் நடந்

தால் போதும், அனுவகளில் தமது வரங்களால் நம்மை நிரப்ப ஆசையுள்ளவராய்த் தம்மண்டையில் நம்மை அழைக்கிறார். இந்த அழைத்தலுக்குத் தகுந்தவண்ணம் கீழ்ப்படிகிறோமா? நாளொன்றுக்கு எத்தனைவிசை அவரைச் சந்திக்கவும் ஆராதித்து மன்றாடவும் போகிறோம்? அதற்கான சமயம் எத்தனைவிசை நமக்குக் கிடைத்திருந்தாலும், அதைக்குறித்து நமக்கு நல்ல யோசனை வந்திருந்தாலும், அதில் நாம் அசட்டையாயிருக்கவில்லையோ?

மனப்பற்றுதல்.—நம்மண்டையில் வாருங்கள்; மனுமக்களோடிருக்கிறது நமக்குப் பிரியமென்று இயேசுநாதர் சொன்ன வார்த்தைகளை நன்றாய்ச் சுகித்து உணர்வாயாக (சாலோ. வாக். 8).

பிரதிக்கினை.—பொதுவாய்க் குறிப்பிட்ட நேரத்திலுமல்லாமல், தனித்து வேறு சமயங்களிலும் தேவநற்கருணை சந்திப்பேன் என்று திட்டஞ்செய்துகொள்.

2-ம் பிரிவு

தேவமாதாவும் சூசையப்பரோடுகூடப் போகிறள்

தியானம்.—அவருடைய தாய் தகப்பன் பாஸ்காத் திருநாள் கொண்டாட எருசலேம் பட்டணத்துக்கு வருஷந்தோறும் போவார்கள் (லூக். 2). பெண்பிள்ளைகள் போகக் கடமையில்லாவிட்டாலும் தேவமாதாவும் சூசையப்பரும் பாஸ்காவைக் கொண்டாட எருசலேமுக்குப் போய்வருவார்களென்று சுவிசேஷ வார்த்தையால் அறிகிறோம். தேவமாதா கடமையானதை மாத்திரம் செய்யவேண்டும் என்று எண்ணாமல், தேவ மகிமைக்கும் தன் ஆத்தும நன்மைக்கும் பிறருடைய நன்மாதிரிகைக்கும் உகந்ததையெல்லாம் செய்யத்தேடினாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவமாதாவின் நடத்தை எனது நடத்தைக்குத் தவறாத பிரமாணமாயிருக்கவேண்டும். உத்தமதனத்தின் பாதையிலே நாம் விர்த்தியடையவேணுமானால், ஞான சீவிய போதகர் சொல்வதுபோல் நமது கடமைகளையுமல்லாமல் பத்தி,

தபசு, பிறர்சிநேகம், தேவ காரியத்தில் சுறுசுறுப்பு முதலான புண்ணியங்களையுஞ் செய்யவேணும். இவ்விதம் நடந்தேனா? என் கடமையைமாத்திரம் நிறைவேற்றினால் போதுமென்றிருந்தேனோ? சர்வேசுரன் மட்டில் நான் லோபித்தனமாயிருந்ததினாலே, அவர் கொடுக்குந் திரளான வரங்களை நான் இழந்துபோனதில்லையோ? இவ்விதம் நடக்கிறவர்கள் கடமையான காரியத்திலே முதலாய் அடிக்கடி பிரமாணிக்கந் தவறிப்போவார்கள்.

மனப்பற்றுதல்.—உன்மட்டில் சர்வேசுரன் காண்பிக்கிற உதாரத்தனத்தைப் புகழ்ந்து கொண்டாடுகிறதுமல்லாமல் அதற்கொத்தவண்ணம் நீ நடவாததைக்கண்டு பொறுத்தல் கேட்பாயாக.

பிரதிக்கினை.—இன்றைபத்தினம் எந்தக் காரியத்தில் எவ்விதமாய்ச் சர்வேசுரன்மட்டில் உதாரத்தனத்தைக் காண்பிக்கலாமென்று யோசித்து அதற்கான வழி தேடுவேனாக.

3-ம் பிரிவு

பன்னிரண்டு வயதுள்ள இயேசுநாதர் தாயாரோடும் சூசையப்பரோடும் தேவாலயத்துக்குப் போகிறார்

தியானம்.—எருசலேம் பட்டணத்துத் தேவாலயத்திற்கு திருக்குடும்பம் போகையில் நாமும் அவர்களோடு ஞானவிதமாய்ப் போவோமாக. அவர்கள் எவ்வளவு தேவ சிநேகத்தோடு வழிநடந்து போகிறார்கள்! எவ்வளவு பத்தியோடு தேவாலயத்துக்குப் போகும் படிகளில் ஏறிப் போகிறார்கள். அதிலே எவ்வளவோ அடக்கத்தோடும் பத்தியோடும் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி சிலவேளை முழந்தாளிலிருந்தும் சிலவேளை பரலோகத்தை அண்ணார்ந்து பார்த்தவிதமாய் நின்றுகொண்டும் ஜெபம் பண்ணுகிறார்கள்! அவர்கள் இருதயத்தில் நாம் வணக்கத்தோடு பிரவேசித்து அவர்கள் எந்தவிதமாய் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணுகிறார்களென்றும் அவர் செய்த உபகாரத்துக்கு எப்படி நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லுகிறார்களென்றும் உலகத்தில் உண்டான பாவங்களுக்குப்

பரிகாரமாக தங்களை ஒப்புக்கொடுக்கிறார்களென்றும் இஸ்ராயேல் ஜனங்கள்பேரிலும் மற்ற மனுஷர்பேரிலும் பூரண தேவ ஆசீர்வாதம் இறங்கும்படி கேட்கிறார்களென்றும் நாம் கண்டுணரத் தீவிரிப்போமாக.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் தேவாலயத்தில் சர்வேசுரன் சமுகத்தில் இருக்கும்போதும் விசேஷமாய் திவ்விய பூசை நடக்கும்போதும், எவ்வளவு அடக்க ஒடுக்கமாயிருக்கவேணுமென்றும் நமது இருதயத்தில் எவ்வளவு தேவசிநேகப் பற்றுதலிருக்கவேணுமென்றும் இப்போது நாம் தியானித்துவருகிற நன்மாதிரிகையான பரம இரகசியத்தில் அறிந்துகொள்வோமாக.

சம்பாஷணை.—உலகத்துக்கு இவ்வளவு பத்திக்கடுத்த நன்மாதிரிகையைக் காண்பிக்கிற திருக்குடும்பத்தை மகா ஆச்சரியத்தோடே பார்த்திருந்த சம்மனசுக்களோடு சம்பாஷணை செய்து, நாம் தியானம் செய்யும்போதும் தேவநற்கருணை சந்திக்கும்போதும் பத்திக்கடுத்த முயற்சிகளைச் செய்யும்போதும் நமது ஆத்துமத்தின் கண்முன்னே அவர்களது திவ்விய மாதிரிகை விளங்கும்படி மன்றாடுவோமாக.

27-ம் தேதி

காணமற்போன இயேசுநாதரைத் தேவமாதாவும் சூசையப்பரும் தேவாலயத்தில் திரும்பக் கண்டுபிடித்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—தேவமாதாவும் சூசையப்பரும் குழந்தை இயேசுநாதரைத் தேடிக்கொண்டு போகிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—இயேசுநாதரோடு நாமும் மிகுந்த அன்னியோன்னியமாய் எப்போதும் சீவிக்க வரப்பிரசாதம் கேட்போமாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் தமது தாய் தகப்பன் அறியாமல் எருசலேம் பட்டணத்தில் தங்கியிருந்தார்

தியானம்.—இன்றைக்கு நாம் தியானிக்கவேண்டிய விசேஷ வரலாறுகளின் பரம இரகசியங்கள் பெருத்த படிப்பினை நிறைந்தவைகள். மனுஷாவதாரமான திவ்விய வார்த்தையானவர் தமது வாக்கினாலும் கிரிகையினாலும் நமக்குப் போதிக்கச் சித்தமானாரென்று பாப்பானவராகிய அர்ச். கிரகோரியார் சொல்லியிருக்கிறார். இயேசுநாதர் தமது தாய் தகப்பனுக்குத் தெரியாமல் எருசலேம் பட்டணத்தில் தங்கிவிட்டதினிமித்தம் அவர்களுக்குப் பெருத்த மனவேதனை உண்டாகுமென்று நன்றாய் அறிந்திருந்தார். ஆயினும் தேவ மகிமைக்கு அடுத்த காரியங்களில், இதையெல்லாம் சட்டைபண்ணக்கூடாதென்றும், விசேஷமாய் சந்நியாசிகள் இலௌகீக பற்றுதலை முழுதும் அகற்றி உற்றார் பெற்றார்மட்டில் உள்ள சுபாவ பட்சத்தைமுதலாய் ஞானவிதமாய் மாற்றிக்கொள்ளவேண்டும் என்றும் நமக்குப் படிப்பிக்கும்படி இவ்விதம் செய்தருளினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சுபாவ பட்சத்தை ஞானவிதமாய் மாற்றுவது எப்படி? சுபாவ பட்சத்தை அழித்துப்போடுவதினாலல்ல; சர்வேசுரனைப் பற்றி அந்தப் பட்சத்தைக் கையாடி அதை உத்தமமும் பேறுபலனுள்ளதுமாகச் செய்வதினால் ஞானவிதமாய் அதை மாற்றிக்கொள்ளுகிறோம். இப்போதகத்தை நன்றாய்க் கண்டுபிடித்து எப்போதும் சரியாய் அநுசரித்தேனோ? அதை நன்றாய்க் கண்டுபிடியாததினாலே அல்லது குறைவாய் அநுசரித்ததினாலே அநேகஞ் சந்நியாசிகள் பொல்லாத மாய்கையில் அகப்பட்டுச் சந்நியாச அந்தஸ்தை இழந்துபோனார்கள்.

மனப்பற்றுதல்.—நாம் இவ்விதம் மோசம்போகாமல் காப்பாற்றினதற்காக ஆண்டவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லி இந்தப் பொல்லாப்பில் நின்று

நம்மை எப்போதும் அவர் காப்பாற்ற வரப்பிரசாதம் கேட்போமாக.

பிரதிக்கினை.—பெற்றோர் உற்றோர்பேரில் கிரமந்தப்பின பற்றுதலுண்டாகுஞ் சோதனை காலத்திலே "என்னைப் பார்க்க தன் தகப்பனையாவது தாயையாவது சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவானல்ல" என்று இயேசுநாதர் சொன்ன வசனத்தை நினைத்துக்கொள்வேனாக (மத். 10).

2-ம் பிரிவு

அவருடைய தாய் தகப்பன் மிகுந்த கஸ்தியோடே மூன்று நாள் பரியந்தம் தேடித் திரிந்தார்கள்

தியானம்.—ஏழு நாள் உற்சவம் முடிந்தபோது, சூசையப்பரும் தேவமாதாவும் நசரேத்து ஊரிலிருந்து வந்திருந்த சிநேகிதர்களோடு சேர்ந்து தங்கள் ஊருக்குத் திரும்பிப் போனார்கள். குழந்தை இயேசுநாதர் அவர்களுக்குத் தெரியாமல் எருசலேமில்தானே தங்கியிருந்தார். அவர்களோவெனில், அவர் கூட்டத்தோடே சேர்ந்து வருகிறாரென்று நினைத்து ஒருநாள் பரியந்தம் பயணஞ்செய்தார்கள். கடைசியாய் அஸ்தமித்தபோது, ஜனங்களெல்லாரும் அவரவர் குடும்பசகிதமாய் சத்திரத்தில் ஒன்றாய்ச் சேர்ந்திருந்தார்கள். அப்போது இவர்கள் தங்கள் பந்துக்கள் முதலிய அறிமுகமானவர்களிடத்தில் அவரைத் தேடிப்பார்த்துங் காணாததினாலே திரும்பவும் வந்தவழியே நெடுகத் தேடிக்கொண்டு எருசலேமுக்குப் போனார்கள் (லூக். 2). தேவமாதாவும் சூசையப்பரும் இயேசுநாதரை மிகவும் சிநேகித்ததினால், அவர்களுக்கு இவர் கண்ணுக்குக் கண்ணும் உயிருக்கு உயிருமாயிருந்தார். அவர் திருமுகத்தை அவர்கள் காணாத நேரமெல்லாம் உலகம் அவர்களுக்குத் துக்க வனம்போலிருந்தது; அவர்கள் பட்ட வியாகுலமும் கஸ்தியும் இம்மாத்திரமென்று சொல்லுந்தன்மையல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பாவத்தினால் நீ இயேசுநாதரை இழந்துபோயிருந்தால், கொஞ்ச

மாகிலும் வருத்தமும் கஸ்தியும்படாமலிருக்கிறதேன்? நீ அவரைப் பூரணமாய்ச் சிநேகியாததே இதற்குக் காரணம். சாவானபாவத்தால் இயேசுநாதரை விட்டுப் பிரிந்துபோகிறோம். அற்பப் பாவப்பற்றுதலால் அவரது சிநேகபந்தனம் குறைவுபடுகிறது. இவ்விரு வகையிலும் இயேசுநாதரை இழந்துபோகிறோம். இதுவுமன்றி, நமது உள்ளத்தில் அவரது பிரசன்ன இன்பமும் ஆறுதலும் நமக்குக் கிடையாமற்போவதினாலும் அவரை இழந்துபோகிறோம். கடைசியில் சொன்னது நமதுபேரில் குற்றமில்லாமலே நேரிடக்கூடும். சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமாயிருந்த மகாத்துமாக்கள்தானே இதினால் கஸ்திப்பட்டு அழுதிருப்பது இதற்கு அத்தாட்சியாகும். ஆகிலும் கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிறபிரகாரம் அநேகம் விசை நமது பராக்கினாலும் வழக்கமாய் நம்மை அடக்கி ஒறுக்காததினாலும் தேவ ஊழியத்தில் நம்மிடத்திலுண்டான பக்திக்குறையினாலும் இப்படிச் சம்பவிக்கிறதென்று நாம் நினைக்கவேணும் (முதல் காண்டம், 21 அதி.).

மனப்பற்றுதல்.—தேவ ஆறுதலடைய நீ பாத்திரவானல்லவென்று நினைத்துக்கொள்; ஆகிலும் முழுதும் உன்னிடத்தில் அது அற்றுப்போகாதிருக்கத் தாழ்ச்சியோடே மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—இயேசுநாதர் நம்மிடத்திலும் நாம் அவரிடத்திலும் ஜீவிக்கத்தக்கதாக அதிகம் அதிகமாய் உலகத்துக்கும் நமக்குந்தானே செத்தவர்களைப்போலிருக்கவேணும்.

3-ம் பிரிவு

அவர்கள் அவரைத் தேவாலயத்தில் திரும்பக் காண்கிறார்கள்

தியானம்.—மூன்று நாள் எங்கும் தேடித் திரிந்தபின், தேவாலயத்தில் அவர் சாஸ்திரிகள் நடுவே இருந்துகொண்டு அவர்கள் சொல்லுக்குச் செவிகொடுத்து அவர்களை வினவிக்கொண்டிருக்கிறதைக் கண்டார்கள். அப்பொழுது அவருடைய திருத்தாயார் அவரைத் தனியே அழைத்துச் சொன்னதாவது: என் மகனே, ஏன் எங்க

ளுக்கு இப்படிச் செய்தீர்? இதோ உம்முடைய தகப்பனும் நானும் மெத்தக் கஸ்தியோடே உம்மைத் தேடித் திரிந்தோமென்றாள். அதற்கு அவர் மாறுத்தரமாகச் சொன்னதாவது: என்னை ஏன் தேடித் திரிந்தீர்கள்? என் பிதாவின் காரியங்களில் நான் அலுவலாயிருக்கவேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதோ என்றார் (லூக். 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—முந்தின பிரிவில் கூறின மூன்று வகைகளில் எந்த வகையிலாவது இயேசுநாதரை இழக்க நேர்ந்தால், திரும்ப அவரைக் காணும்பரியந்தம் கொஞ்சமாகிலும் இளைப்பாற்றி அடையக்கூடாதென்று தேவமாதாவும் சூசையப்பரும் இதில் நமக்குப் படிப்பிக்கிறார்கள். இப்படி நாம் நடந்தோமோ? சகலத்துக்கும் மேலாக சர்வேசுரனுடைய ஊழியத்தை முக்கியமாய் நாம் கவனிக்கவேண்டுமென்றும், நமது பெற்றார் உற்றார் மற்றெல்லாத்தையும் நாம் பெரிதாய் எண்ணக்கூடாதென்றும் இயேசுநாதர் இவ்விடத்தில் நமக்குப் படிப்பிக்கிறார். இந்த ஒழுங்கை நாம் எப்போதும் அநுசரித்து வந்தோமோ?

சம்பாஷணை.—இன்றைய திருநாளுக்குரிய மகா பேர்போன வேதபாரகராகிய அர்ச். கிறீசோஸ்தொமுஸ் அருளப்பரோடே சம்பாஷணை செய்வாயாக.

28-ம் தேதி

இயேசுநாதர் எருசலேம் பட்டணத்திலிருந்து நசரேத்தூரில் வாசம்பண்ணப் போகிறதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—குழந்தை இயேசுநாதர் தேவமாதா சூசையப்பர் நடுவில் நடந்துபோகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—தனிவாசம் அடக்க ஒடுக்கம் இவைகளைப் பெரிதாய் எண்ணிச் சிநேகிக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் எருசலேம் பட்டணத்தைவிட்டுப் புறப்படுகிறார்

தியானம்.—பன்னிரண்டு வயதுள்ள இயேசுநாதர் தேவாலயத்தில் வேதபாரகருக்குத் தமது தெய்வீக ஞானத்தின் பிரசித்தமான அத்தாட்சியைக் காண்பித்தார். அவருடைய வாக்கைக் கேட்ட யாவரும் அவருடைய ஞானத்தையும் மாறுத்தாரங்களையும்பற்றிப் பிரமித்துக்கொண்டிருந்தார்கள் (லூக். 2). இவர் இப்படி நன்றாய்த் துவக்கின பிரசங்கத்தை நெடுகிலும் தொடர்ந்து போதித்துக்கொண்டு வரவேண்டியதாய் நமக்குத் தோன்றுகின்றது. ஆகிலும் அவர் அப்படிச் செய்யாமல் தன் வயதுள்ள பிள்ளைகளுக்கொத்தபடி தன் தாய் தகப்பன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுத் தொலையாயிருந்த நசரேத்தூரிலே (வனாந்தரத்துக்குப் போனதுபோலே) வாசம்பண்ணப்போனார். ஆத்தும இரட்சணியத்துக்காகப் பிரயாசப்படத் தமக்குண்டான ஆசையெல்லாம் தம்மிலே அடக்கிக்கொண்டு தமது பரமபிதாவின் இஷ்டப்படி குறிக்கப்பட்ட காலம் வருமட்டும் அந்த ஊரில் தங்கியிருந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதருடைய கிரிகைகள் நமக்குப் படிப்பினையாயிருக்கிறதென்று முந்தி நாம் யோசனை பண்ணினதை நினைத்துக்கொள்வோமாக. இவ்விடத்தில் நமக்கு அவர் படிப்பித்துக் கொடுக்கிறதாவது: முந்தமுந்தப் பிறருக்குப் புத்திசொல்ல வெளியிற் பிரவேசிக்கிறதற்குமுன், மவுனமும் தனிவாசமுமான இடத்தில் சஞ்சரித்துப் புண்ணியத்திலும் படிப்பிலும் விசேஷமாய் ஞானசாஸ்திரத்திலும் நம்மை அப்பியாசப்படுத்தவேணும். இதுவே சகல சந்நியாச சபையிலுள்ள நவசந்நியாசத்தின் கருத்தாகும். 2-வது, நமது சிரேஷ்டர்கள் நம்மை அங்கங்கே அனுப்புமுன்னே, நாம்தானே அந்தத் தனிவாசத்தை விட்டுப் புறப்பட வருந்தவும் ஆசைப்படவுங்கூடாது. 3-வது, அங்கங்கே சுற்றித்திரிந்து பிரயாசப்பட நம்மை அனுப்பும்போது அல்லது யாதொரு மடத்தில் அலுவலிருக்கும்போது, நமக்கு அவசரமான வெளிச்

செய்தியை மாத்திரம் அறிந்து சர்வேசுரனோடே ஏகாந்தமாய் நமது தனிவாசத்தில் யாதொரு பொல்லாப்பின்றி பாக்கியமுள்ளவர்களாயிருக்கலாமல்லாமல் மற்ற இடத்திலே நமக்கு இப்பேர்ப்பட்ட நன்மை வராதென்று நினைத்திருக்கவேணும். நமது கருத்தும் நடக்கையும் இப்போது சொல்லிவந்ததற்குச் சரியாயிருந்ததோவென்று பார்க்கவேணும்.

மனப்பற்றுதல்.—ஆ! என் சர்வேசுரா சுவாமி, உமது திருக்குமாரன் படிப்பித்தபிரகாரம் நான் எப்போதும் நடவாமற்போனதென்ன? அதினாலே எத்தனையோ குற்றங்களுக்கும் கலக்கத்துக்கும் தப்பித்துக்கொள்ளலாம்!

பிரதிக்கினை.—மடத்திலும் வெளியிலும் வீணாய்ச் சுற்றித் திரியாமலும் வீண் பேச்சுக்கு இடங்கொடாமலுமிருப்பேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் கலிலேயா நாட்டுக்குத் திரும்பிப்போகிறார்

தியானம்.—திருக்குடும்பம் தேவாலயத்திலே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்ததை நமது ஆத்துமத்துக்குப் பிரயோசனமாக முந்தாநாள் நாம் தியானித்துப் பார்த்தோமல்லவோ? இன்றைக்கு அவர்கள் எருசலேமைவிட்டுக் கலிலேயா நாட்டுக்குப் போகிறதை யோசித்துப் பார்ப்போமாக; இதிலும் நமக்கு நன்மாதிரிகையான படிப்பினை இருக்கிறது. முந்தமுந்தத் தேவமாதாவும் சூசையப்பரும் தங்கள் நடுவே குழந்தை இயேசுநாதரைக் கூட்டிக்கொண்டு போவதை உற்றுப் பார்ப்போமாக. அவர்களுடைய நடை உடை பாவனையில் எவ்வளவு யோக்கியமும் சந்நியாசிக்கேற்ற அடக்க ஒடுக்கமும் காணப்படுகின்றது. விநோதப்பிரியத்தால் நம்மைப் போல் அவர்கள் கண்களை அங்கும் இங்கும் திருப்பிப் பார்க்கிறதில்லை. அவர்கள் ஜெபம் செய்து மவுனமாயிருந்த நேரம் போக மற்ற சமயத்தில் அவர்கள் பேசுகிறதைக் காதுகொடுத்துக் கேட்போமாக. பரலோக இராச்சியத்

தின் பரம இரகசியங்கள்பேரிலும் தேவ மகிமைக்காக பூலோகத்திலே இயேசுநாதர் செய்யப்போகிற பலத்த காரியத்தின்பேரிலும் அவர்கள் பேசிக்கொண்டிருப்பார்கள். என் பிதாவின் காரியங்களில் நான் அலுவலாயிருக்கவேண்டும் என்பதை அறியீர்களோவென்று குழந்தை இயேசுநாதர் தமது தாயாருக்குச் சொன்ன மறுமொழியைப் பார்க்கையில் இப்போது நாம் சொன்னதெல்லாம் உரூபிகரித்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. மேலும் அவர்கள் இருதயத்தில் நாம் பிரவேசித்துப் பார்ப்போமாகில், பத்திக்குரிய தியானத்திலும் மனப்பற்றுதலிலும் அவர்கள் இருதயம் முழுதும் ஊன்றியிருப்பதைக் காணலாம். அவருடைய தாயோவென்றால், இந்த வாக்கியங்களையெல்லாம் தன் இருதயத்தில் வைத்துக் காப்பாற்றிக்கொண்டுவந்தாளென்று பரிசுத்த கன்னியாஸ்திரியைக் குறித்துச் சுவிசேஷத்தில் சொல்லியிருப்பதே இதற்கு அத்தாட்சியாகும் (லூக். 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் தியானத்தில் யாதொரு பலன் அடையவேணுமானால், நாம் தனித்தாகிலும் யாதொருவரோடே சேர்ந்தாகிலும் மடத்துக்கு வெளியே இருக்கும்போதும் உலாத்தப் போகும்போதும் பயணஞ்செய்யும்போதும் நமது நடக்கை திருக்குடும்பத்தின் நடக்கைக்கு ஒத்திருக்கிறதா இல்லையாவென்று பார்க்கவேணும். இப்படிச் சோதித்துப் பார்க்கிறதினால் நாம் எதில் தவறிப்போனோமென்றும் எதில் நம்மைத் திருத்திக்கொள்ளவேணுமென்றும் அறிந்துகொள்ளலாம்.

மனப்பற்றுதல்.—சகலருடைய பார்வைக்கும் உன் அடக்க ஒடுக்கமானது துலக்கமாய் விளங்கவேணுமென்று அர்ச். சின்னப்பர் பிலிப்பியருக்குக் கொடுத்த கற்பனையை எவ்விடத்திலும் நிறைவேற்ற மிகவும் ஆசைப்படவேணும் (பிலி. 4).

பிரதிக்கினை.—நாம் மடத்துக்குத் திரும்பிவரும்போது, தேவநற்கருணை சந்தித்து வெளியில் போக்கினை

ரோத்தின்பேரில் சுருக்கமாய் ஆத்தும சோதனை செய்ய வேணும்.

3-ம் பிரிவு

இயேசுநாதர் நசரேத்தூரில் வாசஞ்செய்கிறார்

தியானம்.—தேவகுமாரன் பிறந்தது மாட்டுக் கொட்டிலில்; அவர் முப்பது வருஷகாலம் வாசஞ்செய்வதற்குத் தெரிந்துகொண்ட ஊர் நசரேத்து; இஸ்ராயேலித்தாருடைய பூமியில் உள்ள நசரேத்தினின்று யாதொரு நன்மை வரக்கூடுமோவென்று நகைப்புக்குறியாய் விளங்கின ஊரையே தெரிந்துகொள்ளலானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் இப்படிச் செய்ய நியாயமேதென்றால், ஜனம் நிறைந்த பெரிய பட்டணங்களில் வாசம்பண்ண ஆசிக்கும் வீண் கிலாக்கியத்தை நாம் அகற்றிவிடும்படி இச்சிற்றூரைத் தெரிந்துகொண்டாரல்லாமல் வேறல்ல. பெரிய பட்டணத்திலிருந்தால் வெகு நன்மை செய்யலாமென்று வெளிக்குச் சொன்னாலும், அதிலே யாவராலும் மதிக்கப்பட்டுப் பெருங் கீர்த்தியும் அடையலாமென்பதுதான் உட்கருத்தாயிருக்கும். உன் உள்ளத்தில் பிரவேசித்துப் பார்ப்பாயாகில், இப்போது சொன்னது மெய்யென்று உனக்குத் தோன்றாதோ? இது மெய்யானால், நீ எவ்வளவோ வெட்கப்படுகிறதற்கு இடம் உண்டாகும்! அளவில்லாத ஞானச்சுரூபியாகிய இயேசுநாதர் பிரபலியமும் புகழும் தோத்திரமும் வேண்டாமென்று தள்ளிப்போடுகையில், நீ அவைகளைத் தேடுகிறது சரியோ? நீ செய்யும் நற்கிரிகைகளின் பலனை இதினால் வெகுவாய் இழந்துபோகிறதுமன்றி அவருக்கு அவமானமும் உனக்கு எண்ணிக்கையில்லாத பொல்லாப்பும் நீயே தேடிக்கொள்ளுகிறாயல்லவோ?

சம்பாஷணை.—திருக்குடும்பத்தின் காவலான சம்மனசுக்களோடு சம்பாஷணை செய்வாயாக.

29-ம் தேதி

இயேசுநாதருடைய அந்தரங்க சீவிய பரம இரகசியத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—திருக்குடும்பம் குடியிருந்த நசரேத்தூரில் எளிமையான ஒரு வீட்டைக் காண்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—இயேசுநாதருடைய அந்தரங்கமான சீவியத்தின் பரம இரகசியத்தை நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதருடைய அந்தரங்க சீவியத்தின் இரகசியம்

தியானம்.—இயேசுநாதர் இவ்வுலகத்திற்கு வந்த காரணம் என்ன? தமது திரு மரணத்தினாலே மனுக்குலத்துக்கு ஞான உயிரைக் கொடுக்கமாத்திரமல்ல, தமது திவ்விய போதகத்தினாலே சத்திய நெறியை மனுஷர் அறிந்து மெய்யான சர்வேசுரனை ஆராதித்துச் சிநேகிக்கவும் அவர் எழுந்தருளி வந்தாரென்று சொல்லவேணும். உலகமுழுவதையும் மனந்திருப்பவேண்டிய மகா பெரிய அலுவலைச் செய்துமுடிப்பதற்காக இவர் உலகத்தில் இருந்தது 33 வருஷந்தான். ஆகையால், காலதாமதம் பண்ணாமல் தமது சீவியத்தின் ஆரம்பத்திலேயே பிரசங்கிக்கத் துவக்கவேண்டும் என்று நியாயமாய் நமக்குத் தோன்றும். ஆயினும், அவர் அவ்விதம் செய்யாமல், முப்பது வருஷகாலம் வரையில் ஒரு தச்சன் பட்டடையில் வாசம்பண்ணிக்கொண்டிருந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதைத் தியானித்துப் பார்க்கையில், அவரைப் பார்த்து "ஆண்டவரே, உலகத்துக்கு உம்மைக் காண்பித்து மனுஷர் குருட்டாட்டத்தை நீக்கியருளும். உலகமோ அழிந்துபோகின்றது; அதை இரட்சிக்கத் தேவரீர் இவ்

விடத்தில் ஒன்றுஞ் செய்யக் காணோமே; விலைமதியாத இக்காலத்தை வீணிலே போக்கடிக்கிறீரே" என்று அவரது சிஷர்களைப்போல் நாமும் சொல்லக்கூடும். இதற்கு ஆண்டவர் சொல்லுகிற பதிலைக் கேள்: "நீங்கள் புத்தியில்லாதவர்களைப்போல் பேசுகிறீர்கள்; நான் இவ்விடத்தில் ஒன்றுஞ் செய்யவில்லை என்கிறீர்கள்; நானோ என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறேன்; இது ஒன்றே பெரிதும் தோத்திரத்துக்குரியதுமென்று நீங்கள் அறியவேணும். நான் வீண் காலம் போக்குகிறேனென்று சொல்லுகிறீர்கள்; அப்படியல்ல, ஒவ்வொருவனும் விசேஷமாய் உத்தம சாங்கோபாங்கத்தை அடைய விரும்புகிறவன் தன் ஆங்காரத்தை அடக்கிக் கீழ்ப்படிதலினிமித்தம் நிந்திக்கப்பட்டு, முறைப்படாமலும் முறுமுறுக்காமலும் அந்தரங்க சீவியம் சீவிப்பது அவசியம் என்று படிப்பிக்கிறேன்" என்கிறார். இதை அறிந்தும், என் சாமர்த்தியத்துக்கும் படிப்புக்கும் தகுந்த பெரிய அலுவலை எனக்குக் கொடுக்கவில்லையென்று யாராவது சொல்லக்கூடுமா?

மனப்பற்றுதல்.—நான் இவ்விதம் புத்திக்குறைவாய்ப் பேசினதைப்பற்றி இயேசுநாதரிடத்தில் பொறுத்தல் கேட்டு, அவரது அந்தரங்க சீவியத்தை ஆராதிப்பேனாக. என்னைத்தானே நிந்தித்து மறந்துவிடவும், தேவ ஊழியத்தைச் சாராத எதையும் தேடாமலிருக்கவும் வரப்பிரசாதம் கேட்பேனாக.

பிரதிக்கினை.—வயோதிபத்தினாலும் வியாதியினாலும் வெளியில் புறப்படக்கூடாமல் ஒருவிதத்தில் இவ்வுலகத்திலே இல்லாதவனைப்போலிருக்குங் காலம் வரும்போது, இயேசுநாதர் நசரேத்தூரிலே தரித்திரமான ஒரு வீட்டுக்குள்ளே இருந்ததை நினைத்துக்கொள்வேனாக. உலகத்துக்குப் புறத்திப்பட்டவனைப்போலிருந்தாலும், ஜெபத்தினாலும் கஸ்தி துன்பத்தில் காண்பிக்கும் பொறுமையினாலும் தேவ சித்தத்துக்கு அமைந்து பிறர் ஆத்தும நன்மைக்காக இயேசுநாதரோடு பிரயாசப்படலாமென்கிற நம்பிக்கையைக்கொண்டு ஆறுதல் அடைவேனாக.

2-ம் பிரிவு

இந்தப் பரம இரகசியத்தின் அர்த்தம்

தியானம்.—இயேசுநாதருடைய அந்தரங்க ஜீவியத்தின் ஆழ்ந்த பரம இரகசியத்தையும் அதில் அவருக்குள்ள கருத்தையும் அதற்காக நாம் அவருக்கு நன்றியறிந்தவர்களாயிருக்கவேண்டியதையும் நன்றாய்க் கண்டுபிடிக்கவேண்டும். ஆங்காரத்தினால் விளைந்த உலக அக்கிரமங்களைக் குணப்படுத்துவதற்காகவே இரட்சகர் உலகில் பிறந்தாரென்றும், அத்தகைய அக்கிரமங்கள் மீண்டும் விளைவதற்கு நமது ஆங்காரம் காரணமாயிருக்கிறதென்றும் யோசிப்பது இதைக் கண்டுபிடிக்க உதவியாயிருக்கும். ஆங்காரத்தை அறவே அகற்றுவதற்குத் தகுந்த அவிழ்தம் தாழ்ச்சி என்று அவர் தமது மாதிரிகையால் காண்பித்திருக்கிறார். அவரது போதகத்தில் பிரதானமானதும் இதுதான். நாம் சாந்தகுணமும் மனத்தாழ்ச்சியுமுள்ளவராயிருக்கிறதை நம்மிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், மனத்தரித்திரர் பாக்கியவான்கள், தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைக் கடைசியாக நினைத்துக்கொள்ளுகிறவன் சர்வேசுரனுடைய இராச்சியத்திலே முதல்வனாயிருப்பானென்று எல்லாத்துக்குமுந்தித் தாழ்ச்சியைத்தானே படிப்பிக்கிறார்; இது எல்லாருக்கும் அத்தியாவசியமென்று வெளிப்படுத்துகிறார். அவர் போதித்ததை நடத்தையில் அநுசரித்துக்காட்டாவிடில், நமது உள்ளத்தில் ஊன்றியிருக்கிற ஆங்காரத்துக்குத் தகுந்த அவிழ்தம் ஏற்பட்டிருக்கமாட்டாது. ஏனெனில், சொல்வது எளிது, செய்வது கடினம்; போதனையைவிட சாதனையே மேல்; ஆகையால், இரட்சகர் தம்மைத் தாழ்த்திக்கொள்ளாமல், மேலான அந்தஸ்தில் இருந்துகொண்டு நமக்குத் தாழ்ச்சியைப் போதித்திருந்தால், அவரது போதகம் பயனற்றதாயிருந்திருக்கும். ஆங்காரமும் அதினால் விளையும் அக்கிரமங்களும் உலகத்தை எப்போதும்போல கெடுத்துக்கொண்டேவரும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அவனவன் தன்னைச் சற்றாகிலும் அறிந்திருப்பானாகில், இப்

போது நாம் சொன்னது உண்மையென்று உணர்வான். அவனவன் தன் உள்ளத்தை ஆராய்ந்து பார்த்தால், தனக்குள்ளே என்ன சொல்லவேண்டியதாயிருக்கும்? இயேசுநாதர் மனுஷர் முன்பாகத் தம்மை இப்படித் தாழ்த்தி நிர்மூலமாக்கிக்கொண்டு வந்ததை இப்போது என் கண்முன்பாகக் காண்கிறாப்போலிருக்கும்போதே, என் ஆங்காரத்தைத் தணிக்கிறதும் புறத்தியார் என்னைச் சட்டைபண்ணாமல் மற்றவர்களை உயர்த்தி எனக்கு ஈன அலுவல் கொடுக்கும்போது நான் முறைப்படாமலிருக்கிறதும் மகா வருத்தமாயிருக்கிறதே; இவர் இந்தத் திவ்விய மாதிரிகையை எனக்குக் கொடாமற்போனால், நான் என் ஆங்காரத்தைத் தணிக்கிறதும் தாழ்ச்சியை விரும்பி அநுசரிக்கிறதும் எப்படியாகும்?

சம்பாஷணை.—நசரேத்தூரிலே அந்தரங்க சீவியஞ் சீவித்து மனுஷருக்கு அறியப்படாதவர்போல் திரிந்த இயேசுநாதரோடே சம்பாஷணை செய்து அவரை ஆராதித்து வணங்குவோமாக. அந்தரங்கமான அச்சீவியத்திலே நமக்கு அவர் கொடுத்தருளின பலத்த படிப்பினையையும் வலுமையான திடாரிக்கத்தையும் நாம் கண்டுபிடிக்கச் செய்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லுகிறதுந்தவிர நாம் அதில் சரியாய் அநுகூலப்படாததினால் பொறுத்தல் கேட்டு உதாரமுள்ள பிரதிக்கினை செய்து இனி சரியாய் நடக்க வரப்பிரசாதம் கேட்போமாக.

30-ம் தேதி

நல்ல கருத்தின் தன்மையும் முகாந்தரங்களும் அநுசரணையும்

ஆயத்தச் சிந்தனை.—நீங்கள் செய்கிறதெல்லாம் தேவ தோத்திரத்துக்காகச் செய்யுங்களென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக் கொள் (1 கொரி. 10).

தியானச் சேபம்.—மகா பரிசுத்த கருத்தோடே எப்போதும் நடக்க அப்பியாசமுண்டாகும்படி சர்வேசுரன் உதவிசெய்யக் கேட்பாயாக.

முதல் பிரிவு

நற்கருத்தின் தன்மை

தியானம்.—நமது சீவியத்துக்கும் இயேசுநாதர் நசரேத்தூரில் சீவித்த சீவியத்துக்கும் வெகு தொந்தார்த்தம் உண்டு. நமது சீவியத்தில் வெகுகாலம் மடத்துக்குள்ளே செலவழிக்கவேண்டியதாயிருக்கின்றது. நாம் அதில் உலகத்துக்கு மறைவான சீவியஞ் சீவித்து வருகிறோம். அதை நாம் எப்படி பரிசுத்தமாக்கலாமென்று கேட்பாயோ? விசேஷமாய் நமது சொற்பக் கிரியைகளை முதலாய்ச் சர்வேசுரன் சமுகத்தில் மேன்மையாக்குகிற நல்ல கருத்தைக் கொண்டு பரிசுத்தமாக்கலாம். ஆகையால் இந்த நல்ல கருத்தின் தன்மை, முகாந்தரம், அநுசரிப்பு இவைகளை நன்றாய்க் கண்டுபிடிக்கப் பிரயாசப்படுவோமாக.

கருத்தானது மனதின் ஒரு கிரியையாகும்; இதைக் கொண்டு மனுஷன் ஒரு கதியை நோக்கி ஒரு காரியத்தை நடத்துவான். அந்தக் கதி நல்லதாகில், அந்தக் கருத்தும் நல்லதாயிருக்கும்; ஆயினும் அந்தக் கருத்து சர்வேசுரன் சமுகத்திலே பேறுள்ளதாயிருக்கவேணுமானால், அதின் கதி சுபாவத்துக்கு மேற்பட்டதாயிருக்கவேண்டியதுந் தவிர அந்தக் கதியை நாடி நடக்கிறவன் தேவ இஷ்டப்பிரசாதத்தோடிருக்கவேணும். சர்வேசுரனை நேராய் அல்லது சிருஷ்டிகளின் வழியாய் நோக்கிச் சுபாவத்துக்கு மேற்பட்ட அநேகம் கதிகளையும் ஒருமிக்க அவனவன் குறித்துக் கொள்ளலாம். இவ்விதமாய் ஒரே கிரிகையைக்கொண்டு பேறுள்ள பற்பல ஞானப் பொக்கிஷங்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மனுஷன் புத்தியுள்ளவனானதினாலே, குறிக்கப்பட்ட யாதொரு கதியைப்பற்றி ஒரு காரியத்தை நடத்தவேணும்; ஆனால்

தங்கள் கருத்து இன்னதென்று கவனியாமல் சுபாவ நினைவோடு அப்பியாசமாய் அந்தந்தக் காரியத்தைச் செய்கிறவர்கள் அநேகர் உண்டு. இதினால் வரும் ஞானச்சேதத்தை ஒருபோதும் பரிகரிக்கமுடியாது. தங்கள் நித்திய ஜீவிய நன்மையைச் சட்டைபண்ணாத சந்நியாசிகளில் நீயும் ஒருவனோ இல்லையோவென்று ஆராய்ந்துபார்.

மனப்பற்றுதல்.—ஆ! இயேசுவே, தேவரீர் முப்பது வருஷகாலம் அந்தரங்கமான ஜீவியத்திலிருந்தபோது, பரம பிதாவின் சமுகத்திலே தேவரீர் பெரியவராயிருந்தது போல் நானும் என் சுத்த கருத்தினாலேயும் மேலான கருத்தினாலேயும் அவர் சமுகத்திலே பெரியவனாயிருக்கப் படிப்பித்தருளும், சுவாமி.

பிரதிக்கினை.—நல்ல கருத்தோடே எப்போதும் ஒவ்வொரு காரியத்தையும் செய்யும்படி தன்மட்டில் வெகு கவனமாயிருக்கவேணும்.

2-ம் பிரிவு

நல்ல கருத்தின் முகாந்தரம்

தியானம்.—நல்ல கருத்து நமது கிரிகைகளுக்கெல்லாம் துணையாயிருக்க எப்போதும் அந்தக் கருத்தோடே அந்தந்தக் காரியத்தைச் செய்யவும் நமது உள்ளிந்திரியத்தின்மட்டில் கவனமாயிருக்கவும் அநேக முகாந்தரங்கள் நம்மைத் தூண்டிக்கொண்டு வருகின்றன. முதலாவது, நல்ல கருத்து எல்லாத்திலும் முக்கியமானதாம். ஏனென்றால், சர்வேசுரன் சமுகத்திலே நமது கிரிகைகளின் பலனானது பெரும்பாலும் நமது கருத்தில் அடங்கியிருக்கிறது. மேலும் இவ்வுலக ஜீவியமாகிற சொற்ப காலத்தில் ஒன்றின் பின் ஒன்றாய்த் தொடர்ந்து வருகிற கிரிகைகள் காலத்தைக் குறிக்கிறதினாலும் இந்தக் காலமானது நித்தியத்தில் நமக்கு வரப்போகிற நன்மை தின்மைக்குக் காரணமானதினாலும், நல்ல கருத்தோடு இதை நிறைவேற்றுகிறது மிகவும் முக்கியமான காரியமாம். இரண்டாவது, நல்ல கருத்து எல்லாத்திலும் நீதிக்குரியதாம். ஏனென்றால், நாம்

முழுதும் சர்வேசுரனுக்குச் சொந்தம். ஆகையால் தன்னிலே வித்தியாசமில்லாத ஒவ்வொரு கிரிகையையும் தேவ தோத்திரத்துக்காகச் சுத்த கருத்தோடு செய்யவேண்டும். நீ புசித்தாலும் பானம்பண்ணினாலும் எந்தெந்தக் கிரிகைகளைச் செய்தாலும், தேவதோத்திரத்துக்காக எல்லாத்தையும் செய்யென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறார் (1 கொரி. 10). மூன்றாவது, நாம் எந்த அந்தஸ்திலிருந்தாலும், நல்ல கருத்துடன் செய்வது எல்லாத்திலும் எளிதாம். இதைப் பின்வரும் மூன்றாம் பிரிவிலே காண்பிப்போம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது சொன்ன முகாந்தரங்களை நன்றாய் யோசித்து அவைகளில் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஆராய்ந்து பார்ப்பாயாகில், நல்ல கருத்துடன் எல்லாம் உத்தமவிதமாய்ச் செய்ய உன்னிடத்தில் திடமான மனது உண்டாகும். மேலும் சந்நியாசியானவன் தேவ இஷ்டப்பிரசாதத்தோடிருக்கிறது மகா எளிதானதுபற்றி, நீ இத்தோடு அதை நிறைவேற்றுகிறது வருத்தமாயிராது.

மனப்பற்றுதல்.—மகா எளிதாய்த் தேவ சிநேகத்தில் ஜீவித்து, தேவ சமுகத்தையும் சிநேகத்தையும் எப்போதும் நினைப்பூட்டிக்கொள்ளக்கூடிய அந்தஸ்திற்கு சர்வேசுரன் நம்மை அழைத்ததற்காக மனமகிழ்ந்து நன்றியறிந்திருப்போமாக.

பிரதிக்கினை.—நல்ல கருத்தின் அநுசரணையைக் குறித்து வேளைக்குவேளை தனி ஆத்தும சோதனை செய்வோமாக.

3-ம் பிரிவு

நல்ல கருத்தை அநுசரிக்கிறதின்பேரில்

தியானம்.—இதில் அப்பியாசப்படுகிறதற்கு இரண்டு காரியம் வேண்டியது. முதலாவது, அநேகங் கருத்துகளடங்கிய யாதொரு மந்திரத்தைத் தெரிந்துகொண்டு அதைக் காலமேதோறும் மகா கவனமாய்ச் சொல்லவேணும். இரண்டாவது, வீண் கிலாக்கியத்தினாலும் தன் சுயபட்சத்

தினாலும் அந்தக் கருத்து கெடாமலும் அழிந்துபோகாமலு மிருக்கத்தக்கதாக ஒரு நாளையில் அடிக்கடி வாக்கினால் அல்லது மனதுக்குள்ளே அதைப் புதுப்பிக்கவேணும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் பேரில் நீ யோசனைபண்ணி பின்வரும் காரியங்களின்பேரில் உன்னைப் பரிசோதித்துப்பார். நீ நவசந்நியாசியாயிருந்த போது, உனக்குப் படிப்பித்துக்கொடுத்த அநேகம் நற் கருத்துகளடங்கிய ஒரு மந்திரத்தைக் காலமேதோறும் சரியாய்ச் சொல்லிக்கொண்டு வருகிறாயோ? ஒவ்வொரு நாளில் அநேகம்விசை அதைப் புதுப்பித்துக்கொண்டு வருகிறாயோ? எத்தனைவிசை அதைப் புதுப்பித்துக்கொண்டு வருகிறாய்? அந்தந்தச் சமயத்திலே அந்த நினைவு உனக்கு வரத்தக்கதாக நீ என்ன உபாயம் தேடுகிறாயென்று பார்.

சம்பாஷணை.—அர்ச். ஞானப்பிரகாசியாரோடே சம் பாஷணை செய். இவர் எந்தக் கிரிகைகளையும், சொற்பக் காரியங்களை முதலாய்ப் பரிசுத்த கருத்தோடு சர்வேசுர னோடே அந்நியோந்நியமாய் ஒன்றித்துச் செய்துவந்ததி னாலே, கொஞ்ச வருஷத்துக்குள்ளாக எண்ணிக்கையில்லாத ஞானத் திரவியங்களைச் சேகரித்துக்கொண்டார். நாமும் அவரைக் கண்டுபாவிக்கிறதற்கு வேண்டிய வரப்பிரசா தத்தை நமக்கு அவர் அடைந்துகொடுக்கும்படி மன்றாடு வோமாக.

31-ம் தேதி

இயேசுநாதர் தமது அந்தரங்க சீவியத்திலே நமக்குக் கீழ்ப்படிதலின் மாதிரிகையாயிருக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—குழந்தை இயேசுநாதர் தேவமாதா வுக்கும் சூசையப்பருக்கும் பழுதற்றபிரகாரம் கீழ்ப்படிந்து வந்ததைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—விசுவாசமுள்ள கீழ்ப்படிதலை அறிந்து அன்போடு அதை அநுசரிக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் காண்பித்த கீழ்ப்படிதலின் குணங்கள்

தியானம்.—அவர்களுக்கு அவர் கீழ்ப்படிந்து வந் தார் (லூக். 2). உலக இரட்சகர் முப்பது பிராயம் வரை செய்துவந்த விசேஷமெல்லாம் இந்த மூன்று வார்த்தை களில் திவ்விய இஸ்பிரீத்துவானவர் சுருக்கமாய்ச் சொல்லிக் காண்பித்திருக்கிறார். சகலமும் கீழ்ப்படிதலிலே அடங்கிப் போயிற்றென்று தெரிந்துகொள்கிறோம். இயேசுநாதர் தமது அந்தரங்கமான சீவியத்தின் பரம இரகசியத்தினால் முக்கியமாய் மனுஷர்களுக்குப் படிப்பிக்கச் சித்தமான தாழ்ச்சிக்கு கீழ்ப்படிதலானது உறுதியுள்ள அத்தாட்சி யாம். தாழ்ச்சியில்லாமல் சர்வேசுரனுக்குப் பிரியப்பட முடியாது; கீழ்ப்படிதல் இல்லாமல் தாழ்ச்சியுள்ளவனு யிருக்கமுடியாது; ஆகையால் நமது கீழ்ப்படிதல் எத்தன்மைய யதாயிருக்கவேண்டுமென்று நமக்கு இயேசுநாதர் தமது மாதிரிகையால் காட்டியருளினார். இந்தத் திவ்விய மாதிரி கையைக் கவனமாய் யோசித்துப்பார்ப்போமாக. அவர் களுக்கு அவர் கீழ்ப்படிந்து வந்தார். அப்படிக் கீழ்ப்படிந் தவர் யார்? மனுஷனாகப் பிறந்த பரலோக பூலோக சர்வே சுரனல்லவோ? இவர் யாருக்குக் கீழ்ப்படிந்தார்? மரியம்மா ளுக்கும் சூசையப்பருக்கும் கீழ்ப்படிந்தார். இவ்விருவரும் மெய்யாகவே அர்ச்சியசிஷ்டதனத்தில் உயர்ந்தவர்களாயிருந் தாலும், அவரால் உண்டாக்கப்பட்ட வஸ்துக்களல்லாமல் மற்றப்படியல்ல. அவர் எதுகாரியத்தில் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து வந்தார்? ஒன்றிலும் தவறாமல் எல்லாக் காரி யத்திலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்துவந்தார். எப்படிக் கீழ்ப்படிந்தார்? சுறுசுறுப்போடும் நிலைமையோடும் பழு தற்ற சிநேகத்தோடும் பிரியத்தோடும் முற்றிலும் கீழ்ப் படிந்து வந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நான் செய்ததுபோல நீங்களும் செய்ய நான் உங்களுக்கு மாதிரிகை காண்பித்தேனென்று இயேசுநாதர் உனக்குச் சொல்லுகிறதாக உரூபிகரித்துக்கொள் (அரு. 13).

உன்னைத்தானே நீ பரிசோதித்துப் பார்த்து உன் கீழ்ப்படிதல் உன் திவ்விய குரு காண்பித்த கீழ்ப்படிதலுக்கு எப்போதும் சரியொத்திருக்கிறதாவென்றும் அந்தக் குணங்கள் தானோ உன் கீழ்ப்படிதலில் உண்டோவென்றும், இயேசுநாதர் காண்பித்த கீழ்ப்படிதல் தேவமாதாவையும் சூசையப்பரையும் சந்தோஷிப்பித்து அவர்களைப் பாக்கியவான்களாக்கினதுபோல, உன் கீழ்ப்படிதல் உன் சிரேஷ்டர்களைச் சந்தோஷப்படுத்தி அவர்களைப் பாக்கியவான்களாக்குகிறதோவென்று பார்.

மனப்பற்றுதல்.—இதைக் கண்டு ஆச்சரியப்பட்டு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறதுமல்லாமல், நமது கண்முன்பாக இருக்கிற இந்த நன்மாதிரிகைக்கு ஒத்தபிரகாரம் நடக்கமென்மேலும் ஆசைப்படவேணும்.

பிரதிக்கினை.—நான் கீழ்ப்படியும் விதத்தில் குற்றமானதைத் தள்ளிப்போட மிகுந்த மனவல்லமையோடு பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் கீழ்ப்படிந்ததின் காரணம்

தியானம்.—மனுஷன் செய்யும் வெளிக் கிரிகைகளெல்லாம் உள்ளத்திலிருந்து குறிக்கப்பட்ட முகாந்தரத்தினால் உண்டாகும். அப்படியிருக்க, குழந்தை இயேசுநாதர் காண்பித்த மேலானதுங் குறையற்றதுமான கீழ்ப்படிதலுக்குக் காரணம் என்ன? பயமோ? அல்லவே. சம்பாவனை கிடைக்குமென்கிற நம்பிக்கையோ? அதுவுமல்லவே. பூலோகத்தை நடப்பித்துக்கொண்டுவருகிற ஆண்டவர் மனுஷருக்குப் பயப்படத்தக்கதொன்றுமில்லை, அவர்களால் அவருக்கு வரத்தக்கதுமொன்றுமில்லை. தமது பிதாவினுடைய சித்தம் தேவமாதாவின் வழியாகவும் சூசையப்பர் வழியாகவும் தமக்கு வெளிப்படுத்தப்பட்டது என்கிற ஒரே காரணத்தினிமித்தந்தான் அவர்களுக்குக் கீழ்ப்படிந்துவந்தார். இது நிமித்தமாகவே, அவர் எப்போதும் தமது பிதாவைப் பார்த்து: பிதாவே, உமது இஷ்டம் போல் ஆகட்டுமென்று சொல்லிக்கொண்டு வருவார் (மத். 11). தேவரீர் மரியாயை எனக்குத் தாயாராகவும் சூசையப்பரை எனக்குக் கைத்தாதையாகவும் கொடுக்கத் திருவுளமானீர்; ஆகையால் உமக்குக் கீழ்ப்படிகிறதுபோல், எந்தக்காரியத்திலும் உம்மைப்பற்றி அவர்களுக்குக் கீழ்ப்படிய மனதாயிருக்கிறேன் என்பார். சரியாய்ச் சொல்ல வேண்டுமாகில், அவர் மரியாயிக்கும் சூசையப்பருக்குமல்ல, அவர்களிடமாய்த் தமது பரமபிதாவுக்கே கீழ்ப்படிந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சுபாவத்துக்கு மேற்பட்டதும் விசுவாசம் பொருந்தினதுமான கீழ்ப்படிதலின் மெய்யான கருத்து இதுதான். காணப்படாதவராயிருக்கிற சர்வேசுரன் காணக்கூடிய அதிகாரத்தைக்கொண்டு நம்மை நடப்பித்துவரச் சித்தமாயிருக்கிறார். உங்கள் வார்த்தையைக் கேட்கிறவன் என் வார்த்தையைக் கேட்கிறான்; உங்களை நிந்திக்கிறவன் என்னை நிந்திக்கிறானென்று லூக்காஸ் 10-ம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறபடி தமது அதிகாரத்தைக்கொண்டிருக்கிற மனுஷர்களாலே மற்ற மனுஷர்களை அவர் நடப்பித்துக்கொண்டு வருகிறார். இது முகாந்தரத்தைப்பற்றிக் கீழ்ப்படிகிறது பெரிதும் மேன்மையும் பேறுபலனுமுள்ளதாகிறது. சிரேஷ்டர்களிடமாய் நாம் சர்வேசுரனுக்குத்தானே கீழ்ப்படிகிறோமல்லாமல் மற்றப்படியல்ல. நாம் எப்போதும் இந்தப் பிரகாரமாய்க் கீழ்ப்படிந்து வருகிறோமென்று நமக்கே நாம் சாட்சி சொல்லக்கூடுமோ? சிலவிசை அல்லது அடிக்கடி இலௌகீக முகாந்தரத்தைப்பற்றியும் சுபாவத்துக்கடுத்த நியாயத்தைப்பற்றியும் கீழ்ப்படிந்து, சர்வேசுரன் சமுகத்தில் பேறுபலனும் மகிமையுமில்லாமற் போகவில்லையோ?

மனப்பற்றுதல்.—மெய்யான கீழ்ப்படிதலின் கருத்தை நமக்குச் சர்வேசுரன் காண்பித்ததினால், அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக. மேன்மையும் பரிசுத்தமுமான இந்தக் கீழ்ப்படிதலை நாம் பெரிதாய் எண்ணி நிலைமையாய் அநுசரிக்க வரப்பிரசாதம் கேட்போமாக.

பிரதிக்கினை.—நாம் கீழ்ப்படிகிறதற்கான முகாந்தரத்தின்பேரிலும் காரணத்தின்பேரிலும் அடிக்கடி ஆத்தும சோதனை செய்வோமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதருடைய கீழ்ப்படிதலின் பேறுபலன்

தியானம்.—குழந்தை இயேசுநாதர் தமது சிறு பிராயத்தில்தானே உத்தமமான கீழ்ப்படிதலினாலே தமது பரம பிதாவின் சமுகத்தில் தமது சொற்பக் கிரிகைகளுக்கு முதலாய் பலத்த பேறுபலன்களை அடைந்தார். உள்ளிந்திரிய வெளி இந்திரிய கிரிகைகள் இடைவிடாமல் ஒன்றுக்குப்பின் ஒன்று தொடர்ந்து வருகிறதே காலமென்று சொல்லப்படுகிறதினாலே, இயேசுநாதர் மனுஷசுபாவத்தில் அந்தரங்கமாய் செலவழிந்த முப்பது வருஷத்திலும் எவ்வளவோ பேறுபலனுள்ள திரவியங்களை நமக்காகச் சம்பாதித்திருப்பார்?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நித்திய சீவியத்துக்கு வெகு பேறுபலன்களைச் சம்பாதிக்கும்படிதானே நாம் சந்நியாசத்தில் பிரவேசித்தோம். கீழ்ப்படிதலென்கிற புண்ணியத்திலே பெரியவர்களாயிருக்கப் பிரயாசப்படுவோமாகில், நாம் அந்தப் பலன்களைக் கைக்கொள்ளலாம். உலகத்தார் கண்ணுக்கு நாம் அந்தரங்கமான சீவியத்தில் மற்றவர்களைப்போல் நடந்து தபசு பிறர்சிநேகம் முதலிய பிரபலியமான புண்ணியங்களை காண்பிக்கச் சமயங் கிடையாமற்போனாலும், பரலோகத்துக்கு அளவில்லாத பொக்கிஷங்களைத் தேடிக்கொள்வோமென்பதற்குச் சந்தேகமில்லை.

சம்பாஷணை.—கீழ்ப்படிதலுக்குப் பலத்த மாதிரிகையான குழந்தை இயேசுநாதரோடு சம்பாஷணை செய்.

முந்தின இரண்டு பிரிவுகளில் சொல்லியிருக்கிற மனப்பற்றுதல் பிரதிக்கினைகளிலே இதற்கான முகாந்தரங்கள் திரளாய்க் காணலாம்.

பெப்ரவரி மாதம்

முதல் தேதி

இயேசுநாதர் தமது அந்தரங்க சீவியத்தில் காண்பித்த அடக்க ஒடுக்கம் சாந்தகுணம் பத்தியின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—நான் உங்களுக்குச் செய்து காண்பித்ததுபோல நீங்களும் செய்ய உங்களுக்கு மாதிரிகை காண்பித்தேனென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக (அரு. 13).

தியானச் சேபம்.—இயேசுநாதர் காண்பித்த சாந்தகுணமும் அடக்க ஒடுக்கமும் பத்தியும் என்னிடத்தில் விசேஷமாய் விளங்கவேணுமென்கிற மிகுதியான ஆசை உண்டாகக் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதருடைய சாந்தகுணம்

தியானம்.—இயேசுநாதர் தமது அந்தரங்க சீவியத்திலே கீழ்ப்படிதலுக்கு உத்தம மாதிரிகையாயிருந்ததுந் தவிர சந்நியாசியானவன் வெளியிற்போய் புத்தி பிரசங்கஞ் சொல்லுகிறதற்குமுந்தி மடத்தின் அந்தரங்க சீவியத்திலே சம்பாதிக்கவேண்டிய மற்ற அநேகம் புண்ணியங்களுக்கும் அவர் மாதிரிகை காண்பித்திருக்கிறார். அவைகளில் இஸ்பிரீத்துசாந்துவானவர் விசேஷமாய் மூன்று புண்ணியங்களைக் குறித்துப் பேசுகிறார். அவை சாந்தமும் அடக்க ஒடுக்கமும் பத்தியுமாம். அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதின 2-ம் நிருபம் 10-ம் அதிகாரத்திலே: என்

சகோதரரே, இயேசுநாதருடைய சாந்தகுணத்தையும் அடக்க ஒடுக்கத்தையும் பார்த்து உங்களைக் கெஞ்சி மன்றாடுகிறேனென்றார். இசாயியாசென்னுந் தீர்க்கதரிசி வரவேண்டிய இரட்சகரைக் குறித்துப் பேசும்போது, பத்தியின் வரம் அவரிடத்திலே தங்கியிருக்குமென்றார் (இசா. 11). ஆகையால் இந்தப் புண்ணியங்களை நாம் சம்பாதித்து மேன்மை அடையும்படி இவைகளின் குணங்களை நன்றாய் அறியவேண்டியது மிகவும் அவசியம். வேதசாஸ்திரியான அர்ச். தோமாஸ் அக்வினா என்பவர் சொல்லியிருக்கிறதாவது: சாந்தகுணமானது மேன்மையுள்ள ஆத்துமத்துக்குரிய புண்ணியமாம். இந்தப் புண்ணியம் உள்ளவர்கள் தங்களுக்கு வருகிற நிந்தை அவமானங்களைச் சட்டைபண்ணமாட்டார்கள்; தங்களுக்கு அவமானம் வரும்போது, அமரிக்கையாயிருந்து ஆத்தும சமாதானத்தை இழந்துபோகாதிருப்பார்களென்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கிறீஸ்துவனுக்குரிய சாந்தத்தின் இந்தக் குணங்கள் உன்னிடத்தில் விளங்குகின்றனவா? இதற்கு விரோதமாய் மனக்கலக்கம், பொறுமையற்றதனம், கோபம், வீண் சந்தேகம் இவைகளினால் உன் சகோதரர்பேரில் வெறுப்பு உன்னிடத்தில் உண்டாகிறதில்லையோ? உண்டானால், உன்னைத் தாழ்த்தி இதைக்குறித்து மனஸ்தாபப்பட்டு உன்னைத் திருத்திக்கொள்.

மனப்பற்றுதல்.—ஆ! என் மதுர இயேசுவே, சாந்தகுணமுள்ளவர்களும் சமாதானமுள்ளவர்களும் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்களே பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள், அவர்களே சர்வேசுரனுடைய பிள்ளைகள் என்னப்படுவார்களென்று தேவரீர் திருவுளம்பற்றியிருக்கிறீரே; அவர்களுக்குள்ளே நானும் ஒருவனாயிருக்க எனக்கு உதவிசெய்தருளும், சுவாமி (மத். 5).

பிரதிக்கினை.—சாந்தகுணமும் தயாளமும் விளங்குகிற சகோதரரைக் கண்டுபாவிக்கப் பிரதிக்கினை செய்துகொள்வேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதருடைய அடக்க ஒடுக்கம்

தியானம்.—அர்ச். சின்னப்பர் இரண்டாம் புண்ணியமாகச் சொல்லியிருக்கிற அடக்க ஒடுக்கத்துக்கும் சாந்தகுணத்துக்கும் இருக்கிற தொந்தார்த்தம் ஏதென்றால், சாந்தகுணத்தைப்போலவே அது பிறர் இருதயங்களைப் பிரியப்படுத்தி அவைகளைத் தன் வசப்படுத்திக்கொள்ளும்; அடக்க ஒடுக்கத்துக்குரிய விசேஷமேதென்றால், நமது நடத்தையைச் சீர்ப்படுத்தி நம்மைப் பார்க்கிறவர்களுக்கு மெத்த நன்மாதிரிகை காட்டுகிறதுமன்றி மற்றப் புண்ணியங்களுக்கெல்லாம் மிகுந்த சிறப்பைக் கொடுக்கும். இயேசுநாதரிடத்தில் ஜீவியகாலமெல்லாம் விளங்கின அடக்க ஒடுக்கமானது தெய்வீகமுள்ளதாயிருந்தது. அவருடைய பார்வை, வார்த்தை, நடக்கையிலும், பிறரோடு புழங்குவதிலும் கபடற்ற குணத்திலேயும் ஒருகண்ட சீராயிருந்து தமது வெளியரங்க சீவியத்திலே மனுஷர் இருதயங்களைப் பூரிப்பித்துக்கொண்டு வந்தார். ஒருபோதும் அவர் கஸ்தியைக் காண்பித்தவரல்ல; அப்படியே அவர் ஒருவருக்கும் வருத்தம் உண்டாகச் செய்தவரல்லவென்று இசாயியாஸ் தீர்க்கதரிசி வசனித்திருக்கிறார் (இசா. 42).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அடக்க ஒடுக்கத்தின் உயிருள்ள இவ்வித சாயல் உன்னிடத்தில் கொஞ்சமாகிலும் உண்டாவென்று பார். உன் வார்த்தைகளில் தாழ்ச்சி, தன்னை மறுத்தல், ஒடுக்கம், விவேகம், பிறருக்கு நன்மாதிரிகை, சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரந் தேடுகிற மனது முதலிய இப்பேர்க்கொத்த குணங்கள் உன்னிடத்தில் விளங்குகின்றனவா? அல்லது சிலாக்கியம், பிறர் மெச்சிக்கொள்ளவேணுமென்கிற ஆசை, ஆங்காரமுள்ள துணிவு, அற்பக்குணம் இவைகள் உன்னிடத்தில் விளங்குகின்றனவா? உன் பார்வையிலேயும் உன் நடக்கையிலேயும் மடத்திலாவது வெளியிலாவது இருக்கும் விதத்திலும் செய்யுங் காரியத்திலும் நீ அடக்க ஒடுக்கமுள்ளவனென்றும், செத்தவனைப்போல் இருக்கிறவ-

னென்றும் சொல்லக்கூடுமோ? அல்லது உலகத்தாரைப் போல சிலர்க்கியமுள்ளவனென்றும் எதிலும் தன்னைத் தேடுகிறவனென்றும் உன்னைக்குறித்து சொல்லவேண்டுமோ? ஆராய்ந்துபார்.

மனப்பற்றுதல்.—உன் அடக்க ஒடுக்கமானது சகலருக்கு முன்பாக விளங்கவேணுமென்று அர்ச். சின்னப்பர் கொடுத்த கற்பனை உன்னிடத்தில் நிறைவேற மிகுந்த ஆசைப்படுவாயாக (பிலி. 4).

பிரதிக்கினை.—அடக்க ஒடுக்கத்துக்கு அடுத்த ஒழுங்குகளின்பேரில் அடிக்கடி தனி ஆத்தும சோதனை செய்வாயாக.

3-ம் பிரிவு

இயேசுநாதருடைய பக்தி

தியானம்.—தகப்பன்மட்டில் பிள்ளைக்குச் சுபாவமாயுள்ள இருதய உருக்கமும் பற்றுதலும் பிள்ளைக்குரிய நேசம் என்னப்படும்; இது இயேசுநாதருடைய அந்தரங்க சீவியத்தில் இஸ்பிரீத்துசாந்துவினாலே விசேஷமாய்க் குறிக்கப்பட்ட மூன்றும் புண்ணியமாம். இதைப்பற்றியன்றோ இவர்பேரில் பத்தியின் வரம் தங்கியிருக்குமென்று இசாயியாஸ் தீர்க்கதரிசி வசனித்திருக்கிறார் (இசா. 11). இயேசுநாதருடைய எண்ணம் பிதாவை நோக்கி எழும்புவதற்குச் செபத்தியானம் செய்யவேண்டிய அவசியம் அவருக்கில்லை; ஆகிலும் அவர் ஜெபஞ்செய்வதில் எவ்வளவோ சுறுசுறுப்புள்ளவராயிருந்தார்! அவர் வெளியரங்கமான சீவியத்திலே முதலாய் இராக்காலமெல்லாம் ஜெபத்திலே செலவழித்தாரென்று சொல்லியிருக்கையில் (லூக். 6) அந்தரங்கமான சீவியத்தில் எவ்வளவோ காலம் ஜெபத்தில் செலவழித்திருப்பாரென்று நாம்தாமே ஊகித்துக்கொள்ளலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிதாவாகிய சர்வேசுரனைக் கண்களினால் காணக்கூடாத நாம் ஜெபத்தியானம் பத்திக்குரிய பல முயற்சிகளைக்கொண்டு

மாத்திரம் அவரிடத்தில் நம்மை ஞானவிதமாய் எழுப்பி அவரை அறியவும், பிள்ளைக்குரிய பட்சத்தையும் மதுரம் பொருந்திய தோற்றத்தையும் நமது உள்ளத்தில் உண்டுபண்ணிக் காப்பாற்றவுங்கூடும். ஆகையால் பத்திக்கடுத்த முயற்சிகளை நாம் பெரிதாய் எண்ணி அவைகளைக் கவனமாய்ச் செய்துவரவேண்டும். இவ்விதம் நடந்து வருகிறோமா?

சம்பாஷணை.—இன்று திருச்சபையில் கொண்டாடும் அந்தியோக்கியா பட்டணத்து மேற்றிராணியாரும் வேதசாட்சியுமாகிய அர்ச். இஞ்ஞாசியாரோடே சம்பாஷணை செய்து சாந்தகுணம், அடக்க ஒடுக்கம், பத்தி முயற்சிகளில் சுறுசுறுப்பு ஆகிய புண்ணியங்களை நமக்கு அடைந்து தரும்படி அவரை மன்றாடுவோமாக (107-ம் வது).

2-ம் தேதி

தேவமாதாவின் சுத்திகரத் திருநாள் அல்லது மெழுகுதிரி மந்திரிக்கும் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—தேவமாதா குழந்தை இயேசுநாதரைத் தேவாலயத்தில் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறதையும் இயேசுநாதர் தேவமாதாவின் கரங்களினாலே தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்கிறதையும் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—உதாரத்துவத்தையும் பரித்தியாகப் பிரீதியையும் கேட்போமாக.

முதல் பிரிவு

இன்றைக்குத் தேவமாதா நமக்குச் செய்ததென்ன?

தியானம்.—மரியாயி சுத்திகரத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படிய அவசியமில்லை. ஆயினும் அதற்குக் கீழ்ப்படிந்து, மற்ற பெண்பிள்ளைகளைப்போல் தானும் அசுத்தப்

பட்டவள் என்று பிறர் நினைக்கச் சம்மதித்தாள். இதில் அவளது தாழ்ச்சியும் கீழ்ப்படிதலும் ஆச்சரியத்துக்குரிய விதமாய் விளங்குகின்றன. இதைவிட இன்னும் ஆச்சரியமானது ஏதென்றால், நமது பாவங்களுக்குப் பரிகாரப்பலியாகவும் நமது இரட்சண்ணியத்துக்கு விலையாகவும் தன்னால் மிகவுஞ் சிநேகிக்கப்பட்ட தன் ஏக குமாரனாகிய இயேசுநாதரைப் பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்ததே. மற்றத் தாய்மார்களைப்போல் தன் திவ்விய குமாரனை சீக்கிலுவென்னும் ஐந்து பணத்தைக் கொடுத்து மீட்டுக்கொண்டது உண்மைதான்! ஆகிலும் பலிக்காக வளர்க்கப்பட்ட செம்மறிப் புருவையைப்போல அவரை வளர்த்துக் காப்பாற்றவே இப்படிச் செய்தாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது கண்முன்னே காணப்படும் இந்தக் காட்சி எப்பேர்க்கொத்தது! தேவ மகிமையும் ஆத்தும இரட்சண்ணிய ஆவலும் அவளிடத்தில் தாய்க்குரிய சிநேகத்தையும் உருக்கத்தையும் பார்க்க மேலானதாயிருந்தன. ஐயோ! இப்படி நம்மைத்தாமே பரித்தியாகம் பண்ணித் தேவசிநேகத்தையும் பிறர்சிநேகத்தையும் காண்பிக்கிறதில் நாம் எவ்வளவோ பின்தாங்கி நிற்கிறோம்! தேவ மகிமையையும் பிறர் ஆத்தும இரட்சண்ணியத்தையும் பார்க்க நமது சொந்தக் காரியத்தின்பேரிலே எவ்வளவோ பற்றுதலுள்ளவர்களாயிருக்கிறோம்! அநேகம் போக்குகள் சொல்லி நமது கடமையை நிறைவேற்றவும் சற்று வருத்தப்படவும் பின்வாங்குகிறோம். நம்மை இனிச் சட்டைபண்ணாமல் நம்மைத் தானே ஜெயித்து நமது தாயாருக்கு உகந்தவர்களாயிருக்கப் பிரயாசப்படுவோமாக.

மனப்பற்றுதல்.—உதாரத்துவத்தையும் பரித்தியாகப் பிரீதியையும் தேவதாயார் உனக்கு அடைந்தருளும்படி அவளை இரந்து மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—தேவமாதாவைக் கண்டுபாவித்துச் சுபாவத்துக்கு வருத்தமுஞ் சர்வேசுரனுக்குப் பிரியமுமுள்ள யாதொரு மனவொறுத்தலை இன்றைக்குச் செய்யப் பிரயாசப்படுவாயாக.

2-ம் பிரிவு

இந்நாளில் இயேசுநாதர் நமக்குச் செய்ததென்ன?

தியானம்.—அவர் நாற்பதுநாள் குழந்தையாயிருந்தாலும், புத்திவிபரம் நன்றாய் அறிந்தவராயிருந்ததினாலே, பசாசின் அடிமைத்தனத்துக்குள் அகப்பட்டிருந்த மனுக்குலத்தை மீட்கவும் பாவத்தினால் சர்வேசுரனுக்கு வந்த நிந்தை அவமானங்களைப் பரிகாரம்பண்ணவும் தமது இரத்தத்தைச் சிந்தி சகல மனுஷர் பாவ நிவர்த்திக்குப் பலியாயிருக்கவும் தமது பரம பிதாவுக்குத் தமது மாதாவின் கரங்களினாலே தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். பிதாவாகிய சர்வேசுரனும் எல்லாத்திலும் பார்க்கத் தமக்கு யோக்கியமான இந்தப் பலியைக் கையேற்றுக்கொண்டார். அதுமுதல் சிலுவையில் அறையுண்டு மரிக்குந்தனையும், முப்பத்து மூன்று வருஷகாலம் இயேசுநாதருக்குப் பாடுகள் குறைவுபடவில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—குடிலில் பிறந்த நேரமுதற்கொண்டு கபாலமலையில் தமது பரம பிதாவின் மகிமைக்காகவும் உன் ஆத்தும இரட்சணியத்துக்காகவும் தம்மைச் சிலுவையில் பலியாய் ஒப்புக்கொடுக்கும் பரியந்தம், உன் திவ்விய இரட்சகருடைய சீவியமானது உனக்கு உத்தம மாதிரிகையான இடைவிடாத பலியாகவே இருந்தது. தரித்திரம், கற்பு, கீழ்ப்படிதல் என்னும் மூன்று வார்த்தைப்பாடுகளினாலேயும் பிறர் ஈடேற்றத்துக்குப் பிரயாசப்படப் பிரசித்தமாய்த் தான் ஏற்பட்டதினாலேயும் தேவசிநேகமென்கிற பீடத்திலே தன்னைமுழுதும் தகனப்பலியாக ஒப்புக்கொடுக்கும் மெய்யான சந்நியாசிக்கு இதுவே மாதிரிகையாயிருக்கின்றது. சந்நியாசத்துக்கடுத்த சாங்கோபாங்கத்தின் இந்த மாதிரிகைக்கு நீ எவ்வளவு அடுத்தவனாயிருக்கிறாய் அல்லது இதற்கு நீ எவ்வளவு பிரயாசப்படவேண்டியதென்று பார்.

மனப்பற்றுதல்.—இந்தச் சாங்கோபாங்கத்தை அடைய மிகவும் ஆசைப்படவேணும்.

பிரதிக்கினை.—இன்றையத்தினம் திவ்யநற்கருணை வாங்கும்போது, உதாரத்தனமுள்ள சில பிரதிக்கினைகளை இயேசுநாதருக்கு ஒப்புக்கொடு.

3-ம் பிரிவு

இன்றையத்தினம் இயேசுநாதருக்கும் தேவமாதாவுக்கும் நாம் செய்யவேண்டியதென்ன?

தியானம்.—இயேசுநாதரும் தேவமாதாவும் நமக்குக் காண்பித்த சிநேகத்துக்கு நம்மால் இயன்ற அளவு பதில் சிநேகம் காண்பிக்கவேணும். தேவாலயத்தில் நாமும் பிரவேசித்து ஆண்டவருக்கு நம்மைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கவேணும். கோவிலிலே இன்றைக்கு மெழுகுதிரி மந்திரித்து அவைகளை ஜனங்களுக்குக் கொடுக்கும்போது, நம்மைத்தானே முழுதுஞ் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து இயேசுநாதரும் தேவமாதாவும் தாங்கள் செய்த பலிபீடத்தில்தானே தேவசிநேக அக்கினியினாலே நாம் முழுதும் பற்றியெரிய ஆசைப்படவேணும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் திருநாளிலே செய்யும் சடங்குகள் நமக்குப் பரிசுத்த சுறுசுறுப்பைக் கொடுக்கவும் தேவ ஊழியத்திலும் ஆத்தும இரட்சணியத்துக்காக நாம் படவேண்டிய வருத்தத்திலும் நமக்குப் புதிதான பற்றுதலைத் தரவும் மிகவும் உதவியாயிருக்கும். நாம் ஆரம்பித்திருக்கிற இந்தப் புது மாதத்தின் விசேஷமானது நம்மிடத்தில் தேவ பற்றுதலை எழுப்புவதற்குரியது. இந்த வருஷத்தில் இது இரண்டாம் மாதமானதினாலே, போன மாதம் நாம் செய்த நன்மையைப் பார்க்க இந்த மாதம் அதிக நன்மை செய்யவும் நாம் அசட்டையினாலே விட்டுவிட்டதைச் சரிவர நிறைவேற்றவும் பிரயாசப்படுவோமாக.

சம்பாஷணை.—பரிசுத்த கன்னியாஸ்திரியோடே சம்பாஷணை செய்கிறதுமல்லாமல் இந்நாளிலே அவள் நமக்குச் செய்த நன்மைக்காக அவளுக்கு நன்றியறிந்த தோத்

திரஞ் செய்து அவள் பரம பிதாவுக்கு இயேசுநாதரை ஒப்புக்கொடுத்ததுபோல, நம்மையும் அவள் ஒப்புக்கொடுக்கவும் இந்தத் தியானத்தில் நாம் கொண்ட நல்ல கருத்துகளை நிறைவேற்ற நமக்கு அவள் ஒத்தாசையாயிருக்கவும் அவளை மன்றாடுவோமாக.

3-ம் தேதி

இயேசுநாதர் சர்வேசுரனுக்கும் மனுஷருக்கும் முன்பாக ஞானத்திலும் வயதிலும் வரப்பிரசாதத்திலும் வளர்ந்துகொண்டு வந்தாரென்ற வாக்கியத்தின்பேரில் (லூக். 2)

ஆயத்தச் சிந்தனை.—திருக்குடும்பத்தாரான மூன்று பேரும் நசரேத்தூரிலிருந்த சிறு வீட்டில் ஒன்றித்துக் குடியிருந்ததைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—சாங்கோபாங்கத்தை அநுசரிக்கவேணுமென்கிற ஆசை உன்னிடத்தில் அதிகமாய் உண்டாக வரப்பிரசாதம் கேள்.

முதல் பிரிவு

இயேசுநாதர் மனுஷருக்குமுன்பாக ஞானத்தில் வளர்ந்துவந்தார்

தியானம்.—இயேசுநாதர் ஞானத்தில் வளர்ந்துவந்தார் என்கிறதற்கு அர்த்தமேதென்றால், அவருக்கு வயது வரவரத் தமது நடக்கையிலெல்லாம் மிகுந்த ஞானத்தையும் மிகுந்த உத்தமதனத்தையும் விளங்கச் செய்தாரென்று அர்த்தமாகும். மனுஷர் பார்வைக்கு வயதுக்குத்தக்கது அநுபோகத்தால் புத்தி விபரம் விளங்குகிற மற்ற மனுஷருக்கொப்பந்தம் அவர் நடந்துவந்தாலும், அப்போஸ்தலர் சொல்லியிருக்கிறபடி இயேசுநாதர் மனுஷாவதாரமெடுத்த க்ஷணத்திலேதானே அவரிடத்திலே ஞானத்தினுடையவும் அறிவினுடையவுஞ் சகல பொக்கிஷமும் நிறைந்திருந்

தது (கொலோ. 2). ஆகையால் அவர் உத்தமதனத்திலும் சுகிர்த குணத்திலும் இடைவிடாமல் வளர்ந்துகொண்டு வந்ததுமல்லாமல் தம்மைப் பார்க்கிற யாவர்க்கும் நன்மாதிரிகை காண்பித்து நாளுக்குநாள் அதிக பிரியமுள்ளவராய் நடந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தங்கள் திவ்விய மாதிரிகையானவரைப் பின்சென்று நடக்கிற சந்நியாசிகள் தங்களுக்கு வயது வரவர அதிக உத்தமமுள்ளவர்களாக மிகவும் அபேட்சித்து அநுகூலப்பட்டால், எவ்வளவோ பாக்கியவான்கள்! இப்பேர்க்கொத்தவர்கள் தங்களை நடப்பிக்கிறவர்களுக்கு ஆறுதலும், தங்கள் சகோதரருக்கு நன்மாதிரிகையும் இயேசுநாதருடைய திரு இருதயத்துக்குச் சந்தோஷமும் விளைவிப்பார்கள்; அன்றியும், எப்போதும் உத்தமதனத்தை நாடிச் செல்லவேண்டும் என்கிற முக்கியமான கடமையை நிறைவேற்றிவருகிறார்கள் என்பதற்கு நல்ல அத்தாட்சியாகவும் இருப்பார்கள். இயேசுநாதரை இவ்விதம் பின்பற்றுகிறவர்களில் நானும் ஒருவனோ அல்லது இவ்விதம் நடக்க ஆசைப்பட்டுக்கொண்டு அதற்காக ஒன்றுஞ் செய்யாமல் பின்வாங்குகிறவர்களில் ஒருவனோ?

மனப்பற்றுதல்.—இதை நன்றாய் ஆராய்ந்து பார்த்து இப்போது என் மனச்சாட்சி உரைப்பதற்கு உகந்தவண்ணம் என் மனப்பற்றுதலை எழுப்புவேனாக.

பிரதிக்கினை.—அழிந்துபோகிற உலக காரியங்களிலே மனுஷர் இடைவிடாமல் பிரயாசப்பட்டு விர்த்தியடைகிறதைக்கண்டு, நான் புண்ணியத்திலே விர்த்தி அடைவதற்கு அவர்களைப்போல் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் சர்வேசுரனுக்குமுன்பாக வரப்பிரசாதத்தில் வளர்ந்துகொண்டு வந்தார்

தியானம்.—அவர் சர்வேசுரனுக்குமுன்பாக வரப்பிரசாதத்தில் வளர்ந்துகொண்டுவந்தார் (லூக். 2). இவரே

வரப்பிரசாதமும் பரிசுத்ததனமுமாயிருக்கக்கொள்ள வரப்பிரசாதத்தில் வளர்ந்துகொண்டு வந்தாரென்கிறதுக்கு அர்த்தமேதென்றால், மனுஷர் பார்வைக்கு அந்தந்தப் புண்ணிய முயற்சிகளில் மகா பெரிதும் வருத்தமும் உத்தமமுமானவைகளை நாளுக்குநாள் அதிகமதிகமாய் அநுசரித்துக்கொண்டு வந்தாரென்று அர்த்தமாகும். இவர் சிறுபத்திலேதானே அநுசரித்த புண்ணியங்களைத் தமது அந்தரங்கமான சீவியகாலமெல்லாம் மகா உத்தமமான பிரகாரமாய் அநுசரித்துக்கொண்டுவந்தார். தமது வெளியரங்கமான சீவியத்திலே முன்னையைப்பார்க்க அதிக உத்தமமான பிரகாரமாகவும் தமது கடைசி காலத்திலே மிகவும் மேலான விதமாகவும் அவைகளை அநுசரித்துக்கொண்டு வந்தார். இன்னமும் இதற்கு வேறொரு அர்த்தமுண்டு: அதேதென்றால், இவர் காண்பித்த புண்ணியக் கிரிகைகளைப் பார்த்த யாவருக்கும் இவர்பேரில் மேலான எண்ணமும் நினைவும் உண்டானதுந்தவிர மகா பரிசுத்தமான கருத்தோடும் மிகுந்த சிநேகத்தோடும் அவைகளை இவர் அநுசரித்து வந்ததினாலே, எல்லாத்திலும் பார்க்கத் தமது பரமபிதா இவரை மிகவும் மதிக்கும்படியாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதில் என்னைக் குறித்து விசாரிக்கத்தக்க இரண்டு காரியமுண்டு: முந்தமுந்த நான் செய்துவரும் புண்ணிய முயற்சிகள் எனக்கு வயது வரவர அதிக உத்தமமுள்ளவைகளாயிருக்கின்றனவா? என்னை நான் ஜெயிக்கிறதற்கு அடையாளமாக அந்த முயற்சிகளை அடிக்கடி செய்கிறேனோ? அவைகள் அதிக உதாரமுள்ளவைகளாயிருக்கின்றனவா? இரண்டாவது, என் கிரிகைகளைச் சார்ந்த கருத்து யாதொரு சுயபட்சத்தின் கலப்பில்லாமல் அதிக பரிசுத்தமுள்ளதாயிருக்கிறதாவென்று பார்ப்பேனாக.

மனப்பற்றுதல்.—விசேஷமான இந்த இரண்டு கேள்விகளுக்கு மெய்யான மறுமொழி சொல்லவும் தேவ வரப்பிரசாதம் எனக்கு ஏவுகிற மகா உத்தமதனத்தை அடைய என்னிடத்தில் மிகுந்த ஆசை உண்டாகவும் மன்றாடுவேனாக.

பிரதிக்கினை.—முந்தி நான் அடைந்த நன்மையை நினைத்துத் தைரியமாய் இருக்கிறதுமல்லாமல் இன்னமும் நான் செய்யவேண்டிய நன்மையைப் பார்த்து இதுவரையில் நான் செய்ததெல்லாம் ஒன்றுமில்லாததுபோல் நினைத்துக்கொள்வேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் தமது மறைவான சீவியத்தில் உத்தமதனத்தில் வளர்ந்துகொண்டு வந்தார்

தியானம்.—இயேசுநாதர் உத்தமதனத்திலும் பேறுபலனிலும் இடைவிடாமல் வளர்ந்துகொண்டு வந்தது எப்படியென்றால், மனிதர் கண்ணுக்குத் தோன்றாதவிதமாய் அந்தரங்கமான தமது சீவியத்தில் அன்றன்று வீட்டுக்குள் நடக்கவேண்டிய அலுவலைச் சரியாய்ச் செய்து உத்தமதனத்தில் வளர்ந்துகொண்டு வந்தார். இப்படியே நாமும் மடத்திலே செய்துவரக்கூடும். நசரேத்தூரின் சிறு வீட்டுக்குள்ளே நடந்ததைப் பார்த்தால், அதில் என்ன காணப்போகிறாய்? பிரபலியமான கிரிகை ஒன்றுமிராது; ஏழைமையின் மேன்மையைக் கண்டுணர சக்தியற்ற கபோதிகளான இடம்பப் பிரியர் அதில் ஒன்றும் காண மாட்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய மாதிரிகையானவருடைய சீவியத்திலே நமக்கு எல்லாம் படிப்பினையுள்ளதுமாய் மனத்திடன் வருவிக்கிறதுமாயிருக்கின்றன. தம்மைப்போல நாமும் சர்வேசுரன் முன்பாகவும் மனிதர் முன்பாகவும் சாங்கோபாங்கத்தில் வளர வேண்டுமென்று அவர் கட்டளையிடுகிறார் என்பது வாஸ்தவம். ஆனால், எந்தெந்த அந்தஸ்திலேயும் குடும்ப வாழ்க்கையிலோ அல்லது பொது சீவியத்திலோ, நமது சாதாரண கிரிகைகளைக்கொண்டே அதில் சித்திபெறக்கூடுமென்று அவர்தாமே நமக்குக் காண்பிக்கிறார். நாம் இப்படி நடவாமலிருப்பதேன்? விலைமதிக்கப்படாத காலத்தை வீணாக்கி நமது சொந்த நன்மையைத்தானே தேடாம

லிருக்கிறதினால், ஒருநாள் எவ்வளவோ கஸ்திப்பட வேண்டியதாயிருக்கும்!

சம்பாஷணை.—புண்ணியத்தில் நாளுக்குநாள் விர்த்தி அடையும்படி தமது மாதிரிகையினாலும் வாக்கினாலும் கிரிகையினாலும் நம்மை அழைத்துத் தூண்டுதல் செய்துகொண்டுவரும் இயேசுநாதரோடே சம்பாஷணை செய்து, உங்கள் பரம பிதா உத்தமராயிருக்கிறதுபோல நீங்களும் உத்தமராயிருங்களென்று அவர் திருவாய்மலர்ந்து அருளிய வாக்கியம் எப்போதும் நமது புத்தியில் பதிந்திருக்க அவரை மன்றாடவேணும். அர்ச். அவலீனாஸ் பெலவேந்திரர் அதை நினைத்து எப்போதும் கிறீஸ்துவ சாங்கோபாங்கத்தில் முன்னேற்றம் அடைய வார்த்தைப்பாடு கொடுத்தது போல, நாமும் உத்தமர்களாய் நடக்கப் பிரயாசப்பட வேணும்.

4-ம் தேதி

விபூதித் திருநாள்

நமது ஆண்டவராகிய இயேசுநாதருடைய பாடுகளின்பேரில் தியானங்கள்

அறியவேண்டிய குறிப்பு:—விபூதித் திருநாள் பெப்ருவரி மாதம் 4-ம் தேதி முதல் மார்ச்சு மாதம் 10-ம் தேதி வரையில் வரக்கூடுமானதினாலே, இதில் குறைவாயிருக்குந் தியானங்களை இந்த புத்தகத்தின் கடைசியிலே பதிந்திருக்கிற 33 தியானங்களிலிருந்து விபூதித் திருநாள் வரும் வரைக்கும், கூட்டிக்கொள்ளலாம்.

தபசுகாலத்துக்குத் தகுந்த ஆயத்தம்

ஆயத்தச் சிந்தனை.—நீ மண்ணாலே உண்டாக்கப்பட்டாய், திரும்பவும் மண்ணாய்ப் போவாயென்று ஆதித்தகப்பன் பாவத்தில் விழுந்தபிறகு சர்வேசுரனிட்ட தீர்வையைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இந்நாளில் திருச்சபை தனது ஞானப்பிள்ளைகளுக்கு வருவிக்க ஆசைப்படுங் கருத்தை நமதுள்ளத்தில் பதிப்பிக்கவேணுமென்று சர்வேசுரனை மன்றாடு.

முதல் பிரிவு

இன்றையத்தினம் நம்மிடத்தில் விளங்கவேண்டிய தாழ்ச்சி

தியானம்.—மனிதனே, நீ மண்ணாயிருக்கிறாய்; திரும்பவும் மண்ணாய்ப் போவாயென்பதை நினைத்துக்கொள் (ஆதியாக. 3 அதி). கத்தோலிக்குத் திருச்சபை பரம்பியிருக்கிற இடமெங்கும் தொனிக்கிற இக்கடுஞ்சொல்லைச் சர்வேசுரன் வசனித்து ஏறக்குறைய ஆறாயிரம் வருஷமாயிற்று. இவ்வார்த்தையை யாருக்குச் சொன்னாரென்றால், நமது ஆதிபிதாவாகிய ஆதாமுக்குத்தானே சொன்னார். இவன் பாவத்திலே விழுந்தவுடனே, அவனுக்கும் அவன் சந்ததியாருக்கும் ஆண்டவர் இட்ட மரணத் தீர்வையானது ஏதென்றால், நாம் புசிக்கவேண்டாமென்று உனக்குச் சொல்லியிருந்த கனியை நீ புசித்ததினாலே, உன்னிமித்தம் பூமி சபிக்கப்பட்டிருக்கிறது; மண்ணால் உருவாக்கப்பட்ட நீ அதற்கு இரையாய்த் திரும்பப் போகுந்தனையும், உன் முகத்தின் வேர்வையால் அன்னம் புசிப்பாய்; அதேனெனில் நீ மண்ணாயிருக்கிறாய், திரும்பவும் மண்ணாய்ப் போவாயென்றார். முன் சொன்ன தீர்ப்பில் ஒன்றுங் கூட்டாமலிருக்கிற இக்கடைசி வசனத்தை அவர் மீண்டும் உரைப்பானேன்? ஆதித் தகப்பனுடைய ஆங்காரத்தைத் தணித்து மெய்யான தபசுக்கு அவசியமாகிய மிகுந்த தாழ்ச்சி விநயத்தை அவன் இருதயத்தில் விளைவிக்க இப்படிச் செய்தாரல்லாமல் வேறல்ல. வாஸ்தவத்திலும் தன்பேரில் குற்றமில்லாததாகச் சொல்லத் துவக்கின ஆதிமனுஷன், திரும்பவும் வேறே வார்த்தை யாதொன்றுஞ் சொல்லாமல் தனக்குக் கொடுத்த தபசைக் கையேற்றுக்கொண்டு தொளாயிரம் வருஷத்துக்கு அதிகமாய்த் தாழ்ச்சியோடும் மனஸ்தாபத்தோடும் சர்வேசுரன் சித்தத்துக்குப் பணிந்து அதில் நிலைத்திருந்தான். இந்தத்

தபசைச் சர்வேசுரன் ஒப்புக்கொண்டதினாலே, வரப்போகிற இரட்சகருடைய பேறுபலனால் தபசானது ஆதித்தகப்பனை இரட்சித்ததென்று சொல்லலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆதித் தகப்பன் வழியாய் நாமும் பாவிகளாய்ப்போனோம்; நாம் பாவத்தைக் கட்டிக்கொண்டதினாலே, நாமும் பெரிய குற்றவாளிகள்தானே. அப்படியிருக்க நாம் தபசு செய்து பொறுத்தல் அடைகிறது நமக்கு மெத்த அவசரமல்லவா? சர்வேசுரன் நமக்குப் பொறுத்தல் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் நாம் இப்போது கண்டறிந்தவண்ணம், குற்றவாளியின் உள்ளத்திலே அவர் தேடும் முந்தின காரியம் தாழ்ச்சியும் தன் அயோக்கியத்தின் நினைவுமாமே. ஆகையால், எல்லாரும் கடமையாய் அநுசரிக்கவேண்டிய இந்தத் தபசுகாலத்தில் நாம் பிரதானமாய்த் தேடிக் காப்பாற்றவேண்டியதேதென்றால், நமது நீசத்தனத்தையும் பாவங்களையும் கண்டு நாம் அத்தியந்த தாழ்ச்சி அடைவதே. நாம் செய்யும் தபமுயற்சிகளுக்குப் பிரதான பலனைக் கொடுக்கிறது அதுதான்.

மனப்பற்றுதல்.—உன்னை நீ நன்றாய் அறியவும் உன் நிர்ப்பாக்கியத்தைக் கண்டு விசேஷமாய் இந்தத் தபசு காலத்திலே அத்தியந்த தாழ்ச்சி அடையவும் வரப்பிரசாதம் கேட்பாயாக.

பிரதிக்கினை.—இக்கருத்துக்காக இன்றையத்தினம் பத்தியோடு பூசை கண்டு திவ்விய நற்கருணை வாங்குவாயாக.

2-ம் பிரிவு

இன்றைக்கு நம்மிடத்தில் விளங்கவேண்டிய துக்க மனஸ்தாபம்

தியானம்.—மனிதனே, நீ மண்ணாயிருக்கிறாய், திரும்பவும் மண்ணாய்ப் போவாயென்பதை நினைத்துக்கொள். பூலோக மோட்சத்திலே சர்வேசுரன் சொன்ன இந்த வார்த்தைகளைத்தானே இன்னமும் வருஷாவருஷம் இந்நாளில் நமது தாயாகிய திருச்சபை தன் தாசர்களாகிய குருக்கள் வழியாய் தேவாலயத்தில் செல்லும் நம்மில் ஒவ்

வொருவருக்குஞ் சகல விசுவாசிகளுக்கும் சாவுக்கும் தபசுக்கும் குறிப்பான திருநீற்றை நமது நெற்றியில் பூசும்போது சொல்லுகின்றது. அந்த வசனத்துக்கு அர்த்தமேதென்றால்: மனிதனே, நீ யாராயிருந்தாலுஞ் சரி, நீ செய்த பாவத்தினிமித்தமாக சாகவேண்டியதையுஞ் செத்தபின் இந்த நீற்றுக்குச் சமானமாய்ப் போகவேண்டியதையும் நினைத்துக்கொள்; நீ செய்த பாவத்துக்குத் தபசு செய்யாமற்போனால், ஆத்தும சரீரத்தோடே நித்திய ஆக்கினைக்குரிய ஸ்தலத்திற்குச் செல்லக் கல்லறையில் நின்று எழுந்திருப்பாயென்பதையும் நினைத்துக்கொள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திருச்சபை தபசுகாலத்தின் முந்தின நாளிலேதானே பரிசுத்தமும் கஸ்தியும் நிறைந்த உத்தம மனஸ்தாபத்தை நமக்கு வருவிக்கத்தக்கதாக மகா கண்டிப்பும் பயங்கரமுமான இவ்வாக்கியம் நமது காதில் விழச்செய்கின்றது. தபசுகாலத்தில் இரட்சண்யத்துக்கடுத்த தபமுயற்சிகளைச் செய்கிறது அதின் பிரதான முகாந்தரங்களுக்குள் ஒன்றானதினாலே, அவைகளைச் செய்ய விரும்புகிறவனுக்கு அவசியமாய் வேண்டியது இருதயத்திலுள்ள துக்க மனஸ்தாபம். நாம் செய்யும் ஒறுத்தல், தபமுயற்சிகள் மெய்யாகவே உத்தம மனஸ்தாபமும் தாழ்ச்சியுமுள்ள இருதயத்தின் கருத்தோடு ஒன்றித்திருந்தால், சர்வேசுரன் அவைகளைப் பிரியமாய்க் கையேற்றுக்கொள்வார். அவரே வாக்குத்தத்தம் பண்ணினபடி நமக்குப் பாவப்பொறுத்தலைக் கொடுப்பார். தாவீது இராஜா 50-ம் சங்கீதத்தில் வசனித்திருக்கிற பிரகாரம், சர்வேசுரன் மனஸ்தாபமும் தாழ்ச்சியும் பொருந்திய இருதயத்தை ஒருக்காலும் பிறக்கணித்துத் தள்ளமாட்டார். இப்பேர்ப்பட்ட ஆயத்தம் நம்மிடத்தில் இல்லாவிட்டால், தபசுகாலத்துக்குரிய முயற்சிகள் எவ்வளவு கடினமுள்ளவைகளாயிருந்தாலும் நமக்குச் சொற்பப் பலனை மாத்திரம் தருமென்று அஞ்சுகிறதற்கு இடம் உண்டு.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன்தாமே உன் இருதயத்தில் மனத்தாழ்ச்சியையும் உத்தம மனஸ்தாபப் பற்றுதலையும் கொடுத்தருளவேணுமென்று அவரை மிகவும் இரந்து மன்றாடுவாயாக. ஆண்டவரே, கண்ணீரைப் போசனமாகவும் அழுகையைப் பானமாகவுங் கொடுமென்று தாவீது இராஜாவோடே நீயும் சொல்லுவாயாக (சங். 79).

பிரதிக்கினை.—தபசுசெய்த தாவீது இராஜாவைப் போல் நீயும் தாழ்ச்சியோடும் மன உருக்கத்தோடும் என் பேரில் இரக்கமாயிரும் சுவாமி என்னுஞ் சங்கீதத்தை ஒரு நாளுக்கொருவிசை இந்தத் தபசுகால முழுதுஞ் சொல்லுவாயாக. மேற்சொன்ன பத்திவிநயத்தோடே இன்றையத் தினம் விபூதி தரித்துக்கொள்.

சம்பாஷணை.—மகா பத்தியுள்ள தாவீது இராஜாவோடே சம்பாஷணை செய். தபசும் மன உருக்கமுமுள்ள விநயத்தை நமக்கு அவர் ஆண்டவரிடத்தில் இரந்து மன்றாடக் கேள். உனக்கு நேரமிருந்தால், என்பேரில் இரக்கமாயிரும் என்கிற சங்கீதத்தை இக்கருத்தோடு சொல்லுவாயாக.

விபூதித் திருநாளுக்குப் பின்வரும் வியாழன்

இயேசுநாதர் ஒலிவேத்தேன்கிற பூங்காவனத்தில் பிரவேசித்தது

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தமது வேதனையான பாடுகளை ஆரம்பிக்கத்தக்கதாக ஒலிவேத்தென்னும் பூங்காவனத்தில் தமது அப்போஸ்தலர்களோடேகூட மனந்தளராமல் நடந்துபோகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—தேவ ஊழியத்திலும் தபமுயற்சிகளிலும் வரக்கூடிய விக்கினங்களில் மனந்தளராதிருக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் இவ்வாக்கியங்களைச் சொன்னபின் செதிரோனென்ற ஓடைக்கப்புறம் ஜெத்செமானியென்னும் தோட்டத்தில் தமது சீஷர்களோடே பிரவேசித்தார் (அரு. 18)

தியானம்.—ஆ! என் ஆத்துமமே, நீ அனந்தம்விசை உனக்கு மாதிரிகையாகத் தெரிந்துகொண்ட உன் ஆண்டவரை உற்றுப்பார்; அவர் எவ்வளவு துணிவோடே யுத்தத்துக்குப் போகிறாரென்றும் தமது மாதிரிகையினாலும் வாக்கினாலும் தமது பிரமாணிக்கமுள்ள சீஷர்களை யுத்தத்துக்கு ஏவுகிறாரென்றும் பார். அவர் இந்தச் சமயத்திலே சொன்னதாவது: நான் என் பிதாவைச் சிநேகிக்கிறேனென்றும் அவர் எனக்குக் கட்டளையிட்டபடி செய்கிறேனென்றும் உலகம் அறியத்தக்கதாக எழுந்திருங்கள், 'இவ்விடத்தினின்று போவோமென்றார் (அரு. 14). எங்கே போக அழைக்கிறார்? யுத்தத்துக்கும் மரணத்துக்கும் அல்லவோ நம்மை அழைக்கிறார்! இந்த வாக்கியங்கள் எவ்வளவோ சிநேகமும் கீழ்ப்படிதலும் திடனும் நிறைந்தவைகள்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விடத்திலே இயேசுநாதருடைய மனதைரியத்தையும் உதாரத்தனத்தையும் யோசித்துப்பார். உனக்கும் அவருக்கும் எவ்வளவோ தூர வித்தியாசம்! நீ யுத்தஞ் செய்யவும் வருத்தப்படவும் வேண்டிய சமயங்களில் மனதிடாரிக்கமாய் முன்னேறிச்செல்லாமல் எப்போதும் எவ்விடத்திலும் மகா எச்சரிக்கையோடும் உபாயத்தோடும் அவைகளுக்குத் தப்பித்து ஓடப் பிரயாசப்படுகிறாய். மற்றக் கிறீஸ்துவர்களைப் பார்க்க மகா உத்தம பிரகாரமாய் இயேசுநாதரைக் கண்டு பாவிக்க வாக்களித்து அவருடைய திருநாமத்தைத் தரித்து அவருடைய விருதின்கீழ் யுத்தஞ்செய்து அவரோடுகூடப் பிரயாசப்பட்டு வருத்தமெல்லாம் அநுபவிக்கப் பாக்கியம் பெற்றிருக்கிற நீ யுத்தசமயத்தைக் கண்டு ஓடிப்போவது உனக்கு வெட்கமும் நாணமும் அல்லவா? இப்பேர்ப்பட்ட முறைப்பாட்டுக்கு நீ எத்தனையோவிசை ஆளாயிருந்தா

யென்பதை அறியவேணுமென்கிற ஆவலோடு நீ உன்னைத் தானே பரிசோதித்துப்பார்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதருடைய மனதைரியத்தையும் வீரத்துவமுள்ள சிநேகத்தையுங் கண்டு ஆச்சரியப்பட்டு அவரைப்போல் உதாரமாயிருக்க நம்மைத் தூண்டிக்கொள்வோமாக! நமக்கு இக்கட்டான வேளைகளில் அர்ச். தோமையாரைப்போல் 'அவரோடுகூட மரிப்பதற்கு நாமும் போவோம்' என்று சொல்லுவோமாக (அரு. 11).

பிரதிக்கினை.—இதுவரையில் நான் காண்பித்த பலவீனத்துக்கும் பிரமாணிக்கமின்மைக்கும் பரிகாரஞ்செய்ய இன்றைக்குப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

மேலும் இயேசுநாதர் பூங்காவனத்தில் பிரவேசித்துச் சீஷர்களைப்பார்த்து, நான் அவ்விடத்தில் போய்ச் செபம் பண்ணுமளவும் நீங்கள் இங்கே இருங்களென்றார் (மத். 26)

தியானம்.—இயேசுநாதர் ஜெபம்பண்ண ஆயத்தஞ் செய்தாரென்பதைக் கிரகித்துக்கொள். அவருடைய மாதிரிகை உன்க்குப் படிப்பினையாயிருக்கட்டும். அவர் என்ன செய்கிறாரென்று பார். அவர் ஏகாந்த ஸ்தலத்திலே பிரவேசிக்கிறதற்காக மனுஷ சஞ்சாரத்தையும் தமது உத்தம சிநேகிதர்களையுந்தானே விட்டு விலகுகிறார். அவர்கள் தம்மோடு ஜெபம் பண்ணவும் விழித்திருக்கவும் வேணுமென்று புத்திசொல்லுகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—ஆ! என் இயேசுவே, நான் ஜெபம் பண்ணவும் உமது பரிசுத்த நெறியைப் பிரயோசனமாய்த் தியானிக்கவும் செய்ய வேண்டியதேதென்று எனக்கு நன்றாய்ப் படிப்பிக்கிறீரே; சுவாமி, தேவரீரை நான் கண்டுபாவித்துச் செபஞ் செய்யக் குறிக்கப்பட்ட ஸ்தலத்தில் பிரவேசிக்கையில், வேறெவ்வித நினைவுக்கும் புறத்திப்பட்ட கவலைக்கும் இடங்கொடாதபடி

இவைகளை நோக்கி: நான் அவ்விடத்தில் போய்ச் செபம் பண்ணுமளவும் நீங்கள் இங்கே இருங்களென்று சொல்ல வேண்டியது. மேலும் என் புத்தியிலும் மனதிலும் அவைகள் நுழையாமல் இருக்கவும் அல்லது நுழைந்தால் உடனே அகற்றிவிடவும் பிரயாசப்படுவேனாக!

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, நாங்கள் ஜெபம் பண்ண எங்களுக்குப் படிப்பியுமென்று சொல்லிச் செபத்தியானஞ் செய்யும் வரத்தை வெகுவாய் மன்றாடிக் கேட்பேனாக.

பிரதிக்கினை.—அப்போஸ்தலர்களும் அநேகஞ் சந்நியாசிகளும் மேலான தியான வரத்தை அடைகிறதற்கு கையாடின வழிகளை நானும் உறுதியோடும் தைரியத்தோடும் உதவிக்கொள்வேனாக.

3-ம் பிரிவு

அதன்பின் இயேசுநாதர் தம்மோடுகூட இராயப்பரையும் இயாகப்பரையும் அருளப்பரையும் கூட்டிக்கொண்டு போய்ப் பிரத பயப்படத் துவக்கினார் (மாற். 14)

தியானம்.—இரட்சகர் தமது யுத்தத்துக்கும் அவஸ்தைக்கும் அடுத்த பலத்த பரம இரகசியம் நிறைவேறப் போகிற சமயத்தில் இம்மூன்று சீஷர்களையும் விசேஷமாய்த் தெரிந்துகொண்டு அவர்கள் தம் அண்டையிலிருக்க ஏன் உத்தரவு அளிக்கிறார்? இதன் காரணம் சுவிசேஷத்தில் சொல்லப்படாதிருந்தாலும், முந்தித் தபோரென்ற பருவதத்தில் தாம் அடைந்த மகிமைப் பிரதாபத்துக்கு இவர்கள் சாட்சிகளாயிருந்ததுபோல, இப்போதும் ஒலிவேத்துப் பூங்காவனத்தில் தாம் அநுபவிக்கப்போகிற அவஸ்தை வேதனைக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் இவர்கள் சாட்சிகளாயிருக்கச் சித்தமானாரென்று எண்ணத்தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அநேகந்தரம் நமது நடத்தை எவ்வளவோ விபரீதமாயிருக்கிறது.

னெனில், இம்மூன்று சீஷர்களும் இயேசுநாதருடைய அவஸ்தை வியாகுலங்களுக்குப் பங்காளிகளானார்களென்று யோசிக்கையில், அவர்களுக்குக் கிடைத்த பாக்கியம் நமக்கும் கிடைத்தால் நலமாயிருக்குமென்று நினைக்கிறோமல்லவா? ஆனால், மெய்யாகவே துன்பம் வருங்காலத்தில் இதை மறந்துபோய், அவருக்கு நன்றிசெலுத்துவதற்கு மாறாய் முறையிட்டு மனந்தளர்ந்து நம்பிக்கையற்றுப்போகிறோம். விசுவாசத்துக்கும் நியாயத்துக்கும் ஏற்ற நடத்தை இதுதானா? இதுவரை நாம் நடந்துகொண்ட விதம் சரியல்லவென்று கண்டுணர்ந்து, நமது திவ்விய இரட்சகர் பட்ட பாடுகளைத் தியானித்துத் துன்ப துரிதங்களைச் சிநேகிக்கவும் நாம் செய்த பாவங்களுக்கு உத்தம மனஸ்தாபப்படவும் அவர் திருப்பாடுகளின்பேரில் இரக்கமாயிருக்கவும் தேவ சித்தத்துக்கு அமைந்திருக்கவும் வேண்டிய உதவியைத் தாழ்ச்சியோடு அவரிடத்தில் கேட்போம்.

சம்பாஷணை.—அர்ச். கிரிசித்தம்மாளோடே சம்பாஷணை செய்வோமாக. இவள் தன் சீவியகாலமெல்லாம் இயேசுநாதர் பட்ட பாடுகளைத் தியானித்து வந்ததினாலே விசேஷமான தேவ வரப்பிரசாதங்களையும் கிருபைகளையும் அடைந்தாள்.

விபூதித் திருநாளுக்குப் பின்வரும் வெள்ளி

இயேசுநாதர் ஆத்துமத்தில் பட்ட கஸ்தியின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—என் ஆத்துமமானது மரண பரியந்தம் துக்கசாகரத்தில் அமிழ்ந்திருக்கிறதென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—உன் மனவருத்தத்தில் கிறீஸ்துவனுக்குரிய அமைதலைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

அவர் துயரப்படவும் ஆயாசப்படவும் பயப்படவும் சலிப்படையவும் தொடங்கினார் (மத். 26; மாற். 14)

தியானம்.—மனிதன் தன் சரீரத்தின் பஞ்சேந்திரியங்களையும் அவயவங்களையுங்கொண்டு பாவத்தில் விழுகிறதற்குமுன் தன் ஆத்துமத்தின் புலனைக் கெடுத்துப் பாவத்திலே விழுந்தான். இதைப்பற்றி இயேசுநாதரும் தமது பாடுகளின் ஆரம்பமாக ஆத்துமத்தில் கஸ்தி துயரம் அநுபவிக்கலானார். இந்தக் கஸ்தி வியாகுலம் அளவெல்லாங் கடந்து, படைக்கப்பட்ட சத்துவங்களுக்கு மேற்பட்டதாய் மனுஷன் புத்திக்கெட்டாத நிர்ப்பந்தம் நிறைந்துள்ளது. தமது பரம பிதாவுக்குப் பூரணமாய்ப் பரிகாரம் பண்ணவும், நமக்குத் தமது அளவில்லாத சிநேகத்தைக் காண்பிக்கவும் விரும்பினதினால், அவரது ஆத்துமத்தின் ஒவ்வொரு தத்துவமும் கஸ்திக்குள்ளாகத் திருவுளமானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் கஸ்தி நிறைந்த தமது பாடுகளின் பாதையில் நடக்கத் துவக்கும்போதுதானே, மனுஷர்பேரிலும் நம்மில் ஒவ்வொருவர்பேரிலும் தமது திரு இருதயத்தில் பற்றியெரியும் சிநேகத்தைக் காண்பிக்கிறார். நாம் எல்லாரும் அவர் கண்முன்பாக இருந்ததினாலே என்மேல் அவர் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைக் கையளித்தாரென்று அர்ச். சின்னப்பரோடே நாம் எல்லோரும் சொல்லலாம் (கால. 2). அவரைக் கொலைசெய்தவர்கள் அவரது ஆத்துமத்தில் உபாதிக்கக்கூடாததினால், தாமே தமது ஆத்துமத்தில் வாதனையை வருவித்துக்கொண்டார். சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிப்பதில் அவருக்கிருந்த சொல்லரிய பேரின்ப பாக்கியத்தை தற்சமயத்துக்கு அநுபவியாமல், நிர்ப்பந்தமும் நிஷ்டூரமுமான மரணத்தை அடையப் போவதில் சுபாவமாய் ஏற்படும் பயங்கரத்தை தமது ஆத்துமம் உணரும்படி செய்துகொண்டார்.

மனப்பற்றுதல்.—மனுஷனுக்குச் சற்றேனுஞ் செல்லாத மகா உன்னதமான இந்தச் சிநேகத்தை நினைத்து ஆச்சரியத்தோடே நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

பிரதிக்கினை.—நமது ஆத்தும சக்தியெல்லாங்கொண்டு தேவ மகிமைக்கு ஊழியஞ் செய்யப் பிரயாசப்பட்டு சிநேகத்துக்குச் சிநேகத்தைக் காண்பிக்கிறதுமல்லாமல் இன்றையத்தினம் இந்தச் சிநேகத்தை எப்படிக் காண்பிக்கலாமென்று யோசிக்கவேணும்.

2-ம் பிரிவு

அப்போது இயேசுநாதர் என் ஆத்துமம் மரணமட்டும் கஸ்தியாயிருக்கிறதென்றார் (மத். 26)

தியானம்.—மரணசமய போராட்டத்தில் மனிதன் படுகிற கஸ்தி துன்பங்களுக்கொத்தவண்ணம் அவர் தமது ஆத்துமத்தில் கஸ்திப்பட்டார் என்பதே மேலே கூறின வாக்கியத்தின் அர்த்தம். சகல மனிதரும் கட்டிக்கொண்ட பாவங்களுக்குத்தாமே பொதுப் பரிகாரம் செய்ய ஏற்றுக்கொண்டதினால், அசுத்தம் நிறைந்த அந்தப் பாவங்களால் மனதில் உண்டான அருவருப்பும், அவைகளுக்காகத் தாம் அநுபவிக்கப்போகிற நிந்தை அவமான வேதனைகளின் நினைவும் கடைசியாய் கன்னெஞ்சான பாவிகளுக்குத் தமது மரணமும் இரத்தமும் வீணாய்ப்போகுமே என்கிற ஏக்கமும் அவர் இவ்வளவு தூரம் வியாகுலப்படக் காரணமாயின.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆ! என் ஆத்துமமே, உனது இரட்சகருடைய திரு இருதயம் சொல்லரிய துக்கதுயரங்கள் அநுபவித்ததற்குக் காரணம் மேற்கூறியவைகளன்றோ? இவைகளில் ஒவ்வொன்றையும் ஆராய்ந்துபார்த்து, நீயும் உன் சீவியகாலத்தில் விசேஷமாய் நீ அவருக்கு அதிக பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்யவும், அவரை உத்தமவிதமாய் சிநேகிக்கவும் வேண்டுமென்று சந்நியாசியான காலத்திலிருந்து அவருக்கு எவ்வளவு துக்கதுயரம் வருவித்திருக்கிறாயென்று யோசித்துப்பார்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் பார்த்து இரங்கி உத்தம மனஸ்தாபப்பட்டு நன்றியறிந்திருப்பாயாக.

பிரதிக்கினை.—என் நேசமுள்ள இரட்சகருடைய திரு இருதயத்தை ஒருவிதத்திலும் கஸ்திப்படுத்தாமலிருக்கிறதுந்தவிர, எப்போதைக்கும் விசேஷமாய் இன்றைக்கு அவருக்கு வெகு ஆறுதல் வருவிக்கப் பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

என் ஆத்துமம் மரணபரியந்தம் கஸ்தியாயிருக்கிறது, நீங்கள் இங்கே தங்கி என்னோடு விழித்திருங்களென்றார் (மத். 26)

தியானம்.—இயேசுநாதர் இப்படி மரண அவஸ்தைப் படும்போது தமது பிரியமான மூன்று சீஷர்களுக்குத் தாம் படும் கஸ்தியை வெளிப்படுத்தி அவர்களும் தம்மோடே விழித்திருந்து ஜெபம் பண்ணவும் தாம் படும் துயரத்துக்கு அவர்கள் பங்காளிகளாயிருக்கவுங் கேட்டுக்கொள்ளுகிறார். அதன்பின் மறுபடியும் ஜெபம்பண்ணப் போகிறார். தாம் மனுஷனென்கிற முறையில் எல்லாத்திலும் நமக்கு மாதிரிகையாயிருக்க இவ்விதம் செய்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் மனவருத்தப்படும்போது நடந்துகொள்ளவேண்டிய முறையை இதிலிருந்து அறிந்துகொள்ளலாம். நமது கஸ்தி வருத்தங்களைப் புண்ணியமும் விவேகமுமுள்ள சிநேகிதன் ஒருவனிடத்தில் வெளிப்படுத்தி ஆறுதல் தேடலாம்; ஆயினும், நமக்கு அத்தியாவசியமான சுபாவத்துக்கு மேற்பட்ட திடனை அளிக்க அவனால் இயலாது. ஆகையால், ஜெபத்தின் வழியாய்ச் சர்வேசுரனிடமிருந்தே அதை அடையப் பிரயாசப்படவேண்டும். நீ இப்படி நடந்து வந்தாயோ? மனத்திடனற்றுக் கஸ்தியில் அமிழ்ந்திக் கிடந்தாலும், தங்கள் உள்ளத்தில் இருப்பதை வெளியிடாமல் பிடிவாதமாய் அடக்கிக்கொண்டிருப்பவர்களைப்போல் நீயும் இருந்ததில்லையோ? அல்லது, ஜெபத்தின் வழியாகவும் உனக்கு நல்ல புத்தி சொல்லக்கூடியவர்களை அண்டி அவர்கள் வழியாகவும் ஆறுதலைத் தேடுவதற்குமாறாய்

உனக்கு எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் உன் வருத்தங்களை வெளிப்படுத்திப் பிரயோசனம் அடையாமற் போகவில்லையோ?

சம்பாஷணை.—இந்தத் தியானத்தில் உனக்கு உண்டான நல்ல எண்ணங்களுக்கு ஏற்றப்போல், உன்னிமித்தம் துயரப்பட்ட இயேசுநாதரோடு சம்பாஷணை செய்.

விபூதித் திருநாளுக்குப் பின்வரும் சனி

இயேசுநாதர் பூங்காவனத்தில் செய்த ஜெபம்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் முகம் தரையிற்பட சாஷ்டாங்கமாக விழுந்து ஜெபம் பண்ணுகிறதைக் காண்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—நல்ல ஜெபத்துக்குரிய தன்மையில் எப்போதும் பிரமாணிக்கமாயிருக்க வரம் கேள்.

முதல் பிரிவு

இயேசுநாதர் தமது சீஷர்களை விட்டுக் கொஞ்சத்தூரம்போய் முழந்தாளிலிருந்து முகம் தரையிற்பட சாஷ்டாங்கமாக விழுந்து ஜெபம் பண்ணினார் (மத். 26)

தியானம்.—இயேசுநாதர் தமது பரமபிதாவைப் பார்த்துச் செய்யுஞ் செபத்திலே காண்பிக்கும் அபூர்வமான வணக்கம் தாழ்ச்சி விநயத்தைக் குறிப்பாய் யோசிப்பாயாக. இவர் முழந்தாளிலிருக்கிறார்; முகம் தரையிற்பட சாஷ்டாங்கமாய் விழுகிறார்; பரலோகத்தை அண்ணார்ந்துபார்க்கத் தான் பாத்திரவானல்லவென்றாற்போல், குப்புறவிழுந்திருக்கிறார்! நமது பாவ அக்கிரமங்களையெல்லாம் தமதுமேற் சுமந்துகொண்ட மனிதனைப்போலும் ஒரு பாவியைப்போலுஞ் சர்வேசுரனுடைய அளவில்லாத மகிமைப்பிரதாபத்தை நினைத்து இவ்விதம் சாஷ்டாங்கமாக விழுகிறார். பின்னும் என் பிதாவே, கூடுமானால்

இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கடவதென்று சொல்லிக் குமாரனுக்குரிய மிகுந்த பத்தி விநயத்தைக் காண்பிக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் ஜெபம் பண்ணும்போதும் தியானம் பண்ணும்போதும் அநேகம் விசை சங்கைக்குறைவாயிருப்பதின் காரணம் யாது? சர்வேசுரனுடைய மட்டற்ற மகிமைப்பிரதாபத்தையும் நமது நீசத்தனத்தையும் நாம் சரியாய் நினைத்துப் பாராமலிருக்கிறதினாலல்லவோ இவ்விதம் சங்கையில்லாமலிருக்கிறோம்? ஜெபம் துவக்குகிறதற்கு முந்தி, நான் யாருடைய சமுகத்திலிருக்கப்போகிறேன், எதற்காகப் போகிறேனென்று வழக்கமாய் நினைக்கிறவன், எப்போதும் சங்கையாசாரத்தோடிருப்பான். மேலும் சரீர அடக்கவொடுக்கமானது ஆத்துமத்துக்கு வலிமையைக் கொடுக்கும்; அது உள்ளிந்திரிய பத்திக்கு மிகவும் உதவியாயிருந்து புத்தி அங்கங்கே சிதறிப்போகாமலிருக்கச் செய்யும். இதை நாம் அநுபோகத்தினால் அடிக்கடி கண்டறிந்ததில்லையோ?

மனப்பற்றுதல்.—ஜெபஞ்செய்யும்போதும் திவ்விய பூசை காணும்போதும் உன்னிடத்தில் உண்டான விசுவாசக்குறைச்சலையும் உதாரத்தனமில்லாமையையும் கண்டு சர்வேசுரன் சமுகத்திலே உன்னைக் குற்றஞ்சாட்டிக் கொள்வாயாக.

பிரதிக்கினை.—உன்னிடத்தில் இதுவரையிலும் குறைவாயிருந்ததை இந்தத் தியானச் சமயத்தில் யோசித்துப் பார்த்து இப்போதுதானே திருத்திக்கொள்வாயாக.

2-ம் பிரிவு

என் பிதாவே, உமக்குப் பிரியமானால் இந்தப் பாத்திரம்
என்னைவிட்டு நீங்கக்கடவது; ஆயினும் என் மனதின்
படியல்ல, உமது சித்தத்தின்படி
ஆகட்டுமென்றார் (மத். 26)

தியானம்.—ஆச்சரியமும் வீரத்துவமுமான கீழ்ப்படிதலின் மாதிரிகையை இயேசுநாதர் நமக்குக் காண்பிக்கிறார். அவர் எடுத்த மனுஷ சுபாவத்தில் எல்லாத்திலும் நம்மைப்போல் இருந்ததினால், தாம் அனுபவிக்கப்போகிற சாவு, நிர்ப்பந்த வேதனை, அவமானம் இவைகளை நினைக்கும்போது, மிகுந்த அருவருப்பு அடைகிறார். இவ்வளவு வியாகுலம் நிறைந்த பலிக்குத் தாம் ஆளாகாமலிருக்கத் தக்கதாகத் தமது பிதாவைப் பார்த்து அழுகையோடேயும் பிரலாபத்தோடேயும் கெஞ்சி மன்றாடுகிறார். ஆயினும் தேவசித்தத்துக்கு முழுதும் அமைந்து கீழ்ப்படிய மனதாயிருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது சுபாவப் பிரியத்துக்கும் பற்றுதலுக்கும் பொருந்தாதவைகள் நம்மைவிட்டு விலகிப்போகும்படி சர்வேசுரனை நோக்கி இரந்து மன்றாடுவதில் குற்றமில்லை; ஆயினும், அவருடைய சித்தமே நமது பாக்கியம் என்கிற நோக்கத்தோடு அவரது திருவுளப்பிரகாரம் ஆகக்கடவது என்று அமைந்திருக்க வேண்டியது. இந்தக் கருத்துக்கிசைந்தவண்ணமே, "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போல், பூமியிலுஞ் செய்யப்படுவதாக" என்று பரமண்டல மந்திரத்தில் மன்றாடுகிறோம்.

மனப்பற்றுதல்.—நம்மை முழுதும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து அதிக பரிசுத்தமும் நீதியும் ஆராதனைக்குரியதுமான அவருடைய சித்தம் நம்மிடத்தில் எப்போதும் நிறைவேற நல்ல மனதோடே ஆசைப்படவேணும்.

பிரதிக்கினை.—எல்லாக் காரியங்களிலும் தேவ பராமரிக்கையின் கிரிகையைக் காணப் பழகுவேனாக.

3-ம் பிரிவு

மூன்றும் விசையும் அந்த வார்த்தைகளைத்தானே
சொல்லி மன்றாடினார் (மத். 26)

தியானம்.—சீஷர்கள் தங்களுக்கு வந்திருக்கிற பலத்த ஆபத்தில் தங்களுக்கு ஒரு பொல்லாப்பும் வராதென்று வீண் நம்பிக்கை கொண்டிருந்ததினால், அவர்

களுக்கு உதவியாக இயேசுநாதர் மூன்றுவிசை ஜெபத்தை நிறுத்தி அவர்களைப் பார்க்கப் போனார். ஆனால் அவர்களைப் பார்த்துப் புத்திசொன்னபிறகு, திரும்பவும் ஜெபம் பண்ண வந்து, முன்போல மிகுந்த பத்தி விநயத்தோடே: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தை நான் உட்கொண்டாலொழிய, இது அகன்று போகக்கூடாதாகில், உமது சித்தத்தின்படி ஆகக்கடவதென்று அந்த வாக்கியத்தைத் தானே மறுபடியுஞ் சொன்னார் (மத். 26).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விடத்தில் இயேசுநாதர் நமக்கு இரண்டு காரியத்தைப் படிப்பிக்கிறார். முதலாவது, தேவதோத்திரத்துக்கும் பிறர்சிநேகத்துக்கும் அடுத்த கிரிகைகளை அசட்டைசெய்து ஜெபம் மாத்திரம் பண்ணிக்கொண்டிருக்கிறது சரியல்ல; ஜெபத்தைக் கைவிட்டு அந்தக் கிரிகைகளை மாத்திரம் செய்வதும் சரியல்ல; ஆனால் ஜெபத்தைக்கொண்டு தேவதோத்திரத்துக்கடுத்த அந்தந்தக் கிரிகைகளைப் பரிசுத்தமாக்கவுந் தேவதோத்திரத்துக்கும் பிறர்சிநேகத்துக்கும் அடுத்த முயற்சிகளைக்கொண்டு ஜெபத்தை மேன்மையாக்கவும் வேணும். இரண்டாவது, பல வெவ்வேறு ஜெபங்களைச் செபிக்கிறதில் பலன் அடங்கியிருக்கிறதென்றும் ஒரே ஜெபத்தைத் திருப்பத் திரும்பச் சொல்லுகிறதினால் சலிப்பு உண்டாகுமென்றும் நினைக்கக்கூடாது.

சம்பாஷணை.—என் பாவங்களைப்பற்றித் தமது பிரிய குமாரன் இத்தனை கஸ்தி நிர்ப்பந்தங்களை அநுபவிக்கக் கட்டளையிட்ட பிதாவாகிய சர்வேசுரனோடே சம்பாஷணை செய்வேனாக. *

* என் பாவங்களைப்பற்றியும் என்னைப்பற்றியும் என் பேரில் வைத்த பட்சத்தைப்பற்றியுமென்று சொல்லப்பட்ட வாக்கியங்கள் நமது திவ்விய இரட்சகர்பேரில் நமது இருதயத்தில் சிநேகத்தை எழுப்பவும் நாம் நல்ல பிரதிக்கினை செய்துகொள்ளவும் உரியதாயிருக்கிறதினாலே, நாம் அவைகளை அடிக்கடி உதவிக்கொள்ளவேணும். இதினால் நமக்கு மெத்த பிரயோசனம் உண்டு.

தபசுகாலத்தின் முதல் வாரம்—ஞாயிறு

இயேசுநாதர் பூங்காவனத்தில் மரண அவஸ்தைப்படுகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் சாஷ்டாங்கமாய்க் கிடந்து மரண அவஸ்தைப்பட்டுத் தமது திரு இரத்தத்தால் நனைந்திருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—ஞான யுத்தத்தில் திடனையும் நிலைமையையும் கேள்.

முதல் பிரிவு

இயேசுநாதர் மரண அவஸ்தைப்பட்டிருக்கையில் இரத்தம் துளித்துளியாய் வேர்த்துத் தரைமட்டும் ஓடினது (லூக். 22)

தியானம்.—கல்வாரி மலையிலே எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்க இரட்சகர் மரணம் அடைந்தது அவருடைய தெய்வீகத்தின் பிரசித்தமான அத்தாட்சியாக வேண்டியிருந்தது. அப்படியே ஆயிற்று: செந்தூரியன் இயேசுநாதர் பெருஞ் சத்தமிட்டு இறந்ததைக் கண்டு, மெய்யாகவே இவர் சர்வேசுரனுடைய குமாரன்தான் என்றான் (மாற். 15). அங்கே இயேசுநாதரைக் காத்துக்கொண்டிருந்த சேவகர் யாவரும் அவ்விதமே சொன்னார்கள் (மத். 27). ஆகையால் அவர் மரிக்கிறதுக்குமுந்தி மரண அவஸ்தைப்படயாதொரு நியாயமில்லை; ஏனெனில் அவஸ்தை என்பது மனித ஆத்துமம் சரீரத்தை விட்டுப் பிரியப்போகிற சமயத்தில் உண்டாகும் வாதனை; இது மனிதனுடைய துர்ப்பலத்தை வெளியரங்கமாய் எண்பிக்கும் அத்தாட்சி. இயேசுநாதருக்கு அவ்வித துர்ப்பலம் இருக்கமுடியாது. ஆயினும் அவர் நம்மைப் போல் அவமானமும் வாதனையும் அநுபவிக்கச் சித்தங்

கொண்டு, தமது பாடுகளின் ஆரம்பத்திலேயே இந்த மரண அவஸ்தையை அநுபவிக்கலானார். இது வெளிக்குத் தோன்றாமல் உள்ளத்திலேயே ஊன்றியிருந்ததினிமித்தம் வெகு கடூரமாயிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் நமதுமட்டில் வைத்துள்ள அன்பிற்கு இந்த அவஸ்தை ஓர் புதிய அத்தாட்சியாகவும் நமக்குப் பிரயோசனமான படிப்பினையாகவும் இருக்கிறது. மரண சமயத்தில் நமக்கு வரும் கஸ்தியைத் தணித்துக்கொள்ளவும், அதைப் பொறுமையோடும் அமைந்த மனதோடும் ஏற்றுக்கொள்வதற்கு அவசியமான வரத்தை நமக்கு அடைந்து கொடுக்கவும், அவர் இந்த வாதனைகளை மனம்பொருந்தி அநுபவித்துத் தமது பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறார். நான் இதைக் கண்டுணர்கிறேனா? இதினால் யாதொரு நன்மை அடைகிறேனா?

மனப்பற்றுதல்.—நீ செய்த பாவங்களுக்கும் தேவ ஊழியத்திலே நீ அசட்டையாயிருந்ததுக்கும் பரிகாரமாக உன் மரணத் தீர்வையையும் உன் அவஸ்தையின் கடின வேதனைகளையும் இப்போதுதானே தாழ்ச்சியோடு கையேற்றுக்கொள்வாயாக.

பிரதிக்கினை.—ஞான யுத்தத்திலும் பெருத்த இக்கட்டுகளிலும் பிர்மாணிக்கம் தவறாமல் உதாரகுணமுள்ளவனாயிரு.

2-ம் பிரிவு

அவர் சரீரத்தில் நின்று இரத்தத்துளிபோல் வேர்வை வேர்த்துத் தரைமட்டும் ஓடினது (லூக். 22)

தியானம்.—எந்த மனிதனுக்கும் எவ்வித ஆயாசத்தின் மத்தியிலும் இரத்த வியர்வை உண்டானதாகக் கேள்விப்பட்டதில்லை. இயேசுநாதர் இரண்டு மணிநேரம் மரண அவஸ்தைப்பட்டதினிமித்தம் இரத்த வியர்வை வியர்த்தார் என்று அறியும்போது, அவர் அநுபவித்த வாதனை எவ்

வளவு அகோரமானதென்று சற்றாகிலும் கண்டுபிடிக்கலாம். அந்நேரத்தில் அவர் அநுபவித்த பயமும் துக்கமும் எவ்வளவென்றும், கசப்பான இந்தப் பாத்திரத்தை ஏற்றுக்கொள்ள அவர் மேலாங்கிஷத்துக்குங் கீழாங்கிஷத்துக்கும் உண்டான யுத்தம் எவ்வளவு கடூரமாயிருந்ததென்றும் இதனால் அறிந்துகொள்ளலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இரட்சகர் இவ்வளவு அவமானமும் நிஷ்டூரமுமுள்ள மரண அவஸ்தைப்படாமல் நம்மை இரட்சிக்கக்கூடும். ஆயினும் நமது படிப்பினைக்காகவும் நமது மன உறுதிக்காகவும் இப்படி அவஸ்தைப்படச் சித்தமானார். நாமும் அவரைப் பின்பற்றி நமது கடமையை நிறைவேற்றுகிறதிலே எவ்வளவு வருத்தமுண்டானாலும், அதைச் சட்டைபண்ணாமல் இருப்போமாக. அக்கடமையை நிறைவேற்றுகிறதில் நமக்கு மெத்த அருவருப்புண்டானாலும், அதினால் நமக்கு யாதொரு குறைவு வராதென்று நினைந்து சர்வேசுரனைப் பற்றி அதை சகித்துக்கொண்டால், நமக்கு மெத்தப் பலன் உண்டாகும். இயேசுநாதரே இத்தகைய மாதிரிகையைக் காண்பித்திருக்கிறார். இது நமக்கு எவ்வளவோ திடனைத் தரவேண்டியது!

மனப்பற்றுதல்.—அர்ச். பெர்நார்துஸ் சொல்லுகிறதுபோல, உனக்காகத் தமது சர்வாங்கத்திலும் இரத்தம் சிந்தி அழுகிற இயேசுநாதரை மகா ஆச்சரியத்தோடே பார்த்து ஆராதிப்பாயாக. உனக்குத் திடனும் உன் ஆத்துமத்துக்கு ஞான வலுவுங் கொடுப்பதற்காக, மனுஷ பலவீனத்துக்குரிய சகல வாதனைகளையும் அநுபவிக்கச் சித்தமான ஆண்டவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

பிரதிக்கினை.—எனக்கு வரக்கூடிய கடின யுத்தத்தில், “இன்னமும் நீ இரத்தஞ் சிந்தும் வரையில் எதிர்த்து யுத்தஞ்செய்யவில்லையே” என்று அப்போஸ்தலர் சொன்னதை நினைத்து என் மனதுக்குத் திடன் வருத்துவிப்பேனாக (எபிரே. 12).

3-ம் பிரிவு

அப்போது ஒரு தூதன் பரமண்டலத்தில் நின்று இறங்கிவந்து அவருக்குத் தரிசனையாகி அவரைத் தேற்றினார் (லூக். 22)

தியானம்.—மரண அவஸ்தைப்பட்ட இயேசுநாதர் தாழ்ச்சியோடு செய்த மன்றாட்டு வீணாய்ப்போனதில்லை. அதெப்படியென்றால், ஒரு தூதன் அவரிடத்தில் வந்து அவஸ்தையினாலே பலவீனப்பட்ட அவருடைய சரீரத்துக்கு வலுவைக் கொடுத்து அவர் காண்பித்த கீழ்ப்படிதலைக் கொண்டாடி அவர் படப்போகிற பாடுகளினாலே அவரது பிதாவுக்கு வரப்போகிற மகிமையையும் மனுக்குலத்துக்கு வரப்போகிற மோக்ஷானந்த பாக்கியத்தையும் அவருக்குக் காண்பித்து அவரைத் தேற்றினார். இயேசுநாதர் மனிதனென்கிற முறையில் தாம் விரும்பிய காரியத்தை ஒருவிதத்தில் அடையாமலிருந்தது சரியே; ஆகிலும் அவர் செய்த ஜெபத்தினாலே மாபெரிய நன்மைகள் உண்டாயின.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ படும் கஸ்தி துன்பங்களிலே சர்வேசுரனைப் பார்த்து மன்றாடினால், தப்பாமல் பலன் அடைவாய்; ஜெபம் வீணாய்ப் போகமாட்டாது. நீ கேட்டவண்ணம் உனக்கு வந்த சிலுவை உன்னைவிட்டகன்றுபோகாவிடினும், தேவ ஆறுதலைக் கொடுக்கும் சம்மனசானவர் உன் இருதயத்தில் வருவிக்கும் வரப்பிரசாத இன்பத்தினாலே உனக்குப் புதிதான ஞானப் பெலன் உண்டாகி, பாரமான சிலுவை முதலாய் உனக்கு வெகு லேசாய்த் தோன்றும். இன்பமுள்ள சிரவணத்தோடும் சிலவிசை சந்தோஷத்தோடும் அப்போதும் அதிக பேறுபலனோடும் அந்தச் சிலுவையைச் சுமந்துகொள்வாய். இதினாலே நீ கேட்ட மன்றாட்டைப் பார்க்க அதிகமாய் அடைந்திருப்பாய்.

சம்பாஷணை.—என்பேரில் வைத்த பட்சத்தால் மரண அவஸ்தைப்பட்டு இரத்த வேர்வை வேர்த்த இயேசுநாதரோடே சம்பாஷணை செய்வேனாக.

தபசுகாலத்தின் முதல் வாரம்—திங்கள்

தபசுகாலத்தில் விசேஷமாய்ச் செய்யவேண்டிய தபத்தின் அவசியமும், அதைச் செய்யும் விதமும்

ஆயத்தச் சிந்தனை.—நீங்கள் தபசு செய்யாவிட்டால், எல்லாரும் சிதைந்துபோவீர்களென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள் (லூக். 13).

தியானச் செபம்.—மகா தாழ்ச்சி மனஸ்தாபத்தோடு பொருந்தின தவப்பற்றுதலைக் கேள்.

முதல் பிரிவு

தபசு செய்யவேண்டும் என்று சர்வேசுரன் நமக்குக் கற்பிக்கிறார்

தியானம்.—நாம் தபசு செய்யவேண்டும் என்று சர்வேசுரன் திட்டமாகவும் பொதுவாகவும் கண்டிப்பாகவும் கட்டளையிட்டிருக்கிறார். நீங்கள் தபசு செய்யாவிட்டால், சிலவிசை சிதைந்துபோவீர்களென்று சொல்லவில்லை. நீங்கள் எல்லாரும் சிதைந்துபோவீர்களென்று பொதுப்பட சொல்லியிருக்கிறார். ஏன் சிதைந்துபோவோமென்றால், நாம் பாவிகளாயிருக்கிறதினாலே, ஞானஸ்நானத்தால் அடைந்த மாசற்றதனத்தை இழந்துபோனபின், தபசின் வழியாய் மோக்ஷத்தை அடையலாமல்லாமல் நமக்கு வேறே வழியில்லை. இன்னமும் இதற்கு வேறே நியாயம் ஏதென்றால், சரீரம் புத்திக்கு விரோதமாய் நம்மை எப்போதும் பாவத்தில் விழச்செய்கிறதினாலே, சரீரத்தின் ஆகாத ஆசாபாசங்களை நீங்கள் புத்தியைக்கொண்டு ஒறுத்தால், தேவ இஷ்டப்பிரசாத சீவியத்தோடு இருப்பீர்களென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறார் (உரோ. 8).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆகையால் நாம் எல்லாரும் தபசு செய்யவேண்டியதுமல்லாமல் திரிதெந்தென்னும் நகரில் கூடின திருச்சபைக் கற்பனைப்

படி. நாம் செய்த பாவத்தின் எண்ணிக்கைக்கும் கனத்துக்கும் தக்கது எக்காலத்திலும் விசேஷமாய்ப் பரிசுத்தமான இந்தத் தபசுகாலத்திலும் நாம் எல்லாரும் தபசு செய்யவேணும். அவரவர் தங்கள் வயதுக்கு அல்லது பெலனுக்கு ஒத்தாப்போல் எவ்விதத்திலாகிலும் மெய்யாகவே தபசு செய்யக்கூடும். வனத்தில் சஞ்சரித்த மகா தபசிகள் ஒருசந்தி, இராக்காலத்தில் கண் விழிப்பு, சரீர ஒறுத்தல் ஆகிய இவைகளினாலே தபசு செய்தார்கள். இம்மூவித தபசை நாம் எவ்விதமாய் அநுசரிக்கலாமென்று இந்தத் தியானத்தின் மூன்று பிரிவுகளில் பார்க்கவேணும். முந்த முந்த ஒருசந்தியை நாம் மகா கண்டிப்பாய் அநுசரிக்கக்கூடாமற்போனாலும், அதில் கொஞ்சமாகிலும் அநுசரிக்கலாம். நாம் வழக்கமாய் சாப்பிடுவதில் சிறிதளவு குறைத்துக்கொள்ளலாம்; எந்த பதார்த்தத்தின்மேல் நமக்கு அதிக பிரியம் இருக்கிறதோ அதை விரும்பிப் புசிக்காமல் ஒறுத்தல் செய்யலாம். இந்தத் தபசுகாலத்திலே உன்னால் செய்யக்கூடியது ஏதென்றும் நீ செய்ய விரும்புவது ஏதென்றும் சர்வேசுரன் சமுகத்தில் யோசித்துப்பார்த்துத் தீர்மானித்து அதன்பிரகாரம் நடந்துகொள்.

மனப்பற்றுதல்.—நமது திவ்விய இரட்சகர் அநுசரித்த ஒருசந்திக்குமுன் நீ அநுசரிக்கும் ஒருசந்தி மகா சொற்பக் காரியமென்று நினைத்து உன்னைத் தாழ்த்திக்கொள்.

பிரதிக்கினை.—நீ ஒருசந்தி அநுசரிக்கக்கூடாமற்போனாலும், அதற்கு ஈடாக நீ செய்யும் தபமுயற்சிகளைப் பழுதில்லாமல் செய்துகொண்டு வருவாயாக.

2-ம் பிரிவு

நாம் அழைக்கப்பட்ட அந்தஸ்து தபசு செய்யும் கடமையை நமக்குப் படிப்பிக்கிறது

தியானம்.—நாம் கொடுத்த வார்த்தைப்பாடுகளினாலும் நமது சபையிலுள்ள பிரதான இரண்டு கருத்துகளினாலும் எப்போதும் சுபாவத்துக்கடுத்த நமது இச்சைகளை

அடக்கி உத்தமதனத்தைத் தேடவும் நமது இளைப்பாற்றியையும் சரீர சௌக்கியத்தையும் தேடாமல் பிறர் ஈடேற்றத்துக்காகப் பிரயாசப்படவும் நாம் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். இதைப்பற்றித் தன்னைப் பரித்தியாகம்பண்ணி ஒறுத்து அல்லது இடைவிடாமல் தபசுசெய்துகொண்டு வரவேணும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வனத்துத் தபசிகள் ஒருசந்தி பிடித்ததுமல்லாமல் இராக் கண் விழித்துக் கடின வேலை செய்துகொண்டு வருவார்கள். அவர்களைப்போலும் இந்நாளிலுள்ள அநேக சந்நியாசிகளைப்போலும் நடுச்சாமத்தில் கோவிலிலே போய் விழித்திருந்து ஜெபம்பண்ணும்படி நித்திரையை விட்டெழுந்திருக்க நமக்குக் கடமையில்லாமற் போனாலும், எழுந்திருக்கும் நேரம் வந்தவுடன் மற்ற அலுப்பு வருத்தமெல்லாம் பாராமல் நித்திரையைவிட்டு எழுந்திருக்கவேணும். நாம் ஜெபத்தியானம் பண்ணும்போது, அலுப்புக்கும் நித்திரைக்கும் ஒருக்காலும் இடங்கொடாமல் அந்த நேரமுழுதும் விழித்திருப்போமாக. இப்படி யுத்தம் பண்ணுவது அநேகம்விசை மகா வருத்தமுள்ளதாயிருக்கும்.

மனப்பற்றுதல்.—தேவசிநேக பீடத்திலே இடைவிடாத பலியாகிற உயிருள்ள அப்பம்போல ஆண்டவருக்கு உன்னை ஒப்புக்கொடுப்பாயாக.

பிரதிக்கினை.—சோம்பலைத் தள்ளி மிகுந்த ஆசையோடே உதாரத்தனமாய்த் தேவ ஊழியத்தில் மகா சுறுசுறுப்போடேயும் மிகுந்த பத்தி விநயத்தோடேயும் குறித்த நேரத்திலே எழுந்திருக்கிறதில் பிரமாணிக்கமுள்ளவனாயிருப்பேனாக.

3-ம் பிரிவு

நமது சொந்த நன்மையே தபசு செய்யுங் கடமையை வற்புறுத்துகிறது

தியானம்.—இவ்வுலகத்தில் தபசுசெய்து நாம் உத்தரியாவிடில், உத்தரிக்கிற ஸ்தலத்தின் நெருப்பிலே வெகு

கண்டிப்பாய் உத்தரிக்கவேணுமென்பது விசுவாச சத்தியந் தானே. ஒன்றில் தபசு செய்யவேணும், அல்லது நெருப்பிலிருந்து வேகவேணுமென்று அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருக்கிறார். ஆகையால் இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேணும். நமது சொந்த நன்மையைப் பார்த்தால், இதில் தத்தளிக்கக்கூடுமோ? சொல். பலனுள்ள தவஞ் செய்து நமது பாவக்கடன்களைத் தீர்க்க நமக்கு அநேக உபாயங்களை ஆண்டவர் கொடுத்திருக்கையில், நாம் அப்படிச் செய்யாவிட்டால், மெய்யாகவே குருடரும் நமக்கே நாம் சத்துராதிகளுமாய் இருப்போமென்பதற்குச் சந்தேகமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மேற் சொன்ன உபாயங்களுமல்லாமல் நமது ஐம்புலன்களையும் நமது சரீரத்தையும் இடைவிடாமல் ஒறுத்து வனவாசிகள் செய்த சரீர ஒறுத்தலைக் கொஞ்சமாகிலும் நாம் கண்டு பாவிக்கக்கூடாதோ? அப்படியே ஜெபம் பண்ணும்போது முழந்தாளிலிருந்தாலும் உட்கார்ந்திருந்தாலும் கையை ஊன்றாமல் இருப்பது, வீதிகளில் போகும்போது வீணான வேடிக்கை பார்க்காமலிருப்பது, மவுனநேரத்தில் சரியாய் மவுனங்காப்பது, சபையின் ஒழுங்குகளை எல்லாம் பிரமாணிக்கமாய் அநுசரிப்பது, இவைபோன்ற முயற்சிகளை நிலைமையாய்ச் செய்துவருவது கண்டிப்பான தபசுகளில் ஒன்றாகும். இவ்வண்ணஞ் செய்தால், எந்த நேரமும் பரித்தியாக முயற்சி செய்துகொண்டு வருவோம்.

சம்பாஷணை.—இந்தத் தியானத்தின் மூன்று பிரிவுகளிலுள்ள மனப்பற்றுதல் பிரதிக்கினைகளுக்கு ஒத்தபிரகாரம் தபசுக்கு உத்தம மாதிரிகையான இயேசுநாதரோடே சம்பாஷணைசெய்.

தபசுகாலத்தின் முதல் வாரம்—செவ்வாய்

இயேசுநாதர் தமது சீஷர்களைக் கண்டிக்கிறார் துரோகியான யூதாசுக்கு எதிராகப் போகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இப்போது நித்திரை செய்யுங்கள், என்னைக் காட்டிக்கொடுக்கப் போகிறவன் இதோ வருகிறானென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேணுக.

தியானச் சேபம்.—இத்தியானத்தில் மிகுந்த ஞானப் பலன் அடைய ஒத்தாசையைக் கேட்பேணுக.

முதல் பிரிவு

இயேசுநாதர் எழுந்திருந்து தமது சீஷர்களிடத்தில் வந்து அவர்கள் நித்திரை செய்கிறதைக்கண்டு இராயப்பரைநோக்கி: சீமோனே, நித்திரை செய்கிறயோ? என்னோடே ஒரு மணி நேரம் விழித்திருக்க உன்னால் கூடாதோவென்றார் (மத். 26)

தியானம்.—இப்படி நமது ஆண்டவர் கண்டித்துச் சொன்னதினால், மூன்று சீஷர்களும் மறுமொழி சொல்லக் கூடாமலிருந்தார்களென்று சுவிசேஷகர் சொல்லுகிறார். கொஞ்சநேரத்துக்குமுன்னே நான் ஒருபோதும் தேவரீரை விட்டுப் போகமாட்டேனென்று மற்றவர்களைப் பார்க்க அதிக பிரமாணிக்கத்தையும் தைரியத்தையும் காண்பித்த இராயப்பருக்கு இயேசுநாதர் இப்படிக் கண்டித்துச் சொன்னது மெத்தக் கசப்பாயிருந்திருக்கும். திவ்விய இரட்சகர் இராயப்பரை நோக்கி: சீமோனே, நித்திரை செய்கிறாயோ? உன் குருவாகிய நான் உனக்காக விழித்திருந்து ஜெபம்பண்ணி மரண அவஸ்தைப்படுகிறேனே; உங்கள் சத்துராதிகளை எதிர்த்து யுத்தம்பண்ணும் சமயம் வந்திருக்கிறதினாலே, நீங்கள் விழித்திருந்து ஜெபம்பண்ண உங்களுக்குச் சொல்லியிருந்தும், ஒரு மணி நேரம் என்னோடே விழித்திருக்கக்கூடாதோவென்றார்.

மெய்யாகவே இந்தக் கண்டிப்பு அவருக்குப் பொருந்தினது தான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஜெபம் 'பண்ணும்போதும் விசேஷமாய்த் தியானஞ்செய்யும்போதும் அநந்த முறை அசட்டையாய் நித்திரை செய்கிற நீ எத்தனையோவிசை இந்தக் கண்டிப்புக்குப் பாத்திரவானாயிருக்கிறாய்? அந்தந்த நாளிலே உன் திவ்விய குருவின் மகிமைக்காகவும் உன் ஆத்துமத்தின் பலத்த நன்மைக்காகவும் நீ செய்யவேண்டியதேதென்று பார்த்துத் திட்டப்படுத்துகிறதற்காக உனக்குக் கொடுக்கப்பட்ட இந்த விலைமதியாத நேரத்தை நீ அசட்டையினால் வீணாய்ச் செலவழிக்கலாமோ?

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் சமுகத்திலே உன்னைத் தாழ்த்தி உத்தம மனஸ்தாபப்பட்டு இனி சுறுசுறுப்போடும் நிலைமையோடும் நடக்க உன்னைத்தானே நீ தூண்டிக்கொள்.

பிரதிக்கினை.—ஜெபத்தியான வேளையிலே நித்திரை அல்லது சோம்பல் உண்டாகிறபோது: சீமோனே, நித்திரை செய்கிறாயோவென்று இராயப்பரைப் பார்த்து ஆண்டவர் சொன்னதை நாம் நினைத்துக்கொண்டால், இந்தச் சோதனை விலகிப்போம்.

2-ம் பிரிவு

நீங்கள் சோதனைக்குள் பிரவேசியாதபடி விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆத்துமம் வேகமுள்ளதுதான், சரீரமோ துர்ப்பலமுள்ளதென்றார் (மத். 26)

தியானம்.—நன்மை செய்யவேணும் என்னும் வெறும் ஆசையாலும், காரியசித்தி பெறாத நல்ல எண்ணங்களாலும் உண்டாகிற நம்பிக்கையுடன் கூடிய ஞான அசமந்தம் ஆபத்துக்குரிய நிலைமையாகும். இந்த நிலைமையிலிருப்பவர்கள் மோசத்துக்குரிய தப்பறைகளுக்கு ஆளா

வார்கள். இவர்கள் நன்மை செய்வோம் என்று பொதுவான தீர்மானம் செய்திருப்பதினாலும், அப்போஸ்தலர்களைப்போல் உறுதிமொழி கூறிக்கொள்வதினாலும் எல்லாம் சரியாயிருக்கிறதென்று எண்ணிப் பொய்யான நம்பிக்கையில் நித்திரைசெய்துகொண்டிருக்கிறார்கள். மனது மாத்திரம் இருந்தால், எல்லாம் நடக்குமென்றும் சொந்தப் பலத்தைக்கொண்டு இரட்சணியம் அடையலாமென்றும் நினைத்தாற்போலாயிற்று. இதைப்பற்றித்தான் இயேசுநாதர், ஆத்துமம் வேகமுள்ளது, சரீரமோ துர்ப்பலமுள்ளதென்று சொன்னதுந்தவிர விழித்திருந்து ஜெபம் பண்ணுங்களென்றார். இதற்கு அர்த்தமேதென்றால், நீங்கள் எப்போதும் எச்சரிக்கையாயிருந்து உங்களை நம்பாதிருங்கள், எப்போதும் ஜெபம்பண்ணுங்கள்; அவ்விதம் செய்யாவிடில், உங்கள் சத்துராதிகளுடைய வஞ்சகப் போராகிய சோதனையில் தப்பாமல் தோல்வி அடைவீர்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சமயத்திலே கவனமாய் உன் உள்ளத்தை ஆராய்ந்துபார்; உனது நிலைமையைப்பற்றி உன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதில்லையாவென்று பார். அலட்சியம் அல்லது துர்ப்பிரயோகம் பழக்கமாகிவிட்டால், அதை நீ உணர்வதுமில்லை, மனதில் ஐயுறவுகொள்வதுமில்லை. இந்த நிலைமை மகா ஆபத்துக்குரியது.

மனப்பற்றுதல்.—நம்மைத்தானே நாம் நன்றாய் அறிய ஆசைப்படவேணும். சிரேஷ்டர்களது அயராத தயவுக்குரிய கண்காணிப்பு நமக்கு வெகு பிரயோசனமான உதவிபுரியக்கூடிய அந்தஸ்திற்குச் சர்வேசுரன் நம்மை அழைத்ததற்காக அவருக்கு நன்றிசெலுத்துவோமாக.

பிரதிக்கினை.—சில சந்நியாசிகள் புண்ணியத்தைச் சிநேகித்து அதைப் பெரிதாய் எண்ணி மற்றவர்களுக்கும் அதைப் போதிக்கிறதினாலேமாத்திரம் தங்களிடத்திலே அந்தப் புண்ணியம் இருக்கிறதென்று நினைத்துக்கொள்வார்கள்; நாமும் அவர்களை ஒத்தவர்களோவென்று நம்மையே வினாவிக்கொள்வோமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் திரும்பவும் போய்ச் செபம் செய்து பின்னும் தமது சீஷர்கள் அண்டையில் வந்து அவர்களைப் பார்த்து: நீங்கள் இப்போது நித்திரைசெய்து இளைப்பாறுங்கள்; இதோ நேரம் சமீபித்திருக்கின்றது; மனுமகன் பாவிகளுக்குக் கையளிக்கப்படப்போகிறார்; என்னைக் காட்டிக்கொடுப்பவன் கிட்டி வந்திருக்கிறான்; எழுந்திருங்கள், போவோமென்றார் (மத். 26)

தியானம்.—இயேசுநாதர் தமக்கு நேரிடப்போகிற பாடுகளையும் மரணத்தையும் யோசித்துப் பார்த்ததினாலேயே மரண அவஸ்தைப்பட்டிருக்க, இப்போது தாமே அவைகளை எதிர்கொண்டுபோகத் துணிந்தது அவர் தமது பிதாவை நோக்கி நெடுநேரம் சுறுசுறுப்போடு மன்றாடின ஜெபத்தினால் வந்த பலனென்று தெளிவாய் விளங்குகின்றது. மேலும் ஆபத்து வந்த மாத்திரத்தில் அப்போஸ்தலர்கள் அவரைக் கைவிட்டு ஓடிப்போவதைப் பார்க்கையில், சர்வேசுரனைப் பார்த்துப் பத்தி சுறுசுறுப்போடே ஜெபம் பண்ண மறந்துபோகிற ஆத்துமத்தில் ஞானப் பெலன் இல்லாமற் போகிறதை அறிந்துகொள்வோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இக்கட்டான வேளைகளில் நமக்கு அவசியமான மனத்திடனை ஜெபத்தினாலும் சர்வேசுரனோடு ஒன்றித்திருப்பதினாலுந்தான் அடைந்துகொள்ளவேண்டும். நமக்கு அன்றாடம் நேரிடக்கூடிய இத்தகைய இக்கட்டுவேளைகளை அன்றாடம் செய்யும் தியானத்தின் வழியாய் முன்னாடியே எதிர்பார்த்து, அவைகளில் தைரியமாயிருக்கும்படி தேவ வரப்பிரசாத உதவியை இரந்து மன்றாடுவோமாகில், நாம் ஒருக்காலும் தைரியம் இழந்துபோகமாட்டோம். துன்ப வேளையில் நாமும் இயேசுநாதரைப்போல், "இதோ நேரமாயிற்று, போவோம்" என்று சொல்வோமாக. அதாவது, தேவ ஏவுதலினால் காலையில் செய்த பிரதிக்கினையை அநுசரிக்கத் தீவிரிப்போமாக. இப்படிச் செய்வோமாகில், யுத்தம் வரும்போதெல்லாம் ஜெயம் அடையலாம்.

சம்பாஷணை.—நமது திவ்விய இரட்சகரோடே சம்பாஷணை செய்வோமாக. முந்தின பிரிவுகளிலே குறிக்கப்பட்டிருக்கிற மனப்பற்றுதலும் பிரதிக்கினைகளும் சம்பாஷணை செய்கிறதற்கு எப்போதும் உதவியாயிருக்கும்.

தபசுகாலத்தின் முதல் வாரம்—புதன்

யூதாஸ் கட்டிக்கொண்ட துரோகம்

ஆயத்தச் சிந்தனை.—துரோகியான யூதாஸ் இஸ்கரியோத்து இயேசுநாதரை முத்தமிடுகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இரட்சணியத்துக்குரிய தேவ பயத்தையும் உன்னை நம்பாதிருக்கும்படியான வரத்தையும் சர்வேசுரனிடத்தில் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் இன்னம் பேசிக்கொண்டிருக்கையிலே, இதோ பன்னிருவரில் ஒருவனாகிய யூதாசும், அவனோடுகூட பிரதான ஆசாரியாராலும் ஜனத்தின் மூப்பராலும் அனுப்பப்பட்ட திரளான ஜனங்களும் கத்திகளையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு வந்தார்கள் (மத். 26)

தியானம்.—ஆத்தும கெடுதலின் மகா பயங்கரமான ஓர் பரம இரகசியத்தை இன்றைக்கு நாம் தியானிக்கவேணும். இயேசுநாதருக்குப் பிரியமான பன்னிரண்டு சீஷர்களுக்குள்ளே ஒருவனான யூதாஸ் ஏறக்குறைய மூன்றுவருஷகாலம் அவரிடத்தில் சகல ஞானத்தையும் அறிந்தவன்; அவர் செய்த கணக்கில்லாத புதுமைகளைக் கண்டு விசுவாசத்திலே திடப்பட்டவன்; அவரால் அநேகம் உபகாரங்களைப் பெற்றவன்; இப்போது இயேசுநாதரைக் கொலைசெய்யப்போகிறவர்களுக்கு விசேஷ எத்தனமானான்! முப்பது வெள்ளிக்காசுக்கு அவரை அவர்

களுக்கு விற்றுப்போட்டான் * இப்படி அவர்கள் கையிலே அவரைத் துரோகமாய் ஒப்புக்கொடுக்கிறான்! ஐயோ! பணத்தின்மட்டில் உள்ள பேராசை நிர்ப்பாக்கியனை யூதாஸ் இஸ்காரியோத்தை மெள்ளமெள்ள விழச்செய்த குருட்டாட்டமும் கெடுதியுமுள்ள படுகுழியைப் பார். தாவீது இராஜா தன் பலவீனத்தை உணர்ந்து உரைத்தவண்ணம், "மனிதனுடைய தன்மை என்ன" என்று நாமும் இவ்விடத்தில் சொல்லக் காரணமுண்டு.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிறருக்கு வந்த பொல்லாப்பு உனக்குப் படிப்பினையாயிருக்கட்டும். நீ ஒருக்காலும் ஜெயித்து அடக்காத அல்லது ஜெயித்து அடக்கினாலும் மீண்டும் சன்னஞ்சன்னமாய் முளைத்துத் துளிர்விடுகிற சில ஆசாபாசங்கள் உன்னிடத்தில் உண்டோ இல்லையோவென்று பார். உன்னிடத்தில் வேரூன்றியிருக்கிற புண்ணியத்தைக் கெடுக்க அநேகம் ஆசாபாசங்கள் வேண்டியதில்லை; ஒரே ஆசாபாசமாத்திரம் போதும். திருச்சபை சரித்திரத்தையும் சந்நியாச சபைகளின் சரித்திரத்தையும் பார்த்தால், ஒரேயொரு ஆசாபாசத்தை சரியாய் அடக்காததினால் மாத்திரம் சேதம் அடைந்தவர்கள் அநேகம்பேர் என்று தெரியவரும்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் நமது புத்திக்கு ஞானப்பிரகாசத்தைக் கொடுக்கவேணுமென்று அவரைப் பார்த்துச் சொல்லத்தக்கதாவது: ஆண்டவரே, நான்

* இதில் சுவிசேஷகராகிய மத்தேயு என்பவர் விபரமாய் எழுதியிருக்கிறதாவது: அப்போது (பெரிய வியாழக்கிழமைக்கு முந்தின நாள்) பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் இஸ்காரியோத்தென்பவன் பிரதான குருப்பிரசாதிகள் அண்டையிற் போய், நீங்கள் எனக்கு என்ன கொடுப்பீர்கள்? அப்போது நான் அவனை உங்களுக்குக் கையளிப்பேனென்று சொன்னான். அவர்களோ முப்பது வெள்ளிக்காசுகளை அவனுக்குக் கொடுக்க உடன்பட்டார்கள் (மத். 26). அக்காலத்தில் வெள்ளிக்காசுமல்லாமல் பொன்காசும் இருந்தது. ஒவ்வொரு வெள்ளிக்காசு அறுபது துட்டு பெறுமானது. ஆகையால் முப்பது வெள்ளிக்காசும் ஏறக்குறைய நாற்பது அல்லது நாற்பத்தைந்து ரூபாயாகும்.

பார்வை அடையச்செய்யும் (லூக். 18). பிற்காலத்தில் நான் அதிகமாய்ப் பயப்படத்தக்க ஆசாபாசத்தை நான் அறியச் செய்யும், சுவாமி.

பிரதிக்கினை.—தன்னிடத்தில் உள்ள முக்கியமான ஆசாபாசத்தைச் சரியாய் அடக்கும்வரையில் ஓயாமல் பிரயாசப்படவேணும்.

2-ம் பிரிவு

உடனே அவன் இயேசுநாதர் அண்டையில் சென்று அவரை நோக்கி: என் குருவே, வாழ்கவென்று சொல்லி அவரை முத்தமிட்டான் (மத். 26)

தியானம்.—ஆ! இதெவ்வளவு அருவருப்பான கள்ள ஞானம்! ஆசார உபசாரப் போர்வையால் யூதாஸ் மகா பொல்லாத துரோகத்தை மறைக்கப் பார்க்கிறான்; முத்தமிட்டுச் சத்துராதிகள் கையிலே தன் திவ்விய குருவைக் காட்டிக் கையளிக்கிறான்! ஆ! இதெவ்வளவு புத்தியீனம்! மனுஷர்களை ஏய்க்கிறதுபோல் சர்வேசுரனையும் ஏய்க்கலாமென்று நினைக்கலாமோ? ஆசாபாசம் எத்தனையோ பேரை மயக்கிப்போடுகிறது!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—யூதாஸ் கட்டிக்கொண்ட துரோகத்தை அருவருக்காதவன் ஒருவனுமில்லை. ஆனால் இக்காலத்திலே முதலாய்ப் பத்திமான்களைப்போல வேஷங்காட்டிச் சாவான பாவத்தோடே நன்மை வாங்கித் தங்கள் இருதயத்திலே குடிகொண்டிருக்கிற பசாசுக்கள் கையிலே இயேசுநாதரை ஒப்புக்கொடுக்கிற கிறீஸ்துவர்கள் இல்லையா? அத்தகைய தேவ துரோகத்துக்கு நாம் ஒருக்காலும் ஆளாகாதபடி சர்வேசுரன் கிருபை செய்வாராக. இதிலும் சொற்பமான கள்ள ஞானக் கிரிகைகளும் உண்டு. அவைகளுக்கும் நாம் பயந்து அருவருத்துத் தள்ளவேணும். அவையாவன:—வெளிக்குப் புண்ணியவானைப்போலும் பத்தியுள்ளவனைப்போலும் காண்பிக்கிறதுமன்றிச் சிரேஷ்டர்களும் மற்றச் சந்நியாசிகளும் பார்க்கும்போது ஒழுங்குகளைச் சரியாய் அநுசரிக்

றிறவனைப்போலே காண்பிக்கிறதும், தான் நினைத்த காரியம் அநுகூலமாவதற்குப் பொய்யான போக்குச் சொல்லுகிற தும் தனக்குப் புகழ்ச்சி உண்டாகும்படி தன்னைத்தானே தாழ்த்திக்கொள்ளுகிறதும் இதெல்லாம் கள்ள ஞானமல்லவோ? இவைகளில் ஏதாகிலும் நம்மிடத்தில் இல்லையா?

மனப்பற்றுதல்.—யூதாஸ் இஸ்கரியோத்து கட்டிக்கொண்ட துரோகத்தை அருவருத்துத்தள்ளி, இயேசுநாதருக்கு ஏற்பட்ட அவமானத்தைப் பரிகரிக்கவேணும்.

பிரதிக்கினை.—கபடமில்லாத நேர்மையான மனதோடே நடக்கவும் நமது கருத்துக்குச் சர்வேசுரன்தாமே சாட்சியாயிருக்கவும் ஆசைப்பட்டு உறுதியான புண்ணியத்தைத் தேடவேணும்.

3-ம் பிரிவு

இயேசுநாதர் அவனை நோக்கி: சிநேகிதனே, எதற்காக வந்தாய்? முத்தமிட்டு மனுமகனைக் காட்டிக்கொடுக்கிறயோவென்றர்
(மத். 26 ; லூக். 22)

தியானம்.—இவ்விடத்தில் எதைப்பற்றி அதிகமாய் ஆச்சரியப்படவேணும்? இயேசுநாதருடைய மனவாக்குக் கெட்டாத தயவையும் சாந்தகுணத்தையுமோ, அல்லது யூதாஸ் இஸ்கரியோத்துடைய கன்னெஞ்சத்தனத்தையோ? துரோகியான சீஷனை நோக்கி: என் சிநேகிதனேயென்று சொன்னதினால், அவர் இன்னமும் அவனுக்குப் பொறுத்தல் கொடுக்கச் சித்தமாயிருக்கிறதாகக் காண்பிக்கிறார். நீ எதற்காக வந்தாயென்று சொன்னதினாலே, அவன் தனக்குள்ளே பிரவேசித்துத் தன் துரோகத்தைக் கண்டுணரவும் அதை அருவருத்துத் தள்ளவும் இயேசுநாதர் அவனுக்கு உதவிசெய்கிறார். ஆனால் யூதாஸ் இஸ்கரியோத்து மனமிளகாமலிருக்கிறான்! அவன் மனந்திரும்ப இன்னமும் திவ்விய இரட்சகர் கடைசியாய்ப் பிரயாசப்பட்டு அவன் காட்டிக்கொடுக்க வந்தது தமக்குத் தெரியுமென்று அவனுக்குக் காண்பித்து அந்தத் துரோகத்தின் பேரில் அவனுக்கு அருவருப்பு உண்டாகும்படி அவனைப்

பார்த்து: என்ன, யூதாஸ்! முத்தமிட்டோ மனுமகனைக் காட்டிக்கொடுக்கிறாயென்றார். ஆனால் இதெல்லாம் விருதாவாயிற்று. அவன் தன் துரோகத்திலேயே நிலை யூன்றியிருந்தான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசு நாதர் காண்பித்த வாக்குக்கெட்டாத தயவானது அவர் பேரில் நாம் அதிகமதிகமாய்ப் பட்சம் வைக்க முகாந்தரமா யிருக்கவேணும். மேலும் நாம் சந்நியாசத்தில் எத்தனை வருஷகாலம் இருந்தாலும், அதிலே எத்தனை புண்ணியம் சம்பாதித்தோமென்று நினைத்துக்கொண்டாலும் துரோகி யான யூதாஸ் இஸ்கரியோத்தின் கண்டுபிடிக்கக்கூடாத கன்னெஞ்சத்தனத்தைப்பார்த்து நம்மை ஒருக்காலும் நம்பாமல் எப்போதும் இரட்சணியத்துக்குரிய பயத்தோ டிருக்கவேண்டியது. இந்தத் தியானத்துக்கு இதுவே பலனாயிருக்க மன்றாடுவோமாக.

சம்பாஷணை.—இதற்கு முந்தின பிரிவுகளில் சொல்லியிருக்கிற மனப்பற்றுதல் பிரதிக்கினைகளை விசேஷ விதமாய் உணர்ந்துபார்த்து நமது திவ்விய இரட்சகரோடே சம்பாஷணை செய்வோமாக.

தபசுகாலத்தின் முதல் வாரம்—வியாழன்

இயேசுநாதர் பிடிபட்டதும் அப்போஸ்தலர்கள் அவரைக் கைவிட்டு ஓடிப்போனதும்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதரைப் பிடிக்கவந்த சேவகர்கள் மல்லாக்காய் விழுந்துகிடக்கிறதையும் அப்போஸ்தலர்கள் தைரியமற்றவர்களாய் அவரைவிட்டு ஓடிப் போகிறதையும் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—நீ இயேசுநாதரை விட்டுப் பிரியாமல் சிநேகபந்தனங்களால் அவரோடே சேர்ந்திருக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் தமக்கு வரவேண்டியதெல்லாத்தையும் அறிந்திருந்ததினாலே, சேவகர்களுக்கு எதிராகப் போய்: நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோமென்றார்கள். அதற்கு அவர்: நான்தானே என்றார். இவ்வார்த்தையைக் கேட்டவுடனே, அவர்கள் எல்லாரும் பின்னிட்டுப்போய் மல்லாக்காய்த் தரையிலே விழுந்தார்கள். பின்னும் அவர்களை நோக்கி: என்னைத் தேடிவந்தீர்களானால், இவர்களைப் போக விட்டுவிடுங்கள் என்றார். அப்போது சீமோன் இராயப்பர் தம்மிடத்திலிருந்த வாளை உருவிப் பிரதான குருவின் ஊழியனான மால்கூஸென்பவனைத் தாக்கி அவனுடைய வலது காதற வெட்டினார். ஆனால் இயேசுநாதர் அவன் காதைத் தொட்டுச் சொஸ்தப்படுத்தினார் (அரு. 18; லூக். 22)

தியானம்.—இயேசுநாதர் தாம் பாடுபட ஆரம்பிக்கும் சமயத்திலே முக்கியமான புதுமைகளால் தமது தெய்வீகத்தின் அத்தாட்சியை இப்படிப் பற்பலவிதமாய்க் காண்பித்ததேனென்றால், அவர் தமக்குச் சித்தமானதினாலே பலியானாரென்று இசாயியாஸ் தீர்க்கதரிசி சொன்னதுபோல, தமது சித்தத்தின்படி தாம் பிடிபட்டுக் கட்டுண்டு மரணமடைவதை வெளியரங்கமாய்க் காண்பிக்கத் தக்கதாக இப்படிச் செய்தாரென்று சொல்லவேணும். அப்படி இல்லாவிட்டால், மனுஷர்களால் கொலையுண்ட தேவனை வணங்குகிறது எப்பேர்ப்பட்ட பயித்தியமென்று அஞ்ஞான துஷ்ட இராஜாக்கள் சொன்ன நிந்தைக்கு வேதசாட்சிகள் என்ன மறுமொழி சொல்லக்கூடும்? அவர் வல்லமையின் குறைச்சலினாலேயல்ல, மனுக்குலத்தின் பேரில் வைத்த சிநேகத்தினாலேயே அந்தக் கடூர மரணத்தை அடைந்தாரென்று அவர்கள் அவ்விராஜாக்களுக்கு எப்படி திருஷ்டாந்தப்படுத்தக்கூடும்?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மனுஷர்பேரில் சர்வேசுரனுக்கு உண்டான இரக்கத்தை நாம் அறிந்து அதைப் பெரிதாய்ப் பாராட்டுவதற்கு இந்தத் தியானம் வெகு தகுதியானது. புத்திக்கெட்டாத இந்தப் பரம

இரகசியங்களைச் சர்வேசுரன் வெளிப்படுத்தினதினாலே, நாம் அவைகளை தாழ்ச்சியோடே விசுவசிக்கவேண்டியதாயினும், அவருடைய வரப்பிரசாதத்தினால் மாத்திரமல்ல, நமது கண்ணுக்குக் காணப்படுகிற அற்புதங்களின் அத்தாட்சியினாலும் அவைகளைக் கண்டுணர்வதற்கு அவர் ஒத்தாசை செய்து இன்னமும் அவசரமானபோதெல்லாம் இத்தகைய அற்புத அத்தாட்சியைப் புதுப்பிக்கச் சித்தமாயிருக்கிறாரென்று அறியவேணும்.

மனப்பற்றுதல்.—நம்மைப்பற்றித் தம்மை மரணத்துக்குக் கையளித்து இதற்குப் பதிலாய் புத்தியுள்ள மனுஷரிடத்தில் நியாயமானதை மாத்திரம் கேட்கிற நமது ஆண்டவராகிய சர்வேசுரனுக்குத் தோத்திரமும் ஆராதனையும் செய்வோமாக.

பிரதிக்கினை.—நமதுமட்டில் மகா அன்பும் தயவுமுள்ள சர்வேசுரனுடைய சிநேகத்திலே இடைவிடாமல் வர்த்திக்கப் பிரயாசப்படுவோமாக.

2-ம் பிரிவு

அப்போது அவர்கள் இயேசுநாதரைப் பிடித்துக் கட்டினார்கள் (அரு. 18)

தியானம்.—யூதர்களுடைய குருட்டாட்டம் எவ்வளவு பெரிதென்று பார். அவர்கள் தயவும் வல்லமையும் நிறைந்த இந்த ஆச்சரியமான புதுமைகளை தங்கள் கண்களால் கண்டும் தங்கள் பாவக்கருத்தை விடாமல் அவர் பேரில் கைபோடத் துணிகிறார்கள்; அவர் தம்மை அவர்கள் கையில் ஒப்புக்கொடுத்ததினாலே, தங்கள் வசத்தில் அவர் அகப்பட்டுக்கொண்டாரென்று நினைக்கிறார்கள். ஆசாபாசமுள்ள மனுஷர்கள் மனந்திரும்புவதற்குப் புதுமை முதலாய்ப் போதாதென்று இவ்விடத்தில் நாம் காண்கிறோம். ஆசாபாசம் மனுஷனைக் குருடனாக்கி, அவன் புத்தியையும் மனச்சாட்சியின் குரலொலியையும் மாய்த்துவிடுகிறது. இதுநிற்க, இயேசுநாதர் காண்பித்த சாந்தகுணத்தைப் பார்: தம்மைப் பிடிக்கவும் சங்கிலிகளால் கட்டவும் ஜெத்

சேமானியென்னும் பூங்காவனத்திலே நின்று எருசலேம்
பட்டணம் வரையும் தம்மை அங்குமிங்கும் பிடித்துத்
தள்ளவும் ஆகடியம் பண்ணவும் விட்டுவிடுகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஜென்
மப்பாவ சங்கிலிகளும் நாம் செய்த கர்மப்பாவத்தின் சங்
கிலிகளும் நம்மைக் கட்டிப் பசாசுக்கு அடிமையாக்குகின்
றன. இந்த அடிமைத்தனத்தில் நின்று நம்மை மீட்க
மனுஷர்களாலும் சம்மனசுகளாலும் முதலாய் முடியாது.
இயேசுநாதர் ஒருவரால்மாத்திரம் இது கூடுமானதால்
நமதுபேரில் அவர் வைத்த சிநேகமானது அவரை இதற்கு
உடன்படுத்தினது. நம்மைச் சர்வேசுரனுடைய பிள்ளை
களாக்குவதற்காக நமது சங்கிலிகளினாலே அவர் கட்டப்
பட்டார். இதை நாம் அடிக்கடி நினைக்கிறோமோ? இதைத்
தக்கபிரகாரம் யோசித்துப் பார்க்கிறோமோ?

மனப்பற்றுதல்.—இதெல்லாம் கண்டு ஆச்சரியப்
பட்டு நன்றியறிந்திருப்போமாக. மகா உருக்கமான சிநேக
பந்தனத்தினாலே இயேசுநாதரோடே அந்நியோந்நியமாய்
ஒன்றித்திருக்க ஆசைப்படுவோமாக.

பிரதிக்கினை.—எந்நேரமும் நமதுபேரில் விழிப்பா
யிருந்து யாதொரு கிரமந்தப்பின பற்றுதல் நமது புத்தியை
மந்தப்படுத்தி நமது இருதயத்தைக் கன்னெஞ்சாக்காவண்
ணம் தடைசெய்வோமாக.

3-ம் பிரிவு

அப்போது சீஷர்கள் எல்லோரும் அவரை விட்டோடிப் போனார்கள் (மத். 26)

தியானம்.—அப்போஸ்தலர்கள் கொடுத்த வார்த்
தைப்பாடுகளும் உறுதியாய்ச் சொன்ன சொற்களும் என்ன
மாய் முடிந்ததென்று பார். அவரை ஒருக்காலும் விட்டுப்
போகிறதில்லையென்றும் அவரோடு சிறைச்சாலையில்
அடைக்கப்படவும் சாகவும் துணிந்திருக்கிறோமென்றும்
தங்களால் மிகவும் சிநேகிக்கப்பட்ட திவ்விய குருவுக்கு
எல்லாரும் உறுதிமொழி சொல்லியிருந்தது சரியே.

ஆனால் சம்பவித்ததென்ன? அவர் சேவகர்களிடத்தில்
அகப்பட்டுக்கொண்டாரென்று கண்டவுடனே, ஒருவரும்
தவறாமல் எல்லாரும் உரோசமின்றி அவரை விட்டோடித்
தப்பித்துக்கொண்டார்கள். நீங்கள் எல்லாரும் இன்றிர
வில் என் நிமித்தம் இடறல்படுவீர்கள், அதாவது, பிரமா
ணிக்கம் தவறிப்போவீர்களென்று இயேசுநாதர் சொன்ன
வார்த்தை இவ்விதமாக நிறைவேறலாயிற்று. என்னைப்
பிடித்துக் கட்டிச் சிறைச்சாலைக்கு இழுத்துக்கொண்டு
போக என்னை நான் கைவிடுவதினாலே, நீங்கள் என் தெய்
வீகத்தின்பேரிலும் சர்வ வல்லமையின்பேரிலும் விசுவாசம்
அற்றவர்களாய் என்னைக் கைவிட்டுவிடுவீர்களென்று
சொன்னாற்போலாயிற்று; ஏனெனில் ஆயனை அடிப்போம்,
ஆடுகள் சிதறப்படுமென்று எழுதியிருக்கின்றது. திவ்விய
இரட்சகர் தமது அப்போஸ்தலர்களுக்கு வெகுவாய்ச்
சொல்லியிருந்தவண்ணம் யுத்தத்துக்குமுன்னே ஜெபத்
தைக்கொண்டு தங்களைத் திடப்படுத்திக்கொள்ள அசட்டை
செய்து தங்கள் சொந்தப் பலத்தை நம்பியிருந்ததினாலே,
இத்தகைய பொல்லாப்பு அவர்களுக்குச் சம்பவித்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம்
அப்போஸ்தலர்களுடைய நிலைமையின்மையையும்
கோழைத்தனத்தையும் கண்டிக்கிறோம். அவர்கள் நமது
திவ்விய இரட்சகரைவிட்டு ஓடிப்போனதினாலே, அவரு
டைய திரு இருதயத்தை நிஷ்டூரமாய்க் கஸ்திப்படுத்தினார்க
ளென்று சினந்து கோபிக்கிறோம். ஆனால் இயேசுநாதரைப்
பின்சென்று நடக்கிறதில் மகா கோழைத்தனமுள்ளவர்
களாய் நிலையில்லாதிருக்கிற நம்மையல்லவோ நாம் கண்டித்
துக் கோபித்துக்கொள்ளவேணும்? அப்போஸ்தலர்களைப்
போல் நாம் நம்மைத்தானே நம்பி அடிக்கடி ஜெபஞ்செய்
யாததினிமித்தம் கொடுத்த வார்த்தைப்பாடுகளுக்கும்
செய்த பிரதிக்கினைகளுக்கும் அநேகம்விசை நாம் பிரமா
ணிக்கம் தவறி நடக்கிறதினாலே நம்மையல்லவோ நாம்
குற்றஞ்சாட்டவேணும்?

சம்பாஷணை.—அர்ச். இராயப்பர் கோழைத்தன
மாய் ஆண்டவரைவிட்டு ஓடிப்போனதை நினைத்துத் தமது

ஜீவியகால பரியந்தம் தம்மை ஒருபோதும் நம்பாமல் மகா தாழ்ச்சி விநயத்தோடிருந்ததைப் பார்த்து அவரோடே சம்பாஷணைசெய்து அந்தப் புண்ணியம் நம்மிடத்திலும் உண்டாகவேணுமென்று கேட்கவேணும்.

தபசுகாலத்தின் முதல் வாரம்—வெள்ளி

அன்னாஸென்பவனுடைய அரண்மனையிலிருந்து கைப்பாஸ் அரண்மனைக்கு இயேசுநாதரைக் கூட்டிக்கொண்டு போகிறார்கள்

ஆயத்தச் சிந்தனை.—சேவகர் நடுவிலே இயேசுநாதரைக் குற்றவாளியைப்போல் கட்டி எருசலேம் பட்டணத்துத் தெருவீதிகளில் கூட்டிக்கொண்டு போகிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் சேபம்.—தேவ ஊழியத்திலே நிலைமையும் இடைவிடாமல் வர்த்திக்கிற உதாரத்தனமும் நமக்குண்டாக வரப்பிரசாதம் கேட்போமாக.

முதல் பிரிவு

அவரை முந்தமுந்த அன்னாஸென்பவனிடத்திற் கூட்டிக்கொண்டு போனார்கள்; அவனிடத்திலிருந்து வேதபாரகரும் மூப்பருங் கூடியிருந்த கைப்பாஸ் அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள்; இவன் அவ்வருஷம் பிரதான குருவாயிருந்தான் (அரு. 18)

தியானம்.—ஒலிவேத்தென்னும் பூங்காவனத்திலே நமதாண்டவர் மனத்தாராளமாய் ஏற்றுக்கொண்டு, தமது மரணத்தால்மாத்திரம் முடிவடையப்போகிற நிந்தை அவமானங்கள் இதோ ஆரம்பமாகின்றன. அவர் தமது சத்துராதிகளுக்கு யாதொரு விக்கினஞ்செய்யாமல் அவர்கள் இஷ்டப்படி தம்மைக் கூட்டிக்கொண்டுபோகச் சம்மதித்து அவர்கள் இடுங் கட்டளைக்கெல்லாம் கீழ்ப்படிந்து வந்ததினாலே, அவர்கள் கையில் அகப்பட்டுத் தம்மால் ஒன்றுஞ்

செய்ய முடியாதவரைப்போலிருந்ததற்கு எருசலேம் பட்டணத்து வீதிகளும் பிரசித்தமான இடங்களும் அரண்மனை நீதிஸ்தலங்களும் சாட்சியாயிருக்கும். இம்மேரையாய் அன்னாஸ் வீட்டிலிருந்து கைப்பாஸ் அரண்மனைக்கும் யூதர்களுடைய பெரிய சங்கத்துக்கும் அதினின்று போஞ்சுபிலாத்தின் அரண்மனைக்கும் பின்னும் ஏரோது இராஜாவின் அண்டைக்கும் மறுபடியும் போஞ்சுபிலாத்தின் அரண்மனைக்கும் யாவரும் நகைக்கும்படி இழுத்துக்கொண்டு போகப்பட்டுக் கடைசியாய்க் கற்றூணில் கட்டுண்டு அடிபட நீதியாசன ஸ்தலத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டு அவ்விடத்தில் ஜனங்கள் யாவரும் காண ஒரு மேடையில் ஏற்றப்பட்டுப் பின்னும் கீழே இறக்கப்பட்டு இப்படிச் சாகுந்தனையும் கீழ்ப்படிதலுள்ளவராய்ச் சிலுவையைச் சுமந்து கபாலமலைக்கு நடந்துபோவார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய குரு காண்பித்த மாதிரிகையைக் கண்டுபாவித்து யாதொரு தடைசொல்லாமல் கீழ்ப்படிந்து சிரேஷ்டர் கட்டளைக்கு அமைந்து ஒரு மடத்திலிருந்து வேறொரு மடத்துக்குப் போகவும் ஒரு அலுவலைவிட்டு மற்றொரு அலுவலைப் பார்க்கவும் கற்றுக்கொள்ளுவோமாக. இந்த மாற்றங்கள் அடிக்கடி நேரிடலாம், சிலவேளை நமது சுபாவத்துக்கு வருத்தமாயிருக்கலாம், அவைகள் சோதனைகளுக்கும் பொறுமைக்கும் சலிப்புக்கும் காரணமாயிருக்கலாம். இத்தகைய சமயங்களில் இயேசுநாதரை ஏறெடுத்துப் பார்த்தால், இந்த விக்கினங்களெல்லாம் விலகிப்போம்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, தேவரீர் என்னைச் சிநேகிக்கிறீரென்று நான் அறிந்திருக்கிறதினாலே, உமது இஷ்டப்படி என்னை நடப்பியும் சுவாமி என்று அர்ச். அகுஸ்தீனோடே சொல்வோமாக.

பிரதிக்கினை.—சந்நியாச ஜீவியத்தின் சகல சந்தர்ப்பங்களிலும் தேவ பராமரிக்கையின் சித்தத்தை உணர்ந்து நல்ல மனதோடே அதை ஏற்றுக்கொண்டு சுபாவமாய் உண்டாகும் அருவருப்புக்கு இடங்கொடாமல் இருப்போமாக.

2-ம் பிரிவு

பெரிய குரு இயேசுநாதருடைய சீஷர்களைக்குறித்தும் அவருடைய போதகத்தைக்குறித்தும் அவரைக் கேள்வி கேட்டான். இயேசுநாதர் அவனுக்கு மாறுத்தாரமாகச் சொன்னதாவது: நான் சகலருக்கும் பிரசித்தமாய்ப் போதித்திருக்க, நீர் என்னை வினவுவதேன்? நான் போதித்ததைக் கேட்டவர்களிடத்தில் விசாரித்துக்கொள்ளுமென்றார் (அரு. 18)

தியானம்.—பெரிய குரு இயேசுநாதருடைய சீஷர்களையும் அவருடைய போதனைகளையும் குறித்துக் கேள்வி கேட்டிருந்தாலும், திவ்விய இரட்சகர் தமது சீஷர்களைப் பற்றின முதல் கேள்விக்கு ஒரு மறுமொழியும் சொல்லாமல் மவுனமாய் இருந்தார். ஐயோ! தமது சீஷர்களைக் குறித்து அவர் என்ன நல்ல அத்தாட்சி கொடுக்கக்கூடும்? அச்சமயத்தில்தானே ஒருவன் அவரை அறியேனென்று சொல்ல, மற்றவர்கள் தங்கள் குருவுக்கு நேர்ந்தது தங்களுக்கும் சம்பவியாதபடிக்கு ஓடிபொளிந்துகொண்டார்களே. ஆகிலும் இயேசுநாதர் இவர்களை மிகவும் சிநேகித்ததினாலே இவர்கள்பேரில் பொல்லாப்பு ஒன்றும் சொல்லாமல் மவுனமாயிருந்தார். தமது போதகத்தைக் குறித்தோவென்றால், அவன் கேட்ட கேள்வி அவரிடத்தில் குற்றம் பிடிக்கவேணுமென்கிற இரகசிய ஆசையைப்பற்றி வஞ்சகம் உள்ளதாயிருந்ததினால், நான் பிரசித்தமாய்ப் போதித்தேன், அந்தக் கேட்டிருந்த சாட்சிகளை வினவினால் தெரியும் என்றார். தம்மை நடுக்கேட்கிறவர்கள் குற்றம் பாராட்ட நினைத்திருக்கிற கருத்தைத் தாம் அறிந்திருக்கிறதாகவும், தாம் போதித்ததையும் படிப்பித்ததையும் சரியாய் விசாரித்துப் பார்த்தால், அதில் குற்றம் பிடிக்க இடம் இல்லையென்பதாகவும் இவ்வாறு அறிவிக்கலானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிறர் சிநேகத்தை முன்னிட்டு அல்லது ஒழுங்கினிமித்தம் நமது சகோதாருடைய நன்மைக்காகவும் மடத்துப் பொது நன்மைக்காகவும் ஒருவருடைய குற்றங்களை வெளிப்படுத்த வேண்டியிருந்தாலொழிய மற்ற வேளைகளில் பிறரைப்பற்றி

நன்மை சொல்ல இடமில்லாதபோது மவுனம் சாதிக்க வேண்டுமென்று நமது திவ்விய குரு இவ்விடத்தில் நமக்குப் படிப்பிக்கிறார். மேலும், பிறர் நம்மை நீதிப்பிரகாரம் நிதானிக்கவும், அவசியம் நேர்ந்தால் நாம் சொன்னவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுடைய அத்தாட்சியை எடுத்துக்கூறவும் வழிதேடிக்கொள்ளும்வண்ணம், நாம் சொல்லும் வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் எச்சரிக்கையாயிருக்கவும், நமது சம்பாஷணைகளில் மிதமாயிருக்கவும், பிரசித்தமாய்ச் சொல்லவேண்டியவைகளை முன்னாடியே கவனத்துடன் முஸ்திப்பு செய்துகொள்ளவும் நமக்குப் படிப்பிக்கிறார்.

மனப்பற்றுதல்.—மவுனம் சாதிக்கவேண்டியபோது மவுனமாயிருக்கவும், பேசவேண்டிய சமயத்தில், தகுந்த விதமாய்ப் பேசவும் கற்றுக்கொள்வதற்கான வரத்தைக் கேட்போமாக.

பிரதிக்கினை.—வெளி மனிதரோடு நாம் பேசும்போது எச்சரிக்கையும் விவேகமுமுள்ளவர்களாயிருக்கும்படி நமது சகோதரரோடே பேசும்போது எச்சரிக்கையும் விவேகமுமுள்ளவர்களாயிருக்கப் பழகவேணும்.

3-ம் பிரிவு

இயேசுநாதர் இப்படி மறுமொழி சொன்னபோது, அவ்விடத்திலிருந்த சேவகரில் ஒருவன் பிரதான குருவுக்கு இப்படி மறுமொழி சொல்லுகிறயோவென்று அவர் கன்னத்தில் அறைந்தான். இயேசுநாதர் அவனுக்கு மறுமொழியாக, நான் தகாத விதமாய்ப் பேசியிருந்தால், அதற்கு அத்தாட்சிகொடு; ஆனால் நான் தகுந்தபிரகாரம் பேசினேனாகில், நீ என்னை அடிப்பானேனென்றார் (அரு. 18)

தியானம்.—பரலோக இராஜாவாகிய இயேசுநாதருக்குச் செய்யப்பட்ட இந்த நிந்தை அவமானம் எவ்வளவு கனமானதென்று உன்னால் ஆனமட்டும் யோசித்துப்பார். அவர் கன்னத்தில் அடிபடுகிறார்; ஒருவன் தனக்குச் சமமானவனிடமிருந்து அடையக்கூடுமான நிந்தைகளிலெல்

லாம் இது மகா அவமானத்துக்குரியது. பெரிய சபை நடுவில், ஒரு ஊழியன் கையால், குற்றத்துக்காக கண்டிக்கப்படும் மேரையாய், அளவில்லாத ஞானமும், சகலத்துக்கும் சிருஷ்டிகருமான ஆண்டவர் ஒரு நீச மனிதனால் அடிபடுகிறார்! இவ்வளவு நிஷ்டூரத்துக்குரிய அவமானத்தை அவர் எவ்விதம் பழிவாங்குகிறாரென்று பார். அற்பசொற்பக் கோபமும் காட்டாமல், மதுரமும் விவேகமும் நிறைந்த இன்பமான மறுமொழி சொல்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உனது திவ்விய மாதிரிகையானவரது நடத்தையையும் உன் நடக்கையையும் ஒப்பிட்டுப்பார். அவருக்கு நேர்ந்ததைப் போலொத்த சம்பவங்களிலல்ல (அத்தகைய சம்பவங்கள் உனக்கு நேரிடமுடியாது) ஆனால் பிறர் உனக்குச் செய்கிற அல்லது அவர்கள் உனக்குச் செய்ததாக நீயே நினைத்துக்கொள்கிற அற்ப சொற்ப நிந்தைகளின் மத்தியில் என்ன பொறுமை மதுரகுணம் காட்டுகிறாய்? ஆயினும், அவருக்குமுன்பாக நீ யார்?

சம்பாஷணை.—உன் திவ்விய இரட்சகரோடே சம்பாஷணை செய்வாயாக. அவர் அடைந்த நிந்தை அவமானங்களைக் கண்டு அனுதாபப்பட்டு அவரது நேசத்தினிமித்தம் எவ்வித நிந்தை அவமானங்களையும் அநுபவிக்க மனதாயிரு.

தபசுகாலத்தின் முதல் வாரம்—சனி

கைப்பாஸ் அரண்மனையில் இயேசுநாதர் குற்றஞ்சாட்டப்பட்டு வினவப்படுகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் கை இரண்டும் கயிற்றால் கட்டப்பட்டு அநீத நடுவருக்குமுன்பாக நிற்கிறதைக் காண்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—உறுதியான புண்ணியத்தையும் விசேஷமாய் மிகுந்த மனப் பரிசுத்ததனத்தையும் கேட்பாயாக.

முதல் பிரிவு

பிரதான குருப்பிரசாதிகளும் ஆலோசனைக் கூட்டத்தார் அனைவரும் இயேசுநாதரைக் கொலைசெய்யும்பொருட்டு அவர்பேரில் பொய்ச்சாட்சிகளைத் தேடியும் அகப்படவில்லை (மத். 26)

தியானம்.—இயேசுநாதருடைய கொடிய விரோதிகள் அவர்பேரில் குற்றஞ்சாட்டும்படி அநேக சாட்சிகளையும், இன்னும் பொய்ச்சாட்சிகளையும் ஏவிவிட்டிருந்துங்கூட, ஒரு பாவத்தின் அல்லது குற்றத்தின் நிழல்முதலாய் அவரிடம் காணக்கூடுமாயில்லை. அவரது நடத்தையின் பரிசுத்ததனம் எத்தகையதென்று இதனால் விளங்குகிறதல்லவா?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வேதவிரோதிகள் நுணுக்கமாய் ஆராய்ந்துபார்த்தாலும், ஓர் சந்நியாசியுடைய வார்த்தைகளிலும் கிரிகைகளிலும், அந்தரங்க சீவியத்திலும் பகிரங்க சீவியத்திலும் அற்பமேனும் குறை கண்டுபிடிக்கக்கூடாதவிதமாய் நடந்துகொள்ளவேண்டும். நீ இவ்வாறு நடந்துவருகிறாயென்று உன் மனச்சாட்சி சொல்லக்கூடுமா? அவ்விதம் சொல்லுமென்று நினைக்கிறாயாக்கும்; ஆனால், மற்றவர்கள் உன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள், என்ன சொல்கிறார்கள், உனக்கு ஆத்திரம் உண்டாகுமென்று அவர்கள் பயப்படாவிடில் உன் முகதாவிலேயே என்ன சொல்வார்களென்று உனக்குத் தெரிந்திருக்குமாகில், உன்பேரில் யாதொரு குறையில்லையென்று நம்புவாயா? நிற்க, மற்றவர்கள் உன்பேரில் யாதொரு குறை சொல்லாவிடினும், உன் இருதயத்தையும் கருத்தையும் அறிந்திருக்கிற சர்வேசுரன் சமுகத்திலும் குற்றமில்லாதவனாய் இருக்கிறாயோ?

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் சமுகத்திலே என்னைத்தானே தாழ்த்திக்கொள்வேனாக. ஆ! என் திவ்விய மாதிரிகையாயிருக்கிற இயேசுவே, தேவரீருக்கும் அடியேனுக்கும் எவ்வளவோ தூர வித்தியாசம்! நான் எத்தனையோ பாவங்களைக் கட்டிக்கொண்டவன்! தினந்தோறும் எத்தனையோ குற்றங்களுக்கும் அசட்டைத்தனத்துக்கும்

ஆளாகிறேன் ! ஆயினும், எனக்குத் தெரிந்தவைகள் வெகு சொற்பமே. நான் செய்த பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டு உமது அளவில்லாத தயவை நம்பி உமது இரக்கத்தை இரந்து மன்றாடுகிறேன், சுவாமி.

பிரதிக்கினை.—சர்வேசுரன் சமுகத்திலும் மனுஷர் முன்பாகவுங் குற்றம் ஒன்றும் செய்யாதிருக்க இன்றைக்கு என்மட்டில் மிகவும் ஜாக்கிரதையாயிருப்பேன்.

2-ம் பிரிவு

பெரிய குரு எழுந்திருந்து அவரை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சொல்லும் சாட்சிக்கு நீ யாதொரு மறுமொழியும் சொல்லுகிறதில்லையோவென்றான். அதற்கு இயேசுநாதர் ஒன்றும் சொல்லாமல் மவுனமாயிருந்தார் (மத். 26)

தியானம்.—இந்தச் சமயத்திலே உன் திவ்விய குருவாகிய இரட்சகருடைய மவுனத்தைக் கண்டு ஆச்சரியப்படுவாயாக. நியாயசபையில் பகிரங்க அவமானமும், கீர்த்திபங்கமும் அடைந்து, மரண ஆபத்து நெருங்கி இருக்கிற இச்சமயத்தில் அவர் தமதுபேரில் குற்றம் இல்லையென்று எடுத்துரைப்பது அவரது கடமையெனத் தோன்றுகிறதல்லவா? அன்றியும் அவர் தமது நியாயத்தை எடுத்துக்கூறி ஜெயங்கொள்வது வெகு சுலபமாயிற்றே. ஆயினும், அவர் அதையெல்லாம் பிதாவினிடம் ஒப்படைத்துவிட்டு, மவுனமாயிருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விடத்திலும் குருவுக்கும் சீஷனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைப் பார். குருவோவெனில் தமதுபேரில் சாட்டும் அபாண்டங்களின் மத்தியில் மவுனம் சாதிக்கிறார். அவருடைய சீஷனென்று மகிமை பாராட்டிக்கொள்கிற நான், எனக்குக் கிடைக்கும் நியாயமான கண்டிப்புகளிலும், அன்பாய்ச் சொல்லப்படும் புத்திமதிகளிலுங்கூட முகங்கோணி, சிலசமயம் உண்மைக்கு விரோதமாகவே என்னைக் குற்றம் இல்லாதவனென்று தீர்க்க வழிதேடுகிறேனல்லவா?

மனப்பற்றுதல்.—என் பொய்யான போக்குகளையும் என் ஆங்காரப் புத்தியையும் தமது மவுனத்தினால் பரிகரிக்கிற இயேசுநாதருக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்வேனாக.

பிரதிக்கினை.—என்னைத் திருத்திக்கொள்ளும்படி பிறர் சொல்லும் புத்தியை சாக்குப்போக்கு சொல்லாமல் தாழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வேன். என் சுயபட்சத்துக்கு விரோதமாய் அவர்கள் என்ன சொன்னபோதிலும், மவுனத்தையும் சாந்தகுணத்தையும் காண்பிப்பேனாக.

3-ம் பிரிவு

பெரிய குரு அவரை நோக்கி: நீ சர்வேசுரனுடைய சுதனாகிய கிறீஸ்துவாய் இருக்கிறயோவென்று எங்களுக்குச் சொல்லச் சுயஞ்சீவியரான சுவாமி ஆணையால் உனக்குக் கட்டளையிடுகிறேனென்றான். அதற்கு இயேசுநாதர்: நீர் சொல்லுகிறபடி அவர் நான்தானென்றார் (மத். 26; மாற். 14)

தியானம்.—இதில் இயேசுநாதர் நமக்கு மகத்தான புத்தி ஒன்று படிப்பிக்கிறார்: தம்மைப்பற்றிய கேள்விகளுக்கு மவுனம் சாதிக்கிறார்; ஆனால் தமது பரம பிதாவின் மகிமை, ஆத்துமங்களின் இரட்சணியம் அல்லது விசுவாசத்தைச்சார்ந்த கேள்விகளுக்கு அவர் வாய்திறந்து உண்மையை வெளிப்படுத்துகிறார். அதினால் தமது உயிருக்குச் சேதம் வருமென்று அவர் அறிந்திருந்தாலும், ஒன்றும் மறைக்காமலுங் குறைக்காமலும் நேரான கருத்தோடே உள்ளபடி வெளிப்படுத்துகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தக்க சமயத்திலே மவுனமாயிருக்கவும் வேண்டிய சமயத்திலே பேசவும் அறிந்திருக்கிறது பலத்த சாஸ்திரமாமே. இதற்கு ஆழ்ந்த யோசனையும் அமர்ந்த புத்தியும் உறுதியான குணமும் வேண்டியது. இதெல்லாம் என்னிடத்தில் முழுதும் இல்லாததினாலே அல்லது குறைவாயிருக்கிறதினாலேயல்லவோ என் பேச்சு வார்த்தைகளில் அநேக தவறுதல்களுக்கு ஆளானேன். சிலவிசை கபடமாய் மறைத்தும்,

பேசவேண்டியபோது மவுனமாயிருந்தும் அல்லது முழுதும் வெளிப்படுத்தாமல் உபாயமாய்ப் பேசியும் உண்மைக்குத் துரோகம் செய்தேன்.

மனப்பற்றுதல்.—ஆ! என் சர்வேசுரா, உமது மெய்யான பிள்ளைகளின் நேர்மைக்கும் வேதசாட்சிகளுடைய கபடற்றதனத்துக்கும் மன உறுதிக்கும் நான் எவ்வளவோ தூரமாயிருக்கிறேன்! உமது தேவ வரப்பிரசாத உதவியினாலே அவைகளை நான் அடையப் பிரயாசப்படுவேன். எனக்கு ஒத்தாசை செய்தருளும் சுவாமி.

பிரதிக்கினை.—நான் பேசுவதற்குமுன்னே யோசித்துப் பார்ப்பேனாக. வேதத்தைக் குறித்தும் என் அலுவலின் கடமைகளைக் குறித்தும் பிறர் ஈடேற்றத்தைக் குறித்தும் உண்மையைச் சொல்லவேண்டியபோது பயமின்றிச் சொல்வேனாக.

சம்பாஷணை.—எனது அன்பான இயேசுநாதரோடே சம்பாஷணைசெய்து அவருடைய திருப்பாடுகளின் சம்பவங்களை எல்லாம் தியானித்து மிகுந்த ஞானப் பிரயோசனத்தை அடைய அவரிடத்தில் வரப்பிரசாதம் கேட்பேனாக.

தபசுகாலத்தின் 2-ம் வாரம்—ஞாயிறு

இயேசுநாதர் தேவதூஷணம் சொன்னதாகக் குற்றம் சாட்டப்படுகிறர்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் சாவுக்குப் பாத்திரவானென்று அநியாயமாய்ச் சொல்லுகிறவர்கள் நடுவில் தாழ்ச்சியோடேயும் சாந்தகுணத்தோடேயும் நிற்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—எப்போதும் அதிகமதிகமாய் இயேசுநாதரை அறியவும் சிநேகிக்கவும் வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

அப்போது பெரிய குரு தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு இவன் தேவதூஷணஞ் சொன்னானே! இன்னமும் நமக்குச் சாட்சிகள் வேண்டுவதேன்னவென்றான் (மத். 26)

தியானம்.—கைப்பாசும் அவனைச் சேர்ந்தவர்களும் காண்பித்த கள்ளஞானத்தை யோசித்துப்பார். அவர்கள் தேவபத்தி சுறுசுறுப்பின் வேஷம்போட்டு இரட்சகர் பேரில் வைத்திருந்த தீராப் பகையையும் அவரைக் கொலைசெய்ய நெடுநாளாய்க் கொண்டிருந்த கருத்தையும் மறைக்கிறார்கள். ஆனால் தங்களுக்கு விரோதமாய் ஜனங்கள் எழும்பாவண்ணம், நியாயம்போலே தோன்றும் ஒரு முகாந்தரம் அவர்களுக்கு வேண்டியதாயிருந்தது. தாம் மெய்யாகவே தேவ குமாரனோ இல்லையோவென்று சொல்லும்படி இயேசுநாதரைக் கேட்டால், இந்தப் போலி நியாயம் கிடைத்துவிடுமென்று கைப்பாஸ் நிச்சயமாய் எண்ணியிருந்தான். அவர் இல்லையென்பாராகில், இவன் ஜனங்கள் முன்பாகத் தன்னைத் தேவனென்று சொல்லிக்கொண்டு வந்தானே; இப்போது இல்லையென்கிறானென்று அவரை மெத்தப் பொய்யனாகக் குற்றஞ் சாட்டலாமென்றும், அவர் ஆமென்பாராகில், தேவதூஷணனாக அவர் பேரில் குற்றஞ்சாட்டி அத்தேவதுரோகத்தைப்பற்றித் தனக்குண்டான கஸ்தியின் அடையாளத்தை வெளியரங்கமாய்க் காண்பிக்கலாமென்றும் நினைத்திருந்தான். ஆசாபாசமானது தான் நினைத்த காரியத்தை நிறைவேற்ற எவ்வளவோ உபாயமுள்ளதென்று பார்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதிலும் சொற்பமான காரியத்திலே முதலாய்க் கபடமான எண்ணத்தோடிருக்கவும் மனிதர்களையும் சகோதரர்களையும் சிரேஷ்டர்களையும் ஏய்க்கவும் நல்லவனைப்போல வெளியிற் காண்பித்துக் குற்றமான கருத்தை மறைக்கவும் என் ஆசாபாசத்துக்குப் பிரியமான நியாயமில்லாத காரியத்தை என் புத்திக்கு நியாயம்போல காண்பிக்கவும் சிலவிசை

எனக்குச் சம்பவிக்கவில்லையோ? ஆனால், சர்வேசுரன் எனக்குத் *தீர்ப்புச் சொல்லவேண்டியவராயிருக்கையில், இதெல்லாம் என்னத்துக்கு உதவும்? இதினாலே வரும் லாபமென்ன?

மனப்பற்றுதல்.—சொற்பக் காரியத்திலே முதலாய் எவ்வித கபடத்தையுங் கள்ளத்தனத்தையும் இயேசுநாதர் பாதத்திலே அருவருத்துத் தள்ளுவோமாக.

பிரதிக்கினை.—என் பேச்சு வார்த்தைகளிலும் கிரிகைகளிலும் உள்ள கருத்தை சர்வேசுரன் சமுகத்திலே அடிக்கடி சோதித்துப் பார்ப்பேனாக.

2-ம் பிரிவு

இவன் சொன்ன தேவ தூஷணத்தை இப்போதுதானே கேட்டீர்களே; உங்களுக்குத் தோன்றுகிறதென்னவென்று கேட்க, எல்லாரும் ஒருமொழிப்பட இவன் சாவுக்குப் பாத்திரவானென்றார்கள் (மத். 26)

தியானம்.—அநியாயமான இந்த மரணத் தீர்ப்பு யாரால், யாருக்கு விரோதமாய், என்ன காரணத்தினிமித்தம் விதிக்கப்பட்டதென்று யோசித்துப்பார். பகையாளிகளாலும், ஆசாபாசங்களுக்கு அடிமைகளான நியாயாதிபதிகளாலும், மகா பரிசுத்தருக்கு விரோதமாய், அவர் உண்மையை வெளிப்படுத்தி உத்தம நீதியின் கடமையை நிறைவேற்றினதினிமித்தம் விதிக்கப்பட்டது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உலகத்தில் எத்தனையோவிசை குற்றமில்லாதவர்களைக் குற்றஞ்சாட்டிக் கபடமாய் உபத்திரவப்படுத்துகிறார்கள். சர்வேசுரன் தமக்கு மாத்திரம் தெரிந்திருக்கிற தமது கருத்தும் தயவும் இரக்கம் நிறைந்த சித்தமும் நிறைவேறத்தக்கதாக இப்பேர்க்கொத்த காரியங்கள் நடக்க பார்த்துக்கொண்டிருக்கிறார். இவ்விடத்திலும் இந்தப்பிரகாரந்தான் சம்பவித்தது. மனுஷாவதாரம் எடுத்த தேவசுதன் தமது

உயிரைப் பலியாக ஒப்புக்கொடுத்துத் தமது பிதாவின் மகிமைக்குப் பரிகாரம் பண்ணவும் மனுஷர்களை இரட்சிக்கவும் சித்தமாயிருக்கிறார். கைப்பாஸ் இதற்கான வழிசெய்கிறான். மகா அநியாயமான மரணத் தீர்வையால் நம்மெல்லோருக்கும் நித்திய சீவியத்தின் வாசல் திறக்கப்படுகின்றது.

மனப்பற்றுதல்.—ஞானத்தினுடையவும் தேவ பராமரிக்கையினுடையவும் ஆழமறியாத பாதாளமே! இயேசுநாதருடைய மரணத்துக்கு மெய்யான காரணமாகிய பாவத்தை நான் திரும்பச் செய்கிறதினாலே தேவ துரோகியான கைப்பாசென்பவன் இட்ட மரணத்தீர்வையை இன்னமும் புதுப்பிக்கிறேன்! மனுஷர் மட்டிலும் விசேஷமாய் என் மட்டிலும் அவருடைய வாக்குக்கெட்டாத தயவை என்னென்று சொல்வேன்!

பிரதிக்கினை.—எனக்கு மறுபடியும் சீவியத்தைத் தரும்பொருட்டு மரணம் அடையச் சம்மதித்தவருக்காக இனி நான் சீவிப்பேனல்லாமல் மற்றப்படியல்ல. தேவ பராமரிக்கையின் திருக்கரங்களிலே என்னை முழுதும் எப்போதைக்கும் எக்காரியத்திலும் கையளிக்க மனதாயிருக்கிறேன், சுவாமி.

3-ம் பிரிவு

அவர்கள் எல்லாரும் ஒருமிக்க இவன் மரணத்துக்குப் பாத்திரவானென்று சொன்னார்கள் (மத். 26)

தியானம்.—அர்ச். இன்னப்பர் சொல்லியிருக்குமாப்போல், பழைய ஆதாமாகிய ஆதித்தகப்பனும் அவ்வு சந்ததியாரனைவரும் கட்டிக்கொண்ட எண்ணிறந்த பாவங்களுக்குப் பரிகாரம்பண்ண இயேசுநாதர் அவைகளைத் தமதுபேரில் சுமந்துகொண்ட புதிய ஆதாம் என்று யோசிப்போமாகில், அப்போது இவர் மரணத்துக்குப் பாத்திரவானென்று மெய்யாகவே சொல்லலாம். இது முகாந்தரமாகவே நித்திய பிதாவும் தமது திருக்குமாரன் மரணத்

துக்குப் பாத்திரவானென்று அவர்கள் விதித்த தீர்வையை ஒப்புக்கொள்ளுகிறார்; இயேசுநாதரும் வாய் திறவாமல் பட்சத்தோடு அதை ஏற்றுக்கொள்ளுகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆ! என் ஆத்துமமே, ஆதித்தகப்பனிடமாய் நீ பாவம் கட்டிக்கொண்டதுந்தவிர, நீயாகவே பாவம் கட்டிக்கொண்டிருக்கிறாய்; ஆகையால் உன்னைப்பற்றி இயேசுநாதர் மரணம் அடையப்போகிறார். சாவுக்குப் பாத்திரவானென்கிற தீர்வையானது தேவநீதியால் உன்பேரில் இடப்பட்ட தீர்வையாமே. இந்தத் தீர்வை உன்பேரில் நிறைவேற இருக்கையில், மனுஷாவதாரம் எடுத்த தேவசுதன் உனக்குப்பதிலாக இந்தத் தீர்வையை ஏற்றுக்கொண்டு மரணத்துக்குள்ளாகி இவ்விதமாய் உனக்கு நித்திய சீவியத்தைத் தந்தருளுகிறார்.

மனப்பற்றுதல்.—ஆ! என் இயேசுவே, என்னைப் பற்றிப் பலியான உமது சிநேகத்துக்காக நானும் மரணம் அடைவேனாகவென்று வனவாசியான ஒரு மகாத்துமா சொன்னதுபோல நானும் சொல்வேனாக.

பிரதிக்கினை.—தேவசிநேகத்தினால் பற்றியெரிந்த இருதயத்தில் நின்று புறப்பட்ட இந்த ஆசை என்னிடத்திலும் நிறைவேற இடைவிடாத தபசினாலே நான் பிரயாசப்படுவேனாக. இன்றுமுதல் என்னைத்தானே பரித்தியாகம் பண்ணுவதற்குக் கிடைக்கும் சமயத்தை விடாதிருப்பேனாக.

சம்பாஷணை.—சகல நீதியும் அவருக்குச் செலுத்தப்படவேண்டிய நீதியாசன சபையிலேயே அவருக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்ட பயங்கரமான வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த பரிசுத்த சம்மனசுகளோடே சம்பாஷணை செய்வோமாக.

தபசுகாலத்தின் 2-ம் வாரம்—திங்கள்

பாவத்தினால் வந்த பொல்லாப்பை நினைத்துத் தபசு செய்வதற்கான முகாந்தரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—உங்கள் பாவங்கள் பொறுக்கப்படும்படி மனந்திரும்பித் தபசு செய்யுங்களென்று அர்ச். இராயப்பர் எருசலேம் பட்டணத்தாருக்குச் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—இவர் கற்பித்தபிரகாரம் நடக்கும்பொருட்டு மனத்திடனை அடைய வரங்கேட்பாயாக.

முதல் பிரிவு

எண்ணிக்கையில்லாத நமது பாவங்களின்பேரில்

தியானம்.—நீ புதுநன்மை வாங்குமுன்னும் வாங்கினபின்னும், சந்நியாசத்தில் பிரவேசிக்குமுன்னும் பிரவேசித்தபின்னும், நீ சீவித்த வருஷங்களையும் அங்கங்கே வாசம்பண்ணின இடங்களையும் அவ்விடங்களில் நீ செய்த பாவங்களையும் உன் புத்தியில் நன்றாய் நினைத்துப்பார். தேவ கற்பனைகளையும் திருச்சபைக் கட்டளைகளையும் நீ கொடுத்த வார்த்தைப்பாடுகளாலும், உனக்கு நியமித்த அலுவல்களாலும், உத்தியோகங்களாலும் ஏற்பட்ட கடமைகளையும் ஒவ்வொன்றாய் ஆராய்ந்துபார்த்தால், நீ செய்த எண்ணிக்கையில்லாத பாவங்களையும் குற்றங்களையுங் கண்டு பிரமித்து நீயே ஆச்சரியப்படுவாயல்லவோ? சர்வேசுரன் இவைகளையெல்லாம் அறிகிறாப்போல் நீயும் அறிந்தால் என்ன சொல்லமாட்டாய்?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆதாம் செய்த ஒரே சாவானபாவத்தினிமித்தம் அவனும் அவன் சந்ததியாரும் தேவ இஷ்டப்பிரசாதத்தின் வரங்களை இழந்து சாவுக்குப் பாத்திரவான்களானார்கள். சர்வேசுரனுக்கு மிகவும் உகந்தவர்களான மோயீசன் எசேக்கியாஸ் முதலானவர்கள் கட்டிக்கொண்ட ஒரே அற்பப் பாவத்துக்

காக மறுலோகத்திலே சொற்பப் பாவங்களுக்கு அநுபவிக்கவேண்டிய வேதனைகளின் அற்பச் சாயலான மகா பயங்கரமான தண்டனையை இவ்வுலகத்திலேதானே அநுபவித்தார்கள். அப்படியிருக்க, கணக்கில்லாத பாவங்களைக் கட்டிக்கொண்ட எனக்கு எம்மாத்திரம் ஆக்கினை வரவேண்டியது! நான் அவைகளை மறந்துபோனாலும், சர்வேசுரன் அவைகளில் ஒன்றையாகிலும் மறந்துபோகமாட்டார்; ஒரு அற்ப வீண்வார்த்தை முதலாய் விடாமல் கணக்குக் கேட்டுத் தண்டிப்பாரென்று இயேசுநாதர்தாமே உறுதியாய்த் திருவுளம்பற்றியிருக்கிறார். நீ இடைவிடாமல் தபசு செய்ய எத்தனையோ நியாயம் உண்டு! விசேஷமாய் இந்தப் பரிசுத்த காலம் அதற்குத் தகுதியுள்ளதல்லவோ? விசேஷ வரப்பிரசாதங்களைக்கொண்டு அதை நீ எளிதாய் அநுசரிக்கலாம். இப்பொழுதே அநுக்கிரக காலம் (2 கொரி. 6, 2).

மனப்பற்றுதல்.—நீ செய்த பாவங்களையும் குற்றங் குறைகளையும் தாழ்ச்சியோடே சர்வேசுரனிடத்தில் உச்சாரணஞ் செய். இவைகளுக்கு மெய்யாகவே தபசு செய்ய நல்ல மனதைக் காண்பி. இந்த ஆசையை உதாரமாய் நிறைவேற்றத் தேவ ஒத்தாசையைக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—தபசு காலத்தின் முதல் வாரத்தில் நீ செய்ததுபோலவே, இந்த இரண்டாம் வாரத்திலும் அன்றன்று நீ செய்யவேண்டிய ஒறுத்தல் முதலிய தவமுயற்சிகளைத் திட்டப்படுத்திக்கொள்.

2-ம் பிரிவு

நமது பாவங்களால் சர்வேசுரனுக்கு வரும் நிந்தையவமானம்.

தியானம்.—ஒவ்வொரு சாவான பாவத்தினால் சர்வேசுரனுக்கு நாம் மூன்றுவித அவமானஞ் செய்கிறோம். அளவில்லாத மகிமையுள்ள சர்வேசுரனுக்கு இது விரோதமானதினால் இதில் ஒவ்வொன்றும் அளவில்லாத பொல்லாப்பாயிருக்கும்:—முதலாவது, சர்வேசுரன் ஒரு கட்டளையிடும்போது, மனுஷன் அதைச் செய்யாததினாலே அவருக்-

குக் கீழ்ப்படியாமல் அவரை எதிர்க்கிற பொல்லாப்பு; 2-வது, சர்வேசுரனையும் அவருடைய கற்பனைகளையுஞ் சட்டைபண்ணாமல் அநித்தியமும் நீசத்தனமும் அநேகவிசை வெட்கத்துக்குரியதுமான தன் சுய திருப்தியை நாடுவதினால் அவருக்கு வருவிக்கிற நிந்தை அவமானமாகிய பொல்லாப்பு; 3-வது, சர்வேசுரன் கொடுத்த கொடைகளைக்கொண்டுதானே அவருக்குத் துரோகஞ் செய்கிறதினாலே நன்றிகெட்ட துரோகம் ஆக மூவித பொல்லாப்பாம். ஒரு அற்பப் பாவத்தினாலே முதலாய் நாம் சர்வேசுரனுக்கு இப்போது சொன்ன மூவித நிந்தை அவமானஞ் செய்கிறோம்; இதின் பொல்லாப்பு குறைந்தது என்பது உண்மை; ஆயினும் ஒரே அற்பப் பாவத்தைக்கொண்டு நரகவாசிகள் எல்லாரையும் சதாகாலமும் சர்வேசுரனை ஆராதித்துத் தோத்திரம் பண்ணும் மோக்ஷவாசிகளாக்கக் கூடுமாயிருந்தபோதிலும், அப்பேர்க்கொத்த அற்பப் பாவத்தை முதலாய்ச் செய்யக்கூடாது. ஏனெனில், படைப்புண்ட வஸ்துக்கள் செய்யும் தோத்திரமும் ஸ்துதியும் ஒரே அற்பப் பாவத்தினால் சர்வேசுரனுக்கு வரும் நிந்தை அவமானத்துக்குச் சரியான பரிகாரம் ஆகமாட்டாது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் கர்த்தாவான சர்வேசுரனுக்கு நீ செய்யும் நிந்தை அவமானத்தின் பொல்லாப்பு எவ்வளவென்று இப்போது அறிந்திருக்கிறாய். ஆகிலும் அவனவன் அடைந்த நன்மை உபகாரத்துக்கும் ஞான ஒளிக்கும் தக்கது அந்தப் பொல்லாப்பும் அதிகரிக்குமென்று விசுவாசமும் நியாயமும் படிப்பிக்கின்றன. அப்படியிருக்க, நீ செய்த மிகுதியான அற்பப் பாவங்களின்மட்டில் என்ன நினைக்கவேணும்? இவைகளின் எண்ணிக்கையைக் கணக்கிடக்கூடுமானவனார்? ஆகையால் இந்தத் தபசுகாலத்திலேயாகிலும் நீ தவஞ்செய்ய வேண்டியதில்லையோ? நாம் செய்த பாவங்கள் நிவாரணமாவதற்காக தபசுகாலம் வந்ததென்று குருக்கள் இக்காலத்தில் செய்யும் ஜெபத்திலே சொல்லியிருக்கின்றது.

மனப்பற்றுதலும் பிரதிக்கினையும்.—இதின் முதல் பிரிவில் சொல்லியிருக்கிறதுபோல செய்யவும்.

3-ம் பிரிவு

நமது பாவங்களால் இயேசுநாதருக்குச் செய்யப்படும் பொல்லாப்பு

தியானம்.—இசாயியாஸ் தீர்க்கதரிசி சொல்லுகிறது போல, இயேசுநாதரை மிகுந்த கஸ்தி நிறைந்த மனுஷன் ஆக்கினது நாம் செய்த பாவங்கள்தான். மனுக்குலம் செய்த பாவங்களைப் போக்க அவர் அவைகளைத் தமதுமேற் சுமந்துகொண்டார். அதுமுதல் சர்வேசுரன் தமது நீதிப் பிரகாரம் பழிவாங்க அவரைக் குற்றவாளியாய் எண்ணி நடத்தினதொழிய மற்றப்படியல்ல. நாம் செய்த பாவங்களுக்காக நொறுக்கப்பட்டாரென்று இசாயியாஸ் தீர்க்கதரிசி வசனித்தார். அவரைக் கட்டிவைத்து அடித்ததும் முண்முடி சூட்டினதும் கன்னத்தில் அறைந்ததும் அவர் திருமுகத்தில் காறித் துப்பினதும் அவரைச் சிலுவையில் ஆணிகளால் அறைந்து கொலைசெய்ததும் நீ செய்த பாவங்கள்தானே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—என் சீவியகாலத்தில் இதுவரையிலும் எத்தனையோவிசை தேவ துரோகிகளான யூதர்களோடே நானும் சேர்ந்துகொண்டு இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்து கொல்லவேணும், பரபாஸ் கள்ளனை விடுதலையாக்கவேணும், நான் என் இஷ்டப்படி நடக்கவேணுமென்று சொன்னதுமல்லாமல் அவரைக் கொலைசெய்தவர்களோடே நானும் ஒருவனாய் என் இரட்சகருடைய கைகளிலும் கால்களிலும் பெரும் இருப்பாணிகளை வைத்து அறைய உதவியாயிருந்தேன்; நான் சாவான பாவத்தில் விழுந்தபோதெல்லாம் என்னால் ஆனமட்டும் இவ்விதம் செய்தேனே; நான் அற்பப்பாவத்தைக் கட்டிக்கொண்டபோதெல்லாம் ஆண்டவர் பட்ட பெருங் காயங்களில் இன்னமும் திரும்பப் புது வேதனையை உண்டு பண்ணினேனேயென்று நினைத்துப் பார்ப்பேனாகில், என்னை நிந்தித்து என்பேரில் குற்றஞ்சாட்ட எனக்கு எவ்வளவு நியாயம் இருக்கும்! இப்படி நினைத்து உணர்ந்து பார்த்ததினாலல்லவோ வனவாசிகளான முனிவர்கள் மகா

கடின தபசு செய்தார்கள். நீயும் இந்தத் தபசுகாலத்திலே உன் பாவங்களுக்கெல்லாம் பரிகாரஞ்செய்யும்படி அவர்களைக் கண்டுபாவிப்பாயாக.

சம்பாஷணை.—முந்தின இரண்டு பிரிவுகளில் சொல்லியிருக்கிற மனப்பற்றுதல் பிரதிக்கினைக்கு ஒத்தபிரகாரம் சம்பாஷணை செய்.

தபசுகாலத்தின் 2-ம் வாரம்—செவ்வாய்

சேவகரும் கைப்பாசுடைய ஊழியரும் இயேசுநாதரை ஆகடியம் பண்ணுகிறார்கள்

ஆயத்தச் சிந்தனை.—சேவகரும் நீச ஊழியரும் இயேசுநாதரை நிந்தித்து ஆகடியம் பண்ணுகிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—உன் இராஜாவும் திவ்விய மாதிரிகையுமாகிய இயேசுநாதரைப் பார்த்து நிந்தை அவமானங்களை நன்றாய் அறியவும் அவைகளை நேசிக்கவும் வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

அவரைப் பிடித்துக்கொண்டு வந்தவர்கள் அவரை ஆகடியம் பண்ணினார்கள் (லூக். 22)

தியானம்.—கைப்பாஸ் இயேசுநாதரைக் குற்றவாளியாகத் தீர்மானித்ததைப்பற்றிச் சந்தோஷம் அடைந்து நித்திரை செய்யப்போகையில் அவரை நீச ஊழியர், சேவகர் முதலானவர்கள் கையில் ஒப்படைக்கிறான். அவர்கள் அவரைக் குற்றவாளிகளை அடைக்குஞ் சிறைச்சாலையில் இழுத்துக்கொண்டுபோகிறார்கள்; அவருக்கு எவ்வளவோ அவமானம்! அவர்கள் அங்கேயாவது அவரை இளைப்பாற விட்டார்களோ, இல்லை; தங்களுக்கு எஜமான்களாயிருக்கிறவர்கள் அவர்பேரில் காண்பித்த பகையினால் இவர்களும் தூண்டப்பட்டு அவரைச் சூழ்ந்துகொண்டு மிகவும் கொடுமை

யாய் ஆகடியம்பண்ணி ஒவ்வொருவனும் அவரை நகைத்து நிந்தித்துத் தூஷணித்து அனுசாரமாய் நடப்பிக்கிறான். இராத்திரி முழுதும் இவ்வித நிந்தனை நீடித்து நடக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் இப்படி இராக்காலமுழுதும் ஒரு நிமிஷநேரமாகிலும் நித்திரை செய்யக்கூடாமல் நீசமனுஷர்களால் நிந்தை அவமானம் ஆகடியமெல்லாம் அநுபவித்ததை யோசித்துப் பார்ப்பாயாகில், கடினமான இராக்காலங்கள் முதலாய் உனக்கு வருத்தமாய்த் தோன்றாது. புத்தியில்லாத விளையாட்டுப் பிள்ளைகள் நடுவிலேயும் நன்றிகெட்ட முரட்டு மனுஷர்கள் நடுவிலேயும் சிலவிசை இருக்கவேண்டியதிருந்தால் அது உனக்கு அவ்வளவு சலிப்பும் வருத்தமுமாகத் தோன்றாது.

மனப்பற்றுதல்.—உன் திவ்விய குரு அநுபவித்த நிந்தை அவமானங்களைக் கண்டு அநுதாபப்பட்டு உன் ஆங்காரத்தினால் அவருக்கு இத்தனை பொல்லாப்பு வந்ததென்று தாழ்ச்சியோடு அங்கீகரிப்பாயாக.

பிரதிக்கினை.—உன்னை யாதொருவன் நிந்திக்கும்போது, கோபியாமல் மவுனமாய்ப் பொறுத்துக்கொள்வாயாக.

2-ம் பிரிவு

சிலர் அவர் முகத்தில் துப்பினார்கள் (*மாற்.* 14)

தியானம்.—அவர் முகத்தில் துப்பினார்களென்று சுவிசேஷத்தில் குறிப்பாய் எழுதியிராவிடில், மனுஷர் எவ்வளவு நிஷ்டூரமுள்ளவர்களானாலும், இப்படி அவரைப் புத்தியில்லாததனமாய் நடப்பித்திருப்பார்களென்று எண்ணவும், அல்லது ஒரு நீசனைமுதலாய் இப்படி நிந்தை அவமானம் செய்கிறது மிகவும் பொறுக்கப்படாததாயிருக்க, மனுஷனாகப் பிறந்த சர்வேசுரன் இதெல்லாம் அநுபவித்திருப்பாரென்று நினைக்கவுங் கூடுமானதார்? ஆகிலும் என்னைக் காறித் துப்பினவர்களுக்கு நான் முகத்தைத் திருப்பிக்கொள்ளவில்லையென்று இசாயியாஸ் தீர்க்கதரிசி எழுதிவைத்திருக்கிறதுபோல, இயேசுநாதர் தமது முகத்

தைக் கொஞ்சமாகிலும் திருப்பாமலும் ஒரு வார்த்தை முதலாய்ச் சொல்லாமலும் எத்தனையோவிசை இதெல்லாம் பொறுமையோடே அநுபவித்தார்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ எப்படிப்பட்டவனானாலுஞ்சரி, உன்னைப் புறத்தியார் நிந்திக்கும்போது, அல்லது உனக்கான மரியாதை செய்யவில்லையென்றும் உன்னைத் தகுந்தபடி நடப்பிக்கவில்லையென்றும் உனக்குத் தோன்றும்போது, நீ முறைப்பாடு சொல்லவும் கோபித்துக்கொள்ளவும் பழிவாங்கவும் இடம் எங்கே? சொல். இதெல்லாம் பார்த்து இயேசுநாதர் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து அர்ச். பெர்நர்தென்பவரைப்போல நீயும் சொல்லத்தக்கதாவது: என்ன! என் இராஜாவும் குருவுமாய் இருக்கிறவர் நீச மனுஷர்களால் காறித் துப்பப்பட்டு அவமானம் அடைந்திருக்கையில், என் பாவ அக்கிரமங்களினாலே நரக பாதாளத்திலே தள்ளப்படப் பாத்திரவானான நான் மற்றவர்களால் சங்கை மரியாதை பெற ஆசைப்படுவேனோ? ஒருக்காலுமில்லை. நித்தியமும் என்பேரில் சர்வேசுரன் இரக்கமாய் இருக்கத்தக்கதாக இம்மையில் யாவரும் என்னை நிந்திக்கவும் மறந்துபோகவும் நான் ஆசைப்படுவேனாக.

இந்த சிந்தனைகளுக்குகந்த மனப்பற்றுதலை எழுப்பிக்கொள்.

பிரதிக்கினை.—நிந்தை அவமானத்தின்பேரில் எனக்குப் பிரியம் உண்டாக மன்றாடுவேன்.

3-ம் பிரிவு

சேவகர் இயேசுநாதர் கண்களைக்கட்டி அவரை முகத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உன்னை அடித்தவனார், தீர்க்கதரிசனமாய்ச் சொல்லென்று கேட்டதுமன்றி அவர்பேரில் அகோரமான தூஷணங்களையுஞ் சொல்லிக்கொண்டிருந்தார்கள்
(*மத்.* 26; *லூக்.* 22)

தியானம்.—மகிமை நிறைந்த இராஜாவானவர் திருப்தியடைந்தவராய் அவமானப்பட்டு பூங்காவனத்திலே தாம்

கையேற்றுக்கொண்ட கசப்பான பாத்திரத்தைக் கடைசி பரியந்தம் குடிக்கிறதைத் துக்கமும் மவுனமும் நிறைந்த ஆச்சரியத்தோடே யோசித்துப் பார்ப்போமாக. மேலும் வெட்கமும் நாணமும் இல்லாத மனுஷர்கள் அவர் கைகளைச் சங்கிலியினால் கட்டிக் கண்களை மறைத்து ஒரு மரக்கட்டையின்பேரில் அவரை உட்காரச்செய்து ஒவ்வொருவனும் அவர் முகத்தில் துப்பிக் கன்னத்தில் அறைந்து உன்னை அடித்தவனாரென்று கேட்கிறதையும் எல்லாரும் ஒருமித்துக் கூடி தங்கள் அசுத்த வாயினால் அவர்மேல் வாக்குக்கெட்டாத நிந்தை அவமான தூஷணை வார்த்தைகளைச் சொல்லுகிறதையும் யோசித்துப்பார்த்து இப்படி அநியாயமாய் நடப்பிக்கப்படுகிறவர் யாரென்றும் எப்படி இவைகளை அநுபவிக்கிறாரென்றும் யாரைப்பற்றியும் எதற்காகவும் இப்படி அநுபவிக்கிறாரென்றும் நம்மைத் தானே வினாவிக்கேட்போமாக.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சந்நியாசத்திலிருக்கிற நீ மூவித தாழ்ச்சியைக் குறித்துத் தியானம் பண்ணினபோது, உலகத்தில் யாவராலும் மதிக்கப்பட்டு மேலான அந்தஸ்திலே இருக்கிறதைப் பார்க்க, இவ்வுலகத்தில் கடைசி மனுஷனைப்போல நிந்தை அவமானப்பட்ட இயேசுநாதரோடே நானும் இவ்வுலகில் ஒன்றுக்கும் உதவாதவனென்று யாவரும் என்னை நிதானிக்க வேணுமென்று அநேகதரஞ் செய்து புதுப்பித்த பிரதிக்கினையை இப்போது நினைத்துக்கொள். இப்பேர்ப்பட்ட பிரதிக்கினைக்கு ஒத்தபிரகாரம் நீ நடந்து வருகிறாயோவென்று பார்.

சம்பாஷணை.—அந்த இராத்திரி முழுதும் இயேசுநாதர் பட்ட அவமானங்களை எல்லாம் பார்த்திருந்த பரிசுத்த சம்மனசுகளோடே சம்பாஷணை செய்து நமக்காகவும் நம்மோடும் நமது திவ்விய இரட்சகரை அவர்களும் வாழ்த்தித் துதித்துக் கொண்டாட மன்றாடுவதுமன்றி, இயேசுநாதரே சுவாமி, நான் உம்மைப்பற்றிப் பாடுபடவும், நிந்தைப்படவும் மாத்திரம் வேணுமென்று அர்ச். சிலுவை

அருளப்பர் கேட்டாற்போல, நாமும் மிகவும் ஆசித்துக் கேட்க நமக்கு வேண்டிய வரப்பிரசாதத்தை அளித்தருள வேணுமென்று அவர்களை வேண்டிக்கொள்வோமாக.

தபசுகாலத்தின் 2-ம் வாரம்—புதன்

அர்ச். இராயப்பர் இயேசுநாதரை மும்முறை மறுதலித்தது

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். இராயப்பர் கைப்பாஸ் அரண்மனையில் சேவகர் ஊழியர்களோடே உட்கார்ந்து குளிர்காய்ந்துகொண்டிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—உன்னைத்தானே நீ நன்றாய் அறிந்து உன்பேரில் நம்பிக்கை வையாமலிருக்க வரம் கேட்பாயாக.

முதல் பிரிவு

பிரதான குருவின் ஊழியக்காரிகளில் ஒருத்தி குளிர்காய்ந்துகொண்டிருந்த இராயப்பர் கிட்டவந்து அவரை உற்றுப்பார்த்து: நீயும் நசரேயனான இயேசுவோடு இருந்தாயென்றாள். ஆனால் அவர் எல்லாருக்குமுன்பாக மறுதலித்து: ஸ்திரீயே, நான் அவரை அறியேன்; நீ சொல்லுகிறது இன்னதென்றும் எனக்குத் தெரியாதென்றார் (மாற். 14)

தியானம்.—இராயப்பர், துவக்கத்திலே தமக்கு இருந்த பயந்தெளிந்து, பட்டணத்தில் கைப்பாஸ் அரண்மனைமட்டும் சற்றுத்தூரமாய் இயேசுநாதரைப் பின்சென்றுகொண்டு வந்தாரென்று சுவிசேஷத்திலே எழுதியிருக்கின்றது. மற்றவர்களைப்பார்க்க நான் அதிக பிரமாணிக்கனாயிருப்பேனென்று வெளியரங்கமாய்ச் சொல்லிக்கொண்டிருந்த தலைமையான அப்போஸ்தலர் ஒரு பெண்

பிள்ளையின் வார்த்தைக்குப் பயந்து தமது திவ்விய குருவை மறுதலித்தது அவ்விடத்தில்தான். ஆ! இவர் தவறி விழுந்தது எவ்வளவு வெட்கத்துக்குரிய காரியம்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். இராயப்பருக்கு நேரிட்ட சம்பவத்தினால் மனுஷனுடைய துர்ப்பலத்தை உணர்ந்து பின்னால் நேரிடக்கூடியவைகளை நினைத்துப் பயப்படாமல் இருக்கக்கூடியவன் யார்? ஆகிலும் காரணமின்றிக் காரியமில்லாததினாலே, இந்த அப்போஸ்தலர் தவறிப்போன முகாந்தரங்களை நமது படிப்பினைக்காகக் கவனித்துப் பார்ப்போமாக. இதற்கு விசேஷமாய் நாலு முகாந்தரங்கள் உண்டென்று வேதபாரகர் எழுதி வைத்திருக்கிறார்கள். முதலாவது, தன் சொந்தப் பலத்தின்பேரில் அவர் மிதமிஞ்சின நம்பிக்கை வைத்ததும்; 2-வது, தமது திவ்விய குருவோடு விழித்திருந்து ஜெபம் பண்ண அசட்டையாயிருந்ததும்; 3-வது, ஆபத்தில் பிரவேசிக்கத் துணிவைக் காட்டினதும்; 4-வது, விநோதப் பிரியத்தோடு கூடின பக்திக்குறைவுமாம். இராயப்பர் இயேசுநாதருடைய காரியம் எப்படி முடிவாகுமென்று பார்க்கத்தக்கதாகத் தூரத்தில் அவரைப் பின்சென்று போனாரென்று அர்ச். மத்தேயு சுவிசேஷத்தில் எழுதி வைத்திருக்கிறார். நீ தவறிப்போய்ப் பாவத்தைக் கட்டிக்கொண்டதை யோசித்துப் பார்ப்பாயாகில், மேற்சொன்ன நாலு காரியங்களில் ஒன்று இதற்குக் காரணமென்று நீ அறிந்துகொள்வாய்.

மனப்பற்றுதல்.—கடந்த காலத்தின் அனுபவம் பிற்காலத்தில் உன்னைப் பாதுகாப்பதற்கு உதவியாயிருக்கும்படி ஆண்டவரிடத்தில் கெஞ்சி மன்றாடுவாயாக. அவர் உன் பாவங்களை மன்னித்ததினாலே அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

பிரதிக்கினை.—உன் தவறுதல்களுக்கு முக்கிய காரணம் என்னவென்று அறிந்து, அதன்மட்டில் ஜாக்கிரதையாயிரு. அந்தக் காரணத்தை நன்றாய் அறிந்து அதை எதிர்த்து நின்று ஜெயிக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

2-ம் பிரிவு

மறுபடியும் வேறொரு ஊழியக்காரி அவரைக் கண்டு, இவனும் இயேசு நசரேயனோடுகூட இருந்தானென்றாள். இவர் திரும்பவும் ஆணையிட்டு மறுதலித்து அந்த மனுஷனை அறியேனென்றார் (*மாற்.* 14)

தியானம்.—இராயப்பருக்கு ஆபத்து அதிகரிக்கப் பயமும் அதிகரித்தது. இதினாலே முன்னிலும் பெரிய குற்றத்திலே விழுந்தார். முதல் விசை மறுதலித்ததில் பொய்யும் கோழைத்தனமும் இவரிடத்தில் விளங்கினது; ஏனெனில் தாம் அறிந்ததற்கும் நினைத்ததற்கும் விரோதமாய்ப் பேசினார். இரண்டாம் விசை மறுதலித்தபோது, பொய்யாணையும் சேர்ந்திருந்தது. இவ்வாறு அவரது பாவத்தின் தோஷம் மென்மேலும் அதிகரிக்கலாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆசாபாசம் செல்லும் வழி இதுதான். முகத்தாட்சணியம், போசனப்பிரியம், வீண் வேடிக்கை, மனத்தாங்கல், மோகம் இவை முதலான துர்க்குணங்களுக்கு ஒருவன் இடங்கொடுக்கத் துவக்கினால், வரவர அநேக பாவங்களில் தப்பாமல் விழுவான். அப்படியிருக்க, அந்தந்த ஆசாபாசத்துக்கு இசைந்து இன்னம் ஒருவேளை சம்மதிக்கிறேன், பின்னுக்கு அது என்னைத் தொந்தரவு செய்யாதென்றும் அல்லது நான் செய்யும் குற்றம் இவ்வளவுதான், அதற்கு அதிகம் செய்யேனென்றும் சொல்லுவாயாகில், உன்னை நீ நன்றாய் அறியாமல் வீணிலே தவறி மோசம்போகிறாயென்று சொல்லவேணும். ஆசாபாசம் நெருப்புக்குச் சமானம்; நெருப்பானது தனக்குப் போதுமென்று ஒருக்காலும் சொல்லாதென்பதாக அர்ச். அகுஸ்தீன் தமது அநுபவத்தினால் சொல்லியிருக்கிறார். உன் அநுபவத்தினால் நீ கண்டு அறிந்ததென்ன?

மனப்பற்றுதல்.—உன் குருட்டாட்டத்தையும் நல்வழியைவிட்டு நீ தவறி நடக்கிறதையும் பார்த்துச் சர்வேசுரன் சமுகத்திலே பெருமூச்செறிந்து பிரார்த்திப்பாயாக.

பிரதிக்கினை.—பாவத்தின்பேரில் நினைவு உண்டாகும்போது, ஆரம்பத்திலேயே சுறுசுறுப்பாயும் வலுவாயும் அதை எதிர்த்துத் தள்ளவேண்டும்.

3-ம் பிரிவு

ஏறக்குறைய ஒரு மணிநேரத்துக்குப்பின் பிரதான குருவின் ஊழியர்களில் ஒருவன் இராயப்பரை நோக்கி: அவனோடு உன்னைப் பூங்காவனத்தில் நான் காணவில்லையோவென்று கேட்க, அங்கே நின்றவர்களும் அணுகி மெய்யாகவே நீயும் அவனைச் சேர்ந்தவன்தானென்றார்கள். அப்போது இராயப்பர்: நீங்கள் சொல்லும் அம்மனிதனை அறியேனென்று மூன்றும் முறையும் மறுதலித்ததுமன்றித் தன்னைத்தான் சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினார் (மத். 26; லூக். 22)

தியானம்.—அப்போஸ்தலனாயிருந்தவர் அக்கிரம வழியில் அடைந்த அபிவிர்த்தியைப் பார். இரண்டு மணி நேரத்துக்குள்ளாகத் தன் திவ்விய குருவை மூன்று முறை மறுதலித்ததுமன்றி இரண்டு விசை பொய்யாணையிட்டு, கடைசியிலே அதை உறுதிப்படுத்துகிறதற்காகத் தன்னைத் தானே அகோரமானவிதமாய்ச் சபித்துக்கொண்டார். அச்சமயத்தில்தானே அவருக்கு வெகு சமீபத்தில் வாக்குக்கெட்டாத நிந்தை அவமானம் அவருக்காக அநுபவித்துக்கொண்டிருந்த அவருடைய திவ்விய குருவின் இருதயத்தில் அதினிமித்தம் எவ்வளவு வெட்கமும் கஸ்தியும் உண்டாயிருக்கவேண்டியது!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தமது திருச்சபைக்குப் பிரதம தலைவராய் நியமிக்கப்பட்டவர் இப்பேர்க்கொத்த வெட்கத்துக்குரிய பாவத்தில் விழ ஆண்டவர் விட்டுவிட்டதெப்படியென்றும் விசேஷமாய் உலகமெல்லாம் அறியச் சுவிசேஷகர் அதை எழுதிவைக்க ஏன் சித்தமானாரென்றும் கேட்பாயாக்கும். வேத சாஸ்திரிகள் இதற்கு மூன்று நியாயம் கூறுகிறார்கள்:—முதலாவது, எல்லாருக்கும் பெரிய ஆயனென்கிற பட்டமானது

அர்ச். இராயப்பரிடத்திலே அத்தியந்த தாழ்ச்சியோடும் தனக்குக்கீழ்ப்பட்டவர்களிடத்திலுண்டான துர்ப்பலத்தின்பேரிலே இரக்கக் குணத்தோடும் ஒன்றித்திருக்கும்படியாகவும்; 2-வது, தன்னிலே மகா பலவீனமான அஸ்திவாரத்தின்பேரில் கட்டப்பட்டதும் உலோகத்திலே மிகவும் ஆச்சரியமானவிதமாய் நடந்தேறி வருகிறதுமான சாதாரண சத்திய திருச்சபை மனுஷரால் ஸ்தாபிக்கப்பட்டதல்ல, சர்வ வல்லபமுள்ள சர்வேசுரனால் ஸ்தாபிக்கப்பட்டதென்று யாவரும் நிச்சயித்துக்கொள்ளவும்; 3-வது, மனுஷர் அர்ச்சியசிஷ்டவர்களாய் இருந்தாலும் சரி, அவர்கள் மேலான அதிகாரத்தில் இருந்தாலும் சரி, தங்கள் துர்ப்பலத்தைக் கண்டு தேவ வரப்பிரசாத உதவி தங்களுக்கு எப்போதும் அவசியமென்று உணரும்படியாக இவ்விதம் சம்பவித்ததென்று சொல்லலாம். சர்வேசுரனுடைய ஆலோசனைகளின் ஞானத்தை வியந்து அவரை ஆராதிப்போமாக.

சம்பாஷணை.—மிகுந்த பயத்தினால் புத்தி மயங்கிச் சற்றுநேரத்துக்குமுன் தாம் காண்பித்த பத்திப் பிரமாணிக்கத்தை மறந்துபோன அர்ச். இராயப்பரோடே சம்பாஷணை செய்வாயாக.

தபசுகாலத்தின் 2-ம் வாரம்—வியாழன்

அர்ச். இராயப்பர் உத்தம மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினது

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். இராயப்பர் தாம் செய்த பாவத்துக்காக மனநொந்து அழுகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—நம்மிடத்தில் உத்தம மனஸ்தாபம் உண்டாகக் கேட்போமாக.

முதல் பிரிவு

ஆண்டவர் இராயப்பரைத் திரும்பிப் பார்க்கிறர்

தியானம்.—நமது திவ்விய இரட்சகரிடத்தில் விளங்கின தயை எவ்வளவு பெரிது! தாம் வாக்குக்கெட்டாத கஸ்தி நிந்தை அவமானப்படும்போது, பிரமாணிக்கர் தவறின தமது சீஷனுக்குச் சகாயம் செய்கிறதற்காகத் தம்மை முழுதும் மறந்துவிடுகிறர். தமக்கு வந்த நிந்தை அவமானத்தைப்பார்க்கிலும் இராயப்பர் பாவத்தால் நிர்ப்பாக்கியனுனது அவரை அதிகமாய் உறுத்துகிறது. ஆண்டவர் இராயப்பரைத் திரும்பிப் பார்த்தாரென்று லூக்காஸ் எழுதிவைத்திருக்கிறர். இந்தத் திவ்விய பார்வை இரக்கமும் கண்டிப்புக்குரியதுமாயிருந்தது; அவர் கஸ்திப்பட்டு மனந்திரும்ப இதுவே காரணமாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—எண்ணிக்கையில்லாத நிர்ப்பாக்கியமான பாவிகள்மட்டிலும் ஆண்டவர் நாள்தோறும் இப்பேர்க்கொத்த தயவைக் காண்பித்துக்கொண்டுவருகிறர். தாவீது இராஜா, சுவாமி என்னை இரக்கமாய்ப் பார்த்தருளுமென்று கேட்ட மன்றட்டுக்கு இரங்கினதுக்கொத்தபிரகாரம் தமது இஷ்டப்பிரசாதத்தினுல் பாவிகளை ஆண்டவர் இரக்கமாய் ஏறெடுத்துப் பார்க்கிறர். கைப்பாஸ் வீட்டிலே இராயப்பருக்கு வந்த பயமானது, பாவத்தால் விளைந்த நிர்ப்பாக்கிய நிலைமையையும் தான் செய்த கிரிகைகளின் தன்மையையும் உணராமல் புத்தியை மயக்கிவிட்டது. இயேசுநாதர்தாமே அவருக்கு உதவிபுரிய முன்வந்து அவரது ஞானக் கண்ணைத் திறக்கிறர். இதிஞல் இராயப்பர் தன் ஆயுசுபரியந்தம் தமது நல்ல குருவின்மட்டில் மெத்தவும் நன்றியறிந்தவராய் இருந்தார். நீயும் இதுவரையில் பிரமாணிக்கந் தவறினதை யோசித்துப் பார்ப்பாயாகில், அனந்தம்விசை தேவ வரப்பிரசாதமானது உன்பேரில் இரக்கமாயிருந்து பாவ நித்திரையினின்று உன்னை எழுப்பி விழித்துக்கொள்ளச் செய்ததென்று நீயே அறியலாம். இதற்காக நீ எவ்வளவோ நன்றியறிந்தவனுய் இருக்கவேணும்!

மனப்பற்றுதல்.—நன்றியறிதலும் பற்றுதலும் நிறைந்த மனதைக் காண்பிப்பாயாக.

பிரதிக்கினை.—பாவத்தில் அயர்ந்து நித்திரைகொள்ளாதபடி பாவத்தைக் கட்டிக்கொண்டவுடனே, ஜெபத்தை நாடிப்போவாயாக.

2-ம் பிரிவு

சாவல் இரண்டு விசை கூவுமுன்னே, மும்முறை என்னை மறுதலிப்பாயென்று இயேசுநாதர் தனக்குத் திருவுளம்பற்றின வாக்கியத்தை இராயப்பர் நினைத்துக்கொண்டார் (மாற். 14)

தியானம்.—பாவத்தில் விழுந்த அப்போஸ்தலரை இயேசுநாதர் ஒருவிசை இரக்கமாய் நோக்கிப் பார்த்ததினுல், திடீரென்று எவ்வளவோ அற்புதமான காரியம் சம்பவித்தது! இத்திவ்விய பார்வை இராயப்பருடைய புத்தியில் நிறைந்திருந்த இருளை அக்ஷணமே நீக்கி அவர் கட்டிக்கொண்ட பாவத்தின் தன்மையை தெளிவாய்க் காணச்செய்தது; கடைசி இராப்போசனத்திலும் ஒலிவேத்தென்கிற பூங்காவனத்திலும் திவ்விய குரு அவருக்கு தீர்க்கதரிசனமாய்ச் சொன்னதெல்லாம் விபரமாய் நினைப்பூட்டி அவர் அவநம்பிக்கைப்படாமல் மிகவும் மனதுநொந்து உத்தம மனஸ்தாபப்படும்படி செய்து அவர் மனதைத் திருப்பினதுமல்லாமல் அவரை உத்தம தபசுக்கு மாதிரிகையுமாய் ஆக்கினது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ வரப்பிரசாதத்தின் பயன் எவ்வளவு ஆச்சரியமானது, பார். தேவ வரப்பிரசாதமானது ஆத்துமத்தில் மெள்ள மெள்ளப் புகுந்து அதைத் தெளிவித்து அதற்கு வேண்டிய வலிவைக் கொடுத்துப் படைக்கப்பட்ட வஸ்துக்களின் ஒன்றுமில்லாததனத்தையும் பாவத்தின் அவலட்சணத்தையும் கனத்தையும் காண்பித்து மனதில் மிகுந்த வியாகுலத்தை உண்டாக்கிக் கஸ்தி சந்தோஷம் சிநேகம் பொருந்தின கண்ணீர் சிந்தச்செய்து பாவத்தின்பேரில் உள்ள அக்கிரமமான பட்சத்தை எல்லாம் விலக்கிச் சுத்தப்

படுத்தி உலக ஆசையைத் தள்ளும்படி செய்து சர்வேசுரனுடைய சமுகம் வரையில் அதை உயர்த்தும்.

மனப்பற்றுதல்.—தேவ வரப்பிரசாதம் எனும் விலைமதியாத தனமே, விடியற்காலத்திலேயே என் ஆத்துமத்துக்கு ஞானப் பலத்தைத் தந்து நான் புண்ணிய வழியை விடாமலும் பத்தி சுறுசுறுப்பில் குறையாமலும் இருக்கச் செய்யும்.

பிரதிக்கினை.—தேவ வரப்பிரசாத உதவியை அடிக்கடி இரந்து மன்றாடுவாயாக.

3-ம் பிரிவு

இராயப்பர் அந்த இடத்தை விட்டு வெளியில் போய் மிகவும் கஸ்திப்பட்டு அழுதார் (மத். 26)

தியானம்.—இராயப்பர் செய்த குற்றம் கனமானதும் பிறருக்குத் துர்மாதிரிகையுமாயிருந்ததற்கு அளவாக அவர் செய்த தபசு உதாரமுள்ளதும் பிறருக்கு நன்மாதிரிகையுமாயிருந்தது. அவர் ஒரு நிமிஷமாகிலும் தாமதியாமல் தான் பாவத்தைக் கட்டிக்கொண்ட இடத்தையும் அதற்குக் காரணமாயிருந்தவர்களையும் விட்டு விலகித் தனிமையான இடத்தில் போய் மிகவும் கஸ்திப்பட்டுக் கண்ணீர் சொரிந்து அழுததுமல்லாமல் தான் சாகுமட்டும் இடைவிடாமல் அழுதுகொண்டுவருவார். மகா வெட்கத்துக்குரிய விதமாய்த் தன்பேரில்தானே தோல்வி அடைந்ததை நினைத்து இப்படிப் பெருமூச்சுவிட்டழாமல் தன் திவ்விய குருவை மறுதலித்து அவருடைய அளவில்லாத பெருமையையும் தயவையும் அலட்சியஞ்செய்து அவருக்குக் கஸ்தி வருவித்த துரோகத்தை நினைத்து அழுதார். இது ஆண்டவருக்கு மகா பிரியமாயிருந்ததினிமித்தம் அவர் உத்தம மனஸ்தாபப்பட்ட சீஷனுக்குப் பொறுத்தல் கொடுத்ததுமல்லாமல் அச்சீஷன் பாவத்தில் விழுகிறதற்கு முந்தி தம்மிடமிருந்து பெற்றிருந்த சுதந்தர உரிமைகளில் ஒன்றையேனும் அவரைவிட்டு நீக்கவில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமும் இராயப்பரைப் பாவ வழியில் கண்டுபாவித்து ஆண்டவருக்

குப் பிரமாணிக்கம் தவறியிருப்போமாகில், அதற்காக அவர் செய்த தபசிலும் அவரைக் கண்டுபாவிப்போமாக. சர்வேசுரன் நமக்குச் செய்த நன்மையையும் நாம் அதற்கு நன்றியறியாதவர்களாய் நடந்ததையும் நினைத்து அர்ச். இராயப்பரைப்போல மிகுந்த தேவ சிநேகத்தையும் தாழ்ச்சியையும் குறையாத நம்பிக்கையையும் சகலவித நற்கிரியைகளிலே மிகுந்த உதாரத்தையும் தேடுவோமாக. இம்மேரையாய்த் தேவ வரப்பிரசாத உதவியினாலே நாம் செய்த தின்மையை நமக்கு அதிக நன்மையாக்கிக்கொள்ளலாம்.

சம்பாஷணை.—மனஸ்தாபப்பட்ட இராயப்பரோடே சம்பாஷணை செய்வாயாக. நீயும் அவரோடே சேர்ந்து இயேசுநாதருடைய திரு இருதயத்தின் வற்றாத தயையைப் புகழ்ந்து கொண்டாடுகிறதுமல்லாமல் விசேஷமாய் இராத்திரி காலத்தில் ஆத்தும சோதனை செய்தபின், அடிக்கடி சொல்லத்தக்கதாவது: ஆ! என் இயேசுவே, நான் நினைவினாலும் வாக்கினாலும் கிரியையினாலும் கட்டிக்கொண்ட எண்ணிக்கையில்லாத அக்கிரமங்களுக்காக உம்மிடத்தில் பொறுத்தல் கேட்கவேணுமென்பது சரியே, ஆகிலும் உமது தயவானது என் துர்க்குணத்தைவிட அளவில் மிகுந்தது; ஆகையால், தேவரீர் எனக்குத் தந்தருளின எண்ணிக்கையில்லாத வரப்பிரசாதங்களுக்காக உமக்கு அதிக நன்றியறிந்த தோத்திரம் செய்யவேண்டியவனாயிருக்கிறேன், சுவாமி.

தபசுகாலத்தின் 2-ம் வாரம்—வெள்ளி

அதிகாரியான போஞ்சு பிலாத்தினிடம் இயேசுநாதர் தமது பிரஜைகளால் கையளிக்கப்படுகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் பின்கட்டு முறையாய்க் கட்டப்பட்டு, அநேகம் ஜனங்கள் ஆகடியம்பண்ண, பிலாத்தின் அரண்மனைக்குப் போகிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—என் திவ்விய இரட்சகரை அதிகம் அதிகமாய்ப் பின்சென்று நடக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

விடியற்காலமானவுடனே, யூதர்களின் மூப்பரும் பிரதான குருப்பிரசாதிகளும் வேதபாரகரும் கூடி இயேசுநாதரைக் கொலைசெய்ய ஆலோசனை செய்தார்கள் (மத். 27)

தியானம்.—அக்கிரமிகளான இந்த நியாயாதிபதிகள் விடியுமுன்னே தங்கள் நித்திரையைவிட்டு எழுந்து அதிகாலையில் எல்லாரும் ஒன்றாய்ச் சேர்ந்து ஆலோசனை செய்வதற்குப் படும் பிரயாசத்தைப் பார்! இவர்கள் இவ்வளவு சிரமப்படுவானேன்? தமது மாசின்மையால் தங்கள் அக்கிரமத்தைக் கண்டித்தவர்மீது தங்கள் குரோதத்தைச் செலுத்தி, அவரைக் கொலைசெய்ய வழிதேடுவதற்காகவே. மகா பெரிய பாதகத்தைச் செய்துமுடிக்க எவ்வளவு சுறுசுறுப்பைக் காண்பிக்கிறார்களென்று பார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் அநேகந்தடவை நன்மை செய்ய பிரயாசப்படுகிறதைவிட இந்த நிர்ப்பாக்கியர் தின்மை செய்ய அதிக சுறுசுறுப்பாயிருக்கிறார்களென்றும், சிலவேளை நாம் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமாய் ஜெபம் பண்ணவும் திவ்விய நற்கருணை சந்திக்கவும் சுறுக்காய் எழுந்திருக்கிறதைவிட இயேசுநாதரைக் கொலைசெய்வதற்கு வேண்டிய உபாயத்தைத் தேட அவர்கள் அதிக சுறுக்காய் எழுந்திருக்கிறார்களென்றும் நாம் பார்த்து வெட்கப்பட நியாயமில்லையோ?

மனப்பற்றுதல்.—கெட்டவர்கள் தின்மை செய்கிறதில் காண்பிக்கிற உதாரத்தையும் நிலைமையையும் பார்க்க, நன்மை செய்வதில் நமக்குள்ள உதாரத்தனம் மிகவும் குறைவுபாடானதென்று கண்டு வெட்கப்பட்டு, நம்மையே நொந்துகொள்வோமாக!

பிரதிக்கினை.—ஞான அசமந்தத்துக்குத் தாயும் நாம் தவறி நடக்கிறதற்குப் பிரதம காரணமுமாயிருக்கிற இன்பசுகத்தை நம்மிடத்தில் நிர்மூலமாக்கத்தக்க உபாயத்தைத் தேடுவோமாக.

2-ம் பிரிவு

பின்னும் கட்டுண்ட அவரைக் கூட்டிக்கொண்டுபோய்த் தேசாதிபதியாகிய போஞ்சு பிலாத்திடத்தில் ஒப்புவித்தார்கள் (மத். 27)

தியானம்.—இயேசுநாதர் செய்த எண்ணிக்கையில்லாத நன்மைகளையும் புதுமைகளையும் கண்டு, "இப்படிப்பட்ட மனுஷன் ஒருபோதும் பூலோகத்தில் தோன்றினதேயில்லை! செவிடர் கேட்கவும் ஊமைகள் பேசவும் சகலத்தையும் உத்தமவிதமாய்ச் செய்தார்" என்று புகழ்ந்து, அவர் கையால் வெகு நன்மை சகாயம் அடைந்த பிரஜைகள்தானே அவரை மறுதலித்து அஞ்ஞானிகளுக்குக் கையளித்தார்கள் (மாற். 15). ஆ! இதென்ன அயோக்கியம்! யூதர்களுடைய நன்றிகெட்டதனத்துக்கு ஒப்பானது உலகத்தில் உண்டோ? இல்லையே. இப்படித் தமது சொந்தப் பிரஜைகள்தானே நன்றிகெட்டவர்களாய் அவமானம் செய்கிறதைக்கண்ட நேசமுள்ள இரட்சகர் இருதயம் எவ்வளவு வியாகுல துக்கம் அநுபவித்திருக்கவேணும்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—யூதர்கள் இப்படி நன்றிகெட்ட துரோகிகளாய்ப் போனதைப் பார்க்கையில், மனவருத்தப்படாதவன் யார்? ஐயோ! எத்தனையோ கிறீஸ்துவர்கள் யூதர்களைப்பார்க்க நன்றிகெட்ட துரோகிகளாய்ச் சாவான பாவத்தோடே நன்மை வாங்கும்போது, தங்கள் இருதயத்தில் குடிகொண்டிருக்கிற பசாசு கையில் இயேசுநாதரை ஒப்புக்கொடுக்கிறதுமல்லாமல் யூதர்களைப்பார்க்கிலும் ஆயிரம் பங்கு அதிகமாய் அவருடைய இஷ்டப்பிரசாதத்தையும் சகாயத்தையும் பெற்றிருக்கிற இவர்கள் அநுதினமும் கட்டிக்கொள்ளுகிற அநேக பாவங்களினாலே அந்தத் திவ்விய இரட்சகருக்கே நன்மைக்குப் பதில் தின்மை செய்துகொண்டு வருகிறார்கள்!

மனப்பற்றுதல்.—ஞானஸ்நானத்தின் வழியாய் இயேசுநாதர் தமது பிள்ளைகளாய் ஏற்றுக்கொண்ட கிறீஸ்துவர்கள்தானே கட்டிக்கொள்ளும் தேவதுரோகங்களுக்காகவும் நமது நன்றிகெட்டதனம் நிலையற்றதனத்துக்காகவும் அவர் பாதத்திலே விழுந்து அழுது பிரலாபிப்போமாக.

பிரதிக்கினை.—ஞானஸ்நானத்தில் அல்லது சந்நியாசத்தில் நாம் கொடுத்த வார்த்தைப்பாடுகளைப் புதுப்பித்து இயேசுநாதரை ஒருக்காலும் விட்டுப் பிரியாமல் அவரைச் சிநேகிக்கத் திரும்பவும் பிரதிக்கினை செய்வோமாக.

3-ம் பிரிவு

தாங்கள் தீட்டுப்படாதபடி போஞ்சு பிலாத்தின் அரண்மனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள் (அரு. 18)

தியானம்.—புத்தியுள்ளவர்களாயிருந்தும் ஆசாபாசத்தினால் கெட்டுப்போன இந்த யூதர்களுடைய பொய்யுந் தவறுதலுமான மனச்சாட்சியைப் பார். அஞ்ஞானியின் வீட்டுக்குள்ளே பிரவேசிப்பதினால் ஏற்படும் உலக வழக்கத்துக்கடுத்த தீட்டுக்குப் பயப்படுகிறார்களேயல்லாமல், காய்மகாரத்தினாலும் பகையினாலும் மாசில்லாதவரைக் கொலைசெய்யத் தேடுவதால் தங்கள் ஆத்துமத்தையும் மனச்சாட்சியையும் தீட்டுப்படுத்தப் பயப்படாதிருக்கிறார்கள்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கடமையில்லாத காரியங்களை அநுசரிக்கிறதில் வெகு சுறுசுறுப்பும் பிரமாணிக்கமுமாயிருந்து, முக்கியமான கடமைகளை அலட்சியம் செய்து அல்லது வெகு குறைவாய் அநுசரித்துவருகிற சந்நியாசிகளும் பக்திமான்களும் அநேகர் இல்லையா? தாங்களாய் ஏற்படுத்திக்கொண்ட சில பக்திக் கிருத்தியங்களின்மட்டில் வெகு பிரமாணிக்கமாயிருந்து, தங்களது அலுவலின் அல்லது தொழிலின் கனமான கடமைகளைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாதவர்கள் இல்லையா? இன்னும் வெளிக்காரியங்களை வெகு கிரமமாய் அநுசரித்து, ஆத்தும விஷயங்களை அலட்சியம் செய்கிற

வர்களும் இல்லையா? இதெல்லாம் தப்பறையான மனச்சாட்சியினால் விளையும் பிரலாபிக்கத்தக்க விபரீதங்கள் அல்லவா? இவ்விஷயத்தில் நம்மிடம் யாதொரு குறை இல்லையா? அதைப்பற்றிச் சுறுசுறுப்போடும் கபடில்லாமலும் விபரமாய் ஆத்துமசோதனை செய்வாயாக.

சம்பாஷணை.—இயேசுநாதரோடே சம்பாஷணை செய்து, நமது இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்திருக்கிற தோற்றம், பயம், ஆசை முதலியவைகளை அவரிடத்தில் தானே சொல்லி வெளிப்படுத்துவோமாக.

தபசுகாலத்தின் 2-ம் வாரம்—சனி

யூதாஸ் இஸ்கரியோத்து அவநம்பிக்கையால் தன்னைக் கொலைசெய்துகொள்ளுகிறன்

ஆயத்தச் சிந்தனை.—யூதாஸ் இஸ்கரியோத்து தான் வாங்கின முப்பது வெள்ளிக்காசைக் குருப்பிரசாதிகள் முன்பாக எறிந்துபோடுகிறதைக் காண்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—அவநம்பிக்கை, தைரியக்குறைவாகிற சோதனைக்குள் ஒருக்காலும் அகப்படாமலிருக்க வரப்பிரசாதம் கேள்.

முதல் பிரிவு

இயேசுநாதரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் அவர் மரணத்துக்குத் தீர்வையிடப்பட்டாரென்று கண்டு மனஸ்தாப்பட்டுத் தான் வாங்கின முப்பது வெள்ளிக்காசைத் திரும்பவும் குருக்களிடத்திலும் மூப்பர்களிடத்திலும் கொண்டுபோகிறன் (மத். 27)

தியானம்.—யூதாஸ் இஸ்கரியோத்து முப்பது வெள்ளிக்காசுக்காகத் தன் திவ்விய குருவைக் காட்டிக்கொடுக்க ஏற்பட்டபோது, நரதேவனானவர் தாம் அநேகவிசை

செய்ததுபோல, இப்போதும் அவர்கள் கையினின்று தப்பித்துக்கொள்வாரென்று நினைத்திருந்தான்; ஆனால் தானினைத்ததெல்லாம் வீணாய்ப்போய் இயேசுநாதர் யூதர்களுடைய கோப மூர்க்கத்துக்குள்ளாகி மரணத்தீர்வைக்கு ஆளாய்ப்போகிறதைப் பார்த்துத் தான் செய்த துரோகத்தையும் அதினால் தனக்கு வரப்போகிற அபகீர்த்தியையும் நினைத்து மிகவும் பயந்து தான் ஆசைப்பட்டு அநியாயமாய்த் தேடின பணம் தனக்கு மிகவும் கனமான சுமையென்றெண்ணி அதைச் சபித்துத் தனக்குக் கொடுத்தவர்களிடத்தில் திரும்பவும் அதைக் கொண்டுபோனான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஒழுங்கற்ற இச்சைக்கு உட்படுகிறதினால் வழக்கமாய் வரும் பலன் இதுதான். பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறதற்குமுன்னே அதினுண்டான பிரியத்தைமாத்திரம் பார்க்கிறார்களல்லாமல் மற்றக் காரியத்தின்பேரில் கண் தெரியாதவர்களைப்போலிருக்கிறார்கள்; ஆனால் பாவத்தைக் கட்டிக்கொண்டவுடன், அதினால் ஏற்படும் மனவேதனையையும் வெட்கத்தையும் உணர்ந்து இனி வரப்போகிற பொல்லாப்பையும் திகிலுடன் கண்டுகொள்கிறார்கள்; தாங்கள் நினைத்த சுகபோகத்துக்குப் பதிலாய்ப் பயங்கரமான மனக்கலக்கத்தையும் மிகுந்த கஸ்தியையும் அநுபவிப்பார்கள். அற்பப் பாவத்தில் விழுகிறதினால் முதலாய் இப்பேர்க்கொத்த காரியம் சம்பவிக்கும். இது விஷயமாய் உன் சொந்த அநுபவம் என்ன சொல்கிறது?

மனப்பற்றுதல்.—இதுவரையில் நம்மிடத்திலிருந்த குருட்டாட்டத்தைக் கண்டு இயேசுநாதர் பாதத்தில் விழுந்தழுவோமாக.

பிரதிக்கினை.—ஆசாபாசங்களுக்கு இடங்கொடாமல் எதிர்த்துப் போராடுவதினால் இருதய சமாதானம் அடையலாமென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தை உண்டாக்கினவர் சொன்ன வசனத்தை நாமும் நமது நடத்தைக்கு நிலைமையான ஒழுங்காக ஏற்றுக்கொள்வோமாக (முதல் காண்டம் 6 அதிகாரம்).

2-ம் பிரிவு

யூதாஸ் இஸ்காரியோத்து நீதிமானுடைய இரத்தத்தைக் காட்டிக் கொடுத்ததினாலே, பாவத்தைக் கட்டிக்கொண்டேனென்றான். அதற்கு அவர்கள், அது எங்களுக்கென்ன? நீயே பார்த்துக் கொள்ளென்றார்கள் (மத். 27)

தியானம்.—யூதாஸ் இஸ்காரியோத்து தான் அக்கிரமத்தைக் கட்டிக்கொள்ளும்படி தைரியம் சொன்ன குருப்பிரசாதிகளிடத்திலேயே திரும்பவும் இதை வெளிப்படுத்தினால், தனக்கு யாதோர் நல்ல வார்த்தை சொல்லுவார்கள் அல்லது தன்பேரில் இரக்கமாயிருப்பார்களென்று நினைத்திருந்தான்; ஆனால் அவர்கள் எங்களுக்கென்ன நீயே பார்த்துக்கொள்ளென்று சொன்னதினால், தான் நினைத்திருந்தபடி ஒன்றும் நடவாமல் போனதைக்கண்டு மகா அவநம்பிக்கைக்குள்ளானான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ சர்வேசுரனுக்கும் உன் மனச்சாட்சிக்கும் விரோதமாய் எவர்களுக்கு ஒத்தாசையாயிருந்தாயோ அவர்கள் உனக்கு உதவிசெய்வார்களென்றாவது, உன்னைக் கனமாய் எண்ணுவார்களென்றாவது நினையாதே. நீ செய்தது சரியென்று வெளிக்கு அவர்கள் உன்னை மெச்சிக்கொண்டாலும், மனதுக்குள்ளே உன்னை நிந்திப்பார்கள்; நீ காண்பித்த முகத்தாட்சணியமும் அக்கிரமமான நயப்பிரீதியும் அவர்கள் கண்ணுக்கு நீசத்தனமுமாய்க் கோழைத்தனமுமாய்த் தோன்றுமல்லாமல் வேறல்ல.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, தேவரீரை மாத்திரம் சிநேகித்து உமக்கு மாத்திரம் நான் பயப்படவும் உம்மிடத்தில் மாத்திரம் என் மனச்சமாதானத்தையும் மகிமையையும் தேடவும் படிப்பித்தருளும் சுவாமி.

பிரதிக்கினை.—மனுஷருடைய பயத்தைப்பற்றியும் அவர்களுக்குப் பிரியப்படவேணுமென்கிற கருத்தைப் பற்றியும் யாதொரு காரியத்தைச் செய்யாதே, செய்யவேண்டியதையும் விட்டுவிடாதே.

3-ம் பிரிவு

அவன் தேவாலயத்தில் அந்த வெள்ளிக்காசுகளை எறிந்துவிட்டு அப்புறம்போய் நான்றுகொண்டான் (மத். 27)

தியானம்.—யூதாஸ் இஸ்கரியோத்து அவநம்பிக்கைப்பட்டது மகா நிர்ப்பாக்கியமான காரியந்தான்; இவன் செய்த பாவங்களிலெல்லாம் இது மகா கனமானது. சர்வேசுரன் தன் பாவத்தை மன்னிக்கமாட்டாரென்று இவன் நினைத்ததினால், அவர் தமது தேவ சுபாவத்திலே அளவில்லாத இலட்சணமும் அளவில்லாத நீதியுமுள்ளவராய் இருக்கிறதுபோல, அளவில்லாத இரக்கமுள்ளவராயும் இருக்கிறாரென்பதை தன் உள்ளத்திலே மறுதலித்தாப்போலாயிற்று. மனுஷனுடைய கெட்டதனம் தன்னிலே மட்டுள்ளதாயிருக்கிறதினால், சர்வேசுரனுடைய அளவில்லாத தயாளத்துக்குச் சரியொத்ததாயிருக்கக் கூடாதது மன்றி இலவலேசமாகிலும் அதற்கு மேற்பட்டதாயிருக்கமாட்டாது. ஆதலால், இராயப்பரைப்போல யூதாஸ் இஸ்கரியோத்தும் தாழ்ச்சியுள்ளவனாய் மனஸ்தாபப்பட்டு இயேசுநாதர் பாதத்திலே விழுந்து அழுதிருப்பானாகில், அவரைப்போல இவனும் பொறுத்தல் அடைந்திருப்பான், அப்போஸ்தலனென்ற பட்டத்தையும் இழந்திருக்கமாட்டான் என்று நம்பத்தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமும் மனுஷர்கள்; பாவத்திலே விழக்கூடும்; இன்னம் பலத்த பாவத்தையும் கட்டிக்கொள்ளக்கூடும். இப்பேர்க்கொத்த நிர்ப்பாக்கியம் நமக்குச் சம்பவிக்குமாகில், அவநம்பிக்கையென்கிற நினைவை முழுதும் தள்ளிப்போடவேணும்; அர்ச். இராயப்பர் தாழ்ச்சியோடே மனஸ்தாபப்பட்டு ஆண்டவருடைய வற்றாத இரக்கத்தை நாடிப்போனது போல, நாமும் அதை நாடிப்போகவேணும். இப்படிச் செய்வோமாகில், பாவிகளாயிருந்தபின் தபசு செய்து அர்ச்சியசிஷ்டவர்களானவர்களோடே நமக்கும் மோட்ச இராட்சியத்தில் பேரின்ப பாக்கியத்தின் பலன் கிடைக்கும். இத்தகைய கருத்தில் நம்மைத் திடப்படுத்துகிறதற்

3-ம் பிரிவு

பிலாத்து மறுபடியும் வந்து யூத குருப்பிரசாதிகளையும் பி களையும் நோக்கிச் சொன்னதாவது: நான் இவனிடத்தில் ஓர் குற்றத்தையுங் காணேனென்றான் (அரு. 18)

தியானம்.—பிலாத்தென்பவன் புத்திமானும் போகஸ்தனுமாயிருந்ததினால், இயேசுநாதர்பேரில் செ லப்பட்ட குற்றம் மெய்யல்லவென்று உடனே கண்டுபி தான். ஆகிலும், இயேசுநாதர் தம்மை இராஜாவெ சொல்லிக்கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டதினி தம், பிலாத்து உரோமான் அதிகாரி என்கிற மேரையி நீதிமுறைப் பிரகாரம் அவரை வினவி விசாரிக்கக் கடமை பட்டிருந்தான். ஆனால் இயேசுநாதர் கொடுத்த மறுமொழ யைப் பார்க்கையில், அவருடைய இராச்சியபாரமானது பூலோக இராஜாங்கத்துக்கு யாதொரு கெடுதல் விளைவிக்கத் தக்கதல்லவென்று உணர்ந்து அவர்பேரில் ஒரு குற்றமும் காணேனென்றுசொல்லி அவர் மாசற்றவரென்று வெளிப்படுத்தினான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிலாத்தென்பவனிடத்தில் நிலைமையில்லாதிருந்தாலும், அவன் நேர்மையுள்ளவனென்றும் உண்மையைச் சிநேகிக்கிறவனென்றும் அறிந்துகொள்ளுகிறோம். இவனிடத்திலுண்டான நேர்மையான குணத்துக்கும் நல்ல கருத்துக்கும் ஒத்தபடி நீதியதிபதிக்குத் தகுந்த உறுதியுமிருந்தால், இவன் இயேசுநாதரைக் கொலைசெய்ய ஒருக்காலுந் தீர்ப்புச் சொல்லியிருக்கமாட்டான். ஆனால் தன் அலுவலுக்கு மோசம் வருமென்று பயந்ததினால், இவன் தைரியமும் துணிவுமற்றுப்போனான். யூதர்கள் இதைக்கண்டு இயேசுநாதருக்கு மகா அநியாயமான தீர்வையிடும்படி உபாயம் செய்தார்கள். இம்மேரையாய்ப் பசாசும் நமதுமட்டில் நடந்துவருகிறது. அதெப்படியென்றால், நம்மிடத்திலுண்டான பலவீனத்தை அது நன்றாயறிந்து உபாயமாய்த் தன் காரியத்தை அநுகூலப்படுத்திக்கொள்ளும்; நாம் எச்சரிக்கையில்லாமல்போனால், கனமான பாவத்தில் நம்மை

காகத் தபசுசெய்த அர்ச். தாவீது இராஜாவோடே நாமும் அடிக்கடி சொல்லத்தக்கதாவது: ஆ! என் சர்வேசுரா சுவாமி, உமதுபேரில் என் நம்பிக்கையெல்லாம் வைத்திருக்கிறேன்; நான் ஒருக்காலும் கலங்கப்போகிறதில்லை (சங். 30). மேலும் "நீ சர்வேசுரனுக்குப் பயப்படுவாயாகில், அவர் இருதயத்தின் அடைக்கலமாய்ப் போ" என்று அர்ச். அகுஸ்தீன் சொன்ன ஆச்சரியமான வசனத்தையும் அவசியமானால் நினைத்துக்கொள்வோமாக.

சம்பாஷணை.—உன்னத பரமண்டலத்திலிருந்து பாவிகள் தமது அளவில்லாத தயை இரக்கத்தை அண்டி வரவேணுமென்று அழைக்கிற பரலோக பிதாவோடு சம்பாஷணை செய்வோமாக.

தபசுகாலத்தின் 3-ம் வாரம்—ஞாயிறு

பிலாத்து முன்பாக யூதஜனங்கள் இயேசுநாதர்பேரில் குற்றஞ் சாட்டுகிறார்கள்

ஆயத்தச் சிந்தனை.—பிலாத்தின் அரண்மனை முன்பாகக் கூடியிருந்த திரளான ஜனங்கள் இயேசுநாதர்பேரில் குற்றம் சாட்டுகிறதைப் பார்க்கிறதாக உருவிகரித்துக் கொள்வாயாக.

தியானச் சேபம்.—பிறர் உன்பேரில் அநியாயமாய்க் குற்றஞ் சாட்டுகிறதை நீ நல்ல கிறீஸ்துவனைப்போலப் பொறுத்துக்கொள்ள வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

பிலாத்து அரண்மனையினின்று வெளியில் வந்து, அவர்களிடத்தில் இம்மனுஷன்பேரில் என்ன குற்றம் சாட்டுகிறீர்களென்று கேட்டான். அதற்கு அவர்கள் மறுமொழியாக, இவன் குற்றவாளியல்லாதிருந்தால், இவனை உம்மிடத்தில் கையளிக்கமாட்டோமென்றார்கள் (அரு. 18)

தியானம்.—யூதர்களுக்கு வாக்களிக்கப்பட்ட இரட்சகர் அவர்களுக்கு யாதொரு அற்பப் பொல்லாப்பென்

59829

கிலும் செய்யாமல் எண்ணிக்கையில்லாத உபகார நன்மைகளைச் செய்துவந்திருக்க, யூதர்களுக்குத் தலைமையானவர்களும் அவர்களுடைய துர்ப்புத்தியைக் கேட்ட அந்த யூதஜனங்களும் இயேசுநாதரைப் பொல்லாதவனென்று பகைத்து அவருக்கு அநியாயம் செய்கிறதைப் பார்க்கையில், மனவெறுப்புக்கொள்ளாதவர்கள் உண்டோ? இதைப்போலொத்த நன்றிகெட்டதனமும் அநியாயமும் உலகத்தில் உண்டோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஐயோ! இப்படிப்பட்ட அநியாயமான காட்சியை இக்காலத்திலும் நமது கண்களால் பார்த்து வருகிறோம். இயேசுநாதரையும் அவருடைய திருச்சபையையும் துஷ்டர்கள் எவ்வளவோ தூஷணித்துப் பகைக்கிறார்கள்! அப்படிப் பகைக்கிறவர்கள் யார்? ஆண்டவருடைய நற்கொடைகளை ஏராளமாய்ப் பெற்று, மற்றவர்களுக்கு மேலான புத்தி சாமர்த்தியமும் ஆஸ்திபாஸ்தியும் உள்ளவர்கள்தான் பெரும்பாலும் இவ்விதம் பகைக்கிறவர்கள்; இவர்கள் தங்களுக்குள்ள செல்வாக்கைக்கொண்டு ஜனங்களை ஏமாற்றிக் கிறீஸ்துவையும் அவருடைய திருச்சபையையும் பகைக்கச் செய்கிறார்கள். ஆகிலும் நாம் அவர்களைப் பகைத்துச் சபிக்காமல், அவர்களுக்கு ஆக்கினை எவ்வளவு தாமதித்து வருகிறதோ அவ்வளவு அதிக பயங்கரமுள்ளதாயிருக்கும் என்பதை நினைத்து அவர்கள்பேரில் இரக்கமாயிருப்போமாக.

மனப்பற்றுதல்.—நமக்குப் பொல்லாப்புச் செய்கிறவர்கள் மனந்திரும்பவும் சர்வேசுரனைப்பற்றி நாம் அந்தப் பொல்லாப்பை மனஞ்சகித்து அநுபவிக்கவும் அவரை நோக்கி மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—காலங் கெட்டுப்போகிறதற்களவாக நாம் அதிக சுறுசுறுப்பும் நம்பிக்கையும் பத்தியும் காண்பிக்க வருந்துவோமாக.

2-ம் பிரிவு

பிலாத்து அவர்களை நோக்கி: நீங்கள்தானே அவனைக் கொண்டுபோய் உங்கள் வேத முறைமைப்படியே அவனுக்குத் தீர்ப்புச் செய்யுங்களென்றான். யூதர்களோவெனில்: எவனையுங் கொலைசெய்ய எங்களுக்கு உத்தரவு இல்லையென்று அவனுக்குச் சொன்னார்கள் (அரு. 18)

தியானம்.—இயேசுநாதரைக் குற்றஞ் சாட்டின குருப்பிரசாதிகளும் வேதபாரகரும் தாங்களே அவருக்குத் தீர்ப்புச் செய்ய, பிலாத்து தங்களுக்கு அதிகாரங் கொடுத்திருந்தும், அவர்கள் தாங்களாய்த் தீர்ப்புச் செய்யாமற்போனதேனென்றால்: 1-வது, சீர்மைக்குப் பிரதான அதிகாரி பிரசித்தமாய் இயேசுநாதரைத் தீர்வையிடுவானாகில், ஜனங்களுக்கு அவர் பலத்த குற்றவாளியாய்க் காணப்படுவாரென்றும்; 2-வது, அவரைக் கொலைசெய்கிறதினால் வரும் அநியாயத்தைப் புறத்தியார்பேரில் சாட்டவேணுமென்றும்; 3-வது, உரோமையருக்குள் வெகு சாதாரணமானதும், யூத சட்டத்துக்கு விரோதமானதுமாகிய மகா அவமானமும் நிஷ்டூரமும் பொருந்திய சிலுவை மரண தண்டனை அவருக்கு விதிக்கவேண்டுமென்றும் கருத்தாயிருந்தார்கள்.

வெளிக்கு இப்படி வேதமுறைமையையும் புண்ணியத்
தையுங் காட்டினாலும், தங்கள் மனதுக்குள்ளே எவ்வ
வஞ்சகத்தையும் நிஷ்டூரத்தையும் நினைத்திருக்
ஆகிலும் தயாபரரான இரட்சகர் நம்மைப்பற்றி
யுங் கசப்புமான பாத்திரத்தைக் கடைசித் து
குடிக்கச் சித்தமாகித் தாம் இப்படிப் பா
மென்று உரைத்த தீர்க்கதரிசன வசனங்கள்
வதற்கு இக்கொடிய வஞ்சகர் அறியாமலும்
மலும் உதவிசெய்துகொண்டு வருகிறார்கள்.
யாய்ச் சர்வேசுரன் தின்மையில் நின்று ந
செய்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்க
பராமரிக்கை உலகத்தை இப்படி நடப்பித்துக்கொ

கிறது; எப்போதும் இப்படியே நடப்பித்துக்கொண்டு வரும். ஆகையால் துஷ்டர்கள் கொஞ்சநேரம் ஜெயம் அடைகிறதையும் அவர்கள் துர்நினைவு சிலவேளை அநுகூலமாகிறதையும் நாம் பார்க்கும்போது, நமது நம்பிக்கையை இழந்துபோகாமலும் விசுவாசத்தில் மனந்தளராமலும் இருப்போமாக. சர்வேசுரன் தமது அளவில்லாத ஞானத்தினால் சகலத்தையும் நடத்திக்கொண்டுவருகிறதினாலே, அவைகளெல்லாவற்றிலும் தமது மகிமையைத் தேடி, சத்திய வேதத்தினுடையவும் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடையவும் நன்மைகளை அவைகளால் விளங்கச் செய்வார்.

மனப்பற்றுதல்.—நமக்குத் துஷ்டர் தின்மை செய்யச் சர்வேசுரன் சிலவேளைகளில் விட்டுவிடுகிறார்; இதில் அவருடைய இரகசியமான கருத்துகளை ஆராதித்துத் தோத்தரிப்போமாக.

பிரதிக்கினை.—உலகத்தை அலைக்கழித்துத் திருச்சபையின் சமாதானத்தைக் கெடுக்கிற பலவித காரியங்களிலே நல்ல கிறீஸ்துவனுக்குகந்தவண்ணம் நிறைந்த விசுவாசத்தோடு நியாயஞ் சொல்லி எப்போதும் நன்மாதிரிகையைக் காண்பிப்பாயாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர்பேரில் குற்றம் சாட்டத் தொடங்கி: இவன்
ய ஜனங்களைக் கலைத்துச் சேசார் இராயனுக்கு வரி
த் தடைசெய்கிறதையும் தன்னைக் கிறீஸ்து இராஜா
சொல்லுகிறதையும் கண்டோமென்றார்கள் (லூக். 23).

ம்.—இவ்விடத்தில் இயேசுநாதர்பேரில் மூவித
டுகிறார்கள். ஜனங்களைக் கலைக்கிறதும், இரா
செலுத்தக்கூடாதென்பதும், தன்னைக் கிறீஸ்
ஜாவுமென்று சொல்லிக்கொள்ளுகிறதுமான
ற்றமாம். முந்தின இரண்டு விஷயங்களுக்கு
ய் அவர்தாமே பிரசங்கித்துக்கொண்டு வந்ததி
விரண்டு குற்றங்களும் சுத்த அபாண்டம் என்
ிப்படை. மூன்றாவது குற்றம், சேசார் இராய

னுக்கு விரோதமாய் இலௌகிக இராஜாங்கத்தை இயேசுநாதர் தமக்குத் தேடினாற்போல அவர்கள் சாட்சி கொண்டு வந்ததினால், இதுவும் அபத்தந்தான். மாசில்லாதவரைச் சீர்மைக்குப் பிரதான அதிகாரியிடத்தில் கொண்டுவந்து மெய்யைச் சொல்லாமல் பொய்யைச் சொல்லிக் குற்றம் சாட்டுவது எவ்வளவு அக்கிரமம்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்பேர்க்கொத்த அநியாயமான அபாண்டங்களைக் கேட்டிருந்தும், இயேசுநாதர் தமது திருவாய்மலர்ந்து யாதொன்றும் சொல்லாமலும் முகத்திலே யாதொரு கஸ்தி காண்பியாமலும் இருந்ததேனென்றால், நாம் நமது கடமைகளைச் செலுத்தும்போதும் மனச்சாட்சியில் யாதொரு குற்றமில்லாதபோதும் நம்மை மனிதர்கள் பலவிதமாய்த் தீர்மானித்துப் பேசுகிறதை நாம் சட்டைபண்ணாமல் இருக்கவேணுமென்று நமக்குப் படிப்பிக்கிறதற்காக இயேசுநாதர் இப்படிச் செய்தார். நமது திவ்விய குரு காண்பித்த மாதிரிகையால் நாம் அடைந்த பிரயோசனம் யாது? நாம் சீர்திருத்திக்கொள்ளவேண்டியதென்ன?

சம்பாஷணை.—தமது திவ்விய குமாரன்பேரில் அநியாயமாய்ச் சாட்டிய குற்றங்களைக் கேட்டுக்கொண்டிருந்த பரிசுத்த கன்னியாஸ்திரியோடே சம்பாஷணைசெய். இதற்கு முந்தின இரண்டு பிரிவுகளிலேயும் சொல்லியிருக்கிற மனப்பற்றுதல்களும் பிரதிக்கினைகளும் இத்தியானத்திலும் மற்றத் தியானங்களிலும் சம்பாஷணை செய்கிறதற்குத் தகுந்த பொருள் உள்ளவை.

தபசுகாலத்தின் 3-ம் வாரம்—திங்கள்

பாவத்தால் வருஞ் சேதத்தை நினைத்துத் தபசு செய்யவேண்டிய முகாந்தரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—நீ அதிக சுறுசுறுப்பாயிருந்து தபசுசெய்யென்று, லவோதிசையா மேற்றிராணியாருக்குச் சுவிசேஷக அருளப்பர் காட்சியாகமத்தில் எழுதினதை நினைத்துக்கொள்வாயாக (3-ம் அதிகாரம்).

தியானச் சேபம்.—தபக் கிரியைகளைக்கொண்டு பாவத்தால் வந்த சேதத்தைப் பரிகாரம் பண்ண வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

தியானம்.—ஞானஸ்நானத்தில் நாம் அடைந்த விலைமதியாத வரங்களாகிய தேவசிநேகத்தையும் இஷ்டப்பிரசாதத்தையும் சர்வேசுரனை ஊழியுள்ளகாலம் தரிசிக்கும் சுதந்தரத்தையும் சாவான பாவத்தால் நாம் இழந்துபோகிறோம். மனுஷன் இந்தச் சாவான பாவ அந்தஸ்தில் நிலைத்திருக்குந்தனையும் சர்வேசுரனைவிட்டுப் பிரிந்து அவருக்குச் சத்துராதியுமாய்ப் பேய்க்கு அடிமையும் பிள்ளையுமாய் அதற்குக் கிடைத்த சாபத்துக்குட்பட்டவனுமாயிருப்பான்; இந்த நிர்ப்பாக்கியமான அந்தஸ்தில் சிலவிசை நீ எவ்வளவுநாள் போக்கியிருந்தாய்? இந்த நாட்களை எல்லாம் சேர்த்துப்பார்த்தால், உன் சீவியகாலத்தில் அது ஓர் பெரும் பாகம் ஆகுமல்லவா? ஆ! இது எவ்வளவு கஸ்திக்குரிய நினைவு! அர்ச். அகுஸ்தீன் இதை நினைத்துப்பார்த்து எவ்வளவோ கண்ணீர் சிந்தினார்! தபக்கிரியைகளைக் கொண்டு தேவசிநேகமென்கிற பீடத்திலே எந்நேரமும் தம்மைப் பலியிடுகிறதே அவருக்கு ஆறுதலாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சகலரும் தபசுசெய்யக் குறிக்கப்பட்ட இந்நாட்களில், தபசுகாலத்தின் இம்மூன்றும் வாரத்தில் நீயும் அவரைப்போல் செய்வாயாக. நீ சாவான பாவத்தில் அடிக்கடி விழாமல் சர்வேசுரன் உன்னைக் காப்பாற்றியிருந்தாலும், நீ செய்த எண்ணிக்கையில்லாத அற்பப் பாவங்கள்தானே தபசுசெய்கிறதற்குப் போதுமான முகாந்தரமென்று நினைத்துக்கொள். ஏனென்றால் இந்த அற்பப் பாவங்களினால் நாம் தேவ இஷ்டப்பிரசாதத்தை இழந்துபோகாவிடினும், அது நம்மிடத்தில் குறைந்து குளிர்ந்துபோகுமென்பது நிச்சயம். நாம் மோக்ஷத்தில் அநுபவிக்கக்கூடிய மகிமை வரிசைக்குத் தகுந்த தேவ இஷ்டப்பிரசாதத்தின் புதுப்பலனை அடைவதற்கு ஒவ்வொரு அற்பப்பாவமும் விக்கினமாயிருக்கின்

றது. ஆகையால் நீ செய்த அற்பப்பாவங்களை எல்லாம் கணக்கிட்டுப் பார்ப்பாயாகில், தேவ இஷ்டப்பிரசாதத்தின் எத்தனையோ பலன்களையும் மோக்ஷ மகிமையின் உயர்தரப் படிகளையும் இழந்துபோயிருப்பாயென்று காண்பாய்! ஆ! இதெவ்வளவு நஷ்டம்! உன்னாலானமட்டும் சுறுசுறுப்பாய்த் தபசுசெய்து இதற்குப் பரிகாரஞ்செய்யத் தீவிரிப்பாயாக.

மனப்பற்றுதல்.—தபசுக்குரிய பற்றுதலைக் கெஞ்சிக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—இந்த வாரமுழுவதும் தபசுகாலத்தின் முதல் திங்கட்கிழமையில் சொல்லிக்காட்டின பற்பல தவமுயற்சிகளை உதாரமாய் அநுசரித்து வருவாயாக.

2-ம் பிரிவு

தியானம்.—இரண்டாவது, சாவான பாவம் ஆத்துமத்தின் மேலான சீவியத்தை இழந்துபோகச் செய்யும். சுபாவத்துக்கு மேற்பட்ட அந்தச் சீவியமானது ஆத்துமம் சிநேகபந்தனத்தினாலே சர்வேசுரனோடு ஒன்றித்திருக்கிறதில் அடங்கியிருக்கின்றது. சாவானபாவம் இந்த பந்தனத்தை முறித்து தேவ அன்னியோன்னியத்தைக் கெடுத்துப்போடுகின்றது. ஆத்துமம் சர்வேசுரனை விட்டுப் பிரிந்திருக்குந்தனையும் உயிரில்லாத உடலைப்போன்று மோக்ஷத்துக்குப் பாத்திரமான யாதொரு கிரிகையையும் செய்ய இயலாது. மகா பரிசுத்தமுள்ள நமது கிரியைகள் முதலாய் உயிரில்லாத கிரியைகளாயிருக்கும். ஆகையால் இந்த அந்தஸ்திலே செலவழிக்கிற ஒரு நாள், நித்தியத்துக்கும் இழந்துபோன நாளாகும். ஒரு மாசம் இந்த அந்தஸ்திலிருந்தால், நித்தியத்துக்கும் இது இழந்துபோன மாசந்தானே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆ! உயிருள்ள விசுவாசமென்கிற ஒளி உன்னைப் பிரகாசிப்பித்து நீ இழந்துபோன எண்ணிக்கையில்லாத பலன்களைச் சரியானபிரகாரம் நிறுத்துப்பார்க்கக்கூடுமாகில், இழந்து

போனதில் சற்றாகிலுந் திரும்ப அடையும்படி தபமுயற்சிகளை எவ்வளவோ ஆவலோடு செய்துவருவாய்!

அற்பப்பாவம் நம்மிடத்தில் சுபாவத்திக்கு மேற்பட்ட சீவனை அழித்துப்போடாது, ஆனால் அதைப் பலவீனமாக்கும். அந்தச் சீவியத்தில் நற்கிரிகைகளாகிய பலன்கள் குறைந்துபோவதுமன்றி அந்த நற்கிரியைகள் சர்வேசுரனுக்குப் பிரியம் குன்றினவைகளும் பேறுபலன் குறைந்தவைகளுமாகும். மேலும் மனுஷ சுபாவத்துக்கு இயல்பான குறைச்சல் முகாந்தரமாக நம்முடைய நற்கிரியைகளிலே முதலாய் சில மறைவான குறைவுகள் கலந்திருப்பதினால், நம்முடைய நற்கிரியைகளின் பேறுபலன்களும் ஏற்றக் குறைச்சலாயிருக்கும். அர்ச்சியசிஷ்டவர்கள் உதாரமாய்ச் செய்த தப்சு முயற்சிகளினாலும் இடைவிடாத ஒறுத்தல் முயற்சிகளினாலும் இந்தக் குறையை நிவர்த்தியாக்கப் பிரயாசப்பட்டார்கள். அநேகம் பாவத்தைக் கட்டிக்கொண்டு அதற்கான தபசு செய்யச் சற்றாகிலும் கவனிக்காத நாம் அர்ச்சியசிஷ்டவர்களைக் கண்டுபாவியாமல் இருக்கிறதென்ன?

முந்தின பிரிவில் சொல்லியிருக்கிறபடி மனப்பற்றுதலும் பிரதிக்கினையும் செய்யவேணும்.

3-ம் பிரிவு

தியானம்.—மூன்றாவது, சாவான பாவம் நமது ஆத்துமத்தின் அலங்காரத்தைப் போக்கடித்து சர்வேசுரனுடைய பார்வைக்கு அதை அவலட்சணமாக்குகின்றது. ஒரேயொரு சாவான பாவம் சம்மனசாயிருந்தவர்களை அவலட்சண பசாசுகளாக்கி அவர்களை மோக்ஷத்திலிருந்து நரக பாதாளத்திலே தள்ளிப்போட்டது. ஆகையால், அநேகம் சாவான பாவங்களால் அசுத்தமாயிருக்கிற ஆத்துமம் சர்வேசுரனுடைய பார்வைக்கு எப்படியிருக்கும்? செய்த பாவங்களின் கணக்குக்கு ஏற்றவண்ணம் ஆக்கினை இடப்படும் நித்தியத்தில், அந்த ஆத்துமத்தின் கதி என்னவாகும்? இந்த நிர்ப்பாக்கிய கதி உனக்கும் உரித்தானதாயிருந்ததல்லவா?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ சாகுந்தனையும் கடினமான தபசு செய்ய உனக்கு எவ்வளவோ நியாயம் உண்டு! ஏனென்றால் நீ கனமான பாவத்தைச் செய்தது உண்மையாயிருக்க, அதற்கான தபசு செய்தாயென்று உனக்கு நிச்சயமாய்த் தெரியாது.

தபசு செய்கிறதற்கு வேறொரு முகாந்தரம் உண்டு. அதேதென்றால், ஒவ்வொரு அற்பப்பாவமும், எவ்வளவு சொற்பமாயிருந்தாலும், நம்முடைய ஆத்துமத்தை அசுத்தமாக்குகிறதென்பதும் அசுத்தப்பட்ட யாவும் மோக்ஷத்தில் பிரவேசிக்கமாட்டாதென்பதும் விசுவாச சத்தியம். ஆயினும் தினந்தோறும் நமது ஆத்துமத்தை எவ்வளவோ அசுத்தப்படுத்திக்கொண்டுவருகிறோம்! அந்த அசுத்தத்தைப் போக்க நாம் படும் பிரயாசம் எவ்வளவு சொற்பம்! நாம் உத்தரிக்கிற ஸ்தலத்தில் படப்போகிற வேதனையும் மோக்ஷத்தில் பிரவேசிக்கிறதற்குத் தாமதமாகிற காலமும் இதற்குத் தகுந்தாப்போலிருக்கும். இதை நன்றாய் நினைத்துப் பார். ஒரு நிமிஷநேரம் உத்தரிக்கிற ஸ்தலத்தின் வேதனையை அனுபவிக்கிறது எப்பேர்ப்பட்டதென்றும் அதில் அடைபட்டிருக்கிற ஆத்துமம் ஒரு நிமிஷநேரம் சர்வேசுரனைத் தரிசிக்காமலிருக்கிறது எப்பேர்க்கொத்ததென்றும் நீ கண்டுபிடிக்கக்கூடுமானால், மகா கடினமான தபசுகள் முதலாய் உனக்கு மகா இன்பமாகவும் எளிதாகவும் தோன்றும்.

சம்பாஷணை.—பாவிகளுக்கு அடைக்கலமே, கிறீஸ்துவர்களுடைய சகாயமேயென்று நியாயமாய் அழைக்கப்படுகிற பரிசுத்த கன்னியாஸ்திரியோடே சம்பாஷணைசெய்.

தபசுகாலத்தின் 3-ம் வாரம்—செவ்வாய்

பிலாத்தென்பவனுடைய நீதியாசனத்துக்கு முன்பாக இயேசுநாதர் கேள்வி கேட்கப்படுகிறதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—உரோமை அதிகாரியான போஞ்சு பிலாத்தின் சமுகத்திலே இயேசுநாதர் தத்தளியாமல் தாழ்ச்சியோடே நிற்கிறதைக் காண்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—இந்தத் தியானத்தை நன்றாய்ச் செய்ய வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

பிலாத்து நீதியாசனசாலைக்குட் பிரவேசித்து இயேசுநாதரை வரவழைத்து, நீ யூதருடைய இராஜாவோவென்று கேட்க, அதற்கு அவர் மாறுத்தாரமாக: என் இராச்சியம் இவ்வுலகத்தைச் சேர்ந்ததல்ல; அப்படியிருந்தமாகில், நான் யூதர்கள் கையில் அகப்படாதிருக்க என் பிரஜைகள் யுத்தம் செய்திருப்பார்கள்; ஆனால் என் இராச்சியம் இந்த உலகத்தைச் சேர்ந்ததல்லவென்று உமக்குச் சொல்லுகிறேனென்றார்
(அரு. 18)

தியானம்.—இயேசுநாதர் இவ்வுலக இராஜாவாய் இருக்கச் சித்தங்கொள்ளவில்லை; ஆகையால், இந்த வார்த்தையின் சாதாரண அர்த்தப்படி அவர் யூதர்களுக்கும் இவ்வுலகத்துக்கும் இராஜாவாய் இருந்ததில்லை. அவர் ஆளுகிறதற்கு சித்தமான இராச்சியம், அவருடைய திருச்சபை, அதாவது அதன் சட்ட திட்டங்களுக்கும் உபதேசத்துக்கும் மனம் பொருந்திக் கீழ்ப்படிந்து வருகிறவர்களுடைய சங்கந்தான். திருச்சபை இவ்வுலகத்திலிருந்தாலும், இவ்வுலகத்தைச் சேர்ந்ததல்ல. அது பரலோகத்தினின்று வந்தது; இந்தப் பூலோகமானது அதின் பரதேசமுமாய் யுத்தத்துக்கான இடமுமாயிருக்கிறது. அது திரும்பவும் பரமண்டலத்துக்குப்போய் இயேசுநாதருடையவும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடையவும் நித்திய ஒட்டோலகமான இராச்சியத்தை அதில் உண்டுபண்ணவேண்டியதாயிருக்கிறது. அவர் போஞ்சுபிலாத்தின் முன்பாக என் இராச்சியமென்று சொல்லும்போதும் தமது சீஷர்களை நோக்கி எல்லாத்துக்குமுந்திச் சர்வேசுரனுடைய இராட்சியத்தைத் தேடுங்களென்று சொல்லும்போதும் மேற்சொன்ன பரலோக இராச்சியத்தைக்குறித்துத்தான் பேசுகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஞானஸ்நானத்தின் வழியாய் நாம் திருச்சபைக்குப் பிள்ளைகளுமாய் இயேசுநாதருடைய இராச்சியத்தின் பிரஜைகளு

மாய்ப் பிறந்ததினாலேயும் சந்நியாச அந்தஸ்தினால் அவருடைய இராச்சியத்துக்குக் குறிக்கப்பட்டவர்களானதினாலேயும் நாம் எவ்வளவோ பாக்கியவான்களாயிருக்கிறோம்! நமக்கு மனதிருந்தால், பரலோக இராச்சியம் நமக்குச் சொந்தமாயிருக்கும்! அது நம்மைவிட்டுப் போகாமல் நமக்குச் சொந்தமாயிருக்கிறதற்குச் செய்யவேண்டியதேதென்றால், நமது தாயாகிய திருச்சபையின் கருத்தை நன்றாய் கிரகித்து நாம் இந்த உலகத்தில் இருந்தாலும் இதைச்சேர்ந்தவர்களாயிருக்கக்கூடாது. அப்போது நம்முடைய ஜீவியமானது இலௌகீகத்தைச் சேர்ந்ததாயிராமல் பரலோகத்தைச் சேர்ந்ததாயிருக்கும். "நமது இருப்பிடமோவெனில் பரமண்டலங்களில் இருக்கின்றது" (பிலி. 3) என்று அர்ச். சின்னப்பர் சொல்லுவதுபோல், நாம் இப்போதே ஞானவிதமாய்ப் பரலோகத்தில் வாசம்பண்ணுவோம்.

மனப்பற்றுதல்.—உம்முடைய இராச்சியம் வருக: நாங்கள் சதாகாலமும் பரலோகத்திலே தேவரீரோடு இராச்சியபாரம் பண்ணத்தக்கதாக, ஆ! இயேசுவே, இப்போது எங்கள் இருதயத்தில் இராச்சியபாரம் பண்ணியருளும்.

பிரதிக்கினை.—பூலோக ஆசைப்பற்றுதலை மென்மேலும் தள்ளிப்போடவேணும்.

2-ம் பிரிவு

பிலாத்து மறுபடியும் அவரை நோக்கி: அப்படியிருக்க, நீ இராஜாவாய் இருக்கிறயோவென்றான். இயேசுநாதர் மறுமொழியாக: நீர் சொல்லுகிறபடி நான் இராஜாவாய் இருக்கிறேன்; நான் சத்தியத்துக்குச் சாட்சி சொல்வதற்காக உலகத்தில் வந்தேன்; சத்தியத்தை நேசிக்கிற எவனும் என் குரல் ஒலியைக் கேட்கிறனென்றார். பிலாத்தேன்பவன் சத்தியமாவதேதென்று கேட்டான். இதைச் சொன்னவுடனே வெளியே வந்தான் (அரு. 18)

தியானம்.—மனுஷனுடைய அவிவேகத்துக்கும் அதின் ஒவ்வாமைக்கும் இது ஓர் சரியான அத்தாட்சி; தன் முன்பாக நிற்கும் இந்த நூதன மனிதனைப்பற்றி பலரும் பலவிதமாய் மதித்ததினால், விசேஷமாய் "நான் சத்தியத்துக்-

குச் சாட்சி சொல்வதற்காக உலகத்தில் வந்தேன்" என்று அவரே சொன்னதினால், அவரைப்பற்றிய உண்மையை அறிய பிலாத்து வெகு ஆவலுற்றான். ஆகையால் சத்தியமாவதேதென்று அவன் இவரை வினவினது நியாயந்தான். ஆனால் அவர் மறுமொழி கொடுக்குந்தனையும் இவன் மகா ஆசையோடு காத்திருக்கவேண்டியதென்று தோன்றுகின்றது. அப்படிக் காத்திராமல், அவர் மறுமொழி கொடுக்கிறதற்குமுந்தியே பிலாத்து திடீரென தன் நீதியாசனத்தைவிட்டு வெளியில் வந்தான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிலாத்து இவ்விடத்தில் காண்பித்த அவிவேகத்தையும் ஒவ்வாமையையும் நீ கண்டு ஆச்சரியப்பட்டு அது சரியல்லவென்று சொல்லுகிறது நியாயந்தான். ஆனால் உன்னிடத்தில் அவ்விதமான குற்றம் ஒன்றும் இல்லையாவென்று பார். நீ யாதொரு கிரியையைச் செய்கிறதற்கு முந்தியும் சிக்கலான யாதொரு காரியத்தைத் தீர்மானிக்கிறதற்கு முந்தியும் சர்வேசுரனுடைய சித்தம் என்னவென்று அறிகிறதற்காக இஸ்பிரீத்துசாந்துவேயென்னும் ஜெபம் பண்ணிக்கொண்டுவர பழக்கம் இருக்கிறது. ஆனால் ஆண்டவர் கொடுக்கும் மறுமொழி ஏதென்று அறியும்வரையில் பக்தியோடே காத்திராமல் அல்லது உன் உள்ளத்தில் வந்தமறுமொழியைக் கவனியாமல் ஜெபத்தைவிட்டுத் திடீரென்று எழுந்து நீ அந்தந்தக் கிரியைகளைச் செய்யப்போகிறதில்லையோ? அவ்விதம் செய்கையில் பிலாத்து காண்பித்த அவிவேகத்தையும் ஒவ்வாமையுந்தானே கண்டுபாவிக்கிறாய்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் மெய்யென்றொத்துக்கொண்டு உன் ஆத்தும நன்மைக்கு ஏற்றபிரகாரம் வெட்கி நாணக்கடவாய்.

பிரதிக்கினை.—தேவரீர் அடியேனிடத்தில் பேசியருளும்; உமது ஊழியன் தேவரீர் சொல்லுக்குக் காது கொடுக்கிறேனென்று சாமுவேல் தீர்க்கதரிசி சொன்னவண்ணம் நாம் இஸ்பிரீத்துசாந்துவைக் குறித்துச் செய்யும் ஜெபத்தையும் வேறெந்தச் செபத்தையும் கவனத்தோடு செய்வோமாக (1 இராஜா. 3).

நமது ஆண்டவராகிய

இயேசுக்கிறீஸ்து நாதருடைய

சீவியத்தைக்குறித்து நாம் செய்யத்தகும்

தியானங்கள்

ஜனவரி மாதம்

முதல் தேதி

இந்த நாளின் மூன்று விசேஷங்களாகிய விருத்தசேதனம், இயேசுவென்னும் திருநாமம், புதுவருஷத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—பாலனான இயேசுநாதர் தாம் முதல் தட்வையாகச் சிந்தின திருவிரத்தத்தை நமக்காகத் தமது பரம பிதாவுக்கு ஒப்புக்கொடுத்ததை நாம் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—சுறுசுறுப்பையும், உதாரத்தனத்தையும் புதுப்பித்து இந்தப் புது வருஷத்தைத் துவக்க வரப்பிரசாதம் கேட்போமாக.

முதல் பிரிவு

பாலனான இயேசுநாதர் விருத்தசேதனம் அடைந்ததின்பேரில்

தியானம்.—கர்த்தர் பிறந்த எட்டாம் நாள் வருஷப் பிறப்பானதினாலும் நம்மைப்பற்றி ஆண்டவர் இன்றைக்கு விருத்தசேதனம் அடைந்ததினாலும் திருச்சபை இந்த

...த்தாட்டும். உனது சாக்கிரதையினாலும் செபத்தினா அதன் உபாய தந்திரங்களை வீணாக்க வழிதேடிக்கொள். அப்போது எவ்விடத்தில், பாவத்திலே விழ உனக்கு ...க ஆபத்து நேரிடுமென்று காலையிலேயே யோசித்துப் ...த்து அதற்குத் தக்க பிரதிக்கினை செய்துகொள்; ...யில் நீ பிரமாணிக்கமாயிருக்க வரப்பிரசாதங் கேள்; ...ங்காலம் ஆத்தும சோதனை செய்யும்போது, காலமே ...ய்த பிரதிக்கினைக்குச் சரியாய் நடந்தாயோவென்று ...இனைச் சோதித்துப்பார்ப்பாயாக.

சம்பாஷணை.—உன் திவ்விய குருவும் மாதிரிகையு ...ள்ள இயேசுநாதரோடே சம்பாஷணை செய்.

தபசுகாலத்தின் 3-ம் வாரம்—புதன்

பிலாத்தின் நீதியாசனத்துக்கு முன்பாக இயேசுநாதர் காண்பித்த ஆச்சரியமான மவுனத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதரைப் பிரஜைகள் பகைத்து அவர்பேரில் அநேகங் குற்றங்களைச் சாட்டிக் கூக்குரலிடும்போது, அவர் அமரிக்கையாயும் வாய்திறவாமலும் இருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இவ்விடத்தில் உன் திவ்விய இரட்சகர் காண்பிக்கிற சுகிர்த மாதிரிகைகளைப் பிரமாணிக்கமாய்க் கண்டுபாவிக்க வரப்பிரசாதங் கேள்.

முதல் பிரிவு

துருப்பிரசாதிகளும் மூப்பர்களும் இயேசுநாதர்பேரில் அநேகங் குற்றங்களைச் சாட்டிக்கொண்டு வந்தாலும், அவர் யாதொரு மறுமொழியுஞ் சொல்லாமலிருந்தார் (மத். 27.)

தியானம்.—யூதர்கள் சாட்டின முந்தின குற்றங்களெல்லாம் வீணானவைகளும் ருசுவில்லாதவைகளுமெனப் பிலாத்துவுக்குத் தோன்றின; ஆகையால், அவன் அவைகளை நிராகரித்துத்தள்ளி, இயேசுநாதருடைய மாசின்மையைப் பிரசித்தமாய் வெளிப்படுத்தவேண்டியிருந்தது. அவர்கள் புதிதாய்ச் சொன்ன குற்றங்கள் முந்தினவைகளுக்கு ஒத்தவைகளே; ஆகையால் அவைகளுக்கு மறுமொழி சொல்வது இரட்சகருக்கு யோக்கியமல்ல. அவருடைய பரிசுத்ததனமே அவருக்குப் பதிலாய் மறுமொழி கூறி, அவருடைய பகையாளிகளை நாணச்செய்து, அவரது தெய்வீகத்தையும் எண்பிக்கலாயிற்று. அவர் மனுஷ வேஷத்தினுள் தமது தெய்வீகத்தை மறைத்துக்கொண்டிருந்தார் என்பது மெய்; ஆனால் அவர் பிலாத்துவுக்கு ஏற்கனவே சொல்லியிருந்த மறுமொழி அவன் அதைத் தெரிந்துகொள்வதற்குப் போதுமாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தன் நடக்கையே தன் புண்ணியத்துக்கு மாறாத சாட்சியாகவும் காய்மகாரக்காரரும் வேத விரோதிகளும் தன்மேலே சாட்டுங் குற்றங்களுக்கு தெளிவான மறுமொழியாகவும் இருக்கும்படி நடந்துகொள்ளுகிற சந்நியாசியே பாக்கியவான்! அவன் சர்வேசுரன் சமுகத்திலுங் குற்றமில்லாதவனாயிருக்கும்படி இடைவிடாமல் பிரயாசப்படுகிறதாக அவனது மனமே சாட்சி கூறுமாகில், இன்னும் அதிக பாக்கியவான். அவ்வித பாக்கியவான்களுக்குள்ளே நீயும் ஒருவனோ?

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, தேவரீர் சமுகத்திலே என் இருதயம் பாவமில்லாதிருந்தால் போதும்; மனுஷருடைய பொல்லாப்புக்கு நான் பயப்படப்போகிறதில்லை. (சங். 117, 118).

பிரதிக்கினை.—மெய்யான புண்ணியத்தை அநுசரிக்கப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

பிலாத்தென்பவன் திரும்பவும் இயேசுநாதரை வினவி: உன்பேரில் எத்தனையோ குற்றஞ் சாட்டுகிறார்களென்று நீ கேட்கிறதில்லையோ? நீ அதற்கு மறுமொழியாய்ச் சொல்லுகிறதென்ன? என்றான். இயேசுநாதரோவெனில் பின்னும் மறுவுத்தரமொன்றுஞ் சொன்னவரல்ல. அதைப்பற்றி அதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான். (மத். 27. மாற். 15.)

தியானம்.—பிலாத்து ஆச்சரியப்படுவது நியாயந்தானே. ஏனென்றால் மரணத்துக்கேதுவான குற்றஞ்

சாட்டப்பட்டு மேலான நீதியாசனத்துக்கு முன்பாக நிற்கிறவன் நீதிபதி தன் பட்சமாயிருந்து தன்னை வினாவிக் கேட்கும்போது தன்பேரில் குற்றமில்லையென்று ஒப்பிக்கிறதற்குத் தனக்குண்டான நியாயமெல்லாம் சொல்லிக் காண்பிக்கிறது இயல்பன்றோ? ஆகிலும் அநந்த முறை இரண்டொரு வார்த்தையினால் தமது எதிராளிகள் நாணவும் ஜனங்களெல்லாரும் அவர்கள்பேரில் கோபங்கொள்ளவும் செய்த இயேசுநாதர்தாமே இத்தகைய சமயத்திலே ஒரு வார்த்தை முதலாய்ச் சொல்லாமல் மவுனமாயிருக்கிறார்! யாதொரு ஆசாபாசமும் மேட்டிமையுமில்லாமல் இயேசுநாதர் மகத்துவமாய் மவுனமாயிருக்கும் முகாந்திரங்கள் பிலாத்துவுக்கு விளங்கவே இல்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய இரட்சகரது உச்சிதமான மவுனத்தின் முகாந்திரங்களை அறிந்திருக்கிற நாம் பிலாத்தென்பவனைப் பார்க்க அதிக பாக்கியமுள்ளவர்கள். அவர் அப்படி மவுனமாயிருந்ததற்கு முகாந்திரமேதென்றால், முதலாவது: அவர் நமக்காகப் பாடுபட்டு மரிக்கத் தீர்மானித்திருந்ததினாலே, உண்மை வெளியாகும்படி அவசியமானதை சொல்லிக் காண்பித்தபின், தம் உயிரைக் காப்பாற்றுகிறதற்கு உதவியான ஒரு வார்த்தை முதலாய்ச் சொல்ல அவர் சித்தமாயிருந்ததில்லை; 2-வது: அவர் தமக்கு இவ்வளவு மோசம் வருவிக்கும் இம்மவுனத்தினாலே நாம் வாக்கினால் கட்டிக்கொள்ளுகிற எண்ணிக்கையில்லாத பாவங்களுக்குப் பரிகாரம் பண்ணவும், நம்மைக் கண்டிக்கிற பெரியோர்களை ஆங்காரத்தோடே எதிர்த்துப் பேசுவதற்கும் நமக்கு விரோதமாய்ப் பேசுகிறவர்களைக் கடிந்து மறுமொழி சொல்லுவதற்கும் நம்மை அவமானப்படுத்துகிறவர்களைக் கோபிப்பதற்கும் ஆசாபாசம் நம்மைத் தூண்டும்போது, நம்முடைய நாவை அடக்க நமக்குத் திவ்விய மாதிரிகையாயிருக்கவும் சித்தமானார்.

மனப்பற்றுதல்.—உன் ஆச்சரியத்தையும் நன்றியறிதலையும் இயேசுநாதருக்கு நீ காண்பிக்கிறதுமல்லாமல், அவருடைய திவ்விய மாதிரிகையைப் பின்சென்று நடக்க

நீ பிரயாசப்படாததைப்பற்றி அவரிடத்தில் பொறுத்தல் கேட்பாயாக.

பிரதிக்கினை.—இனி வாக்கினால் பாவத்தைக் கட்டிக்கொள்ளாதிருக்கும்படி இது வரையில் வாக்கினால் செய்த பாவங்களின்பேரில் ஆத்தும சோதனை செய்வாயாக.

3-ம் பிரிவு

யூதர்களோவென்றால் இவன் கலிலேயா நாடு தொடங்கி இவ்விடமட்டும் யூதேயா தேசமெங்கும் போதித்துச் சனங்களைக் கலகப்படுத்துகிறானென்று சத்தமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தார்கள் (லூக். 23.)

தியானம்.—பிலாத்தென்பவன் இயேசுநாதருடைய மாசற்றதனத்தை அறிந்து அதை வெளிப்படுத்தினபின், அவர்பேரில் குற்றஞ்சாட்டினவர்களை இனி பேசவிடாமல் தக்கபிரகாரம் அவர்களைக் கண்டித்து வெளியே போகச் சொல்லியிருக்கவேண்டியது. ஆகிலும் அவன் அப்படிச் செய்யத் துணியவில்லை. இதனால் யூதர்கள் அவனது பலவீனத்தை அறிந்துகொண்டு, அவனைப் பயமுறுத்திக் கூக்குரலிட்டு அவன் தன் மனச்சாட்சிக்கு விரோதமாய் தாங்கள் கேட்டதை கொடுக்கும்படி அவனைப் பலவந்தப்படுத்தத் துணிந்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது ஜென்ம விரோதியான பசாசு செய்வதும் இவ்விதமே. நாம் சர்வேசுரனுக்கும் மனுஷருக்கும் நடுவே, அல்லது மனச்சாட்சிக்கும் ஆசாபாசத்துக்கும் நடுவே தத்தளித்துப் பயப்படுகிறதைக் காணும்போது, நாம் பலவீனமுள்ளவர்களென்று அறிந்து மிகுந்த துணிவைக் காண்பிக்கும்; காது செவிடுபடக் கூக்குரலிட்டு, நானாவித கஷ்டங்களைத் தோற்றுவித்துப் பயமுண்டாக்கித் தின்மைக்கு நாம் சம்மதிக்குந்தனையும் இளைப்பாறாமல் நம்மை வாதிக்கும். பிலாத்தென்பவனுக்கு வந்த நிர்ப்பாக்கியத்தை அறிந்திருக்கிற நாம் நம்முடைய துர்ப்பலத்தை நம்பாமலும் பசாசினு

டைய சோதனைக்குக் கொஞ்சமாகிலும் இடங்கொடாமலும் அப்போஸ்தலர் சொன்னபடி விசுவாசத்தையும் ஜெபத்தையும் கேடயமாகக்கொண்டு சோதனையின் ஆரம்பத்திலேயே அதைப் பலமாய் எதிர்த்துத் தள்ளிப்போடுவோமாக.

சம்பாஷணை.—நம்மைப்பற்றித் தமது ஜனங்களால் நிந்தைப்பட்ட இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக.

தபசுகாலத்தின் 3-ம் வாரம்—வியாழன்

ஏரோது இராஜாவின் அரமனையில் இயேசுநாதர் அவமானமடைந்தது

ஆயத்தச் சிந்தனை.—ஏரோது இராஜா இயேசுநாதரை ஆகடியம்பண்ணி அவரைப் பைத்தியனைப்போல நடப்பித்ததைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—இயேசுநாதரைப்பற்றி நிந்தை அவமானப்படுகிறதினால் வரும் பலன் எவ்வளவென்று அறிய வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

பிலாத்தென்பவன் இயேசுநாதர் ஏரோதின் அதிகாரத்துக்குள்ளானவனென்று அறிந்து அவன் அந்நாட்களிலே எருசலேம் நகரத்தில் வந்திருந்ததினால், அவனிடத்தில் அவரை அனுப்பினான். ஏரோதோவென்றால், இயேசுநாதர் தனக்கு முன்பாக யாதோர் புதுமை செய்வாரென்று நம்பியிருந்ததினாலே, அவரைக் கண்டு சந்தோஷம் அடைந்தான் (லூக். 23.)

தியானம்.—அர்ச். ஸ்நாபக அருளப்பரைக் கொலைசெய்வித்த இழிவும் வீம்பும் மோகமுமுள்ள ஏரோதென்பவன் இயேசுநாதர்செய்த அற்புதங்களைக்குறித்து வெகு

புகழ்ச்சியாய்ச் சொல்லக் கேட்டிருந்ததினால், அவர் தன் முன்பாக யாதோர் அற்புதஞ் செய்வாரென்று நம்பி அதைப்பார்க்க மெத்த ஆசைப்பட்டுக்கொண்டிருந்தான். ஆனால் இவன் புதுமையைப் பார்க்க வேணுமென்று ஆசைப்படவேண்டியதென்ன? தன் புத்திக்கு வெளிச்சமாகி மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பவோ? பரிச்சேதமில்லை; தன்னுடைய சிலாக்கியத்தையும் விநோதப் பிரியத்தையும் திருப்திபடுத்திக்கொள்வதற்காகவன்றி வேறல்ல. சர்வேசுரன் தமது விசேஷ வரங்களை இவ்வளவு விபரீத புத்தியுள்ள மனிதருக்குக் கொடுக்கமாட்டார். அவைகளுக்குத் தாங்கள் அருகரல்லவென்று தாழ்ச்சியாயிருக்கிறவர்களுக்கும், சுயபட்சம் என்பது அறவே இல்லாமல் அதற்கு மரித்தவர்களாய் சகலத்திலும் தேவ மகிமையை மாத்திரம் தேடி, சர்வேசுரனுக்குப் பிரியப்படும்படி அல்லது ஆத்துமாக்களின் இரட்சணியத்தின்பொருட்டு மாத்திரம் விசேஷ அற்புத வரங்களைக் கேட்கிறவர்களுக்குமே சர்வேசுரன் அவைகளைக் கொடுத்தருள்வார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இத்தகைய மனோபான்மை உன்னிடத்தில் இல்லாததினாலே அல்லது மிகவுங் குறைவுள்ளதாயிருக்கிறதினாலே விசேஷ வரங்களை அதிகமாய் அடையாததுமல்லாமல், வெகு காலமாய் நீ சந்நியாசியாயிருந்தும் உனக்கு முன் இந்த சபையிலே புண்ணியத்திலே மிகவும் விளங்கி வாக்கினாலும் கிரியையினாலும் வல்லபமுள்ளவர்களாயிருந்தவர்களின் சாயல் கொஞ்சமாகிலும் உன்னிடத்தில் இல்லாமற்போகிறது.

மனப்பற்றுதல்.—உன் இருதயத்தின் அந்தரங்க இலட்சணங்களை அறிய ஆசைப்படுவாயாக. சுயபட்சத்தையும் சிலாக்கியத்தையும் சார்ந்த மனம்பொருந்தின நினைவையெல்லாம் வெறுத்துவிடுவாயாக.

பிரதிக்கினை.—அதிகமதிகமாய் எனக்குத்தானே நான் செத்தவனாயிருக்கவும் எல்லாத்திலும் சர்வேசுரனை மாத்திரம் நோக்கி நடக்கவும் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

ஏரோது இராஜா இயேசுநாதரைப் பார்த்து அநேகம் விஷயங்களைக்கேட்டும் அவர் ஒரு மறுமொழியும் சொன்னவரல்ல. அப்படியிருக்கத் தருப்பிரசாதிகளும் வேதபாரகரும் இடைவிடாமல் அவர்பேரில் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தார்கள் (லூக். 23.)

தியானம்.—ஏரோது இராஜாவண்டைக்கு இயேசுநாதர் குற்றவாளியாக அனுப்பப்பட்டிருந்தும், அவர் வாய் திறவாமல் அவ்விடத்தில் மவுனமாயிருந்தது மகா ஆச்சரியமுள்ள காரியந்தான். யூதர்கள் அவர்பேரில் பலத்த குற்றங்களைச் சாட்டி அவருடைய கீர்த்திக்கு அவமானம் செய்துகொண்டுவருகையில், அவர் இரண்டொரு வார்த்தையினால் தமதுபேரில் குற்றம் சாட்டுகிறவர்கள் வெட்கி நாணவும் தம்மை எல்லாரும் புகழ்ந்து கொண்டாடவும் செய்யக்கூடுமாயிருந்தும் மவுனமாயிருக்கிறார்! இதினால் இவருடைய உயிருக்கே பொல்லாப்பு வரக்கூடுமாயிருக்கிறது. ஏரோது இராஜா ஆசைப்பட்டபிரகாரம் அவன் முன்பாக ஒரு புதுமை மாத்திரம் இவர் செய்வாரானால், அந்த இராஜா இவரைப் புகழ்ந்து பேசி ஆதரிப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் இயேசுநாதர் அப்படி ஒரு புதுமை முதலாய்ச் செய்யவில்லை. இந்தப்பிரகாரம் சுபாவ உணர்ச்சியெல்லாம் தள்ளித் தன்னை ஜெயிக்கிறது செத்தவனை உயிரோடு எழுப்புகிறதைப் பார்க்க மகா பெலத்த புதுமையாகும். ஆனால் உலகமும் ஏரோதும் அவனைச் சேர்ந்தவர்களும் இவரிடத்திலுண்டான இந்தப் புதுமையைக் கண்டுபிடிக்கவில்லை. அவர்களுக்கு இவ்வகைப் புதுமை புத்தியில்லாமையும் வல்லபமில்லாமையுமாகத் தோன்றுகிறது. நீதிமான் அவர்கள் கண்ணுக்கு விளையாட்டுக்குரிய வஸ்துவாகவும் இரக்கத்துக்குரிய பைத்தியக்காரனாகவும் மாத்திரம் தோன்றுவான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆபத்தான இந்த சமயத்திலே இயேசுநாதர் இப்படிச் செய்வானேன்? ஏரோது இராஜாவினுடைய ஆங்காரத்

தைத் தணிப்பதற்குமல்லாமல், நம்மை மதித்துப் புகழ்ந்து கொண்டாட வேணுமென்று நாமெல்லாரும் விசேஷமாய் இலௌகிகப் பெருமையுள்ளவர்கள் சுபாவமாய்க்கொண்டிருக்கிற அக்கிரமமான ஆசையாகிய நமது சுய ஆங்காரத்தை ஜெயிக்கும்படி நமக்குக் கற்றுக்கொடுத்து நம்மைத் தைரியப்படுத்துவதற்காகவும் இவ்விதம் செய்தார். இவ்விதமான கிரமமற்ற ஆசையை இதுவரையில் நீ எதிர்த்து நின்று ஜெயித்தது எப்படியென்று பார்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் இவ்விடத்தில் உனக்குக் காண்பித்த மாதிரிகையையும் திடனையும் கண்டு ஆச்சரியப்பட்டு அவரைக் கண்டுபாவிக்கிறதற்கு வேண்டிய வரப்பிரசாதத்தைக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—உன்னைப் புறத்தியார் அநியாயமாய் நிந்தித்துத் தூஷணிக்கும்போது, நீ மவுனத்தையும், சாந்த குணத்தையும், பொறுமையையும் காண்பிப்பாயாக.

3-ம் பிரிவு

அப்போது ஏரோது தன் இராணுவத்தோடு அவரை நிந்தித்துப் பரியாசமாக ஒரு வெள்ளை வஸ்திரத்தை அவருக்குத் தரிப்பித்துத் திரும்பவும் பிலாத்துவண்டைக்கு அவரை அனுப்பினான் (லூக். 23.)

தியானம்.—மகிமைப் பிரதாபமுள்ள இராஜாவும் உண்டாக்கப்படாத ஞானச் சுரூபியுமாயிருக்கிற இயேசுநாதர் ஏரோது இராஜாவால் புத்தியில்லாதவனாகவும் பைத்தியக்காரனாகவும் நடப்பிக்கப்பட்டதை உற்று யோசித்துப் பார். அவர் பைத்தியனுக்கு இலாஞ்சனையான வெள்ளை வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு, ஜனங்கள் பரிகாசம் பண்ணி ஆர்ப்பரிக்க, எருசலேம் பட்டணத்து வீதிகளையும், அங்கு பாஸ்காப்பண்டிகைக்காக வந்திருந்த அன்னியரின் ஜனத்திரளையும் கடந்து செல்வதைப்பார்; "நான் சகல ஜனங்களுக்கும் பரிகாசம் ஆனேன்" என்று ஜெரேமியாஸ் தீர்க்கதரிசி சொன்ன வாக்கியம் நிறைவேறலாயிற்றென்று அறிந்துகொள்வாய்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் தியானத்தில் உனக்கு வெகு ஞானப்பலன் உண்டாகும்படி இயேசுநாதர் நித்திய ஜீவியத்துக்குக் கூட்டிக்கொண்டு போகும் மெய்யான ஏகவழியும் உத்தம சாங்கோபாங்கத்தின் உயிருள்ள சாயலுமாயிருக்கிறாரென்பதையும் நீ பற்றும் பற்றாய் யோசித்துப்பார்க்கவேணும். மேலும் நீ யாதொரு குற்றத்துக்கும் இடங்கொடாமல் அவருடைய சாயலாயிருக்கவும், அவருடைய இலாஞ்சனையான வஸ்திரத்தை மனதுபொருந்தி அணிந்துகொள்ளவும் சர்வேசுரனுக்கும் திருச்சபைக்கும் சத்துராதியாயிருக்கிறவர்களாலே அவரைப்போலேயும் அவரைப்பற்றியும் நிந்தை அவமானப்படவும் பைத்தியக்காரனென்று முதலாய்ப் பேர் வாங்கவும் உன் இருதயத்தில் மிகுந்த ஆசையை எழுப்புவாயாக. இதுதான் சிலுவையின் ஞானப் பைத்தியமென்று சொல்லப்படும். இதைச் சர்வேசுரனுடைய ஊழியர் அநேகம்பேர் பின்சென்று நடந்திருக்க, நீயும் அவர்களைக் கண்டுபாவியாதிருப்பதேன்?

சம்பாஷணை.—தமது திருக்குமாரனுக்கு வந்த அவமானமெல்லாம தனக்கே வந்ததென்று நினைத்திருந்த பரிசுத்த கன்னியாஸ்திரியோடே சம்பாஷணை செய்.

தபசுகாலத்தின் 3-ம் வாரம்—வெள்ளி

இயேசுநாதரைப் பரபாசென்னும் கள்ளனோடே ஒரே வரிசையாக நிறுத்திப் பரபாசை விடுதலையாக்கினதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—சகல ஜனங்கள் முன்பாகப் பேர்போன கொலைபாதகக் கள்ளனோடு இயேசுநாதரை ஒரே வரிசையாக நிறுத்தியிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—சர்வேசுரனுக்கும் படைக்கப்பட்ட எந்த வஸ்துக்களுக்கும் நடுவே மனம் தத்தளியாமலிருக்க வரப்பிரசாதங் கேள்.

முதல் பிரிவு

நீதிஸ்தலத்துக்கு முன்பாக ஜனங்கள் கூடியிருக்கையில், பிலாத்து அவர்களைப் பார்த்து: நீங்கள் பாஸ்காப் பண்டிகையில் விரும்பும் விலங்குக்காரனொருவனை நான் விடுதலையாக்குவது உங்களுக்கு வழக்கமாயிருக்கின்றதே; ஆகையால் எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க விரும்புகிறீர்கள், பரபாசையோ அல்லது கிறீஸ்து என்னப்படுகிற இயேசுவையோ வென்று கேட்டான் (மத். 27 ; அரு. 18.)

தியானம்.—பிலாத்தென்பவன் இயேசுநாதர் மாசில்லாதவரென்று அறிந்து பிரசித்தப்படுத்தியிருந்ததினாலே, அவரைச் சாவுக்குத் தீர்வையிடுகிறது தன் மனச்சாட்சிக்குச் சரியல்லவென்று கண்டுபிடிக்கிறான். ஆனால் தன் பேரில் யூதர்கள் சேசார் இராயனிடத்தில் குற்றம் சாட்டுவார்களென்று பயந்து அவர்களுக்குப் பிரியமானதைச் செய்தால், தனக்கு நலமாயிருக்குமென்று யோசித்துத் தன் மனச்சாட்சிக்கும் இலௌகிக நன்மைக்கும் நடுவே தத்தளித்து உலோகப் பிரீதியுள்ள உபாயங்களைத் தெரிந்துகொள்ளுகிறான். இதற்காகவே இயேசுநாதரைத் தீர்வையிடும்படி ஏரோதென்பவனிடத்தில் அனுப்பினான். அது அநுகூலமாகாததினால், இப்போது தவறாத வேறொரு உபாயம் அகப்பட்டதென்று நினைக்கிறான். அதாவது, ஜனங்கள் மெத்தவும் பகைத்திருந்த ஒரு பெரிய கொலைபாதகனை அல்லது இதுவரையில் யாவராலும் ஸ்துதிக்கப்பட்ட இயேசுநாதரை இரண்டுபேரில் ஒருவரை அவர்கள் தெரிந்துகொள்ளும் அவசியம் நேர்ந்தால், எப்படியும் இயேசுநாதரை விடுதலையாக்குவார்களென்று நினைக்கிறான். ஆனால் மறுபடியும் கோழைத்தனமுள்ள அந்த அதிபதியினுடைய நம்பிக்கை வீணாய்ப்போயிற்று.

இன்னும் இவன் தேடின வேறு உபாயங்களும் தவறிப்போகவே, கடைசியாய் நீதியான கடமையை விட்டு விலகி அநியாயத்துக்குக் கைகொடுத்து மாசற்றவரையும் தன்னையுமே பொல்லாப்புக்குட்படுத்திக்கொள்கிறான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஒருவன் இரண்டு எஜமானுக்கு ஊழியம் செய்யக்கூடாதென்று இயேசுநாதர் சொல்லியவண்ணம் (மத். 6) சர்வேசுரனுக்கும் உலகத்துக்கும், புண்ணியத்துக்கும் அற்பமாகிலும் கிரமந்தப்பின ஆசாபாசத்துக்கும் மத்தியில் இருக்கமுடியாது என்பது உண்மையிலும் உண்மை என்று அறிந்துகொள்கிறோம். சொற்ப சரச பரியாசங்கலந்த உருக்கமான தனிச்சிநேகம் பத்தி பற்றுதலினாலே சிலவிசை உன்னிடத்தில் உற்பத்தியானாலும் உன் மனச்சாட்சிக்குச் சந்தேகத்தையும் கலக்கத்தையும் அடிக்கடி விளைவிக்கிறதல்லவா? இது நீங்கும்படி நீ கெட்டியான பிரதிக்கினை செய்து அச்சிநேகத்தை முழுதும் தள்ளவேணுமென்று உன் ஆத்தும குருவும் உன் மனச்சாட்சியின் நல்லுணர்ச்சியும் சொல்லுகையில், நீ அது என்னாலே முடியாது, ஆனால் இனிமேல் கண்டனைக்குரிய எந்தச் சரச பரியாசத்தையும் விட்டுவிடுவேனென்று சொல்கிறாய். இது இச்சையின் மோசடியான உபாயம்; இவ்வித தீர்மானத்தால் ஆகப்போகிறது ஒன்றுமில்லை. உன் மனச்சாட்சியைத் தட்டிக்கேள், உன் அனுபவத்தை வினவிப்பார். இன்னும் இதைப்போல் அநேக திருஷ்டாந்தங்கள் வெளிப்படும்.

மனப்பற்றுதல்.—என் சர்வேசுரா சுவாமி, கொஞ்சமாகிலும் தத்தளியாமல் உம்மை முழுமனதோடே சிநேகிக்கிறேனென்று உண்மையாகவே எப்போதும் சொல்லக்கூடுமான வரப்பிரசாதங் கேட்பாயாக.

பிரதிக்கினை.—அரைகுறையான யத்தனங்களால் வியாதி சொஸ்தமாகாது, யுத்தத்தில் ஜெயங்கொள்ள முடியாது, மகத்தான காரியம் எதையும் செய்ய இயலாது என்னும் இலௌகிக பிரமாணம் சாங்கோபாங்க நெறியிலும் சரியாய்ப் பொருந்தும்.

2-ம் பிரிவு

குருப்பிரசாதிகளும் மூப்பர்களும் பரபாசை விடுதலையாக்கவும் இயேசுநாதரைக் கொலைசெய்யவும் ஜனங்களை ஏவினதால், அப்படியே ஜனங்களெல்லாரும் கூக்குரலிட்டுப் பிலாத்தென்பவனைப் பார்த்துப் பரபாசை விடுதலையாக்கி இவனைக் கொலைசெய்யுமென்றார்கள். (மத். 27; லூக். 23)

தியானம்.—இயேசுநாதர் இவ்விடத்தில் அநுபவித்த நிந்தை அவமானம் எவ்வளவு பெரிதென்று உன்னால் கூடினமாத்திரங் கண்டுபிடிக்கப் பிரயாசப்படு. யூதேயா நாட்டின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டவர்களுக்குள்ளே மிகவும் பெரிய பாதகனான பரபாசோடே ஒரே வரிசையாய்ச் சகல ஜனங்கள் முன்பாகச் சீர்மைக்குப் பிரதான அதிகாரியால் அவர் நிறுத்தப்படுகிறார். அப்போது ஜனங்கள் இவர்கள் இருவரில் யாரை விடுதலையாக்கத் தெரிந்துகொள்கிறார்கள்? ஓ! அநியாயம், இயேசுநாதருக்குச் சொல்லொண்ணா அவமானம்! யூதர்களின் நன்றிகெட்டதனம் பிலாத்துவுக்குத்தானே பெரிய பிரமிப்பாயிருக்கிறது. இயேசுநாதரைப்பார்க்கப் பரபாஸ் நல்லவனென்றாற்போல், அவர்கள் எல்லாரும் "இயேசுவைக் கொலைசெய்யும், பரபாசை விடுதலையாக்கும்" என்று ஒருவாய்ப்பட கூக்குரலிடுகிறார்கள். இதை அறிந்திருக்கிற நம்மில் யார் பிறர் தன்னைத் தகுந்தவண்ணம் மதிக்கவில்லையென்றும், தன்னை ஒருவரும் சட்டைபண்ணாமல் அலட்சியமாயிருக்கிறார்களென்றும் முறையிடக்கூடும்?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அநேகம்விசை நமது ஆண்டவராகிய இயேசுநாதரை விட்டு விலகி நமது இருதயத்தில் பாவம் மேற்கொள்ளச் செய்ததினால், நாம் யூதர்களைக் கண்டுபாவித்திருக்கிறோம் என்பதை யோசித்து அதனிமித்தம் சர்வேசுரனுடைய வீட்டிலே யாதொரு அலுவல் பார்க்க நாம் அயோக்கியரென்றும் அதில் குடியிருக்க முதலாய் நாம் தகாதவர்களென்றும் நிச்சயித்துக்கொள்வோமாக. இதைக்குறித்து நீ என்ன நினைக்கிறாய்?

மனப்பற்றுதல்.—இப்போது சொன்னவண்ணம் மனப்பற்றுதலை எழுப்புவாயாக.

பிரதிக்கினை.—மடத்திலிருக்கும் காரியங்களுக்குள்ளே அதிக தாழ்மையானதும் நீசமானதும் நமக்குப் பொருந்தினதென்று நினைத்துக்கொள்வோமாக.

3-ம் பிரிவு

பிலாத்தென்பவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி அவனுக்கு ஆள் அனுப்பி: உமக்கும் அந்த நீதிமானுக்கும் யாதொன்றும் ஆகாதிருக்கக்கடவது; அதேனென்றால், அவரைப்பற்றி இன்று சொப்பனத்தில் மிகுந்த உபத்திரவப்பட்டேனென்று சொல்லுவித்தாள் (மத். 27)

தியானம்.—அவள் மனதிலே வந்த கலக்கம் அவள் இரட்சணியத்துக்காகச் சம்மனசுவினால் உண்டானதென்று அநேக வேதபாரகர் சொல்லியிருக்கிறார்கள். அவள் இரட்சணியம் அடைந்தாளென்று நம்பலாம். மேலும் கிரேக்குச் சபை கிறீஸ்துவர்கள் அவளை அர்ச்சியசிஷ்டவளாகப் பாவித்து அர்ச். கிளோதிய புரோக்குலாவென்னும் பேரால் அவளைக் குறித்துத் திருநாள் கொண்டாடுகிறார்கள். அதெப்படியிருந்தபோதிலும், பிலாத்தென்பவன் தன்னை இரட்சிக்கக்கூடிய நீதிக்குரிய தீர்வை இடுவதற்கும் இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு நிர்ப்பாக்கியத்தைத் தரக்கூடிய மிகவும் வெறுப்புக்குரிய பாதகத்தை நிறைவேற்றுவதற்கும் நடுவே தத்தளிக்கும் ஆபத்தான அப்பெரிய சமயத்திலே அவன் பெண்சாதி அறிவித்தது அவனுக்கு அரிய பெரிய வரமன்றோ? அவன் அதைக் கவனியாததினால் தன் அலுவலையும் இழந்து பரதேசத்தில் துரத்தப்பட்டதுமன்றித் தன் கையால் தானே தன் உயிரை மாய்த்துக்கொண்டு செத்தானென்று அறிகிறோம்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆசாபாசமானது உன்னை ஏவி உன் புத்தியை மயக்கி உன் மனதை நன்மைக்கும் தின்மைக்கும் நடுவிலே தத்தளிக்கச் செய்தபோது, எத்தனை விசை எத்தனையோ விதத்தில் உன் காவலான சம்மனசும் உன் ஆத்தும குருவும் உனக்கு வந்த

தின்மையை விலக்கி நன்மை செய்யும்படி உன்னை எச்சரித்துப் புத்தி சொன்னார்கள். இதெல்லாம் மாபெரிய உபகாரமல்லவோ? இதற்கு ஏற்றவண்ணம் நடந்தாயா? இதனால் பிரயோஜனம் அடைந்தாயா?

சம்பாஷணை.—நமது ஆண்டவரோடே சம்பாஷணை செய்து அவருடைய அளவில்லாத மகிமைப் பிரதாபத்துக்கு முன்பாக நம்மை முழுதும் தாழ்த்திச் சாஷ்டாங்கமாய் விழுந்து அவர் வீட்டிலே கடைசி இடமாகிலும் தங்களுக்குக் கிடைத்தால் போதுமென்று நினைத்து மகா சங்கையோடு அவருக்கு ஊழியம் செய்து வருகிறவர்களோடே நம்மையும் கையேற்றுக்கொள்ள மன்றாடுவோமாக.

தபசுகாலத்தின் 3-ம் வாரம்—சனி

பிலாத்தென்பவன் யூதர்களுடைய கோடிய மூர்க்கத்தினின்று இயேசுநாதரைத் தப்பித்துவிடப் பார்க்கிறான்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதருக்கு சார்வாய்ப் போஞ்சு பிலாத்து ஜனங்களோடே பேசுகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்.—என் அந்தஸ்திலே கடைசி பரியந்தம் நிலைத்திருக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

அப்போது பிலாத்து ஜனங்களைப் பார்த்து: அப்படியானால், கிறீஸ்தென்னப்படுகிற இயேசுவை நான் என்ன செய்வேனென்று கேட்டான். அதற்கு அவர்களெல்லாரும் அவனைச் சிலுவையிலே அறைந்து கொல்லுங் கொல்லுமென்றார்கள் (மத். 27)

தியானம்.—பிலாத்தென்பவன் இயேசுநாதரை யூதர்கள் கையினின்று விடுதலையாக்கப் பிரயாசப்படுகிறதற்கு

வாக யூதர்கள் அவரைக் கொல்ல வருந்துகிறார்கள். இவ்விடத்தில் நாம் யோசிக்கவேண்டியது கஸ்திக்கும் ஆச்சரியத்துக்கும் உரியது :—இயேசுநாதரை மரணத் தீர்வையிடுவதில் சம்மந்தப்பட்டிருக்கிற போஞ்சு பிலாத்து யூதர்கள் குருப்பிரசாதிகள் ஆகிய இம்மூவகையோரில் அதிக குற்றமுள்ளவர்கள் குருப்பிரசாதிகள்தான். இவர்கள் மகா இழிவான காய்மகாரத்தினால் இந்த வியாச்சியத்தை உண்டாக்கிப் பிலாத்தண்டையில் அவரைக் கொண்டுவந்து விட்டதுமல்லாமல் ஜனங்களைக் கெடுத்து அவர்களைத் தூண்டிவிட்டு அவர்களைக்கொண்டு பெரிய அதிகாரியைப் பயமுறுத்தினார்கள். இதென்ன அநியாயம்! தங்களுடைய அந்தஸ்தின் பரிசுத்தத்தினாலேயும் தாங்கள் அடைந்த சம்பூரண ஞான ஒளியினாலேயும் இஷ்டப்பிரசாதத்தினாலேயும் ஜனங்களுக்குத் தர்ம மாதிரிகையாயிருக்கக் கடமைப்பட்டவர்கள் அவர்களுக்கு இடறலானார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நல்லவன் கெட்டால் நாலுக்குங் கேடென்று சொல்லும் பழமொழியின் உண்மையை நாளடைவிலே அறிந்திருக்கிறோம். ஐயோ! இக்காலத்திலும் மதிகெட்ட சில குருக்களும் சந்நியாசிகளும் தங்களுடைய வெறுப்புக்குரிய துர்மாதிரிகையினால் மேற்சொல்லிய பழமொழிக்கு இலக்காயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மனச்சாட்சியின் கண்டனம் காதில் விழாதபடி பிரயாசப்படுவதுமன்றிக் குருவுக்குரிய அபிஷேகத்தினால் அல்லது சந்நியாச மூன்று வார்த்தைப்பாட்டினால் தங்கள் ஆத்துமத்தில் பதிந்திருக்கும் ஞான முத்திரையைத் தங்கள் அக்கிரமமான நடக்கையினாலே அழித்துப்போட விரும்புகிறார்களென்று சொல்லலாம்!

மனப்பற்றுதல்.—உன் பரிசுத்தமான அந்தஸ்தின் வரப்பிரசாதங்களை இழந்துபோகாமலும், அதின்பேரில் இருக்கவேண்டிய மேலான எண்ணத்தையும் பிரீதியையும் போக்கடிக்காமலும், அதற்கு நீ பிரமாணிக்கந் தவறாமலும் இந்த அந்தஸ்தை விட்டுக் கெட்டழிந்துபோனவர்களுள் ஒருவன் ஆகாமலும் இருக்க இயேசு

நாதர் உனக்கு உதவிசெய்யவேணுமென்று அவரை மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—என் அந்தஸ்தின் தேவ வரப்பிரசாதத்தை இழந்துபோவதைப் பார்க்க மற்றதெல்லாத்தையும் இழந்துபோகத் தீர்மானித்திருக்கிறேனென்று சர்வேசுரன் சமுகத்திலே அடிக்கடி சொல்லுவேனாக.

2-ம் பிரிவு

அப்போது பிலாத்து அவர்களை நோக்கி: இவன் என்ன பொல்லாப்புச் செய்தானென்றான் (மத். 27)

தியானம்.—பிலாத்து கேட்ட இந்தக் கேள்வியானது அனுப்பப்பட்ட மெசியாவுக்குச் சத்துராதிகளான யூதர்கள் தங்கள் கண்களைத் திறக்க மிகவும் உதவியாயிருந்தது. அவருடைய பிரசித்தமான சீவியத்தையும் அவர் மூன்று வருஷகாலமாய்ச் செய்துவந்த உபகார நன்மைகளையும் அது அவர்களுக்கு நினைப்பூட்டினது. மீளவும், தீராத வியாதியினின்றும், குருடு, செவிடு, ஊமை, முடம் முதலிய குறைகளினின்றும் இயேசுநாதரால் அற்புதமாய்க் குணம் அடைந்த அநேகரும் பசாசின் ஆவேச அவதியினின்று அவரால் மீட்கப்பட்டவர்களும், மரணத்தினின்று உயிர்ப்பிக்கப்பட்டவர்களும் இந்த ஜனத்திரளில் இருந்தார்களென்று நம்ப இடமுண்டு.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—என் சீவிய நாட்களும் விசேஷமாய் நான் சந்நியாசத்தில் செலவழித்த காலமும் சர்வேசுரன் எனக்குச் செய்த உபகாரங்களையும் விலைமதியாத நன்மைகளையும்தான் நினைப்பூட்டுகின்றன. எந்நேரமும் இடைவிடாமல் நான் அவைகளை நினைக்கவேண்டியதுமன்றி, இதினால் என் இரட்சகராகிய இயேசுநாதரின்பேரில் வைக்கவேண்டிய சிநேகமும் பத்தியும் நாளுக்குநாள் அதிகமதிகமாய் என்னிடத்தில் வளரும்படி செய்யவேண்டும். ஆயினும் நான் அவருடைய ஊழியத்தில் இவ்வளவு உதாரக் குறைவாகவும் சுறுசுறுப்பில்லாமலும் இருக்கிறேனே! இதற்குக் காரணம் ஏதென்று

விசாரித்து அத்தோடே யுத்தம்பண்ணி என்னுலானமட்டும் அதைத் தள்ளிப்போடுவேனுக.

மனப்பற்றுதல்.—யூதர்களிடத்தில் விளங்கின அருவருப்பான நன்றிகெட்டதனத்தை வெறுத்துச் சர்வேசுரன் சமுகத்தில் உன் நன்றிகெட்டதனத்தை நினைத்து அழுவாயாக.

பிரதிக்கினை.—இயேசுநாதருடைய சிநேகத்துக்குப் பதில் சிநேகத்தைக் காண்பிக்கிறதற்காக இன்று முதல் தேவ ஊழியத்திலே பத்தி சுறுசுறுப்பையும் உதாரத்தனத்தையும் அதிகரிக்க முயற்சிப்பேனுக.

3-ம் பிரிவு

பிலாத்து மூன்றும் விசையும் ஜனங்களை நோக்கி: இவனிடத்தில் மரணத்துக்கேதுவானதோன்றும் காணேன்; ஆகையால் இவனைத் தண்டித்து அனுப்பிவிடுவேனென்றன் (லூக். 23)

தியானம்.—ஆசாபாசமானது உரோமான் மேல்அதிகாரியை எவ்வித அகோரமான அக்கிரமத்தில் விழத்தாட்டினதென்று பார். இவன் தனது நீதியாசனத்துக்கு முன் கொண்டுவரப்பட்டவர் மாசற்றவரென்று மூன்றும் விசையும் பிரசித்தம்பண்ணி, மகா நிந்தையும் நிஷ்டூரமுமான ஆக்கினைக்கு அவரைத் தீர்வையிடுகிறன். இவ்விதமாய் ஜனங்களுக்கு திருப்தி வருவித்தால் அவர்பேரில் அவர்கள் இரக்கப்படுவார்கள், அவரைச் சாவினின்று தப்பித்து விடலாமென்று எண்ணினன். ஆனால் யூதர்கள் கேட்டபடி அவரைச் சிலுவையில் அறைந்து கொல்வதற்கு இதுதான் வழியாகும் என்பதைச் சற்றும் யோசிக்காமற் போனுன்; ஏனென்றால் உரோமையர் நீதிச் சட்டத்தில் ஒருவனைச் சிலுவையில் அறைந்து கொல்வதற்கு முந்தி அவனைக் கட்டிவைத்தடிக்கவேண்டும் என்று ஏற்பட்டிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ முன்னுக்குப்பின் முரணுய் நடப்பதற்கு எத்தனைவிசை உன் ஆசாபாசம் காரணமாயிருந்திருக்கிறது? இன்னம் எத்

தனையோவிசை அநேகம் போக்குகளைச் சொல்லி நீ சந்நியாசத்தில் தேடவந்த தாழ்ச்சி தபசு முயற்சிகளைத் தள்ளிப்போடவும், உன் ஆத்துமத்துக்கு நேரிடும் மோசத்தையும் கெடுதலையும் அறிந்திருந்தாலும், நீ செய்த பிரதிக்கினைக்கு விரோதமாய் உன் இந்திரியங்களுக்குத் திருப்தி கொடுக்கவும் தூண்டினது. ஆகையால் ஆசாபாசத்தை நீ நம்பாமல் அதோடு எதிர்த்து உறுதியாய் யுத்தம் செய்ய வேணும். இவ்விதம் செய்தாயா?

சம்பாஷணை.—நமது ஆராதனைக்குரிய குருவும் திவ்விய மாதிரிகையுமாயிருக்கிற இயேசுநாதரோடே சம்பாஷணை செய்.

தபசுகாலத்தின் 4-ம் வாரம்—ஞாயிறு

இயேசுநாதரைக் கற்றூணில் கட்டி அடித்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதரைக் கற்றூணோடு சேர்த்துக் கட்டிவைத்திருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—இயேசுநாதர் கட்டுண்டு அடிபட்ட சமயம் அநுபவித்த கஸ்திகளைத் தியானித்து, எண்ணிக்கையில்லாத அர்ச்சியசிஷ்டவர்கள் அடைந்த மனத்துயரத்தை நீயும் அடைய வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதரைக் கட்டியடிக்க முஸ்திப்புச் செய்கிறர்கள்

தியானம்.—பிலாத்தென்பவன் இயேசுநாதரைக் கட்டியடிக்கச் செய்தான் (அரு. 19). இயேசுநாதர் மாசற்றவராயிருந்தாலும், மகா நிந்தை அவமானமும் வேதனை

யும் நிறைந்த சவுக்கடியாக்கினைப்படவேணுமென்று தீர்வையிடுகிறதைக் கேட்கிறார். உடனே கொலைக்காரர் அவரைப் பிடித்துக் கட்டியடிக்கும் இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போகவே, அவ்விடத்தில் பயங்கரமான எத்தனங்களையெல்லாம் முஸ்திப்புச்செய்கிறதைப் பார்த்து, அவைகளினால் தமக்கு வரும் வேதனைகளையெல்லாம் நினைவைக்கொண்டு அனுபவிக்கிறார். அச்சமயத்தில் மகா உருக்கமுள்ள அவருடைய இருதயம் எவ்வளவு பயமும் அருவருப்பும் கொண்டிருக்கும்? ஆகிலும் நம்மைப்பற்றி இதெல்லாம் படவேணுமென்று அவர் செய்த பிரதிக்கினையை நிறைவேற்றத் தத்தளியாமல் தாமே அந்த இடத்தை நோக்கித் துணிவோடே போகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அவர் நடக்கைக்கும் என் நடக்கைக்கும் எவ்வளவோ வித்தியாசம்? என் ஆத்துமத்துக்கு அவசரமும் பிரயோசனமுமான பிரதிக்கினைகளை நிறைவேற்றுகிறதில் நான் எத்தனையோ விசை மனம் தத்தளித்ததுமல்லாமல் அநியாயமாய்த் தவறியும் போனேன்! இதற்குக் காரணம் என்ன? இதினாலே எனக்கு வெகு பிரயாசமும் நெருக்கிடையும் உண்டாகுமென்று யோசித்துப் பயந்திருக்கிறதினாலேதான். உதாரணமாக, எந்தக்காலத்திலும் மற்றவர்களைப்போல எழுந்திருக்கவும் அந்தந்தத் தபசு முயற்சிகளைச் செய்யவும் செபத்தில் அடக்க ஒடுக்கமாயிருக்கவும் என் கடமைகளைச் சரியாய் நிறைவேற்றவும் சிரமமாயிருக்கிறதென்று அவைகளைச் செய்யாதிருந்தேன். இது மெய்யல்லவா?

மனப்பற்றுதல்.—ஆ! என் சர்வேசுரா, அந்தந்தத் தூர்க்குணத்தோடே எதிர்த்துப் போராட அநந்தமுறை நான் பயந்திருந்தது உண்மையென்று வெட்கப்பட்டு உமக்கே வெளிப்படுத்துகிறேன்.

பிரதிக்கினை.—என் சுபாவத்துக்கு விரோதமாய் நடக்கவேண்டியபோது, என்னை எப்போதும் மோசம் போக்கும் என் நினைவை இனி நம்பாமல் என் கடமையை மாத்திரம் ஆராய்ந்துபார்த்து நிறைவேற்றுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதரைக் கட்டிவைத்து அடித்ததின்பேரில்

தியானம்.—இந்த ஆக்கினை எவ்வளவு வேதனையுள்ளதென்று வாக்கினால் சொல்லவும் எழுதவும் கூடாது. ஆகிலும் அதில் ஏதாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாக, உனக்குத்தானே அந்த ஆக்கினை இடப்போகிறார்களென்று நினைத்துக்கொள். அப்படியே உன் வஸ்திரத்தை உரிந்து உன்னைத் தூணோடு இறுகக்கட்டிப் பலமுள்ள சேவகர் கோல், சாட்டை, இரும்புமுள்ளுள்ள கயிறுகளைக்கொண்டு தங்கள் கைகள் சோர்ந்துபோகுந்தனையும் அடிப்பதினால் உன் சர்வாங்கமும் ஏக காயமாய்ச் சதைகள் தெறித்துவிழ, நீ நிற்கும் இடமெல்லாம் உன் இரத்தத்தினால் தோய்ந்துபோயிருக்க, உன்னை உபாதிக்கிறார்களென்று நீ யோசித்தால், உன்னைப்பற்றி உன் திவ்விய இரட்சகர் பட்ட அடிகளில் நீ ஏதாகிலும் கண்டுபிடிக்கலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் ஆத்தும சரீரத்திலுண்டாகும் வேதனை கஸ்திகளிலெல்லாம் கற்றூணில் கட்டுண்டு அடிபட்ட உன் இராஜாவான இயேசுநாதரை ஏறெடுத்துப் பார்; இப்படிப் பார்ப்பதினால் நீ படும் பாடுகளின் வேதனை உனக்கு இலேசாய்க் காணப்படுவதுமல்லாமல், நீ திடாரிக்கத்தோடேயும் சிநேகத்தோடேயும் அவைகளைப் பொறுத்துக்கொள்வாய்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் பார்த்து மனதுருகி ஆண்டவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்து அவரைச் சிநேகிப்பாயாக. மேலும் இயேசுநாதரைப்பற்றியும் அவரோடும் சகல வருத்தமும் அநுபவிக்க ஆசைப்படுவாயாக.

பிரதிக்கினை.—பிரயாசத்தினாலும் தபசினாலும் எந்நேரமும் பலியிடப்பட்ட உயிருள்ள அப்பம்போல, என் சகோதரரே, உங்கள் சரீரங்களைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்க உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேனென்று அப்போஸ்தலர் கொடுத்த கற்பனையை அநுசரிக்கப் பிரயாசப்படுவேனாக (உரோ. 12).

3-ம் பிரிவு

ஸ்ரீயேசுநாதர் கட்டுண்டு அடிபட்டதற்கு முகாந்தரம்

தியானம்.—ஆண்டவரைக் கட்டிவைத்தடிக்கச் சொன்னது பிலாத்து நினைத்த ஓர் குரூர உபாயம். இந்த ஆக்கினையைப் பிரஜைகள் கண்டு மனதிரங்கி அவரைக் கொலைசெய்யாமல் விட்டுவிடச் சொல்வார்களென்று நினைத்தான்.

திவ்விய இரட்சகருக்கோவெனில், தாம் மனுஷர்களின்பேரில் வைத்த அத்தியந்த சிநேகத்தைக் காண்பிப்பதற்கு இது ஓர் வழியாயிற்று. சிறியோர் பெரியோர், எத்திறத்தாரும், எவ்வந்தஸ்தினரும் தங்கள் ஆத்துமத்தில் பதிந்திருக்கிற தேவ சாயலைச் சேற்றிலே போட்டு மிதித்து அவசங்கைப்படுத்தும் பாவமாகிற வெட்கத்துக்குரியதும் அசுத்தமுள்ளதுமான கிரியைகளைத் தங்கள் சரீரத்தில் கட்டிக்கொள்ளுகிறதினால், இதை அவர் தமது மாசில்லாத திருச் சரீரத்தில் பரிகாரம் பண்ணுகிறதற்காக அத்திருச் சரீரத்தைக் கொலைக்காரருக்கும் வாக்குக்கெட்டாத கொடிய வேதனை உபத்திரவத்துக்கும் கையளித்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அலங்கார புண்ணியமாகிற கற்புக்கு விரோதமாய் ஒரு பெரிய குற்றத்தைமாத்திரம் செய்திருந்தாலும், எனக்குத்தானே நான் சொல்லிக்கொள்ளவேண்டியதாவது; இந்த வேலை செய்து முடித்தது நான்தான்! இதினால் கொலைக்காரர் கையினாலே என் இயேசுவின் திருச்சரீரத்தை அடிகளால் இரத்தமோடக் காயப்படுத்தினது நான்தான்! என் சரீர இச்சைக்கு இன்னம் அடிக்கடி இடங்கொடுத்து அற்பப் பாவங்களை மாத்திரம் நான் கட்டிக்கொண்டிருந்தாலும், இது ஒன்றே நான் அழுது மனஸ்தாபப்படவும் என்னைத் தானே நிந்திக்கவும் என்னால் மகா கொடிய வேதனைகளை அநுபவித்தவரைப்பற்றி வெகு பிரயாசமும் பாடுகளும் அநுபவிக்க நான் ஆசைப்படவும் போதும்!

சம்பாஷணை—கற்றூணில் கட்டுண்டு அடிபட்ட இயேசுநாதரோடே சம்பாஷணை செய். முந்தின இரண்டு

பிரிவுகளிலுமுள்ள மன்பற்றுதலை நினைத்துக்கொள்ளுகிறதுமன்றிச் சகலருடைய பாவங்களுக்குப் பரிகாரமாக உன்னை ஒப்புக்கொடுத்து முன் செய்த பிரதிக்கினைகளைப் புதுப்பிப்பாயாக.

தபசுகாலத்தின் 4-ம் வாரம்—திங்கள்

மரணத்தை நினைத்துத் தபசு செய்யவேண்டிய முகாந்தரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—ஒரு சந்நியாசி மரண அவஸ்தையாயிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—நல்ல மரணம் அடையத்தக்கதாக தபசியாய் சீவிக்கும்படி வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

தபசானது மரண அவஸ்தையாயிருக்கிற சந்நியாசிக்கு ஆறுதலைக் கொடுக்கும்

தியானம்.—தபசியாய் சீவித்தோம் என்பதே மரண வேளையில் நமக்கு ஆறுதல் அளிக்கத்தக்கது. அவஸ்தையாயிருக்கிற சந்நியாசியைப் பார்த்து: என் சகோதரனே, நீ சாகிற நேரம் நெருங்கியிருக்கிறது; உலகத்தில் உனக்கு எல்லாம் முடிந்துபோயிற்று; ஆனால் நீ ஆறுதலடைகிறதற்கு அநேக முகாந்தரங்களுண்டு; நீ உலகத்திலே பெரிய மனுஷனாயிருந்தாய்; உன் சபையிலே பிரதான அலுவல்களைப் பார்த்தாய்; சாஸ்திரிகளுக்குள்ளேயும் பிரசங்கிகளுக்குள்ளேயும் உனக்குப் பெரிய பேர் கிடைத்திருக்கிறது; நீ பட்ட பிரயாசமும் எழுதின புத்தகங்களும் உன் மரணத்துக்குப்பிறகும் உன் கீர்த்தியை வெளிப்படுத்துமென்று நீ சொல்வாயாகில், இந்த நினைவினாலே அவனுக்கு

வெகு ஆறுதலுண்டாகுமென்று நினைக்கிறாயோ? பரிச்சேதமில்லை; இந்த நன்மைகளெல்லாம் நித்தியத்துக்கு என்ன பிரயோசனமாகுமென்று எனக்குத் தெரியாதென்பான். அப்படியே ஓர் பேர்போன சந்நியாசியார் தாம் சாகும்போது சொன்னதாவது: நான் என் சபையிலே சிரேஷ்டராயிருந்து பெரிதான அலுவல்களைப் பார்த்தேன், அது ஒன்றுமில்லை; யாவரும் கேட்டு என்னைப் புகழத் தக்கவிதமாய் பிரசங்கம் செய்தேன், அதுவும் ஒன்றுமில்லை; என் சபை ஒழுங்கெல்லாம் அநுசரித்து நல்ல சந்நியாசியாயிருந்தேன், காரியமானது இதுதான்; இந்த அவஸ்தை வேளையிலே இக்காரியம் ஒன்றே எனக்கு ஆறுதலாயிருக்கிறதென்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆகையால் மற்றதெல்லாவற்றையும்பார்க்க மரண வேளையில் நமக்கு ஆறுதல் வருவிப்பது யாதெனில், மெய்யான சந்நியாசியாயிருந்து இடைவிடாத ஒறுத்தலினாலே உலகத்துக்கும் நமக்கும் செத்தவர்களாய் இயேசுநாதரோடே சிலுவையில் அறையப்பட்டவர்களைப்போல இருக்கிறதுதான். நல்ல சந்நியாசியாய் ஒழுங்கை அநுசரித்துத் தன்னைத் தானே எப்போதும் பரித்தியாகம்பண்ணி வருகிறவன் மரண வேளையிலே ஆறுதல் அடைகிறதுமல்லாமல் நம்பிக்கை நிறைந்தவனுமாயிருப்பானென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கின்றது (முதல் காண்டம், 23-ம் அதிகாரம்). நான் இக்ஷணமே மரிக்கவேண்டியதானால், கடந்தகாலத்தை நினைக்கிறதினால் எனக்கு ஆறுதல் உண்டாகுமோ?

மனப்பற்றுதல்.—நீதிமான்களைப்போல நான் நல்ல மரணம் அடைவேனாக! சர்வேசுரனிடத்தில் மரிக்கிறவர்களே பாக்கியவான்கள்!

பிரதிக்கினை.—தபசுகாலத்தில் முதல் திங்கட்கிழமையிலே நீ தீர்மானித்த தவமுயற்சிகளை ஞாபகப்படுத்திக்கொண்டு அதிக சுறுசுறுப்போடே இந்த வாரத்தில் செய்வாயாக.

2-ம் பிரிவு

மரண அவஸ்தையாயிருக்கிற சந்நியாசிக்குத் தான் செய்த தபசினால் நம்பிக்கையுண்டாகும்

தியானம்.—வழக்கமாய் அவஸ்தையாயிருக்கிற சந்நியாசிக்குக் கஸ்தி பயம் வருவிக்கிறது பூலோக நன்மையை இழந்துபோகிற நினைவல்ல; ஆனால் தான் முன் செய்த பாவத்தின் நினைவும், "நீ பொறுத்தல் அடைந்த பாவத்தின்மட்டில் பயமில்லாமலிராதே. மனிதன் சிநேகத்துக்கோ அல்லது பகைக்கோ பாத்திரவானாயிருக்கிறானென்று அறியான்" என்று வேதாகமத்தில் இஸ்பிரீத்துசாந்துவானவர் சொல்லியிருக்கிற வாக்கியங்களும் இவனுக்கு பயத்தை வருவிக்கும். ஆனால் "ஆண்டவரே, மனுஷன் செய்த தபசினால் அவன் செய்த பாவத்தை மறந்துவிடுகிறீர்" என்று இஸ்பிரீத்துசாந்துவானவர் வேறோரிடத்தில் வசனித்திருக்கிற வாக்கியம் அவனுக்கு எவ்வளவோ நம்பிக்கையைக் கொடுக்கும்? பாவத்தால் சர்வேசுரனுக்குச் செய்த நிந்தையைத் தான் பரிகரித்ததினாலேயும் தேவ நீதியின்மட்டில் பாவக்கடன்களைத் தவமுயற்சியினால் தீர்த்ததினாலேயும் தனக்கு எவ்வளவோ மனச்சமாதானம் உண்டாகும்! அர்ச். இலாரியோனென்பவர் மரண வேளையில் தனக்குண்டான பயத்தை நீக்குவதற்கு இந்த எண்ணமே உதவியாயிருந்தது. என் ஆத்துமமே, நீ எழுபது வருஷகாலம் தபசு செய்திருக்க, இந்த உலகத்தை விட்டு நீ புறப்படவும் சர்வேசுரன் சமுகத்திலே நிற்கவும் ஏன் பயப்படுகிறாயென்று சொல்லித் தனக்குத் தைரியம் வருவித்துக்கொண்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச்சியசிஷ்டவர்களும் அவர்களுக்குள் துவக்கமுதல் எப்போதும் ஒருகண்ட சீராய்ப் பத்தியோடு நடவாதவர்களும் முதலாய்ச் சாகிற சமயத்திலே அநுபவித்த ஆச்சரியத்துக்குரிய நம்பிக்கையும் சமாதானமும் உனக்குக் கிடைக்கவேணுமென்று ஆசைப்படுகிறாயல்லவா? அவர்கள் செய்த தபசில் அவர்களைக் கண்டுபாவிப்பாயாக. விசேஷமாய் பரி

சுத்தமான இந்தத் தபசுகாலத்தின் கடைசி நாட்களில் அவ்விதம் செய்யத் தவருதே. இதிலே ஜாக்கிரதையும் சுறுசுறுப்பையும் காண்பி. உனக்கு வியாதியாவது தளர்ந்த பிராயமாவது வருந்தனையும் காத்திராதே. நீ சௌக்கியமாயிருக்கிற இப்போது உன் பாவத்துக்குப் பரிகாரமாக வெகு காரியம் செய்யலாம்; ஆனுல் வியாதி வரும்போது உன்னுல் என்ன செய்யக்கூடுமென்று எனக்குத் தெரியாது என்கிருர் தோமாஸ் கெம்பிசென்பவர் (கிறீஸ்துநாதர் அநுசாரம், முதல் காண்டம், 23-ம் அதிகாரம்).

மனப்பற்றுதலும் பிரதிக்கினையும்.—முதற் பிரிவில் சொல்லியிருக்குமாப்போல செய்யவும்.

3-ம் பிரிவு

தபசானது அவஸ்தையாயிருக்கிற சந்நியாசிக்குச் சந்தோஷத்தை வருவிக்கும்

தியானம்.—குடியானவன் பயிரிட்டு நன்ருய் விளைந்த தானியத்தை அறுத்துச் சேர்க்கையில் தனக்குண்டாகும் சந்தோஷத்தின் காரணமாக முன் அதற்காகத் தான் பட்ட வருத்தமெல்லாவற்றையும் மறந்துபோவான். அவைகளை நினைத்தபோதிலும், அவைகளால் வந்த பலனைப் பார்த்துச் சந்தோஷமடைவான். தான் வேலைசெய்ததற்கும் வருத்தப்பட்டதற்கும் அளவாக அவன் படும் சந்தோஷம் அதிகமாயிருக்கும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதுபோல சந்நியாச அந்தஸ்தில் எல்லாவற்றிலும் தன்னை ஒறுத்துத் தபசுபண்ணின சந்நியாசியானவன் தான் செய்த அருந்தவத்தின் பலனையும், உலோக சிற்றின்ப வாழ்வையெல்லாம் தள்ளித் தமது பிறகே சிலுவையைச் சுமந்துகொண்டுபோகிறவர்களுக்கு இயேசுநாதர் வாக்களித்திருக்கிற சம்பாவனையையும் அடையும் சமயத்திலே, எவ்வளவோ மனச் சந்தோஷத்தையும் பாக்கியத்தையும் அநுபவிப்பான்! அவன் சம்பாவனையை சுகிக்கும் காலத்தில் அவனுக்குண்டாகும் ஆனந்தம் இவ்வளவென்று யாரால் சொல்லக்கூடும்? அப்போது அவன் முன் செய்த தபசுமுயற்சிகளையெல்லாம் நினைத்து எவ்வளவோ இன்பம் அடைவான்! இதற்கு அத்தாட்சியாக அர்ச். அல்காந்தரா இராயப்பர் மரித்தபின், மகா மகிமைப் பிரதாபத்தோடே அர்ச். தெரேசம்மாளுக்குத் தரிசனையாகி: “மகா பாக்கியம்பெற்ற தபசே, உன்னுல் எனக்கு எவ்வளவோ பெரிய மகிமை கிடைத்தது” என்ருர். நாமும் அதை நினைத்துக் கடைசிபரியந்தம் தவத்தைச் செய்து அதில் நிலைத்திருக்கவேண்டிய தைரியத்தையும் ஊக்கத்தையும் தேடுவோமாக.

சம்பாஷணை.—தான் செய்த தபசினுல் தனக்குப் பாக்கியமான மரணம் கிடைத்ததென்று சொன்ன அர்ச். அல்காந்தரா இராயப்பரோடு சம்பாஷணை செய்.

தபசுகாலத்தின் 4-ம் வாரம்—செவ்வாய்

இயேசுநாதர் முண்முடி சூட்டப்பட்டு மகா நிந்தை அவமானம் அடைந்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—சேவகர் இயேசுநாதரை ஒரு மரக்கட்டையின்பேரில் இருத்தி அவர் கையிலே மூங்கில் தடியைக் கொடுத்துச் சிரசிலே முண்முடியை வைத்து நிந்தை அவமானப்படுத்துகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—மனஸ்தாபமும் சிநேகமும் நிறைந்த சிந்தனை உன்னிடத்தில் உண்டாகக் கேள்.

முதல் பிரிவு

முண்முடி சூட்டப்படுகிறதற்குமுன் இயேசுநாதர் மிகுந்த அவமானப்படுகிறர்

தியானம்.—இயேசுநாதர் கற்றூணில் கட்டுண்டு அடிபட்டபோது அநுபவித்த அகோர வேதனையுமன்றி, இன்னும் மிகவும் கொடூர அவமானம் அநுபவிக்கவேண்டியதா

யிருந்தது. ஏரோது இராஜாவண்டையில் இயேசுநாதரைக் கூட்டிக்கொண்டுபோன சேவகர் அவ்விடத்தில் அவரைப் பைத்தியக்காரனாகப் பாவித்தார்கள்; இப்போது பரியாச இராஜாவாக அவருக்கு முண்முடி தரிக்கிறார்கள். சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறபடி நீதியாசனசாலையில் அவரைக் கூட்டிக்கொண்டுபோய்ச் சேவகர் எல்லாரும் அவரைச் சூழ்ந்து அவருடைய வஸ்திரங்களைக் கழற்றித் தூமிரப் போர்வையை அவருக்குச் சுற்றி முள்ளுகளினால் ஒரு முடி புனைந்து அவர் சிரசில் வைத்து அவர் வலது கையில் ஓர் மூங்கிற்றடியைக் கொடுத்துச் சூழநின்ற சேவகரெல்லாரும் அவர் அருகில் வந்து அவருக்கு முன்பாக முழந்தாட்படியிட்டு, யூதருடைய இராஜாவே வாழ்கவென்று பரியாசம் பண்ணி அவர் முகத்திலே துப்பி அவர் கையில் இருந்த மூங்கிற்றடியை வாங்கி அவர் சிரசில் அடித்துக் கன்னத்திலும் அறைந்தார்கள் (மத். 27; அரு. 19).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சுவிசேஷத்தில் எழுதப்பட்ட இந்த வரலாற்றையும் சொல்லப்பட்ட வார்த்தைகளையும் நீ பற்றும்பற்றாய் யோசித்துப் பார்: "நிந்தை அவமானத்தினால் சம்பூரண திருப்தி அடைவார்" என்று இசையாஸ் தீர்க்கதரிசி இயேசுநாதரைக் குறித்து எழுதினது எவ்வளவு உண்மையென்று நீயே கண்டுகொள்வாய். மேலும் இப்படி நடப்பிக்கப்பட்டவர் யாரென்றும், யாரைப்பற்றியென்றும், எதற்காகவென்றும் நீயே உன்னை வினாவிக் கேட்பாயாகில், உன் இருதயத்திலே மகா உருக்கமுள்ள நினைவும் சிந்தனையும் உண்டாகும்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டு என் மனதில் மகா இரக்கத்தை வருவித்து ஆண்டவரை மிகவும் சிநேகிப்பேனாக. என்னிடத்தில் உள்ள பொறுமையற்ற குணத்தைக் கண்டு வெட்கி என் திவ்விய இரட்சகர் என்னைப்பற்றி அடைந்த நிந்தை அவமானத்தில் நானும் சிறிது பங்கடைய ஆசைப்படுவேனாக.

பிரதிக்கினை.—தாழ்ச்சியின் மூன்றாம் அந்தஸ்தை உதாரமாய் நாடிச்செல்வேன் என்னும் பிரதிக்கினையைப் புதுப்பிப்பேனாக.

2-ம் பிரிவு

முண்முடி சூட்டப்பட்டதினால் இயேசுநாதர் அநுபவித்த வாக்குக்கெட்டாத வேதனை

தியானம்.—முள்ளால் ஒரு முடி புனைந்து அவர் திருச்சிரசில் தரித்தார்கள் (மத். 27). ஆனால் சிரசில் தரித்தது மாத்திரமல்ல, சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறபடி அவர் கையிலிருந்த மூங்கிற்றடியை வாங்கி அதினால் அவருடைய சிரசில் அடித்து அந்த முள்ளுகள் ஊடுருவிப் பாயச்செய்தார்கள். இதினாலே உன் திவ்விய இரட்சகர் எவ்வளவு வேதனை அநுபவித்திருக்கவேணுமென்று நீயே யோசித்துக்கொள். மகா நிஷ்டூரமாய் அவரைக் கட்டிவைத்து அடித்தபிறகு சிரசிலும் அவர் இவ்வளவு உபாதையை அநுபவித்ததினால் அவர் சாகாமல் இருந்ததெவ்வண்ணம்? அந்த வேதனையை உணராதபடி ஒரு புதுமை செய்துகொண்டாரோ? இல்லை; ஆனால், இதுவரையில் ஒருவரும் படாத பாடுகளை அவர் அநுபவிக்கும்படி, மரணத்தை வருவிக்கத்தக்க இந்தக் கொடிய வேதனையால் நசித்துப்போகாவண்ணம் புதுமை செய்தார் என்பது வாஸ்தவம். இதெல்லாம் என்பேரில் வைத்த பட்சத்தினால் அநுபவிக்கலானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கற்றூணில் கட்டுண்டு அடிபட்டபோது, சிரசில் காயம்படாமல் காப்பாற்றிக்கொண்டு, இப்போது அதில் விசேஷ வாதனை அநுபவிப்பானேன்? மனிதன் தேவசமுகத்தையும் தேவநீதியையும் மறந்துவிட்டுத் தன் புத்தியினாலே கட்டிக்கொள்ளுகிற சிலாக்கியம், ஆங்காரம், பேராசை, சண்டை, பகை, பழிவாங்குதல், சிற்றின்பம், அநியாயமாகிய கணக்கில்லாத பாவங்களுக்குப் பரிகாரமாக ஆண்டவர் தமது சிரசில் இந்த வேதனைகளையெல்லாம் அநுபவித்தார்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் நம்மைப்பற்றி அநுபவித்த இவ்வளவு நிஷ்டூர வேதனைகளைக் கண்டு மனதிரங்கி நமது நினைவினாலும் அக்கிரமமான யோசனையினாலும் நாம் அவருக்கு இவ்வளவு வேதனை வருவித்ததற்காக அவரிடத்தில் பொறுத்தல் கேட்போமாக.

பிரதிக்கினை.—நமது நினைவின்பேரில் கவனமாயிருந்து அது அங்கங்கே வீணாய்ச் சிதறிப்போகாதபடிக்கு அடக்க ஒடுக்கத்தில் வர்த்திக்கப் பிரயாசப்படுவோமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் இந்தச் சமயத்திலே காண்பித்த ஆச்சரியமான பொறுமை

தியானம்.—இதுவரையிலும் கேட்டிராத நிந்தை அவமானங்களை இயேசுநாதர் எவ்வளவு பொறுமையோடே அநுபவிக்கிறாரென்று யோசித்துப்பார். தீர்க்கதரிசி என்கிற மேரையில் 'அவரைக் கைப்பாஸ் வீட்டில் அவமானப்படுத்தினபோது, அவருடைய கண்களைக் கட்டி மறைத்தார்கள். இப்போது சேவகரில் ஒவ்வொருவனும் தமக்கு நிந்தையாகப் பரியாசம் செய்கிறதையும் தமது திருமுகத்தில் காறித் துப்புகிறதையும் தம்மைக் கன்னத்தில் அறையத் தங்கள் கைகளை அகந்தையாய் ஓங்குகிறதையும் ஆகிய சகல நிந்தை அவமானங்களையும் நேரில் பார்க்கிறார். ஆகிலும் அடிகளுக்குத் தப்பித்துக்கொள்ள ஒருவிதத்திலும் தலையைச் சாய்த்தவருமல்ல, அசைத்தவருமல்ல; அவர் கையிலிருந்த மூங்கிற்றடியைப் பிடுங்குகிறபோது யாதொரு விக்கினம் செய்தவருமல்ல; திரும்பவும் அதை அவர்கள் தமது கையில் கொடுக்கும்போது, வாங்கிக்கொள்ளுகிறார். "என்னைக் கன்னத்தில் அறைந்தபோதும் காறித்துப்பினபோதும் என் முகத்தைத் திருப்பிக்கொள்ளவில்லை" என்று இசாயியாஸ் சொன்ன தீர்க்கதரிசனம் இவ்வண்ணம் நிறைவேறலாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் காண்பித்த இந்த ஆச்சரியமான பொறுமை

யைப் பார்க்கையில், உனக்கு விரோதமாய் நேரிடும் சொற்பக் காரியங்களிலே முதலாய் உன்னிடம் தோன்றுகிற பொறுமையின்மையையும் ஆத்திரத்தையும்பற்றி என்ன சொல்வோம்? உலகம் உன்னைப் புகழ்ந்து மெச்சிக்கொள்ளவேணுமென்று உன் உள்ளத்தில் இரகசியமாய் உதிக்கும் பேராவலை என்னென்போம்? உன்னை நிந்தித்தவர்கள்மீது குரோதம் பொங்கி வர்மம் பாராட்டுவதை என்னென்பது? நிந்தை அவமானத்தினால் சம்பூரணமாய் நிறையப்பட்ட இயேசுநாதர் எப்போதும் உன் நினைவில் பிரசன்னமாயிருப்பாராகில், ஒருவர்பேரில் முதலாய் அற்ப அதிகாரமும் செலுத்துவதைவிட எல்லாரும் உன்னைக் காலால் மிதிக்கவேணுமென்று ஆசிப்பாய் என்று கிறீஸ்துநாதர் அநுசாரம் சொல்கிறது. இயேசுநாதரைப்பற்றி நிந்தையும் வேதனையும் அநுபவிக்கவேணுமென்பதுதான் உனது பேராவலாயிருக்கும். இயேசுநாதருடைய மெய்யான சீஷர்களுக்கு உரிய இப்பேர்க்கொத்த மேலான பரிசுத்த ஆசை ஏதாகிலும் உன்னிடத்தில் இருக்கின்றதோ?

சம்பாஷணை.—இயேசுநாதர் பட்ட கொடிய வேதனைகளையும் அகோர அவமானங்களையும் கண்ட சம்மனசுகளோடே சம்பாஷணை செய்வாயாக.

தபசுகாலத்தின் 4-ம் வாரம்—புதன்

பிலாத்து ஜனங்களுக்கு இயேசுநாதரைக் காண்பித்து: இதோ! மனிதனென்றான்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் சர்வாங்கமும் இரத்தமும் காயமுமாய்ச் சிரசில் முண்முடி தரித்துத் தூமிர போர்வையை அணிந்து, மூங்கிற்றடியைக் கையில் பிடித்து இவ்வித கோலமாய்ச் சகல ஜனங்கள் முன்பாகக் காணப்பட்டதை நீயும் பார்க்கிறதாக உருபிகரித்துக் கொள்வாயாக.

தியானச் செபம்.—இயேசுநாதர் நிந்தை அவமானப்பட்டிருக்கிறதற்களவாக அவரை உருக்கமாய்ச் சிநேகிக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் முண்முடியையுந் தூமிர போர்வையையுந் தரித்துக் கொண்டு வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ! மனிதனென்றான் (அரு. 19)

தியானம்.—இயேசுநாதர் சர்வாங்கமும் இரத்தக்காயமாய்ப் பரியாச இராஜா வேஷம் தரித்திருக்கிறதைக் கண்டு பிலாத்து பரிதாபமேலிட்டு யூதர்களும் அவரைப் பார்த்து மனதிரங்கி அவரைக் கொலைசெய்யாமல் விட்டுவிடக் கேட்பார்களென்று நினைத்தான். ஆகையால் அரமனைப் படிக்கட்டின்மேலே அவரை அழைத்துவரச்செய்து ஜனங்களுக்குக் காண்பித்து: இதோ! மனிதனென்றான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ உன் திவ்விய இரட்சகர் பட்ட வேதனைகளையும் நிந்தையவமானங்களையும் பார்த்து அவர்பேரில் இரக்கப்படும்படி திருச்சபையானது, பத்தியுள்ள ஆத்துமமே, உனக்கும் அந்த வார்த்தைகளைச் சொல்லுகின்றது. இயேசுநாதர் உன் பாவத்துக்காகப் பரிதாபமுள்ள இந்தக் கோலமாயிருக்கிறதை நீ காண்கிறபோது, இரக்கமாய் மனதுருகிக் கண்ணீர் சிந்தி அழாமலிருப்பாயோ? உன் முகாந்தரமாக இப்படி வேற்றுருவாயிருக்கிற தமது திவ்விய குமாரனை நீ சிநேகிக்கும்படி பிதாவாகிய சர்வேசுரனும் அந்த வார்த்தையைத்தானே உனக்குச் சொல்லுகிறார்.

மனப்பற்றுதல் :—தயைநிறைந்த பிதாவாகிய சர்வேசுரா, உமது திவ்விய குமாரனாகிய இயேசுக்கிறீஸ்துவின் திரு முகத்தைப் பார்த்து என்பேரில் இரக்கமாயிரும், சுவாமி (சங். 83).

பிரதிக்கினை.—நடுப்பூசையிலே தேவநற்கருணை எழுந்தேற்றமாகும்போது, இந்தச் செபத்தை அடிக்கடி நீ சொல்லுகிறதுமல்லாமல் உலகத்தில் நிந்தை அவமானப்

பட்ட இயேசுநாதருடைய சாயல் உன்னிடத்திலும் உண்டாக நீ ஆசைப்படுவாயாக, அல்லது இப்பேர்க்கொத்த ஆசையாகிலும் உன் உள்ளத்தில் பிறக்க விரும்பக்கடவாய்.

2-ம் பிரிவு

ஆனால் குருக்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் அவரைக் கண்டபோது, அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையுமென்று கூக்குரலிட்டார்கள் (அரு. 19)

தியானம்.—இயேசுநாதர் சர்வாங்கமும் காயத்தால் நொறுங்கி இரத்தமயமாயிருக்கிறதை ஜனங்களுக்குக் காண்பித்து: இதோ! மனிதனென்று ஒரு வார்த்தை சொன்னால் போதும், இதைக் கண்டவர்கள் மனமிரங்கி அவரை விட்டுவிடச் சொல்வார்களென்று பிலாத்து நினைத்தான். குருக்களும் மூப்பரும் வேதபாரகரும் இயேசுநாதர்பேரில் வைத்த பகையினாலே ஜனங்களை ஏவிவிடாமலிருந்தால், பிலாத்து நினைத்தபடி அவர்கள் அவரை விட்டுவிடக் கேட்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் யூதர்களுடைய மூப்பர் முதலானவர்கள் தங்கள் ஆங்காரத்திலும் சுயபட்சத்திலும் உறுதிகொண்டு தங்கள் இரட்சகராகிய மாசில்லாதவருடைய இரத்தத்தைச் சிந்துகிறதினால் தங்களுக்கும் தங்கள் ஜனங்களுக்கும் மகா பயங்கரமான பொல்லாப்பு வருமென்பதைப் பாராமல், இயேசுநாதரைக் கொலைசெய்யவேணுமென்று சபதங்கூறித் தங்களுக்குள்ளே ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். ஜனங்கள் அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லும் கொல்லுமென்கிற சத்தம் பிலாத்துவுக்கு வெகு பிரமிப்பை உண்டுபண்ணிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வேதசாஸ்திரத்தில் தேர்ந்த மனுஷர்களும் ஆசாபாசத்தினாலும் விசேஷமாய் மனவருத்தங்கொண்ட ஆங்காரத்தினாலும் புத்திமயங்கித் தங்கள் சுய நன்மையைத்தானே மறந்துவிட்டு நீதி, தேவபயம் முதலானவைகளைப் பாராமல் எவ்வளவோ அநியாயம் செய்யக்கூடுமென்று யோசித்துப்பார்.

ஓர் சந்நியாசி சிரேஷ்டர் தனக்குக் கொடுக்கும் இன்ன விசேஷ கட்டளைக்குக் கீழ்ப்படியமாட்டேனென்று தீர்மானித்திருப்பதால் தன் அந்தஸ்துக்கு மோசம் வருமென்றும் தான் கொடுத்த வார்த்தைப்பாடு வீணாய்ப்போகுமென்றும், தன் கீர்த்தி கெட்டுப்போகுமென்றும் இதுவரையிலும் தன்னை மதித்தவர்கள் இனிமேல் நிந்திப்பார்களென்றும் அவனுக்கு எவ்வளவு சொன்னாலும் அதெல்லாம் அவனுக்கு வியர்த்தமாயிருக்கும்; இதை அவன் உணரவுமாட்டான். வேதத்தில் மகா உருக்கத்துக்குரியதையும் பயங்கரமானதையும் அவனுக்குச் சொல்லிக்காட்டினாலும், இயேசுநாதர் சிலுவையில் அறையுண்டு மரிக்குந்தனையும் தாழ்ச்சியோடும் கீழ்ப்படிதலோடும் இருந்ததை அவனுக்கு உணர்த்தினாலும் தன் பிடிவாதத்தை விடமாட்டான். ஐயோ! ஆசாபாசம் நியாயம் அறியாது; அதற்கு உட்படுகிறவனை அது குருடனும் கன்னெஞ்சனுமாக்கிப் படுகுழியில் கொண்டுபோய்த் தள்ளும். இப்போது சொன்ன காரியத்தின் உண்மையை உறுதிப்படுத்தும் சம்பவங்கள் இக்காலத்திலும் நடைபெறுவண்ணம் கடவுள் கிருபைகூருவாராக!

மனப்பற்றுதல்.—உன்னைத்தானே நீ அறியவும் நம்பாமலிருக்கவும் வரப்பிரசாதம் கேட்பாயாக.

பிரதிக்கினை.—எவ்வித ஆசாபாசமும் விசேஷமாய் ஆங்காரமும் மோகமும் உனக்கு வருவிக்கும் விசாரத்தை ஆரம்பத்திலேயே தள்ளிவிட்டு அதற்குக் கொஞ்சமாகிலும் இடங்கொடாமலிருப்பாயாக.

3-ம் பிரிவு

பிலாத்து அவர்களை நோக்கி: நீங்கள்தானே அவனைப் பிடித்துச்
சிலுவையில் அறையுங்களென்றான். அதற்கு யூதர்கள்
மறுவுத்தாரமாக: எங்களுக்கு ஓர் வேதப்பிரமாணம் உண்டு;
அவன் தன்னைத் தேவ குமாரனென்று சொன்னதினாலே,
அந்தப் பிரமாணத்தின்படி சாகவேணுமென்றார்கள் (அரு. 19)

தியானம்.—இயேசுநாதர் யூத குருப்பிரசாதிகள் வேதபாரகர்களுடைய கள்ள ஞானத்தை வெளியாக்கித் தமது ஞான போதகத்தினாலும் தமது நடக்கையின் சுகிர்தத்தினாலும் தாம் செய்த புதுமைகளினாலும் அவர்களுக்கு மேலானவராகக் காணப்பட்டதே அவர்பேரில் உள்ள ஏக குற்றம். ஆனால் இதை அவர்கள் அங்கே வெளிப்படுத்தினால், ஆசாபாசங்களுக்குள்ளே மகா நீசத்தனமான தங்கள் காய்ம்காரம் வெளியாகுமென்று அதை மறைத்துப்போட்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆசாபாசத்துக்கு உட்பட்டவர்கள் எப்போதும் நடக்கும் விதம் இதுவே. மெய்யாகவே தாங்கள் தவறி நடக்கிறதை மறைத்துப் புறத்தியார்பேரில் குற்றத்தைச் சுமத்தப் பார்ப்பார்கள். கீழ்ப்படியாமல் மூர்க்கமாயிருக்கிற சந்நியாசி, குரு சொல்வதென்ன? தங்கள் சிரேஷ்டர்கள் பாரபட்சமுள்ளவர்கள், அறிவீனர் அல்லது அநியாயக்காரரென்று அவர்கள்பேரில் குற்றமெல்லாம் சாட்டிவிடுவார்கள்; தாங்களோவெனில் தங்கள் கீர்த்திக்குக் குறை வராமலும் தேவ தோத்திரத்துக்காகவும் பிறர் ஆத்தும ஈடேற்றத்துக்காகவும் இப்படி நடக்கிறோமென்பார்கள்! ஆனால் அவர்கள் உள்ளத்தை ஆராய்ந்து பார்த்தால், தங்கள் சுயபட்சத்துக்கு விரோதமாய் வந்த வேதனை அல்லது கஸ்தி அதற்கு மெய்யான காரணமென்று தெரியவரும். நாம் இப்பேர்க்கொத்த ஆசாபாசத்துக்கு உட்படாமலிருக்க ஆண்டவர் தயைசெய்வாராக.

சம்பாஷணை.—நமது திவ்விய குருவும் போதகருமான இயேசுநாதரோடே சம்பாஷணை செய்வோமாக.

தபசுகாலத்தின் 4-ம் வாரம்—வியாழன்

இயேசுநாதரைக் கடைசிவிசை கேள்வி கேட்டதும் பிலாத்து பயந்து தன் பலவீனத்தைக் காண்பித்ததும்

ஆயத்தச் சிந்தனை.—குழப்பக்காரரான யூதர்கள் முன்பாகப் பயந்து நடுங்கிக்கொண்டிருக்கிற பிலாத்தென்

பவன் சமுகத்திலே இயேசுநாதர் தாழ்ச்சியோடும் துணிவோடும் நிற்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—சர்வேசுரனுக்கேயல்லாமல் மற்றொன்றுக்கும் பயப்படாதிருக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இவன் தன்னைத் தேவ குமாரனென்று சொன்னதினால், சாவுக்குப் பாத்திரவானென்று யூதர்கள் சொல்லவே, இதைக் கேட்ட பிலாத்து மிகவும் பயந்தான் (அரு. 19)

தியானம்.—இவன் தன்னைத் தேவ குமாரனென்பதாய்ச் சொல்லுகிறானென்று யூதர்கள் இயேசுநாதர்பேரில் சாட்டின குற்றமானது அதிகாரியின் கண்களுக்கு அவரை அதிகக் குற்றவாளியென்று காட்டுவதற்குப் பதிலாய் இதில் ஏதோ ஓர் பரம இரகசியம் உண்டென்று அவன் உத்தேசிக்கவும் திடீரென்றாற்போல அவனுக்கு அதிக பயங்கரம் உண்டாகவும் செய்தது. மேலும் இயேசுநாதர் இருந்த மேரையிலும், அவர் சொன்ன வார்த்தைகளிலும் விளங்கின சுபாவத்துக்கு மேற்பட்ட அதிசயங்களையெல்லாம் அவன் பார்க்கையில், குற்றவாளியாகக் கூட்டிக்கொண்டு வரப்பட்டவர் மெய்யாகவே சர்வேசுரனுடைய குமாரனாயிருக்கலாமென்று தன் புத்தியில் சந்தேகிக்கலானான். ஆகிலும் சத்தியவேதம் தேவகுமாரனைப்பற்றி நமக்குப் படிப்பிக்கிறதுபோல அல்ல ஓர் அஞ்ஞானிக்கேற்றபடி அபிப்பிராயப்பட்டான். ஆகையால் தேவனாகிய இவர் தன்னைப் பழிவாங்குவாரேயென்று அவன் பயந்தது ஆச்சரியமல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிலாத்து தன் முன்பாக நிற்கிறவர் சிலவேளை ஓர் தேவன்தானோ என்கிற நினைவாலும், அவருக்கு விரோதமாய்ப் பெரும் பாதகத்தைக் கட்டிக்கொள்ளப்போகிறேனோவென்னும் அச்சத்தாலும் கிலேசமுற்று, இவ்விஷயத்தின் உண்மையைச் சரியாய்த் தெரிந்துகொள்ளாமல், தன்னிடம் விசாரணையில் இருக்கிற வழக்கைப்பற்றி ஒன்றும் செய்துகொள்ளத் துணியவில்லை. நமது உள்ளத்தின் அந்தரங்க நினைவுகளை முதலாய் அறிகிற சர்வேசுரன் சமுகத்திலே எப்போதும் இருக்கிறோமென்பதை அறிந்து கெட்டியாய் விசுவசிக்கிற நாம் எவ்விதம் நடந்துகொள்கிறோம்? அவர் நம்மைத் தண்டிப்பாரென்று தெரிந்திருந்தாலும், அநேகரைப் பயங்கரமான விதமாய்த் தண்டித்தாரென்று வேதாகமத்தில் அத்தாட்சிகளிருந்தாலும், பாவத்தினால் அவருக்கு அவமானம் வருவிக்கவும் அவர் கண்முன்பாகத்தானே சகலவிதமான அக்கிரமங்களைக் கட்டிக்கொள்ளவும் பயப்படாமல் போனோமே!

மனப்பற்றுதல்:—நமது துணிவையும் குருட்டாட்டத்தையும் பார்த்து ஆச்சரியப்படுவோமாக.

பிரதிக்கினை:—தேவ சந்நிதானத்தில் இருக்கிறேன் என்பதை உணர்ந்து என் மனச்சாட்சி சொல்லுகிறதற்குக் காதுகொடுக்க எப்போதும் அதிகமதிகமாய்க் கவனிப்பேனாக.

2-ம் பிரிவு

பிலாத்து திரும்பவும் அரண்மனைக்குள் போய், இயேசுநாதரை நோக்கி: நீ எவ்விடமிருந்து வந்தவன் என்றான். இயேசுநாதரோ அவனுக்குப் பதில் ஒன்றுஞ் சொல்லவில்லை. ஆகையால் பிலாத்து அவரை நோக்கி: என்னிடத்தில் பேசமாட்டாயோ? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரம் உண்டென்றும், உன்னை விடுதலையாக்க எனக்கு அதிகாரம் உண்டென்றும் நீ அறியாயோ என்றான். இயேசுநாதர் பதில்மொழியாக: பரலோகத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஓர் அதிகாரமும் இராது. அதினிமித்தம் என்னை உமக்குக் கையளித்தவனுக்கு அதிக பெரிய பாவமுண்டு என்றார் (அரு. 19: 9-11)

தியானம்:—நீ எவ்விடமிருந்து வந்தவன் என்று பிலாத்து கேட்ட கேள்வியில் இயேசுநாதர் பிறந்த இடத்தைக் குறித்துக் கேட்கவில்லை; இது அவனுக்கு நன்றாய்த்

தெரிந்த காரியந்தான்; ஆனால் அவருடைய வம்சமேதென்று அறிய விரும்பினான். அந்தக் கேள்விக்கு மறுமொழியாக திவ்விய இரட்சகர் தமது நித்திய ஜென்மிப்பையும் மனுஷாவதாரப் பரம இரகசியத்தையும் குறித்துச் சொல்லவேண்டியதாகும். அதற்குப் பிலாத்து அயோக்கியனாயிருந்ததினால், அவனுக்கு அந்த மாறுத்தரம் கிடையாமற்போயிற்று. தாழ்ச்சியும் பரிசுத்தமுமுள்ள ஆத்துமாக்களுக்கு மாத்திரம் சர்வேசுரன் தமது பரம இரகசியங்களை வெளிப்படுத்துவாரல்லாமல் மற்றப்படியல்ல. ஆகையால் இவனுக்குள்ள அதிகாரம் சர்வேசுரனிடத்தினின்றுமாத்திரம் வந்ததென்று காண்பித்து, அயோக்கியனை இந்த அதிகாரியின் ஆங்காரத்தையும் சிலாக்கியத்தையும் தணித்ததுமன்றி இவன் செய்யப்போகிற அநியாயத் தீர்வையை ஒருவகையாய் ஆண்டவர் ஆச்சரியமான தயவோடே கண்டித்தாற்போலாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ தியானம் பண்ணும்போது, சர்வேசுரன் உன்னிடத்தில் பேசாமலிருக்கிறதற்கும் உனக்கு அதிக ஞானத் தெளிவைக் கொடாமலிருக்கிறதற்கும் காரணமென்ன? நீ அவருக்குச் செவிகொடுக்க மனதில்லாமற் போகிறாய் அல்லது நன்மை தின்மை இன்னதென்று தெரிந்துகொள்ள சர்வேசுரன் உனக்குக் கொடுத்த வல்லமையை நீ அடிக்கடி உன் குற்றங்குறைகளால் துர்ப்பிரயோகம் செய்து வந்திருக்கிறாய் என்பதே இதற்குக் காரணம்.

மனப்பற்றுதல்.—மேற்சொன்ன இந்த மூன்று வகையாய் என்னிடத்திலுண்டான குற்றத்தை அறிகிறதற்கு வேண்டிய ஞானத்தெளிவையும் அதைச் சரியாய் திருத்திக்கொள்ள அவசரமான திடனையும் தாழ்ச்சியோடே கேட்பேனாக.

பிரதிக்கினை.—ஜெபத்தியானஞ் செய்கிறதற்கு முன்னே தாழ்ச்சியினாலேயும் மிகுந்த நம்பிக்கை பொருந்திய துக்கமனஸ்தாபத்தினாலேயும் தன் இருதயத்தை ஆயத்தப்படுத்தவேணும்.

3-ம் பிரிவு

அதுமுதல் பிலாத்து இயேசுநாதரை விடுதலையாக்க வழிதேடிக் கொண்டிருந்தான். யூதர்களோவென்றால், அதிக சத்தமிட்டு: இவனை விடுதலையாக்குவீராகில், சேசார் இராயனுக்கு நீர் சிநேகிதனல்ல; ஏனென்றால் தன்னை இராஜாவாக்கிக்கொள்ளுகிற எவனும் சேசாருக்கு விரோதியாயிருக்கிறனென்றார்கள் (அரு. 19)

தியானம்.—இப்படி யூதர்கள் கடைசியாய்ப் பயமுறுத்திச் சொன்ன வார்த்தையானது இந்தக் கோழைத்தனமுள்ள அதிகாரியிடத்தில் சொற்பமாய் இருந்த நல்ல மனதையும் நீதியையும் கெடுத்துப்போட்டது. உலக இராஜாவின் தயவை இழந்துபோவோமென்கிற பயமானது அவன் புத்தி நியாயத்தையும் நீதியையும் மனச்சாட்சியின் குத்துதலையும் சர்வேசுரன் பழிவாங்குவாரென்கிற பயத்தையும் மேற்கொண்டது. இதினால் அவன் புத்தி தடுமாறி, மனங்குழம்பி, இயேசுநாதரைக் கொலைசெய்யக் கேட்டவர்களுக்கு அவரைக் கையளித்துவிட்டான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிலாத்தென்பவனுடைய குற்றமுள்ள கோழைத்தனத்தை அருவருக்காதவர்களார்? ஆகிலும், இக்காலத்தில்தானே எத்தனையோ கிறீஸ்துவர்கள் அவனைக் கண்டுபாவித்து முகப்பிரீதியினாலாவது இலெளகீக நன்மைகளை இழந்து போவோமென்கிற பயத்தினாலாவது தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடந்து, தங்கள் கடமைகளை நிறைவேற்றாமல் போகிறார்கள்! முகப்பிரீதியினாலும் இலெளகீக நன்மையினாலும் நிஷ்டூரமாய் மனுஷரை மோசம்பண்ணிக் கொண்டுவரும் இவ்வுலகத்திலே நின்று சர்வேசுரன் நம்மை விடுவித்திருப்பதைப்பற்றி அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக.

சம்பாஷணை.—தமது திவ்விய குமாரனுடைய மகிமைக்கும் உயிருக்கும் யூதர்கள் பொல்லாப்பு தேடினதை அறிந்த தேவதாயாரோடே சம்பாஷணை செய்வோமாக.

தபசுகாலத்தின் 4-ம் வாரம்—வெள்ளி

இயேசுநாதர் சிலுவை மரணம் அடைய அநியாயமாய்த் தீர்வையிடப்பட்டு சர்வேசுரன் சித்தத்துக்கு அமைந்திருக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தம்மை அநியாயமாய்த் தீர்வையிட்டவன் கையில் தம்மை ஒப்புக்கொடுக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—உன் ஆசாபாசங்களை ஜெபிக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

பிலாத்து யூதர்களைப் பார்த்து : இதோ உங்கள் இராஜா ! இவனை நான் சிலுவையில் அறைந்து கொல்லலாமோவென்றான். அதற்குத் தருப்பிரசாதிகள் மறுமொழியாக : சேசாரையல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லையென்றார்கள். பிலாத்து தான் பட்ட பிரயாசம் ஒன்றும் அநுகூலமாகாததைக் கண்டு இயேசுநாதரை அவர்களுடைய இஷ்டத்துக்குக் கையளித்து அவரைச் சிலுவையில் அறைய அவர்கள் கையில் ஒப்புக்கொடுத்தான் (அரு. 19 ; மத். 27 ; லூக். 23)

தியானம்.—இதைவிடத் தெளிவாய் அநியாயமான தீர்ப்பு எந்த நியாயாதிபதியும் எக்காலத்திலும் சொன்னதில்லை. அவர் மாசில்லாதவரென்று நாலுவிசை அவன் பிரசித்தமாக வெளிப்படுத்தியிருந்தும், அவரைப் பெரிய கொலைபாதகனைப்போல் மரணத்துக்குத் தீர்வையிடுகிறான். நிர்ப்பாக்கிய பிலாத்து, நல்ல கருத்தும் நேர்மைக்குணமும் உள்ளவனாயிருந்தும், இத்தகைய கோழைத்தனத்துக்கும் அநியாயத்துக்கும் ஆளானது எப்படி? துவக்கத்திலே தானே ஆசாபாசத்தை-எதிர்த்துத்தள்ளும்படியான தீர்மானமும் மன உறுதியுமில்லாததால், இவ்விதம் அவனுக்கு நேரிட்டதென்று அறிந்திருக்கிறோம். ஏனென்றால் “ பகையினாலும் காய்மகாரத்தினாலும் யூதர்கள் இயேசுநாதரைத் தன் அண்டையில் கூட்டிக்கொண்டு வந்தார்களென்று இவன் அறிந்திருந்தான் ” (மத். 27).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆசாபாசத்துக்கு ஆரம்பத்தில் சற்று இடங்கொடுப்பதைவிட ஆபத்தான காரியம் வேறொன்றுமில்லை. வழக்கமாய்த் துவக்கத்தில் அதற்கு இடங்கொடுத்தால், பிந்தியும் அநேக தடவைகளில் அதற்கு இடங்கொடுக்கவேண்டியதாய் நேரிடும் ; இவ்வாறு, ஆரம்பத்தில் நினைப்பதற்குமுதலாய் அருவருப்பாயிருந்த காரியம் மெள்ள மெள்ள கிரிகையில் வந்து முடியும். அப்படியே புத்தியும் நல்ல குணமுமுள்ளவர்களும் வெகுகாலம் பிறருக்குத் தர்ம மாதிரிகையாயிருந்த சந்நியாசிகளும் ஆசாபாசத்துக்குக் கொஞ்சம் இடங்கொடுத்ததினாலே, வேதத்தைத்தானே விட்டுப் பதித மார்க்கத்தில் புகுந்து அசுத்த காமாதுரர்களாய்ப் போனார்கள். அவர்கள் ஆரம்பத்தில் விசனங்கொண்ட தங்கள் சுயபட்சத்துக்கு அல்லது இச்சைக்கு கொஞ்சமாத்திரம் இடங்கொடுக்க கருத்துகொண்டார்கள் ; ஆனால் ஆசாபாசம் அவர்கள் ஞானக்கண்ணை மறைத்து அவர்களைப் பாதாளத்தில் விழச் செய்தது.

மனப்பற்றுதல்.—நீ துவக்கத்தில் சில ஆசாபாசத்தை உறுதியாய் எதிர்த்துத் தள்ளாமல் அதில் பிரியங்கொண்டிருந்தாலும், அதற்கு முழுவதும் அடிமையாய்ப்போகாமல் தப்பித்துக்கொண்டதற்காக சர்வேசுரனுக்கு விசேஷவிதமாய் நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

பிரதிக்கினை.—“ துவக்கத்தில் துணிவைக் காட்டு ” என்னும் பிரமாணத்துக்கேற்க, ஆசாபாசத்தை ஆரம்பத்தில்தானே தைரியமாய் எதிர்ப்பாயாக.

2-ம் பிரிவு

அப்போது பிலாத்தென்பவன் தண்ணீர் கொண்டுவரச்செய்து ஜனங்களுக்கு முன்பாகக் கைகழுவி: இந்த நீதிமானுடைய இரத்தத்தின்மட்டில் குற்றமற்றவனாயிருக்கிறேன்; நீங்களே பார்த்துக்கொள்ளுங்களென்றான். அதற்குச் சகல ஜனமும் மறுமொழியாக: இவனுடைய இரத்தம் எங்கள்பேரிலும் எங்கள் மக்கள்பேரிலும் இருக்கக்கடவதென்றார்கள் (மத். 27)

தியானம்.—சட்டங்களையும் ஒழுங்குகளையும் பாதுகாக்க நியமகம் பெற்றவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறினால், அந்தத் தவறுதலால் விளையும் பலன் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும் அவர்களுக்குமே பொல்லாப்பாய் முடிவது சகஜம். இங்கே நடக்கிற சங்கதி இதற்கு ஓர் அத்தாட்சி: பிலாத்தென்பவன் இயேசுநாதருடைய மாசற்றதனத்தை அறிந்தவுடன், தன் கடமையை நிறைவேற்றி அவர்பேரில் அநியாயக் குற்றம் சாட்டினவர்களை நீதிப்பிரகாரம் கண்டித்து இயேசுநாதரை நீதிமானாக ஜனங்கள் மீண்டும் நேசிக்கும்படி அவரை விடுதலையாக்கியிருந்தால், அவர்கள் காய்மகாரமுள்ள குருப்பிரசாதிகளின் பாவத்துக்கு உடன்பட்டிருக்கவுமாட்டார்கள், தங்களுக்கு விரோதமாய் "இவனுடைய இரத்தம் எங்கள்பேரிலும் எங்கள் மக்கள்பேரிலும் இருக்கக்கடவது" என்று கூவி 19 நூற்றாண்டுகளாகத் தங்கள்பேரில் சுமந்திருக்கிற இப் பயங்கரமான சாபத்தைத் தாங்களே வருவித்துக்கொள்ளவுமாட்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது சிரேஷ்டர்கள் சந்நியாசத்துக்குரிய ஒழுங்குகளை நாம் பிரமாணிக்கமாய் அநுசரிக்கும்படி வற்புறுத்தும்போதும், நமது தவறுதல்களைக் கண்டிக்கும்போதும், அவசியம் நேர்ந்தால், கிரமமற்ற நமது நாட்டங்களை ஆரம்பத்திலேயே எதிர்த்து நிற்கும்போதும் அவர்கள்பேரில் விரோதம் ஒன்றும் நினையாமலும் மனத்தாங்கல் காண்பியாமலும் இருக்கவேணும். இதற்குமாறாய் நடப்பது, நம்முடைய சொந்த நன்மை இன்னதென்று அறியாதவர்களைப்போலும்

வைத்தியன் வியாதி தீரக் கசப்பான மருந்து கொடுக்கும்போது அவனைக் கோபித்துக்கொள்ளுகிற வியாதிக்காரனைப்போலும் நடப்பதற்குச் சமானமாகும்.

மனப்பற்றுதல்.—மெய்யான பிறர்சிநேகமும், நமதுபேரில் கரிசனையுங்கொண்டு, நம்மை எச்சரித்துத் திருத்துவதில் கவனமுள்ள சிரேஷ்டர்கள் நமக்குக் கிடைத்திருப்பதைப்பற்றி ஆண்டவரிடமாய் அகமகிழ்வோமாக. அவர்களுக்கு நன்றிசெலுத்தி அவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக!

பிரதிக்கினை.—நம்மைச் சிரேஷ்டர்கள் கண்டிக்கிறதினாலே நமக்கு அவமானம் உண்டாகிறதென்று தோன்றினால்: ஆண்டவரே, தேவரீர் என்னைத் தாழ்த்தினதினாலே எனக்கு நன்மையுண்டாயிற்றென்று சொன்ன தாவீது இராஜாவோடே நாமும் சொல்லுவோமாக (சங். 18).

3-ம் பிரிவு

இயேசுநாதர் சிலுவையைச் சுமந்துகொண்டு அரண்மனையிலிருந்து புறப்படுகிறார்

தியானம்.—"அநியாயமாய்த் தீர்வையிட்டவனுக்கு அவர் தம்மைக் கையளித்தார்" என்று அர்ச். இராயப்பர் தமது முதல் நிருபத்தில் எழுதியிருக்கிறார். இயேசுநாதர், பிலாத்து தமக்கு இட்ட ஆக்கினை மிகவும் அநியாயமும் அக்கிரமுமாயிருந்தாலும், அதை மகா உத்தமமான மன அமைவோடு கையேற்றுக்கொண்டாரென்று இந்த வாக்கியத்தினால் நமக்குத் தெளிவாகிறது. மனிதருடைய அக்கிரம அவமானங்களைத் தமது கருத்து நிறைவேறுவதற்குச் சாதனமாக்கிக்கொள்கிற தமது பிதாவினால் உலகத்தின் பாவங்களுக்காகத் தமதுபேரில் சுமத்தப்பட்ட ஆக்கினை இதுவென்று இயேசுநாதர் உணர்ந்தார். தமது திருக்குமாரனுடைய மரணத்தினால் சர்வேசுரனுக்கு மகிமையும் உலகத்துக்கு இரட்சணியமும் உண்டாகவேண்டும் என்பது இவ்விஷயத்தில் பிதாவுக்கிருந்த கருத்து. இயேசுநாதர் தாம் பிறந்த நேரமுதல் இதை நிறைவேற்ற மிகவும் ஆசை

யாயிருந்தார்; இதினிமித்தம் எவ்வளவு ஆவலோடே சிலுவையின் பாரச் சுமையைத் தமது தோளின்பேரில் சுமந்துகொண்டாரென்று நீயே தீர்மானித்துக்கொள்ளலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீதிமான்களுக்கு முதலாய்ச் சிலசமயம் நேரிடும் உபத்திரவங்களைப்பற்றியும் அவமானங்களைப்பற்றியும் நாம் என்ன நினைக்கவேண்டும் என்றும், நமது சிரேஷ்டர்கள் தப்பபிப்பிராயத்தால் நமக்கு இடக்கூடிய தண்டனைகளை அல்லது நமக்கு வருவிக்கக்கூடிய அவமரியாதையை நாம் எப்படி ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இயேசுநாதர் தமது மாதிரிகையினால் நமக்குப் படிப்பிக்கிறார். இத்தகைய சந்தர்ப்பங்களில் நீ எவ்விதம் நடந்துகொண்டாய்? இன்று முதல் இயேசுநாதர் எப்போதும் உன் கண்முன்னேயிருப்பாராகில், ஒன்றும் உனக்கு வருத்தமாய்த் தோன்றாது. அவர் பிறகே சிலுவையைச் சுமந்துகொண்டு போகிறதே உனக்கு மகிமையும் பாக்கியமுமென்று நினைத்துக்கொள்.

சம்பாஷணை.—வேதசாட்சிகளுக்கு மாதிரிகையும் இராஜாவுமாயிருக்கிற இயேசுநாதரோடே சம்பாஷணை செய்வாயாக.

தபசுகாலத்தின் 4-ம் வாரம்—சனி

இயேசுநாதர் சிலுவை சுமந்து போகையில், அதின் பாரம் தாங்கமாட்டாமல் குப்புறவிழுகிறார்; சிரேனேயூரானாகிய சீமோன் அவர் பிறகே சிலுவையைத் தாங்கிக் கொண்டு போகிறான்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் சிலுவையைச் சுமந்துபோகையில், அதின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் மூன்றுவிசை குப்புறவிழுகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—கஸ்தி, வேதனை, அவமானமுள்ள பாதையில் இயேசுநாதரைப் பின்சென்று நடக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

அப்போது சேவகர் இயேசுநாதரைப் பிடித்து அவரை ஆகடியம் பண்ணினபின் அவர்பேரில் போர்த்தியிருந்த தூமிரப்போர்வையை எடுத்துக்கொண்டு அவருடைய வஸ்திரங்களை அவருக்கு அணிந்து கொல்கோத்தாவென்று சொல்லப்பட்ட கபாலமலையில் அவரைச் சிலுவையில் அறையப் பட்டணத்துக்கு வெளியே கூட்டிக்கொண்டு போதும்போது, அவரோடு சிலுவையில் அறையும்படி இன்னம் வேறே இரண்டு கள்ளர்களையும் கூட்டிக்கொண்டு போனார்கள் (மாற். 15; மத். 27; லூக். 23)

தியானம்.—இப்போது எடுத்துக்கூறின சந்தர்ப்பங்களில் திவ்விய இரட்சகர் எவ்வளவோ வேதனை, நிந்தை, அவமானங்களை அநுபவிக்க ஆசையாயிருக்கிறாரென்றுபார்: அவர் தம்மைப் பிறர் இன்னாரென்று கண்டுகொள்ளாவண்ணம் இரவல் வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளவில்லை; அதற்குமாறாய், தாம் எருசலேம் பட்டணத்துக்கு ஒட்டோலகராய் எழுந்தருளிவந்தபோது யாவரும் அறியத் தரித்திருந்த வஸ்திரங்களோடுதானே, இரண்டு கொலைபாதகக் கள்ளரோடு பெரிய குற்றவாளிகளைச் சிரசாக்கினை செய்கிற இடத்திலே மகா அவமானத்தோடே சிலுவையில் அறையப்பட்டு மரிக்கச் சித்தமானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய எஜமான், அவரது சீஷர்களென்று பெருமைபாராட்டிக்கொள்கிற நமக்கு இவ்விடத்தில் படிப்பிக்கிறதென்ன? அவருடைய வில்லையைத் தரித்துக்கொள்ள, அதாவது அவரைப்பற்றிப் பரியாசம், நிந்தை, அவமானம், உபாதை அநுபவிக்க வெட்கப்படாமல், அதன்பொருட்டுப் பெருமைகொள்ளவும், நாம் அவருடைய சாயலாயிருக்கிறதைக்கண்டு சந்தோஷம் அடையவும் நமக்குப் படிப்

பிக்கிறார். இவ்விஷயமாய், உன் ஆசை அல்லது பயம் முதலிய பற்றுதல்கள் எத்தகையனவென்று பார்.

மனப்பற்றுதல்.—என்மட்டில் உள்ள சிநேகத்தால் மனிதரில் கடையனாகப் பாவிக்கப்பட்ட இயேசுவே, என் சகோதரரில் கடைகெட்டவனாக என்னைப் பாவிக்கவும், மற்றவர்களும் என்னை அவ்விதமே பாவிக்க விருப்பங்கொள்ளவும் எனக்குப் படிப்பித்தருளும்.

பிரதிக்கினை.—"நானோ நம்முடைய ஆண்டவராகிய இயேசுக்கிறீஸ்துநாதருடைய சிலுவையிலன்றி, வேறொன்றிலும் மேன்மை பாராட்டாதிருப்பேனாக. அவர் வழியாய் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது. நானும் உலகத்துக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன்" என்று அர்ச். சின்னப்பரைப்போல் நானும் சொல்லிக்கொள்ள இயலும்படி பிரயாசப்படுவேனாக (கலா. 6, 14).

2-ம் பிரிவு

அவர்கள் அவரைக் கூட்டிக்கொண்டு போகிறபோது தோட்ட வீட்டினின்று எதிரே வருகிற சிரேனேயூரானன் சீமோனென்னும் ஒருவனைக் கண்டு இயேசுநாதருக்குப் பிறகே அவருடைய சிலுவையைச் சுமந்துகொண்டுவரப் பலவந்தப்படுத்தினார்கள். (லூக். 23)

தியானம்.—இயேசுநாதர் பசியாலும், தாம் பிடிபட்ட நேரமுதல் பல இடங்களுக்கு நடந்துபோன களைப்பாலும் விசேஷமாய் பூங்காவனத்தில் இரத்தம் வெயர்த்ததினாலும் கற்றூணில் அடிபட்டபொழுது இரத்தம் சிந்தினதினாலும் மெலிந்து அயர்ந்து சிலுவையின் பாரத்தைத் தாங்க மாட்டாமல் கீழே விழுகிறார். இவ்விதம் மூன்றுவிசை விழுந்தாரென்று பாரம்பரையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. முந்தின இரண்டுவிசை அவர் குப்புற விழுந்தபோது, சற்று நேரத்துக்குள்ளாகப் பலம் அடைந்து திரும்பவும் எழுந்திருந்தார். மூன்றாம் விசை அவர் குப்புற விழுந்தபோது, எழுந்திராததைக் கண்ட யூதர் அவர் சிலுவையில் அறையப்

பட்டு மரிக்கிறதைப் பார்க்கும் சந்தோஷம் தங்களுக்குக் கிடையாமல் வழியில் செத்துப்போவாரென்று கலங்கிக் கபாலமலை உச்சிவரையில் அவருக்கு உதவியாகச் சிலுவையைப் பின்னால் தாங்கிவரச் சிரேனேயூரானான சீமோனைக் கட்டாயப்படுத்தினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விடத்தில் இயல்பாய் நமக்கு உண்டாகும் யோசனை ஏதென்றால், நமது இரட்சகருக்கு உதவியாக சிலுவையைச் சுமந்துகொண்டுபோக ஒருவரும் முன்னேறி வராததும், அவரால் அற்புதமாய் ஆரோக்கியம் அடைந்து அவர் சர்வேசுரனால் அனுப்பப்பட்டவரென்று அறிந்தவர்களில் முதலாய் ஒருவராகிலும் உதவியாக வராமலிருந்ததும் மகா ஆச்சரியமே. இந்தச் சமயத்திலே இவ்விதம் கைவிடப்பட்டது மகா உருக்கமுள்ள அவர் திரு இருதயத்தின் கஸ்தியை வெகுவாய் அதிகரித்திருக்கும். ஆனால் நிந்தையும் துன்பமும் நிறைந்த பாதையில் வீண் பயத்தினாலேயாவது முகப்பிரீதியினாலேயாவது இயேசுநாதரைப் பின்செல்ல மறுக்கும்போது நாமும் அந்தக் கஸ்தியை நம்மைச்சார்ந்த அளவில் புதுப்பிக்கிறதில்லையா?

மனப்பற்றுதல்.—இதெல்லாம் கண்டு வெட்கப்பட்டுக் கஸ்திப்படுகிறதுமல்லாமல் நம்மை முழுதும் அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

பிரதிக்கினை.—உதாரத்தனம் நம்மிடத்தில் உண்டாக அடிக்கடி நம்மைத் தூண்டுவோமாக.

3-ம் பிரிவு

சிரேனேயூரானும் அலெக்சாந்தர் ரூப்புசென்பவர்களுடைய தகப்பனுமான சீமோனென்பவனை இயேசுநாதருடைய சிலுவையைச் சுமந்து அவர் பிறகே போகக் கட்டாயப்படுத்தினார்கள். (மாற். 15; மத். 27)

தியானம்.—சிலுவையைச் சுமந்துகொண்டு போவதைப்பற்றி சீமோன் ஆரம்பத்தில் அருவருப்புக்கொண்டா

ரென்று மேற்சொல்லிய வாக்கியத்திலிருந்து விளங்குகிறது; இது ஆச்சரியமல்ல. ஆனால் அவர் பேரும் அவர் இரண்டு பிள்ளைகள் பேரும் பின் வருகிறவர்களுக்குத் தெரியும்படி சுவிசேஷத்தில் தெளிவாய் எழுதப்பட்டிருப்பதைக் கவனிக்குங்கால், அவர் தனக்குக் கிடைத்த பாக்கியத்தைச் சர்வேசுரனுடைய உதவியினால் அறிந்து இயேசுநாதருக்கு உகந்த சீஷனாய்ச் சிலுவையைச் சுமந்துகொண்டு போனதுமல்லாமல் இதற்காக அவரும் அவர் பிள்ளைகளும் உகந்த சம்பாவனை பெற்றுக்கொண்டார்களென்று நினைக்கக் காரணமுண்டு. ஏனென்றால், இம்மூவரும் மேற்றிராணிமார்களாய் அல்லது வேதசாட்சிகளாய் திருச்சபையில் விளங்கினார்கள் என்பது பாரம்பரைப் பொது அபிப்பிராயம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சிலுவை நமக்கு எவ்வளவோ பாக்கியமும் மகிமையும் உள்ளதென்று சிந்தித்து, அதன்மட்டில் நமக்கிருக்கவேண்டிய மதிப்பையும் பற்றுதலையும் புதுப்பிப்போமாக. “சிலுவையில் இரட்சணியம்; சீவியமும் சிலுவையில்; சத்துருக்கள் கையில் அகப்படாவண்ணம் தஞ்சம் புகுவதும் சிலுவையில்; பரலோக இன்பப் பெருக்கமும், ஆத்தும பெலனும், இருதய பூரிப்பும், புண்ணிய சாங்கோபாங்கமும், பரிசுத்ததனத்தின் சம்பூரணமும் சிலுவையில்தான் கண்டடையலாம். ஆகையால் என் சகோதரர்களே, சிலுவையைச் சுமந்துகொண்டுபோகிற நமது இராஜா இதோ நமக்கு முன்னே நடந்துபோகிறார்; யுத்தத்திலே மரிப்பதற்குத் தயாராய் அவரைப் பின்சென்று போவோமாக; சாவு நமக்குச் சீவியமாயிருக்கும்” (கிறீஸ்துநாதர் அநுசாரம் 2-ம் காண்டம், 12-ம் அதிகாரம்).

சம்பாஷணை.—சீமோன் சிரேனேயென்பவரோடே சம்பாஷணை செய்.

தபசுகாலத்தின் 5-ம் வாரம்—ஞாயிறு

பத்தியுள்ள ஸ்திரீகள் இயேசுநாதரைக் கண்டு அழுததும் அவர் வருத்தத்தோடு நடந்துபோகையில், அவருடைய திருத்தாயார் எதிர்கொண்டு சந்தித்ததும்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் போகிற பாதையில் கூடியிருந்த ஜனங்களுக்குள்ளே பத்தியுள்ள ஸ்திரீகளையும் விசேஷமாய் அவர் திருத் தாயாரையும் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—சிநேகம் பொருந்திய பரிதாபம் உனக்குண்டாகக் கேட்பாயாக.

முதல் பிரிவு

அப்போது இயேசுநாதரோடேகூடத் திரளான ஜனக்கூட்டம் பின்சென்று போகையில், அவரைப்பற்றி அநேகம் ஸ்திரீகளும் புலம்பி அழுதுகொண்டு போனார்கள் (லூக். 23)

தியானம்.—இயேசுநாதரைத் தொடர்ந்துபோன ஜனங்கள் எல்லாரும் பத்தியுள்ள ஸ்திரீகளைப்போல சிநேகமும் பரிதாபமும் உள்ளவர்களென்று சொல்லக் காணோம். இயேசுநாதருடைய விரோதிகளுமன்றி, அநேகர், இன்னும் சொல்லவேணுமாகில் பெரும்பான்மையோர் தங்களுக்காக மரிக்கப்போகிறவருடைய நிலைமையைப்பற்றிச் சிறிதும் கவலைகொள்ளாமல், வேடிக்கை பார்க்கவேணும் என்கிற விநோதப்பிரியத்தால் மாத்திரம் அந்தக் கூட்டத்தில் சேர்ந்து போனார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதருடைய துயரம் நிறைந்த பாடுகளை இப்போது முதலாய் அநேகம் பேர்கள் பரிசுத்த இந்தத் தபசுகாலத்தில் யோசித்துத் தியானிக்கிறார்கள். நீயும் அவர்களில் ஒருவனல்லவோ? மற்றக் கிறீஸ்துவர்களைப் பார்க்க சாவதானமாகவும் அமரிக்கையாகவும் நாளொன்றுக்கு ஒரு மணி

நேரமாகிலும் ஆண்டவர் பட்ட பாடுகளைத் தியானிக்க உனக்குப் பாக்கியம் கிடைத்திருக்கிறது. இப்படி உன் நேசமுள்ள இரட்சகர் பட்ட பாடுகளைத் தியானிக்கையில், உன் உள்ளத்தில் தோன்றுகிற உணர்ச்சிகளும் எண்ணங்களும் எவ்வகைப்பட்டன? பத்தியுள்ள ஸ்திரீகளைப்போல் பரிதாபம் மேலிட்டுச் சிநேகத்தால் ஏவப்பட்டு, உன் பாவத்தினிமித்தமும் உன்பேரில் உள்ள சிநேகத்தாலும் இயேசுநாதர் பாடுபட்டு மரிக்கப்போகிறார் என்பதை உணர்ந்து, துக்கம் நிறைந்து பச்சாத்தாபப்படுகிறாயா?

மனப்பற்றுதல்.—இயேசுநாதர்தாமே பத்தியுள்ள சில ஆத்துமாக்களுக்குப் படிப்பித்துக்கொடுத்ததுபோல, தாம் பாடுபட்டதைத் தியானிக்க அவர்தாமே உனக்குப் படிப்பிக்கவும் அவர்களைப்போல நீயும் ஓயாமல் கண்ணீர் விட்டழுது அதிகமதிகமாய் அவரைச் சிநேகிக்கவும் உனக்குக் கிருபைசெய்தருளவேணுமென்று அவரை இறைஞ்சி மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—இந்தப் பரிசுத்த தபசுகாலத்தின் முடிவு அடுத்துவருகிறதற்களவாய் இயேசுநாதருடைய பாடுகளை நன்றாய்த் தியானிக்கப் பிரயாசப்படு.

2-ம் பிரிவு

பத்தியுள்ள ஸ்திரீகளும் அழுது புலம்பி இயேசுநாதரைப் பின்சென்றுபோனார்கள் (லூக். 23)

தியானம்.—கஸ்தியால் அழுதுகொண்டுபோன ஸ்திரீகளைக் குறித்து அர்ச். லூக்காஸ் பேசும்போது, இயேசுநாதருடைய தாயாரைக்குறித்து விசேஷமாய் ஒன்றும் சொல்லாமலிருந்தாலும், திருச்சபையில் பாரம்பரையாய்ச் சொல்லிவருவதுபோல, மாதாவும் குமாரனும் பாதையில் சந்தித்துக்கொண்டார்களென்று நம்புகிறதற்கு இடம் உண்டு; கபாலமலைமேல் இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்தபோது, அவருடைய மாதாவும் சிலுவையண்டையிலே நின்றுகொண்டிருந்தாளென்று சுவிசேஷகராகிய அர்ச். அருளப்பர் எழுதிவைத்திருப்பதினால் விசேஷமாய்

அதை நம்பவேணும். தாய்மார்களுக்குள்ளே மகா பட்சமும் உருக்கமும் நிறைந்த இந்தத் தாயார் திரளாய் நெருங்கிநின்ற ஜனங்கள் நடுவே அவர்களை விலக்கிக்கொண்டுபோய்த் தமது திருக்குமாரன் நிஷ்டூரமானவிதமாய் உருமாறிச் சர்வாங்கமும் இரத்தக்காயமாய் முண்முடி சூட்டப்பட்டிருக்க சேவகரும் சத்துருக்களும் சூழ்ந்துநின்று அவரைச் சபித்துத் தள்ளிக்கொண்டு போவதைத் திடீரென்று கண்டவுடன், அவள் இருதயத்தில் அநுபவித்த வியாகுலத்தையும் நிர்ப்பந்தத்தையும் எடுத்துரைக்க வல்லவன் யார்?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சகல அர்ச்சியசிஷ்டவர்களையும்விட, அர்ச். கன்னிமரியம்மாளுக்குத் தமது திருக்குமாரனுடைய பாடுகளிலும், இரட்சணிய அலுவலிலும் அதிக பங்கு கிடைக்கும்படியாகவும், உலகமுடிவு வரையிலுள்ள சகல ஜனங்களும் அடையக்கூடிய பேறுபலன்களையும் பரிசுத்ததனத்தையும் பார்க்க அதிகமாய் அவள் அடையும்படியாகவும், இத்தகைய கொடூர வாதனையால் அவள் இருதயம் நொறுங்கவேண்டும் என்பது தேவ சித்தம். ஆகையால், சர்வேசுரன் மிகுந்த துன்ப துயரங்களை உனக்கு வருவித்தால், ஆச்சரியப்படாதே, முறையிடாதே. விசேஷமாய் எவ்வகையிலும் அவதைரியப்படாதே; அதற்குமாறாய், தேவசிநேகத்தையும் பேறுபலன்களையும் உன்னிடம் அதிகரிக்கும்படியான சமயம் வாய்க்கும்படி சர்வேசுரன் உன்னை இவ்விதம் நடத்துகிறாரென்று நினைத்துக்கொள்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதரும் அவரது தாயாரும் அநுபவித்த வாக்குக்கெட்டாத துயரங்களைப்பற்றிப் பரிதபித்து, அவைகளை உலக இரட்சணியத்துக்காகவும் பாவிகள் மனந்திரும்புவதற்காகவும் பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடு.

பிரதிக்கினை.—தன் கடமைகளை நிறைவேற்றுவதில் மனோவியாகுலம், கஸ்தி, சிலவேளைகளில்...அடிக்கடி... அல்லது வழக்கமாய், அநுபவிக்கவேண்டியிருப்பது தனக்குப் பெரும் பாக்கியம் என்று எண்ணிக்கொள்ளத்தகும்.

3-ம் பிரிவு

இயேசுநாதர் அந்தப் பக்தியுள்ள ஸ்திரீகளைத் திரும்பிப் பார்த்துத் திருவுளம்பற்றினதாவது : எருசலேம் பட்டணத்தின் குமாரத்திகளே, எனக்காக அழவேண்டாம் ; ஆனால் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்களேன்றார் (லூக். 23)

தியானம்.—*இயேசுவின் திரு இருதயத்தின் பெருந்தன்மையையும் சிநேகத்தையும் கண்டு ஆச்சரியப்படு: பிறருக்கு வரப்போகிற பொல்லாப்புகளை அறிவித்து, அவர்கள் இன்னும் காலம் இருக்கும்போதே, பச்சாத்தாபக் கண்ணீராலும் தபமுயற்சிகளாலும் அந்த பொல்லாப்புகளுக்குத் தப்பித்துக்கொள்ளும்படி அவர்களை வற்புறுத்தி, இவ்விதமாய்ப் பிறர் நன்மைக்காகத் தமது கவனமெல்லாம் செலுத்தித் தம்மையும் தமது துயரங்களையும் மறந்துவிடுகிறார்.*

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—*இவ்வித சிநேகமும் பெருந்தன்மையும் உன்னிடத்தில் எவ்வளவோ குறைவாயிருக்கிறது ! நீ சரீரத்தில் வாதை அநுபவிக்கும்போதும் மனவருத்தப்படும்போதும் பிறருக்கு நீ செய்யவேண்டிய கடமைகளை அடிக்கடி மறந்துவிடுகிறதுமல்லாமல், எல்லாரும் உன்மட்டில் இரக்கப்பட்டு உன்னைப் பற்றிக் கவலைப்படவேணுமென்று விரும்புவதில்லையா ? அவ்விதம் அவர்கள் செய்வதில்லையென்று உனக்குத் தோன்றினால், சலிப்புச்சொல்லி முறுமுறுப்பதில்லையா ? இயேசுநாதர் உன் கண்முன்பாக இருப்பாராக ; அப்போது நீ அதிக தாராளமுள்ளவனாயிருப்பாய், உன்னைப்பற்றி அதிக கவலைப்படாமல், உன் சகோதரருக்கு வேண்டியவைகளை அதிகமாய்க் கவனிப்பாய், உன்னிமித்தம் அவர்கள் துன்பப்பட ஒருக்காலும் சம்மதிக்கமாட்டாய்.*

சம்பாஷணை.—*பலவீனப்பட்டுச் சிலுவையின் பாரத்தினால் களைத்துத் தமது தாயார் படும் வியாகுலத்தைக் கண்டு மனம் உருகித் தம்மிடத்தில் உபகாரம் பெற்றவர்களால் கைவிடப்பட்டு நமக்காக உயிர்விடக் கபாலமலைக்கு நடந்துபோகிற தமது திருக்குமாரனைச் சந்தித்த பரிசுத்த கன்னிமாதாவோடு சம்பாஷணை செய்வாயாக.*

தபசுகாலத்தின் 5-ம் வாரம்—திங்கள்

தீர்வையை நினைத்துத் தபசுசெய்யவேண்டிய முகாந்திரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—*தீர்வை கேட்கச் சர்வேசுரன் சமுகத்தில் நான் நிற்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.*

தியானச் சேபம்.—*அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதுபோல, என்னை அறியவும் இப்போது என்னைத் தானே நான் தீர்வையிட்டுக்கொள்ளவும் வரப்பிரசாதம் கேட்பேனாக (1 கொரி. 11).*

முதல் பிரிவு

தியானம்.—*இந்த உலகத்தைவிட்டுப் பிரிந்தவுடன், நமக்கு வரப்போகிற தீர்வையில் பயங்கரத்துக்குரியது மூன்று காரியம் : முதலாவது, நம்மை நடுத்தீர்க்கப்போகிறவரும், 2-வது, நாம் செலுத்தவேண்டிய கணக்கும், 3-வது, நமக்கு இடப்போகிற தீர்வையுமாம்.*

நம்மை நடுத்தீர்க்கப் போகிறவரை நயப்படுத்திக்கொள்வது தபசினால் ஆகும் கர்மம். தீர்வை இடப்போகிறவர் இயேசுநாதர்தாமே,—சர்வேசுரனே,—அவர் நமக்கு ஏராளமான உபகாரங்களைப் புரிந்துகொண்டிருந்த சமயத்திலேயே,—அவர்கண்முன்பாக,—சிறிதும் அச்சமின்றி,—அநேகந்தரம் பாவஞ்செய்தோம் ; இத்தகைய பாவ அக்கிரமத்தினால் அவரை அவமதித்து, நிந்தித்து, அவருக்குத் துரோகம் செய்திருக்கிறோம் !... இப்போது அவர் இரக்கத்தின் தேவன், நம்மிடம் பச்சாத்தாப அடையாளம் காணும்போதெல்லாம் நமக்கு மன்னிப்பளிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார் ; ஆனால், அச்சமயத்தில் நீதியின் தேவனும் பழிவாங்கும் ஆண்டவருமாயிருப்பார். அவருடைய தயை அளவில்லாததாயிருந்ததுபோல அவருடைய நீதியும் அளவில்லாததாயிருக்கும். அவர்தாமே திருவுளம்பற்றின

படி, அற்பக்குற்றமாகிய ஒரு வீண்வார்த்தையைமுதலாய் அவர் அறியாதவருமல்ல, தண்டியாமல் விடுகிறவருமல்ல. இந்த நினைவானது மகாத்துமாவான யோபென்பவரிடம் இரட்சணியத்துக்குரிய பயத்தை விளைவித்தது. "ஆண்டவர் தமது நீதியின்படி என்னை நடுத்தீர்க்க வரும்போது, நான் என்ன செய்வேன்" என்று தமக்குள்ளே சொல்லிக் கொண்டார் (யோபு 31).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வெகு காலம் பத்திக்குறைவாய் சீவித்துவந்திருக்கிற நீ உன் நீதிபரரிடமிருந்து எதிர்பார்க்கக்கூடியதென்ன? சரியாய்ச் சொல்லவேணுமாகில், நீ எவ்வளவோ அவருக்குப் பயப்படவேண்டியவன்! மனுஷன் செய்த குற்றங்களின் எண்ணிக்கையையும் கனத்தையும், அவன் கண்ணுக்கு மறைவாக்கி, யாதொரு பொல்லாப்பும் வராதென்று பொய்யான நம்பிக்கையை அவனிடம் உண்டுபண்ணுவதே பத்திக்குறைவின் இயல்பு. ஆகையால் என்ன செய்வது? இயேசுநாதர் உனக்குச் சொல்லிக்காட்டுகிறதைக் கேள்: "(இந்த சீவியமாகிற) பாதையில் இருக்கும்போதே, உன் எதிராளியோடு சமாதானம் செய்துகொள்" என்கிறார். அர்ச். அகுஸ்தீன் இந்த வாக்கியத்தை வியாக்கியானித்து, "பாவத்தால் சர்வேசுரனை உன் எதிரியாக்கிக்கொண்டாய்; அவரே உன்னை நடுத்தீர்ப்பார்; அதற்குமுன், அவரோடு சமாதானம் செய்துகொள்" என்று சொல்கிறார். "வல்லபமுள்ள அவரது கரத்தின்கீழ் உன்னைத் தாழ்த்தித் தபசு செய்வதினால் அவருடைய சமாதானத்தை அடைந்து கொள்ளலாம்" (1 இரா. 5; அப். நட. 2)

மனப்பற்றுதல்.—உன் பிரமாணிக்கமின்மையையும் நன்றியறியாமையையும் தாழ்ச்சியுடன் உணர்ந்து, அதற்காகத் துக்கப்பட்டு மனப்பூரணமாய்ப் பரிகாரம் செய்ய வழி தேடிக்கொள்.

பிரதிக்கினை.—தபசுகாலத்தின் முதல் திங்கட்கிழமையில் நீதானே தீர்மானித்துக்கொண்ட தபமுயற்சிகளில் நிலைத்திருப்பாயாக.

2-ம் பிரிவு

தியானம்.—நாம் செலுத்தவேண்டிய கணக்கை இலேசாக்கிக்கொள்வதும் தபசினால் ஆகும் காரியமே. கணக்கோ வெகு கண்டிப்புள்ளதாயிருக்கும். சகலத்தையும் அறிந்திருக்கிறவர்தானே இந்தக் கணக்குப் பார்ப்பார்; இவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. வீணான காரியத்தில் செலவழித்த காலத்துக்கும், நன்மை செய்யாததற்கும், நன்மையைக் குறைவாய்ச் செய்ததற்கும், நினைவு, கருத்து, வார்த்தை, கிரியைகள் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு க்ஷணமும் சந்நியாசிகளான நமக்கு இரட்சணியமும் பரிசுத்ததனமும் அடையும்படி கிடைத்த ஏராளமான சாதனங்களுக்கும், சர்வேசுரன் சமுகத்தில், கணக்குச் செலுத்தவேணும். இந்த நினைவு சந்நியாசிக்கு மகா பயங்கரமுள்ளது. அவனவன் அடைந்த வரப்பிரசாதங்களுக்குத் தகுந்தாப்போல் தீர்வையும் கண்டிப்பாயிருக்கும். "எவனுக்கு அதிகமாய்க் கொடுக்கப்பட்டதோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்கப்படும்" என்று இயேசுநாதர் திருவுளம்பற்றின வாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு, "வரப்பிரசாதத்தைத் தொடர்ந்துவரும் தீர்வை" என்று அர்ச். சிப்பிரியான் சொல்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த நினைவானது வனத்தில் கடின தபசு செய்தவர்களுக்கு முதலாய் வெகு பயத்தை வருவித்தது. அவர்கள் தங்கள் கடந்தகால சீவியத்துக்குப் போதுமான அளவு பரிகாரம் செய்துவிட்டோம் என்று ஒருக்காலும் நினைக்கவில்லை. நொறுங்கிப்போயிருந்த அவர்கள் இருதயத்துக்குச் சற்று ஆறுதலாயிருந்தது அவர்கள் இடைவிடாது சிந்தின கண்ணீரும், கடைசிநாள் பரியந்தம் செய்த கடின தபசுந்தான். நீ அவர்களைக் கண்டுபாவித்து, உன் பாவங்கள், குற்றங்கள் அலட்சியங்களின் மிகுதியான கணக்கைத் தபசினாலும் ஒறுத்தலினாலும் இலகுவாக்கப் பிரயாசப்படு. பாவப் பரிகாரத்துக்கும் பொதுவான தபசுக்கும் குறிக்கப்பட்ட பரிசுத்த இந்தக் காலத்தின் மூன்றில் இரண்டுபாகம் கடந்து

போனதினால், இப்போதாகிலும் விசேஷமான உதாரத்துவத்தோடு அத்தவமுயற்சிகளை நிறைவேற்றுவாயாக.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, என் பாவங்களைப் பாராமல் உமது கண்களைத் திருப்பிக்கொண்டு என் அக்கிரமங்களையெல்லாம் போக்கியருளுமென்று தாவீது இராஜாவோடே சொல்லுவாயாக (சங். 50).

பிரதிக்கினை.—முதல் பிரிவில் சொல்லியிருக்கிறபடி பிரதிக்கினை செய்துகொள்.

3-ம் பிரிவு

தியானம்.—நமக்குச் சனுவான தீர்வையை நிச்சயப்படுத்திக்கொள்ளவும் தபசினால் ஆகும். நடுவர் இடப்போகிற தீர்வையானது ஒருக்காலும் மாறாது; அது ஒன்றில் நித்திய சீவியத் தீர்வையாய் இருக்கும், அல்லது நித்திய மரணத்தீர்வையாய் இருக்கும். முந்தின தீர்வையினால் நீதிமானுடைய ஆத்துமத்துக்கு சொல்லொண்ணா மகிமையும் மோக்ஷ பேரின்பமும் என்றென்றைக்கும் நிச்சயமாகும்; ஆனால் உடனே அதில் பிரவேசியாமல் சிறிதுகாலம் உத்தரிக்கிற ஸ்தலத்திலே இருக்க நேரிடலாம்; பிந்தின தீர்வையினால், பச்சாத்தாபப்படாத பாவியின் ஆத்துமம் நரக நித்திய தண்டனையை அநுபவிக்கும்படி பசாசுக்குக் கையளிக்கப்படும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் விசேஷமாய் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்தக்ஷணமே மோக்ஷானந்த பாக்கியத்தை அடைகிறவர்களில் நீயும் ஒருவனாயிருக்க மெத்த ஆசைப்படுகிறாயல்லவா? இது தேவ கிருபையைக் கொண்டு நீ அடைந்துகொள்ளக்கூடிய விஷயமே. பரிசுத்த சந்நியாசியாய் நடக்கவும், உன் ஆத்துமத்தில் இன்னம் அசுத்தமாயிருக்கிறதை இடைவிடாத ஒறுத்தலினால் அல்லது தபசினால் சுத்தமாக்கவும் பிரயாசப்படு. உன் ஆசை நிறைவேறுவதற்கு நிச்சயமான ஏக வழி இதுவே. இதை அநுஷ்டானத்தில் கையாடி வருவாயாகில், மரண

வேளையில் உனக்கு எவ்வளவோ ஆனந்தமாயிருக்கும்! இதை அறிந்தும், இவ்விதம் நடவாதிருப்பதேன்?

சம்பாஷணை.—உனக்காகத் தபசு செய்த இயேசுநாதரோடே சம்பாஷணை செய்வாயாக.

தபசுகாலத்தின் 5-ம் வாரம்—செவ்வாய்

இயேசுநாதர் கபாலமலையில் சேர்ந்தவுடனே பிச்சுக் கலந்த இரசத்தை அவருக்குக் குடிக்கக்கொடுத்து அவர் வஸ்திரத்தை உரிகிறார்கள்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தமது வஸ்திரத்தை உரியுங் கொலைக்காரர் நடுவில் நிற்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேணுக.

தியானச் செபம்.—என்னைப்பற்றி சொல்லரிய பாடுகள் அநுபவித்த இயேசுநாதர்பேரில் எனக்குச் சிநேகம் அதிகரிக்க வரப்பிரசாதம் கேட்பேனுக.

முதல் பிரிவு

கொல்கொத்தா என்னப்பட்ட கபாலமலையிடத்துக்குச் சேர்ந்தார்கள் (மத். 27; லூக். 23)

தியானம்.—தேவசுதன் தமது பலியை நிறைவேற்ற விசேஷமாய்த் தெரிந்துகொண்ட ஸ்தலம் பரம இரகசியங்கள் நிறைவேறின இடமாயிருக்கின்றது. பிதாப்பிதாவாகிய அபிராமென்பவர் தமது குமாரன் ஈசாக்கைப் பலியிடுகிறதற்காகச் சர்வேசுரனால் குறிக்கப்பட்ட ஸ்தலம் இதுதான்; பெரிய கொலைபாதகர்களைச் சிரசாக்கினை இடுவதற்கு யூதர்கள் தெரிந்துகொண்ட ஸ்தலம் இதுவே; யூதர்களுக்குள் வழங்கிவரும் பாரம்பரைப்பிரகாரம் நோவை என்பவர் தம்மோடு பெட்டகத்தில் கொண்டுவந்த ஆதித்தகப்பன் சிரசைப் புதைத்த இடமும் இதுதான். இதி

னிமித்தம் கபாலமென்றர்த்தமுள்ள கொல்கொத்தாவென்னும் பெயர் எபிரேயு பாஷையில் உண்டாயிற்று. சுவிசேஷகர்கள் நான்குபேரும் ஒரேவிதமாய் கிரனியொனென்னுங் கிரேக்கு வார்த்தைக்கு அடுத்தாப்போல் கொல்கொத்தாவென்னும் எபிரேயு வார்த்தையை எழுதிவைத்திருப்பது இந்தப் பாரம்பரையை உறுதிப்படுத்துகின்றது. அதைப்பற்றி யூதர்கள் சந்தேகப்படவில்லையென்று தேர்த்தாலியான், ஒரிஜெனஸ், அர்ச். அத்தனாசியார், இன்னும் ஆதி திருச்சபையின் வேதபாரகர்களில் அநேகர் அத்தாட்சி கூறுகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தப் பரம இரகசியங்களைத் தியானித்துப்பார்: அவைகளில் நமக்குப் பிரயோசனமான படிப்பினைகள் இருக்கின்றன. அபிராம் ஈசாக்கைப் பலியிடப்போனதை இயேசுநாதர் நமக்கு நினைப்பூட்டி இதில் குறிக்கப்பட்ட மெய்யான பலியை இவ்விடத்தில் தாம் நிறைவேற்றினதினால் பிதாவாகிய சர்வேசுரனுக்கும் அவருடைய திருக்குமாரனுக்கும் நாம் நன்றிசெலுத்தி அவர்களைச் சிநேகிக்கவேணுமென்று படிப்பிக்கிறார். பின்னும் குற்றவாளிகளைச் சிரசாக்கினை செய்யும் இவ்விடத்தை அவர் தெரிந்துகொண்டதினாலே, உலகத்தின் பாவங்களுக்கும் அவனவன் செய்யும் குற்றங்களுக்கும் பரிகாரமாகவே, தாம் மரிக்கிறார் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறார். ஆதித்தகப்பன் சிரசைப் புதைத்த கல்லறையின்பேரில் அவர் மரிப்பது, பாவத்தால் வந்த சாவின் இராச்சியத்தை அதன் உற்பத்தி ஸ்தானத்திலேயே தமது திரு மரணத்தினால் அழித்து நித்திய சீவியத்தின் சுதந்தரத்தைத் திரும்பவும் நமக்கு அளிக்கிறாரென்று காண்பிக்கிறது.

மனப்பற்றுதல்.—இவ்விஷயங்களின் கருத்து இதுவரை உன் புத்தியில் தென்படவில்லையாக்கும்; இதில் விளங்கும் ஆச்சரியமும் சிநேகமும் பொருந்திய தேவ பராமரிக்கையைக் கண்டு ஆச்சரியப்பட்டு சர்வேசுரனைப் புகழ்ந்து ஆராதிப்பாயாக.

பிரதிக்கினை.—என் சீவியத்தின் சகல விஷயங்களிலும் தினந்தினம் என் கண்முன்னே நடக்கிற காரியங்களிலும் தேவ பராமரிக்கையைக் கண்டுணர்ந்து அதைப் புகழ்ந்துகொள்ள பிரயாசைப்படுவேன்.

2-ம் பிரிவு

பிச்சுக்கலந்த இரசத்தை இயேசுநாதருக்குக் குடிக்கக் கொடுத்தபோது, அவர் அதைச் சுவைபார்த்துக் குடிக்க மனதில்லாதிருந்தார் (மத். 27)

தியானம்.—சாகப்போகிறவர்களுக்கு மனத்திடன் உண்டாகவும் அல்லது அவர்கள் படும் வேதனை அவர்களுக்குத் தெரியாதிருக்கவும் மீறையோடு கலந்த இரசத்தைக் குடிக்கக் கொடுக்கிறது வழக்கம்; ஆனால் இவர்கள் நிஷ்டூரக் கொடுமையினால் பிச்சுக்கலந்த இரசத்தைத் திவ்விய இரட்சகருக்குக் கொடுத்தார்கள். அவர் அதை வாங்கிச் சுவை பார்த்துக் குடிக்க மனமில்லாதிருந்தாரென்று சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் மகா கசப்பான இந்தப் பானத்தை உருசிபார்த்து அதை உட்கொள்ளாதிருந்ததேன்? முதலாவது, கொலைக்காரர் உபாதிக்கக்கூடாத உருசியென்கிற இந்திரியத்துக்கு வேதனை உண்டாகவும், இரண்டாவது, நமது மிதமின்மையையும் போசனப்பிரியத்தையும் பரிகரிக்கவும், மூன்றாவது, நாம் நமது உருசியை ஒறுத்து, ஆகாத இச்சையையாகிலும் தடுத்து, சந்நியாசிக்குரிய மட்டசன வரம்பை ஒருக்காலும் மீறாவண்ணம் தமது மாதிரிகையினால் நம்மைத் தைரியப்படுத்தவும் இவ்விதம் செய்தார். தவிரவும், அதைப் பானம் பண்ணியிருந்தால் சிலுவை மரண வாதனையைத் தணித்துக்கொள்ளக்கூடும்; ஆனால் அவ்வாதனையெல்லாம் சற்றும் சாந்தப்படுத்தாமல் முற்றிலும் அநுபவிக்க அவர் விரும்பினார். ஆகையால் அதைப் பானம்பண்ண அவருக்கு மனதில்லை.

மனப்பற்றுதல்.—போசனப்பிரியத்தாலும் மட்டசனமின்மையினாலும் நீ கட்டிக்கொண்ட பாவங்களுக்குப் பொறுத்தல் கேட்பாயாக.

பிரதிக்கினை.—போசனத்தில் எப்போதும் எதையாவது ஒன்றை ஒறுக்கவேண்டும்; அதில் உருசியையும் மிஞ்சின பிரியத்தையும் நாடாமலாவது இருக்கவேண்டும்.

3-ம் பிரிவு

இயேசுநாதருடைய வஸ்திரத்தை உரிகிறார்கள்

தியானம்.—சிலுவையில் அறைந்து கொல்லப்படுகிறவர்கள் படும் வேதனையோடு அவமானமும் அநுபவிக்கும்படியாக, அவர்களுடைய வஸ்திரத்தை உரிந்துபோடவேண்டுமென்பது உரோமையருடைய சட்டம். ஆகையால் இயேசுநாதர் தமக்குக் கொடுக்கப்பட்ட கசப்பான பானத்தை உருசி பார்த்தவுடனே, மரியாதையில்லாத ஜனங்கள் முன்பாகத் தமது வஸ்திரங்களை உரியக் காண்கிறார். ஆனால் பட்ட அடிகளால் இரத்தக் காயமாயிருந்த அவர் திருச்சரீரத்தோடு அந்த வஸ்திரங்கள் ஒட்டியிருந்ததினால், அவைகளை உரிந்தபோது அவருடைய காயங்களெல்லாம் திரும்பவும் திறக்கப்பட்டு சொல்லரிய வாதனை வருவித்தன.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் இத்தகைய அவமானமும் வேதனையும் முழு வறுமையும் அநுபவிக்க விரும்பினதேன்? சர்வேசுரனுடைய ஊழியத்தினிமித்தம் புதைக்கப்போகிற சரீரத்திலிருந்து உரிவதுபோல் நமது வஸ்திரங்களை உரிந்துகொண்டாலும், நாம் உலக நகைப்புக்கு இலக்காகவேண்டியிருந்தாலும், எவ்விதமான நிந்தை, வேதனை, தரித்திரத்துக்கும் பின்வாங்காமல் தைரியமாயிருக்கவேண்டுமென்று நமக்குப் படிப்பிப்பதற்காக இவ்விதம் நடந்துகொண்டார். நாம் வாஸ்தவத்தில் அல்லது ஆசையிலாகிலும் முழு வறுமையாயிருக்கவேண்டுமென்று இயேசுநாதர் நம்மைக் கேட்கிறார். அதைப்பற்றி அவர் திருவுளம்பற்றியிருக்கிறதாவது: எவனானாலும் தனக்குள்ளதெல்லாவற்றையும் தன்னையும் விட்டுவிடானாகில், என்

சீஷனாயிருக்கமாட்டானென்றார் (லூக். 14). இப்படியிருக்க, தன் வஸ்திரத்தை அல்லது தரித்திரத்தைப் பார்த்து உலகத்தார் சிரிப்பார்களென்று பயப்படுகிற சந்நியாசியைக் குறித்தும் தான் தரித்துக்கொள்ள நல்ல வஸ்திரத்தைத் தேடித் தனக்குள்ள சொற்பக்காரியத்திலே முதலாய் உலகத்துக்குப் பிரியப்படப் பிரயத்தனம்பண்ணுகிற சந்நியாசியைக்குறித்தும் நாம் என்ன நினைப்பது?

சம்பாஷணை.—தமது திருக்குமாரன் அநுபவிக்கிற பயங்கரமான நிர்ப்பந்தங்களைப் பார்க்கும் வியாகுலமாதாவோடே சம்பாஷணை செய்வாயாக.

தபசுகாலத்தின் 5-ம் வாரம்—புதன்

இயேசுநாதர் இரு கள்ளர் நடுவே சிலுவையில் அறையப்படுகிறார்

ஆயத்தச் சிந்தனை.—கொலைக்காரர் இயேசுநாதரைச் சிலுவையில் கிடத்தி அவருடைய கைகளிலும் கால்களிலும் பெரும் இருப்பாணிகளால் அறைகிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—மிகுந்த இரக்கமும் துயரமும் உன்னிடத்தில் உண்டாகக் கேட்பாயாக.

முதல் பிரிவு

மூன்றும் மணிநேரத்திலே இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்தார்கள் (மாற். 15)

தியானம்.—இயேசுநாதர் தமது பலியை நிறைவேற்றுகிறதற்காக நித்தியகாலமாய் குறிக்கப்பட்ட இடத்திலும் நேரத்திலும் கபாலமலையில் வந்துசேர்ந்திருக்கிறார். நாமும் நினைவின் வழியாய் அங்கே போவோமாக. நாம் அங்கே காணும் காட்சியென்ன? உரோமான் சேவகர் ஜனங்களை விலக்குகிறதையும், ஒரு பெரும் மரச்சிலுவை

யின் கிட்ட இயேசுநாதர் நிற்கிறதையும், கொலைக்காரர் ஒவ்வொருவரும் தங்கள் கைகளில் பெரும் ஆணிகள் சுத்தியல்களை வைத்துக்கொண்டு திவ்விய நாதரைச் சிலுவையில் படுக்கக் கட்டளையிடுகிறதையும் காண்கிறோம். இயேசுநாதரோவென்றால் ஒன்றும் சொல்லாமல் அதற்குக் கீழ்ப்படிந்து சிலுவையில் படுத்துக்கொள்ளுகிறார். அவர்கள் தமது வலது கரத்தைக் கேட்கும்பொழுது, அதை நீட்டிக் கொடுக்கிறார். அதை ஒரு கொலைக்காரன் பிடித்துச் சிலுவையில் வைத்து ஒரு பெரும் ஆணியால் துளைத்துச் சுத்தியல்கொண்டு அடிமேல் அடி அடிக்கச் சுற்றிலுமிருக்கிற மலைகளில் அதின் எதிரொலி கேட்கப்படுகிறது. இயேசுநாதரோவென்றால் ஐயோவென்று ஒரு வார்த்தையாகிலும் சொல்லி முறையிடக்காணோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமக்காக இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார்! ஆகையால் எனக்காகவும் என்னைப்பற்றியும் என்பேரில் வைத்த பட்சத்தினாலும்; அவர் நிஷ்டூரமான இந்த வேதனைகளை அநுபவிக்கிறார். வாக்குக்கெட்டாத இந்த வேதனைகளைச் சாதாரணமாய்ச் சொல்லிக் காண்பிக்கிறதொன்றே,—அவைகளின் நினைவே சுபாவமெல்லாம் நடுநடுங்கச்செய்யப் போதுமானது. இதைப்பற்றியன்றோ "அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்" என்று சுவிசேஷத்தில் ஒரே வார்த்தைமாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதரைப் பார்க்கையில், நான் பதறாமலும் மனம் கலங்காமலும் சிநேகமும் உருக்கமுமுள்ள கண்ணீர்விட்டு அழாமலும் இருப்பேனோ?

மனப்பற்றுதல்.—அர்ச்சியசிஷ்டவர்கள் வெகு மனத்திடனும் ஆறுதலும் சிநேகமும் அடைவதற்குக் காரணமாயிருந்த இந்த உருக்கப் பற்றுதல்களை என்னிடம் வருவித்துக்கொள்வேனாக. அவர் சிலுவையில் உயர்த்தப்படுமுன்னே, என் நேச இயேசுவின் அண்டையில் போய் பட்சம் நிறைந்த அவர் திருக்காயங்களை முத்திசெய்து என் உதடுகளை அவைகளில் பதித்து என் மனப்பற்றுதல் எல்லாத்தையும் அவைகளில் வைப்பேனாக.

பிரதிக்கினை.—இயேசுநாதரோடே நான் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். இனி நானல்ல சீவிக்கிறது, என்னிடத்தில் சீவிக்கிறவர் இயேசுநாதர்தாமேயென்று அர்ச். சின்னப்பரைப்போல் நானும் எப்போதும் சொல்லும்படியாய், என்னை அடக்கி ஒறுத்து அவர்பேரில் என் சிநேகத்தைக் காண்பிக்க வருந்துவேனாக (கால. 2).

2-ம் பிரிவு

இயேசுநாதரை சிலுவையில் உயர்த்துகிறார்கள்

தியானம்.—சிலுவையில் கிடத்தப்பட்டுக் கைகால்களில் ஆணிகளால் அறையப்பட்டுச் சாகுந்தனையும் அவ்வாறு இருப்பது எவ்வளவு வேதனைக்குரியது! ஆகிலும் இயேசுநாதருடைய சிநேகத்துக்கு இந்த வேதனை போதுமாயில்லை. பத்துப்பங்கு நூறு பங்கு இன்னம் அதிக வேதனைப்பட வேண்டியதாயிருக்கின்றது. சிலுவையை உயர்த்திப் பாறையில் அதை ஊன்றினார்கள். இதோ, இயேசுநாதர் தமது சரீரத்தின் பாரமெல்லாம் தாங்குவதற்குக் கைகால்களில் அறைந்திருக்கிற ஆணிகள் தவிர வேறே ஆதரவில்லாமல், வாதனையின் அகோரத்தாலேயே மரிக்கும்பரியந்தம் அச்சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கிறார். ஆ! இதென்ன வேதனை! ஆ! இதென்ன சாவு! இருதயம் பிளந்துபோகாமல் இதை நினைக்கக்கூடுமோ? இப்படி ஒரு நிமிஷ நேரம் இந்த வேதனைகளை அநுபவிக்கிறது ஒரு மணி நேரம்போலவும் ஒருநாட்போலவும் தோன்றுமன்றோ? ஆயினும் இயேசுநாதர் மூன்றுமணி நேரம் இவைகளை அநுபவிக்கிறார். எனக்காகவும் என்பேரில் வைத்த சிநேகத்துக்காகவும் இவைகளை இப்படி அநுபவிக்கிறார்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஓ! கிறீஸ்துவனே! ஓ! சந்நியாசியே! நீ யார் எவராயிருந்தாலும், உன்னைப் பரிசோதித்துப்பார். முதலாவது, என் இராஜாவும் என் இரட்சகருமானவர் சிலுவையில் அநுபவித்த பாடுகளுக்கு முன்பாக நான் படும் துயரமும் இக்கட்டும் வேதனையும் ஒரு பொருட்டாகுமாவென்றும், இரண்

59826

டாவது, இந்தத் திவ்விய இரட்சகரைப்பற்றியும் இவர் என் பேரில் வைத்த மிகுதியான சிநேகத்துக்குப் பதிலாகவும் இதுவரையில் பெரிதும் உதாரமுமான காரியம் என்ன செய்தேன்? அவரைப்பற்றி இனிமேல் நான் செய்ய வேண்டியதென்னவென்றும் உன்னையே வினவிக்கொள்.

மனப்பற்றுதல்.—உன் சிநேகத்துக்கும் நன்றியறிதலுக்கும் அச்சாரமாக இயேசுநாதர் உன்னிடத்தில் கேட்கும் பலி இன்னதென்று உனக்கு வெளிப்படுத்த அவரை மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—இந்தப் பலி சுபாவத்துக்கு எவ்வளவு வருத்தமாயிருந்தாலும், அதைக் கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்றப் பிரயாசப்படுவாயாக.

3-ம் பிரிவு

மேலும் அவருடைய வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் சிலுவையில் அறையப்பட்டிருந்த இரு கள்ளர் நடுவில் இயேசுநாதருடைய சிலுவையை நாட்டினார்கள். இப்படியே தீயோர்களோடொருவராய் எண்ணப்பட்டாரென்று எழுதிய வேதவாக்கியம் நிறைவேறிற்று (*மாற்.* 15)

தியானம்.—இயேசுநாதர் வேதசாட்சிகளுக்கு இராஜாவென்கிற மேரையில், அவருடைய வாதனைகள் நிகரற்றனவாயிருக்கவேண்டுமென்று மாத்திரமல்ல, அவர் அநுபவித்த நிந்தை அவமானங்களும் நிகரற்றவைகளாயிருக்கவேண்டுமென்று விரும்பினார். அப்படியே ஆயிற்று: இரு பாதகர் மத்தியில் இருப்பதினால், சகல பாதகரிலும் பெரும் பாதகன் எனப் பாவிக்கப்படுகிறார்; அன்றியும், அபத்தமாய்த் தன்னைத் தேவகுமாரனென்று சொல்லிக்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டதினிமித்தம் மகா இகழ்ச்சிக்குரிய புரட்டுக்காரன் எனவும் பாவிக்கப்படுகிறார். மேலும் வேதபாரகர் இவரை இகழ்ந்து இவன் தன்னைத் தேவகுமாரனாகிய கிறீஸ்துவென்றானே; இவன் இப்போது சிலுவையை விட்டிறங்கட்டும்; நாங்கள் விசுவசிப்போமென்றதற்கு இவர் இறங்காமலிருந்தது அவர்கள் சாட்டின குற்றத்துக்கு ஓர் அத்தாட்சிபோல் தோன்றினது (மத்.

27; மாற். 15). இயேசுநாதரோவென்றால், நமதுபேரில் வைத்த பட்சத்தினாலே தமது மகிமை கீர்த்தி எல்லாவற்றையும் இழந்து நமக்காக மரிக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் நடுவே, நிந்தைக்குரிய சிலுவையில் தொங்கி, இரண்டையும் சமாதானப்படுத்தி, அர்ச். சின்னப்பர் சொல்லும்வண்ணம், தமது காயங்களினின்று வழிந்தோடும் இரத்தத்தால், நமக்கு விரோதமாயிருந்த தீர்ப்புப் பத்திரத்தை சிலுவையோடு கட்டி அழித்த இயேசுநாதர் பாதங்களை, நினைவின் வழியாய்ச் சாஷ்டாங்க தெண்டனிட்டு வணங்குவோமாக.

“திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறோம்; ஏனென்றால் உம்முடைய அர்ச். சிலுவையைக்கொண்டு உலகத்தை இரட்சித்தீர்” என்று நாம் அடிக்கடி சேவிக்கிற சிலுவைப்பாதையின் ஒவ்வொரு ஸ்தலத்துக்கு முன்பாக திருச்சபையின் விருப்பத்துக்கிசையச் சொல்லிவருகிற செபத்தைப் பத்தி விநயத்தோடு திரும்பத்திரும்பச் சொல்லுவோமாக.

சம்பாஷணை.—சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுநாதரோடு அல்லது அதனடியில் நின்ற அவர் திருத்தாயாரோடு சம்பாஷணை செய்வாயாக.

தபசுகாலத்தின் 5-ம் வாரம்—வியாழன்

இயேசுநாதர் சிலுவையில் அறையுண்டிருக்கும் போது, திருவுளம்பற்றின முதல் வாக்கியம்

ஆயத்தச் சிந்தனை.—என் பிதாவே, இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாமையால், இவர்களுக்குப் பொறுத்தல் தந்தருளுமென்று இயேசுநாதர் சிலுவையிலிருந்து திருவுளம்பற்றுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—சாந்தகுணத்தையும் பிறர்சிநேகத்தையும் கேட்பாயாக.

முதல் பிரிவு

என் பிதாவே, இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாமையால் இவர்களுக்குப் பொறுத்தல் கொடுமென்றார் (லூக். 23)

தியானம்.—கொல்லப்பட்ட மாசற்ற ஆபேலின் இரத்தம் பரலோகமட்டும் ஏறிப் பழிக்குப்பழி கேட்டது. பழியும் தாமதமின்றி வந்தது: அது கொலைபாதகனான காயின்பேரிலும் அவன் சந்ததியார்பேரிலும் கொடூரமாய் வீழ்ந்தது. அந்தக் கொலையைவிட அளவிறந்தவிதமாய் அருவருப்புக்குரிய கொலைபாதகத்தை யூதர் செய்து முடிக்கிறார்கள்: பரிசுத்தரிலும் பரிசுத்தரும் தங்கள் மெசியாவுமான இயேசுநாதரை சிலுவை மரத்தில் அறைந்திருக்கிறார்கள். அவர் கடைசி மூச்சுவிடப்போகிறார்: தமது மாசின்மை பிரசித்தமாய் விளங்கித் தமது சத்துராதிகள் என்றென்றைக்கும் வெட்கி நாணிப்போகும்படி, நீதிப்பிரகாரம் அவர்களைப் பழிவாங்கவேணுமென்று தமது பரம பிதாவை மன்றாடப்போகிறாரென்று நினைக்கிறாயோ? இல்லை, இல்லை; இத்தகைய எண்ணம் இயேசுவின் இருதயத்துக்கு முற்றிலும் புறம்பானது. சிலுவையில் அறையுண்டக்ஷணமே, அவர் வானத்தை அண்ணார்ந்து பார்த்து: "என் பிதாவே, இவர்களுக்கு மன்னித்தருளும். ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" என்று சொல்லுகிறார் (லூக். 23, 34). சாந்தகுணத்துக்கும் பிறர்சிநேகத்துக்கும் இது எவ்வளவோ ஆச்சரியத்துக்குரிய மாதிரிகை!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் உனக்குத் திவ்விய மாதிரிகையாயிருக்கிறார். அவரது காலடியைப் பின்சென்று, விசேஷமாய் அவரது சாந்தகுணத்தையும் பிறர்சிநேகத்தையும் கண்டுபாவிக்க எத்தனையோதரம் பிரசித்தமாய் வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிறாய்? அதின்படி நடந்தாயோ இல்லையோவென்று

பரிசோதித்துப் பார். மாசற்ற சுரூபியாயிருக்கிற இயேசுநாதர் இவ்வளவு நிஷ்டூரமாய் நடத்தப்பட்டிருக்கையில், தம்மைக் கொலைசெய்கிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறார்; அவர்கள் குற்றத்தை மன்னித்துக்கொள்ளுகிறார், தம்மாலானமட்டும் அவர்கள் செய்த அகோரமான பாதகத்தைத் தணிக்கிறார். நீயோவென்றால், உனக்குச் சொற்பக் குற்றம் செய்தவர்கள்பேரில் மெத்த விசனப்பட்டுச் சிலவிசை பழிவாங்க முதலாய் நினைக்கிறாய்; மேலும் அவர்களிடத்தில் இல்லாத துர்க்கருத்தை அவர்கள்பேரில் சாட்டி அற்பக் குற்றத்தைப் பெரிதாக்குகிறாய்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதரிடத்தில் விளங்கின நிகரில்லாத சாந்தகுணத்தையும் பிறர்சிநேகத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டு அவைகளைப் பாராட்டுவாயாக. நீ அவரைச் சரியாய்க் கண்டுபாவியாமல் பொறுமையற்றவனும் புறத்தியார்மட்டில் இரக்கமற்றவனுமாயிருக்கிறதைப் பார்த்து உன்பேரில்தானே கோபமாயிரு.

பிரதிக்கினை.—பிறருடைய நடத்தையின்மட்டில் உனக்குப் பொறுப்பில்லாத பரியந்தம், அவர்களிடத்தில் இருக்கக்கூடிய குறையை மன்னித்து, அவர்கள் யோசிக்காமல் செய்துவிட்டார்கள், அவர்களிடம் கெட்ட கருத்தில்லை என்று நினைத்துக்கொள்ளவேண்டும்.

2-ம் பிரிவு

அன்றியும் பிலாத்து அறிக்கைப் பத்திரத்தை எழுதி அதை சிலுவை மரத்தின் உச்சியிலே வைத்தான். அதில் யூதருடைய இராஜாவாகிய இயேசு நசரேனுவென்று எபிரேயு, கிரேக்த, லத்தீன் பாஷைகளில் எழுதப்பட்டிருந்தது (அரு. 19)

தியானம்.—பிலாத்து இயேசுநாதருக்கு யூதருடைய இராஜாவென்கிற மகிமைக்குரிய சிறப்புப்பெயர் கொடுத்து, அதை அக்காலத்தில் உலகத்தில் பரம்பியிருந்த பிரதான மூன்று பாஷைகளில் எழுதிச் சிலுவை மரத்தின் உச்சியிலே வைக்கக் கட்டளையிட்டது யூதர்கள் அவருக்கு அநியாயமாய் மரணத்தீர்வையிடத் தன்னைக் கட்டாயப்படுத்

தினதற்காக, அவர்களைப் பழிவாங்கினாற்போலாயிற்று. ஆனால் அவன் தனக்குத் தெரியாமலே, தேவபராமரிக்கையின் கருத்தை இத்தால் நிறைவேற்றினான்: "தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று இயேசுநாதர் சொன்ன வாக்கியத்தின் உண்மையை உருபித்தான். சுவிசேஷம் எபிரேய ஜாதியாரைவிட்டுக் கிரேக்கு, லத்தீன் ஜாதியாருக்குப் போதிக்கப்பட்டு அவர்கள் வழியாகவும் உரோமாபுரியில் வாசம் பண்ணும் பாப்பானவர் வழியாகவும் பல பாஷை பேசும் சகல ஜாதி ஜனங்களிடத்திலும் போதிக்கப்படுமென்று சொல்லியிருந்த தீர்க்கதரிசனம் நிறைவேற அவன் ஒத்தாசையாயிருந்தானென்றும் சொல்லத்தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தமது கருத்து நிறைவேறவும் நமக்குப் பிரயோசனம் உண்டாகவும் துஷ்டர்களுடைய துர்க்கருத்தையும் பகையையும் உதவிக்கொண்டு வருகிற சர்வேசுரனுடைய பராமரிக்கையானது எவ்வளவு ஆச்சரியமுள்ளதென்று இவ்விடத்தில் கண்டறியவேணும். இதை நாம் தினந்தினம் பார்த்திருந்தும் தேவ ஊழியத்திலே நம்பிக்கையில்லாமல் பயந்து நடுநடுங்குகிறதெப்படி? தந்தைக்குரிய அவருடைய பராமரிக்கையில் நாம் பயமில்லாமல் இளைப்பாறுவோமாகில், மனுஷரால் நமக்கு யாதொரு பொல்லாப்பும் வராது. அவர்கள் தின்மை செய்ய நினைத்தாலும், நமக்கு அது நன்மையாயிருக்கும். சகலமும் வேத கலகங்களும் பாவிகள் அடைகிற தற்கால வெற்றி முதலாய்ச் சர்வேசுரனைச் சிநேகிக்கிறவர்களுக்கு நன்மையாக அநுகூலமாகிறதென்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார் (உரோ. 8).

மனப்பற்றுதல்.—தேவ பராமரிக்கையின் அத்தியந்த ஞானத்தை ஆராதிப்பாயாக.

பிரதிக்கினை.—நமது ஜீவிய சந்தர்ப்பங்கள் எல்லாவற்றிலும் சகல தகப்பன்மார்களிலும் மகா உத்தம தகப்பனும் நம்மைக் கரிசனையுடன் கண்காணித்து வருகிறவருமான ஆண்டவர் கையில் நம்மை முழுதும் ஒப்புக்கொடுப்போமாக.

3-ம் பிரிவு

இந்த அறிக்கைப் பத்திரத்தை மாற்றும்படி கேட்ட குருப்பிரசாதிகளுக்கு மாறுத்தாரமாகப் பிலாத்து நான் எழுதினது எழுதியாயிற்றென்றான் (அரு. 19.)

தியானம்.—தேசாதிபதியான பிலாத்தென்பவன் சிலுவை மரத்தின் உச்சியிலே எழுதிவைத்த அறிக்கைப் பத்திரம் யூதர்களுடைய குருப்பிரசாதிகள், வேதபாரகருடைய ஆங்காரத்தையும் மேட்டிமையையும் எதிர்த்து நின்றதினால், அவர்கள் பிலாத்தண்டையிற்போய் அவனை நோக்கி: அந்தப் பத்திரத்தில் அவனை யூதர்களுடைய இராஜாவென்று எழுதியிருக்கக் கண்டோம்; அப்படி எழுதவேண்டாம்; ஆனால் யூதருடைய இராஜாவாயிருக்கிறேனென்று அவனே சொன்னதாக எழுதவேண்டுமென்றார்கள். இதுவரையில் மனம் தத்தளித்துப் பலவீனத்தைக் காண்பித்துப் பயந்திருந்த பிலாத்து இந்தச் சமயத்திலே மன உறுதிகொண்டு அவர்கள் கேட்டபடி செய்யக்கூடாதென்று தன் அதிகாரத்தைக் காண்பித்து, நான் எழுதினது எழுதியாயிற்றென்றான் (அரு. 19).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிலாத்து அஞ்ஞானியாயிருந்தும் இவ்விடத்தில் நமக்கு ஒரு நல்ல படிப்பினை கொடுக்கிறான். அதேதென்றால், நாம் செய்த பிரதிக்கினைகளையும் விசேஷமாய் நாம் தியான காலத்தில் நன்றாய் யோசித்துச் செய்த பிரதிக்கினைகளையும் சொற்ப முகாந்திரத்தினாலே மாற்றாமல் என்ன சம்பவித்தாலும் அவைகளில் உறுதியாய் நிலைத்திருக்கவேணும் என்று படிப்பிக்கிறார். ஆகையால் எந்தவிதமான சாக்குப்போக்குநிமித்தமாகிலும் (சாக்குப்போக்குக்கு ஒருபோதும் குறைவு இராது) நமது பிரதிக்கினைகளை மாற்ற அல்லது விட்டுவிடச் சோதனை வந்தால், "ஆண்டவர் என் இருதயத்துக்குள் பேசுங்காலத்தில் தேவ வரப்பிரசாத ஏவுதலினால் நான் எழுதினது மாறாமலிருக்கவேண்டும்; நான் அதில் பிரமாணிக்கமாயிருக்க மனதாயிருக்கிறேன்" என்று சொல்வோமாக.

சம்பாஷணை.—சிலுவையில் அறையுண்ட தமது திருக்குமாரனைப் பார்த்துக்கொண்டிருக்கிற பிதாவாகிய சர்வேசுரனோடு சம்பாஷணை செய்.

தபசுகாலத்தின் 5-ம் வாரம்—வெள்ளி

வியாகுலமாதாவின் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—பரிசுத்த கன்னியாஸ்திரி சிலுவையடியில் நின்று அதில் அறையப்பட்டிருக்கிற தமது திருக்குமாரனைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—என் பிரியமுள்ள தாயார் அநுபவிக்கிற வாக்குக்கெட்டாத வியாகுலத்தைக் கண்டிரங்கவும் அத்திருத் தாயார் எவ்வளவு வியாகுலம் அநுபவிக்கிறாளென்றும் அதை எப்படி அநுபவிக்கிறாளென்றும் எதற்காக அநுபவிக்கிறாளென்றும் நான் நன்றாய்க் கண்டுணரவும் வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

தேவதாயார் எவ்வளவு வியாதலம் அநுபவிக்கிறாள்

தியானம்.—இன்றைக்குத் திருச்சபையின் கருத்தோடு ஒன்றித்து, நமது சிந்தனைகள் யாவும் இயேசுநாதருடைய திருத்தாயார் அநுபவித்த வியாகுலத்தில் ஊன்றியிருக்கும்படி பிரயாசப்படுவோமாக. நம்மைப்பற்றியும் நமக்காகவும் அவள் இந்த வியாகுலமெல்லாம் அநுபவிக்கிறாளென்பதற்குச் சந்தேகமில்லை.

அவள் எவ்வளவு வியாகுலம் அநுபவிக்கிறாளென்பதை ஒரு வகையில் கண்டுபிடிக்கத்தக்கதாக இப்போது சொல்லப்போகிறதைக் கேள்; மற்றத் தாய்மார்களைப்பார்க்க மகா உருக்கமும் பட்சமும் நிறைந்த ஒரு தாயானவளுக்கு ஒரே ஏக புத்திரன் இருந்தான்; அவள் அந்தக் குமாரனைத் தன் உயிரைப்பார்க்க அதிகமாய்ச் சிநேகித்து வந்தாள். மனு-

ஷர் பெற்ற பிள்ளைகளுக்குள்ளே மகா நேசம் பொருந்திய இந்தக் குமாரன் நல்ல வாலப் பிராயத்திலே சுபாவமான மரணம் அடையாமல் கொலைக்காரர் கையில் அகப்பட்டுச் சனங்களால் நிந்தை அடைந்து தூஷணிக்கப்பட்டு, கட்டிவைத்து, அடிக்கப்பட்டு, சிரசில் முண்முடி சூட்டப்பட்டு, ஆணிகளால் சிலுவையில் அறையப்பட்டு, அதில் உயிரோடே தொங்கி இத்தகைய வேதனைகளால் ஒரு சாமபரியந்தம் வாக்குக்கெட்டாத அவஸ்தைப்படுகிறதைப் பெற்ற தாயார் கண்டு அவருக்கொரு அற்ப ஆறுதலும் வருவிக்கக்கூடாமலிருந்தால், அவளுக்கு அது எவ்வளவு வேதனையாயிருக்கமாட்டாது! இத்தனை வியாகுலம் அநுபவித்த தாயானவளை உலகத்தில் கண்டதுண்டோ? ஆகிலும் இயேசுநாதரைப் பெற்ற பரிசுத்த மாதா மேற்சொன்னதெல்லாம் கடந்து மகாத்துமாவான சிமையோனென்பவர் அவளைப் பார்த்து உமது ஆத்துமம் வியாகுல வாளால் ஊடுருவப்படுமென்று தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன நேரமுதல் முப்பத்துமூன்று வருஷகாலம் வியாகுலம் அநுபவித்தாள். இத்தேவதாயார் பட்ட இவ்வியாகுலத்தைப் பார்த்துத் திருச்சபையானது இவளை வேதசாட்சிகளுக்கு இராக்கினியேயென்று அழைக்கிறதுமல்லாமல், என் சீவனானது வியாகுலத்திலும் என் வயதெல்லாம் கண்ணீர் சிந்துவதிலும் செலவழிந்துபோயிற்றென்று தாவீது இராஜா பாடியது இவளுக்கே பொருந்தினதென்றும் திருச்சபை சொல்லிக்கொண்டு வருகின்றது (சங். 30).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வியாகுலமாதா சிலுவை அடியில் நிற்கிறதாக எழுதப்பட்ட படத்தைப் பார்க்கிறபோது, நாம் மேற்சொன்னதெல்லாவற்றையும் நினைக்கவேணும். அப்படி நினைத்தால், நமது இருதயத்தில் இரக்கமும் சிநேகமும் பத்தியும் அதிகமதிகமாய் உண்டாகும். நாம் கஸ்தி வேதனை அநுபவிக்கும்போது, அஃதெல்லாம் பெரிதாகத் தோன்றமாட்டாது; அப்படிப்பட்ட சமயத்திலே நமக்கு வேண்டிய மனத்தைரியம் உண்டாவதுமன்றி, நேரிடும் வருத்தத்துக்களவாய் அந்தத் தைரியம் அதிகரிக்கும்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டு உருக்கத்தோடே தேவமாதாவின்பேரில் சிநேகமும் பத்தியும் வைப்போமாக.

பிரதிக்கினை.—வியாகுலமாதாவின் பேரில் நாம் பத்தி வைக்கிறதுமல்லாமல் புறத்தியாரிடத்திலும் இந்தப் பத்தி விளங்கச் செய்வோமாக.

2-ம் பிரிவு

தேவதாயார் எப்படி இந்த வியாதுலத்தை அநுபவிக்கிறாள்?

தியானம்.—மகா வருத்தமான இத்தனை வேதனைகளெல்லாம் பரிசுத்த கன்னியாஸ்திரி எப்படி அநுபவிக்கிறாள்? முந்தமுந்த யாதொரு முறைப்பாடும் சொல்லாமல் தேவ சித்தத்துக்கு உத்தமபிரகாரம் அமைந்தும்; இரண்டாவது, தமது திருக்குமாரன் அடைந்த அகோரமும் அவமானமுமான மரணத்தின்பேரில் ஆராதனைக்குரிய சர்வேசுரனுடைய கருத்துக்கு முற்றிலும் ஒத்த மனதோடும்; மூன்றாவது, ஒரு தாய்மாரிடத்திலும் ஒருபோதும் இராத உதாரமுள்ள மன ஊக்கத்தோடும் இவைகளை அநுபவிக்கிறாள்; தமது திவ்விய குமாரன் இன்னமும் உயிரோடிருக்க வேணுமென்கிற ஆசையைப்பார்க்கத் தேவ மகிமையும் உலக இரட்சணியமும் தமது இருதயத்தில் அதிகமாயிருக்கச்-செய்கிறாள்; நாலாவது, ஒருவரிடத்திலும் நாம் காணாத மனத் தைரியத்தோடு தமது திருக்குமாரன் உயிர்விடுந்தனையும் சிலுவை அடியிலே அசையாமல் நிற்கிறாள்; ஐந்தாவது, மாறாத சாந்தகுணத்தோடும் நிகரில்லாத பிறர் சிநேகத்தோடும் தமது திருக்குமாரன் தம்மைக் கொலை செய்கிறவர்களுக்காகச் செய்த செபத்தில் தானும் ஒன்றித்திருக்கிறாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். கன்னிமரியம்மாளின் வியாகுலங்களை ஞாபகப்படுத்துகிற இந்தத் திருநாளிலே அவள் வேதசாட்சிகளுக்கு இராக்கினியுமாய் உத்தம மாதிரிகையுமாய்க் காணப்படுகிறாள். நீ சில்விசை படும் வேதனை உபத்திரவங்களில் இந்த உத்தம

மாதிரிகைக்கொத்த பிரகாரம் எப்படி நடந்தாயென்று பார்.

மனப்பற்றுதல்.—அவளிடத்தில் விளங்கின ஆச்சரியமான புண்ணியங்களோடு நீ படும் வருத்தம் கஸ்திகளை எல்லாம் சேர்த்து அர்ச்சிக்கப்பண்ணுகிறதற்கான வரப்பிரசாதத்தை அந்தத் தாயார் உனக்கு அடைந்து கொடுக்கும்படி அவளைப் பிரார்த்திப்பாயாக.

பிரதிக்கினை.—நமக்குண்டாகிற கஸ்தி நிர்ப்பந்தங்களெல்லாம் நமது ஆத்துமத்தின் மேலான நன்மைக்காகச் சர்வேசுரன் கையிலிருந்து வருகிறதாக விசுவசித்து அவைகளைக் கையேற்றுக்கொள்வோமாக.

3-ம் பிரிவு

தேவதாயார் எதற்காக இந்த வியாதுலம் அநுபவிக்கிறாள்?

தியானம்.—பரிசுத்த மாதா உத்தரிக்கவேண்டியதொன்றும் இல்லாதிருந்தாலும், அவள் சீவியகால பரியந்தம் வாக்குக்கெட்டாத வியாகுலம் அநுபவிக்கச் சர்வேசுரன் சித்தமாயிருந்ததேன்? சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் இராக்கினியென்கிற பட்டத்துக்குப் பேறுபெற்றவளாயிருக்கத்தக்கதாக, முந்தமுந்தச் சகல கஸ்தியும் துன்பமும் நிறைந்த இயேசுநாதருடைய சாயலின் அளவாலும், இரண்டாவது, சர்வேசுரனைப்பற்றிப் படும் பாடுகளினால் வெளிப்படும் சிநேகத்தின் அளவாலும்; மூன்றாவது, வீரத்துவமுள்ள விதமாய்ச் சர்வேசுரனுடைய சித்தத்துக்கு அமைவதின் பயனாக அடையும் பேறுபலனின் அளவாலும்; நாலாவது தேவ மகிமைக்காகவும் ஆத்தும இரட்சணியத்துக்காகவும் அவள் ஒப்புக்கொடுத்த பலிகளின் அளவாலும் சகல அர்ச்சியசிஷ்டவர்களையும் கடந்தவளாயிருக்க வேண்டியதினால் சர்வேசுரன் அப்படிச் சித்தமானாரென்று வேதபாரகர் சொல்லுகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் தமது விசேஷ சிநேகத்தின் அச்சாரத்தைப் பரிசுத்த மாதாவுக்குக் கொடுக்கச் சித்தமாகி தமது ஞானப்பொக்கிஷத்தில் சிலுவையைவிட விலைமதியாத அச்சாரம் கிடைக்க

யில்லையாகில், அவர் நமக்கு அதில் ஒரு பங்கு கட்டளையிடும்போதும் அல்லது சர்குந்தனையும் நாம் அதைச் சுமக்கச் சித்தமாயிருக்கும்போதும் நாம் நம்மை நிர்ப்பாக்கியமுள்ளவர்களென்று சொல்லி முறையிடுவதெப்படி? முறையிடுவதற்குமாறாய், சர்வேசுரன் தம்மால் அதிகமாய்ச் சிநேகிக்கப்பட்டவனை நடத்தினதுபோல நம்மையும் நடப்பிக்கச் சித்தமாயிருக்கிறாரென்கிற நினைவினால் நாம் ஆறுதலடைந்து நமது நேசத்துக்குரிய தாயார் பிறகே நமது சிலுவையை மனத்தைரியமாய் சுமந்துகொண்டு போவோமாக. நாம் இப்படி நினைத்து இதின்படி நடந்தோமோ?

சம்பாஷணை.—வேதசாட்சிகளுக்கு இராக்கினியான பரிசுத்த மாதாவோடே சம்பாஷணை செய்வோமாக.

தபசுகாலத்தின் 5-ம் வாரம்—சனி

இயேசுநாதர் சிலுவையிலிருந்து திருவுளம்பற்றிய இரண்டாம் வாக்கியம்

நல்ல கள்ளன்

ஆயத்தச் சிந்தனை.—இரு கள்ளர் நடுவே இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறதாக ஸ்ரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—மிகுந்த சுறுசுறுப்போடே தேவ வரப்பிரசாதத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்க வரம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதரோடு சிலுவையில் அறையுண்டிருந்த கள்ளரில் ஒருவன் அவரைத் தூஷணிக்கையில், மற்றொருவனோவென்றால் அவனைக் கண்டித்து, நீயும் இந்த ஆக்கினைக்குள்ளாயிருந்தும் சர்வேசுரனுக்குப் பயப்படுகிறதில்லையோவென்றான் (லூக். 23)

தியானம்.—இந்த இரண்டு கள்ளருடைய மரணம் நேர்விரோதமானது; இதில் ஒரு பெரிய பரம இரகசியமும் படிப்பினையும் அடங்கியிருக்கின்றன. பரம இரகசியம்

ஏதென்றால், இவ்விருவரும் இயேசுநாதரிடத்தில் விளங்கின சுபாவத்துக்கு மேற்பட்ட பொறுமைக்கும் சிநேகத்துக்கும் சாட்சிகளாயிருக்கிறார்கள்; இவ்விருவரும் தங்கள் நடுவே உலக இரட்சகர் தங்கள் ஆத்தும இரட்சணியத்துக்காகச் சர்வேசுரனைப் பிரார்த்தித்துத் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கிறதைப் பார்க்கிறார்கள். ஆகிலும் ஒருவன் தேவதூஷணத்திலும் பாவத்திலும் நிலைத்திருந்து அவலமாய்ச் சாகிறான். மற்றொருவன் தேவ வரப்பிரசாதத்துக்கு அமைந்து ஞான ஒளிவு பிரகாசத்துக்குத் தன் கண்களைத் திறந்து இருதயத்தில் மனஸ்தாபப்பட்டு மோக்ஷத்துக்கு சுதந்தரவாளியாய், அர்ச். சிப்பிரியான் சொல்வது போல், தன் இரத்தத்தால் ஞானஸ்நானம் பெற்ற வேதசாட்சியாய் மரிக்கிறார். திருச்சபையும் வேதசாட்சிகளின் இடாப்பில் மார்ச்சு-மீ 25-ம் தேதி, தீஸ்மாஸ் என்னும் பெயரால் அவருக்குச் சங்கைசெய்யக் குறித்திருக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தப் பரம இரகசியத்தில் அடங்கியிருக்கிற ஆறுசரணைக்கான படிப்பினையை இப்போது கவனிப்போம். சர்வேசுரன் சகல மனுஷருக்கும் இரட்சணியத்துக்கு அவசரமான வரப்பிரசாதங்களைக் கொடுக்கிறார்; ஆனால் சிலருக்கு அதிகமாகவும் சிலருக்குக் குறைவாகவும் கொடுத்துவருகிறார். அதிகமோ குறைவோ, மனிதன் அத்தோடு மனம் பொருந்தி ஒத்துழைக்கவேண்டுமென்று சர்வேசுரன் கேட்கிறார். இதனிமித்தம், நல்ல கள்ளனுக்கு அளிக்கப்பட்ட வரப்பிரசாதங்கள் எவ்வளவு ஏராளமானவைகளாயினும், அவைகளுக்கிசைந்து அவனும் பிரயாசப்படாவிடில் அவைகள் அவனை மனந்திருப்பியிருக்கவுமாட்டா, அவனை இரட்சித்திருக்கவுமாட்டா. இதிலிருந்து நாம் அறியவேண்டியதென்ன? தேவ வரப்பிரசாத ஏவுதலுக்குச் சரியாய்ச் செவிசாய்த்து அதற்குக் கீழ்ப்படிந்து, நமது வசமாய் விடப்பட்டிருக்கிற அனந்தம் இரட்சணிய வழிகளைச் சரியாய்ப் பிரயோகித்துக்கொள்ளவேணும் என்பதே. அவ்விதம் செய்கிறோமா? இதில் நமது பிரமாணிக்கமும் உதாரத்துவமும் எத்தகையது?

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் இதுவரையில் நமக்களித்த விசேஷ வரப்பிரசாதங்களுக்காகவும், இன்னும் அநுதினம் நமக்களித்துவருகிற வரப்பிரசாதங்களுக்காகவும் சர்வேசுரனுக்கு நன்றிசெலுத்துவோமாக. வரப்பிரசாதத்தை அலட்சியம் செய்ததற்காகப் பொறுத்தல் கேட்போமாக.

பிரதிக்கினை.—வரப்பிரசாத ஏவுதலுக்கும் அழைத்தலுக்கும் பிரமாணிக்கமாயிருக்கிறோமாவென்று பரிசோதித்துப் பார்ப்போமாக.

2-ம் பிரிவு

நாமோவென்றால், நியாயமாய்த் தீர்வைக்குள்ளாகி ஆக்கினை அநுபவிக்கிறோம்; இவரோவெனில், ஒரு பொல்லாப்பும் செய்ததில்லையேயென்று சொல்லி, பின்னும் இயேசுநாதரைப் பார்த்து: சுவாமி, தேவரீர் உமது இராச்சியத்தில் எழுந்தருளும்போது உமது அடியானை நினைத்தருளுமென்றான் (லூக். 23)

தியானம்.—இவ்விடத்தில் நல்ல கள்ளன் செய்ததுபோல, தான் செய்த குற்றங்களை தாழ்மையாய் ஒத்துக்கொண்டு அவைகளுக்குரிய ஆக்கினையை, உத்தம மனஸ்தாபமும் மன அமைவுமுள்ள இருதயப்பற்றுதல்களோடு தாழ்ச்சி நம்பிக்கையுள்ள செபத்தையும் ஒன்றித்து, ஏற்றுக்கொள்வது சர்வேசுரன் இருதயத்தை நேராய் அண்டிப்போவதாகும், தன் பாவங்களுக்கு மன்னிப்பைமட்டுமன்று, விசேஷ வரப்பிரசாதங்களையும் சகாயங்களையும் நிச்சயப்படுத்திக்கொள்வதாகும். நல்ல கள்ளனே இதற்கு அத்தாட்சியாயிருக்கிறான்: அந்தச் சமயத்திலே நிர்மூலமாக்கப்பட்டவரைப்போலிருந்த இயேசுநாதருடைய தெய்வீகத்தை அவன் பிரசித்தமாய் வெளிப்படுத்தினது, நீதிமானாக்குகிற தேவ இஷ்டப்பிரசாதத்தோடேகூட விசுவாசத்தின் வரத்தையும் மேலானவிதமாய் அடைந்தானென்று நமக்கு எண்பிக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் எல்லாரும் பலவீனர்கள்தான். உன்னிடத்திலும், கனமான குற்றங்கள் சிலவேளை இருக்கலாம். நீ அப்போது தாழ்ச்சியுள்ள நல்ல கள்ளனைப்போல மனஸ்தாபப்பட்டு அவைகளை ஒத்துக்கொள்ளுகிறாயோ? இதற்குமாறாய்ச் சிலவிசை உனக்குத்தானே இரண்டகம்பண்ணி, மற்றவர்கள் முன்பாக அவைகளை மறுத்து அல்லது குறைத்துப் பேசினதில்லையா? அவைகளைப்பற்றி உன்னைக் கண்டிக்கும்போது, முறுமுறுத்து எரிச்சற்படவில்லையா? உன் மனச்சாட்சி என்ன சொல்கிறது?

மனப்பற்றுதல்.—உன்னை நீ அறியவும் திருத்திக்கொள்ளவும் உனக்கு விக்கினமாயிருக்கிற ஆங்காரத்தை அருவருக்கவேண்டும். நீ வீணான அல்லது பொய்யான போக்குகளைச் சொல்லுகிறதற்கு சாதாரணமாய் காரணமான சுயபட்சத் துடிப்பை அடக்குவதற்கான மனத்தைரியத்தைக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—என் குற்றத்தைக் காண்பித்து எனக்குப் புத்திமதி சொல்லும்போது, என்னை மன்னித்துக்கொள்ளாமல் மவுனமாய் உற்றுக்கேட்பேனாக. என்னைக் கண்டிக்கும்போது அல்லது தண்டிக்கும்போது தாழ்ச்சியோடே அதை ஏற்றுக்கொண்டு நாளுக்குநாள் நல்லவனாயிருக்கப் பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் அவனை நோக்கி: இன்றுதானே, நீ என்னோடு பரகதியில் இருப்பாயென்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேனென்றார் (லூக். 23)

தியானம்.—நல்ல கள்ளன் மரிக்கப்போகிற அந்திவேளையில், சிலுவையின் தண்டனையும், தான் செய்த அக்கிரமங்களின் நினைவும், மறுமையில் என்ன கிடைக்குமோவென்கிற ஏக்கமும் எல்லாம் கூடி அவனை அவநம்பிக்கைக்குள்ளாக்க ஏதுவாயிருந்த சமயத்தில், ஆண்டவர் சொன்ன

இந்த வாக்கியம் அவனுக்கு எவ்வளவோ ஆறுதலும் திடனும் பொருந்தியது? இதை அறிந்து, செபத்தின் பயனைப் பற்றி, சரியாய்ச் செய்த ஒரேயொரு செபத்தின் பயனைப் பற்றி யாராகிலும் ஆச்சரியப்படாமலிருக்கக்கூடுமோ? அக்கிரமத்தில் அமிழ்ந்திக்கிடந்த பாவியைச் செபமானது மோட்சத்துக்கு சுதந்தரவாளியும் அர்ச்சியசிஷ்டவனுமாக மாற்றிவிடுகிறது. அவன் இயேசுநாதரைக் கேட்டதெல்லாம் தன்னை நினைத்துக்கொள்ளும்படியாக மாத்திரம்; இயேசுநாதரோவெனில், அவனுக்குப் பாவ மன்னிப்பு அளித்ததோடு, பரிசுத்த மரணமும் அதன்பின் உடனே மோட்சானந்தமும் அவனுக்குக் கட்டளையிடுகிறார்: "இன்றுதானே என்னோடு பரகதியில் இருப்பாய்" என்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் கடந்தகாலத்தில் எவ்வளவு குற்றவாளிகளாயிருந்திருப்பினும், இப்போது எவ்வளவு நிர்ப்பாக்கியராயிருப்பினும், சர்வேசுரனுடைய தயவின்பேரில் அவநம்பிக்கைப்படுவது அல்லது செபத்தின் பயனைப்பற்றி எப்போதாவது சந்தேகிப்பது பெருந் தப்பிதமாகும்; செபத்தின் வல்லமை, அதைச் செய்கிறவனுடைய பரிசுத்ததனத்தில் அடங்கியிராமல், அச்செபத்திலேயே அடங்கிக்கிடக்கிறது. நாம் எவ்வளவுக்கு நிர்ப்பாக்கியராயிருக்கிறோமோ அவ்வளவுக்கு நமது செபத்தின் பயனைப்பற்றி நம்பிக்கையாயிருக்கலாம், நம்பிக்கையாயிருக்கவேண்டும். ஆ! இதெவ்வளவு மனத்திடனைத் தரத்தக்கது? நாம் வாய்திறந்து செபம் சொல்லத் தகுதியற்றவர்கள் என்று உணரும்போதுமுதலாய், நல்ல கள்ளனைப்போல், "ஆண்டவரே, மகா ஏழையும் நிர்ப்பாக்கியனுமாகிய என்னை நினைவுகூர்ந்தருளும்" என்று சொல்வோமாக. இந்த செபம் ஒருக்காலும் வீணாய்ப்போகாது.

சம்பாஷணை.—இயேசுநாதரோடு பரகதியிலிருக்கிற நல்ல கள்ளனோடே சம்பாஷணை செய்.

தபசுகாலத்தின் 6-ம் வாரம்—குருத்து ஞாயிறு

இயேசுநாதர் சிலுவையிலே கைவிடப்பட்டு வஸ்திரமெல்லாம் உரியப்பட்டுத் தூஷணிக்கப்படுகிறார் *

ஆயத்தச் சிந்தனை.—சில நாளைக்குமுன்னே ஒட்டோலகராய் எருசலேம் பட்டணத்தில் பிரவேசித்து இப்போது சிலுவையில் அறையப்பட்டு யாவராலும் கைவிடப்பட்டு நிந்தை அவமானம் அடைந்திருக்கிற இயேசுநாதரைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—உலக பற்றுதலை முழுதும் விட்டுவிட்டுச் சர்வேசுரன்பேரில் மாத்திரம் பற்றுதல் வைக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

அவர் சிநேகிதர்களெல்லாரும் அவரைவிட்டு விலகித் தூரமாயிருந்தார்கள் (லூக். 23)

தியானம்.—இந்த ஞாயிற்றுக்கிழமை பூசைக்கு முன்னே செய்யும் விசேஷ சடங்குகளாகிய குருத்து மந்திரிக்கிறதும் சுற்றுப்பிரகாரம் வருகிறதும் ஓசன்னாவென்று சந்தோஷப் பாட்டுப் பாடுகிறதும், இந்த நாளிலே இயேசுநாதர் எருசலேம் பட்டணத்தில் ஒட்டோலகராய்ப் பிரவேசித்ததை நினைப்பூட்டத் திருச்சபையால் ஏற்படுத்தப்பட்டன. அப்போது ஆறு நாளைக்குமுன்னே இயேசுநாதருக்குச் செய்யப்பட்ட சங்கை ஆராதனை புகழ்ச்சிக்கும் இப்போது சிலுவை மரத்தில் நிறைவேறிவருகிற நிந்தை, அவமானம், வெறிமூர்க்கங்கொண்ட கூக்குரலுக்கும் எவ்வளவோ நேர்விரோதம்! நமது ஞானப் படிப்பினைக்காக

* இன்றையதினத்தின் சம்பவமாகிய எருசலேம் நகர்ப் பிரவேசத்தையும், பாடுகளின் வரலாற்றைத் தொடர்ந்து இயேசுநாதர் சிலுவையில் தொங்கினதையும் இந்தத் தியானத்தில் ஒன்று சேர்க்க எத்தனித்திருக்கிறோம்.

மிகவும் அதிசயத்துக்குரிய இந்த வித்தியாசத்தைத் தியானித்துப் பார்ப்போமாக. அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறதுபோல, ஆறு நாளைக்குமுந்தி எருசலேம் பட்டணத்தில் பாஸ்கா பண்டிகை கொண்டாடத் திரளாய் வந்திருந்த ஜனங்கள் இயேசுநாதர் வேசரிக்குட்டியின்மேல் உட்கார்ந்து பட்டணத்துக்குக் கிட்ட வருகிறாரென்று கேள்விப்பட்டு அவருக்கு எதிர்கொண்டு போய் அவர் தேவாலயத்தில் பிரவேசிக்குந்தனையும் அவரைச் சூழ்ந்து வந்தார்கள் (அரு. 12). இப்போதோ அவர் மரணத்துக்குத் தீர்வை இடப்பட்டிருப்பதினால், அவர் தன் சிநேகிதர்களால் கைவிடப்பட்டுத் தன்னந்தனியே இருக்கிறார். "அவர்கள் அவரை விட்டகன்று வெகு தொலையில் நின்றார்கள்."

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மனிதருடைய சிநேகத்தின்மட்டிலும், துன்பதுரித வேளைகளில் அவர்களிடமிருந்து நாம் விசேஷமாய் எதிர்பார்க்கத் தகும் ஆறுதல் உதவியின்மட்டிலும் அதிக நம்பிக்கை கொள்ளாமலிருக்கக் கற்றுக்கொள்வோமாக. நாம் படும் துன்பதுரிதங்கள் சர்வேசுரனுக்கு மாத்திரம் தெரிந்தால் போதுமென்று, நமது சகோதரர்களும் சிரேஷ்டர்களுமுதலாய் நம்மீது காட்டக்கூடிய இரக்கம் ஆறுதலை மனதாரப் பரித்தியாகஞ்செய்துவிடக் கற்றுக்கொள்வோமாக. சந்நியாசத்தின் துவக்கத்திலேதானே இப்படி நடந்து வருகிறவன் பாக்கியவான்! அடிக்கடி சம்பவிக்கிறதுபோல தன்னை மதிக்கவில்லையென்றும் தன்னைச் சங்கையாய் நடப்பிக்கவில்லையென்றும் அவன் வாயினின்று முறைப்பாடு புறப்படமாட்டாது. சிலுவையில் கைநெகிழப்பட்ட இயேசுநாதரே அவனுக்கு ஆறுதல் அளித்துச் சர்வ உதவியாயிருப்பார்.

மனப்பற்றுதல்.—கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலும் பலவீனருக்குப் பலமுமாயிருக்கிற இயேசுவே, என்பேரில் இரக்கமாயிரும், எனக்கு ஆதரவாயிரும்.

பிரதிக்கினை.—நாம் எவ்வித ஆதரவுமின்றித் துயரப்படுகையில், சகலராலும், தம்மிடம் ஏராளமான நன்மை

சகாயம் அடைந்தவர்களாலும், தமது பாடுகளின் பலனைப் பெறப்போகிறவர்களாலுமுதலாய்க் கைநெகிழப்பட்ட இயேசுநாதரை நினைத்துக்கொள்வோமாக.

2-ம் பிரிவு

இயேசுநாதரைச் சிலுவையிலே அறைந்த போர்ச்சேவகர் அவருடைய வஸ்திரங்களை நாலுபங்காய்ப் பிரித்து ஆளுக்கொன்றாய் எடுத்துக்கொண்டார்கள் (அரு. 19)

தியானம்.—ஆறு நாளைக்குமுந்தி எருசலேம் பட்டணத்தார் திரளாய் இரட்சகருக்கு எதிர்கொண்டுபோய் அவரை ஆரவாரமாய்ச் சூழ்ந்து வந்ததுந்தவிரத் தங்கள் மேல் போட்டிருந்த வஸ்திரங்களை எடுத்து அவர் பட்டணத்தில் பிரவேசிக்கிறதற்களவாக அவர் வரும் பாதையில் விரித்தார்கள் (மத். 21). அந்த தேவ இரட்சகரைத்தானே இப்போது மனிதர்கள் எவ்விதம் நடத்துகிறார்கள்? அவருடைய வஸ்திரங்களை உரிந்துகொள்ளுகிறார்கள். அவர் சாகுமுன்னே, அவர் பார்த்திருக்க, அந்த வஸ்திரங்களை நாலு பங்காய்ப் பிரித்துக் கொள்ளையிட்ட பொருள்களைப்போலத் தங்களுக்குள்ளே பகிர்ந்துகொள்ளுகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் மரிக்கிறதற்குமுந்தியே தமது வஸ்திரமெல்லாம் உரிந்துகொள்ளும்படி விட்டுவிட்டார். உலகத்தார் மகா ஆவலோடும் பிரயாசையோடும், தங்கள் இரட்சணியத்துக்கே ஆபத்தோடும் தேடிச் சம்பாதிக்கிற ஆஸ்திகள் பொருட்கள் எவ்வளவு நிலையற்றவை என்றும் அழிவுக்குரியவை என்றும் இது நமக்கு நினைப்பூட்டுகின்றது. இயேசுநாதருக்கு இலௌகீக காரியத்தின்மட்டில் பற்றுதல் இல்லாததினால், அதெல்லாம் தம்மிடமிருந்து பறித்துக்கொள்வதைப் பூரண அமரிக்கையுடன் பார்த்துக்கொண்டிருக்கிறார். மிகுந்த சமாதானத்துக்கும் அமைதிக்கும் பாக்கியத்துக்கும் ஊறணியான சுவிசேஷத்துக்கடுத்த தரித்திரத்தை அநுசரிக்க ஆண்டவர் நம்மை அழைத்ததைப் பற்றி அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக.

மனப்பற்றுதல்.—ஓ! என் இயேசுவே, சகலத்தையும் நிஷ்டூரமாய் உம்மிடமிருந்து பறித்துக்கொண்டார்கள்; இலௌகீக பற்றுதலெல்லாம் என்னிடமிருந்து பறித்துப்போட எனக்குப் படிப்பித்தருளும்.

பிரதிக்கினை.—சந்நியாசிக்குரிய தரித்திரத்தின் கருத்தையும் உத்தமதனத்தையும் அதிகமதிகமாய் அடையப் பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

அப்போது சிலுவை மரம் நாட்டியிருந்த வழியில் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலையை அசைத்துத் தூஷணித்து: நீ தேவ குமாரனானால், சிலுவையில் நின்றிறங்கிவா என்கிறார்கள். அப்படியே குருப்பிரசாதிகளும் அவரைப் பரிகாசம் பண்ணினார்கள் (மத். 27)

தியானம்.—முந்தின இரண்டு பிரிவுகளில் சொல்லிக் காட்டின விபரீத நடத்தையைப்போன்ற வேறொரு விபரீதச் செயலை இவ்விடத்தில் ஆராயப்போகிறோம். ஆறு நாளைக்குமுந்தித் தங்களுக்கு அனுப்பப்பட்டவரான இயேசுநாதரை வாழ்த்தித் துதிக்கப் பிரசைகள் சலிப்பின்றிப் பெத்பாஸென்னும் ஊரிலிருந்து எருசலேம் பட்டணம் வரையிலும் வழிநெடுக: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா (நெடுஞ் சீவியம்), சர்வேசுரனுடைய நாமத்தினால் வருகிறவருக்குத் தோத்திரம். உந்நத பரமண்டலங்களில் ஓசன்னாவென்று ஆயிரம் ஆயிரம்விசை ஆர்ப்பரித்துக் கொண்டு வந்தார்கள் (மத். 21; மாற். 11). இப்போது அந்தப் பிரசைகளே அவரை மறுதலித்துத் திர்வையிட்ட பின், சிலுவையில் அறையப்பட்டுச் சாகுந்தருவாயிலிருக்கிற அவரை ஆகடியம் பண்ணிச் சபித்துத் தூஷணிக்கிறார்கள்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இன்றைக்கு ஓசன்னாவென்று மங்களங் கூறுகிறவர்கள் நாளைக்குச் சிலுவையிலறைந்து கொல்லென்று சத்தமிடுவார்கள்! இன்றைக்கு மதிக்கப்பட்டு வாழ்த்தப்படுகிறவன் நாளைக்கு

யாவராலும் நிந்திக்கப்பட்டுக் கைவிடப்படுவான். இதுவே உலக மகிமையின் வரலாறு. இப்படியிருக்க, நீ செய்யுந் தேவ தொழிலில் அல்லது யாதொரு நற்கிரிகையில் உன்னை யாவரும் ஸ்துதித்துக் கொண்டாடவும் பேரோங்கி வாழவும் வழி தேடுகிறதைவிடப் பயித்தியமானது ஒன்றுமில்லை. சர்வேசுரன் சமுகத்திலே நீ அடையக்கூடுமான பேறுபலனெல்லாம் இதினால் இழந்துபோகிறதுமல்லாமல், மனிதர் முன்பாகவும் சகல மதிப்பையும் இழந்துபோவாய்; ஏனெனில், பெருமை பாராட்டுகிறவனை விசேஷமாய் பெருமை பாராட்டுகிற சந்நியாசியை மனிதர் அருவருக்கிறார்கள்.

சம்பாஷணை.—வேதனைப்பட்டு மரிக்கும் இயேசுநாதரைவிட்டுப் பிரியாத அர்ச். மரியமதலேனாளோடு சம்பாஷணை செய்.

தபசுகாலத்தின் 6-ம் வாரம்—திங்கள்

நரகத்தை நினைத்துத் தவஞ்செய்யவேண்டிய முகாந்திரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—தவஞ்செய்யத் தனக்கு ஒரு மணிநேரம் கட்டளையிடவேணுமென்று நரகத்திலிருக்கிற ஒருவன் கேட்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்—நித்திய நரகாக்கினையை நினைத்துத் தவஞ்செய்கிறதற்கான கருத்து எனக்குண்டாக வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

தியானம்.—நான் நரகத்துக்குப் பாத்திரவானாயிருக்கலாம் என்பது தவஞ் செய்கிறதற்கான முதலாவது முகாந்திரமாகும். நான் ஒரே ஒரு சாவான பாவத்தைச் செய்திருந்தால், நரகாக்கினைக்குப் பாத்திரவானாவேனென்பது நிச்ச

யம். இந்தக் கனமான பாவத்தைக் கட்டிக்கொண்ட சமயத்திலே எனக்குச் சாவு வந்திருந்தால், நான் எவ்வளவோ நிர்ப்பாக்கியனாயிருந்திருப்பேன்! இப்போது பயங்கரமான நரக சுவாலையில் கிடந்து வேகவேண்டும்! சர்வேசுரன் என் மட்டில் இரக்கமாயிருந்து தவஞ்செய்கிறதற்கு நேரங் கட்டளையிட்டிருக்கிறார். இப்படி அவர் எந்தெந்தச் சனங்களுக்குஞ் செய்ததில்லையே (சங். 147). "சுட்டெரிக்கிற இந்த நெருப்பில் அகோர வாதனைப்படுகிறேன். ஐயோ! தவஞ்செய்ய ஒருமணி நேரமாகிலும் எனக்குக் கிடைக்காதா" என்று நரக பாதாளத்தில் நின்று அபயசத்தமிடுகிற எண்ணிக்கையில்லாத நரகவாசிகளுக்கு அவர் இப்படிச் செய்யவில்லையே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—என்னை நரக பாதாளத்தில் தள்ளுகிறதற்குப் போதுமான என் பாவத்தின் நினைவும் விசேஷமாய்ச் சர்வேசுரனுக்கு நான் துரோகம்செய்த சமயத்திலேயே, என்மட்டில் அவர் காண்பித்த அளவில்லாத இரக்கத்தின் நினைவும், இவ்வளவு நல்ல தகப்பனாருக்கு நான் செய்த அவமானத்தைப்பற்றியும் என் ஆத்துமத்துக்கு வருவித்துக்கொண்ட பொல்லாப்பைப்பற்றியும் அப்பாவங்களுக்கு எத்தனமான என் சரீரத்தின்பேரில் பழிவாங்க என்னைத் தூண்டவேண்டியதில்லையோ? நான் கடின தபசு செய்யவும் அதிலே என் கடைசி நாள்பரியந்தம் நிலைத்திருக்கவும் என்னை அந்த நினைவு தூண்டவேண்டியதில்லையோ?

சர்வேசுரன் செய்த விசேஷ உபகாரத்தினால் நீ ஞானஸ்நானத்தில் அடைந்த மாசற்றதனத்தைக் காப்பாற்றிக்கொண்டு வந்திருந்தால், அவருக்கு எவ்வளவோ நன்றியறிந்த தோத்திரஞ்செய்ய உன்பேரில் கடன் சுமந்திருக்குமென்று நீயே ஒத்துக்கொள்வாய். இந்தக் கடனை நீ எப்படித் தீர்க்கக்கூடும்? அர்ச். தெரேசம்மாளைப்போல கடமையில்லாத தவமுயற்சிகளைச்செய்து, பசாசினால் நரக பாதையிலே நிறுத்தப்பட்டிருக்கிற நிர்ப்பாக்கிய பாவிகள் மனந்திரும்புகிறதற்கான வரப்பிரசாதங்களைப் பெற பிரயாசப்படுவதினால் தீர்க்கலாம்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, இவ்வுலகத்தில் என்னை வெட்டும், சுடும், தயவின்றி நடத்தும்; நித்தியத்தில் என்னைத் தயவாய் காப்பாற்றினால் போதும்.

பிரதிக்கினை.—தபசுகாலத்தின் முதல் திங்கட்கிழமைத் தியானத்தில் சொல்லியிருந்த பற்பல தவமுயற்சிகளை அதிக சுறுசுறுப்போடு அநுசரிப்பேனாக.

2-ம் பிரிவு

தியானம்.—நரகத்துக்குப் போவோமென்னும் பயம் தபசு செய்கிறதற்கான இரண்டாம் முகாந்திரமாகும். நீங்கள் தவஞ்செய்யாவிட்டால், எல்லாரும் சிதைந்துபோவீர்களென்று இயேசுநாதர்தாமே அறிவித்திருக்கிறார் (லூக். 13). தவம் செய்யாவிட்டால், நாம் கெட்டுப்போவது நிச்சயம் என்பானேன்? ஜென்மப்பாவம் உண்டான நாள்முதல் நமது புத்தியில் இருக்கிற ஆங்காரமும் நமது மனதிலிருக்கிற ஆகாத இச்சையும் சகல அக்கிரமங்களுக்கும் பாவங்களுக்கும் இடைவிடாமல் நம்மைத் தூண்டி அவைகளில் விழும்படி நிச்சயமாய்த் தள்ளிக்கொண்டு போவதினால் நாம் இடைவிடாத ஒறுத்தல் தபசு முயற்சிகளைக்கொண்டு அணை போடாவிட்டால் கெட்டுப்போவோம். சந்நியாச சபை சரித்திரங்களில் இதன் உண்மை துலாம்பரமாய்க் காணக்கிடக்கின்றது. புத்தியின் தபசு தாழ்மையாகும்; இதை ஏற்றுக்கொள்ள மனதில்லாததினிமித்தம் எத்தனையோபேர் மனுஷர் பார்வைக்கு ஒருவேளை துரோகிகளாய்த் தோன்றாதேபோனாலும், சர்வேசுரன் கண்முன்பாக மெய்யாகவே துரோகிகளாகித் தங்கள் சபையை விட்டுவிட்டார்கள்! இருதயத் தபசு ஒறுத்தலாகும்; இதை அநுசரியாததினால், எத்தனையோபேர், அப்போஸ்தலர் சொல்லியிருக்கிறதுபோல தேவ ஞானத்தைக்கொண்டு துவக்கினபின் இலௌகீக இச்சையில் முடிவு பெற்றார்கள்! (கலா. 3) நீ தானே அறிந்திருக்கிற அத்தகைய நிர்ப்பாக்கியர்களை நினைத்துப்பார். உனக்குத்தானே சம்பவித்த ஆபத்துக்களையும் யோசித்துக்கொள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆகையால் தபசுகாலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையில்தானே நல்ல மனதோடு நாம் தபசை அநுசரிக்கத் திருச்சபையானது மகா உருக்கத்தோடு புத்தி சொல்லி வருவது நியாயந்தானே. திருச்சபையின் வற்புறுத்தலுக்கு இசைந்து நடப்போமாக. அர்ச். வாரம் ஆரம்பித்துவிட்டது; நாம் ஏற்கனவே செய்துவந்த தபமுயற்சிகளோடு தபசுகாலத்தின் இந்தக் கடைசி நாட்களில் வேறு ஏதாவதொன்றைச் சேர்த்துச் செய்யப் பிரயாசப்படுவோமாக.

மனப்பற்றுதல்.—நித்திய மரணத்திலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், சுவாமி. நாங்கள் மெய்யான தவம்புரிய உதவிசெய்யவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்; எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும், சுவாமி.

பிரதிக்கினை.—முந்தின பிரிவில் சொல்லியிருக்கிற பிரதிக்கினையை இப்போதும் செய்யவும்.

3-ம் பிரிவு

தியானம்.—என்னைப்பார்க்க அதிக புண்ணியவான்களாயிருந்தவர்கள் நரகத்திலே விழுந்தார்களென்பது தபசு செய்கிறதற்கான மூன்றாம் முகாந்திரமாகும். சம்மனசுக்கள் பரமண்டலத்திலே பாவத்தைக் கட்டிக்கொண்டு அவ்விடத்திலிருந்து நரகத்திலே தள்ளப்பட்டார்களென்று விசுவாசம் நமக்குப் படிப்பிக்கின்றது. தபசு செய்ய அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. பாவத்தைச் செய்தமாத்திரத்தில் அவர்களுக்கு நரக ஆக்கினை சம்பவித்தது! இதையொத்த பயங்கரமான சங்கதி வேறொன்றுண்டு. அப்போஸ்தலனாயிருந்த யூதாஸ் இயேசுநாதராலேயே அழைக்கப்பட்டுப் புண்ணிய சாங்கோபாங்கமுறைகளிலும் அப்போஸ்தலத்துவத்திலும் பயிற்றப்பட்டான். அவன் ஏறக்குறைய மூன்று வருஷகாலம் அவரோடு நெருங்கி உறவாடினான்; அக்காலத்திலேயே அவன் அந்தரங்கத்தில் துர்நாட்டத்துக்கு இடங்கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாய் மகா அக்கிரமமான பாவதுரோகத்துக்கு

இணங்கி அதைச் செய்துமுடித்தான்; அந்த அக்கிரமம் அவநம்பிக்கைக்கும் தற்கொலைக்கும் நரகத்துக்கும் அவனை ஆளாக்கினது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நிற்கிறதாக எண்ணுகிறவன் விழாதபடிக்குப் பார்த்துக்கொள்வானாகவென்று அப்போஸ்தலர் சொல்லியிருக்கிறார் (1 கொரி. 10); இடைவிடாத ஒறுத்தலினாலே அவன் தன் ஆங்காரத்தையும் சரீர துர்ராசாபாசங்களையும் அடக்கக்கடவானாக. அப்போஸ்தலர் சொல்வதும் இதுவே: மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணினபின், நானே கெட்டு நரகத்திலே விழாதபடிக்கு என் சரீரத்தைத் தண்டித்து அதைக் கீழ்ப்படுத்துகிறேனென்றார். நாமும் அவரைப்போல் நியாயம் கூறி, அவரைப்போல் நடந்துகொள்வோமாகில், அவரைப்போல் நாமும் இரட்சணியம் அடைவோம்.

சம்பாஷணை.—தேவ இஷ்டப்பிரசாதத்தில் உறுதிப்பட்டுப் பெரிய அர்ச்சியசிஷ்டவராயிருந்தாலும், தம்மை ஒருபோதும் நம்பாமல் வெகு கண்டிப்பாய் நடப்பித்துக்கொண்டுவந்த அர்ச். சின்னப்பரோடே சம்பாஷணை செய்து இவரிடத்தில் விளங்கின தாழ்ச்சியும் தவமும் நம்மிடத்தில் விளங்க நமக்கு அவர் ஆண்டவரிடத்தில் இரந்து மன்றாடக் கேட்போமாக.

தபசுகால்த்தின் 6-ம் வாரம்—சேவ்வாய்

இயேசுநாதர் சிலுவையில் திருவுளம்பற்றின மூன்றம் வாக்கியம்.—தமது தாயாரை நமக்கு மாதாவாகக் கட்டளையிடுகிறார்

ஆயத்தச் சிந்தனை.—தேவதாயாரும் அர்ச். அருளப்பரும் சிலுவையின் அடியில் நிற்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இயேசுநாதர்பேரிலும் தேவ தாயார்பேரிலும் உன்னிடத்தில் எப்போதும் சிநேகம் அதிகரிக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

அப்போது இயேசுநாதருடைய மாதாவும் அவள் சகோதரியாகிய கிளேயோப்பா மரியம்மாளும் மரியமதலேனம்மாளும் அவர் சிலுவையினடியில் நின்றுகொண்டிருந்தார்கள் (அரு. 19)

தியானம்.—இயேசுநாதருடைய மாதா சிலுவையினடியில் நின்றுகொண்டிருந்தாள். இதில் மகா ஆச்சரியமுள்ளதும் ஒன்றுக்கொன்று ஒவ்வாததுமான இரண்டு காரியம் காணப்படுகின்றது:—பரிசுத்த கன்னியாஸ்திரியின் மிகுந்த வியாகுலமும் புத்திக்கெட்டாத அவள் மனத்திடனும். இதை நாம் யோசித்து ஆச்சரியப்படுவோமாக. தன் திருக்குமாரன் ஒரு சாமநேரம் சிலுவையில் மூன்று ஆணிகளால் தொங்கப்பட்டிருக்கிறதை சகல தாய்மாரிலும் அதிமிக நேசமுள்ள தாயார் பார்த்துக்கொண்டு அந்தச் சிலுவையடியில்தானே மயங்கி விழுந்து உயிர்பிரியாமலிருந்ததெப்படியென்று யாராகிலும் கண்டுபிடிக்கக் கூடுமா? வாஸ்தவத்திலும் சித்திரக்காரரில் அநேகர் அவள் சிலுவை அடியில் மயங்கி விழுந்திருக்கிற பாவனையைக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இது, நாம் இந்தப் பிரிவின் ஆரம்பத்தில் எடுத்துரைத்திருக்கிற சுவிசேஷக அருளப்பருடைய வாக்கியத்துக்கு முழுதும் விரோதமானது. அப்படி அவள் சிலுவையடியில் நிற்கும்போது, தன் இருதயம் வியாகுலமென்கிற வாளால் ஊடுருவப்பட்டிருந்தாலும், உலக இரட்சணியத்துக்காகத் தன் திருக்குமாரன் தம்மைச் சிலுவையில் ஒப்புக்கொடுத்த பலியோடு இந்தப் பரிசுத்த கன்னியாஸ்திரியும் தனது பலியைச் சேர்த்து ஒப்புக்கொடுத்தாளென்று நம்பக் காரணமுண்டு.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ மாதாவிடத்திலே விளங்கின சுபாவத்துக்கு மேற்பட்ட மனத்திடன் மகா உச்சிதமான தேவ வரப்பிரசாதத்தினாலும் அற்புதத்தினாலும் விளைந்த பயன் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் தமது விசுவாசமும் ஊக்கமும் சோதிக்கப்படும்பொருட்டுத் தமக்கு முந்தி நேரிட்ட துன்ப துயரங்களையெல்லாம் சொல்லரிய அமைதியுடன் அநுப

வித்ததில் அவள் காண்பித்த பிரமாணிக்கத்துக்கும் இது பலனாயிருந்தது. சர்வேசுரன் சித்தத்துக்கு மனிதர்கள் கீழ்ப்படிந்துவருகிறதற்குத் தக்கது அவர் தமது வரப்பிரசாதத்தைக் கொடுப்பார். ஆகையால் தேவ வரப்பிரசாதத்துக்குப் பிரமாணிக்கமாய் ஒத்து நடப்போமாக. நமது சீவியகாலத்தின் சாதாரண இக்கட்டுகளில் உதாரத்தனத்தைக் காண்பிப்போமாக; அவ்விதமாயின், பெரிய பொல்லாப்புகளின் மத்தியிலும் தளர்ந்துபோகாதிருப்பதற்கு அவசியமான திடனை தேவ உதவியால் அடைந்துகொள்வோம். இதுவரையில் உனக்கு நேரிட்டதைச் சோதித்துப் பார்த்தால், இப்போது சொன்ன ஆறுதலான உண்மையில் உறுதிகொள்வாய்.

மனப்பற்றுதல்.—வேதாகமமும் திருச்சபையும் சொல்வதுபோல், பரிசுத்த கன்னிகைதான் வல்லமையுள்ள ஸ்திரீ, ஆச்சரியத்துக்குரிய மாதா, வேதசாட்சிகளுக்கு இராக்கினி என்று உணர்ந்து அவளை ஸ்துதித்துக் கொண்டாடுவோமாக.

பிரதிக்கினை.—தேவ ஊழியத்தில் பிரமாணிக்கமும் உதாரத்தனமும் காண்பிப்பது நமக்கு வழக்கமாயிருக்குமாகில், நாம் ஞான யுத்தத்தில் தோர்வைப்பட சர்வேசுரன் விடமாட்டார்.

2-ம் பிரிவு

இயேசுநாதர் தமது மாதாவையும் அருகில் நிற்கிற சிநேகிக்கப்பட்ட சீஷனையுங் கண்டு தமது மாதாவை நோக்கி: ஸ்திரீயே, இதோ, உன் மகனென்று உரைத்தார் (அரு. 19)

தியானம்.—இயேசுநாதர் மகா உக்கிரமமான கஸ்தி வேதனைகளின் மத்தியில் தம்மை மறந்துவிட்டு எவ்வளவு அமரிக்கையோடும் மன அமைதியோடும் மற்றெல்லோருக்கும் வேண்டியதைத் திட்டம்பண்ணுகிறார் என்று பார்த்து ஆச்சரியப்படுவாயாக. முதன்முதல் வியாகுலம் நிறைந்த தமது மாதாவைக் கவனிக்கிறார். அவள் உலகத்திலிருக்குமளவும் அவளை ஆதரித்து அவளுக்கு ஆறுதல் அளிக்கும்படி தம்மால் மிகவும் சிநேகிக்கப்பட்ட விரத்தனான சீஷனை

அவளுக்குப் பிள்ளையாகக் கொடுக்கிறார். ஸ்திரீயே, இதோ உன் மகனென்று சொன்னக்ஷணமே, அந்தச் சீஷன் இருதயத்திலே தாய்பேரில் பிள்ளை வைக்கக்கூடுமான மிகுந்த உருக்கமும் பட்சமும் உண்டாகச் செய்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதில் நமக்கு அரிய போதனையும் தேற்றரவும் அடங்கியிருக்கின்றன. நாம் படுகிற கஸ்தி வருத்தங்களைப் பாராமல் நம்மை நாம் மறந்துவிட்டுப் பிறருக்கு அவசரமான காரியத்தை நினைத்து விசாரிக்கும்படி இயேசுநாதர் நமக்குப் படிப்பித்துத் தமது மாதிரிகையினால் நம்மை உற்சாகப் படுத்துகிறார்; அன்றியும், பிள்ளைகள் எந்தப் பிராயமுள்ளவர்களானாலும் எவ்வித வருத்தங்களை அநுபவித்தாலும் தங்களைப் பெற்ற தாய்மாருக்குச் செய்யவேண்டியதேதென்று அவர்களுக்கு மாதிரிகை காண்பிக்கிறார்.

மனப்பற்றுதல்.—பரித்தியாகப் பிரீதியையும் சுயவெறுப்பின்பேரில் பற்றுதலையும் கேட்பாயாக.

பிரதிக்கினை.—நமது சிரேஷ்டர்களுக்கு நாம் கீழ்ப்படிந்து ஒழுங்கெல்லாத்தையும் சரியாய் அநுசரித்து அவர்கள் கருத்துக்கொத்தபிரகாரம் சுறுசுறுப்பாய் நடந்து மகா பரிசுத்த கன்னியாஸ்திரியின் இருதயத்துக்கு ஆறுதலும் சந்தோஷமும் வருவிப்போமாக.

3-ம் பிரிவு

பின்னும் சீஷனை நோக்கி, இதோ உன் மாதாவென்றார் (அரு. 19)

தியானம்.—இயேசுநாதர் வியாகுலம் நிறைந்த தமது தாயார் காரியத்தை விசாரித்தபின், தம்மால் மிகவும் நேசிக்கப்பட்ட சீஷன்பேரில் கிரிசனையாயிருக்கிறார். தாம் மரிப்பதற்குமுன்னே மகா பரிசுத்த கன்னியாஸ்திரியான தமது மாதாவை அவருக்குத் தாயாராகக் கொடுத்துத் தமது பிரிய சீஷனுக்குத் தமது சிநேகத்தின் அத்தாட்சியைக் காண்பிக்கச் சித்தமானார். ஆகையால் மரணசமயத்தில் பஞ்சடைந்திருக்கிற தமது திருக் கண்களால் அருளப்பரை

நோக்கி: இதோ உன் மாதாவென்றார். இந்த வாக்கியம் நம்மெல்லோருக்கும் சொல்லரிய ஆறுதல் நிறைந்த வாக்கியமாமே; ஏனெனில் மகாத்துமாக்களான வேதபாரகரெல்லாரும் ஒருவாய்ப்படச் சொல்லியிருக்கிறது போல, அந்தச் சமயத்தில் இரட்சகருடைய கருத்திலே சீஷனான அருளப்பர் சகல விசுவாசிகளுக்கும் நம்மில் ஒவ்வொருவருக்கும் குறிப்பாயிருந்தார். ஆதலால் சர்வேசுரன் மெய்யான தகப்பனாய் நம்மைச் சிநேகிக்கிறதுபோல பரிசுத்த மரியாயியும் மெய்யான தாயாய் நம்மைச் சிநேகிக்கத்தக்கதாக அக்ஷணமுதற்கொண்டு அவளுடைய இருதயத்தை விஸ்தரித்துச் சகலமனிதர்களை நேசிக்கிறதற்கான மிகவும் உருக்கமுள்ள பட்சத்தினால் அதை நிரப்பினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆகையால் நமது தாயாராகிய பரிசுத்த கன்னியாஸ்திரியை அதிக மதிகமாய்ச் சிநேகித்துத் தோத்தரிக்கவும் அவள்பேரில் யாவருக்கும் பத்தியுண்டாகவும் பிரயாசப்படுவோமாக.

சம்பாஷணை.—மகா நேசத்துக்குரிய நமது தேவதாயாரோடே சம்பாஷணை செய்து அவள் நமக்குச் செய்த நன்மைக்காகவும் நமக்கு வந்த ஆபத்துகளில் நின்று நம்மைத் தற்காத்து நமக்கு ஏராளமான வரங்களை அடைந்துகொடுத்து விசேஷமாய் பரிசுத்தமான நமது அந்தஸ்தில் நாம் நிலைத்திருக்கக் கிருபை செய்ததற்காகவும் அவளுக்கு நாம் நன்றியறிந்த தோத்திரம் சொல்லுவோமாக. அவளுக்கு நம்மை மீண்டும் ஒப்புக்கொடுத்துத் தமது பிள்ளையாக நம்மை ஏற்றுக்கொள்ள மன்றாடுவோமாக.

தபசுகாலத்தின் 6-ம் வாரம்—புதன்

இயேசுநாதர் சிலுவையில் திருவுளம்பற்றின நாலாம், ஐந்தாம் வாக்கியங்கள்

ஆயத்தச் சிந்தனை.—மத்தியான வேளையில் பூமியெங்கும் இருள் அடைந்திருக்க, இயேசுநாதர் சிலுவையில்

அறையப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக் கொள்வேனாக.

தியானச் செபம்.—மிகுந்த சிநேகமும் துக்க மனஸ்தாபமும் என்னிடத்தில் உண்டாகக் கேட்பேனாக.

முதல் பிரிவு

ஏறக்குறைய பகல் ஆறும் மணி (மத்தியானம்) முதல் ஒன்பதாம் மணி (மூன்று மணி) வரைக்கும் பூமண்டலத்திலெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று; சூரியனும் மங்கிப் போயிருந்தது (மத். 27; லூக். 23)

தியானம்.—இயேசுநாதர் சிலுவையில் அறையுண்டிருந்தபோது, ஒரு சாமமட்டும் அற்புதமாய்க் காணப்பட்ட அந்தகாரமானது இயற்கை விதியால் ஏற்பட்டதென்று சொல்ல எவ்வித காரணமுமில்லை; ஏனென்றால் யூதர்கள் பாஸ்காப் பண்டிகை எப்போதும் பவுரணை நாளில் கொண்டாடுகிறது வழக்கமானதினால் சூரிய கிராணத்துக்கு இடமில்லை. ஆகையால் இது எல்லார் கண்ணுக்கும் காணப்பட்ட நவமான புதுமையாயிருந்தது. ஆகிலும் யூதர்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மெசியா என்பவருடைய மரணத்துக்குமுன்னும் மரணத்தின்போதும் மரணத்துக்குப் பின்னும் நடந்த மற்றநேக புதுமைகளெல்லாம் அவர் வந்ததற்கு அத்தாட்சியாமென்று முன்னமே தீர்க்கதரிசிகளால் எழுதி அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவைகளையெல்லாம் அலட்சியம் செய்ததுபோலவே இந்தப் புதுமையையும் அலட்சியம் செய்துவிட்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். பெரிய கிரகோரி பாபபானவர் இதைக்குறித்துச் செய்த பிரசங்கத்திலே மனுஷருடைய குருட்டாட்டம் எவ்வளவு தூரம் போகக்கூடுமென்று காண்பித்திருக்கிறார். படைக்கப்பட்ட வஸ்துக்களெல்லாம் தங்களைப் படைத்தவர் உலகத்தில் வந்ததைத் தங்கள் இயற்கைக்குகந்த வண்ணம் அறிவித்திருக்கின்றன: வானங்கள் நவமான நட்சத்-

திரம் தோன்றச் செய்தன; கடலானது அவர் காலின் கீழ்ப் பூமியைப்போல் கெட்டியாய் நின்றது; அவர் மரித்தபோது, சூரியன் மங்கி அந்தகாரமுண்டாயிற்று; பின்னும் பூமியதிரக் கற்பாறைகள் பிளந்துபோகக் கல்லறைகளுந் திறக்கப்பட்டன; அதில் நின்று மரித்த அநேக அர்ச்சியசிஷ்டவர்கள் சரீரத்தோடு உயிர்த்தெழுந்து வந்தார்கள். ஆகிலுங் கற்பாறையிலும் கடின இருதயமுள்ள யூதர்கள் தங்கள் குருட்டாட்டத்தில் பிடிவாதமாயிருக்கிறார்களென்றார். ஐயோ! கிறீஸ்துவர்கள்முதலாய்த் தங்கள் பாவத்தினாலே கன்னெஞ்சராய் யூதர்களைப்போல குருட்டாட்டத்தில் அமிழ்ந்தி அவர்களைப்போல் மனந்திரும்பாமலிருக்கிறதைப் பார்த்து வருகிறோம்.

மனப்பற்றுதல்.—அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதுபோல, சர்வேசுரன் தமது பிரிய குமாரனுடைய இராச்சியத்தில் நம்மைச் சேர்த்துக்கொள்ளும்படி உலகத்தின் மிகுந்த அந்தகாரத்தில் நின்று நம்மை மீட்டுக்கொண்டதற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, நமதுபேரில் சற்றாகிலும் நம்பிக்கை வைக்காதபடிக்குக் கேட்போமாக (கொலோ. 1).

பிரதிக்கினை.—யூதர்களும் அந்தகாரத்திலும் மரணநிழலிலும் இன்னும் அமர்ந்திருக்கிற அநேக ஜனங்களும் மனந்திரும்பும்படி அடிக்கடி செபம் பண்ணுவோமாக (சங். 106).

2-ம் பிரிவு

ஏறக்குறைய ஒன்பதாம் மணி நேரத்தில் சேசுநாதர் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு ஏலி ஏலி லாமா சபக்தானி, அதாவது: என் சர்வேசுரா, என் சர்வேசுரா, ஏன் என்னைக் கைவிட்டீரென்றார் (மத். 27).

தியானம்.—சேசுநாதர் பிறக்கத் தொளாயிரம் வருஷத்துக்கு முன்னே தாவீது இராசா தீர்க்கதரிசனமாக இயேசுநாதர் படும் பாடுகளை 21-ம் சங்கீதத்தில் விவரித்து

எழுதினபோது, அதின் முதல் வசனத்திலே மேற்படி வார்த்தைகளை எழுதிவைத்தார். இயேசுநாதரும் மரிக்குஞ் சமயத்தில் பேரொலியாகக் கூப்பிட்டு அவ்வார்த்தைகளையே சொல்லுகிறதினாலே தீர்க்கதரிசிகளால் அறிவிக்கப்பட்ட மெய்யான மெசியா தாமேயென்று யூதர்களுக்கு இன்னும் ஒரு தடவை ஒப்பிக்கவும் தேவ உதவி அவரது அகோர வாதனைகளைச் சற்றேனும் குறைக்கவில்லை யென்றும் நமக்குத் தெரிவிக்கச் சித்தமானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—என் சர்வேசுரா, என் சர்வேசுரா, ஏன் என்னைக் கைவிட்டீர்: ஆறுதலற்றிருந்தாலும் தேவசித்தத்துக்கு முழுவதும் அமைந்த திவ்விய குமாரன் உரைத்த இவ்வார்த்தைகள், நாம் இயேசுநாதரைப் பிரமாணிக்கமாய்ப் பின்பற்றவேணுமாகில், அவரது மகிமைக்காக நாம் அநுபவிக்கிற கடூர வாதனைகளில் முதலாய் அவருடைய அருளின் வெளியரங்க ஆறுதலின்றி அவைகளை அநுபவிக்க ஆயத்தமாயிருக்கவேணும் என்று நமக்குக் கற்பிக்கின்றன. மேலும் இக்கட்டான வேளையிலே சர்வேசுரன் சித்தத்துக்கு முழுதும் கீழ்ப்படிந்து அவரை நோக்கித் துக்கத்தினாலே ஐயோவென்று கூப்பிட்டாலும், குற்றமல்லவென்று அவ்வாக்கியத்தைக்கொண்டு அறிகிறோம்; இது மிகவும் ஆறுதலுக்குரியதன்றோ?

மனப்பற்றுதல்.—என் இயேசுவே, உம்மைப்பற்றி நான் நல்லமனதோடே வெகுவாய் வருத்தப்படவும் வெளியரங்க ஆறுதலில்லாமல் வருத்தம் அநுபவிக்கவும் படிப்பித்தருளும்.

பிரதிக்கினை.—வருத்தப்படுகிறவர்கள்பேரில் இரக்கமாயிருந்து அவர்கள் வாயில்நின்று புறப்படும் முறைப்பாடுகளைப்பற்றிக் கண்டியாமல் அவர்களுக்குத் திடஞ்சொல்லவேணும். தேவ ஆறுதல் மனுஷ ஆறுதல் யாதொன்றுமில்லாமல் மரண அவஸ்தைப்பட்ட இயேசுநாதரை நினைத்து அவ்வசரமான வேளையிலே தன்னைத்தானே திடப்படுத்திக்கொள்ளவேணும்.

3-ம் பிரிவு

இயேசுநாதர் எல்லாம் நிறைவேறிற்றென்று அறிந்து இன்னமும் ஒரு வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாகத் தாகமாயிருக்கிறேனென்றார் (அரு. 11).

தியானம்.—மெசியாவைக் குறித்து வேதாகமத்தில் சொல்லப்பட்டதெல்லாம் ஓரெழுத்தாகிலும் தவறாமல் தம்மிடத்தில் நிறைவேறுமென்று முன்னமே யூதர்களுக்கு அறிவித்திருந்தார். ஆகையால் எனக்குத் தாகமாயிருக்கும் வேளையிலே புளிப்பான காடியைக் குடிக்கக் கொடுத்தார்களென்று தாவீது இராசா 68-ம் சங்கீதத்தில் எழுதியிருந்த தீர்க்கதரிசன வாக்கியம் நிறைவேறத்தக்கதாக, இயேசுநாதர் அக்காலத்தின் வழக்கத்தின்படி கொலையுண்டு மரிக்கிறவர்கள் தாகமாயிருக்கும் வேளையிலே சேவகர்கள் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுப்பதுபோல தமக்குங் கொடுப்பார்களென்று அறிந்து தாகமாயிருக்கிறேனென்றார். அப்படியே ஒரு சேவகன் ஓடிப்போய் ஒரு கடற்காளானைக் கொண்டுவந்து அங்கே வைத்திருந்த காடியில் தோய்த்து அதை ஒரு கம்பில் கட்டி இயேசுநாதருக்குக் குடிக்கக் கொடுத்தான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் தம்மைக் குறித்துத் தீர்க்கதரிசிகள் எழுதிவைத்ததையெல்லாம் கடைசி பரியந்தம் பிரமாணிக்கமாய் நிறைவேற்றுவதில் வெகு கண்டிப்புள்ளவராயிருந்ததை யோசித்துப்பார்த்தபின், உன் அந்தஸ்தை அல்லது உன் அலுவலைச் சேர்ந்த சில கடமைகளை நிறைவேற்ற நீ அசட்டையாயிருக்கிறதைப்பற்றியும் சில ஒழுங்குகள் சொற்பமானவைகளென்று போக்குச்சொல்லி அநேகந்தரம் அவைகளை மீறி நடக்கிறதைப் பற்றியும் நீ நினைக்கவேண்டியதென்ன?

சம்பாஷணை.—சிலுவையில் அறையப்பட்டு மகா உதாரத்தோடும் நிலைமையோடுங் கீழ்ப்படிதலோடும் பற்பலவிதமாய் வேதனைகளை அநுபவித்து அர்ச். இராயப்பர்

சொன்னபிரகாரம் நீ அவரைப் பின்செல்லும்படிக்கு உனக்கு மாதிரிகையான இயேசுநாதரோடே சம்பாஷணை செய்வாயாக (1 இராய. 2).

தபசுகாலத்தின் 6-ம் வாரம்—வியாழன்

இயேசுநாதர் சிலுவையில் திருவுளம்பற்றின ஆறும் வாக்கியம். (*)

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் சிலுவையிலிருந்து எல்லாம் நிறைவேறிற்றென்று திருவுளம்பற்றுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—நீயும் சாகிற சமயத்திலே ஆறுதலோடே இந்த வாக்கியத்தைச் சொல்ல வரங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் அந்தக் காடியை உட்கொண்டபின்பு: எல்லாம் நிறைவேறினதென்றார் (அருள. 19).

தியானம்.—இயேசுநாதர் தாம் மரிப்பதற்குக் கிட்டின தறுவாயிலே "எனக்குக் கற்பிக்கப்பட்ட அலுவலாகிய என் பிதாவின் மகிமைக்குப் பரிகாரம் பண்ணுவதைப் பற்றியும் மனிதர்கள் இரட்சணியம் அடைவதைப்பற்றியும் நான் செய்யவேண்டிய காரியங்களும் படவேண்டிய பிரயாசம் நிந்தையவமானம் வேதனைகளும் நிறைவேறின" என்கிற ஆறுதலான வாக்கியத்தைத் தம்மைக் குறித்து உலகமறிய எவ்வளவோ உண்மையோடு சொல்லுகிறதையும், "பிதாவே, எனக்கு நீர் கற்பித்தருளிய பணிவிடையைச் செய்து முடித்தேன்; இப்போது உம்மண்டையில் வரு

(*) இன்று பெரியவியாழக்கிழமை, திவ்விய நற்கருணையை உண்டுபண்ணின நாள்; இந்தத் தியானம், திருப்பாடுகளின் தொடர்பை விட்டு விடாமல், இத்தினத்தின் சம்பவத்தை ஞாபகப்படுத்துவதற்கேற்றது.

கிறேன்; உம்மிடத்தில் என்னை மகிமைப்படுத்தியருளும்" என்று மெத்த நியாயத்தோடு திருவுளம்பற்றுகிறதையும் யோசித்துப்பார் (அருள. 17).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் மட்டிலும் மனிதர் மட்டிலும் தன் அந்தஸ்தின் மட்டிலும் தான் நிறைவேற்றவேண்டியதெல்லாம் சரியாய் நிறைவேற்றினதாக அவஸ்தை சமயத்தில் தன் மனச்சாட்சியைக்கொண்டு அறிந்து, "நான் சந்நியாசத்தில் பிரவேசித்த நாள் முதல் என் கிரிகைகளெல்லாவற்றிலும் தேவ மகிமையையும் மனிதர் ஆத்தும இரட்சணியத்தையும் என் பரிசுத்ததனத்தையும் எப்போதும் உத்தேசித்து என் சபை ஒழுங்குகளையெல்லாம் அநுசரிக்கவும் என் சிரேஷ்டருக்குச் சந்தோஷம் வருவிக்கவும் என் சகோதரருக்கு நன்மாதிரிகையைக் கொடுக்கவும் வருந்தினேன்" என்று சொல்லக்கூடுமான சந்நியாசி மிகவும் பாக்கியவான்! அதற்காக நான் துன்பதுரிதம் நிந்தை அவமானம் அநுபவிக்கவேண்டியிருந்தது; ஆனால் எல்லாம் முடிந்தது! இதினால் நான் பாக்கியவானாய் நம்பிக்கையோடும் சந்தோஷத்தோடும் மரிக்கிறேனென்று அவன் சொல்லலாம். நீ அவஸ்தையாயிருக்கும்போது இப்படிச் சொல்லக்கூடுமோ? உன் சீவியத்தைக் கேள்; அது உனக்குப்பதில் சொல்லும். ஏனென்றால் வழக்கமாய் மரணம் சீவியத்தின் எதிரொலியேயாகும்.

மனப்பற்றுதல்.—நீ பரிசுத்த சந்நியாசியாய் நடக்கிறதற்கு மெய்யான ஆசையும் நல்ல மனதும் உன்னிடத்தில் வளரும்படி இயேசுநாதரைக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—என் நடக்கையில் கிரமமற்றதைச் சீர்படுத்துவதினால் இந்த ஆசையைப் பலனுள்ளதாக்கப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் எல்லாம் நிறைவேறினதென்றார்.

தியானம்.—இதோ, உலகத்தைவிட்டு என் பிதாவின் அண்டைக்குப் போகிறேனென்று சற்று நேரத்துக்கு முன்னே இயேசுநாதர் திருவாய்மலர்ந்தருளிய வாக்கியத்

தினாலே நாம் இப்போது தியானிக்கிற வாக்கியத்தின் கருத்து அதிக தெளிவாகும். எப்படியென்றால் எல்லாம் நிறைவேறினதினாலே, நான் இன்னமும் உலகத்திலிருக்கிறது நியாயமல்ல; கஸ்திப்படாமல் உலகத்தைவிட்டுப் போகிறேனென்று சொன்னாற்போலாயிற்று. ஆனால் இயேசுநாதருடைய மரணத்தால் அவர் உலகத்திலிருக்கிற மனுஷர்களை விட்டுப் பிரிந்துபோகவேண்டியதினாலேயும் தகப்பன் தன் பிள்ளைகளைச் சிநேகிக்கிறதைப்பார்க்க அவர் மனுஷர்களை அதிகமாய்ச் சிநேகித்து வந்ததினாலேயும் கஸ்தியில்லாமல் உலகத்தைவிட்டுப் பிரியக்கூடுமானதெப்படி? இயேசுநாதர் மனிதர்களுக்காக மரித்தாலும் உலக முடியுந்தனையும் அவர்களோடிருக்க ஆன வழிதேடிக் கொண்டதினாலே கஸ்தியில்லாமல் உலகத்தைவிட்டுப் பிரியலாம். அந்த வழி ஏதென்பாயோ? அவர் மரணமடைகிறதற்கு முந்தின நாள் கடைசி இராப்போசனத்திலே வாக்குக் கெட்டாத தமது சிநேகத்தினாலே அற்புத விதமாய் ஸ்தாபித்த தேவநற்கருணையே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பெரிய வியாழக்கிழமையாகிற இன்றையத்தினம் ஆச்சரியத்திற்குரிய தேவநற்கருணை உண்டாக்கின நாள். குருக்கள் இன்றையத்தினம் செய்கிற செபத்தினாலும் பூசையில் வாசிக்கும் சுவிசேஷத்தினாலும் மன்றாட்டுகளினாலும் விசேஷமாய் அந்தந்த மேற்றிராணிமார் மாத்திரம் தங்கள் பிரதான கோவில்களிலேயும் அந்தந்த மடாதிபதிகள் அல்லது சிரேஷ்டர்கள் மாத்திரம் தங்கள் மடத்துக் கோவில்களிலேயும் பூசை செய்ய மற்றக் குருக்கள் பூசைசெய்யாமல் இயேசுநாதர் கையால் அப்போஸ்தலர்கள் நன்மை வாங்கினதின் பாவனையாக அந்தப் பூசையில்தானே நன்மை வாங்கும்படி ஏற்படுத்தியிருக்கிற ஒழுங்கினால் திருச்சபை இதை நமக்கு நினைப்பூட்டுகின்றது.

மனப்பற்றுதல்.—இந்தப் பெரிய திருநாளை தகுந்த விதமாய்க் கொண்டாடவும் மகா பத்தி விநயத்தோடே இன்றைக்கு நன்மை வாங்கவும் உன்னிடத்தில் மிகுந்த ஆசையை எழுப்புவாயாக.

பிரதிக்கினை.—அந்நாளில் நிறைவேறின மகத்தான பரம இரகசியங்களை இன்றுதினம் அடிக்கடி நினைத்துக் கொள்வேனாக.

3-ம் பிரிவு

எல்லாம் நிறைவேறிற்று!

தியானம்.—இந்த வார்த்தையை இயேசுநாதர் சொல்லுகையில் முந்தின இராத்திரி தமது அப்போஸ்தலர்களோடே கடைசிப் பாஸ்காவைக் கொண்டாடி, தாம் நிறைவேற்றின மகத்தான காரியத்தை விசேஷமாய் நினைத்துச் சொன்னாரென்பதற்குச் சந்தேகமில்லை. பழைய ஏற்பாட்டில் அடையாளமாய்க் குறிக்கப்பட்ட பலிகளுக்கும், பாஸ்காப் பண்டிகையின் ஆட்டுக்குட்டிப் பலிக்கும் பதிலாகப் புதிய ஏற்பாட்டின் பலியை (திவ்விய பூசையை) உண்டு பண்ணினார்; இதில் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார். இந்தப்பலி உலகில் மனிதர் இருக்கும் பரியந்தம் நிலைத்திருக்கும். இதைப்பற்றியல்லவோ, இயேசுநாதர் "இந்தப் பாஸ்காவை உங்களோடுகூட நான் கொண்டாட மெத்த ஆசையாயிருந்தேன்" என்று தமது அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தினார் (லூக். 22).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆகையால், இந்த நாள் கிறீஸ்துவப் பாஸ்காப்பண்டிகை ஏற்பட்ட வருஷாந்தர நாள்; பாஸ்காவைச் சகல கிறீஸ்துவர்களும் கடன் திருநாளாக அநுசரிக்கவேண்டியதென்று திருச்சபை கற்பித்திருக்கின்றது. அப்போஸ்தலர்கள் கொண்டாடின நாளில்தானே நாம் இதைக் கொண்டாடுவதினால் வெகு சந்தோஷம் அடைகிறதுமல்லாமல் அதற்குத் தகுந்த கருத்தோடிருப்பதற்கான வழிவகைகளைத் தேடிக் கொள்வதில் அலட்சியமாயிருக்கக் கூடாது. மிகுந்த விசுவாசம், நம்பிக்கை, தாழ்ச்சி, ஆசை முயற்சிகளினால் இப்போதே நமது இருதயத்தை ஆயத்தப்படுத்துவோமாக.

சம்பாஷணை.—நமது நேச இரட்சகரோடே சம்பாஷணை செய்வோமாக.

தபசுகாலத்தின் 6-ம் வாரம்—வெள்ளி

இயேசுநாதர் சிலுவையில் திருவுளம்பற்றின கடைசி வாக்கியமும் திரு மரணமும்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறதாகவும், என் பிதாவே, உமது கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேனென்று திருவுளம்பற்றின கடைசி வாக்கியத்தைக் கேட்கிறதாகவும் உரூபிகரித்துக்கொள்வேன். (லூக். 23).

தியானச் சேபம்.—பரிசுத்தமும் அமரிக்கையுமான மரணம் கிடைக்கவேணுமென்று கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் பேரோலியாய்க் கூப்பிட்டு: என் பிதாவே, உமது கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேனென்றார் (லூக். 23)

தியானம்.—மரிக்கப்போகிற இயேசுநாதர் வசனித்த இந்தக் கடைசி வார்த்தைகளை ஒவ்வொன்றாய்க் கவனித்துத் தியானிப்பாயாக. உன் மரணப் படுக்கையில் குருவானவர் உனக்குச் சொல்லப்போகிற வார்த்தைகளும் இவையே. என் பிதாவேயென்ற இந்தச் சொல் எவ்வளவு மதுரமுள்ளது! சாவின் கசப்பான வருத்தத்தைத் தணிக்கவும் கடைசியாய் நீ மரண அவஸ்தைப்படும்போது உனக்கு உறுதியைக் கொடுக்கவும் இந்தச் சொல் எவ்வளவு தகுதியுள்ளதாயிருக்கும்! உமது கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேனென்ற இந்த வசனத்திலுள்ள ஒப்புக்கொடுக்கிறேன் என்கிற வார்த்தை கிரேக்குப் பாஷையில் உமது கையில் அடைமானமாக வைக்கிறேன், என்றிருக்கிறது. அதாவது என் ஆத்துமம் உம்மிடத்தில் நின்று வந்ததினாலே, அதைத் திரும்பவும் உமது கரங்களில்தானே ஒப்புக்கொடுக்கிறேன்; அது பூலோகத்திலே உம்மை மகிமைப்

படுத்தும்படி சிலகாலத்துக்குச் சாவுக்குரிய இந்தச் சரீரத்தோடே அதை ஒன்றித்து என் கையில் கொடுத்தீரே; இப்போது சாவானது அதை என் சரீரத்தைவிட்டுப் பிரிக்கப்போகிறதினாலே, இனிமேல் சரீரத்தோடே நான் எழுந்திருக்குந்தனையும் பட்சம் நிறைந்த உம்மிடத்தில் அடைமானமாகக் கொடுக்கிறேனென்று அர்த்தமாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அவஸ்தைப்படுகிற இயேசுநாதர் திருவுளம்பற்றின பத்தி நிறைந்த இந்த வாக்கியம் உன் இருதயத்தில் பதிந்து, சாகிற சமயத்திலே உன் நாவில் சுபாவமாய் வரும்படி, அடிக்கடி விசேஷமாய்ச் சாவுக்கு அடையாளமாயிருக்கிற நித்திரைக்கு முன்னே அதைச் சொல்லவேணும். மரண அவஸ்தைப்பட்ட இயேசுநாதர் தமது பிதாவுக்குத் தம்முடைய ஆத்துமத்தை ஒப்புக்கொடுத்தபோது, சகல மனுஷருடைய ஆத்துமங்களையும் அவருக்குக் காண்பித்து ஒப்புக்கொடுத்தாரென்று அர்ச். அத்தனாசியார் எழுதிவைத்திருக்கிறார். இத்திவ்விய கர்த்தரோடு நீ நினைவினாலும் பற்றுதலினாலும் ஒன்றித்து அவ்வாக்கியத்தை உச்சரிப்பாயாக.

மனப்பற்றுதல்.—நீ சாகிற சமயத்தில் உன் ஆத்துமத்தை ஆண்டவருடைய திருக்கரங்களில் ஒப்புக்கொடுக்க வேணுமென்று ஆசிக்குமாப்போலே இப்போதுதானே இயேசுநாதரோடே ஒன்றித்து அதை அவருக்கு ஒப்புக்கொடுப்பாயாக.

பிரதிக்கினை.—நான் இராத்திரிதோறும் நித்திரை செய்கிறதற்குமுன்னே, இப்படி ஒப்புக்கொடுக்கப் பழக்கஞ்செய்வேனாக.

2-ம் பிரிவு

இந்த வாக்கியத்தைச் சொன்னபின், இயேசுநாதர் தலைதனிந்து உயிர்விட்டார் (லூக். 23).

தியானம்.—நமது நேசமுள்ள இரட்சகராகிய இயேசுநாதர் பூங்காவனத்தில் மரண அவஸ்தைப்பட்டதுபோல,

இவ்விடத்தில் அவதிப்படாமல் தமக்குச் சித்தமான வேளையிலே, இம்மேரையாய் மரணமாகிறார்!

யாவராலும் கைவிடப்பட்டு அவமானமும் அபதூறும் அநுபவித்து மரிக்கிறார். ஆனால் உடனே சகலமும் அவருடைய மாசில்லாததனத்தையும் மகிமையையும் தெய்வீகத்தையும் பிரசித்தப்படுத்துகின்றது. அவ்விடத்திலிருந்த சேர்வைக்காரன் ஆண்டவர் இப்படி மனம்பொருந்தி மரணம் அடைந்த புதுமையைக் கண்டு ஆச்சரியப்பட்டு சர்வேசுரனை ஸ்துதித்து மெய்யாகவே இந்த மனிதன் நீதிமானும் தேவகுமாரனுமாயிருந்தாரென்று வெளியரங்கமாய்ச் சொல்லுகிறான். பின்னும் தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாய்க் கிழிந்துபோகப் பூமி அதிரக் கற்பாறைகள் பிளந்துபோகக் கல்லறைகள் திறக்கப்பட இவைகளைக் கண்ட சனங்கள் பயம் அடைந்து தங்கள் மார்பில் அறைந்துகொண்டு இவர் மெய்யாகவே தேவ குமாரன்தானென்றார்கள் (மத். 27; லூக். 23).

இயேசுநாதர் மரித்துவிட்டார்! ஆனால் சாவானது வெல்லப்பட்டு நித்திய சீவியத்தின் வாசல்கள் நமக்குத் திறக்கப்பட்டிருக்கின்றன. இயேசுநாதர் மரித்துவிட்டார்! ஆனால் ஈட்டியினால் திறக்கப்பட்ட அவருடைய திரு இருதயத்தில் நின்று ஓடிவந்த இரத்தத்தோடும் தண்ணீரோடும் இயேசுநாதருடைய பத்தினியான திருச்சபையின் உயிருள்ள தேவதிரவிய அநுமானங்கள் புறப்பட்டு வந்து இச்சபையைச் செழிப்பித்து இதின் வற்றாத செழிப்பினாலே உலக முடியுந்தனையும் எத்திசையிலும் எண்ணிக்கையில்லாத புத்திர சந்தானங்களைப் பிறப்பித்துக்கொண்டுவருகின்றன. இயேசுநாதர் மரித்துவிட்டார்! அவருடைய திருச்சரீரம் சர்வாங்கமும் காயமாய்ச் சிலுவையில் இன்னமும் அறைபட்டிருக்கின்றது; ஆனால் அவருடைய திரு ஆத்துமம் பாதாளங்களிலிறங்கி அங்கேயிருந்தவர்களால் ஆராதிக்கப்பட்டு வாக்குக்கெட்டாத சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தியிருக்கின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கதும் மனப்பற்றுதலும்.—எனக்காக இத்தனை பாடுகளெல்லாம் அநுபவித்த என் இயேசுவின் திரு ஆத்துமமே, திருச்சரீரமே, என் ஆராதனையையும் என் சிநேகத்தையும் என் நன்றியறிதலையும் உமக்குக் காண்பிக்கிறதற்காக நான் என்ன செய்யப்போகிறேன்? என்னாற் செய்யக்கூடுமானதென்ன? உம்மை ஆராதித்து ஸ்துதிக்கிறேன்; உமது பாடுகளெல்லாம் முடிந்ததினாலே, உம்மை வாழ்த்திக் கொண்டாடுகிறேன். உயிரோடிருக்கிறவர்கள் தங்களைப்பற்றிச் சீவியாமல் இயேசுநாதரைப்பற்றிச் சீவிக்கும்படி அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்று அர்ச். சின்னப்பர் வசனித்ததை எப்போதும் நினைத்துக்கொண்டு, என் இயேசுவே, எனக்கும் பூலோகத்துக்கும் என்னிடத்தில் உமக்குப் பிரியமில்லாததெல்லாவற்றிற்கும் அதிகமதிகமாய் நான் சாக வருந்துவேனாக.

பிரதிக்கினை.—முந்தின இராத்திரி காலத்தைச் செபத்தில் செலவழிக்கக்கூடாமலிருந்தால், பெரிய வெள்ளிக்கிழமையாகிற இன்று முழுதும் தியானத்திலும் துக்க துயரத்திலும் தவத்திலும் செலவழிப்பேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் தலைகுனிந்து உயிர்விட்டார் (அரு. 19).

தியானம்.—இந்த மூன்றாம் பிரிவிலே நமது நேச இரட்சகருடைய உயிர் பிரிந்திருந்த சரீரத்தை நாம் பத்தியோடே பார்த்துத் தியானிக்கிறதே நமக்குப் போதும். பாவிகள்பேரில் வைத்த சிநேகத்தினாலும் இரக்கத்தினாலும் இவ்வளவு கண்ணீர் சிந்தின அவரது திருக்கண்களையும், சர்வேசுரனை மகிமைப்படுத்தவும் மனிதர்களுக்கு ஞானப்போதகம் சொல்லி அவர்களுக்கு ஆறுதல் வருவிக்கவும்மாத்திரம் வாய் மலர்ந்துபேசின அவர் திருநாவையும், அவர்களை ஆற்றவும் ஆசீர்வதிக்கவும் மாத்திரம் நீட்டி இப்போது ஆணிகளால் காயப்பட்டிருக்கிற அவர் திருக்கரங்களையும், எப்பொழுதும் கீழ்ப்படிதலினால் மாத்திரம் அசைவு கொண்டு சிதறிப்போன ஆடுகளை இடைவிடாமல் தேடித்

திரிந்து ஊடுருவப்பட்டிருக்கிற அவர் திருப்பாதங்களையும் நோக்கிப் பார்த்துத் தியானிப்போமாக. தேவமகிமைப் பிரதாபத்துக்காகவும் மனிதருடைய ஆத்தும இரட்சணியத்துக்காகவும் சிலுவையில் பலியிடப்பட்ட இச்சரீரத்தின் அவயவங்களும் பஞ்சேந்திரியங்களும் பரமண்டலத்திலே எவ்வளவோ ஆனந்த மகிமையினாலும் பேரின்ப பாக்கியத்தினாலும் பூரிக்கப்பட்டிருக்கும்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—*தன் பஞ்சேந்திரியங்களையும் அவயவங்களையும் எப்படி நடப்பிக்கவேணுமென்று அடிக்கடி தனி ஆத்தும சோதனை செய்துகொண்டு வரவேணும்.*

சம்பாஷணை.—*கிறீஸ்துவினுடைய ஆத்துமமானதே, என்னை அர்ச்சியசிஷ்டவனாகச் செய்தருளும். கிறீஸ்துவினுடைய திருச்சரீரமே, என்னை இரட்சித்துக்கொள்ளுமென்கிற செபத்தை ஒவ்வொரு சொல்லாய் உச்சரித்துத் தியானிக்கவும்.*

தபசுகாலத்தின் 6-ம் வாரம்—சனி

இயேசுநாதருடைய திருச்சரீரம் கல்லறையில் அடக்கப்பட்டதின்பேரில்

ஆயத்த சிந்தனை.—*ஆண்டவருடைய திருச்சரீரத்தைச் சிலுவையில் நின்று இறக்கிப் பரிமளத்தைலம் பூசிக் கல்லறையில் அடக்கம்பண்ணினதை நானும் நினைவினாலே கூடநின்று பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.*

தியானச் செபம்.—*தபசுகாலத்தின் இந்தக் கடைசி நாளைப் பரிசுத்தமாய்ச் செலவழிக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.*

முதல் பிரிவு

இயேசுநாதர் மரித்த ஒரு மணி நேரத்துக்குப்பின், அரிமத்தியா ஊரானுமாய் யூதர்களுடைய பயத்தினாலே இயேசுநாதருக்கு இரகசிய சீஷனுமாயிருந்த சூசையென்னும் ஓர் திரவியவான் வந்து பிலாத்திடத்தில் தைரியத்தோடு போய் இயேசுநாதருடைய சரீரத்தைக் கேட்க, பிலாத்து அச்சரீரத்தை அவருக்கு ஒப்புக்கொடுத்தான். பின்னும் சூசையென்பவர் அதை மூடும்படி தூய பரிவட்டத்தை விலைக்கு வாங்கினார். நிக்கோதேமென்பவரும் வெள்ளைப்போளமும் கரியப்போளமும் கலந்த ஏறக்குறைய நூறு இராத்தல் தைலத்தைக்கொண்டுவந்து சேர்ந்தார். இவ்விருவரும் யூதர்களுடைய ஆசாரப்படி ஆஸ்திக்காரரை அடக்கம் செய்யுமேரையாக இயேசுநாதருடைய திருச்சரீரத்தைப் பரிமள வர்க்கங்களோடே பரிவட்டச் சேலைகளினாலே சுற்றிக்கட்டினார்கள். அவ்விடத்துக்கருகில் ஒரு நந்தாவனமும் அந்த நந்தாவனத்தில் சூசையென்பவராலே கற்பாறையில் வெட்டப்பட்டு இன்னும் எவனும் அடக்கம் பண்ணப்படாத ஓர் புதுக்கல்லறையும் இருந்தது. அவர் அதிலே இயேசுநாதருடைய திருச்சரீரத்தை அடக்கஞ்செய்து பெரும் படலைக்கல்லைப் புரட்டிக் கல்லறை வாசலை மூடிவிட்டுப் போனார் (*அரு.* 19-*மத்.* 27-*மாற்.* 15).

தியானம்.—*நீயும் இயேசுநாதருடைய திருச்சரீரத்தை அடக்கஞ்செய்யக் கஸ்தியோடு வேகமாய் வருவாயாக. கபாலமலையில் நின்று ஜனங்களும் சேவகரும் ஏற்கனவே போய்விட்டார்கள். இயேசுநாதருடைய தாயாரும் மற்ற இரண்டு மரியம்மாளும் சீஷனான அருளப்பரும் சிலுவை அடியில் நிற்கிறார்கள். இவர்கள் இயேசுநாதருடைய ஆராதனைக்குரிய திருச்சரீரத்தை எப்படிச் சிலுவையில் நின்று இறக்கி எந்தக்கல்லறையைக்கண்டு அடக்கஞ் செய்யலாமென்று வெகுவாய் மனங்கலங்கியிருக்கிறார்கள். இன்னும் இக்கலக்கத்திற்கு வேறொரு விசேஷ முகாந்திரம் இருந்தது. அதேதென்றால் குற்றவாளிகளாய்த் தண்டிக்கப்பட்டவர்களுடைய சரீரத்தை ஒரு குழியில் போட்டு அது அழுகிப்போகுந்தனையும் அதைப் புதைத்து மூடக்கூடாதென்று யூதர்கள் முறைமையில் எழுதப்பட்டிருந்தது.*

தேவ பராமரிக்கையானது நாம் மேலே வாசித்த சுவிசேஷ வாக்கியத்தில் கண்டதுபோல, சூசை, நீக்கோதேமென்கிற இரண்டுபேர் வழியாய் இந்தக் காரியம் நிறைவேறச் செய்தது. இவர்கள் முந்தித் தைரியமற்றவர்களாய்ப் பயந்திருந்தாலும், திடீரென்றாற்போல தேவ உதவியால் திடாரிக்கமும் துணிகரமும் அடைந்து சிலுவையில் ஏணியைச் சாத்தி அதிலே ஏறி இயேசுநாதர் கை கால்களிலிருந்த ஆணிகளைக் கழற்றி அத்திருச் சரீரத்தைச் சிலுவையை விட்டிறக்கி தேவமாதாவின் திருமடியிலே கிடத்தினார்கள். பின்பு வியாகுல நிறைந்த தாயார் இரத்தம் வடிகிற அத்திருச் சரீரத்தைக் குளிப்பாட்டவும் அதைப் பரிமளத் தைலத்தால் பூசித் தூயப் பரிவட்டத்தால் மூடவும் கடைசியாய் இசாயியாசென்கிற தீர்க்கதரிசி மெசியாவைக் குறித்துப் பேசுகையில், ஞானதிஷ்டியினால் அவருடைய கல்லறையைப்பார்த்து அது எவ்வளவு மகிமை பொருந்தினதென்று சொன்னதுபோல மகிமையான ஒரு கல்லறையில் அடக்கம் பண்ணவும் அவர்கள் உதவிசெய்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் தம்மால் மிகவும் சிநேகிக்கப்பட்ட தமது திருக்குமாரனை எப்படி நடப்பிக்கிறாரென்று இவ்விடத்தில் யோசித்துப் பார்ப்பாயாக. முந்தி அவர் கைவிடப்பட்டு அவமானம் அடைந்ததற்களவாக இப்போது அவரைப் பராமரித்து மகிமைப்படுத்துகிறார். நாம் நிந்தை அவமானம் கஸ்திப்படும்போது, அவைகளைப் பொறுமையோடும் தேவ சித்தத்துக்கு அமைவோடும் அநுபவிப்போமாகில், அவர் நம்மையும் இப்படியே நடப்பிப்பார். இது வரையில் நாம் எப்படி நடந்தோம்?

மனப்பற்றுதல்.—என்னைப் பற்றிச் சிலுவையில் மரணம் அடைந்த இயேசுநாதருக்காக வெகு வருத்தப்படவும் சாகவும் என்னை ஒப்புக்கொடுப்பேனாக.

பிரதிக்கினை.—பெரிய திருநாளுக்கு முந்தின இந்நாளில் அதிக கவலைகளிருந்தாலும் மகா பத்தியுள்ள ஒடுக்கத்தோடு இதைச் செலவழிக்கப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

மறுநாள் யூத குருப்பிரசாதிகளும் பரிசேயரும் பிலாத்தினிடத்திற் போய் அவனை நோக்கிச் சொன்னதாவது: ஐயா, அவ்வஞ்சகன் உயிரோடிருந்தபோது, மூன்றுநாளைக்குப் பிற்பாடு உயிரோடெழுந்திருப்பேனென்று சொன்னது எங்கள் நினைவிலிருக்கின்றது; ஆகையால் அவனுடைய சீஷர்கள் வந்து அவன் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோய் மரித்தோரிலிருந்து உயிர்த்தானென்று சனங்களுக்குச் சொல்லாதபடி மூன்றுநாள் பரியந்தம் கல்லறையைக் காவல்செய்யக் கட்டளையிடும்; ஏனெனில் பிந்தின மோசம் முந்தினதற்கு அதிக கெடுதியாமென்றார்கள். அதற்குப் பிலாத்து அவர்களை நோக்கி: உங்களிடத்தில் காவற்சேவகர் இருக்கிறார்களே; நீங்கள் போய் உங்களுக்குத் தெரிந்த பிரகாரம் காவல் செய்துகொள்ளுங்களென்றான். ஆகையால் அவர்கள் போய்க் கல்லின்மேல் முத்திரையிட்டுக் காவற் சேவகரைக்கொண்டு கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள் (மத். 27).

தியானம்.—இயேசுநாதருடைய திருச்சரீரத்தை அடக்கஞ்செய்ததிலே முதலாய்த் தேவ பராமரிக்கையின் விசேஷம் மகா ஆச்சரியமுள்ளதாய் விளங்குகின்றது. அதெப்படியென்றால் இதுவரையிலும் ஒருவரும் புதைக்கப்படாத புதுக்கல்லறையில் அவரை வைத்து அடக்கஞ்செய்ததினால், இதற்குமுன் அதில் புதைக்கப்பட்ட யாதொருவன் உயிரோடெழுந்து வந்தானென்று சொல்ல இடமில்லாமல் போயிற்று; அக்கல்லறை பாறையில் வெட்டப்பட்டிருந்ததினால், அதைக் காத்திருந்த சேவகருக்குத் தெரியாமல் சுரங்கம் அறுத்து அச்சரீரத்தை எடுத்துக்கொண்டு போனார்களென்று சொல்ல இடமில்லாமல் போனது; கல்வாரிமலைக்கு அடுத்த இடத்தில் அடக்கஞ்செய்ததினால் அன்று சாயுங்காலம் ஆறுமணிக்குத் துவக்கும் ஓய்வு நாளுக்கு முந்தி எல்லாம் நிறைவேற்றித் தகுந்த ஆயத்தத்தோடு அடக்கம்பண்ணக் கூடுமாயிருந்தது. மேலும் நமது இரட்சகருடைய சத்துராதிகள் அவருடைய கல்லறையை முத்திரையிட்டுக் காவற்காரரை நிறுத்தி இப்படிப் பற்பல உபாயங்கள் செய்யத் தீவரித்ததினால், அவர்

கள் தானே அத்திருச் சரீரத்தை யாதொருவர் எடுத்துக் கொண்டுபோகவும் அதின் கிட்ட முதலாய் வரவும் இடம் இல்லாதிருக்கச் செய்தார்கள். இவ்விஷயங்கள் சம்பவிக்க தேவசித்தமானதேதென்றால், இரட்சகர் உயிர்த்தெழுந்தருளின புதுமை எப்போதும் பிரபலியமாயிருக்கவும் தமது சுவிசேஷத்தின் உண்மைக்கு இது அசைக்கப்படாததும் மறுக்கப்படாததுமான அஸ்திவாரமாயிருக்கவும் அவைகள் சம்பவித்தன. அவ்விதமே வாஸ்தவத்திலும் நடந்ததென்று அப்போஸ்தலர்களுடைய சொற்களைக்கொண்டும் வேதபாரகருடைய மறுக்கக்கூடாத அத்தாட்சிகளைக் கொண்டும் அறிந்திருக்கிறோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ பராமரிக்கையானது எந்தெந்தக்காரியத்தையும் நடத்திவருகிறதென்று நம்பியிருக்கிறோம். ஆகையால் உலகத்தில் நடக்கும் காரியமெல்லாம் அதிஷ்டத்தினால் அல்லது மனிதர்கள் இச்சையின்படி சம்பவிக்கிறதென்று சிலபேரைப்போல சொல்லுகிறது ஆகாது. அப்படியே திருச்சபையின் சத்துராதிகள் அதை நிர்மூலமாக்குகிறதற்குப் படும் பிரயாசம் அநுகூலமாகிறதென்று பார்த்து நல்ல கிறீஸ்துவர்கள் மிகவும் மனங்கலங்கித் தைரியமற்றுப்போகிறது ஒண்ணாது. இயேசுநாதருடைய சீஷர்கள் அவருடைய காரியம் முழுதும் கெட்டுப்போச்சுதென்று நினைத்த சமயத்தில், அந்தக் காரியம் ஜெயங்கொண்டதுமன்றி சத்துராதிகளெல்லாரும் வெட்கி நாணமடைந்தார்கள்; மேலும் சாவை நினைக்கும் போது, விசேஷமாய் நமது சகோதரர்களிலொருவன் இறந்துபோய் அவனைப் புதைக்கும்போது நாம் கஸ்திதுபரத்துக்கு இடங்கொடுக்கக்கூடாது. இயேசுநதர் கல்லறையைவிட்டு ஒட்டோலகராய் எழுந்தருளினதினாலே, நாமும் இந்தச் சரீரத்தோடெழுந்து இனி பரலோகத்திலே ஒருக்காலும் சாகாமல் நித்திய பேரின்ப பாக்கியத்தை இயேசுநாதரோடே அநுபவிப்போமென்பதை நினைத்துக் கொள்ளவேண்டும்.

சம்பாஷணை.—தமது திருச்சரீரம் ஆத்துமத்தை விட்டுப் பிரிந்திருந்தும் தேவசுபாவத்தோடொன்றித்துக்

கல்லறையில் இளைப்பாறச்செய்த இயேசுநாதரோடே சம்பாஷணை செய்து அவருடைய திருச்சரீரங் கல்லறையில் அடக்கப்பட்டிருக்கிறதை ஆச்சரியத்தோடே பார்த்து மகா பத்தி விநயத்தோடேயும் சிநேகத்தோடேயும் அதை ஆராதிக்கிற சம்மனசுக்களோடே, நாமும் ஒன்றித்துத் தோத்தரிப்போமாக.

பாஸ்குத் திருநாள்

நமது ஆண்டவராகிய இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினது

சர்வேசுரன் உண்டுபண்ணின உத்தமமுள்ள நாள் இதுவே; சந்தோஷத்திலும் அகமகிழ்ச்சியிலும் இந்த நாளைப் போக்குவோமாக. (சங் 117—திருச்சபை இன்று செய்யும் செபம்).

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் கல்லறையை விட்டு ஒட்டோலகராய்ப் புறப்படுகிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—இந்தத் தியானத்துக்குப் பலனாக ஞான சந்தோஷம் நிறைந்த இருதயத்தைக் கேட்போமாக.

இந்தச் சந்தோஷத்தைக் கேட்பதற்கு மூன்று முகாந்திரங்கள் உண்டு.

முதல் பிரிவு

இயேசுநாதரைப்பற்றிச் சந்தோஷமாயிருக்கவேண்டிய முகாந்திரம்

தியானம்.—இயேசுநாதர் இவ்விடத்திலில்லை, உயிர்த்தெழுந்தருளினார் (மாற். 16). விடியற்காலத்தில் ஆண்டவருடைய சரீரத்தைக் கல்லறையில் பார்க்கவந்த பத்தியுள்ள ஸ்திரீகளுக்குச் சம்மனசு சொன்ன முதல் வாக்கியம் இதுதான். ஆறுதலற்றிருந்த அவர்கள் இருதயத்திலே இந்த வார்த்தையினால் எவ்வளவு சந்தோஷம் உண்டாயிற்று!

திருச்சபை இந்தப் பெரிய நாளிலே செய்யும் செபத்திலும் பூசையிலும் கிறீஸ்துவர்கள் காதில் விழும்படி சொல்லும் இவ்வசனத்தினலே அவர்கள் இருதயத்திலும் இன்றைக்கு எவ்வளவோ ஞான சந்தோஷத்தை வருவிக்கின்றது. நம்மால் சிநேகிக்கப்பட்ட தந்தையும் அரசனுமாகிய இயேசுநாதர் மகா விதனத்தோடு பட்ட பாடுகளைக்கேட்டு நாம் பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் சிந்தினோமே. அவர்தாமே திரும்பவும் உயிர்த்தெழுந்தருளினர், இனி சாகமாட்டார்! தமது சகல சத்துருக்களையும் சாவையும் தானே அவர் ஜெயித்து மகிமைப் பிரதாபம் அடைந்த தமது மனுஷீகத்திலே வாக்குக்கெட்டாத பேரின்பத்தை அநுபவிக்கிறர். அவருடைய பரம பிதாவானவர் பரலோகத்திலும் பூலோகத்திலும் பாதாளங்களிலும் சர்வ வல்லமையை அவருக்குக் கொடுத்தருளினர். இதினிமித்தம் அவரோடும் அவரைப் பற்றியும் நாமும் ஞான சந்தோஷம் அடைந்து இந்த மங்களமான நாளிலே நமது இருதயம் அகமகிழ்ந்து பூரிக்கக்கடவது. திருச்சபையானது தன் மாதிரிகையினலே சந்தோஷங் கொண்டாட நம்மை அழைக்கிறதுமல்லாமல் தான் அணிந்திருந்த துக்க வஸ்திரத்தைத் தள்ளி அழுகைப் பிரலாபத்தோடு சொன்ன வசனங்களெல்லாத்தையும்விட்டு அதற்குப் பதிலாய் அலங்காரமான திருநாள் ஆடைகளை அணிந்து அநேகமநேகம் விசை ஆலேலூயாவென்னும் சந்தோஷ நிறைந்த மங்கள தோத்திர வார்த்தைகளைக்கூறி "கிறீஸ்துநாதர் தாமே முன் அறிவித்தபடியே உயிர்த்தெழுந்தருளினர்! ஆலேலூயா" வென்னும் மங்களசோபனம் கூறுகின்றது (மத். 26).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சந்நியாசிக்குச் சகல பாக்கியமும் புண்ணியவர்த்திப்பும் ஞான சந்தோஷத்தில் அடங்கியிருக்கிறது; சாதாரணமாகவே இவ்வித சந்தோஷத்தினல் பூரிக்கப்பட்ட இருதயப்பற்றுதல்களில் நிலைத்திருக்கும்படி இந்தத் திருநாள் சமயத்தில் வழி தேடிக்கொள்வோமாக. இவ்வித ஞான சந்தோஷம் நம்மிடத்தில் இருக்குந்தனையும் நமக்கெல்லாம் எளிதாய்க் காணப்படும், கடின பிரயாசமும் இக்கட்டுகளும் நமக்கு இன்ப சுகமாயிருக்கும்; உத்தமதனத்தின் வழியில் நடக்கிறவர்களாயன்றி ஓடுகிறவர்களாவோம். மேலும் இதிலே அளவற்ற நன்மை உண்டாகும்; எப்படியென்றல், நமது கிரிகைகளெல்லாம் சர்வேசுரனுக்கு மகா பிரியமானவைகளாயிருப்பதோடு நமக்கு வெகு பலனுள்ளவைகளாயுமிருக்கும். ஏனெனில் சந்தோஷத்தினல் மலர்ந்த முகத்தோடு கொடுக்கிறவனைச் சர்வேசுரன் சிநேகிக்கிறரென்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறர் (2 கொரி. 9). இதுவரையில் உன்னிடத்தில் உண்டான சந்தோஷம் அல்லது கஸ்தியுள்ள பற்பல அந்தஸ்தைச் சோதித்துப்பார்த்தால், இங்கே சொல்லியிருக்கிறதெல்லாம் சரியென்று நீயே ஒத்துக்கொள்ளுவாய்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினதால் அவருக்கு உண்டான சந்தோஷத்தையும் மகிமையையும் பார்த்து அவரை வாழ்த்தி என்னிடத்தில் ஞான சந்தோஷமும் தேவசிநேகமும் நிறைந்த இருதயம் உண்டாக வரப்பிரசாதங் கேட்பேனக.

பிரதிக்கினை.—இயேசுநாதர் உயிர்த்தெழுந்ததை நினைக்கிறதில் இன்றையத்தினத்தைப் போக்கவும் அவரோடே நானும் சந்தோஷம் அடைந்து நற்கிரிகைகளைச் செய்யவும் பிரயாசப்படுவேனக.

2-ம் பிரிவு

தேவமாதாவைப்பற்றிச் சந்தோஷப்படவேண்டிய முகாந்திரம்

தியானம்.—இயேசுநாதர் முந்தமுந்தத் தமது பரிசுத்த மாதாவுக்குத் தரிசனையானர் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனல் நிஷ்டூர மரணத்தினல் தம்மைவிட்டுப் பிரிந்திருந்த தமது திருக்குமாரனைத் திரும்பக் காணும்போது, தாய் நேசம் பொருந்திய அவள் இருதயம் எவ்வளவு ஆனந்த சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்திப்போயிருந்ததென்பதைக் கண்டுபிடிக்கக் கூடுமானவனர்? அவர் உயிரோடெழுந்து வந்ததைக் கண்டதுமல்லாமல் முந்தி அடியினல் நொறுங்கிச் சிலுவையில் அறையப்பட்டபோது, அவர் வேற்றுரு

வாகிப் பார்க்கப் பயங்கரமாயிருந்ததற்குத் தக்கது இப்போது அவர் மகா அழகு சௌந்திரியத்தோடும் ஒளிவு பிரகாசத்தோடும் இருக்கிறதைக்கண்டு அவள் எவ்வளவோ பூரண சந்தோஷம் அடைந்திருக்க வேண்டும்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தாயானவள் படுங் கஸ்தியும் சந்தோஷமும் பிள்ளைகளும் படவேண்டியதாகையால், பரிசுத்த மரியாயி நமது தாயாயிருக்கையில், அவள் பட்ட வியாகுலத்தில் நாம் பங்கடைந்ததற்குத்தக்கது இன்றையத்தினம் சந்தோஷமாயிருக்கவேணும்; அவள்பேரில் நாம் வைத்திருக்கிற பட்சத்துக்குத்தக்கது சந்தோஷம் அடையவேணும். இந்தச் சந்தோஷம் ஒருநாள் மாத்திரமிருந்து மறுநாள் மாறிப்போகிறதாயிருக்கக்கூடாது; முந்தின பிரிவில் நாம் தியானித்துப் பார்த்ததுபோல, அந்தச் சந்தோஷமானது மறையாமல் நம்மிடத்தில் எப்போதும் ஆச்சரியமான நன்மையை வருவிக்கவேண்டும்.

மனப்பற்றுதல்.—பரலோகத்துக்கு இராக்கினியே, மனங்களிகூரும், அல்லேலூயா; எங்களுக்காகச் சர்வேசுரனை மன்றாடும், அல்லேலூயா; அவர் ஒட்டோலகராய் உயிர்த்தெழுந்தருளின உபகாரத்துக்கு நாங்கள் மிகவும் பங்காளிகளாயிருக்கத்தக்கதாகச் சர்வேசுரனை மன்றாடும், அல்லேலூயா.

பிரதிக்கினை.—தேவமாதாவுக்கு மகா பிரியமான இந்தச் சந்தோஷ மன்றாட்டை இன்றைக்கும் இந்தப் பாஸ்குகால முடியுந்தனையும் அடிக்கடி சொல்ல வருந்துவேனாக.

3-ம் பிரிவு

நம்மைப்பற்றிச் சந்தோஷப்படவேண்டிய முகாந்திரம்

தியானம்.—இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினது நாமும் உயிரோடெழுந்திருக்கப்போகிறதற்கு அடையாளமும் அச்சாரமும் என்கிற ஏக சிந்தனை எவ்வளவோ சொல்லரிய ஆனந்தத்துக்குரியது: இது பத்திக்கடுத்த

எண்ணந்தான் என்று நினையாதே, இது விசுவாச சத்தியம். இயேசுநாதரை உயிர்ப்பித்தவர் அவரோடே நம்மையும் உயிர்ப்பிப்பாரென்று நீங்கள் அறியவேணுமென்றும் அவரோடே நாமும் மகிமையடைந்து இராச்சியபாரம் பண்ணுவோமென்றும் அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார் (2 கொரி. 4). இதை நினைக்கையில் மரணம் மரணமாயிராமல் அதற்குரிய கசப்பெல்லாம் விலகிப்போம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது சிந்தையில் இதை நன்றாய்ப் பதித்து ஒருபோதும் மறவாமல் நினைத்துக்கொள்வோமாகில், நமது இருதயத்தில் ஒருக்காலும் கஸ்திக்கு இடமிராது. நமது ஆத்தும சரீரத்தில் உண்டாகும் கஸ்தி வேதனைகளின்போது மாம்ச உத்தானத்தையும் நித்திய சீவியத்தையும் விசுவசிக்கிறேனென்று சொல்லுவோமாக. இயேசுநாதரைப்பற்றி நான் துன்பப்பட்டு பிரயாசப்படுவதற்கு அளவாக அவரோடே சந்தோஷத்தை அடைவேனென்று விசுவசிக்கிறேன்.

சம்பாஷணை.—முந்தின இரண்டு பிரிவுகளிலும் சொல்லியிருக்கிற மனப்பற்றுதல் பிரதிக்கினைக்குத்தக்கது உயிர்த்தெழுந்தருளின இயேசுநாதரோடே சம்பாஷணை செய்வாயாக.

பாஸ்குத் திருநாளுக்கடுத்த திங்கள்

இயேசுநாதருடைய மகிமை சோபனம் நிறைந்த திருச்சரீரத்தினுடைய ஆச்சரியமுள்ள விசேஷ வரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதருடைய மகிமை நிறைந்த திருச்சரீரத்தைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—உன் இரட்சகரின் மகிமையுள்ள திருச்சரீரத்தின் விசேஷ வரங்களை நன்றாய் அறியவும் எல்

லாரும் உயிரோடெழுந்திருக்கும் நாளில் அவரோடு அதில் உனக்கும் பங்கு கிடைக்கவும் வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதருடைய திருச்சரீரத்துக்கு வந்த அக்ஷயம் சாகாமை என்கிற வரங்களின்பேரில்

தியானம்.—இரட்சகருடைய ஆத்துமம் அதன் சரீரத்தோடு சேர்ந்ததும் அதற்கு உயிரையும் அக்ஷயமென்கிற வரத்தையும் கொடுத்தது. கொஞ்சத்துக்கு முன்னே குளிர், பசி, தாகம், இளைப்பு, வேதனை, சாவு முதலிய மானிட பலவீனங்கள் பொருந்தியிருந்த இந்தச் சரீரம் இனி ஒருபோதும் சாகாததும் அழியாததுமாயிற்று. மரணத்திற்கு இனி அவர்பேரில் அதிகாரம் இல்லையென்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார் (உரோ. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் மனுஷனாகியமட்டும் இந்த மகிமையுள்ள விசேஷ வரங்களை எப்படி அடைந்தாரென்றால், தமது பரம பிதாவின் மகிமைக்காகவும் உலகத்தின் பாவ நிவர்த்திக்காகவும் தாம் அநுபவித்த நிந்தை அவமான வேதனைகளையும் கடைசியாய் அடைந்த மரணத்தையுங்கொண்டு தமது மனுஷீகத்தில் இந்த வரங்களை அடைந்தார். ஆகையால் இதைக்கொண்டுதானே நீயும் அக்ஷயம், சாகாமை என்கிற பாக்கியமான வரத்தை அடையவேணும். அப்படியிருக்க, நீ கஸ்திக்கும் சாவுக்கும் மிகவும் பயப்படுவதேன்? இப்படிப் பயப்படுவதைப்பார்க்கச் சர்வேசுரனுடைய சித்தத்துக்கு முழுதும் கீழ்ப்படிந்து உன் பாவங்களுக்கும் சகல மனுஷர் பாவங்களுக்கும் பரிகாரமாக வரப்பட்ட கஸ்தி வேதனை சாவை முதலாய்க் கையேற்றுக்கொண்டு அவைகளை அர்ச்சிக்கப்பண்ண வருந்துவதே உத்தமம். நாம் இந்தப்பிரகாரம் இயேசுநாதரோடே கஸ்தி வேதனைப்படுகிறதற்கு அளவாக மகிமைப்பிரதாப நிறைந்த அவர் திருச்சரீரத்தின் ஆச்சரியமான வரங்களுக்கும், நாம் ஒருநாள்

பங்காளிகளாவோம். இவைகளைத் தன் புத்தியில் எந்நேரமும் நினைத்துக்கொண்டிருக்கிற சந்நியாசியே பாக்கியவான்! இப்படிப்பட்ட நினைவோடு கஸ்தி துன்பம் அநுபவிக்கும்போது அவனுக்கு எவ்வளவோ தைரியமும் அமரிக்கையும் உண்டாகும்! இத்தகைய பாக்கியவான்களில் நானும் ஒருவனாயிருக்கப் பிரயாசப்படுவேனாக!

மனப்பற்றுதல்.—ஆறுதலுள்ள இந்தச் சத்தியங்களை விசுவசித்து எந்நேரமும் நமது புத்தியில் அவைகள் பிரசன்னமாயிருக்க வரப்பிரசாதங் கேட்போமாக.

பிரதிக்கினை.—"நமது ஆண்டவராகிய இரட்சகர் திரும்பவும் வருவாரென்று எதிர்பார்க்கிறோம். இப்போது அற்பமும் நீசமுமாயிருக்கிற நமது சரீரம் அப்போது மகிமையுள்ள தமது சரீரத்துக்கு ஒப்பாயிருக்க அதை மறுரூபப்படுத்துவார்" (பிலி. 3). என்று அப்போஸ்தலர் சொன்ன வாக்கியத்தை நான் சரீரத்தில் வேதனை அநுபவிக்கும்போது, நினைத்துக்கொள்வேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் திருச்சரீரத்துக்குண்டான ஞானமும் இலகும்

தியானம்.—ஞானமுள்ள சரீரமென்பது அரூபியின் குணங்களுள்ள சரீரமென்று சொல்லப்படும். கண்டிப்பான காரியத்துக்குள் பிரவேசிக்கிறதும் எவ்வளவு தூரமானாலும் மனதத்துவத்தினாலேயே ஓரிடத்திலிருந்து வேறோரிடத்துக்குத் திடீரென்றாற்போல போகிறதும் சூட்சமாகும். இத்தகைய குணங்கள் நமது புத்திக்கெட்டாதவை; அவற்றை விபரித்துக்காட்டச் சாத்தியப்படாது. ஆகிலும் இந்த வரங்களெல்லாம் உயிர்த்தெழுந்தருளின இயேசுவின் திருச்சரீரத்துக்குப் பொருந்தினவைகள். அப்போஸ்தலர்கள் யூதர்களுக்குப்பயந்து செனக்கிளென்கிற வீட்டில் கதவை அடைத்துக்கொண்டிருந்த அநேக சமயங்களில் கதவு திறக்கப்படாமல் அவர்கள் நடுவில்

திவ்விய குரு வந்து நின்றாரென்று சுவிசேஷகராகிய அர்ச். அருளப்பர் எழுதிவைத்திருக்கிறார் (அரு. 20).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சகல புண்ணியவான்களும் மாம்ச உத்தானமாகி மோக்ஷத்தில் ஊழியுள்ளகாலம் தங்கள் சரீரத்தில் அடையப்போகிற ஆச்சரியமான வரங்களும் இவைதான். எனக்கும் இவைகளில் ஒருநாள் பங்கு கிடைக்குமென்று அர்ச். சின்னப்பர் உறுதியுள்ள நம்பிக்கையுடன் சொல்லியிருக்கிறார். இப்போது கண்டிப்பாயிருக்கிற இந்தச் சரீரம் உயிரோடு எழுந்திருக்கும்போது ஞானமுள்ள சரீரமாயிருக்குமென்று வசனித்திருக்கிறார் (1 கொரி. 15). நான் சரீரத்தைப் புத்திக்குக் கீழ்ப்படுத்தி என் சரீரத்தின் ஆகாத இச்சையை ஒறுத்தடக்கி ஞான சீவியமுள்ளவனாய் நடக்க வருந்துவேனாகில், இவ்வித மேலான வரங்கள் எனக்குக் கிடைக்கும் (உரோ. 8). இப்படி நான் நடந்தேனோ? என் மனச்சாட்சி என்ன சொல்லுகிறது?

மனப்பற்றுதல்.—பாஸ்குத் திருநாளின் பரம இரகசியங்களுக்குகந்த பரிசுத்தமும் ஆறுதலுமான இவ்விஷயங்களைத் தியானித்துச் சந்தோஷமடைந்து மனத்திடன்கொண்டு உள்ளம் பூரிப்பேனாக.

பிரதிக்கினை.—நீ இவ்விடத்திற்கு ஏன் வந்தாய்? ஞானியாவதற்கன்றோ வந்தாயென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிறதை அடிக்கடி நானும் சொல்லிக்கொள்வேனாக (முதல் காண்டம் 25-ம் அதி.)

3-ம் பிரிவு

இயேசுநாதர் திருச்சரீரத்துக்குண்டான பிரகாசம்

தியானம்.—நாம் இருட்டில் நடந்துபோகிறதற்கு வெளிச்சம் வேண்டியதல்லவா? உயிர்த்தெழுந்தருளின இயேசுநாதருக்கோவென்றால், இனி இருட்டென்பது கிடையாது; மகிமைப்பிரதாபமுள்ள அவர் சரீரந்தானே அவ

ருக்கு வெளிச்சமாயிருக்கின்றது. அவருடைய ஆத்துமத்திலிருந்து அவர் சரீரத்தில் பாய்கிற தெய்வீகத்தின் சோதிப்பிரகாசம் உச்சிப்பகலில் பிரகாசிக்கும் சூரியனைப் பார்க்க அதை அதிக வடிவுள்ளதாக்கினது. முந்தி அவர் தபோரென்ற மலையில் ஆச்சரிய மகிமைப்பிரதாபத்தோடு மறுரூபமான சமயத்தில் கூடநின்ற அப்போஸ்தலர்கள் இவ்வித சோதிப்பிரகாசத்தில் சிறிதளவு பார்த்திருந்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நான் நம்பியிருக்கவேண்டியதுபோல் புண்ணியவான்களோடு நானும் உயிர்த்தெழுந்திருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தால், என் சரீரமும் இப்படியே மகிமையுள்ளதாய் மறுரூபமாகிச் சோதிப்பிரகாசமுள்ள சரீரமாயிருக்கும். தேவதோத்திரத்துக்கும் பிறர் ஆத்தும ஈடேற்றத்துக்கும் நான் படும் பிரயாசத்தினாலும் செய்யும் தபசினாலும் என் சரீரம் மெலிந்து வாடி வேதனைப்படுகிறதற்கு அளவாக அப்போது வெகு பிரகாசத்தோடே விளங்கிக்கொண்டிருக்கும்.

சம்பாஷணை.—பிதாவாகிய சர்வேசுரனோடே சம்பாஷணை செய்வாயாக. நமது நேச இரட்சகராகிய வார்த்தையானவர் எடுத்த மனுஷீகத்துக்குக் கொடுக்கப்பட்ட மகிமையுள்ள வரங்களைப்பற்றி அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்யவேணும். நல்ல பிரதிக்கினைகளில் உறுதியான நிலைமையோடிருந்து இப்போது தானே அக்ஷயம், சாகாமையென்கிற வரத்துக்கும், விசுவாசத்துக்கடுத்த பரம இரகசியங்களைக் கண்டுபிடிக்கிறதில் மனத்தாராளமும் சுறுசுறுப்பும் காண்பித்து, இனி வரப்போகிற ஞானம், இலகுவென்கிற வரங்களுக்கும், நன்மாதிரிகையைக் கைக்கொண்டு புறத்தியாருக்கு ஞானவெளிச்சத்தைக் காண்பித்து, இதினால் பின்பு நமக்கு வரப்போகிற பிரகாசமென்கிற வரத்துக்கும் வழிதேட வரப்பிரசாதங் கேட்பாயாக.

பாஸ்குத் திருநாளுக்கடுத்த செவ்வாய்

இயேசுநாதருடைய மகிமையுள்ள சரீரத்தில் பதிந்திருந்த ஐந்து திருக்காயங்களின்பேரில்

ஆயத்த சிந்தனை.—இயேசுநாதருடைய திருச்சரீரத்தில் பதிந்த மகிமையுள்ள ஐந்து திருக்காயங்களின் வழியாய்ப் பிரகாசிக்கிற கதிரொளியைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்.—இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினபிறகும் தமது ஐந்து திருக்காயங்கள் தமது திருச்சரீரத்தில் பதிந்திருக்கச் செய்ததேனென்று நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதருடைய ஐந்து திருக்காயங்கள் அவருடைய மகிமைத்தப் பட்டையமாம்

தியானம்.—ஜெயமடைந்து தன் இராட்சியத்துக்குத் திரும்பிவருகிற இராஜாவானவன் தன் பிரஜைகளுடைய சத்துராதிகளோடு யுத்தம்செய்தபோது தான் பட்ட காயங்களால் மகிமையடைவானல்லவோ? ஆகையால் உயிர்த்தெழுந்தருளின இயேசுநாதர் சிலுவை மரத்தில் யுத்தம் பண்ணி ஜெயம் அடைந்தபோது தாம்பட்ட காயங்கள் தமது மகிமை பொருந்தின சரீரத்தில் பதிந்திருக்கச் சித்தமானது அதிசயமல்ல. இந்தக் காயங்கள் அவர் திருச்சரீரத்தில் பதிந்திருக்க வேறு அநேக முகாந்திரங்களுமுண்டு.

முதலாவது, சர்வேசுரனைப்பற்றி அநுபவிக்கும் கஸ்தி நிர்ப்பந்தங்களையெல்லாம் தாம் பெரிதாய் மதித்திருக்கிறாரென்றும் தம்மைப்போலே நாமும் அவைகளை மதிக்கவேணுமென்றும் காண்பிக்கச் சித்தமானார்; ஏனெனில் கஸ்தி நிர்ப்பந்தங்களால் மாத்திரம் நாம் மோக்ஷானந்த பாக்கியத்தை அடையக்கூடும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதருடைய திருக்காயங்களையும் அவர் அநுபவித்த நிர்ப்பந்தங்களையும்பற்றித் தியானித்ததுதான், எக்காலத்திலும் இருந்த அர்ச்சியசிஷ்டவர்களுக்கு மகா மேன்மையும் உதாரத்தனமுமுள்ள எண்ணங்களை உண்டுபண்ணினது. உலகமானது மெத்த ஆவலோடு தேடித்திரிகிற மகிமை பெருமை சுகபோகம் இவைகளையெல்லாம் அவர்கள் முழுதும் நிந்தித்துத் தங்கள் திவ்விய குருவின் வில்லையைத் தாங்களும் அணிந்துகொள்வதுதான் மகிமையென்று நினைத்துத் தங்கள் சொந்தப் பிரயோசனத்தைப் பாராமல் எல்லாத்திலும் அவர் சாயலாயிருக்கவேணுமென்கிற ஆசையினால் தூண்டப்பட்டுப் பிரயாசம் வேதனை அவமானம் தங்களுக்கு மெய்யான ஆஸ்தியென்று அவைகளை விருப்பமாய்த் தேடிக்கொண்டுவந்தார்கள். இயேசுநாதருடைய உத்தம சீஷர்களுக்கு அடையாளமாகிற இத்தகைய மகிமையும் மேன்மையும் பொருந்திய எண்ணங்கள் சற்றாகிலும் உன்னிடத்தில் உண்டோ?

மனப்பற்றுதல்.—"எனக்கு உலகம் ஒரு சிலுவையாகவும் நான் உலகத்துக்கு ஒரு சிலுவையாகவும் இருக்கத்தக்கதாக நமது ஆண்டவராகிய இயேசுக்கிறீஸ்துவின் சிலுவையிலல்லாமல் வேறொன்றிலும் என் மகிமை பெருமையைத் தேடுகிறதில்லையென்றும், அவருடைய காயங்களின் அடையாளங்கள் என் சரீரத்தில் பதிந்திருக்கச் செய்கிறேனென்றும்" அர்ச். சின்னப்பரோடே நீயும் சொல்ல வரப்பிரசாதங்கேட்பாயாக (கலா. 6).

பிரதிக்கினை.—நம்மைப் புறத்தியார் சட்டைபண்ணாமல் போகிறதையும் அல்லது நிந்திக்கிறதையும் பொறுமையோடாகிலும் சகித்துக்கொள்வோமாக.

2-ம் பிரிவு

இயேசுநாதருடைய திருக்காயங்கள் நிர்ப்பாக்கியருக்குத் தஞ்சமாம்

தியானம்.—இரண்டாவது, தேவசுதன் நமதுபேரில் வைத்த பட்சத்தினால் தாம் பட்ட பாடுகளை நமக்கு நினைப்

பூட்டவும் தம்மிடத்தில் நாம் அடைக்கலமாய்ப் போகிறதற்குப் பிணையாயிருக்கவும் அக்காயங்கள் தமது சரீரத்தில் பதிந்திருக்கச் சித்தமானார். அவைகள் நம்மை வரவேற்று நமக்கு இல்லிடம் தருவதற்காக எப்போதும் திறந்திருக்கிற விடுதிகளாம். மேலும் தமது பிதாவண்டையில் அவர் நமக்காகப் பரிந்துபேசுகிறதற்கு அவைகள் வாய்ச்சாலகமுள்ள வார்த்தைகள்போலிருக்கின்றன. தம்மால் சிநேகிக்கப்பட்ட திருக்குமாரன் நமக்காகத் தமது சமுகத்தில் பரிந்து பேசி மன்றாடுகிறபோது நமதுபேரில் அவர் இரக்கம் வையாதிருக்கக்கூடுமா?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—செபத்தியானம் செய்யும்போதும் தேவநற்கருணை சந்திக்கும்போதும் திவ்வியநன்மை வாங்கும்போதும் நாம் பத்தியில்லாமல் இருக்கிறோமென்றும் சில சமயத்திலே நமது திவ்விய இரட்சகரைத்தானே சரியாய்ச் சிநேகிக்காமல் நூருவித அசட்டையாயிருக்கிறோமென்றும் முறைப்பாடு சொல்லிக்கொண்டு வருகிறோமல்லவோ? இப்பொல்லாப்புக்களுக்கெல்லாம் அவுழ்தம் எங்கே காணலாம்? இயேசுநாதருடைய திருக்காயங்களிலல்லாமல் வேறு இடத்திலல்ல. ஆகையால் அவைகளை நீ தியானித்து அவைகளுக்குள்ளே ஞானவிதமாய்ப் பிரவேசிப்பாயாகில், உன் முறைப்பாடுகளெல்லாம் விலகிப்போம். என் துன்பதுரிதங்களிலே எனக்குப் பலமான அவுழ்தம் இயேசுநாதருடைய திருக்காயங்களல்லாமல் வேறல்ல; அவைகளில் நான் சமாதானமாய் யாதொரு பயமில்லாமல் இளைப்பாறுகிறேனென்று அர்ச். அகுஸ்தீன் வசனித்திருக்கிறார்.

மனப்பற்றுதல்.—ஆ! என் நல்ல இயேசுவே, என் மன்றாட்டுக்குக் காதுகொடுத்து உமது திருக்காயங்களுக்குள்ளே என்னை மறைத்துக்கொள்ளுமென்று அர்ச். இஞ்ஞாசியாரோடே சொல்லுவேனாக.

பிரதிக்கினை.—நான் படும் வருத்த முதலிய சோதனைகளிலே என் நேச இரட்சகரின் திருக்காயங்களின் அடைக்கலமாய்ப் போவேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதருடைய திருக்காயங்கள் நீதியுள்ள தேவ பாராமரிக்கையைக் காண்பிக்கின்றன

தியானம்.—கடைசியாய் இரட்சகர் தாம் பட்ட பாடுகளினாலே யாதொரு பலனையும் அடையாத பாவிகளைத் தீர்வை நாளில் கலங்கடிக்கவும், ஆச்சரியமும் இரக்கமும் நிறைந்த தமது தேவ பாராமரிக்கையின் கருத்தைத் தங்களிடத்தில் நிறைவேற்றத்தக்கதாக அந்தப் பாடுகளினாலே பலனைக் கைக்கொண்ட புண்ணியவான்களைச் சந்தோஷத்தினால் நிரப்பவும் மகிமை நிறைந்த தமது திருச்சரீரத்திலே அக்காயங்கள் பதிந்திருக்கச் சித்தமானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் எல்லாரும் புண்ணியவான்கள் தரப்பில் இருக்க நமக்கு ஆசையும் நம்பிக்கையும் உண்டல்லவா? பாடுபட்ட ஆண்டவர் சாயலை நம்மிடத்தில் இனிமேல் மகா திடமாய்ப் பதிக்க வருந்துவோமாகில், நமது ஆசையும் நம்பிக்கையும் மெய்யானதாயிருக்கும். நாம் அப்படி நடப்போமாகில், சாகிற சமயத்திலே எவ்வளவோ சந்தோஷமுண்டாகும்! பாடுபட்ட சுரூபத்தையும் அதிலுள்ள ஐந்து திருக்காயங்களையும் எவ்வளவு ஆறுதலோடே முத்தி செய்வோம்! நித்திய காலத்துக்கும் எவ்வளவோ ஆனந்த சந்தோஷம் அடைவோம்!

சம்பாஷணை.—தமது மகிமைப் பிரதாபமுள்ள திருக்காயங்களையும் விசேஷமாய்த் தேவசினேக சுவாலை புறப்படும் தமது இருதயத்தின் காயத்தையும் நமக்குக் காண்பிக்கிற இயேசுநாதரோடு சம்பாஷணை செய்து, அவரை ஆராதித்து, அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் சொல்லி நமது இருதயத்தின் நிர்ப்பாக்கியங்களையும் ஆசைகளையும் அவருக்கு வெளிப்படுத்துவோமாக.

பாஸ்குத் திருநாளுக்கடுத்த புதன்

இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினதினால் வந்த பலன்

ஆயத்தச் சிந்தனை.—நம்பிக்கையாயிருங்கள்; நான் உலகத்தைச் செயித்தேனென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக (அரு. 16).

தியானச் செபம்.—இயேசுநாதருடைய உத்தானத்தின் பலன்களிலே எனக்கு மிகுந்த பங்கு கிடைக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினது நமது விசுவாசத்துக்கு அஸ்திவாரமாம்

தியானம்.—இயேசுநாதர் தமது தெய்வீகத்தையும் தெய்வீகமான தமது போதகத்தையும் எண்பிக்கிறதற்காகத் தாம் பின்னால் உயிர்த்தெழுந்தருளப்போகிற புதுமையை விசேஷ அத்தாட்சியாகத் தமது பிரசங்கங்களில் அறிவித்திருந்தார். ஆகையால் தாம் மரித்தவுடனே அப்புதுமை நிறைவேறாதபடிக்கு யூதர்கள் எடுத்த உபாயங்களெல்லாம் தாம் மெய்யாகவே உயிர்த்ததைப் பிரசித்தப்படுத்தவே உதவும்படி செய்துகொண்டார். அப்போஸ்தலர்களும் தாங்கள் போதித்த வேதத்தின் உண்மையை ஸ்தாபிப்பதற்கு பிரபல்யமான இம்மாபெரிய அற்புதத்தையே உதவிக்கொண்டார்கள். இயேசுநாதர் உயிர்க்காமலிருந்தால், நாங்கள் செய்யும் பிரசங்கம் விருதாவாகவும் உங்கள் விசுவாசம் பிரயோசனமற்றதாகவுமிருக்குமென்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார் (1 கொரி. 15). ஆண்டவர் உயிர்த்த அற்புதம் உலகமெங்கும் விசுவசிக்கப்பட்டதுமல்லாமல் அநேக இலட்சம்பேர் இது மெய்யென்று எண்பிக்கத் தங்கள் இரத்தத்தைச் சிந்திச் சீவனைக் கொடுத்து வேதசாட்சிகளானார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பட்டப்பகல்போல தெளிவாய் தெய்வீகம் விளங்கும் மெய்யான வேதத்திலே நான் பிறந்து சந்நியாச அந்தஸ்துக்கு அழைக்கப்பட்டு இதில் விசுவாசத்தின் ஏராளமான வரங்களையும் நன்மைகளையும் அநுபவிக்கிறதினாலே எவ்வளவோ பாக்கியவானாயிருக்கிறேன்! ஆனால் என் வார்த்தைகளினாலும் விசேஷமாய் என் கிரியைகளினாலும் இதற்காகச் சர்வேசுரனுக்குத் தகுந்தபிரகாரம் நன்றியறிந்திருக்கிறேனோ?

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் எனக்குச் செய்த உபகாரங்களுக்காக நன்றியறிய என்னாலே முடியாதென்று ஒத்துக்கொண்டு பிதாப்பிதாவான யாக்கோபென்பவர் சொன்னதுபோலதேவரீர் எனக்குச் செய்த கிருபைகளெல்லாத்துக்கும் நான் அபாத்திரவானாயிருக்கிறேனென்று சொல்லவேணும் (ஆதி. 32).

பிரதிக்கினை.—மிகுந்த சிநேகத்தோடும் நன்றியறிந்ததனத்தோடும் இன்றைபத்தினம் என் கிரியைகளெல்லாம் செய்யப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினது நம்முடைய உத்தானத்துக்கு உறுதியுள்ள அச்சாரமாம்

தியானம்.—இயேசுநாதர் இனி ஒருக்காலும் சாகக்கூடாமல் மரித்தவர்களிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தருளினது நிச்சயமாயிருக்கிறதுபோல நானும் நித்தியத்துக்கும் உயிர்த்தெழுந்திருப்பேனென்பதும் எனக்கு நல்ல மனதுண்டானால் பாக்கியமான நித்திய சீவியத்துக்கு உயிர்த்தெழுந்திருப்பேனென்பதும் நிச்சயம். இவ்விரண்டும் குன்றாத சத்தியமென்பதற்கு சத்திய வேத வாக்கியங்கள்தானே நமக்கு அத்தாட்சியாயிருக்கின்றன. அவைகளாவன: மனிதர்கள் எல்லாரும் ஆதாமினிடமாய் மரிக்கிறதுபோல எல்லாரும் கிறீஸ்துவினிடமாய் உயிர்ப்பிக்கப்படுவார்களென்றும் (1 கொரி. 15), இயேசுநாதரை உயிர்ப்பித்தவர் அவரோடு நம்மையும் உயிர்ப்பிப்பாரென்றும் (2 கொரி. 4)

நாம் கிறீஸ்துவோடேகூடப் பாடுபடுவோமாகில், அவரோடேகூட மகிமை அடைவோமென்றும் (உரோ. 8) அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறவைகளே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—“நாம் மிகவும் பிரயாசப்பட்டுக் காப்பாற்றுகிற இந்தச் சரீரம் செத்து மண்ணாய்ப்போம்; ஆனால் ஒருநாள் இந்தச் சரீரந் தானே நித்திய சீவியத்தோடு எனக்குத் திரும்பவுங்கொடுக்கப்படும். இனி இது சாகாத வரமடைந்து, அளவில்லாத நித்திய சீவியரிடமாய்த் தனது பாக்கியமெல்லாம் பெறுமாதலால், சொல்லரிய நவம் நவமான முடிவில்லாத பேரின்ப பாக்கியத்துக்குப் பங்காளியாயிருக்கும்.” இந்த சிந்தனை எவ்வளவோ ஆறுதலுக்குரியது! இம்மேரையாய்ச் சாவை உத்தேசித்துப் பார்க்கையில், கிறீஸ்துவனுக்கும் விசேஷமாய்ப் பத்தியுள்ள சந்நியாசிக்கும் இது நஷ்டமும் கஷ்டமுமாயிராமல் இலாபமும் நித்திய பேரின்ப சந்தோஷத்துக்கும் வாக்குக்கெட்டாத ஆறுதலுக்கும் ஊற்றாயிருக்கும்.

மனப்பற்றுதல்.—மாம்ச உத்தானத்தையும் சததமான சீவியத்தையும் விசுவசிக்கிறேனென்று விசுவாசப் பிரமாணம் அறிவிக்கிறதினால், இனிமேல் மனிதர் சரீரம் உயிர்த்தெழுந்திருக்குமென்பதை உயிருள்ள விசுவாசத்தோடு பிரசித்தப்படுத்துவேனாக.

பிரதிக்கினை.—அடிக்கடி இந்த விசுவாச முயற்சியைச் சொல்லிக்கொண்டு வருகிறதுமல்லாமல் விசேஷமாய்ச் சாவின் நினைவால் எனக்குப் பயமும் கஸ்தியும் உண்டாகும்போது இதைச் சொல்லிக்கொண்டு வருவேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினது நாம் படும் பிரயாசங்களிலும் வியாதிகளிலும் நமக்கு மனத்திடனாயிருக்கும்

தியானம்.—மனுஷன் குடியிருக்கும் வீடு இடிந்து விழுகிறதைக் காணும்பொழுது, கஸ்திப்படுவானல்லவோ?

ஆனால் அந்த வீடு திரும்பவும் மகா அலங்காரமாய்க் கட்டப்படுமென்று நிச்சயமாய்ச் சொல்லுவாயாகில், அவன் கஸ்தியெல்லாம் சந்தோஷமாய் மாறிப்போமே. நமது சரீரம் நமது ஆத்துமத்துக்கு இருப்பிடம்; இவ்விருப்பிடம் கெட்டியானதன்று. நாம் அதை எவ்வளவு எச்சரிக்கையாய்ப் பார்த்தாலும், கொஞ்சத்துக்குள்ளே இடிந்து விழுந்து மண்ணாய்ப்போம். இந்த நினைவு நம்மைக் கஸ்திப்படுத்துகின்றது. ஆனால், நாம் ஆறுதல் அடைவோமாக: இடிந்துபோகும் இந்த வீட்டைச் சர்வேசுரன் ஒருநாள் மட்டற்ற அழகு சவுந்திரியத்தோடும் இனி ஒருக்காலும் இடிந்து போகாத விதமாயும் திரும்பவும் புதுப்பிப்பார்; இது நிச்சயமென்கிறதற்குச் சந்தேகமில்லை. அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதாவது: “நாம் குடியிருக்கிற இந்த மண் வீடு அழிந்துபோனால், சர்வேசுரன் நமக்கு மனுஷன் கையால் கட்டப்படாத வேறொரு வீட்டைக் கொடுப்பார்; அது பரலோகத்திலே நித்தியமுள்ளதாயிருக்குமென்று நாம் அறிந்திருக்கிறோம் (2. கொரி. 5). நமது கர்த்தராகிய இயேசு இரட்சகர் அற்பமும் அழிவுள்ளதுமான இந்தச் சரீரத்தை மகிமையுள்ள தமது சரீரத்துக்கு ஒப்பாய் மறுரூபமாக்குவார் (பிலி. 3); ஏனெனில் சாவுக்குரிய இந்தச் சரீரம் சாகாவரம் அடைந்திருக்கவேணும்” (1 கொரி. 15).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—விசுவாச சத்தியமும், மனத்திடனைத் தரத்தக்கதுமான இத்தகைய நினைவு நமது புத்தியில் எப்போதும் இருந்தால், வியாதியஸ்தருக்கு ஊழியஞ்செய்கிறதிலேயும், பிள்ளைகளுக்குப் படிப்பித்துக்கொடுக்கிறதிலேயும், வேதத்துக்காக உழைக்கிறதிலேயும், நமது சௌக்கியங் கெட்டுச் சரீர பெலன் குறைந்துபோகுமென்று பயப்படமாட்டோம். இன்னமும் இப்படிப் பிரயாசப்படுகிறதினால் இளம்பிராயத்திலேயே மரிக்கவேண்டியதானாலும், அர்ச். சின்னப்பரோடே சந்தோஷமாய் நாமும் “கிறீஸ்துநாதர், எனக்குச் சீவனும், மரணம் எனக்கு ஆதாயமுமாயிருக்கின்றது” (பிலி. 1) என்று சொல்வோம்.

சம்பாஷணை.—இயேசுநாதருடைய உத்தானத்தைக் குறித்தும் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உத்தானத்தைக் குறித்தும் உன்னத ஆறுதலான காரியங்களை எழுதிவைத்த அர்ச். சின்னப்பரோடே சம்பாஷணை செய்வோமாக.

பாஸ்குத் திருநாளுக்கடுத்த வியாழன்

இயேசுநாதருடைய உத்தானம் நமது ஞான உத்தானத்துக்கு மாதிரிகையாம்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுக்கிறீஸ்துநாதர் தமது பிதாவின் மகிமைக்காக மரித்தவர்களிடத்திலே நின்று உயிர்த்ததுபோல, நாமும் புதுச் சீவியமுள்ளவர்களாய் நடக்கவேணுமென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக (உரோ. 6).

தியானச் செபம்.—இயேசுநாதர் மாதிரிகையின்படி நீயும் ஞான மெய்யாகவும், உண்மையாகவும், காணக்கூடிய விதமாகவும் உயிரோடே எழுந்திருக்கத் தேவ வரப்பிரசாத உதவியைக் கெஞ்சிக் கேட்பாயாக.

முதல் பிரிவு

ஆண்டவர் உயிர்த்தெழுந்தருளினார் (லூக். 24)

தியானம்.—ஆண்டவர் உயிர்த்தெழுந்தருளினார், அதாவது: அவர் கல்லறையினின்று வெளியில் புறப்பட்டு, முன்னிருந்த சீவியத்திலுள்ள துன்ப துரிதங்களில்லாமல் உத்தமவிதமாய் புதிதான சீவியமுள்ளவரானார். அவ்வண்ணமே, தபசுகாலமுழுதும் தவசைக்கொண்டு நாம் தள்ளிப்போடப் பிரயாசப்பட்ட குற்றங்குறைகள் கூடுமான வரையில் இனி நம்மிடத்திலில்லாதபடி மகா உத்தமமும் சுறுசுறுப்புமுள்ள சீவியத்தில் பிரவேசிக்கிறதற்காக, நம்மில் அப்பியாசமான பாவம், குற்றம், பத்திக்குறைவாகிற கல்லறையிலே நின்று வெளிப்பட்டு நாமும் இந்தப் பாஸ்குத்

திருநாளிலே புதுச் சீவியமுள்ளவர்களாகவேணும். அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதுபோல, இயேசுநாதர் தமது பிதாவின் மகிமைக்காக மரித்தவர்களிடத்திலே நின்று உயிர்த்ததுபோல நாமும் புதுச் சீவியமுள்ளவர்களாய் நடக்கவேணும் (உரோ. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னிடத்தில் ஏறக்குறைய பழக்கமான பாவங்களும் குறைகளும் எவையென்று பார்த்து நீ தவறிப்போகிறதற்கு விசேஷ காரணமான பத்திக்குறையை விலக்கிப் புதுச் சீவியத்தையும், நீ சந்நியாசத்தில் பிரவேசித்தபோது, கண்டுபாவிக்கவேணுமென்றிருந்த இயேசுநாதருடைய சீவியத்துக்குரிய நடத்தையையும் புதிதாய்த் துவக்கத்தக்கதாக எவ்விதமாய்ப் பாவமென்கிற கல்லறையைவிட்டுப் புறப்படக்கூடுமென்பதை அறியக் கவனத்தோடு உன்னைச் சோதித்துப் பார்ப்பாயாக.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் சமுகத்தில் என் ஆத்தும அந்தஸ்தைத் தெளிவாய் அறிகிறதற்கு வேண்டிய ஞான ஒளிவையும் அதிலுள்ள அவலட்சணக் குறைகளை விலக்கிப்போடுவதற்குச் சுபாவத்துக்கு மேலான பெலனையும் கேட்பேனாக.

பிரதிக்கினை.—என்னிடத்திலுள்ள மற்றக் குற்றங்களுக்கெல்லாம் காரணமான குற்றத்தை முழுதுந் தள்ளிப்போட இன்றுமுதல் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

ஆண்டவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தருளினார் (லூக். 24)

தியானம்.—ஆண்டவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தருளினார், அதாவது: சவுல் இராஜாவால் பாதாளங்களில் நின்று அழைக்கப்பட்ட சமுவேல் தீர்க்கதரிசியைப்போல, இயேசுநாதர். பார்வைக்குமாத்திரமல்ல,—உயிரோடெழுப்பப்பட்ட லாசர் சில வருஷம் உயிரோடிருந்து திரும்பவும் மரித்ததைப்போலவுமல்ல,—ஒருக்காலும் சாகக்கூடாதவராய் மெய்யாகவே உயிர்த்தெழுந்தருளினார். மரித்தவர்க

ளிடத்திலே நின்று ஒருவிசை எழுந்தருளின இயேசுநாதர் இனி மரிப்பதில்லை, அவர்பேரில் இனி மரணத்துக்கு அதிகாரம் இராது (உரோ. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது ஞான உத்தானமும் இப்பேர்க்கொத்ததாயிருக்கவேணும். அது மெய்யானதாயிருக்கவேணும்; பத்திக் குறைவாயிருந்த நாம் பத்தி சுறுசுறுப்புள்ளவர்களாகவும், நமது பரிசுத்தமான அந்தஸ்தைச்சார்ந்த எல்லாத்திலும் சரியான பிரகாரமாயிருக்கவும் மெய்யாகவே பிரயாசப்படவேணும்; நம்மிடத்தில் உண்டான பாக்கியமான மாறுதல் எப்போதும் நிலையுள்ளதாயிருக்கவேண்டியதுமல்லாமல், கொஞ்சம் கொஞ்சமாய் நம்முடைய ஆத்துமத்துக்கு சாவை வருவிக்கக்கூடுமான முந்தின ஞானத் துர்ப்பலத்திலும் அசட்டைத்தனத்திலும் தேவ ஒத்தாசையைக்கொண்டு நாம் மறுபடி விழாதிருக்கவும் வேணும்.

மனப்பற்றுதல்.—உன்னிடத்தில் அதிக உறுதியான மனதும், உதாரமுள்ள இருதயமும், மாறாத பத்தி சுறுசுறுப்பும், எக்காரியத்திலும் நிலைமையான பற்றுதலும், இயேசுநாதருடைய அளவில்லாத பேறுபலனைப்பார்த்துச் சர்வேசுரன் உனக்குக் கொடுத்தருளவேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—நல்ல சந்நியாசிகள் முதலாய் அடிக்கடி கட்டிக்கொள்ளும் குற்றங்களாகிற வீண் பேச்சும், அவரவர் தங்களுக்குக் குறித்துக்கொண்ட விசேஷ ஒழுங்கைச் சரியாய் அநுசரியாமலிருப்பதும், கண் பார்வையை அடக்காதிருப்பதும், சந்நியாசிக்கு அடுத்த மேரை மரியாதையில் தவறிப்போவதுமாகிய நமக்குத்தெரிந்த இவ்வித குற்றங்களை மகா சுறுசுறுப்போடு விலக்கிப்போடுவோமாக.

3-ம் பிரிவு

ஆண்டவர் உயிர்த்தெழுந்து சீமோன் இராயப்பருக்குத் தரிசனையானார் (லூக். 24)

தியானம்.—இயேசுநாதர் காணக்கூடியவிதமாய் உயிர்த்தெழுந்தருளினார். மெய்யாகவே தாம் உயிர்த்தெழுந்

தருளினாரென்றும் சிலுவையில் அறையப்பட்டுக் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்ட அந்தச் சரீரத்தோடுதானே திரும்பவும் உயிர்த்தாரென்றும் மறுக்கக்கூடாத சம்பவங்களினால் எண்பித்தார். நாற்பதுநாட்களுக்குள் ஒருவிசை மாத்திரமல்ல, அநேகம்விசை தமது அப்போஸ்தலர்களுக்கும் சீஷர்களுக்கும் தரிசனையானார்; அவர்கள் தம்மைத் தொடவும் செய்தார்; அவர்கள் புத்தியிலே யாதொரு சந்தேகத்துக்கு இடமில்லாதிருக்கும்படி அவர்களோடு புசித்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது ஞான உத்தானத்தில் விளங்கவேண்டிய மூன்றாவது இலட்சணம் யாதெனில்: இந்த ஞான உத்தானம் சர்வேசுரனுக்கு மாத்திரமன்று, மனுஷருக்கும் நமது சகோதரர், சிரேஷ்டர், நமக்குக் கீழ்ப்பட்டவர்கள், நம்மோடு சம்பந்தப்பட்ட யாவருக்கும் அது மெய்யாகவே புலப்படத்தக்கதாயிருக்கவேணும். நம்மிடத்தில் மாற்றம் உண்டாயிற்றென்று அவர்கள் அறிந்து இதனால் நன்மாதிரிகை அடையவும், முன் அவர்களுக்கு அருவருப்பு அல்லது கஸ்தியை வருவித்த நம்முடைய குற்றங்குறைகளும் கனத்த அசட்டைத்தனமும் இப்போதில்லையென்று பார்த்துச் சந்தோஷப்படவும்வேணும். முந்தி சிலவிசை நாம் அவர்களுக்குத் துர்மாதிரிகை காண்பித்ததற்களவாகவும் இன்னும் அதிகமாகவும் இனிமேல் நன்மாதிரிகை கொடுக்கவேணும்.

சம்பாஷணை.—உயிர்த்தெழுந்தருளின இயேசுநாதரோடே சம்பாஷணை செய்து அவருக்கு வந்த பாக்கியத்தைக்கண்டு அவரைக் கொண்டாடி, அவரோடே சந்தோஷப்படுவோமாக. இந்தத் தியானத்தில் நாம்செய்த பிரதிக்கினைகளை அவர் பாதத்தில் வைத்து அவைகளில் பிரமாணிக்கராயிருக்கவும், புதிதும் சுறுசுறுப்புள்ளதுமான நற்கிரிகைகள் நிறைந்த சீவியம் இனிமேல் சீவிக்கவும் வேண்டிய வரப்பிரசாதத்தைத் தாழ்ச்சியோடே கேட்போமாக.

பாஸ்குத் திருநாளுக்கடுத்த வெள்ளி

இயேசுநாதரை அடக்கஞ்செய்த கல்லறை மகிமை அடைந்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—திருக்கல்லறையைச் சூழ்ந்து கொண்டிருக்கிற மகிமையையும் சந்தோஷத்தையும் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் சேபம்.—சாவுக்குப்பின் நிலைத்திராத காரியங்களையெல்லாம் நிந்திக்க வரப்பிரசாதங் கேட்போமாக.

முதல் பிரிவு

உலகமகிமை உலகத்தானுக்குக் கல்லறையோடே முடிந்துபோம்; இயேசுநாதருக்கும் அவருடைய பிரமாணிக்கமுள்ள ஊழியருக்கும் மகிமையானது அதிலேதான் துவக்கும்.

தியானம்.—உலகத்திலாவது சந்நியாசத்திலாவது தாங்கள் செய்த சகல கிரிகைகளிலும் உலக மகிமையை மாத்திரந்தேடிக் கர்வமாய்த்திரிந்த மனுஷர்களுக்கு மிச்சமாயிருக்கிறதென்ன? எல்லாங் கல்லறையோடு மறைந்து போயிற்றேயன்றி, வேறொன்றுமில்லை. சிலபேர்களுடைய கீர்த்தி இன்னும் விளங்கிக்கொண்டிருந்தாலுங்கூட, "தாங்களில்லாத இடத்திலே தோத்திரிக்கப்பட்டுத் தாங்களிருக்குமிடத்திலே உபாதிக்கப்பட்டால் அதினாலே அவர்களுக்கு வரும் லாபமென்ன" வென்று அர்ச். அகுஸ்தீன் வசனித்திருக்கிறார். இயேசுநாதருடைய நிலைமை இதற்கு முழுதும் வித்தியாசமானது. அதெப்படியென்றால், அவர் தமது சீவியகாலமெல்லாம் தன் பிதாவின் மகிமையை மாத்திரம் தேடினார்; அவரைப்பற்றிப் பிரயாசப்பட்டு எல்லாராலும் நிந்திக்கப்பட்டவராய் மரித்தார்; ஆனால் அவர் தம்மை மறந்து தாழ்த்திக்கொண்டதற்களவாக, இப்போது மகிமை நிறைந்தவராயிருக்கிறார். அவருடைய கல்லறை மகிமை நிறைந்ததாயிருக்குமென்று இசாயியாஸ் தீர்க்கதரிசி சொன்னதுபோல, அவருடைய மகிமையானது கல்லறையில்தானே துவக்குகிறது. அதைவிட்டு அவர் மகா உந்நத பரமண்டலத்திலே மகிமை சோபன முடி பெறுகிறதற்காகப் புறப்படுகிறார். மேலும் அவரை அடக்கின அந்த ஸ்தலம் அந்நாள் முதல், பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக உலகத்திலுள்ள எத்தேசத்தாராலும் சந்திக்கப்பட்டுவருகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—எது காரியத்திலும் தேவ மகிமையைமாத்திரம் தேடிக்கொள்ளுகிறதற்காக உலக மகிமையெல்லாம் சட்டைபண்ணாமலிருக்கிற இயேசுநாதருடைய மெய்யான ஊழியரும் இப்படியே மகிமை அடைவார்கள். மனுஷரால் நிந்தை அவமானப்பட்டாலும், உத்தானத்தின் பெரிய நாளிலே அவர்கள் மகிமை அடைவார்கள்; அவர்கள் கல்லறைகளும் மகிமை பெற்றிலங்கும். ஒருக்காலும், அழியாத பேரின்ப முடி பெறுகிறதற்காக அவர்கள் அக்கல்லறைகளை விட்டெழுந்திருப்பார்கள். நாம் இதை விசுவசித்தாலும், மகிமையும் பெருமையும் உலகத்தில் அடையவேணுமென்கிற ஆசை நமது கருத்திலும் நாம் செய்யும் தேவ ஊழியத்திலும் நமது தாழ்ச்சி முயற்சியிலும் முதலாய் அடிக்கடி விளங்கவில்லையோ?

மனப்பற்றுதல்.—சர்வேசுரனைப்பற்றி மாத்திரம் நாம் ஜீவிக்கிறதற்காக உலகத்துக்கும் நமக்கும் முழுதும் செத்தவர்களைப்போலிருக்க ஆசைப்பட்டுக் கேட்போமாக.

பிரதிக்கினை.—உலகத்தில் மகிமை அடைகிறதும் நிந்தைப்படுகிறதும் சரியென்று நினைத்து அடிக்கடி நம்முடைய நல்ல கருத்தைப் புதுப்பிப்போமாக.

2-ம் பிரிவு

உலகத்தானுக்கு ஆஸ்தியும் வல்லபமும் கல்லறையோடே முடிந்துபோம்; இயேசுநாதருக்கும் அவருடைய பிரமாணிக்கமுள்ள ஊழியருக்கும் அவைகள் அவ்விடத்தில்தானே துவக்கும்.

தியானம்.—பேர்போன ஒரு இராஜா தனக்குச் சாவு கிட்டியிருக்கிறதைக் கண்டு அழுகைப் பிரலாபத்தோடு

சொன்னதாவது: ஐயோ! இன்றைக்கு என் வசமாய்க் கோடாகோடி திரவியங்களும் அரண்மனைகளும் என்னைக் காக்க இராணுவங்களுமிருக்கின்றன, நாளைக்கோ கல்லறையின் அந்தகாரமல்லாது வேறொன்றும் எனக்கு இருக்கமாட்டாது. உலக ஆஸ்தியும் வல்லபமுமே தன் நம்பிக்கை, பாக்கியமென்று எண்ணி நடந்த மனிதனுக்குக் கடைசியிலே ஆறுதலற்ற இந்த நினைவொன்றுதான் இருக்கும். இயேசுநாதர் விஷயம் அப்படியல்லவே:—அவர் தமது ஜீவியகாலமெல்லாம் மனம்பொருந்தி வறுமையிலும் கீழ்ப்படிதலிலும் செலவழித்தபின், கல்லறையில் பரிபூரண ஜீவியத்தையும் சகல மனுஷரை நடுக்கேட்கும் அதிகாரத்தையும் அடைகிறார். பிதா சகல நடுத்தீர்ப்பையுஞ் சுதனுக்கு ஒப்புவித்தார். இவரையே சகலத்துக்கும் சுதந்தரவாளியாக்கிக்கொண்டார். (அரு. 5 ; எபி. 1)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதரைக்கண்டு பாவித்து அவர் சிநேகத்தைப்பற்றி மனம்பொருந்தித் தரித்திரத்தை அநுபவித்துத் தங்கள் சுயமனதை முழுதும் பரித்தியாகம்பண்ணின அவரது மெய்யான ஊழியருக்கும் இவ்விதமே சம்பவிக்கும். என்னைப்பற்றித் தன் வீட்டையும் ஜனங்களையும் விட்டுவிடுகிறவன் ஒன்றுக்கு நூறுபங்கு அடைகிறதுமல்லாமல் நித்திய சீவியத்தையுஞ் சுதந்தரித்துக்கொள்வானென்று இயேசுநாதர் தாமே உறுதியாகச் சொல்லுகிறார் (மத். 19). சுவிசேஷத்துக்கடுத்த இந்த மேலான யோசனையை நாம் கண்டுபிடித்து இதைப் பின்சென்று வந்ததைப்பற்றி சந்தோஷம் அடைவோமாக. ஆனால் சகலத்தையும் சிலவிசை திரளான ஆஸ்தியையும் நாம உதாரமாய்த் துறந்துவிட்டதின்பின், அற்பக்காரியத்தின்பேரில் ஆசைப்பற்றுதல் வையாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இதுகாரியத்தில் உன் மனதில் ஏதாகிலும் குற்றமுண்டோ இல்லையோவென்று விசாரித்துக்கொள்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் நமக்குத்தந்த சந்நியாச அழைத்தலுக்காகவும் விசேஷமாய்த் தரித்திரங் கீழ்ப்

படிதலென்கிற வார்த்தைப்பாட்டில் அடங்கியிருக்கிற வாக்குக்கெட்டாத நன்மைகளுக்காகவும் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக.

பிரதிக்கினை.—சந்நியாசத்துக்கடுத்த தரித்திரங் கீழ்ப்படிதலை அதிக உத்தமதனத்தோடே அநுசரிக்கப் பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

உலகத்தானுக்குச் சந்தோஷமும் இன்பமும் கல்லறையோடு முடிந்துபோம்; இயேசுநாதருக்கும் அவருடைய பிரமாணிக்கமுள்ள ஊழியருக்கும் அவைகள் அதிலேதான் துவக்கும்

தியானம்.—தன் சரீரத்தைப் பாராட்டி அசுத்தமான இன்பசுகங்களைமாத்திரம் தேடித்திரிந்த காமாதுரனுடைய முடிவு எவ்வளவு நிர்ப்பாக்கியமுள்ளதாயிருக்கும்! கல்லறையைப் பார்க்குமிடத்தில் அர்ச். அகுஸ்தீன் கலக்கமுற்று மனந்திரும்பினதற்கு உதவியாயிருந்த ஆறுதலற்ற நினைவு மாத்திரம் அவனுக்குண்டாகும். அதாவது, "இன்பம் அநுபவிப்பது சொற்ப நேரம், உபத்திரவப்படுவது நித்திய காலம்! நான் ஆத்தும சரீரத்தோடே நித்திய ஆக்கினையை அநுபவிக்கப்போகிறதற்காகவே ஒருநாள் கல்லறையை விட்டெழுந்திருப்பேனென்கிற நினைவு எவ்வளவோ கஸ்திக்குரியது! ஆனால் திவ்விய இரட்சகரின் பிரமாணிக்கமுள்ள சீஷனுடைய முடிவு இதற்கு எவ்வளவோ வித்தியாசமாயிருக்கும்! சாவு வருகிறதைக் காணும்போது, அவன் தன் திவ்விய குருவோடே சொல்லுவதாவது: ஆண்டவரே, எல்லாம் நிறைவேறினது; உலக இன்பசுகத்தை நான் பலியாக ஒப்புக்கொடுத்தது முடிந்துபோயிற்று; அதில் நான் பட்ட வருத்தமெல்லாத்தையும் ஆனந்த சந்தோஷமாய் மாற்றிப்போட்டீரே, சுவாமி, என்பான் (சங். 29). மேலும் அர்ச். சின்னப்பர் சொல்லுமாப்போல, நான் நன்றாய் யுத்தஞ் செய்தேன்; என் முடிவு காலம் சமீபித்திருக்கின்றது; உத்தானத்தின் பெரிய நாளில் ஆண்டவர் எனக்குக் கொடுக்கப்போகிற நீதியின் கிரீடமொன்றுக்கே நான் காத்துக்கொண்டிருக்கிறேனென்பான் (2 தீமோ. 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த நினைவும் யோசனையும் நமது புத்தியிலிருக்குந்தனையும், நாம் செய்யும் கடின பரித்தியாகத்துக்குத்தக்கதா ஊழியுள்ள காலம் மிகுந்த பேரின்ப பாக்கியம் அடைவோமென்று உறுதிகொண்டு, இலௌகீக சரீர சிற்றின்ப சுகங்களையெல்லாம் சட்டைபண்ணாதிருப்போம்.

சம்பாஷணை.—மகிமை பிரதாபத்தோடு உயிர்த்தெழுந்தருளின இயேசுநாதரோடே சம்பாஷணை செய்வோமாக.

பாஸ்குத் திருநாளுக்கடுத்த சனி

இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினதற்கு முந்தியும் பிந்தியும் தேவமாதாவிடத்தில் விளங்கின மனப்பற்றுதல்

ஆயத்தச் சிந்தனை.—உயிர்த்தெழுந்தருளின தன் திருக்குமாரனை முதல்விசை கண்ணாற் கண்டபோது பரிசுத்த கன்னியாஸ்திரி அநுபவித்த சந்தோஷத்தை நான் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்—என் தேவதாயார் அடைந்த ஞான ஆறுதல்களில் எனக்குப் பங்கு கிடைக்கத்தக்கதாக எனக்கு வரும் கஸ்தி இக்கட்டுகளைப் பொறுமையோடு அநுபவிக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

தேவமாதா ஆறுதலில்லாமல் பட்ட கஸ்தியின்பேரில்

தியானம்.—தன் ஏக குமாரனைப் பலவந்தமாய் விட்டுப் பிரிகிறது பெற்ற தாய்க்கு எவ்வளவோ வருத்தமாயிருக்கும்! அப்படியிருக்க, இயேசுநாதர் கல்லறையில் அடக்கப்பட்ட நேரமுதல் அவர் உயிரோடெழுந்தருளுகிற நேரமட்டும் எல்லாரிலும் மகா அன்புள்ள தாயாராகிய மரி

யம்மாள் ஆறுதலில்லாமல் அநுபவித்த வியாகுலம் இவ்வளவென்று யாராலே சொல்லக்கூடும்? அந்த நேரமெல்லாம் அவளுக்கு எவ்வளவு நீண்ட காலமாய்த் தோன்றியிருக்க வேண்டும்! தாயின் இருதயத்தை விட்டுக் குரூரமாய்ப் பிரித்து நீக்கின தனது நேச சேசுவை மீண்டும் எப்போது காண்பேனோவென்னும் ஏக்கமுற்றுப் பெருமூச்செறிவதில்தான் அக்காலமெல்லாம் செலவழித்திருப்பாள் என்பதற்குச் சந்தேகமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்பரதேசத்திலே என் இயேசுநாதரைக் காணாதிருக்கிற நான், பரலோகத்திலே மகிமைப் பிரதாப நிறைந்த அவருடைய மனுஷீகத்தில் அவரைக் காணவும் ஒருநாள் அவரோடு ஒன்றித்திருக்கவும் சமயம் எப்போ வருமென்று ஏக்கமுற்றிருக்கிறேனோ? ஐயோ! இல்லையே; இஃதேன்? நான் அவரைச் சரியாய் அறிந்து சிநேகிக்காததினாலேயும், உலகப்பற்றுதலும் படைக்கப்பட்ட பொருட்களின்பேரில் ஆவலும் என்னிடத்தில் அதிகமாயிருக்கிறதினாலேயும்தான்.

மனப்பற்றுதல்.—இப்பரதேசத்தில் ஆத்துமத்துக்கு ஆறுதலான இயேசுவே, நான் இவ்விடத்தில் எந்நேரமும் ஆறுதலில்லாமல் படுங் கஸ்தியைப் பார்த்து மனதிரங்கும்; வாரும், எழுந்தருளி வாரும், நீரேயல்லாமல் என் இருதயத்தைத் திருப்தியடையச் செய்யக்கூடுமான தொன்றுமில்லை (கி. அ. 3-ம் காண். 21-ம் அதி.).

பிரதிக்கினை.—கிரமந்தப்பின சகலவித பற்றுதலுக்கும் பயந்து அதைவிட்டு விலகுவோமாக.

2-ம் பிரிவு

தேவமாதா அடைந்த ஆறுதல்

தியானம்.—நாயிமென்னும் நகரத்து விதவை, மரித்தோரினின்று புதுமையாய் உயிர்ப்பிக்கப்பட்ட தன் மகனைக் கட்டி அரவணைக்குங்கால், அவள் அடைந்த சந்தோஷம் எப்பேர்க்கொத்ததென்று நீயே நினைத்துப்பார். பரிசுத்தமாதா மகிமைப்பிரதாபத்தோடு உயிர்த்தெழுந்தரு

ளின தன் திவ்விய குமாரனைக்காணும்போது அவள் அடைந்த ஆனந்த சந்தோஷம் அதிலும் பன்மடங்கு அதிகமானது. இயேசுநாதர் அடைந்த நிந்தை அவமான வேதனைக்கு அவளும் பங்காளியாயிருந்ததற்குத்தக்கது, அவர் உயிர்த்தெழுந்ததினால் அவள் அடைந்த சந்தோஷமும் அதிகரித்தது. பரலோகத்தில் அவர் அடைந்திருக்கிற பேரின்ப பாக்கியத்திலும் மகிமைப் பிரதாபத்திலும் தனக்கு மிகுந்த பங்கு கிடைக்குமென்றும் அவளுக்கு நிச்சயமாயிற்று. "ஆண்டவரே, என் ஆத்துமம் அடைந்த துயரத்திற்குத் தக்கது தேவரீர் வருவித்த ஆறுதல்கள் என் ஆத்துமத்தைப் பேரின்ப வெள்ளத்தில் அமிழ்த்தின" என்று தாவீது இராஜா தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன வாக்கியம் தேவமாதாவுக்கே செல்லும் (சங். 93).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கஸ்தி துன்பத்திலே நிலைமையோடும் உதாரத்தோடும் இருக்கிறதும், பீடைகளையும் அவமானங்களையும் சிநேகிக்கிறதும், எல்லாத்திலும் நம்மைப் பரித்தியாகம்பண்ணி இடைவிடாமல் நம்மை நாம் வெறுக்கப் பிரயாசப்படுகிறதும் எவ்வளவோ நியாயத்துக்குரியதாம்! மெய்யாகவே சுபாவத்துக்கு இது மகா வருத்தந்தான். நமக்கு இதில் தைரியம் வருவிக்க உத்தானத்தின் சந்தோஷங்களையுமன்றி நமது தாயாரிடத்தில் நிறைவேறின வேதவாக்கியத்தையும் நினைத்துக்கொள்வோமாக. அது யாதெனில்: "இயேசுநாதருடைய பாடுகளுக்கு நீ பங்காளியாயிருந்ததுபோல, அவர் அடைந்த ஆறுதலுக்கும் பங்காளியாயிருப்பாய்.

(2 கொரி. 1.)

மனப்பற்றுதல்.—நீ வருத்தப்படும்போதெல்லாம், உத்தானத்தின் சந்தோஷ நினைவானது உன் புத்தியில் பிரவேசித்து உனக்குத் திடனைக் கொடுக்க சர்வேசுரன் அநுக்கிரகம்பண்ணவேண்டுமென்று மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—ஆறுதலற்ற சமயத்திலே நான் பொறுமை காண்பித்ததற்காகவும், தேவ சித்தத்துக்கு அமைந்திருந்ததற்காகவும் எனக்கு அவர் சம்பாவனை

கொடுக்கத் தாமதிக்கமாட்டாரென்றும் நான் மனங்கலங்கி கஸ்திப்பட்டதற்குப் பதிலாய் அமரிக்கையும் சந்தோஷமும் உண்டாகச் செய்வாரென்றும் நினைப்பேனாக.

3-ம் பிரிவு

தேவமாதா சிலசமயம் ஆறுதலடைந்ததும், சிலசமயம் ஆறுதலில்லாமற்போனதும்

தியானம்.—அப்போஸ்தலர்களுக்கு அநேகம் விசை தரிசனையான இரட்சகர் தமது மாதாவுக்கு அதைப்பார்க்கிலும் அதிகமாய்த் தரிசனையாகி அதினால் அவள் ஆத்துமம் எப்போதும் புதிதான ஞான சந்தோஷத்தில் அமிழ்ந்தியிருக்கச் செய்தாரென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இந்தத் தரிசனைகள் கொஞ்ச நேரமாத்திரம் நிலைத்திருந்தன; ஆகையால் அவருடைய தரிசனையினாலே அவள் இருதயம் ஞான சந்தோஷத்தால் நிறைந்ததற்களவாக அவரைக் காணாததினால், அவள் இருதயம் வாடிப்போயிற்று என்று சொல்லலாம். இவ்விதமாய் ஆண்டவர் உயிர்த்து ஆரோகணமான நாற்பதுநாள்பரியந்தம் சந்தோஷமும், கஸ்தியும், ஆறுதலும், வறட்சியும் மாறிமாறிக்கொண்டிருந்தன.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இம்மேரையாய்ச் சர்வேசுரன் தமது தாசர்களை நடப்பித்துக்கொண்டு வருகிறார். ஒருவேளையில் தமது பிரசன்னமாகிய மதுரமுள்ள தோற்றங்கள் அவர்களிடத்தில் பிரகாசிக்கச் செய்து அவர்களுக்கு ஆறுதல் வருவிப்பார்; வேறொரு சமயத்தில் அவர்களுக்குத் தம்மை மறைத்துக்கொண்டு அவர்கள் இருதயம் வரண்டு வாடிப்போக விட்டுவிடுவார். இப்படி நம்மிடத்திலும் அடிக்கடி நடந்து வருகிறதன்றோ? தேவ ஊழியத்திலும் சிநேகத்திலும் நம்மை ஸ்திரப்படுத்தத்தக்கதாக, இவ்விதம் நமக்குச் சம்பவிக்கிறபோது இதினால் நாம் பிரயோஜனம் அடையவேணும், ஞானகாரியத்தில் தெளிந்தவர்கள் நமக்குக் கொடுக்கும் படிப்பினையும் இதுதான். இதில் நாம் சரியாய் நடந்த

துண்டாமென்றும் நம்மை இதில் சீர்படுத்திக்கொள்ள வேண்டியதேதென்றும் பார்த்துக்கொள்வோமாக.

சம்பாஷணை.—தேவமாதாவோடே சம்பாஷணை செய்து "பரலோகத்துக்கு இராக்கினியே, மனங் களிகூரு" மென்கிற வார்த்தைகளை ஒவ்வொன்றாய் நிறுத்திச் சொல்வோமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் முதல் வாரம்—ஞாயிறு

பத்தியுள்ள ஸ்திரீகள் இயேசுநாதருடைய கல்லறையைப் பார்க்கப் போகிறார்கள்

ஆயத்தச் சிந்தனை.—பத்தியுள்ள ஸ்திரீகள் இயேசுநாதருடைய திருச் சரீரத்தில் பூசப் பரிமளவர்க்கங்களைச் சேகரித்துக் கல்லறைபண்டைக்குப் போகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—சிநேகத்திலும் நம்பிக்கையிலும் உதாரத்திலும் அதிகரிக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இந்தப் பத்தியுள்ள ஸ்திரீகள் புறப்பட்டுப்போனது

தியானம்.—வெள்ளிக்கிழமை சூரியன் அஸ்தமிக்கும் போது, யூதர்களுக்கு ஓய்வுநாள் துவக்கமானதினாலே, இயேசுநாதருடைய திருச்சரீரம் பரிமள தைலத்தால் பூசப்பட்டு வெகு துரிதமாய்க் கல்லறையில் அடக்கப்பட்டது. மரியம்மாளென்கிற பேர்கொண்ட மூன்று பத்தியுள்ள ஸ்திரீகளாகிய மரியமதலேனம்மாளும், யாகப்பர் தாயாராகிய மரியம்மாளும், மரியசலோமையம்மாளும், தங்களால் மிகவும் சிநேகிக்கப்பட்ட குருவின் திருச் சரீரத்தில் மறுபடியும் கூடிய ஜாக்கிறதையோடு பரிமளவர்க்கங்களைப் பூசத்தக்கதாக ஓய்வுநாளுக்குப்பின் வந்த விடியற்காலத்திலே கல்லறையை நோக்கி வெகு தீவிரமாய் வந்தார்கள். அவர்களைப்பற்றி அர்ச். மாற்கு எழுதிவைத்ததாவது:

மரியமதலேனம்மாளும், யாகப்பருடைய தாயான மரியம்மாளும், சலோமையம்மாளும் அதிகாலமே புறப்பட்டுச் சூரிய உதயத்தில் கல்லறைக்கு வருகிறார்கள் (மாற். 16).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பத்தியுள்ள இந்த மூன்று ஸ்திரீகளும் மகா தைரியத்தோடும் ஆத்திரத்தோடும் துணிவோடும் அதிகாலையில் பட்டணத்தைவிட்டுத் தனியே புறப்பட்டுக் கல்லறையைக் காத்திருந்த சேவகருக்குப் பயப்படாமல் அதை நோக்கிக் கபாலமலையின்மேல் ஏறிப்போகிறதைப் பார்த்து ஆச்சரியப்படாதவர்கள் யார்? இந்தத் தைரியமும் துணிவும் அவர்களிடம் உண்டாவதற்குக் காரணம் யாது? சிநேகந்தான். உன்னிடத்திலும் இப்பேர்க்கொத்த தேவசிநேகமிருந்தால் சர்வேசுரன் ஸ்தோத்திரத்துக்காகவும் பிறர் இரட்சணியத்துக்காகவும் எத்தனையோ காரியங்களை எடுத்துச் செய்வாய்! உன் ஞானமுயற்சிகளையெல்லாம் எவ்வளவோ நிலைமையோடும் உத்தமதனத்தோடும் செய்துகொண்டு வருவாய்! சகல புண்ணியங்களிலும் ஆச்சரியமான விதமாய் ஞானவர்த்திப்பு அடைவாய்; ஏனென்றால் சிநேகமானது எல்லாம் எளிதாக்கும்; போதுமென்று ஒருக்காலுஞ் சொல்லாது.

மனப்பற்றுதல்.—குளிர்ந்திருக்கிற உன் இருதயத்தில் தேவசிநேக அக்கினி பற்றியெரியச் சர்வேசுரனைப் பார்த்துக் கெஞ்சி மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—"ஆண்டவரே, உமது சிநேகத்தையும் வரப்பிரசாதத்தையும் எனக்குக் கொடும்; அதுவே எனக்குப் போதும், அதினால் நான் போதுமானமட்டும் ஐசுவரியவானாயிருப்பேன்" என்று அர்ச். இஞ்ஞாசியார் சொல்லிக்கொண்டுவந்த இம்மனவல்லயச் செபத்தை நாமும் அடிக்கடி சொல்லுவோமாக.

2-ம் பிரிவு

பத்தியுள்ள இந்த ஸ்திரீகளுக்குண்டான விக்கினம்

தியானம்.—குருப்பிரசாதிகளும் பரிசேயரும் கல்லறை வாசலை அடைத்து முத்திரை போட்டிருந்த பெருங்

கல்லானது இவர்கள் நினைத்துவந்த சுகிர்த கருத்துக்குப் பலத்த விக்கினமாயிருந்தது. கல்லறை வாசலிலே நின்று அந்தக் கல்லை நமக்காகப் புரட்டித் தள்ளுகிறவர்களாரென்று வழியிலே தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டு வந்தார்கள் (மாற். 16). ஆனால் தங்களால் விலக்கமுடியாதென்று தோன்றின விக்கினத்துக்கு நிவிர்த்தி யாதென்று தேடாமல், தங்கள் நல்ல எஜமானுக்குச் செய்யவேண்டிய கடைசிப் பணிகளைப்பற்றிய சிந்தனையாகவே நடந்து சென்றார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உனக்குக் கொடுத்த கட்டளைகளையும் நீ தொடங்கிய பக்திகிருத்தியங்களையும் உன் நல்ல பிரதிக்கினைகளையும் நிறைவேற்றுகிறதில், சில சமயங்களிலே முன்னே நினையாத விக்கினங்கள் உனக்கு நேரிடும்; அவைகளை நீக்க உன்னால் இயலாதென்று முதலில் தோன்றும். அப்போது மனந்தத்தளித்துத் தொடங்கினதை விட்டுவிடாதே. அந்தப் பக்தியுள்ள ஸ்திரீகளைக் கண்டுபாவித்து, உன்னால் செய்யக்கூடுமானதைச் செய்து, அது தேவ தோத்திரத்துக்கும் மனிதர் ஈடேற்றத்துக்கும் உதவியாயிருக்குமாகில், சர்வேசுரன் அதை நிறைவேற்றிவைப்பாரென்கிற முழு நம்பிக்கையோடு துவக்கினதைத் தொடர்ந்து நடத்து. நீ இந்தப் பிரகாரம் நடந்தாயோ?

மனப்பற்றுதல்.—தேவ வரப்பிரசாதத்தின் உதவியில்லாவிட்டால், நிச்சயமாய்த் தப்பிப்போகவேண்டியிருந்த எத்தனையோ சமயங்களில் நம்மைச் சர்வேசுரன் ஆதரித்ததற்காக அவருக்கு நன்றியறிந்திருப்போமாக. அவருடைய அளவில்லாத வல்லபத்தின்பேரிலும் தயவின்பேரிலும் நமக்கு மாறாத நம்பிக்கை உண்டாக மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—வருத்தமான சமயங்களிலேயும் மனத்தத்தளிப்பான சோதனைகளிலேயும் தாமதமில்லாமல் செபத்தின் வழியாய் தேவ உதவியை நாடப் பழகு.

3-ம் பிரிவு

அந்த ஸ்திரீகள் கல்லறையில் வந்துசேர்ந்தார்கள்'

தியானம்.—அந்தப் பக்தியுள்ள ஸ்திரீகள் கல்லறை அண்டையில் வந்துசேர்ந்து அதைப் பார்த்தபோது, கல்லைப் புரட்டி வைத்திருக்கக் கண்டார்கள் (மாற். 16). இவ்வளவு பட்சமும் நிலைமையும் காண்பித்த ஸ்திரீகளுக்காகச் சர்வேசுரன் ஒரு புதுமை செய்யச் சித்தமானார்: அதாவது, அவர்கள் கல்லறை அண்டையில் நெருங்கிவருகிறபோது, திடீரென்றாற்போல பூமி அதிர்ந்து கல்புரட்டப்பட, அதைக் காத்திருந்த சேவகரும் ஓடிப்போனார்கள் *

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இம்மேரையாய்ச் சர்வேசுரன் தமதுபேரில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களுக்கும் நம்பிக்கையில்லையென்றிருக்கும் காரியத்திலே முதலாய் மனிதருடைய வீண் யோசனைக்கு இடங்கொடாமல் தங்கள் நம்பிக்கையெல்லாம் அவர்பேரில் வைத்திருக்கிறவர்களுக்கும் அற்புதமாய் உதவி செய்வார். அப்படியே நம்பிக்கைக்கு விரோதமான காரியத்திலே அபிரகாம் நம்பிக்கையாய் விசுவசித்தாரென்று அர்ச். சின்னப்பர்

* சுவிசேஷகராகிய மத்தேயுஸ் ஆண்டவர் உயிர்த்தெழுந்தருளினதைக் குறித்து விபரமாய்ச் சொல்லியிருக்கிறதாவது: அப்போது "இதோ, பூமி மிகவும் அதிர, ஆண்டவருடைய தூதன் வானத்தினின்று இறங்கிவந்து கல்லைப் புரட்டி அதின்மேல் உட்கார்ந்தார். அவருடைய ரூபம் மின்னலைப்போலவும் அவருடைய உடை வெண் பனியைப்போலவும் இருந்தது. காவற் சேவகரோ அவரைக் கண்ட பயங்கரத்தால் திடுக்கிட்டுச் செத்தவர்களைப் போலானார்கள். பின்னும் அவர்களிற் சிலர் பட்டணத்தில் வந்து சம்பவித்த யாவையும் குருப்பிரசாதிகளுக்கு அறிவித்தார்கள். அப்போது அவர்கள் மூப்பர்களோடே கூட்டங்கூடி ஆலோசனை செய்து காவற் சேவகருக்கு மிகுந்த பணத்தைக் கொடுத்துச் சொன்னதாவது: நாங்கள் நித்திரை செய்கையில், அவனுடைய சீஷர்கள் இரவில் வந்து அதைத் திருடிக்கொண்டு போனார்களென்று சொல்லுங்களென்றார்கள். அவர்கள் சொன்னபடியே சேவகரும் செய்தார்கள். இந்நாள் வரைக்கும் இந்தப் பேச்சு யூதர்களுக்குள்ளே பரம்பியிருக்கின்றது" (மத். 28).

எழுதி வைத்தார் (உரோ. 4). நம்மாலாகிற காரியங்களை அசட்டைபண்ணக் கூடாதென்கிறது சரியே; ஆனால் சர்வேசுரனுடைய தயையின்பேரிலும் அவருடைய சர்வ வல்லமையின்பேரிலும் வைக்கவேண்டிய நம்பிக்கை மானிட அறிவைக்கடந்ததாகவும் அநேக சமயங்களில் அதைப் பொருட்படுத்தாததாகவும் இருக்கவேண்டும். உன் ஞான அபிவிர்த்திக்கு மிகவும் உதவியான இந்த ஒழுங்குக்கு இதுவரையில் உன் நடக்கை எப்படி ஒத்திருந்ததென்று பார்த்துக்கொள்.

சம்பாஷணை.—பரிசுத்தர்களான அந்த ஸ்திரீகளோடு சம்பாஷணை செய்.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் முதல் வாரம்—திங்கள்

நமது ஆண்டவராகிய இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினாரென்று ஒரு சம்மனசு பத்தியுள்ள ஸ்திரீகளுக்கு அறிவிக்கிறார்

இயேசுநாதர் பத்தியுள்ள ஸ்திரீகளுக்கும் தமது சீஷர்களுக்கும் தம்மைக் காண்பிக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—கல்லறை திறக்கப்பட்டிருக்கிறதையும் பத்தியுள்ள ஸ்திரீகள் அதை ஆச்சரியத்தோடும் சந்தோஷத்தோடும் உற்றுப்பார்க்கிறதையும் காண்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—ஞான சந்தோஷத்தையும் இயேசுநாதர்பேரில் சிநேகத்தையும் கேட்பாயாக.

முதல் பிரிவு

சம்மனசு பத்தியுள்ள ஸ்திரீகளுக்குத் திடன் வருத்துகிறார்

தியானம்.—பூமி அதிர்ந்ததினாலே அந்த ஸ்திரீகள் பயந்து கலங்கி இனி என்னசெய்கிறதென்று தெரியாதிருக்கையில், ஆண்டவருடைய தூதனானவர் அவ்விடத்தில்

அவர்களுக்குத் தயாளமான வார்த்தை சொல்லி அவர்களுடைய புத்தியைத் தெளிவித்து: நீங்கள் பயப்படவேண்டாம்; சிலுவையில் அறையுண்ட நசரேயரான இயேசுநாதரைத் தேடுகிறீர்களென்று அறிந்திருக்கிறேனென்றார் (மத். 28). இந்த ஸ்திரீகளுக்குத் திடனும் ஆறுதலும் வருவித்த அந்தச் சம்மனசுதானே கல்லறையைக் காத்துக்கொண்டிருந்த சேவகருக்குப் பயம் உண்டாக்கி அவர்கள் ஓடிப்போகச் செய்தார். இந்த வித்தியாசம் ஏன்? அந்தச் சேவகர்களுக்குக் கெட்ட கருத்தும், பத்தியுள்ள ஸ்திரீகளுக்குப் பெரும் புகழ்ச்சிக்குரிய கருத்தும் இருந்ததினால்தான். மேலும் பயப்படாதேயுங்கள் என்று சம்மனசு அவர்களைத் தேற்றினதற்குக் காரணம் "அவர்கள் சிலுவையில் அறையுண்ட இயேசுவைத் தேடினதினிமித்தம்" என்பதைக் கவனி.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னிடத்தில் பயமும் கலக்கமும் உண்டாகும்போது, நீ சிலுவையில் அறையுண்ட இயேசுநாதரை அடுத்துப்போய் பாடுபட்ட சுரூபத்துக்கு முன்பாகக் கொஞ்சநேரம் செபம் பண்ணுவாயாகில், உன் ஆத்துமத்துக்குச் சமாதானமும் திடனும் உண்டாகும்.

மனப்பற்றுதல்.—படைக்கப்பட்ட வஸ்துக்களின் வழியாய் உன் ஆத்தும சமாதானத்தையும், சந்தோஷத்தையும் அநேகவிசை நீ தேடித்திரிந்ததினாலே வெட்கப்பட்டு மனஸ்தாபப்படக்கடவாய்.

பிரதிக்கினை.—நான் மனங்கலங்கி ஆறுதலற்றிருக்கும்பொழுது, இயேசுநாதருடைய சிலுவையடியிலே என் மனத்துயரத்தைச் சொல்வேனாக.

2-ம் பிரிவு

இரட்சகர் உயிர்த்தெழுந்ததைச் சம்மனசு பத்தியுள்ள ஸ்திரீகளுக்கு அறிவிக்கிறார்

தியானம்.—சம்மனசு பத்தியுள்ள ஸ்திரீகளுக்குத் திடன் வருத்துகிறதுமல்லாமல், இரட்சகர் உயிர்த்தெழுந்த

மகத்தான பரம இரகசியத்தை அவர்களுக்குச் சொல்லி அறிவிக்கிறதாவது: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில தேடுவதென்ன? அவர் இங்கில்லை; முன் அவர் திருவுளம்பற்றினபடியே, உயிர்த்தெழுந்தருளினார். ஆண்டவரை வைத்திருந்த இடத்தை வந்து பாருங்களென்றார் (லூக். 24; மத். 27-28). இரட்சகர் உயிர்த்தெழுந்தார் என்கிற அதிசயத்தின் உண்மைக்கு எண்பனையாக சம்மனசு எடுத்துக்கூறிய அத்தாட்சி ஆணித்தரமான அத்தாட்சியாகும்:—"அவர் இங்கே இல்லை"—அதாவது கல்லறையில் இல்லை. வாஸ்தவத்திலும், "அவர்கள் கல்லறையில் பிரவேசித்தபோது, ஆண்டவராகிய இயேசுநாதருடைய சரீரத்தை அவர்கள் காணவில்லை" என்று அர்ச். லூக்காஸ் சொல்கிறார் (லூக். 24, 3).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீயும் இயேசுநாதரோடு ஞானவிதமாய் உயிர்த்தெழுந்து, இதுவரையில் இருந்ததற்கு முழுதும் வித்தியாசமாய், உனக்கிருந்த துர்ப்பழக்கங்கள், கணக்கற்ற குறைகளாகிற கல்லறையினின்று வெளியேறிவிட்டாயென்று உன் வார்த்தையும் நடக்கையும், எல்லாரும் அறிய அத்தாட்சி பகருமாகில், உனக்கு எவ்வளவோ பாக்கியம்! இதினால் உன் சிரேஷ்டர்களுக்கும் உன் சகோதரர்களுக்கும் எவ்வளவோ ஆனந்தம் உண்டாகும்! இதெல்லாம் உன்னால் ஆகும் கருமமே: தேவவரப்பிரசாதத்தின் செயலோடு உன் முயற்சி, இடைவிடாத முயற்சி ஒன்றித்திருப்பது போதும். வருஷத்தினுள்ள மற்றக் காலங்களைப்பார்க்க, இந்தப் பரிசுத்த நாளிலே அந்த வரப்பிரசாதமானது அதிகமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மனப்பற்றுதல்.—பழைய மனுஷனையும் அவன் கிரியைகளையும் விட்டுவிடுங்களென்று அர்ச். சின்னப்பர் கொடுத்த கட்டளை உன்னிடத்தில் சரியாய் நிறைவேற, மகா பத்தி சுறுசுறுப்போடும் மெத்த நம்பிக்கையோடும் தேவ வரப்பிரசாத உதவியை இரந்து மன்றாடுவாயாக.

(கொலோ. 3)

பிரதிக்கினை.—என் ஞான அபிவிர்த்திக்கு விசேஷ விக்கினமான குற்றத்தைத் தள்ளிப்போடுவேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் உயிர்த்ததை அறிவிக்கும்படி சம்மனசு பத்தியுள்ள ஸ்திரீகளுக்குக் கட்டளை கொடுக்கிறார்

தியானம்.—அவர் உயிர்த்தெழுந்ததை அவருடைய சீஷர்களுக்கு அறிவியுங்களென்றார் (மத். 28). திவ்விய இரட்சகருடைய தயாளத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவனார்? அவர் பாடுபட்டபோது, அவருடைய சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனதுமல்லாமல், அவர் மரித்தபின் தங்கள் திவ்விய குருவை இனிமேல் காணமாட்டோம், அவர் மரித்ததோடே எல்லாம் முடிந்துபோயிற்றென்று நினைத்து, மிகுந்த வியாகுலப்பட்டுக்கொண்டிருந்ததினாலே இயேசுநாதர் தாம் திரும்ப உயிர்க்கப்போகிறதைக் குறித்துச் சொன்ன தீர்க்கதரிசனத்தை அவர்கள் ஒருவிதத்தில் அங்கீகரியாதவர்களாய்க் காணப்பட்டாலும், தமது சம்மனசு வழியாகவும் பத்தியுள்ள ஸ்திரீகள் வழியாகவும் ஆண்டவர் அவர்களுக்கு ஆறுதல் வருவிக்கிறார்; அவர்களுக்கு உறுதி சொல்லவும் திடன் வருத்தவும் தீவிரிக்கிறார். அவர்களைக் கைவிட்டுத் தண்டிப்பதே தகுதி எனத் தோன்றுகிறது; ஆனால் ஆண்டவர் அதற்குமாறாய்த் திரளான உபகாரங்களைப் பொழிகிறார். அவர் தமது இருதயத்தின் தயவைமாத்திரம் அநுசரித்து நடப்பதே இதற்குக் காரணம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ சிலவிசை அநேக வருஷகாலமாய் உன்பாவங்களினால் இயேசுநாதருடைய திரு இருதயத்துக்குக் கஸ்தி வியாகுலத்தை வருவித்திருந்தும், நீ மனந்திரும்பின நாள் முதற்கொண்டு அவரைச் சரியாய்ச் சிநேகியாமலிருந்தும், அவர் உனக்கு ஆத்துமத்திலும் சரீரத்திலும் செய்துள்ள அனந்த உபகாரங்களுக்கு அந்தத் தயவுதானே காரணம்.

சம்பாஷணை.—இயேசுநாதரோடே சம்பாஷணை செய்து, இதுவரையில் நடந்ததெல்லாத்தையும் நினைத்து மனஸ்தாபப்பட்டு, இனிமேலாக அவரைச் சிநேகித்து ஊழியம்பண்ணத் தீர்மானித்து உன் பலவீனங்களையெல்லாம் அவருக்கு வெளிப்படுத்தி நீ செய்த நல்ல பிரதிக்கினைகளை ஒப்புக்கொடுத்து அவருடைய உதவி சகாயங்களை இரந்து மன்றாடுவாயாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் முதல் வாரம்—சேவ்வாய்

இயேசுநாதர் மரியமதலேனாளுக்குக் காட்சி கோடுக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—மரியமதலேனாள் கல்லறைக்கு முன்னே தியானித்துக்கொண்டிருக்கையில், உயிர்த்தெழுந்தருளின இயேசுநாதர் அவளுக்குக் காட்சி கொடுக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்.—மரியமதலேனாளிடத்தில் விளங்கின விசுவாசம், சிநேகம், சந்தோஷம் ஆகிய இவைகளில் எனக்கு ஏதாகிலும் பங்கு கிடைக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

திருக்கல்லறையண்டையில் மரியமதலேனாள் மாத்திரம் தனித்து நிற்கிறாள்

தியானம்.—மரியம்மாளென்னும் பேர்கொண்ட மற்ற இரண்டு ஸ்திரீகளும் ஆண்டவர் உயிர்த்த நற்செய்தியை அறிவிக்கும்படி எருசலேம் பட்டணத்துக்குப் போயிருக்க, மதலேனாள் கல்லறை வாசலில் அழுதுகொண்டு அசையாமல் நிற்கிறாள் (அரு. 20). தன் நேச திவ்விய குருவாகிய இயேசுநாதரை வைத்திருக்கும் இடத்தில் சிநேகமானது அவளைப் பரவசமாக்கிக் கட்டப்பட்டவள்போல

அவளை நிறுத்திக்கொண்டிருக்கின்றது. அவரை அவள் பார்க்கிறதுபோலவும் அவர் பாதத்திலிருக்கிறதுபோலவும், அவர் சொல்லுகிறதைக் கேட்கிறதுபோலவும் தோன்றுகிறது. அவள் இருதயத்தில் நின்று பட்சமுள்ள பெருமூச்சுக் கிளம்பி அவள் அழுதுகொண்டு தன்னால் மிகவும் சிநேகிக்கப்பட்டவரின்பேரில் மாத்திரம் கவலையாயிருக்கிறாள்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தியானத்தில் பரவசமாயிருக்கிற ஆத்துமாவின் உயிருள்ள சாயலை நாம் இவ்விடத்தில் காண்கிறோம். தியானயோகமென்று ஞானிகளால் சொல்லப்பட்ட இவ்வித செபத்துக்கும் நமக்கும் எவ்வளவோ தூரம்! ஆகிலும் உலக பராக்கு சந்தடிகளைவிட்டு விலகியிருக்கிற நமக்கு, இப்பேர்க்கொத்த செபத்தியானஞ் செய்வது எளிதாயிருக்கவேண்டியதன்றோ? இவ்வளவு மேலான நன்மைக்குரிய செபத்தியானப் பழக்கம் நம்மிடம் இல்லாததற்குக் காரணம் என்ன? இதற்குத் தோமாஸ் அ கெம்பிஸ் என்ற ஞானி சொல்வது போல, "அழிந்துபோகிற சகல பொருட்களையுந் துறந்துவிட்டுப் படைக்கப்பட்ட அப்பொருட்களினால் வரும் ஆறுதலைத் தேடாதிருக்கிற கிறீஸ்துவர்கள் மகா அபூர்வம்" என்பதே இதற்குக் காரணம். (கி. அ. 3-ம் காண். 53-ம் அதி.)

மனப்பற்றுதல்.—நாம் இன்னமும் மகா சிலாக்கியமும் இலௌகீக ஆசையும் உலகப்பற்றும் உள்ளவர்களாயிருக்கிறதைக் கண்டு சர்வேசுரன் சமுகத்திலே மெத்தவும் நம்மைத் தாழ்த்தி, அவரோடே ஒன்றித்துத் தியானயோகத்தை அடைய ஆசைப்படுவோமாக.

பிரதிக்கினை.—சுபாவத்துக்கு அடுத்த மிஞ்சின பற்றுதலையெல்லாம் வெறுத்துத் தள்ளி, இயேசுநாதரோடே நீ உயிர்த்தவனாயிருந்தால், பூலோக காரியங்களைத் தேடாமல் பரலோக காரியங்களை மாத்திரந் தேடிச் சுகிப்பாயென்று அர்ச். சின்னப்பர் சொன்ன புத்திக்கு ஒத்தபடி நடந்து கொள்வாயாக (கொலோ. 3).

2-ம் பிரிவு

இரண்டு சம்மனசுக்கள் மதலேனாளுக்குத் தரிசனையாகிறார்கள்

தியானம்.—மரியமதலேனம்மாள் கல்லறையின் உட்புறத்தைப் பார்த்தபிரகாரமாய்த் தியானத்தில் அமிழ்ந்திப் போயிருக்கையில், திடீரென்றாற்போல வெள்ளை வஸ்திரம் அணிந்த இரண்டு சம்மனசுக்கள் இயேசுநாதருடைய சரீரம் வைத்திருந்த இடத்திலே உட்கார்ந்திருக்கக் கண்டாள். அப்போது அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாயென்று கேட்க, என் ஆண்டவரை எடுத்துக் கொண்டுபோனார்கள்; மேலும் அவரை எங்கே வைத்தார்களோ அறியேனென்று அவர்களுக்குச் சொன்னாள் (அரு. 20).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மதலேனாள் இயேசுநாதரை முகமுகமாய்த் தரிசியாமலிருந்ததுதான் அவள் பட்ட துயரத்துக்குங் கஸ்திக்கும் ஏக காரணமாயிற்று. நான் பத்தி சுறுசுறுப்பாயிருந்தகாலத்தில் இயேசுநாதரை உருக்கமாய்த் தரிசித்து உணர்ந்ததினால், என் அந்தஸ்தில் வெகு பாக்கியம் அடைந்ததுமன்றி மகா அருமையான புண்ணியங்களை முதலாய் அநுசரிப்பதில் மெத்த சந்தோஷம் அநுபவித்தேனே. இப்போது அவருடைய தரிசனத்தை இழந்து, அந்த ஆனந்த இன்பங்களைப் போக்கடித்திருப்பதே, எனது துயரத்துக்கும் கஸ்திக்கும் ஏக அல்லது விசேஷ காரணமாயிருந்தால், எவ்வளவோ பாக்கியவானாவேன்!

மனப்பற்றுதல்.—நான் தேவ வரப்பிரசாதங்களை இழந்துபோனதற்காக இவ்வளவு கஸ்திப்படாமல் இலௌகீக காரியங்களைப் போக்கடித்ததைப்பற்றி அடிக்கடி மெத்த கஸ்திப்பட்டதினால் வெட்கிப் பொறுத்தல் கேட்பேனாக.

பிரதிக்கினை.—நமது நவசந்நியாசத்தின்போது, நமக்கிருந்த நல்ல கருத்தும் பற்றுதல்களும் நமக்கு மீண்டும் ஏற்படுவதற்கான உபாயங்களைத்தேடி, அவைகளை அநுசரிப்போமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் மரியமதலேனாளுக்குத் தம்மைக் காண்பிக்கிறார்

தியானம்.—மரியமதலேனாள் காட்டின கஸ்தியையும், ஆசையையும் சிநேகத்தையும், அவளுக்குத் தம்மைக் காண்பியாமல், பார்த்துக்கொண்டிருந்த இயேசுநாதர் அவைகளைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு அவைகளுக்குச் சம்பாவனை கொடுக்கச் சித்தமானார். அதெப்படியென்றால், அவள் தன்னால் சிநேகிக்கப்பட்டவரை எங்குந் தேடித் திரும்பிப்பார்க்கையில் இயேசுநாதர் நிற்கிறதைக் கண்டாள். ஆனால் அவர் இயேசுநாதரென்று அவள் அறியாததினாலே, அவர் தோட்டக்காரனென்று நினைத்து: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோயிருந்தால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொண்டுபோவேனென்றாள். அதற்கு இயேசுநாதர்: மரியே என்று வசனித்தார். இந்த ஒரே சொல்லினாலே அவள் அவரை இயேசுநாதரென்று கண்டறிந்து, அவர் திருப்பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து: குருவே என்றுரைத்தாள் (அரு. 20).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சுவிசேஷத்தில் முதலாவதாகக் கூறியிருக்கிற, நமது இரட்சகருடைய இந்தக் காட்சியில் நமக்கு எத்தனையோ ஞானப் படிப்பினைகளும், எவ்வளவு ஆறுதலும் அடங்கியிருக்கின்றன! அவர் யாருக்குத் தம்மைக் காண்பிக்கிறார்? பச்சாத்தாபப்பட்ட பாவிக்கல்லவோ? இத்தகைய அபூர்வ அன்புக்கும் சனுவுக்கும் அவள் அருகியானதெவ்வாறு? 1-வது, அவள் தன்னிடத்திலுள்ள சிநேக உதாரத்தினாலும்; 2-வது, இயேசுநாதர் பாடுபட்டபோது, அவள் அநுபவித்த கஸ்தி மிகுதியினாலும்; 3-வது, இயேசுநாதரைப் பார்க்கவேணுமென்கிற ஆசையினால் அவரைத் தேடித் திரிந்ததில் அவள் காண்பித்த மாறாத நிலைமையினாலும், இந்த நன்மையெல்லாம் அவள் அடைந்தாள். நாமும் பரலோகத்தில் மகிமைப் பிரதாபராயிருக்கிற இயேசுநாதரைப் பார்க்கவேணுமென்ற ஆசையை நமது உள்ளத்தில் எழுப்பி,

அவரை நோக்கி: இயேசுவே, தேவரீரைச் சேவிக்கிறோமென்று அடிக்கடி உரைத்து, அவர் ஊழியத்தில் உதாரமாயிருந்து நமது பட்சத்தை எண்பிப்போமாக. அவ்விதம் செய்வோமாகில், நாம் முந்தி எத்தனை பாவங்களைச் செய்திருந்தாலும், அவருடைய தெய்வீக சனுவில் நமக்கு ஏராளமான பங்கு கிடைக்குமென்பது நிச்சயம்.

சம்பாஷணை.—அர்ச். மரியமதலேனம்மாளோடே சம்பாஷணை செய்து தமது மாதாவுக்குப் பிறகு, மதலேனாளுக்கு இயேசுநாதர் காட்சி கொடுத்ததினாலே, அவளை மிகவுங் கொண்டாடி இப்பேர்க்கொத்த சனு அவளுக்குக் கிடைக்கக் காரணமான பரிசுத்த அந்தஸ்தில் நாமும் இருக்கச் சர்வேசுரனிடத்தில் அவள் இரந்து மன்றாடக் கேட்போமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் முதல் வாரம்—புதன்

மரியாயென்னும் பேர்கொண்ட வேறே இரண்டு ஸ்திரீகளுக்கு இயேசுநாதர் காட்சி கொடுக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—இவ்விரு பத்தியுள்ள ஸ்திரீகளின் ஆச்சரியத்தையுஞ் சந்தோஷத்தையும் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—இயேசுநாதர் தமது விசேஷ பட்சத்தினால் அவர்களுக்குக் காண்பித்த சனுவில் உனக்கும் பங்கு கிடைக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயாகப்பர் தாயாராகிய மரியம்மாளும் மரியசலோமையம்மாளும் பட்டணத்துக்குத் திரும்பிப் போகிறார்கள்

தியானம்.—இரட்சகர் உயிர்த்ததை அவருடைய சீஷர்களுக்குப் போய் அறிவிக்கச் சம்மனசு பத்தியுள்ள

அந்த ஸ்திரீகளுக்குக் கட்டளையிட்டார். இந்தக் கட்டளையை நிறைவேற்ற மூவரும் போகவேண்டியது அவசரமல்ல. ஆகையால் மரியமதலேனாள் தன் பத்திக்குத் தக்கது கண்ணீர்விட்டழுது, தன் பற்றுதலைக் காண்பிக்கக் கல்லறையருகில் நின்றாள். மற்றிருவரும் சீஷர்கள் ஒளிந்திருந்த எருசலேம் பட்டணத்தை நோக்கி வெகு விரைவாய்ச் சென்றார்கள். அர்ச். மத்தேயுஸ் எழுதிவைத்தாற்போல, ஸ்திரீயானவர்கள் கல்லறையை விட்டுவிட்டுச் சீஷர்களுக்கு இதை அறிவிக்க ஓடிப்போனார்கள். இதற்குச் சம்பாவனையாக அவர்களுக்கும் இயேசுநாதர் காட்சி கொடுத்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விரு சங்கதியைப் பார்க்கையில் பேறுபலனும் சம்பாவனையும் அந்தரங்கக் கிரிகைகளில் அடங்காமல், அதைச் செய்யும் முகாந்தரத்திலும் கருத்திலும் அடங்கி இருக்கிறதென்று தெளிவாய்த் தெரியவருகின்றது. அப்படியே அலுவலில்லாத நேரத்தில் ஒருவன் தேவநற்கருணை சந்திக்கப் போகிறான்; மற்றொருவன் பிறசிநேகத்துக்கடுத்த கருமத்தை நிறைவேற்ற அல்லது பிரயோஜனமான யாதொரு வேலையைச் செய்யப்போகிறானென்று வைத்துக்கொள். இவர்கள் அவைகளைச் செய்யும் முகாந்திரத்திலுங் கருத்திலும் உள்ள பற்றுதல் சமமாயிருந்தால், இவர்களுடைய பேறுபலனும் சம்பாவனையும் சமமாகவே இருக்கும்.

மனப்பற்றுதல்.—அநேகங் காரியங்களிலே நமது மனம்போல் நடக்க ஆண்டவர் நமக்கு விடைகொடுத்து, அவருக்குப் பிரியப்படவேணுமென்கிற கருத்தோடு நாம் செய்கிற எந்தக் காரியத்துக்கும் சம்பாவனை கொடுத்து வருவதினிமித்தம் அவருக்கு நன்றியறிந்திருப்போமாக.

பிரதிக்கினை.—சுபாவத்துக்கு மேற்பட்ட முகாந்தரத்தைப்பற்றி சகலமுஞ் செய்; அடிக்கடி இந்த நல்ல கருத்தைப் புதுப்பித்துக்கொள்.

2-ம் பிரிவு

பத்தியுள்ள ஸ்திரீகளுக்கு இயேசுநாதர் வழியில் தம்மைக் காண்பிக்கிறார்.

தியானம்.—சம்மனசு கொடுத்த கட்டளையை நிறைவேற்றத் தாமதமில்லாமல் பட்டணத்துக்குத் திரும்பிப் போவதில் இயாகப்பர் தாயாராகிய மரியம்மாளும் மரிய சலோமையம்மாளுங் காண்பித்த சுறுசுறுப்புக்கு ஆண்டவர் மிகுந்த சம்பாவனை கொடுக்கச் சித்தமானார். எப்படியென்றால் அவர்கள் விரைவாய் நடந்துபோகையில் திடீரென்று இயேசுநாதர் அவர்களுக்கு எதிர்ப்பட்டு: நீங்கள் வாழ்கவென்றார். அவர்களோ அவரை அணுகி, அவருடைய பாதங்களைத் தழுவி, அவரை ஆராதித்தார்கள். அப்போது இயேசுநாதர் அவர்களை நோக்கி: நீங்கள் அஞ்சவேண்டாம். என் சகோதரர் கலிலேயா நாட்டுக்குப் போகும்படி நீங்கள் போய் அவர்களுக்கு அறிவியுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்களென்றார் (மத். 28, 9-10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தம்மைச் சிநேகிக்கிறவர்கள் மட்டில் கர்த்தர் எவ்வளவோ தயையுள்ளவராயிருக்கிறார்! கீழ்ப்படிதலினால் தம்மைப் பற்றிச் செய்யுங் கிரிகைகளுக்குச் சம்பாவனை கொடுக்க அவர் எவ்வளவோ தீவிரப்படுகிறார்! "நீங்கள் வாழ்க, அஞ்சவேண்டாம்" என்று சொன்ன வசனத்தில் எவ்வளவோ மதுரமும் அன்பும் விளங்குகிறது! இதன்பின் அவர்களை நோக்கி: என் சகோதரருக்கு அறிவியுங்களென்கிறார். முந்தித் தம்மை விட்டு ஓடிப்போனவர்களுக்கும் மனுஷர் முன்பாகத் தம்மை மறுதலித்தவர்களுக்குந்தானே அமிர்தமான இந்தப் பேரைக் கொடுக்கிறார். இது எவ்வளவு சாந்தகுணம்! தமக்கு அவர்கள்முன் செய்த நிந்தைகளையும் அவர்களால் வந்த அவமானங்களையும் மறந்துவிட்டு எவ்வளவு பட்சத்தைக் காண்பிக்கிறார்!

மனப்பற்றுதல்.—உன் திவ்விய இரட்சகருடைய அளவில்லாத பொறுமையையும் சாந்த குணத்தையுங் கண்டு ஆச்சரியப்படு. பத்தியுள்ள ஸ்திரீகளோடே நீயும் அவர் பாதங்களைத் தழுவி நமஸ்கரித்து உன் சிநேகத்தையும் பற்றுதலையும் அவருக்குக் காண்பிப்பாயாக.

பிரதிக்கினை.—பிறர் செய்த நிந்தைகளை மறந்து, தின்மைக்கு நன்மை செய்து இயேசுநாதருடைய வாக்குக்கெட்டாத மதுர குணத்தை நம்மாலானமட்டும் கண்டுபாவிப்போமாக.

3-ம் பிரிவு

பத்தியுள்ள ஸ்திரீகள் சொன்னதைச் சீஷர்கள் நம்பவில்லை

தியானம்.—இரண்டு மரியம்மாளும் சொன்னதைக் கேட்டுச் சீஷர்கள் நம்பவில்லை. அந்த வார்த்தைகள் அவர்களுக்குப் பித்தப் பிதற்றென்று தோன்றின; அவர்கள் அவைகளை விசுவசிக்கவில்லை. அர்ச். லூக்காஸ்தாமே இதற்கு அத்தாட்சி (லூக். 24, 11). ஆயினும், இரட்சகர் தாம் கொல்லப்படுவாரென்றும், மூன்றாம் நாள் உயிர்ப்பாரென்றும், தெளிவாகவும் குறிப்பாகவும் பல தருணங்களில் அவர்களுக்கு ஏற்கனவே தெரிவித்திருந்தார் என்பது நிச்சயம். ஆகையால் அவர்கள் பிடிவாதமுள்ள அவிசுவாசிகள் என்போமோ? இல்லை; ஆனால், அவர்களுடைய விசுவாசம் சிறைபட்டாற்போலிருந்தது. அவர்கள் தம் கொள்கையில் அவிசுவாசிகளல்ல, அநுஷ்டானத்தில் அவிசுவாசிகள் என்று கூறலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அநேக சந்தர்ப்பங்களில், நம்மைக் குறித்தும் இப்படிச் சொல்ல இடம் உண்டல்லவா? சர்வேசுரன் எப்போதும் எங்கும் நம்மைப் பார்த்து நமது நடக்கையெல்லாம் அறிகிறாரென்று விசுவசிக்கிறோம். ஆயினும் அவருக்கு ஏற்காத எத்தனையோ காரியங்களைச் செய்துகொண்டு வருகிறோம்! "நீ பிறருக்குச் செய்யுங் காரியம் எனக்குத்தானே செய்தாய்" என்று இயேசுநாதர் சொன்னதை விசுவசிக்கிறோம். அப்படியிருந்தும், நமது சகோதரர்

களை நாம் பலவிதமாய்த் தீர்மானித்து, அவர்களை நிந்தித்து, அவர்களுக்குக் கஸ்தி வருவிக்கிறோம். ஆதலால் நாம் கொள்கையில் அவிசுவாசிகளல்ல, ஆனால் அநுஷ்டானத்தில் ஏறக்குறைய அவிசுவாசிகளாயிருக்கிறோம். இவ்விதம் இருப்பதின் முடிவு என்னவாகும்? இதைக் குறித்து நாம் நினைக்கவேண்டியதேதென்று யோசித்துத் தக்க பிரதிக்கினை செய்துகொள்வோமாக.

சம்பாஷணை.—நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டு நம்மை நீதிமான்களாக்கும்பொருட்டு உயிர்த்தெழுந்தருளின நமது நேச இரட்சகரோடே சம்பாஷணை செய்வோமாக. (உ.ரோ. 4.) அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து அவரை மகிமைப்படுத்திப் புதுச் சீவியமுள்ளவர்களாய்த் தம்மோடு நம்மை உயிர்ப்பிக்கவும் நமது விசுவாசம் நமது நற்கிரியைகளினாலே எல்லாருக்கும் பிரசித்தமாகும்படி அதைத் திடப்படுத்தி அது செழிக்கச் செய்யவும் அவரை மன்றாடுவோமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் முதல் வாரம்—வியாழன்

இராயப்பரும் அருளப்பருமாகிய இரண்டு அப்போஸ்தலர்களுங் கல்லறையைப் பார்க்கப்போகிறார்கள்

ஆயத்தச் சிந்தனை.—இந்த இரண்டு அப்போஸ்தலர்களும் கல்லறையைப் பார்க்கத் தீவிரமாய்ப் போகிறதைக் காண்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—இவ்விடத்தில் இந்த இரண்டு அப்போஸ்தலர்கள் காண்பிக்கிற நன்மாதிரிகையினால் நானும் பிரயோசனம் அடைய வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

இராயப்பரும் அருளப்பரும் பரிசுத்த கல்லறையைப் பார்க்கப் போகிறார்கள்

தியானம்.—பத்தியுள்ள ஸ்திரீகள் அறிவித்த செய்தியை விசுவசிக்க முடியாது என்று அப்போஸ்தலர்களெல்லாரும் ஒரே விதமாய் மறுத்துச் சொல்லவில்லை. அவர்களுக்குள், இராயப்பரும் அருளப்பரும் நடந்த விசேஷத்தின் உண்மையைத் தாங்களே போய்ப் பார்க்கவேணுமென்று நினைத்து மற்ற அப்போஸ்தலர்களை விட்டுக் கல்லறைக்குச் சென்றார்கள். இந்தச் சங்கதியைக் குறித்து எழுதினதில், அர்ச். அருளப்பர் தாழ்ச்சி முகாந்திரமாகத் தமது பேரைக் காண்பியாமல் சொல்லியிருக்கிறதாவது: இராயப்பரும் அந்த வேறே சீஷனும் புறப்பட்டுக் கல்லறைக்கு வந்தார்களென்கிறார் (அருள. 20). இவ்விருவரும் தங்களைக் குறித்து மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், என்ன சொல்வார்களென்று யோசியாமல் தங்கள் மனச்சாட்சியின்படி நேர்மையான கருத்தோடு சென்றார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நான் எக்காரியத்திலும் சர்வேசுரனையும் என் மனச்சாட்சியையும் என் அந்தஸ்தின் கடமைகளையும் உத்தேசித்து எப்போதும் நடந்திருப்பேனாகில், எவ்வளவோ பாக்கியமுள்ளவனாயிருப்பேன்! ஐயோ! அப்படி நடவாமல் முகத்தாட்சணியத்தினாலாவது சோம்பலினாலாவது என் பத்திக்குறைவை மன்னிக்கும்படியாவது, எத்தனையோ விசை ஒழுங்கு அநுசரிப்பதிலும் புண்ணியஞ் செய்வதிலும் அதிக அசட்டையுள்ள சந்நியாசிகளைப்போல நடந்திருக்கிறேன்? இதைக் குறித்து உன் மனச்சாட்சி என்ன சொல்லுகிறதென்று சோதித்துப்பார்.

மனப்பற்றுதல்.—மற்றவர்களுடைய நடக்கையைக் கவனியாமல், விசேஷமாய் அசட்டைத்தனமுள்ளவர்களைக் கண்டுபாவியாமல், நமது மனச்சாட்சிக்கும் ஒழுங்குக்கும் ஒத்தபிரகாரம் புண்ணிய சாங்கோபாங்கத்தில் நாளுக்குநாள்

பிரயோசனப்படவேணுமென்கிற ஆசையினிமித்தம் நாம் இனி நடக்க ஆண்டவர் நமது புத்தியைத் தெளிவித்து நமக்குத் தைரியத்தையுந் திடனையுங்கொடுக்கவேணுமென்று கேட்போமாக.

பிரதிக்கினை.—இப்போ சொன்னதற்கு ஒத்தபிரகாரம் நடக்கப் பிரதிக்கினை செய்துகொள்வோமாக.

2-ம் பிரிவு

அவர்கள் குறித்த இடத்தை நெருங்கி வரவர அதிகவேகமாகச் சென்றார்கள்

தியானம்.—இந்த அப்போஸ்தலர்கள் கல்லறைக்கருகே நெருங்க நெருங்க அதிவேகமாய் நடந்தார்கள். அர்ச். அருளப்பர் எழுதிவைத்ததுபோல, அதிகவேகமாய் ஓடினார்களென்று சொல்லவேணுமல்லாமல் நடந்துபோனார்களென்று சொல்லக்கூடாது (அரு. 20). கல்லறையில் சேர்ந்து தங்களால் சிநேகிக்கப்பட்ட தேவகுருவின் சரீரம் என்னமாயிருக்கிறதென்று பார்க்க அவர்களுக்கு இருந்த ஆசை அவ்வளவு! இந்த ஆசையினால் அவர்களுடைய வேகம் அதிகரித்தது, அவர்களுக்கு விசேஷ தைரியமும் உண்டாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அப்படியே, நீ தேவ காரியங்களிலும் உன் அலுவல் தொழில் ஒழுங்குகளிலும், கடந்த வருஷாந்திரத் தியானத்தில் உன் ஆத்துமகுருவின் அநுமதியுடன் நீ செய்த பிரதிக்கினைகளிலும் இதற்கு ஒத்தபிரகாரம், மெத்த சுறு சுறுப்போடும் மன ஊக்கத்தோடும் நடக்கிறாயோவென்று பார். அப்படி நடக்கிறாயென்று கண்டால், சந்தோஷப்படு; ஏனென்றால் அது உன்னிடத்தில் பத்தி சுறுசுறுப்புண்டென்கிறதற்கு அத்தாட்சியாகும். அப்படியில்லாவிட்டால், உன்னிடத்தில் பத்தி சுறுசுறுப்பில்லையென்று சொல்லவேண்டும். இதினிமித்தம், நீ பயப்படவேண்டியதில்லையா? சிலசமயம் உனக்கு வயது முதிர்ந்து விட்டது, அல்லது வியாதி மேலிட்டது, உன் வாழ்நாட்களின் காலம் குறுகிவிட்டது. இப்போதாவது பயப்படவேண்டாமா? காலங் கடந்தபின் கஸ்திப்பட்டுப் பிரயோசனம் ஆகாது.

மனப்பற்றுதல்.—நீ முன்கொண்டிருந்த பற்றுதலை விட்டுவிட்டாயென்று உன்பேரில் எனக்கு முறைப்பாடுண்டென்று எபேசு பட்டணத்து மேற்றிராணியாரைப்பற்றி, அர்ச். அருளப்பர் கண்ட காட்சியில் இஸ்பிரீத்துசாந்துவானவர் சொன்னதை நாம் நன்றாய்க் கண்டுபிடிக்கவும் அந்த முறைப்பாடு நமக்கு எவ்வளவோ செல்லுமென்று அறியவும் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடுவோமாக (காட்சி 2).

பிரதிக்கினை.—கடந்த காலத்தில் நாம் அலட்சியமாயிருந்ததற்குப் பரிகாரஞ் செய்து நமக்கு வயசு வரவர, நாம் பத்தி சுறுசுறுப்பில் வளரப் பிரயாசப்படுவோமாக.

3-ம் பிரிவு

முந்த முந்தக் கல்லறைக்குள்ளே பிரவேசிக்கும் மகிமை இராயப்பருக்குக் கிடைக்க அருளப்பர் இடங்கொடுக்கிறார்

தியானம்.—அர்ச். இராயப்பரைவிட வயதில் குறைந்தவரும் ஓட்டத்தில் சுறுக்குள்ளவருமான அர்ச். அருளப்பர் அவருக்கு முந்திக் கல்லறையில் வந்து சேர்ந்தார்; ஆயினும், இரட்சகர் அர்ச். இராயப்பருக்கு முதன்மை அதிகாரமும் தலைமைப் பட்டமும் கொடுத்ததினாலே, அவருக்குச் சங்கையாகத் தாம் வந்தவுடனே கல்லறைக்குள் பிரவேசியாமல் இருந்தார். அந்த மற்றொரு சீஷன் இராயப்பரைப்பார்க்க அதிக சீக்கிரம் ஓடி முந்தினவனாய்க் கல்லறைக்குச் சேர்ந்தார். ஆனால் உள்ளே பிரவேசிக்கவில்லையென்று அர்ச். அருளப்பர்தானே எழுதிவைத்தார். இராயப்பர் வந்து சேர்ந்தபின், இருவருமாக அதில் பிரவேசித்தபோது, இயேசுநாதருடைய திருச் சரீரத்தை மூடியிருந்த வஸ்திரங்களும் தலையில் சுற்றியிருந்த துண்டும் வெவ்வேறாகத் தனித்தனியே இருக்கிறதைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார்கள் (அரு. 20).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். இராயப்பர் குற்றமுள்ள பலவீனத்தினாலே இயேசுநாதரை மூன்று விசை மறுதலித்து வெகுவாய்த் தவறிப்போயிருந்தாலும், அர்ச். அருளப்பர் தமக்கு அவர் சிரேஷ்டரென்கிற முறையில் அவருக்குச் செலுத்தவேண்டிய சங்கை மரியாதையில் ஒன்றுங் குறைத்தவரல்ல. இயேசுநாதரால் மிகவும் சிநேகிக்கப்பட்ட இந்தச் சீஷனை நாம் கண்டுபாவித்து நமது சிரேஷ்டர்களிடத்தில் மனுஷ துர்ப்பலத்தால் உண்டாகுங் குற்றங் குறைகளுள்ள மனிதனைக் கவனியாமல், "உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் எனக்குச் செவி கொடுக்கிறான், உங்களைப் புறக்கணிக்கிறவன் என்னைப் புறக்கணிக்கிறான்" என்று இயேசுநாதர் சொன்னதை (லூக். 10) நினைத்து அவர்கள் சர்வேசுரனுடைய பிரதிநிதிகள் என்று எண்ணி நடக்கவேண்டும். என் மதிப்பும் என் வார்த்தைகளும் என் கிரியைகளும் இந்தப் போதகத்துக்கு எப்போதும் ஏற்றதாயிருந்ததோ இல்லையோவென்று நன்றாய்க் கவனித்துப் பார்ப்பேனாக.

சம்பாஷணை.—இயேசுநாதரால் மிகவுஞ் சிநேகிக்கப்பட்ட சீஷனோடு சம்பாஷணை செய்து, நமது வயதுக்குத் தகுந்தாப்போல், விசுவாசம், தாழ்ச்சி, பத்தி சுறுசுறுப்பு எப்போதும் நம்மிடத்தில் வளர்ந்துவரும்படி அவர் நமக்காக வேண்டிக்கொள்ளப் பிரார்த்திப்போமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் முதல் வாரம்—வெள்ளி

இயேசுநாதர் அர்ச். இராயப்பருக்குத் தரிசனையாகிறார்.

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். இராயப்பர் தன் திவ்விய குருவைத் திரும்பக் காணுஞ் சமயத்திலே அவர் இருந்த மேரையைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—அப்போது அவர் இருதயத்தில் நிறைந்திருந்த பத்தி விநயத்தில் உனக்கு ஏதாகிலும் பங்கு கிடைக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

அர்ச். இராயப்பர் கல்லறையை விட்டுத் திரும்பிவருகையில்,
மெள்ள நடந்து வருகிறார்

தியானம்.—அர்ச். அருளப்பர் மற்றச் சீஷர்களிடத்திற் சேர்ந்து தாம் கண்டதை அவர்களுக்குச் சொல்லவேணுமென்று எருசலேம் பட்டணத்தை நோக்கி விரைவாய் நடந்துபோகையில், அர்ச். இராயப்பர் சம்பவித்ததைத் தியானித்துக்கொண்டு மெள்ள மெள்ள நடந்துபோனார் (லூக். 24). மேலும் தன் திவ்விய குருவின் கல்லறையிலே அற்புதமாய் நடந்ததெல்லாம் நினைத்துக்கொண்டு நம்பிக்கை, பயம், துக்கம், சந்தோஷம், சிநேகம், மனஸ்தாப முதலிய பற்றுதல்களில் ஆழ்ந்தினவராய் நடந்து சென்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ கண்டுபாவிக்கிறதற்கான சிறந்த நன்மாதிரிகை இது! நீ வேலை செய்யும்போதும் பிரயாணம் செய்யும்போதும் பட்டணம் பட்டிகளில் அங்கங்கே சுற்றித் திரியும்போதும் அநேகந் தருவாயில் தனியே இருக்கிறாயல்லவோ? அப்பேர்ப்பட்ட சமயத்தில் அர்ச். இராயப்பரைப்போல நமது விசுவாசத்துக்கடுத்த யாதொரு பரம இரகசியத்தையாகிலும் காலமே செய்த தியானத்தையாகிலும் நீ யோசிப்பாயாகில், உன் இருதயத்தில் அடிக்கடி பத்தி பட்சம் நிறைந்த பற்றுதல்கள் உணடாகுமே. இதை நீ அநுசரிக்கிறதற்கு எவ்வளவோ நியாயம் உண்டு! இன்றுமுதல் சிலநாள்பரியந்தமாகிலும் இதை நீ செய்யத் துவக்குவாயாகில், எதிர்பாராத விதமாய் அநுகூலம் அடைவாய்.

மனப்பற்றுதல்.—வழக்கமாய் பத்தியில்லாமலும் ஞானத்துக்கடுத்த நற்காரியங்களை நினையாமலும் இருந்ததினாலே வெட்கிக் கஸ்திப்படுவாயாக.

பிரதிக்கினை.—மிகுந்த அடக்க ஒடுக்கமும் நற்சிந்தனைகளும் உள்ளவனாய்ச் சீவிக்கப் பிரயாசப்படு.

2-ம் பிரிவு

இயேசுநாதர் அர்ச். இராயப்பருக்குத் தரிசனையாகிறார்

தியானம்.—இயேசுநாதர் இராயப்பருக்கும் பின்பு பதினொரு அப்போஸ்தலர்களுக்கும் தரிசனமானார் (1 கொரி. 15). இப்படி அர்ச். சின்னப்பர் குறிப்பாய்ச் சொல்லியிருக்கிறதைப் பார்க்கையில், அப்போஸ்தலர்களுக்குள் அர்ச். இராயப்பர்தான் முதன்முதல் உயிர்த்தெழுந்த இரட்சகரின் காட்சியைக் கண்டாரென்பதற்குச் சந்தேகமில்லை. இது ஆச்சரியமன்றோ! மிகவும் சிநேகிக்கப்பட்ட சீஷனான அருளப்பர், இயேசுநாதரோடே கபாலமலைக்குப் போய் அவர் மரிக்குந்தனையும் கூட இருந்தாலும், அவருக்கு இயேசுநாதர் காட்சிகொடாமல் தன் திவ்விய குருவைப் பிரசித்தமாய் மறுதலித்த இராயப்பருக்கு முந்தமுந்தக் காட்சியானார். இந்தக் காட்சியின்போது, இரட்சகர் அவரிடம் வெகு அருமையாய்ப் பேசியிருப்பாரென்றும், அதனிமித்தம் ஆண்டவர் இராயப்பர் செய்த குற்றத்தை முற்றும் மறந்து பூரண மன்னிப்பளித்துவிட்டார் என்று அவருக்குச் சந்தேகமறத் தெரிந்திருக்கவேண்டுமென்றும் நம்பத்தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பச்சாத்தாபப்பட்ட அப்போஸ்தலர் விஷயமாய் இரட்சகர் நடந்துகொண்ட விதத்திலிருந்து அறியக்கிடப்பதென்ன? சர்வேசுரன், சர்வேசுரனாக. அதாவது பூரணமாய், அரைகுறையின்றிக் கடந்ததை மறந்து, மன்னிப்பளிக்கிறாரென்றும், பாவி பச்சாத்தாபப்படும்போது, அவனால் தமக்கு எக்காலத்திலும் துரோகம் ஏற்படாததுபோல் அவனைச் சிநேகித்துச் சீராட்டுகிறாரென்றும் அறிகிறோம். "மனம் நோகாமல் சர்வேசுரன் வரங்களை அளிக்கிறார்" என்று அர்ச். அகுஸ்தீன் சொல்லுகிறார்.

மனப்பற்றுதல்.—"ஆ! என் ஆத்துமமே, நீ செய்த பாவ அக்கிரமங்களையெல்லாம் பொறுத்து நித்திய மரணத்தில் நின்று உன்னை இரட்சித்துத் தயவும் சிநேகமும் பொருந்தின முடியை உனக்குச் சூட்டின ஆண்டவரை வாழ்த்தித் தோத்தரிப்பாயாக" என்று மனஸ்தாபப்பட்ட தாவீது இராஜா சொன்ன இவ்வசனத்தை நீயும் மனவுருக்கத்தோடு அடிக்கடி சொல்லுவாயாக (சங். 102).

பிரதிக்கினை.—கனமான பாவத்தைச் செய்தபோதிலும், சர்வேசுரன் முழுதும் பொறுத்துத் தமது இஷ்டப்பிரசாதத்தைத் திரும்பவும் கொடுப்பாராகையால், சற்றுகிலும் அவநம்பிக்கைப்படாமல் இருக்கிறதுமன்றி, ஒன்றும் ஒளியாமல் நல்ல மனதோடு வெளிப்படுத்தின பாவங்களுக்குச் சர்வேசுரன் பொறுத்தல் கொடுத்தாரோ இல்லையோவென்று சந்தேகப்படும் நினைவை முழுதும் தள்ளிப்போடுவாயாக.

3-ம் பிரிவு

அர்ச். இராயப்பர் விசுவாசத்தில் தன் சகோதரரைத் திடப்படுத்துகிறார்

தியானம்.—இயேசுநாதர் இராயப்பருக்கும் பின்பு பதினொரு அப்போஸ்தலர்களுக்குந் தரிசனையானார். இராயப்பர் பாவத்திலே விழுந்திருந்தும், ஆண்டவர் அபூர்வமான இந்தப் பட்சத்தை அவருக்குக் காண்பித்ததேன்? மற்ற அப்போஸ்தலர்கள் அவரை முன்னையைப்போல் மதிக்கவும், அவர் அவர்களுக்குத் தலைமை என்கிற மேரையில் அவருக்கு அவசியமான அதிகாரத்தை அவரிடத்தில் நிலைநாட்டவும் இவ்விதம் செய்தார். வாஸ்தவத்திலும், அவருடைய சாட்சியம் அதிகாரம் பொருந்தியதாயிருந்ததென்று காண்கிறோம்; அவர் சொன்னதை எல்லாரும் நம்பி "ஆண்டவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனையானார்" என்று சொன்னார்கள் (லூக். 24). "சீமோன், இனிமேல் நீ மனந்திரும்பினபின் உன் சகோ

தரைத் திடப்படுத்துவாயாக" என்று இயேசுநாதர் இராயப்பருக்கு முன்னமே கொடுத்த மேலான அலுவலை இம்மேரையாய் நிறைவேற்றத் துவக்கினார் (லூக். 22).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் எல்லாரையும் சகல காரியங்களையும் தமது பராமரிக்கையினால் நடப்பித்துக்கொண்டு வருகிறதிலே எவ்வளவோ நன்மையுள்ளவரும் சிநேகத்துக்குப் பாத்திரமுள்ளவருமாயிருக்கிறார்! அவரை வாழ்த்தித் தோத்தரித்து, அவர் நமக்குக் கொடுத்த மாதிரிகைக்கொத்தவண்ணம் நடக்கப் பிரயாசப்படுவோமாக. இம்மேரையாய் மற்றவர்கள் மட்டில் அதிகாரமுள்ள யாதொருவனை நமது கடமையினிமித்தம் கண்டிக்கவேண்டிய சமயத்திலே, அவனது அதிகாரம் குறைந்துபோகாமலிருக்க மிகவும் கவனிப்போமாக. அவன் காண்பித்த துர்மாதிரிகைக்குப் பரிகாரம் செய்யவேண்டியிருந்தாலன்றி, பிரசித்தமாய் அவனைக் கண்டியாமலிருப்போமாக. மேலும், அவன் இல்லாத இடங்களில், அவன்பேரில் மற்றவர்களுக்கு முன்பாகக் குறை சொல்லாமலும் நம்பிக்கையுள்ளவர்களிடத்தில் முதலாய் அவனைக் குறித்து முறைப்பாடு பேசாமலும் இருப்போமாக. இந்த ஒழுங்குகளை எவ்விதம் அநுசரித்து வந்தோமென்று பார்ப்போமாக.

சம்பாஷணை.—அர்ச். இராயப்பரோடே சம்பாஷணை செய்து அவரைக் கொண்டாடுகிறதுமல்லாமல், அவர் இயேசுநாதரைத் திரும்பவும் தரிசித்த சமயத்திலே அவரிடத்தில் விளங்கின சங்கை, தாழ்ச்சி, அத்தியந்த சிநேக முதலிய பத்திவிநயங்களில் நமக்கும் பங்கு கிடைக்க அவரை மன்றாடுவோமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் முதல் வாரம்—சனி

இயேசுநாதர் எம்மாவுஸென்னும் ஊர் சீஷர்களுக்குக் காட்சி கொடுக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் எம்மாவுஸென்னும் ஊருக்குப் போன இரண்டு சீஷர்கள் நடுவே தம்மை இன்னாரென்று காண்பியாமல் நடந்துபோகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—எப்பொழுதும் சர்வேசுரன் சமுகத்திலே நடக்க வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதருடைய இரண்டு சீஷர்கள் எருசலேமிலிருந்து எம்மாவுஸென்னும் ஊருக்குப் போகிறார்கள்

தியானம்.—அர்ச். லூக்காஸ் எழுதிவைத்திருக்கிறதாவது: கர்த்தர் உயிர்த்த அன்று சாயந்திரம் அவருடைய சீஷர்களில் இருவர் எருசலேமுக்கு அறுபது ஸ்தாது அல்லது ஐந்து நாழிகைத் தூரத்திலுள்ள எம்மாவுஸென்னும் ஊருக்குப் போனார்கள் (லூக். 24). தங்கள் திவ்விய குரு அவமான நிஷ்டூரத்தோடே பாடுபட்டு மரித்ததினால், தங்களுக்குண்டான கஸ்திக்கு ஆறுதலாக அந்த ஊருக்குப் போனார்களென்று நினைக்கத்தகும். அவர்கள் வழிநடந்துபோகையில், தங்களுக்குள் பேசிக்கொண்டதும் இதைப் பற்றியே. "சம்பவித்த இவை எல்லாவற்றையுங்குறித்து அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டுபோனார்கள்" என்று சொல்லியிருக்கிறது (லூக். 24, 14).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நம்முடைய புத்திக்குத் தகுந்த இளைப்பாற்றியைக் கொடுக்கிறதும் நமக்குச் சலிப்பும் கஸ்தியும் உண்டாகும்போது, ஆறுதலைத் தேடுகிறதும் நமக்கு விலக்கப்பட்டதல்ல, புண்ணிய சாங்கோபாங்கம் அடைகிறதற்கு நம்மிடத்தில் இருக்க

வேண்டிய சுறுசுறுப்புக்குப் பொருந்ததல்ல. ஆனால் இந்த ஆறுதலை எவ்விதம் தேடிக்கொள்கிறோம்? அநேகம் விசை வீண் பேச்சு வார்த்தைகளிலேயும் வீண் விளையாட்டுச் சிரிப்பிலேயும் வீண் கதைகள் புஸ்தகங்களை வாசிக்கிறதிலேயும் இன்னம் ஆத்துமத்துக்கு அதிக மோசம் வருத்துவிக்கிற சில சுகப்பிரீதிகளிலேயும் அதைத் தேடுகிறோமல்லவோ? இது பிரலாபத்துக்குரிய தப்பிதமாமே. மெய்யான ஆறுதல் சர்வேசுரனிடத்திலல்லாமல் படைக்கப்பட்ட வஸ்துக்களிடத்திலில்லை. இதை நீ ஒருவிசைமாத்திரமல்ல, அநேகம்விசை அறிந்திருக்கிறாயே.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் சரியென்று ஒத்துக்கொண்டு செய்த குற்றத்துக்கு மனஸ்தாபப்படுவாயாக.

பிரதிக்கினை.—புத்திக்கு இளைப்பாற்றியைத் தேடும் சமயத்தில் நல்ல கருத்தையும் தேவ சமுகத்தையும் மறந்துவிடக்கூடாது. நமக்குக் கஸ்தி சஞ்சலம் வரும்போது, முந்த முந்தச் செபத்தின் வழியாய்ச் சர்வேசுரனை அடுத்துப்போகவேணும்.

2-ம் பிரிவு

இயேசுநாதர் தம்மை இன்னாரென்று வெளிப்படுத்தாமல் அவர்களோடே போகிறார்

தியானம்—"அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு போகும்போது, இயேசுநாதரும் அவர்களோடே சேர்ந்து வழிநடந்து போனார். ஆயினும் அவர் இன்னாரென்று அறியாதபடி அவர்களுடைய கண்கள் மறைபட்டிருந்தன" (லூக். 24). திவ்விய குருவானவர் அவர்களுடைய அவிசுவாசக் குருட்டாட்டத்தை விலக்கி, அவர்களுக்கு ஞான உபதேசம் சொல்லி, ஆறுதல் வருத்தவும் அவர்களைச் சத்திய நெறியில் திடப்படுத்தி நிலைநிறுத்தவும், ஒரே வார்த்தையில் அவர்களுக்குப் பிரயோசனமாயிருக்கவும் வேண்டும் என்கிற பிறசிநேகமும் சுறுசுறுப்புமுள்ள கருத்தைக்கொண்டு அவர்களோடே சேர்ந்து நடந்து போனார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நம்மோடு மடத்தில் வசிக்கிறவர்களோடேயானாலும் புறத்தியாரோடென்கிலும் நாம் பேசும்போது, முன்சொன்ன கருத்து நமக்கு இருக்கவேணும். வெளி மனிதரோடே பேசுகிறதினாலே, அவர்களை நல்லவர்களாக்கவும் அல்லது அவர்களுக்கு நல்ல நினைவாகிலும் உண்டாக்கவும் நாம் அந்தச் சமயத்திலே பிரயாசப்படவேணும். அவர்கள் நம்மிடமிருந்து இத்தகைய நன்மையை எதிர்பார்க்க நியாயம் உண்டு. இது பிறர்சிநேகத்தையும் ஆத்தும இரட்சணிய ஆவலையும் சார்ந்த கடமை. இதுகாரியத்திலே நீ அசட்டையாயிருந்ததில்லையோ? வழக்கமாகவே, இதைப்பற்றி அலட்சியமாயிருந்ததில்லையா?

மனப்பற்றுதல்.—புறத்தியாருக்கு ஞான நன்மையும் புண்ணியமும் அதிகமதிகமாய் உண்டாகும்படி விசேஷமாய்ப் பேசிப் புழங்குகையில் உதவிசெய்யப் பெரும் ஆசையை உன் இருதயத்தில் எழுப்பிக்கொள்வாயாக.

பிரதிக்கினை.—பிறரோடு சற்றுத் தாராளமாகவே பேசிக்கொண்டிருந்தபின், அந்தப் பேச்சில் நேரிட்டிருக்கக்கூடிய குற்றங்களைப்பற்றியும், எனக்கும் பிறருக்கும் பிரயோசனம் உண்டாகும்படி எவ்விதம் பேசத்தகும் என்பதைப் பற்றியும் பரிசோதித்துப் பார்ப்பேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் சீஷர்களை வினவிக் கேட்கிறார்

தியானம்.—இயேசுநாதர் அவர்களைப் பார்த்து: "நீங்கள் எதைக்குறித்துப் பேசிக்கொண்டு கஸ்தியோடு போகிறீர்களென்று கேட்டார். அதற்கு அவர்கள் மாறுத்தரமாகச் சொன்னதாவது: நசரேத்தூராராகிய இயேசுநாதரைக் குறித்தும் நமது குருக்களும் அதிகாரிகளும் அவரை எப்படி மரணத் தீர்வைக்கு ஒப்புக்கொடுத்துச் சிலுவையில் அறைந்தார்களென்பதைக் குறித்தும் பேசிக்கொண்டு போகிறோம். இஸ்ராயேலை மீட்டு இரட்சிப்பவர் அவர்தா

மென்று நம்பியிருந்தோம்" என்றார்கள் (லூக். 24). சீஷர்களுடைய உள்ளந்தரங்கத்தை எல்லாம் அறிந்திருந்த இரட்சகர் அவர்களை வினவிக் கேட்கவேண்டியதேன்? வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மெசியாவைக் குறித்து அவர்கள் கொண்டிருந்த தவறுதலும் உலக சம்பந்தமுமான கருத்தை அவர்கள் வாய்மொழியாய்த்தானே அறிந்தபின், இதெல்லாம் பொய்யென்று அவர்களுக்குக் காண்பித்து அவர்கள் புத்தியை நன்றாய்த் துலக்கவும் அவர்களுக்குப் பிரயோசனமாக அவர்களைக் கண்டித்து திருத்தவும் இவ்விதம் கேட்கலானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—யாதொருவன் செய்யும் குற்றத்தைக் கண்டித்துத் திருத்த நமக்குக் கடன் இருக்கும்போது, நாம் பொதுவாய் நடக்கவேண்டியது எவ்விதமென்று இவ்விடத்தில் அறிந்துகொள்வோமாக. அவனவன் செய்த குற்றத்தை அவனவனைக் கேட்கும் விதத்தில், அவனவன் வாய்மொழியால் அது வெளிப்படவும் அவன்தானே அதை ஒத்துக்கொள்ளவும், அந்தக் குற்றத்தின் கனத்தையும் அதினால் வரும் பொல்லாப்பையும் அவன்தானே கண்டறியவுஞ் செய்யவேணும். அப்போதுதான் நாம் கண்டிக்கிறதை அவனே நல்ல மனதோடே ஏற்றுக்கொள்ளுவான்; அவனுக்கு அது மெய்யாகவே பிரயோசனமாயிருக்கும்; அவனுக்கு நிலையுள்ள நன்மையும் செய்யலாம். இப்படி நீ நடவாததினாலன்றோ, குற்றமுள்ளவனைத் திருத்துகிறதற்குப் பதிலாய் அவனுக்கு அதிக எரிச்சலுண்டாகச் செய்கிறாய்.

சம்பாஷணை.—உயிர்த்தெழுந்த இயேசுநாதரோடே சம்பாஷணை செய். முந்தின இரண்டு பிரிவுகளிலுள்ள மனப் பற்றுதல்களிலேயும் பிரதிக்கினைகளிலேயும், நீ சம்பாஷணை செய்வதற்கு வேண்டிய பொருள்களைக் காணலாம்.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 2-ம் வாரம்—ஞாயிறு

"நான் நல்ல மேய்ப்பனாய் இருக்கிறேன்"

(இந்த ஞாயிறு சுவிசேஷம்)

ஆயத்தச் சிந்தனை.—நான் நல்ல மேய்ப்பனாய் இருக்கிறேனென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இயேசுநாதருடைய திரு இருதயத்தின் கருத்தை நன்றாய் அறிந்து உன் இருதயம் அதற்கொத்த பிரகாரம் இருக்க வரப்பிரசாதம் கேட்பாயாக.

முதல் பிரிவு

நான் நல்ல மேய்ப்பனாய் இருக்கிறேனென்று இயேசுநாதர் பரிசேயருக்குச் சொல்லுகிறார் (அரு. 10, 11)

தியானம்.—இயேசுநாதர் சகல மனுஷருடைய இருதயங்களைத் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளுகிறதற்காக மகா உருக்கம் நிறைந்த இந்தச் சொற்களினாலும் உருவகத்தினாலும் தமது இருதயத்தில் அடங்கியிருக்கிற சுகிர்த கருத்தை நமக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறார். ஆடுகள் நடுவே ஒரு நல்ல மேய்ப்பன் இருக்கிறதாக நினைத்துக்கொள். நீ அவன் இருதயத்துக்குள் பிரவேசித்து அவைகளின்பேரில் அவனுக்குண்டான பற்றுதல்கள் எவையென்று பார். முந்த முந்த உருக்கமுள்ள கவலை அவனிடத்தில் விளங்கும். இரவு பகலாய்த் தன் பிரியமுள்ள ஆடுகளை நினைத்து, அவைகளுக்கு ஒரு பொல்லாப்பும் அணுகாமல் காப்பாற்ற எந்நேரமும் கவனமாயிருப்பான். இவையாவும் கரைகாணாத உள்ளன்பின் அறிகுறியன்றோ? அவனுடைய கண்காணிப்பை மீறி ஒரு ஆடு தவறிப்போனால், அதைத் திரும்ப மந்தையிற் கொண்டுவந்து சேர்க்குமளவும் அவனுக்கு இளைப்பாற்றியிராது. கிடையில் கொத்து வியாதி உண்டானால், ஆடுகள் படும் வருத்தத்திற்கு அவனும் பங்காளியாவான். இதெல்லாம் அவனுக்குள்ள பற்றுதலையும்

உருக்கமான நேசத்தையும் காட்டுகின்றதல்லவா? எப்போதும் ஆடுகள் நடுவே இருந்து அவைகளுக்கு நல்ல தீனிபோட்டு அவைகளை முழு ஜாக்கிரதையாய்க் கவனித்துப் பார்ப்பதுதான் அவனுக்கு இன்பம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது ஆராய்ந்துபார்த்த பற்றுதல்கள் யாவும் நமது ஆத்துமங்களின் உத்தம மேய்ப்பனான இயேசுநாதருக்குப் பொருந்தும். அவருடைய இருதயத்தில் மேற்சொன்ன பட்சமுள்ள பற்றுதலெல்லாம் அளவில்லாத உத்தமபிரகாரமாய் இருக்கிறதை நீயே காண்பாய். அவர் நம்மை நினைக்கிறதற்காகத் தம்மைத்தானே மறந்துவிடவில்லையோ? நம்மை ஐசுவரியவான்களாக்கிறதற்காகத் தரித்திரனாகவில்லையோ? நமக்கு உயிரைக் கொடுக்கத் தம்மை மரணத்துக்குக் கையளித்தாரல்லவா?

மனப்பற்றுதல்.—அவரிடத்தில் விளங்கின இத்தகைய சினேகத்துக்கும் பற்றுதலுக்கும் பரித்தியாகத்துக்கும் நமது நன்றியறிதலைக் காட்டுவோமாக. அவருடைய சினேகத்துக்குச் சினேகமும் பலிக்குப்பலியும் உயிருக்கு உயிரும் அவருக்குச் செலுத்த நாம் ஆசிக்கிறோமென உறுதியாய்ச் சொல்வோமாக.

பிரதிக்கினை.—எனக்கு உண்டாகும் வருத்தம் சோதனைகளிலே என் ஆத்துமத்தின் நல்ல ஆயனை அடுத்துப் போவேனாக.

2-ம் பிரிவு

நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிகின்றன (அரு. 10)

தியானம்.—என் ஆடுகளை நான் அறிந்திருக்கிறேனென்று இரட்சகர் திருவுளம்பற்றினதின் அர்த்தம் யாது? நமதுள்ளத்தை அவர் அறிந்திருக்கிறாரென்றும், கிறீஸ்தவர்களுக்குள்ளேயும், சந்நியாசிகளுக்குள்ளேயும், நல்ல ஆட்டின் குணங்களை வெளிக்கு மாத்திரம் காட்டிக்கொள்கிறவர்கள் யாரென்றும், மெய்யாகவே அந்த நல்ல குணமுள்ளவர்கள் யாரென்றும் மனிதரை ஏய்த்து அவர்கள் பார்வைக்கு நல்ல சந்நியாசிகளாயிருக்கிறவர்கள் யாரென்றும் ஒருக்காலும் ஏய்க்கக்கூடாத பரம பிதாவின் பார்வைக்கு நல்ல சந்நியாசிகளாயிருக்கிறவர்கள் யாரென்றும் தாம் நன்றாய்ப் பகுத்து அறிந்திருக்கிறாரென்றும் அர்த்தமாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சத்தியத்தை நீ நன்றாய்க் கண்டுபிடித்து உன்னைத்தானே சோதித்துப்பார். அவருக்குப் பிரமாணிக்கமுள்ள ஆடுகளில் நீயும் ஒருவனாயிருக்கிறாயோவென்றும் இயேசுநாதர் உன்னை யேற்றுக்கொள்ளக் கூடுமோ இல்லையோவென்றும் உன்னைத்தானே வினவிக்கேள். அதற்குத் திஷ்டாந்தமான அத்தாட்சி இன்னதென்று நான் சொல்லப்போகிறதைக் கேள். நல்ல ஆடானது தன் ஆயனோடு இருக்க விரும்பும். அப்படியே நீ இயேசுநாதர் அண்டையில் இருக்க விரும்புகிறாயோ? தேவ நற்கருணையில் எழுந்தருளியிருக்கிற இயேசுநாதரை அடிக்கடி பட்சத்தோடே சந்திக்கிறாயோ? நல்ல ஆடானது மேய்ப்பனுடைய குரலுக்குக் கீழ்ப்படியும். அப்படியே தமது நல்ல ஏவுதல்களைக்கொண்டும், உன் சிரேஷ்டர்களைக்கொண்டும் உன் ஒழுங்கு சட்டங்களைக் கொண்டும் உன்னிடத்தில் பேசுகிற இயேசுநாதருடைய குரலொலிக்கு நீ கீழ்ப்படிந்து நடக்கிறாயோ? நல்ல ஆடானது கபடற்றதனமும் நேர்மையுள்ள சுபாவமும் மதுர குணமும் பொருந்தியிருக்கும். இதற்கு விரோதமாய் உன்னிடத்தில் கபடும் காய்மகாரமும் முரட்டுத்தனமும் விளங்கவில்லையோ? இதுவரையில் சொன்னதைக்கொண்டு உன் மட்டில் நீ என்ன நினைக்கிறாய்? நீ செய்யவேண்டியது என்னவென்று யோசித்துப்பார்.

மனப்பற்றுதல்.—தெய்வீக ஆயனுடைய மெய்யான ஆட்டின் குணங்களை நீ எப்போதும் அதிகமதிகமாய் மதிக்கவும், உன்னிடத்தில் அவைகள் விர்த்தியடையவும் வரப்பிரசாதம் கேட்பாயாக.

பிரதிக்கினை.—பிரமாணிக்கமுள்ள ஆட்டின் குணங்களுக்கு விரோதமாயிருக்கிறதை யெல்லாம் உன்னிடத்தில் நிர்மூலமாக்கப் பிரயாசப்படுவாயாக.

3-ம் பிரிவு

என் ஆடுகளுக்காக என் சீவனைக் கொடுக்கிறேனென்றார் (அரு. 10)

தியானம்.—கூலிக்கு மேய்க்கிறவனோவென்றால், தனக்கு வருத்தமும் கன உழைப்பும் இல்லாதவரையில் தன் அலுவலைப் பார்ப்பான். ஓநாய் வருகிறதைக் கண்டால், அதை விரட்டுகிறதற்கு பதிலாய் ஆடுகளைவிட்டு ஓடிப்போவான்; நல்ல ஆயனோவென்றால், அதற்கு விரோதமாய்ச் சமயம் வரும்போது, தன் ஆடுகளுக்காகத் தன் பிராணனைக் கொடுப்பான். நான் நல்ல ஆயனாயிருக்கிறேன்; என் ஆடுகளுக்காக நான் பிராணனைக் கொடுக்கிறேனென்று இயேசுநாதர் திருவுளம்பற்றியிருக்கிறார் (அரு. 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விரு ஆயருக்கும் பலத்த வித்தியாசம் உண்டு. இந்த வித்தியாசத்துக்குக் காரணம் யாது? ஒருவன் கூலிக்கு மேய்க்கிறவனானதினாலே தன் பிரயோசனத்தை மாத்திரந் தேடுகிறான்; மற்றொருவன் சிநேக முகாந்திரத்தை மாத்திரம் பாராட்டுகிறான். முந்தின உருவகத்தால் தங்கள் பராமரிக்கைக்கு ஒப்பிக்கப்பட்ட சனங்களை விசாரித்துக் காப்பாற்றுகிறதைப் பார்க்கத் தங்கள் சுய பிரயோசனத்தையும் சுகத்தையும் பெரிதாய் எண்ணின பரிசேயரை இயேசுநாதர் சுட்டிக் காண்பித்து அவர்களுடைய குற்றத்தை எடுத்துரைக்கிறார். அவர்கள் மனுஷர்களால் தங்களுக்கு மகிமை கிடைக்கும்படி கருத்தாயிருந்தார்களென்று அர்ச். மத்தேயுஸ் எழுதிவைத்தார் (மத். 6). இரண்டாவது உருவகத்தால் சகல காரியத்திலுந் தமது பரம பிதாவின் தோத்திரத்தையும் ஆத்துமாக்களின் நன்மையையுந் தேடிக்கொண்டு வருகிற தம்மையே இயேசுநாதர் சுட்டிக்காட்டி, நாம் அவரை நமது மாதிரிகையாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று படிப்பிக்கிறார்.

நீ உன்னையும் உன் அந்தரங்கக் கருத்துகளையும் நீ பேசுகிறதற்குஞ் செய்கிறதற்குங் காரணமானதையும் நன்றாய்ப்

பரிசோதித்துப் பார்த்து அதற்கொத்த பிரகாரம் நல்ல பிரதிக்கினை செய்து அதில் பிரமாணிக்கமாயிருக்க வரப்பிரசாதம் கேள்.

சம்பாஷணை.—உன் ஆத்துமத்தின் தெய்வீக நல்ல ஆயனோடு சம்பாஷணை செய்.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 2-ம் வாரம்—திங்கள்

இயேசுநாதர் எம்மாவுஸென்னும் ஊராரான இரண்டு சீஷர்களைக் கடிந்து அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறார் (லூக். 24)

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் அந்தச் சீஷர்களோடே பேசிக்கொண்டு போகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இயேசுநாதர் அவர்களுக்குச் சொன்ன போதகத்தில் நீயும் பிரயோசனம் அடைய வரப்பிரசாதங் கேள்.

முதல் பிரிவு

சீஷர்கள் விசுவாசக் குறைவாயிருந்ததைக் கண்டிக்கிறார்

தியானம்.—அவர்கள் விசுவாசமில்லாமல் பலவித நினைவுகளுக்கு இடங்கொடுத்துப் பேசிக்கொண்டு போகிறார்களென்று பார்த்த இயேசுநாதர் அவர்களை மிகவுங் கடிந்து, "ஓ! மதியீனர்களே, தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவசிக்கிறதில் மந்த இருதயமுள்ளவர்களே" என்றார் (லூக். 24). இப்படி அவர்களை இயேசுநாதர் மிகவுங் கண்டித்தாலும், கோபத்தையும் வெறுப்பையும் காண்பித்தவரல்ல. அவர்களும் அவரை ஓர் அன்னியனென்று எண்ணி, ஆயாசப்படாமலும் மறுத்துச் சொல்லாமலும் அந்தக் கண்டிப்பை ஏற்றுக்கொள்கிறார்கள்: இந்தக் கண்டிப்புக்குக் காரணம் அன்பும் பட்சமும் என்று உணர்கிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது:—தப்பறையான போதனைகளை ஒப்புக்கொள்ளுகிறதைவிட ஆபத்தானது ஒன்றுமில்லாததுபோல, துர் அப்பியாசங்களில் பழக்கப்படுவதைவிடத் தின்மையானது ஒன்றுமில்லை. நாளடைவிலே அது நம்மோடொன்றித்துப் போகிறதினாலே, அதை விட்டு விடுகிறது மகா கடினம். அப்பியாசமானது நமக்கு மறு சுபாவம்போல் இருக்குமென்று அர்ச். அகுஸ்தீன் சொல்லுகிறார். இந்த பொல்லாப்புக்குச் சந்நியாசியானவன் பயப்படவேண்டியதில்லை. ஏனென்றால், இவன் தவறிப்போகிற காலத்தில், இவன்பேரில் விழிப்பாயிருக்கிற சிரேஷ்டர்கள் பட்சத்தோடு இவனுக்குத் தக்க சமயம்பார்த்து புத்தி சொல்லுவார்கள். தான் செய்த குற்றந் தனக்குத் தோன்றவும் தான் அகப்பட்டுக்கொண்ட பாதையிலுள்ள ஆபத்தைக் கண்டுபிடிக்கவும், சமயம் நேரிடும்போது, மிகவுங் கடிந்து சொல்லுவார்கள். இது உலகத்தாருக்குக் கிடையாத மகத்தான உதவி. இதை நாம் சரியாய் மதிக்கவேண்டும்; வைத்தியன் கசப்பான மருந்தை அவசியத்தினிமித்தம் கட்டளையிடும்போது, அவனைக் கோபித்துத் திட்டுகிற நோயாளியைப்போல் நடவாமலிருப்போமாக. அதற்கு மாறாய், ஒழுங்கில் கற்பித்திருக்கிற பிரகாரமும், எம்மாவுஸ் ஊர் சிஷர்கள் ஏற்றுக்கொண்டது போலவும், தாழ்ச்சியோடேயும் நன்றியறிதலோடேயும் நமது குறைகளைத் திருத்திக்கொள்ளவேணுமென்கிற ஆசையோடேயும் அந்தக்கண்டனையைக் கையேற்றுக்கொள்ளவேணும். இவ்விதம் நாம் யோசித்திருக்கிறோமா, நடந்துகொண்டோமா?

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் உன்னை இந்த அந்தஸ்திற்கு அழைத்துக்கொண்ட உபகாரத்துக்காகவும், இதில் உண்டான ஆத்தும பிரயோசனத்துக்காகவும் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய். இதிலே ஆத்தும நன்மை எப்போதும் அடைகிறதற்கு வரப்பிரசாதங் கேள்.

பிரதிக்கினை.—என்னைச் சிரேஷ்டர்கள் கண்டிக்கிற சமயத்தில் எனக்கு மனவருத்தமுண்டானால், தாமதமில்லாமல் அவரிடத்தில் மன்னிப்புக்கேட்டு என்னிடத்திலுள்ள

குறைகளை அவர் முன்போல எனக்கு அறிவிக்கக் கேட்டுக்கொள்வேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் அந்தச் சீஷர்களுடைய புத்தியைத் தெளிவித்து அவர்களுக்கு நல்ல போதனையைப் படிப்பிக்கிறார்

தியானம்.—கண்டனையானது மெய்யாகவே பிரயோசனமாயிருக்கவேணுமானால், குற்றவாளி தான் செய்த குற்றத்தை உணர்வது அவசியம்: ஆகையால் அதை எடுத்துக் காட்டுவது அவசியம். மெசியாவானவர், அவர்களுடைய தப்பெண்ணங்களுக்கு மாறாய் தீர்க்கதரிசனங்களுக்கு இணங்க, தாழ்ச்சி, பரித்தியாகம் என்னும் அஸ்திவாரத்தின்மேல் தமது இராச்சியத்தை ஸ்தாபிக்க வேண்டியவரென்று, இயேசுநாதர் அவர்களுக்கு நினைப்பூட்டுகிறதற்காக, "கிறீஸ்துநாதர் இந்தப் பாடுகளை அநுபவிக்கவும், இவ்விதமாய்த் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையோ" என்று (லூக். 24, 26) சொல்லி அவர்களது குற்றத்தை எடுத்துக்காட்டுகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நம்மைப் பரலோக மகிமைக்கு இட்டுக்கொண்டு போக அவசியமானதும் சக்தியுள்ளதுமான ஏக வழி இன்னதென்று, தவறாத சத்தியமானவர் தெளிவாய் இதோ எடுத்துரைத்திருக்கிறார்: அவ்வழி சிலுவையின் வழியே. எனது குருவையும் அரசனையும்விட, நான் புத்தியுள்ளவனா, அவரைவிட நல்ல அந்தஸ்தில் இருக்கவேண்டியவனா? போராடாமலும் துன்பப்படாமலும் சரீர இன்பப்பிரியனும் அசமந்தனுமாகச் சீவித்து, அழியாத மகிமைக் கிரீடத்தை அடைய முடியுமென்று நினைக்கிறாயா? இவ்விதம் நினைப்பது சுத்தப் பைத்தியமும் மதியீனமுமாகும்.

மனப்பற்றுதல்.—இதுவரையில் நாம் செய்த தப்பிதங்களையும் தவறுதல்களையும்பற்றித் துக்கிப்போமாக. சத்தியத்தைக் கண்டுணரும்படி நமது கண்களுக்குப் பிரகாசத்தைத் தந்த தேவ அழைத்தலுக்காகச் சர்வேசுரனுக்கு

நன்றி செலுத்துவோமாக. இயேசுநாதருக்காக நாம் முயற்சித்ததும் துன்பப்பட்டதும் எவ்வளவு சொற்பம் என்று உணர்ந்து அவர் சமூகத்தில் நம்மை வெகுவாய்த் தாழ்த்திக் கொள்வோமாக.

பிரதிக்கினை.—ஆத்தும குருவின் அநுமதியின்பேரில் நாம் நியமித்துக்கொண்ட தபசு ஒறுத்தல் முயற்சிகளை மீண்டும் துவக்கிச் சுறுசுறுப்புடன் செய்துவருவோமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் வேதாகமத்தின் அர்த்தத்தைச் சீஷர்களுக்கு அறிவிக்கிறார்

தியானம்.—"மோயிசன் முதல் சகல தீர்க்கதரிசிகளாலும் தம்மைப்பற்றிச் சொல்லப்பட்ட சகல வேதவாக்கியங்களையும் அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்" (லூக். 24, 27). தமது வரப்பிரசாதத்தின் ஒரேயொரு கடாரல் இவ்விரு சீஷர்களுடைய புத்தியைத் தெளிவிக்கவும், அவர்களுடைய இருதயத்தைப் பற்றியெரியச் செய்யவும் அவரால் கூடுமாயிருக்கையில், தீர்க்கதரிசிகள் எழுதிவைத்தவைகளெல்லாம் அவர்களுக்கு அவர் நெடுநேரஞ் சொல்லிக்காண்பிப்பானேன்? வேதாகமங்களையும் ஞானப் புத்தகங்களையும் இடைவிடாமல் கவனமாய் வாசிப்பதினால்தான், வரப்பிரசாதத்தின் ஒளியையும் உருக்கத்தையும் நாம் அடையவும் காப்பற்றவும் வேண்டுமென்று நமக்குப் படிப்பிக்கவே இவ்விதம் செய்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ ஞானவாசகத்தை அசட்டைபண்ணுகிறதினாலேயும் அல்லது மேலெழுந்தவிதமாய்க் கடனைக் கழிக்க நீ அதை வாசிக்கிறதினாலேயுமல்லவோ, வழக்கமாய் உனக்கு ஞானத் தெளிவில்லாமலும் விசுவாசமில்லாமலும் தேவநற்கருணை வாங்கும்போது முதலாய்ப் பத்தியில்லாமலுமிருக்கிறாய்? நீ இதை ஆராய்ந்துபார்; உன்பேரில் குற்றமானால், ஞானசீவியத்தில் மிகவும் முக்கியமான இக்காரியத்தில் உன்னைத் திருத்திக்கொள்ளப் பிரதிக்கினை செய்துகொள்.

"கிறீஸ்துநாதர் அநுசாரம்" என்னும் புத்தகத்தை வேளைக்கு வேளை, இருந்தாப்போல் எப்பக்கத்திலாவது திறந்து, வலது புறம் அல்லது இடது புறம் காண்கிற வசனங்களை வாசிக்கிற வழக்கம் உன் கவனத்தைக் கவரத்தக்க அப்பியாசங்களில் ஒன்று. இவ்வித அப்பியாசமுள்ளவர்கள், பெரும்பாலும் தாங்கள் இருக்கிற விசேஷ சந்தர்ப்பங்களுக்கேற்க, தங்கள் புத்தியைத் தெளிவித்து, மனதைத் திடப்படுத்தி ஆறுதல் அளிக்கக்கூடிய வசனங்கள் அல்லது மேற்கோள்கள் அகப்படுகின்றன என்று அத்தாட்சி கூறியிருக்கிறார்கள். உனக்கும் சிலவேளை அவ்விதம் சம்பவிக்கும். பரீட்சித்துப்பார்; இதனால் ஒரு மோசமுமில்லை.

சம்பாஷணை.—நமது திவ்விய வழிகாட்டியும், அன்புள்ள ஆசானுமாகிய நமது நேச இரட்சகரோடு சம்பாஷிப்போமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 2-ம் வாரம் செவ்வாய்

சீஷர்கள் இயேசுநாதரைத் தங்கள் இல்லத்தில் தங்கியிருக்க மன்றாடுகிறார்கள்

ஆயத்தச் சிந்தனை.—இம்மூன்று யாத்திரைக்காரரும் எம்மாவுஸ் ஊருக்குச் சமீபத்திலிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—நமது ஆண்டவர் நமது இருதயத்தில் வாசம்பண்ணவும் தமக்குப் பிரியமான இருப்பிடத்தை அவர்தாமே நம்மிடத்தில் திட்டம் செய்துகொள்ளவும் அவரை மன்றாடுவோமாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் இன்னம் அதிக தூரம் போகிறவர்போல் காட்டிக்கொண்டார்

தியானம்.—சீஷர்கள் தாங்கள் போகிற எம்மாவுஸென்னும் ஊருக்குச் சமீபமாய் வந்தபோது, இயேசுநாதர்

இன்னும் அதிக தூரம் போகிறவர்போல் காட்டிக்கொள்கிறார் (லூக். 24, 28). ஆயினும், பாக்கியவான்களான அச்சீஷர்களுக்கு மிகவும் உன்னதமான உபகாரம் புரிந்து, அவர்களோடு பந்தியில் அமர்ந்து, அவர்களுக்குத் தம்மைக் காண்பித்து, தாம் உயிர்த்தெழுந்த தினத்தில்தானே அவர்கள் அதற்குச் சாட்சிகளாயிருக்கவேண்டும் என்பது அவருடைய உட்கருத்து. ஆனால், அவர்கள் இந்தப் பேருபகாரத்தைத் தங்கள் உருக்கமான மன்றாட்டினாலும் அவரை விரும்பி அழைப்பதினாலும் சம்பாவனையாகப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதும் அவரது விருப்பம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—“மனுமக்களோடிருப்பதே எனக்குப் பிரியமாயிருக்கிறது” என்று சர்வேசுரன் சொல்லியிருக்கிறதுபோல (பழமொழி 8) உன்னிடத்தில் எழுந்தருளி வரவும் உன் ஆத்துமத்தில் பிரவேசித்து அதில் விருந்தாடிபோலிருந்து விசேஷ வரங்களினாலும் தமது இஷ்டப்பிரசாதத்தின் மதுரமான உருக்கத்தினாலும் உனக்குத் தமது சமூகத்தைக் காண்பிக்க அவர் விரும்புகிறார். ஆனால் தம்மைப் பத்தி சுறுசுறுப்போடும் நிலைமையோடும் தேடி மன்றாடி வரவழைக்கவேண்டும் என்பது அவரது ஆசை. அப்படியிருக்க அவருடைய சந்நிதானத்தைக் குறிக்கும் தேவ இஷ்டப்பிரசாதத்தின் மதுரமான உருக்கத்தை ஒருபோதும் நீ உணராதவிதமாய் ஆண்டவர் சாதாரணமாகவே உன்னைவிட்டு வெகுதூரம் அகன்றிருக்கிறாரென்றும் உன் ஆத்துமம் வெறுமனே இருக்கிறதென்றும் உனக்குத் தோன்றுமானால், உன் பத்திக் குறைவினாலும் அவர்மட்டில் ஓர்வித பற்றுதலின்மையாலும் நீயே அதற்கு ஏக காரணமாயிருக்கிறாயோ இல்லையோவென்று ஆராய்ந்துபார்.

மனப்பற்றுதல்.—உன்னிடத்திலுள்ள அசட்டை பத்திக் குறைவைக் கண்டு மனஸ்தாபப்பட்டுப் பொறுத்தல் கேள். ஆண்டவர் எழுந்தருளிவருவதற்கு உன் இருதயத்தை ஆயத்தம்பண்ணு அவரைத்தானே மிகவும் கெஞ்சி மன்றாடு.

பிரதிக்கினை.—இன்றையத்தினம் மகா பத்தி சுறுசுறுப்போடிரு.

2-ம் பிரிவு

இயேசுநாதரைத் தங்களோடு தங்கியிருக்கச் சீஷர்கள் மிகவும் வருந்தி அழைக்கிறார்கள்

தியானம்.—எம்மாவுமென்னும் ஊரில் தங்கள் வீட்டுக்கருகாமையில் சேர்ந்ததும், சீஷர்கள் முகமறியாத பிரயாணியின் படிப்பினைக்கேற்ற சம்பாஷணையால் உள்ளம் பூரித்தவர்களாய், அவர் தங்களோடு தங்கும்படி, அவரை வெகுவாய் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். அவரை மன்றாடினதுமாத்திரமன்று, பலவித முகாந்தரங்களை எடுத்துக்காட்ட வருந்தினார்கள். “அந்தி நேரமாகிப் பொழுது சாய்ந்துபோயிற்றே, எங்களோடு வந்து தங்கியிரும்” என்றார்கள் (லூக். 24, 29). வார்த்தையால் சொன்னதைக் கிரிகையாலுங் காட்டினார்கள்; அவர் அப்புறம் கடந்து போகாதபடி வழியை மறித்தாற்போல், அவருக்கு எதிரே போய் நின்றார்கள். ஓர்வகையில் அவரைக் கட்டாயம் பண்ணினார்கள். “கட்டாயம் செய்தார்கள்” என்று சுவிசேஷகரே சொல்லியிருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதிலே நாம் அறியவேண்டியதேதென்றால், ஆத்தும காரியங்களில் நமக்குள்ள மந்த குணத்துக்குச் சரியான மருந்து கொடுக்கவும், இயேசுநாதரையும் அவருடைய வெளியரங்க வரப்பிரசாதங்களையும் நமது இருதயத்தில் வருவிக்கவும் அதில் அவரை நிறுத்தவும் நாம் ஆசையாயிருந்தால், சில விசேஷ காலத்திலே பத்தி ஒறுத்தலுக்கடுத்த முயற்சிகளை அதிக சுறுசுறுப்போடே அநுசரிப்பதினால் அவரைக் கட்டாயம் பண்ணவேண்டியதுமன்றி அந்தச் சீஷர்களைப்போல நாம் கொண்ட ஆசைக்கு அவர் சம்மதிக்கும்வரைக்கும், சுகிர்த கருத்தோடே நிலைமையாய் பிரயாசப்படவேண்டும். “அந்திநேரமாகிப் பொழுது சாய்ந்துபோகிறது” அதாவது, நமது சீவியம், நமக்குத் தெரியாமலே, குறுகிக்கொண்டு வருகிறது. சிலவேளை அதன் முடிவு நெருங்கு

கிறது; ஆகையால், ஆண்டவர் நம்மிடம் தங்கவேண்டுமென்று வற்புறுத்தி மன்றாட அதிக காரணமுண்டு.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, எங்களோடிரும்; அதேதெனில், சீவியத்தின் ஊற்று உம்மிடத்திலிருக்கிறது (சங். 35). நீரே வழியும் உண்மையுஞ் சீவியமுமாயிருக்கிறீர் (அரு. 14).

பிரதிக்கினை.—இயேசுநாதருடைய பிரசன்னத்தின் வெளிப்படையான பயனை என் உள்ளத்தில் உணரும்படியான வரத்தை அடிக்கடி மன்றாடுவேனாக.

3-ம் பிரிவு

சீஷர்கள் கட்டாயப்படுத்தினதின்பேரில் இயேசுநாதர் தங்கியிருக்கிறார்

தியானம்.—இவர்கள் மிகவும் வருந்திக் கட்டாயப்படுத்தினது இரட்சகருக்குப் பிரியமாயிருந்ததினாலே, அவர்கள் ஆசைப்படி அவர்களோடேகூட உட்பிரவேசித்தார். அப்போது அவர்கள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவில்லை. தங்களால் ஆனமட்டும் அவருக்குத் தகுந்த மரியாதை செய்ய எவ்வளவோ துரிதப்பட்டிருக்கவேணும்! ஆகிலும் தங்கள் விருப்பத்திற்கிசைந்து வந்த விருந்தாடி இன்னாரென்று அறியாதிருந்தார்கள். அவரை இன்னாரென்று அவர்கள் அறிந்திருந்தால், இன்னமும் அவருக்கு எவ்வளவோ ஆசாரஞ் செய்திருப்பார்கள்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நானோவெனில், திவ்விய நற்கருணை வழியாய் அவரை உட்கொண்டு என் இருதயத்தில் அவரை வரவேற்கும்போது, அவர் இன்னாரென்று அறியும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறதே. ஆகையால் அவர் தங்கியிருக்கிறதற்கான இடம் முஸ்திப்புச்செய்ய நான் எவ்வளவோ பிரயாசப்படவேணும்! ஆயினும், நான் என்ன ஆயத்தம் செய்கிறேன்? கவனத்தோடுங் கவலையோடும் முஸ்திப்புச் செய்கிறேனா? இயேசுநாதர் என்னிடத்தில் காண ஆசிக்கிற உயிருள்ள விசுவாசம், அத்தியந்த தாழ்ச்சி, உருக்கமுள்ள தேவசிநே

கம், பிள்ளைக்குரிய நம்பிக்கை முதலிய நற்குணங்களை என் இருதயத்தில் எழுப்பவும் திடப்படுத்தவும் நான் செய்கிறதென்ன? தேவநற்கருணை வாங்கவேணுமென்கிற நினைவு முந்தினநாள் சாயந்திரந்தானே என் புத்தியிலிருக்கின்றதோ? நான் காலமே கண்விழிக்கும்போது அந்த நினைவானது என் புத்தியில் முந்தினதாயிருக்கின்றதோ? இயேசுநாதர் என் இருதயத்தில் எழுந்தருளி வருவதற்குக் கிட்டின ஆயத்தமாக காலைத் தியானத்தின்போது நான் என்ன முயற்சிகள் செய்கிறேன்? தேவநற்கருணை வாங்குவதிலும், அதற்குப்பின் நன்றியறிந்த தோத்திரஞ் செய்வதிலும் பத்தி சுறுசுறுப்பை அதிகரிப்பதற்காக நான்தேடிக்கொள்ளும் உபாயங்கள் எவை? *

சம்பாஷணை.—தேவநற்கருணையிலே நமது கண்ணுக்கு மறைந்திருந்தாலும், மெய்யாகவே பிரசன்னராயிருக்கிற எனது நேசமுள்ள இரட்சகரோடே சம்பாஷணை செய்வேனாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 2-ம் வாரம்—புதன்

அர்ச். சூசையப்பர் அடைக்கலத் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—சூசையப்பரிடத்தில் போங்களென்று இயேசுநாதர் சொல்லுகிறதாக நினைத்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—அர்ச். சூசையப்பர் பேரில் மிகுந்த நம்பிக்கை உண்டாகக் கேட்பேனாக.

* இவ் உபாயங்களில் சிலவற்றை, இப்புத்தகத்தின் கடைசிப் பாகத்தில், "நன்மை வாங்கும் நாட்களில் செய்யத்தக்க தியானங்கள்" என்ற தலைப்பின்கீழ் 2-வது தியானத்தில் காண்க. அவைகளைச் சமயத்துக்குச் சமயம் வாசித்துப்பார்ப்பது நலமாயிருக்கும்

முதல் பிரிவு

அர்ச். சூசையப்பர் சமஸ்த திருச்சபைக்கும் பாதுகாவலும் அடைக்கலமுமாயிருக்கிறார்

தியானம்.—மனுஷாவதாரமெடுத்த வார்த்தையானவரை வளர்க்கும் தகப்பனாயிருக்க அர்ச். சூசையப்பரைச் சர்வேசுரன் தெரிந்துகொண்டதும், அப்பேர்க்கொத்தவரிடத்திலே விளங்கவேண்டிய மேலான பரிசுத்ததனமும், இப்பிதாப்பிதாவின் மட்டில் விசுவாசிகள் அளவற்ற நம்பிக்கைகொள்ளக் காரணமாயின. இவ்வுலக ஜீவியத்தின் போது இயேசுநாதர் அவருடைய மனப்பிரியம்போல் சகலமும் செய்துவந்தார்; ஆகையால் தமது மகிமைப் பிரதாபத்திலும் எப்போதும் அவரது மன்றாட்டுகளுக்கு இணங்குவாரென்று விசுவாசிகள் நம்புவது நியாயமன்றோ? இதினால்தான் உலகமெங்கும் அர்ச். சூசையப்பருக்கு மிகுந்த மகிமை செலுத்தப்படுகின்றது; அவர் பேரால் அநேகம் சபைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; அநேகம் பட்டணங்களும் மாகாணங்களும் பிரஜைகளும் அவரைத் தங்களுக்கு விசேஷ பாதுகாவலாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள். இந்த முகாந்தரங்களைப் பற்றி உலகமெங்குமுள்ள மேற்றிராணிமார்களும் குருக்களும் அர்ச். சூசையப்பரைச் சமஸ்த திருச்சபைக்கும் விசேஷ பாதுகாவலாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அர்ச். பாப்பானவரிடத்தில் விண்ணப்பம் செய்துகொண்டார்கள். அப்போது திருச்சபையை ஆண்டுவந்த 9-ம் பத்திநாதர் என்னும் இயேசுநாதருடைய ஸ்தானாதிபதி, மனப்பூரணமாய் இதற்குச் சம்மதித்துச் சமஸ்த திருச்சபைக்கும் அர்ச். சூசையப்பரை விசேஷ பாதுகாவலராகத் தெரிந்துகொண்டார். அர்ச். சூசையப்பருடைய பாதுகாவலுக்கு ஸ்தோத்திரமாகப் பாஸ்குத் திருநாளுக்குப்பின் இரண்டாம் வாரம் புதன்கிழமை அர்ச். சூசையப்பரின் அடைக்கலத் திருநாளைத் திருச்சபை கொண்டாடுகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது ஆண்டவர் திருச்சபையின் வழியாய் அர்ச். சூசையப்பரை

நமக்குப் பாதுகாவலரும் தகப்பனுமாகக் கொடுக்கச் சித்தமானதினாலே, இந்தப் பெரிய மகாத்துமாவின் வழியாய்த் தமது விசேஷ உபகாரங்களை நமக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறாரென்று நாம் நினைக்கவேண்டியதல்லவோ? ஆகையால் இன்றைக்கு அர்ச். சூசையப்பர்பேரில் நமது நம்பிக்கையெல்லாம் வைக்கிறதுமல்லாமல் அக்காலத்தில் பாரவோன் இராயன் பசியினால் மெலிந்து தன்னிடத்தில் வந்த ஜனங்களைப் பார்த்து: சூசையப்பர் அண்டையில் போங்களென்று சொன்னதுபோல, இப்போதும் சர்வேசுரன் சூசையப்பர் அண்டையில் போங்களென்று சொல்லுகிறதாக நினைத்துக்கொள்ளவேணும். நமக்காகவும் சகல விசுவாசிகளுக்காகவும் நாம் அவரைப் பார்த்து மன்றாடுவோமாக. விசேஷமாய் அதிகார பதவியுள்ளோருக்காக மன்றாடுவோமாக.

மனப்பற்றுதல்.—மகிமை பொருந்திய நமது பாதுகாவலர் நமக்கு அடைந்து தந்த எண்ணிறந்த உபகாரங்களுக்காக அவருக்கு நன்றிசெலுத்தி, இன்னமும் அவர் நம்மை ஆதரித்துக் காப்பாற்றும்படி மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—இன்றையத்தினம் விசேஷமாய் பூசை காணும்போது, சகல மேற்றிராணிமார், குருக்கள் சமஸ்த விசுவாசிகளோடு இந்தக் கருத்துடன் நானும் ஒன்றித்திருப்பேனாக.

2-ம் பிரிவு

அர்ச். சூசையப்பர் கிறீஸ்துவ குடும்பத்துக்குப் பாதுகாவலாயிருக்கிறார்

தியானம்.—அர்ச். சூசையப்பர் மகா பரிசுத்த கன்னிமரியம்மாளுக்கு வேத முறைமையின்படி பத்தாவானதினாலே, சர்வேசுரனால் நியமிக்கப்பட்ட கிரமப்படி அவர் திருக்குடும்பத்துக்கு எஜமானாயிருந்தார். அவர் தமது கையால் உழைத்து அந்தக் குடும்பத்துக்குச் சவரட்சணை செய்து சம்மனசுக்களால் அறிவிக்கப்பட்ட தேவ கருத்தின்படி அந்தக் குடும்பத்தை ஆண்டு நடப்பித்துக்கொண்டு வந்தார். இயேசுநாதருந் தேவமாதாவும் அவர் கொடுத்த

கட்டளைக்கு எப்பொழுதுங் கீழ்ப்படிந்து வந்தார்களென்று சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் தேவநீதி முறைமைப்படி நடந்துவர ஆசைப்படுங் கிறீஸ்துவர்களுடைய குடும்பங்களுக்கு அர்ச். சூசையப்பர் விசேஷ பாதுகாவலும் அடைக்கலமுமாய் இருக்கிறாரென்பதற்குச் சந்தேகமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சந்நியாசிகள் மடமானது ஒரு குடும்பம்போல் இருக்கின்றது; அதிலுள்ளவர்கள் எல்லாருக்கும் ஒரே சிரேஷ்டர் உண்டு; அவர்கள் ஒரே வீட்டிலிருந்து ஒரே ஒழுங்கை அநுசரிக்கிறதினாலே, அதிலிருக்கும் யாவருஞ் சகோதரர் சகோதரிகளென்னப்படுவார்கள். ஆகையால் அர்ச். சூசையப்பர் அடைக்கலத் திருநாள் நமது மடத்துக்கும் விசேஷ திருநாளாமே. அர்ச்சியசிஷ்டவரும் வல்லமையுள்ளவருமாகிய நமது பாதுகாவலர்மட்டில் நாம் எவ்வளவு பக்தியும் நன்றியறிந்ததனமும் காண்பிக்க வேணுமென்று, இந்தத் திருநாள் நமக்கு நினைப்பூட்டுகின்றது. நாம் உட்பட்டிருக்கிற இந்தச் சபைக்கு அநேக வருஷ காலமாய் எத்தனையோ துன்பங்களும் ஆபத்துகளும் நேர்ந்திருக்கின்றன! ஆயினும், இந்தச் சபை நாளுக்குநாள் விர்த்தியடைகின்றதே; இந்த உபகாரம் அர்ச். சூசையப்பருடைய அடைக்கலத்தினால்தான் கிடைத்ததென்கிறதற்குச் சந்தேகமில்லை.

மனப்பற்றுதல்.—திருக்குடும்பத்துக்குத் தகப்பனும் ஆதரவுமாயிருந்தவர்தாமே, நாம் உட்பட்டிருக்கிற சபைக்கு ஆதரவும் தஞ்சமுமாயிருக்கிறாரென்பதை நினைத்துச் சந்தோஷத்தோடு நன்றியறிந்தவர்களாய் அவர்பேரில் நம்பிக்கை வைப்போமாக.

பிரதிக்கினை.—அர்ச். சூசையப்பருக்கு நாம் பிரியப்படவும் நமது சபைக்கு அவர் மிகுந்த நன்மை செய்யவும் அவர் நமக்குக் காண்பித்த புண்ணியங்களை அநுசரிக்கப் பிரயாசப்படுவோமாக.

3-ம் பிரிவு

அர்ச். சூசையப்பர் கிறீஸ்துவர்களான வாலிபருக்கு விசேஷ பாதுகாவலும் அடைக்கலமுமாய் இருக்கிறார்

தியானம்.—குழந்தை இயேசுநாதர் தேவமாதாவுக்குக் கீழ்ப்படிந்துவந்ததுபோல, அர்ச். சூசையப்பருக்கும் எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்படிந்துவந்தாரென்று சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது (லூக். 2.) மேலும் இயேசுநாதர் குழந்தையாயிருந்தபோதும் இளம்பிராயமாயிருந்தபோதும் வாலவயதாயிருந்தபோதும் அவரைப் படிப்பித்து நடப்பிக்கவேண்டிய அலுவல் விசேஷமாய் சூசையப்பருக்குக் கொடுக்கப்பட்டிருந்ததென்று சொல்லலாம். அப்படியே இயேசுநாதர் சர்வேசுரனுக்கும் மனுஷருக்குமுன்பாக வயதிலும் ஞானத்திலும் வளர்ந்துவருகிறதைக் காணுஞ் சந்தோஷம் இவருக்குக் கிடைத்திருந்தது (லூக். 2). ஆகையால் சிறு பிள்ளைகளை அவர் விசேஷமாய் ஆதரித்துக் காப்பாற்றிக்கொண்டு வருகிறதுபோல, அவர்களை நன்னடக்கையிலுங் கல்வியிலும் பக்தியிலும் நடப்பித்து விசாரித்துவருகிறவர்களையும் அவர் தமது அடைக்கலத்தில் வைத்துக் காப்பாற்றிக்கொண்டு வருகிறாரென்பதற்குச் சந்தேகமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பள்ளிக்கூடங்களிலும் உட்பிள்ளைகள் மடங்களிலும் வாலிபப் பிள்ளைகளை விசாரிப்பதும் அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதும் உன் தொழிலாயிருக்குமாகில், இது மிகவும் மேலான அலுவல் என்பதையும் வெகு கடினமானதென்பதையும் மறந்துபோகாதே. இதில் அநுகூலம் அடைய ஆசிக்கிறாயா? அர்ச். சூசையப்பரை அண்டிப்போ; உன் பிரயாசமெல்லாம் பூரண அநுகூலம் பெறும்.

சம்பாஷணை.—நம்மை ஆதரித்துக் காப்பாற்றும் அர்ச். சூசையப்பரோடே சம்பாஷணை செய்வோமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 2-ம் வாரம்—வியாழன்

இயேசுநாதர் சீஷர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறர்

ஆயத்தச் சிந்தனே.—சீஷர்களோடே இயேசுநாதர் அசனம்பண்ணுகையில், தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினதையும் அப்போது அவர் இருந்த மேரையையும் நான் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனுக.

தியானச் சேபம்.—அந்தச் சமயத்தில் அவர்கள் அநுபவித்த பாக்கியத்தில் எனக்கும் பங்கு கிடைக்க வரப்பிரசாதங் கேட்பேனுக.

முதல் பிரிவு

இயேசுநாதர் சீஷர்களுக்குத் தம்மை இன்னுரென்று வெளிப்படுத்துகிறர்

தியானம்.—"இயேசுநாதர் அவர்களோடே பந்தியிருக்கையில் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்துப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார்" (லூக். 24, 30) வேதவித்தியாபாரகர்களில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயம், இந்த ஆசீர்வதிக்கப்பட்ட அப்பம் இயேசுநாதர் கடைசி இராப்போசனத்திலே தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தபிரகாரம் அவருடைய திருச் சரீரமான தேவநற்கருணைதான் என்பதே. இதை அவர்கள் உட்கொண்ட க்ஷணமே, அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்துகொண்டார்கள் (லூக். 24, 31). ஆகையால் மனுஷனுடைய புத்தியைத் தெளிவித்து, அவன் சர்வேசுரனையும் சுபாவத்துக்கு மேற்பட்ட காரியங்களையும் கண்டுணரச் செய்வதே, தேவநற்கருணை வாங்குவதினுல் வரும் கைகண்ட பயன்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இது இவ்வாறிருக்க, நான் அடிக்கடி தேவநற்கருணை வாங்கின பின்னும், என் புத்திக்குச் சரியான தெளிவில்லாமலும், ஞானக்காரியங்களையும் தேவ முறைகளையும் அறிகிறதில் சரியான விர்த்தி அடையாமலும் இருப்பது என்ன காரணத்தினுல்? சந்தேகமில்லாமல், தேவநற்கருணை வாங்கும்போது எனக்குத் தகுந்த கருத்தில்லாததும், அதற்குமுன் தகுந்த ஆயத்தம் செய்யாததும், அதற்குப்பின் நன்றியறிந்த தோத்திரஞ் செய்வதில் அசட்டையாயிருந்ததுமே காரணமாகும்.

மனப்பற்றுதல்.—தேவநற்கருணை வாங்குகிறதற்கு நீ செய்த ஆயத்தம் வெகு குறைவுபாடாயிருந்தும், அந்தத் தேவதிரவிய அநுமானத்தால் நீ அடைந்த வரப்பிரசாதங்களுக்காக சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

பிரதிக்கினே.—தேவநற்கருணை வாங்கும்போது, கட்டிக்கொண்ட அசட்டைத்தனத்தின்பேரில் ஆத்தும சோதனை செய்து அதைத் திருத்திக்கொள்வதற்கான அவுழ்தந் தேடிக்கொள்வாயாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் சீஷர்களுடைய பார்வைக்கு மறைந்துபோகிறர்

தியானம்.—இயேசுநாதர் சீஷர்களுக்கு "அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கையில் அவர்கள் தம்மை இன்னுரென்று அறிந்தமாத்திரத்தில் அவர்கள் கண்ணுக்கு மறைந்துபோனுர்." ஆகையால் கண்ணுக்குக் கண்ணுய் அவரைத் தரிசித்த பேரின்பத்தைக் கஸ்தியுடன் இழந்துபோகவேண்டியதாயிற்று; ஆகிலும் அதினுல் வந்த ஆத்தும நன்மையை இழந்துபோகவில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆண்டவரை இன்னுரென்று அறிந்தபின், அவருக்குத் தகுந்த ஆராதனையும் நன்றியறிதலுஞ் செலுத்துவதற்குக்கூடச் சமயம் இல்லாமல், அவர் இவ்வளவு சீக்கிரம் அவர்கள் கண்ணுக்கு மறைந்துபோனதற்குக் காரணம் என்னவென்று கேட்கலாம். இதற்கு ஞானிகள் சொல்லும் மறு

மொழியாவது: “நாம் யாதொரு நற்கிரியை செய்தபின், அதற்கான புகழ்ச்சி நன்றியறிந்த தோத்திரம் பிறர் நமக்குச் செய்ய இடங்கொடாமல் உடனே அதற்குத் தப்பித்துக்கொள்ள வேணுமென்று நமக்குப் படிப்பிக்கவும், இயேசுநாதருடைய வெளியரங்க பிரசன்னத்தின் மதுரம் நமக்கு எப்போதுங் கிடைக்கமாட்டாதென்று காண்பிக்கவும் சிலவிசை இவ்விதம் செய்தார்” என்று சொல்லுகிறார்கள். மெய்யாகவே இந்தக் கண்ணீர்க்கணவாயிலே இப்பேர்க்கொத்த ஞானப் பேரின்பம் ஆண்டவர் சற்றுநேரத்துக்கு மாத்திரங் கொடுத்தருளுவார். உலகம் உன்னைச் சட்டைபண்ணாததைப்பற்றி நீ வழக்கமாய் அதிக கஸ்திப்பட்டுத் தேவசனு உனக்குக் கிடையாததைப்பற்றி நீ கொஞ்சமேனும் கஸ்தியில்லாமல் இருக்கிறதில்லையோ?

மனப்பற்றுதல்.—உலக புகழ்ச்சியையும் நிந்தையையுஞ் சட்டைபண்ணாமல் இருக்கிறதுந்தவிரத் தேவ இஷ்டப்பிரசாதத்தின் வெளிப்படையான பலனை உணராதிருக்கவும் அமைந்திரு.

பிரதிக்கினை.—நமது குற்றத்தினால் தேவ இஷ்டப்பிரசாத ஒளியையும் உருக்கத்தையும் இழந்துபோகாதிருக்கும்படி தேவ ஊழியத்திலே உதாரத்தனம் பத்தி சுறுசுறுப்போடு இருக்கவேண்டியது.

3-ம் பிரிவு

சீஷர்கள் எருசலேம் பட்டணத்துக்குத் திரும்பி வருகிறார்கள்

தியானம்.—இயேசுநாதருடைய சம்பாஷணையும் அவர் ஆசீர்வதித்துக் கொடுத்த தேவநற்கருணையும் இவ்விரண்டு சீஷர்களை வேறு மனிதராக்கிவிட்டது. அவர்கள் புத்தியிலிருந்த அந்தகாரம் நீங்கி விசுவாசத்தின் தெளிவுள்ள பிரகாசம் சுவாலித்தது; தங்கள் நல்ல குரு மெய்யாகவே உயிர்த்தெழுந்தருளினாரென்று தங்களுக்குண்டான நிச்சயத்தினாலும், தேவசிநேக மிகுதியினாலும் அவர்கள் இருதயம் ஆனந்த பூர்த்தி அடைந்து, அவர்களை அதற்குமுன் வாதித்துக்கொண்டிருந்த கஸ்தியெல்லாம் விலகிப்

போயிற்று. “அப்போது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி வழியில் அவர் நம்மோடே பேசி, வேதவாக்கியங்களை நமக்குத் தெளிவிக்கும்போது, நம்முடைய இருதயம் நமக்குள் பற்றியெரிந்துகொண்டிருந்ததல்லவோ என்றார்கள்” (லூக். 24, 32). இத்தகைய தெளிவுடன், அவர்கள் அக்ஷணமே எழுந்து, இராவிருள் கூடுவதைப் பொருட்படுத்தாமல், எருசலேமுக்குத் திரும்பினார்கள். இவ்வளவு துரிதப்படுவானேன்? உயிர்த்தெழுந்தருளின இயேசுநாதரைத் தாங்கள் எவ்விதம் கண்டுகொண்டார்களென்று மற்றச் சீஷர்களுக்குத் தாமதமில்லாமல் அறிவிக்கவும், ஆண்டவர் உயிர்த்தெழுந்தருளினாரென்று கண்ணால் கண்டவர்கள் சொன்னதை இவர்கள்மாத்திரம் நம்பாமல் பிறருக்குத் தாங்கள் துர்மாதிரிகையாயிருந்ததை இப்போது பரிகரிக்கவும் இவ்விதம் துரிதப்பட்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சிந்தனை நமக்கு விளக்கிக்காட்டும் படிப்பினைகளாவன: 1-வது. தியானத்திலே நமது ஆண்டவரோடு அந்நியோந்நியமாய் சல்லாபிக்க ஆவலோடே தேடவேணும். இது காரியத்திலே நாம் எப்படி நடந்து வருகிறோம்? 2-வது. எம்மாவுஸ் சீஷர்களிடத்தில் இத்தனை அதிசயங்களை விளைவித்த தேவநற்கருணையின்பேரில் நமக்குத் தீராத பசிதாகத்தை எழுப்பவேணும். நாம் பத்திக்குறைவாய்த் தேவநற்கருணை வாங்கினதில்லையோ? 3-வது. நாம் துர்மாதிரிகை காண்பித்திருந்தால், அதை உடனே உதாரமாய்ப் பரிகரிப்பது நமது கடமை என்பதை நினைப்பூட்டிக் கொள்ளவேண்டும்.

சம்பாஷணை.—இயேசுநாதரோடே சம்பாஷணை செய். செபத்தியானத்திலுந் தேவநற்கருணையிலும் நீ அடைந்த நன்மைக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரம்பண்ணி இக்காரியங்களிலே உனக்கு அவர் எப்போதும் ஞான ஒளியுமாய்த் திடனுமாய் மேலான ஆறுதலுமாய் இருக்க அவரை மிகவும் இரந்து மன்றாடு.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 2-ம் வாரம்—வெள்ளி

இயேசுநாதர், கூடியிருந்த அப்போஸ்தலர்களுக்குஞ் சீஷர்களுக்கும் காட்சி கொடுக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் பூரண உயிரும் நேசமும் நிறைந்தவராய் எழுந்தருளித் தங்கள் நடுவில் வந்து நின்றதை அப்போஸ்தலர்கள் ஆச்சரியத்தோடுஞ் சந்தோஷத்தோடும் பார்க்கிறதை நாம் காண்கிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் சேபம்.—நமது இரட்சகர்பேரில் வணக்கம், பத்தி, சிநேகம் நமக்கு அதிகமாய் உண்டாக வரப்பிரசாதங் கேட்போமாக.

முதல் பிரிவு

கதவுகள் அடைத்திருக்க, சீஷர்கள் நடுவில் இயேசுநாதர் காட்சி கொடுக்கிறார்

தியானம்.—பாஸ்குத் திருநாளன்று சாயந்திரஞ் சீஷர்கள் யூதர்களுக்குப் பயந்து தாங்கள் கூடியிருந்த வீட்டின் கதவுகளைச் சாத்திக்கொண்டு எம்மாவுஸ் ஊரில் ஆண்டவர் இரண்டு சீஷர்களுக்குக் காட்சி கொடுத்ததைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கையில், இயேசுநாதர் அவர்கள் நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம் உண்டாகக் கடவது; நான்தான், பயப்படாதேயுங்களென்றார் (லூக். 24; அரு. 20). இரட்சகர் தமது அப்போஸ்தலர்களுக்குஞ் சீஷர்களுக்குந் தம்மைக் காண்பித்த சமயத்தை யோசித்துப்பார். அவர்களெல்லாரும் ஓரிடத்திலே அந்நியோந்நிய சிநேகமாய்க் கூடிக்கொண்டு, ஏகாந்தமாய், அடக்கவொடுக்கத்தோடும் ஆண்டவரைக் காண வேணுமென்கிற ஆவலோடும், அவரைக் குறித்துப் பேசிக்கொண்டு தங்கள் சத்துராதிகள் கையில் அகப்படாமல் எச்சரிக்கையோடிருக்கும்போதுதானே, ஆண்டவர் அவர்களுக்குக் காட்சி கொடுக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆண்டவர் உன் இருதயத்தில் எழுந்தருளிவந்து வாசம்பண்ண ஆசைப்படுவாயாகில், இப்போது சொல்லப்போகிறதைக் கேள். முதலாவது, மடத்திலிருக்கிறவர்களைவிட்டு நீ பிரிந்துபோகாமல் உன் சகோதரரோடு அந்நியோந்நியத்தையுஞ் சமாதானத்தையுங் காப்பாற்று. 2-வது, எப்போதும் அடக்கவொடுக்கமாய்ச் சர்வேசுரன்பேரில் நினைவாயிரு. 3-வது, இயேசுநாதர் உன்னிடத்தில் எழுந்தருளிவர அவரை உடன்படுத்துகிறதற்கு யாதொரு மனவல்லயச் செபத்தை வழக்கமாய்ச் சொல்லிக்கொண்டுவா. 4-வது, சர்வேசுரனைப்பற்றின காரியங்களைப் பேசிக்கொண்டிருக்க விரும்பு. 5-வது, தேவபயத்தோடு சீவித்து உன் பஞ்சேந்திரிய வாசல்களை அடக்கிக் காத்துக்கொள். இப்படி நடந்து வருகிறாயோ?

மனப்பற்றுதல்.—சர்வேசுரனோடு மகா அந்நியோந்நியமாய் இருக்கிறதற்கு விக்கினமானதை அறியவும் அதை ஜெயிக்கவும் வரப்பிரசாதங் கேள்.

பிரதிக்கினை.—ஏகாந்த ஒடுக்கத்திலும் ஆத்தும சமாதானத்திலும் இன்றைய நாளைச் செலவழிக்கப் பிரயாசப்படு.

2-ம் பிரிவு

சீஷர்கள் ஓர் பூதத்தைப் பார்க்கிறதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்

தியானம்.—சீஷர்கள் கலங்கிப் பயந்து தம்மை ஓர் பூதமென்று நினைத்திருக்கிறதை ஆண்டவர் கண்டு அவர்களைப் பார்த்துத் திருவுளம்பற்றினதாவது: "நீங்கள் கலங்குவானேன்? உங்கள் இருதயங்களில் விசாரங்கள் எழும்புவதென்ன? நான்தான், என் கரங்களையும் பாதங்களையும் பாருங்கள், தொட்டுப் பாருங்கள்; ஏனெனில் மாமிசமும் எலும்புகளும் எனக்கு இருக்கிறதாக நீங்கள் காண்கிறதுபோல, ஓர் பூதத்துக்குக் கிடையாது" என்றார். அவர் இவ்விதம் சொன்னபிறகு, தமது கரங்களையும் பாதங்களையும் விலாவையும் காண்பித்தார் (லூக். 24). சீஷர்கள் ஆண்டவரைக் கண்டதினால் சந்தோஷம் அடைந்தார்க

ளென்று அர்ச். அருளப்பர் எழுதிவைத்திருக்கிறார் (அரு. 20). இயேசுநாதரைக் கண்டமாத்திரத்திலே, கலக்கமும் சந்தேகமும் பயமும் அவர்களைவிட்டு விலகிப்போய், சமாதானமுஞ் சந்தோஷமும் மதுரம் பொருந்திய உறுதியும் ஏற்பட்டன.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிரமாணிக்கமுள்ள ஆத்துமத்தை இரட்சகர் சந்திப்பதினால் விளையும் பாக்கியமான பலன்களும் அதன் நிச்சயமான அடையாளங்களுமாவன :—இருதய சமாதானமும், ஆத்துமத்தின் தத்துவங்களில் சமாதானமும் உண்டாகிப் பயம் நீங்கும்; சர்வேசுரன் பிரசன்னமாயிருக்கிறார் என்கிற உணர்ச்சி உதிக்கும்; இருதயத்தைப் பூரிப்பிக்கிற பரிசுத்த சந்தோஷம் சிருஷ்டிகளின் மட்டில் பற்றுதலை நீக்கி, துறவற வார்த்தைப்பாடுகளினால் சர்வேசுரனுக்குத் தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்திருப்பதின் பாக்கியத்தை உணரவும் மதிக்கவுஞ் செய்யும். திவ்விய இரட்சகர் கிருபைகூர்ந்து சந்திக்கிற கிறீஸ்துவனும் சந்நியாசியும் எவ்வளவோ பாக்கியவான்கள்!

மனப்பற்றுதல்.—என் சர்வேசுரா, என்னிடத்தில் எழுந்தருளிவாரும்; சுவாமீ, எழுந்தருளிவாரும்; ஏனெனில் நீரே என் சந்தோஷமாயிருக்கிறீர்; உம்மையன்றி எனக்குத் திருப்திவருவிக்கக் கூடுமானதொன்றுமில்லை (கி. அநு. 3-ம் காண். 21-ம் அதி.)

பிரதிக்கினை.—இயேசுநாதர் தமது கரங்களிலும் பாதங்களிலும் விலாவிலும் உள்ள காயங்களை எனக்குக் காண்பிக்கிறதை என் கண்களால் காண்கிறதாக இன்று முழுதும் நினைத்துக்கொள்வேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் தமது சீஷர்கள் முன்பாகப் புசிக்கிறார்

தியானம்.—ஆனால் "அவர்கள் இன்னம் விசுவசியாமல் சந்தோஷத்தினால் பிரமித்துக்கொண்டிருக்கையிலே, இயேசுநாதர் அவர்களைப் பார்த்துச் சாப்பிடத்தக்கது ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டோவென்றார். அவர்களோ

வெனில் பொரித்த மச்சத் துண்டையும் தேன் இராட்டையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவர்களுக்கு முன்பாக அவர் புசித்தபிறகு மீதியானவைகளை அவர்களுக்குக் கொடுத்தார்." (லூக். 24, 41-43.) திவ்விய இரட்சகரிடத்தில் எவ்வளவு தயவு, எவ்வளவு தாட்சணியம்! அவருக்கு வெறுப்பானதொன்றுமில்லை; தாம் உயிர்த்தெழுந்த உண்மையைச் சீஷர்கள் முழுதுங் கண்டு அங்கீகரித்து உலகமெங்கும் தாங்கள் போதிக்கவேண்டிய சுவிசேஷத்துக்கு இந்தச் சத்தியம் ஆதரவாயிருக்கவேண்டியதினாலே, இதை முழுதும் அவர்கள் ஒத்துக்கொண்டு விசுவசிக்கத்தக்கதாக, மகிமைப் பிரதாபமான தமது திரு மேனிக்குப் பொருந்தாததாய்க் காணப்பட்ட இக்கிரியையைச் செய்யவும் உடன்பட்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் இயேசுநாதரைக் கண்டுபாவிக்கும்படி பிறருக்கும் விசேஷமாய் நமது சகோதரருக்கும் பிரயோஜனமானதைச் செய்யவேண்டிய சமயத்தில், அதில் ஒன்றையும் அருவருத்துத் தள்ளாமலுஞ் சுபாவத்துக்கு மகா நீசமானதையும் வெறுப்பானதையும் முதலாய் நாம் செய்யக் கற்றுக்கொள்வோமாக. நாம் உயிர்த்தெழுவோமென்றும், அதற்குப்பின் மோட்ச இராச்சியத்திலே சொல்லரிய சந்தோஷமும் நன்மைகளும் அடைவோமென்றும் உறுதியாய் அவர்கள் விசுவசிக்கும்படி விசேஷமாய்ப் பிரயாசப்படுவோமாக. நாம் சாகுந்தனையும் நமக்கு வரப்போகிற வருத்தம் இக்கட்டுகளிலெல்லாம் மேற்சொன்னதை நினைத்து நமக்குத் தானே தைரியம் வருவித்துக்கொள்வோமாக.

சம்பாஷணை.—தங்கள் திவ்விய குருவின் மகிமைக்கும் பாக்கியத்துக்கும் இப்போது பங்காளிகளாயிருக்கிற அப்போஸ்தலர்களோடே சம்பாஷணை செய்து, இயேசுநாதர் சொன்ன வாக்கியத்தை விசுவசித்ததினால் அவர்களைக் கொண்டாடி நாம் செய்யும் நல்ல பிரதிக்கினைகளையெல்லாம் அவருக்கு ஒப்புக்கொடுத்து நமக்காக அவர்கள் ஆண்டவரை மன்றாடக் கெஞ்சிக் கேட்போமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 2-ம் வாரம்—சனி

இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்கு அளித்த சமாதானத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்கள் முதலான சீஷர்களின் நடுவில் இருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—சர்வேசுரனோடும், புறத்தியாரோடும், என்னோடும் அடைந்த சமாதானத்தைக் காப்பாற்றவும் அதிகப்படுத்தவும் வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குச் சமாதானத்தை அளிக்கிறார்

தியானம்.—“உங்களுக்குச் சமாதானம் உண்டாகக்கடவது” (லூக். 24, 36). திவ்விய இரட்சகர் உயிர்த்தெழுந்தருளின அன்று சாயந்திரம்தானே தமது அப்போஸ்தலர்களுக்குக் காட்சி கொடுத்து, வசனிக்கிற முதலாவது ஆசீர்வாக்கு இது. ஆத்துமத்திலும் இருதயத்திலும் மெய்யான சமாதானம் அடைவது இச்சீவியத்தில் மனுஷனுக்கு மெய்யான ஏக பாக்கியமாம். இயேசுநாதர் தொடர்பாய் அருளிய இரு காட்சிகளிலும் இந்த வசனத்தையே உரைத்ததினால், மும்முறை இந்த ஆசீரைத்தான் கோருகிறார். மும்முறை இதை வசனித்ததேன்? சர்வேசுரனோடும், புறத்தியாரோடும், தன்னோடுஞ் சமாதானமாயிருக்கவேணுமென்று காண்பிக்கிறதற்காகவே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சமாதானத்தின் விலைமதியாத இந்த வரத்தை நான் எப்படி மதித்து வந்தேன்? முந்தமுந்தச் சர்வேசுரனோடு எந்தப் பிரகாரஞ் சமாதானமாயிருந்தேன்? இதற்கு மறுமொழி ஏதென்று அறிகிறது வருத்தமல்ல. ஏனென்றால் தேவ சித்தத்தோடு நமது மனமுழுதும் பூரணமாய் ஒன்றித்திருப்பதில், இந்தச் சமாதானம் அடங்கியிருக்கிறதென்று நாம் அறிந்திருக்கிறோம். மேலும் அவர் கொடுத்த பத்துக் கற்பனைகளினாலுந் திருச்சபைக் கட்டளைகளினாலும் நமது சிரேஷ்டர்கள் கொடுக்குங் கட்டளைகளினாலும் நமது ஒழுங்குகளினாலும் அவருடைய சித்தம் நமக்குப் பிரசித்தமாய் வெளியாயிருக்கின்றது. ஆகையால், நமது நினைவு வாக்குக் கிரியைகள் இதற்கு எவ்வாறு ஒத்திருந்தனவென்றும், எவ்வளவு சுறுசுறுப்போடும் உதாரத்தோடுஞ் சிநேகத்தோடும் இவைகளை நாம் அநுசரித்தோமென்றும் நம்மைத்தானே வினவிக் கேட்பது போதுமானது.

மனப்பற்றுதல்.—எந்தக் காரியத்திலும் தேவ சித்தம் என்னவென்று தேடிப்பார்த்து அதற்கொத்த பிரகாரம் முழு அமைதலோடு நடக்கிற சந்நியாசியின் பாக்கியத்தைக் கண்டுபிடிக்கவும் இதற்குப் பங்காளியாகவும் வேண்டிய வரப்பிரசாதத்தைக் கெஞ்சிக்கேட்பேனாக.

பிரதிக்கினை.—என் ஆண்டவராகிய சர்வேசுரனோடு இருக்கவேண்டிய சமாதானத்தைக் கெடுக்கக் கூடுமான யாவற்றையுங் கவனமாய்த் தள்ளிப்போடுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் சமாதானத்தைத் திரும்பவும் அவர்களுக்குக் கொடுக்கிறார்

தியானம்.—“அவர்களைப் பார்த்து உங்களுக்குச் சமாதானம் உண்டாகக்கடவதென்று திரும்பவும் சொல்லுகிறார்” (அரு. 20, 21). சர்வேசுரனோடே உள்ள சமாதானம் புறத்தியாரோடும் விசேஷமாய் நமது சகோதரர் சகோதரிகளோடும் பத்தி பற்றுதலுக்குரியவைகளில் அல்லது பிறர்சிநேகக் கிரியைகளில் நம்மோடு ஒன்றித்துப் பிரயாசப்படுகிறவர்களோடும் பொருந்தியிருக்கவேணும். இருதய ஒன்றிப்பையும் பிறசிநேகத்தையும் அஸ்திவாரமாகக் கொண்ட இச்சமாதானம் தமது அப்போஸ்தலர்களிடம் பூரணமாய் இருக்கவேண்டுமென்று திவ்விய இரட்சகர் ஆசிக்கிறார். இது அவர்களுக்கு விசேஷ அவசியம். அவர்

கள் ஒரே விசுவாசம், நம்பிக்கை, சிநேகமாகிய இவைகளின் பந்தனத்தினாலே உலகத்திலுள்ள சகல ஜனங்களையும் ஐக்கியப்படுத்துகிற அலுவலை ஏற்றுக்கொண்டதினாலே, அவர்களுக்குள்ளே அற்ப சச்சரவு மனம்பொருந்தாமை இருக்குமாகில், அந்த அலுவலை நிறைவேற்றுவதற்கு இது தடையாயிருக்கலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அந்நியோந்நிய சிநேகத்தின் பலனாகிய சமாதானம் உள்ள குடும்பங்களும் சந்நியாச மடங்களும் பாக்கியம் பெற்றவைகள். அதற்குமாறாய்ச் சமாதானமில்லாதவைகள் மகா நிர்ப்பாக்கியமானவைகள். ஆகையால், பிறசிநேகத்துக்கும் சமாதானத்துக்கும் அவசியமான இரு நிபந்தனைகளை எவ்வளவோ பிரமாணிக்கமாய் அநுசரிக்கக்கடமைப்பட்டிருக்கிறாய் என்று அறிந்துகொள். அந்த நிபந்தனைகளாவன: பிறர்குற்றத்தைச் சகித்துக்கோள்வதும், பிறரை நோகப்பண்ணக்கூடிய எதையும் செய்யாதிருப்பதுமாம். இந்த ஒழுங்குகளை எவ்விதம் அநுசரித்து வருகிறாய்? உன் குற்றத்தினால், வாக்குவாதத்தினால், எரிச்சலினால், மிதமிஞ்சின ஆத்திரத்தினால் இந்த சமாதான ஐக்கியத்தைக் கலவரப்படுத்தினதில்லையா?

மனப்பற்றுதல்.— உலகத்தில் நமக்குக் கிடைக்கக்கூடாத இச்சமாதானத்தை நாம் அநுபவிக்கக் கொடுத்திருக்கிற சந்நியாசஅந்தஸ்திற்கு சர்வேசுரன் நம்மை அழைத்ததற்காக நன்றியறிந்திருப்போமாக.

பிரதிக்கினை.— நாம் இருக்கும் மடத்திலே சமாதானமும் ஒன்றிப்பும் நிலைத்திருக்க நம்மாலானமட்டும் பிரயாசப்படுவோமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் மூன்றுமுறையும் அவர்களுக்குச் சமாதானத்தைக் கோருகிறார்.

தியானம்.—இன்னமும் அவர்களைப் பார்த்து உங்களுக்குச் சமாதானம் உண்டாகக்கடவதென்று திருவுளம்

பற்றுகிறார் (லூக். 24). திவ்விய இரட்சகரின் கோரிக்கை நம்மிடத்தில் சம்பூரணமாய் நிறைவேறும்பொருட்டு நம்மோடுந் தானே சமாதானமாயிருக்கவேணும். இச்சமாதானமானது நேர்மையான மனச்சாட்சியிலேயும், பஞ்சேந்திரியங்கள் ஆத்துமத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறதிலேயும், ஆசாபாசம் புத்திக்கும், புத்தியானது விசுவாசத்துக்கும் முழுதும் ஒத்திருக்கிறதிலேயும் அடங்கியிருக்கின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்வித சமாதானம் நாம் உலகத்தில் சீவிக்குந்தனையும் பழுதற்ற பிரகாரமாய் இருப்பது அசாத்தியம். யுத்தங்கள் தப்பாமல் வரும், சரீரமோ புத்தியோடு எப்போதும் போராடும்; சுயபட்சமுந் தேவசித்தத்துக்கு விரோதமாய் எழும்பும். ஆகையால் கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்குமாப்போலே, நாம் உயிரோடிருக்குந்தனையும் நமது அக்கிரமமான ஆசாபாசங்களோடு எதிர்த்துப் போராடிச் சமாதானம் அடையவேணும் (முதல் காண்டம், 6-ம் அதி.).

சம்பாஷணை.—நாம் இதுவரையில் தியானித்துவந்த பிரகாரஞ் சகல நன்மைக்கும் விசேஷமாய்ச் சமாதானத்துக்குங் காரணகர்த்தராயிருக்கிற இயேசுநாதரோடே சம்பாஷணை செய்வோமாக.

உலகத்தார் கொடுக்கக்கூடாததும் அப்போஸ்தலருக்கு இயேசுநாதரால் கொடுக்கப்பட்டதுமான மூவித சமாதானமும் நிறைந்த சந்நியாச அந்தஸ்திற்கு நம்மை அழைத்த உபகாரத்துக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து அதின் நன்மைகளை அதிகமதிகமாய் எப்போதும் மதிக்கவும் நம்மாலானமட்டும் மற்றவர்கள் அதை மதிக்கச் செய்யவும் வரப்பிரசாதங் கேட்போமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 3-ம் வாரம்—ஞாயிறு

இயேசுநாதர் வேதம் போதிக்குந் தமது அலுவலையும் தமது ஞானத்தையும் பாவங்களைப் பொறுக்கும் அதிகாரத்தையும் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—*தமது பிரிய அப்போஸ்தலர்கள் நடுவில் இயேசுநாதர் தயை நிறைந்தவராயிருக்கிறதைக் காண்கிறதாக உரூபிகரித்துக்கொள்.*

தியானச் செபம்.—*அவர்களுக்குக் கொடுத்த வரங்களை மெத்தவும் பாராட்ட வரப்பிரசாதங் கேள்.*

முதல் பிரிவு

இயேசுநாதர் தமது பரம பிதாவினிடத்தில் தாம் பெற்றுக் கொண்ட அலுவலை அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கிறார்

தியானம்.—*இயேசுநாதர் திரும்பவும் அப்போஸ்தலர்களுக்கு தமது சமாதானத்தைக் கொடுத்து அவர்களை நோக்கிப் பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேனென்றார் (அரு. 20). அதாவது என் பிதாவை மகிமைப்படுத்தவும், மனிதர்களை இரட்சிக்கவும் வேண்டும் என்றும் சகலவித உபத்திரவங்கள் இடையூறுகளின் மத்தியில் ஜெபமும் பிரசங்கமும் இக்கதியை அடைய வழியாயிருக்கவேண்டும் என்றும், நான் அடைந்த சம்பாவனையே உங்களுக்கும் கிடைக்கும் என்றும் உங்களை அனுப்புகிறேன். "ஏனெனில், என் பிதாவானவர் எனக்கு இராச்சியத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்; அதினிமித்தம், நீங்கள் என் இராச்சியத்திலே என் மேஜையில் போசன பானம் பண்ணுவதுமன்றி, இஸ்ராயேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நடுத்தீர்க்கிறவர்களாய்ச் சிம்மாசனங்களில் உட்காருவீர்கள்" என்றார் (லூக். 22, 29-30). மனிதர்களிடத்திலே இயேசுநாதருடைய ஸ்தானாபதிகளாயிருக்கிறதும், உலக இரட்சணிய அலுவலுக்கும் ஆத்துமாக்களுடைய நித்திய ஈடேற்றத்துக்கும் அவரோடு ஒன்றித்துப் பிரயாசப்படுகிறதும் எவ்வளவு மேலான அலுவல்.*

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—*தேவ மகிமையையும் மனுஷர் ஈடேற்றத்தையுந் தேடுகிறது நமது அந்தஸ்தின் கதியாயிருப்பதினால், நம்மில் ஒவ்வொருவருக்கும் இந்த அலுவல்தானே கொடுக்கப்பட்டிருக்கின்றது. எந்தத் தேசத்துக்கும் எந்த மடத்துக்கும் நம்மை அனுப்பினாலுஞ் சரி, என் பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேனென்று நமது சிரேஷ்டர்கள் வழியாய் இயேசுநாதர் தாமே நமக்குச் சொல்லுகிறதாக எண்ணவேணும். இப்பேர்க்கொத்த அலுவலுக்கு எவ்வளவோ மேலான நினைவுகளும் கருத்துகளும் நம்மிடத்தில் இருக்கவேண்டியது? இதற்கு நாம் யோக்கியராயிருக்கிறோமா?*

மனப்பற்றுதல்.—*இப்பேர்க்கொத்த பரிசுத்தமும் மேன்மையுமுள்ளதுமான அந்தஸ்தில் சர்வேசுரன் நம்மை அழைத்ததற்காக ஆச்சரியப்பட்டு அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக. நமது பாதங்கள் மாத்திரந் தரையில் படவும் நமது புத்தியால் பரமண்டலத்திலிருக்கவும் ஆசைப்படவேண்டிய நாம் நமது நினைவில் மகா அற்பருமாய் நமது ஆசைப்பற்றுதல்களில் மகா நீசருமாய் உலக சிந்தையில் கவிழ்ந்திருக்கிறதைக் கண்டு வெட்கி நாணக்கடவோமாக.*

பிரதிக்கினை.—*நீங்கள் இயேசுக்கிறீஸ்துநாதரோடே உயிர்த்தவர்களாயிருப்பீர்களாகில், மேலானவைகளைத் தேடுங்கள். பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளையே உணருங்களென்று அர்ச். சின்னப்பர் சொன்னதை அநுசரிக்கப் பிரயாசப்படுவோமாக (கொலோ. 3).*

2-ம் பிரிவு

இயேசுநாதர் அப்போஸ்தலர்களுக்குத் தமது ஞானத்தைக் கொடுக்கிறார்

தியானம்.—இரட்சகர் அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த தொழில் அவர்களுடைய சுபாவ பலத்துக்கு மிகவும் மேற்பட்டதாயிருக்கிறதினாலே, அதற்குத் தக்கது கருவி பொருந்தியிருக்க அவர் சித்தமாகி அவர்கள்மேல் தமது ஆவியை விட்டு இஸ்பிரீத்து சாந்துவைப் பெற்றுக் கொள்ளுங்களென்றார் (அரு. 20). பரம இரகசியமான இப்பேர்க்கொத்த ஆவியிலே பிதாவினிடத்தில் நின்று புறப்படுகிறதுபோல தம்மிடத்திலும் நின்று புறப்படுகிறவரான இஸ்பிரீத்து சாந்துவைத் தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தருளினார். ஏனென்றால் இனி அவர்கள் உலகத்துக்குச் செத்தவர்களாய்த் தமது ஞானத்தினால் சீவிக்கிறவர்களுமாயிருக்கச் சித்தமானார். இந்த ஞானம் உலக ஞானத்துக்கு முழுதும் விரோதமானது. உலக ஞானமோ சுயபட்சம், ஆங்காரம, சுகபோகம், பேராசையுள்ளது; இயேசுநாதருடைய ஞானமோ தன்னை மறுத்தலும் தாழ்ச்சியும் ஒறுத்தலும் தரித்திரமும் பிறசிநேகமுமுள்ளதாமே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னைத் தூண்டுகிறதும் உன்னை ஆளுகிறதும் எந்த ஞானம்? இயேசுநாதருடைய ஞானமோ உலக ஞானமோ? இவ்விரண்டிலும் உன்னிடத்தில் எது அதிகமாயிருக்கிறதென்று உன்னை நன்றாய்ப் பரிசோதித்துப் பார்ப்பாயாக.

மனப்பற்றுதல்.—தேவ ஞானத்தால் தூண்டப்பட்டவர்கள் சர்வேசுரனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்களென்பதால், அவர்கள் இயேசுநாதருக்குச் சகோதரருமாய் ஆத்தும இரட்சணியத்திற்கடுத்த பிரதான அலுவலிலே அவருடைய மெய்யான துணைவர்களுமாயிருக்கிறார்களென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதற்குச் சரியாய் நீயும் அவர்களில் ஒருவனாயிருக்கவேணுமென்கிற ஆசையை உன்னிடத்தில் எழுப்புவாயாக (உரோ. 8).

பிரதிக்கினை.—இயேசுவின் ஞானத்தினால் சீவிக்க அதிக கவலையோடு பிரயாசப்படுவாயாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை அப்போஸ்தலர்களுக்கு அளிக்கிறார்

தியானம்.—இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்கு இஸ்பிரீத்து சாந்துவை அளித்தவுடன், அவர்களைப்பார்த்துச் சொன்னதாவது: "எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படும்; எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னியாதிருக்கப்படும்" என்றார். (அரு. 20, 23). உந்நதமான இவ்வார்த்தையினாலே இயேசுநாதர் பச்சாத்தாபமென்னும் தேவத்திரவிய அநுமானத்தை ஏற்படுத்தி, ஞானஸ்நானம் பெற்றபின் செய்த பாவங்கள் எவ்வளவு கனமானவைகளாயினும், எண்ணிக்கையில் எத்தனையாயினும் அவைகளையெல்லாம் மன்னிக்க ஆச்சரியமான அதிகாரத்தைத் தமது அப்போஸ்தலர்களுக்கும் அவர்களுக்குப் பதிலாய் எக்காலங்களிலும் முறையின்படியே அனுப்பப்படுகிற சகல குருக்களுக்கும் கொடுத்தருளுகிறார். இயேசுநாதரிடத்தில் எவ்வளவு தயவும் உதாரகுணமும் விளங்குகின்றது!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பாவப்பொறுத்தலென்னும் தேவத்திரவிய அநுமானத்தை ஸ்தாபித்ததிலே, நமக்குச் செய்யப்பட்ட நன்மையை நாம் கண்டுபிடிக்கத்தக்கதாக அடிக்கடி பாவ மயக்கங்கொண்டு அதில் விழுகிற பலவீனர்களாகிய நமக்குத் திரிதேந்தென்னும் நகரில் கூடிய திருச்சங்கம் சொல்லுமாப்போலே, பாவக்கடலில் விழுந்தபிறகு, இவ்விரண்டாம் பலகையாகிற ஆதரவு இல்லாவிடில், இரட்சணியம் அடையும் நம்பிக்கை ஏதென்று நம்மைத்தானே நாம் வினவிக் கேட்கவேணும். இவ்வளவு மகத்தான நன்மைக்குத் தக்கது உன்னிடத்தில் நன்றியறிந்தனமுண்டோ? இதற்காக எத்தனைவிசை

உன் இரட்சகருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்தாய்? ஐயோ! சிலவிசை இந்தத் தேவத்திரவிய அநுமானத்தைக் கனமான சுமையென்று நினைத்தாயோ? அல்லது இதிலே தேவ துரோகத்தைக் கட்டிக்கொண்டாயோ? சரியாய் ஆயத்தஞ் செய்யாமலும் தக்க மனஸ்தாபமில்லாமலும், இதிலே பலன் அடையாமல் போனாயோ? யோசித்துப் பார்.

சம்பாஷணை.—நமது திவ்விய இரட்சகரோடே சம்பாஷணைசெய்து பச்சாத்தாபமென்கிற இந்தத் தேவத் திரவிய அநுமானத்தை ஸ்தாபித்ததினால் நமக்கு அவர் செய்த வாக்குக்கெட்டாத உபகாரத்துக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்யவேணும்.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 3-ம் வாரம்—திங்கள்

முந்தின ஞாயிற்றுக்கிழமைப் பூசையின் சுவிசேஷத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் பிரலாபித்து அழுவீர்கள்; உலகமோவெனில் சந்தோஷப்படுமென்று இயேசுநாதர் சொன்ன இவ்வசனத்தைக் கேட்கிறதாக உருபிகரித்துக் கொள் (அரு. 16).

தியானச் செபம்.—சர்வேசுரனிடத்தில் உன்னைக் கூட்டிக்கொண்டுபோகத் தடையாயிருக்கும் யாவையும் மிகவும் நிந்திக்க வரப்பிரசாதங் கேள்.

முதல் பிரிவு

உலகத்தின் புத்திரர் அநுபவிக்கும் சந்தோஷம்

தியானம்.—இயேசுநாதர் உலகத்தைவிட்டுப்போகும் சமயம் கிட்டிவந்ததால், சீஷர்களைப் பார்த்துச் சொன்ன

தாவது: கொஞ்சத்துக்குள் என்னை நீங்கள் காணமாட்டீர்கள்; ஏனென்றால் என் பிதாவினிடத்தில் போகிறேன். அப்போது நீங்கள் பிரலாபித்து அழுவீர்கள்; உலகமோவெனில் சந்தோஷப்படுமென்றார். இம்மையின் பாக்கியங்களை இயேசுநாதர் எப்படிப் பகிர்ந்துகொடுக்கச் சித்தமாயிருக்கிறாரென்பதை, இப்போது சொல்லப்போகிறதில் காண்பாயாக: நல்லவர்களுக்கு அவர் துன்பங் கஸ்திகளைக் கட்டளையிடுகிறார்; உலகத்தின் புத்திரர்களென்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற உலகத்தாருக்கோவென்றால், அழிந்துபோகிற பாக்கியங்களையும் சுகபோகங்களையும் கொடுக்கிறார். இம்மேரையாய்த் தமது மேலான நீதியையும் தயவையும் ஒத்திருக்கச்செய்து கொஞ்சம் நேரம் அநுபவிக்கிற துன்பத்தினாலே நல்லோர்களிடத்தில் உள்ள அற்பப் பாவத்தின் கறைகளை முதலாய்ச் சுத்தமாக்கவும், உலகத்தார் செய்கிற சில சுபாவ நற்கிரியைகள், தேவசிநேகமின்மையினாலே நித்தியத்துக்குரிய பேறுபலனை அடைய முடியாததாகையால் அவர்கள் கொஞ்சகாலம் உலகபாக்கியங்களை அநுபவிக்கச் சித்தமாயிருக்கிறார். ஆகிலும் அவர்களுக்குக் கிடைத்த பங்கு எவ்வளவோ கஸ்தி நிறைந்ததாயிருக்கிறது! பார்வைக்கு அவர்கள் பாக்கியவான்களைப் போலிருந்தாலும், உண்மையில் அவர்கள் நிர்ப்பாக்கியவான்கள்தான். ஏனெனில் அவர்கள் எப்போதும் பணம் சம்பாதிக்க வேணுமென்கிற ஆசையினாலும், அதை இழந்துபோவோமென்கிற பயத்தினாலும் எந்நேரமும் உபாதிக்கப்படுகிறார்கள். வெட்கத்துக்குரியவைகளும் அடங்காதவைகளுமான பலத்த ஆசாபாசங்களின் கொடுங்கோன்மையால் மனம்வாடி, மனச்சாட்சியின் வாதனையால் நொறுக்குண்டு, மரணத்தின் நினைவாலும், நித்தியத்தின் நினைவாலும், பயப்பிராந்திகொண்டு பதறுகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உலகத்தாரது போலி பாக்கியத்தை, நீ மேற்சொன்ன பிரகாரம் யோசித்துப்பார்க்கிறாயோ? நீ அவர்கள் அநுபவிக்கிற வெளிச் சந்தோஷத்தைக்கண்டு சிலசமயம் காய்மகாரப் பட்டதில்லையா? "ஏன் இத்தனை துன்பம் நிறைந்த அந்

தஸ்தை நான் தெரிந்துகொண்டேன்? உலகத்திலேதானேயிருந்து, என் மனம்போலே, பாவமில்லாத அந்தந்தச் சந்தோஷ சுகபோகங்களை அநுபவித்துக்கொண்டு, அதில் நான் ஆத்தும இரட்சணியம் அடையக்கூடாதோ" என்று சில விசை உனக்குள்ளே சொல்லிக்கொள்ளவில்லையா? அப்படியானால் விசுவாசம் உன்னிடத்தில் தளர்ந்துபோய்ப் பக்திக்குறைவென்னும் இருள் உன் புத்தியில் அதிகரித்துக் கிரமமற்ற பற்றுதல் உன் இருதயத்தில் பிரவேசித்திருக்கிறதென்று நினைத்துப் பயப்படவேணும். இவ்வித நினைவுகளுக்கு இடங்கொடுக்கிற சந்நியாசி, மகா பொல்லாப்புக்குரிய ஏமாற்றத்துக்கு ஆளாகி, தேவ அழைத்தலின் வரத்தையும் தன் நித்தியகால இரட்சணியத்தையும் இழந்துபோவதற்கான ஆபத்திலிருக்கிறான் என்று சொல்லத்தகும்.

மனப்பற்றுதல்.—உலக பொய்வாழ்வை நிந்தித்து வெறுத்து இதின் மாய்கையில் நாம் அகப்படாமல் நம்மைக் காப்பாற்றிவருஞ் சந்நியாச அந்தஸ்தின் நன்மைக்காக ஆண்டவருக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்வோமாக.

பிரதிக்கினை.—ஆ! என் ஆத்துமமே, எண்ணிறந்த பேரைக் கெடுத்து மயக்குவிக்கும் உலக ஆசாபாசத்துக்குள் நீ அகப்படாமலிருக்கிறதினாலே, உனக்குப் பாக்கியமென்று அடிக்கடி சொல்லுகிறதுமல்லாமல், விசேஷமாய் உன் அந்தஸ்துக்கு விரோதமாய் வருஞ் சோதனைகளிலும் இப்படியே சொல்லிக்கொண்டு வருவாயாக.

2-ம் பிரிவு

சர்வேசுரனுடைய பிள்ளைகளுக்கு வரும் துன்பம்

தியானம்.—நீங்கள் பிரலாபித்து அழுவீர்கள்; உலகமோ சந்தோஷப்படுமென்று திருவுளம்பற்றியபடி, இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குந் தமது மெய்யான சீஷர்களுக்கும் இவ்வுலகில் பங்காகக் கொடுத்த துன்பங்களையும் உபத்திரவங்களையுஞ் சகலவித வருத்தங்களையும் பார்க்கும்போது, இவ்வுலகத்தார் அவர்களை நிர்ப்பாக்கியமுள்ளவர்களென்றுந் துன்பம் நிறைந்தவர்களென்றும்

எண்ணி அந்த நிர்ப்பாக்கியத்துக்குள்ளே மறைந்திருக்கிற மன்னாவென்கிற அமிர்தத்தை அவர்கள் அறியாததினாலேயுஞ் சர்வேசுரனைப்பற்றித் துன்பப்படுகிறவர்களுக்கு அவர் கொடுத்துவருகிற ஆறுதல்களையுஞ் சந்தோஷங்களையும் அவர்கள் ஒருக்காலுஞ் சுகித்து அநுபவியாததினாலேயும் மேற்சொன்ன உலகத்தார் தங்களுக்கு உண்டான சந்தோஷத்தினால் அவர்களைக் கண்டு இரக்கப்படுவார்கள். அர்ச். சின்னப்பர் எனக்குண்டான சகலவித துன்ப உபத்திரவங்களுக்குள்ளே பூரண சந்தோஷமாயிருக்கிறேனென்று சொன்னபோது, மேற்சொன்ன ஆறுதலை அவர் அடைந்திருந்தாரல்லவோ? (2 கொரி. 7). அர்ச். அகுஸ்தீன் தாம் செய்த கடின தபசைக் கண்டு இரக்கப்பட்டவர்களை நோக்கி: உலகத்தில் இருக்கையில், நான் அநுபவித்த இன்ப சுகங்களையெல்லாம் பார்க்க, இப்போது நீங்கள் காண நான் சிந்துங் கண்ணீர் எனக்கு அதிக இன்பமுள்ளதாயிருக்கிறதென்று சொன்னபோது, இந்தத் தேவ ஆறுதலை அவர் அடைந்திருந்தாரல்லவோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கஸ்தி, அழுகையென்னுஞ் சொற்களை மனிதருக்குள் வழங்கும் அர்த்தத்தில் இயேசுநாதர் உபயோகிக்கவில்லை. அவர் அவ்வார்த்தைகளை உபயோகிக்கும்போது, மதிகெட்ட சிரிப்பையும், உலகத்தாரின் பாவமுள்ள சந்தோஷத்தையும் கண்டிக்கிறார். உலகத்துக்குரிய கஸ்தியும் உண்டு, சர்வேசுரனுக்குரிய கஸ்தியும் உண்டு. சர்வேசுரனுக்குரிய கஸ்தியோவென்றால், பஞ்சேந்திரியங்களை மாத்திரம் வருத்தப்படுத்திப் பார்வைக்குக் கஸ்தியாகத் தோன்றுகிறதல்லாமல் இருதயத்துக்குள் அது சந்தோஷத்தை வருவிக்கும். மோக்ஷ ஆனந்தத்துக்கு அச்சாரமாயிருக்கிற வாக்குக்கெட்டாத இந்த ஞான சந்தோஷத்தை உலகத்தார் ஒருபோதும் அறியமாட்டார்கள். ஆகையால் அப்போஸ்தலர் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறதாவது: "வெளிக்கு நாங்கள் கஸ்தியுள்ளவர்களாய்க் காணப்பட்டாலும், மெய்யாகவே நாங்கள் எப்போதுஞ் சந்தோஷம் நிறைந்தவர்களாய் இருக்கிறோம்" என்றார் (2 கொரி. 7).

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் என்னைச் சந்நியாச அந்தஸ்துக்கு அழைத்தபோது, மெய்யானதும் உறுதியுள்ளதுமான ஞான சந்தோஷத்தின் ஊற்றினிடம் என்னைக் கூட்டிக்கொண்டு வந்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வேனாக.

பிரதிக்கினை—எனக்கு நேரிடும் சகலவித விரோதங்களையும் வருத்தங்களையும் விசுவாசக் கண்ணால் பார்த்து அவைகளைக் கையேற்றுக்கொள்வேனாக.

3-ம் பிரிவு

மேற்சொன்ன இருதிறத்தாருக்குங் குறிக்கப்பட்ட நித்தியம்

தியானம்.—"உங்களைத் திரும்பவுங் காண்பேன்: அப்போது உங்கள் இருதயஞ் சந்தோஷத்தால் அகமகிழும்; உங்கள் கஸ்திகளெல்லாஞ் சந்தோஷமாய் மாறிப்போம்; உங்கள் சந்தோஷத்தை உங்களிடத்தில் நின்று ஒருவனும் பறித்துக்கொள்ளமாட்டானென்றார்" (அரு. 16). முந்தின ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷத்தில் இதுவே கடைசி வசனங்களாம். சர்வேசுரனுடைய பிள்ளைகள் கொஞ்சநேரம் அநுபவிக்கவேண்டிய இக்கட்டு, அழுகை, துயரமெல்லாம் மோக்ஷ இராச்சியத்திலே நித்திய பேரின்ப சந்தோஷமாய் மாறிப்போமென்று அந்த வசனங்கள்தானே நமக்கு உறுதி சொல்வதுபோல், இயேசுநாதர் வேறோரிடத்திலுஞ் சொல்லியிருக்கிறதாவது: "அழுகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் ஆறுதல் அடைவார்களென்றார்" (மத். 5). உலகத்தின் புத்திரருக்குச் சம்பவிக்கிறதோவென்றால், இதற்கு முழுதும் விரோதமாயிருக்கும். அவர்கள் இங்கே கொஞ்சநேரம் அநுபவிக்குஞ் சந்தோஷம் நித்திய காலத்துக்கும் அழுகையும் வேதனையுமாய் மாறிப்போம். இப்போது நகைத்து அகமகிழுகிறவர்களே உங்களுக்கு ஐயோ கேடாம், ஏனெனில் துக்கித்து அழுவீர்களென்று இயேசுநாதர் திருவுளம்பற்றினார் (லூக். 6). ஆ! இதென்ன வித்தியாசம்! அற்ப நேரச் சந்தோஷத்துக்கு முடியாத

நித்திய வேதனையுஞ் சொற்ப நேரம் அநுபவிக்குங் கஸ்திக்கு அழியாத நித்திய பேரின்ப பாக்கியமும் உண்டாகும்.

சம்பாஷணை.—நமது திவ்விய இரட்சகரோடு சம்பாஷணை செய்யவும்.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 3-ம் வாரம்—செவ்வாய்

அப்போஸ்தலரான அர்ச். தோமையார் அவிசுவாசப்பட்டது

ஆயத்தச் சிந்தனை.—தோமையார் மற்ற அப்போஸ்தலர்களை விட்டு விலகிப்போனதை உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—உன்னை நீ நம்பாமலிருக்க வரப்பிரசாதங் கேள்.

முதல் பிரிவு

தோமையார் மற்றவர்களோடிராமல் தனித்திருந்ததின்பேரில்

தியானம்.—இயேசுநாதர் தாம் உயிர்த்த அன்றுதானே, தமது அப்போஸ்தலர்களுக்குக் காட்சி கொடுத்து ஞான சந்தோஷத்தினாலும் ஆறுதலினாலுங் கெம்பீரத்தினாலும் அவர்களை நிரப்பினார். அவர்களில் ஒருவரான தோமையார் தமது சகோதரரான மற்ற அப்போஸ்தலர்களையும் அவர்கள் கூடியிருந்து பொதுவாய்ச் செபத்தியானஞ் செய்திருந்த இடத்தையும் விட்டுப் பிரிந்திருந்ததினாலே, அவர்களுக்குக் கிடைத்த பாக்கியம் இவருக்குக் கிடையாமல் போயிற்று. இயேசுநாதர் எழுந்தருளி வந்தபோது, தோமையார் அவர்களோடு இருக்கவில்லையென்று அர்ச். அருளப்பர் எழுதியிருக்கிறார் (அரு. 20).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதுபோல தன் சகோதரர்களை விட்டுப் பிரிந்து, மடத்தில்

பொதுவாய்ச் செய்யும் ஞான முயற்சிகளுக்குக் காசுமின்றிப்போகாதிருக்கிற சந்நியாசி அநேக வரப்பிரசாதங்களையும் விசேஷ சகாயங்களையும் இழந்துபோவதுந்தவிர, யாதொரு நிர்ப்பாக்கியத்திலே விழும் ஆபத்துக்கும் ஆளாகிறான். நீயும் இதை அநுபோகத்தினால் கண்டதில்லையோ? அது எப்படியிருந்தாலும், சரியான முகாந்திரமின்றிக் காலையில் மற்றவர்களோடே எழுந்திருக்காமலும், தியானம் ஆத்துமசோதனை முதலிய ஜெபம் பண்ணாமலும், இளைப்பாற்றி நேரத்திலே எல்லாருங் கூடிப்பேசும்போது அவர்களோடிராமலும் போவாயாகில், அந்த முயற்சிகளுக்குரிய விசேஷ வரப்பிரசாதங்களை இழந்துபோவாயென்பது நிச்சயம். சர்வேசுரன் விரும்புகிறவிடத்தில் நீ இல்லாததே இதற்குக் காரணம்.

மனப்பற்றுதல்.—என் சர்வேசுரா சுவாமி, இது உண்மையென்று நான் நம்புகிறேன். அப்போஸ்தலரான அர்ச். தோமையாருக்கு வந்த நிர்ப்பாக்கியம் நான் இதை நன்றாய்க் கண்டுபிடிக்கச் செய்கின்றது.

பிரதிக்கினை.—தனித்த காரியங்களைத் தள்ளிப்போட்டுக் கூடினமாத்திரம் எல்லாரையும்போல் பொது முயற்சிகளைச் செய்.

2-ம் பிரிவு

தோமையாரிடத்தில் விளங்கின பிடிவாதமான அவிசுவாசம்

தியானம்.—தோமையார் மற்றவர்களைவிட்டுப் பிரிந்திருந்ததுந் தவிர, அதிலும் பெரிதான பிடிவாதமுள்ள அவிசுவாசத்துக்குள்ளானார். வாஸ்தவத்திலும், மற்ற அப்போஸ்தலர்களும் சீஷர்களும் பத்தியுள்ள ஸ்திரீகளும் சிலவிசை தேவதாயாருந் தங்கள் திவ்விய குரு உயிரோடெழுந்திருந்ததையுந் தாங்கள் அவரைக் கண்ணால் கண்டதையும், அவர் சொல்லிய வசனத்தைக் கேட்டதையுந் தங்கள் கையால் அவரைத் தொட்டுப் பார்த்ததையும், அவருக்கு உறுதியாய்ச் சொல்லியும், இவர்கள் சொன்ன சாட்சியை நம்பாமல் அவர் பிடிவாதமுள்ள அவிசுவாசியாயிருந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விதமாய் ஒரு குற்றம் அத்தோடு ஒழிகிறது அரிது. அதைவிடப் பெரிய குற்றம் பின்தொடர்வது சாதாரணம்; அந்த இரண்டு குற்றங்களையும்விட இன்னும் அதிக கனமான மூன்றாவது குற்றம் ஏற்படுவதும் சகஜம். சிலவிசை இதெல்லாம் மெய்யென்று உன் அநுபவமே உனக்குச் சொல்லுகிறதாக்கும். இந்த அநுபவம் மீண்டும் ஏற்படாதபடி எச்சரிக்கையாயிரு.

மனப்பற்றுதல்.—முதல் தடவையாக யாதொரு பிரமாணிக்கமின்மை அல்லது குற்றத்துக்கு ஆளாகப்போகிற தறுவாயில், உன் மனச்சாட்சியின் உபாதனையும் இரட்சணியத்துக்குரிய பயமும் உன்னைத் தடுத்து நிறுத்தும்படியான வரத்தைச் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடு.

பிரதிக்கினை.—வீண் சடுத்தத்திற்கு இடங்கொடாமலிருக்கும்படியாகிலும் உன் புத்திக்குத் தோன்றினதே சரியென்று பிடிவாதம் பண்ணாதே.

3-ம் பிரிவு

தோமையாரிடத்தில் விளங்கின ஆங்காரமும் மிஞ்சின துணிவும்

தியானம்.—உலோபித்தனமானது யூதாஸ்கரியோத்தைப் பாதாளத்தில் தள்ளிவிட்டது. ஆங்காரத்தினால் தோமையார் அதில் தவறிவிழக் கிட்டின சமயமாயிருந்தது. மற்றவர்களைப்பார்க்கத் தனக்கு அதிக புத்தித் தெளிவு உண்டென்றும், மற்றவர்கள் புத்தியில்லாதவர்களென்றும் அவர் நினைத்து மற்றவர்களெல்லாம் நம்பினாலும் அவர் ஒருவர்மாத்திரம் நம்பாமல் பிடிவாதமாயிருந்தார். அடங்காத இந்த ஆங்காரத்தோடு குற்றமுள்ள துணிவும் கலந்தது: ஆகையால் அவர் சொன்னதாவது: நான் அவருடைய கரங்களில் ஆணிகளின் துவாரத்தையும் கண்டு அவைகளில் என் விரலையும் அவருடைய விலாவில் என் கரத்தையும் வைத்தாலொழிய விசுவசியேனென்று அவர்களுக்குச் சொன்னார் (அரு. 20). தமது திவ்விய குருவுக்குத் தான் கட்டளை கொடுக்கிறதுபோலவும், அவர் உயிர்த்

தெழுந்தருளின சத்தியத்தை விசுவசிக்கிறதற்கு அத்தாட்சி தானே தெரிந்துகொள்ளுகிறதுபோலவுமாயிற்று. இதினால் ஆண்டவருடைய நீதி கோபாக்கினையைத் தானே தேடிக்கொண்டதுபோலாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தோமையாருடைய நடக்கை, உனக்கு ஆத்திரத்தை எழுப்புகிறது சரியே. ஆனால் நீயும் எச்சரிக்கையாயிரு; அவரைப்போல நீயுந் தவறிப்போகக்கூடும். மூன்று வருஷ காலம் திவ்விய இரட்சகரோடிருந்து, அவர் போதித்த ஞான உபதேசமெல்லாம் அறிந்த அப்போஸ்தலர் தாமே தன்பேரில் வைத்த மிதமிஞ்சின நம்பிக்கையினாலே இப்படித் தவறிப்போயிருக்க, உன் நடக்கைகளிலேயும் உன் வார்த்தைகளிலேயும் நீ எவ்வளவோ எச்சரிக்கையாயிருக்க வேணும்! இப்பேர்க்கொத்த எச்சரிக்கை எத்தனையோ விசை உன்னிடத்தில் இல்லாமற்போயிற்று! உன் எச்சரிக்கைக் குறைவினாலும் ஆங்காரத்தினாலும் உனக்கு வரத்தக்கதாயிருந்த பொல்லாப்புகளிலே நின்று ஆண்டவர் உன்னைக் காப்பாற்றினதினாலே, அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக. உன் அபிப்பிராயத்தை நிலைநாட்டப் பார்ப்பதில், விசேஷமாய் அது பொது அபிப்பிராயத்துக்கு விரோதமாயிருக்குமாகில், வெகு வெகு எச்சரிக்கையாயிருக்கும்படி பிரதிக்கினை செய்துகொள்.

சம்பாஷணை.—நமது திவ்விய இரட்சகரோடு சம்பாஷணை செய். உன்பேரில் நம்பிக்கை வையாதிருக்கவும், தடுத்துப் பேசுகிறதின்பேரிலும் பிடிவாதத்தின்பேரிலும் உனக்கு மெத்த அரோசிகம் உண்டாகவுங் கேட்பாயாக. என் வார்த்தைகளின்மட்டில் விசேஷமாய் இளைப்பாற்றி நேரத்தில் எச்சரிக்கையாயிருப்பேனென்றும், விசுவாசம், பிறசிநேகம் அல்லது வேத கோட்பாடுகளைக் குறித்துப் பிறர் விரோதமாய்ப் பேசினாலன்றி தடுத்துப் பேசாதிருப்பேனென்றும் பிரதிக்கினை செய்து ஒப்புக்கொடுப்பாயாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 3-ம் வாரம்—புதன்

இயேசுநாதர் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் அநேக சீஷர்களுக்கும் முன்பாகத் தோமையாருக்குத் தரிசனையாகிறார்

ஆயத்தச் சிந்தனை.—அவர்கள் கூடியிருந்த பிரசித்தமான இந்தக் கூட்டத்தைப் பார்க்கிறதாக உருபிகரித்துக் கொள்ளுவோமாக.

தியானச் செபம்.—நமது குற்றங்களைக் கண்டறிந்து அவைகளுக்கு உடனே பரிகாரஞ் செய்ய வரப்பிரசாத கேட்போமாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் தவறிப்போன தோமையார் மனந்திரும்ப உதவி செய்கிறார்

தியானம்.—இயேசுநாதர் எட்டு நாளைக்குமுன் அப்போஸ்தலர்களுக்குக் காட்சி கொடுத்ததுபோல, பாஸ்காவுக்குப் பின் முதல் ஞாயிற்றுக்கிழமையிலும் அவர்கள் இராப்போசன சாலையில் கூடியிருந்தபோது, திரும்பவும் அவர்களுக்குத் தரிசனையானார். அப்போது தோமையாரும் அவர்களோடிருந்தார் (அரு. 20). தோமையாருங் கூட இருந்தாரென்று இவ்விடத்தில் சொல்லப்பட்டதேதென்றால், அவிசுவாசியான இந்த அப்போஸ்தலர் மனந்திரும்புவதற்கு இடமுண்டாகவுஞ், சிதறி வழி தப்பிப்போன இந்த ஆட்டை இவ்விதமாய் நல் வழியில் கொண்டுவந்து சேர்க்கவும் இயேசுநாதர் கருத்தாயிருந்தாரென்று காண்பிக்கிறதற்காக எழுதப்பட்டது. இயேசுநாதரிடத்தில் எவ்வளவு தயை விளங்குகிறது! குற்றஞ் செய்தவனைத் தாமே முந்தித் தேடி வருகிறார். தோமையார் கைவிடப்பட்டிருந்தால், எவ்வளவோ நிர்ப்பாக்கியராய்ப் போயிருப்பார்? எட்டு நாள் வரையிலும் அவிசுவாசத்தில் பிடிவாதமாயிருந்ததினால்

எப்போதும் அப்படியே இருந்து ஊழியுள்ள காலத்துக்குங் கெட்டுப்போயிருப்பாரென்று நினைப்பதற்கு இடமுண்டல்லவா?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சில விசை நீ அறிந்திருக்கிற ஒரேவிதப் பாவப் பழக்கத்திலே அநேகநாள் நிலைத்திருந்ததில்லையோ? அநேகர் அந்த நிர்ப்பாக்கியமான அந்தஸ்தில்தானே திடீரென்று செத்தது போல, நீயுஞ் சாகாமல் அதற்குத் தப்பித்துக்கொண்டதெப்படி? ஆண்டவருடைய அளவில்லாத இரக்கத்தினாலே உனக்கு இந்த வரப்பிரசாதங் கிடைத்ததென்று விசுவாசமே உனக்குச் சொல்லும். நாம் நரக நெருப்பிலே விழாமலிருக்கிறதற்கு ஆண்டவருடைய இரக்கமே காரணமென்று ஜெரெமியாஸ் தீர்க்கதரிசி வசனித்திருக்கிறார். நீயும் இப்படியே அத்தியந்த சந்தோஷத்தோடும் மகா நன்றியறிந்தனத்தோடுஞ் சொல்லவேண்டியதில்லையோ?

மனப்பற்றுதல்.—உன்மட்டில் சர்வேசுரனுக்குள்ள வாக்குக்கெட்டாத தயவையும் விசேஷ பட்சத்தையுந் துதித்து வாழ்த்துவாயாக.

பிரதிக்கினை.—நீ செய்த நல்ல பிரதிக்கினைகளை மீறி யாதொரு பாவத்தில் விழுந்தாயானால், அந்த நிர்ப்பாக்கியமான அந்தஸ்தை விட்டு உடனே எழுந்திருக்கவேணும்.

2-ம் பிரிவு

தோமையார் காண்பித்த துர்மாதிரிகையைப் பரிகாரம்பண்ண இயேசுநாதர் அவருக்கு ஒத்தாசைசெய்கிறார்

தியானம்.—இயேசுநாதர் மற்ற அப்போஸ்தலர்கள் முன்னிலையில் தோமையாருக்குத் தரிசனையானதற்கு ஓர் விசேஷ காரணமுண்டு. தோமையார் காண்பித்த துர்மாதிரிகையையும் மற்றவர்களுக்கு இதினால் வந்த கஸ்தியையும் அவர் இப்போது படுகிற மனஸ்தாபத்தினாலே, சகலருக்கும் முன்பாக பரிகாரஞ் செய்வதற்கு இலகுவாயிருக்கும்படி இவ்விதம் தரிசனையானார். மோயீசென்பவர் சொன்னபிரகாரம் "சர்வேசுரன் செய்ததெல்லாம் உத்தமமுள்ளது." ஆனால் அவர் தயையின் கிரிகைகள் விசேஷமாய் உத்தமமாயிருக்கின்றன. இதற்கு நாம் இவ்விடத்தில் அத்தாட்சி காண்கிறோம். அவிசுவாசியான அப்போஸ்தலர் தனது குற்றத்தை உணருவதற்கான வரத்தை இயேசுநாதர் அவருக்கு அளித்ததுமல்லாமல், தமது பராமரிப்பின் விசேஷ சந்தர்ப்பங்களால் அவரது மனந்திரும்புதல் உத்தமமும் பூரணமும், நன்மாதிரிகைக்குரியதுமாயிருக்கும்படி உதவிபுரிகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ வாக்கினாலாவது கிரிகையினாலாவது உன்னோடிருக்கிறவர்களுக்கு அல்லது உன்னோடே பழகினவர்களுக்கு துர்மாதிரிகையாயிருந்து கஸ்தி வருவித்திருந்தால், தேவ பராமரிக்கையினால் உனக்கு முதன்முதல் கிடைக்கிற சமயத்திலேயே இந்தக் குற்றத்துக்கான பரிகாரஞ் செய்யத் தீவிரப்படு. இந்தக் குற்றம் பிரசித்தமானதுபற்றிப் பரிகாரமும் பிரசித்தமாயிருக்கவேண்டியிருந்தால், மனத்தாராளமாய்த் தாழ்ச்சியோடும் நேர்மையாகவும் பரிகாரஞ் செய். "நேற்று செய்தது தப்பிதம் என்று சொல்பவன், இன்றைக்குப் புத்தியுள்ளவன் என்று காட்டிக்கொள்கிறான்" என்னும் பழமொழிக்கொப்ப, உன் குற்றத்தை உணர்ந்து பரிகாரம் செய்வதினால் உனக்கு ஓர் நஷ்டமும் ஏற்படாது.

மனப்பற்றுதல்.—உன் சகோதரர்களுக்குக் காண்பித்த துர்மாதிரிகையினிமித்தஞ் சர்வேசுரன் சமுகத்திலே உன்மேல் குற்றஞ்சாட்டி மனஸ்தாபப்படு.

பிரதிக்கினை.—புறத்தியாருக்குத் துர்மாதிரிகையாவது கஸ்தியாவது உண்டாகாவண்ணம், தன்மட்டில் விசேஷமாய் தான் சொல்கிற வார்த்தைகளின்மட்டில் கவனமாயிருக்கவேண்டும்.

3-ம் பிரிவு

தோமையார் கீர்த்திக்குப் பழுது வாராமல் மனஸ்தாபப்படும்படி இயேசுநாதர் உதவி செய்கிறார்

தியானம்.—கதவுகள் அடைக்கப்பட்டிருக்க, இயேசுநாதர் அவர்கள் நடுவிலே வந்து நிற்கிறார் (அரு. 20).

கதவுகள் சாத்தப்பட்டிருந்தன வென்று சுவிசேஷத்தில் கூறியிருக்கிறது; இதில் ஒரு பரமரகசியம் அடங்கியிருக்கிறதுமல்லாமல், நமக்கு ஓர் பெரிய படிப்பினையும் விளங்குகின்றது. புறத்தியார் செய்யுங் குற்றத்தை அறிவதற்கு உரிமை இல்லாதார்க்கு நாம் அதைத் தெரியப்படுத்தக் கூடாதென்றும் எவனையும், அவன் குற்றம் செய்ததைப் பார்த்திருந்தவர்கள் முன்னிலையிலன்றி, மற்றவர்கள் முன்பாகப் பிரசித்தமாய்க் கண்டிக்கத் தகாதென்றும் இயேசுநாதர் நமக்கு அறிவிக்கிறார். இதுபோல தோமையார் தமது அவிசுவாசத்தினால் யாருக்குத் துர்மாதிரிகையும் கஸ்தியும் விளைவித்தாரோ, அவர்கள் முன்பாக மாத்திரம் இயேசுநாதர் அவருக்குத் தம்மைக் காண்பித்து விபரம் சொல்லுகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீதியும் பிறசிநேகமுமுள்ள இந்த ஒழுங்கை நீ எப்போதும் அநுசரித்து வந்தாயோ? ஒருவன் செய்த குற்றங்களைக் கண்டிப்பதற்குக் கடமையுள்ளவர்களிடம் அவைகளை வெளிப்படுத்தாமல், யாதொரு சம்பந்தமும் இல்லாதவர்களிடம் அவைகளை ஒரு இரகசியம்போல் வெளிப்படுத்தவில்லையோ? இதுகாரியத்திலே உன்னிடத்தில் குறையில்லையோவென்றும் சிலவேளை கனமான குறை வரவில்லையோவென்றும் உன்னை வினவிக்கேள். இவ்விஷயத்தில் அர்ச்சியசிஷ்டவர்கள் எவ்வளவு எச்சரிக்கையாய் நடந்தார்களென்று பார். ஒரு நாள் ஒரு சகோதரன் ஒரு கனமான குற்றஞ் செய்ததைக் கண்டு அர்ச். இஞ்ஞாசியார் அவனைத் தண்டிப்பதைப் பற்றி ஒரு குருவினிடத்தில் ஆலோசனை கேட்கிறது போதுமென்றிருக்க, இரண்டுபேரிடத்தில் ஆலோசனை கேட்டதை நினைத்து வெகுவாய்க் கஸ்திப்பட்டாரென்று அவருடைய சரித்திரத்தில் எழுதியிருக்கின்றது.

சம்பாஷணை.—முந்தின இரண்டு பிரிவுகளிலுள்ள மனப்பற்றுதல் பிரதிக்கினைகளுக்கு ஒத்தபிரகாரம் நமது திவ்விய இரட்சகரோடு சம்பாஷணை செய்வோமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 3-ம் வாரம் வியாழன்

தோமையார் மனந்திரும்பி விசுவாச உச்சாரணஞ் செய்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—அப்போஸ்தலரான தோமையார் தன் திவ்விய குருவின் பாதத்தில் தாழ்ச்சியோடே மனஸ்தாபப்படுகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக் கொள்வேனாக.

தியானச் சேபம்.—இப்பேர்ப்பட்ட பற்றுதல்கள் பாவப்பொறுத்தல் அடையும் சமயத்திலே விசேஷமாய் என்னிடத்தில் உண்டாக வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் தமது திருக்காயங்களைத் தொட்டுப்பார்க்கும்படி தோமையாருக்குச் சொல்லுகிறார்

தியானம்.—தன் திவ்விய குரு மட்டில் நம்பிக்கை இல்லாதவராய்க் காட்டிக்கொண்ட தோமையார் அவரை நேரில் பார்த்ததும் எவ்வளவு பயமும் திகிலும் உண்டாயிருக்கும்? இரட்சகர் தாமே மகா தெளிவாய் அறிவித்திருந்த தமது உத்தானத்தின் புதுமையைத் தோமையார் விசுவசியாததினாலே, அவரது உண்மைத்தனத்தை மறுதலித்தார்; "நான் அவர் கரங்களில் ஆணி தைத்த காயங்களைக் கண்டு அவைகளில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை வைத்தாலொழிய விசுவசியேன்" (அரு. 20). என்றதினிமித்தம், அவரே ஓர் வகையில் கட்டளை கொடுத்து, நிபந்தனைகளை நிர்ணயித்து தனது விருப்பப்பிரகாரம் ஆண்டவர் நடக்கவேண்டுமென்று சொன்னதுபோலாயிற்று. இத்தகைய ஆங்காரமும் துணிகரமும் நீதியான கோபாக்கினையை வருவிக்குமென்று அவர் பயப்படவேண்டியிருந்ததல்லவா? ஆயினும், இயேசுநாதர் என்ன செய்கிறார், என்ன சொல்கிறார்? அவர்

தோமையார் கேட்டவண்ணம் சம்மதித்து "இங்கே உன் விரலை விடு, என் கரங்களையும் பார்; உன் கரத்தை நீட்டி என் விலாவிலே வை; அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்று சொற்ப கண்டிப்புடன் நிறுத்திக்கொள்கிறார் (அரு. 20).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இம்மேரையாய் நல்ல ஆயனானவர் நமது ஆத்துமத்தைத் தமது கைவசப்படுத்துவதற்காக, நமது கருத்துக்கும் பலவீனத்துக்கும் விருப்பத்துக்கும் தணிந்துகொடுக்கிறவரைப்போல தயவைக் காண்பிக்கிறார். ஆ! இதென்ன தயாளம், என்ன சாந்தகுணம்! நீ இதை அநுபவத்தினால் கண்டறிந்ததில்லையோ? நீ முன் நடந்த நடக்கையையும் விசேஷமாய்ச் சந்நியாச அந்தஸ்துக்கு அழைக்கப்பட்டுச் சந்நியாசியானதில் நடந்த விசேஷங்களையும் கவனமாய் ஆராய்ந்துபார்; இவைகளிலே வாக்குக்கெட்டாத அவருடைய தயாளத்தின் அத்தாட்சியைக் காண்பதுமல்லாமல் உன் குணத்துக்குஞ் சுபாவத்துக்கும், ஆசைக்கும், ஒத்தபடி அவர் நடந்துவந்தாரென்று நீயே அறிந்துகொள்ளலாம்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் கண்டு ஆச்சரியப்பட்டு நன்றியறிந்தனத்தோடே அவரைச் சிநேகிப்பாயாக.

பிரதிக்கினை.—நமது ஆத்துமங்களின் நல்ல ஆயனுடைய கரங்களிலே மட்டற்ற நம்பிக்கையோடே தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்கவேணும்.

2-ம் பிரிவு

தோமையார் உத்தம மனஸ்தாபப்பட்டுச் செய்த விசுவாச உச்சாரணத்தை இயேசுநாதர் கையேற்றுக்கொள்ளுகிறார்

தியானம்.—இயேசுநாதருடைய மகிமை நிறைந்த சரீரத்தில் பரம்பியிருந்த தெய்வீகப் பிரகாசமும் ரூபலாவண்ணியமும் அவர் திருவாயில் நின்று புறப்பட்ட மகா மதுரம் பொருந்திய வசனங்களும் எல்லாத்துக்கு மேலாக வாக்குக்கெட்டாத அவருடைய சாந்தகுணமும் ஒரு

க்ஷணப்பொழுதிலே தோமையாருடைய இருதயத்தைத் திருப்பி வசப்படுத்திக்கொண்டன. இதினால் அவர் பரவசமாகி "என் ஆண்டவரே, என் சர்வேசுரா" என்று மாத்திரஞ் சொல்லக்கூடியவராயிருந்தார் (அரு. 20). அவர் சொன்ன வார்த்தைகள் சொற்பம், அவைகளில் உள்ள கருத்தும் பொருளும் அனந்தம். எப்படியெனில், அவைகள் இயேசுநாதருடைய தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும் தோமையார் விசுவசித்ததாகத் துலாம்பரமாய்ப் பிரசித்தப்படுத்தின; அவருடைய இருதயப் பூரணமான தேவஆராதனை, உத்தமமனஸ்தாபம், கீழ்ப்படிதல், நம்பிக்கை, சிநேகம், பக்தி முதலானவைகளையும் ஆச்சரிய வலிமையுடன் விளக்கிக்காட்டின. இவைகள் இயேசுநாதருக்குப் பிரியமுள்ளவைகளாயிருந்ததினாலே, இந்த அப்போஸ்தலர் செய்த பாவத்தை இயேசுநாதர் பொறுத்துக்கொண்டதுமல்லாமல், இவர் செய்ததெல்லாத்தையும் மறந்துவிட்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது மன்றாட்டின் பலன் அலங்காரமான அநேக சொற்களில் அல்ல, அந்த மன்றாட்டுகளுக்கு இருப்பிடமான நல்ல இருதயத்தில் அடங்கியிருக்கிறதென்று அறிந்துகொள்ளுவோமாக. மேலும் நாம் ஆண்டவருக்கு ஏற்காத குற்றங்கள் எத்தனை செய்திருந்தாலும், அவைகளைப் பொறுத்து, நமது மன்றாட்டுக்கு இரங்கித் தேவ இஷ்டப்பிரசாதத்தைத் திரும்பவுங் கொடுக்க ஆண்டவர் எவ்வளவு ஆவலாயிருக்கிறாரென்பதையும் நாம் அறியவேணும். நாம் பாவங்களில் நின்று சுத்தமாகாதிருக்கிறதற்கும், தேவ இஷ்டப்பிரசாதமும் பேறுபலனும் நமக்கில்லாமல்போகிறதற்கும் நமது விசுவாசக் குறைவும் நம்பிக்கைக் குறைவுங் காரணமென்று எண்ணவேணும்.

மனப்பற்றுதல்.—என் ஆண்டவரே, என் சர்வேசுராவென்று அர்ச். தோமையார் சொன்ன வார்த்தைகளை அடிக்கடி பிரியத்தோடு நானுஞ் சொல்லுவேனாக.

பிரதிக்கினை.—நான் பாவத்தில் விழுந்தபிறகும் எனக்கு நேரிடும் அவசியங்களிலும் என் ஆத்துமத்தின்

திவ்விய ஆயனுடைய அடைக்கலத்தை மகா நம்பிக்கையோடே தேடிப்போவேனாக!

3-ம் பிரிவு

இயேசுநாதர் விசுவாசத்தின் பேறுபலனை வெளிப்படுத்துகிறார்

தியானம்.—மனந்திரும்பின அப்போஸ்தலர் வெளியிட்ட விசுவாச அறிக்கையைக் கேட்டு, திவ்விய இரட்சகர் எவ்விதம் பதில் உரைக்கிறார் என்று கவனி. "தோமாஸ், நீ என்னைக் கண்டதினால் விசுவசித்தாய், காணாமல் விசுவசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" (அரு. 20) என்கிறார். இதற்கு அர்த்தமென்ன? அவனவனுக்குக் கிடைக்க வேண்டிய விசுவாசத்தின் பேறுபலனும் மோக்ஷ சம்பாவனையும் புதுமைகளால் உண்டாகும் திஷ்டாந்தத்தினாலே யல்ல, ஆனால் சர்வேசுரனால் வெளிப்படுத்தப்பட்ட வேத வாக்கியங்களுக்கு நமது புத்தியை முழுதும் கீழ்ப்படுத்துவதினாலேதான் கிடைக்குமென்று அர்த்தமாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதரால் மிகவுங் கொண்டாடப்பட்ட இந்த உயிருள்ள விசுவாசமானது தெய்வீக விசேஷ வரப்பிரசாதத்தின் பலனும் கொடையுமாமே. ஆகையால் சகல வரப்பிரசாதத்துக்குங் காரண கர்த்தரானவரிடத்தில் நாம் இதைக் கேட்கவேண்டியதுந் தவிர, ஆண்டவரே, எங்களிடத்தில் விசுவாசத்தை அதிகரிக்கப் பண்ணுமென்று அப்போஸ்தலர்கள் சொன்ன மேரையாய் இந்த விசுவாசம் அதிகமாய் நம்மிடத்தில் வளர அவரைப் பார்த்துக் கேட்கவேணும் (லூக். 17). உன் விசுவாசமானது மகா பலவீனமாயிருக்கிறதற்குந் தேவ பக்தி சுறுசுறுப்புக்கடுத்த கருமங்களை மெத்தக் குறைவாய்ச் செய்கிறதற்கும் காரணமேதென்றால், இந்த விசுவாசம் உன்னிடத்திலே வேரூன்றி வளர நீ தக்க ஆசையோடே கேளாததே இதற்குக் காரணமென்று அறிவாயாக.

சம்பாஷணை.—இயேசுநாதரோடே சம்பாஷணை செய். உன் நேச இரட்சகருடைய தயையையுஞ் சாந்த

குணத்தையும் புகழ்ந்து, வாழ்த்தி, மேன்மைப்படுத்துவாயாக. மலைகளைத்தானே அப்புறம் போகச்செய்யும் உயிருள்ள விசுவாசத்தின் வரப்பிரசாதத்தை அப்போஸ்தலர்களோடே நீயும் அவரிடத்தில் கேட்பாயாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 3-ம் வாரம்—வெள்ளி

இயேசுநாதர் திபேரியாதேன்னுங் கடற்கரையில் காட்சி கொடுக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—இராயப்பரும் அவருடைய ஆறு துணைவர்களும் படகிலிருந்து இராமுழுதும் வலை வீசியும் ஒன்றும் பிடிபடாமலிருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்ளுவேனாக.

தியானச் செபம்.—நித்திய சம்பாவனைக்குப் பாத்திரமான பலனைக் கொஞ்சமாகிலும் அடையாமல் யாதொன்றையுஞ் செய்யாதபடிக்கு வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

இராயப்பரும் மற்ற ஆறு சீஷர்களும் இராமுழுதும் மீன் பிடிக்கப் பிரயாசப்படுகிறார்கள்

தியானம்.—பிரபலியமான இந்தக் காட்சியின் விசேஷங்களைக் குறித்து அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறதாவது: சீமோன் இராயப்பருந் திதிமென்னுந் தோமையாரும் கானான் கலிலேயனாகிய நத்தானாயேலுஞ் செபதேயின் குமாரர்களும் இயேசுநாதருடைய வேறே இரு சீஷர்களுங் கூடவிருக்கையில், இராயப்பர் அவர்களைப் பார்த்து: மீன் பிடிக்கப் போகிறேனென்றார். அதற்கு அவர்கள் நாங்களும் உம்மோடே வருகிறோமென்று சொல்லிப் புறப்பட்டுப்போய்ப் படகிலேறினார்கள் (அரு. 21). இரட்சகருடைய சீஷர்களிடத்தில் உண்டான ஆச்சரியமுள்ள புத்தி

மனவொன்றிப்பை இவ்விடத்தில் குறிப்பாய் அறிந்துகொள்வாயாக. இராயப்பர் தாம் கொண்ட கருத்தை வெளிப்படுத்தினவுடனே, மற்றவர்களும் அந்தக் கருத்துக்கொத்துத் தாங்களும் சேர்ந்துகொள்ளுகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சந்நியாச மடத்தில் தேவ கற்பனைகளுக்குந் திருச்சபைகட்டளைகளுக்கும் விரோதமான காரியங்கள் தவிர, மற்றக் காரியங்களிலே புறத்தியார் எண்ணத்துக்கும் நடக்கைக்கும் ஒத்திருக்கும்படி தான் நினைக்கிறதையுந் தனக்குப் பிரியமானதையுந் தள்ளிப்போடுவது பிற சிநேகத்தையும் ஒன்றிப்பையுங் காப்பாற்றுகிறதற்கு எவ்வளவோ நலமும் பிரயோஜனமுமாயிருக்கும்! இதுபோல நான் நடந்தேனோ? எதையும் எதிர்த்துச் சொல்லுகிற சுபாவம் என்னிடத்தில் இல்லையா? என் சொந்த அபிப்பிராயத்தில் பிடிவாதமாயிருப்பதில்லையா? இதனிமித்தம் தர்க்கங்களுக்கும் வீண்வாக்குவாதங்களுக்கும் ஆபத்தான சடுத்தங்களுக்கும் இடங்கொடுத்ததில்லையோ?

மனப்பற்றுதல்.—எல்லாக் காரியங்களிலும் இயேசுநாதருடையவும் என் சகோதரருடையவும் நன்மைகளை மாத்திரம் நான் பாராட்டி, என்னைத்தானே பரித்தியாகம் பண்ணி எல்லாரையும் இயேசுநாதருக்குப் பிள்ளைகளாக்கும்படி எல்லாருக்கும் எல்லாமானேனென்று அப்போஸ்தலரோடே மெய்யாகவே சொல்லத்தக்கதாக உன் இருதயத்தில் மெய்யான ஆசையை எழுப்புவாயாக. (1 கொரி. 9.)

பிரதிக்கினை.—இப்போது சொன்னதை நான் அடைய இன்றைக்கு விசேஷமாய்க் கவனிப்பேனாக.

2-ம் பிரிவு

இவர்கள் இராமுழுதும் பிரயாசப்பட்டு ஒன்றும் பிடியாமலிருந்தார்கள்

தியானம்.—இராமுழுதும் பிரயாசப்பட்டு இவர்கள் ஒன்றும் பிடியாமற் போனார்கள் (அரு. 21). இப்படி

நெடுநேரம் பிரயாசப்பட்டு அவர்கள் பலனடையாமல் போனது தேவபராமரிக்கையால் வந்த காரியமாமே. ஏனெனில் இரட்சகர் அவர்களோடு இல்லாதபோது, ஒன்றும் பிடியாமலிருக்கவும், அவர் சமீபத்திலிருந்தபோது, ஒரே தரம் வலைவீசவே, ஏராளமான மச்சங்களைப் பிடிக்கவுஞ் சர்வேசுரன் சித்தமானார். அதேதெனென்றால், நமது ஆத்துமத்தில் ஆண்டவர் தமது தேவ இஷ்டப்பிரசாதத்தினால் பிரசன்னராயிராதவரையில், நித்திய சீவியத்துக்காக நாம் எப்போதும் பலனில்லாமற் பிரயாசப்படுகிறோமென்றும், பரிசுத்த கருத்தைக்கொண்டுஞ் செபத்தைக்கொண்டும் நாம் ஆண்டவரோடே அந்நியோன்னியமாய் ஒன்றித்திராமற் போனால், நாம் படும் பிரயாசமெல்லாம் அற்ப பிரயோஜனமாகமாட்டாதென்றுங் காண்பிக்கிறதற்காக இவ்விதம் நடக்கும்படி சித்தமானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வெகுவாய் வருந்தி உழைத்தும், நித்தியத்துக்கான பலன் ஒன்றும் அடையாமற்போகிறவர்களும் அல்லது வெகு சொற்பமாய்ப் பலன் அடைகிறவர்களும் மெய்யாகவே பரிதாபத்துக்குரியவர்கள். அத்தகைய நிர்ப்பாக்கியர் யார்? முதன் முதல், தேவ இஷ்டப்பிரசாதத்தை இழந்து மனதறியச் சாவானபாவமுள்ள அந்தஸ்தில் ஜீவிக்கிறவர்களே. கிறீஸ்துவர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்களுக்குள், எத்தனையோ பேர் இவ்விதம் இருக்கிறார்கள்! இரண்டாவது, தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருந்துங் கெட்ட கருத்தினால் அல்லது நல்ல கருத்தில்லாததினால் தாங்கள் செய்யும் நற்கிரிகைகளின் பலனை ஒன்றில் முழுதும் அல்லது சில பங்கை இழந்துபோகிறவர்கள்.

மனப்பற்றுதல்.—தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலேயுஞ் சர்வேசுரனோடே அந்நியோன்னியமான ஒன்றிப்பிலேயும் உன்னைக் காப்பாற்றிக்கொண்டுவர மகா சுளுவான அந்தஸ்திற்கு அவர் உன்னை அழைத்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய். உன் பாக்கியத்தை நீ எந்நேரமும் நன்றாய் மதிக்கவும் தேவசிநேகத்தில் எப்போ

தும் வளரவும் பரிசுத்தமான கருத்தினாலே உன் கிரிகைகளுக்கெல்லாம் மிகுந்த பலனுண்டாகவும் வரப்பிரசாதங் கேட்பாயாக.

பிரதிக்கினை.—மனவல்லயச் செபத்தினால் நல்ல கருத்தை அடிக்கடி புதுப்பிப்பேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் கரையில் நிற்க, சீஷர்கள் அவரை இன்னாரென்று அறியாதிருக்கிறார்கள்

தியானம்.—விடியற்காலமானபோது, இயேசுநாதர் கரையில் நின்றார். ஆயினும் இயேசுநாதரென்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள். அப்போது இயேசுநாதர் அவர்களை நோக்கி: பிள்ளைகளே, உங்களிடத்தில் புசிக்கிறதற்கு ஏதாகிலும் உண்டோவென்று கேட்க, அவர்கள் இல்லையென்றார்கள் (அரு. 21). அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லையென்றும் பசியினாலுங் களைப்பினாலும் வெகு வருத்தப்படுகிறார்களென்றுந் திவ்விய இரட்சகருக்கு நன்றாய்த் தெரியும். அவர்களுக்கு அந்த இக்கட்டில் புதுமையைக் கொண்டு உதவிபுரியவும் தீர்மானித்திருந்தார். ஆனால் அவர்களுடைய வாயிலிருந்தே அவர்கள் வருத்தத்தை அறியவும் தங்களுக்கு உதவி கிடைக்கவேணுமென்று அவர்கள் இருதயத்திலே மிகுந்த ஆசையை எழுப்பவும் அவர்களை வினவிக் கேட்கச் சித்தமானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது ஆத்துமத்தின் இன்னல்களை நாமே அறிவதினாலும், நாம் தாழ்மையாய் அவைகளை ஒத்துக்கொள்வதினாலும், சர்வேசுரனுடைய உதவியை நாம் உருக்கமாய் ஆசிப்பதினாலுமே, அவரது வரங்களை நாம் பெறுவதற்கு அவர் நம்மை ஆயத்தப்படுத்த விரும்புகிறார். இத்தகைய ஆயத்தம் உன்னிடம் இல்லாததினாலல்லவோ, ஆண்டவருடைய வரங்களில் உனக்குக் கிடைக்கிற பங்கு வெகுவெகு சொற்பமாயிருக்கிறது! உன்னைத்தானே நன்றாய்ப் பரிசோதித்து, உன்

துர்ப்பலத்தினிமித்தம் உன்பேரில் எவ்வளவுக்கு அவநம்பிக்கையாயிருக்கிறாயோ, அவ்வளவுக்கு நம்பிக்கையோடு செபம்பண்ண உரிமையுண்டென்றும் அதிக நிச்சயமாய்த் திவ்விய உதவியை அடைவாயென்றும் அறிந்துகொள்.

சம்பாஷணை.—நீ கனமான பாவத்தில் விழாமல் உன்னைக் காப்பாற்றி அல்லது பாவத்தில் விழுந்தவுடனே அதைவிட்டெழுந்திருக்க, உனக்கு நல்ல நினைவை வருவித்து உதவிசெய்து, நீ சர்வேசுரனுக்குப் பிரியப்படும்படியாகமாத்திரம் சீவிக்கவும் உழைக்கவும் கடமைப்பட்டிருக்கிறாயென்று எந்நேரமும் நினைப்பூட்டுகிற உன் காவலான சம்மனசோடே சம்பாஷணை செய்வாயாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 3-ம் வாரம்—சனி

புதுமையாய் மீன் பிடித்ததும் அர்ச். அருளப்பர் இயேசுநாதரைக் கண்டறிந்ததும்

ஆயத்தச் சிந்தனை.—படகில் அப்போஸ்தலர்கள் இருக்கிறதையும், அதற்கடுத்தாற்போல் இயேசுநாதர் கரையில் நிற்கிறதையும் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—கீழ்ப்படிதலையும் பத்தி சுறுசுறுப்பின் பற்றுதலையுங் கேட்பேனாக.

முதல் பிரிவு

சீஷர்களது தயக்கமற்ற கீழ்ப்படிதலுக்குக் கிடைத்த சம்பாவனை

தியானம்.—சீஷர்கள் தங்கள் சக்தியின்மையைக் கண்டறிந்து தாழ்ச்சியோடு அதை ஒத்துக்கொண்டதினாலே, அவர்கள் விசேஷ சகாயம் பெறுவதற்கு இயேசுநாதர் வழி செய்தார். "அதிகாரமுடையவராய் அவர்களுக்குப்

"போதித்துக்கொண்டிருந்தார்" என்று அர்ச். மத்தேயு சொல்லும்வண்ணம், அவருக்குச் சுபாவமான அதிகாரத் தொனியில் அவர்களை நோக்கி: "படகின் வலது பக்கத்தில் வலைவீசுங்கள்; உங்களுக்குக் கிடைக்கும்" என்றார். அப்படியே அவர்கள் வலைவீச, அக்ஷணமே பிடிபட்ட மச்சங்களின் மிகுதியினால் அதை இழுக்கமாட்டாமற்போனார்கள் (அரு. 21). எதிர்பாராததும், நம்பிக்கையை எல்லாம் கடந்ததுமான இந்த அநுகூலம், சர்வேசுரன்பேரால் பேசுகிறவராகத் தோன்றின குரலொலிக்குத் தயக்கமின்றி அப்போஸ்தலர்கள் கீழ்ப்படிந்ததினால் அடைந்த சம்பாவனையாகும்; ஏனெனில் இவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்ததினாலே, அவர் தங்கள் திவ்விய குருவென்று இன்னமும் அறியாதிருந்தார்கள் (லூக். 24).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது முயற்சிகள் முழுதும் அநுகூலமாக வேணுமானால், சர்வேசுரன்பேராலும் அதிகாரத்தினாலும் நம்மிடத்தில் பேசுகிறவர்களுக்கும் நமக்குக் கட்டளையிடுகிறவர்களுக்கும் விசுவாசத்தோடுஞ் சிநேகத்தோடும் அமைந்து கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருக்கவேண்டும். அப்போஸ்தலர்களைக்கண்டு பாவித்து, கற்பிக்கப்பட்ட காரியம் அசாத்தியமாய்த் தோன்றினாலும் பின்வாங்காதிருப்போமாக. விசுவசிக்கிறவனுக்குச் சகலமும் சாத்தியப்படும். கீழ்ப்படிகிறவன் தனது ஜெயத்தை வெளிப்படுத்துவானென்று வேதாகமம் நமக்கு அறிவித்திருப்பதினால், தமது கையில் சர்வ வல்லமையையும் அடக்கிக்கொண்டிருக்கிறவருடைய வார்த்தையை நம்பி உடனே நாம் முழுதுங் கீழ்ப்படிவோமாக. வழக்கமாய் நான் இப்படிக் கீழ்ப்படிகிறேனோ? ஒழுங்குகளையும் அலுவல் கடமைகளையுஞ் சிரேஷ்டர்கள் சொல்லுகிறதையுஞ் செய்கிறேனோ?

மனப்பற்றுதல்.—கீழ்ப்படிதலென்னும் புண்ணியத்தில் சிறந்தோங்க வரப்பிரசாதங் கேட்போமாக.

பிரதிக்கினை.—தனக்குக் கொடுக்குங் கட்டளைக்கு முகாந்திரத்தைத் தேடாமலிருக்கவேணும்.

2-ம் பிரிவு

அர்ச். அருளப்பருடைய விரத்தத்துவத்துக்குக் கிடைத்த சம்பாவனை

தியானம்.—புதுமையாக அகப்பட்ட மச்சங்களைக் கண்ட க்ஷணமே அந்த அற்புதம் யாரால் வந்ததென்று சீஷர்கள் அறிந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது; ஆகிலும் பிரிய சீஷனான அருளப்பர் ஒருவர் மாத்திரம் இயேசுநாதரைக் கண்டறிந்து இராயப்பரை நோக்கி: ஆண்டவர்தானென்றார் (அரு. 21). மற்றச் சீஷர்களைப் பார்க்கச் சுபாவத்துக்கு மேலான இந்த ஞான ஒளிவு அர்ச். அருளப்பருக்கு வந்ததேதென்றால், அர்ச். எரோணிமுசென்பவர் சொன்னதுபோல், அவருடைய விரத்தத்துவமே இதற்கு முகாந்தரமாயிற்று: விரத்தனான சீஷன்மாத்திரம் கன்னியர்களுக்கு அரசனானவரைக் கண்டறிந்தானென்றார். அவருடைய இருதயப் பரிசுத்தமானது, இயேசுநாதருடைய திரு இருதயத்திலே இவருக்கு விசேஷ இடங் கிடைக்கச்செய்தது. தூய இருதயமுடையவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்களே சர்வேசுரனைத் தரிசிப்பார்களென்று இரட்சகர்தாமே சொன்ன வாக்கியம் இவரிடத்தில் சரியாய் நிறைவேறிற்று (மத். 5).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் ஏறக்குறைய வழக்கமாய் ஞான இருளும் வரட்சியுமுள்ள அந்தஸ்திலிருக்கிறோமென்றும், ஆத்துமத்தைத் தெளிவித்துத் தேவசிநேகத்திலும் புண்ணியத்திலும் ஆச்சரியமானவிதமாய் அதை ஸ்திரப்படுத்தி மதுரமான உருக்கத்தால் அதை நிரப்பத்தக்க ஞான ஒளிவு நம்மிடத்தில் அதிகமாயில்லையென்றும் நாம் அடிக்கடி முறைப்பாடு சொல்லுகிறோம். இருதய பரிசுத்தத்தனத்தைக் காப்பாற்றி அதை அதிகப்படுத்தவேணுமென்கிற கவலை நம்மிடத்தில் அருமையாயிருப்பதே சிலவிசை இதற்குக் காரணமாகும். ஒடுக்கமும் ஒறுத்தலுமில்லாததினால் தினந்தோறும் அநேக குற்றங்களைக் கட்டிக்கொள்ளுகிறவர்களுக்குள்ளே நீயும் ஒருவனன்றோ? இந்தக் குற்றங்கள் அற்பமாயிருந்தாலும்,

உன் ஆத்துமத்தைக் கறைப்படுத்தி அதின் பார்வையைக் குறைக்காமற் போகமாட்டா.

மனப்பற்றுதல்.—ஆ! என் சர்வேசுரா, என்னிடத்தில் சுத்த இருதயத்தை உண்டாக்கும்; என் பாவ அக்கிரமத்தில் நின்று என்னை அதிகமதிகமாய்க் கழுவிச் சுத்தப்படுத்தும் (சங். 50).

பிரதிக்கினை.—எவ்வித உபாயங்களாலும் மிகுந்த இருதய பரிசுத்ததனத்தை அடையப் பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

அர்ச். இராயப்பரிடத்தில் விளங்கின மிகுந்த வேகமான சுறுசுறுப்பு

தியானம்.—ஆண்டவர்தானென்று சீமோன் இராயப்பர் கேட்டமாத்திரத்தில், படகு கரைக்குச் சற்றுக் கிட்டியிருந்ததினாலே, கடலிற் குதித்தார் (அரு. 21). தமது திவ்விய குருவின்பேரில் அவருக்கு இருந்த மிகுந்த சிநேகத்துக்கு இது அத்தாட்சியாமே; மிகுதியான மச்சங்களால் நிறைந்திருந்த படகு மெதுவாய்ப் போகிறதுபோல் அவருக்குக் காணப்பட்டதினாலே, தம்மாற் சிநேகிக்கப்பட்டவரண்டையிற் சேர அவருக்கு மெத்த துரிதம் உண்டாயிற்று. சிநேகம் யோசனைக்கு இடந்தராது; கடலிற் குதிக்கிறதினாலே ஆபத்து வருமேயென்று அவர் யோசிக்கவில்லை. இயேசுநாதர் அண்டையிற் சீக்கிரமாய்ப் போய்ச் சேரவேணுமென்பது மாத்திரம் ஏக நோக்கம்; எவ்வித வழியும் நல்லதும், எளிதுமாய்க் காணப்படுகின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த அப்போஸ்தலருடைய நடக்கையிலே பத்திசுறுசுறுப்பின் குணங்களெல்லாம் விளங்குகின்றன. கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் நன்றாய் விவரித்திருக்கிறவண்ணம், தேவ சிநேகத்தின் ஆச்சரியமுள்ள குணங்களையுஞ் சத்திகளையும் இவரிடத்தில் காண்கிறோம். "சிநேகத்துக்கு அளவு பிரமாணமில்லை; அதின் வேகமானது மட்டுக்கடங்காததா

யிருக்கும்; எல்லாம் தன்னால் கூடுமென்றுந் தனக்கு விக்கினமானது ஒன்றுமில்லையென்றும் நினைக்கிறதினாலே, தான் செய்யக் கூடுமானதற்கு, மேலாகச் செய்யத் துணியும். சிநேகமில்லாதவன் உறங்கித் திடனற்றிருப்பான்; சிநேகமுள்ளவனோவென்றால், எதற்கும் வல்லவனாயிருப்பான்" (கிறீ. அநு. 3-ம் காண்டம் 5-ம் அதி.). இத்தகைய சிநேகம் உன்னிடத்தில் சிலவேளை விளங்குகிறதோ?

சம்பாஷணை.—இயேசுநாதரோடே சம்பாஷணை செய். பரிசுத்ததம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், தேவ சிநேகமுள்ள இருதயத்தை அவரிடத்தில் கேட்பாயாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 4-ம் வாரம்—ஞாயிறு

இன்றையத்தினம் வாசிக்கும் சுவிசேஷத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் கொஞ்சத்துக்குள்ளாகத் தாம் அனுப்பப்போகிற இஸ்பிரீத்துசாந்துவானவரைக் குறித்துத் தமது அப்போஸ்தலர்களோடே பேசிக்கொண்டிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக் கொள்வேனாக.

தியானச் சேபம்.—தன் பிரயோசனத்தைத் தேடாமல் சிநேகப் பிரீதியைக் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் இஸ்பிரீத்து சாந்துவை அனுப்புவதில் தமது பிரயோசனத்தைத் தேடாதிருந்தார்

தியானம்.—அக்காலத்தில் இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இப்போது நான் என்னை அனுப்பினவரிடத்தில் போகிறேன்; ஆகிலும் எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கிறதில்லை. ஆனால் நான் இவைகளை உங்களுக்கு

அறிவித்ததைப்பற்றி உங்கள் இருதயந் துக்கத்தால் நிறையப்பட்டது. ஆயினும் நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போவது உங்களுக்கு நலமாமென்றார் (அரு. 16). இம்மேரையாய் இயேசுநாதர் தமது நன்மையைத் தேடாமல் நம்மைச் சிநேகிக்கிறார். தாம் மோக்ஷத்துக்கு ஆரோகணமாகிறபோது, தமது அர்ச்சிக்கப்பட்ட மனுஷீகத்துக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இளைப்பாற்றியையும் பாக்கியத்தையும் மகிமையையும் பாராட்டாமல், நமது இலாபத்தையும் பிரயோசனத்தையும் மாத்திரந் தேடுகிறார். தாம் இந்த உலகத்திலே சஞ்சரித்த கடைசி நாள் பரியந்தந் தம்மை மறந்து நம்மை மாத்திரம் நினைத்துக்கொண்டிருந்தார். அவர் கொட்டிலிலே வருத்தத்தினால் அழாமல் நமதுபேரில் வைத்த இரக்கத்தினால் அழுத நாள்முதல் கபாலமலைக்குப் போகும் வழியில் இரக்கமுள்ள ஸ்திரீகளைப் பார்த்து: எருசலேம் குமாரத்திகளே, எனக்காக அழாமல் உங்களுக்காக அழுங்களென்று சொன்ன நாள் பரியந்தம் தாம் சீவித்த சகல நாட்களிலும் அப்படியே நடந்துகொண்டுவந்தார் (லூக். 23).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் உன் மட்டில் காண்பிக்கும் இந்த அபூர்வமான சிநேகத்துக்கு நீ அவர்மட்டில் வைத்திருக்கிற சிநேகம் எப்படிப்பட்டதென்று பார். இப்படிப் பார்ப்பாயானால், உன் சிநேகமானது சுயபட்சத்தோடுஞ் சுயப்பிரியத்தோடும் கலந்து கெட்டுப்போயிருக்கிறதினாலே, இதற்குச் சிநேகமென்கிற பேர் முதலாய்ச் செல்லாதென்று சிலவிசை நீயே நிச்சயித்துக்கொள்வாய். அப்படியே பாவத்தில் விழாமல் அந்தந்தப் புண்ணியக் கிரிகைகளைச் செய்யச் சில சமயத்தில் நீ பிரயாசப்படுகிறதைப் பார்க்கையில், ஆக்கினைக்குத் தப்பித்துக்கொண்டு சம்பாவனை அடையலாமென்கிற கருத்து உன்னிடத்தில் முக்கியமாய்க் காணப்படவில்லையோ?

மனப்பற்றுதல்.—இவைகளையெல்லாம் தாழ்ச்சியோடும் வெட்கத்தோடுங் கண்டறிந்து சர்வேசுரனுக்கும்

சர்வேசுரனுடைய பிள்ளையாயிருக்கிற உனக்கும் அதிக தகுதியான சிநேகத்தில் வர்த்திக்க ஆசைப்படுவாயாக.

பிரதிக்கினை.—சர்வேசுரனைப்பற்றி மாத்திரம் அவரைச் சிநேகிக்க வருந்துவாயாக.

2-ம் பிரிவு

இஸ்பிரீத்து சாந்துவை அனுப்ப இயேசுநாதர் வாக்களிக்கிறார்

தியானம்.—நான் போகாதிருந்தால், தேற்றுகிறவர் உங்களிடத்தில் எழுந்தருளிவரமாட்டார்; நான் போவேனாகில், அவரை உங்களுக்கு அனுப்புவேனென்றார் (அரு. 16). இயேசுநாதர் மோக்ஷத்துக்கு ஆரோகணமாகிறதற்கு முந்தி, அப்போஸ்தலர்கள் இஸ்பிரீத்து சாந்துவை அடையக் கூடாமற்போனதேன்? இதைக் குறித்து வேதாகமத்தை வியாக்கியானம் செய்தவர்களும் விசேஷமாய் அர்ச். அகுஸ்தீன் சொன்ன நியாயங்களில் ஒன்று பின்வருவது: அப்போஸ்தலர்கள் தங்கள் திவ்விய குருவின் மனுஷீகத்தின் பேரில் வைத்த பற்றுதல் அதிகமாய்ச் சுபாவத்துக்கும் பஞ்சேந்திரியங்களுக்கும் அடுத்ததாயிருந்ததினாலே, அவர்களுடைய சிநேகம் மிகவும் பழுதுள்ளதாயிருந்தது. இந்தச் சிநேகத்தின் காணப்பட்ட பொருளான தேவவார்த்தையின் மனுஷீகமானது அவர்களைவிட்டு விலகாவிடில் இஸ்பிரீத்து சாந்துவானவரை அவர்கள் முழுதும் அடையவும் மெய்யாகவே ஞானிகளாகவும் முடியாது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இது காரியத்திலே அப்போஸ்தலர்கள் இஸ்பிரீத்து சாந்துவையும் அவருடைய பரிபூரண வரங்களையும் அடைகிறதற்கு இயேசுநாதருடைய காணப்பட்ட சமுகமானது விக்கினமாயிருந்ததென்றால், நீ சில பொருள்கள்மட்டில் வைத்திருக்கும் மிகுந்த பற்றுதலைக் குறித்தும் அவைகளில்லாததினால் நீ மனங்கலங்கி வருத்தப்படுகிறதைப் பற்றியும் என்ன நினைக்கிறாய்? விசேஷமாய் மனுஷர்மட்டில் நீ வைத்

திருக்கிற அதிக உருக்கமான சினேகத்தின் பேரிலுஞ் சில விசை உன்னிடத்தில் விளங்குகிற தனிச் சினேகத்தின் பேரிலும் என்ன நினைக்கிறாய்? இந்தப் பட்சமும் சினேகமும், அடிக்கடி கிரமந் தப்பினதாயிருக்கிறதுமல்லாமல் எப்போதும் தின்மையானதாயிருக்கும்; ஏனெனில், இவ்வித பட்சமும் சினேகமும் சாதாரணமாய் பஞ்சேந்திரிய பிரியத்திலும் சரீர பற்றுதலிலும் ஊன்றியிருக்கும்; பெரும்பாலும் தகாத சகவாசத்தையும் இரகசிய பேச்சுகளையும் உண்டுபண்ணும்; விலையேறப்பெற்ற நேரத்தை வீணாக்கும்; சர்வேசுரனைப்பற்றிமாத்திரம் நினைத்து அவரையே நேசிக்கிறவர்களுக்கு உரித்தான மதுரம் நிறைந்த பூரண மனச் சமாதானத்தை அழித்துப்போடும். தவிரவும், தின்மையின் மட்டில் நமக்குள்ள சுபாவ நாட்டத்தை யோசிக்குங்கால், இந்தச்சுபாவ பட்சமானது சரீர இன்பத்தையும் அக்கிரமத்தையும் சார்ந்ததாகிவிடுமென்று பயப்பட இடமுண்டு. உன் அநுபவம் உனக்கு என்ன சொல்லுகிறது? நீ செய்ய வேண்டியதென்ன?

மனப்பற்றுதல்.—திவ்விய இரட்சகரை ஊற்றாகவும் காரணமாகவும் கொண்டிராத பட்சத்தையெல்லாம் தேவ சினேகம் என்கிற பீடத்தின்மேல் வைத்துப்போடுவேனாக.

பிரதிக்கினை.—என் பட்சம் பற்றுதலின்பேரில் அடிக்கடி ஆத்துமசோதனை செய்வேனாக.

3-ம் பிரிவு

இஸ்பிரீத்துசாந்துவின் செய்கைகளின்பேரில்

தியானம்.—அவர் வரும்போது, பாவத்தைக் குறித்தும் நீதியைக்குறித்தும் நடுத்தீர்வையைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்துணர்த்துவார். சகல சத்தியத்தையும் உங்களுக்குப் போதிப்பார் (அரு. 16.) சர்வேசுரனுடைய இஸ்பிரீத்து சாந்துவானவர் ஓர் ஆத்துமத்தில் மெய்யாகவே வந்திருக்கும்போது அதில் இரண்டு காரியங்கள் எப்போதும் உண்டாகும். முதலாவது, அர்ச்சியசிஷ்டதனம்: இதினால் அற்பப்பாவத்தை முதலாய் கண்டித்து நம்மிடத்தில் உள்ள தவறுதலான எண்ணங்களை சீர்திருத்தி நம்மிடத்திலிருக்கிறதாக நாம் நினைக்கும் நீதி வெகு குறைவான தென்று உணரச்செய்வார். இரண்டாவது, ஞான ஒளி: இதினால் நமது கடமைகளை நமக்கு அறிவித்து நித்திய சத்தியங்களை நன்றாய் அறிந்து அவைகளை உணர நமக்கு உதவிசெய்வார்; உத்தமதனத்தில் வர்த்திக்கிறதற்கு நூதன உபாய சூட்சங்களை நமக்கு எப்போதுங் காண்பிப்பார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இஸ்பிரீத்து சாந்துவினுடைய வாக்குக்கெட்டாத இந்தச் செய்கைகளை நீ கண்டுணருகிறாயோ? அவைகளுக்குக் கீழ்ப்படிந்து வருகிறாயோ? உன் இருதயத்தில் அவர் பிறப்பிக்கிற பற்பல நினைவுகள் பேரில் கவனமாயிருக்கிறாயோ? இல்லையென்பாயாகில், நீ ஞானதிருஷ்டியால் சீவிக்கிறவனல்லவென்றும் அல்லது தேவ வரப்பிரசாத ஏவுதல்மட்டில் பற்றுதலற்றுக் கீழ்ப்படியாதவனென்றுஞ் சொல்ல வேண்டியதில்லையோ? கீழ்ப்படியாப் புத்தியுள்ளவர்களே, நீங்கள் எப்போதும் இஸ்பிரீத்து சாந்துவுக்கு எதிரிடையாயிருக்கிறீர்களென்று அர்ச். முடியப்பர் யூதர்களுக்குச் சொன்ன கண்டனைக்கு நீயும் பாத்திரவான் என்று பயப்பட வேண்டியதில்லையோ?

சம்பாஷணை.—இஸ்பிரீத்து சாந்துவானவரோடே சம்பாஷணைசெய்.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 4-ம் வாரம்—திங்கள்

இயேசுநாதர் அற்புதமாய் மீன்கள் அகப்படச்செய்தபின், சீஷர்களுக்கு வேறொரு அற்புதமான காரியத்தைச் செய்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—அற்புதமாய் மீன்கள் அகப்பட்டதைக் கண்ட ஏழு சீஷர்கள் கரையில் இயேசுநாதரைச் சூழ்ந்திருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக் கொள்வேனாக.

தியானச் சேபம்.—என் திவ்விய மாதிரிகையான இயேசுநாதரை அதிகமாய் அறியவும் மிகுதியாய்ச் சிநேகிக்கவும் வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் ஒரு அற்புதத்தினால் தமது சீஷர்களுக்குப் போசனங் கொடுக்கிறார்

தியானம்.—அற்புதமாய் அகப்பட்ட மீன்களைக் கொண்டுவந்த படகு கரைசேர்ந்து, ஏற்கனவே இராயப்பர் வந்திறங்கியிருந்த கரையில் மற்ற சீஷர்களும் இறங்கினவுடனே, "தணல்மூட்டி, அதன்மேல் ஒருமீன் வைத்திருக்கிறதையும் அப்பத்தையுங் கண்டார்கள்" (அரு. 21, 9.) இயேசுநாதர் அவர்களுக்காகச் செய்திருந்த போஜனஞ் சொற்பமானதுதான்; அவர்களுக்குக் களைப்பைப் பார்க்கிலும் பசி அதிகமாயிருந்தது. ஆனால் அந்தப் பசியை என்னமாய்த் தீர்க்கிறது? வனவாசமான அந்த இடத்திலே நெருப்பும் அப்பமும் இல்லாதிருக்க, இவ்விரு காரியங்களையும் கொண்டுவர வெகுதூரம் போகவேண்டியிருந்ததால், உடனே தங்களுக்கு அவசரமானதைக் காணவும் பசியாறவும் அவர்களுடைய நல்ல குரு நவமான ஒரு புதுமையினால் சவரட்சணை செய்கிறார். ஆகிலும் அவர்களும் இதற்குதவி செய்தாற்போல் அவர்கள் பிடித்த மீன்களைப் புசித்துத் திருப்தியடைகிறதற்காக இயேசுநாதர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்போது பிடித்த மீன்களைக் கொண்டுவாருங்களென்றார். பின்னும் அவர்களைப்பார்த்து: புசிக்க வாருங்களென்றழைக்கிறார். சர்வேசுரன், தமது ஊழியர் மட்டிற் காண்பிக்கிற தயாளத்தையும் பட்சமுள்ள கவனத்தையும் என்னென்று சொல்லுவோம்?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் தினந்தோறும் நமது மட்டில் இப்படியே செய்து வருகிறார். ஆகிலும் அவர் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நாமுங்கூடப் பிரயாசப்படுகிறதினாலே நாம் பிரயாசப்பட்ட

பலனைப் புசிக்கிறோமென்று நாம் நினைக்கும்படி அவர் செய்தாலும், அவர்தாமே தமது வல்லமையினாலும் தயையினாலும் அற்புதமாய் பூமியிலொன்றுக்கு நூறு பலன் கொடுத்து வருகிறார். அப்படியே தமது தேவ வரப்பிரசாதத்தினாலே நமது நற்கிரியைகளுக்குச் சுபாவத்துக்கு மேற்பட்ட பலன் கொடுக்கிறவரும் அவர்தாமே. ஆகிலும் நாம் பிரயாசப்பட்டுத் தேடினபலனென்று நாம் நினைக்கச் செய்து நாம் பட்ட பிரயாசத்துக்குத்தகுந்த சம்பாவனையை அவர் கொடுக்கிறார்; வாஸ்தவத்திலோ, அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருக்கிறதுபோல, தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களிடத்திற் சர்வேசுரன் தமது சொந்த வரங்களுக்கே மோக்ஷமுடி கொடுக்கிறதாகச் சொல்லவேணும். சர்வேசுரன் அதில் காண்பிக்கிற இரக்கமுள்ள தயவை அடிக்கடி நினைத்துப் பார்க்கிறாயோ? நீ செய்கிற நற்கிரியைகளில் அதிக பெரிய பங்கை உன்பிரயாசையால் வந்ததாக எண்ணி, சர்வேசுரனுக்குச் சேரவேண்டிய நன்றியறிந்த தோத்திரத்தை அடிக்கடி செய்யாமலிருக்கவில்லையோ?

மனப்பற்றுதல்.—தேவ வரப்பிரசாதத்தினாலல்லவோ நான் இப்போதிருக்கிற அந்தஸ்தில் இருக்கிறேனென்று அர்ச். சின்னப்பர் சொன்னதுபோல, தேவ வரப்பிரசாதத்தின் மூலமாய் நமக்கு எல்லாங் கிடைத்ததென்று ஒத்துக்கொள்ளவேணும் (1 கொ. 15, 9.)

பிரதிக்கினை.—சகல காரியங்களும் தேவதயவாலும் தயாளத்தாலும் ஆகின்றன என்றுணரப் பழகவேணும்.

2-ம் பிரிவு

இயேசுநாதர் தமது சீஷர்கள் தம்மைப் படிப்படியாய் அறியச்செய்கிறார்

தியானம்.—இந்த ஏழு சீஷர்களுக்கு ஆண்டவர் காட்சி கொடுத்ததில் விசேஷமானது ஏதென்றால், அர்ச். அருளப்பர் எழுதியிருக்கிறதுபோல, அவர்தான் ஆண்டவ

ரென்று அவர்கள் அறிந்ததினால், பந்தியிலிருந்தவர்களில் ஒருவனாகிலும் நீர் ஆரென்று கேட்கத் துணியாதிருந்தான் (அரு. 20). ஆகையால் அவர் இவர்கள் கண்களுக்கு மறைவான ரூபமாய்த் தரிசனையானாரென்று சொல்லவேண்டியது; ஆண்டவர்தானென்று அவர்கள் காணாதிருந்தாலும், அவர்தானென்று அறிந்தார்கள், அதாவது, சந்தேகமில்லாமல் அவர்தானென்று விசுவசித்தார்கள். இந்த விசுவாசம் அவர்களுக்கு எப்படி வந்ததென்றால், நடந்த புதுமையின் வெளியரங்கமான அத்தாட்சியினாலுந் தேவ வரப்பிரசாதத்தின் அந்தரங்கமான குரலொலியாலும் வந்ததென்று சொல்லத்தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் தேவநற்கருணை சந்திக்கும்போதும் அல்லது தேவநற்கருணை வாங்கும்போதும் நம்மிடத்தில் இப்படி நடக்கிறதில்லையா? அப்போது இயேசுநாதரை நாம் கண்ணால் காண்கிறதில்லை; அவர் அப்பத்தின் குணங்களுக்குள்ளே நமது கண்ணுக்கு மறைந்திருக்கிறார்; ஆனால் நம்மிடத்தில் பேசுகிறவரும் நம்மை நடத்துகிறவருமாகிய திவ்விய இரட்சகருடைய வரப்பிரசாத உருக்கத்தினாலும் விசுவாசத்தின் அத்தாட்சியினாலும் அவர்தானென்று நாம் நிச்சயமாய் அறிந்து அதை யாதொரு சந்தேகமின்றி விசுவசிக்கிறோம். ஆகையால் ஆராதனைக்குரிய நமது ஆண்டவர்மட்டில் சங்கையிலும் சிநேகத்திலும் அந்தச் சீஷர்களுக்கு நாம் குறையாமலிருக்கப் பிரயாசப்படுவோமாக. நீ வழக்கமாய் இப்படிப் பிரயாசப்படுகிறாயோ?

மனப்பற்றுதல்.—அப்பத்தின் குணங்களுக்குள்ளே இயேசுநாதர் மறைந்திருந்தாலும், அவர் மெய்யாகவே அதில் எழுந்தருளியிருக்கிறாரென்று நாம் உறுதியாய் விசுவசிக்கிறதுந்தவிர, தக்க மேரையாய் அவரைச் சிநேகிக்க ஆசைப்படுகிறோமென்று ஸ்திரமாய்ச் சொல்லுவோமாக.

பிரதிக்கினை.—நமது விசுவாசத்துக்கும் சிநேகத்துக்கும் உகந்தாப்போல் நமது நடக்கையும் ஒத்திருக்கிறதோவென்று அடிக்கடி விசாரித்துப் பார்ப்போமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் சீஷர்கள் அண்டையில் அணுகி அப்பத்தை அவர்களுக்குப் பிட்டுக்கொடுக்கிறார்

தியானம்.—திவ்விய இரட்சகர் தமது சீஷர்கள்பேரில் வைத்திருக்கிற கவலையையும் தயவையும் அதிகமாய்க் காண்பிக்கச் சித்தமானதினாலே அவர்கள் அண்டையில் அணுகி அப்பத்தை எடுத்து அவர்களுக்குக் கொடுத்தபின்பு மச்சத்தையும் அப்படியே பரிமாறினார் (அரு. 21).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—"எனக்குவந்த சோதனைகளில் என்னோடு நிலைநின்றவர்கள் நீங்கள்தானே, இதோ உங்கள் நடுவே நான் பணிவிடை செய்கிறவனைப் போலிருக்கிறேன்; ஆனால் என் இராச்சியத்திலே நீங்கள் என்பந்தியிலிருந்து போசன பானம் பண்ணவும் இஸ்ராயலின் பன்னிரண்டு கோத்திரங்களை நடுத்தீர்க்கிறவர்களாகச் சிம்மாசனங்களில் உட்கார்ந்திருக்கவும் என் பிதா எனக்கு இராச்சியத்தை ஏற்படுத்தினது போல நான் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்" என்று இயேசுநாதர்தாமே தெளிவாய்ச் சொல்லியிருக்கிறபடி (லூக். 22, 28-30) நேசத்துக்குரிய இரட்சகர் தமது பிரமாணிக்கரான ஊழியர்களுக்குச் சனுவாய் பரலோக இராச்சியத்திலே ஒரு நாள் செய்யப்போகிறதற்கு இது அடையாளமும் அச்சாரமுமாயிருக்கிறதென்று இவ்விடத்தில் பாராதவனார்? இத்தகைய திடமான வாக்குத்தத்தங்களை நினைத்து உன் இருதயம் பூரிக்கக்கடவதாக!

சம்பாஷணை.—நமது நேசமுள்ள இரட்சகரோடு சம்பாஷணை செய்து அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுவதுந்தவிர மிகுந்த சிநேகத்தோடும் உதாரத்தனத்தோடும் அவர் திருவூழியத்துக்கு நம்மை மீண்டும் ஒப்புக்கொடுப்போமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 4-ம் வாரம்—செவ்வாய்

இயேசுநாதர் அர்ச். இராயப்பருடைய மனதைச் சோதித்துத்திருச்சபைக்கு அவரைத் தலைவராக ஏற்படுத்துகிறார்

ஆயத்தச் சிந்தனை.—அருளப்பன் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் நீ என்னை அதிகமாய்ச் சிநேகிக்கிறாயோவென்று இராயப்பரை நோக்கி ஆண்டவர் கேட்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்.—நான் பிறசிநேகத்திலே மேன்மையுள்ளவனாயிருக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

அர்ச். இராயப்பர் பாப்புப் பட்டத்துக்கு அழைக்கப்படுகிறார்

தியானம்.—மச்சங்கள் பிடிபட்ட அற்புதமானது "நான் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று இயேசுநாதர் கொடுத்த வாக்குத்தத்தத்தை சீஷர்களுக்கு நினைப்பூட்டியிருக்கும். இந்த மச்சங்களைப் பிடித்ததில் மற்றவர்களைப் பார்க்க இராயப்பர் அதிக பிரயாசப்பட்டார். ஏனெனில் ஆத்துமாக்களைப் பிடிக்கவேண்டிய தொழிலில் அவர் சிறந்தவராயிருக்க அழைக்கப்பட்டதினாலேயும், பாப்பு என்கிற பட்டத்தால் அப்போஸ்தலர்களுக்குத் தலைமையாயிருக்க வேண்டியவரானதினாலும் அவர் இப்படிப் பிரயாசப்படத் தேவ பராமரிக்கை சித்தமாயிருந்தது. இந்த மேலான பட்டத்துக்கு, மேலான அர்ச்சியசிஷ்டதனமுமன்றி பூரணமான பிறசிநேகமும் இவரிடத்தில் விளங்கவேண்டியதாயிருந்தது. சீஷர்கள் அசனம் பண்ணினபிறகு இயேசுநாதர் சீமோன் இராயப்பரை நோக்கி: அருளப்பன் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் நீ என்னை அதிகமாய்ச் சிநேகிக்கிறாயோவென்றார். அதற்கு இராயப்பர்: ஆம், ஆண்டவரே, நான் தேவரீரைச் சிநேகிக்கிறேனென்று உமக்கே தெரியுமென்றதற்கு இயேசுநாதர் என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாகவென்று அவருக்குத் திருவுளம்பற்றினார் (அரு. 21).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமுந் தேவகிருபையினால் சந்நியாச அந்தஸ்தில் அழைக்கப்பட்டதினாலே, உலகத்திலிருக்கிறவர்களைப் பார்க்க மேலான காரியத்துக்குக் குறிக்கப்பட்டவர்களாகி ஆத்துமாக்களைத் திருப்புகிறதிலே நமக்கு அதிக பங்குகிடைக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் இப்பேர்க்கொத்த அந்தஸ்தானது சர்வேசுரன் முன்பாகவும் மனிதர் முன்பாகவும் மிகுந்த பரிசுத்தத்தையும் பிறசிநேகத்தையுந் தேட நம்மை உடன்படுத்துகிறது. மற்றவர்களிலும் நீ என்னை அதிகமாய்ச் சிநேகிக்கிறாயோவென்று இயேசுநாதர் நம்மையும் நம்மில் ஒவ்வொருவரையுங் கேட்கிறார். இருதயங்களின் உள்ளாந்தரங்கத்தை அறிந்திருக்கிறவருக்கு நீ என்ன மறுமொழி கொடுக்கவேணுமென்று பார்.

மனப்பற்றுதல்.—நீ மிகுந்த சிநேகமுள்ளவனாயிருக்கவும், ஆண்டவரே, நான் உம்மைச் சிநேகிக்கிறது உமக்குத் தெரியுமேயென்றும் நான் உம்மை எப்போதும் அதிகமாய்ச் சிநேகிக்க ஆசையாயிருக்கிறேனென்றும் முழுமனதோடு உண்மையாய்ச் சொல்லவும் விருப்பங் காண்பிக்கவேணும்.

பிரதிக்கினை.—இயேசுவின் மதுரமான இருதயமே, உம்மை எப்போதும் அதிகமதிகமாய்ச் சிநேகிக்கச் செய்தருளுஞ் சுவாமியென்று பத்தியோடு அடிக்கடி சொல்லுவேனாக.

2-ம் பிரிவு

இராயப்பர் சிநேகிக்கிறேனென்று மூன்றுவிசை ஆண்டவருக்குச் சொன்னதின்பேரில்

தியானம்.—மறுபடியும் ஆண்டவர் அவரை நோக்கி: அருளப்பன் குமாரனாகிய சீமோனே, என்னைச் சிநேகிக்கிறாயோ வென்றார். அதற்கு இராயப்பர்: ஆம் ஆண்ட-

வரே, உம்மைச் சிநேகிக்கிறேனென்று உமக்குத் தெரியுமென, இயேசுநாதர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாகவென்று அவருக்குச் சொன்னார். பின்பு மூன்றா முறையும் அவரை நோக்கி அருளப்பன் குமாரனாகிய சீமோனே, என்னைச் சிநேகிக்கிறாயோவென்று கேட்க: ஆண்டவரே, நீர் எல்லாத்தையும் அறிந்திருக்கிறீர்; நான் உம்மைச் சிநேகிக்கிறதையும் அறிவீரென்று இராயப்பர் சொல்ல, இயேசுநாதர்: என் ஆடுகளை மேய்ப்பாயாகவென்று அவருக்குத் திருவுளம்பற்றினார் (அரு. 21.). இந்தக்கடைசி வார்த்தையைக்கொண்டு ஆட்டுக்குட்டிகளை மாத்திரமல்ல, அவைகளின் தாய்களையும் மேய்க்கச் சொன்னதினாலே, அர்ச். இராயப்பருக்கும் அவருக்குப்பின் தொடர்ந்து முறையாய் வருகிறவர்களுக்கும், விசுவாசிகளையும் அவர்களுடைய மேய்ப்பர்களையும் ஆளும் அதிகாரத்தை இயேசுநாதர் அர்ச். இராயப்பர் கையில் ஒப்பித்து அவர்களை அவருக்குக் கீழ்ப்படியச் செய்தார். ஆகையால் உலகம் முடியுந்தனையும் ஏகமான ஒரே திருச்சபையிருக்க இயேசுநாதர் . சித்தமானதினாலே, இத்திருச்சபைக்குக் காணப்பட்ட ஏக தலைவராக அவரை ஸ்தாபித்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—முந்த முந்த அர்ச். இராயப்பர் இவ்விடத்தில் எவ்வளவு அடக்கமாய்ப் பதில் உரைக்கிறாரென்று பார். கடைசி இராப்போசனத்தில் தாம் ஆண்டவரை மெய்யாகவே சிநேகிக்கிறேனென்று சொன்னதுபோல, இவ்விடத்தில் சொல்லாமல், மனதிலிருக்கிறதெல்லாம் அறிந்திருக்கிற தமது திவ்விய குருவுக்கு இதுவுந் தெரிந்த காரியமென்று சொல்லுகிறார். சொந்தப் பலவீனமும் முன் கட்டிக்கொண்ட பாவமும் அவரைத் தாழ்ச்சியுள்ளவராக்கி, இயேசுநாதருடைய தயவின்பேரில் அவநம்பிக்கை வருவிக்காமல் தம்மைத்தாமே நம்பாதிருக்கச் செய்தது. நீ இவரைக் கண்டு பாவிப்பாயானால், இவரைப்போலே நீயுந் தின்மையிலே நின்று நன்மை அடைவாய். மேலுந் தாம் ஆண்டவரை மூன்றுதரம் மறுதலித்துப் பிரசித்தமாய்க் காண்பித்த துர்மாதிரிகைக்கு இப்போது மூன்றுவிசை தமது சிநே-

கத்தைப் பிரசித்தமாய் வெளிப்படுத்திப் பரிகாரம் பண்ணத் தமக்குக் கிடைக்கிற சமயத்தை எவ்வளவோ துரிதத்தோடுஞ் சந்தோஷத்தோடுங் கையேற்றுக்கொள்ளுகிறாரென்று பார். நீயும் பிரசித்தமான யாதொரு குற்றத்தினால் உன் அந்தஸ்துக்கடுத்த பரிசுத்தத்தனத்தின் மேன்மைக்குக் குறைவு செய்திருந்தால், அதற்குப் பரிகாரம் பண்ணச் சமயங் கிடைக்கும்போது, உடனே பண்ணவேண்டும்.

மனப்பற்றுதல்.—நான் இயேசுநாதரைத் தகுந்த விதமாய் சிநேகிக்க எனக்கு அவர் மிகவும் உதவி செய்ய மன்றாடுவேனாக.

பிரதிக்கினை.—சர்வேசுரன் சமுகத்திலும் மனுஷர் முன்பாகவும் நான் இருக்கவேண்டியதுபோலே இருக்கிறேனோவென்று என்னை அடிக்கடி கேட்டுக்கொள்வேனாக.

3-ம் பிரிவு

அப்போஸ்தலரான அர்ச். இராயப்பர் கஸ்திப்பட்டதின்பேரில்

தியானம்.—இயேசுநாதர் இராயப்பரை நோக்கி: என்னைச் சிநேகிக்கிறாயோவென்று மூன்றாம் முறையும் கேட்டதினாலே இராயப்பர் கஸ்திப்பட்டாரென்று அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறார் (அரு. 21). மீன் பிடிப்பவனான ஏழைக் கலிலேய நாட்டானுக்குத் தேவ குமாரன் தானே மிகவும் மகிமைக்குரிய மேலான பட்டத்தை அளித்திருக்கிறார். அவர் உயர்ந்த அந்தப் பட்டத்தை அடைந்து சந்தோஷமும் பாக்கியமுமாயிருக்கவேண்டியதென்று தோன்றுகிறது. ஆகிலும் மிகவும் கஸ்திப்பட்டாரென்று சுவிசேஷகர் எழுதிவைத்திருக்கிறார். அதற்குக் காரணமேதென்றால், தமது திவ்விய குருவின்மட்டில் தமக்கு இருக்கிறதாக நினைத்திருந்த சிநேகம் மெய்யாகவே இருக்கிறதோவென்கிற பயமும் அல்லது கைப்பாஸ் அரமனையில் தமக்குச் சம்பவித்ததுபோலத் திரும்பவுந் தவறிப்போவேனோவென்கிற அச்சமுந்தான். இரட்சகர் மூன்றுவிசை இவரைக் கேட்டதினாலே, இவர்

இருதயத்தில் இந்தப் பயமுண்டானதுமல்லாமல் மற்ற நினைவின்பேரில் இவருக்குக் கொஞ்சமென்கிலும் கவலையிருந்ததில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவசிநேகமும் இதிலே மேன்மைப்படவேணுமென்கிற ஆசையும் மற்றெந்தக் கருத்தையும் ஆசையையும் பார்க்கத் தங்களிடத்தில் மேலானதாயிருக்கவேணுமென்று விரும்புகிறதுமன்றி நமது ஆண்டவராகிய சர்வேசுரனுடைய ஊழியத்திலே சுறுசுறுப்பும் உதாரத்தனமும் எங்கே குறைந்து போகிறதோவென்று பயந்து கஸ்திப்படுகிற கிறீஸ்துவனுஞ் சந்நியாசியும் பாக்கியம் பெற்றவர்களாமே.

சம்பாஷணை.—அர்ச். இராயப்பரோடே சம்பாஷணை செய்வாயாக. அவரைப் புகழ்ந்து கொண்டாடி இயேசுநாதர் அவருக்குத் தந்தருளின மிகுந்த தேவ சிநேகத்தில் உனக்குக் கொஞ்சம் பங்கு கிடைக்கச் சர்வேசுரனை அவர் மன்றாடும்படி கேட்பாயாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 4-ம் வாரம்—புதன்

இராயப்பர் சிலுவையில் அறையப்பட்டு வேதசாட்சியாய் மரணமடையப் போகிறதை இயேசுநாதர் அவருக்கு முந்தி அறிவித்ததும் அவரிடத்திலுள்ள வீணான ஆசையைக் கண்டித்ததும்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் என்னைப் பின்செல்லென்று அர்ச். இராயப்பரைப் பார்த்துச் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேணுக.

தியானச் சேபம்.—மகாவருத்தமான காரியங்களிலே முதலாய் இயேசுநாதரை நீ பின்செல்லத்தக்கதாகச் சொற்பக் காரியங்களிலேயும் பிரமாணிக்கமாய் அவரைப் பின்செல்ல வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இராயப்பர் சிலுவையில் அறையப்பட்டு வேதசாட்சியாய் மரணமடைவாரென்று இயேசுநாதர் அவருக்கு அறிவிக்கிறார்

தியானம்.—அப்போஸ்தலர்களுக்குத் தலைமையானவர் தமது திவ்விய குருவின்பேரில் தமக்குண்டான சிநேகத்தை மூன்றுவிசை பிரசித்தமாய் வெளிப்படுத்தினார்; ஆயினும் மூன்றுதரம் ஆண்டவரை மறுதலித்தேனே என்கிற நினைவானது அவர் பயமற்றிருப்பதற்குத் தடையாயிருந்தது. தாம் முந்தி மறுதலித்ததுபோல் இப்போதும் அப்பேர்க்கொத்த சோதனை வந்தால், அதில் விழாமலிருக்கத்தக்க உறுதி தமக்குண்டோ இல்லையோவென்கிற சந்தேகம் அவரை வாதித்துக்கொண்டு வந்தது. ஆகையால் அவர் சாகுந்தனையும் உறுதியும் பிரமாணிக்கமுமாயிருப்பாரென்று இயேசுநாதர் அவருக்கு உறுதிமொழிகூற விரும்பி அவரை நோக்கித் திருவுளம்பற்றினதாவது: "நீ விருத்தாப்பியமாயிருக்கும்போது, உன் கரங்களை நீட்டுவாய், அப்போது வேறொருவன் உன் இடையைக் கட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கூட்டிக்கொண்டு போவானென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேனென்றார்" (அரு. 21, 18). அவர் வேதசாட்சியாய்ச் சிலுவையில் அறையுண்டு சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரமாக அடையப்போகிற மரணத்தைக் குறிப்பிட்டு இயேசுநாதர் அவருக்கு முன் அறிவித்ததாக அர்ச். அருளப்பர் எழுதிவைத்திருக்கிறார். இத்தகைய மரணத்தைக் கொண்டே, அப்போஸ்தலரான இராயப்பர் இயேசுநாதர்பேரில் வைத்த சிநேகத்தை எண்பிக்க வேண்டியதுந்தவிர, அவர் அடைந்த மேலான பட்டத்தின் கடினமும் பயங்கரமுமான கடமைகளைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றுவாரென்று அறிந்திருந்த இயேசுநாதர் அதற்குச் சம்பாவனை அளிக்கவும் சித்தமாயிருந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் நமக்கு அனுப்பும் சிலுவையாகிற துன்ப துரிதங்கள் நமதுபேரில் அவர் வைத்த சிநேகத்துக்கு அத்தாட்சி

யென்றும், இதற்குக் கைம்மாறாக நாம் அவருக்குச் செலுத்தவேண்டிய கடமைகளைத் தீர்ப்பதற்கான உபாயங்களென்றுங் கண்டறியப் பழகிக்கொள்வோமாக. அன்றியுஞ் சந்நியாச அந்தஸ்தில் மேலான பட்டத்தையும் அதிகாரத்தையும் பெற்றுக்கொள்கிறவன் பிரயாசத்தையும் வருத்தத்தையும் தன்பேரில் சுமந்துகொள்ளுகிறானென்று நாம் அறிந்திருக்கிறதினாலே, அத்தகைய அதிகாரத்தையும் பட்டத்தையும் ஆசிக்கிறதைப்பார்க்க அதற்குப் பயந்து அதைத் தேடாதிருப்பதே நலம். அதில் கடினமுள்ளதும் நீளித்ததுமான துன்ப துரிதங்களை நாம் பார்க்கவேணுமல்லாமல் வேறல்ல; மெய்யான சந்நியாசியானவன் அதைக் கட்டாயமாய்ச் சுமப்பானன்றி விரும்பித் தேடமாட்டான். இதுகாரியத்தின்பேரில் உன் மதிப்பும் எண்ணமும் யாது?

மனப்பற்றுதல்.—இயேசுநாதரைத் தான் சிநேகிக்கிறதாகப் பிரசித்தமாய்ச் சொல்லவுந் தனக்குத்தானே பயந்து நம்பாதிருக்கவும் வேண்டியதுமன்றித் தனக்கு வருஞ் சோதனை இக்கட்டுகளில் மிகுந்த உதாரமுள்ள மனதைக் கேட்கவும் வேணும்.

பிரதிக்கினை.—எனக்கு வரும் நிந்தை உபத்திரவங்களிலே விசுவாசத்தினிமித்தம் சந்தோஷமாயிருப்பேனாக.

2-ம் பிரிவு

தம்மைப் பின்சென்றுவர இயேசுநாதர் அர்ச். இராயப்பருக்குச் சொல்லுகிறார்

தியானம்.—இராயப்பர் மரணபரியந்தம் பிரமாணிக்கராயிருக்கப்போகிறதை இயேசுநாதர் அவருக்கு உறுதியாய்ச் சொன்னபிறகு சற்று முந்தி நடந்து அவரை நோக்கி: என்னைப் பின்சென்று வாவென்றார் (அரு. 11). வேதசாட்சியாய் மரணமடைய ஆயத்தமாயிருக்கவேணுமென்று தமது அப்போஸ்தலருக்குக் கற்பித்த ஆண்டவர் இந்த எளிதான கட்டளையை அவருக்குக் கொடுத்ததேதென்றால் பலத்த காரியத்திலே பிரமாணிக்கமாயிருக்கவேணுமானால்,

சொற்பக் காரியங்களிலே பிரமாணிக்கமாயிருக்கப் பழகவேணுமென்றும், அந்தந்தச் சமயத்திலே கடினமுள்ளதும் வீரமுள்ளதுமான பலியை நிறைவேற்றுகிறதற்கு ஆயத்தமாயிருக்கவேணுமானால், நாளடைவில் சொற்பப் பலியைச் செய்யப் பழகியிருக்கவேணுமென்றும் நமக்குப் படிப்பிக்கிறதற்காக இவ்வளவு எளிதானதை இராயப்பருக்குக் கட்டளையிடச் சித்தமானாரென்று சொல்லவேணும். மேலும் தாம் பாடுபடுமுன்னே தமது அப்போஸ்தலர்களுக்கு இதைக் குறித்துத் திட்டமாய் படிப்பித்ததைக் கேள்: சொற்பக் காரியங்களில் பிரமாணிக்கமாயிருக்கிறவன் பெரிய காரியங்களிலும் பிரமாணிக்கனாயிருப்பானென்றார் (லூக். 16).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தினந்தினம் நடந்துவரும் அநுபவமானது இந்தப் போதனையை உறுதிப்படுத்துகிறதென்று சொல்லலாம். அப்படியே வழக்கமாய் தங்கள் சபை ஒழுங்குகளைச் சரியாய் அநுசரித்துக்கொண்டு வருகிறவர்கள், திடீரென்றாற்போல் பலத்த குற்றங்களில் விழுகிறதைக் காணோம். இதற்கு விரோதமாய்க் கடினசோதனை இக்கட்டு வரும்போது அவர்கள் பிரமாணிக்கராயிருந்து, வேண்டிய சமயத்திலே வேதசாட்சியாய் மரணமடையத் துணிந்துமிருந்தார்கள். மேலும் தங்கள் சொந்தப் பலத்தினாலே அடையக்கூடாத வேதசாட்சி வரமானது, சொற்பக் காரியங்களிலே முதலாய் அவர்கள் பிரமாணிக்கராயிருந்து அவைகளில் எப்போதும் நேரிடும் வருத்தங்களைப் பொறுமையோடு அநுபவித்ததற்குச் சம்பாவனையாயிருந்தது. விசுவாசத்தைப்பற்றி அவர்கள் வேதசாட்சிகளாகுமுன்னே, தங்கள் சந்நியாச ஒழுங்கில் சொற்பக்காரியங்களிலே முதலாய் வேதசாட்சிகளாயிருந்தார்கள். இதினிமித்தமன்றோ வேதசாட்சிகள் திருநாளிலே, குருக்கள் செபிக்கவேண்டிய செபத்தின் ஓர் பாகத்தில் “அர்ச்சியசிஷ்டவர்களெல்லாரும் வேதசாட்சி முடியை நிச்சயமாய் அடையத்தக்கதாக எத்தனையோ வருத்தங்களை அநுபவித்தார்கள்” என்று பாடியிருக்கின்றது.

மனப்பற்றுதல்.—பிரமாணிக்கத்தோடே தங்கள் ஒழுங்கை அநுசரிக்குஞ் சந்நியாசிகளை உதாரத்தனத்தோடே

கண்டுபாவிக்க நம்மைத்தாமே தூண்டி அதற்கான தேவ உதவியைக் கேட்போமாக.

பிரதிக்கினை.—எல்லாக் காரியங்களிலேயும் என்னை ஜெயிக்க விசேஷமாய் இன்றைக்குக் கவனிப்பேனாக.

3-ம் பிரிவு

இராயப்பருடைய வீணான ஆசையை இயேசுநாதர் கண்டிக்கிறார்

தியானம்.—இராயப்பர் திரும்பிப் பார்த்தபோது, இயேசுநாதரால் நேசிக்கப்பட்ட சீஷன் பின் செல்லுகிறதைக்கண்டு: ஆண்டவரே, இவருக்கு எப்படியென்று கேட்க, இயேசுநாதர் பிரத்தியுத்தாரமாக நான் வருமளவும் இவன் இப்படியேயிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன? நீ என்னைப் பின்செல்லென்றார் (அரு. 21).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—புறத்தியார் காரியங்களை அறிய விரும்புகிறதும் அவைகளில் தான் கலந்துகொள்ளுகிறதும் புறத்தியார் வார்த்தைகளையுங் கிரியைகளையுந் தகாதவிதமாய்த் தீர்மானிக்கிறதும் அல்லது வியாக்கியானஞ் செய்கிறதுஞ் சந்நியாச மடங்களில் வழக்கமாய் உண்டாகிற சோதனையாமே. இச்சோதனை உனக்குண்டானால், இரட்சகர் அர்ச். இராயப்பருக்குச் சொன்ன கருத்துப்பிரகாரம் நீதானே உன்னைப்பார்த்து: இது உனக்கடுத்த காரியமா? புறத்தியார் நடக்கையை விசாரிக்க நீ சிரேஷ்டரல்ல. உன் நடக்கையைக் குறித்து உன்னைக் கணக்குக் கேட்பார்களல்லாமல், புறத்தியார் நடக்கையைக் குறித்து உன்னிடத்தில் கணக்குக் கேட்கப்போகிறதில்லையென்று சொல்லிக்கொள்வாயாக. அப்பேர்க்கொத்த சோதனையை வெல்லுகிறதற்கு இதுவே நல்ல உபாயம். அந்தச் சமயத்திலே இதை உதவிக்கொண்டாயோ? எவ்வளவு நிலைமையோடும் அநுகூலத்தோடும் இதை உதவிக்கொண்டாய்?

சம்பாஷணை.—அர்ச். இராயப்பரோடே சம்பாஷணை செய்.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 4-ம் வாரம்—வியாழன்

ஐந்நூறு சீஷர்களுக்கு இயேசுநாதர் காட்சி கொடுக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—ஐந்நூறு சீஷர்களும் தங்கள் திவ்விய குருவைக் கண்டு அகமகிழ்ந்து பரவசமாயிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—இயேசுநாதர் நமக்கு அடிக்கடி ஞான சந்தோஷத்தைக்கொடுத்துத் தோற்றமுள்ள தமது பிரசன்னத்தினால் நம்மைத் திடப்படுத்தக் கேட்போமாக.

முதல் பிரிவு

இயேசுநாதரைக் காணவேணுமென்று சீஷருக்கு உள்ள ஆவல்

தியானம்.—இயேசுநாதர் மோக்ஷத்துக்கு ஆரோகணமாகிறதற்குக் கொஞ்ச நாளைக்குமுன், பதினொரு அப்போஸ்தலர்களும் இயேசுநாதரால் தங்களுக்குக் குறிக்கப்பட்ட கலிலேயா நாட்டிலுள்ள பருவதத்துக்குப் போனார்கள். அவ்விடத்தில் ஐந்நூறு பேருக்கதிகமான சகோதரருங் கூடியிருக்க, இயேசுநாதர் அவர்களுக்குக் காட்சி கொடுத்தார் (மத். 28; 1. கொரி. 15) இந்தக் காட்சிமாத்திரம் இன்ன காலத்திலும் இன்ன இடத்திலுங் கொடுக்கப்படுமென்று சம்மனசுக்களாலும் இயேசுநாதராலும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆகையால் இதற்குமுன் ஆண்டவரைக் கண்டவர்களின் தொகையைப்பார்க்க இப்போது காட்சி கண்டவர்களின் தொகை பெரிது: ஐந்நூறு பேருக்கதிகமாயிருந்தது. உயிரோடெழுந்திருந்த இரட்சகரை இதுவரை காணாதிருந்த அநேகஞ் சீஷர்கள் மரித்தவர் உயிர்த்துவந்திருப்பதைப் பார்க்கவேணுமென்கிற ஆசையினாலும் தங்கள் வணக்கம், சிநேகம், நன்றியறிந்ததனத்தைக் காண்பிக்கவேணுமென்கிற உத்தம

விருப்பத்தினாலும், அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று விசேஷ வரப்பிரசாதங்களை அடையலாமென்கிற நம்பிக்கையினாலும் எவ்வளவோ துரிதத்தோடே அந்த மலைக்குப் போனார்களென்று உரூபிகரித்துப்பார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இக்காலத்திலுங் குறிக்கப்பட்ட ஒரு ஸ்தலத்திலே இயேசுநாதர் காட்சிகொடுப்பாரென்று அறிந்திருந்தால், அது வெகு தொலையானாலுங் கடும் பயணஞ் செய்யவேண்டியதாயிருந்தாலும் மனிதர் எவ்வளவோ துரிதத்தோடே போவார்கள்! சகல நன்மையும் அளிப்பவரான திவ்விய இரட்சகரைக் காண்போமென்கிற நினைவும் அவரிடத்தில் யாதோர் விசேஷசகாயம் பெற்றுக்கொள்ளுவோமென்கிற நம்பிக்கையும் அவர்கள் கடும் பயணத்தைப் பாராதபடி செய்து அதை மதுரமுள்ளதாக்கும். ஆகிலும் அதைப் பார்க்கிலும் ஆச்சரியமான காரியம் ஒன்றுண்டு. அதேதெனில், திவ்விய இரட்சகர் எண்ணிக்கையில்லாத தேவாலயங்களிலே மனுஷருக்கு நடுவே குடியிருக்கிறார். அப்படியிருந்தாலும், அவர் பாதத்தண்டை விரைவாய்ப்போகிறதற்குப் பதிலாய் அவரைக் கைவிடுகிறார்கள். இது புத்திக்கெட்டாத இரகசியமாமே. இதைக் காண்கிற நீ வெறுப்படைந்து கஸ்திப்படுகிறாய்; ஆனால் இதிலே நீயும் சற்றாகிலும் குற்றவாளியாயிருக்கிறாயென்று தெரிந்துகொள்ளுகிறதில்லையோ? தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கிற இயேசுநாதரை எத்தனைவிசை காணப்போகிறாய்? அவர் திருச் சமுகத்தில், உன் இருதயத்திலே நின்று கிளம்பும் ஆசையும் கருத்துமென்ன?

மனப்பற்றுதல்.—இயேசுநாதரைச் சந்திக்கப் போகிறதில் நம்மிடத்திலுள்ள அசட்டைத்தனத்தையும் அவர் சமுகத்தில் நமக்குள்ள அசமந்தஞ் சங்கையீனத்தையுங் கண்டு நம்மைத் தாழ்த்திப் பொறுத்தல் கேட்போமாக.

பிரதிக்கினை.—தேவநற்கருணையின்பேரில் நமது பத்தியைப் புதுப்பிப்போமாக.

2-ம் பிரிவு

சில சீஷர்களிடத்தில் உண்டான விசுவாசத் தத்தளிப்பின் பேரில்

தியானம்.—இயேசுநாதரைக் கண்ட மாத்திரத்திலே சீஷர்கள் அவர் பாதத்திலே விழுந்து நமஸ்கரித்தார்கள். சிலரோவெனில், அவர் உயிர்த்ததைப்பற்றிச் சந்தேகப்பட்டார்களென்று அர்ச். மத்தேயுஸ் எழுதிவைத்தார் (மத். 28). மேலும் அவர்கள் விசுவாசம் இருமனமுள்ளதாயிருந்ததினாலே, அவர்களுடைய சினேகம் தளர்ந்து போய்விட்டது. அவர்களிடத்தில் உண்டான நம்பாமைக்குந் தத்தளிப்புக்கும் மற்றவர்களுடைய பலத்த விசுவாசத்துக்கும் அக்களிப்புக்கும் உள்ள வித்தியாசங் கஸ்திக்குரியதாமே; தங்கள் சகோதரரிடத்தில் மிகுந்த பத்தியும் வேகமும் விளங்கினபோதிலும், இவர்கள் பத்தியும் வேகமுமில்லாதவர்களாயிருந்தார்கள். இதைக்கண்ட விசுவாசமுள்ளவர்கள் மிகவுங் கஸ்திப்படவேண்டியதாயிருந்ததுந் தவிர இயேசுநாதருடைய திரு இருதயத்துக்குத்தானே வெகு வருத்தம் வந்ததென்கிறதற்குச் சந்தேகமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இக்காலத்திலும் அதிக உத்தமமான மடங்களிலே முதலாய் இப்படிச் சம்பவிக்கிறதில்லையோ? அநேகம் சகோதரர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட அந்தஸ்துக்குப் பொருந்தின விதமாய் நடப்பதினாலே விசுவாசம், பத்தி சுறுசுறுப்பு நிறைந்தவர்களாயிருக்கச் சிலரோவெனில் தாங்கள் கொடுத்த சந்நியாச வார்த்தைப்பாட்டின் பாரமான கட்டமையின்பேரில் சந்தேகப்படுகிறவர்கள்போலாவது அதை மறந்தவர்கள் போலாவது நன்மை தின்மையில் எப்பொழுதுந் தத்தளிக்கிறதினாலே பத்திக்குறையுள்ளவர்களாகிச் சந்நியாச ஒழுக்கந் தவறித் தங்கள் சகோதரர்களுக்குக் கஸ்தியையுஞ் சிரேஷ்டர்களுக்கு இடைவிடாத கவலையையும் வருத்துவிக்கிறார்கள்.

மனப்பற்றுதல்.—இப்படி ஒழுங்கில்லாத சந்நியாசிகளைப் போலே நீயும் நிர்ப்பாக்கியனாயிராதபடி ஆண்டவரை மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—மனந்தளர்ந்து பத்திக் குறைவிலும் அக்கிரமத்திலும் நீ அகப்படாதிருக்கச் சொற்ப ஒழுங்கில் முதலாய்ப் பிரமாணிக்கனாயிரு.

3-ம் பிரிவு

இயேசுநாதர் சீஷர்களைக் கண்டிக்கிறார்

தியானம்.—இயேசுநாதர் சீஷர்களுடைய அவிசுவாசத்தைக் கண்டிக்கிறார் (மாற். 16). இந்தக் கண்டிப்பானது இயேசுநாதரிடத்தில் பொறுமைக்குறைவினாலும் கோபத்தினாலும் வந்ததல்ல; ஆனால் குருட்டாட்டத்தினால் அவிசுவாசிகளாயிருந்த சீஷர்கள் பேரில் அவருக்குள்ள பட்சத்தினால் உண்டானது. அவர்கள் தங்கள் திவ்விய குரு மற்ற மனிதர்களைப்போல பலஹீனத்தினால் மரித்தாரென்று நினைத்ததினிமித்தம், அவருடைய சர்வ வல்லமையின்பேரில் விசுவாசமில்லாமல் போனார்கள். ஆகையால் இரட்சகர் அவர்களைக் கண்டித்ததுமன்றி அவர்கள் தங்கள் குற்றத்தை அறிந்து அதை நீக்குவதற்கு வேண்டிய தெளிவையும் அவர்களுக்குக் கொடுத்தருளினார். ஆகையால் வேதவாக்கியங்களை உணர்ந்துகொள்ளும்படியாக அவர்களுடைய மனதைத் தெளிவித்து, அவர்களை நோக்கி: இப்படியே எழுதப்பட்டிருக்கின்றது; கிறீஸ்துநாதர் இவ்விதம் பாடுபடவும், மூன்றாம் நாள் மரித்தோரினின்று மறுபடியும் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்ததென்று வெளிப்படுத்தினார் (லூக். 24).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—முந்த முந்த நீ இதில் அறியவேண்டியதாவது: யாதொருவனைக் கண்டிக்கவேணுமாகில், பொறுமையினால் அல்லது கோபத்தினால் கண்டியாமல் கடமையைப்பற்றியுஞ் சிநேகத்தைப் பற்றியும் மாத்திரங் கண்டிக்கவேணும். மேலும் நீ யாரைக் கண்டிப்பாயோ அவர்கள் தங்கள் குற்றங்களை அறிந்து திருத்திக்கொள்ளும்படி அவர்கள் புத்தியைத் தெளிவிக்கவேணும். இப்படி நடந்துகொண்டு வந்தாயோ?

சம்பாஷணை.—நமது காவலான சம்மனசானவரோடே சம்பாஷணை செய்வோமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 4-ம் வாரம்—வெள்ளி

உலகமெங்கும் போய்ப் பிரசங்கித்து ஞானஸ்நானம் கொடுக்க இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களை அனுப்புகிறார்

ஆயத்தச் சிந்தனை.—பரலோகத்திலும் பூலோகத்திலும் எனக்குச் சர்வ அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கின்றது; ஆகையால் நீங்கள் போய்ச் சகல சனங்களுக்கும் உபதேசித்து ஞானஸ்நானங் கொடுங்களென்று இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குச் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வோமாக (மத். 28).

தியானச் செபம்.—எப்போதும் உன் அந்தஸ்துக்குச் சரியொத்த பிரகாரம் நடக்க வரப்பிரசாதங் கேள்.

முதல் பிரிவு

சர்வ வல்லமையும் இயேசுநாதருக்குக் கொடுக்கப்பட்டதின் பேரில்

தியானம்.—இயேசுநாதர் தமது சீஷர்கள் கிட்ட அணுகி "பரலோகத்திலும் பூலோகத்திலும் எனக்கு சர்வ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது". என்றார். சொற்பமான இவ்வார்த்தைகளில் ஆழ்ந்த கருத்துகள் மறைந்து கிடக்கின்றன; இயேசுநாதர் மனுஷ சுபாவத்திலும் எவ்வளவு மேலானவரென்று இவைகள் எண்பிக்கின்றன. சர்வாதிகாரமும் பரலோகத்தில் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னதினால், எண்ணிக்கையில்லாத சம்மனசுக்களுக்கு அவர் இராஜாவைப்போலிருந்து கட்டளை கொடுக்கிறதுமல்லாமல் என் பிதா எனக்கு ஒரு இராச்சியத்தை ஏற்படுத்தியிருக்கிறதுபோல நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேனென்று திருவுளம்பற்றியபடி (லூக். 22), அவர் அதிலே இஷ்டம்போல் தமக்குப் பிரியமானவர்களுக்கு இராச்சியங்களையும் இடங்களையும் கட்டளையிடுகிறார்; தமது சிநேகிதர்மேல் இஸ்பிரீத்துசாந்துவின் கொடைகளையும், ஒரு நிமிஷத்தில்

நம்மை மேலான உத்தமதனத்தில் உயர்த்தக்கூடுமான தேவ இஷ்டப்பிரசாதத்தின் திரவியங்களையும் அவர் அதிலே நின்று இறங்கச் செய்கிறார். பூலோகத்திலும் எனக்குச் சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னதினாலே, உயிருக்கும் சாவுக்கும் அவர் அதிபதியாயிருக்கிறாரென்று தெரியவருகின்றது. அவருக்கு ஒன்றுந் தடைசெய்யக்கூடாது: பூலோகத்திலும் பாதாளத்திலும் உண்டான சகல தத்துவங்களும் ஒன்றாய்ச் சேர்ந்தபோதிலும், இயேசுநாதருடைய அடைக்கலத்துக்குள் இருக்கிறவர்களுடைய தலை உரோமங்களில் ஒன்றையாகிலும் அவருடைய அநுமதியில்லாமல் விழச்செய்ய முடியாது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் தமது பாடுகளினாலேயும், நிந்தை அவமானங்களினாலேயும் சம்பாதித்த சர்வ அதிகாரத்தையும் மகிமையையும் பார்த்து அவரைக் கொண்டாடுவோமாக. அவர் தம்மைப் பின்செல்ல நம்மை அழைத்தபோது, நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து உலகப் பொய் வாழ்வை எல்லாம் நிந்தித்து, "என்னைப்பற்றி வீடு முதலிய சகலத்தையும் விட்டுவிடுகிறவன் இம்மையிலே ஒன்றுக்கு நூறும் மறுமையிலே நித்திய சீவியமும் சுதந்தரித்துக்கொள்வான்" என்று நமக்கு உதாரமாய் வார்த்தைப்பாடு கொடுத்தவரும் மகா வல்லமையும் பெருமையும் நிறைந்திருக்கிறவருமாகிய இராஜாவின் ஊழியத்துக்கு நம்மை முழுதும் மாறாதவிதமாய் ஒப்புக்கொடுக்கத்தக்கதாக நாம் எல்லாத்தையும் துறந்துவிட்டதினாலே அகமகிழ்வோமாக (மத். 19).

மனப்பற்றுதல்.—நம்பிக்கை, சிநேகம், உதாரத்தனமாகிய இவைகளின் உறுதியான உணர்ச்சிகளை நமது இருதயத்தில் எழுப்புகிறதுமல்லாமல் ஞானஸ்நான வார்த்தைப்பாடுகளையுஞ் சந்நியாச வார்த்தைப்பாடுகளையும் புதுப்பிப்போமாக.

பிரதிக்கினை.—நமக்கு நம்பிக்கைக் குறைவு அல்லது மனத்தளர்ச்சியான சோதனை உண்டாகும்போது, என்னைத் திடப்படுத்துகிறவரைக்கொண்டு என்னால் எல்லாங்

கூடுமென்று அர்ச். சின்னப்பரோடு நாமும் சொல்லவேணும் (பிலி. 4).

2-ம் பிரிவு

உலகத்துக்குப் போதிக்கும் அதிகாரம் அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்டது

தியானம்.—"சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று" இப்போது நாம் தியானித்த வாக்கியத்தைக்கொண்டு இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்போகிற அலுவலை நிறைவேற்றுவது அவர்களால் சாத்தியப்படும் என்று அவர்கள் நம்புவதற்கு அவர்களை ஆயத்தப்படுத்தினதுபோலாயிற்று. அந்த அலுவல் யாதெனில் உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் சுவிசேஷத்தைப் போதிக்கிறதுஞ் சகல விசுவாசிகளையும் ஒரே குடும்பம்போல ஒன்றாய்ச் சேர்த்துவைக்கிறதுந் தாம் பாடுபடுகிறதற்கு முந்தியும் உயிர்த்தெழுந்தபிறகும் அநேக முறை அவர்களுக்குச் சொல்லிவந்த பிரகாரம் பூலோகத்திலே தமது இராச்சியமாகிய திருச்சபையை உண்டுபண்ணுகிறதுமாம். ஆகையால், அவர்களைப் பார்த்து: நீங்கள் உலகமெங்கும் போய்ச் சர்வ சிருஷ்டிகளுக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்களென்றார் (மாற். 16).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உலகத்தை மனந்திருப்புகிற மாபெரிய அலுவலை இயேசுநாதர் தாமே நிறைவேற்றாமல், அற்பத் திராணியுமற்றவர்களான அப்போஸ்தலர்கள் இதைச் செய்யும்படி ஒப்படைக்கிறார். இதினின்று முந்தமுந்த நீ அறியவேண்டியதாவது: உனக்குச் சிரேஷ்டர் பட்டம் அல்லது யாதொரு மேலான அதிகாரமிருந்தால், மற்றவர்கள் அந்தக் காரியத்தை நடத்தத் திராணியில்லாதவர்கள் போலும் நீதானே எல்லாம் செய்யவேணுமென்றும் நினைக்கக்கூடாது. இரண்டாவது, கீழ்ப்படிதலினால் உனக்குக் கொடுக்கப்படும் கட்டளையை நிறைவேற்ற உன்னால் முடியாதென்று நினைத்து அதை விட்டுவிடாமல் சர்வவல்லமையுள்ளவர் உதவியின் பேரிலே நம்பிக்கை வைக்கவேணும். பலவீனமான வழி

களைக்கொண்டு பலத்த காரியங்களை நிறைவேற்றுகிறது அவருக்குப் பிரியம்; இதற்கு மிகவுந் தெளிந்த திருஷ்டாந்தம் இந்த தியானத்தின் பொருளே.

மனப்பற்றுதல்.—தம்மை மறுதலித்துப் பிறக்கணித்த உலகத்துக்குத் தானே நன்மை செய்யவேணுமென்று எப்போதும் நினைக்கிற இயேசுநாதருடைய அளவில்லாத தயையைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவரை வாழ்த்துவாயாக. நீ திருச்சபையின் பிள்ளையாய்ப் பிறக்கவும் உலக இரட்சணியத்துக்காகப் பல விதத்திலும் பிரயாசப்படுகிற சந்நியாச சபையிலே நீ அழைக்கப்படவும் இத் திவ்விய கர்த்தர் சித்தமானதினால், அவரை ஸ்துதித்து அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

பிரதிக்கினை.—சர்வ வல்லமையுள்ளவருடைய உதவியைக்கொண்டு சகலமுந் தன்னாலாகுமென்று நினைக்கவேணும்.

3-ம் பிரிவு

பிரசங்கந் செய்யவேணுமென்கிற கட்டளையோடுகூட அர்ச். தமதிரித்துவத்தின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கவேணுமென்கிற கட்டளையுஞ் சேர்ந்திருப்பதின்பேரில்

தியானம்.—சகல ஜனங்களுக்கும் பிரசங்கிக்கப் போங்களென்று இயேசுநாதர் சொன்னவுடனே, பிதாவுடையவுஞ் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்களென்றுந் தொடர்ச்சியாய்ச் சொல்லியிருக்கிறார் (மத். 28). ஆகையால் அர்ச். தமதிரித்துவத்தை விசுவசிப்பதினாலேயுந், தெய்வீகமான மூன்றாட்களுடைய நாமத்தினாலே கொடுக்கப்படுகிற ஞானஸ்நானத்தினாலேயும், புதுக் கிறீஸ்தவர்கள் திருச்சபையில் பிரவேசிக்க இயேசுநாதர் சித்தமாயிருக்கிறார். மேலும் ஆராதனைக்குரிய மூன்றாட்களின் நாமத்தை உச்சரிப்பதினாலும் நமது இரட்சணியத்தின் எத்தனத்தை ஞாபகப்படுத்துகிற சிலுவை அடையாளம் வரைவதினாலும், உலகமுடியுந்தனையும் பசாசின் யுத்தத்தில் ஆயுதமும் நமக்கு வரும் ஆபத்துக்களில் அடைக்கலமும், விசேஷ அறிகுறி

யும், பொதுவான விசுவாச உச்சாரணமும், பிதாவினாலுஞ் சுதனினாலும் இஸ்பிரீத்து சாந்துவினாலும் நமக்குக் கிடைக்கும் எண்ணிக்கையில்லாத நன்மைகளின் ஞாபகமும் நமக்குண்டாக வேணுமென்று இயேசுநாதர் கருத்தாயிருந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சிலுவை அடையாளத்தினால் இந்த நன்மையெல்லாம் உனக்கு வரத்தக்கதாக எப்போதும் பத்தி விநயத்தோடே இதை வரையப் பிரயாசப்படுவாயாக.

சம்பாஷணை.—அர்ச். தமதிரித்துவத்தோடு சம்பாஷணை செய்.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 4-ம் வாரம்—சனி

திருச்சபையை ஏற்படுத்தினதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—அப்போஸ்தலர்கள் இயேசுநாதரைச் சூழ்ந்திருந்து அவர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்ட விசுவாசமும் தேவ சுறுசுறுப்பின் பற்றுதலும் உன்னிடத்தில் உண்டாகக் கேட்பாயாக.

முதல் பிரிவு

விசுவாசத்தின் பொக்கிஷம் அப்போஸ்தலர்களிடத்தில் ஒப்பிக்கப்பட்டது

தியானம்.— வேத சத்தியங்கள், தேவதிரவிய அநுமானங்கள், அறநெறிக்குரிய கற்பனைகள் ஆகிய இவைகளை ஒரு மனமாய் விசுவசிப்பதினால் உண்டாகும் விசுவாச பந்தனத்தினாலேயே, உலகமுடியுந்தனையும் இயேசுநாதருடைய சுதந்தரமான திருச்சபையைச் சேர்ந்திருக்கும் சகல ஜனங்களும் தங்களுக்குள் ஒன்றித்திருக்கவேண்டியதாயிற்று. ஆகையால் இரட்சகர் பரமண்டலத்திற்கு எழுந்தருளிப்

போகுமுன்னமே, தாம் மனுஷர்களுக்குப் பிரசங்கித்ததும் அப்போஸ்தலர்களிடத்தில் ஒப்படைத்ததுமான விசுவாசம் ஒன்றாகவும் வழுவாமலும் இருப்பதற்கான வழியைத் திட்டப்படுத்தவேண்டியிருந்தது. இதற்காகவே, முதலாவது தாம் அவர்களுக்குக் கற்பித்தவைகளில் யாதொன்றையுங் கூட்டாமலும் குறைக்காமலும் மனிதர் விசுவசித்து அநுசரிக்கும்படி போதிக்க வேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்; "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அநுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள்" என்றார் (மத். 28, 20). இரண்டாவது, சத்திய சுரூபியாகிய இஸ்பிரீத்து சாந்துவை அனுப்பினார்; "என் பிதாவானவர் வாக்குத்தத்தஞ்செய்த சத்திய இஸ்பிரீத்துவானவரை நானே உங்களுக்கு அனுப்புவேன்" என்கிறார். மூன்றாவது, விசுவாசத்துக்கடுத்த காரியத்திலும் மனிதர் நடக்கவேண்டிய முறைமையிலும் வழுவிப்போகாத வரம் கடைசிக் காலபரியந்தம் இராயப்பரிடத்திலும் அவருக்குப் பின் அவர் ஸ்தானத்தில் தொடர்ந்துவருகிறவர்களிடத்திலும் எப்போதும் நிலைத்திருக்குமென்று அவர்களுக்கு உறுதியாய்ச் சொன்னார். இதினிமித்தமாக இராயப்பரைப் பார்த்து: "சீமோனே, உன் விசுவாசம் ஒருபோதும் வழுவாதிருக்கும்படி நான் உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்று திருவுளம்பற்றினார். (லூக். 22.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விதம் இயேசுநாதர் தமது திருச்சபையை ஸ்தாபித்துப் பத்தொன்பது நூற்றாண்டுகள் பூர்த்தியாகியும் இன்றைக்கும் அவர் ஸ்தாபித்த பிரகாரமே அது இருக்கிறதைக் காண்கிறோம். அதுமுதல் இதுவரையில் உலகம் புரண்டு பற்பலவிதமாய் மாறினாலும், திருச்சபை ஒன்றுமாத்திரம் மாறாமல் ஒரே சீராய் நிலைத்திருக்கின்றது. அப்போஸ்தலர்கள் வழியாய் அதற்கு ஒப்பிக்கப்பட்ட விசுவாசத்தின் பொக்கிஷம் நமது கைக்குப் பழுதில்லாமல் வந்து சேர்ந்திருக்கிறது. பாரம்பரையின் தொடர்ச்சியைக் கவனித்தால், இயேசுநாதரும் அவருடைய அப்போஸ்தலர்களும் அறிவித்த வேதசத்தியங்களைத்தானே ஒவ்வொருவனும் விசுவசித்துநடந்துவருகிறதாகவும் இதினால் பூலோகத்திலே யுத்தஞ்செய்கிற இயேசுநாதருடைய மெய்யான திருச்சபையிலே தானும் இருக்கிறதாகவும், இவ்விடத்திலே நின்று பரமண்டலத்தில்சர்வேசுரனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய ஓட்டோலக சபையிலே போய்ச் சேர நம்பிக்கை உண்டென்றும் ஒவ்வொருவனும் நிச்சயித்துக்கொள்ளலாம்.

மனப்பற்றுதல்.—இதினிமித்தம் ஆச்சரியப்பட்டுச் சந்தோஷமடைந்து நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறதுமல்லாமல், விசுவாசப் பரம்புதலுக்காகப் பிரயாசப்படவும் திருச்சபைக்குப் பிரயோசனமானவைகளைச் செய்யவும் மிகுந்த ஆசைப்படவேணும்.

பிரதிக்கினை.—விசுவாசத்தின் நல்ல போர் பொருதும்; நீர் அழைக்கப்பட்டிருக்கிற நித்திய சீவியத்தைப் பற்றிக்கொள்ளுமென்று அப்போஸ்தலர் சொன்னதைக்கொண்டு அவசரமான சமயத்தில் உன்னைத் திடப்படுத்திக்கொள் (1. தீமோ. 6).

2-ம் பிரிவு

மெய்யான விசுவாசிகளுக்கு இரட்சணியம் வாக்களிக்கப்படுகிறது

தியானம்.—"விசுவசித்து ஞானஸ்நானம்பெறுபவன் இரட்சணியத்தை அடைவான்; விசுவசியாதவனோவெனில் குற்றவாளியாகத் தீர்வையிடப்படுவான்" (மாற். 16). இயேசுநாதர் சொன்ன இந்த வாக்கியத்தை நாம் கவனமாய்த் தியானித்துப் பார்ப்போமாகில், ஒரே நேரத்தில் சந்தோஷப்படவும் பயப்படவும் இதில் பலத்த முகாந்திரத்தைக் காணலாம். சந்தோஷப்படக்காரணம் ஏதெனில், நித்திய இரட்சணியத்துக்கு நம்மை நிச்சயமாகவும் சுளுவாகவுங் கூட்டிக்கொண்டுபோகிற பாதையை நமக்கு இந்த வாக்கியங் காண்பிக்கின்றது. நாம் பயப்படக் காரணமேதென்றால், பிடிவாதமுள்ள பதிதர்கள் கண்டிக்கப்படுகிறதுமல்லாமல் கத்தோலிக்கரில் இருவகைப் பேர்வழிகளுக்கும் இத்தண்டனை வகுப்பு வாரியாய்க் கிடைக்குமென்றும் அந்த

வாக்கியத்தினால் தெளிவாகும்; ஐயோ! இத்தகையோர் எத்தனையோபேர் இருக்கிறார்கள்! வேத சத்தியங்களில் சிலவற்றைப்பற்றி நிந்தையாய்ப் பேசுகிறவர்களும், "ஒருவன் நன்றாய் ஜீவிப்பானேயாகில், அவன் எதை விசுவசித்தாலும் அக்கறையில்லை" என்னும் அபத்தக்கொள்கையைப் புகழ்கிறவர்களும் பிரசித்தமாய்க் கண்டிக்கப்படுகிறார்கள்; வேத சத்தியங்களையெல்லாஞ் சங்கையோடே ஒப்புக்கொண்டாலும், தங்கள் விசுவாசத்துக்குத் தகுந்த பிரகாரஞ் சரியாய் நடவாமலிருக்கிறவர்களும் கண்டிக்கப்படுகிறார்கள் என்பது அவ்வாக்கியத்தின் உட்கருத்து; ஏனெனில், "கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது" என்று அர்ச். இயாகப்பர் சொல்கிறார் (இயாக. 2.); "நமது கிரியைகளுக்குத் தகுந்தாப்போல் தீர்வைபடைவோம்" என்று இயேசுநாதர் திருவுளம்பற்றியிருக்கிறார் (மத். 16).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மேற்கூறிய இரண்டாம் வகைக் கத்தோலிக்கரைப்போல் சில காரியங்களில் நீ நடப்பதில்லையோ? அற்பப்பாவத்தின் தோஷத்தைப்பற்றியும், அதனால்வரும் பொல்லாப்புகளைப் பற்றியும், உன் வார்த்தைப்பாடுகளினாலும் உனக்கு நியமித்த அலுவலினாலும் ஏற்பட்ட கடமைகளைப்பற்றியும், சர்வேசுரனுக்குத் தியான நேரத்திலும் ஜெபவேளையிலும் விசேஷமாய்ச் செலுத்தவேண்டிய சங்கையைப்பற்றியும், ஒவ்வொரு நாளையும் சரியாய்த் துவக்குவதின் அவசியத்தைப்பற்றியும், நீ விசுவசிக்கிறதென்னவென்று உன் உள்ளத்தை ஆராய்ந்து பார். மேலும், உன் நடத்தையும் விசுவாசமும் ஒத்திருக்கின்றனவா அதாவது உன் விசுவாசம் உன் நடத்தையில் வெளிப்படுகிறதாவென்று யோசித்துப்பார்.

மனப்பற்றுதல்.—நீ இதற்குத் தகுந்த விதமாய் நடக்கவில்லையென்று நினைத்து வெட்கப்பட்டுச் சர்வேசுரன் சமுகத்திலே உன்மேல் குற்றஞ்சாட்டிப் பொறுத்தல் கேட்பாயாக.

பிரதிக்கினை.—என் நடக்கை என் விசுவாசத்துக்கு ஒத்திருக்க இன்றுமுதல் பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

ஆதி கிறீஸ்துவர்களுக்கு அற்புதஞ் செய்யும் வரம் அளிக்கப்பட்டது

தியானம்.—பின்பு இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களது பிரசங்கத்துக்கும், புதிதாய் மனந்திரும்பினவர்களுடைய விசுவாசத்துக்கும் ஆதாரமாக அற்புதஞ் செய்யும் வரத்தை அவர்களுக்கு வாக்களித்தார். அவர் அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: "விசுவசிப்பவர்களால் செய்யப்படும் அற்புதங்களாவன: நமது நாமத்தால் பசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; விஷங்கலந்ததைப் பானஞ்செய்தாலும், அது அவர்களுக்குத் தின்மை செய்யாது; வியாதிஸ்தர்மேல் கைகளை நீட்டிவைக்கவே, அவர்கள் சொஸ்தமடைவார்கள்" என்றார் (மாற். 16). இதெல்லாம் பிசகாமல் சரியாய் நிறைவேறிற்று; சரித்திரமே இதற்கு அத்தாட்சி.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—எப்போதும் கதிக்குத்தகுந்த சாதனங்களைத் திட்டப்படுத்துகிற சர்வேசுரனுடைய தயவையும் ஞானத்தையும் இவ்விடத்தில் கண்டு ஆச்சரியப்படுவோமாக. அஞ்ஞானிகள் விசுவாசத்தைக் கைக்கொள்ளத்தக்கதாகச் சர்வேசுரன் புதுமைகளைச் செய்கிறார். இந்த விசுவாசங் கையேற்றுக் கொள்ளப்பட்டு அது நிலைத்தபின், விசுவாசத்தின் பேறுபலனைக் கிறீஸ்துவர்கள் அடையத்தக்கதாக அந்த வரங்களை நிறுத்திப்போடுகிறார்.

சம்பாஷணை.—இயேசுநாதரோடே சம்பாஷணை செய்து அவரை வாழ்த்தி ஸ்துதித்து அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 5-ம் வாரம்.—ஞாயிறு

இன்றையத்தினம் வாசிக்குஞ் சுவிசேஷத்தின்பேரில்

செபத்தின்மட்டில் நம்பிக்கை கொள்வதற்கான முகாந்தரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: என் நாமத்தினால் பிதாவினிடத்தில் நீங்கள் கேட்பதெல்லாம் அவர் உங்களுக்கு அளிப்பாரென்று இயேசுநாதர் தமது சீஷர்களுக்குச் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக. (அரு. 16).

தியானச் செபம்.—ஜெபத்தின்மட்டில் விசுவாசமும் நம்பிக்கையும் எப்பொழுதும் அதிகரிக்கும்படி கேட்பாயாக.

முதல் பிரிவு

நம்பிக்கை கொள்வதற்குச் சர்வேசுரனைப்பற்றிய முகாந்தரங்கள்

தியானம்.—நமது செபங்கள் பயனற்றுப்போவதற்கு முக்கியமான முகாந்தரங்களில் ஒன்று நம்பிக்கையின்மையாகும். ஆகிலும் முழு நம்பிக்கையோடும், கேட்கிற மன்றாட்டை அடைவோமென்கிற உறுதியோடும் நாம் செபம் பண்ணுகிறதற்கு எத்தனையோ முகாந்திரங்களுண்டு? இந்த முகாந்திரங்கள் சர்வேசுரனைப்பற்றினவைகளும், நம்மைச் சார்ந்தவைகளும், பிறருக்காக நாம் வேண்டிக்கொள்ளும்போது அவைகளைச் சார்ந்தவைகளுமாயிருக்கும். சர்வேசுரனைப்பற்றிய முகாந்திரங்களாவன:—அவர் சர்வ வல்லபமுள்ளவராயிருக்கிறதினால், எல்லாம் நமக்கு அளிக்கக்கூடும்; அவர் எங்கும் வியாபித்து நமக்குள்ளும் பிரசன்னராயிருப்பதினாலே, நமது மன்றாட்டுக்களையும் நமது இருதயத்தில் இருக்கும் மகா இரகசியமான ஆசையையுமுதலாய்ச் செவி கொடுத்துக் கேட்கிறார்; அவர் மகா பட்சமுள்ள தகப்பனாராயிருக்கிறதினாலேயும், நாம் ஆசைப்படுகிறதைப் பார்க்க நமக்கு அதிக நன்மைசெய்ய விரும்புகிறதினாலேயும் நமது மெய்யான நன்மைக்கு உதவியானதெல்லாம் நமக்குக்

கொடுக்கச் சித்தமாயிருக்கிறார். மறுக்கப்படாத இந்தச் சத்தியங்களைப்பற்றி, உன் புத்தியில் யாதொரு சந்தேகத்துக்கும் அவநம்பிக்கைக்கும் இடமுண்டானால், "மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: என் நாமத்தினால் என் பிதாவிடத்தில் நீங்கள் கேட்பதெல்லாம் அவர் உங்களுக்கு அளிப்பார்" என்று இயேசுநாதர் திட்டமாய்ச் சொன்ன இந்த வார்த்தைகள் சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் நிவர்த்திபண்ணப் போதாதோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சத்தியங்களையெல்லாம் நாம் ஒப்புக்கொண்டிருந்தும், வழக்கமாய் அவ்வளவு நம்பிக்கைக் குறையோடு செபம்பண்ணுவதேன்? நாம் கேட்கிற மன்றாட்டை அடையமாட்டோமென்கிற நினைவோடே நாம் ஜெபம் பண்ணுகிறதினாலே அல்லது சர்வேசுரனுக்கும் நமக்கும் வெகு தொலையாயிருக்கிறதினால் நமது மன்றாட்டு அவரண்டையில் போய்ச் சேரமாட்டாதென்கிற நினைவினாலே அல்லது சர்வேசுரன் கண்டிப்பான நீதிபரராயிருக்கிறதினாலே நாம் செய்த பாவங்களைப்பற்றியும் நாம் தவறி நடந்ததைப்பற்றியுந் தினந்தினம் நாம் செய்யுங் குறைகளைப்பற்றியும் அவர் நமதுமட்டில் கோபமாயிருக்கிறாரென்று நினைக்கிறதினாலேயல்லவோ நம்பிக்கைக் குறையோடு ஜெபஞ் செய்கிறோம்? நம்பாமைக்குக் காரணமாயிருக்கிற இவைகளெல்லாம் வழக்கமாய் நாம் நிதானித்து ஏற்றுக்கொள்பவைகளல்ல, அநேகமாய் நாம் அறியாமலே அவைகள் ஏற்படுகின்றன; ஆகையால் அவைகளின்மட்டில் அதிக கவனத்தோடே நம்மைப் பரிசோதிப்போமாக.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, எங்களிடத்தில் விசுவாசத்தை அதிகரித்தருளுமென்று மன்றாடின அப்போஸ்தலர்களோடே நீயும் ஒன்றித்து இயேசுவின் அளவில்லாத தயையின்மட்டில் விசுவாசமும் நம்பிக்கையும் உன்னிடத்தில் வளர, அவரை நோக்கி மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—நம்பிக்கைக் குறைவான நினைவு எல்லாத்தையும் எப்போதும் என்னை விட்டு அப்புறந் தள்ளிப்போடுவேனாக.

2-ம் பிரிவு

நம்மைப்பற்றிய முகாந்திரங்கள்

தியானம்.—கெட்டியான நம்பிக்கையோடு ஜெபம் பண்ணுகிறதற்கு விசேஷமாய் நமக்குதவியாயிருக்கவேண்டியதேதென்றால், நமது சக்தியின்மையையும் நமது ஞானத் தரித்திரத்தையும் உணர்ந்து சிந்திப்பதே. நாம் கொடுத்த வார்த்தைப்பாட்டின் நிமித்தம் நாம் உத்தமதனத்தைத் தேடவேண்டுமென்று சர்வேசுரன் நம்மிடத்தில் கேட்கிறது சரியே. அதை அடையவேணுமென்கிற ஆசையும் மனதும் நமக்குண்டு; ஆனால் நாமாக அதை அடையமுடியாதென்றும், அதற்காகப் பரமண்டலத்திலே நின்று நமக்கு உதவியும் இடைவிடாத தேவ வரப்பிரசாத சகாயமும் அவசரமாயிருக்கிறதென்றும் உணர்கிறோம். இதைப் பற்றியல்லோ, இயேசுநாதர் என்னையல்லாமல் அதாவது என் வரப்பிரசாத உதவியல்லாமல் சுபாவத்துக்கு மேற்பட்ட பலனுள்ள யாதொரு காரியம் உங்களால் செய்யமுடியாதென்றார் (அருள. 15). ஆனால் அத்தோடு அவர் திருவுளம்பற்றினதாவது: "அந்த வரப்பிரசாதத்தைக் கேளுங்கள்; அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்றார் (மத். 7). அவ்விதமில்லாவிடில், கூடாத காரியத்தைச் சர்வேசுரன் நம்மிடத்தில் கேட்கிறதுபோலாகும்; இதுவோ அபத்தம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதினின்று மிகுந்த ஆறுதலுக்கும் தைரியத்துக்கும் ஏதுவான எண்ணம் உதிக்கின்றது: நமது தவறுதல்களினின்று எழுந்திருக்கவும், நமது துர்ப்பழக்கங்களையும் அசமந்தத்தையும் அகற்றிவிடவும் சக்தியற்ற பலவீனர்களாயிருக்கிறோமென்று நாம் உணர்வதற்களவாக, நமது செபங்கள் பயன்பெறுமென்று நம்ப இடமுண்டு. இது நிச்சயந்தானே; ஆயினும், இதற்கு முற்றும் மாறாய் நடந்ததில்லையா? நாம் தவறிவிழுந்தபின்னர், தைரியமற்றுப் போகவில்லையா? அவதைரியப்படவில்லையா? ஞானக் காரியங்களின்மட்டில் அருவருப்பு அல்லது அசமந்தம் நமது

உள்ளத்தில் உதித்தபோது, செபிப்பதை நிறுத்திவிடவில்லையா? அல்லது சர்வேசுரன் நமது விண்ணப்பத்தைக் கேட்கமாட்டார் என்றாற்போல், நம்பிக்கையின்றி செபித்ததில்லையா? நமது தப்பிதங்களை உணர்ந்து, அவைகளில் மீண்டும் விழாதபடி தடுத்துக்கொள்வோமாக.

மனப்பற்றுதல்.—எனது சஞ்சலங்களின் பாரத்தால் நசுக்கப்படுகிறேன் என்று உணர்வதற்களவாக, ஆண்டவரே, உம்மை நோக்கி நம்பிக்கையோடும், என் மன்றாட்டைக் கேட்டருள்வீரென்கிற நிச்சயத்தோடும் அபயமிடுவேன்.

பிரதிக்கினை.—கஸ்தி சஞ்சலங்கள் சூழ்ந்துவருஞ் சமயத்திலே: "என் ஆத்துமம் தரையோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது; ஆண்டவரே, என்னை உயிர்ப்பியும்" என்று தாவீது இராஜாவோடே சொல்லுவேனாக (சங். 118).

3-ம் பிரிவு

பிறரைப்பற்றின முகாந்திரங்கள்

தியானம்.—பிறருக்காகவும் விசேஷமாய்ப் பாவிகளுக்காகவும் நமது விசாரணையில் விசேஷ விதமாய் ஒப்படைக்கப்பட்டிருக்கிறவர்களுக்காகவும் நாம் வேண்டிக்கொள்ளும்போது, மூவித நினைவுகள் நமக்கு மிகுந்த நம்பிக்கையை உண்டுபண்ண வேண்டியது: முதலாவது, சர்வேசுரனுக்கு நாம் மிகவும் பிரியமான காரியத்தைச் செய்கிறோமென்பதும்; 2-வது, இதினால் நமது கடமையைச் செலுத்துகிறோமென்பதும்; 3-வது, இதில் நமது சொந்தப் பிரயோசனத்தைச் சார்ந்தது ஒன்றுமில்லை என்பதுமாம். தனக்காக மன்றாடுகிறதைப் பார்க்க வேறொருத்தனுக்காக அதிக நம்பிக்கையோடு மன்றாடலாம்; அவனது நிர்ப்பாக்கியத்துக்கு அளவாக நமது நம்பிக்கையும் அதிகரிக்கும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னைச் சூழ்ந்திருக்கிற எண்ணிக்கையில்லாத நிர்ப்பாக்கியருடைய மிகுந்த அவபக்தியையுந் துர்நடக்கையையும், உன்

விசாரணைக்கு ஒப்பிக்கப்பட்டவர்களை நல்வழியில் கொண்டு வர நீ படும் பிரயாசைகளின் பயனின்மையையும் பார்க்கும் போது, அவர்கள் மனந்திரும்புவது அசாத்தியம் என்று எண்ணுவதில்லையா? அவர்கள் எப்படியும் போகட்டுமென்று சொல்லி, அவர்களுக்காக வேண்டிக்கொள்வதை விட்டுவிடுகிறதில்லையா? இவ்விதம் ஒருக்காலும் செய்யாதே; இது பிறர்சிநேகத்துக்கு விரோதமும் சர்வேசுரனுக்கு நிந்தையுமானது.

சம்பாஷணை.—இன்றையத் திருநாளுக்குரிய அர்ச்சியசிஷ்டவரோடே சம்பாஷணை செய்வாயாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 5-ம் வாரம்—திங்கள்

கர்த்தர் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போன திருநாளுக்குமுன் மூன்றுநாள் செய்யும் பொதுச்செபத்தின் பேரில்

ஆயத்தச் சிந்தனை.—குறிக்கப்பட்ட அந்தந்த ஸ்தலங்களில கிறீஸ்துவர்கள் சுற்றுப்பிரகாரஞ்செய்து செபம் பண்ணிக்கொண்டு போகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இன்றையத்தினம் விசுவாசிகளுக்குத் திருச்சபை வருவிக்க ஆசைப்படுஞ் சுகிர்த கருத்து உண்டாகும்படியான வரத்தைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

இந்த மூன்றுநாளுக்குரிய பொது செபத்தின் ஆரம்ப வரலாறு

தியானம்.—கர்த்தர் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போன திருநாளுக்கு முந்திச் செய்யும் மூன்றுநாள் செபதபம் 5-ம் நூற்றாண்டில் பிராஞ்சுதேசத்தைச் சேர்ந்த

வியென் என்னும் பட்டணத்தின் மேற்றிராணியாராகிய அர்ச். மம்மேர்த்து என்பவர் காலத்தில் ஆரம்பமானது. புர்சிந்தோன் என்பார் வியென் நாட்டின் பேரில் படையெடுத்துவந்த காலந்துவக்கி, அந்நாட்டில் வருஷந்தவறாமல் பலத்த இக்கட்டுகள் நேரிட்டுக்கொண்டிருந்தன; இது தேவ கோபாக்கினையென்று ஜனங்கள் எண்ணினார்கள். இதனால் மனக்கிலேசப்படாதார் ஒருவருமில்லை. விசேஷமாய் 470-ம் வருஷத்தில் வியென் பட்டணத்துக்கு நேர்ந்த பொல்லாப்பு சொல்லுந்தரமன்று. அப்போதுதான், மேற்சொன்ன அர்ச். மேற்றிராணியார் தேவ கோபத்தை அமர்த்துவதற்காக தனது மேற்றிராசனம் முழுவதிலும், வருஷாவருஷம் மூன்று நாள் பொதுச்செபம் செய்வதாக நேர்ந்துகொண்டார். விசுவாசிகளும் அதற்கு சம்மதித்து அவ்விதம் செய்ய உடன்பட்டார்கள். கர்த்தர் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போன திருநாளுக்கு முந்தின மூன்று நாட்களில், எல்லாரும் ஒருசந்தியாயிருந்து, பட்டணத்துக்கு வெளியிலிருந்த மூன்று தேவாலயங்களுக்கும் சுற்றுப்பிரகாரமாய் செபம் செய்துகொண்டு போகும்படி அந்த மேற்றிராணியார் கட்டளையிட்டார். இதினால் வெகுநன்மை உண்டாகி, பொல்லாப்பும் விலகிப்போயிற்று. இதைக்கண்ட அத்தேசத்து மற்ற மேற்றிராணிமார்களுந் தங்கள் விசாரணைக்குட்பட்ட பட்டணங்களிலும் ஊர்களிலும் இந்தப் பத்தியை ஸ்தாபித்தார்கள். 8-ம் நூற்றாண்டின் கடைசியிலே திருச்சபையை ஆண்டுவந்த 3-ம் சிங்கராயரென்னும் பாப்பானவர், லத்தீன் திருச்சபை எங்கும் இதைக் கடமையாக ஸ்தாபித்துப் பாஸ்குக் காலத்தினிமித்தம் ஒருசந்தியை மாற்றிச் சுத்தபோசனத்தைக் கட்டளையிட்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ பராமரிக்கையைக் கண்டு ஆச்சரியப்படுவோமாக. ஏனென்றால் தற்செயலாய்ச் சம்பவிப்பதாகத் தோன்றுஞ் சில விஷயங்களைக்கொண்டு, அந்தந்தக் காலங்களில் புதிதான பத்தி முயற்சி உண்டாகவும் இதின் வழியாய்க் கிறீஸ்துவர்களுக்கு விசுவாசமும் பத்தியும் அதிகரிக்கவும் சர்வேசுரன் வழி செய்துகொண்டு வருகிறார்.

மனப்பற்றுதல்.—நமது ஆத்தும சரீர அவசரத்தின் மட்டில் எப்போதுங் கரிசனையாயிருக்கிற தேவ பராமரிக்கையை வாழ்த்திப் போற்றுவோமாக.

பிரதிக்கினை.—இன்றையத்தினம் நாம் திருச்சபையின் கருத்தோடு ஒன்றித்து அது நினைத்த கதியை அடைய வருந்துவோமாக.

2-ம் பிரிவு

இந்த பொதுச்செபத்தின் கதி

தியானம்.— இம்மூன்று நாளும் திருச்சபையின் கருத்துக்கு நாம் ஒத்து நடக்க, அதினாலே குறிக்கப்படுகிற கதியை எந்நேரமும் நினைத்துக்கொள்ளவேண்டும். அதேதெனில், சில சமயத்தில் நமக்குண்டாகும் பெருந்துன்பம் நம்மை விட்டு விலகுவதற்காகவும், எப்போதும் நமது ஆத்தும சரீரத்துக்குச் சம்பவிக்கும் எண்ணிக்கையில்லாத பொல்லாப்புக்கு நாம் தப்பித்துக்கொள்ளவும், ஆத்தும சரீரத்துக்கு அவசரமானதெல்லாம் அடையவும் விசேஷமாய் அந்தந்த காலத்தில் பூமியானது பலன் தரும்படி தேவாசீர்வாதம் உண்டாகவும் இவ்விதம் பொதுச்செபம் செய்ய வேண்டும் என்பது திருச்சபையின் கருத்து.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திருச்சபைக்குள்ள இந்த கருத்து நிறைவேறத்தக்கதாக, மிகுந்த பிரயாசப்படவேண்டியது விசேஷமாய் நம்மைச் சார்ந்ததன்றோ? சந்நியாசிகளாகிய நாம் மற்றவர்களைப் பார்க்க இது காரியத்தில் மிகுந்த பத்தி சுறுசுறுப்பையும் பிறர்மட்டில் அதிக சிநேகத்தையுங் காண்பிக்கவேண்டியதல்லவா? தேவ கோபத்துக்கும் பாவிகளுக்கும் நடுவே நாம் நின்று, அவர்கள் பாவத்தால் அவர்களுக்கு வரவேண்டிய ஆக்கினைகளை, நமது ஜெபதபப் புண்ணிய முயற்சிகளினால் அவர்களை விட்டு விலக்கப் பிரயாசப்படவேணும்.

இந்த சத்தியம் என் உள்ளத்தில் பதிந்திருக்கிறதா? சர்வேசுரன் முன்பாகவும் மனிதர் முன்பாகவும் என் நடக்கை இதற்கு ஒத்ததாயிருக்கிறதோ?

மனப்பற்றுதல்.—எங்களுக்குப் பாவமன்னிப்புத் தந்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம், எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும், சுவாமி. திருச்சபையின் சத்துருக்களைக் கீழ்ப்படுத்தவேணுமென்றும் பூமியிலே நல்ல பயிர் விளைந்து பலன் தந்து காப்பாற்ற வேணுமென்றுந் தேவரீரை மன்றாடுகிறோம், எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும், சுவாமி.

பிரதிக்கினை.— இம்மூன்று நாளும் என்னைத் தேவ மகிமைக்கு வசீகரமாகிய பரிகாரப்பலியாக நினைத்துக்கொள்வேனாக.

3-ம் பிரிவு

இப் பொதுச் செபத்தின் கதியை அடைகிறதற்கான உபாயங்கள்

தியானம்.—இப் பொதுச் செபத்தை ஸ்தாபித்ததில் திருச்சபை கொண்ட கருத்தானது சகலருக்கும் பொதுவான நன்மையாயிருப்பதினிமித்தம், அதை அடைவதற்கான வழிகளையும் அதற்குத் தகுந்தபிரகாரம் தீர்மானித்திருக்கிறது. புத்தி விபரம் அறிந்தவர்கள் விசேஷ உத்திரவிருந்தாலன்றி, சுத்தபோசனமாய் இருக்க வேணுமென்றும் சகலரும் அர்ச்சியசிஷ்டவர்கள் பிரார்த்தனை சொல்லிப் பிரசித்தமான செபங்களைச் செபிக்க வேணுமென்றும் திருச்சபை கட்டளையிட்டிருக்கிறது. இந்தப் பொதுச் செபங்களிலே அந்தஸ்துகளுக்கும், குடும்பங்களுக்கும், ஒவ்வொருவனுக்கும் உள்ள அவசியங்களெல்லாம் குறிப்பிட்டிருக்கின்றன. இந்நாட்களிலே அவரவர்கள் மேற்சொன்ன செபத்தைச் சரியாய்ச் செய்வார்களாகில், எவ்வளவோ பலன் அடையலாம்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—எல்லாரும் சுற்றுப்பிரகாரத்துக்குப் போய்ப் பொதுவாய் இந்தச் செபத்தையும் பிரார்த்தனையையும் பிரார்த்திக்கக்கூடாமற்போனால், நமது கோவிலிலாகிலும் செபக்கூடத்திலாகிலும் இம்மூன்று நாளுக்குள்ளாக இவைகளைச் செபிப்போமாக. உலகமெங்கும் உள்ள பத்தியுள்ள விசுவாசிகளோடு

மனதினாலுங் கருத்தினாலும் நாம் ஒன்றித்துப் பத்தியோடு இந்த சுகிர்த முயற்சிகளை நிறைவேற்றப் பிரயாசப்படுவோமாக.

சம்பாஷணை.—இக்கட்டான இக்காலத்திலே விசேஷமாய் நமது அவசியத்துக்குத் தக்கது, அர்ச்சியசிஷ்டவர்கள் பிரார்த்தனையிலுள்ள சில மன்றாட்டைச் சொல்லுவோமாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 5-ம் வாரம்—சேவ்வாய்

இயேசுநாதர் மோக்ஷத்துக்கு ஆரோகணமாகிறதற்கு முந்திக் கடைசிவிசை காட்சி கொடுத்ததின் பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் பதினொரு அப்போஸ்தலர்கள் நடுவில் பந்தியில் உட்கார்ந்திருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—இயேசுநாதர் அவர்களுக்கு வருவிக்கும் மேலான உணர்வுகளில் உனக்கும் பங்குகிடைக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்கள் பேரில் வைத்த விசேஷ பட்சம்

தியானம்.—“பந்தியிலிருந்த பதினொருவருக்கு இயேசுநாதர் கடைசியாய்க் காட்சி கொடுத்தார்” (மாற். 16). யூதாஸ் நான்றுகொண்டுசெத்துப்போனபிறகு, மீந்திருந்த பதினொரு அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் இந்தக் காட்சி கிடைத்ததென்று, மேற்சொல்லிய வார்த்தைகளைக்கொண்டு நிச்சயமாய் அறிந்துகொள்ளலாம். இயேசுநாதர் மரிக்கிறதற்கு முந்தித் தமது கடைசி நேரத்தை அவர்களோடு செலவழித்ததுபோல, இப்போது ஒட்டோலகராய்

மோக்ஷத்துக்கு ஆரோகணமாகிறதற்கு முந்தியுந் தமது கடைசி நேரத்தை அவர்களோடே செலவழிக்க மனதாயிருந்தார். மேலும் அவ்விரண்டு சமயத்திலும் மகா பிரியமுள்ள சிநேகிதனைப்போல் ஒரே பந்தியில் உட்கார்ந்து, அவர்கள்பேரில் தமக்குண்டான விசேஷ பட்சத்தை அவர்களுக்குக் காண்பிக்கச் சித்தமானார். இதற்குக் காரணம் ஏதென்றால், முதலாவது, “என் பிதாவே, நீர் எனக்குக் கொடுத்தவர்களைக் காப்பாற்றினேன்,” என்று இயேசுநாதர் தாமே சொன்னபடி மனுஷ இரட்சணியத்துக்காகத் தம்மோடேகூடப் பிரயாசப்படத் தமது பிதாவினால் அவர்கள் தமக்குக் கொடுக்கப்பட்டதினாலேயும்; 2-வது, “நீங்கள் எல்லாத்தையும் விட்டு என்னைப் பின்சென்று வந்தீர்களே” என்று அவர் சொன்னதுபோல, தாம் அவர்களை அழைத்தபோது, தம்மைப் பின்செல்லுகிறதற்கு அவர்கள் எல்லாத்தையும் விட்டு விட்டதினாலேயும்; 3-வது மற்றச் சீஷர்களைப்பார்க்க அவர்கள் தமக்காக அதிகமாய்ப் பிரயாசப்படவும் பாடுபடவும் குறிக்கப்பட்டிருக்கிறதினாலேயும், இயேசுநாதர் அவர்கள் மட்டில் விசேஷ பட்சத்தைக் காண்பித்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மனுஷ இரட்சணியத்துக்காக இயேசுநாதரோடேகூடப் பிரயாசப்படச் சர்வேசுரன் ஆயிரம் பேர்களுக்குள்ளே நம்மைத் தெரிந்துகொண்டார். நாமும் இயேசுநாதரைப் பின்செல்ல எல்லாத்தையும் துறந்துவிட்டோம். இதினாலே திவ்விய இரட்சகருடைய விசேஷ சிநேகத்தில் நமக்கும் ஒரு பங்கு கிடைக்க வேணுமென்று தோன்றுகிறதில்லையோ?

மனப்பற்றுதல்.—இயேசுநாதருடைய விசேஷ சிநேகத்துக்குப் பேறுபெற மிகவும் ஆசைப்படு. இந்த முகாந்தரத்தைப்பற்றி அவருக்காகவும் அவர் திரு இரத்தத்தால் மீட்கப்பட்ட ஆத்துமாக்களுக்காகவும் மிகுந்த பிரயாசப்படவும் பாடுபடவும் உன்னை ஒப்புக்கொடுப்பாயாக.

பிரதிக்கினை.—தேவ ஊழியத்தில் இனிமேல் அதிக உதாரத்தனத்தைக் காண்பிக்கவும் அதில் என்னை அதிகமாய்ச் செலவழிக்கவும் மனதாயிருக்கிறேன்.

2-ம் பிரிவு

இயேசுநாதர் தமது அடைக்கலம் அவர்களுக்குக் கிடைக்குமென்று உறுதிமொழி சொன்னதின் பேரில்

தியானம்.—அப்போஸ்தலர்களும் சீஷர்களும் தங்கள் திவ்விய குருவின் பிரத்தியட்சமான சந்நிதியை இவ்வுலகத்தில் எப்போதைக்கும் இழந்துபோகும் நேரம் அடுத்து வந்தது. இந்த நினைவினால், சுபாவமாய் அவர்கள் கலக்கமும் மிகுந்த கஸ்தியும் அடைய வேண்டியதாயிற்று. இதைப் பற்றி இயேசுநாதர் அவர்களுக்கு உறுதிசொல்லி மனதைத் தேற்றும்படியாக, அவர்கள் பார்வைக்கு மாத்திரம் அவர் மறைந்திருப்பாரென்றும், மெய்யாகவே அவர்களுக்கு உதவி செய்யவுங் காப்பாற்றவும் அவர்களோடேகூட எப்போதைக்கும் இருப்பாரென்றும் வாக்குக்கொடுத்தார். "இதோ, நான் உலகம் முடியுமட்டும் எக்காலமும் உங்களோடேகூட இருக்கிறேன்" என்றார் (மத். 28).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வாஸ்தவத்திலும் இயேசுநாதர் சர்வேசுரனாகியமட்டும் எங்கும் வியாபகமாயிருக்கிறதினாலே, என்றென்றைக்கும் நம்மோடுகூட இருக்கிறதுமல்லாமல், அவர் மனுஷனாகியமட்டும், பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகுமுன்னே இருந்ததைப் பார்க்கிலும் நமக்கு இப்போது அதிக பிரயோசனமான விதமாய்த், தேவநற்கருணையில் தமது சரீரத்திலும் பிரசன்னராய் நம்மோடேகூட இருக்கிறார். அப்போது இயேசுநாதர் ஒரே இடத்தில் மாத்திரம் மாறி மாறி பிரசன்னராயிருந்தார்; இப்போதோவென்றால், கிறீஸ்துவர்கள் இருக்கும் எண்ணிக்கையில்லாத இடங்களெங்கும் ஒரே க்ஷணத்தில் பிரசன்னராயிருக்கிறார். அப்போது அந்தந்த வீட்டில் பிரவேசித்துப் பந்திபோசனஞ் செய்துமாத்திரம் மனிதர்களோடே புழங்கக்கூடுமானவராயிருந்தார்; இப்போதோவென்றால், தேவநற்கருணை வழியாய் நமது இருதயத்தில் பிரவேசித்து நமக்கு ஞானப்போசனமாகி, நம்மோடேகூட ஒன்றித்து வாசம் பண்ணுகிறார். "என் மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்

னில் வசிக்கிறான், நானும் அவனில் வசிக்கிறேன்," என்று சொல்லியிருக்கிறார் (அரு. 6, 57).

மனப்பற்றுதல்.—என் இரட்சகராகிய சர்வேசுரன் சகலர் மட்டிலும் விசேஷமாய் என் மட்டிலுங் காண்பிக்கிற அபூர்வமான தயவையுந் தாட்சணியத்தையும் உதாரத்தனத்தையும் நினைத்து ஆச்சரியப்பட்டு மிகவும் நன்றியறிந்திருப்பேனாக.

பிரதிக்கினை.—தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் இயேசுநாதரைச் சந்தித்து ஆராதித்து அவரை மகிமைப்படுத்துவதில் என் நன்றியறிந்ததனத்தைக் காண்பிக்கப் பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

இஸ்பிரீத்து சாந்துவானவர் கொஞ்சத்துக்குள்ளே எழுந்தருளி வருவாரென்று வாக்குக் கொடுத்ததின்பேரில்

தியானம்.—அப்போஸ்தலர்கள் தங்கள் அறியாமையையும் மிகுந்த துர்ப்பலத்தையும் உணர்ந்து தங்களுக்குக் கொடுக்கப்படும் மேலான உத்தியோகத்தின் பெருமையையும் அதிலுள்ள வருத்தத்தையும் நினைத்து மிகவும் பயந்து கலங்கியிருந்தார்கள். இதைக்கண்டு இரட்சகர் அவர்களுக்குத் திடன் வருத்துகிறதற்காக இன்னம் கொஞ்ச தினத்துக்குள்ளாக இஸ்பிரீத்து சாந்துவானவர் எழுந்தருளிவரப் போகிறதை அவர்களுக்கு அறிவித்துச் சொன்னதாவது: நீங்களோவெனில், பரலோகத்தில் நின்று வரும் வல்லமையால் அணியப்பட்டு வேறே மனுஷராகுமட்டும் பட்டணத்தில் தங்கியிருங்களென்றார் (லூக். 24).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது தகுதியின்மையையும், பலவீனத்தையும், ஞான சஞ்சலங்களையும் நாம் சரியாய் அறிந்திருப்பது நன்மையும் பிரயோசனமுமானது; ஆனால் அதினாலே நாம் மனம் பேதலியாதபடிக்குக் கவனமாயிருக்க வேணும். அப்படிப்பட்ட சோதனை நமக்கு உண்டானால், உடனே இயேசுநாதரை அண்டி, இஸ்பிரீத்து சாந்துவானவரை நம்பிக்கையோடே

பிரார்த்திப்போமாக. அப்போது அவர் நமது புத்தியைத் தெளிவிக்கவும் நம்மைத் திடப்படுத்தவும் எழுந்தருளி வரத் தாமதிக்க மாட்டார். நீ தகுந்த சமயத்தில் இப்படிச் செய்ய அசட்டையாயிருந்ததினாலல்லவோ, மனத் திடனற்றுப் பாவத்தில் விழவேண்டியதாயிற்று. இனிமேல் எப்படி நடப்பாய்?

சம்பாஷணை.—பாக்கியவான்களாகிய அப்போஸ்தலர்களோடே சம்பாஷணை செய்.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 5-ம் வாரம்—புதன்

இயேசுநாதர் கொடுத்த காட்சியின்பேரில் பொது யோசனை

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் காட்சி கொடுத்த போதெல்லாம், சீஷர்கள் அனுபவித்த சந்தோஷத்தைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—உன் ஆத்துமம் பரலோகத்திலே இயேசுநாதரோடே ஒன்றித்திருக்குங் காலம் வருந்தனையும், அந்த ஆத்துமத்துக்கு அடிக்கடி தம்மைக் காண்பிக்கவேணுமென்று அவரைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் எத்தனை விசை காட்சி கொடுத்தாரென்பதின் பேரிலும், இதற்கடுத்த முகாந்திரங்களின் பேரிலும்

தியானம்.—முந்தின தியானங்களில் சொல்லியிருக்குமாப்போல, இயேசுநாதர் தமது சீஷர்களுக்குக் கொடுத்த ஒன்பது காட்சிகளை மாத்திரஞ் சுவிசேஷகர்கள் விவரித்து எழுதினார்கள்; ஆகிலும் வேதாகமங்களில் தொடர்ச்சியாய்ச் சொல்லியிருக்கிறதைப் பார்க்கையில், அவர் அநேகம்விசை காட்சி கொடுத்ததாக விளங்குகிறது. அப்படியே சுவி-

சேஷகராகிய அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறதைக் கொண்டு, இதை நாம் கண்டுபிடிக்கலாம். அதெப்படியென்றால், "இயேசுநாதர் பாடுபட்டபின், நாற்பது நாளாக அவர்களுக்குத் தரிசனையாகிச் சர்வேசுரனுடைய இராச்சியத்தைக் குறித்துப் பேசிக்கொண்டு வந்ததுமல்லாமல் அநேக திருஷ்டாந்தங்களால் அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" என்கிறார். (அப். நட. 1). இரட்சகர் தமது அப்போஸ்தலர்களுக்கும் சீஷர்களுக்கும் இவ்வாறு அடிக்கடி காட்சி கொடுத்ததேன்? தமது உத்தானத்தின் மட்டில் அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், கடைசியாய் அவர்களை விட்டுத் தாம் முழுதும் பிரிந்து போகிறதினால் அவர்களுக்கு அதிக வருத்தமில்லாதிருக்கவும் விசேஷமாய்த் தம்மைப் பிரத்தியக்ஷமாய் அவர்களுக்கு அநேகந்தரங் காண்பித்ததினாலே, தாம் காணப்படாதவிதமாய், எப்போதும் அவர்களோடிருக்கிறதை எண்பிக்கவும் இப்படிச் செய்தாரென்று சொல்லவேணும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போதும் ஆண்டவர் புண்ணியாத்துமாக்கள்மட்டில் இவ்விதமே நடந்துகொள்கிறார். அவர்களோடு எப்போதுங் காணப்படாத மேரையாய் இருக்கிறதுமன்றி, வேளைக்கு வேளை மகா ஞானத் தெளிவினாலாவது சிநேக ஆனந்தத்தின் மிகுதியினாலாவது தமது பிரசன்னத்தை அவர்கள் உணரும்படி செய்து, தம்மை விசேஷவிதமாய்க் காண்பிக்கிறார். அவர்கள் தேவநற்கருணை வாங்கும்போது; வழக்கமாய் அப்படிச் சம்பவிக்கும்; அப்போது அவர்கள் உட்கொள்ளும் அப்பம் "பரலோகத்தில் நின்று எழுந்தருளி வந்த சீவனுள்ள அப்பம்" என்று திருஷ்டாந்தமான அடையாளங்களினாலே அவர்கள் உணரச் செய்கிறார். (அரு. 6). திவ்விய இரட்சகருடைய பிரத்தியட்ச சமூகத்தின் பலனை நீயுஞ் சிலவிசை அறிந்ததில்லையோ? உன் ஆசைக்களவாக இவ்விதமாய் அடிக்கடி சம்பவிக்கவில்லையென்றாலும், மிதமிஞ்சிக் கஸ்திப்படவேண்டாம்; தேவவரப்பிரசாதத்தின் பிரத்தியட்சமான அடையாளங்கள் பரிசுத்ததனத்துக்கு அவசரமானதல்ல.

மனப்பற்றுதல்.—வழக்கமாய் மதுரமும் இரட்சணியமுமுள்ள பலன்களை விளைவிக்கும் ஞான மினவுதல்களில் யாதொன்றை உன் ஆத்துமம் அடிக்கடி அடைய இயேசுநாதர்தாமே அதை ஆயத்தப்படுத்தவேணுமென்று மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—நான் ஏறக்குறைய வழக்கமாய்ச் செய்யுஞ் சில குற்றங் குறைகளினாலே, இயேசுநாதர் மேற்சொல்லிய விதமாய்த் தம்மை எனக்குக் காண்பிக்கிறதற்கு விக்கினஞ் செய்கிறதில்லையோவென்று என்னை வினவிச் சோதிப்பேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் காட்சிகொடுத்த காலமும் இடமும்

தியானம்.—இந்த நாற்பது நாட்களுக்குள் இயேசுநாதர் கொடுத்த அநேக காட்சிகளில் ஒவ்வொன்றும் இன்ன காலத்தில் இன்ன இடத்தில் சம்பவித்ததென்று திட்டமாய்க் கூறுவது கூடாத விஷயம். அவைகள் குறிப்பான ஒரு ஒழுங்கின்பிரகாரம் சம்பவிக்கவில்லை; பலவகைப்பட்ட தருணங்களில் சம்பவித்தன. காட்சி கண்டவர்களுடைய இருதய சார்புக்கும் ஆசைக்கும் தகுந்தாற்போல் அடிக்கடி அல்லது தாமதித்து அவைகள் சம்பவித்தன. குறிப்பிட்ட ஒரே இடத்திலும் வேளையிலும் அல்ல, காலையிலும் மாலையிலும், இரவிலும் பகலிலும், வீட்டுக்குள்ளும் வெளியிலுமாக அவைகள் நடைபெற்றன.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது சொன்னதெல்லாம் பிரயோசனமற்றதன்று. எந்த அந்தஸ்தும் அலுவலும் வேலையும், அது எவ்வளவு பாரக்குக்குரியதாயினும், சர்வேசுரன் நமது ஆத்துமத்துக்குள் பேசுவதற்கு விக்கினமாயிருக்கமாட்டாதென்றும், அவருடைய மதுரமான இந்தப் பிரசன்னம் வெகுகாலம் நமக்குக் கிடையாமலிருந்தாலும், ஒருபோதும் அது நமக்கு கிடைக்கமாட்டாதென்று நாம் அவநம்பிக்கைப்பட ஒண்ணாதென்றும் இதினால் அறிந்துகொள்ளலாம். அதை

அடையும்படி இருதயப் பரிசுத்ததனத்தினாலும் பத்தி சுறுசுறுப்புள்ள ஆசையினாலும் நம்மை ஆயத்தப்படுத்துவதே நமக்கு முக்கியமானது.

மனப்பற்றுதல்.—இந்தச் சத்தியங்களின்பேரில் விசுவாச முயற்சி செய்வேனாக. மேலும், ஆண்டவரே, என்னை நினைத்து உமது தயவுள்ள இரட்சிப்பினால் சந்தித்தருளுமென்று இராஜ தீர்க்கதரிசியோடே நானும் பெருமூச்செறிந்து சொல்ல மிகுந்த ஆசைப்படுவேனாக (சங். 105).

பிரதிக்கினை.—இந்த ஆசை முயற்சியை இன்றைக்கு அடிக்கடி புதுப்பிப்பேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் காட்சிகளைக் கொடுத்த விதமும் அவைகள் நீடித்திருந்த நேரமும்

தியானம்.—இந்தக் காட்சிகள் யாவும் ஒரு வகையில் ஒத்திருந்தன:—(1) அவைகள் யாவும் அப்போஸ்தலர்களுக்கும் சீஷர்களுக்கும் மாத்திரம் தோன்றின. (2) அவர்கள் யாவும் திடீரென, நினையாத வேளையில் தோன்றிச் சொற்பநேர மாத்திரம் நீடித்தன. இயேசுநாதர் அவர்கள் சற்றும் நினையாத சமயத்தில் அவர்களுக்குக் காட்சிகொடுத்து அவர்கள் தம்மைக் கண்டு தம்மோடே சம்பாஷித்து அதிக மனரம்மியமாயிருக்கும் வேளையில் திடீரென அவர்கள் கண்ணுக்கு மறைந்துபோவார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் இப்படி நடத்தினதேனென்றால், முதலாவது, தமது ஊழியத்தில் தங்களை முழுதும் ஒப்புக்கொடுத்தவர்களுக்கு மாத்திரம் தமது வரங்களை அளிப்பாரென்று காண்பிக்கவும்; 2-வது, தமது சந்நிதியும் அதற்குரிய ஆறுதல்களும் பரலோகத்திலே மாத்திரம் பூர்த்தியாகி நீளித்திருக்கவேண்டியவைகளாதலால், இப்போது அவைகள் பேரில் அதிக பற்றுதல் வையாமல் அவைகளை விரும்பவேணுமென்று தெளிவிக்கவும்; 3-வது, கடைசியாய்த்

தமது மினவுதலின் ஞான நன்மைகளை அடைகிறதற்கு, நாம் எப்போதும் ஆயத்தமாயிருக்கும்பொருட்டு எங்கும் எந்நேரமும் எச்சரிக்கையாயிருக்க நம்மைத் தூண்டவும் இப்படி நடத்திவந்தார்.

சம்பாஷணை.—பரலோகத்துக்கு எழுந்தருளி மோக்ஷானந்த மகிமை அடைந்து, அதில் நமக்கு இடம் முஸ்திப்புச் செய்யப் பூலோகத்தை விட்டுவிடப்போகிற இயேசுநாதரோடு சம்பாஷணை செய்யவேண்டும். பூலோகத்தில் அவர் நமக்குச் செய்த நன்மைகளுக்கெல்லாம் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, தேவரீர் உமது இராச்சியத்தில் பிரவேசித்திருக்கும்போது, என்னை நினைக்கருளுமென்று நல்ல கள்ளன் கேட்டு மன்றாடினதுபோல உன்னையும் விசேஷமாய் அவர் நினைத்துக்கொள்ளவேணுமென்று அவரை மன்றாடுவாயாக.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 5-ம் வாரம்—வியாழன்

நமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துநாதர் மோக்ஷத்துக்கு எழுந்தருளின திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தமது சீஷர்கள் நடுவில் நின்று, ஆகாயத்தில் எழுந்துபோவதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—அந்தச் சமயத்திலே அப்போஸ்தலர்கள் இருதயத்தை நிரப்பின அக்களிப்பை நீயும் உணரும்படி வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

பரலோகத்துக்கு எழுந்தருளின திருநாளின் பரம இரகசியங்கள்

தியானம்.—நமது நேசத்துக்குரிய திவ்விய இரட்சகர் பரலோகத்துக்கு எழுந்தருளின மகிமைப் பிரதாபத்

தைச் சந்தோஷத்தோடும் பாக்கியத்தோடுந் தியானித்துப் பார்ப்போமாக. சுவிசேஷகராகிய அர்ச். லூக்காஸ் இதைக் குறித்து விபரமாய் எழுதியிருக்கிறதைக் கேள்: இயேசுநாதர் பலமுறை தமது அப்போஸ்தலர்களுக்குத் தாம் உயிரோடிருக்கிறதைக் காண்பித்துச் சர்வேசுரனுடைய இராச்சியத்தைக் குறித்து அவர்களுக்கு வெளிப்படுத்தவேண்டியதெல்லாம் அறிவித்தபின், பட்டணத்துக்கு வெளியில் பெத்தானியாவரைக்கும் அவர்களைக் கூட்டிக்கொண்டுபோய்த் தமது கரங்களை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அப்படி அவர்களை ஆசீர்வதித்துக்கொண்டிருக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்தார். அவர் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போகிறதைச் சீஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், ஓர் மேகம் அவர்கள் கண்ணுக்கு அவரை மறைத்துக்கொண்டது. அவர் பரமண்டலத்தில் ஏறிச் சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார் (லூக். 24; மாற். 16). அப்படியே அவர் மோக்ஷத்துக்கு எழுந்தருளிப் போகிறதை அவர்கள் அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ வெண்மையான ஆடை அணிந்த இரண்டு மனிதர்கள் அவர்களருகில் நின்று, அவர்களைப் பார்த்துக் கலிலேய நாட்டாரே, நீங்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு நிற்பானேன்? உங்களைவிட்டுப் பரலோகத்துக்கு எழுந்தருளின இந்த இயேசுநாதர்தானே பரலோகத்துக்கு எழுந்தருளிப்போக நீங்கள் கண்டபிரகாரத்துக்கு மறுபடியும் வருவாரென்றார்கள். அப்போது மகா சந்தோஷத்தோடு ஒலிவேத்தென்னும் மலையைவிட்டிறங்கி எருசலேம் பட்டணத்துக்குத் திரும்பிப்போனார்கள் (அப். நட. 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது:—இயேசுநாதர் ஆகாசத்தில் மெள்ள மெள்ள ஏறி, மேக மண்டலங்களைக் கடந்து பரமண்டலத்தில் ஒட்டோலகராய்ப் பிரவேசித்து சம்மனசுகள் கீதங்கள் பாட, தமது பிதாவின் சிம்மாசனத் தண்டையிற் போகிறதையும், "நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதங்களுக்குப் படியாகப் போடுமட்டும், நம்முடைய வலது பாரிசத்தில் உட்

காருமென்று" தாவீது இராசா பரவசமாகிப் பாடிய பிரகாரம் (சங். 109), பிதாவானவர் அவருக்கு ஆனந்த மகிமை முடி சூட்டிச் சத்துருக்களெல்லாரையும் அவருடைய சர்வ அதிகாரத்துக்கு உட்படுத்துகிறதையும் பார்க்கிற இவ்வுன்னத காட்சி இன்றையத்தினம் விசேஷமாய் நம்முடைய கண் முன்பாக இடைவிடாமல் இருக்கும்படி வருந்துவோமாக. நமது ஆசையின் மிகுதியினாலே இப்போதுதானே பரலோகத்திலே நாம் ஞானவிதமாய் வாசம் பண்ணும்படி இயேசுநாதர் நமது இருதயத்தை தமது வசமாய் இழுத்துக் கொள்ளவும் இவ்வுலகப் பற்றுதல்களெல்லாத்துக்கும் மேலாகப் பரலோக மட்டும் நம்மை உயர்த்தவும் அவரைப் பிரார்த்திப்போமாக.

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் அடைந்த ஒட்டோலக மகிமையைக் கண்டு அகமகிழ்ந்து, அவர் பட்ட நிந்தை அவமானப் பாடுகளினாலே அவருக்குக் கிடைத்த மகிமைப் பிரதாபத்தையும் வாக்குக் கெட்டாத பேரின்ப பாக்கியத்தையும் பார்த்து அவரைக் கொண்டாடுவோமாக.

பிரதிக்கினை.—இயேசுநாதர் அடைந்த மகிமையிலும் பாக்கியத்திலும் நமக்குப் பங்கு கிடைக்கத்தக்கதாக, அவரோடும் அவரைப் பற்றியும் வெகு பிரயாசப்படவும் பாடுபடவும் நாம் பிரதிக்கினை செய்வோமாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் பரலோகத்திற்கு எழுந்தருளின திருநாளைப்பற்றிய சந்தோஷம்

தியானம்.—அப்போஸ்தலர்கள் ஆண்டவரை விட்டுப் பிரிந்ததினாலே துக்க சாகரத்தில் அமிழ்ந்திருக்க வேண்டியதென்று தோன்றினாலும், அவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவர்களுக்கு இந்தச் சந்தோஷம் எங்கிருந்து வந்தது? இவர்கள் சந்தோஷப்படக் காரணமென்ன?

தங்களால் மிகவுஞ் சிநேகிக்கப்பட்ட திவ்விய குரு தமது இராட்சியத்தில் ஜெயசீலராய்த் திரும்பப் பிரவேசித்ததினாலேயும், ஆதித் தாய் ஆதித் தகப்பன் செய்த பாவத்தால் யாவருக்கும் அடைக்கப்பட்டிருந்த மோட்சத்திலே இவர் பிரவேசித்து அதின் வாசலை யாவருக்குந் திறந்துவிட்டதினாலேயும், தமது மனுஷ சுபாவத்தை உந்நத பரமண்டலங்கள் வரைக்கும் உயர்த்தினதினாலே, நமது மனுஷ சுபாவத்தை இவர் மேன்மைப்படுத்தி அது தேவ சுபாவத்தைக் கண்டு தரிசிப்பதற்கு வல்லபம் பெறச் செய்ததினாலேயும், தங்களுக்கு மோட்சத்தில் இடம் முஸ்திப்புப் பண்ணவும் தமது பிதாவிடத்தில் தங்களுக்காக இரந்து மன்றாடவுந் தாம் போகிறதாக உறுதி சொன்னதினாலேயும், (அரு. 14) இந்த சந்தோஷம் அவர்களுக்கு உண்டாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது சொன்னதெல்லாம், இவ்வுற்சவ நாளில், நமது சந்தோஷத்துக்குங் காரணமாயிருப்பதாக! இதைக் கவனமாய்த் தியானித்து நமது புத்தியில் ஆழமாய் பதித்துக் கொள்வோமாக. இந்த நினைவு நம்மைவிட்டு ஒருபோதும் மாறாமலிருந்தால், நமது சந்தோஷத்தை ஒருவனும் பறித்துக்கொள்ளமாட்டானென்று இரட்சகர் திருவுளம் பற்றியிருக்கிறார் (அரு. 16). "நான் துன்பப்படும்போது, சந்தோஷமும் ஆறுதலும் நிறைந்தவனாயிருக்கிறேன். ஏனென்றால் இயேசுநாதரைப்பற்றி நாம் எவ்வளவு வருத்தப்படுவோமோ அவ்வளவு பரமண்டலத்தில் அவரோடே ஆனந்த சந்தோஷ மகிமை அடைவோம்" என்று (2 கொரி. 7-1.) அப்போஸ்தலரோடே நாமும் சகலவித இக்கட்டுகளின் மத்தியில் சொல்லக்கூடும்.

மனப்பற்றுதல்.—நான் பரலோகத்தை அண்ணாந்து பார்க்கும்போது, இப்பூலோகம் எவ்வளவு அசுத்தமாயிருக்கிறதென்று அர்ச். இஞ்ஞாசியாரைப்போலே சொல்லுவோமாக. நான் மரித்து கிறீஸ்துநாதருடன் கூட இருக்க ஆசைப்படுகிறேனென்று அர்ச். சின்னப்பரோடும் உரைப்போமாக (பிலி. 1).

டும். ஆனால் இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கு முந்திச் செய்யும் இந்த நவநாளின் விசேஷமேதென்றால், அப்போஸ்தலர்களால் துவக்கப்பட்டு அவர்கள் தாமே இதை முந்தமுந்தச் செய்ததினாலே இது அப்போஸ்தலர்கள் ஏற்பாடென்றும், வேறே விதத்தில் சொல்லவேணுமானால், இயேசுநாதர் தாமே இப்படிக் கூடியிருக்கக் கட்டளையிட்டதினாலே இது தேவ ஏற்பாடென்றுஞ் சொல்லப்படும். இந்த முகாந்திரத்தைப்பற்றி இதின் மேன்மை எத்தகையதென்றும், எவ்வளவு பத்தி சுறுசுறுப்போடு இதைச் செய்யத் தகுமென்றும் நாம் நிதானித்துக்கொள்ளலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதினிமித்தம் இந்நவநாள் சகல கிறீஸ்துவர்களுக்கும் பிரியமாய் இருக்கவேண்டியது. ஆனால் அப்போஸ்தலர்களோடே விசேஷ சம்பந்தம் உள்ள சந்நியாசிகளான நமக்கு விசேஷமாய் இது பிரியமாயிருக்கவேணும். அவர்களைப்போல நாமும் இயேசுநாதருடைய பட்டாளத்தில் பேர் கொடுத்திருக்கிறோம்; அவர்களைப்போல நாமும் இயேசுநாதரைப் பற்றி எல்லாத்தையும் துறந்துவிட்டோம்; கடைசியாய் கீழ்ப்படிதலைப் பின்பற்றித் தேவ மகிமையும் பிறர் ஈடேற்றமும் நம்மை அழைக்கும் இடங்களுக்கெல்லாம் போக எப்போதும் தயாராயிருப்பதினிமித்தம் இவ்வுலகத்தில் நாமும் அவர்களைப்போல் நிலையான வாசஸ்தலம் இல்லாதிருக்கிறோம்.

மனப்பற்றுதல்.— நல்ல மனதோடு இந்நவநாளைத் துவக்க நம்மைத் தூண்டுவோமாக. அப்போஸ்தலர்களோடே இந்நவநாளைச் செய்த தேவமாதாவின் அடைக்கலமாய்ப் போய், இதில் நாம் அடைய விரும்பும் பலனை இன்னதென்று குறித்துக்கொண்டு அதை அடைவோமென்று மிகுந்த நம்பிக்கையுள்ளவர்களாயிருப்போமாக.

பிரதிக்கினை.—இந்நவநாளில் அநுசரிக்கத்தக்க காரியங்களைத் தாமதமில்லாமல் திட்டப்படுத்தி, நவநாளில் முந்தின நாளாகிற இன்றைக்குத்தானே அவைகளைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றுவோமாக.

2-ம் பிரிவு

நவநாளின் கதியும் நன்மையும் இதை நன்றாய்ச் செய்கிறதற்கு இரண்டாம் முகாந்திரமாம்

தியானம்.—இரட்சகர் அப்போஸ்தலர்களுக்கு இந்நவநாளை ஏன் கட்டளையிட்டார்? இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களை அடைகிறதற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக. இந்த வரங்களை அவர்கள் அடையாவிட்டால், முன் இருந்ததுபோல எப்போதும் இருப்பார்கள் அதாவது தங்களுக்கும் பிறருக்கும் பிரயோசனமில்லாமல் தாங்கள் அழைக்கப்பட்ட மேலான அந்தஸ்தின் இருவித கதியையும் அடைய முற்றிலும் அசக்தராயிருப்பார்கள்; ஆனால் இந்த வரங்களைக்கொண்டு, எல்லாத்தையும் நிச்சயமாகவுஞ் சுளுவாகவும் அவர்கள் நிறைவேற்றக் கூடுமாயிருக்கும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்நவநாளை மகா பத்தி சுறுசுறுப்போடு நாம் செய்வதற்கு மேற்சொன்னதே முகாந்திரமாம். ஏனெனில், அப்போஸ்தலர்களுக்கு நாம் மேலானவர்களல்ல; அப்போஸ்தலத்துவ தொழிலை நாம் நிறைவேற்றவும், நமது பரிசுத்த அழைத்தலுக்குரிய உத்தம தனத்தை அடையவும், பிறர்மட்டில் வாக்கினாலுங் கிரிகையினாலும் வல்லவர்களாகவும், நாமும் அப்போஸ்தலர்களைப்போல், இஸ்பிரீத்து சாந்துவின் விசேஷ ஒத்தாசையில்லாவிடில், சக்தியற்றவர்களாயிருப்போம்.

மனப்பற்றுதல்.—நமது இருதயத்தின் நல்லாசையை நிறைவேற்ற நாம் பலவீனராயிருக்கிறதைக் கண்டு: என் சர்வேசுரா, நன்மை செய்ய எனக்கு ஆசை உண்டு; ஆனால் அதை நிறைவேற்றுகிறதற்கான வல்லமை என்னிடத்தில் இல்லையென்று அப்போஸ்தலரோடே நாமும் சொல்லவேணும் (உரோ. 7). ஆகையால் இஸ்பிரீத்து சாந்துவை நோக்கி: இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் என்னிடத்தில் எழுந்தருளிவாரும்; உமது தெய்வீகமின்றி மனிதரிடத்தில் குற்றமில்லாததொன்றுமில்லையென்று செபிப்போமாக.

பிரதிக்கினை.—இன்றையத்தினம் இந்த மனவல்லயச் செபத்தை அடிக்கடி சொல்வேணுக.

3-ம் பிரிவு

நவநாளின் அவசியமானது இதை நன்றாய்ச் செய்கிறதற்கு மூன்றும் முகாந்திரமாம்

தியானம்.—திவ்விய இரட்சகர் தாம் அப்போஸ்தலர்களுக்கு அனுப்பப்போகிறவரும் மனுஷ சுபாவத்துக்கு மேலான பலத்தினால் அவர்களை நிரப்பப்போகிறவருமான இஸ்பிரீத்து சாந்துவைக் குறித்து அவர்களோடே பேசுகையில், அவரை அடைய நல்ல ஆயத்தமாயிருக்கிறதற்கு மூன்றும் முகாந்திரமாகக் காண்பித்தது ஏதென்றால், உலக அக்கிரமமும் அவர்கள் காலத்திலுண்டான நிற்பாக்கியமும் அவர்களுக்கு வரப்போகிற ஆபத்துக்களுங் கலகமும் அவர்கள் அநுபவிக்கப்போகிற பொல்லாப்புக்களுமாம். இதைப் பற்றி அவர் சொன்னதாவது: "நீங்கள் உலகத்தின் எப்பக்கத்திலும் அலைக்கழிக்கப்படுவீர்கள். (அரு. 16); என் நாமத்தைப் பற்றி சகலராலும் பகைக்கப்படுவீர்கள். உங்களைச் சபைக்குப் புறம்பாக்குவார்கள். உங்களில் சிலரைக் கொலை செய்வார்கள். என் நாமத்தைப்பற்றி இதெல்லாம் உங்களுக்குச் செய்வார்களென்றார் (மத். 10; அரு. 16; லூக். 21).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அக்காலத்தில் நடந்த பொல்லாப்பைப்போல இக்காலத்திலும் இயேசுநாதருடைய திவ்விய வேதத்தின்பேரிலும் அதைக் காக்கிறவர்கள்பேரிலும் விசேஷமாய்ச் சந்நியாசிகள்பேரிலும் பகை வர்மத்தினால் துஷ்டர்கள் செய்துவருகிற பொல்லாப்பு கொஞ்சமல்ல. நம்மைச் சுற்றியிருக்கும் மோசநாசத்துக்குங் கணக்கில்லை. இப்பேர்க்கொத்த ஆபத்துக்குத் தப்பித்துக்கொள்ளவும், எண்ணிக்கையில்லாத சத்துராதிகளிடத்தில் நின்று ஜெயமடையவும் நமக்கு எவ்வளவோ விமரிசையுங் கெட்டியான புண்ணியமுஞ் சுபாவத்துக்கு மேற்பட்ட மனத்திடனும் வேண்டியது! இதெல்லாம் இஸ்

பிரீத்து சாந்துவின் வரங்களாகிற விமரிசை, திடன், பத்தி இவைகளிலன்றி வேறெங்கே அடைவோம்?

சம்பாஷணை.—இஸ்பிரீத்து சாந்துவானவர் எழுந்தருளி வருகிறதற்கு அப்போஸ்தலர்கள் ஆயத்தஞ்செய்து கொண்டிருந்த ஒன்பது நாளளவாக அவர்களுக்கு உயிர்போலிருந்த பரிசுத்த கன்னியாஸ்திரியோடே சம்பாஷணை செய்வோமாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கு முந்தின நவநாளின் 2-ம் நாள்—சனி

நவநாள் செய்யவேண்டிய விதம்

ஆயத்தச் சிந்தனை.—அசனசாலையில் தேவமாதாவோடுஞ் சீஷர்களோடுங் கூடியிருக்கிற அப்போஸ்தலர்கள் இஸ்பிரீத்து சாந்துவின் வருகைக்கு ஆயத்தஞ் செய்துகொண்டிருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேணுக.

தியானச் சேபம்.—அவர்களை நாம் கண்டுபாவிக்கத் தக்கதாக அவர்கள் எவ்விதமாய் ஆயத்தஞ் செய்கிறார்களென்று நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதங் கேட்பேணுக.

முதல் பிரிவு

அப்போஸ்தலர்களுடைய ஏகாந்தமும் அடக்க ஒடுக்கமும்

தியானம்.—"சர்வேசுரன் இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களை நமக்குத் திரளாய்க் கொடுக்க ஆசையாயிருந்தாலும், அவைகளை நாம் அடைகிறதற்குத் தகுந்த ஆயத்தஞ் செய்யவேண்டும் என்பது அவரது விருப்பம்" என்று அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருக்கிறார். நாம் அதற்கு ஆயத்தஞ்செய்வது எப்படி? இதைப்பற்றி நேர்த்தியான பிரசங்கங்களைப்பார்க்க, அப்போஸ்தலர்கள் காண்பித்த மாதிரிகை நமக்கு நன்றாய்ப் படிப்பிக்கும். முந்தமுந்த,

உலக சஞ்சாரமில்லாததும் உயர்ந்ததுமான இராப்போசன சாலையில் இவர்கள் கூடியிருக்கிறார்கள். இதில் இவர்கள் அடக்கவொடுக்கமாயிருந்து பத்திக்கடுத்தவைகளைக் குறித்துப் பேசும் நேரந்தவிர, மற்றநேரமெல்லாம் மவுனமாயுந் தங்கள்பேரில் விழிப்புள்ளவர்களாயுமிருந்து, இயேசுநாதர் திருவாய்மலர்ந்து தங்களுக்குப் படிப்பித்த சகல காரியங்களின்பேரிலும் விசேஷமாய்த் தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட இஸ்பிரீத்துசாந்துவின் இலட்சணங்களின் பேரிலும் ஆச்சரியமான அவருடைய அநுக்கிரகங்களின்பேரிலுந் தியானஞ்செய்துகொண்டு வருகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆகையால் இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களைத் திரளாய் நான் அடைய ஆசைப்படுவேனாகில், இந்நவநாளில் மற்றக் காலங்களைப்பார்க்க அதிக உள்ளடக்கமாயிருக்கவும் ஒழுங்கு, மவுனம், அடக்கவொடுக்கமாகிய இவைகளை நன்றாய் அநுசரிக்கவும், இருதய சமாதானத்தையும் இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களையும் அடைகிறதற்கு விசேஷ விக்கினமாகிற சகலவித பாவங்களையுந் தள்ளிப்போடும்படி என் பஞ்சேந்திரியங்களின்மட்டிலும் கிரமமற்ற என் இருதய ஆசைகளின்மட்டிலும் மகா எச்சரிக்கையாயிருக்கவும் பிரயாசப்படவேண்டியது அவசியம்.

மனப்பற்றுதல்.—உன்னிடத்தில் ஏறக்குறைய வழக்கமாயிருக்கிற பராக்குகளின் முகாந்தரங்களை நன்றாய் அறிகிறதற்கு வேண்டிய வரப்பிரசாதங்களையும் அவைகளைத் தள்ளிப்போடுகிறதற்கு அவசரமான தைரியத்தையுங்கெஞ்சிக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—இந்த நவநாள் காலத்திலே நீ உள்ளடக்கத்தின் பேரிலும் அதைச் சார்ந்தவைகளின் பேரிலுந் தனி ஆத்துமசோதனை செய்.

2-ம் பிரிவு

அப்போஸ்தலர்களுடைய செபமும் அவர்களுடைய ஒன்றிப்பும்

தியானம்.—அப்போஸ்தலர்கள் தியானத்திலிருக்கிறதுமல்லாமல், "என் பிதாவை மன்றாடுகிறவர்களுக்கு

அவர் சகல நன்மைக்குங் காரணரான இஸ்பிரீத்து சாந்துவை அனுப்புவார்" என்று தங்கள் திவ்விய குரு சொன்னதை நினைத்துக்கொண்டு இடைவிடாமல் நிலைமையோடு செபம்பண்ணிக்கொண்டு வருகிறார்கள் (லூக். 11). இவர்களெல்லாரும் பொதுவாய் ஒன்றித்து, ஒரே சகாயத்தை அடைகிறதற்காகப் பரலோகத்தை நோக்கி ஒரே விதமாய் ஒரே குரலொலிபோல் மன்றாடுவதினால் இவர்கள் மன்றாட்டுச் சர்வேசுரனுக்கு மகா பிரியமுள்ளதும் வெகு பலனுள்ளதாயுமிருந்தது. இப்படி ஒரு மனமாய் ஒன்றித்து செபிப்பதின் பிரயோசனம் இயேசுநாதரே படிப்பித்தது. அவர் சொன்னதாவது: "உங்களுக்குள் இரண்டுபேர் பூவுலகில் ஒருமனப்பட்டிருப்பார்களாகில், அவர்கள் மன்றாடிக்கேட்கும் எந்தெந்தக் காரியமும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவினால் அவர்களுக்குக் கொடுக்கப்படுமென்று உங்களுக்கு உறுதியாய்ச் சொல்லுகிறேன்" (மத். 18).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமும் இந்த நவநாளிலே செபத்தியானத்தின்பேரில் பற்றுதலாயிருந்து வழக்கமாய்ச் செய்யுஞ் செபங்களை அதிக சீராய்ச் செய்ய பிரயாசப்படுகிறதுமன்றி இஸ்பிரீத்து சாந்துவை நோக்கி வேறே சில விசேஷ செபங்களைச் சொல்லவேண்டியது. அப்போஸ்தலர்களைப்போல நாம் எல்லாரும் ஒரு மனமாய் ஒன்றித்து ஒரே மன்றாட்டைக் கேட்கிறதினாலே, இந்த மன்றாட்டுச் சர்வேசுரனுக்கு அதிக பிரியமாயிருக்குமென்பதற்கும் அவர் அதற்குக் காது கொடுப்பாரென்பதற்குஞ் சந்தேகமில்லை. "இவர்கள் எல்லாரும் ஒருமனப்பட்டுச் செபத்தில் நிலைத்திருந்தார்கள்" (அப். நட. 1.) என்று அர்ச். லூக்காஸ் அவ்விடத்திற் கூடியிருந்தவர்களைப் பற்றிச் சொன்னதை நமது மடத்தில் இருக்கிறவர்களைக் குறித்துஞ் சொல்லலாம்.

மனப்பற்றுதல்.—செபத்தின் பலனைக் குறித்துச் சுவிசேஷகர்கள் நமக்குப் படிப்பித்ததெல்லாத்திலும் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் என்னிடத்தில் திடப்படுத்தச் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடுவேனாக.

பிரதிக்கினை.—இன்றைக்கும் இந்த நவநாள்முழுதும் இஸ்பிரீத்து சாந்துவை நோக்கிச் சில விசேஷ செபங்களைச் செபிக்கிறதுமல்லாமல் இதை மறந்துபோகாதிருக்க ஒரு நேரத்தைக் குறித்துக்கொள்ளவேணும்.

3-ம் பிரிவு

அப்போஸ்தலர்கள் தேவமாதாவின் அடைக்கலத்தைத் தேடினார்கள்

தியானம்.—இயேசுநாதர் இருதயபத்தின்மட்டில் தேவமாதாவுக்குண்டான அதிகாரத்தை அப்போஸ்தலர்கள் நன்றாய் அறிந்திருக்கிறதினாலே, செபம் பண்ணும்போது அவளிடத்தில் விளங்கின வாக்குக்கெட்டாத பத்தி மிகுதியைத் தாங்களுங் கண்டுபாவிக்கிறதுமன்றித் தங்கள் துர்ப்பலத்துக்கு உதவிசெய்து தமது திருக்குமாரனிடத்தில் தங்கள் தாழ்மையான விண்ணப்பத்தை அவள்தானே சமர்ப்பிக்கவேணுமென்று அவளைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறார்கள். இதைப்பற்றி, இயேசுநாதருடைய தாயாரோடு ஒருமனப்பட்டு செபத்திலே நிலைத்திருந்தார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது (அப். நடபடி. 1). ஆகையால் மரியாயின் வல்லமையுள்ள மன்றாட்டினாலே இஸ்பிரீத்து சாந்துவின் வரங்கள், குறிக்கப்பட்ட காலத்துக்கு முந்தியே திரளாய் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதென்று அநேகம் வேதபாரகர் சொல்லியிருக்கிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பரிசுத்த கன்னியாஸ்திரியின் மன்றாட்டு நமக்குங் கிடைக்கக் கேட்போமாக. குறைவாயிருக்கிற நமது பிரயாசத்துக்கு அவள் உதவிசெய்யவும் நம்மோடும் நமது நடுவிலும் அவள் இருந்து, தமது திருக்குமாரனிடத்தில் நமது ஆசை மன்றாட்டுக்களைச் சமர்ப்பிக்கவும் அவளை வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இஸ்பிரீத்து சாந்துவானவர் எழுந்தருளி வந்த திருநாளன்று நம்மில் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் கொடுக்கச் சித்தமாயிருக்கிற விசேஷ வரங்களில் ஒன்றையாகிலும் நாம் இழந்து போகாதிருக்கத்தக்கதாக, அவருடைய அநுக்கிரகத்தை நமக்கு அவள் அடையக் கேட்போமாக.

சம்பாஷணை.—“அர்ச். மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, இயேசுநாதர் கொடுத்த வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாகும்படி, இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களை அடைவதற்குத் தகுந்தபிரகாரம் ஆயத்தம் செய்கிறவர்களுக்கு அவர் செய்திருக்கிற மகத்தான வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாகும்படி எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்” என்கிற இந்தச் செபத்தை விவரித்துச் சொல்வோமாக.

இஸ்பிரீத்து சாந்து திருநாளுக்கு முந்தின நவநாளின் 3-ம் நாள்—ஞாயிறு

இன்றைக்கு வாசிக்குஞ் சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறதுபோல, இயேசுநாதரைப்பற்றி இஸ்பிரீத்து சாந்துவானவராலும் அப்போஸ்தலர்களாலுஞ் சொல்லப்பட்ட சாட்சி

ஆயத்தச் சிந்தனை.—சத்திய சுரூபியாகிய இஸ்பிரீத்து சாந்துவானவர் வரும்போது, என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுவார்; நீங்களும் என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுவீர்களென்று அப்போஸ்தலர்களுக்கு இயேசுநாதர் வசனிக்கிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக் கொள்வாயாக (அரு. 15).

தியானச் செபம்.—இஸ்பிரீத்து சாந்துவின் பரம ரகசியமான அநுக்கிரகங்களின்பேரில் மட்டில்லாத நம்பிக்கையைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

இஸ்பிரீத்து சாந்துவானவர் இயேசுநாதரைக் குறித்து எப்படிச் சாட்சி சொன்னாரென்பதின்பேரில்

தியானம்.—இஸ்பிரீத்து சாந்துவானவர் இயேசுநாதரைக் குறித்துப் பிரபலியமான சாட்சி கொடுத்திருக்கிறார். அவர் தேவ குமாரனென்றும் மனுக்குலத்தின் இரட்சகரென்றுஞ் சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்கிறவரென்றும் அப்போஸ்தலர்களைக் கொண்டு உலகத்துக்கு அறிவித்திருக்கிறார். உலக ஞானிகளின் ஆங்காரத்தைக் கலங்கடித்திருக்கிறார்; அவர்கள் சிலுவையில் அறையுண்ட தேவனை ஆராதிக்கவும் தங்கள் சரீரத்தையும் அதின் ஆசாபாசங்களையுந் தாங்கள்தானே உபாதிக்கவும் செய்திருக்கிறார்; சுவிசேஷம் பரம்ப உலக ராசாக்கள் விக்கினஞ் செய்தாலும், இயேசுநாதருடைய போதகம் வெற்றியடையச் செய்திருக்கிறார். ஸ்திரீகளுக்குங் குழந்தைகளுக்கும் முதலாய்த் தைரியத்தை வருவித்து மரணத்தைச் சட்டை பண்ணாமலிருக்கவும் இயேசுநாதரைப்பற்றி மகா நிஷ்டூர வேதனைகளையெல்லாம் பொறுமையோடு அநுபவிக்கவுஞ் செய்திருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் தாம் மோக்ஷத்துக்கு ஆரோகணமானபின், தமது திருச்சபையை நடப்பிக்கவேண்டிய இஸ்பிரீத்து சாந்துவானவரின் அற்புதமான இந்தக் கிரிகைகளையெல்லாம் முன்னே அறிவித்தார். அவ்வண்ணமே இஸ்பிரீத்து சாந்துவானவரை அனுப்புவோமென்று பிரசித்தமாய்த் தமது அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்து, அவரின்றி உங்களால் யாதொரு பலத்த காரியமுஞ் செய்யக்கூடாதென்றும் ஆனால் அவரோடுகூட அற்புதவிதமாய் மனிதர்களைத் திருப்பி அர்ச்சிக்கப் பண்ணுவீர்களென்றுந் திருவுளம்பற்றியிருந்தார். அப்படியிருந்தாலும், அவரைப் பெற்றுக்கொள்ளுகிறதற்கு மிகுந்த பத்தியோடே இடைவிடாமல் அவர்கள் செபம் பண்ணவேணுமென்று சித்தமானார். நாமும் இவ்விதம் செய்தால்தான், ஆத்துமாக்களுக்கு யாதொரு

நன்மை புரியக்கூடுமென்ற நம்பிக்கை கொள்ளலாம். அர்ச்சிக்கிறவரான இஸ்பிரீத்து சாந்துவின் ஒத்தாசையில்லாமல் நமது பிரயாசங்களும் உபாயங்களும் பயனற்றுப்போகும் அல்லது வெளிக்கு மாத்திரம் பலன் கொடுப்பதாகத் தோன்றும் என்பது நமது அநுபவத்தால் கண்டறிந்த விஷயம். இதினிமித்தமே, யாதொரு முக்கியமான காரியத்தை ஆரம்பிப்பதற்கு முந்தியும், ஒவ்வொரு நாளின் பிரதான முயற்சிகளைச் செய்வதற்கு முந்தியும், இஸ்பிரீத்து சாந்துவை நோக்கி மன்றாடுவது திருச்சபையிலும் சந்நியாச மடங்களிலும் தொன்றுதொட்ட வழக்கம். நீ உனது பலவீனத்தை உணர்ந்து இந்த செபத்தைத் தகுந்த பத்தியோடு சொல்லுகிறாயாவென்று பார்.

மனப்பற்றுதல்.—நான் இப்போது தியானித்துவந்த சத்தியங்களின் பேரில் விசுவாச முயற்சி செய்து, நான் செய்கிற செபங்களிலேயும் மற்றக் கிரிகைகளிலேயும் உண்டான எண்ணிக்கையில்லாத குற்றங் குறைகளை நினைத்து என்னைத் தாழ்த்திக்கொள்வேனாக.

பிரதிக்கினை—நாம் செய்யும் பிரதான கிரிகைகளுக்கு முந்தி இஸ்பிரீத்து சாந்துவை நோக்கிச் செபிக்கவேண்டிய செபங்களை விசேஷ பத்தியோடே செபிப்போமாக.

2-ம் பிரிவு

இயேசுநாதரைக் குறித்து அப்போஸ்தலர்கள் எவ்விதமாய்ச் சாட்சி சொன்னார்களென்பதின்பேரில்

தியானம்.—“இஸ்பிரீத்து சாந்துவானவர் என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுவார்” என்று இயேசுநாதர் சொன்னபின், உடனே இன்னமும் அவர் உரைத்ததாவது: “நீங்கள் யூதேயா நாட்டிலும் பூமியின் கடைசி எல்லை வரையிலும் என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுவீர்கள்” என்றார். மேன்மையும் மகத்துவமும் உள்ள இந்த அலுவலை அப்போஸ்தலர்கள் என்னவிதமாய் நிறைவேற்றினார்களென்று நாம் அறிந்திருக்கிறோம். மனுஷர்களாலும்

பசாசுகளாலும் விக்கினம் வந்தாலும், இவர்கள் உலகத்தின் எத்திசையிலுந் தங்கள் திவ்விய குருவை அறிவித்து அவரை ஆராதிக்கச் செய்தார்கள்; பொய்த் தேவர்களுடைய கோவில்களை இடித்து அவைகளிலுள்ள விக்கிரகங்களையும் உடைத்தெறிந்தார்கள்; உலகத்தின் தோற்றத்தை மாற்றி அஞ்ஞானத்தை நிர்மூலமாக்கி, 1900 வருஷத்துக்குமேலாய் அசையாதிருக்கிற இயேசுநாதரின் திருச்சபையை ஸ்தாபித்துச் சனங்களைக் கிறீஸ்துவர்களாக்கினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த அற்புதங்களையெல்லாம் செய்தவர்கள் பலவீனர்களும் படிப்பில்லாதவர்களுமான பன்னிரு எளிய செம்படவரல்லவோ? தமது திருச்சபையின் அஸ்திவாரத்தை ஸ்தாபிக்கத் தேவசுதனானவர் இவ்வளவு பலவீனமான எத்தனங்களை உதவிக்கொண்ட கருத்து யாது? முந்தமுந்த இது மனிதரால் ஆன ஏற்பாடல்ல, தேவ ஏற்பாடென்று சகலரும் தெளிவாய் அறிந்து இதற்குக் கீழ்ப்படியவேணுமென்று எண்பிக்கவும்; 2-வது, நமது பலவீனமும் வறுமையும் அபாத்திரமும், சர்வேசுரன் மகிமைக்காகவும் ஆத்தும ஈடேற்றத்திற்காகவும் பலத்த காரியத்தைத் தொடங்கி நடத்த நமக்கு விக்கினமாயிராதென்று காண்பிக்கவும் இயேசுநாதர் இவ்விதம் செய்தார்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுடைய சர்வ வல்லப உதவி நமக்கு இருக்குந்தனையும், நன்மையானதெல்லாந் தொடர்ந்து செய்ய வல்லவர்களாயிருக்கிறோமென்று நாம் கண்டுபிடிக்கச் செய்து சர்வேசுரன் நமக்கு மனத்தைரியத்தை அளிக்கவேணுமென்று மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—என்னைத் திடப்படுத்துகிறவரைக் கொண்டு என்னால் சகலமுங் கூடுமென்று அப்போஸ்தலர் சொன்ன வார்த்தையைச் சொல்லி என்னைத் தைரியப்படுத்துவேனாக (பிலி. 4).

3-ம் பிரிவு

நாம் இயேசுநாதரைக்குறித்து எப்படி சாட்சி சொல்லக்கூடும்” என்பதின்பேரில்

தியானம்.—இயேசுநாதருடைய மகிமைக்காகப் பிரயாசப்படுகிறதும் சகலவித வழிகளைக் கையாடி அவரை யாவரும் அறியவும் சிநேகிக்கவும் அவருக்கு ஊழியஞ் செய்யவும் வருந்துகிறதும் இயேசுநாதரைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறதாமே. இப்படிச் செய்கிற எவனும் உலகத்திலுள்ள மகா மேன்மையும் பரிசுத்தமுமான காரியத்துக்கு இஸ்பிரீத்து சாந்துவோடும் அப்போஸ்தலர்களோடுங்கூட உழைத்துவருகிறான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் படையில் உட்பட்டிருக்கிற நாம் இந்தக் காரியம் ஜெயமடைய விசேஷமாய்ப் பிரயாசப்படவேணும். குருத்துவமும் வேதபோதகத் தொழிலும் இல்லாமலே நாம் நமது வாக்கு, கிரிகை, செபம், நன்மாதிரிகையைக் கொண்டு இது அநுகூலம்பெறச் செய்யலாம். இப்படி நாம் செய்து வருகிறோமோ? இதிலே நம்மிடத்தில் குறைவாயிருக்கிறதென்ன? அதிக சுறுசுறுப்போடு அந்தக் குறையைத் திருத்திக்கொள்வோமாக.

சம்பாஷணை.—இஸ்பிரீத்து சாந்துவானவரோடு சம்பாஷணை செய்வோமாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கு முந்தின நவநாளின் 4-ம் நாள்— திங்கள்

அப்போஸ்தலர்களும் சீஷர்களும் செபத்துக்கு மாதிரிகையாயிருக்கிறார்கள்

ஆயத்தச் சிந்தனை.—அப்போஸ்தலர்களும் சீஷர்களும் இராப்போசனசாலையில் செபத் தியானம் செய்துகொண்டிருந்ததைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—அவர்களைப்போலே நானும் நன்றாய்ச் செபம்பண்ண வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

அப்போஸ்தலர்கள் விசுவாசத்தோடும் வணக்கத்தோடுஞ் செபம் பண்ணுகிறார்கள்

தியானம்.—அசனசாலையில் இயேசுநாதருடைய தாயாரைச் சுற்றியிருக்கிற அப்போஸ்தலர்களுஞ் சீஷர்களும் செய்கிற பிரதான அலுவல் என்ன? அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறதுபோல, செபம் செய்கிறார்கள். எப்படி செபம் பண்ணுகிறார்கள்? மகா விசுவாசத்தோடுஞ் சர்வேசுரன் சமுகத்திலே இருக்கிறோமென்கிற கருத்தோடும், உள்ளும் புறம்பும் மிகுந்த சங்கையோடுஞ் செபம் பண்ணிக்கொண்டுவருகிறார்கள். இயேசுநாதர் மோட்சத்துக்கு ஆரோகணமான நாள் முதல் அவர்கள் கண்களுக்குக் காணப்படாதவராயிருக்கிறார். அவர் மனுஷனை மட்டும் அவர்களைவிட்டு வெகு துலையிலிருக்கிறார். ஆகிலும் அவர். சர்வேசுரனை மட்டுந் தங்கள் நடுவிலிருந்து தங்களைப் பார்க்கிறாரென்றுந் தங்கள் விண்ணப்பத்தைக் கேட்கிறாரென்றுங் கெட்டியாய் விசுவசித்திருக்கிறார்கள். இதினால் அவர்களிடத்திலே மிகுந்த அடக்கவொடுக்கமும் அவர்கள் வாயினின்று, சரியாய்ச் சொல்லவேணுமாகில் அவர்கள் இருதயத்தினின்று, புறப்பட்ட வார்த்தைகளின் மீது பற்றுதலுக்குரிய கவனமும் இருந்தன.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது செபத்திலும் இந்த இலட்சணங்களே விளங்கவேண்டும். அதில் உயிருள்ள விசுவாசம் துலங்கவேண்டும்; சர்வேசுரன் நம்மைக் காண்கிறாரென்றும் கேட்கிறாரென்றும், நமது உள்ளிந்திரியத்தில் பிரவேசித்து, எவ்வித இருதய பற்றுதலோடு செபம்பண்ணுகிறோமென்பதைப் பார்க்கிறாரென்றும் நாம் பூரணமாய் உணர்வதாக விளங்கவேண்டும். நான் செபம் பண்ணும்போது, இந்த விசுவாசம் என்னிடத்தில் இருக்கின்றதோ? இருக்குமாகில், நான் எப்போதும்

சங்கை மரியாதையாயிருப்பேனே, என் உள்ளத்தில் நின்று புறப்படும் வார்த்தையின்பேரில் என் புத்தி கவனமாயிருக்குமே. வாஸ்தவத்திலும், நாம் யாரிடம் பேசுகிறோமோ, அந்த ஆள்மட்டில் நமக்குள்ள மதிப்புக்குத் தகுந்தாப்போல், சங்கையும் கவனமும் இயல்பாகவே உண்டாகும். ஆகையால், நான் தகுந்த சங்கையும் கவனமுமின்றி வேண்டிக்கொள்வேனாகில், என் செபத்தில் விசுவாசம் குறைவாயிருக்கிறதென்று அர்த்தமாகிறது: இது நிச்சயம். என் செபத்தைக் குறித்து நான் செய்யவேண்டிய தீர்மானம் என்ன?

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுடைய மட்டற்ற மகிமைப் பிரதாபத்துக்குமுன்பாகச் சங்கையும் கவனமுமில்லாமல் அநேகந்தரம் செபம் பண்ணினதை நினைத்து என்னை மிகவும் தாழ்த்தி உத்தம மனஸ்தாபப்பட்டுப் பொறுத்தல் கேட்பேனாக.

பிரதிக்கினை.—செபத்தியானம் செய்கிறதற்கு முந்தி, நான் யாருடைய சமுகத்தில் இருக்கப்போகிறேன், என்னத்துக்காகப்போகிறேனென்று என்னை வினவிக்கேட்பேனாக.

2-ம் பிரிவு

தாழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் அவர்கள் செபம் பண்ணுகிறார்கள்

தியானம்.—அப்போஸ்தலர்களுஞ் சீஷர்களுஞ் செய்கிற செபம் அத்தியந்த தாழ்ச்சியும் முழு நம்பிக்கையும் பொருந்தினது. தாங்கள் முந்திச் செய்த குற்றங் குறைகளை நினைக்கிறதினாலேயும், தங்கள் பலவீனத்தை உணர்ந்து உலகமெங்கும் சுவிசேஷத்தை அறிவித்துப் பரம்பச்செய்யும்வண்ணம் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட மகத்தான அலுவலை நிறைவேற்றத் தங்களுக்குச் சக்தி இல்லையென்று நன்றாய் அறிந்திருக்கிறதினாலேயும் இந்தத் தாழ்ச்சி உண்டாயிற்று. ஆயினும், அவர்கள் தங்களுக்குக் குறைவா

யிருப்பதெல்லாம் செபத்தினால் தப்பாமல் அடையக்கூடுமென்று இரட்சகர் சொல்லியிருந்ததினால், தங்கள் சக்தியின்மையை உணர்வதற்களவாகச் செபத்தினால் பலன் கிடைக்குமென்று நம்புகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—"தன்னைத் தாழ்த்திக் கொள்ளுகிறவனுடைய மன்றாட்டு மேகங்களைத்தானே ஊடுருவும்" என்று எக்கிளேசியாஸ்திக்குஸ் என்னும் ஆகமத்தின் 35-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கின்றது. நீ செய்த செபம், தாழ்ச்சியில்லாததைப்பற்றி, அநேகம் விசை பலனற்றதாயிருந்ததில்லையோ? ஆகிலும் நீ முன் செய்த பாவங்களுந் தினந்தினம் கட்டிக்கொள்ளுகிற குற்றங் குறைகளும் பிற்காலத்தின் நிச்சயமின்மையும் உன்னிடத்தில் அத்தியந்த தாழ்ச்சியும் பரிசுத்த பயமும் இருக்கவேண்டியதென்று நினைப்பூட்டுகின்றனவே. இந்த நினைவு எப்போதும் உன் புத்தியிலிருந்தால், உத்தம மனஸ்தாபமுந் தாழ்ச்சியுமுள்ள இருதயத்தோடு நீ எப்போதும் செபம் பண்ணுவாயல்லவோ? உனது துர்ப்பலன்களின் மீதுள்ள தாழ்ச்சிக்குரிய இந்த எண்ணம், உன் நம்பிக்கையையும் பற்றுதலையும் அதிகரித்து, உன் செபத்தையும் சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமுள்ளதாக்கும்.

மனப்பற்றுதல்.—"என்மேலே நோக்கமாகி எனக்கிரங்கும்; ஏனெனில் நான் தனித்தவனுஞ் சிறுமைப்பட்டவனுமாயிருக்கிறேன்" என்று தாழ்ச்சியும் பத்தியும் நிறைந்த தாவீது இராசாவோடே சொல்லுவேனாக (24-ம் சங்கீதம்).

பிரதிக்கினை.—நான் செபஞ்செய்யத் துவக்குமுன்னே என் துர்ப்பலத்தையும் சக்தியின்மையையும் நினைத்துச் சர்வேசுரன் சமுகத்திலே என்னைத் தாழ்த்தி: தேவரீர் சமுகத்திலே நிற்க நான் முழுதும் அபாத்திரவானாயிருக்கிறேனென்று ஒரு மகாத்துமா அடிக்கடி சொல்லிவந்த இந்த நேர்த்தியான வசனத்தை நானும் அடிக்கடி, விசேஷமாய்த் தேவாலயத்தில் பிரவேசிக்கும்போது, சொல்லுவேனாக.

3-ம் பிரிவு

பொறுமையோடும் நிலைமையோடும் அவர்கள் செபம் பண்ணுகிறார்கள்

தியானம்.—தங்களுக்கு இஸ்பிரீத்து சாந்துவானவரை அனுப்ப ஆண்டவருக்குச் சித்தமான நேரம் எதுவென்று அறிவதைப்பற்றிக் கவலை கொள்ளாமல், அப்போஸ்தலர்கள் தேவசித்தத்துக்கு முழுதும் அமைந்த மனதுடன் செபம் பண்ணுகிறார்கள். தங்களுடைய தாழ்மையான மன்றாட்டுக்கு இஸ்பிரீத்து சாந்துவானவர் அளிக்கப்படுவாரென்று அவர்களுக்குத் தெரியும்; அவர் வருவதாக வாக்களிக்கப்பட்டிருந்தது. ஆகிலும் அத்தகைய நன்மையைச் சுகிக்கும் நாள் என்றையத்தினம் என்பதை அறியாதவர்களாய், ஆண்டவர் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றச் சித்தமாகும் பரியந்தம் செபத்தை விடாதிருக்கத் தீர்மானித்து, இடைவிடாமல் அதைத் தொடர்ந்து செய்கிறார்கள். அவர்களுடைய உறுதிக்குச் சம்பாவனை கிடைத்தது: பத்தாம் நாள் இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களைப் பரிபூரணமாய் எல்லாரும் அடைந்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ செபிக்கிறது இவ்விதம்தானா? இத்தனை நாட்களுக்குள்ளாக, ஆண்டவர் உன் மன்றாட்டைக் கேட்டருளவேண்டுமென்றாற்போல், தவணை வைக்கிறதில்லையா? கேட்டவுடனே, உன் மன்றாட்டு கிடைக்கவில்லையென்று, மன அமைதியும் உறுதியுமில்லாமல், செபத்தை நிறுத்தி விடுகிறாயே. இதுவே சிலவேளை உன் மன்றாட்டு பலியாமற் போனதற்குப் பிரதான முகாந்தரமாயிருக்கலாம். இது யாருடைய தப்பிதம்?

சம்பாஷணை.—அப்போஸ்தலர்களோடே சம்பாஷணை செய். நீ நன்றாய்ச் செபம் பண்ணுவதற்கான வரப்பிரசாதம் அடையவும் இஸ்பிரீத்து சாந்துவானவர் கொடுக்குங் கொடைகளில் உனக்கு மிகுந்த பங்கு கிடைக்கவும் முக்கியமான இந்த நவநாளில் உன்னோடு அவர்களுஞ் சேர்ந்து மன்றாடக் கேட்பாயாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கு முந்தின நவநாளின் 5-ம் நாள் செவ்வாய்

துரோகியான யூதாசுக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்கிறார்கள்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். இராயப்பர் அசனசாலையிலே கூடியிருக்கிறவர்களுக்குப் பிரசங்கிக்கிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—தேவ அழைத்தலை எப்பொழுதுங் காப்பாற்ற வரப்பிரசாதங் கேட்பாயாக.

தியானம்.—இஸ்பிரீத்து சாந்துவானவர் எழுந்தருளி வருகிறதற்கு, அப்போஸ்தலர்கள் ஒடுக்கத்திலுஞ் செபத்திலும் நிலைமையாயிருந்து ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கையில் தங்கள் கடமைகளை அலட்சியம் செய்யவில்லை. ஆண்டவர் தமது உத்தானத்துக்கும் போதகத்துக்கும் உலகமெங்கும் சாட்சிகளாயிருக்கும்படி, தமது சீஷர்களுக்குள் பன்னிருவரை அப்போஸ்தலராகத் தெரிந்திருக்க, அவர்களில் ஒருவன் யூதாஸ் தவறிப்போனது, அவருடைய கோரிக்கையைக் குலைத்து விட்டாற்போலிருந்தது. ஆகிலும் மனுஷர்களுடைய அக்கிரமம் ஆண்டவருடைய கருத்தைக் கெடுக்கமுடியாது. ஆகையால் அப்போஸ்தல சபைக்குத் தலைமையாயிருக்கிற அர்ச். இராயப்பர் சர்வேசுரனால் ஏவப்பட்டுக் கூடியிருந்த சகோதரர் நடுவிலெழுந்திருந்து சொன்னதாவது: சகோதரர்களே, யூதாஸ் நான்றுகொண்டதினாலே, "அவனுடைய மேற்றிராணிபட்டத்தை வேறொருவன் பெறுவானாக" என்று சங்கீத ஆகமத்தில் எழுதப்பட்டிருக்கின்ற வண்ணம் நமக்குள் எப்போதுஞ் சஞ்சரித்து நம்மோடு ஒருமித்திருந்த இம்மனிதர்களிலேதானே ஒருவன் அவனுக்குப் பதிலாக இயேசுநாதருடைய உத்தானத்துக்கு நம்மோடே சாட்சியாக நியமிக்கப்பட வேண்டுமென்றார் (அப். நட. 1—சங்கீதம் 108). இராயப்பர் சொன்னதைச் சபையார் எல்லாரும் அங்கீகரித்துச் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்டவர் இன்னாரென்று அறிய முயற்சிபண்ணினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஒரு சந்நியாசி தன் அந்தஸ்தை விட்டு விலகிப்போகச் சோதனை நேரிடுங்கால், தான் வெளியேறி விடுவதினால் தேவ காரியத்துக்கு அல்லது தான் இருக்கிற சபைக்கு நஷ்டம் விளையுமென்கிற மதிகெட்ட ஆங்கார நினைவுக்கு இடம் கொடுக்க வேண்டாம். அவ்விதம் நினைத்தால், மெத்தவும் மோசம் போவான். நாம் இவ்விடத்தில் காண்கிறதுபோல், தேவ பராமரிக்கையானது தவறிப்போனவனுக்குப் பதிலாய் நல்லவனான வேறொருவனைத் தெரிந்துகொள்ளும். அவன் மாத்திரமே நஷ்டம் அடைவான்; அவன் இழந்துபோன முடியை வேறொருவன் தரித்துக்கொள்வான். எனக்குக் கிடைத்த தேவ அழைத்தலும் தவறிப்போன வேறொருவனுக்குப்பதிலாகக் கிடைத்ததாயிருக்கலாம்.

மனப்பற்றுதல்.—ஆ! என் திவ்விய இரட்சகரே, இப்படி என்னை விசேஷ விதமாய்த் தெரிந்துகொண்டதினாலே உமக்கு எவ்விதமாய் நன்றியறிந்திருப்பேன்? மேலும் நானுந் தவறி விழாதிருக்கும்படி எவ்வளவு எச்சரிக்கையோடு என்னை நம்பாமலிருக்கவேண்டியது.

பிரதிக்கினை.—வேறொருவன் உன் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளாதபடி உனக்குள்ளதை எச்சரிக்கையாய்க் காப்பாற்றிக்கொள்ளென்று ஆண்டவர் அர்ச். அருளப்பரைக் கொண்டு பிலாதெல்பியாவின் மேற்றிராணியாருக்குச் சொல்லி எச்சரித்ததை அடிக்கடி நினைத்துக்கொள்வேனாக (காட்சி 3). இதைப்பற்றி என் அந்தஸ்தின் வரத்தை இழந்துபோகக் காரணமாயிருக்கக்கூடிய பெரிய குற்றங்களில் நான் விழாவண்ணம், சொற்பக் குற்றங்களை முதலாய் விலக்கிப்போடவேணும்.

2-ம் பிரிவு

கூடியிருந்த சபையார் பர்சபாஸ், மத்தியாஸென்னும் இருவரைக் குறிக்கிறார்கள்

தியானம்.—சபையாரில் பாதிப்பேர் நீதிமான் என்னும் காரணப் பெயருள்ள பர்சபா என்னப்பட்ட சூசையையும், பாதிப்பேர் மத்தியாசையுங் குறிப்பிட்டதினால்,

இவ்விருவரில் ஒருவரைத் தெரிந்துகொள்வது சிக்கலான விஷயமாயிற்று; இதினிமித்தம் அவர்களது ஒற்றுமைக்கு மோசம் வரும்போலுந் தோன்றிற்று. இந்த சந்தேகத்தைத் தீர்த்து, அபிப்பிராய பேதத்துக்கு முடிவுகட்டும்படியாக செபத்தின் உதவியைத் தேடினார்கள்; அதன்பின், சீட்டுப்போட்டுத் தேவசித்தத்தைத் தீர்மானித்தார்கள். ஆகையால், "சகலருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற ஆண்டவரே, இவ்விருவரில் நீர் தெரிந்துகொண்டவரை நீரே காண்பித்தருளும்" என்று மன்றாடி சீட்டுப் போட்டார்கள். (அப். நட. 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது:—நமக்கும் இப்படிச் சிலவேளை சந்தேகத்துக்கு இடமுண்டாகும். எனக்கு இன்ன உபகாரம், இன்ன விசேஷ உத்தரவு வேணுமென்று கேட்கலாமோ கேளாதிருக்கலாமோ? இன்ன இடம், இன்ன அலுவலை மாற்றுகிறதற்காக, இன்ன முகாந்திரத்தைப்பற்றி இன்னின்ன சிரேஷ்டரிடத்தில் கேட்கலாமோ கேட்கக் கூடாதோவென்று இருமனப்பட்டிருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் செய்ய வேண்டியதென்ன? அப்போஸ்தலர்களையுஞ் சீஷர்களையும்போலச் செபம்பண்ணி ஆண்டவர் தமது சித்தத்தை அறிவிக்க மன்றாடவேணும். இப்படியே எப்போதும் நடந்தேனோ? அடிக்கடி என் ஆசையும் இச்சையும் சர்வேசுரன் சித்தமென்று நினைக்கவில்லையோ? அவருடைய சித்தத்துக்குப் பதிலாக என் பிரியத்தை நிறைவேற்றவில்லையோ?

மனப்பற்றுதல்.—சிருஷ்டிக்கிறவரான இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் எழுந்தருளிவாரும், உமது ஒளியின் பிரகாசத்தினால் என் புத்தியைத் துலக்கும், எனக்கு நீர் வழிகாட்டி நான் தவறுதலான பாதையில் நடவாதிருக்கச் செய்தருளும் (திருச்சபை செபம்).

பிரதிக்கினை.—எனக்குண்டாகுஞ் சந்தேகங்களிலெல்லாங் கெட்டுப்போன என் சுபாவ நோக்கத்தின்படி நான் நடவாமல், நல்ல வழியைத் தெரிந்துகொள்ளுகிறதற்காக அர்ச். இஞ்ஞாசியார் கொடுத்திருக்கிற ஒழுங்குகளைச் சரியாய் அநுசரிப்பேனாக.

3-ம் பிரிவு

தேவசித்தம் மத்தியாசுக்குச் சனுவாயிருந்தது

தியானம்.—"திருவுளச்சீட்டு மத்தியாசுபேருக்கு விழுந்ததினாலே; அவர் பதினொரு அப்போஸ்தலர்களோடு சேர்க்கப்பட்டார்." (அப். நட. 1). தேவசித்தம் வெளியானதும், சபையிலுள்ள தர்க்கம் தீர்ந்து, எல்லாரும் உத்தம விதமாய் ஒருமனப்பட்டார்கள். எல்லாரும் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்டவரை இயேசுநாதருடைய பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராக அங்கீகரித்து அவருக்குச் சங்கையுடன் கீழ்ப்படிந்தார்கள். இதினால் மத்தியாசு பெருமை சிலாக்கியமடையவுமில்லை; பர்சபாஸ் காய்மகாரத்தால் மனவருத்தப்படவுமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.— அர்ச். அகுஸ்தீன் கொடுத்திருக்கிற நேர்த்தியான ஒரு ஒழுங்கை அநுசரிக்கும்படி, இச்சமயத்தில் அதை ஞாபகப்படுத்திக்கொள்: அதாவது "சந்தேகமும் தீர்மானமில்லாததுமான விஷயங்களில் ஒவ்வொருவனும் தன் இஷ்டப்படி அபிப்பிராயப்படவும் தெரிந்துகொள்ளவும் விட்டுவிடு; அதிகாரிகளால் அல்லது நியமகத்தால் தீர்க்கப்பட்டவைகளைப்பற்றி உங்களுக்குள் பேச்சிலும் உள்ளத்திலும் ஒருமைப்பாடு இருக்கவேண்டும்." சுருக்கமாய்: "சந்தேகமானவைகளில் சுவாதீனம், நிச்சயமானவைகளில் ஒருமைப்பாடு"; சகோதரர்களுக்குள்ளே சமாதானத்தையும் பிறசிநேகத்தையுங் காப்பாற்றுகிறதற்கு இதுவே உத்தம பிரமாணம். மனதுபொருந்தி நம்மை முழுதும் பரித்தியாகம்பண்ண அவசியம்நேர்ந்தாலுங்கூட இதைப் பிரமாணிக்கமாய் அநுசரிப்போமாக.

சம்பாஷணை.—புதிதாய் தெரிந்துகொள்ளப்பட்ட மத்தியாசென்பவரோடு சம்பாஷணை செய்வோமாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கு முந்தின நவநாளின் 6-ம் நாள்—புதன்

இஸ்பிரீத்து சாந்துவின் வரங்கள் நமக்கு மகா அவசரம் என்பதின் பேரில்

ஆயத்தச் சிந்தனை.— பலவீனரும் படிப்பில்லாதவர்களுமான அப்போஸ்தலர்கள் யூதர்களுக்குப் பயந்து ஒளிந்துகொண்டிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக் கொள்வேனாக.

தியானச் செபம்.—ஞானம், புத்தி, விமரிசையென்கிற வரங்களைக் கேட்பேனாக.

முதல் பிரிவு

ஞானமென்கிற வரமில்லாமல் அப்போஸ்தலர்கள் எவ்விதமாயிருந்தார்களென்பதின்பேரிலும் நாமும் எவ்விதமாயிருக்கிறோமென்பதின் பேரிலும்

தியானம்.—இஸ்பிரீத்து சாந்துவின் ஏழு வரங்களுக்குள்ளே முந்தின வரம் ஞானம். இந்த மொழிப்பிறப்பின் அர்த்தப்பிரகாரம், ஒவ்வொரு பொருளையும், அதன் உண்மையான தன்மையைக் கண்டுணர்ந்து தேடுவதில்தான் ஞானம் அடங்கியிருக்கிறது. ஞானமென்கிற வரத்தை அடைகிறதற்கு முன்னே அப்போஸ்தலர்கள் இதின் பிரகாரம் நடந்தார்களா? இவ்வுலகத்தின் அழிந்துபோகிற நன்மைகளைப் பார்க்கத் தேவ காரியங்களையுந் தங்கள் ஆத்தும நன்மைகளையும் நித்தியத்தையும் அவர்கள் அதிகமாய் மதித்துத் தேடினார்களா? இல்லை, அவர்கள் இலௌகீக எண்ணங்கள் உள்ளவர்களாய், தங்கள் சரீரத்தைப் பேணிப் பார்க்கிறதின் பேரிலுந் தங்கள் திவ்விய குருவின் மூலமாய் உலகத்தில் தங்களை உயர்த்த விரும்புகிறதின்பேரிலும் மாத்திரங் கவலையாயிருந்து தங்களுக்குள் பெரியவனாரென்று வாக்குவாதஞ் செய்துகொண்டு வந்தார்களேயல்லாமல் இயேசுநாதர் தங்களுக்குப் படிப்பித்த செபதபங்களில் உள்ளளவேனுங் கவலை வைத்தவர்களல்ல (லூக். 25).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஞானமென்கிற வரமில்லாமல் அப்போஸ்தலர்களிருந்த விதம் இதுதான்; நாமும் அந்த வரமின்றிச் சுபாவமாய் அப்படியிருக்கிறோம். ஞான காரியத்தின் மட்டிலுந் தாழ்ச்சி, ஒறுத்தல், தபசு, பத்தி முதலானவைகளை அநுசரிக்கிறதின் மட்டிலுங் குளிர்ந்தவர்களைப்போல ஒருபிரகாரமாயிருந்து, இவைகளைக் குறைக்கவும் தள்ளிப்போடவும், பல உபாயங்களைத் தேடிக்கொண்டு வருகிறதுமல்லாமல் உலக காரியங்களிலும் சரீர சுகத்தைத் தேடுகிறதிலும் மற்ற வீணான காரியங்களிலும் சுபாவமாய் மகா சுறுசுறுப்பும் பற்றுதலுமுள்ளவர்களாயிருக்கிறோம். இவைகள் உன்னிடத்தில் விளங்கவில்லையோ? இது உண்மையல்லவோ? இது காரியத்தில் உன்னைத்தானே வினாவிக்கேட்கவும், நீயே உனக்கு மறுமொழி சொல்லிக்கொள்ளவும் திடாரிக்கமுள்ளவனாயிருப்பாயாக.

மனப்பற்றுதல்.—ஞானமுள்ள இஸ்பிரீத்துசாந்துவே, என்னிடத்தில் எழுந்தருளி வாரும்! இலௌகீகப் பொக்கிஷங்களனைத்தையும் பார்க்க ஞானக் காரியங்களையும் மோக்ஷ நன்மைகளையும் அதிகமாய் நான் மதிக்கவுஞ் சிநேகிக்கவுஞ் சர்வேசுரனையும் என் அந்தஸ்தின் உத்தமதனத்தையுஞ் சேர்ந்தவைகளை அறியவும் தேடவும் படிப்பித்தருளும்.

பிரதிக்கினை.—இன்றைக்குச் சமயத்துக்குச் சமயம் இம்மன்றாட்டைச் சொல்லுவாயாக.

2-ம் பிரிவு

புத்தியென்கிற வரமில்லாமல் அப்போஸ்தலர்கள் எவ்விதமாயிருந்தார்களென்பதின்பேரிலும் நாமும் எவ்விதமாயிருக்கிறோமென்பதின் பேரிலும்

தியானம்.—தேவ பரம ரகசியங்களை அறியத்தக்கதாக மனுஷன் புத்தியை உயர்த்தும் சுபாவத்துக்கு மேற்பட்ட ஒளியின் பிரகாசமாகிய புத்தியென்கிற வரத்தை அடையுமுன்னே அப்போஸ்தலர்கள் என்னமாயிருந்தார்கள்? அவர்களுக்கு இரட்சகர் வெளிப்படுத்தின பரமரகசியங்

களின் மேலான காரியங்களில், அவர்கள் ஒன்றும் கண்டுபிடியாமலிருந்தார்களென்று சுவிசேஷத்தில் நாம் கண்டுவருகிறோம். அவர்கள் எப்போதும் இலௌகீக கருத்தோடும் மந்தப் புத்தியோடும் அந்த மேலான காரியங்களை வியாக்கியானஞ் செய்துவந்ததை இயேசுநாதர் கேட்டு, முறைப்பாடாக அவர்களைப் பார்த்து: என்ன! நீங்கள் இதுவரையில் உணர்வில்லாதவர்களாயிருக்கிறீர்களோவென்றார் (மத். 15).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—புத்தியென்கிற வரமில்லாமல் அப்போஸ்தலர்கள் இருந்தவிதம் இதுதான். இஸ்பிரீத்து சாந்துவானவர் நமக்கு இந்த வரத்தைக் கொடாமலிருந்தால், நாமும் அவர்களைப்போல சர்வேசுரனைப்பற்றின காரியங்களையும் அவருடைய அளவில்லாத இலட்சணங்களையும் கண்டு தியானிக்க வல்லபமற்றவர்களாயிருப்போம். நாம் வாழும் இந்த ஆச்சரியமான பிரபஞ்சமானது அவைகளைத் தெளிவாய் நமக்கு எடுத்துக்காட்டினாலும், நாம் காண்கிறதில்லை! அழகான சித்திரத்துக்கு முன்பாக நிற்கும் குருடரைப்போலே அவைகளின் மத்தியில் இருந்தும், நாம் ஆச்சரியப்படத் திராணியற்றவர்களாயிருக்கிறோம். ஞானக் காரியங்களைக்குறித்து மிகவும் நேர்த்தியாய் எழுதப்பட்ட போதகங்களை நமக்கு வாசித்து வியாக்கியானம் செய்தாலும், புத்தியில்லாதவர்களைப்போல அவைகளைக் கவனியாமலிருக்கிறோம்!

மனப்பற்றுதல்.— "இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் எழுந்தருளிவாரும், பரலோகத்திலே நின்று உம்முடைய திவ்விய பிரகாசத்தின் கதிர்களை வரவிடும்." இந்தப் பிரகாசமில்லாமல் எனக்குக் கண்களிருந்தும் நான் பாராமலிருக்கிறேன், செவிகளிருந்தும் கேளாமலிருக்கிறேன், புத்தியிருந்தும் அந்தகாரத்திலிருக்கிறேன்! ஆனால் உமது பிரகாசத்தைக்கொண்டு என் இருதய அந்தகாரமெல்லாம் மாறி வெளிச்சமாகுமென்று நான் நம்பிக்கையாயிருக்கிறேன்.

பிரதிக்கினை.— போன பிரிவில் சொன்னதைப்போல செய்யவும்.

3-ம் பிரிவு

விமரிசையென்கிற வரமில்லாமல் அப்போஸ்தலர்கள் எவ்விதமாயிருந்தார்களென்பதின்பேரிலும் நாமும் எவ்விதமாயிருக்கிறோமென்பதின்பேரிலும்

தியானம்.—விமரிசையென்கிற வரமில்லாமல் அப்போஸ்தலர்கள் என்னமாயிருந்தார்களென்றால், தங்கள் நினைவிலும் பற்றுதலிலும் நடக்கையனைத்திலும் நிலையில்லாதவர்களாயும் எந்தத் தீர்மானம் பண்ணவேணுமென்று தெரியாதவர்களைப்போலே தற்செயலாய்ச் சமயத்துக்குத்தக்கபடி நடந்தவர்களாயும் சுவிசேஷத்துக்கடுத்த மேலான உத்தம பாதையிலே இயேசுநாதரைப் பின்செல்லவேணுமென்று பிரதிக்கினை செய்திருந்தாலும், வீணான இலௌகீக காரியங்களின் பேரிலே நம்பிக்கை வைத்தவர்களாயும், ஒரு சமயத்தில் பத்தி சுறுசுறுப்பினாலும் தைரியத்தினாலும் மற்றொரு சமயத்தில் கஸ்தியினாலும் ஆயாசத்தினாலும் நிறைந்தவர்களாயுமிருந்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—விமரிசையென்கிற வரம் நமக்கில்லாவிட்டால், நாமும் இப்போதும் எப்பொழுதும் அப்படியே இருப்போம்: அதாவது, இருமனப்பட்டவர்களாய்ப் புத்திக் குருட்டாட்டமுள்ளவர்களாய்ப் பொய்யான நியாயத்துக்கு இடங்கொடுத்து, நமது நினைவு போன போக்கில் விட்டுப் பேய் மாய்கையிலும் அதின் வலையிலுஞ் சிக்கி, இவ்வுலகத்தில் மாறிவரும் கணக்கில்லாத விஷயத்தில் மூழ்கி, முன்னும் பின்னும் தள்ளப்பட்டு, மனமிருந்தும் இல்லாமையுமாகி, சமயத்துக்குச் சமயம் மாறுதலான தீர்மானம் செய்து நன்மையில் நிலையில்லாதவர்களாகவும் மெய்யான புண்ணியத்திலே வர்த்திக்கச் சத்தியில்லாதவர்களாகவுமிருப்போம். அடிக்கடி சர்வேசுரன் சமுகத்தில் நாம் பிரலாபிப்பதற்குக் காரணம் இதுவன்றோ?

சம்பாஷணை.—இத்தியானத்தில் தோன்றின மனப்பற்றுதல்களுக்கொத்தபிரகாரம், இஸ்பிரீத்து சாந்துவானவரோடே சம்பாஷணை செய்வாயாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கு முந்தின நவநாளின் 7-ம் நாள்—வியாழன்

முந்தின தியானத்தில் அடங்கிய விஷயங்களின் தொடர்ச்சி.

ஆயத்தச் சிந்தனை.—*அசனசாலையில் அப்போஸ்தலர்கள் கூடியிருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக் கொள்வாயாக.*

தியானச் செபம்.—*திடம், அறிவு, பக்தி, தேவபயமென்கிற வரங்களைக் கேட்பாயாக.*

முதல் பிரிவு

திடமென்கிற வரமில்லாமல் அப்போஸ்தலர்கள் எப்படியிருந்தார்களென்பதின்பேரிலும் நாமும் எப்படியிருக்கிறோமென்பதின் பேரிலும்

தியானம்.—*அப்போஸ்தலர்கள் திடமென்கிற வரத்தை அடையுமுன்னே நல்ல மனதுள்ளவர்களாயிருந்தாலும், பலவீனர்களும் பயந்தவர்களும் மிகவுந் திடனற்றவர்களுமாயிருந்தார்கள். எல்லாருங் கடைசி இராப்போசன நேரத்தில் தங்கள் நல்ல குருவுக்கு எப்போதும் பிரமாணிக்கராயிருப்போமென்று உறுதியாய்ச் சொன்னதுமன்றிச் சிறைச்சாலைக்குப் போகவேண்டியிருந்தாலும் சாகவேண்டியிருந்தாலும், அவரைக் கைவிடமாட்டோமென்று பிரசித்தமாய் வார்த்தைப்பாடு கொடுத்திருந்தார்கள். ஆகிலும் சம்பவித்ததென்ன? பெரிய குருவின் சேவகர் அவரைப் பிடித்துக்கொண்டார்களென்று கண்டவுடன், அவர்கள் கோழைத்தனமாய் ஓடிப்போனார்கள்.*

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—*நாம் நமது சொந்தப் பலத்தை மாத்திரங் கவனிக்குங்கால், இப்படி மெய்யாகவே நிலையற்றவர்களுங் கோழைத்தனமுள்ளவர்களுமாயிருக்கிறதில்லையோ? நாம் செய்யவேண்டியதெல்லாம் நேர்த்தியான விதமாய்ச் செய்வோமென்று வார்த்தைப்பாடு கொடுத்து உறுதியாய்ச் சாதித்தாலும், அவைகளை நிறைவேற்றவேண்டியபோது, பலவீனர்களும் கோழைத்தனமுள்ளவர்களும் நிலையில்லாதவர்களுமாயிருக்கிறதில்லையோ? நன்றாய் யோசித்து ஒரு பிரதிக்கினை செய்தவுடனே அதைக் கைவிட்டு விடுகிறதில்லையோ? மிகவும் சொற்ப சோதனைக்கும் இணங்குகிறதில்லையோ? நமது ஒழுங்கின் சில விஷயத்தை அல்லது நமது அலுவலின் சில கடமையை அநுசரியாதபடிக்கு, எப்போதும் போலி நியாயந் தேடுகிறதில்லையோ? காலமே எழுந்திருக்க மணியடித்தவுடன், நித்திரையைவிட்டு எழுந்திருத்தலாகிய எளிதான காரியங்களிலே முதலாய், உதாரத்தோடு நம்மை ஜெயிக்க அடிக்கடி திராணிபற்றவர்களாயிருக்கிறதில்லையோ?*

மனப்பற்றுதல்.—*இதுவெல்லாம் உண்மையென்று ஒத்துக்கொண்டு வெட்கிச் சர்வேசுரனைப் பார்த்துக் கேட்கவேண்டியதாவது: திடனைத் தந்தருளுகிறவரே, என்னிடத்தில் எழுந்தருளி வாரும்; தேவரீர் என்னை ஆதரித்தால், உத்தம பாதையிலே இதுவரையில் நான் நடப்பதற்கு விக்கினமாயிருந்ததெல்லாத்தையும் ஜெயித்துக்கொள்வேன்.*

பிரதிக்கினை.—*இப்போது சொன்ன மன்றாட்டை அடிக்கடி புதுப்பிப்பேனாக.*

2-ம் பிரிவு

அறிவென்கிற வரமில்லாமல் அப்போஸ்தலர்கள் எப்படியிருந்தார்களென்பதின்பேரிலும் நாமும் எப்படியிருக்கிறோமென்பதின் பேரிலும்.

தியானம்.—*திவ்விய இரட்சகர் தாம்போதித்த வேதம் மனுஷர்களால் உண்டானதல்லவென்று உலகம் நிச்சயமாய் அறியச் சித்தமானார். ஆகையால் அதைப் போதிக்கக் கலிலேயராகிய பன்னிரண்டு செம்படவர்களைத் தெரிந்துகொண்டார். அவர்கள், உலக எண்ணத்தின்படியே மூடர், அறிவீனர், படிப்பில்லாதவர்கள், உயரிய கருத்தும் ஓங்கிய நோக்கமும் இல்லாதவர்கள் தங்கள் பிழைப்புக்கடுத்த தொழில்*

முயற்சியை மாத்திரங் கவனித்து அதைத் தேடித் திரிந்தவர்கள். இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளில் அவர்கள் பெற்றுக்கொண்ட அறிவு என்கிற வரமில்லாத பரியந்தம் அவர்கள் இவ்விதம் இருந்தார்கள். அஃதில்லாமல் எப்போதும் இவ்விதமே இருந்திருப்பார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அவர்களைப் பார்க்க நமக்கு நல்ல படிப்பிருந்தாலும், இன்னம் அதிகமாய் உலக கல்வி சாஸ்திரம் அறியச் சாவகாசமிருந்து அதற்கடுத்தவைகளைச் சரியாய் உணர்ந்துகொள்ள வேணுமென்கிற ஆசையினாலே ஏவப்பட்டு, அவைகளிலிருந்த தேர்ச்சி அடைந்திருந்தாலும் அர்ச்சியசிஷ்டதனத்துக்கடுத்தவைகளை அநுசரிக்கிறதில் மாத்திரம் நாம் ஏறக்குறைய முன்னிருந்த வண்ணமே இருக்கிறோமென்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். மேலும், நமது அந்தஸ்தின் காரணமாக மிகுந்த அர்ச்சியசிஷ்டதனத்தை அடையவும், நமது மாதிரிகையினாலும் போதகத்தினாலும் மற்றவர்களை அர்ச்சியசிஷ்டவர்களாக்கவும் நாம் பிரயாசப்படவேண்டியிருந்தாலும், இப்பேர்ப்பட்ட மேலான சாஸ்திரத்தில் தக்க பிரயாசப்படாமல், உலக வீணான கல்வி சாஸ்திரங்களைக் கற்றுக்கொள்ள அதிக பிரயாசப்பட்டோமென்று ஒத்துக்கொள்வோமாக.

மனப்பற்றுதல்.—சகல அர்ச்சியசிஷ்டதனத்தையுங் கொடுக்கிறவரும், அர்ச்சியசிஷ்டதனத்தின் சாஸ்திரத்தைப் படிக்க ஆசையுள்ள எவருக்கும் அகத்தியமாய் வேண்டிய, தவறாத வழிகாட்டியுமாயிருக்கிற இஸ்பிரீத்து சாந்துவைப் பார்த்து மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—அர்ச்சியசிஷ்டவர்களுடைய சாஸ்திரத்திலே விருத்தியடைய இன்றைக்கே, இந்த க்ஷணத்திலே தானே, அதிக சுறுசுறுப்போடும் நிலைமையோடும் பிரயாசப்படவேணும். படிக்கிறதற்கு முந்தியும் ஞான வாசகத்திற்கு முந்தியும் இஸ்பிரீத்து சாந்துவை நோக்கிச் சொல்லுஞ் செபத்தைக் கவனத்தோடு எப்போதுஞ் சொல்லப் பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

பத்தி, தேவபயமென்கிற வரங்களில்லாமல் அப்போஸ்தலர்கள் எப்படியிருந்தார்களென்பதின்பேரிலும் நாமும் எப்படியிருக்கிறோமென்பதின் பேரிலும்

தியானம்.—அப்போஸ்தலர்களுக்குத் தங்கள் திவ்விய குருவின் மட்டில் உள்ள பட்சம் எவ்வளவு குறைவானதென்பதை யோசித்துப்பார். அவர்கள் புத்திர நேசத்தினால் அவரைச் சரியாய்ச் சினேகியாமல் தங்கள் சுயபிரயோசனத்தைப்பற்றி விசேஷமாய் அவரைச் சினேகித்து அவரைப் பின்சென்று திரிந்தார்கள். இதினாலன்றோ, அவர் நிந்தை அவமானம் அடைந்து பாடுபடுஞ் சமயத்திலே, அவர்கள் அவர்மட்டில் மிகவும் பிரமாணிக்கந் தப்பிப் கோழைத்தனத்தைக் காட்டினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அப்போஸ்தலர்களைப் பார்க்க நாம் மெய்யாகவே அதிக பரிசுத்தமான பட்சத்தோடே சர்வேசுரனைச் சினேகிக்கிறோமா? நமது சொந்தப் பிரயோசனத்தைப்பற்றி அவரைச் சினேகியாமல் அவரைப்பற்றி நாம் அவரைச் சினேகிக்கிறோமென்பது உண்மையா? நாம் அவருக்கு ஏற்காத குற்றங்களைச் செய்யாதிருக்கும்போது, பாவத்துக்காக நமக்கு வரவேண்டிய நரக ஆக்கினைக்கும் உத்தரிக்கிற ஸ்தலத்து வேதனைக்குந் தப்பித்துக்கொள்ளுகிறதற்காகவல்லவோ, விசேஷமாய் அவைகளைச் செய்யாமலிருக்கிறோம்? நாம் கடமையின்றி அதிகப் புண்ணிய முயற்சிகளைச் செய்யும்போது, நமக்கு வாக்குத்தத்தம் அளிக்கப்பட்ட சம்பாவனை நிமித்தமல்லவோ முக்கியமாய் அவைகளைச் செய்கிறோம்? இவ்வித கருத்து குற்றமுள்ளதல்ல, கண்டனைக்குரியதல்ல; ஆயினும், இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளில் அப்போஸ்தலர்கள் இருதயத்தில் அவர் விளைவித்த பத்தி, பிள்ளைக்கடுத்த தேவபயம், உத்தம சினேகமாகிய இந்த மேலான கருத்துகளுக்கு இது எவ்வளவோ புறம்பாயிருக்கிறது!

சம்பாஷணை.—இஸ்பிரீத்து சாந்துவானவரோடே சம்பாஷித்துப் பரம பிதாவாகிய சர்வேசுரன் நமக்கு

மேலான நன்மைச் சுரூபியாயிருக்கிறதினால், அவரைப் பற்றி நாம் அவரைச் சிநேகித்து இப்பேர்க்கொத்த நல்ல தகப்பனாருக்குப் பொருந்தாதவர்களாய்ப் போவோமென்கிற நினைவினால், பாவத்துக்குப் பயந்து அவருடைய மெய்யான பிள்ளைகளுக்குத் தகுந்த மேலான உணர்ச்சிகள் நமக்குண்டாகும்படி தாழ்ச்சியோடே அவரிடத்திற் கேட்போமாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கு முந்தின நவநாளின் 8-ம் நாள்—வெள்ளி

இஸ்பிரீத்து சாந்துவானவர் எழுந்தருளி வருகிறதற்கு விசேஷ முகாந்திரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—நான் போகாதிருந்தால், தேற்றுகிறவர் உங்களிடத்தில் எழுந்தருளி வரமாட்டாரென்று இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குச் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக (அரு. 16).

தியானச் செபம்.—அப்போஸ்தலர்களுக்கு இஸ்பிரீத்து சாந்துவை அனுப்புகையில், தேவசுதன் நினைத்திருந்த கதியை நாம் அடைய வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இஸ்பிரீத்து சாந்துவானவர் அப்போஸ்தலர்களுக்குத் தேற்றரவு கொடுக்க வேண்டியவராயிருந்தார்.

தியானம்.—இந்த நவநாள் கடைசி பரியந்தம் நாம் செய்யும் பத்திக்கடுத்த முயற்சிகளில் சுறுசுறுப்போடு நிலைத்திருக்கத்தக்கதாக, நமது திவ்விய இரட்சகர் தமது அப்போஸ்தலர்களுக்குஞ் சீஷர்களுக்கும் இஸ்பிரீத்து சாந்துவை அனுப்புவதாக வாக்களித்ததின் பிரதான முகாந்திரங்களை நினைத்துப் பார்ப்போமாக. முதலாவது தாம் மோக்ஷத்துக்கு ஆரோகணமானபின், அவர்களிடத்தில்

எழுந்தருளி வருகிறவர் தமக்குப் பதிலாயிருந்து அவர்களுடைய வருத்தங்களிலேயும் விசேஷமாய் வேதம் போதிக்கிறதிலுள்ள கடின பிரயாசங்களிலேயும் அவர்களுக்கு ஆறுதலுஞ் சந்தோஷமும் வருவிக்கவேண்டியது ஒரு முகாந்திரமாம். வாஸ்தவத்திலும், இயேசுநாதர் அவர்களை நோக்கிச் சொன்னதாவது: "நான் என் பிதாவிடத்தில் போகிறதினால், கொஞ்சத்துக்குள் என்னை நீங்கள் காணமாட்டீர்கள்; ஆனால் உங்களை ஆதாரமற்ற பிள்ளைகளைப்போல விட்டுவிடுகிறதில்லை; நான் உங்களுக்காக என் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்; அப்போது உங்களோடு என்றென்றைக்கும் இருக்கத்தக்கதாகத் தேற்றுகிறவராகிய வேறொருவரை உங்களுக்கு அனுப்புவாரென்றார்" (அரு. 14-16). அவர்கள் வேதம் போதிக்கத் துவக்கின காலத்தில்தானே இந்த வாக்குத்தத்தம் நிறைவேறிற்று: யூதர்கள் அப்போஸ்தலர்களைப் பிடித்துக் கட்டிவைத்து அடித்துச் சிறைச்சாலையில் அடைத்தபோது, அதினால் அவர்கள் கஸ்திப்பட்டுத் திடனற்றுப்போகாமல் வாக்குக்கெட்டாத சந்தோஷம் நிறைந்தவர்களாய் இருந்தார்கள் (அப். நட. 5). இஸ்பிரீத்து சாந்துவானவர் பூர்வீக விசுவாசிகளிடத்திலும் இப்பேர்க்கொத்த அற்புதங்களைச் செய்துவந்தார். அவர்கள் தங்கள் ஊராரால் கடின இமிசைப்பட்டாலும், இஸ்பிரீத்து சாந்துவின் ஆறுதலால் எல்லாரும் நிரப்பப்பட்டிருந்தார்கள் (அப். நட. 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது சீவிய காலத்தில், நமது அந்தஸ்தின் கடமைகளையும் வேதம் போதிக்குந் தொழிலையும் நிறைவேற்றுகிறதிலே வெகு வருத்தத்தையும் நானாவித வேதனைகளையும் அநுபவிக்கிறோம்; ஆனால் இஸ்பிரீத்து சாந்துவானவர் நம்மிடத்தில் இருந்தால், நாம் அவைகளைப் பொறுமையோடுங் கீழ்ப்படிதலோடு மாத்திரமல்ல, சந்தோஷத்தோடும் அவைகளைச் சகித்துக் கொள்ளுவோம்; பீடைகளும் பாடுகளும் நமக்கு இன்ப சுகமாய் மாறிப்போம். ஆகையால் தேற்றுகிறவரை நாம் பெற்றுக்கொள்ளவும் நம்மிடத்தில் அவரைக் காப்பாற்றவும் எவ்வளவோ பிரயாசப்படவேணும்!

மனப்பற்றுதல்.—இஸ்பிரீத்து சாந்துவே, உத்தம ஆறுதலானவரே, அழுகையில் தேற்றரவே, எழுந்தருளி வாரும்.

பிரதிக்கினை.—ஆறுதலில்லாமல் வருத்தப்படுஞ் சமயத்திலே இந்த மன்றாட்டைச் சொல்லிக்கொண்டு வருவோமாக.

2-ம் பிரிவு

இஸ்பிரீத்து சாந்துவானவர் அப்போஸ்தலர்களுக்கு வழிகாட்ட வேண்டியவராயிருந்தார்

தியானம்.—சர்வேசுரன் தமது அப்போஸ்தலர்கள் பேரில் இஸ்பிரீத்து சாந்துவை எழுந்தருளி வரச்செய்ததற்கு இரண்டாம் முகாந்திரமேதென்றால், விசுவாசத்தின் துய்ய பிரகாசத்தை அவர்கள்பேரில் பரப்பவும், இயேசுநாதர் அவர்களுக்குச் சுருக்கமாய் அறிவித்த சத்தியங்களை மகா தெளிவான பிரகாரமாய்ப் படிப்பிக்கவும் வரப்போகிற சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு, காரியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தவுமாம். இயேசுநாதர் மரிக்கிறதற்கு முந்தின நாளிலே அப்போஸ்தலர்களுக்குத் திருவுளம்பற்றின வாக்கியங்களைக்கொண்டு இதை நாம் அறிந்திருக்கிறோம். "இன்னம் உங்களுக்குச் சொல்லத்தகும் காரியங்கள் அநேகம் உண்டு; ஆனால் இப்போது அவைகளைத் தாங்கமாட்டீர்கள். சத்திய சுரூபியாகிய இஸ்பிரீத்து சாந்துவானவர் வரும்போதோவெனில், அவர் எல்லாச் சத்தியங்களையும் உங்களுக்குப் படிப்பித்து, வரப்போகிற காரியங்களையும் உங்களுக்கு அறிவிப்பார்" (அரு. 16).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இஸ்பிரீத்து சாந்துவானவர் அப்போஸ்தலர்களிடத்திலும் பூர்வீக விசுவாசிகளிடத்திலும் செய்துவந்த அற்புதங்களை இன்றைக்கும் செய்துவருகிறதுமல்லாமல், அவரை அடைந்து காப்பாற்றப் பிரயாசப்படுகிறவர்களிடத்திலே எப்போதும் அவைகளைச் செய்துகொண்டு வருவார். இதன்பொருட்டே, முக்கியமான சமயங்களின் ஆரம்பத்தில், திருச்சபை இஸ்பிரீத்து சாந்துவின் ஞானப் பிரகாசத்தையும் ஒத்தா

சையையும் மன்றாடுகிறது; சந்நியாசி மடங்களில் ஒரு நாளைக்கு அநேகம்விசை இஸ்பிரீத்து சாந்துவின் மந்திரத்தைச் சொல்லுகிற வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. நாம் இந்த மந்திரத்தை எப்படிச் செபித்துவருகிறோம்? அநேகம்விசை தகுந்த கவனமில்லாமலும் பத்தியில்லாமலும் அல்லது வாயினால் மாத்திரஞ் சொல்லுகிறதில்லையோ வென்று நம்மைச் சோதித்துப் பார்ப்போமாக.

மனப்பற்றுதல்.—மிகவும் சிக்கலான சந்தர்ப்பங்களில் அநேகம்விசை உன் புத்தியைத் தெளிவித்து உனக்கு வழிகாண்பித்து, உன்னை ஆதரித்துவந்த இஸ்பிரீத்து சாந்துவானவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறதுமன்றி இன்னமும் அவர் தமது சகாயத்தை உனக்கு அளிக்கும்படி மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—சில செபங்களைக் கவனமில்லாமலும் பத்தியில்லாமலும், கடமையைக் கழிக்கிறதற்காகச் சொல்லி முடிக்கிற வழக்கம் ஏற்படாதபடி எச்சரிக்கையாயிரு.

3-ம் பிரிவு

இஸ்பிரீத்து சாந்துவானவர் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளில் பரிசுத்தமான தமது உருக்கம் விளங்கப்பண்ண வேண்டியவராயிருந்தார்

தியானம்.—அப்போஸ்தலர்கள் தாங்களே இயேசுநாதரை மகிமைப்படுத்தவேண்டியதுந்தவிரப் பிறருக்கும் அவரது ஞான போதகத்தை அறிவித்து, அவர்கள் அதைச் சுகித்தநுசரிக்கச் செய்து, பாவத்தின்பேரில் அருவருப்பும் புண்ணியத்தின்பேரில் ஆசையும் அவர்களிடத்தில் வருவித்து, அவர்களை இயேசுநாதருக்கு மெய்யான சீஷர்களும் அர்ச்சியசிஷ்டவர்களுமாக்கி, அவர்களுக்குள்ளேயும் அவரை மகிமைப்படுத்த வேண்டியவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய சொந்த சத்துவத்துக்கு மிகவும் மேலானதாயிருந்த இந்த அலுவலை நிறைவேற்றுவதற்கான சக்தியை அவர்களுக்கு அளிப்பது, இஸ்பிரீத்து சாந்து எழுந்தருளி வந்ததற்கு மூன்றாம் முகாந்திரமாம். இதைப்பற்றி இயேசுநாதர் அவர்களுக்குச் சொன்னதாவது: "நீங்கள் இஸ்பி

ரீத்து சாந்துவைப்பெற்றுக்கொள்வீர்கள்; யூதேயா நாடு முதல் உலகத்தின் கடைசி எல்லை பரியந்தம் நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். உங்கள் எதிராளிகளால் மறுக்கவும் எதிர்த்துப் பேசவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நானே உங்களுக்குக் கொடுப்பேன்.; ஏனெனில், பேசுகிறவர்கள் நீங்களல்ல, உங்கள் பிதாவின் இஸ்பிரீத்து சாந்துவானவரே உங்களிலிருந்து பேசுவார்'' (மத். 10).

சம்பாஷணை.—மேற்சொன்ன இரண்டு பிரிவுகளிலுள்ள மனப்பற்றுதல் பிரதிக்கினைக்குத்தக்கது, இஸ்பிரீத்துசாந்துவானவரோடே சம்பாஷணை செய்வாயாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கு முந்தின நாள்—சனி

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரன் எழுந்தருளி வருகிறதற்குச் செய்யவேண்டிய கிட்டின ஆயத்தம்

ஆயத்தச் சிந்தனை.—இராப்போசன சாலையில் அப்போஸ்தலர்கள் கூடி இருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்.—மன ஒடுக்கம், செபம், தேவமாதாவின் அடைக்கலத்தைத் தேடுதலாகிய இவைகளைக் கொண்டு நாளையத்தினத்தின் பெரிய திருநாளுக்குத்தக்க ஆயத்தம் செய்ய வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

மன ஒடுக்கத்தின்பேரில்

தியானம்.—நாம் துவக்கின நவநாட்கள் முடியப்போகிற இந்நாளில் அதன் பலன்களை மெய்யாகவே அடைய அதிக பிரயாசப்படுவோமாக. நமது ஆசை நிறைவேறுகிறதற்கு மிகவும் உதவியான மூன்று உபாயங்களை ஞாபகப்படுத்திக்கொண்டு அவைகளை மகா சுறுசுறுப்போடு அநுசரிப்போமாக. முதலாவது உபாயம் மன ஒடுக்கம்: இதினால்

ஆத்தும சமாதானமுஞ் சர்வேசுரனோடே ஐக்கியமும் உண்டாகும். அப்போஸ்தலர்கள் இதை அடையத்தக்கதாக, உலக சஞ்சாரத்தைவிட்டு அசனசாலையில் ஏகாந்தத்தையும் அந்தரங்கத்தையும் நாடினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இன்றையத்தினம் உலக சந்தடியைவிட்டு ஏகாந்தமாகவும் மவுனமாகவும் இருக்கக்கூடாமல், இந்தத் திருநாளின் நிமித்தம் நமக்கு அதிக வேலையுங் கவலையும் இருக்குமாகில், நமது இருதயத்துக்குள்ளேயாகிலும் ஒரு ஏகாந்த ஸ்தலத்தைத் தேடிக்கொள்ளப் பிரயாசப்படவேணும்; நமது அலுவலில் ஆத்திரப்படாமலும் வீணாய்ச் சுற்றித்திரிந்து வீண்பேச்சுக்கு இடங்கொடாமலும், பராக்குக்குக் காரணமான எல்லாத்தையுந் தள்ளிப்போடவேணும்; நமது பஞ்சேந்திரியங்களின்பேரில் விழிப்பாயிருக்கவேணும்; வெளிக்காரியங்களை நடத்திவந்தாலும், அவைகளில் நம்மை முழுதுங் கையளிக்காமல் சர்வேசுரனோடு அந்நியோந்நியமாய் ஒன்றித்திருக்கும் உள்ளந்தரங்க சீவியமுள்ளவர்களாகும்படி அடக்கவொடுக்கத்தையும் மவுனத்தையும் சார்ந்த ஒழுங்குகளை மகா பிரமாணிக்கத்தோடு அநுசரிப்போமாக.

மனப்பற்றுதல்.—அலுவலின் தொந்தரைகளில் மன ஒடுக்கத்தைக் காப்பாற்றும் மகா கடினமான சாஸ்திரத்தை உனக்குக் கற்பிக்கும்படி இஸ்பிரீத்துசாந்துவை மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—இந்த மன ஒடுக்கத்தைக் காப்பாற்றுகிறதற்கு விக்கினமாயிருக்கக்கூடுமான காலம் இடம் சந்தர்ப்பங்களை ஏற்கனவே யோசித்துப்பார்க்கவேணும்.

2-ம் பிரிவு

சேபத்தின்பேரில்

தியானம்.—இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களில் பெரும்பங்கடைவதற்கு இரண்டாவது உபாயம், இந்த நவநாள் ஆரம்பத்தில் கூறினவண்ணம், இன்றியமையா சாதனமாகிய சேபமாகும். இஸ்பிரீத்து சாந்துவையும் அவ

ருடைய வரங்களெல்லாத்தையும் அடைவீர்களென்று இயேசுநாதர்தாமே அப்போஸ்தலர்களுக்கு உறுதியாய்ச் சொன்னதினாலே, அவர்கள் செபம்பண்ணவேணுமென்பது அவ்வளவு அவசியமில்லையென்று தோன்றுகிறது; ஆகிலும் அவர்கள் இஸ்பிரீத்து சாந்துவை அடையுந்தனையும், மகா ஆவலோடுந் தாழ்ச்சியோடும் இடைவிடாமல் செபம்பண்ணி வந்தார்கள். ஏனெனில் சர்வேசுரனுடைய வரங்கள் அவருடைய உதாரத்தின் பலனாயிருந்தாலும், நிலைமையோடே செய்யுஞ் செபத்தின் பலனாகவுமிருக்க வேண்டும் என்பதை அவர்கள் நன்றாய்க் கண்டுபிடித்திருந்தார்கள். செபத்தின் பயன் அதிகரிக்கும்படி, ஒறுத்தலையும் அத்தோடு சேர்த்துக்கொள்வோமாக.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் செய்துவந்த நவநாட்களை நினைத்துப் பார்த்து, இவைகளில் நாம் செபித்த செபங்களில் யாதொரு அசட்டைத்தனமிருந்ததோவென்று இப்பொழுது பரிசோதிக்கவேண்டும். இருந்ததென்று அறிந்தால் அதற்குப் பரிகாரமாக இன்றைக்கு அதிக பத்தி சுறுசுறுப்போடு செபஞ்செய்வோமாக. இன்று மிகுந்த அலுவலிருக்கிறதினாலே செபஞ்செய்ய அதிகநேரமில்லையென்று சொல்லாதே. எப்போதுஞ் செபஞ் செய்வதில் உனக்கு யாதொரு விக்கினமும் இருக்கக்கூடாதென்று சத்திய சுரூபியாயிருக்கிறவரே சொல்லியிருக்கிறார். நம்முடைய கரங்களல்ல, நமது இருதயந்தான் செபஞ்செய்ய வேண்டியது. ஆகையால் நீ என்ன வேலை செய்தாலுஞ் சரி, இடைவிடாமல் உன் இருதயத்திலிருந்து உருக்கமான ஆசை கிளம்புமாகில், அதுவே செபமாயிருக்கும். இவ்விதமாய் இடைவிடாமல் நாள் முழுதும் நீ செபம்பண்ணுவாய்.

மனப்பற்றுதல்.—இஸ்பிரீத்து சாந்துவே, எழுந்தருளிவாரும்! என் இருதயத்தை உமது வசமாக்கிக் கொள்ளும்; அதில் உமது சிநேக அக்கினியை மூட்டிவிடும்.

பிரதிக்கினை.—பத்தியுள்ள இந்த மனவல்லயச் செபத்தையாகிலும், அல்லது இதைப்போலொத்த வேறொரு செபத்தையென்கிலும் இன்றைக்கு அடிக்கடி சொல்லுவாயாக.

3-ம் பிரிவு

தேவமாதாவின் அடைக்கலத்தைத் தேடுதலின்பேரில்

தியானம்.—முன் சொன்ன இரண்டு உபாயங்களுக்கும் மிகுந்த பலனைக் கொடுக்கக்கூடுமான மூன்றும் உபாயம் ஒன்றுண்டு. இந்த நவநாட்களில் அதையும் நாம் விட்டுவிடவில்லை; ஆனால் கடைசி நாளான இன்றையத்தினம் விசேஷமாய் அதை நாம் தேடவேணும். இந்த உபாயமேதென்றால், மகா பரிசுத்த கன்னிமரியாயின் அடைக்கலத்தைத் தேடுதல். அவள் வழியாய் அப்போஸ்தலர்களுஞ் சீஷர்களும் ஏராளமான பரம வரங்களை அடைந்ததுமல்லாமல், "அவள் வழியாய்த்தானே சகலமும் நமக்குக் கொடுக்கச் சர்வேசுரன் சித்தமாயிருக்கிறார்" என்று அர்ச். பெர்நர்துஸ் சொல்லியிருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வல்லபமுமுள்ள நமது நல்ல தாயாரை இன்று முழுதும் நமது கண்கள் நோக்கியிருக்கவேணும். இந்நாளிலே இராப்போசன சாலையில் கூடியிருந்த அப்போஸ்தலர்களுஞ்சீஷர்களுஞ் செய்த மன்றாட்டுக்களைத் தமது மன்றாட்டோடு ஒன்றாய்ச் சேர்த்ததுபோல, இன்றைக்கும் நமது மன்றாட்டுகளையுந் தமது மன்றாட்டோடு ஒன்றாய்ச் சேர்க்கவும் இஸ்பிரீத்துசாந்துவின் திரளான வரங்களை அவர்களுக்கு அவள் அடைந்ததுபோல, நமக்கும் அடையவும் மகாபத்தி சுறுசுறுப்போடும் நம்பிக்கையோடுங் கேட்போமாக. நாம் செய்யும் மனவல்லயச் செபங்களிலெல்லாம் மரியாயே என்கிற நாமத்தைச் சேர்த்துச் சொல்லுவோமாக. சனிக்கிழமைதோறும் விசேஷவிதமாய் நாம் தேவமாதாவைப் பார்த்து மன்றாடுவது வழக்கமாகையால், சனிக்கிழமையாகிற இன்றைக்கும் அவளைப்பார்த்து மன்றாடுவது நமக்குச் சுளுவாயிருக்கும்.

சம்பாஷணை.—பரிசுத்த கன்னியாஸ்திரியோடு சம்பாஷணை செய்வாயாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—இஸ்பிரீத்து சாந்துவானவர் அப்போஸ்தலர்கள்மேலே இறங்கினபோது, அவர்கள் இருந்தவிடத்தைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—இந்தத் திருநாளுக்குரிய மூவகை விஷயத்தையும் அதாவது இஸ்பிரீத்து சாந்துவானவர் இறங்கினதையும் சுவிசேஷம் பிரசித்தமானதையும் திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டதையும் நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இஸ்பிரீத்து சாந்துவானவர் அப்போஸ்தலர்கள்மேலேயும் சீஷர்கள்மேலேயும் இறங்கினது

தியானம்.—இயேசுநாதர் இஸ்பிரீத்து சாந்துவை அனுப்புகிறதாகத் தமது அப்போஸ்தலர்களுக்கு அநேகந்தரம் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை தாம் மோக்ஷத்திற்கு எழுந்தருளிப்போன பத்தாம் நாள் அதாவது பாஸ்குத் திருநாளுக்குப்பின் ஐம்பதாம் நாளாகிய இன்றையத் தினம் நிறைவேற்றினார். "ஐம்பதாம் நாள் நிறைவேறின போது, அவர்களெல்லாரும் ஓரிடத்தில் ஒருமித்திருக்கையிலே, சடுதியில் ஓர் பெருங்காற்று அடித்தாற்போல் வானத்தினின்று ஓர் ஒலி உண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீட்டைமுழுதும் நிரப்பினதுந்தவிர, அக்கினிமயமாய்ப் பிரிந்த நாவுகள் அவர்களுக்குத் தோன்றி அவர்களில் ஒவ்வொருவர்மேலேயுந் தங்கி நிற்கவே, எல்லாரும் இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டு இஸ்பிரீத்துசாந்து அவர்களுக்குக் கொடுத்த பேசும் வரத்தின்படியே பற்பல பாஷைகளில் பேசத் துவக்கினார்கள்" (அப். நட. 2). யூதர்களுடைய பெந்தைக்கோஸ்தென்னும் திருநாளுக்குப்பதிலாய் ஏற்பட்ட கிறீஸ்துவர்களுக்குரிய பெந்தைக்கோஸ்துத் திருநாளில் சம்பவித்த மகா பரமரகசியமான சங்

கதியை அர்ச். லூக்காஸ் இவ்வளவு தெளிவும் சுருக்கமுமான வார்த்தைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். இதுவரைக்கும் இலௌகீகப் பற்றுதல் உள்ளவர்களும் படிப்பில்லாதவர்களுமாயிருந்த அப்போஸ்தலர்கள், இஸ்பிரீத்து சாந்துவை அடைந்த க்ஷணத்தில்தானே பத்தியுள்ளவர்களும் வாய்ச்சாலகருமாகி, ஞானத்திலும் பரிசுத்தத்தனத்திலும் தேர்ந்தவர்களாய் ஜெயிக்கப்படாத ஆத்தும திடனும் சுறுசுறுப்பும் அடைந்து மனுக்குலத்தைச் சீர்திருத்துவதும் பூமியைப் புதுப்பிப்பதுமாகிய தாங்கள் பெற்றுக்கொண்ட மேலான அலுவலை நிறைவேற்ற சக்தியுள்ளவர்களானார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இன்றையத்தினம் மகா பெரிதும் பாக்கியமுமான இந்த அதிசயஞ் சம்பவித்த நாளைக் கொண்டாடுகிறோம். பாஸ்குத் திருநாளில் இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளின ஞாபகத்தை நாம் புதுப்பிக்கிறதுபோல, இன்றையத் திருநாளின் ஞாபகத்தையும் புதுப்பிக்கிறதுமல்லாமல், அந்தப் பரம இரகசியம் நம்மிடத்திலும் புதுப்பிக்கப்படுமென்று நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம். மற்றத் திருநாளுக்கும் இந்தத் திருநாளுக்கும் உள்ள விசேஷ வித்தியாசமேதென்றால், மற்றத் திருநாட்களிலே ஏற்கனவே நிறைவேறின பரம இரகசிய சம்பவங்களின் பலனைப்பற்றி மாத்திரம் சர்வேசுரனுக்குத் தோத்திரம் பண்ணுகிறோம்; இந்தத் திருநாளிலேயோவென்றால், திருச்சபையில் இடைவிடாது புதுப்பிக்கப்படுகிறதும் உலகம் முடியுந்தனையும் விசுவாசிகளுடைய ஆத்துமத்திலே உண்டாகிறதுமான பரம இரகசியத்தைக் கொண்டாடுகிறோம். இயேசுநாதர் கொடுத்த வார்த்தைப்பாட்டின்படி அப்போஸ்தலர்கள் நம்பிக்கையாயிருந்ததுபோல, இன்று நம்மிடத்திலும் இஸ்பிரீத்து சாந்துவானவர் இறங்கித் தமது வரங்களை அளிக்க வேணுமென்று நாம் கேட்கவுங் காத்துக்கொண்டிருக்கவும் நியாயமுண்டு. நவநாளில் ஆயத்தஞ்செய்த கிறீஸ்துவர்களில் இந்த சகாயத்தை அடைகிறவர்கள் அநேகர் உண்டு; ஆனால், வெளிப்படையான அடையாளம் தோன்றாது;

விசுவாசம் ஸ்திரப்பட்டபின்னர், வெளி அடையாளம் அவசியமில்லை. நாமும் அவர்களில் ஒருவராயிருந்தால், எவ்வளவோ பாக்கியம்!

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் கொடுத்த வார்த்தைப்பாட்டின்பேரில் விசுவாசம், நம்பிக்கை வைத்துமிருந்த ஆசையோடே "இஸ்பிரீத்து சாந்துவே, எழுந்தருளிவாரும், உமது விசுவாசிகளின் இருதயத்தைச் சந்தித்தருளும், உமது கொடைகளாலும் உமது சிநேகத்தின் அக்கினியினாலும் ஆத்துமாக்களைத் திருப்பவேணுமென்கிற ஆசையினாலும் என் இருதயத்தை நிரப்பு" மென்று சொல்லுவாயாக.

பிரதிக்கினை.—இந்த மன்றாட்டை இன்றைக்கு அடிக்கடி சொல்லுவேனாக.

2-ம் பிரிவு

சுவிசேஷத்தின் பிரசித்தம்

தியானம்.—சுவிசேஷம் பிரசித்தம்பண்ணப்பெற்றது இன்றையத் திருநாளில் நடந்த இரண்டாம் விசேஷமாகும். இன்றையத்தினம் எருசலேம் நகரத்தில், மூவாயிரம் யூதர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று ஆச்சரியமான விதமாய் ஆரம்பித்த சுவிசேஷ பிரசித்தம் தேவ ஏவலைப் பெற்ற அப்போஸ்தலர்கள் மூலமாகச் சீக்கிரமாய் உலகமெங்கும் பரம்பினது. அவர்களுடைய சீவியகாலத்திலேயே, சகல சாதிகளிலேயும் இயேசுநாதரை வணங்கி வந்த உண்மையான விசுவாசிகள் இருந்தார்கள் "என் இஸ்பிரீத்துவைச் சகல மாம்சத்தின்மேலேயும் பொழிவேன்; பூமியின் முகம் புதுப்பிக்கப்படு," மென்று யோயேலைக்கொண்டு சொன்ன தீர்க்கதரிசன வாக்கியம் நிறைவேறிற்று (யோயேல் 2.-சங். 103.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். இராயப்பர், அப்போஸ்தலர்கள், எழுபத்திரண்டு சீஷர்கள் முதல் முறிவின்றித் தொடர்ந்துவந்த அர்ச். பாப்புக்கள், மேற்றிராணிமார், குருக்கள், வழியாய்ச் சுவிசேஷமானது தனது வைதீக லௌகீக நன்மைகளோடு நமக்குக் கிடைத்திருக்கின்றது. ஆண்டவர் செய்த பெரிய உபகாரத்தை நினைத்து, அவருக்குப் பிரசித்தமாய் நன்றியறிந்த தோத்திரஞ் செய்வதற்காக இந்த நாள் குறிக்கப்பட்டிருக்கின்றது; நாம் இந்தக் கடமையை நிறைவேற்றத் தவறலாகாது. ஆனால் வேதம் போதிக்க அழைக்கப்பட்ட சந்நியாசிகளாகிற நமக்கு இது போதாது. இன்றையத்தினம் நமது பத்தி சுறுசுறுப்பைப் புதுப்பிக்கவேண்டியதுமல்லாமல் வாக்கினாலும் மாதிரிகையினாலுஞ் செபத்தினாலும் நம்மாலான உபாயங்களினாலும் சர்வேசுரனுடைய இராட்சியத்தைப் பரம்பச் செய்யவும் அவருக்கு ஆத்துமாக்களைச் சம்பாதிக்கவும் நம்மால் கூடுமான பிரயாசப்படுகிறோமாவென்று நம்மை வினாவிக் கேட்கவும் வேணும். எதில் நமது பத்தி சுறுசுறுப்புக் குறைந்துபோனதென்றும், எவ்விதமாய் அதை அதிகரிக்கலாமென்றும் பார்ப்போமாக.

மனப்பற்றுதலும், பிரதிக்கினையும்.—போன பிரிவில் சொல்லியபடி செய்யவேணும்.

3-ம் பிரிவு

திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது

தியானம்.—அப்போஸ்தலர்கள் போதனையால் மனந்திரும்பின ஜனங்கள், குணத்திலும் அந்தஸ்திலும் வேறுபட்டவர்களாயிருந்தாலும், எல்லாருக்கும் ஒரே விசுவாசமும் ஒரே வேத முறைமைகளும் ஒரே தேவதிரவிய அநுமானங்களும் ஒரே தலைவரும் இருந்ததினாலே, அவர்கள் எல்லோரும் ஒரே குடும்பம்போல் இருந்தார்கள். உலகமெங்குஞ் சிதறியிருந்த இந்தப் பெரிய குடும்பம் ஏகமும் பரிசுத்தமும் சாதாரணமுமென்று அழைக்கப்படுகிற இயேசுநாதருடைய திருச்சபையாமே. இத்திருச்சபை மகிமையாய் ஸ்தாபிக்கப்பட்டதை இந்த நாள் நமக்கு ஞாபகப்படுத்துகின்றது; இதுவே நாம் கொண்டாடுந் திருநாளின் மூன்றும் விசேஷமாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திருச்சபைக்குப் பிள்ளைகளென்னும் மகிமை பெற்றிருக்கிற தாய் தகப்பனிடத்தில் நின்று பிறந்திருக்கிறோம் என்கிற பாக்கியமும் ஞானஸ்நானத்தின் இஷ்டப்பிரசாதத்தினாலே நாமும் திருச்சபைக்குப் பிள்ளைகளாகிறோம் என்கிற பாக்கியமும் நமக்குண்டு. இந்தப் பெருத்த நன்மையைப் பற்றி, நாம் சந்தோஷமடைந்து நமது பரிசுத்த நடக்கையினாலே அதற்கு யோக்கியமுள்ளவர்களாயிருக்கப் பிரயாசப்படுவோமாக.

சம்பாஷணை.—இஸ்பிரீத்து சாந்துவானவரோடு சம்பாஷணை செய்.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கடுத்த திங்கள்

இஸ்பிரீத்து சாந்து திருநாளின் பரம இரகசியமான விசேஷங்கள்

ஆயத்தச் சிந்தனை.—அப்போஸ்தலர்கள் முழுதும் தேவ சிநேகத்தால் பற்றியெரிகிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—இயேசுநாதர்பேரிலும் அவர் திருச்சபையின்பேரிலும் மிகுந்த உருக்கமும் பிள்ளைக்கடுத்த பத்திவிநயமும் உன்னிடத்தில் உண்டாகக் கேட்பாயாக.

முதல் பிரிவு

கால விசேஷம்

தியானம்.—கிறீஸ்துவ பெந்தைக்கோஸ்தின் மகா பெரிய சம்பவம் இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளின ஐம்பதாம் நாள் ஞாயிற்றுக்கிழமையில் நிறைவேறினது; கர்த்தர் உயிர்த்தெழுந்த சம்பவம், யூதர்களுடைய பாஸ்காப் பண்டிகையின் மறுநாளாகிய ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

ஆகையால், இஸ்பிரீத்து சாந்துவானவர் இறங்கிவந்தது யூதர்களுடைய பெந்தைக்கோஸ்துத் திருநாளில் அல்ல, அதற்கு அடுத்த நாளில் என்பது வெளிப்படை. தேவ பராமரிக்கையின் இவ்விசேஷம் உலகத்துக்கு ஆறுதலுக்குரிய மகத்தான ஓர் பரம இரகசியத்தை அறிவித்தது:—பழைய ஏற்பாட்டுக்குப் பதிலாய்ப் புதிய ஏற்பாடு ஸ்தாபிக்கப்பட்டது. இந்த மாற்றம் உண்டானது முற்றிலும் நமது நன்மைக்காகவே. யூத ஜனங்களுடைய கன்னெஞ்சுக்கு ஒத்ததாயிருக்கப் பழைய ஏற்பாடு பயமும் அடிமைத்தனமும் பொருந்தியது; இடி முழக்கத்தோடு கல்லில் பதித்துக் கொடுக்கப்பட்டது. புது ஏற்பாடு சிநேகமுஞ் சுவாதீனமுமுள்ளது; இஸ்பிரீத்து சாந்துவானவர்தாமே சிநேகத்தின் உட்பற்றுதலையும் பிள்ளைக்கடுத்த மிகவும் உருக்கமான நேசத்தையும் விசுவாசிகளுக்குத் தந்தருளி அந்த ஏற்பாட்டை ஆச்சரியத்துக்குரிய மதுரத்தோடு அவர்கள் இருதயத்தில் எழுதிவைத்திருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ வரப்பிரசாத முறைமையின் காலத்திலே நீ பிறந்து ஞானஸ்நானம் பெற்றதற்காகச் சர்வேசுரனுக்கு அடிக்கடி நன்றியறிந்தவனாய் இருக்கிறாயோ? மீளவும் வாக்கினால் மாத்திரம் உன் நன்றியறிதலைக் காண்பிக்கிறது போதாது; உள்ளந்தரங்கமான சிநேக முறைமையை உன்னிடத்தில் அதிகமதிகமாய் நிலைநிறுத்தவும், அதை உத்தமமுள்ளதாக்கவும் பிரயாசப்படு. இதற்கு மூன்று காரியம் வேண்டியது:—முதலாவது, அடிமைகளும் ஊழியர்களுங் கொடிய எஜமானுக்குப் பயந்து நடுநடுங்குகிறது போல நாம் சர்வேசுரன்மட்டில் நடவாமல், உத்தமமுள்ள நல்ல தகப்பன்மட்டில் பட்சமுள்ள பிள்ளைகள் நடந்துவருகிறதுபோல, நாம் முழு நம்பிக்கையோடு நடந்துவரவேணும்.

2-வது, நாம் செய்யுங் கிரிகைகளுக்கெல்லாம் பயமல்ல, சிநேகமே காரணமாயிருக்கவேணும்.

3-வது, சர்வேசுரன் நமக்கு வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிற சம்பாவனையைப்பற்றியல்ல, அவரைப்பற்றியே நாம் அவருக்கு ஊழியம்பண்ணவேணும்.

உள்ளாந்தரங்க முறைமையாகிற இந்தச் சிநேகத்தின் மட்டில் உன் கருத்தென்ன? இந்தச் சிநேகப் பிரீதியில் நீ ஸ்திரமாயிருக்கிறாயோ? இதில் நீ அடைந்த விருத்தி யென்ன?

மனப்பற்றுதல்.—"நீங்கள் இன்னமும் பயப்படுகிறதற்கான அடிமைக்குரிய புத்தியை அடையாமல், அப்பா பிதாவேயென்று கூப்பிடச் செய்யும் புத்திர சுவீகாரத்தை அடைந்திருக்கிறீர்கள்" என்று உரோமாபுரி கிறீஸ்துவர்களுக்கு அர்ச். சின்னப்பர் எழுதின இந்த வாக்கியத்தை நன்றாய்க் கண்டுபிடிக்கவுஞ் சுகிக்கவும் வரப்பிரசாதங் கேட்பாயாக (அதி. 8).

பிரதிக்கினை.—அர்ச். சவேரியார் பத்தியோடு சொல்லி வந்த இந்த செபத்தை நாமும் அடிக்கடி சொல்லுவோமாக. "என் சர்வேசுரா சுவாமீ, உம்மைச் சிநேகியாதவர்களை நரகத்திலே தள்ளுவீரென்பதைப்பற்றியுமல்ல, உம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பீரென்பதைப்பற்றியுமல்ல, ஆனால் தேவரீர் என் சர்வேசுரனுமாய் எனக்குச் சகலமுமாயிருக்கிறீரென்பதினாலே நான் உம்மைச் சிநேகிக்கிறேன்."

2-ம் பிரிவு

இட விசேஷம்

தியானம்.—இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளன்று தலைவரான அர்ச். இராயப்பரும் மற்ற அப்போஸ்தலர்களும் இரட்சகருக்குப் பிரமாணிக்கராயிருந்த மற்ற அநேக சிஷர்களுங் கடைசி இராப்போசனமாகிய தேவ பரம இரகசியங்களால் அர்ச்சிக்கப்பட்ட அந்தச் சாலையில், இயேசுநாதருடைய தாயாராகிய மகா பரிசுத்த கன்னிமரியம்மாளோடு கூடி இருந்தார்கள். இஸ்பிரீத்து சாந்துவானவர் எழுந்தருளிவந்து தம்மை மனுஷர்களுக்கு அளிப்பதற்குத் தெரிந்துகொண்ட ஸ்தலம் அந்த சாலையே; அவர் தமது தெய்வீக ஆவியினாலே அதை முழுதும் நிரப்பினார்; அதற்குப் புறம்பே பொழியவில்லை. அந்த வீடானது

திருச்சபையைக் குறிப்பிட்டுக் காண்பித்ததென்று வேத பாரகர் சொல்லியிருக்கிறார்கள். திருச்சபை ஏதென்றால் அர்ச். இராயப்பருக்குப் பதிலாய் அவருக்குப்பின் தொடர்ந்து வருகிறவருடைய ஆளுகைக்குள்ளே ஒருமனப்பட்டு இயேசுநாதருடைய மெய்யான வேதத்தை அநுசரித்து வரும் விசுவாசிகளுடைய கூட்டமென்று சொல்லப்படும். இத் திருச்சபையிலே மாத்திரம் இஸ்பிரீத்து சாந்துவானவர் தம்மை அளிக்கிறார்; இதிலிருந்து மாத்திரம் நித்திய இரட்சண்ணியத்தின் மெய்யான ஊற்றுகளாகிய தேவ திரவிய அநுமானங்கள் புறப்பட்டுவரும். ஆகையால்தான் திருச்சபைக்குப் புறம்பே இரட்சண்ணியங் கிடையாது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திருச்சபையைத் தாயாக அடைந்திருக்கிற நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள்! அது நம்மை நித்திய சீவியத்துக்குப் பிறப்பித்ததுமன்றித் தினந்தினம் புதிதான சகாயங்களினால் நம்மை நிரப்புகின்றது. இதற்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்? நாம் அதைச் சிநேகித்து, நமது பரிசுத்த நடக்கையினால் அதை மகிமைப்படுத்தி திவ்விய இரட்சகர் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி சர்வேசுரன் அதைச் சத்துராதிகளிடத்தில் நின்று ஜெயமுள்ளதாக்கி உலகத்திலுள்ள சகல ஜனங்களையும் அதற்குச் சுதந்தரமாகக் கொடுக்கும்படி நாம் அவரை மன்றாடி இது அநுகூலம் பெறுவதற்காக நமது சரீர சௌக்கியத்தையும் நமது இரத்தமெல்லாத்தையும் நமது கல்வி சாமர்த்தியத்தையும் அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். இன்னமும் நாம் செய்யக்கூடியதென்ன? புறத்தியாரோடே கலந்து சம்பாஷணை செய்யுங்காலத்தில், திருச்சபையை அவர்களுக்கு அறிவிக்கவும் எல்லாரும் அதைக் கனம்பண்ணி அதிகமதிகமாய்ச் சிநேகிக்கவும் நாம் பிரயாசப்படுகிறதுமல்லாமல், அதை ஆதரிப்பவர்களையும் தேடிச் சேர்க்கவேண்டியது. மேலும் விசுவாசப் பரம்புதலென்னும் உச்சித சபையை யாவருக்கும் அறிவித்து, அது எங்கும் ஓங்கி வளரவும் முயற்சி பண்ணவேணும். இதுவரையில் சொன்ன பற்பல விஷயங்களைப்பற்றி நாம் செய்துவந்த

தென்ன, செய்யாமலிருந்ததென்ன, இனிமேல் என்ன செய்யக்கூடும், என்ன செய்யவேணுமென்றும் பார்ப்போமாக.

சம்பாஷணை.—நமக்கு இஸ்பிரீத்து சாந்துவானவரை அனுப்பித் தேவவரப்பிரசாதங்களினால் நம்மை நிரப்பின நமது நேசமுள்ள இரட்சகரோடு சம்பாஷணை செய்து, நமது பட்சம், நன்றியறிந்ததனம், நமது மன்றாட்டு, காணிக்கை, பிரதிக்கினை இவைகளையெல்லாம் அவர் பாதத்திலே வைத்து அவர் அவைகளை ஆசீர்வதித்துப் பலனுள்ளவைகளாக்கும்படி அவரை மன்றாடுவோமாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கடுத்த செவ்வாய்

இந்தத் திருநாளின் பரம இரகசியத்தில் இஸ்பிரீத்து சாந்துவானவர் உதவிக்கொண்ட அடையாளங்கள்

ஆயத்தச் சிந்தனை.—அப்போஸ்தலர்களுடையவும் சீஷர்களுடையவும் சிரசின்மேல் இறங்கியிருந்த அக்கினி நாக்குகளைக் காண்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—அகோரமான காற்றினுடையவும் அக்கினி நாக்கினுடையவும் அடையாளங்களுக்குள்ளே மறைந்திருக்கிற பரம இரகசியங்களை நன்றாய்க் கண்டுணர வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

அகோரமான காற்றின் அடையாளம்

தியானம்.—ஐம்பதாம் நாள் நிறைவேறினபோது, சடுதியில் ஓர் பெருங்காற்று அடித்தாற்போல் வானத்தினின்று ஓர் ஒலி உண்டானது (அப். நட. 2). இந்த இரைச்சலோடு கூடிய சுழற்காற்று இராப்போசன

சாலையை நோக்கிப்போய் அதில் நின்றதினாலே, இஸ்பிரீத்து சாந்துவானவர் இறங்கி வருகிறதற்கு அப்போஸ்தலர்கள் கவனமாயிருக்கவும், இந்தச் சத்தத்தைக் கேட்டுச் சனங்கள் ஓடிவரவும், வந்த சனங்களுக்கு வேதத்தைப் போதிக்க அப்போஸ்தலர்களுக்கிடமுண்டாகவும், இதைக் கேட்டு அநேகமான யூதர்கள் ஞானஸ்நானம் பெற்று இவ்விதமாய் முந்தியிருந்த யூத சபைக்குப் பதிலாய் அவர்கள் இயேசுநாதருடைய திருச்சபையை அன்றைக்கு ஸ்தாபிக்கவும் இஸ்பிரீத்து சாந்துவானவர் சித்தமானார். மேலும் பலமான காற்றின் அடையாளம் இஸ்பிரீத்து சாந்துவானவர் அப்போஸ்தலர்களின்மேலே எழுந்தருளிவந்த கருத்துக்கு ஆச்சரியமான விதமாய் ஒத்திருந்தது:—வேதம் போதிக்கிறதில் வரக்கூடிய விக்கினங்களையெல்லாந் தள்ளிப்போட்டுப் பூமியின் கடைசியெல்லை பரியந்தஞ் சுவிசேஷத்தைப் போதித்துப் பரப்புகிறதில் அவர்கள் காண்பிக்கப்போகிற மெத்த பலமும் வேகமுமான சுறுசுறுப்பு அதினால் குறிக்கப்பட்டது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இஸ்பிரீத்து சாந்துவானவருடைய ஏவுதலென்கிற ஆவி நமது ஆத்துமத்தை வலுவாய் அசைக்கவும் உலக ஆசாபாசப் பற்றுதல் எல்லாத்தையுந் தள்ளிப்போட்டுப் பரலோகத்தை நோக்கி அதை இன்பமாய் எழுப்பவும் அப்போஸ்தலர்கள் கூடியிருந்த இடத்தைக் காற்றானது முழுதும் நிரப்பினது போல, நமது ஆத்துமத்தின் தத்துவங்களையெல்லாம் நிரப்பவும் அவரைப் பார்த்து மன்றாடுவோமாக. மற்ற நாட்களைப்பார்க்க இன்றையத்தினம் இந்த விசேஷ வரங்களை அடைவோமென்று நம்பிக்கையாயிருக்கலாம். நமது மன்றாட்டை உடனே நாம் அடையாவிடில் திடனற்றுப் போகவேண்டாம். இஸ்பிரீத்து சாந்துவானவர் தமக்குச் சித்தமான இடத்திலும் நேரத்திலும் ஆவிவிடுவாரென்பதை நினைத்துக்கொள்ளவேணும்.' நாம் நினையாத சமயத்திலே திடீரென்றாற்போல அவர் எழுந்தருளிவருவார்.

மனப்பற்றுதல்.—இஸ்பிரீத்து சாந்துவே, நான் எப்போதும் என் பரிசுத்த அந்தஸ்துக்கு ஒத்தபடி நடக்கப்

பூலோக ஆசைக்கு மேலாக உம்முடைய ஆவியைக்கொண்டு என்னை உயர்த்தியருளும்.

பிரதிக்கினை.—இஸ்பிரீத்து சாந்துவின் வருகைக்கும் ஏவுதலுக்கும் நாம் பாத்திரமுள்ளவர்களாயிருக்க எப்போதும் விசேஷமாய் இன்று பிரயாசப்படுவோமாக.

2-ம் பிரிவு

நாக்குகளின் அடையாளம்

தியானம்.—இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரன் எழுந்தருளிவருகிறாரென்பதை அப்போஸ்தலர்கள் அறிந்தவுடனே அக்கினி மயமாய்ப் பிரிந்த நாக்குகள் காணப்பட்டுத் தங்கள் ஒவ்வொருவர் மேலேயும் நிற்கக் கண்டார்கள். இஸ்பிரீத்து சாந்துவானவர் அப்போஸ்தலர்கள் மேலே இறங்கிவந்ததற்கு அடையாளமாக நாக்குகளைச் சர்வேசுரன் தெரிந்துகொண்டதேன்? சகல சனங்களுக்குந் தமது வாக்கியங்களைப் பிரசங்கம் பண்ண அப்போஸ்தலர்கள் குறிக்கப்பட்டதினாலேயும், இந்த மேலான அலுவலை யோக்கியமாய் நிறைவேற்றுவதற்கான திறமையை இஸ்பிரீத்து சாந்துவானவர் மாத்திரம் அவர்களுக்குக் கொடுக்கக் கூடுமானவராயிருப்பதினாலேயும், இதற்கு அவர்கள் நாவானது எத்தனமாயிருக்க வேண்டியதினாலேயும் அவர் நாக்குகளைத் தெரிந்துகொண்டார். ஆகையால் அவர்கள் இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்பட்டுப் பற்பல பாஷைகளைப் பேசத் துடங்கினார்களென்று அப்போஸ்தலர்கள் நடபடி ஆகமத்தில் சொல்லியிருக்கிறதுபோல, பாஷைகளின் வரம் அவர்களுக்கு அச்சமயத்தில்தானே கொடுக்கப்பட்டது (அப். நட. 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அப்போஸ்தலர்களுடைய நாவைப்போலவும், அப்போஸ்தலர் அலுவலைச் செய்கிற மற்ற சற்குருக்களுடைய நாவைப்போலவும், நம்முடைய நாவானது மேலானவைகளைப் போதிக்கக் குறிக்கப்படவில்லையாக்கும்; ஆனால் எல்லாரும் விசேஷமாய்ச் சந்நியாச வார்த்தைப்பாட்டினால் தேவ ஊழியத்துக்கும் பிறர் ஈடேற்றத்துக்கும் முழுதும் ஒப்புக்கொடுக்கப்பட்ட நாமும், அது சர்வேசுரனுடைய தோத்திரத்துக்கும் மனிதருடைய நன்மைக்கும் உதவியாயிருக்கச் செய்யவேண்டும். பாஷைகளின் வரத்துக்கு அத்தியாவசியமான பேசும்வரம் சர்வேசுரன் மனுஷர்களுக்குக் கொடுத்த வரங்களிலெல்லாம் உந்நதமான வரம்; இதை எப்படிப் பிரயோகம்பண்ணினோமென்றும் விசேஷமாய் எப்படித் துர்ப்பிரயோகம் பண்ணினோமென்றும் ஆண்டவர் கண்டிப்பான கணக்குக் கேட்பார் என்பதையும், வார்த்தையில் தவறாதிருப்பது எவ்வளவு அபூர்வம் என்பதையும் நன்றாய் யோசித்துப்பார். ஒருவன் வார்த்தையில் தவறாதிருப்பானாகில், அவன் உத்தம மனுஷன் என்கிறார் அர்ச். இயாகப்பர் (3. அதி). யோசனை பண்ணவும் ஆத்தும சோதனை செய்யவும் இதில் தகுந்த பொருள் உண்டு.

மனப்பற்றுதல்.—சந்நியாசத்துக்குத் தகாதவிதமாய் நாக்கை உபயோகித்ததைப்பற்றிப் பொறுத்தல் கேட்டு, இனிமேல் அது ஆண்டவருடைய மகிமைக்கு ஏற்ற எத்தனமாயிருக்கத்தக்கதாக அதை அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

பிரதிக்கினை.—நாம் பேசும்போது நன்மாதிரிகைக்கானதைக் கலந்து பேசப் பிரதிக்கினை செய்வோமாக.

3-ம் பிரிவு

அக்கினி அடையாளம்

தியானம்.—அந்த நாக்குகள் அக்கினியைப்போல் இருந்தனவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. பிரகாசம் தருவதும், சூடுண்டாக்குவதும், விரிவாக்குவதும், சுத்தி செய்வதும், சுட்டெரிப்பதும் அக்கினியின் தன்மை. அசனசாலையில் கூடியிருந்த அப்போஸ்தலர்களிடத்திலும் சீஷர்களிடத்திலும் இஸ்பிரீத்து சாந்துவானவர் செய்தருளினவை இத்தன்மைக்குரியவைகளே. விசுவாசத்தின் தெளிவான ஒளியைக்கொண்டு அவர்களைப் பிரகாசிப்பித்தார்; தேவ சிநேகம், பிறர்சிநேகமென்கிற பரிசுத்த உஷ்ணத்தினாலே அவர்கள் இருதயம் பற்றியெரியச்செய்தார்; சர்வேசுரனுடைய மட்டின்மைபொன்றே அவர்களுடைய இரு

தயத்தை இனிமேல் பூர்த்திபண்ணக்கூடியதாகவும், உலகமெல்லாம் அவர்களது பத்திவேகத்துக்குப் போதாதாகவும், தோன்றும்படி. அவர்கள் இருதயத்தை விரிவாக்கினார். அவர்களிடத்தில் உள்ள அற்பக் குற்றங்களைமுதலாய்ச் சுட்டெரித்து அவர்களைச் சுத்தமாக்கித் தம்மோடு அவர்கள் ஒரே மனதுள்ளவர்களாயிருக்கும்படி. அவர்களைத் தம்மிடமாய் உருமாற்றினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இஸ்பிரீத்து சாந்துவானவர் இன்னமுந் தினந்தோறும், விசேஷமாய்ப் பெந்தைக்கோஸ்துத் திருநாள்காலத்திலே, தம்மைப் பெற்றுக்கொள்ளும் பாக்கியமுள்ளவர்களிடத்தில் விளைவிக்கும் நன்மைகளும் இவ்விதமானவைகளே. இந்தப் பாக்கியம் நமக்குங் கிடைக்கக்கடவது! நாம் செய்த நவநாளும், தம்மை நமக்கு அளிக்கவேண்டுமென்று இஸ்பிரீத்து சாந்துவானவருக்குள்ள ஆசையும் இந்தப் பாக்கியம் நமக்குக் கிடைக்குமென்ற பூரண நம்பிக்கையை நம்மிடத்தில் விளைவிக்க வேண்டும். நாம் கேட்கிறதற்கு அளவாக கொடுக்கப்படும்.

சம்பாஷணை.—தேவமாதாவோடு சம்பாஷணை செய், அவள் அப்போஸ்தலர்களுக்குஞ் சீஷர்களுக்கும் இஸ்பிரீத்து சாந்துவின் ஏராளமான வரங்களை அடைந்து கொடுத்ததுபோல், அவைகளை விசேஷமாய் அவைகளில் நமக்கு அதிக அவசரமானதை அடைந்து தரும்படி அவளை மன்றாடுவோமாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கடுத்த புதன்

அப்போஸ்தலர்களிடத்தில் இஸ்பிரீத்து சாந்துவினால் செய்யப்பட்ட அற்புதங்கள்

ஆயத்தச் சிந்தனை.—அப்போஸ்தலர்களிடத்தில் நிறைந்திருந்த தேவ அக்கினிச் சுவாலை அவர்களுடைய கண்களில் விளங்குகிறதைக் காண்கிறதாக உருபிகரித்துக் கொள்வோமாக.

தியானச் செபம்.—அப்போஸ்தலர்களிடத்திலுஞ் சீஷர்களிடத்திலும் இஸ்பிரீத்து சாந்துவானவர் வருவித்த அற்புதமான பலன்களில் நமக்கும் பங்கு கிடைக்க கேட்போமாக.

முதல் பிரிவு

அப்போஸ்தலர்களிடத்தில் விளங்கின ஆச்சரியமுள்ள மாற்றம்

தியானம்.—அக்கினி நாக்குகள் அப்போஸ்தலர்கள் மேல் காணப்பட்ட க்ஷணத்தில்தானே, அவர்கள் எல்லாரும் இஸ்பிரீத்து சாந்துவினாலே நிரப்பப்பட்டு திடீரென்று வேறே மனுஷர்களானார்கள். அறிவீனரும், பயப்படுகிறவர்களும், ஆங்காரமுள்ளவர்களும் நிலையில்லாதவர்களும், பாவிகளுமாயிருந்த அப்போஸ்தலர்கள் திடீரென்றாற்போல ஆச்சரியமான விதமாய்க் கல்வியுந் திடனுந் தாழ்ச்சியும் நிலைமையும் அர்ச்சியசிஷ்டதனமும் நிறைந்தவர்களாகி சகலபாவ அசுத்தங்களில் நின்று சுத்தமாக்கப்பட்டு தேவ இஷ்டப் பிரசாதத்தில் நிலைத்தவர்களானார்கள். இயேசுநாதர் மூன்று வருஷகாலமாய்ச் செய்யாதிருந்ததை இஸ்பிரீத்து சாந்துவானவர், அப்போஸ்தலர்களுடைய பிரயாசையின்றி, அவர்களிடத்தில் ஒரு க்ஷணத்திலே நிறைவேற்றினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இஸ்பிரீத்து சாந்துவானவர் இவ்வித அற்புதங்களை (கண்ணுக்குப் புலப்படாவிடினும்) அடிக்கடி தமது ஏவுதலுக்குக் கீழ்ப்படிகிற கிறீஸ்துவர்களிடத்தில், விசேஷமாய் அவர்கள் நல்ல ஆயத்தத்தோடு தேவத்திரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொள்ளுகிறபோது, இக்காலத்திலே முதலாய்ச் செய்துகொண்டுவருகிறார். நீயும் இவைகளைப் பெறுகிறாய்; ஆயினும் தேவ காரியத்திலே இன்னமும் அதிக தெளிவில்லாதவனும், சோதனை சமயத்திலே மெத்தப் பலவீனனும் நிலையில்லாதவனுமாயிருக்கிறதாகவும், எப்பொழுதும் முன் செய்த குற்றங்குறைகளிலேயே தவறிவிழுகிறதாகவும், எப்போதும் ஏறக்குறைய ஒரே விதமான ஞான அசமந்தம் இருக்கிறதாகவும் முறையிடுகிறாய். ஆனால் இது யாருடைய குற்றம்? உன்குற்றம்தானே; உனது அசட்டைத்தனமும்.

தேவத்திரவிய அநுமானங்களைப் பெறுவதில் உனக்குச் சில வேளை அப்பியாசமாய்ப்போன பக்தியின்மையும் இதற்குக் காரணமல்லவோ?

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் சமுகத்தில் உன்னைத் தாழ்த்திக்கொள். நீ பக்திக்குறைவாயிருந்தும், அடிக்கடி விசேஷமாய்த் தேவநற்கருணை வாங்கும்போது உன்னிடத்தில் தோன்றின நல்ல உணர்ச்சிகளைப்பற்றி அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

பிரதிக்கினை.—தேவத்திரவிய அநுமானங்களைப் பெறுகிறதற்கு எப்போதும் நல்ல ஆயத்தஞ் செய்வாயாக.

2-ம் பிரிவு

அப்போஸ்தலர்களிடத்தில் விளங்கின ஆச்சரியமான சுறுசுறுப்பு

தியானம்.—அப்போஸ்தலர்கள், சர்வேசுரனுடைய மகிமையையும் மகத்துவத்தையும் பிரசித்தப்படுத்துவதற்காகவும், அவரது திருக்குமாரனாகிய இயேசுநாதரைப் பிறர் அறிந்து சிநேகிக்கும்படியாகவும், தங்கள் தேசத்தார் சர்வேசுரனது பரம போதனையைக் கைக்கொண்டு அநுசரித்து அவரை மகிமைப்படுத்தும்படி பக்தி வேகம் நிறைந்த மொழிகளால் அவர்களைத் தூண்டுவதற்காகவும், தங்களுக்குக் கிடைத்த புத்தியின் வரத்தையும் பாஷை வரத்தையும் முதன்முதல் உபயோகித்தார்கள். உலக நோக்கத்துக்கு முற்றும் எதிரிடையான இஸ்பிரீத்து சாந்துவின் பாஷை இது. உலக நோக்கத்தின் பாஷை படிப்பிக்கிறதென்ன? நம்மையும் நமது கிரிகைகளையும் நாமே பாராட்டி அதினால் நம்மை உயர்த்தவும் மனிதர் முன்பாக நம்மை மகிமைப்படுத்தவும் ஏவுகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உனது வார்த்தைகளை ஏவுகிறது எந்த ஞானம்? தேவ ஞானமோ உலக ஞானமோ என்று பரிசோதித்துப்பார். உன் பேச்சுகளில் சர்வேசுரனையும் அவர் தயவையும் ஆச்சரியமான பராமரிக்கையையுங் குறித்துச் சம்பாஷித்து, இயேசு

நாதர் போதித்த வேதத்தையும் அவருடைய திருச்சபையையும் பிறர் சிநேகிக்கவும் சிதறிப்போன ஆடுகளைத் திரும்ப அவர் மந்தையில் சேர்க்கவும் பிரயாசப்படுவாயாகில், இஸ்பிரீத்து சாந்துவின் பாஷையைப் பேசுகிறாய் என்கலாம்; அவர் உன் இருதயத்தை ஆண்டு நடப்பிக்கிறாரென்பதற்கு இது அத்தாட்சி. ஆனால் இவ்விதமானதொன்றும் உன்னிடத்தில் விளங்காமல், உன் வார்த்தையில் சிலாக்கியமும் தற்புகழ்ச்சியுங் காணப்படுமாகில், உன் உள்ளத்தில் இஸ்பிரீத்து சாந்துவானவர் இல்லையென்கிறதற்கு இதுவே திஷ்டாந்தமாகும். உன்னைத் தூண்டிவிடுகிற ஞானம் இன்னதென்று உன் வார்த்தைகளைக்கொண்டே அறியலாம். இதுவரையில் சொன்னதைக்கொண்டு நீயே உன்பேரில் தீர்வையிட்டுக்கொள்.

மனப்பற்றுதல்.—இஸ்பிரீத்து சாந்துவானவர் உன் இருதயத்தில் இராச்சியபாரம் பண்ணவும் அவர்தாமே உன் நாவை நடத்தி அர்ச்சிக்கவும் அவரைக் கெஞ்சி மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—சர்வேசுரனை மகிமைப்படுத்தி, வேதத்தின் அழகையும் அதனால் வரும் பிரயோசனங்களையும் பாராட்டுவதற்கான சமயம் கிடைக்காதாவென்று ஆவலாய்த் தேடிப்பார்.

3-ம் பிரிவு

அப்போஸ்தலர்களிடத்தில் விளங்கின ஆச்சரியமான உறுதி

தியானம்.—அப்போஸ்தலர்களுக்கிருந்த பக்தி வேகம், மற்ற மனிதருடைய துர் ஆசாபாசங்களெல்லாம் அவர்களுக்கு விரோதமாய் எழும்பக் காரணமாயிற்று. காமாதுரர் அவர்களைப் பழித்து நகைத்தார்கள்; யூத வேதபாரகர் அவர்களைத் தூற்றினார்கள்; நாட்டின் பிரபுக்கள் அவர்களைச் சிறையிலிட்டு, சாட்டையால் அடித்து, இயேசுவின் நாமத்தை இனிமேலும் பிரசங்கிக்கத் துணிந்தால், அவர்களைக் கொன்றுபோடுவதாகவும் மிரட்டினார்கள். ஆனால் அப்போஸ்தலர்கள் அஞ்சி அவதைரியப்படு

வதற்கு மாறாய், உயிர்த்த இயேசுநாதரைக்குறித்து இன்னும் அதிக உற்சாகமாய்ப் பிரசங்கித்து, அநியாயமாய்த் தங்களை தடுத்தவர்களுக்குச் சொன்ன மறுமொழியாவது: "சர்வேசுரனுக்குக் கீழ்ப்படிகிறதைவிட உங்களுக்குக் கீழ்ப்படிகிறது தேவ சந்நிதியிலே நியாயமாயிருக்கிறதோவென்று நீங்களே நிதானித்துப்பாருங்கள்; ஏனெனில் நாங்கள் கண்டவைகளைப்பற்றி மவுனமாயிருக்க எங்களால் கூடாது. மனிதர்களுக்குக் கீழ்ப்படிகிறதைவிடச் சர்வேசுரனுக்குத்தான் கீழ்ப்படிவது அவசியம்" (அப். நட. 4-ம் அதி. 5-ம் அதி.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் தேவ சுறுசுறுப்புக்கடுத்த ஞானத்துக்கும் ஏவுதலுக்குங் கீழ்ப்படிவோமாகில், அப்போஸ்தலர்களுக்குச் சம்பவித்ததுபோல, நமக்கும் சம்பவிக்கும்: நம்மை அநியாயமாய்ப் பல தடவைகளில் குறைகூறி, பரியாசம்பண்ணி, ஆவலாதி சொல்லித் துன்பப்படுத்துவார்கள். இவைகள் யாதொன்றுக்கும் அஞ்சி மயங்கக்கூடாது. ஏனென்றால் உலகம் நம்மைக் குறைகூறுவதும் அல்லது அங்கீகரிப்பதும் நமது நடத்தைக்குப் பிரமாணமன்று, தேவ சட்டமும், நமது ஒழுங்குகளும், நமது சிரேஷ்டர்கள் அல்லது ஆத்தும குருவானவர் சொல்லும் புத்தியுமே நமக்குப் பிரமாணமாகும். இந்தப் பிரமாணத்தை எப்போதும் அநுசரித்துவந்திருக்கிறோமா? இதில் பிரமாணிக்கமாயிருப்போமாகில், தவறுதலின்றி முழு உறுதியுடன் நடந்துகொள்வோம்; நமது பத்தி வேகம், விவேகமும் நிலைமையும் ஆண்டவரது ஆசீர்வாதமும் நிறைந்ததாய், நமக்கும் பிறருக்கும் இரட்சண்ணியத்துக்குரிய திரளான ஞானப் பலனை வருவிக்கும்.

சம்பாஷணை.—முந்தின தியானத்தில் சொல்லியிருக்கிறதுபோல, தேவமாதாவோடு சம்பாஷணை செய்வாயாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கடுத்த—வியாழன்

அர்ச். இராயப்பர் செய்த முதல் பிரசங்கம்

ஆயத்தச் சிந்தனை.—அப்போஸ்தலர்கள் சொல்லும் பிரசங்கங்களைக் கேட்க ஆசையோடு வந்திருந்த திரளான யூத ஜனக்கூட்டத்துக்கு முன்பாக அப்போஸ்தலர்கள் இருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—தேவ வாக்கியத்தை ஏராளமான நன்மை பயக்கத்தக்கவிதமாய் அறிவிக்கவும் அல்லது கேட்கவும் வரப்பிரசாதம் கேட்பேனாக.

முதல் பிரிவு

அர்ச். இராயப்பர் செய்த பிரசங்கத்தைக் கேட்டவர்கள்

தியானம்.—இராப்போசனசாலையிலே நடந்த அற்புதங்களின் செய்தி உடனே பட்டணமெங்கும் பரம்பவே, திரளான ஜனங்கள் இந்த விநோதத்தைப் பார்க்கும்படி ஓடிவந்து அப்போஸ்தலர்களைச் சூழ்ந்துகொண்டார்கள்; வருஷத்துக்கொருமுறை தேவாலயத்தைச் சந்திக்கவேண்டிய கடமையை நிறைவேற்றுவதற்காக அச்சமயம் எத்திசைகளிலும் நின்று வந்த பத்திமான்களாகிய யூதர்கள் அப்போது எருசலேம் நகரத்தில் இருந்தார்கள் (அப். நட. 2). அர்ச். இராயப்பர் இது தகுந்த சமயமென்று நினைத்துப் பிரசங்கஞ்செய்யத் துவக்கினார். அங்கே கூடியிருந்த ஜனங்களோ, வெவ்வேறு தேசத்தாரும் வெவ்வேறு பாஷை பேசுகிறவர்களுமாயிருந்தார்கள். அப்போஸ்தலர்களுக்குத் தலைமையானவர் இவர்களுக்குப் பிரசங்கம் செய்ததில், உலக முழுவதுக்குமே பிரசங்கம் பண்ணினார் என்கத்தகும். ஏனெனில் அந்நிய நாடுகளிலிருந்து வந்திருந்த அநேகம் பேர், தங்கள் ஜென்ம நாட்டிற்குத் திரும்பிப் போனபிறகு, அப்போஸ்தலர் தங்களுக்கு அறிவித்த இரட்சணியத்துக் கடுத்த வாக்கியங்களையும் தங்களில் ஒவ்வொருவரும் தத்தம் பாஷையில் அவைகளைக் கண்டுபிடித்த அதிசயமான

அற்புதத்தையும் தாங்கள் சென்றவிடமெல்லாம் வெளிப்படுத்தியிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இம்மேரையாய் அப்போஸ்தலர்கள் பல இடங்களுக்கும் பிரிந்துபோகுமுன்னமே, சுவிசேஷ வித்தானது உலகமெங்கும் பரவிப்போயிற்று. பின்னால் அப்போஸ்தலர்கள் அங்கங்கே சுற்றித்திரிந்து பிரசங்கம் செய்தபோது, மிகவும் பக்தியுள்ள கிறீஸ்துவர்கள் எங்கும் உண்டாகும்வண்ணம் அந்த விதை முளைத்துத் துளிர்க்கும்படி மாத்திரம் செய்யவேண்டியிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ பராமரிக்கையானது, கோருகிற கருத்துக்கும் மனிதர் பேரில் சுமத்துகிற கடமைக்கும் அல்லது அலுவலுக்கும் தகுந்த வழிகளைத் திட்டம் செய்கிறதைக் கண்டு ஆச்சரியப்படுவாயாக. உலகமெங்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துச் சாதாரண சத்தியவேதத் திருச்சபையை ஸ்தாபிப்பது அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்ட அலுவல். இதைச் செய்துமுடிக்க அவர்களால் எப்படி சாத்தியப்படும்? நாம் இப்போது ஆராய்ந்துபார்த்த ஆச்சரியத்துக்குரிய விசேஷங்களின் உதவியைக்கொண்டு இது நிறைவேறும். ஆகையால் ஆச்சரியமுள்ள தேவ பராமரிக்கையின்பேரில் நம்பிக்கை வைக்கவேணும். கீழ்ப்படிதல் நமதுமேற் சுமத்துங் கடமைகளிலும் சாங்கோபாங்கத்தை அடைய நாம் கடினமாய்ப் பிரயாசப்படவேண்டிய காரியங்களிலேயுஞ் சர்வ வல்லமையுள்ள தேவ பராமரிக்கை நமக்கு ஒத்தாசையாயிருக்குமென்று நம்பவேணும். அது நமது சக்திக் குறைவை நிவர்த்தித்து, அவசியமானால், புதுமையாலும் நமக்குச் சக்தியைத் தரும்.

மனப்பற்றுதல்.—நம்பிக்கையோடேயுங் கீழ்ப்படிதலோடேயும் எப்போதைக்கும் உன்னை முழுதுந் தேவ பராமரிக்கைக்கு ஒப்புக்கொடுப்பாயாக.

பிரதிக்கினை.—" சர்வேசுரன் பராமரிப்பார் " என்று (ஆதி. 22) அபிரகாம் சொன்ன வாக்கியத்தைக் கஷ்டகாலத்தில் நினைத்துக்கொள்.

2-ம் பிரிவு

அர்ச். இராயப்பர் செய்த பிரசங்கம்

தியானம்.—இவர் செய்த பிரசங்கத்தின் பொருளையும் வகையையும் யோசித்துப்பார்ப்போமாக. இப்பிரசங்கத்தின் பொருள் என்னவென்றால், இஸ்பிரீத்து சாந்துவானவர் எழுந்தருளிவந்து செய்யும் அற்புதங்களைப்பற்றியும், வேத முறைமையிலே குறிக்கப்பட்ட மேசியாவாகிற இயேசு நசரேனுவுடைய சீவியம், மரணம், உத்தானமாகிய இவைகளைப்பற்றியும் வேத புஸ்தகத்தில் நின்று எடுத்துக் கூறின பற்பல வாக்கியங்கள்தான். இவ்வாக்கியங்களினால் குறிக்கப்பட்ட மேசியாவைத்தானே நீங்கள் நிந்தித்துச் சிலுவையில் அறைந்து கொடியபாதகனைப்போல உபாதித்துக் கொலைப்படுத்தினீர்களென்று அங்கே கூடியிருந்த யூதர்களைப் பார்த்துப் பிரசங்கித்தார். பிரசங்கத்தின் வகையோவெனில், ஆச்சரியமுள்ள துணிவும், வார்த்தையில் தெளிவான உறுதியும் உச்சிதமான விவேகமுங் கலந்துள்ளது. அவர் தாம்செய்த பிரசங்கத் துவக்கத்தில் யூதர்கள் செய்த அநியாயக் கொடுமையைக் காட்டி அவர்களைக் கண்டிக்கிறதாயிருந்தால், அவர்கள் தாம் சொல்லும் பிரசங்கத்துக்குக் காதுகொடாமல், கோபத்தினால் ஓடிப்போவார்களென்று அறிந்து, முந்தமுந்தத் தீர்க்கதரிசிகள் இயேசுநாதரைப்பற்றிச் சொல்லியிருந்த வேத வாக்கியங்கள் இவர்கள் புத்தியில் பதியும்படி செய்கிறார். இதின்பின் யூதர்கள் தங்கள் மூப்பர்கள் ஆசாரியர்களாலே மோசம்போய்ச் சீவியத்துக்குக் காரணரான தங்கள் இரட்சகரைக் கொலைசெய்யவேணுமென்று மெய்யாகவே தாங்கள்தானே கேட்டதாக இரக்கமுள்ள ஆசானைப்போல அவர்களுக்குக் காண்பிக்கிறார். யூதர்கள் தாங்கள்செய்த அக்கிரமத்தை நினைத்து மனஸ்தாபப்படவுந் தங்கள்மேல்தானே குற்றஞ் சாட்டிக்கொள்ளவும், இதுவே தகுந்த உபாயமாயிருந்தது. அதினால் மெய்யாகவே அநேகர் மனந்திரும்பினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ யாதொருவனைக் கண்டிக்க அல்லது தண்டிக்கவேண்டியதா

யிருந்தால், இஸ்பிரீத்து சாந்துவினால் ஏவப்பட்ட அர்ச் இராயப்பருடைய நடக்கையைக் கண்டுபாவிப்பாயாக. அதெப்படியென்றால், முந்தமுந்தக் குற்றவாளி தன் குற்றத்தை அறிந்து அதை ஒத்துக்கொள்ளவும் அதின் கனம் அவனுக்குத் தோன்றவும் நீ பிரயாசப்படவேண்டியது; ஆனால் கடினமுங் குத்தலுமான வார்த்தையை ஒருக்காலும் உபயோகியாதே. யோசனையின்றி, முன் கோபத்தினால் அவன் அவ்விதம் செய்தானென்று எண்ணிக்கொள். அப்போது, அவன் இருதயத்தை நீ கைவசப்படுத்திக்கொள்ளுவாய்; உன் மனம்போலே நீ அவனை நடப்பித்துக்கொள்ளலாம். உன்னைப்பிறர் கண்டிக்கும்போது, வருத்தமுள்ள கடமையைச் செலுத்துந் தகப்பனைப்போலவும் உன் நன்மையைப்பற்றி மாத்திரம் இப்படி நடத்துகிற சினேகிதனைப் போலவும் அவர்களை எண்ணிக்கொள். ஞானம் நிறைந்த இவ்வொழுங்குகளை எக்காலமும் அநுசரித்து வந்திருக்கிறாயா?

மனப்பற்றுதல்.—எப்போதும் இவைகளுக்கொத்த வண்ணம் நடப்பதற்கு அவசரமான உதவி சகாயங்களைக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—ஒருவனை நீ கண்டிக்கும்முன்னே சற்று நேரம் யோசித்துப்பார்க்கவேணும். நீ தண்டனைப்படப் பாத்திரவானாகில், "நீதிமான் தன்னைத்தானே முந்த முந்தக் குற்றஞ் சாட்டிக்கொள்ளுவான்",னென்று எழுதியிருக்கிறபடி உன்மேலே முந்திக் குற்றஞ் சாட்டிக்கொள்ளவேணும் (சாலோ. வாக்கியம் 18).

3-ம் பிரிவு

அர்ச். இராயப்பர் செய்த பிரசங்கம் அநுகூலமானதின்பேரில்

தியானம்.—அர்ச். இராயப்பர் அடைந்த அநுகூலம் ஆச்சரியமானது:-மூவாயிரஞ் சனங்கள் வேத சத்தியத்தை உணர்ந்து, அப்போஸ்தலர்கள் கையில் தங்களை ஒப்புக்கொடுத்து, ஞானஸ்நானம் பெற்று இஸ்பிரீத்து சாந்துவின்

வரங்களையும் அடைந்தார்கள். இவர்கள் மாதிரிகையைப் பின்பற்றி, வேறே ஐயாயிரம்பேர் கொஞ்சத்துக்குள்ளே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதினால், திருச்சபை ஏற்பாடாகி ஸ்தாபிக்கப்பெற்றது. அப்போஸ்தலர்கள் காலத்தில்தானே அது உலகமெங்கும் பரம்பிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் நேர்மையுள்ள கருத்தோடே தொடங்கிக் கீழ்ப்படிதலினிமித்தம் செய்கிற ஆத்தும இரட்சணிய அலுவல்களும் பிறர்சிநேகக் கிரிகைகளும் அநுகூலம் பெறுமோவென்று ஒருபோதும் அவநம்பிக்கைப்படவேண்டாம். ஆகிலும் நம்முடைய சொந்தப் பிரயாசத்தை நம்பாமல், இஸ்பிரீத்து சாந்துவின் அநுக்கிரகத்தின் பேரில் நாம் நம்பிக்கை வைக்கவேணும்.

சம்பாஷணை.—அர்ச் இராயப்பரோடு சம்பாஷணை செய்வாயாக.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கடுத்த—வெள்ளி

முந்தின கிறீஸ்துவர்களிடத்தில் இஸ்பிரீத்து சாந்துவின் அநுக்கிரகத்தினால் உண்டான அற்புதமுள்ள பரிசுத்ததனம்.

ஆயத்தச் சிந்தனை.—ஆதி கிறீஸ்துவர்களின் பத்தியுள்ள சபையானது அப்போஸ்தலர்களோடு தேவ தோத்திரம் பாடிக்கொண்டிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—திவ்விய இரட்சகருடைய சீஷர்களிடத்தில் இஸ்பிரீத்து சாந்துவானவர் விளங்கச்செய்த அற்புதமான பரிசுத்தத்தனத்தை உன்னிடத்திலும் புதுப்பிக்க அவரை மன்றாடுவாயாக.

முதல் பிரிவு

அற்புதமான பரித்தியாகம்

தியானம்.—பூர்வீக கிறீஸ்துவர்களுக்கு ஏராளமாய்க் கொடுக்கப்பட்டிருந்த ஞானம், புத்தியென்கிற வரங்கள் இலௌகீக ஆஸ்தி, மகிமை சோபனங்களின்பேரில் உண்டான அவர்கள் நினைவையும் பற்றுதலையும் முழுதும் மாற்றிப்போட்டன; முந்தி அவர்கள் ஆசைப்பட்ட காரியங்களெல்லாம், பின்பு அவர்கள் கண்ணுக்கு வீண் ஏமாற்றமுமாய் நித்திய பேரின்ப நன்மை அடைகிறதற்கு விக்கினமுமாய்த் தோன்றின. இதைப்பற்றி அவர்கள் தங்கள் ஆஸ்திகளையெல்லாம் விற்று, அதினால் கிடைத்த பணத்தை அப்போஸ்தலர்கள் பாதத்திலே வைப்பார்கள். அவர்கள் அதை ஒவ்வொருவனுடைய அவசரத்துக்குத் தக்கது பகிர்ந்து கொடுப்பார்கள். இப்படி அவர்களுக்கு எல்லாம் பொதுவாயிருந்தது. (அப். நட. 2-ம் அதி., 4-ம் அதி.) இம்மேரையாய் அவர்கள் இலௌகிகப் பற்றுதல் கவலை எல்லாவற்றையும் விட்டுப் பரலோகத்துக்கடுத்தவைகளை மாத்திரம் நாடித் தேடினார்கள். இவர்கள் எல்லாரும் வேறே விக்கினமின்றி ஒருமனப்பட்டுச் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்துகொண்டு மாறாத சமாதானத்தையுஞ் சந்தோஷத்தையும் அனுபவித்துக்கொண்டு வந்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கிறீஸ்துவனுக்குரிய சாங்கோபாங்கத்தின் அஸ்திவாரமானது, இலௌகீக ஆஸ்திபாஸ்தியின்பேரில் உள்ள பற்றுதலை நீக்குவதில் அடங்கி இருக்கிறதென்று இஸ்பிரீத்து சாந்துவானவர் நாமும் கண்டுபிடிக்கச் செய்திருக்கிறார். இந்த முதலாவது வரப்பிரசாதத்தோடு, இன்னும் வேறொன்றையும் சேர்த்துத் தந்திருக்கிறார்:—திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற ஒரு சந்நியாச சபையிலே தரித்திரமென்கிற வார்த்தைப்பாட்டினாலே எல்லாத்தையும் எப்போதைக்குந் துறந்துவிடவேணுமென்கிற நினைவையுந் திடனையும் நமக்குத் தந்தருளினார். ஆ! பாக்கியமான தரித்திரமே! ஆ! பாக்கியமான சந்நியாச அந்தஸ்தின்

சீவியமே! "யாதொருவன் என் பேராலே தன் வீடு, காணி, பூமி முதலியதெல்லாத்தையும் விட்டுவிடுவானாகில், அவன் இம்மையில் ஒன்றுக்கு நூறு பங்கும் மறுமையில் நித்திய சீவியமும் அடைவான்" என்று தேவசுதன்தாமே நமக்கு வாக்களித்திருக்கிற நித்திய சீவிய பேரின்ப. பாக்கியத்தைப் பூர்வீக கிறீஸ்துவர்களைப்போல் நாம் அடையுங் காலம் வருந்தனையும் இம்மையில் அவர்கள் அனுபவித்த பாக்கியத்தையும் நன்மைகளையும் இந்த சீவியம் நமக்கு அளித்திருக்கின்றது (மத். 19).

மனப்பற்றுதல்.—ஆண்டவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்து ஞான சந்தோஷமுள்ளவர்களாயிருப்போமாக. சந்நியாசத்தின் கோட்டை மதிலென்று நியாயமாய்ச் சொல்லப்பட்ட தரித்திரமென்கிற வார்த்தைப்பாட்டைப் புதுப்பிப்பாயாக.

பிரதிக்கினை.—தரித்திரத்துக்கடுத்த ஒழுங்குகளை அநுசரிக்கிறதில் நான் எப்படிப் பிரமாணிக்கனாயிருந்தேனென்று வினாவி விசுவாசத்தோடுஞ் சிநேகத்தோடும் அவைகளையெல்லாம் அநுசரிக்கப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

அற்புதமான பிறர்சிநேகம்

தியானம்.—பூர்வீக கிறீஸ்துவர்களிடத்தில் விளங்கின தரித்திரமென்னும் புண்ணியத்தைப்போல உலகத்துக்கு நவமாய்க் காணப்பட்ட வேறொரு காட்சி ஏதென்றால், அவர்களிடத்திலிருந்த பிறசிநேகமும் அந்நியோந்நிய ஒன்றிப்புந்தான். அவர்கள் வமிசத்திலுங் குணத்திலும் ஆசாரத்திலும் வித்தியாசமுள்ளவர்களாயிருந்தாலும், அவர்கள் எல்லாரும் நினைவிலும் கருத்திலும் ஒன்றித்திருந்ததினால், சகலரும் ஒரே இருதயமும் ஆத்துமமுள்ளவர்கள்போலத் தோன்றினார்கள் (அப். நட 4); எல்லாரும் ஒருவாக்கொரு மொழியாய் ஒன்றித்துப் பொதுவில் ஜெபம் பண்ணி, ஒரே பந்தியில் அசனஞ்செய்து, ஒரே சந்தோஷத்துக்குப் பங்காளிகளாயிருந்து, தங்களைப் பரித்தியாகம் பண்ணுகிறதற்

கும் ஒருவருக்கொருவர் உதவிபுரிவதற்கும் எப்போதும் ஆயத்தமாயிருந்தார்கள். நவமான இந்தப் புனித காட்சியைக் கண்ட அஞ்ஞானிகள் மனதில் ஆழ்ந்த யோசனையை உண்டுபண்ணிற்று; மனிதர்களை இவ்வளவு உத்தமரும் பாக்கியவான்களுமாக்கின வேதம் தெய்வீகமானதென்று அவர்கள் நிர்மானித்து, அந்தப் பாக்கியம் தங்களுக்கும் கிடைக்கும்படி தினந்தோறும் புதிதாய் அநேகர் மனந்திரும்பி அவர்களோடு சேர்ந்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ கிரிகைகளிலுள்ள செழிப்பானது எத்தனை காலஞ் சென்றாலும் வரண்டு போகாது. சுய பட்சம் நிறைந்த உலோகத்துக்கு மிகுந்த ஆச்சரியமாய்த் தோன்றிப் பூர்வீக கிறீஸ்தவர்களிடத்தில் இஸ்பிரீத்து சாந்துவானவர் உண்டுபண்ணின சகோதர சிநேகமும் ஒற்றுமையும் இக்காலத்திலுஞ் சந்நியாச மடங்களில் நிலைத்துவருகின்றன. இதற்கு நாமே பாக்கியமான சாட்சிகளாயிருக்கிறோம். ஆகையால் பொது சீவியத்துக்குப் பழுது வராதபடிக்கு நாம் விசேஷ எச்சரிக்கையாய் நடந்து நமது நன்றியறிந்ததனத்தைக் காண்பிப்போமாக. இதினிமித்தம் மெய்யான விக்கினம் வந்தாலொழியச் சகல ஒழுங்குகளையுஞ் சரியாய் அநுசரித்து, அபிப்பிராய பேதத்தை அகற்றி, நமக்கென்று ஒரு விசேஷ உத்தரவைக் கேளாமல், தனிச் சிநேகத்தைத் தவிர்த்துத் தள்ளி எல்லாத்திலும் மற்றச் சகோதரரைப் போல நாமும் நடக்கவேணுமென்று ஆசைகொண்டு, சுபாவத்துக்கு மேற்பட்ட சிநேகத்தினாலே நேர்மையான மனதோடுங் கருத்தோடும் எல்லாரையுஞ் சிநேகித்து அவசியம் நேர்ந்தால், நமது இளைப்பாற்றியையும் சவுகரியத்தையு முதலாய்க் கவனியாமல், எல்லோருக்கும் ஊழியம்பண்ண எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேணும். பொது சீவியத்துக்குரிய இந்த ஒழுங்குக்கு ஒத்தபிரகாரம் நடந்தேனோ?

மனப்பற்றுதல்.—நமது சபை எல்லாருக்கும் நன் மாதிரிகையாகவும், பிறர் துறவற சீவியத்தை ஆசிப்பதற்குத் தூண்டுதலாகவும் இருக்கும்வண்ணம், பிறர் சிநேகமும்

சகோதர ஒற்றுமையும் நம்மிடத்தில் உத்தமவிதமாய் விளங்கும்படி இஸ்பிரீத்து சாந்துவானவரை மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—நம்மால் என்ன செய்யக்கூடும், என்ன செய்யவேணுமென்று ஆராய்ந்துபார்த்து இதற்காக நல்ல பிரதிக்கினை செய்துகொள்ளுவோமாக.

3-ம் பிரிவு

அற்புதமான பத்தி

தியானம்.—அப்போஸ்தலர்களுடைய போதகத்திலும், அப்பத்தைப் பகிர்ந்துகொள்வதிலுஞ் செபத்திலுஞ் சீஷர்கள் நிலைத்திருந்தார்கள் (அப். நட. 2). அந்தச் சீஷர்கள் மனந்திரும்புமுன்னே எப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள்? மந்தப் புத்தியுள்ளவர்களும் இலௌகீகப் பற்றுள்ளவர்களும், சில வீணான வெளிச் சடங்குகளை மட்டும் நிறைவேற்றி, உள்ளத்தில் பத்தியில்லாமல், வாயினால் மாத்திரஞ் சர்வேசுரனைச் சங்கித்து வந்தவர்களுமாயிருந்தார்கள். இப்பேர்ப்பட்டவர்கள்தானே கொஞ்சத்துக்குள்ளாக அந்தரங்க ஞான சீவியமும், தியானப்பற்றுதலும் உருக்கமான பத்தி நிறைந்தவர்களுமானார்கள். இது முந்தின கிறீஸ்துவர்களிடத்தில் இஸ்பிரீத்து சாந்துவானவர் செய்த மூன்றும் அற்புதமாகும். அவர்கள் எந்த உபாயங்களினால் இந்தப் பத்தி தங்களிடத்தில் நிலைத்து வர்த்திக்கப் பண்ணினார்கள்? அர்ச். லூக்காஸ் எழுதியிருக்கிறபடி தேவ வாக்கியத்தைக் கேட்டுத் தியானிக்கிறதிலும், தேவ நற்கருணை உட்கொள்ளுதலிலுஞ் செபஞ் செய்கிறதிலும் அயராமல் நிலைத்திருந்ததினால்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த உபாயங்களைக்கொண்டு உன்னிடத்தில் ஞான சீவியத்தையும் பத்தியையுங் காப்பாற்றி ஸ்திரப்படுத்தவேண்டியது.

சம்பாஷணை.—இஸ்பிரீத்து சாந்துவானவரோடு சம்பாஷணை செய்.

இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்கடுத்த—சனி

ஜனசமுதாயம் இஸ்பிரீத்து சாந்துவினால் அடைந்த அற்புதமுள்ள மாற்றம்

ஆயத்தச் சிந்தனை.—ஆண்டவரே, உமது இஸ்பிரீத்து சாந்துவானவரை அனுப்பிப் பூமியைப் புதுப்பிப்பீரென்று தாவீது இராஜா சொன்ன வாக்கியத்தைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக (சங். 103.)

தியானச் சேபம்.—இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களில் எனக்கு மிகுந்த பங்குண்டாகக் கேட்பேனாக.

முதல் பிரிவு

தரும சாலைகள்

தியானம்.—இஸ்பிரீத்து சாந்துவானவர் எழுந்தருளி வருமுன்னே, மனுக்குலத்தின் நிலைமை எவ்விதமாயிருந்தது? விக்கிரக ஆராதனையும் அதைச்சார்ந்த இரத்தப் பலிக்கான குருட்டு அநுஷ்டானங்களும், இராஜ நிஷ்டூரங்களும் எளியோரை வலியோர் அநியாயமாய் வதைப்பதுமே எங்கும் நிறைந்திருந்தன; மகா அரோசிகமான அக்கிரமங்கள் தெய்வீகமாக்கப்பட்டன. இஸ்பிரீத்து சாந்துவானவர் பயங்கரமான இவ்வக்கிரமங்களை அகற்றி அவைகளுக்குப் பதிலாய்ச் சத்தியம், நீதி முதலிய சகல புண்ணியங்களும் விளங்கச் செய்தார்.

விசேஷமாய் ஏழை நிர்ப்பாக்கியருடைய நிலைமை எவ்வாறு இருந்தது? அவர்கள் யாவராலும் கைவிடப்பட்டு நிந்திக்கப்பட்டுத் தேவர்களுடைய சாபத்துக்குப் பாத்திரவான்களென்று எண்ணப்பட்டார்கள். நாகரீகம் பெற்றிருந்த அஞ்ஞானிகளுடைய புராதன கட்டடங்களில், துன்பப்படுவோருக்குத் தஞ்சமானது யாதொன்றும் இல்லாது போனதேன்? பிறர் சிநேகப்பான்மை யாதென்று அவர்கள் அறியாததினால்தான். அதுவரையில் மகா கன்னெஞ்சமும் சுயபட்சமும் நிறைந்திருந்த அம்மனிதர்களிருதயத்தில் இஸ்பிரீத்து சாந்துவானவர் பிறர் சிநேகப் பான்மையைப் பரப்பவேண்டியதாயிற்று. "தேவ சிநேகமானது இஸ்பிரீத்து சாந்துவினால் நமது இருதயங்களில் திரளாய்ச் சொரியப்பட்ட"தென்று உரோமாபுரியாருக்கு அர்ச். சின்னப்பர் எழுதினவண்ணம், இஸ்பிரீத்து சாந்துவானவர் இதை அபரிமிதமாய்ச் செய்தருளினார். உடனே இந்தச் சிநேகமானது அதிசயங்களைச் செய்தது; அது உலகத்தின் தோற்றத்தை மாற்றிவிட்டது. எளியவர்களுக்கும் ஆதரவற்ற பிள்ளைகளுக்கும் நிர்ப்பாக்கியரான கிழவர்களுக்கும் நானாவிதத்தில் துன்பப்படுகிறவர்களுக்கும் தஞ்சமும் ஆறுதலுமான மடங்களை உண்டாக்கினது இந்தச் சிநேகந்தான். பரோபகார சங்கங்களையும், தங்கள் உயிரை முதலாய்ப் பரித்தியாகம்பண்ணி, நிர்ப்பாக்கியருக்கு உதவிசெய்யும் சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள் சபைகளையும் உண்டாக்கினது இந்தச் சிநேகந்தான். வேதத்துக்காக உயிரைக் கொடுத்த வேதசாட்சிகளைப்போல், இவர்கள் சிநேகத்துக்காக உயிரைக் கையளித்த சிநேக சாட்சிகள் ஆகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அப்போஸ்தலர்களுடைய காலடியைப் பின்சென்று, இன்னமும் அஞ்ஞானத்தில் அமிழ்ந்தியிருக்கிற ஜனங்களுக்குச் சத்தியவேத உபதேசத்தைப் படிப்பிக்கப்போகும் சற்குருக்கள் எவ்வளவோ புகழ்ச்சிக்குப் பாத்திரமுள்ளவர்களாயிருக்கிறார்கள்! நிர்ப்பாக்கியரும் மூடருமாயிருக்கிறவர்களுடைய ஊழியத்துக்குத் தாங்கள் ஏற்பட்ட அந்தஸ்தினாலும் தேவ சிநேகத்தினாலும் தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்கள் எவ்வளவோ பாக்கியம் பெற்றவர்கள்! "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, வாருங்கள்; நான் பசியாயிருந்தபொழுது, போசனம் கொடுத்தீர்களே; என் சகோதரருக்குள்ளே மிகவும் சிறியவனான ஒருவனுக்கு நீங்கள் செய்தது எனக்குத்தானே செய்தீர்களென்று உண்மையாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசுநாதர் திருவுளம்பற்றியிருப்பதினால், (மத். 25). மேற்சொல்லப்பட்டவர்களும் பாக்கியவான்களின் சாப்தாவில் ஏற்கனவே குறிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்

லத்தகுமன்றோ? சரீர போசனக் குறைவினால் மட்டுமன்று, ஆத்தும போசனக் குறைவினாலே வருத்தப்படுகிறவர்களுக்கு இயேசுநாதரைப்பற்றி ஊழியம்பண்ண எல்லாத்தையும் விட்டுவிட்ட நாம் மேற்சொன்ன பாக்கியவான்களைச் சேர்ந்தவர்கள்தான்.

மனப்பற்றுதல்.—சத்திய வேதத்தின் விலைமதியாத உபகாரங்களுக்காகவும் அதினால் நமக்குக் கிடைக்கும் பாக்கியத்துக்காகவும் இஸ்பிரீத்து சாந்துவானவருக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்வோமாக.

பிரதிக்கினை.—மனிதர் கண்களுக்கு அற்பமாகக் காணப்படுகிறதுஞ் சுபாவத்துக்கு மகா அரோசிகமுள்ளதுமான பிறசிநேகக் கிரிகைகளுக்கு மனம்பொருந்தி என்னை முழுதும் கையளிப்பேனாக.

2-ம் பிரிவு

அடிமைத்தனம் அழிந்துபோகுதல்

தியானம்.—இஸ்பிரீத்து சாந்துவானவர் இறங்கிவந்து சுவிசேஷம் போதிக்கப்படுமுன்னே, மனுக்குலம் அரைவாசிக்குமேலாக மகா நீசமான அடிமைத்தனத்துக்குட்பட்டிருந்தது. உலகத்துக்கு அரசிபோலிருந்த அஞ்ஞான உரோமாபுரியில், அநேகம்விசை ஒரு எசமானுக்கு அநேகமாயிரம் அடிமைகள் இருந்தார்கள். இவ்வடிமைகளை அந்த எசமானர் எவ்விதம் மதித்தார்கள்? பொதிசுமக்கும் மிருகங்களைப் பார்க்க அதிக நீசவஸ்துக்களாக அவர்களைப் பாவித்து, இஷ்டம்போல் கொலைசெய்து, வேடிக்கை பார்க்கும்பொருட்டு அவர்களில் ஒருவனொருவனைக் குத்திக் கொலைசெய்யும்படி அரணுக்குள் அடைத்து வலுவந்தம் செய்வார்கள். அந்த நாட்டுப் பொய்த்தேவர்களுக்கு அவர்களை நரபலியாக்குவார்கள். இந்த அக்கிரமம் புத்திக்கு ஒவ்வாததென்று அச்சீமையிலுள்ள சில ஞானிகள் எவ்வளவுதான் கண்டித்தாலும் அவர்கள் வார்த்தைகளுக்குக் காதுகொடுத்தவர் ஒருவருமில்லை. இஸ்பிரீத்து சாந்துவானவர் வந்துதான் அவ்வக்கிரமங்களை அழிக்க

வேண்டியிருந்தது. "சர்வேசுரன் சமுகத்தில் மனிதர்களில் வித்தியாசமில்லை; அடிமையென்றும் சுயாதீனனென்றும் இல்லை. கிறீஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்" என்று அவர் அப்போஸ்தலர் வழியாய் உலகத்துக்கு அறிவித்தார் (கொலோ. 3, 11). அப்போஸ்தலர்களுக்குப் பின்வந்த மேற்றிராணிமார்கள் மேற்கூறின நியாயங்களைச் சாதுரிய விமரிசையுடன் எடுத்துக்காட்டினதின் பயனாக, இப்போது அந்த அடிமைத்தனம் முற்றும் நீங்கித் தற்கால நாகரீகம் ஏற்படலாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த நன்மைகளுக்கெல்லாம் காரண கர்த்தாவானவரை அவமதித்து, மனுஷனுடைய சுபாவ புத்தியின் விருத்தியினால் இவைகளெல்லாம் சம்பவித்ததென்று சொல்லுகிறவர்களுடைய குருட்டாட்டத்தையும் நன்றிகெட்டதனத்தையும் பார்த்து வருத்தப்படுவோமாக. இஸ்பிரீத்து சாந்துவானவருடைய ஞான ஒளி விளங்காத சனங்களுக்குள்ளே, சுபாவ புத்தியின் விருத்தி இத்தகைய நன்மை ஒன்றுஞ் செய்யக்காணோமே என்பதை அவர்கள் உணர்வதில்லை, அல்லது உணரப் பிரியப்படுவதில்லை. சாத்தானுக்கு இன்னும் அடிமைகளாயிருக்கிற இத்தகைய நிர்ப்பாக்கியருக்காக வேண்டிக்கொள்வோமாக! முகப்பிரீதி அல்லது கிரமமற்ற ஆசாபாசம் என்னும் வெட்கத்துக்குரிய அடிமைத்தனத்துக்கு ஆளாகாவண்ணம் எச்சரிக்கையாயிருப்போமாக.

சம்பாஷணை.—இஸ்பிரீத்து சாந்துவானவரோடு சம்பாஷணை செய்வோமாக. மனிதருக்குள்ளே சத்தியவேதத்தினால் வந்த நன்மைகளுக்குக் காரண கர்த்தரான இஸ்பிரீத்து சாந்துவுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்து அவரை வாழ்த்திக் கொண்டாடுவோமாக. இத்தனை நன்மைகளை எல்லாம் அநுபவித்தும், சரியானபடி அவருக்கு நன்றியறியாமற்போனதற்காக அவரிடத்தில் பொறுத்தல் கேட்டுப் பிறசிநேகம், தேவ சுறுசுறுப்பு, பரித்தியாகப் பிரீதியாகிய இவைகள் நம்மிடத்தில் அதிகரிக்கவேணுமென்று அவரை மன்றாடுவோமாக.

அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—சகல சனங்களுக்கும் உபதேசித்துப் பிதாவுடையவுஞ் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்களென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—அர்ச். தமதிரித்துவத்தின் மூன்றாட்களுக்குள்ளே ஒவ்வொருவர் மட்டிலும் நீ வைக்கவேண்டிய சிநேகத்தையும் நன்றியறிந்ததனத்தையும் அறியவும் உன் மனதில் அது நன்றாயுறுத்தவும் வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

பிதாவாகிய சர்வேசுரனிடத்தில் விளங்குஞ் சிநேகமும் உபகாரங்களும்

தியானம்.—இன்றையத்தினங் கொண்டாடுந் திருநாள் திருச்சபை ஆராதனை வருஷ ஆரம்பத்திலிருந்து தொடர்ந்துவந்த சகல திருநாட்களுக்கு முடிவும் அவைகளின் சுருக்கமும்போலிருக்கிறது. ஆள்வகையில் மூவராயினும் ஒரே சர்வேசுரனாயிருக்கிற அர்ச். தமதிரித்துவத்தின் ஆராதனைக்குரிய பரம இரகசியத்தின் திருநாள் இது. இயல்பிலேயே மட்டுள்ளதும், அளவில்லாததைக் கண்டுபிடிக்க சக்தியற்றதுமான நமது புத்திக்கு ஒருபோதும் எட்டாத பரம இரகசியந்தான் இது. இதை அத்தியந்த தாழ்ச்சியோடேயும், மிகுந்த நன்றியறிந்ததனத்தோடேயும் ஆராதிப்போமாக. இவ்வுணர்வுகளை நம்மிடத்தில் நன்றாய் எழுப்பத்தக்கதாகப் பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேனென்று சொல்லுவதில், அர்ச். தமதிரித்துவத்தின் மூன்றாட்களின் சிநேகத்தினாலே நமக்கு வந்த நன்மை உபகாரங்களை நமது புத்தியிலே நினைத்துப் பார்ப்போமாக. சிஷ்டிப்பின்

வேலையில் விளங்குகிற சர்வ வல்லபம் விசேஷமாய்ப் பிதாவுக்குரியதென்று சொல்லப்படும். (அதேனென்றால் மற்ற இரண்டு ஆட்களுக்கும் இவரே காரணமாயிருக்கிறார்.) ஆகையால் நான் இருக்கிறதும், காப்பாற்றப்படுவதும், நான் காப்பாற்றப்படுவதற்குதவியாயிருந்த மற்றெல்லாக் காரியங்களுமாகிய உபகாரங்களில் முதன்மையான உபகாரத்துக்கு அவர்தான் காரணமாயிருக்கிறாரென்று சொல்லவேணும். அவரல்லாமல் நான் ஒன்றும் இல்லை,—ஒன்றும் இல்லாமையாய் எப்போதைக்கும் இருப்பேனன்றோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது:—உன்னைப் பார்க்கத் தமக்கு நன்றாய் ஊழியம்பண்ணித் தம்மைத் துதிக்கக்கூடுமாயிருக்குங் கோடாகோடி வஸ்துக்களை நீ உண்டான ஒன்றுமில்லாமையிலே சர்வேசுரன் நித்தியமாய்ப் பார்த்திருந்தார். இத்தனை கோடாகோடி வஸ்துக்களுக்குள்ளே முக்கியமாய் உன்னை அவர் தெரிந்துகொண்டதேன்? உன்பேரில் இலவசமாய் அவர் வைத்த விசேஷ சிநேகத்தினால்தான். அநேக சனங்களுக்குச் சீக்கிரமாய் மரணத்தை வருவித்த இத்தனை ஆபத்துக்களிலேநின்று, நீ இரட்சிக்கப்பட்டதற்குஞ் சுபாவ முறையிலும் வரப்பிரசாத முறையிலும் அபூர்வமான இத்தனை உபகாரங்களை நீ இடைவிடாமல் சுகித்துவந்ததற்கும், அவர் உன்பேரில் வைத்த அச்சிநேகமே காரணம். இந்தச் சிநேகத்துக்குச் சிநேகமல்லவோ வேண்டியது? இவ்வளவு நேசத்துக்குரிய சர்வேசுரனுக்கும், உன்மட்டில் இவ்வளவு உதாரமாயிருந்த தகப்பனுக்கும் நீ செய்த பெரிதும் வீரசூரமுமான காரியமென்ன? ஐயோ! நீ சிலவிசை அவரைச் சிநேகித்தது வெகுவெகு சொற்பம்; அவருக்கு ஊழியஞ் செய்ததோ மெத்தவும் அசட்டையாம்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் நினைத்து வெட்கப்பட்டு, ஆண்டவரை ஆராதித்து அவருக்கு நன்றியறிந்திருக்கவேணும். மேலும் உன்னை முழுதும் அவருக்கு ஒப்புக்கொடுக்கிறதுந் தவிர, அவரைச் சிநேகிக்கவும் சுறுசுறுப்பாய்ச் சேவிக்கவும் உறுதியான வார்த்தைப்பாடு கொடுப்பாயாக.

பிரதிக்கினை.—இன்று முழுதும் மேற்சொன்ன மனப்பற்றுதலை அடிக்கடி நினைத்துக்கொள்.

2-ம் பிரிவு

சுதனாகிய சர்வேசுரனிடத்தில் விளங்குஞ் சிநேகமும் உபகாரங்களும்

தியானம்.—சுதனாகிய சர்வேசுரனுடைய சிநேகம், சிருஷ்டிப்பைவிட அதிக ஆச்சரியமான உபகாரத்தினால் வெளியாகியிருக்கிறது. அது இரட்சணியமென்கிற உபகாரந்தான். இந்த உபகாரத்தினால், பாவத்தின் அடிமைத்தனத்திலுஞ் சாவிலும் நின்று மீட்கப்பட்டதுமல்லாமல், முந்தியிருந்த சுதந்தரங்களெல்லாம் திரும்பவும் நமக்குக் கிடைக்கலாயிற்று. ஒரு இராசகுமாரன் குற்றவாளியான ஒரு அடிமைக்குப் பதிலாய் அவனுக்காகச் சாவுக்குத் தன்னைக் கையளித்தால், உலகமுழுவதும் எவ்வளவு ஆச்சரியப்படமாட்டாது?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரனுடைய நித்திய சுதனானவர், நமக்காகவும் நம்மில் ஒவ்வொருவருக்காகவும் செய்தருளினது இது தான். அப்போஸ்தலர் சொல்லுமாப்போல, மனுஷவதாரத்தில் அவர் அடிமையின் ரூபமெடுத்துத் தம்மை ஒன்றுமில்லாததாய்த் தாழ்த்தி நம்மெல்லோருக்காக மரணமடையத் தம்மை ஒப்புக்கொடுத்தார் (பிலி. 2). ஆகையால் அர்ச். சின்னப்பர் இந்த வசனத்தை முடிவுகட்டுகிறதற்காக, நம்மைப்பற்றி மரித்தவருக்காக மாத்திரம் நாம் சீவிக்கவேணுமென்று வசனித்திருக்கிறார்: சீவிக்கிறவர்கள் இனி தங்களுக்காகச் சீவியாமல், தங்களைப்பற்றி மரித்துயிர்த்தவருக்காகச் சீவிக்கவேணுமென்கிறார் (2. கொரி. 5). நீ இம்மேரையாய்ச் சீவித்தாயோ? உன் சிநேகத்தையும் நன்றியறிதலையும் இம்மேரையாய்க் காண்பித்தாயோ?

மனப்பற்றுதலும் பிரதிக்கினையும்.—(முந்தின பிரிவில் உள்ளவைகளே).

3-ம் பிரிவு

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனிடத்தில் விளங்குஞ் சிநேகமும் உபகாரங்களும்

தியானம்.—இஸ்பிரீத்து சாந்துவின் சிநேகமானது, நமது அர்ச்சிப்பிலும் தேவ சுவீகார உபகாரத்திலும் விசேஷமாய் விளங்குகின்றது. சகல பாவ அசுத்தத்திலே நின்று நமது ஆத்துமத்தைச் சுத்தப்படுத்தி தேவ சிநேகத்தையுந் தேவ இஷ்டப்பிரசாதத்தின் சகல நன்மைகளையும் நமக்குத் தந்தருளி ஞானஸ்நானத்தினால் நம்மை அர்ச்சியசிஷ்டவர்களாக்கினார். இதின்வழியாய் நாம் சர்வேசுரனுடைய சுவீகாரப் பிள்ளைகளுஞ் சுதந்தரக்காரரும், இயேசுநாதரோடுகூட உடன் பங்காளிகளுமாயிருக்கும் மேலான மகிமையை நமக்கு அளித்திருக்கிறார். இதைப்பற்றி அர்ச். சின்னப்பர் போதித்த போதகமாவது: நமக்கருளப்பட்ட இஸ்பிரீத்து சாந்துவினால் தேவசிநேகம் நம்முடைய இருதயங்களிலே பொழியப்பட்டது. நாம் சர்வேசுரனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோமென்று அவர்தாமே நமது ஆத்துமத்துக்குச் சாட்சி கொடுக்கிறார். அப்படியே நாம் பிள்ளைகளென்றால் தேவ சுதந்தரக்காரருங் கிறீஸ்துநாதரோடுகூட உடன் பங்காளிகளுமாயிருக்கிறோமென்றார் (உரோ. 5. 8). மேலும் உறுதிப்பூசுதலைக்கொண்டும் மற்றத் தேவத்திரவிய அநுமானங்களைக் கொண்டும் நம்மை அவர் அர்ச்சித்ததுமல்லாமல் தமது தேவ வரப்பிரசாதத்தின் உருக்கத்தினாலே பரிசுத்ததனமாகிற சந்நியாச அந்தஸ்துக்கு நம்மை அழைத்துக் கொண்டதினாலேயும் நம்மை அர்ச்சித்திருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—என்னிடம் யாதொரு பேறில்லாவிடினும், இன்னும் சரியாய்ச் சொல்லவேணுமாகில், நான் என்னைத்தானே அபாத்திரனாக்கியிருந்தும், எத்தனையோ உபகாரங்களை அடைந்திருக்கிறேன்! நான் பெற்றுக்கொண்ட இத்தனை உபகாரங்களுக்காக அர்ச். தமதிரித்துவத்தின் மூன்றாட்களுக்கும் என்ன நன்றி செலுத்தப்போகிறேன்? (சங். 115).

சம்பாஷணை.—அர்ச். தமதிரித்துவத்தின் ஆராதனைக்குரிய மூன்றாட்களோடு சம்பாஷணைசெய். அவர்களை ஆராதித்து அவர்களிடத்தில் அடைந்த உபகாரங்களுக்காக விசேஷ நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லுவாயாக.

அர்ச். தமதிரித்துவத்தின் திருநாளுக்கடுத்த—திங்கள்

அர்ச். தமதிரித்துவத்தோடு கிறீஸ்துவனுக்கு உண்டான சம்பந்தம்

ஆயத்தச் சிந்தனை.—சுறுசுறுப்புள்ள கிறீஸ்துவன் பத்தியோடு சிலுவையடையாளம் போடுகிறதைக் காண்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—பரிசுத்த பரம திரித்துவத்தோடு நமக்குண்டான சம்பந்தத்தை நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

பிதாவாகிய சர்வேசுரனோடு நமக்குள்ள சம்பந்தம்

தியானம்.—கிறீஸ்துவனென்றால் யார்? ஞானஸ்நானத்தின் வழியாய்ப் பிதாவாகிய சர்வேசுரனுக்குப் பிள்ளையாகி அவரோடு விசேஷ சம்பந்தமுள்ளவனே கிறீஸ்துவனென்று சொல்லப்படுவான். இயேசுநாதர் தன் சுபாவத்தில் தேவ குமாரனாய் இருக்கிறார்; கிறீஸ்துவன் சுவீகாரத்தினால் சர்வேசுரனுக்குப் பிள்ளையாகிறான். நித்திய சென்மிப்பில், வார்த்தையானவர் பிதாவினிடத்தில் பெற்றுக்கொள்ளுகிறதைக் கிறீஸ்துவனுந் தனக்குத்தக்கது ஞானசென்மிப்பினால் அடைகிறான். இதைப்பற்றி அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதாவது: "நாம் சுவீகாரப் புத்திரரின் குணத்தை அடைந்திருக்கிறதினாலே சர்வேசுரனுக்கு

மெய்யாகவே பிள்ளைகளும் அவருக்குச் சுதந்தரருமாய் இருக்கிறதைப்பற்றிச் சர்வேசுரனை நமக்குத் தகப்பனென்று அழைக்கத் துணிகிறோம்" மென்கிறார் (உரோ. 8). ஒரு குடியானவனுடைய குமாரன் ஒரு பெரிய இராசாவால் சுவீகாரப்பிள்ளையாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவனுக்குண்டான சுதந்தரமெல்லாம் பெற்றுக்கொள்ளுவானாகில், அவனுக்கு வரும் பாக்கியம் எப்பேர்க்கொத்ததாயிருக்கும்! ஆகிலும் ஞானஸ்நானத்தின் வழியாய்க் கிறீஸ்துவன் அடைகிற தேவ சுவீகாரத்துக்குமுன்னே இது சொற்பக்காரியமாமே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்வளவு மாட்சிமையும் அளவில்லாத நேசமுமுள்ள பிதாவின்மட்டில் நமக்குண்டான கடமை யாது? எல்லாத்தையும்விட நாம் முழுமனதோடே சகலத்துக்கும் மேலாக அவரைச் சிநேகிக்கவேணும். மேலும் நாம் இச்சிநேகத்தை அவருக்கு எண்பிக்கிறதற்காக: 1-வது அவருக்குப் பொருந்தாத எல்லாத்தையும், அற்பக்குற்றங்களையும், ஒழுங்குகளை அநுசரிக்கத் தவறிப்போவதையும் முதலாய் விலக்கவும்; 2-வது, புண்ணியத்தை அநுசரிப்பதனால் எப்போதும் அதிகமதிகமாய் அவருக்குப் பிரியப்படவும்; 3-வது, உங்கள் பரம பிதா உத்தமராயிருக்கிறதுபோல நீங்களும் உத்தமராயிருங்களென்று இயேசுநாதர் சொன்னபிரகாரம் (மத். 5). நாமும் மகா பிரயாசத்தோடு நமது அந்தஸ்தின் உத்தமதனத்தை நாடித்தேடவும் முயற்சிபண்ணவேண்டும். இவைகளைச் செய்து மெய்யான பிள்ளைக்குரிய பட்சத்தை நீ காண்பித்தாயோ? எந்தக்காரியத்தில் பின்தாங்கி நின்றிருக்கிறாய்?

மனப்பற்றுதல்.—நமது பிதாவின்பேரில் நமக்குண்டான சிநேகக் குறைச்சலைக்கண்டு அவர் முன்பாக அழுது பிரலாபிப்போமாக.

பிரதிக்கினை.—நமது பரம பிதா நம்மிடத்தில் கேட்குஞ் சிநேகத்தின் அத்தாட்சிகளை அதிகரிக்க நாம் மிகவும் பிரயாசப்படுவோமாக.

2-ம் பிரிவு

சுதனாகிய சர்வேசுரனோடு நமக்குள்ள சம்பந்தம்

தியானம்.—கிறீஸ்துவனென்றால் யார்? நமக்காக மனுஷ அவதாரமெடுத்த சுதனாகிய சர்வேசுரனோடு ஆச்சரியமான சம்பந்தங்களை உடையவனே கிறீஸ்துவனென்று சொல்லப்படுவான். சுபாவத்தில் அவருக்குச் சமானமாயிருக்கிறதினாலே அவருடைய சகோதரனும் ஞானஸ்நானத்தின் வழியாய் அவருடைய ஞான சரீரத்தின் அவயவமுமாயிருக்கிறான். ஞானஸ்நானத்தினாலே கிறீஸ்துவர்கள் எல்லாருங் கிறீஸ்துநாதருடைய சரீரமும் அவயவத்தில் அவயவங்களுமாயிருக்கிறார்களென்று அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறார் (1. கொரி. 12). ஆ! இது எவ்வளவு ஆச்சரியமுள்ள ஐக்கியம்! இதுமட்டுமன்று, என் மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் எனக்குள்ளே வசிக்கிறான், நானும் அவனுக்குள்ளே வசிக்கிறேனென்று இயேசுநாதர் திருவுளம்பற்றியிருக்கிறது போல, தேவ நற்கருணை வழியாய் நாம் அவருடைய திருச்சரீரத்தோடு ஐக்கியமாகிறோம் (அர்ச். அரு. 6). நாம் அவருடைய சீவியத்தினால் சீவித்து, அவரோடு அந்நியோந்நியமாய் ஒன்றித்து, அர்ச். இராயப்பர் சொல்லியிருப்பதுபோல, அவருடைய தேவ சுபாவத்துக்குப் பங்காளிகளுமானோம் (2 இராயப்பர் 1). இதைப் பார்க்க, மகா அந்நியோந்நியமும் மகிமையுமான சம்பந்தமிருப்பது கூடாத காரியம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்பேர்க்கொத்த அன்னியோன்னிய சம்பந்தத்தை நினைத்துப் பார்க்கிற கிறீஸ்துவன் செய்யவேண்டியதென்ன? சுவிசேஷக அருளப்பர் சொல்லியிருக்கிறபடி, இயேசுநாதர் நடந்ததுபோல இவனும் நடக்கவேணும். கிறீஸ்துவனானவன் வேறொரு கிறீஸ்துவென்று அர்ச். சிப்பிரியான் சொன்ன நேர்த்தியான வாக்கியம் அவனாலே மெய்ப்பிக்கப்படவேண்டும்.

மனப்பற்றுதல்.—"கிறீஸ்துவனானவன் வேறொரு கிறீஸ்து" என்னும் இச்சிறு வாக்கியத்தில், விசேஷமாய்ச் சந்நியாசிக்கு, எவ்வளவு உண்மையும் எத்தனை கடமைகளும் அடங்கியிருக்கின்றனவென்று கண்டுபிடிக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

பிரதிக்கினை.—அநேகங் கிறீஸ்துவர்கள் படும் பிரயாசங்களையும் இக்கட்டுகளையும் நினைத்துத் தேவ ஊழியத்தில் உதாரத்தனமுள்ளவனாயிருக்க என்னை உற்சாகப்படுத்திக் கொள்வேன்.

3-ம் பிரிவு

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனோடு நமக்குள்ள சம்பந்தம்

தியானம்.—கிறீஸ்துவனென்றால் யார்? ஞானஸ்நானமாகிற தேவத்திரவிய அநுமானத்தினாலே, இஸ்பிரீத்து சாந்துவானவருடைய உயிருள்ள ஆலயமாகி, அவரோடு விசேஷ சம்பந்தமடைந்தவனே கிறீஸ்துவனென்று சொல்லப்படுவான். இது விசுவாசத்தினால் எண்பிக்கப்பட்ட சத்தியம். அர்ச். சின்னப்பர் முந்தின கிறீஸ்துவர்களுக்கு எழுதின அநேக நிருபங்களில் அதை ஞாபகப்படுத்துகிறார். அதைப்பற்றி அவர் கொரிந்தியருக்கு எழுதினதாவது: என் சகோதரரே, உங்களிடத்தில் வாசமாயிருக்கிற இஸ்பிரீத்து சாந்துவுக்கு உங்கள் அவயவங்கள் ஆலயமாயிருக்கின்றனவென்று அறியீர்களோவென்றார் (1 கொரி. 6) தேவாலயங்களை அபிஷேகம் பண்ணும்போதும், ஞானஸ்நானம் கொடுக்கும்போதும் ஒரேவித சடங்குகளை உபயோகித்தல் குறிப்பிடத்தக்கது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் இப்போது தியானித்த சத்தியத்திலிருந்து நமது அநுஷ்டானத்துக்கான படிப்பினையை அர்ச். சின்னப்பரே சொல்லிக்காட்டியிருக்கிறார். "உங்கள் அவயவங்கள் இஸ்பிரீத்து சாந்துவினுடைய ஆலயமாயிருக்கிறதென்று சொன்னவுடன், "உங்கள் சரீரத்திலே சர்வேசுரனைச் சுமந்து மகிமைப்படுத்துங்கள்" என்கிறார் (1 கொரி. 6). அதாவது,

அதைத் தேவ மகிமைக்கான எத்தனமாக்குங்கள்; அதில் யாதொரு அசுத்தம் வாராதபடி எச்சரிக்கையாயிருங்கள்; தேவாலயத்தைக் காப்பாற்றி அலங்கரிக்கிறதுபோல, புண்ணியங்களினாலும் நற்கிரியைகளினாலும் அதை அலங்கரியுங்களென்பதாகும். நீ இப்படிச் செய்கிறாயோ?

சம்பாஷணை.—அர்ச். தமதிரித்துவத்தின் மூன்றாட்களோடு சம்பாஷணை செய்.

அர்ச். தமதிரித்துவத்தின் திருநாளுக்கடுத்த—செவ்வாய்

சிலுவை அடையாளத்தினால் நினைப்பூட்டித் தியானிக்கத்தகும் அர்ச். தமதிரித்துவத்தின் உபகாரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—சந்நியாசியானவன் காலமே எழுந்திருக்கும்போது, மிகுந்த பத்தி சுறுசுறுப்போடு சிலுவை அடையாளம் வரைகிறதைக் காண்கிறதாக உரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—சிலுவை அடையாளம் வரையும்போது, பரம திரித்துவத்தை அத்தியந்த விநயத்தோடு ஆராதிக்க வரப்பிரசாதங் கேள்.

முதல் பிரிவு

"பிதாவுடையவும்" என்கிற வார்த்தையின்பேரில்

தியானம்.—நீ சிலுவை அடையாளம் வரையும்போது, சொல்லும் இவ்வார்த்தையோடு "பரலோகத்துக்காகத் தமது சாயலாய் என்னை உண்டாக்கின" என்கிற வார்த்தைகளையும் நினைவினாலே கூட்டிச் சேர்த்துக்கொள்வாயாக. இந்த நினைவிலே எவ்வளவோ பரிசுத்தமும் இரட்சணியத்துக்கடுத்ததுமான யோசனைகள் அடங்கியிருக்கின்றன. நீ ஒரு தியானம் செய்கிறதற்கு இதுவே போதும்:

என்னை உண்டாக்கினார்; எப்படி உண்டாக்கினார்?—ஒன்றுமில்லாமையில் நின்று தமது சர்வ வல்லபத்தினாலும் முக்கியமாய் என்பேரில் வைத்த விசேஷ பட்சத்தினாலும் உண்டாக்கினார். இன்னம் என்னைப்பார்க்க அவருக்கு நன்றாய் ஊழியஞ் செய்யக்கூடுமான அநேகமாயிரம் ஜனங்களைப் படைக்காமல் என்னை விசேஷமாய்ப் படைத்தார். மேலும் என்னை எவ்விதமாய் உண்டாக்கினார்? தமது சாயலாய் உண்டாக்கினார். ஆகையால் இதைக் காண்கிற சம்மனசுகள் பார்வைக்கு, என் ஆத்துமம் எவ்வளவோ அலங்காரமுள்ளதும் விலைமதியாததுமாயிருக்கவேணும்! இது சர்வேசுரனுடைய உயிருள்ள சாயலாயிருக்கிறதினால், நாம் எல்லாரும் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று எப்போதும் எவ்விடத்திலும் நினைப்பூட்டுகின்றது. இதின் பேரில் நாம் எவ்வளவோ கவலை வைக்கவேணும்! அன்றியும் என்னைப் பரலோகத்துக்காக உண்டாக்கினார்; அங்கே வாக்குக்கெட்டாத பேரின்ப சுகமும் மகிமையும் நிறைந்து, ஆத்துமத்திலுஞ் சரீரத்திலும் என்றென்றைக்கும் பாக்கியமுள்ளவனாயிருக்கும்படி உண்டாக்கினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ சிலுவையடையாளம் வரையும்போது, சொல்லும் முந்தின வார்த்தையோடு பரலோகத்துக்காகத் தமது சாயலாய் உண்டாக்கினாரென்கிற வார்த்தைகளை நினைவினால் கூட்டிச்சேர்க்கும்போதெல்லாம், இப்பேர்க்கொத்த நல்ல விசாரங்கள் உன்னிடத்தில் உண்டாகும். மேலும் அவைகளினால் உன்னிடத்தில் பத்திக்கடுத்த பரிசுத்த மனப்பற்றுதல்கள் எழும்புவதுமன்றி, இப்பற்றுதல்களைக்கொண்டு தேவபத்தி சுறுசுறுப்பும் உன் இருதயத்தில் நிலைக்கும். இந்த உபாயத்தைப் பிரயோகித்துப்பார்.

மனப்பற்றுதல்.—பரமண்டலங்களிலேயிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் எப்போதும் பிள்ளைக்கடுத்த மிகுந்த பட்சத்தினாலுஞ் சங்கையினாலும் என் புத்தியிலும் இருதயத்திலும் அர்ச்சிக்கப்படுவதாக.

பிரதிக்கினை.—இந்த முதல் பிரிவில் காட்டியிருக்கிற பத்தியுள்ள உபாயத்தை அநுசரிக்கப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

"சுதனுடையவும்" என்கிற வார்த்தையின்பேரில்

தியானம்.—இந்த வார்த்தையை உச்சரிக்கும்போது, இதோடு "தமது திரு இரத்தத்தைக்கொண்டு மகா பட்சத்தோடு என்னை மீட்டிரட்சித்தார்" என்கிற வார்த்தைகளையும் நினைவினால் சேர்த்துக்கொள்ளவேணும். எதில் நின்று என்னை மீட்டிரட்சித்தாரென்றால், பசாசின் அடிமைத்தனத்தில் நின்றும், என் பாவத்தினால் எனக்கு வரவேண்டிய நித்திய நரக ஆக்கினையில் நின்றும் என்னை அவர் மீட்டிரட்சித்தார். தேவசுதன் ஒருவரேயன்றி வேறெவராகிலும் அதிலே நின்று என்னை மீட்டிரட்சிக்கமுடியாது. அவர் பொன், வெள்ளியைக் கொண்டல்ல, கடைசி துளி பரியந்தம் தமது திரு இரத்தத்தைச் சிந்தி என்னை இரட்சித்தார். அணைகடந்த அன்பினிமித்தம் என்னை இரட்சித்தார். இந்த அன்பு மகா பரிசுத்தமுள்ளது; ஏனெனில் அளவில்லாத பாக்கிய சம்பூரணராய் இருக்கிற அவருக்கு என்னை இரட்சிப்பதினால் யாதொரு இலாபமும் வரமுடியாது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த யோசனைகள் வெகு பிரயோசனமான படிப்பினைகள் அடங்கியுள்ளன. அவையாவன :—(1) தேவசுதன் உன்னை மீட்டிரட்சித்ததினாலே இனிமேல் நீ உனக்குச் சொந்தமல்ல, அவருக்கே முழுதுஞ் சொந்தமாயிருக்கிறாய். (2) அவரிடத்தில் ஜீவித்து உன் பரிசுத்த நடக்கையினால் உன்னிடத்திலும், நீ படும் மிகுந்த பிரயாசத்தினால் புறத்தியாரிடத்திலும், அவரை மகிமைப்படுத்தும்படி வருந்தவேணும். (3) பிதாவானவர் தமது சொந்தக் குமாரனை உனக்காகக் கையளித்தபின், நியாயமாய் நீ கேட்கிற மன்றாட்டை அவர் பிறக்கணித்துத் தள்ளமாட்டாரென்றதினாலே, அவர்பேரில் மட்டில்லாத நம்பிக்கை வைக்கவேணும். இதைக்குறித்து அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதைக்கேள் : "தம்முடைய சொந்தக் குமாரனுக்கு முதலாய் மன்னியாமல் நம்மெல்லோருக்காகவும் அவரை

ஒப்புக்கொடுத்தவர் அவரோடு எல்லாவற்றையுங்கூட நமக்குக் கொடாதிருப்பது எப்படி ?" (உரோ. 8.)

மனப்பற்றுதல்.—நீ சிலுவைபடையாளம் வரையும்போதெல்லாம் மேற்சொன்ன சிந்தனைகளும் படிப்பினைகளும் உன் புத்தியிலும் இருதயத்திலும் வழக்கமாய் இருக்கும்படி சர்வேசுரனிடத்தில் கேட்பாயாக.

பிரதிக்கினை.—இதை அடையத்தக்கதாக சிலகாலம் பிரயாசப்படுவாயாக.

3-ம் பிரிவு

"இஸ்பிரீத்து சாந்துடையவும்" என்கிற வார்த்தையின்பேரில்

தியானம்.—"இஸ்பிரீத்து சாந்துடையவும்" என்கிற வார்த்தையைச் சொல்லும்போது, "என்னை அர்ச்சித்தவருஞ் சர்வேசுரனுடைய பிள்ளையாய் ஏற்றுக்கொண்டவரும்" என்கிற வார்த்தைகளையும் நினைவினால் கூட்டிச் சேர்த்துக்கொள்ளவேணும். தேவத்திரவிய அநுமானங்களின் பரம இரகசியமான அநுக்கிரகங்களினாலும் விசேஷமாய் ஞானஸ்நானத்தினாலும், உறுதிப்பூசுதலினாலும், தமது தெய்வீக ஏவுதல்களினாலும், தமது தேவ வரப்பிரசாதத்தின் உருக்கத்தினாலும், பரிசுத்தமான இந்த அந்தஸ்தைத் தெரிந்துகொள்ள அவரே காரண கர்த்தராய் இருந்ததினாலும், என்னை அர்ச்சித்திருக்கிறார். மேலும் மெய்யான சுவிகாரத்துக்குரிய சகல சுதந்தரங்களையும் எனக்களித்து என்னை ஏற்றுக்கொண்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த நினைவானது ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், உனது பரிசுத்தமான அந்தஸ்து இவைகளினால் ஏற்பட்ட கனமான கடமைகளை உனக்கு நினைப்பூட்டும்; இஸ்பிரீத்து சாந்துவின் ஞான ஏவுதல்களுக்கு உன்னைக் கவனமுள்ளவனும் கீழ்ப்படிதலுள்ளவனுமாக்கும்; சர்வேசுரனுடைய பிள்ளைக்குத்தகுந்த யோக்கியமும் மேன்மையுமுள்ள உணர்வுகளை, உன் இருதயத்தில் வருத்துவிக்கும். ஆகையால் "தமது சாயலாய் என்னைப் பரலோகத்துக்காகப் படைத்த பிதா,

வுடையவும், மகா அத்தியந்த சிநேகத்தோடு தமது திரு இரத்தத்தினால் என்னை மீட்டிரட்சித்த சுதனுடையவும், என்னை அர்ச்சித்துச் சர்வேசுரனுடைய பிள்ளையாய் ஏற்றுக்கொண்ட இஸ்பிரீத்து சாந்துவுடையவும் நாமத்தினால்" என்று சிலுவையடையாளம் வரைகிறதினால் எவ்வளவோ நன்மை உண்டாகும்! இந்த நாளை, இந்தக் கிரிகையை இப்படியே துவக்கி முடிக்க விரும்புகிறேன்.

நீ இதை இவ்விதஞ் செய்யத் துவக்குவாயாகில், இதினால் உனக்கு உண்டாகும் பலத்த நன்மையை நீயே காண்பாய். இதில் நீ அப்பியாசப்பட முயற்சிப்பாயாக.

சம்பாஷணை.—அர்ச். தமதிரித்துவத்தின் மூன்றாட்களோடு சம்பாஷணை செய்து அவர்களுக்கு எப்போதும் பிரியப்படவேணுமென்கிற ஆசையோடு இந்தப் பிரதிக்கினையை அவர்களுக்கு ஒப்புக்கொடு.

அர்ச். தமதிரித்துவத்தின் திருநாளுக்கடுத்த புதன்

இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு நவநாள் தியானம்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தமது திரு இருதயத்தைக் காண்பித்து மனிதர்களை அத்தியந்த விதமாய்ச் சிநேகித்த இருதயம் இதோவென்று சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—இந்த நவநாளை நன்றாய்த் துவக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

திரு இருதயப் பத்திக்குரிய பொருள்

தியானம்.—இந்த பத்திக்குரிய காணப்பட்ட பொருள் மனுஷாவதாரமெடுத்த திவ்விய வார்த்தையின்

இருதயந்தான்; இது அவருடைய மனுஷீகத்தோடும் தெய்வீகத்தோடும், பிரிக்கத்தகாத விதமாய் ஒன்றித்திருக்கிறது, இது இயேசுக்கிறீஸ்துநாதரைப்போலவே மேலான ஆராதனைக்குரியது.

இதின் ஞானப் பொருள், இயேசுநாதருடைய திவ்விய சிநேகந்தான். இந்த சிநேகத்துக்கு இருதயமானது அடையாளமாயிருக்கின்றது. ஆகையால் எவ்விதத்தில் இதை யோசித்துப்பார்த்தாலும், இந்தப் பத்தியின் பொருளானது எல்லாத்திலும் மகா மேன்மையுள்ளதும், வணக்கத்துக்குரியதும், உத்தமமுமானது. இப்பொருள் நம்மை இவ்வளவு உருக்கமாய்ச் சிநேகிக்கிற சர்வேசுரனுடைய இருதயந்தானே! தாம் எடுத்த மனுஷீகத்தின் மகா மேன்மையுள்ள உறுப்பிலுந் தெய்வீகத்தின் மகா அலங்காரமான இலட்சணமாகிய தமது சிநேகத்திலுங் காணப்படுகிற இயேசுநாதர்தாமே இப்பத்தியின் பொருளாயிருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் பாடுபட்ட மெய்யான சிலுவையின் ஒரு துண்டாகிலும், அவர் கைகால்களில் அறையப்பட்ட ஆணிகளிலொன்றெங்கிலும், அவர் சிரசில் பதிந்த முள்ளுக்களில் ஒன்றானாலும், நமது வசத்தில் இருந்தால் அல்லது அவைகளை முத்திசெய்தால், நம்மைப் பாக்கியவான்களென்று எண்ணிக்கொள்ளுவோமல்லவோ? அர்ச்சிக்கப்பட்ட இந்தப் பொருட்கள் நமது வணக்கத்துக்கு மிகவும் பாத்திரமுள்ளவைகளாயிருந்தாலும், இயேசுநாதருடைய திரு இருதயத்துக்குமுன்பாக அவைகள் என்ன? ஆகையால் இந்நவநாளைச் செய்கிறதற்கு நம்மிடத்திலுள்ள சுறுசுறுப்பு, மகா உன்னதமும் பரிசுத்தமுமான இந்தப்பொருளுக்கு உகந்ததாயிருக்கக்கடவது! திரு இருதயத்தின் மட்டில் நாம் வணக்கத்திலுஞ் சிநேகத்திலும் வர்த்திக்க அது ஒத்தாசையாயிருக்கவுங்கடவதாக!

மனப்பற்றுதல்.—மதுரமும் ஆராதனையும் பொருந்திய இயேசுநாதருடைய திரு இருதயமே, அதிகமதிகமாய் உன்னைச் சிநேகிப்பேனாக.

பிரதிக்கினை.—இந்த நவநாட்களில் அநேகம் விசை பத்திக்குரிய இந்த மனவல்லைய செபத்தை நான் சொல்லுகிறதுமல்லாமல், இயேசுநாதருடைய திரு இருதயப் படத்தையுஞ் சிலவிசை முத்திசெய்வேனாக. இதை மறவாதிருக்கத்தக்கதாக, தனக்குமுன்பாக இந்தப் படத்தை வைத்துக்கொள்ளவேண்டும்.

2-ம் பிரிவு

திரு இருதயப் பத்தியின் முகாந்திரங்கள்

தியானம்.—இயேசுநாதரைப்பற்றிய ஓர் முகாந்திரமாவது: இந்தப் பத்தியானது அவர் நமக்காகச் செய்ததையும் பாடுபட்டதையும் நாம் இடைவிடாமல் நினைக்கச் செய்கிறதினாலே, அவருக்கு இதைப்பார்க்கப் பிரியமான காரியம் வேறில்லை. அவருடைய இருதயம் நமது இருதயத்தைப் போல் இருக்கிறது. நாம் செய்த உபகாரத்தை மற்றவர்கள் நினைக்கவேணுமென்று ஆசைப்படுகிறோமல்லவோ? இதுபோல் அவருக்கு இந்த ஆசையுண்டென்று அவர் சொன்ன வாக்கியத்தினால் விளங்குகின்றது. அப்படியே அவர் பாடுபடுகிறதற்கு முந்தின நாள் அப்பத்தையும் இரசத்தையும் வசீகரம்பண்ணத் தமது அப்போஸ்தலர்களுக்கு அதிகாரங்கொடுத்தபோது, அவர்களைப் பார்த்து: எனது ஞாபகமாக இதைச் செய்யுங்களென்றார் (லூக். 22). மேலும் இந்த அப்பத்தை நீங்கள் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம், ஆண்டவருடைய மரணத்தைக் கூறுவீர்களென்று அர்ச். சின்னப்பர் மூலமாய்த் திருவுளம்பற்றினார் (கொரி. 11). அதாவது மனிதர் நரகாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ளவும், அவர்களுக்கு மோக்ஷவாசலைத் திறக்கவும், நான் அவர்கள்பேரில் வைத்த பட்சத்தினாலே அடையப்போகிற மரணத்தை அவர்களுக்கு நினைப்பூட்டுவீர்கள் என்றார்.

இயேசுநாதரைப்பற்றிய வேறொரு முகாந்திரமேதென்றால், பதிதர்களுந் துஷ்டர்களும், தேவநற்கருணையிலிருக்கிற தமக்கு விரோதமாய்ச் சொல்லும் தேவ தூஷணங்

களினாலேயும், தமது பிள்ளைகளென்னப்படுகிறவர்களே தமதுபேரில் பத்தியில்லாமல் அலட்சியமாய்த் திரிகிறதினாலேயும் தம்முடைய திரு இருதயத்துக்கு வரும் நிந்தை அவமானத்துக்குப் பரிகாரமாக நாம் ஆராதனை செய்து தம்மைச் சிநேகிக்கவேணுமென்று அவர் ஆசைப்படுகிறார்.

நம்மைப்பற்றிய முகாந்திரங்கள்: முதலாவது, உள்ளரங்க சீவியத்தைக் காப்பாற்றவும்; 2-வது திவ்விய இரட்சகர் நம்மிடத்தில் உறுதியாய்க் கேட்கிற நன்றியறிதலின் கடமையைச் செலுத்தவும்; 3-வது அவருடைய ஊழியத்தில் நமது பத்தி சுறுசுறுப்பு வளர்ந்து அதிகரிக்கவும்; 4-வது திரு இருதயம் தேவ வரப்பிரசாதங்களின் வற்றாத ஊற்றாயிருக்கிறதினாலே, அவைகளை ஏராளமாய் நாமும் நம்மைச் சார்ந்தவர்களும் அடைவதற்கும், திரு இருதய பத்தி மிகவுஞ் சத்தியுள்ள வழியாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திரு இருதயப் பத்தியைக் கவனத்தோடும் நிலைமையோடும் பயிற்சிக்கவும், அதை மற்றவர்களுக்குப் படிப்பிக்கவும் நம்மெல்லாருக்கும் எத்தனையோ முகாந்திரம் உண்டு! அதை நாம் எவ்விதம் செய்துவந்திருக்கிறோம்? அதில் நம்முடைய அசட்டைத்தனத்தினாலே தப்பிப்போகவில்லையோ? நமது பத்தி சுறுசுறுப்பை எழுப்புகிறதற்காக, இயேசுநாதர்தாமே அர்ச். மர்க்கரீத்து அலாக்கொக்கென்பவளுக்குத் திருவுளம்பற்றின வார்த்தைகளை நாம் அடிக்கடி நினைத்துக்கொள்வோமாக: "மனிதர்களை அத்தியந்த விதமாய்ச் சிநேகித்த இருதயம் இதோ பார்; ஆகிலும் அவர்களுக்குள்ளே வெகுபேர் இதற்கு நன்றியறியாதவர்களாயிருக்கிறார்கள்; இந்த இருதயத்துக்கான சங்கைசெய்து, மற்றவர்களும் இதற்குச் சங்கை செய்யப் பிரயாசப்படுகிறவர்கள்பேரில், என் சிநேகத்தின் பலனைத் திரளாய்ப் பொழிகிறதற்கு என் இருதயம் விசாலமாகுமென்று வார்த்தைப்பாடு கொடுக்கிறேன்."

மனப்பற்றுதல்.—என் இருதயம் தமது திவ்விய சிநேகத்தினால் பற்றியெரியவேணுமென்று என் நேச இரட்சகரைப் பார்த்து மன்றாடுவேனாக.

பிரதிக்கினை.—இயேசுநாதருடைய திரு இருதயத்தின்பேரில் எல்லாரிடத்திலும் பத்தி உண்டாக மிகவும் பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

திரு இருதய நவநாள்

தியானம்.—நாம் திருநாட்களுக்கு எவ்வளவு நன்றாய் ஆயத்தஞ் செய்வோமோ அவ்வளவுக்குத் தகுந்த வரப்பிரசாதங்களையும், விசேஷ சகாயத்தையும் அடைவோமென்று நம்பலாம்; நாம் ஒத்துழைக்கவேண்டுமென்பது சர்வேசுரனுடைய விருப்பம். மேலும் இந்த ஆயத்தமானது விசுவாசத்தையும் நம்பிக்கையையுந் திடப்படுத்தும்; யாதொருவருக்கு அநுகூலமாய் இயேசுநாதர் புதுமைசெய்யச் சித்தமாயிருந்தபோது, அவர்களிடத்தில் கேட்ட முதற்காரியம் இவ்விரண்டுந்தானே. இதுமுகாந்தரத்தைப்பற்றி நவநாட்கள் செய்யவும் விசேஷமாய் இயேசுநாதருடைய திருநாளுக்கு ஆயத்தமாக நவநாள் செபம்பண்ணவும் வழக்கம் உண்டாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த நவநாள் பலன் முழுதும் அநுகூலமாகும்படி, இப்போதுதானே தினந்தோறும் நீ செய்யவேண்டிய செப தப நற்கிரிகைகள் எவையென்று தீர்மானித்துக்கொள்.

சம்பாஷணை.—இயேசுநாதருடைய சிநேகம் நிறைந்த திரு இருதயத்தோடு சம்பாஷணை செய்வாயாக.

இயேசுநாதருடைய திரு இருதய நவநாளின் 2-ம் நாள்—வியாழன்.

தேவநற்கருணைத் திருநாள்

திவ்விய நற்கருணை உண்டுபண்ணினதில் விளங்கின இயேசுநாதருடைய இருதய சிநேகம்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் மட்டற்ற விதமாய் நம்மைச் சிநேகித்தாரென்று சுவிசேஷகராகிய அர்ச். அருளப்பர் வசனித்த தேவ வாக்கியத்தைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—தேவநற்கருணையிலே நம்மைப்பற்றி இயேசுநாதர் செய்தருளிய சிநேக அற்புதங்களை நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

தேவநற்கருணையில் இருக்கிற இயேசுநாதர், இந்தப் பரதேசத்தில் நமக்குத் துணையாயிருக்கிறார்

தியானம்.—"தன்னால் சிநேகிக்கப்படுகிறவனை ஒருக்காலும் விட்டுப் பிரியாமல் அவனுக்காகச் சாகிறது" மனுஷ சிநேகத்தினால் இயலாத காரியம்; இதை, இயேசுநாதர் தமது இருதயத்தின் சிநேகத்தைக்கொண்டு நமக்குச் சுளுவாய்ச் செய்துமுடித்தார். எவ்வாறு இதைச் செய்தார் என்பாயோ? தேவநற்கருணையை உண்டுபண்ணினதினால். வாக்குக்கெட்டாத இந்தத் தேவத்திரவிய அநுமானத்தின் வழியாய் இயேசுநாதர் நமது கண்களுக்கு மறைவாயிருந்தாலும், நமது நடுவில் மெய்யாகவே தமது சரீரத்தோடும் ஆத்துமத்தோடும் வாசமாயிருக்கிறார். இவ்வண்ணம் நமது பரதேசத்திலே நமக்கு அவர் துணையாகி, இந்த நன்மை சகலருக்குங் கிடைக்கத்தக்கதாகப் பூலோகத்தின் எத்திசையிலுந் தாம் பிரசன்னராயிருக்கிறதை வர்த்தித்துக் கொண்டு வருகிறார். மேலுந் தயைநிறைந்த தஞ்சமாகிய தேவநற்கருணைப் பெட்டகத்திலிருந்து மனிதரை அன்பாய்

வரவழைத்து "இச்சீவியத்தின் துன்பதுரிதங்களுக்குள் அகப்பட்டு வருந்துகிற நீங்கள் அனைவரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களைத் தேற்றரவு செய்வேன்" என்கிறார் (மத். 11).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இன்றைக்குத் தேவநற்கருணைத் திருநாள் ஆனதுபற்றி இயேசுநாதருடைய மகா நேசமுள்ள இருதயத்துக்கு நன்றியறிதலும் ஆராதனையுஞ் சிநேகமும்பொருந்திய பிரசித்தமான தோத்திரஞ் செலுத்துவோமாக. மேலும் நம்மைத் தயவோடு அழைக்கிற ஆண்டவரை அடுத்துப்போக அதிக அசட்டை பண்ணினதினாலேயுஞ் சிநேகம் நிறைந்த தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கிறவரைச் சந்தித்துச் சிநேகிக்கிறதில் அதிக குறை செய்ததினாலேயும் விசேஷமாய் ஒரே இல்லத்திலே அவரோடேகூட வாசம்பண்ணுகிற நாம் பத்திக்குறையினாலாவது, செய்த குற்றங்களினாலாவது அவருடைய திரு இருதயத்துக்கு அடிக்கடி கஸ்தி வருவித்ததினாலேயுந் துக்கப்பட்டு மன்னிப்புக் கேட்கவேண்டும்.

மனப்பற்றுதல்.—பத்தியுள்ள இந்த முயற்சியில் சில நேரஞ் செலவழிப்பாயாக.

பிரதிக்கினை.—தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கிற இயேசுநாதரை முந்தியைவிட அடிக்கடி சந்திக்கவேணும். கூடாவிட்டால், அதிக பட்சத்தோடாகிலுஞ் சந்திப்பாயாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் தேவநற்கருணையில் இடைவிடாமல் நமக்காகப் பலியாகிறார்

தியானம்.—நமது திவ்விய இரட்சகர் தமது சர்வ வல்லபமுள்ள சிநேகத்தினால் நம்மைப்பற்றிச் செய்த இரண்டாம் அற்புதமேதென்றால், பெரிய வெள்ளிக்கிழமையில் கபாலமலையிலே தாம்தாமே ஒப்புக்கொடுத்த பலியைத் தேவநற்கருணை வழியாய்த் திவ்விய பூசையில் இடைவிடாமல் புதுப்பித்துக்கொண்டு வருகிறதுதான். எப்போதும் பலியுமாய்ப் பலியிடுகிறவருமாயிருக்கிற அவர்தாமே குருவின் கைங்கிரியத்தைக்கொண்டு இப்படி நடத்திவருகிறார். சிலுவையின் பலிக்கும் பீடத்தில் நடந்துவரும் பலிக்கும் ஒரு வித்தியாசமாத்திரமுண்டு; அதேதென்றால் முந்தினது இரத்தஞ் சிந்தப்பட்ட பலி; பிந்தினது இரத்தஞ் சிந்தாத பலி. வேதசாஸ்திரிகள் சொல்லுமாப்போல, இயேசுநாதர் பீடங்களிலே தேவ வசீகர வார்த்தைகளாகிய வாளினால் மாத்திரம் பலியாகிறார்; இவ்வார்த்தைகளினால் அவருடைய சரீரந் திரு இரத்தத்தில் நின்று பிரிக்கப்படுகின்றது; உயிர்த்தெழுந்தருளிய இயேசுநாதர் அட்சயமுள்ளவராயிராவிடில், வாஸ்தவத்திலும் அவருடைய திருச்சரீரம் திரு இரத்தத்தில் நின்று பிரிந்திருக்கும். இதைப்பற்றிப் "பூசையில் நடக்கும் பலி சிலுவையின் பலியைப் போலவே, விலைமதிக்கப்படாதது" என்று அர்ச். கிறிசோஸ்தோமுஸ் அருளப்பர் வசனித்திருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—குருவாயிருந்து பூசை வைத்தாலுஞ் சரி, பூசைக்குப் பணிவிடை செய்தாலும் அல்லது பூசை கண்டாலுஞ் சரி, தினந்தோறும் இந்தத் திவ்விய பலியின் பேறுபலனுக்கு நீ பங்காளியாயிருக்கிறது உனக்கு எவ்வளவு நன்மையும் பாக்கியமுமானது! ஆனால் எவ்விதம் பூசை காண்கிறாய்? எவ்வித விசுவாசத்தோடுஞ் சங்கையோடும் பத்தியோடும் காண்கிறாய்? உன்னிடத்தில் பத்திக் குறையில்லையோ? முந்தி உனக்கு மிகவும் உதவியாயிருந்த பத்தியுள்ள சில முயற்சிகளை வழக்கத்தை முன்னிட்டுக் கவனமில்லாமலும் மிகவும் அலட்சியமாகவும் அநுசரிப்பதில்லையா?

மனப்பற்றுதல்.—நமது பீடங்களின் பரிசுத்த பலியை ஏற்படுத்தினதின் இனிய ஞாபகத்தை இன்றைக்குக் கொண்டாடுகிறதினால், இயேசுநாதருடைய திரு இருதயம் இதிலே நமக்குக் காண்பிக்கிற சிநேகத்தை ஆச்சரியத்தோடும், ஆநந்த சந்தோஷத்தோடும், பாராட்டுவோமாக.

பிரதிக்கினை.—பத்தியோடு பூசை காணத்தக்கதாக நாம் நவ சந்நியாசிகளாயிருந்தபோது, கையாடின பத்தி சுறுசுறுப்புள்ள முயற்சிகளை நமது அசட்டையினால் சன்னஞ் சன்னமாய் அல்லது முற்றிலுமே கைநெகிழ்ந்தோமாக்கும்; இப்போது அவைகளைத் திரும்பவும் அநுஷ்டிப்போமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் திவ்விய நற்கருணையில் நமது ஆத்துமங்களுக்கு ஞானப் போசனமாயிருக்கிறார்

தியானம்.—திவ்விய நற்கருணையிலே இயேசுநாதர் நமக்குக் காண்பிக்கிற சிநேகத்தைப் பூரணமாக்குவது யாதெனில், அதில் அவர் நமது ஆத்துமங்களுக்கு ஞானப் போசனமாகி நாம் அவரிடத்திலும் அவர் நம்மிடத்திலுஞ் சீவிக்கும்வண்ணம் நம்மோடு ஐக்கியமாகச் சித்தமானதேயாம். இதைப்பற்றி அவர்தாமே சொன்ன வாக்கியங்களைக் கேட்டுத் தியானித்துக்கொள். "நீங்கள் இதை வாங்கிப் புசியுங்கள்; இது என் சரீரமாமே (1 கொரி. 11). என் மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானஞ் செய்கிறவன் என்னில் வசிக்கிறான், நானும் அவனில் வசிக்கிறேன்" (அருள. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ அடிக்கடி தேவநற்கருணை வாங்கியிருந்தாலும், உத்தமதனத்திலும் ஞானத்திலும் இயேசுநாதருடைய சாயலிலும் இன்னம் அவ்வளவு குறையுள்ளவனாயிருக்கிறதெப்படி? நீ அதை வாங்குகிறதற்கு ஆயத்தம்பண்ணுவதில் அல்லது அதை வாங்குகையில் அல்லது, அதை வாங்கினபின் நன்றியறிந்த தோத்திரஞ் செய்வதில் அசட்டைத்தனம் அல்லது பத்திக்குறைவு இருந்ததினால்தான் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் நீ எதிலே தவறிப்போனாயென்றுங், குறைகளை நீக்குகிறதற்காக என்ன செய்யக்கூடுமென்றும், என்ன செய்யவேணுமென்றும் பார்த்துக்கொள்.

சம்பாஷணை.—அர்ச். மர்கரீத்து மரியம்மாளோடு சம்பாஷணை செய்து, இயேசுநாதர் அவளுக்குத் தரிசனையாகித் தமது திரு இருதயத்தைக் காண்பித்து அவளோடு பேசினபோது, அவள் இருதயத்தில் பற்றியெரிந்த சிநேக அக்கினிப் பொறிகளில் கொஞ்சம் எனக்கு அடைந்து தரும்படி கேட்பேனாக.

திரு இருதய நவநாளின் 3-ம் நாள்—வெள்ளி

இயேசுநாதர் இருதயத்தின் பரிசுத்ததனம்

ஆயத்தச் சிந்தனை.—சுத்த இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்களென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள் (மத். 5.)

தியானச் சேபம்.—உலக அசுத்தத்தின் நடுவில் என் இருதயத்தைப் பரிசுத்தமாய்க் காப்பாற்ற வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதருடைய இருதயம் பாவத்தின் அற்ப மாசு முதலாய் இல்லாதிருந்தது

தியானம்.—ஜென்ம மாசில்லாத பரிசுத்த கன்னித் தாயின் உதிரத்தால் உருவாக்கப்பட்ட இயேசுநாதருடைய திரு இருதயமும் மாசற்றதே; பாவத்தின் அற்பக் கறை முதலாய் ஒருபோதும் அதில் உண்டாக முடியாது. தமது பேரில் ஆவலாதி சொன்னவர்களுக்கு இந்தச் சத்தியத்தின் உண்மையையும் அத்தாட்சியையும் காண்பிக்கத்தக்கதாக, "மனுஷன் இருதயத்திலிருந்தே பாவம் வருகிறது" என்று சொன்னபின், அவர்களை நோக்கி: "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களுக்குள் சொல்லக்கூடுமானவன் யார்" என்றார் (அருள. 8.) அவர் பாடுபடுங் காலத்திலே யூதர்கள் அவரைப் பாவியென்று குற்றஞ் சாட்டினார்களென்பது மெய்தான்; ஆனால் அவர்கள் சொன்னது முழுதும் அபத்

தமென்று பிலாத்துவென்பவன் கண்டுபிடித்துத் தன் நீதியாசனத்திலேதானே, அவருடைய மாசில்லாததனத்தைப் பிரசித்தப்படுத்தத்தக்கதாகச் சொன்னதாவது: நானோவெனில் இம்மனிதனிடத்தில் குற்றமானதொன்றுங் காணவில்லையே என்றான் (அருள. 11.) மேலும் மனுஷீகமானது தெய்வீகத்தோடே ஐக்கியமாகி ஒரே ஆளானதினிமித்தம், இயேசுநாதர் பாவஞ்செய்யக் கூடாதவராயிருந்தார்; பாவத்தின் ஆவி முதலாய் அவருடைய இருதயத்தின் தெய்வீகமான பரிசுத்தத்தை மாசுபடுத்தக்கூடாது. ஆகையால் இயேசுநாதருடைய திரு இருதயத்தின் ஞான சவுந்தரியம் எத்தகையதாயிருக்கவேண்டும்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஐயோ! இவ்விஷயத்தில் இயேசுநாதருடைய இருதயத்துக்கும் என் இருதயத்துக்கும் எவ்வளவோ தூர வித்தியாசம்! அவருடைய இருதயம் எப்போதும் பரிசுத்தமுள்ளது, ஓர் அற்ப மாசுமில்லாதது; என் இருதயமோவெனில், உண்டாக்கப்பட்ட க்ஷணத்தில்தானே சென்மப் பாவத்தினால் அசுத்தமாகி அதின்பின் என்னைப் படைத்தவர் பார்வைக்கு அதை அவலட்சணமாக்கின எத்தனையோ பாவங்களினாலே அசுத்தப்பட்டிருக்கின்றது! என் வாலிபத்தில் கட்டிக்கொண்ட பாவங்களுமன்றித் தினந்தோறும் நான் கட்டிக்கொள்ளுகிற பாவங்களும், என் கண்களுக்கு அருவருப்பாயிராவிடினும், தேவ நீதி முன்பாக அவைகள் அசுத்தமுள்ளவைகளே; இந்த அசுத்தம் தபசினால் அல்லது உத்தரிக்கிற ஸ்தலத்தின் நெருப்பால் நீங்கவேண்டியது.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, என்னிடத்தில் சுத்தமான இருதயத்தைச் சிருஷ்டியும் (சங். 50.) பாவத்தில் உற்பவித்த என்னைச் சுத்தமாக்க உம்மால் மாத்திரம் ஆகும் (யோபு. 14.)

பிரதிக்கினை.—தன் இருதயப் பற்றுதல்களின்பேரில் கவனஞ்செலுத்தி, கிரமமற்றவைகளைத் தாமதமின்றிக் கண்டிப்பாய்த் தள்ளிவிடவேண்டும்.

2-ம் பிரிவு

இயேசுநாதருடைய இருதயம் பாவக் கலக்கமில்லாதிருந்தது

தியானம்.—அர்ச். சின்னப்பர் தேவ இஷ்டப்பிரசாதத்தில் திடப்பட்டிருந்தாலும், தமது இருதயம் இரவும் பகலும் பாவத்தின் மாயையினாலும், அதின்பேரில் ஓயாத அபேட்சையினாலுங் கலக்கப்பட்டிருந்ததென்று அறிக்கையிடுகிறதுந் தவிர, அதினிமித்தம் பிரலாபித்து மிகுந்த முறைப்பாடு சொல்லியிருக்கிறார் (2 கொரி. 12.) இயேசுநாதரிடத்திலோவென்றால், இப்பேர்ப்பட்டவைகளில் ஒன்றுமில்லாதிருந்ததுந்தவிர அவரிடத்தில் இருக்கவுங் கூடாது. பசாசானது தம்மைச் சோதிக்கவும் பாவத்துக்குத் தம்மைத் தூண்டவும் விடை கொடுத்திருந்தாரென்பது மெய்தான்; ஆகிலும் இந்தச் சோதனை வெளியே மாத்திரம் உண்டானதேயல்லாமல், ஒருபோதும் அவருடைய இருதயத்தில் பிரவேசித்ததுமில்லை, அதின் மதுரமும் உத்தமமுமான அமரிக்கையைக் கலங்கச்செய்ததுமில்லை. இயேசுநாதருடைய இருதயத்தின் தெய்வீக சவுந்தரியத்துக்கு, மாறக்கூடாத இந்த அமரிக்கை எவ்வளவோ நவமான அலங்காரத்தை வருவிக்கின்றது!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது இருதயத்தின் ஆகாத இச்சைகளைத் தடுக்க அல்லது அடக்க நாம் எவ்வளவு பிரயாசப்பட்டாலும், இம்மையில் குறையற்றதும் நீளித்ததுமான சமாதானத்தை ஒருபோதும அநுபவிக்கமாட்டோம். நமது ஆதித்தகப்பன் செய்த பாவத்தால், நமது இருதயத்திலே பிரவேசித்திருக்கிற துராசாபாசங்கள் நம்மைப் பாவத்துக்குத் தூண்டி அதிலே எப்போதுங் கலக்கத்தை வருத்துவிக்கும். நாம் ஓயாமல் அவைகளோடு எதிர்த்துப் போராடினால்மாத்திரம், அவைகளை அடக்கிக்கொண்டு வருவோம். ஆகையால் நம்மோடுதானே அல்லது, அர்ச். சின்னப்பர் சொல்லுமாப்போல, நம்மிடத்தில் வாசஞ்செய்யும் பாவ மனுஷனோடு, நாம் எந்நேரமும் யுத்தம்பண்ண உடன்பட்டிருக்கிறோம்; இம்மையில் இதுவே நம்முடைய அலுவல். ஆகிலும்

இதைப்பற்றி நாம் கஸ்திப்படுவது நியாயமல்ல; ஏனென்றால் கடினமான யுத்தத்துக்குத் தக்கது, ஜெயம் அதிக மகிமையுள்ளதாயிருக்கிறதுமன்றி மோக்ஷத்தில் நமது சம்பாவனையும் அதிகப் பெரிதாயிருக்கும். மீளவும் இயேசுநாதருடைய இருதயம் நமக்கு உறுதியான தஞ்சம்போல் எப்போதும் திறக்கப்பட்டிருக்கின்றது.

மனப்பற்றுதல்.—ஆ! என் இயேசுவே, என் ஆசாபாசங்களின்பேரில் ஜெபத்தையும் இருதய சமாதானத்தையும் எனக்குத் தந்தருளுஞ் சுவாமி.

பிரதிக்கினை.—ஒருபோதும் மனந்தளராதே; யுத்த வேளையில் இயேசுநாதருடைய திரு இருதயத்தை அடைக்கலமாய்த் தேடிப்போ.

3-ம் பிரிவு

இயேசுநாதருடைய திரு இருதயத்தில் பாவத்தின் நினைவு முதலாயிருந்ததில்லை

தியானம்.—இயேசுநாதருடைய பரிசுத்தமாதா சென்மப்பாவமில்லாமல் உற்பவித்ததினாலேமாத்திரம், அவள் இருதய சமாதானத்தைக் கெடுக்குந் துர் நினைவு ஒருபோதும் அவளிடத்தில் எழும்பவில்லையென்பது நிச்சயமாகக்கொள்ள, அவளுடைய திருக்குமாரன் இருதயத்தில் இப்பேர்க்கொத்த நினைவு உண்டாகவில்லையென்பதற்கு அதிக நியாயம் இருக்கிறதல்லவோ? மேலும் இயேசுநாதர் தமது இருதயத்தின் நினைவுகளுக்கும் பற்றுதல்களுக்கும் அதிபதி கர்த்தராயிருந்ததினாலே, சந்தோஷம் கஸ்தி முதலான நினைவுகளுக்கும் பற்றுதல்களுக்கும் தமது இஷ்டப்படி அதைத் திறக்கவும் அடைக்கவும் வல்லமையுள்ளவராயிருந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது விஷயம் இப்படியல்ல; நமக்குத்தெரியாமலே நம்மிடத்தில் துர் நினைவுகள் வருகின்றன. நாம் பக்திக்கடுத்த முயற்சிகளைச் செய்யும்போதும் பூசை காணும்போதும் எந்நேரத்திலும் எவ்விடத்திலும் துர் நினைவுகள் நம்மைப் பின்

சென்று வந்து நம்மைக் கலங்கடிக்கின்றன. அவைகளின் வித்து சென்மப் பாவத்தினிமித்தம் நமது இருதயங்களில் புதைந்துகிடக்கின்றதே காரணம். "மனுஷனுடைய புத்தியும் அவன் இருதயத்தின் நினைவும் அவன் வாலப் பிராயத்திலேதானே தின்மையை நாடியிருக்கிறது" என்று வேதாகமத்தில் சொல்லியிருக்கின்றது (ஆதி. 8.) இந்நிலைமையை அறிந்து நாம் அடிக்கடி பிரலாபிக்கிறோம்; சர்வேசுரனைப்பார்த்து இதைப்பற்றி முறையிடவும் சோதனை வருகிறது. ஆனால் நம்முடைய பஞ்சேந்திரியங்களுக்கும் விசேஷமாய் இஸ்பிரீத்து சாந்துவினாலே ஆத்துமத்தின் திஷ்டி வாசல்களென்று சொல்லப்பட்ட நமது கண்களுக்கும் மிஞ்சின சுவாதீனம் கொடுத்து, இந்நிலைமையின் பரிதாபத்தை அதிகரியாதிருப்போமாக.

சம்பாஷணை.—உன் காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்வாயாக. நீ உலக பொல்லாப்பு, விளையாட்டு, மயக்கத்தில் அகப்படாமல், அவரைப்போல எப்போதும் சுத்தமனதோடு வீண் பராக்குக்கு இடங்கொடாமல் சர்வேசுரனோடு ஒன்றித்திருக்குப்படியான வரப்பிரசாதத்தை அடைந்து தரும்படி அவரை மன்றாடு.

திரு இருதய நவநாளின் 4-ம் நாள்—சனி

இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தாழ்ச்சி

ஆயத்தச் சிந்தனை.—நான் சாந்தகுணமும் மனத்தாழ்ச்சியுமுள்ளவனாயிருக்கிறதை என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்களென்று இயேசுநாதர் தமது இருதயத்தைக் காண்பித்து உனக்குச் சொல்லுகிறதாக உரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—தாழ்ச்சியைக் கனமாய் எண்ணுவதிலும் அநுசரிப்பதிலும் எந்நேரமும் வர்த்திக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தாழ்ச்சி

தியானம்.—இருதயத்தின் அல்லது மனதின் தாழ்ச்சிக்கும், புத்தியின் அல்லது மதிப்பின் தாழ்ச்சிக்கும் வித்தியாசமுண்டு. மனிதன் தன்னை முழுதும் மறந்தவனாய்ச் சகலத்திலுஞ் சர்வேசுரனுடைய மகிமையை மாத்திரந் தேடுவதற்கான புண்ணியம் அதாவது மனதின் வழக்கமான சற்குணம் மனத்தாழ்ச்சியென்று சொல்லப்படும். தாழ்ச்சியுள்ளவன் தனக்குச் செத்தவனைப்போலிருந்து, சர்வேசுரனுக்காக மாத்திரஞ் சீவிக்கிறான்; அவன் நினைவெல்லாஞ் சர்வேசுரன்பேரில் இருக்கிறது; சர்வேசுரனுக்கு மாத்திரம் மகிமையுந் தோத்திரமும் உரித்தானதினிமித்தம் அவன் தான் செய்கிறதற்கும், ஆசைப்படுகிறதற்கும், பயப்படுகிறதற்கும், நம்பிக்கை வைக்கிறதற்கும் சர்வேசுரன் ஒருவரே காரணமுங் கதியுமாயிருக்கிறார். இயேசுநாதர் உலகத்திலே சஞ்சரித்த காலமெல்லாம் முற்றிலும் இவ்வண்ணமே நடந்துவந்தார். இதற்கு அத்தாட்சியாக, "நான் என் மகிமையைத் தேடுகிறதேயில்லை" என்று அவர்தாமே சொல்லியிருக்கிறார் (அரு. 8). அவர் தமது சீவியகாலமெல்லாம் அப்படியே நடந்தாரென்பதை அர்ச். சின்னப்பர் ஒரே வார்த்தையில் "தம்மை ஒன்றுமில்லாமையாக்கினார்" என்று சுருக்கிச் சொல்லியிருக்கிறார் (பிலி. 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விதமான தாழ்ச்சி என்னிடத்திலுண்டோ? நான் எந்நேரமும், எதுகாரியத்திலும் மெய்யாகவே சர்வேசுரனுடைய மகிமையையும் ஊழியத்தையுமாத்திரம் உத்தேசித்து நடக்கிறேனா? இதற்கு விரோதமாய் என் சகல கிரிகைகளிலும் தன்னிலே அதிக பரிசுத்தமான கிரிகைகளிலும் முதலாய் அந்தரங்கமாய் தற்பெருமையை அல்லது மனிதருடைய புகழ்ச்சியைத் தேடுதல் என் உள்ளத்தில் மறைந்து கிடக்கிறதென்று ஒத்துக்கொள்ளவேண்டியதில்லையா? இதிப்படியானால், என் திவ்விய குருவின் மாதிரிகையினாலே நான் மனத்தாழ்ச்சியுள்ளவனாயிருக்கச் சரியாய்க் கற்றுக்கொள்ளவில்லையென்றும், அவருடைய சாயல் என்னிடத்தில் மெத்தக் குறைவாய்ப் பதிந்திருக்கிறதென்றுஞ் சொல்லவேண்டும்!

மனப்பற்றுதல்.—உன் இருதயத்தை இயேசுநாதர் இருதயத்துக்கொத்ததாக்கவேண்டுமென்று வெகுவாய் ஆசைப்படு. ஆ! என் திவ்விய இரட்சகரே, நான் மனத்தாழ்ச்சியுள்ளவனாயிருக்க எனக்குப் படிப்பித்தருளும்.

பிரதிக்கினை.—என்னுடைய கிரியைகளைத் தூண்டுங் காரணமுங் கருத்தும் என்னவென்று விசேஷ விதமாய் இன்று கவனித்துப் பார்ப்பேன்.

2-ம் பிரிவு

இயேசுநாதர் திரு இருதயத்தின் தாழ்ச்சியானது அவருடைய வார்த்தைகளில் விளங்குகின்றது

தியானம்.—இருதயத்தில் மறைந்திருக்கிற மெய்யான தாழ்ச்சியானது, வார்த்தைகளினால் மனிதருக்குத் தெரியவரும். இருதயத்தின் சம்பூரணத்தினால் வாய் பேசுமென்று இயேசுநாதர் திருவுளம்பற்றியிருக்கிறார் (மத். 12). மனுஷர்களோடு சஞ்சரித்த திவ்விய இரட்சகரிடத்திலும் இவ்விதத்தில்தான் தாழ்ச்சி விளங்குகின்றது. அவர் தமது சல்லாபங்களில் தமது பெயர் விளங்கும்படி தேடுகிறாரா? இல்லை: "என்மகிமை ஒன்றுமில்லை" என்கிறார் (அரு. 8, 54). அவர் எப்போதும் தமது பரம பிதாவுக்கு உரித்தான மகிமையையுஞ் சிநேகத்தையுங் குறித்தே பேசுவார்; மேலும் அவரைப்பற்றிப் பேசும்போதெல்லாம், மகா உன்னத மொழிகளையும் சிறந்த உபமானங்களையும் உபயோகித்ததினால், அப்போஸ்தலர்கள் அவரைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் மிகுந்தவர்களாய் கடைசி இராப்போசனத்தின்போது, "ஆண்டவரே, உமது பிதாவை எங்களுக்குக் காண்பித்தருளும், அதுவே எங்களுக்குப்போதும்" என்று (அரு. 14) அவரை நோக்கிச் சொல்லும்படியாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விடத்தில் உன்பேரில்தானே நீ யோசித்துப் பார்: உன்னோடே வழக்கமாய்ச் சல்லாபிக்கிறவர்கள், சகல நன்மைக்குங் கர்த்தரான சர்வேசுரனது நினைவே உன் உள்ளத்தில் ஊன்றியிருக்கிறதென்றும் மற்றக் காரியங்களைப்பார்க்க, அவருடைய மகிமையைப் பிரபல்யப்படுத்தவேணுமென்கிற ஆசையே உனக்குப் பிரதானமாயிருக்கிறதென்றும் உணர்கிறார்களா? அல்லது இதற்கு விரோதமாய் நீ உன்னைக்குறித்தும், நீ இப்போது செய்கிறதும், இதற்குமுன் செய்ததுமான நற்கிரியைகளைக் குறித்தும், உன் குடும்பத்தைக் குறித்தும், உன் சற்குணங்களைக் குறித்தும், உன் சமர்த்து சம்பிரதாயங்களைக் குறித்தும், பிரியத்தோடும் அல்லது வீம்போடும் பேசுவதுமன்றி, நீ புறத்தியார்பேரில் புறணி, கண்டனை சொல்லுகிறதையும், உன் கருத்தும் யோசனையுந்தான் பெரிதென்று பிடிவாதமாய் பாராட்டுகிறதையும், உனக்கு எதிர்த்துப் பேசுகிறவர்களுக்குக் கோபமாய் மறுமொழி சொல்லுகிறதையும் கேட்கிறதில்லையோவென்று பார். இதிப்படியானால், நான் மெய்யாகவே மனத்தாழ்ச்சியுள்ளவனென்று நினைக்கக்கூடுமோ? இதைக் குறித்து மற்றவர்கள் என்ன நினைக்கிறார்களென்று அவர்களைக் கேட்பாயாகில், "உன் பேச்சே உன்னைக் காட்டிக்கொடுக்கிறது" என்பார்கள் (மத். 26). அதாவது, உன்னைப்பற்றிய எண்ணமே உனக்குப் பிரதானமாயிருக்கிறதென்றும் சுயபட்சமே உன்னை ஆட்கொண்டிருக்கிறதென்றும் சொல்வார்கள்.

மனப்பற்றுதல்.—மெய்யான தாழ்ச்சிக்கும் உனக்கும் வெகுதூரமிருக்கிறதென்று அறிந்து, சர்வேசுரன் சமுகத்தில் உன்னை அத்தியந்த விதமாய்த் தாழ்த்தி உத்தம மனஸ்தாபமும் தாழ்ச்சியுமுள்ள இருதயத்தைக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியார் சொன்னபடி பலத்த முகாந்தரமில்லாமல் தன்னைக்குறித்து நன்மையானாலுந் தின்மையானாலும் பேசவேண்டாம்.

3-ம் பிரிவு

இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தாழ்ச்சியானது அவருடைய கிரியைகளில் விளங்குகின்றது

தியானம்.—இயேசுநாதருடைய சீவியகாலமெல்லாந் தாழ்ச்சி பொருந்தினதாயிருந்தது. நமது ஆங்காரத்தினால் வந்த கடனைத் தீர்க்கவும், நாம் தாழ்ச்சியை அநுசரிக்க நம்மை வற்புறுத்தும்படியாகவும் அவர் முழு மனதோடே தாழ்மையானதெல்லாவற்றையுஞ் சகித்துக்கொண்டுவந்தார். அவர் மாட்டுக்கொட்டிலில் பிறந்தார்; முப்பது வருஷகாலம் உலகத்துக்குத் தெரியாமல் சஞ்சரித்தார்; மூன்று வருஷம் எங்குஞ் சுற்றித்திரிந்து அமிர்த பிரசங்கங்களைச் சொல்லிக்கொண்டு வரும்போது, தமது பேரில் காய்மகாரமாயிருந்தவர்கள் இவன் மனுஷர்களை ஏய்க்கிறவனென்றும் பொய்யனென்றும் பேய்பிடித்தவனென்றும் நிந்தை ஆவலாதியான வார்த்தைகள் சொல்லச் சகித்துக்கொண்டார். கடைசியாய் இரு கள்ளர் நடுவே குற்றவாளியைப்போல் சிலுவையிலறையுண்டு மரித்தார்! இதெல்லாம் பார்க்கையில், அவர் தம்மைத் தாழ்த்திக்கொள்ளவுந் தம்மை ஒன்றுமில்லாதவனைப்போலாக்கிக் கொள்ளவும் பிரயாசப்பட்டுக்கொண்டு வந்தாரென்று சொல்லவேண்டியதில்லையோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நான் மெய்யாகவே மனத்தாழ்ச்சியுள்ளவனாயிருந்தால், இப்படித்தான் நடக்கவேண்டும். புகழ்ச்சி, மகிமை, மேலான உத்தியோகம் இவைகளைத் தேடுவதற்குமாறாய் சர்வேசுரனுக்கு மாத்திரம் பிரியப்படும்படி. மனுஷருக்குத் தெரியாமல் இருக்க வருந்துவேன்; உலகத்திலும் மனுஷர்கள் நினைவிலுஞ் சர்வேசுரனுக்கு மாத்திரஞ் சகல மகிமையும் உண்டாகும்படி, நான் உலகில் இல்லாதவனைப்போலிருக்கவும், மனுஷர்கள் என்னை நினையாமலிருக்கவும் வழி தேடுவேன்; மற்றவர்கள் என்பேரில் குறை நினைக்கும்போது அல்லது பேசும்போது என்னைக் கண்டிக்கும்போது அல்லது தாழ்த்தும்போது அச்சமயத்திலாகிலும் நான்

ஒருக்காலும் கலக்கப்படாமலும் தைரியமற்றுப்போகாமலும் இருப்பேன். இப்படி நடக்கிறேனா?

சம்பாஷணை.—மிகுந்த மனத்தாழ்ச்சியுள்ளவரும், அத்தியந்தவிதமாய்த் தாழ்த்தப்பட்டவருமான இயேசுநாதரோடே சம்பாஷணை செய்வாயாக.

திரு இருதய நவநாளின் 5-ம் நாள்—ஞாயிறு

இயேசுநாதர் திரு இருதயத்தின் கீழ்ப்படிதல்

ஆயத்தச் சிந்தனை.—நான் உங்களுக்குச் செய்தது போல, நீங்களுஞ் செய்யும்பொருட்டுக் கீழ்ப்படிதலின் மாதிரிகையை உங்களுக்குக் காண்பித்தேனென்று மதுர குணமும் மனத்தாழ்ச்சியுமுள்ள இயேசுநாதர் எனக்குச் சொல்லுகிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக (அரு. 13).

தியானச் செபம்.—என் இருதயத்தை நேசத்துக்குரிய இரட்சகரின் கீழ்ப்படிதலுஞ் சிரவணமும் நிறைந்த இருதயத்துக்கொத்ததாக்குவதற்கு அவசியமான வரப்பிரசாதங்களைக் கேட்பேனாக.

முதல் பிரிவு

பிதாவாகிய சர்வேசுரனுக்கு இயேசுநாதருடைய திரு இருதயம் ஆச்சரியமான விதமாய்க் கீழ்ப்படிந்தது

தியானம்.—கீழ்ப்படிதலானது தாழ்ச்சியின் முதற் பலனாம். இயேசுநாதர் மனத்தாழ்ச்சியுள்ளவரென்று தாம் தாமே வெளிப்படுத்தப் பிரியப்படுகிறார்; ஆகையால் "இருதய சிரவணமுங் கீழ்ப்படிதலுமுள்ளவராய்" இருக்கிறார். தமது பரம பிதாவின் சித்தந் தமது சித்தமென்று நிச்சயமாய்ச் சொல்கிறார்: "பிதாவே, என் மனதின்படி

யல்ல, உமது சித்தமாகக்கடவது" (லூக். 22.) மேலும் எப்பொழுதும் எதுகாரியத்திலும் அவர் சித்தத்துக்கு ஒத்தபிரகாரம் தாம் நடக்கிறாரென்று நாம் அறியும்படி "நான் அவருக்குப் பிரியமானவைகளை எப்போதுஞ் செய்துவருகிறேன்" என்று திருவுளம்பற்றினார் (அரு. 8). சுபாவத்துக்கு மகா வருத்தமான காரியங்கள் முதலாய் அதை நிறைவேற்ற விக்கினமாகமாட்டாதென்பதற்குப் பூங்காவனத்தில் அவர் மரண அவஸ்தைப்பட்டதே அத்தாட்சியாயிருக்கின்றது. அவர் கீழ்ப்படிந்ததின் காரணம் உத்தமமானதினால், அவரது கீழ்ப்படிதலும் உத்தமமானது. பிதாவின் சித்தத்தின்படியே நடக்கிறார்; ஏனெனில் இப்படி அவர் நடக்கிறது பிதாவின் சித்தம் "ஆம், என் பிதாவே, இப்படி நான் நடப்பது உமக்குப் பிரியமாயிருக்கிறபடியினாலே, அப்படியே ஆகட்டும்" என்கிறார் (மத். 11).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதில் எனக்கு எவ்வளவோ உத்தமமான மாதிரிகை அடங்கியிருக்கிறது! இந்த மாதிரிகையின்படி நடக்க நான் பிரயாசப்பட்டிருக்கிறேனா? தேவ சித்தத்தையே எனக்குச் சட்டமாக வைத்துக்கொண்டேனா? தேவ சித்தமின்றி இவ்வுலகில் ஒன்றும் நடைபெறாது என்றிருக்க, சகல சம்பவங்களையும், அவைகள் எனக்குப் பிரியமானவைகளாயினும், பிரியமில்லாதவைகளாயினும்,—தேவ சித்தத்துக்கு முழுதும் அமைந்த மனதோடு ஏற்றுக்கொண்டேனா? எப்போதும், விசுவாசமும் சிநேகமும் என் கீழ்ப்படிதலில் விளங்கினதா?

மனப்பற்றுதல்.—ஆ! என் இயேசுவே, உமது இருதயத்தின் சிரவணத்தையுங் கீழ்ப்படிதலையும் நன்றாய் அறியவும் பிரமாணிக்கமாய்க் கண்டுபாவிக்கவும் எனக்கு அநுக்கிரகஞ் செய்தருளும்.

பிரதிக்கினை.—என் கிரிகைகள் பெரிதானாலுஞ் சிறிதானாலும், கீழ்ப்படியவேணுமென்கிற கருத்துக்காக, அவைகளை இன்றையத்தினஞ் செய்வேனாக.

2-ம் பிரிவு

கன்னிமரியம்மாளுக்குஞ் சூசையப்பருக்கும் இயேசுநாதருடைய திரு இருதயம் ஆச்சரியமானவிதமாய்க் கீழ்ப்படிந்தது

தியானம்.—"அவர்களுக்கு அவர் கீழ்ப்படிந்திருந்தார்" (லூக். 2.) தமது தாயாராகிய மரியம்மாளோடுந் தம்மை வளர்த்த தகப்பனாகிய சூசையப்பரோடும் அவர் அந்தரங்கமாய் வசித்த முப்பதுவருஷகால சீவிய சரித்திரமெல்லாம் இந்த மூன்று வார்த்தைகளில் அடங்கியிருக்கின்றது. ஆ! இதென்ன ஆச்சரியம்! சர்வேசுரன் இரு சிருஷ்டிகளுக்குக் கீழ்ப்படிந்தாரா? படைக்கப்பட்ட சகல வஸ்துக்களின்பேரிலுஞ் சர்வேசுரனுக்குள்ள மேலானதும் பராதீனப்படுத்தக் கூடாததுமான சுதந்தரத்துக்கு, இது பொருந்தாத காரியமன்றோ? இல்லை; ஏனெனில், இயேசுநாதர் வாஸ்தவத்தில் பிதாவாகிய சர்வேசுரனுக்குத்தான் கீழ்ப்படிந்தார்; கன்னிமரியம்மாளையும் சூசையப்பரையும் தமது பிதாவின் பிரதிநிதிகளாகவே பாவித்துக்கொண்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—விசுவாசத்துக்குரிய மெய்யான கீழ்ப்படிதலாகிற புண்ணியத்தின் கருத்தும் மேல்வரிச்சட்டமும் இதுதான்: சர்வேசுரனுக்குப் பதிலாயிருக்கிறவர்களுக்குக் கீழ்ப்படிவதால், சர்வேசுரனுக்குக் கீழ்ப்படிவது; அவர்களைப்பற்றி "உங்கள் வார்த்தையைக் கேட்கிறவன், என் வார்த்தையைக் கேட்கிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? இந்தக் கீழ்ப்படிதல் ஒன்றே சந்நியாசிக்கு யோக்கியமானது; இது அவனைத் தாழ்த்தாமல் உயர்த்தி மேன்மைப்படுத்தும். இவ்வாறு கீழ்ப்படிகிறதே சர்வேசுரனோடு ஒரே மனதாயிருக்கிறதாம். உன் சிரேஷ்டர்களிடம் இருக்கக்கூடிய புண்ணிய பேறுகளைக் காரணமாகக்கொள்ளாமல், மேற்சொன்ன விசுவாசத்தின் கருத்துக்காக அவர்கள் எல்லாருக்கும் கீழ்ப்படிந்து வந்தாயோவென்றுபார். நீ இப்படிக் கீழ்ப்படிந்தாயாகில், உன் கீழ்ப்படிதல், உன்னால் இயன்ற அளவு உன் திவ்விய மாதிரிகையானவருடைய கீழ்ப்படிதலைப்போல் உத்தமமாயிருக்கும்: இது சுறுசுறுப்புள்ளதும்,

உதாரமுள்ளதும், பெரிய காரியம் சின்னக் காரியம் என்று வித்தியாசம் பாராட்டாமலும் இருக்கும். சர்வேசுரன் சமுகத்தில், பேறுபலன் நிறைந்ததாகவுமிருக்கும்.

மனப்பற்றுதல்.—விசுவாசமுள்ள கீழ்ப்படிதலைக் கனமாய் எண்ணிச் சிநேகிக்கவேணும்; அதிகமதிகமாய் அதில் வர்த்திக்க ஆசைகொள்வாயாக!

பிரதிக்கினை.—சுய நன்மையை அல்லது பயத்தை அடிப்படையாய்க்கொண்ட, முகத்தாட்சணிய கீழ்ப்படிதலுக்கு ஆளாகாவண்ணம் எச்சரிக்கையாயிரு.

3-ம் பிரிவு

நானாவித மனுஷர்களுக்கு இயேசுநாதர் இருதயம் ஆச்சரியமான விதமாய்க் கீழ்ப்படிந்தது

தியானம்.—இயேசுநாதர் எப்பொழுதும் மேற்சொன்ன முகாந்திரத்தைப்பற்றி: 1-வது, தம்மாலே, கள்ள ஞானிகளென்று எண்பிக்கப்பட்ட பாவிகளுக்கு முதலாய் இணங்கிக் கீழ்ப்படிகிறார்:—கைப்பாஸென்பவன் பெரிய குருவென்கிற முறையில், இயேசுநாதரை நோக்கி, நீ தேவகுமாரனோ இல்லையோவென்று சுவாமி ஆணையால் கேட்கவே, அதுவரையில் மவுனமாயிருந்த இயேசுநாதர் உடனே கீழ்ப்படிந்து உண்மை முழுவதும் வெளிப்படுத்துகிறார்; 2-வது, அஞ்ஞானிகளுக்கும் அவர் இணங்கிக் கீழ்ப்படிகிறார்:—போஞ்சு பிலாத்து யூதேயா நாட்டுக்கெல்லாம் மேலான அதிகாரியாக, இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்து கொல்லத் தீர்வையிடுகிறான்; அதற்கும் வாய் திறவாமல் கீழ்ப்படிகிறார்; 3-வது, தம்மைக் கொலைசெய்கிறவர்களுக்குமுதலாய்க் கீழ்ப்படிகிறார். அவர்கள் அவரைச் சிலுவையில் அறைகிறதற்குக் கரங்களை நீட்டும்படி சொல்லவே, அவர் மனதிலும் புத்தியிலும் முழுதும் அமைந்து, அவைகளை நீட்டுகிறார். அர்ச். சின்னப்பர் சொல்லுமாப்போல், "மரணமட்டும் சிலுவைமரணமட்டும் இம்மேரையாய்க் கீழ்ப்படிந்தார்" (பிலி. 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நம்மைப்பற்றியும், நமது படிப்பினைக்காகவும், நம்மைத் திடப்படுத்துவதற்காகவும், இயேசுநாதர் கீழ்ப்படிதலின் இத்தகைய மேலான மாதிரிகையைக் காண்பிக்கச் சித்தமானார். நீ இதை ஒருபோதும் மறவாதே; இதை ஞாபகத்தில் இறுத்திக்கொள்வாயாகில், உன் சிரேஷ்டர்கள் அதிக கண்டிப்புள்ளவர்களென்றும் அல்லது அவர்கள் அதிக வருத்தமான கட்டளைகளைக் கொடுக்கிறார்களென்றும் ஒருக்காலும் முறைப்பாடு சொல்லமாட்டாய். ஆ! சிலுவையில் அறையுண்டு சாகுந்தனையும், நல்லமனதோடு கீழ்ப்படிந்த இயேசுநாதர் எப்போதும் நமது கண்முன்பாக இருப்பாராகில், எதிலாகிலும் கீழ்ப்படிகிறது நமக்கு வருத்தமாயிராது.

சம்பாஷணை.—உன் சபையில் மனதைக்கொண்டும் புத்தியைக்கொண்டும் உத்தமமாய்க் கீழ்ப்படிந்துவந்த யாதொரு அர்ச்சியசிஷ்டவரோடாகிலும் நமது நேச இரட்சகரோடென்கிலும் சம்பாஷணை செய். அவர் நமக்குக் காண்பித்த மாதிரிகைக்கும், நமக்குச் சொன்ன தேற்றரவான வார்த்தைக்கும் நன்றியறிந்தவனாயிரு. உனது கீழ்ப்படிதலில் வழக்கமாயுள்ள அநேக குற்றங்குறைகளுக்காகப் பொறுத்தல் கேள்.

திரு இருதய நவநாளின் 6-ம் நாள்—திங்கள்

இயேசுநாதர் திரு இருதயத்தின் சாந்தகுணம்

ஆயத்தச் சிந்தனை.—நான் இருதயத்தில் சாந்தமுள்ளவனென்று என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்களென்று, இயேசுநாதர் தமது இருதயத்தைக் காண்பித்து நமக்குச் சொல்லுகிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—சாந்தகுணத்தை அறியவும் மதிக்கவும் சிநேகிக்கவும் வரப்பிரசாதங் கேட்போமாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் திரு இருதயத்தின் சாந்தகுணம் அவரிடத்தில் முழுதும் வெளிப்படையாய் விளங்கினது

தியானம்.—இருதயத்தின் நேசத்துக்குரிய குணங்களுக்குள் மகா எளிதாய் வெளிப்பட்டு மதிக்கப்படக்கூடியது சாந்தமே. சாந்தமும் இரக்கமுமுள்ளவனை அறிந்த மாத்திரத்தில், யாவரும் அவனை நேசிப்பார்கள். அவன் மட்டில் எல்லாருக்கும் பட்சமும் பாசமும் ஏற்படும்; அவனைவிட்டுப் பிரிவது வருத்தமாயிருக்கும். இப்போது சொன்னதைக்கொண்டு, இயேசுநாதருடைய ஒப்பில்லாத சாந்தகுணத்தைச் சற்றாகிலும் கண்டுபிடிக்கிறது எளிதாகும். அது மனிதர் இருதயத்தை வசப்படுத்த எவ்வளவோ தகுதியானது! அவர் அப்பத்தை அற்புதமாய்ப் பலுகச் செய்த சம்பவத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதிலிருந்து தெரிந்துகொள்ளக் கிடக்கிறாப்போல், நானாவித அந்தஸ்திலுமுள்ள நாலாயிரம் பேர் அடிக்கடி மூன்றுநாள் பரியந்தம் அவரைவிட்டுப் பிரியாமலும், சாப்பாட்டைப்பற்றி முதலாய் நினையாமலும், அவர் பிரசங்கித்துக்கொண்டுபோன இடங்களெங்கும் அவரைப் பின்தொடர்ந்து போனார்களென்று சுவிசேஷத்தில் காண்கிறோம். (மத். 15.); அவரது இருதய சாந்தமானது அவ்வளவு இன்பமும் நேசமும் பொருந்தியதாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் திவ்விய மாதிரிகையானவரைப்போல் நீயும் இருதய சாந்தமுள்ளவனாவென்று அறிய விரும்புகிறாயா? உன் சகோதரர்கள் உன்பேரில் எவ்வளவு பிரியம், நம்பிக்கை வைத்திருக்கிறார்களென்று பார்: அவர்கள் எப்போதும் விசேஷமாய் வருத்தப்படும்போது மனம்பொருந்தி உன் அண்டையில் வருகிறார்களா அல்லது நீ எப்போதுந் தங்கள் வார்த்தைக்கு எதிர்த்துப்பேசி எரிச்சலுக்குரிய கடுமையாய் தர்க்கம் செய்வாயென்று அஞ்சி உன்னைவிட்டு விலகி நிற்கிறார்களாவென்று பார். இதிலிருந்து நீ சாந்தகுணனாவென்று தெரிந்துகொள்ளலாம்.

மனப்பற்றுதல்.—ஆ! என் இயேசுவின் மதுரம் பொருந்திய இருதயமே, உம்மைப்போல் நான் சாந்தகுணமும் மனத்தாழ்ச்சியுமுள்ளவனுயிருக்க எனக்குப் படிப்பித்தருளும்.

பிரதிக்கினை.—உன்னிடத்தில் இருக்கக்கூடுமான கன்னெஞ்சுத் தன்மையை உறுதியாய் அடக்கி ஜெபிக்கப் பிரயாசப்படு.

2-ம் பிரிவு

இயேசுநாதர் திரு இருதயத்தின் சாந்தகுணம் அவருடைய வார்த்தைகளில் விளங்கினது

தியானம்.—சுவிசேஷத்தின் ஒவ்வொரு பக்கமுமே இதற்கு அத்தாட்சியாகும். "நல்ல மேய்ப்பன் நானே, நல்ல மேய்ப்பனுனவன் தன் ஆடுகளுக்காகத் தன் பிராணனைக் கொடுக்கிருன்" (அரு. 10); "எருசலேமே, எருசலேமே, கோழியானது தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளுக்குள்ளே கூட்டி அணைத்துக்கொள்வதுபோல, எத்தனையோவிசை உன் மக்களைச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன். ஆனுல் உனக்கு மனதில்லாதே போயிற்று"; (லூக். 13). இவ்வார்த்தைகளில் எவ்வளவு சாந்தம் விளங்குகிறது பார். யூதாஸ்கரியோத்து தன் சதிமார்க்கத்தை நிறைவேற்றுகிற சமயத்தில் "சிநேகிதனே, எதுக்காக வந்தாய்?" முத்தங்கொடுத்து மனுமகனைக் காட்டிக்கொடுக்கிருயோ" (மத். 26; லூக். 22). என்று சொன்ன வார்த்தைகளில் எவ்வளவு அன்பு விளங்குகின்றது. விசேஷமாய் அவர் மரணமடைகிற சமயத்தில், தம்மைக் கொலைசெய்கிறவர்களுக்காகத் தமது பிதாவைப் பார்த்து "பிதாவே, இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாததினுலே, இவர்களுக்கு மன்னித்தருளும்" என்று மன்ருடினதில் எவ்வளவோ சாந்தம் விளங்குகிறது. (லூக். 23).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—"இருதயத்திலுள்ள பட்சத்துக்கு ஏற்றுப்போல், வாய் பேசும்" என்கிறது உண்மையாகில், என் இரட்சகர் இருதயத்துக் கொத்தவண்ணம் என் இருதயத்தைச் சீர்படுத்துவதில் நான் இதுவரையில் சரியாய் அநுகூலம் அடையவில்லையென்று சொல்லவேண்டியதல்லவோ? நான் புறத்தியாரைப்பற்றித் தீர்மானிப்பதில் இன்னம் எவ்வளவோ கடுமையாயிருக்கிறேன்! அவர்களுடைய குற்றங்குறைகளை எடுத்துக்காட்டுவதிலும், அவைகளைக் கூட்டிப்பெருக்கி, அவைகளைப்பற்றி அவர்களைக் கடிந்துகொள்வதிலும் எவ்வளவு சுறுக்கும் கண்டிப்புமுள்ளவனுயிருக்கிறேன்! தமது பேரில் இல்லாத குற்றங்களைச் சாட்டுகிறவர்களுக்கு இயேசுநாதர் அமரிக்கையோடுஞ் சாந்த குணத்தோடும் மாறுத்தரஞ் சொல்லுகிருர்; நானேவெனில், மெய்யாகவே நான் கட்டிக்கொண்ட குற்றங்களைச் சொல்லிக் காண்பிக்கிறவர்கள்பேரில் கோபவெறிகொண்டு, கடுமையான வார்த்தைகளைப் பேசுகிறேன்! இயேசுநாதர் தம்மைக் கொலைப்படுத்துகிறவர்களுக்குச் சனுவாகத் தமது இருதயத்தில் நின்று மன்னிப்பான வார்த்தைகளை எடுத்துரைக்கிருர்; நானேவெனில், எனக்கு விரோதமாய்ப் புறத்தியார் பொல்லாப்பு நினைக்கிருர்கள் என்னும் வெறும் சந்தேகத்தினிமித்தமே ஆத்திரங்கொண்டு ஆர்ப்பரிக்கிறேன்.

மனப்பற்றுதல்.—நான் சாந்தகுணமும் மனத்தாழ்ச்சியுமாயிருக்கிறதை என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்களென்ற, இந்த உத்தம படிப்பினையைத் தினந்தினம் எனக்குச் சொல்லிக்கொடுக்கும என் திவ்விய குருவின் பள்ளிக்கூடத்தில் நான் அடைந்துள்ள பிரயோசனம் வெகு வெகு சொற்பமென்று கண்டு கஸ்திப்படுவேனுக.

பிரதிக்கினை.—என் வார்த்தைகள் மட்டிலும் என் இருதயப் பற்றுதல்கள் மட்டிலும் இன்று விசேஷ கவனம் செலுத்துவேனுக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் திரு இருதயத்தின் சாந்தகுணமானது அவருடைய கிரியைகளில் விளங்குகின்றது

தியானம்.—இயேசுநாதருடைய சாந்தகுணத்துக்கு எத்தனையோ கடினமான இடைஞ்சல்கள் உண்டாயிற்று!

அவருடைய பிரசித்தமான சீவியகாலமெல்லாம் யூத சாஸ்திரிகளாலும் பெரியோர்களாலும் எவ்வளவோ கொடிய ஆவலாதி, நிந்தை, அவமானங்களுக் குட்பட்டிருந்தார்! சகல ஜனங்கள் முன்னே அவரைப்பார்த்துப் பேய் பிடித்தவனென்றும் பேய்களுக்குத் தலைமையான பேயெல்சேபுவினால் மாயவித்தை செய்கிறவனென்றுஞ் சொன்னார்கள். ஆகிலும் இயேசுநாதருடைய சாந்தகுணம் அதினால் ஒருக்காலுந் தளர்ந்துபோகவில்லை; அவர் சாகுந்தனையும் அது மாறாமலிருந்தது. ஆகையால் நான் சாந்தகுணமும் மனத்தாழ்ச்சியுமுள்ளவனாயிருக்கிறதை என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்களென்று நமக்கு அவர் சொல்லுகிறதற்கு எவ்வளவோ நியாயமுண்டு!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிறசிநேகம், தயவு, தாட்சணியம் நிறைந்த மனிதர் அல்லது சகோதரர்கள் மத்தியில் இருக்குந்தனையுஞ் சாந்தகுணமும் பொறுமையுள்ளவனுமாயிருக்கிறது அரிதல்ல; மெய்யாகவே இதில் சாந்தகுணத்தின் புண்ணியமும் பலனுமில்லை. சாந்தகுணமும் மனத்தாழ்ச்சியுமுள்ளவனாயிருக்கிறது, புறத்தியார் குற்றங்களைப் பொறுமையோடு சகித்துக்கொண்டு இயேசுநாதர் பாவனையாய்த் தின்மைக்கு நன்மைசெய்வதிலே விளங்கும். நீ இப்படிச் செய்கிறாயோ? இந்த உத்தமதனத்தை அடையவும், "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்னும் வாக்கியம் உனக்குச் செல்லும்படியும் மாறாத மனவூக்கத்தோடும் உதாரத்தோடும் பிரயாசப்படுகிறதாவது உண்டா?

சம்பாஷணை.—அர்ச். பிரான்சீஸ்கு சலேசியுஸென்பவரோடு சம்பாஷணை செய்வாயாக. மாறாத சாந்தத்தால் பேர்பெற்றிலங்கும் இவர் சுபாவத்தில் ஆத்திரக் குணமுள்ளவராயிருந்தும், சாந்தகுணம் நிறைந்தவர் என்று பேர்பெற்றிருப்பது அவரது புண்ணியத்தை நன்றாய் விளக்கிக் காட்டுகிறது.

திரு இருதய நவநாளின் 7-ம் நாள்—செவ்வாய்

இயேசுநாதர் திரு இருதயத்தின் உதாரத்தனம்

ஆயத்தச் சிந்தனை.—மனிதர்களை அத்தியந்தவிதமாய் சிநேகித்த இருதயம் இதோவென்று இயேசுநாதர் தமது இருதயத்தைக் காண்பித்துச் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இயேசுநாதரைச்சார்ந்த காரியங்களில் முழுப் பற்றுதலுள்ள இருதயசற்குணத்தைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் தமது கீர்த்தி மகிமையைப் பரித்தியாகம் பண்ணினதினால் அவரது இருதய உதாரத்தனம் வெளியாகின்றது

தியானம்.—ஒருவன் புறத்தியார் நன்மைக்காகத் தன் சொந்த நன்மையைப் பலியாய் ஒப்புக்கொடுப்பதற்களவாக அவன் இருதயத்தில் உள்ள உதாரத்தனம் இன்னதென்று அறியலாம். அப்படியே இயேசுநாதர் திரு இருதயத்தின் உதாரத்தனத்தையும் அறிந்துகொள்ளுவோம். அவர் நம்மைப்பற்றிப் படாதபாடென்ன? அவர் மனுஷனாய்ப் பிறந்து இம்மையின் நன்மைகளுக்கு நம்மோடு பங்காளியானது, நம்மைப்பற்றி மகா உதாரத்தனத்தோடு அவைகளைப் பலியாய் ஒப்புக்கொடுக்கிறதற்காகவே என்று சொல்லலாம். இந்நன்மைகளில் மனிதர்கள் முக்கியமாய் விரும்புகிற நன்மை "நல்ல கீர்த்தியும் மகிமையும்" இது முற்றிலும் நியாயமான விருப்பம். இயேசுநாதர் தமது பரம பிதாவுக்கு நமது பாவத்தால் வந்த அவமானத்தைப் பரிகாரம் பண்ணவும் நம்மை அவரோடு திரும்ப உறவாக்கவும் அந்த நன்மையைத் தானே பலியாக ஒப்புக்கொடுத்தார். மிகவுங் கடின அவதூறுகளால் அவமானத்துக்குட்படச் சம்மதித்ததுமல்லாமல், கீர்த்தியெல்லாத்தையும் இழந்து மரிக்கச் சித்தமானார். அவர் சிறுவையில்

அறையப்பட்டிருக்கிறதைப் பார். நீ மெய்யாகவே தேவ குமாரனானால், சிலுவையை விட்டிறங்கென்று எல்லாரும் ஆகடியம் பண்ணினாலும் அவர் அதைவிட்டு இறங்குகிறதில்லை. ஆகையால் அவர்கள் இவன் அதில் நின்று இறங்க வல்லமையில்லாதவனென்றும் நீசப் பொய்யனென்றும் மனிதருக்குள்ளே நிந்தைக்குரியவனென்றும் தீர்மானித்தார்கள். இந்தப்பிரகாரமே இவர் சிலுவையில் மரித்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். சிலுவை அருளப்பர் வீண் ஆவலாதியினிமித்தம் சிறையில் அடைபட்டு, அதில் மரிக்கவேண்டியிருந்தாலும் யாதொரு முறைப்பாடும் சொன்னவரல்ல. சர்வேசுரன் இத்தகைய கீர்த்திப் பரித்தியாகத்தை இன்னும் வேறு அர்ச்சியசிஷ்டவர்களிடமும் கேட்டதுபோல் உன்னிடமிருந்து கேட்கமாட்டாரென்று நினைத்துக்கொள்ளலாம். ஆனால் சர்வேசுரன் அடிக்கடி உன்னிடத்தில் கேட்கிறதும் கேட்கக் கூடுமானதுமேதென்றால், பிறர் உன்பேரில் காய்மகாரத்தினால் அல்லது யோசனைக்குறையினால் உன் மகிமையை அல்லது உன் கீர்த்தியைப் பழுதாக்கும்போது, நீ அதினிமித்தம் மனத்தாங்கலாயிருக்கவேண்டாமென்றும் உன் ஒழுங்கில் சொல்லியிருக்கிறபிரகாரம் உன்னைச் சிரேஷ்டர் கண்டிக்கும் போதாவது, நியாயமில்லாமல் இல்லாத ஒரு குற்றத்தைப்பற்றிமுதலாய் உனக்கு அபராதங் கட்டளையிடும்போதாவது, என்பேரில் குற்றமில்லையென்று சொல்லாமல், நீ அவைகளை மவுனமாய்க் கையேற்றுக்கொள்ளவேணுமென்றும் கேட்கிறார். இப்பேர்க்கொத்த பரித்தியாகங்கள் வீரசூரக் கிரிகைகளல்லவென்றாலும் அவைகள் உன்னை இயேசுநாதருக்குப் பிரியமுள்ளவனும் அவருடைய சனுவுக்குப் பாத்திரவானும் ஆக்கும்.

மனப்பற்றுதல்.—அவசியம் நேருங்கால், சுபாவத்துக்குக் கடினமான பரித்தியாகங்களைச் செய்யக்கூடிய பலமான இருதயத்தை உனக்குக் கொடுக்கவேணுமென்று கேட்பாயாக.

பிரதிக்கினை.—தேவ ஊழியத்துக்கும் பிறர் நன்மைக்கும் அவசரமான சமயத்தில்மாத்திரந் தன் மகிமையையுங் கீர்த்தியையுஞ் சட்டைபண்ணவேண்டும்.

2-ம் பிரிவு.

இயேசுநாதர் தமது சீவிய சுகத்தைப் பலியாக ஒப்புக்கொடுத்ததினால் அவரது இருதய உதாரத்தனம் வெளியாகின்றது.

தியானம்.—இயேசுநாதர் மாசற்றவர்; அவர் பரிகரிக்கவேண்டியது ஒன்றுமில்லை; ஆகையால், இச்சீவிய நன்மை சுகங்களெல்லாம் அவர் பூர்ணமாய் அநுபவித்துக் கொள்ளலாம். ஆகிலும் உதாரத்தனமாய் அவைகளையெல்லாம் பரித்தியாகம் பண்ணினார்; கடினமான இக்கட்டுகளிலேயும் மனுஷர் ஒருபோதும் அநுபவியாத ஆத்தும சரீர வேதனைகளிலேயுந் தமது சீவியகாலமெல்லாஞ் செலவழித்தார். அதேதினென்றால், நமது அக்கிரமத்தினாலே நாம் அநுபவித்த பாவச் சுகபோகங்களுக்காகத் தேவ நீதிக்குப் பரிகாரம் பண்ணுங் கடமையை அவர் தமது பேரில் சுமந்துகொண்டார். மேலும் சதாகாலமும் மோக்ஷானந்த பாக்கியம் பெற்று நாம் வாழும்படி, இம்மையில் தமது மாதிரிகையாய்த் தபசுசெய்ய நம்மைத் தூண்டுவதற்காக இப்படிச் செய்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் குற்றவாளிகள். பரிகாரம் செய்யவேண்டியதோ, மிகுதியாயிருக்கின்றது. கடின தபசுசெய்வது நமது சத்திக்கு மேற்பட்டதாயினும், தபசுசெய்யும் கருத்தோடாகிலும், சின்னஞ் சிறிய காரியங்களில் நமது பிரியத்தை அடக்கவும், அடிக்கடி நம்மை ஒறுக்கவும், முறைப்பாடு சொல்லாமல் பொறுமையாயிருக்கவும் பழகுவோமாக. இதெல்லாம் அற்பக்காரியந்தான்; ஆகிலும் இதையாவது செய்கிறோமா? எவ்வித உதாரத்தோடும் நிலைமையோடும் இதைச் செய்கிறோம்?

மனப்பற்றுதல்.—இயேசுநாதருடைய மகா உதாரமுள்ள திரு இருதயத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவரை வாழ்த்தித் துதிப்போமாக.

பிரதிக்கினை.—இயேசுநாதரைப்பற்றி ஒறுத்தல் செய்யவும் யாதொரு வருத்தம், கஸ்தி அநுபவிக்கவுங் கிடைக்கும் சமயங்களைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்வோமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் திரு இருதயத்தின் உதாரத்தனமானது தமது சீவியத்தைப் பலியாக ஒப்புக்கொடுத்ததினால் விளங்குகின்றது

தியானம்.—இரட்சகர் தாமே சொல்லிக்காட்டின பிரகாரம், ஒருவன் மற்றொருவனுக்குச் செய்யக்கூடுமான மகா உதாரமுள்ள பரித்தியாகம் தனது உயிரைப் பரித்தியாகம் பண்ணுவதே. அவனுக்குச் சாவின் வாதனைகள் நேரிடாவண்ணம் தன் உயிரையே கையளிப்பது. நம்மைப் பற்றி இயேசுநாதர் செய்தது இஃதன்றோ? நம்மில் ஒவ்வொருவருக்காகவும் இப்படித் தமது உயிரைக்கொடுத்தாரன்றோ? என்னை அவர் சிநேகித்ததினாலே என்னைப்பற்றித் தம்மை மரணத்துக்குக் கையளித்தாரென்று அர்ச். சின்னப்பர் சொன்னதுபோலே, நாமும் சொல்லலாமே (கலா. 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—என் இரட்சகர் என்மட்டிலுள்ள வாக்குக்கெட்டாத சிநேகத்தினால் தம்மைப் பலியாக்கினது எப்போதும் என் புத்தியில் இருக்கின்றதோ? இது என் இருதயத்தில் நன்றியறிதலை எழுப்பவேண்டியது இயல்பாயிற்றே, அவ்விதம் இருக்கிறதா? இந்த நன்றியறிதல் என் கிரிகைகளில், அற்பக்காரியங்களில் என்னைப் பரித்தியாகம் பண்ணுவதினால் விளங்குகின்றதோ? இந்த முயற்சிகளைச் செய்வதற்கான சமயங்கள் அனந்தம் நேர்ந்தாலும், வீணான போக்குகளைச் சொல்லி அச்சமயங்களைத் தவறவிடுகிறேனே. ஆ! என் இருதயங் கொஞ்சமாகிலும் இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு ஒத்ததாயில்லையே!

சம்பாஷணை.—என் அன்பரான இரட்சகரின் திரு இருதயத்துக்கு முன்பாகச் சாஷ்டாங்கமாக விழுந்து

அவருக்குப் பிரசித்தமாய்ப் பரிகாரஞ்செய்து எப்போதைக்கும் அவருக்கு என்னை ஒப்புக்கொடுத்து வசீகரம் பண்ணுவேனாக.

திரு இருதய நவநாளின் 8-ம் நாள்—புதன்

இயேசுநாதர் திரு இருதயத்தின் ஆவல்

ஆயத்தச் சிந்தனை.—தன் அறுப்புக்கு வேண்டிய வேலையாட்களை அனுப்பும்படி வெள்ளாண்மையின் எசமானை மன்றாடுங்களென்று இயேசுநாதர் சொல்லுகிறதாக உரூபிகரித்துக் கொள்வேனாக (லூக். 10).

தியானச் செபம்.—இயேசுநாதருடைய திரு இருதயத்தின் ஆவல் என்னிடத்திலும் உண்டாகக்கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் திரு இருதயத்தில் உள்ள பற்றுதலின் வேகம்

தியானம்.—தன்னைப்போலொத்தவர்களை நேசிக்கிறவன் இருதயத்திலிருந்து வழிந்தோடும் தேவ சிநேகமே, தேவ மகிமையின் மட்டிலும், ஆத்தும இரட்சணியத்தின் மட்டிலுமுள்ள ஆவல் என்னப்படும், அவன் சகலரையும் சர்வேசுரனிடமாய்க் கூட்டிச் சேர்த்து, மோட்சத்தில் தனக்குக் கிடைக்கும் என்று நம்புகிற பாக்கியத்துக்கு அவர்களையும் பங்காளிகளாக்க ஆசிப்பான். ஆகையால், சிநேகத்தின் அளவே, ஆவலின் அளவாகும். தமது பரம பிதாவையும் மனிதரையும் வாக்குக்கெட்டாத விதமாய்ச் சிநேகிக்கிற இயேசுநாதருடைய திரு இருதயத்தின் ஆவல் எத்தன்மையானதென்று, இதிலிருந்து ஊகித்துக்கொள். அவர் இருதயத்தில் நின்று புறப்பட்ட சில வார்த்தைகள் இந்த ஆவலின் தன்மையைச் சிறிதளவாகிலும் நமக்கு எடுத்துக்காட்ட உதவும்:—“நான் பூமியில் தேவசிநேக அக்கினியைப் பற்றிவைக்கவந்தேன், அது எல்லாரிருதயங்

களிலும் பற்றியெரிய வேணுமென்பதல்லாதே வேறென்னத்தை விரும்புகிறேன்? என் இரத்தத்தில் ஸ்நானம் பண்ணவேண்டியவனாயிருக்கிறேன், அது நிறைவேறுமளவும் என் இருதயத்தில் எவ்வளவோ உபாதைப்படுகிறேன்" என்றார் (லூக். 12). அதாவது, தேவ பற்றுதலுக்குரிய கிரியைகளிலே முழுதுஞ் செலவழித்த இச்சீவனைப் பலியாக ஒப்புக்கொடுத்து எப்போது முடிப்பேன் என்று ஆவலாய்க் காத்துக்கொண்டிருக்கிறேன் என்று அர்த்தமாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச்சியசிஷ்டவர்கள் தேவசிநேகம் நிறைந்தவர்களாயிருந்ததினால், தேவமகிமையையும் ஆத்தும இரட்சணியத்தையும் தேடுகிறதே அவர்களுக்கு எல்லாத்தையும் பார்க்க எப்போதும் நினைவாயிருந்தது. தாவீது இராசா பாடிய ஏறக்குறைய எல்லா சங்கீதங்களிலும் இதற்கு அத்தாட்சி காணலாம்:—"ஆண்டவரே, உமது வீட்டின் பற்றுதலானது என்னை விழுங்கிற்று; உம்மை ஆகடியம் பண்ணுகிறவர்களுடைய நிந்தனைகள் என்பேரில் விழுந்தன. மனுஷர் உமது முறைமையைக் கைவிட்டதினால், என் கண்களில் நின்று ஓடின கண்ணீர் வெள்ளம்போல் இருக்கிறது" (சங். 68, 118). இவ்வித பற்றுதல்களும் மேன்மையான உணர்வுகளும் உன் இருதயத்தில் உண்டோ? அவைகள் இருக்குமாகில், பலன் தராமல் இருக்கமாட்டா: அவைகள் சர்வேசுரனுக்கும் ஆத்துமாக்களுக்குமடுத்த காரியத்தில், உன்னை வாய்ச்சாலகனாக்கும்; தேவபற்றுதலையும் ஆவலையும் பயன் தரத்தக்க விதமாய் உபயோகிப்பதற்குப் பற்பல வழிகளை அவைகள் உனக்கு எடுத்துக்காட்டும். இவ்விதம் இருக்கிறதா?

மனப்பற்றுதல்.—ஆறுதல் தருங் கர்த்தாவே, தயாபரனான பிதாவே, தன் அறுப்புக்கு வேண்டிய வேலையாட்களை அனுப்பும்படி வெள்ளாண்மையின் எசமானை மன்றாடுங்களென்று உமது திவ்விய குமாரன் கொடுத்த கற்பனைக்குக் கீழ்ப்படிந்து சகல சனங்களும் உம்மைத் தோத்தரித்து மகிமைப்படுத்த வாக்கிலும் கிரியைகளிலும் வல்லவர்களான அநேக வேதபோதகர்களை அனுப்பவேணுமென்று தேவரீரை அத்தியந்த தாழ்ச்சியோடே மன்றாடுகிறேன், இடைவிடாமல் மன்றாடுகிறேன்.

பிரதிக்கினை.—அடிக்கடி, விசேஷமாய்ப் பூசையில் தேவநற்கருணை எழுந்தேற்றமாகிறபோது, மேற்சொன்ன செபத்தை அல்லது இதற்கான பத்திக்குரிய வேறே செபத்தைச் செபிக்கலாம்.

2-ம் பிரிவு

இயேசுநாதர் திரு இருதயத்தில் உள்ள பற்றுதலின் விஸ்தீரணம்

தியானம்.—திவ்விய இரட்சகருடைய சுறுசுறுப்பான பற்றுதல் மகா வேகமுள்ளதாயிருந்தாலும், பலெஸ்தின் நாட்டுச் சனங்களிடத்தில் மாத்திரம் அவர் பிரயாசப்பட்டார்; அந்நாட்டுக்கு அப்பாலே போகவில்லை. அப்படியே அவரும் இஸ்ராயேல் வீட்டினின்று சிதறிப்போன ஆடுகளுக்காக அனுப்பப்பட்டேனொழிய மற்றப்படியல்லவென்றார் (மத். 15). இது தமது பிதாவின் சித்தமாயிருந்ததினாலே, உத்தமமான கீழ்ப்படிதலோடு இதற்கு அமைந்திருந்தார்; என் பிதாவே, உமக்கு இது இஷ்டமாயிருக்கிறதினாலே, அப்படியே ஆகட்டுமென்றார் (மத். 11). ஆனால் அவர் இருதயத்தில் உலக முழுமைக்கும் நன்மை செய்ய ஆசை உண்டாயிருந்தது. ஆகையால் அவர் தமது அந்தரங்க சீவியகாலத்தில், உலகமுழுதும் மனந்திரும்பவேணுமென்று தமது பிதாவைப்பார்த்து மன்றாடினார். மேலும் அவர் வெளியரங்கமாய் வேதம்போதித்த மூன்று வருஷகாலபரியந்தம், மேற்சொன்ன பெரிய அலுவலுக்கு அப்போஸ்தலர்களைத் தயார்பண்ணி, உலகமுடியுந்தனையும் தமது ஒத்தாசை அவர்களுக்கு இருக்குமென்று வார்த்தைப்பாடு கொடுத்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய மாதிரிகையானவரைக் கண்டுபாவித்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியதாவது: முந்தமுந்த நமக்குக் கொடுக்கப்

பட்ட அலுவல், சின்னஞ் சிறிய எல்லைக்குள், மனிதர் பார்வைக்கு மறைவாய் இழிவானதாகத் தோன்றினாலும், கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அதற்குகந்த வண்ணம் நமது ஆவலை ஒழுங்குபடுத்தித் திட்டப்படுத்திக்கொள்ள வேண்டும். 2-வது: அதிக விஸ்தீரணமான இடங்களிலும் அதிகப்பிரசித்தமான அலுவல்களிலும் உழைக்கிறவர்களைப் பற்றிக் காய்மகாரப்படுவதற்குமாறாய், அவர்களோடு நமது கருத்தையும் ஆசையையும் ஒன்றிக்கவேண்டும். 3-வது: உலகமெங்கும் பரம்பியிருக்கிற வேத போதகர்களுக்காக நாம் செபத்தைக்கொண்டு இடைவிடாமல் உதவிசெய்வதினால், உலக முழுமைக்கும் நன்மைசெய்ய நமக்குள்ள ஆவலைக் காட்டவேண்டும்.

மனப்பற்றுதலும், பிரதிக்கினையும்.—முந்தின பிரிவில் சொல்லியிருக்கிறபடி செய்யவும்.

3-ம் பிரிவு

இயேசுநாதர் திரு இருதயத்திலுள்ள பற்றுதலின் ஜெயம்

தியானம்.—நான் சிலுவையில் அறையுண்டு பலியாகிப் பூமியினின்று உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாவற்றையும் என் அண்டையில் இழுத்துக்கொள்வேனென்றார் (அரு. 12). தமது இருதயத்தில் அடங்கியிருந்த தேவபற்றுதலின் ஜெயத்தை இவ்வாறு யூதர்களுக்கு இயேசுநாதரே அறிவித்தார். இது எவ்வளவு உன்னதமான ஜெயம்! விக்கிரகாராதனை வெல்லப்பட்டு, நிந்தைக்குரியதாயிற்று; சர்வேசுரனுடைய திருநாமம் உலகமெங்கும் தெரிந்து ஆராதிக்கப்பட்டுவருகின்றது; மனுக்குலம் சத்திய நெறியிலும் நித்திய ஈடேற்றத்தின் பாதையிலுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றது; எவ்வித அந்தஸ்திலுமுள்ள ஒரு கோடியே பத்து லட்சஞ் சனங்களுக்கதிகமாய் சர்வேசுரனைப்பற்றியுந் தங்கள் ஆத்தும இரட்சணியத்தைப்பற்றியும் வேதசாட்சிகளாய்த் தங்கள் சீவனைக்கொடுத்து மரணம் அடைந்தார்கள்! இப்போர்க்கொத்த ஜெயம் எப்போதும் நீளித்திருக்கின்றது: பெண்களில் முதலாய் எத்தனையோ

பேர் சுவிசேஷத்துக்கடுத்த உத்தம பாதையில் நடக்கிறதற்காகவும், வேதம் போதிக்குங் குருக்களைப் பின்சென்று உலகத்தின் கடைசி எல்லையட்டுஞ் சத்திய வேத ஞான ஆறுதலை யாவருக்கும் வருவிக்கும்படியாகவும் சகலத்தையுந் துறந்துவிடும்படியான சுபாவத்துக்கு மேற்பட்ட தேவபற்றுதலை இயேசுநாதருடைய இருதயத்திலிருந்து அடைந்து வருகிறார்கள்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமோவென்றால், நமது அந்தஸ்தினாலேயே இத்தகைய அலுவல்களில் ஈடுபட்டிருக்கப் பாக்கியம் பெற்றிருக்கிறோம். ஆனால் நமது தேவபற்றுதலானது அநேகந் தரவாயில் ஜெயம் அடையாமற் போகிறதற்குக் காரணம் என்ன? நமது விசுவாசம் தகுந்தவண்ணம் உயிருள்ளதாயிராததும், நமது சிநேகம் வேகமற்றதாயிருப்பதும் இதற்குக் காரணம். ஆகையால் உயிருள்ள விசுவாசத்தையும் வேகமுள்ள சிநேகத்தையும் இயேசுநாதருடைய திரு இருதயத்திலிருந்து அடையப்பிரயாசப்படுவோமாக.

சம்பாஷணை.—அர்ச். சவேரியாரும், அர்ச். தெரேசம்மாளும் வெவ்வேறு அந்தஸ்திலிருந்தாலும், இருவரும் தேவபற்றுதலுக்குரிய முயற்சிகளை உத்தமவிதமாய்ச் செய்துவந்தார்கள். அவர்களில் ஒருவரோடு சம்பாஷணை செய்.

திரு இருதய நவநாளின் 9-ம் நாள்—வியாழன்

இயேசுநாதருடைய திரு இருதய தயாளத்தின் பேரிலும் இரக்கத்தின் பேரிலும்

ஆயத்தச் சிந்தனை.—மனிதர் பேரில் தயாளமும் இரக்கமும் நிறைந்த தமது இருதயத்தை இயேசுநாதர் உனக்குக் காண்பிக்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—உன் இருதயத்தைத் திவ்விய இரட்சகர் திரு இருதயத்துக்கு ஒத்தபிரகாரமாக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தயாளம் அவர் சிந்தின கண்ணீர்களால் விளங்கினது

தியானம்.—மற்றவர்களுக்கு நன்மைசெய்யவும், அவர்களுடைய துன்பதுரிதங்களில் அநுதாபப்படவும் ஏவுகிற மானிட இருதயச் சார்பே, தயாளம் எனப்படும். "சர்வேசுரனுடைய சுபாவமே தயாளம்" என்று அர்ச். பெரிய சிங்கராயரென்னும் பாப்பானவர் சொல்லியிருக்கிறார். அப்படியானால், இயேசுநாதர் இருதய தயாளமானது எவ்வளவு பெரிதாயிருக்கவேண்டும்! வாஸ்தவத்திலும், அவர் சீவிய காலத்தில் இந்தத் தயாளமானது எத்தனையோ வகையில் காணப்பட்டது! முந்த முந்த அவர் சிந்தின கண்ணீர்களால் அவருடைய தயாளம் விளங்கினதைக் காண்கிறோம்:—எருசலேம் பட்டணத்தார் ஆரவாரமாய்ப் பட்டணத்துக்கு அவரை அழைத்துக்கொண்டு வருஞ் சமயத்திலே, அவிசுவாசமாய்ப் போகும் அந்தப் பட்டணத்துக்கு இனி வரப்போகிற பொல்லாப்புகளை நினைத்து அவர் இருதயங் கலங்கி இரக்கத்தினால் அப்பட்டணத்தின்பேரில் கண்ணீர் விட்டழுதாரென்று சுவிசேஷகராகிய அர்ச். லூக்காஸ் எழுதிவைத்திருக்கிறார் (லூக். 19). வேறொரு சமயத்தில் லாசர் மரித்துப் புதைக்கப்பட்டிருக்கிறதையும் அவர் சகோதரிகள் கஸ்திப்பட்டு அழுகிறதையும் இயேசுநாதர் கண்டு தமது இருதயங் கலங்கிக் கஸ்திப்பட்டழுதாரென்று சுவிசேஷகராகிய அர்ச். அருளப்பர் எழுதியிருக்கிறார் (அரு. 11).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது:—என் நேச இரட்சகருடைய இருதயத்தின் தயாள உருக்கத்துக்கும் எனக்கும் எவ்வளவோ தூரம்! இயேசுநாதர் அத்தியந்த சிநேகத்தினிமித்தம் அவஸ்தைப்பட்டு மரணமடைந்ததை எந்நேரமும் எனக்கு ஞாபகப்படுத்துகிற சிலுவையின் பார்வையால் நான் மனமிரங்கி ஒரு துளி கண்ணீர் முதலாய்ச் சிந்தவில்லையே! தினந்தோறும் தங்கள் பாவ அக்கிரமங்களினாலே தங்களாலானமட்டும் என் இரட்சகரான இயேசுநாதரைச் சிலுவையில் அறையும் எண்ணிக்கையில்லாத நன்றிகெட்ட பாவிகளைப் பார்த்து, என் ஆத்துமத்தில் கஸ்திப்படவில்லையே! க்ஷணத்துக்கு க்ஷணம் நரக பாதாளத்தில் விழும் கணக்கில்லாத பேர்களை நினைக்கும்போது, நான் ஒரு பெருமூச்சாகிலும் விடக்காணேமே! ஆ! என் கன்னெஞ்சையும் தினந்தினம் நான் கட்டிக்கொள்ளுங் குற்றங்களையுங் குறித்து அழுகிறதற்காகச் சில கண்ணீர்த் துளிகளாகிலும் என் இருதயத்தில் காண்பேனாகில் எவ்வளவோ நன்மை!

மனப்பற்றுதல்.—தயாள சமுத்திரமான இயேசுவின் திரு இருதயமே, எங்கள்பேரில் இரக்கமாயிரும்.

பிரதிக்கினை.—பத்தியுள்ள இந்த மனவல்லயச் செபத்தை இன்றைக்கு அடிக்கடி சொல்லுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தயாளமானது அவருடைய வார்த்தைகளால் விளங்கினது

தியானம்.—இயேசுநாதர் வாயில் நின்று, உண்மையாய்ச் சொல்லவேணுமானால், அவர் இருதயத்தில் நின்று தானே புறப்பட்ட இவ்வாக்கியங்கள் ஆச்சரியமான தயாளமும் உருக்கமும் நிறைந்தவைகள்:—"வருத்தப்படுகிற நீங்கள் யாவரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு ஆறுதல் தருவேன்.—நான்தான் பயப்படாதேயுங்கள்.—என் மகனே, நம்பிக்கையாயிரு; உன் பாவங்கள் பொறுக்கப்பட்டன.—எருசலேம் பட்டணத்தின் குமாரத்திகளே, எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.—நான் நல்ல ஆயனாயிருக்கிறேன்.—நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காகப் பிராணனைக் கொடுப்பான்.—இரக்கமுள்ளவர்களாயிருங்கள்! எல்லாத்தையும் பார்க்க நான் அதிகமாய் விரும்புவது இரக்கத்தையேயல்லாமல் பலியையல்ல."

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னிடத்தில் நின்று புறப்படும் வார்த்தைகள் உன் இருதயத்தின் தயாளத்தையும் உருக்கத்தையும் காண்பிக்கின்றனவா? பிறருடைய பிரசித்தமான அல்லது அந்தரங்க நடத்தையைப்பற்றி நிதானிக்கையில், பெரும்பாலும் குறைகூறுகிற வார்த்தைகளும் இரக்கமற்ற மொழிகளும் உன் வாயினின்று புறப்படுகிறதில்லையா? காரியங்களின் அடிப்படையான வரலாறுகளைச் சரியாய்த் தெரிந்துகொள்ளாமல், வெளித்தோற்றங்களைக்கொண்டு மாத்திரம் நீ தீர்மானித்துப் பிறர்பேரில் அவிவேகமாய் அல்லது அநியாயமாய்க் குறைகூறினதில்லையா? இவ்விதம் செய்வாயாகில், உன் இருதயம் இயேசுநாதர் இருதயத்துக்கு ஒத்ததாயிருக்குமா?

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் திரு இருதயத்தின் தயாளத்தையும் உருக்கத்தையும் புகழ்ந்து தோத்தரித்து, உனது இருதய கடினத்தைப்பற்றியும் இரக்கமின்மையைப் பற்றியும் பொறுத்தல் கேட்பாயாக.

பிரதிக்கினை.—உன் இருதயத்தை நன்றாய் அறியவும் அதை இயேசுநாதர் திரு இருதயத்துக்கு ஒத்ததாக்கவும், உன் பேச்சு வார்த்தைகளின் பேரில் அடிக்கடி தனி ஆத்தும சோதனை செய்வாயாக.

3-ம் பிரிவு

இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தயாளமானது அவருடைய கிரியைகளால் விளங்கினது.

தியானம்.—இயேசுநாதருடைய சீவிய காலமெல்லாம் அவர் இருதயத்தின் இரக்கப் பெருக்கத்தையும் நன்மைத்தனத்தையும் எடுத்துக்காட்டுகிற தயாளச்செயல்களின் கோர்வையாகவே இருந்தது. யாராவது சரீரத்திலாகிலும் ஆத்துமத்திலாகிலும் வருத்தப்படுகிறதைக் கண்டால், அவர் அனுதாபப்பட்டு, அந்த வருத்தத்தை நீக்க வழிதேடாமல் இருக்கக் கூடுமாயில்லை. இத்தகைய சம்பவங்கள் அனந்தம்; அவைகளில் இரண்டைமாத்திரம் குறிப்பிடுவோம்: நாயி

மென்ற ஊருக்கு அடுத்தாற்போல், ஒரு விதவை தனக்கிருந்த ஒரே குமாரன் செத்ததினிமித்தம் மிகவும் அழுகிறதை இயேசுநாதர் கண்டு மனமிரங்கி செத்துப்போனவனை உயிர்ப்பித்தார். மீளவும் வனாந்தரத்தில் மூன்று நாள் பரியந்தம் தம்மைப் பின்சென்று வந்த நாலாயிரம் சனங்களைக் கண்டு, அப்போஸ்தலர்களை நோக்கி: நான் இவர்கள்பேரில் பரிதாபப்படுகிறேன், வழியில் இவர்கள் பசியினால் சோர்ந்து விழுவார்களென்று அஞ்சுகிறேனென்று சொல்லி, அப்போஸ்தலர்களிடத்திலிருந்த ஏழு அப்பத்தைக்கொண்டு அத்தனை ஆயிரம் பேர்களும் பசி தீர்ந்து திருப்தியடையும்படி புதுமை செய்தார். "இயேசுநாதர் இரக்கப்பட்டார்" என்னும் வாக்கியம் சுவிசேஷத்தில் எட்டுத்தடவை காணக்கிடக்கின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதருடைய தயாளத்தின்பேரிலும் அல்லது பாவசங்கீர்த்தனத்தில் குருவானவர் வழியாய் நமக்கு அவர் கொடுத்த பாவ மன்னிப்பின்பேரிலும் நாம் சந்தேகப்படும்போதும், அவர் நமதுபேரில் சுமத்தின பரிசுத்தமான நுகத்தடி பாரமானதும் சுமக்க வருத்தமானதுமென்று நாம் நினைக்கும்போதும், நம்பிக்கையை எளிதாய்க் கைவிட்டு மனக்கலக்கத்துக்கும் அச்சத்துக்கும் இடங்கொடுத்துத் தைரியமற்று ஒருவித அவநம்பிக்கைக்குள்ளாகும்போதும், அவருடைய மகா உருக்கமான இருதயத்துக்கு நாம் பலத்த அவமானம் செய்கிறோம். ஒருக்காலும் நாம் அவருக்கு இப்பேர்க்கொத்த அவமானம் செய்யாதிருப்போமாக.

சம்பாஷணை.—கடைசி இராப்போசனம் நடந்தபோது, இயேசுநாதர் திரு இருதயத்தின்மேல் சாய்ந்து இளைப்பாறித் தானெழுதின மூன்று நிருபங்களில் காணப்படும் ஆச்சரியமான தயவையும் இரக்கமுள்ள உருக்கத்தையும் அவரிடத்தில் அடைந்த சுவிசேஷகராகிய அர்ச். அருளப்பரோடு சம்பாஷணை செய்வாயாக.

திரு இருதயத்தின் திருநாள்—வெள்ளி

தேவநற்கருணையிலே நம்மோடு வாசம்பண்ணும் இயேசுநாதருடைய திரு இருதயத்தின்மட்டில் நமக்குள்ள கடமைகள்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தேவநற்கருணைப் பெட்டகத்தில் நின்று தேவ சிநேகம் பற்றியெரியும் தமது இருதயத்தைக் காண்பித்து "என் மகனே, உன் இருதயத்தை எனக்குக் கொடு," என்று எனக்குச் சொல்லுகிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—என் இருதயத்தைத் தமது சிநேகத்தினால் பற்றியெரியச் செய்யவேணுமென்று திவ்விய இரட்சகரை மிகவும் மன்றாடுவேனாக.

முதல் பிரிவு

தேவநற்கருணையிலே இயேசுநாதருடைய திரு இருதயம் மனிதர்களுக்காகச் செய்கிறதென்ன?

தியானம்.—இயேசுநாதர் நமக்காக எந்நேரமும் இரந்து மன்றாடி, மத்தியஸ்தனின் உத்தியோகம் நடத்திக் கொண்டுவருகிறார். பரலோகமட்டும் பழி வாங்கும்படி அபயமிடத்தக்க பாவ அக்கிரமங்கள் எண்ணிக்கையற்றவைகளாய் இருந்தும், சர்வேசுரன் மனுக்குலத்தை நிர்மூலமாக்காமலிருக்கிறதேனென்றால், "என் பிதாவே, இவர்கள் செய்கிறதை அறியாமல் செய்கிறார்கள்; இவர்களுக்கு மன்னித்தருளும்" என்று (லூக். 23) இயேசுநாதருடைய திரு இருதயம் இடைவிடாமல் மறுபடியும் அபயமிடுகிறதினாலேதான் என்று நிச்சயித்துக்கொள்வோமாக.

தினந்தோறும் எண்ணிக்கையில்லாத பீடங்களின் மேல் நமக்காக அவர் பலியாகி, பலியிடுவோனின் உத்தியோகம் நடத்திக்கொண்டு வருகிறார்.

தமது திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையுந் தானே நமக்குப் போசனமாக அவர் கொடுத்தருளி, தகப்பனின் உத்தியோகஞ்செய்துகொண்டு வருகிறார்.

அவர் தேவ நற்கருணையிலே எழுந்தருளியிருக்கும் அந்தஸ்தைக்கொண்டு, நமக்கு மிகவும் அவசியமான புண்ணியங்களாகிற ஒடுக்கம், மவுனம், தாழ்ச்சி, உலகநிந்தை, பொறுமை, கீழ்ப்படிதல், பத்தி முதலானவைகளைப் படிப்பிக்கிறதினாலே, நமக்கு அதில் குருவும் உபாத்தியாரும் என்கிற உத்தியோகங்களைச் செய்துகொண்டு வருகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் இயேசுநாதர் இருதயத்தை நேசிப்பதற்கான பலமுகாந்தரங்களுள் சிலவற்றை இங்கு எடுத்துக் கூறியிருக்கிறது. அவைகளை நான் அறிந்திருக்கிறேன்; நான் என்ன பிரதி நன்றி செய்யவேணுமென்றும் கண்டுணர்கிறேன்; ஆயினும், தேவ நற்கருணைக்கு முன்பாக இருக்கும்போதும் தேவ நற்கருணை வாங்கும்போது முதலாய், நேசமற்றவனைப் போலிருக்கிறேன்! இதற்கு முகாந்திரமென்ன? என்னையும் உலகத்தையும் நான் சரியாய் வெறுத்து விடாததினால் அல்லது என்னிடமுள்ள சில ஆசைப்பற்றுதல் குற்றமில்லாததாயிருந்தாலும், சிற்றின்ப சம்பந்தமுள்ளதினாலல்லவோ அப்படியிருக்கிறேன்?

மனப்பற்றுதல்.—இயேசுவின் மகா பரிசுத்தமுள்ள திரு இருதயமே, இனி உமக்காகவும் உம்முடையவனாகவும் நான் சீவிக்கும்படி எனக்கே நான் முழுதும் மரித்தவனாயிருக்க எனக்குப் படிப்பியும்.

பிரதிக்கினை.—இப்போது சொன்ன பத்தியுள்ள செபத்தை இன்றைக்கு அடிக்கடி சொல்லுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு மனிதர்கள் செய்கிறதென்ன?

தியானம்.—யூதர்களும் பதிதர்களும் வாயினால் கக்கும் தேவதூஷணங்கள் ஒருபக்கமிருக்க, தேவ நற்கருணை

யில் அவர் பிரசன்னராயிருக்கிறதை விசுவசிக்கிறவர்களிடமிருந்து முதலாய் அவர் தமது சிநேகத்துக்குக் கைம்மாறாக அடைகிறதென்ன? அவருக்குச் சேரவேண்டிய ஆராதனையும் நன்றியறிந்த தோத்திரமும், புத்திர நேசமும், இரவும் பகலும் சிலர் அவருக்குச் செலுத்துகிறார்களென்பது மெய்தான்; ஆனால் எண்ணிக்கையில்லாத மற்றவர்களோவென்றால், அவரை மறந்து நிந்தித்துத் தூஷணித்துப் பங்கப்படுத்தித் துரோகம் பண்ணுகிறார்கள் என்பதும் மெய்யன்றோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நான் சிலவிசை இப்படித் தப்பிப்போகவில்லையோ? நான் முன் நடந்ததெப்படி? இப்போது நடக்கிறதெப்படி? தேவ நற்கருணையிலே என்னைப்பற்றிச் சிநேகத்தினால் பற்றியெரியும் இயேசுநாதர் திரு இருதயத்தைச் சந்திக்க நான் அசட்டைசெய்து அவர் சமுகத்திலே பத்திக்குறைவாயிருக்கிறதுந்தவிரத் தேவ நற்கருணை வாங்க நான் ஆசைப்படாமலும் அதற்கான ஆயத்தம் செய்யாமலுமிருக்கிறேனென்று பார்க்கையில், இயேசுநாதர் திரு இருதயம் நியாயமாய் அபேட்சிக்கிற சற்குணங்கள் என்னிடம் இல்லையென்று நான் அஞ்சவேண்டியதில்லையோ?

மனப்பற்றுதல்.—இயேசுநாதருடைய திரு இருதயத்தை மெய்யாகவே ஆராதித்துச் சிநேகிக்கும் கொஞ்சம் பேர்களுக்குள் நானும் ஒருவனாயிருக்க மிகவும் ஆசைப்படுவேனாக.

பிரதிக்கினை.—இந்த நல்ல ஆசையை நிறைவேற்றுகிறதற்குத் தக்க உபாயங்களெல்லாம் தேடுவேனாக.

3-ம் பிரிவு

இயேசுநாதருடைய திரு இருதயம் நம்மிடத்தில் விசேஷமாய் இன்றையத்தினம் கேட்கிறதென்ன?

தியானம்.—அவர் நம்மிடத்தில் இன்றையத்தினம் கேட்கிறதேதென்றால், அநேக கிறீஸ்துவர்கள் கட்டிக்கொள்ளும் மறதி, நிந்தை, அவமானம் துரோகமாகிய

இவைகளுக்குப் பரிகாரம்பண்ண நாம் மகா பத்தி சுறுசுறுப்போடே பிரயாசப்படவும், அதற்காக இன்றைக்கு அடிக்கடி தம்மைச் சந்தித்து ஆராதிக்கவும், வெகு பத்தி விநயத்தோடு தேவநற்கருணை வாங்க வருந்தவும், திவ்விய பூசை காணவும், கூடுமானமட்டும், விசேஷ பற்றுதலோடு தேவநற்கருணை ஆசீர்வாதத்துக்குப்போய் முழுமன ஊக்கத்தோடே குருவானவரோடு இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு நிந்தைப் பரிகாரச் செபஞ் சொல்லவும் வேணுமென்று கேட்கிறார். நாம் பிரசித்தமாய் இந்த முயற்சியைச் செய்யக்கூடாமற்போனால், தனித்தாகிலுஞ் செய்வோமாக.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இன்றைக்கு இவற்றையெல்லாம், மிகவும் நல்லமனதோடு செய்ய எத்தனையோ முகாந்தரங்களுண்டு! இயேசுநாதருடைய திவ்விய இருதயத்துக்குச் செலுத்தவேண்டிய எண்ணிறந்த கடமைகள் நம்மில் யாருக்குத்தான் இல்லை? நாம் பரிகாரம் பண்ணவேண்டிய குற்றம் குறைகள் எத்தனை? நாம் கேட்கவேண்டிய வரப்பிரசாதங்களும் சகாயங்களும் எத்தனை? இதுவுமல்லாமல் சகல மனுஷர்களுக்காகவும் விசேஷமாய் நாம் உட்பட்டிருக்கிற சந்நியாச சபைக்காகவும், குரூரமாய் உபாதிக்கப்படுகிற நமது தாயாகிய திருச்சபைக்காகவும், நாம் கேட்கவேண்டிய பொதுவான நன்மைகள் எத்தனையென்று யோசித்துப் பார்த்தால், இயேசுநாதரின் ஆராதனைக்குரிய இருதயத்துக்குத் தோத்திரம் செய்யவும், அவரிடத்தில மகத்தான உபகாரங்களைப் பெற்றுக்கொள்ளவும் அநேக உபாயங்களை நீயே தேடிக் கண்டுபிடிப்பாய்.

சம்பாஷணை.—இயேசுநாதர் திரு இருதயத்தின் பரம இரகசியங்களை அவருடைய விசேஷ கிருபையினாலே அறிந்த அர்ச். மர்கரீத்து அலாக்கொக்கென்பவளோடே சம்பாஷணை செய்வாயாக.

இடையில் சேரும் மாதத்தியானங்கள்

குறிப்பு :—பெப்ருவரி மாதம் 4-ம் தேதி முதல், விபூதித் திருநாள் வரையிலும் உள்ள நாட்களிலும், இயேசுவின் திரு இருதயத் திருநாளுக்குப்பின் ஜூலை மாதம் முதல் தேதி வரையிலும் உள்ள நாட்களிலும் இப்போது சொல்லப்போகும் தியானங்களைச் செய்யலாம். இவை இயேசுநாதருடைய பிரசித்தமான சீவியத்தின் பேரில் எழுதப்பட்டிருக்கின்றன.

முதல் தியானம்

ஞான அபிவிர்த்தியின் முகாந்திரங்களும் அடையாளங்களும் வழிகளும்

ஆயத்தச் சிந்தனை.—உங்கள் பரம பிதா உத்தமராயிருக்கிறதுபோல நீங்களும் உத்தமராயிருங்களென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் சேபம்.—புண்ணியத்தில் எப்போதும் அபிவிர்த்தியடைய வரப்பிரசாதங் கேட்போமாக.

முதல் பிரிவு

ஞான அபிவிர்த்திக்கான முகாந்திரங்கள்

தியானம்.—கடமையானது முதலாவது முகாந்திரம். நாம் சந்நியாசிகள் என்கிற மேரையில் சில வழிகளைக் கொண்டாகிலுங் கிறீஸ்துவ உத்தமதனத்தை நாடி நடக்க உடன்பட்டிருக்கிறோம். "உங்கள் பரம பிதா உத்தமராயிருக்கிறதுபோல், நீங்களும் உத்தமராயிருங்கள்" என்கிற நமது திவ்விய இரட்சகரின் வார்த்தைகள் தமது சீஷர்கள் எல்லோருக்குஞ் சொல்லப்பட்டிருக்க, மனுஷனால் அடையக்கூடாத குறையற்ற உத்தமதனத்தையல்ல, நம்மாலான உத்தமதனத்தை நாடி நடக்கும்படி நாம் உதாரமாகவும் நிலைமையாகவும் பிரயாசப்படவேணும், அதாவது புண்ணியத்தில் வர்த்திக்கவேணும் என்னும் மெய்யான கட்டளை நமக்கு அவ்வார்த்தைகளில் அடங்கியிருக்கிறதென்பது உண்மையல்லவோ?

பிரயோசனமானது இரண்டாவது முகாந்திரம். புண்ணியத்திலே வர்த்திப்பதென்பது நாளுக்கு நாள் புதிதான பேறுபலன்களையும், மோக்ஷானந்த மகிமைக்கும் பாக்கியத்துக்கும் நூதன அச்சாரங்களையுஞ் சம்பாதிக்கிறதுதான். புண்ணியத்தை அடைவதற்கு இதைவிட மேலான தூண்டுதல் ஏதாவது உண்டா?

சுலபமானது மூன்றாவது முகாந்திரம். நம்முடைய அந்தஸ்துதானே இதற்கு எவ்வளவு தகுதியானது! புண்ணிய வர்த்திப்புக்கு இதில் யாதொரு விக்கினம் இல்லாததுமன்றி, அதற்கான வழிவகைகள் ஏராளமாயிருக்கின்றன.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விதம் இருந்தும், நாம் இன்னும் இவ்வளவு குறையுள்ளவர்களாய் புண்ணியத்தில் இவ்வளவு சொற்ப அபிவிர்த்தியடைகிறதற்குக் காரணமென்ன? நமது மனஞ் சரியான உறுதியில்லாமலும் நிலைமையில்லாமலுமிருக்கிறதே இதற்குக் காரணம். புண்ணியத்தில் வர்த்திக்க ஒருவித ஆசையிருந்தாலும், கெட்டியான மனது நமக்கில்லை; நாம் ஒரு காரியத்தைத் துவக்குகிறதல்லாமல் அதை முழுதும் முடிக்கிறதில்லை! யாதொன்றில் அபிவிர்த்தியடைகிறதற்குப் பிரயாசை அவசியம்; நாமோ பிரயாசப்படுகிறதில்லை, அல்லது பிரயாசப்பட்டாலும் நிலைமையில்லை; அற்ப விக்கினம் நேர்ந்தால், உடனே பின்னிடைந்து போகிறோம்.

மனப்பற்றுதல்.—ஆ! என் ஆத்துமமே, எவ்வளவு காலம் நீ இப்படி மோசம் போவாய்? உன் சீவியகாலம் முடிவடைந்து, சர்வேசுரன் உன் ஆத்துமத்தை இரட்சிக்கவும் அர்ச்சிக்கவும் கொடுத்த கணக்கற்ற உபாயங்களைக் குறித்துக் கண்டிப்பான கணக்குக் கேட்கும்போது, பயனற்ற கஸ்திக்குள்ளாவதற்கல்லவோ வழி தேடிக்கொள்கிறாய்?

பிரதிக்கினை.—என் அசட்டையெல்லாந் தள்ளிப் போட விரும்புகிறேன்; தியான ஒடுக்கத்தின்போது சர்வேசுரனோடு மாத்திரம் ஏகாந்தத்திலிருந்து, விசுவாசத்தின் தெளிவான ஞானப்பிரகாசத்தினால் ஒளிவடைந்திருந்த காலத்தில் நான் எழுதிவைத்த பிரதிக்கினைகளை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவேன்.

2-ம் பிரிவு

ஞான அபிவிர்த்தியின் அடையாளங்கள்

தியானம்.—நீ உத்தமதனத்தில் அபிவிர்த்தியடைகிறதை அறிவதற்குச் சில அடையாளங்கள் உண்டு. முந்த முந்த உன் சந்நியாச அந்தஸ்தின் பாக்கியம் உன் மனதில் நன்றாய்த் தோன்றி, அதின்பேரில் அதிகமதிகமாய்ப் பற்றுதல் வைப்பதும்; 2-வது, நீ வழக்கமாய்க் கட்டிக்கொள்ளுஞ் சில அற்பப் பாவங்களிலே விழாமல் எச்சரிக்கையாயிருப்பதும்; 3-வது, மகா எளிதாய்ச் சோதனைகளை வெல்லுவதும்; 4-வது, ஒறுத்தலுக்கடுத்த முயற்சிகள் உன்னிடத்தில் அதிகமாய் விளங்குவதும்; 5-வது, தேவ நற்கருணை வாங்கும்போதுஞ் சந்திக்கும்போதும் அதிக பத்தி வருவிக்கும் புதிதான உபாயங்களை வேளைக்கு வேளை தேடுவதும்; 6-வது, உலக நிந்தையில் வர்த்திப்புஞ் சர்வேசுரனைச் சேராத காரியத்தில் வெறுப்பும் உன்னிடத்தில் அதிகமாய் வளர்ந்து வருவதுஞ் சுயபட்சத்துக்கடுத்த நினைவுகளைத் தள்ளிப்போடுகிறதில உனக்கு அதிக வருத்தம் இல்லாதிருப்பதும்; 7-வது, துன்பம், நிந்தை அவமானங்களை மகா தைரியத்தோடும் அமரிக்கையோடும் பொறுமையோடுஞ் சகித்துக்கொண்டு வருவதுமாகிய இவைகளே நீ உத்தம தனத்தில் விருத்தி அடைகிறதற்கான அடையாளங்களாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இத்தியானத்திலிருந்து வெகு பலன் அடையப் பிரயாசப்படு. இதினால் உன் புத்தியில் தெளிவும் உன் மனதில் வெகு

சந்தோஷம் அல்லது வெகு வெட்கமும் பயமும் உண்டாகும்படி செய்யலாம்.

மனப்பற்றுதல்.—அநேகர் நினைப்பதுபோல், உத்தம தனத்தில் அபிவிர்த்தியடைகிறது அவ்வளவு வருத்தமல்லவென்று யோசித்து மிகுந்த திடாரிக்கத்தைச் சர்வேசுரனிடத்தில் இரந்து மன்றாடி ஞானயுத்தம் செய்ய என் மனதை எழுப்புவேனாக.

பிரதிக்கினை.—உன்பேரில் விழிப்பாயிரு; உன்னைத் திடப்படுத்திக்கொள்; மற்றவர்கள் காரியம் எப்படியானாலும், உன்மட்டில் அசட்டையாயிராதே; தனக்குப் பலவந்தஞ் செய்கிறதற்கு அளவாகப் புண்ணியத்தில் அபிவிர்த்தியடையலாமென்பதை எப்போதும் நினைத்துக்கொள்ளென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிற புத்தியின்படி நடந்துகொள்வாயாக (முதல் காண்டம் 25-ம் அதி.).

3-ம் பிரிவு

ஞான அபிவிர்த்தியடைவதற்கான வழிகள்

தியானம்.—இதற்கு விசேஷமாய் மூன்று வழிகளுண்டு: முதலாவது, தன் துர்க்குணங்களைச் செயிப்பதிலும் நற்கிரியைகளைச் செய்வதிலும் இந்த நாளைப் பயன்பெறச் செலவழிப்பேன் என்று காலையில் கண் விழித்தவுடன் பிரதிக்கினை செய்துகொண்டு ஞான யுத்தத்துக்குத் தன்னைத் தூண்டிக்கொள்ளுகிறது. 2-வது, தன்னாலான மட்டும் ஞான சந்தோஷத்தினாலும் நம்பிக்கையினாலும் பூரித்த மனதோடிருக்கிறது: இது தேவ ஊழியத்தில் சீக்கிரமாய் அபிவிர்த்தியடைகிறதற்குப் பலத்த உபாயமாகும்; இதைப்பற்றி அநுபவப்பட்ட தாவீது இராஜா சொல்லியிருக்கிறதாவது: என் இருதயத்தைச் சந்தோஷத்தினால் பூரிப்பித்தபோது, ஆண்டவரே, உமது கற்பனைகளின் பாதையிலே விரைவாய் ஓடினேனென்றார் (சங். 118). 3-வது, சகல வழிகளும் அடங்கியுள்ள

மூன்றாவது வழி ஏதென்றால், முந்தியிருந்த பத்தி சுறுசுறுப்பில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுகிறதும், இதை இழந்துபோனால், திரும்பவும் அதைத் தேடிக்கொள்ளுகிறதுமாம்; நவசந்நியாசிகள் புண்ணியத்தில் மகா வேகமாய் அபிவிர்த்தியடைகிறதைக் காண்கிறோமே; இதற்கு முகாந்திரமென்ன? அவர்கள் மிகவும் பத்தி சுறுசுறுப்புள்ளவர்களாயிருக்கிறதினாலேதான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த உபாயங்களை நீயும் உபயோகித்துப்பார். விசேஷமாய் இவைகளில் எது உனக்கு அதிக உதவியாயிருக்குமென்று பார்த்து, வெகு தைரியத்தோடும் நிலைமையோடும் அதை அநுசரிப்பாயாக. இப்படிச் செய்வாயாகில், மரணசமயத்திலும் நித்தியத்திலும் உனக்கு எவ்வளவோ ஞான சந்தோஷம் உண்டாகும்!

சம்பாஷணை.—எப்போதும் உத்தமதனத்தில் அபிவிர்த்தியடைய வார்த்தைப்பாடு கொடுத்து, அதின்படி நிலைமையாய் நடந்து வந்த அர்ச். அவுலினாஸ் பெலவந்தரோடு சம்பாஷணை செய்.

இரண்டாம் தியானம்

இயேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றதும் அவருடைய பிரசித்தமான சீவியமும்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் ஞானஸ்நானம் பெறவும் வெளியரங்கமான ஜீவியந் துவக்கவும் தமது பரிசுத்த மாதாவிடத்தில் விடைகேட்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்.—சுற்றத்தாரையும் உலகத்தையும் முழுதும் விட்டுவிட வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதருடைய வெளியரங்கமான சீவியம்

தியானம்.—இயேசுநாதர் செபத்தியானத்தில் அந்தரங்கமாய் சீவித்தபின், பிரசித்தமாய்ச் சீவிக்கவேண்டியதாயிற்று. நித்தியத்திலுஞ் சர்வேசுரனால் குறிக்கப்பட்ட காலம் வந்தது. நசரேத்தூரின் பாக்கியமான வீட்டிலே, இருபது வருஷத்துக்கு அதிகமாய் இயேசுநாதர் அமரிக்கையாய் ஞான இன்பத்தை அடைந்துவந்த காலம் அவருக்கு முடியப்போகிறது. வேதம் போதித்தலாகிய வெகு சஞ்சலமும் வருத்தமுமான அலுவலில் பிரவேசிக்கிறதற்காக, முன் இருந்த அமரிக்கையான அந்தஸ்தை விட்டுவிடவேண்டியதாகிறது. மேரை மரியாதையில்லாதவர்களும் காய்மகாரிகளுமான மனுஷர் மத்தியில் தர்மத்தால் சீவிக்கிறதற்காகத் தம்மால் மிகவுஞ் சிநேகிக்கப்பட்ட மாதாவையும் உற்றார் சிநேகிதரையும் அவர் விட்டுப் பிரியவேண்டியதாகிறது. இவ்வண்ணம் தமது இருப்பிடத்தையும் சீவியத்தையும் மாற்றுவது நம்மைப்போலொத்த அவருடைய இருதயத்துக்கு சுபாவமாய் வெகு கடினமாக இருந்திருக்கும். ஆனால் கீழ்ப்படிதலைப்பற்றியும் ஆத்துமாக்களை இரட்சிக்கவேணுமென்கிற ஆசையைப் பற்றியுஞ் சுபாவமான அந்த வருத்தத்தையெல்லாம் சட்டைபண்ணாதிருந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்பேர்க்கொத்த சமயங்களில் நீ கீழ்ப்படிந்து சர்வேசுரன் தாமே சிரேஷ்டர்கள் வழியாய் உன்னை அனுப்பும் இடத்துக்குப் போகிறதும் உனக்குக் கொடுக்கும் அலுவலைப் பார்க்கிறதும் உனக்கு மகா உத்தமமும் உன் ஆத்தும இரட்சணியத்துக்கு உறுதியுமென்று நினைத்து அவரைப்போல நடக்கவேண்டும். நாம் சர்வேசுரனைப்பற்றியும் மோக்ஷபாக்கியத்தைப்பற்றியும் எல்லாத்தையும் விட்டுவிட்டோமே. அப்படியிருக்க, ஓர் ஆள்மட்டில், இடத்தின்மட்டில் அல்லது வெளிக்காரியங்களின் கவலையின்றி, செபத்தியானத்தில் அமரிக்கையாய் சீவிக்கத்தக்க அந்தஸ்

தில் நாம் அடையக்கூடிய ஞான இன்பத்தின்மட்டில் மிதமிஞ்சின சுபாவபற்றுதல் வைத்து, நாம் ஒப்புக்கொடுத்துவிட்ட பலியில் ஓர் பாகத்தை மீண்டும் நமக்கென்று எடுத்துக்கொள்ளாதிருப்போமாக.

மனப்பற்றுதல்.—நமது அந்தஸ்தின் அலுவல்கள் எவ்வளவு சஞ்சலமானவைகளாயினும், அவைகளெல்லாவற்றையும் செய்துமுடிக்கும்வண்ணம் நம்மை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

பிரதிக்கினை.—சர்வேசுரனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் இஷ்டத்துக்கும் பொருந்தாத எல்லாத்துக்கும் அதிகமதிகமாய் மரித்தவனாயிருக்கப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றது

தியானம்.—இயேசுநாதர் தமது முன்னோடியானவரது கையால் பெறப்போகிற தபத்தின் ஸ்நானமாகிய மாபெரிய தாழ்ச்சி முயற்சியால், தமது பகிரங்க சீவியத்தை ஆரம்பிக்கச் சித்தமானார். சுவிசேஷகரான அர்ச். மத்தேயுஸ் சொல்லியிருக்கிறதுபோல, "இயேசுநாதர் அருளப்பரிடத்தில் ஞானஸ்நானம் பெறக் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தூரிலிருந்து யோர்தான் நதிக்கு வந்தார். அருளப்பரோவென்றால், அவரை இன்னாரென்று அறிந்து சொன்னதாவது: நான் தேவரீரால் ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வருகிறது எப்படியென்றார். அதற்கு இயேசுநாதர் பிரத்தியுத்தாரமாக: இப்படிச்செய்ய இப்போது இடங்கொடு; ஏனெனில் இவ்விதமாய் நாம் சர்வ நீதியையும் நிறைவேற்றவேணுமென்றார்" (மத். 3). அதாவது, நான் அத்தியந்த தாழ்ச்சியைக் காண்பித்தும் நீ முழுமனதோடே கீழ்ப்படிந்தும் இப்படிச் சகல நீதியையும் நிறைவேற்றிச் சர்வேசுரனுக்குச் செல்லவேண்டிய மகிமைப் பிரதாபத்தை அவருக்குச் செலுத்தி இம்மேரையாய், மனுஷனுடைய ஆங்காரத்தினா

லும் கீழ்ப்படியாமையினாலும் அவருக்குச் செய்யப்பட்ட அநியாயத்தைப் பரிகாரம் பண்ணுவோமென்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது நேசமுள்ள இரட்சகர் இவ்விடத்தில் நமக்குப் படிப்பிக்கச் சித்தமானதென்ன? முதலாவது: ஞானஸ்நானமானது தேவத்திரவிய அநுமானங்களுக்குள்ளே முந்தினதும் மகா அவசியமுமானதுபோல், சுகிர்த முறையான புண்ணியங்களுக்குள் தாழ்ச்சியானது முந்தினதும் மகா அவசரமுமானதென்றும்; 2-வது, கீழ்ப்படிதலுக்கு ஆதாரமான தாழ்ச்சியினாலே, நாம் சர்வேசுரனுக்குப் பிரியப்படவும், நாம் படும் பிரயாசங்களில் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறவும் வேணுமென்றும் நமக்குப் படிப்பிக்கிறார். நாம் பட்ட பிரயாசங்களினால் அநேக சமயங்களில் ஆத்துமங்களுக்கு வந்த நன்மை வெகு குறைவாயிருந்ததற்குக் காரணம், மேற்சொன்ன போதனையை வழக்கமாய் நாம் பின்பற்றி நடவாததல்லவோ?

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் தமது தாழ்ச்சியினால் நம்மை உயர்த்தினதற்காகவும், நாம் ஞானஸ்நானத்தின் வழியாய் இவ்வுலகத்தில் யுத்தசபையிற்சேரவும், இதில் சரியாய் நடந்தால், ஓட்டோலக சபையில் பிரவேசிக்கவும் வழிதிறந்ததற்காகவும், இயேசுநாதருக்கு நன்றியறிந்த தோஸ்திரஞ் சொல்லுவோமாக.

பிரதிக்கினை.—மாறாத நம்பிக்கையோடும் மிகுந்த தாழ்ச்சியோடும் எச்சரிக்கையாய் சீவித்து வருவோமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் மகிமைப்படுத்தப்பட்டது

தியானம்.—தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவானென்று சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (மத். 23). இயேசுநாதர் சொன்ன இந்தவாக்கியம் அவர் ஞானஸ்நானம்பெற்ற சமயத்தில் நிறைவேறினதைக் காண்கிறோம். அதெப்படியென்றால், அவர் ஞானஸ்நானம் பெற்று ஜலத்தினின்று ஏறினவுடனே, பரமண்டலம் திறக்

கப்பட்டு இஸ்பிரீத்து சாந்துவானவர் வெள்ளை மாடப்புறா ரூபமாய் அவர்மேல் இறங்கிவர அக்ஷணத்தில்தானே பரலோகத்தில் நின்று ஓர் குரலொலியுண்டாகி: இவர் நமது நேசகுமாரன்; இவர்பேரில் நமது பட்சமெல்லாம் வைத்திருக்கிறோமென்று சத்தம் கேட்கப்பட்டது (லூக். 3).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் மனுஷனாமட்டும் ஞானஸ்நானத்தினாலே தாம் காண்பித்த அத்தியந்த தாழ்ச்சியினால் அடைந்த தேவ வரங்களெல்லாம் நீ ஞானஸ்நானம் பெற்றபோது, இலவசமாய் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எப்படியெனில், உன் நெற்றியில் பரிசுத்த தண்ணீர் பட்டமாத்திரத்தில், சென்மப் பாவத்தினால் அடைபட்ட பரலோகம் உனக்குத் திறக்கப்பட்டு இஸ்பிரீத்து சாந்துவானவரும் உன்மேல் இறங்கிவந்து உன் இருதயத்தைத் தமது வாசஸ்தலமாக்கிக்கொண்டார்; பரலோகத்தில் நின்று ஓர் குரலொலியுண்டாகி: இதோ! இவர் நமது நேசகுமாரனென்று சொல்லிற்று.

சம்பாஷணை.—இயேசுநாதரோடு சம்பாஷணை செய்து அவர் ஞானஸ்நானத்தில் இவ்வளவு மகத்தான சுதந்தரங்களை நமக்குக் கொடுத்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லுவோமாக. அதினால் நமக்கு ஏற்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் பிரமாணிக்கமாயிருப்பதாக் நாம் செய்த பிரதிக்கினையைப் புதுப்பிப்போமாக.

மூன்றாம் தியானம்

இயேசுநாதர் இஸ்பிரீத்து சாந்துவினால் வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்படுகிறார்

ஆயத்தச் சிந்தனை.—பயங்கரமான அந்த வனாந்தரத்தில் இயேசுநாதர் தனித்திருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—தேவ வரப்பிரசாத ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வரப்பிரசாதங் கேள்.

முதல் பிரிவு

இயேசுநாதர் இஸ்பிரீத்து சாந்துவின் ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து வனாந்தரத்துக்குச் செல்லுகிறார்

தியானம்.—இயேசுநாதர் இஸ்பிரீத்து சாந்துவினால் நிறையப்பட்டு யோர்தான் நதியைவிட்டுத் திரும்பிவந்து, பின்னும் இஸ்பிரீத்து சாந்துவினால் தானே வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டு அதிலே நாற்பதுநாள் இருந்தார் (லூக். 4).

இயேசுநாதர் மனுஷனாமட்டும் பரிபூரண ஞானத்தையும் தேவ வரப்பிரசாதத்தையும் அடைந்து யாதொரு தவறுதலுக்கும் மோசத்துக்கும் மாய்கைக்கும் இடங் கொடுக்கக் கூடாதவராயிருந்தாலும், எல்லாக் காரியத்திலும் இஸ்பிரீத்துவின் ஏவுதலினாலேமாத்திரம் நடக்கச் சித்தமாகி, அவருக்கு மகா உதாரமாய் கீழ்ப்படிந்துவந்தார். மேற்கூறிய சுவிசேஷ வசனங்களில் இது தெளிவாய் விளங்குகின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அந்த இஸ்பிரீத்து சாந்துவின் வெற்றிக்குரிய வரப்பிரசாத ஏவுதலே நம்மையும், மாய்கையான இவ்வுலகத்தின் நடுவில் நின்று மீட்டுச் சந்நியாசமென்கிற பாக்கியமான வனத்தில் கூட்டிக்கொண்டுவந்து, அதில் வரப்பிரசாத உருக்கத்தினால் நம்மை நிலை நிறுத்தி ஆண்டு நடப்பித்து மிகவும் மேலான உத்தமதனத்தை அடைய நம்மை ஏவுகின்றது. நாம் எப்போதைக்கும் அவர்மட்டில் முழுதும் உதாரமான கீழ்ப்படிதலைக் காண்பித்திருந்தால், புண்ணியத்தில் நமது அபிவிர்த்தி அதிகமாய் விளங்கியிருக்குமல்லவோ? இதுவரையில் நாம் செய்யாததை, இனிமேலாகிலும் நிலைமையோடும் உதாரத்தோடும் செய்வோமாக. மேலும் தேவ குரலொலியை உலக சந்தடியிலும் குழப்பத்திலும் கேட்க முடியாததினால், ஞான ஒடுக்கத்தையும் சமாதானத்தையும்

காப்பாற்றுவோமாக; உலக தொல்லையைவிட்டு ஏகாந்தத்தை விரும்புவோமாக. ஓசையாஸ் தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் உரைத்திருக்கிறதாவது: "பிரமாணிக்கமுள்ள ஆத்துமத்தை ஏகாந்தத்துக்கு அழைத்துச்சென்று அதினுள்ளத்தில் பட்சமாய்ப் பேசுவோம்" என்கிறார் (ஓசை. 2).

மனப்பற்றுதல்.—நன்றியறிந்து, பாவத்துக்காகப் பச்சாத்தாபப்படு. உனது இருதயம் கீழ்ப்படிதலும் உதாரமுள்ளதுமாயிருக்கும்படி மன்றாடு.

பிரதிக்கினை.—சர்வேசுரனுடைய இஸ்பிரீத்துவினாலே நடப்பிக்கப்படுகிறவர்களெவர்களோ அவர்கள் சர்வேசுரனுடைய புத்திரராயிருக்கிறார்களென்று அர்ச். சின்னப்பர் சொன்ன வாக்கியத்தை அடிக்கடி நினைத்துக் கொள்வாயாக (உரோ. 8).

2-ம் பிரிவு

இயேசுநாதர் வனாந்தரத்தில் செபத்தியானம் செய்து உபவாசமாயிருக்கிறார்

தியானம்.—இஸ்பிரீத்து சாந்துவின் இஷ்டப்படி இயேசுநாதர் கீழ்ப்படிந்து வந்தது, உதாரத்தையும் வீரியத்தையும் காட்டுகின்றது. இஸ்பிரீத்து சாந்துவானவர் அவரை எந்த விஷயத்துக்கு ஏவுகிறார்? உலக சஞ்சாரமில்லாமல் காட்டு மிருகங்கள் நடுவே நாற்பதுநாள் பரியந்தம் ஏகாந்தத்திலிருக்கத்தக்கதாகப் பயங்கரமான வனத்துக்குப் போக ஏவுகிறார். அதில் அவர் தங்குகிறதற்கிடமில்லாமல், காற்றிலும் மழையிலும் அடிபட்டு, ஆகாரமில்லாமற் கடின உபவாசமாய் மிருகங்கள் நடுவே சஞ்சரித்துச் செபத்தியானம் செய்து வந்ததுந்தவிர, நமது நிர்ப்பாக்கியத்தைக் கண்டு தாம் கண்ணீர்விட்டழுது, தமது பரம பிதாவைப் பார்த்து நமக்காக எப்பொழுதும் மன்றாடிக்கொண்டு வந்தார். இம்மேரையாய்த் தபத்தின் ஞானஸ்நானம் பெற்றது முதல் தப முயற்சிகளை அநுசரித்துத் தமது பிரசித்தமான

சீவியத்துக்கும் தாம் வேதம்போதிக்கிறதற்கும் ஆயத்தம் செய்தார் (மாற். 1; லூக். 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய குருவும் மாதிரிகையுமாயிருக்கிறவரிடத்திலே நாம் கற்றறியவேண்டியதேதென்றால்: முதலாவது, திருச்சபை ஆரம்பத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் வேதசாட்சிகளாவதற்கு அஃதால் உடன்பட்டார்கள்; சகல கிறீஸ்துவர்களுக்கும் அது தபசு செய்வதற்காகிலும் உடன்படிக்கையாயிருக்கிறது; இடைவிடாது தப முயற்சிகள் செய்ய அதனால் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். "கிறீஸ்துவ சீவியம் இடைவிடாத தபசாயிருக்கவேண்டும்" என்று திரிதேந்தீன் சங்கம் கூறுகின்றது. 2-வது, வேதம் போதிக்கிறதில் நாம் அனுகூலம் அடையவேணுமானால், ஒடுக்கம், ஒறுத்தல், செபத்தியானம் இவைகளைக் கொண்டே அதற்கு ஆயத்தஞ் செய்யவேணும். உன் நடக்கை இதற்கொத்திருக்கிறதோ? எதில் நீ தவறிப் போனாயென்று பார்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் பாவனையாய் எது காரியத்திலும் இஸ்பிரீத்து சாந்துவினுடைய ஏவுதலை அறிந்து அதைப் பின்சென்று நடக்க உனக்கு அவசியமான தெளிவையுந் திடனையுங் கேட்பாயாக.

பிரதிக்கினை.—ஒடுக்கத்திலும் ஏகாந்தத்திலுமிருக்க விரும்பவேணும். வீணாய்ச்சுற்றித்திரிந்து வீண்பேச்சுக்கு இடங்கொடாதே. கடமையாயிருந்தாலொழிய வெளிக்காரியங்களில் தலையிடாதே.

3-ம் பிரிவு

இயேசுநாதர் வனாந்தரத்தில் சோதிக்கப்படுகிறார்

தியானம்.—இயேசுநாதர் பசாசினாலே சோதிக்கப்படுவதற்கு இஸ்பிரீத்து சாந்துவினால் வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டார் (மத். 4). இரட்சகரிடத்தில் தின்மையைச்சார்ந்த காரியம் ஒன்றுமில்லை; இதைப்

பற்றிப் பசாசு தம்மைச் சோதிக்க விடைகொடுக்கிறார். ஆனால் அந்தகார அரூபியோடு எதிர்த்து நின்று சோதனைகளின் பரீட்சைக்கு ஆளாகும்படி தம்மைத்தாழ்த்திக்கொள்வானேன்? நமக்குப் படிப்பினையாகவும் நமக்குத் தைரியம் வருவிக்கவுமே. சோதனைகள் தின்மையல்ல, அதற்குமாறாய், நம்மைத் தாழ்த்திக்கொள்ளவும், விழிப்பாயிருக்கவும் பயபக்தியாயிருக்கவும், அவ்வாறு சர்வேசுரனுக்கு அதிகப் பிரியமுள்ளவர்களாவதற்கும் அவைகள் உதவியாயிருக்கின்றன; அவைகள் நமது மனதுக்குப் புறம்பானவைகள்; அர்ச்சிய சிஷ்டவர்களும் வனவாசிகளுங்கூட சோதிக்கப்பட்டார்கள்; ஆகையால் நாம் சோதனைகளினிமித்தம் மனங்கலங்கி அவநைரியப்படலாகாது என்று நமக்குப் படிப்பிக்கச் சித்தமானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த யோசனைகள் நம்மைத் தைரியப்படுத்துவதற்கு மிகவும் தகுதியானவை. இவைகளைப்பற்றி நாம் சதா நினைவாயிருப்போமாகில், "சர்வேசுரன் பிரமாணிக்கமுள்ளவர், உங்கள் திராணிக்குமேலாக, நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடார். ஆனால் நீங்கள் சோதனையைத் தாங்கும்படி உதவியையும் அளிப்பார்" (1 கொரி. 10, 13) என்று அர்ச். சின்னப்பர் சொன்னது நம்மிடத்தில் நிறைவேறுவதைக் காண்போம்.

சம்பாஷணை.—வனாந்தரத்தில் இயேசுநாதர் செய்த தபசைக் கண்டிருந்த சம்மனசுகளோடு சம்பாஷணை செய்வாயாக.

நான்காம் தியானம்

இயேசுநாதருக்கு நேர்ந்ததாகச் சுவிசேஷத்தில் குறிப்பாய்க் கூறியிருக்கிற மூன்று சோதனைகள்

ஆயத்தச் சிந்தனை.—பசாசானது இயேசுநாதரைச் சோதிக்கிறதற்காக மனுஷரூபமாய் அவரண்டையில் வந்து நிற்கிறதைக் காண்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—பசாசின் அபாய உபாயங்களை நன்றாய் அறியவும் அவைகளுக்குத் தப்பித்துக்கொள்ளவும் வரப்பிரசாதங் கேள்.

முதல் பிரிவு

போசனப் பிரியத்துக்குரிய சோதனை

தியானம்.—தந்திரத்தில் தேர்ந்த சோதனைக்காரனை பசாசு, நாம் நன்மைசெய்யாமல் தடுக்கவும், தின்மைசெய்யும்படி தூண்டவும் நமது மனோபான்மைகளையும் சரீரக் கூறுபாடுகளையும் சமயோசிதமாய் உதவிக்கொள்ளும். அவ்வண்ணமே, இரட்சகர் 40 நாள் அற்புதமான உபவாசம் செய்தபின், பசியால் சோர்ந்துபோயிருப்பதைக் கண்ட பசாசு பரிதாபப்படும் மனுஷனைப்போல் நடித்து, அவரை அணுகி, "நீர் தேவகுமாரனாகில், இந்தக் கற்கள் அப்பமாய் மாறிப்போகும்படி கட்டளையிடும்" என்றது (மத். 4). இது போசனப்பிரியத்தைச் சார்ந்த சோதனை; எவ்வாறெனில், இரட்சகர் ஓர் புதுமையினால் தமது பசியைத் தக்ஷணமே தீர்த்திருப்பாராகில், தமது பிதா சம்மனசுகளின் வழியாய் அவருக்கு ஆறுதல் அளிக்கச் சித்தமாயிருந்த நேரத்துக்கு முந்தி, தாமே போசனத்தை விரும்பினதாக எண்ணப்படும். இயேசுநாதர், "மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, சர்வேசுரன் வாயினின்று புறப்படும் எந்த வாக்கியத்தினாலும் பிழைக்கிறான்" என்கிற வேதாகம வசனத்தைச் சொல்லி, (உபாக. 8). அந்தச் சோதனையை அகற்றினார். (மத். 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நேரம் ஆகுமுன்னே புசிப்பதும், மட்டசனத்துக்கு மேற்பட்ட விதமாய்ச் சாப்பிடுவதும், உருசிகரமானதை ஆவலாய்த் தேடுவதும் சுபாவ இன்பத்துக்காக மாத்திரம் அன்னபானம் செய்வதும் இவையாவும், போசனப் பிரியத்தைச் சார்ந்த சோதனைகள். இவை நமக்கு நேரிடுமாகில், "மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல," ஆத்தும சீவியத்துக்கு ஆதாரமாயிருக்கிற ஞானப்போசனத்தைக் கொண்டும்

பிழைக்கிறானென்று இரட்சகர் சொன்ன வாக்கியத்தை நமக்கே நாம் சொல்லிக்கொள்ளவேணும். எல்லாத்துக்கு முந்தி உன் ஆத்தும நன்மையைத்தேடு. அவசியமானதை மாத்திரம் சரீரத்துக்குக்கொடு, ஆத்துமத்துக்கு அளவு இன்றிக்கொடு. உன் ஆத்துமத்துக்கு நித்தியகால நஷ்டத்தை வருவித்து, உன் சரீரத்தைப் பேணுவது எவ்வளவு மதியீனம்!

மனப்பற்றுதல்.—போசனப் பிரியத்தினால் சரீரத்துக்கு வியாதியும் ஆத்துமத்துக்குக் கேடும் உண்டாகுமென்று ஞானியானவர் சொல்லியிருக்கிறதை எப்போதும் நான் நினைத்துக்கொள்ளச் சர்வேசுரனைப் பார்த்துக் கேட்பேனாக (ஞானா. 37).

பிரதிக்கினை.—அன்னபானத்தில் சரியான மட்டுத் திட்டத்தைத் தேடி அநுசரிப்பேனாக.

2-ம் பிரிவு

வீண் பெருமைக்குரிய சோதனை

தியானம்.—முந்தின சோதனையில் தோர்வையடைந்த பசாசு திரும்பவுஞ் சோதிக்கவந்தது. சிறந்த கிரிகைகளினால் பெருங் கீர்த்தி அடையலாமென்கிற சுபாவ ஆசையைத் தூண்டிவிட்டுப் பரிசோதிக்கப் பார்க்கிறது. இரட்சகருடைய சரீரத்தின்பேரில் அதற்கு அதிகாரங் கிடைத்திருந்ததினால், அவரைப் பரிசுத்த நகரத்துக்கு எடுத்துக்கொண்டுபோய்த் தேவாலயச் சிகரத்தின்மேல் நிறுத்தி அவரைப் பார்த்து: நீர் சர்வேசுரனுடைய குமாரனானால், கீழே குதியும்; ஏனெனில் உம்மைக் காக்கும்பொருட்டு அவர் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறாரென்றும் உமது பாதம் ஒருவேளை கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைத் தங்கள் கரங்களில் ஏந்திக்கொள்வார்களென்றும் எழுதியிருக்கிறதென்றது (மத். 4). பிரபலியமான இந்தப் புதுமையைச் செய்வாரானால், இதைக்கொண்டு இயேசுநாதர் தமது அதிகாரத்தை ஸ்தாபித்துக்

கொள்வதுந் தவிரத் தமது போதனையும் அநுகூலமாகும்படி பிரயத்தனஞ் செய்திருப்பார். வீண் பெருமைக்குரிய இந்தச் சோதனையில் பசாசு வெகு சாமர்த்தியங் காட்டிற்று என்று சொல்லத்தகும். இரட்சகரோவெனில், "உன் தேவனாகிய கர்த்தரைச் சோதியாதிருப்பாயாகவென்று மீளவும் எழுதப்பட்டிருக்கிறது" (மத். 4). என்று சுருக்கமான பதில்மாத்திரம் உரைத்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பசாசின் தந்திர சோதனைமட்டில் நாம் எப்போதும் எச்சரிக்கையாயிருக்கவேணுமென்று இரட்சகர் படிப்பிக்கிறார். பசாசு ஒருபோதும் சலிப்படைகிறதில்லை; நாம் அடையும் வெற்றியைமுதலாய் சோதனை செய்கிறதற்கு உதவிக்கொள்ளும். உருசிகரமான சில பதார்த்தங்களை அசனவேளையில் புசியாது விட்டுவிடுவதினால், போசனப்பிரியத்தை நீ அடக்கி ஜெயித்தபின், அதைப்பற்றிப் பெருமை கொள்ளவும், உன்னைப்போல் செய்யாதவர்களைப்பற்றி இழிவாய் நினைக்கவும் உனக்குச் சோதனையை உண்டுபண்ணும். சில சமயங்களில், சம்மனசுவேஷம் எடுத்து நடிக்கும்; நன்மையை எடுத்துக் காட்டித் தின்மை செய்யத்தூண்டும்; பக்திபற்றுதல் என்கிற பாசாங்கு காட்டி, நீ கோபப்படவும், இழிவாய்ப்பேசவும், பழிவாங்கவும் தூண்டிவிடும்; சரீர சவுக்கியத்துக்கு, இது அது அவசரமென்று சொல்லிப் போசனப்பிரியத்தையும் சோம்பலையும் வருவிக்கும். நீ ஞான யுத்தத்தில் பழகி வெற்றிமாலை சேகரித்துப் பரலோகத்துக்குப் பேறுபலனை சம்பாதிக்கவேணுமென்று போக்குச்சொல்லி, ஆபத்தான காரியங்களில் நீ தலையிட்டுக்கொள்ளும்படி (சர்வேசுரனைச் சோதிக்கும்படி) உன்னை ஏவிவிடும்.

மனப்பற்றுதல்.—பசாசின் தந்திரங்களிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமி.

பிரதிக்கினை.—சோதனை செய்யும் பசாசோடே நியாயம் பேசிக்கொண்டிராமல், நமது திவ்விய இரட்சகரது மாதிரிகையைப் பின்பற்றி, அதை உடனே அருவருத்துத் தள்ளிப்போடு.

3-ம் பிரிவு

பேராசைக்கான சோதனை

தியானம்.—இயேசுநாதர் நாலாவிதத்திலுந் தம்மைச் சோதிக்கப் பசாசுக்குக் கொடுத்த அதிகாரத்தினாலே, அது மகா அகந்தையோடே மிகவும் உயர்ந்த ஒரு பருவதத்தின் மேல் அவரை எடுத்துக்கொண்டுபோய் ஓர் க்ஷண அளவில் உலகத்திலுள்ள இராச்சியங்களை எல்லாம் அவருக்குக் காண்பித்துச் சொன்னதாவது: இவைகளெல்லாவற்றையும், இவைகளின்மேல் சர்வ அதிகாரத்தையும் இவ்விராச்சியங்களின் மகிமையையும் உமக்குத் தருவேன்; ஏனெனில் இவைகள் எனக்குக் கையளிக்கப்பட்டிருக்கின்றன; இவைகளை யாருக்குக் கொடுக்க மனதாயிருக்கிறேனோ அவனுக்கே கொடுக்கிறேன்; ஆகையால் நீர் சாஷ்டாங்கமாக விழுந்து என்னை ஆராதிப்பீராகில், இவையெல்லாம் உமக்குச் சொந்தமாயிருக்குமென்றது. இயேசுநாதரோவென்றால், அதற்கு மாறுத்தாரமாக: சாத்தானே, அகன்று போ; ஏனெனில் உன் தேவனாகிய கர்த்தாவை ஆராதித்து அவர் ஒருவரையே சேவிப்பாயாகவென்று எழுதப்பட்டிருக்கிறதென்றார். அப்பொழுது பசாசு அவரை விட்டுப் போகவே, இதோ சம்மனசுக்கள் அணுகி அவருக்குப் பரிமாறிக்கொண்டு வந்தார்கள் (மத். 4; லூக். 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மாய்கை, பொய் பித்தலாட்டமான வார்த்தைப்பாடுகளினால் பசாசு மனுஷருக்கு ஆங்காரத்தையும் துராசையையும் எப்போதுந் தூண்டிவிட்டு, அவர்களை என்னமாய் ஏய்த்துக் கெடுக்கிறதென்று பார். இன்னமும் அது உன்னை ஏய்த்துக் கெடுக்கப் பார்த்துக்கொண்டிருப்பாயோ? சர்வேசுரனோவென்றால், சோதனைக்கு இடங் கொடாமல் உறுதியாயிருக்கிறவர்கள்மீது பரிதாபப்பட்டு அவர்களுக்கு ஆறுதல் வருவிப்பதில் எவ்வளவு பிரமாணிக்கமும் உதாரமுமுள்ளவராயிருக்கிறாரென்று பார்; அவர்களுக்குத்

தமது சம்மனசுகளை அனுப்பி ஞான ஆறுதல் வருவிக்கிறார்.

சம்பாஷணை.—உன் காவலான சம்மனசோடு சம்பாஷணை செய்.

ஐந்தாம் தியானம்

சோதனைகளின்பேரில் பொதுத் தியானம்

ஆயத்தச் சிந்தனை.—மகா கடுமையாய்ச் சோதிக்கப்பட்டவரான யோபென்கிற மகாத்துமா, பூமியில் மனுஷனுடைய சீவியம் ஓயாத போராட்டமென்று சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்ளுவோமாக (யோபு 7).

தியானச் செபம்.—சோதனைகளின் யுத்தத்திலே பிரமாணிக்கமாயிருந்து ஜெயமடைய வரப்பிரசாதங் கேட்போமாக.

முதல் பிரிவு

நமது சோதனைகளுக்குக் காரணம்

தியானம்.—நமக்குச் சென்மப் பாவத்தாலுண்டான அந்தஸ்திலே நாம் சோதனை இல்லாமலிருப்பது கூடாத காரியம். நானாவித கெட்ட புல்லுகளுக்கு வித்து பூமிக்குள் இருக்கிறதுபோல, நமக்குள்ளே சோதனையின் வித்து உண்டாயிருக்கின்றது. ஆகையால் முந்தமுந்தப் பாவத்தால் நமது புத்தியிலும் மனதிலுமுண்டான ஆங்காரமும் ஆசாபாசமுமாகிய அலங்கோலை இதற்குக் காரணமாம். பின்னும் பசாசினாலும் நமக்குச் சோதனை உண்டாகும்; அது மோக்ஷத்தை இழந்துபோய் அதில் வசித்திருக்க தனக்கு இனிமேல் நம்பிக்கையில்லையென்பதைப்பற்றி, நம்மையும் நானாவித உபாயங்களைக்கொண்டு மோக்ஷத்தை அடையவிடாதபடி விக்கினம்பண்ணச் சபதங் கூறியிருக்

கிறது. இன்னமும் உலகத்திலுள்ள பொருட்கள் நமது பஞ்சேந்திரியங்களை மயக்குவித்து அதிலுள்ள துர்மாதிரிகைகள் நம்மைப் பாவத்தில் இழுக்க வழியாயிருக்கிறதினாலேயும் நமக்குச் சோதனை உண்டாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்படியிருக்க, நாம் இடைவிடாமலும் சிலவிசை கடினவிதமாயுஞ் சோதனைப்படுகிறதைப்பற்றி ஆச்சரியப்படுகிறதும் அல்லது வயது சென்றதினாலேயாவது அலுவலைச் சார்ந்த வேறே சில முகாந்திரங்களினாலேயாவது நமக்குச் சோதனைகள் வரமாட்டாவென்று நம்பிக்கொள்ளுகிறதும் நியாயமல்ல. மேலும் நமக்கு வருஞ் சோதனைகளுக்கெல்லாம் பசாசே காரணமென்று சொல்லவுங் கூடாது; ஏனென்றால் நாம்தாமே அநேகம்விசை நமது விநோதப் பிரியத்தினாலும், போசனப்பிரியத்தினாலுஞ், சோம்பலினாலும், நமது பஞ்சேந்திரியங்களை அடக்காததினாலும், நமது மனச்சாட்சிக்கு விரோதமாய் நாம் ஆதரித்துவருகிற சில ஆகாத சிநேகப்பற்றுதலினாலும் அவைகளை வருவித்துக்கொள்ளுகிறோம். ஆகையால், நமக்கு வருஞ் சோதனைகளுக்கெல்லாம் பசாசுதான் காரணமென்று சொல்லுவது நம்மைத்தாமே நாம் ஏய்த்துப்போடுகிறதுபோலாகும். ஆனால் தீர்வைநாளில் இதினால் நமக்கு வரும் லாபமென்ன? இது விஷயத்தில் உன்பேரில் யாதொரு குற்றமில்லையோவென்று பார்.

மனப்பற்றுதல்.—எனக்கு வருஞ் சோதனைகளின் காரணத்தைக் கவனியாமல் எனக்குப் பொல்லாப்பு வராதென்று நான் வீண் நம்பிக்கை கொண்டிருக்கிறதினாலே, "ஆண்டவரே, ஒருபோதும் நான் மரணமென்கிற நித்திரை கொள்ளாதபடி என் கண்களைப் பிரகாசிப்பித்தருளும்." (சங். 12).

பிரதிக்கினை.—நாம் செய்யும் ஆத்தும சோதனையில் நமக்குவருஞ் சோதனைகளுக்குக் காரணமேதென்று விசேஷமாய்க் கவனித்துப் பார்ப்போமாக.

2-ம் பிரிவு

நமக்கு வருஞ் சோதனைக்கு அவுழ்தம்

தியானம்.—நீங்கள் சோதனைக்குள் பிரவேசியாதபடி விழித்திருந்து செபம் பண்ணுங்களென்று சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கின்றது (மத். 26). செபத்தோடு சேர்ந்த விழிப்பானது, சகல சோதனைகளுக்கும் பொதுவான அவுழ்தமென்று இயேசுநாதர்தாமே காண்பித்திருக்கிறார். நமது விழிப்பானது எதில் அடங்கியிருக்கிறதென்றால்: முதலாவது எல்லாத்துக்குமுந்தி நமக்குச் சோதனைக்கான சமயம் ஏதென்று உத்தேசித்துப் பார்த்து, நம்மாலான மட்டும் அதைத் தவிர்ப்பதிலும்; 2-வது நமக்கு வருஞ் சோதனைகளுக்குத் தகுந்த அவுழ்தங் கொடுக்கும்படி, வழக்கமாய் அவைகளுக்குக் காரணம் ஏதென்று நன்றாய் அறிகிறதிலும்; 3-வது சாவானது, திஷ்டிவாசல் வழியாய் உள்ளே பிரவேசிக்குமென்று இஸ்பிரீத்து சாந்துவானவர் சொல்லியிருக்கிறார். ஆகையால் நமது பஞ்சேந்திரியங்களின் பேரில் கண்ணுண்டாயிருந்து அவைகளுக்குள்ளே விசேஷமாய்க் கண் பார்வையை அடக்குகிறதிலும்; 4-வது பொல்லாப்புக்கான முதல் நினைவு வரும்போதாகிலும், பசாசின் சோதனை துவக்கும்போதென்கிலும், உடனே அவைகளை எதிர்த்து நிற்க மிகவுங் கவனிக்கிறதிலும்; 5-வது வழக்கமாய் உள்ளத்தில் ஒடுக்கமாயிருக்கிறதிலும் அடங்கியிருக்கின்றது. இவ்வொடுக்கமில்லாவிட்டால், நாம் அவைகளைக் கவனித்துத் தீவிரமாய்த் தள்ளுவது கூடாத காரியம்.

விழித்திருந்து செபம் பண்ணுங்கள். அதேதென்றால் காலமே நீ விழித்த மாத்திரத்தில், உனக்கு வருஞ் சோதனைகளோடு தைரியமாய் யுத்தம்பண்ணப் பிரதிக்கினை செய்யவேண்டியது மல்லாமல் அவைகளை வெல்லுகிறதற்கு உனக்கு வேண்டிய தேவ வரப்பிரசாதங்களைக் கேட்கவும் வேணும்; தேவ வரப்பிரசாதம் இல்லாவிடில், நீ செய்யும் பிரதிக்கினைகள் அவலமாய்ப் போகும். உன் சொந்தப் பலனை மாத்திரம் நம்பியிருந்தால், சோதனைக்குச் சம்மதி

யாமலிருக்கமுடியாது. ஆகையால் தாழ்ச்சியோடும் முழு நம்பிக்கையோடுஞ் செபஞ்செய்; விசேஷமாய்ச் சோதனை வரும்போது, நீ செபம்பண்ணி இயேசு மரியேயென்கிற வார்த்தைகளை உச்சரிப்பாயாகில், ஒருபோதும் சோதனைக்குள் அகப்படமாட்டாய்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சோதனைக்கு விரோதமான இந்த அவுழ்தங்களை எவ்வளவாய், எவ்வளவு கவனத்தோடும் நிலைமையோடும் அநுகூலத்தோடும் உதவிக்கொண்டு வந்தாயென்று பார்.

மனப்பற்றுதல்.—ஆ! என் சர்வேசுரா, என் சத்துவத்துக்கு மேற்பட்டவிதமாய், நான் சோதிக்கப்படவுஞ் சோதனைக்குள்ளாகவும் விடைகொடாமல், சோதனையினாலே நான் புண்ணியத்தில் அபிவிர்த்தியடையச் செய்தருளுஞ் சுவாமி.

பிரதிக்கினை.—எனக்கு வருஞ் சோதனைகளை அறிந்து அவைகளை வெல்லவேண்டிய உபாயங்களை நன்றாய் உதவிக்கொள்ள மனதாயிருக்கிறேன்.

3-ம் பிரிவு

சோதனைகளினால் வரும் பிரயோசனம்

தியானம்.—நமக்கு வரும் நானாவித சோதனைகளும் இக்கட்டுகளும் நம்மைத் தாழ்ச்சியென்கிற புண்ணியத்திலே காப்பாற்றிக்கொண்டுவரும்; பூலோகத்தின்பேரில் நாம் பற்றுதலில்லாதபடி செய்யும்; பரலோகத்தின்பேரில் நமது பற்றுதலெல்லாம் வைக்கச்செய்யும்; நம்மைச் செபம் செய்ய ஏவுகிறதுமல்லாமல், நமக்குப் பத்தியை வருவிக்கும்; நாம் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் பண்ணவும் மிகுந்த பேறுபலன்களைச் சம்பாதிக்கவும், நமக்கு வழியை உண்டாக்கும்; நம்மிடத்தில் புண்ணியத்தை நிலைநிறுத்தி இடைவிடாமல் நமது பத்தி சுறுசுறுப்பைத் தூண்டிவிடும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உனக்கு இடைவிடாமல் கடின சோதனைகள் வருவதினால் அல்லது பலத்த இக்கட்டுகள் நேரிடுவதினால் முறைப்படாமலுங் கஸ்திப்படாமலும் இருக்கவேண்டியதேதவிர, இதினால் சர்வேசுரனுக்குப் பிரியப்படாமற் போனாயென்று ஒருபோதும் நினையாதே. சர்வேசுரனுக்குப் பிரியமாயிருக்கிறதினாலே, நீ சோதனையினால் பரிசோதிக்கப் படவேணுமென்று இரபயேல் சம்மனசு தோபியாசுக்குச் சொன்னாரல்லவோ (தோபி. 12)? மகா கடினமான யுத்தத்திலே உன் தைரியத்துக்கு ஆதரவாயிருக்கவும் உன்னைச் சந்தோஷத்தினால் நிரப்பவும் மேற்சொன்னவைகள் எவ்வளவோ தகுதியானவை!

சம்பாஷணை.—எண்ணிக்கையில்லாத மகா கடினமுள்ள பற்பல சோதனைகளை வெகு காலம் அநுபவித்ததினாலும் அவைகளினால் மிகுந்த ஞானப்பிரயோசனம் அடைந்ததினாலுஞ், சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்குள்ளே பேர்போனவராயிருக்கிற வனவாசியான அர்ச். அந்தோனியாரோடே சம்பாஷணை செய்வாயாக.

ஆறும் தியானம்

இயேசுநாதர் தமது முன்னோடியான ஸ்நாபக அருளப்பரால் வெளிப்படுத்தப்பட்டு மிகவும் பாராட்டப்படுகிறர்

ஆயத்தச் சிந்தனை.—ஞானஸ்நானம் பெற வந்த இயேசுநாதரை அர்ச். ஸ்நாபக அருளப்பர் தமது கையால் சுட்டிக் காண்பிக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக் கொள்வாயாக.

தியானச் செபம்.—தேவதோத்திரத்தை மாத்திரம் உத்தேசித்து உன்னை மறந்துவிட வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

அர்ச். ஸ்நாபக அருளப்பர் இயேசுநாதரைச் சனங்களுக்குக் காண்பிக்கிறார்

தியானம்.—இயேசுநாதர் வனாந்தரத்திலிருந்து வெளியில் பிரவேசித்தபின், காய்மகாரிகளால் வெகு வேதனைப் பட்டிருந்த தமது முன்னோடியான அருளப்பரைக் கண்டு அவருக்கு ஆறுதல் வருவிக்கப்போனார். அருளப்பரோ, தமது திவ்விய குருவைக் கண்ட மாத்திரத்தில் தம்மைச் சூழ்ந்திருந்த சனங்களுக்கு அவரைக் காண்பித்துச் சொன்னதாவது: இஸ்பிரீத்து சாந்துவானவர் இவர்மேல் தானே இறங்க நான் கண்டேன்; எனக்குப்பின் வரவிருக்கிறவர் இவர்தான்; இவர் எனக்கு முந்தினவராயிருக்கிறார்; இவருடைய பாதரட்சையின் வாரைத் தொட்டவிழ்க்க நான் பாத்திரவானல்ல; இவரே இஸ்பிரீத்து சாந்துவினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர்; இவர்தாமே தேவசுதன்; இவர் வளரவும் நான் குறையவும் வேணுமென்றார். (அரு. 1; 3 அதி.).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் இவ்விடத்தில் காண்கிறதென்ன? உலக இரட்சகரை யாவருங் கண்டு ஆச்சரியப்பட்டுத் தோத்திரிக்கத்தக்கதாகத் தன்னைத்தானே தாழ்த்திக்கொள்ளவுஞ் சகலரும் தன்னை மறந்துவிடவும் வழிதேடுகிற பெரிய அர்ச்சியசிஷ்டவரைக் காண்கிறோம். மெய்யான தாழ்ச்சியுள்ளவன் இம்மேரையாய் நடப்பான்; சர்வேசுரனுக்குத் தோத்திரமுண்டாகத் தன்னைத் தாழ்த்திக்கொள்ளுவான்; தன் பேறுபலன்களைக் காண்பியாமல் பிறரைப் புகழ விரும்புவான். இப்படிப்பட்ட மெய்யான தாழ்ச்சியுள்ளவர்களிடத்தில் சர்வேசுரன் சம்பாஷிக்கவும் அவர்களுக்குத் தமது ஆறுதலையும் வரங்களையும் கொடுக்கவும் பிரியப்படுவார். உனக்கு இப்பேர்க்கொத்த நன்மை கிடைக்கவில்லையென்று முறைப்படுகிறாயே; சர்வேசுரன் சிலவிசை ஆங்காரிகளிடத்திலுண்டான குணகுணங்களெல்லாம் உன்னிடத்தில் காண்கிறதினாலேயும் அநேகந்தரம் வாயில் உன் சகோதரருக்குக் குறைவாய் அவர்கள் புண்ணியபேறுகளை ஒன்றுமில்லாததைப் போலக் காண்பித்து எல்லாத்திலும் உன்னைத்தானே புகழ்ந்துகொண்டு யாவரும் உன்னை அதிகமதிகமாய்க் கொண்டாட நீயே வழி தேடிக்கொண்டு வருகிறதினாலேயும் அப்படி உனக்குச் சம்பவிக்கிறதில்லையோவென்று பார்.

மனப்பற்றுதல்.—யாவருஞ் சர்வேசுரனை வாழ்த்தி ஸ்துதிக்கமிருந்த ஆசைப்பட்டு அத்தியந்த தாழ்ச்சி உன்னிடத்தில் விளங்கக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—தன்னைக்குறித்து ஒன்றுஞ் சொல்லாமல் புறத்தியார்பேரில் புகழ்ச்சியாய்ப் பேசவேணும். அப்படிப் பேசாவிட்டாலும், அவசரம் அல்லது பிரயோசனமின்றிப் புறத்தியார் குற்றத்தை வெளிப்படுத்தாதிருக்க வேண்டும்.

2-ம் பிரிவு

அர்ச். ஸ்நாபக அருளப்பர் இயேசுநாதரைச் சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையென்று பெயரிடுகிறார்

தியானம்.—அருளப்பர் மற்றொருநாள் இயேசுநாதரைக் கண்டு ஜனங்களை நோக்கிச் சொன்னதாவது: இதோ சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையானவர்; இதோ உலகத்தின் பாவங்களைப் போக்குகிறவரென்றார் (அரு. 1). இயேசுநாதர் உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையென்று பெயரிடப்பட்டதேதென்றால், முந்தமுந்த அவர்மாத்திரஞ் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பதற்கு யோக்கியமானதும் மெய்யானதும் உலகத்தின் பாவங்களைப் போக்கத்தக்கதுமான பலியாயிருக்கிறதினாலேயும்; ௨-வது, நம்மை அவர் சகித்துக் கொள்ளுகிறதிலும், நமக்குப் பொறுத்தல் கொடுக்கிறதிலும், நாம் மனந்திரும்பக் காத்துக்கொண்டிருக்கிறதிலும் இவருக்குண்டான சாந்தகுணமானது மெய்யாகவே செம்மறிப்புருவையின் சாந்தகுணத்துக்கு ஒப்பாயிருக்கிறதினாலேயும்; 3-வது, வாய்திறவாமல் தன்னைக் கொலை செய்யப் பார்த்திருக்கிற செம்மறிப்புருவைக்கொப்பாய், இயேசு

நாதர் தம்மைக் கொலை செய்கிறவர்களுக்காகப் பொறுத்தல் கேட்பதற்குமாத்திரம் வாய் திறப்பதினாலேயும் அவர் செம்மறிப்புருவையென்று பெயரிடப்படுகிறார்.

தீர்க்கதரிசியான இசாயியாசென்பவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மெசியாவின் பெயரையும் குணங்களையும் இம்மேரையாய் வருணித்திருக்கிறதினாலே, யூதர்கள் இவரை அறியவும் ஏற்றுக்கொள்ளவும் முன்னோடியானவர் இந்தப் பெயரைத்தானே இவருக்குக் கொடுத்து இவரை வெளிப்படுத்துகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த மூன்று வகையால் சர்வேசுரனுடைய செம்மறிப்புருவைக்கு நாம் யோக்கியமான சீஷர்களாயிருக்கிறோமென்று காண்பிக்கவேணும். அதெப்படியென்றால், 1-வது இடைவிடாத ஒறுத்தலின் முயற்சியினாலே இயேசுநாதருடைய பலியோடு நமது பலியையும் ஒன்றிக்கவேணும்; 2-வது, எல்லார்மட்டிலும், நமக்கு எதிரியாய்த் தின்மை நினைக்கிறவர்கள்மட்டிலும் முதலாய், நாம் சாந்தகுணமும், பொறுமையும் சினேகமுமுள்ளவர்களாயிருக்கிறோமென்று காண்பிக்கவேணும்; 3-வது, இயேசுநாதருடைய தோத்திரத்துக்காகவும் ஆத்தும இரக்ஷணியத்துக்காகவும் படும் பிரயாசத்தில் வெகு வருத்தப்படவேண்டியிருந்தாலும், கொஞ்சவயதில் சாகவேண்டியிருந்தாலும், அவைகளை அநுபவிக்க ஆசைப்பட்டுச் சிநேகத்தின் பலியைப்போல் முழுமனதோடு நம்மை இயேசுநாதருக்கு ஒப்புக்கொடுக்கவேணும். இப்பேர்க்கொத்த மனது உனக்குண்டோ?

மனப்பற்றுதல்.—என்பேரில் வைத்த சிநேகத்தைப் பற்றி மரித்த என் இயேசுவே, உமதுபேரில் நான் வைத்த சிநேகத்தினால் மரிக்கக்கடவேனாகவென்று ஒரு மகாத்துமாவானவர் சொன்ன ஜெபத்தை நானும் அடிக்கடி சொல்லுவேனாக.

பிரதிக்கினை.—தேவ செம்மறிப்புருவையின் நீளித்த பொறுமையினிமித்தம் உனக்கு அதிகமான நெஞ்சுத்துணிவு ஏற்படாவண்ணம் எச்சரிக்கையாயிரு; சாந்த

குணத்துக்கும் நிந்தை அவமானத்தைப் பொறுப்பதற்கும் அவரையே மாதிரியாகத் தெரிந்துகொள்.

3-ம் பிரிவு

அர்ச். ஸ்நாபக அருளப்பர் இயேசுநாதருக்குச் சீஷர்களைச் சேர்க்கிறது

தியானம்.—அருளப்பர் செய்த பிரசங்கத்தினாலும், அவர் காண்பித்த பரிசுத்த நடக்கையின் மாட்சிமையினாலும், அநேக பக்தியுள்ள சீஷர்கள் அவரிடத்தில் சேர்ந்தார்கள். இதினால் அவருக்குச் சிலாக்கியமும் பேராசையுமுள்ள சோதனை உண்டாக இடமிருந்தது; ஆகிலும் அர்ச்சியசிஷ்டவர்கள் தங்கள் சொந்த மகிமையைப் பாராட்டாமல், எந்தக் காரியத்திலுந் தேவ தோத்திரத்தையும் ஆத்தும ஈடேற்றத்தையும் மாத்திரம் தேடுவார்கள். இதற்கு அர்ச். ஸ்நாபக அருளப்பரே அத்தாட்சியாயிருக்கிறார். எப்படியென்றால், அவர் தம்மிடத்தில் அதிக சீஷர்கள் சேரவேணுமென்று பிரயாசப்படாமல், அவர்கள் எல்லாரும் தம்மை விட்டு இரட்சகரை மாத்திரம் பின்சென்று நடக்கப் பிரயாசப்பட்டதுமன்றி, இதற்காக அவரைப் புகழவும் அவருடைய பேறுபலன்களை மேன்மைப்படுத்தவும் கிடைத்த சமயங்களை உதவிக்கொண்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மெய்யான பக்தி சுறுசுறுப்புள்ளவன் புறத்தியார் அநுகூலப்படுகிறதினாலே, தன் பேர் கெட்டுப்போகுமென்று, பயப்படாமல், யார் நன்மைசெய்தாலும், சரியென்று சந்தோஷப்படுவான். பொய்யான பக்தி சுறுசுறுப்புள்ளவனோவென்றால், புறத்தியார் செய்யும் நன்மையைக் குறித்தும் விசேஷமாய் அவர்கள் தன்னைப்பார்க்க நன்மை செய்வதையும் கீர்த்தியில் அதிகமாய் விளங்குகிறதையும் காணும்போது தன் உள்ளத்தில் காய்மகாரப்படுவதுமன்றி, அநேகந்தரம், அவர்கள்பேரில் உபாயமாய்க் குறைசொல்லுகிறதினாலேயும் அவர்களைக் கெட்ட கருத்தோடே பழித்துப் பேசுகிறதினாலேயும் இக்காய்மகாரத்தைக் காண்பிப்பான். இக்

நடக்கை உனக்கு வெறுப்பாயிருக்கிறது; ஆனால் அதைப் போல் உன் இருதயத்தில் யாதொன்றும் பிரவேசித்ததில்லையோ? உன் வார்த்தைகள் இதை நிரூபிக்கின்றன வன்றோ?

சம்பாஷணை.—இயேசுநாதருக்கு முன்னோடியான அர்ச். அருளப்பரோடே சம்பாஷணை செய்.

ஏழாம் தியானம்

இயேசுநாதர் சீஷர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தமது முந்தின நாலு சீஷர்கள் நடுவிலிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேணுக.

தியானச் சேபம்.—இயேசுநாதருடைய பத்தி சுறுசுறுப்புள்ள சீஷர்களுக்குள் எப்போதும் நானும் ஒருவனாயிருக்க வரப்பிரசாதங் கேட்பேனுக.

முதல் பிரிவு

இயேசுநாதர் முந்தின நாலு சீஷர்களைத் தெரிந்துகொண்டது

தியானம்.—இயேசுநாதர் தீர்க்கதரிசிகள் மேரையாய்ச் சிலகாலம் தனித்திருந்து பிரசங்கம்பண்ணினபிறகு, சீஷர்களைச் சேர்த்துக்கொள்ளச் சித்தமானார். அவரது முதல் சீஷர்கள் ஸ்நாபக அருளப்பரிடத்திலிருந்து வந்தார்கள். இதைக்குறித்து எழுதப்பட்டிருக்கிறதாவது: இதோ சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையானவரென்று இயேசுநாதரைக் குறித்து ஸ்நாபக அருளப்பர் சொன்னதைக் கேட்டிருந்த இரண்டு சீஷர்கள் உடனே அவரைப் பின்சென்று போய்: குருவே, நீர் எங்கே வாசம்பண்ணுகிறீரென்று கேட்க, அதற்கு மாறுத்தரமாக, இயேசுநாதர்:—வந்து பாருங்களென்றார். அவர்களும் வந்து அந்நாள் முழுதும் அவரோடிருந்தார்கள். அவர்களில் ஒருவராகிய அந்திரேயாசென்பவர், தன் சகோதரனாகிய சீமோனை

முந்தமுந்தக் கண்டு நாங்கள் மேசியாவைக் கண்டோமென்று சொல்லி அவரை இயேசுநாதரிடத்தில் கூட்டிக்கொண்டுவந்தார். இயேசுநாதர் அவரை நோக்கி: நீ யோனாவின் குமாரனல்லவா? இனி கெபாஸ் அதாவது இராயப்பரென்று அழைக்கப்படுவாயென்றார். மறு நாள் இயேசுநாதர் கலிலேயாவுக்குப் போகும்போது, பிலிப்பென்பவரைக் கண்டு என்னைப் பின்சென்று வாவென்று சொன்னார் (அரு 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அந்திரேயாஸ், அருளப்பர், சீமோன் அல்லது இராயப்பர், பிலிப்பு ஆக, இந்நான்கு பேர்களையும் உலக இரட்சகர் தமது முதல் சீஷர்களாகத் தெரிந்துகொண்டார். இவர்களை இயேசுநாதர் தெரிந்துகொண்டது அவர்களுக்கு ஓர் தற்செயலான அதிஷ்டமாய்க் காணப்பட்டாலும், சதாகாலத்திலும் சர்வேசுரன் இப்படித் தீர்மானித்திருந்தாரென்பதற்குச் சந்தேகமில்லை. நீ அழைக்கப்பட்ட அந்தஸ்தின் துவக்கத்தைச் சோதித்துப் பார்ப்பாயாகில், நாலாவகைக் காரியமும் பொருந்தி இப்படி நடந்ததென்று நினைப்பாயாக்கும்; ஆனால் விசுவாசக் கண்ணாலே பார்த்தால், இது சர்வேசுரன் உன்பேரில் நித்தியமும் வைத்த விசேஷ பட்சத்தின் தீர்மானமென்று கண்டறிவாய்.

மனப்பற்றுதல்.—அத்தியந்த தாழ்ச்சியுள்ள நன்றியறிந்த தனம் உன்னிடத்தில் உண்டாகக் கேட்கிறதுமல்லாமல் அதை முழு இருதயத்தோடு காண்பிப்பாயாக.

பிரதிக்கினை.—பரிசுத்தமான உன் அந்தஸ்துக்கு ஒத்தபிரகாரம் எப்போதும் பிரமாணிக்கமாயிருந்து நன்றியறிதலைக் காண்பிப்பாயாக.

2-ம் பிரிவு

முந்தின இந்த நாலு சீஷர்களின் அந்தஸ்து

தியானம்.—இயேசுநாதர் தம்மைப் பின்சென்றுவர அழைத்த முந்தின சீஷர்கள் எப்பேர்க்கொத்தவர்களென்றால், நல்ல குணமும், வேலையில் பிரியமும், பத்தியுமுள்ள

வர்களாயிருந்தாலும், தாழ்ந்த குலத்தாரும் மீன்பிடித்துக் காலக்ஷேபம் பண்ணுகிறவர்களுமாயிருந்தார்கள்; மேலும் யூதர்களால் நிந்திக்கப்பட்ட கலிலேயாவில் பிறந்து பெருங் கீர்த்தியுங் கல்விசாஸ்திரமுமில்லாமல் உலகத்தாரால் இகழப்பட்டவர்களாயிருந்தார்கள். இப்பேர்க்கொத்த அந்தஸ்துள்ளவர்களைத் தேவகுமாரன் தெரிந்துகொண்டதேதென்றால், முந்தமுந்த ஆஸ்தி, மகிமை, கீர்த்தியுள்ளதைமாத்திரம் உலகம் பெரிதாயெண்ணி மதிக்கிறது தப்பிதமென்று கற்பிக்கவும்; 2-வது, யோக்கியத்தோடும் புண்ணியத்தோடுஞ் சேர்ந்திருக்கிற தரித்திரத்தையும் கபடில்லாக்குணத்தையும் மேன்மைப்படுத்தவும், 3-வது, எல்லாத்திலும் உச்சிதமான அலுவலுக்காக அழைக்கப்பட்ட சீஷர்களிடத்தில் ஒருபோதும் ஆங்காரம் அணுகாதிருக்கவும்; 4-வது, விசேஷமாய்த் திருச்சபை ஸ்தாபகமும், அதன் ஜெயமும் மனுஷரால் ஆனவையல்லவென்று உலகம் அறியவும் அவர் இப்பேர்க்கொத்தவர்களைத் தெரிந்துகொண்டார். இதெல்லாம் அர்ச். சின்னப்பர் தமது நிருபத்தில் காண்பித்திருக்கிறார் (1 கொரி. 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ இதை நன்றாய்க் கண்டுபிடித்தால், தாழ்ந்த குலத்தில் பிறந்ததினாலே வெட்கப்பட்டு ஒய்யாரமான நடையினாலும் பேச்சினாலும் உயர்ந்த குலத்தில் பிறந்தவனைப்போல் காண்பிக்கிறதும் அல்லது உலகத்தில் சிலவிசை நீ மேலான அந்தஸ்தில் இருந்ததினாலேயும் ஆஸ்தி சம்பத்தை அடைந்து பேர்பெற்றதினாலேயும் உன்னைப் பாராட்டுகிறதுமாகிய இவைகள், சில சந்நியாசிகளிடத்தில் விளங்குகிறதுபோல உன்னிடத்திலும் காணப்படமாட்டாது. இவ்விருவகை நடக்கையும் சர்வேசுரன் முன்பாகவும் மனுஷர் முன்பாகவும் உனக்குப் பொல்லாப்பை வருவிக்குமல்லாமல் மற்றப்படியல்ல. நீயும் இதைச் சரியென்று ஒத்துக்கொள்ளுகிறாயே. ஆகிலும் இதைப்பற்றி உன்பேரில் குற்றஞ்சாட்ட இடமில்லையோவென்று பார்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் தமது வேதத்தைப் போதிக்கத் தகுதியானவர்களைத் தெரிந்துகொண்டதில்

காண்பிக்கும் ஆச்சரியமான விவேகத்தைக்கண்டு அவரைத் துதித்து ஆராதிப்பாயாக.

பிரதிக்கினை.—நீ உன் பார்வைக்கே அதிகமாய்த் தாழ்ச்சியுள்ளவனாகவுஞ் சர்வேசுரன்மட்டில் அதிக நன்றியுள்ளவனாயிருக்கவும் மாத்திரம், முந்தி உலகத்தில் ஐசுவரியவானாய் அல்லது தரித்திரனாயிருந்ததை நினைக்கவேண்டும்.

3-ம் பிரிவு

சீஷர்கள் அழைக்கப்பட்ட விதம்

தியானம்.—இயேசுநாதர் தமது முந்தின நான்கு சீஷர்களையும் ஒரேவிதமாகவும் விசேஷமாய்த் தம்மைப் பின்சென்று வரவேணுமென்ற முடிவான தீர்மானத்துடனுந் துவக்கத்தில் அவர்களை அழைக்கவில்லை; இது இராயப்பர் அந்திரேயாவென்பவர்கள் அழைக்கப்பட்ட விதத்தில் காணப்படுகின்றது: முந்தமுந்த அவர்கள் இயேசுநாதரையும் அவர் சீவிக்கும் வகையையும் அறியவேணுமென்றாற்போல், சிலகாலம் மாத்திரம் அவரோடு இருந்தார்கள்; இது ஒருவித முந்தின பரீட்சை அல்லது நவ சந்நியாசத்துக்கு ஒத்ததாயிருந்தது. பின்பு ஆண்டவர் பிரசங்கிக்கப் போகையில், அவரைப் பின்சென்று அவர்மட்டில் அவர்கள் அதிகப் பற்றுதலுள்ளவர்களாயிருந்தாலும், தங்கள் தாய் தகப்பனை விட்டுவிடவேணுமென்கிற கருத்துள்ளவர்களாயிருந்ததில்லை. இது மெய்யாகவே நவசந்நியாசம்போலிருந்தது. கடைசியாய்த் தாங்கள் அழைக்கப்பட்ட அந்தஸ்தில் உறுதிப்பட்டு அறிவிலுஞ் சிநேகத்திலும் ஸ்திரமாகியபின் எல்லாத்தையும் எப்போதைக்கும் வெறுத்துவிட்டு மாறாத விதமாய் அவரைப் பின்சென்று நடந்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ அழைக்கப்பட்ட அந்தஸ்தின் துவக்கத்தையும் நடுவாந்தரத்தையுங் கடைசியையும் நினைத்துப்பார்த்தால், இயேசுநாதருடைய முந்தின சீஷர்களின் அழைத்தலும் உனது அழைத்தலும் பல விஷயங்களில் ஒத்திருக்கின்றனவென்று

கண்டுகொள்வாய். 1900 வருஷங்கள் கடந்தபிறகும், அந்தச் சந்நியாச சபைச் சிரேஷ்டர்கள் புதிதாய்ச் சந்நியாசத்துக்கு வருகிறவர்களைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் திவ்விய இரட்சகர் காண்பித்த ஒழுங்குகளைத்தானே பின்சென்று வருகிறதை நீ ஆச்சரியத்தோடுஞ் சந்தோஷத்தோடுங் கிரகித்துக்கொள்ளலாம். உன் பரிசுத்தமான அந்தஸ்தை நீ நன்மையெண்ணி அதைச் சிநேகிக்கவும் உன்னை அதில் அழைத்தவருக்கு யோக்கியமானபிரகாரம் நடக்கவும் ஆசைப்பட்டு உன்னைத் திடப்படுத்த இந்த நினைவுகள் தகுதியாயிருக்கும்.

சம்பாஷணை.—பரிசுத்தமான உன் அந்தஸ்துக்குக் காரணமாகிய இயேசுநாதரோடு சம்பாஷணை செய். சாகுந்தனையும் இதில் பிரமாணிக்கமாயிருக்கவும் வெல்லக்கூடாத பொறுமை பிரயாசத்தினால் நீ அதில் விளங்கவும் வரப்பிரசாதங் கேட்பாயாக.

எட்டாம் தியானம்

இயேசுநாதர் நத்தானயேலோடு சம்பாஷணை செய்தது

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் நத்தானயேலோடு சம்பாஷணை செய்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—இயேசுநாதர் நத்தானயேலிடத்தில் புகழ்ந்துகொண்ட நேர்மையான இருதயத்தையும் கபடற்ற குணத்தையுங் கேட்பாயாக.

முதல் பிரிவு

நத்தானயேலிடத்திலிருந்த தவறான எண்ணம்

தியானம்.—பிலிப்பென்பவர் இயேசுநாதரை அறிந்த மாத்திரத்தில், தன் சிநேகிதனாகிய நத்தானயேலுக்கு

அவரை அறிவித்தார். இந்த நத்தானயேலை அர்ச். பர்தலோமேயுவென்று நினைக்கிறார்கள். பிலிப்பென்பவர் இவரைக் கண்டு சொன்னதாவது: வேதமுறையில் மோயீசனுந் தீர்க்கதரிசிகளும் அறிவித்தவரைக் கண்டோம்; அவராரெனில் சூசையின் குமாரனும் நசரேத்தூரானுமாகிய இயேசுநாதர்தாமென்றார் (அரு. 1). உலக இரட்சகரை அறிந்து அவரோடே சிநேகமாயிருக்கும் மகத்தான பாக்கியம் இவருக்குக் கிடைக்கப்போகிறதாயிருந்தது. ஆனால் இவரிடத்திலிருந்த தவறான எண்ணம் அந்தப் பாக்கியத்துக்குத் தடைசெய்ய ஏதுவாயிருந்தது. தனது சிநேகிதனுக்கு மறுமொழியாக, "நசரேத்தூரினின்று யாதோர் நன்மை வரக்கூடுமோ" என்று இகழ்ச்சியாய்ச் சொல்லிவிட்டு உண்மையை அறியும்படி சற்றேனும் முயற்சிக்கவில்லை. கடைசியாய்த் தமது சிநேகிதன் தம்மை மிகவும் வற்புறுத்தினதினிமித்தம் தாமே நேரில் பார்த்து நிதானித்துக்கொள்ளச் சம்மதித்தார். பிலிப்பு அவரை நோக்கி: குறை கூறுமுன், "நீரே வந்து பாரும்" என்றார் (அரு. 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஐயோ! இப்போது முதலாய் எத்தனையோபேர் பிரலாபத்துக்குரிய தப்பெண்ணத்தினால், இயேசுநாதரையும், அவருடைய திருச்சபையையும் தேவதிரவிய அநுமானங்களையும் விட்டு அகன்று நிற்கிறார்கள்! இவர்கள்மட்டில் பரிதாபப்படவேண்டும். ஆனால் சந்நியாசிகளும் இப்பேர்க்கொத்த எண்ணங்களுக்கு இடங்கொடுத்து தப்பிப்போகிறதில்லையோ? உன் ஆத்துமத்துக்குப் பிரயோசனமான யாதொரு ஞானவாசகப் புஸ்தகத்தை வாசிக்க உனக்குக் கொடுக்கையில், அதன் ஆக்கியோன் இன்ன தன்மையுடையவனென்று சொல்லி அதை வாசிக்கமாட்டேன் என்கிறாய். உன் ஆத்தும குரு நீ புண்ணியத்தில் அபிவிர்த்தியடையும்படி பத்திக்குரிய சில உபாயங்களை உனக்குச் சொல்லிக்காட்டினால், அவர் மிதமிஞ்சின நுணுக்கமுள்ளவரென்று யாதொருவர் சொன்னதினிமித்தம், அவருடைய புத்திமதிகளை அலட்சியம்செய்து, பெருத்த நன்மையை இழந்துபோகிறாய்; இதுகாரியத்தில் நீ

கவனமாய் உன்னைச் சோதிப்பாயாகில், இதற்கொத்த அநேக குறைகள் சிலவிசை உன்னிடத்தில் உண்டென்று நீயே காண்பாய்.

மனப்பற்றுதல்.—நீ எல்லாத்தையும் பாரபட்சமில்லாமல் சோதித்துப் பார்த்து நன்மையானதைத் தெரிந்துகொள்ளென்று அர்ச். சின்னப்பர் சொன்னதைப் பிரமாணிக்கமாய் அநுசரிக்க வரப்பிரசாதங் கேட்பாயாக (1 தெச. 5).

பிரதிக்கினை.—பாரபட்ச முதலிய தப்பறையான குணங்கள் உன்னிடத்தில் இராதபடி எச்சரிக்கையாயிருப்பாயாக.

2-ம் பிரிவு

நத்தானயேலிடத்தில் விளங்கின கபடற்றதனம்

தியானம்.—நசரேயர்பேரில் நத்தானயேல் சொன்ன நிந்தனை இயேசுநாதருக்குஞ் செல்லுமல்லோ? ஆகிலும் நத்தானயேல் உள்ளத்தில் நேர்மையுள்ளவரும் உண்மையை அறிய ஆசையுள்ளவருமாயிருக்கிறாரென்று காண்கிறதினாலே, இயேசுநாதர் அவர் சொன்னதைச் சட்டைபண்ணாமலும் அவர்பேரில் முறைப்பாடு சொல்லாமலும் அவரைப் புகழ்கிறார். தமதண்டையில் அவர் வருகிறதைக் கண்டு இயேசுநாதர் சொன்னதாவது: இதோ மெய்யான இஸ்ராயேலன்; இவனிடத்தில் கபடில்லையென்றார் (அரு. 1). இரட்சகருடைய வாயினின்று புறப்பட்ட இப்பேர்க்கொத்த புகழ்ச்சிக்குப் பாத்திரமுள்ளவன் பாக்கியவான்! சர்வேசுரனுக்கு முன்பாக மெய்யாகவே புண்ணியவானாயிருக்கும்படி கவனியாமல், மனிதர் பார்வைக்குப் பக்திமானும் யோக்கியனுமாகத் தோன்றும்படி வெகுவாய்க் கவலைப்படுபவனைப்போலன்றி; சர்வேசுரனுக்குப் பிரியப்படவேணும் என்கிற ஏக நோக்கத்துடன், இருதய கபடின்றி எக்காரியத்திலும் அவரையே நோக்கி நடக்கிறேன் என்று சொல்லக்கூடிய மனிதனும் சந்நியாசியும் பாக்கியவான்களே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விருவருக்குள்ளே நீ யார் சாயலாய் நடக்கிறாய்? இதை அறிவது எல்லாத்திலும் முக்கியமான காரியம். ஆனால் சகலத்திலும் நம்மையும் உலக புகழ்ச்சியையும் தேடும்படி ஆங்காரம் நம்மைத் தூண்டுவதினாலே, இதில் எளிதாய் நாம் மோசம்போகக்கூடுமென்பதினிமித்தம் நாம் இதைக் கவனமாய் ஆராய்ந்து பார்க்கவேணும்.

மனப்பற்றுதல்.—வெளிக்குமட்டும் அர்ச்சியசிஷ்டவனைப்போல் நடித்துக் கள்ள ஞானத்தினால் அடையும் புகழ்ச்சி போதுமென்றிருப்பது எவ்வளவு பயித்தியமென்று நீ நன்றாய்க் கண்டுபிடிக்கச் சர்வேசுரனை மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—சில சமயத்தில் நமது கருத்தின் நேர்மையைப்பற்றியும் பரிசுத்ததனத்தைப்பற்றியும் தனி ஆத்துமசோதனை செய்வோமாக.

3-ம் பிரிவு

நத்தானயேல் செய்த விசுவாச உச்சாரணம்

தியானம்.—இயேசுநாதர் தம்மை ஒருக்காலுங் காணாமலிருந்தாலுந் தமது காரியங்களெல்லாம் விபரமாய்ச் சொல்லக்கேட்டதினாலே, நத்தானயேல் ஆச்சரியப்பட்டுத் தமக்கு இயல்பாயிருந்த நேர்மையோடு இயேசுநாதரை நோக்கி: சுவாமி, தேவரீர் என்னை அறிந்ததெப்படியென்று கேட்க, அதற்கு இயேசுநாதர் மறுமொழியாகப் பிலிப்பு உன்னை அழைக்குமுன் நீ அத்திமரத்தின் அடியில் இருக்கும்போது உன்னைக் கண்டேனென்று திருவுளம்பற்றினார் (அரு. 1). இந்த வார்த்தையைக் கேட்டவுடனே அந்தச் சீஷனுடைய கண்கள் திறக்கப்பட்டன. வெகு தூலையிலுள்ள மறைவான காரியங்களை இப்படிப் பார்த்து அறிகிறவர் சாமானிய மனுஷன் அல்லவென்று கண்டு, உயிருள்ள விசுவாசத்தோடே அவர் சொன்னதாவது: குருவே, நீர் சர்வேசுரனுடைய குமாரனாயிருக்கிறீர், நீரே இஸ்ராயேலின் இராஜாவாயிருக்கிறீர் என்றார். இயேசுநாதர் பிரத்தியுத்தாரமாக அத்திமரத்தடியில் உன்னைக் கண்டே

னென்று நான் உனக்குச் சொன்னதினால் விசுவசிக்கிறாய்; இவைகளிலும் பெரிதானவைகளைக் காண்பாயென்றருளிச் செய்து, மீளவும் அவரை நோக்கிப் பரமண்டலந் திறக்கப் படுவதையுஞ் சர்வேசுரனுடைய சம்மனசுகள் ஏறுவதையும் மனுமகன்மேல் இறங்குவதையும் காண்பாயென்றார் (அரு. 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நத்தானயேலைப்போல் நாம் கபடற்ற இருதயத்தோடு சர்வேசுரனைத் தேடுவோமாகில் அவர் நமக்குத் தம்மை வெளிப்படுத்துவார். பரலோகத்தில் நின்று புதிதான பிரகாசத்தையும் எப்போதும் அதிகமான தேவ வரப்பிரசாதங்களையும் நம்மிடத்தில் இறங்கச் செய்வார்; கபடற்றவர்களிடத்தில் சர்வேசுரன் சம்பாஷணை செய்வாரென்றும் பரிசுத்த இருதயமுள்ளவர்கள் மட்டில் சர்வேசுரன் எவ்வளவு நல்லவராயிருக்கிறாரென்றுஞ் சொல்லப்பட்ட உண்மையை நாமே அறிந்துகொள்ளலாம் (சாலோ. வாக். 3-சங்கீதம் 72).

சம்பாஷணை.—மகா நேர்மையான கருத்தோடு எல்லாக் காரியங்களிலுஞ் சர்வேசுரன் சித்தத்தின்படி நடந்து வரும் உன் காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்வாயாக.

ஒன்பதாம் தியானம்

கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரிலே நடந்த கலியாணத்திற் செய்த முதலாவது புதுமையால் இயேசுநாதர் தம்மை வெளிப்படுத்துகிறார்

ஆயத்தச் சிந்தனை.—அந்தக் கலியாணத்திலிருந்த பாக்கியவான்களுக்குள்ளே இயேசுநாதருந் தேவமாதாவும் இருக்கிறதை நாம் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—தேவ வரப்பிரசாதப் புதுமைகளை நம்மிடத்திலுஞ் சர்வேசுரன் செய்யும்படி பிரார்த்திப்போமாக.

முதல் பிரிவு

கலியாண விருந்துக்கு இயேசுநாதரும் கன்னிமரியம்மாளும் வந்திருந்தது

தியானம்.—இயேசுநாதர் நத்தானயேலோடு சம்பாஷணை செய்த மூன்று நாளுக்குப்பின், கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்துக்கடுத்த கானாவென்னுஞ் சிற்றூரில் கலியாணம் நடந்தது; இயேசுநாதருடைய தாயார் அங்கேயிருந்தாள். இயேசுநாதரும் அவருடைய சீஷர்களும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டார்கள் (அரு. 2). உலக இரட்சகர் பெருமையுஞ் செல்வமுமுள்ள ஒரு சீமானுடைய கலியாணத்துக்குப் போகாமல், எளியவன் கலியாணத்துக்குப் போயிருக்கச் சித்தமானது என்ன முகாந்தரத்தைப்பற்றியென்று கேட்கலாம். இதற்கு வேதபாரகர் சொல்லியிருக்கிறதைக் கேள்: முதலாவது, தமது பரிசுத்த தாயாருடைய பந்துஜனங்கள் மட்டில் மரியாதையும் சிநேகமும் காட்டவேண்டிய கடமையை நிறைவேற்றுவதற்காகப் போனாரென்று சொல்லலாம்; ஏனெனில் இந்தக் கலியாணத்தில் அர்ச். சூசையப்பர் சகோதரனாகிய கிளயோப்பாவின் குமாரனான கனானையனென்றழைக்கப்பட்ட சீமோனென்பவர்தான் மணவாளனாயிருந்தார்; பின்னால் இவர் பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராய்த் தெரிந்துகொள்ளப்பட்டார். 2-வது, புண்ணியவான் சொற்ப ஆஸ்திக்காரனாயிருந்தாலும், தாம் அவனை மதிக்கிறதாகக் காண்பிக்கத்தக்கதாகவும்; 3-வது, மனுக்குலத்தை ஆண்டவர் படைத்தபோதே ஏற்படுத்தினதும் தேவசுதனானவர் தேவ திரவிய அநுமானமாக உயர்த்தவும் வேண்டிய மெய்விவாக பந்தனத்தை மேன்மைப்படுத்தவும் அங்கு போனார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் உலகத்தையும் உற்றார் பெற்றாரையும் வெறுத்து

விட்டது, சர்வேசுரனுக்கும் பிறருக்கும் நமது சந்நியாச ஒழுங்குக்கும் விரோதமில்லாத காரியங்களில், அவர்கள் மட்டில் நமக்குள்ள சிநேகத்துக்கும் மரியாதைக்குமுரிய கடமையைச் செலுத்த விக்கினமாகமாட்டாதென்று இயேசுநாதர் நமக்கு இதனால் படிப்பிக்கிறார். மேலும் எந்த அந்தஸ்தையும் நாம் மதிக்கவேணுமென்றும் பிறருக்கு நாம் செலுத்த வேண்டிய உதவி ஊழியத்திலே அவர்களுடைய ஸ்திதி அல்லது உத்தியோகத்தைக் கவனியாமல், புண்ணியத்தை விசேஷமாய் உத்தேசித்துப் பார்க்கவேணுமென்று படிப்பிக்கிறார். இந்த ஒழுங்கை நான் எப்போதும் அநுசரித்தேனோ?

மனப்பற்றுதல்.—கானாவூர் விருந்தாடிகள் தங்கள் மத்தியில் இயேசுநாதருந் தேவமாதாவும் இருக்கப்பெற்ற பாக்கியத்தைப்பற்றி அவர்களைப் புகழ்ந்துகொள்வாயாக. உனது சகல கிரியைகளிலும் அவர்கள் விசுவாசத்தின் வழியாகவும் சிநேக மூலமாகவும் உன்னோடு இருக்கும்படியான வரப்பிரசாதத்தை மன்றாடு.

பிரதிக்கினை.—சர்வேசுரன் சமூகத்தில் நான் இருப்பதாக அல்லது இயேசுநாதருந் தேவமாதாவும் என்னுடன் பந்தியில் இருக்கிறதாக அசனவேளையில் விசேஷமாய் எண்ணிக்கொள்ளப் பிரயாசப்படுவேன்.

2-ம் பிரிவு

கலியாணத்துக்குத் தம்மை அழைத்தவர்கள் மட்டில் பரிசுத்த கன்னிமரியம்மாளுக்கு இருந்த கவலை

தியானம்.—பந்தியில் திராக்ஷ இரசங் குறைவாய்ப் போகவே, இயேசுநாதருடைய தாயார் அவரை நோக்கி இவர்களுக்கு இரசமில்லையென்றாள் (அரு. 2). இதிலே நாம் இரண்டு காரியம் யோசித்துப் பார்க்கவேண்டியது: அதேதென்றால் பரிசுத்த கன்னியாஸ்திரியிடத்தில் இருந்த கவலையுள்ள தயாளமும் தமது திவ்விய குமாரனிடத்தில் அவளுக்கு உண்டான நம்பிக்கையுமாம். அந்தச் சீர்மையில் திராக்ஷ இரசமே சாதாரண பானமாயிருந்தது; கலியாண

விட்டார் பந்திக்காக பத்திரப்படுத்தியிருந்த இரசம் விருந்தாடிகளெல்லோருக்கும் போதாதென்றும், இதனிமித்தம் அவர்கள் அங்கலாய்ப்படைவார்களென்றும் அவள் அறிந்து, உடனே தாமே வலியத் தமது திவ்விய குமாரனை நோக்கி 'இரசம் இல்லை' என்று இரண்டு வார்த்தையில் அதை அவருக்குச்சொல்லிக் காட்டினாள். அவர்பேரில் பூரண நம்பிக்கை அவளுக்கிருந்ததினால், அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லையென்பது அவளது எண்ணம். அதற்கு இயேசுநாதர்: "ஸ்திரீயே, உமக்கும் எனக்கும் என்ன? என் காலம் இன்னும் வரவில்லை," என்று தடுத்துச் சொன்னதாகத் தோன்றினாலும், அவ்விடத்திலிருந்த பணிவிடைக்காரரைப் பார்த்து: அவர் உங்களுக்குச் சொல்லுகிறபடி செய்யுங்களென்றாள் * (அரு. 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மகா பரிசுத்த கன்னியாஸ்திரியானவள் மனுஷருக்கு நன்மையான சொற்பக்காரியத்திலே முதலாய் எவ்வளவு கவலையாயிருக்கிறாளென்றும், அவள் வழியாய் நாம் சகலமும் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிற சர்வேசுரனிடமாய் அவளுக்கு எவ்வளவு வல்லமையுண்டென்றும் இவ்விடத்தில் காண்கிறோம். ஆகையால் அவள் தமது திவ்விய குமாரனுடைய அளவில்லாத அதிகாரத்தைத் தமது இஷ்டப்போல் நடப்பித்துக்கொண்டு வருகிறதினாலே, நாம் பரிசுத்த மரியாயின்பேரில் வைக்கவேண்டிய நம்பிக்கை மட்டில்லாததாயிருக்கவேணும். மீளவும் அற்புத சகா

* "இது (இரசம் குறைவாயிருப்பது) உமக்கும் எனக்கும் என்ன" என்று வேறு சிலர் மொழிபெயர்க்கிறார்கள். பரிசுத்த கன்னியாஸ்திரியை இவ்விடத்தில் தாயே என்று அழையாததற்குக் காரணம், தாம் அற்புதஞ்செய்கிறது தமது மனுஷத் தன்மையினாலும் அல்ல, தாம் மரியாயின் குமாரனாயிருக்கிறதினாலும் அல்ல, ஆனால் சர்வேசுரனுடைய நித்தியகுமாரனானதினாலே மாத்திரம் தாம் அற்புதஞ்செய்கிறதாக விருந்தாடிகள் கண்டுபிடிக்கும்படியாக. தவிரவும், நாம் நினைப்பதுபோல் 'ஸ்திரீ' என்னும் பதத்துக்கு எபிரேய பாஷையில் தாழ்மையான அர்த்தம் ஒன்றுங் கிடையாது.

யங்களை நாம் அடையவேணுமானால், அவள் காண்பித்த உபாயத்தைத் தெரிந்துகொண்டு நமது சிரேஷ்டர்வழியாய் இயேசுநாதர் நமக்குச் சொல்லுகிறதையெல்லாஞ் செய்ய வேணும்; ஊழியக்காரர் பாவனையாகக் கீழ்ப்படிதலின் கட்டளைகளை முன்னும் பின்னும் யோசித்துப்பாராமல் குருடர்களைப்போல நிறைவேற்றவேணும்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே, சந்நியாசத்தில் நாங்கள் கொடுத்த வார்த்தைப் பாட்டுக்கு ஈடாக இயேசுநாதர் எங்களுக்குச் செய்த வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாயிருக்கத் தக்கதாக, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரதிக்கினை.—நாம் கேளாதிருக்கையில், பரிசுத்த கன்னியாஸ்திரி வலியத் தமது கவலையுள்ள தயையினாலே நமக்கு அடைந்த உபகாரங்களுக்காக அடிக்கடி நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக.

3-ம் பிரிவு

நமது பரிசுத்த தாயாராகிய மரியம்மாளினிமித்தம் இயேசுநாதர் செய்த முதல் அற்புதம்

தியானம்.—தேவமாதா எதிர்பார்த்தது வீணாய்ப் போகவில்லை. எப்படியெனில், இயேசுநாதர் அவள் நிமித்தமாகக் குறிக்கப்பட்ட காலத்துக்கு முந்தியே பிரசித்தமாய் தமது முதலாவது அற்புதத்தைச் செய்தார்:—ஒவ்வொன்று இரண்டு மூன்று சாலடங்குமான ஆறு கற்சாடிகளைத் தண்ணீரால் நிரப்பச்செய்து அதை இரசமாக்கினார். இம்மேரையாய் இயேசுநாதர் தமது மகிமையை அதாவது தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தவே, அவருடைய சீஷர்கள் அவரை விசுவசித்தார்கள் (அரு. 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் கானாவூரின் கலியாணத்துக்கு வந்த பாக்கியமுள்ள சனங்களுக்குச் செய்த புதுமையைப்போல் தினந்தோறும் நமக்கும் மகா உத்தமமான பிரகாரமாய் அற்புதஞ் செய்து

கொண்டுவருகிறார்; அதெப்படியென்றால், திவ்விய பூசையில் இரசத்தைத் தமது இரத்தமாக மாற்றித் தேவநற்கருணையின் வழியாய் நமக்குப் பகிர்ந்துகொடுக்கிறதினாலே தான். இவ்வளவு அபூர்வமான பட்சத்துக்கு நாம் நன்றியறிந்தவர்களாயிருப்போமாக.

சம்பாஷணை.—நமது ஆண்டவராகிய இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக. இவர் பஞ்சபூதியங்களுக்கும் மனிதர் இருதயங்களுக்கும் எசமானென்று அறிந்து, இவரை நாம் ஆராதிக்கிறதுமன்றிப் பத்தியில்லாமல் குளிர்ந்து தளர்ந்திருக்கிற நமது இருதயம் பத்தியினால் எரிந்து உருக்கமாயிருக்க வரப்பிரசாதங்கேட்போமாக.

பத்தாம் தியானம்

இயேசுநாதர் தமது தாயாரை விட்டுப் பிரிந்துபோகிறார். தமது சீஷர்களுந் தம்மைப்போல் எல்லாத்தையும் விட்டுவிடக் கேட்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—என்னைப் பின்சென்று வாவென்று இயேசுநாதர் எனக்குச் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்.—இயேசுநாதரைக் கண்டுபாவிக்கிறதில் எப்போதும் புதிதான அபிவிர்த்தியடைகிறதற்கு மிகுந்த ஆசை எனக்குண்டாகக் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் தமது தாயரை விட்டுப்பிரிந்து மற்றவைகளையும் உத்தமபிரகாரமாய் வெறுத்துவிடுகிறார்

தியானம்.—இயேசுநாதர் கானாவூரை விட்டுப் புறப்பட்டுத் தாமுந் தமது தாயாரும் தமது சகோதரருந் தமது சீஷர்களுங் கப்பர்நாவூம் பட்டணத்துக்கிறங்கி அங்கே சிலநாள் மாத்திரம் வாசம்பண்ணினார்கள் (அரு. 2).

இந்த வாக்கியத்தினால் நாம் அறியத்தக்கதேதென்றால், நமது ஆண்டவர் ஒரு வீட்டுக்குள்ளே தமது திருத் தாயாரோடும் பந்துசனங்களோடும் ஒன்றாயிருந்த நாட்களின் கடைசியான காலம் இது. அதுமுதல் இவ்வுலகத்தில் தாயும், வீடும், இலௌகீக பொருளில் வேறே யாதொன்றும் அவருக்கு இல்லையென்று சொல்லலாம். அவர் தமது பரம பிதாவினால் அனுப்பப்பட்ட மனுமகனென்று தம்மைச் சொல்லிக்கொண்டு, தாம் நிறைவேற்ற வந்த தேவ தொழிலின்பேரில் மாத்திரம் பூரண கவனமாயிருந்து தேவ தோத்திரத்துக்காகவும் மனிதர் ஈடேற்றத்துக்காகவும் இடைவிடாமல் ஓரிடத்திலிருந்து வேறோரிடத்துக்குப் போய்க்கொண்டிருந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வேதம் போதிக்கிறவர்களும், இதற்காகக் குறிக்கப்பட்ட சந்நியாசிகளில் அநேகம்பேர்களும் அடிக்கடி ஒரு ஊரைவிட்டு வேறே ஊருக்குப் போகவேண்டியதாயிருக்கிறது. தேவ தோத்திரத்துக்கும் ஆத்தும நன்மைக்கும் விசேஷ அநுகூலத்தோடு பிரயாசப்படலாமென்கிற நம்பிக்கையைப்பற்றியுஞ் சிரேஷ்டர்கள் கொடுக்குங் கட்டளையினிமித்தமும் அங்கங்கே போகவேணுமென்று அவர்கள் சபை ஒழுங்குகளில் சொல்லியிருக்கிறதல்லவோ? இப்படி அடிக்கடி இடமாறுகிறது சிலவிசை சுபாவத்துக்குக் கடினமாயிருக்கும். நீ இதில் எப்படி நடந்துவந்தாய்? இதைக் கையேற்றுக்கொள்ளுகிறதில் உன்னிடத்திலே விளங்கின விசுவாசமுஞ் சம புத்தியுஞ் சுறுசுறுப்பும் என்ன?

மனப்பற்றுதல்.—மனுஷர்பேரிலும் யாதோர் இடத்தின்பேரிலும் பற்றுதலின்மை உத்தம விதமாய் உன்னிடத்தில் உண்டாக மன்றாடு. சுபாவத்துக்குப் பிரியமாயிராத இடத்திற் போய்ப் பிரயாசப்பட உன்னை ஒப்புக்கொடுப்பாயாக.

பிரதிக்கினை.—கீழ்ப்படிதலினால் சர்வேசுரன் எனக்குக் குறிக்கும் இடமே எனக்கு நன்மையான இடமென்று நினைத்துச் சில இடத்தின்பேரில் எனக்குண்டான அருவருப்பை உடனே தள்ளிப்போடுவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் தாம் கொடுத்த மாதிரிகைப்பிரகாரம் பெலவந்திரனும் இராயப்பனும் எல்லாத்தையும் துறந்துவிட்டு வரும்படி அழைக்கிறார்

தியானம்.—இயேசுநாதர் தமது தெய்வீக அலுவலிலேயே முழுதுங் கவனமாயிருக்கும்படி சுபாவத்துக்கடுத்த பற்றுதல் எல்லாத்தையுந் தாம் முழுதும் வெறுத்து மாதிரிகை காண்பித்தபின், தம்மோடு அந்தத் தேவ அலுவலை நடத்தவுந் தமக்குப்பின் அதைத் தொடர்ந்து பரிபாலிக்கவுந் தமது சீஷர்களுக்குள்ளே குறிக்கப்பட்டவர்கள், தம்மைப்போல் எல்லாத்தையுந் துறந்துவிடும்படி தூண்டுகிறார். இயேசுநாதர் கலிலேயா நாட்டின் கடலருகே நடந்துபோகையில், மீன் பிடிக்கிறவர்களாயிருந்த இராயப்பரென்னப்பட்ட சீமோனும் அவர் சகோதரனான பெலவந்திரருமாகிய இரு சகோதரர் கடலில் தங்கள் வலைகளை வீசிக்கொண்டிருக்கக் கண்டு அவர்களை நோக்கி: நீங்கள் என்னைப் பின்சென்று வாருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேனென்று திருவுளம்பற்றினார். அவர்களோ, உடனே வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்சென்றார்கள் (மத். 4). குடும்பத்தையும் பந்துக்களையும் முழுதும் வெறுத்துவிட்டு இன்னமுந் தங்கள் சொந்தக் காரியமெல்லாத்தையுந் தங்கள் மனச் சுதந்தரத்தையும் முதலாய் விட்டு விட்டுத் தங்கள் திவ்விய குரு மனமுவந்து தெரிந்துகொண்ட தரித்திரத்தையும், அவரது உத்தமமான விரத்தத்துவத்தையும் மேலான அலுவலையும் கண்டுபாவிக்கத் தீர்மானித்துக்கொண்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உலகத்தின் விநோத கருத்துக்குஞ் சுபாவத்தின் நோக்கத்துக்கும் முழுதும் விரோதமாகிய சுவிசேஷத்தின் மேலான புத்திகளை இவர்கள் முதல் முதல் அநுசரித்ததைக் காண்கிறோம். மனுஷனாய் அவதரித்த சர்வேசுரன் முந்த முந்த இதற்கு மாதிரிகை காண்பியாவிட்டால், இத்தனை பிரயாசமுங் கடினமுமுள்ள சீவியத்தை யார்தான் கைக்கொள்ளக்கூடும்?

இரட்சகருடைய முந்தின சீஷர்கள் அட்டியின்றி இதைக் கையேற்றுக்கொண்டது, தேவ வரப்பிரசாதத்தின் உருக்கத்தினாலும், அவருடைய மாதிரிகையினாலும் ஆனதென்று சொல்லவேணும். புண்ணியத்தையும் நீ சொல்லும் நல்ல புத்தியையும் பிறர் அநுசரிக்கச்செய்யவேணுமாகில், உன் நடத்தையால் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். இவ்விதம் செய்தாயா?'

மனப்பற்றுதல்.—ஒருவன் எல்லாத்தையும் வெறுத்துவிடானாகில், என் சீஷனாயிருக்கத்தக்கவனல்லவென்று இயேசுநாதர் திருவுளம்பற்றின வார்த்தையை நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதங் கேட்போமாக (லூக். 14).

பிரதிக்கினை.—இப்படி வெறுத்துவிடுகிறது நமக்கு இன்பமாயிருக்கவேணுமானால், உலகத்தில் யாதொன்றின் பேரிலும் பற்றுதலில்லாதவனே பாக்கியவானென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கும் வாக்கியத்தை அடிக்கடி நினைப்போமாக.

3-ம் பிரிவு

இயாகப்பரும் அருளப்பரும் இப்படி எல்லாத்தையும் வெறுத்துவிட இயேசுநாதர் அழைக்கிறார்

தியானம்.—பின்னும் அவர் அவ்விடத்தைவிட்டுக் கடந்து போகையில், படகிலே செபதேயென்னும் தங்கள் தகப்பனோடு வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்த இரு சகோதரராகிய இயாகப்பரையும் அருளப்பரையும் கண்டு அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் தங்கள் தகப்பனையுங் கூட இருந்தவர்களையும் விட்டு, அவரைப் பின்சென்றார்கள் (மத். 4, மாற்கு 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தகப்பனிடத்திலும் அவனுடைய இரண்டு குமாரரிடத்திலும் ஒரே சமயத்தில் விளங்கின உதாரத்தனத்தையும் ஆச்சரியமான கீழ்ப்படிதலையுங் கண்டு அதிசயப்படுவாயாக. அந்தக் குமாரர்கள் தகப்பனைப்பற்றி யாதோர் போக்குச் சொல்லவில்லை. தகப்பனும் யாதொரு முறைப்பாடும் விக்கினமுஞ் செய்யவில்லை. நம்மை அழைத்த முதலாவது வரப்பிரசாதத்துக்கு உதாரமாய் நாம் செவி கொடுத்ததினாலே நாம் எவ்வளவோ பாக்கியம் பெற்றவர்களாயிருக்கிறோம்! ஆ! என் சர்வேசுரா, இதற்குப்பின் தந்தருளப்பட்ட தேவ வரப்பிரசாதங்களுக்கு, நான் இப்படிப் பிரமாணிக்கமாய்ச் செவிகொடாமற் போனதென்ன? ஆ! என் இயேசுவே, நான் இனி சரியாய்ச் செவிகொடுக்க எனக்கு உதவிசெய்தருளும்.

சம்பாஷணை.—இயேசுநாதருடைய முந்தின நாலு சீஷர்களோடாவது திவ்விய இரட்சகரோடாவது சம்பாஷணை செய்.

பதினோரும் தியானம்

தமது தேவபிதாவினுடைய வீட்டின்பேரில் இயேசுநாதருக்குள்ள சுறுசுறுப்பான பற்றுதல்

இயேசுநாதர் பிரசங்கம்பண்ணின முதல் வருஷமும் முந்தின பாஸ்குப் பண்டிகையும்.*

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் ஒரு சாட்டையைக் கையிலெடுத்துத் தேவாலயத்தை அவசங்கைப்படுத்துகிறவர்களைத் துரத்துவதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

---

* இயேசுக்கிறீஸ்துநாதர் பிரசங்குஞ் செய்த மூன்று வருஷங்களில் முதல் வருஷம், முந்தின பாஸ்கென்று சொல்லப்பட்ட மார்ச்சு மீ 25-ம் தேதியில் நடந்த இப் பாஸ்குப் பண்டிகையில் துவக்கினதென்று வேதபாரகர் பெரும்பாலுங் கருதுகிறார்கள். இயேசுநாதருக்கு முன்னோடியாயிருந்த அர்ச். ஸ்நாபக அருளப்பருடைய அலுவல் முடிந்ததும் இதே காலத்தில்தான்; ஏனென்றால் மாசில்லாத குழந்தைகளைக் கொன்றவனுடைய மகனாகிய ஏரோது அந்திப்பாஸ் என்பவனால் அவர் அச்சமயம் சிறைச்சாலையில் போடப்பட்டார்.

தியானச் சேபம்.—தேவ மகிமையின்பேரில் சுறுசுறுப்புள்ள பற்றுதலைக் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுநாதரிடத்தில் விளங்கின தேவ சுறுசுறுப்பின் வேகம்

தியானம்.—யூதர்களுடைய பாஸ்குப் பண்டிகை சமீபித்திருந்ததினால், இயேசுநாதர் எருசலேம் நகருக்கு ஏறிப் போனார். அந்த வருஷத்தில் அவர் தேவாலயத்தைச் சேவிக்கிறவரைப்போலப் போகாமல், எசமானைப்போலும் அதைச் சீர்ப்படுத்துகிறவரைப்போலும் போனார். அதிகாரம் பொருந்திய மகத்தான ஓர் கிரியையால் மற்றவர்களுக்கு இதை அறிவிக்க விரும்பினார். அங்கே, "தேவாலயத்தில் ஆடு, மாடு, புறா விற்கிறவர்களையும் உட்கார்ந்திருந்த காசுக்காரர்களையுங் கண்டபோது, சிறு கயிறுகளால் ஓர் சாட்டை பின்னி, அவர்கள் எல்லாரையும் ஆடு மாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திக் காசுக்காரருடைய பணத்தையுங் கொட்டி அவர்கள் பலகைகளையுங் கவிழ்த்துப் போட்டார்". (அரு. 2). தேவ துரோகமும், துர்மாதிரிகையுமான நெடுநாட்பட்ட இந்தக் கெட்ட வழக்கம், கேவலம் சுயலாபப் பிரியரால் நியாய முறைபோல அங்கீகரிக்கப்பட்டிருந்தது; இத்தகைய வழக்கத்தைத் தொலைக்கும்பொருட்டு, இயேசுநாதர் கோபத்தையும் ஆக்குரோசத்தையும் வெளிப்படையாகக் காட்டவேண்டியிருந்தது; ஆயினும் அவர் உள்ளத்தில் குடியிருந்த சமாதான அமரிக்கை சற்றும் மாறவில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நியாயமான கோபத்தைக் காண்பிக்கிறது பாவமல்ல என்பது மாத்திரமல்ல இது அநேகஞ் சமயத்தில் அவசியமும் புண்ணிய முயற்சியுமாயிருக்கும் என்று இவ்விடத்தில் கண்டுகொள்கிறோம். அதைப்பற்றி அர்ச். சின்னப்பர் சொல்வதாவது: "நீ கோபித்துக்கொண்டாலும் பாவத்துக்கு இடங்கொடாதே" என்கிறார் (எபே. 4). நமக்குக் கீழ்ப்பட்டவர்கள் செய்யுங் கனமான குற்றத்தை அவர்களுக்குக் காண்பிக்கவும், அதின்பேரில் அவர்களுக்கு அரோசிகம் உண்டாகவும் இப்படிக் கோபிப்பது அவசரமாயிருக்கும்; சில சமயத்தில் நமதுபேரிலேதானே நாம் கோபிப்பது அவசரமாயிருக்கும். நெடுங்காலமாய் உன் மனதுக்குள்ளே வேதனை வருத்துவிக்கிற அல்லது வெளியில் துர்மாதிரிகையாய் காணப்படுகிற ஓர்விதப் பாவம் சிலவிசை உன்னிடத்தில் இருக்கும். இதை முழுதுந் தள்ளிப்போடவேண்டுமே. ஆகையால் உன்பேரில்தானே பரிசுத்தவிதமாய்க் கோபித்துக்கொண்டு, தேவ நீதியாகிற சாட்டையைக் கையில் எடுத்து, அந்தப் பாவத்துக்கு முழுவதும் பரிகாரம் பண்ணுதவரையில், அதை எறிந்துபோடுவதில்லையென்று தீர்மானித்துக்கொள்வாயாக.

மனப்பற்றுதல்.—நியாயமாக வெகுவாய்க் கோபித்துக்கொள்ளும்போது முதலாய், உள்ளத்தில் எப்பொழுதும் அமரிக்கையாயிருக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

பிரதிக்கினை.—முன்கோபத்தால் அல்லது சுயபட்சம் புண்பட்டதால் உண்டாகும் ஆத்திரம், தேவ சுறுசுறுப்பென்று நினையாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

2-ம் பிரிவு

இயேசுநாதரிடத்தில் விளங்கின தேவ சுறுசுறுப்பின் விவேகம்

தியானம்.—இயேசுநாதர் புறாக்களை விற்கிறவர்களை நோக்கி "இவைகளை இவ்விடத்தினின்று அப்புறம் எடுத்துக்கொண்டு போங்கள்" என்றார் (அரு. 2). இந்தச் சிறிய வியாபாரிகள்மட்டில் இயேசுநாதர் தேவ சுறுசுறுப்பின் வேகத்தையுங் கண்டிப்பையும் மட்டுப்படுத்தினதேன்? அவர்கள் ஏழைகளும், சரியான படிப்பில்லாதவர்களும், அவர்களது குற்றம் மற்றவர்களுடையதிலும் சொற்பமாக இருந்ததினால்தான். மீளவும் முந்தினவர்களைப்போல இவர்களையுஞ் சரியாய் நடத்தினால், இவர்களுக்குண்டான ஏக சீவனோபாயம் கெட்டுப்போயிருக்கும். இது இயேசு

நாதருடைய அளவில்லாத தயவுக்குப் பொருந்தாது. ஆகையால், அவர் அவர்கள் எல்லாரையும் பயமுறுத்தினரொழிய, அவர்களில் ஒருவருக்கும் யாதொரு பொல்லாப்புச் செய்யவில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னிடத்தில் விளங்குகிற தேவ சுறுசுறுப்பின் வேகம் எவ்வளவு நியாயமுள்ளதாயிருந்தாலும், அதைத் தக்க விவேகத்தோடு ஒழுங்குபடுத்திப் பிறர்சிநேகத்தினல் மட்டுப்படுத்த வேணுமென்று இதிலிருந்து அறிந்துகொள்வாயாக. இது காரியத்தில் நீ அடிக்கடி தவறிப்போனதில்லையோ? நீ வேதத்துக்காகப் படும் பிரயாசத்தில் அநுகூலம் அடையாமற் போகிறதற்கு இது காரணமல்லவோ? விமரிசையற்ற சுறுசுறுப்பினல் நன்மையுண்டாகிறதைவிட அதிக தின்மை விளையும்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதரிடத்திலும் அவர் செய்த கிரிகைகளிலுங் கண்டிப்புஞ் சாந்த குணமும் ஆச்சரியமானவிதமாய்க் கலந்திருக்கிறதை அன்போடு தியானித்துப்பார். உன் திவ்விய மாதிரிகையானவருடைய சுறுசுறுப்புள்ள பற்றுதலுக்கு ஒத்தபிரகாரம் உன் தேவ சுறுசுறுப்பை ஒழுங்குபடுத்த வரப்பிரசாதங் கேள்.

பிரதிக்கினை.—திடீரென்று கோபங்கொள்ளுகிறதின் மட்டில் எச்சரிக்கையாயிருக்கவேணும். ஒரு காரியத்தைச் செய்யுமுன்னுஞ் விசேஷமாய்ப் பிரதான காரியத்தைத் துவக்குமுன்னும் சற்று யோசித்துப் பார்க்கவேணும்.

3-ம் பிரிவு

இயேசுநாதரிடத்தில் விளங்கின தேவ சுறுசுறுப்பின் நியாயமுள்ள காரணம்

தியானம்.—“என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்கிக்கொள்ளாதேயுங்கள்” என்றவார்த்தைகளினல், இரட்சகர் தாம் செய்த கண்டிப்பு நியாயமானதென்று யூதருக்குமுன்னே காண்பிக்கச் சித்தமானர். கிறீஸ்து

வர்களுடைய உள்ளத்தில் இதே வார்த்தைகள் எத்தனையோ எண்ணங்களை உற்பத்திபண்ணவேண்டியது! பலியிடுவதற்கு அவசரமான காரியங்களைத் தேவாலயத்தில் வியாபாரஞ் செய்வது மகா கண்டிப்புக்குரிய அவசங்கையென்று இயேசுநாதர் நினைத்திருக்கையில், எருசலேம் பட்டணத்து ஆலயத்தைப்பார்க்கிலும் மகா பரிசுத்தமான நமது தேவாலயங்களைத் தினந்தோறும் பிரசித்தமும் இரகசியமுமான பாவங்களால் அசுத்தப்படுத்துவது அவர் பார்வைக்கு எவ்வளவோ கனமான காரியமாயிருக்கும்! இப்பேர்க்கொத்த மகா கொடிய அக்கிரமங்களை, ஒருநாள், எவ்வளவோ அகோரமாய்த் தண்டிக்கமாட்டார்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவாலயத்தின் மகிமையின்பேரில் உனக்குச் சுறுசுறுப்புள்ள பற்றுதல் உண்டானல், அந்தப் பரிசுத்த ஸ்தலத்திலே வெளியரங்கமான சங்கையினுலும் பத்தியினுலும் சர்வேசுரனுடைய அளவில்லாத மகத்துவத்துக்கு அதில் செய்யப்படும் அவமானங்களுக்குப் பரிகாரம் பண்ண வருந்துவாயாக. ஆனல் சிலவிசை நீதானே அங்கே ஆசாரக்குறையாயிருந்ததில்லையோ? உன் நடக்கையினலாவது பார்வையினலாவது சிலவிசை அவ்விடத்தில் அநேக குற்றங்குறைகளுக்கு அல்லது பாவமான அநாசாரங்களுக்கு இடங்கொடுத்ததில்லையோ? அப்படியிருக்குமாகில், தேவாலயத்தில் சர்வேசுரனுக்குச் செய்யப்பட்ட அவமானத்துக்குப் பரிகாரம்பண்ண உன்பேரில் இரட்டிப்புக் காரணமுண்டு.

சம்பாஷணை.—உன் கோவிலுக்கு அல்லது செபக்கூடத்துக்குக் காவலாயிருக்கிற சம்மனசானவர்களோடு சம்பாஷணை செய்வாயாக.

பன்னிரெண்டாம் தியானம்

தேவமகிமைப் பிரதாபத்தின் பேரிலுண்டான சுறுசுறுப்புள்ள பற்றுதல்

ஆயத்தச் சிந்தனை.—நீங்கள் செய்கிறதெல்லாந் தேவ மகிமைக்காகச் செய்யுங்களென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—தேவ மகிமையின்பேரில் சுறுசுறுப்புள்ள பற்றுதலைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

தேவ மகிமையின்பேரில் உண்டான சுறுசுறுப்புள்ள பற்றுதலின் தன்மை

தியானம்.—சர்வேசுரன் சிருஷ்டிப்பின் வேலையைக் கொண்டு தம்மை வெளிப்படுத்தச் சித்தமானார் என்றமட்டிலும், தன்னையும் உலகத்திலுள்ள ஆச்சரியமான எண்ணிறந்த வஸ்துக்களையும் உண்டாக்கினதாரென்று புத்தியுடைத்தான மனுஷன் மாத்திரம் அறியக்கூடுமானதினாலே, அவன் தன்னை முழுதும் அவருக்கு ஒப்புக்கொடுத்து அத்தியந்த அதிசயத்தோடு அவரை ஆராதித்துச் சகல மகிமையையும் அவருக்கு மாத்திரம் இடைவிடாமல் செலுத்திவருகிறதில், சர்வேசுரனுடைய வெளியரங்கமான மகிமைப்பிரதாபம் அடங்கியிருக்கின்றது. ஆகையால் இப்பேர்ப்பட்ட எண்ணங்கள் மற்றவர்களிடத்தில் உண்டாகவும், கூடுமானால், சகல மனுஷருடைய இருதயத்தையும் அவ்வெண்ணங்களினால் நிரப்பவும் மெய்யாக ஆசைப்படுவதில், தேவமகிமையின் சுறுசுறுப்புள்ள பற்றுதல் அடங்கியிருக்கிறதென்று சொல்லவேணும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சுறுசுறுப்புள்ள பற்றுதலைப்பார்க்க நீதியும் நியாயமானதும் யாது இருக்கக்கூடும்? நல்ல பிள்ளை தன் தகப்பனுடைய மகிமையின்பேரிலும் தகப்பனைச்சேர்ந்த காரியத்தின்பேரிலும் சுபாவமாய்ப் பற்றுதலாயிருப்பானல்லவோ? சர்வேசுரன் நம்மெல்லோருக்குந் தகப்பன், நமக்குள்ள சீவனும் அதைச்சேர்ந்த சகல நன்மையும் அவராலே நமக்குக் கிடைத்தது. ஆகையால், தேவ மகிமையின் சுறுசுறுப்புள்ள பற்றுதலைவிட, மனுஷனுக்கு மிகவும் இயல்பானதும் இன்பமுள்ளதும் வேறொன்றுமில்லையென்றும் சகல இருதயத்திலும் நின்று தற்சுபாவமாய் இடைவிடாத ஆராதனையும் புகழ்ச்சி நமஸ்காரமும் பரமண்டலத்தை நோக்கிப் தூம்புகைபோல் எழும்பவேண்டியதென்றுந் தோன்றுகிறதில்லையோ? ஐயோ! இப்படி நடக்கிறதைக் காணோமே. உன்னைப் படைத்த ஆண்டவரை நீ மறந்துவிட்டாயென்று மோயீசென்பவர் எபிரேய ஜனங்களுக்குச் சொன்ன கண்டிப்பு இக்காலத்திலுள்ள அநேகருக்குஞ் செல்லுமென்கிறது உண்மைதானே. நீ சந்நியாசியாயிருந்தும், இந்தக் கண்டிப்புக் கொஞ்சமாகிலும் உனக்குச் செல்லாதோ? சர்வேசுரனைப்பார்க்கிலும் உன்மட்டில் வழக்கமாய் அதிக கவலையுள்ளவனாயிருக்கிறதில்லையோ? இடைவிடாமல் சர்வேசுரனுக்குச் செய்யப்படும் நிந்தை அவமானங்களைப் பார்க்க, உனக்கு வரும் நிந்தை அவமானத்தின்பேரில் நீ அதிக வருத்தப்படுவதில்லையோ?

மனப்பற்றுதல்.—மனுஷருடைய குருட்டாட்டத்தைப் பார்த்து நீ அழுகிறதுமல்லாமல் உன் மதியீனத்தைக் கண்டும் பிரலாபிக்கவேணும். நீ உன்னை மறந்தவனாகித் தேவ மகிமையின்பேரில் பற்றுதலுள்ளவனாயிருக்க வரப்பிரசாதங் கேள்.

பிரதிக்கினை.—மிகுந்த மன இரம்மியத்தோடு பிதாவுக்குஞ் சுதனுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்குந் தோத்திரமுண்டாகக்கடவதென்று எப்போதும் சொல்ல வருந்துவேனாக.

2-ம் பிரிவு

தேவமகிமைக்கடுத்த சுறுசுறுப்புள்ள பற்றுதலின் மேன்மை

தியானம்.—சர்வேசுரன் தாம் செய்த சகல காரியங்களிலும் கொண்டிருந்த மேலான கதியைப் பார்க்க உயர்ந்த

றும் மகா பெரிதானதும் ஒன்றுமில்லை. சர்வேசுரன் சகலத்தையும் தமக்காகப் படைத்தாரென்று வேதாகமத்தில் சொல்லியிருக்கிறதுபோல, அந்தக் கதியானது அவரும் அவருடைய மகிமையுமல்லாமல் வேறல்ல. மனுஷனைத் தமது சாயலாகப் படைத்தபோது, அவர் கருதிய வெளியரங்கமுந் திட்டமுமான கதியும் இதுதானே: மனுஷனை நமது மகிமைப்பிரதாபத்துக்காகச் சிருஷ்டித்தோமென்றும் அவரே திருவுளம்பற்றியிருக்கிறார் (இசாயி. 43). இதைப் பற்றி அர்ச். சின்னப்பர் கற்பித்திருக்கிறதாவது: நீங்கள் புசித்தாலும் பானம் பண்ணினாலும் மற்ற எதைச் செய்தாலும் எல்லாவற்றையுந் தேவ மகிமைக்காகச் செய்யுங்களென்றார் (1 கொரி. 10). சர்வேசுரன் செய்திருக்கிற காரியங்களிலெல்லாம் அவருக்கிருந்த நோக்கத்துக்காகவே, மனிதனும் எப்போதும் எல்லாக் காரியத்திலும் உழைக்கக் கூடுமாயிருப்பது அவனுக்கு எத்தனையோ பாக்கியம்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ தோத்திரத்தையும் அவருடைய மேலான மகிமையையும் வருவிக்கத் தேடுவதாகிய மேன்மையான அலுவல் சந்நியாசிகளாயிருக்கிற நமக்கு விசேஷமாய்க் கிடைத்திருக்கிறது. முந்தமுந்த நம்மிடத்தில்தானே அவருக்கு மகிமை வருவிக்கவேணும். அதெப்படியென்றால், நம்மையும் நாம் அனுபவிக்குஞ் சகலத்தையுஞ் சர்வேசுரனுக்கு இடைவிடாத தோத்திரமாக ஒப்புக்கொடுத்து எல்லாக் காரியங்களிலும் அவருடைய சித்தத்தைமாத்திரந் தேடி அவருக்கு ஏற்காத அற்பக் குற்றமுதலாய் மனப்பொருந்திச் செய்யாதிருக்கவேண்டியது. பின்னர் அந்த மகிமையைப் புறத்தியாரிடத்திலும் வருவிக்கவேணும். அதெப்படியென்றால், புறத்தியார் சர்வேசுரனைச் சிநேகிக்கவும் அவருக்கு ஊழியம்பண்ணவுங் கூடினமாத்திரம் பிரயாசப்பட்டு, அவர்கள் செய்யும் தேவ பற்றுதலுக்குரிய கருமங்களில் நமது கூட்டுறவால் அல்லது நமது செபங்களினாலும், திவ்விய பூசைகண்டு, நற்கருணை உட்கொண்டு ஒப்புக்கொடுப்பதினாலும் அவர்களுக்கு உதவிபுரியவேண்டும். நமக்குரித்தான இவ்வலுவலை நாம் இதுவரை எவ்விதம் செய்துவந்தோம்? இதில்

குறைவானதைப் பரிகரிக்கும்படி நாம் இன்னும் இருமடங்கு சுறுசுறுப்புள்ளவர்களாயிருப்போமாக!

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் நம்மைத் தமது மகிமைக்கு யோக்கியமான எத்தனமாக்கத் தயைசெய்யவேணுமென்று அவரை மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—படிப்பும் நல்ல கீர்த்தியும் தேவதோத்திரத்தைச் சம்பாதிக்கிறதற்கு உதவுமென்கிறதினால் மாத்திரம் அவைகளைக் கனமாய் எண்ணவேணும்.

3-ம் பிரிவு

தேவமகிமையின்பேரில் உண்டான சுறுசுறுப்புள்ள பற்றுதலினால் வரும் பலன்

தியானம்.—தேவமகிமை உண்டாக நாம் சுறுசுறுப்போடே செய்யுங் கருமங்களைப் பார்க்க, அதிக மேன்மையானதும் தெய்வீகமானதும் வேறொன்றுமில்லாதது போல, அதைவிடச் சர்வேசுரன் சமுகத்தில் அதிக பேறுபலனுள்ளது வேறொன்றுமில்லையென்றும் என்னை மகிமைப்படுத்துகிறவனை நான் மகிமைப்படுத்துவேனென்று வேதாகமத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் நித்தியத்தில் நமக்கு மகா மகிமையைக் கொடுக்கக்கூடுமானது வேறொன்றுமில்லையென்றுஞ் சொல்லவேண்டும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவமகிமைக்காக நமது சுறுசுறுப்புள்ள ஆவலைக் காண்பிக்க நமக்குக் கிடைக்குஞ் சமயங்களையெல்லாஞ் சந்தோஷத்தோடும் துரிதத்தோடும் நாம் உதவிக்கொள்ளுவதற்கு மேற்சொன்னதெல்லாம் மிகவுந் தகுந்ததாமே. அப்படிப்பட்ட சமயங்கள் நமக்குக் கிடையாமல் போகமாட்டா; எங்கும் அவைகள் நமக்குக் கிடைக்கும்; இதற்காக வீட்டைவிட்டுப் போகவேண்டியதில்லை: நாம் காண்பிக்கும் நன்மாதிரிகையினாலே நமது சகோதரர்கள் தங்கள் அந்தஸ்தின் உத்தமதனத்தை அடையும்படி தூண்டுவதினால் அவர்கள் தேவமகிமைக்கான எத்தனங்களாகும்படி ஏதுவாயிருப்போம்.

சம்பாஷணை.—தேவசுறுசுறுப்பின் பெருக்கத்தினாலும் அநுகூலத்தினாலும் ஆச்சரியமுள்ளவராய் விளங்கின அர்ச். சவேரியாரோடே சம்பாஷணை செய்.

பதின்மூன்றாம் தியானம்

நீக்கோதேமென்பவர் இரவில் இயேசுநாதரைச் சந்திக்கப்போனது

ஆயத்தச் சிந்தனை.—வயதிலும் அதிகாரத்திலும் சங்கைக்குரியவரான நீக்கோதேமென்பவர் தாழ்ச்சியோடு இயேசுநாதரை வினாவுகிறதையும் அவர் சொல்லுகிறதைச் செவிகொடுத்துக் கேட்கிறதையும் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—உன் புத்தியின் ஞான ஒளிவுக்கு உன் மனது எப்போதும் பொருந்தியிருக்கும்படி இயேசுநாதரை மன்றாடுவாயாக.

முதல் பிரிவு

நீக்கோதேமென்பவருடைய தைரியமும் கோழைத்தனமும்

தியானம்.— தேவ ஆலயத்தை அவசங்கைப்படுத்தின சனங்களைத் துரத்தினபோது, இயேசுநாதரிடத்தில் விளங்கின சுபாவத்துக்கு மேற்பட்ட வல்லமையானது எருசலேம் பட்டணமெங்கும் பெரிய பிரஸ்தாபமாயிற்று. சுவிசேஷகராகிய அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறதுபோல அவர் செய்த அற்புதங்களைக் கண்டு அநேகர் அவரை விசுவசித்தார்கள். அவர்களுக்குள்ளே பெரிய சங்கத்தைச் சேர்ந்தவரும் பரிசேயனுமான நீக்கோதேமென்பவரும் ஒருவர். (அரு. 2, 3). இவர் நேர்மையுள்ளவரும் உண்மையைத் தேடுகிறவருமாயிருந்தார். இயேசுநாதர் பரலோகத்தில் நின்று அனுப்பப்பட்டவரென்று நினைத்து அவரிடத்தில் ஞானஉபதேசம் அறிந்துகொள்ளத் தமக்குக்

கடனென்று எண்ணிக்கொண்டார். ஆகிலும் இப்படித் தாழ்ச்சியோடு நடக்கத்தக்கதாகச் சனங்களின் மூப்பர்கள் அப்போதுதானே இயேசுநாதரை மூர்க்கமாய்ப் பகைக்கத் துவக்கி இவன் படிப்பில்லாத நசரேத்தானென்றும் ஏழைச் சனங்களை ஏய்க்கிறவனென்றுஞ் சொல்லிக்கொண்டு வந்ததைச் சட்டைபண்ணாமல் முகத்தாட்சணையின்றி அவர்கள் கோபத்துக்குத் துணிந்தெதிர்க்கவேண்டியதாயிருந்தது. நீக்கோதேமென்பவர் இந்த விக்கினங்களை எல்லாம் ஜெயிக்கத் திராணியுள்ளவராயிருந்தாலுஞ் சற்று மனக்கோழைத்தனத்துக்கு இடங்கொடுத்தார். அது எப்படியெனில், தன்னை ஒருவரும் காணாதிருக்கும்படி இராக்காலத்தில் இயேசுநாதரிடத்தில் வந்தாரென்று அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறார் (அரு. 3).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீக்கோதேமென்பவரிடத்தில் நாம் கண்டு குறைவாயெண்ணுந் தைரியமுங் கோழைத்தனமுங் கலந்த மனது நம்மிடத்திலும் விளங்கவில்லையோ? சர்வேசுரனைப்பற்றி எல்லாத்தையும் நாம் துறந்துவிடவுஞ் சுபாவத்துக்கு வருத்தமான சீவியத்தை நாம் அநுசரிக்கவுந் துணிந்து அதில் நிலைத்திருக்கத் தைரியமுள்ளவர்களாயிருக்கிறோம். ஆகிலும் நமது ஒழுங்குகளுக்கும் நாம் செய்த பிரதிக்கினைகளுக்கும் நமது கடமைகளுக்கும் விரோதமாய் எத்தனையோ குற்றங்களை நாள்தோறும் கட்டிக்கொள்ளுகிறதற்குக் கோழைத்தனமும் முகப்பிரீதியும் பத்திக்குறைவுங் காரணமாயிருக்கின்றன? இனிமேல் இப்படி நடக்கவேண்டாம்; தேவவரப்பிரசாத உதவியைக்கொண்டு நமது அந்தஸ்துக்குத் தக்கபடி எப்போதுஞ் சரியாய் நடப்பதில் அதிக உறுதியுள்ளவர்களாயிருக்கவேணும்.

மனப்பற்றுதல்.—நீ அசட்டைத்தனத்தினாலும் புத்திக்குறைவினாலும் ஒழுங்கில் தவறி நடந்ததெல்லாம் ஆண்டவர் சமுகத்திலே விவரமாய் வெளிப்படுத்தித் தாழ்ச்சியோடு பொறுத்தல் கேட்பாயாக.

பிரதிக்கினை.—என்னிடத்தில் உண்டான சில குறைகளுக்கு விசேஷ காரணமேதென்று அறியப் பிரயாசப்பட்டு

இனிமேல் நான் இந்தக் குற்றமில்லாதவனாயிருக்க முயற்சி செய்வேனாக.

2-ம் பிரிவு

நீக்கோதேமிடத்தில் உண்டான ஞான ஒளியும் அந்தகாரமும்

தியானம்.—நீக்கோதேமென்பவர் இயேசுநாதரிடத்தில் வந்து: குருவே, நீர் சர்வேசுரனால் அனுப்பப்பட்ட போதகரென்று அறிந்திருக்கிறோம்; ஏனெனில் ஒருவனும் தன்னோடு சர்வேசுரன் இருந்தாலொழிய நீர் செய்கிற இந்த அற்புதங்களைச் செய்யமாட்டானென்றார் (அரு. 3). இந்த விசுவாச உச்சாரணமானது பெரிய சங்கத்தைச் சேர்ந்த மற்றவர்களிடத்திலில்லாத மேலான ஞான ஒளியை நீக்கோதேமிடத்தில் காண்பிக்கிறது; ஆகிலும் இவரிடத்தில் விளங்கின ஞான ஒளி அடர்ந்த மேகத்தால் மறைக்கப்பட்டதாயிருக்கிறது. இயேசுநாதர் தீர்க்கதரிசிகளால் அறிவிக்கப்பட்ட மேசியாவென்று அவர் அறிகிறதில்லை; இரட்சகருடைய போதகத்தைக் கண்டுபிடிக்கிறதில்லை அல்லது தப்பிதமாய்க் கண்டுபிடிக்கிறார். ஆதலால் இயேசுநாதர் இவரை நோக்கி: இஸ்ராயேலில் போதகனாயிருக்கிற நீ இவைகளை அறியாயோவென்றார் (அரு. 3).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கிறீஸ்துவனுக்கடுத்த சாங்கோபாங்க மேன்மையையும் அநுசரணையையும் அறியவேண்டிய ஞான ஒளி நமக்குக் குறைவாயில்லை; இஸ்ராயேலில் போதகராய் இருப்பதற்கு அதாவது மற்றவர்களுக்குப் படிப்பிப்பதற்கு நமது ஞான ஒளி சிலவிசை போதுமானதாயிருக்கலாம். ஆனால் அந்த ஞான ஒளியின்பிரகாரம் சில காரியங்களில் நமது நடத்தையைச் சரிப்படுத்த வேண்டியபோது, திடீரென்றாற்போல் நமது புத்தியில் இருள் உண்டாகிறதாகத் தோன்றுகிறது. அப்படியே மணியடித்தவுடனே எழுந்திருக்கவும், சிரேஷ்டர் நம்மைக் கண்டிக்கும்போது, போக்குச் சொல்லாமலுந், தடுத்துப் பேசாமலுங் கேட்கவும், ஒறுத்தல் பிறசிநேகத்துக்கடுத்த கிரிகைகளையும் இன்னும் மற்றவைகளையுஞ் செய்யவும் நம்மைத் தூண்டிய முகாந்திரங்கள் இப்

போது முன்போல அவ்வளவு சரியாகத் தோன்றாததினால் நாம் செய்த பிரதிக்கினைகளைக் கைவிட்டுவிடுகிறோம்! இப்படி ஒளியும் இருளும் உதாரத்தனமும் பலவீனமும் உன்னிடத்தில் கலந்திருக்கிறதை நீ காணவில்லையோ? இதெல்லாம் பார்த்துச் சர்வேசுரன் சமுகத்தில் உன்னைத் தாழ்த்திக்கொண்டு, உன்னை நம்பாதிருப்பதற்கு எவ்வளவோ நியாயம் உண்டு!

மனப்பற்றுதல்.—இதைக்குறித்துச் சர்வேசுரனோடே பேசிக்கொண்டிருப்பாயாக.

பிரதிக்கினை.—ஞான இருளடரும்போதாவது ஆறுதலில்லாமலிருக்கும்போதாவது, முன் செய்த பிரதிக்கினைகளில் ஒன்றையும் மாற்றக்கூடாது.

3-ம் பிரிவு

நீக்கோதேமுடைய நல்ல மனதும் மனத்தளர்ச்சியும்

தியானம்.—நீக்கோதேமென்பவர் இயேசுநாதரோடு சம்பாஷித்தபின், முழுதும் வேறே மனிதனாய்ப் போனார். அவர் புத்தி விசுவாசத்தின் தெளிவினால் பிரகாசிக்கப்பட்டு, உலக இரட்சகர்பேரில் அவருடைய இருதயம் சிநேகத்தினால் பற்றியெரிந்தது. இதினால் அவர் இயேசுநாதருக்குப் பிரமாணிக்கமும் பத்தி சுறுசுறுப்புமுள்ள சீஷனானார். ஆகிலும் பிரசித்தமாய் இதைக் காண்பிக்க வருந்தினவருமல்ல; இயேசுநாதரைப் பின்சென்று நடந்த சீஷர்களோடு முதலாய்க் கலந்துகொண்டவருமல்ல. இரண்டு வருஷத்துக்குப்பின், இரட்சகர் மரித்தபோதுமாத்திரம், நீக்கோதேமென்பவர் பிலாத்து துரையிடத்தில் போய்த் தமது திவ்விய குருவின் சரீரத்தைத் துணிகரத்தோடு கேட்டு, ஆரபாரமாய் அத்திருச்சரீரத்தைக் கல்லறையில் அடக்கஞ் செய்ததினாலே மகா வீரத்துவமுள்ள பத்தியையும் பட்சத்தையும் காண்பித்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஐயோ! ஒருவித நல்ல மனசு உன்னிடத்தில் இருந்தாலும், நீயும்

சிலவிசை தேவ ஊழியத்தில் சுறுசுறுப்பைக் காண்பிக்க மிகவுந் தாமதம் பண்ணினாய்! சிலவிசை இதுவரையிலுஞ் சர்வேசுரனைப்பற்றி மகத்தான வீரியக் கிரிகை ஒன்றும் செய்யவில்லையாக்கும்; ஆகிலும் மனந் தளரவேண்டாம். நீக்கோதேமென்பவர் முந்திக் காண்பித்த தாமதத்துக்குப் பரிகாரமாக, ஆண்டவரை அடக்கம்பண்ணினதில் வெகு உதாரத்தனத்தைக் காண்பித்ததினாலே, இவர் அர்ச்சிய சிஷ்டவராகும் பாக்கியம் பெற்றார். (வேதசாட்சிகளின் இடாப்பு ஆகஸ்டு, 3-ம் தேதி). நீயும் இப்படி நடந்தால் சர்வேசுரன் உன்பேரிலும் இரக்கமாயிருப்பார்.

சம்பாஷணை.—பேறுபெற்ற நீக்கோதேமென்பவரோடு சம்பாஷணை செய்வாயாக.

பதினான்காம் தியானம்

ஸ்நாபக அருளப்பருடைய சீஷர்களின் காய்மகாரம்

ஆயத்தச் சிந்தனை.—ஸ்நாபக அருளப்புருடைய மகிமையின்பேரில் தப்பான பற்றுதல் வைத்திருந்த சீஷர்களுக்கு அவர் புத்தி சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருப்பிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—தன்னை மறந்து தேவ மகிமையின்பேரில் மிகுந்த பற்றுதல் வைக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

ஸ்நாபக அருளப்பருடைய சீஷர்களின் காய்மகாரம்

தியானம்.—இயேசுநாதர் எருசலேம் பட்டணத்திலே அநேகம்பேர்களை மனந்திருப்பி வெகு புதுமைகளைச் செய்த பின்பு, தமது சீஷர்களோடே கூட யூதேயா தேசத்துக்கு வந்து அங்கே சில இடங்களில் சுற்றித்திரிந்து, தமது சீஷர்கள் ஞானஸ்நானம் கொடுக்கும்படி செய்தார் (அரு. 3). தேவ சுறுசுறுப்புக்கடுத்த இந்தக் கிரிகையும் இதினால்

அடைந்த அநுகூலமும் ஸ்நாபக அருளப்பருடைய சீஷர்கள் இருதயத்தில் காய்மகாரத்தை மூட்டிவிட்டது. ஆகையால் அவர்கள் ஆத்திரப்பட்டு அருளப்பரிடத்தில் வந்து: குருவே, யோர்தான் நதிக்கு அக்கரையில் நம்மோடிருந்தவரும் உம்மாற் சாட்சி சொல்லப்பட்டவரும் இதோ ஞானஸ்நானங் கொடுக்கிறார். எல்லோரும் அவரிடத்தில் போகிறார்களென்றார்கள் (அரு. 3, 26).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சுவிசேஷத்திற் சொல்லப்பட்ட இக்காரியத்தைப் பார்க்கையில், நல்லவர்களிடத்திலே முதலாய்க் காய்மகாரமிருக்கலாமென்று அறிந்திருக்கிறோம்; இவ்வித ஆசாபாசஞ் சுறுசுறுப்புள்ள பற்றுதலின் வேஷத்தில் சிலவேளை மறைந்திருக்கும். அருளப்பருடைய சீஷர்கள் தங்கள் குருவின் மகிமையின்பேரிலே வைத்திருந்த பற்றுதலானது, இயேசுநாதரும் அவருடைய சீஷர்களும் அடைந்த அநுகூலத்தைக் கண்டு வருத்தப்படச் செய்தது. அவர்கள் சந்தோஷமடைகிறதற்குப் பதிலாய்க் கஸ்திப்பட்டார்கள். இப்பேர்க்கொத்த காரியம் உன்னிடத்தில் எப்போதாகிலும் சம்பவிப்பதில்லையோ? உன் சபையாராயிராமல் வேறொரு சபையிலுள்ளவர்கள் யாதொரு நன்மை செய்யும்போது அல்லது உன் சபையில்தானே உனக்குப் பின்வந்தவன் அடைந்த அநுகூலத்தினால் உன் பேர் மங்கிப்போகிறதாயிருக்கும்போது, சர்வேசுரனிடமாய்ச் சந்தோஷப்படுகிறாயோ? இதினிமித்தம் மனதுக்குள்ளே காய்மகாரப்படுகிறதில்லையோ? உன்னுடைய பேச்சு வார்த்தையில் இந்தக் காய்மகாரம் விளங்குகிறதில்லையா?

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் பாதத்திலே, இப்பேர்க்கொத்த காய்மகாரத்தை அருவருத்துத் தள்ளி அதில் நீ ஒருக்காலும் அகப்படாதிருக்க வரப்பிரசாதங் கேள்.

பிரதிக்கினை.—காய்மகாரத்துக்கடுத்த சோதனை வரும்போது, எவ்விதமும் கிறீஸ்துநாதர் பிரசங்கிக்கப்பட்டால் சரி, அதினால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேனென்று அர்ச். சின்னப்பர் சொன்ன வசனத்தைச் சொல்லவேணும் (பிலி. 1, 18).

2-ம் பிரிவு

ஸ்நாபக அருளப்பர் இதில் தமது சொந்த நன்மையைத் தேடாதிருக்கிறார்

தியானம்.—அருளப்பருடைய சீஷர்கள் தங்களைப்போல் தங்கள் குருவும் நினைப்பாரென்று காத்திருந்ததில் மிகவும் மோசம்போனார்கள். காய்மகாரம் அர்ச்சியசிஷ்டவர்களிடத்தில் இராது; அவர்கள் தங்கள் சொந்த நன்மையைத் தேடாமல் தங்களைத்தானே மறந்துவிட்டுத் தேவ மகிமையை மாத்திரந் தேடுவார்கள். இயேசுநாதரின் முன்னோடியானவர் இதற்கு அத்தாட்சியாயிருக்கிறார். அவர், தமது சீஷர்கள் சொன்ன முறைப்பாட்டுக்கு மாறுத்தரமாகத் தம்மைத்தானே தாழ்த்தி இயேசுநாதரை மிகவும் உயர்த்திச் சொன்னதாவது: அவர் உந்நதத்தில் நின்று வந்தவர், யாவருக்கும் மேலானவராயிருக்கிறார். நானோவெனில் அவர் சமூகத்துக்குமுன்னே அனுப்பப்பட்டவனாயிருக்கிறேன்; அவர் குரலொலியைக் கேட்டதினால் என் சந்தோஷங் குறையற்றதாயிருக்கிறதென்றார் (அரு. 3).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது:—இப்படித் தன்னை மறந்து உத்தமவிதமாய் எல்லாத்தையும் வெறுத்துவிடுகிறது மனிதருக்குள்ளே மிகவும் அபூர்வம். சந்நியாசியாயிராத ஒரு கிறீஸ்துவனிடத்தில் இப்பேர்க்கொத்த சுகிர்த குணத்தைக் கண்டால், எல்லாரும் ஆச்சரியப்படுவார்கள்; ஆனால் ஒரு சந்நியாசியிடத்தில் இப்பேர்க்கொத்த புண்ணியம் இருக்கவேணுமென்று யாவரும் விரும்புவது நியாயந்தானே. இது நம்மிடத்தில் விளங்குகிறதோ? மேலும் எவ்வளவு நம்மிடத்தில் விளங்குகிறது? இந்தப் புண்ணியம் நம்மிடத்திலே வேரூன்றியிருந்தால், தேவ வரங்களினால் உயர்ந்தவர்களையும் அல்லது மனுஷர் எண்ணத்தில் நமக்கு மேலாக உயர்த்தப்பட்டவர்களையும் நாம் கபடமில்லாமல் புகழ்வதுமன்றி அவர்களை மற்றவர்கள் புகழும்போது, நாமும் அதை மனம்பொருந்திக் கேட்போம். இப்படியிராமல் இதற்கு விரோதமான நடக்கை

நம்மிடத்தில் காணப்பட்டால், நாம் உலகத்துக்கும் நமக்கும் இன்னஞ் செத்தவர்களாகவில்லையென்று தீர்மானிக்கவேணும்.

மனப்பற்றுதல்.—உலகத்துக்கு முழுதும் நாம் செத்தவர்களாயிருக்க ஆசைப்படுகிறதுமல்லாமல், காய்மகாரத்துக்குந் தேவமகிமை மறதிக்கும் வித்தாகிற சுயபட்சத்துக்கு நாம் விசேஷமாய்ச் செத்தவர்களாயிருக்க மிகவும் ஆசைப்படவேணும்.

பிரதிக்கினை.—சர்வேசுரன் ஒருவருக்கே தோத்திரமும் மகிமையும் உண்டாகக்கடவதென்று அப்போஸ்தலர்களோடே அடிக்கடி சொல்லுவாயாக (1. தீமோ. 1).

3-ம் பிரிவு

ஸ்நாபக அருளப்பருடைய சுயப் பரித்தியாகம்

தியானம்.—"அவர் வளரவும் நான் குறையவும் வேணும்," என்றார். (அருள. 3). ஸ்நாபக அருளப்பர் தமது சுய நன்மையைத் தேடாதிருக்கிறதுமன்றித் தம்மை முழுதும் பரித்தியாகம் பண்ணுகிறார். தாம் செய்யும் நன்மையில் தம்மைத்தேடாததுமன்றி, இயேசுநாதர் செய்யும் அதிகமான நன்மையைக்கண்டு மிகவுஞ் சந்தோஷப்படுகிறார்; மேலும் இயேசுநாதர் அதிகமதிகமாய் வளரவுந் தம்மை யாவரும் மறந்து சட்டைபண்ணாதிருக்கவும் வெகுவாய் ஆசிக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வீண் பெருமை காய்மகாரமென்னுஞ் சோதனைகளை நாம் முழுதுஞ் செயிக்கவேணுமானால், ஸ்நாபக அருளப்பர் பாவனையாய் நாம் ஆங்காரத்தோடு வெகுவாய் யுத்தஞ் செய்வதினாலே இடைவிடாமல் நம்மை முழுதும் பரித்தியாகம் பண்ணவுஞ் சகலருஞ் சர்வேசுரனைமாத்திரந் தோத்திரித்துச் சிநேகிக்கும்படி நம்மை யாவரும் மறந்து முழுதுஞ் சட்டைபண்ணாதிருக்க விரும்பவும் வேண்டியது. இந்தப் பரித்தியாகத்தில் நாம் எவ்வளவு வர்த்தித்திருக்கிறோம்?

இதிலே நாம் மிகுந்த விர்த்தி அடையமாட்டோமென்று அவநம்பிக்கைப் படவேண்டாம்; தேவ வரப்பிரசாதத்தைக் கொண்டு எல்லாம் நம்மாலாகும்.

சம்பாஷணை.—அர்ச். ஸ்நாபக அருளப்பரோடு சம்பாஷணை செய். காய்மகாரமென்கிற ஆசாபாசம் எவ்வளவு நுண்மையும் நிந்தைக்குரியதும் குற்றமுள்ளதும் தன்னில் பொல்லாப்புள்ளதுமென்று நாம் தெளிவாய்க் காணவுஞ் சுயபட்சமான நினைவுகளுக்கெல்லாம் நாம் செத்தவர்களாய்ச் சர்வேசுரனுடைய மிகுந்த மகிமையை மாத்திரந் தேடிக் காய்மகாரத்துக்கு முழுதும் பயந்து அதோடு யுத்தம்பண்ணிச் செயிக்கவும் நமக்கு வரப்பிரசாதம் அடைய அவரை மன்றாடுவோமாக.

பதினைந்தாம் தியானம்

ஆங்காரமும் அதினால்வரும் பொல்லாத வினைகளும்

ஆயத்தச் சிந்தனை.—லூசிப்பேர் பரமண்டலத்திலிருந்து நரகத்தில் விழுகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—ஆங்காரப்பற்றுதலின்பேரில் இரட்சணியத்துக்குரிய பயம் உன்னிடத்தில் உண்டாகக் கேட்பாயாக.

முதல் பிரிவு

ஆங்காரத்தின் சுபாவம்

தியானம்.—நம்மை நிர்ப்பாக்கியவான்களாக்குகிற காய்மகாரத்தினுடையவும் அக்கிரமமுள்ள மற்ற அநேக ஆசாபாசங்களினுடையவும் பொல்லாப்பு நமக்கு வராதிருக்கவேணுமானால், அவைகளின் ஆதிகாரணம் யாதென்று கவனிக்கவேண்டும். அந்தக் காரணஞ் சென்மப்பாவத்தினால் தொடர்ந்துவந்ததும் அதற்கு ஆக்கினையு

மான ஆங்காரந்தான். இதைக்குறித்து இஸ்பிரீத்து சாந்துவானவர் சொல்லியிருக்கிறதைக் கேள்: என் மகனே, உன்னிடத்தில் ஒருபோதும் ஆங்காரம் மேற்கொள்ளவிடாதே; ஏனெனில், சகல கேட்டுக்கும் ஆங்காரமே அஸ்திவாரம் (தோபியாஸ் 4). சகல பாவங்களுக்கும் ஆங்காரமே ஊற்றாயிருக்கிறது (எக்கிளேசியாஸ் 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—இந்தச் சத்தியத்தை நன்றாய்க் கண்டுபிடிக்கவேணுமானால், இந்தத் தலையான பாவத்தின் சுபாவத்தை அறிகிறதேபோதும். ஆங்காரமாகிறதென்ன? நாம் சுயமகிமையின்பேரில் வைக்குங் கிரமமற்ற பட்சந்தான். இதிலிருந்துதான் புரட்டுருட்டும் பேராசையுங் கள்ள ஞானமும் முகத்தாட்சணியமும் உண்டாகின்றது. இதிலிருந்துதான் பொய்யும், முடிவில்லாத சாக்குப்போக்கும் வீம்புந் தன் சொந்த அபிப்பிராயத்தில் பிடிவாதமும் தர்க்கமும் மனப்பிரிவும் உண்டாகின்றன. இதினால்தான், சுயபட்சமும் பிறர்சிநேகத்துக்கு விரோதமான எண்ணிறந்த பாவங்களை வருவிக்கிற காய்மகாரமும் உண்டாகின்றது:—பிறருக்கு வரும் நன்மையைக் கண்டு கஸ்திப்படுவார்கள்; பிறர் செய்யுங் குற்றத்தையும் அதினால் அவர்களுக்கு வரும் பொல்லாப்பையுங் கண்டு சந்தோஷப்படுவார்கள்; சந்தேகத்தினாலும் உருசுவற்ற தீர்மானத்தினாலும் அவர்களைத் தாழ்மையாய் எண்ணுவார்கள். அநேகம்விசை கோள் குண்டணியினாலுஞ் சூக்ஷ பேச்சினாலும் மற்றவர்களும் அவர்களை இழிவாய் நினைக்கும்படி செய்வார்கள். ஆங்காரத்தினால் விளையும் வினைகளில் சிலவற்றை உன்னிடத்தில் எப்போதாகிலுங் கண்டதில்லையோ? இவைகளில் எது உன்னிடம் முக்கியமாயிருக்கிறது?

மனப்பற்றுதல்.—தாழ்ச்சியோடு இவைகளை ஒத்துக்கொண்டு மனஸ்தாபப்பட்டு ஆங்காரத்தை அருவருத்துத் தள்ளுவாயாக.

பிரதிக்கினை.—சர்வேசுரன் சமுகத்திலே உன்னைத் தாழ்த்திக்கொண்டு, ஆங்காரத்தினால் வரும் நினைவை ஆரம்பத்திலேயே எதிர்த்துத் தள்ளிப்போடுவாயாக.

2-ம் பிரிவு

ஆங்காரத்தின் அக்கிரமம்

தியானம்.—நமது சொந்த மகிமையின் ஆசையை அக்கிரமமென்று சொல்லுவதேதென்றால், "ஒவ்வொருவனுக்கும் அவனவனுக்கு உரியது சேரவேண்டும்" என்கிற நீதி மொழிக்கு அது நேர் விரோதமாயிருக்கிறதினால்தான். தம்மால் படைக்கப்பட்ட வஸ்துகளில் உள்ள சகல நன்மைக்குஞ் சௌந்திரியத்துக்குஞ் சர்வேசுரனே காரணகர்த்தர்; ஆகையால் அர்ச். சின்னப்பர் சொல்வதுபோல் "அவரொருவருக்கே சகல நன்மையுந் தோத்திரமுஞ் செல்லும்" (1 திமோ. 4). ஆங்காரியோவென்றால், தன்னிடத்திலிருக்குஞ் சுபாவத்துக்கடுத்ததும் அதற்கு மேற்பட்டதுமான வரங்களையெல்லாம் பார்த்துத் தன்னைத் தானே மெச்சிக்கொள்ளுகிறான். மனுஷன் தன்னை மதிக்கிறதற்காக அவைகளை உதவிக்கொள்ளுகிறான். அவன் ஒரு விதத்தில் சர்வேசுரனது ஸ்தானத்தை அபகரித்துக்கொள்கிறான். சர்வேசுரனுடைய நன்மையை அவன் களவுசெய்து அதைத் தன்னுடையதாக்கிக்கொள்கிறான்! ஆங்காரியானவனெவனுஞ் சர்வேசுரனுக்கு அருவருப்புள்ளவனென்று இஸ்பிரீத்து சாந்துவானவர் சொன்னதுபோல, இப்பேர்க்கொத்தவன் சர்வேசுரனுக்கு அரோசிகமாயிருக்கிறது ஆச்சரியமோ (சாலோமோன் வா. 16 அதி.)? இதன்பின் சர்வேசுரன் இவனை எதிர்த்துத் தமது வரங்களை இவனுக்குக் கொடாமல் அவைகளைத் தாழ்ச்சியுள்ளவர்களுக்குக் கொடுக்கிறது நியாயமல்லவோ (யாக. 4)?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரனுடைய பார்வைக்கு ஆங்காரத்தின் அக்கிரமம் எப்பேர்க்கொத்ததென்று நன்றாய்க் கண்டுபிடிக்கவும் அதின்பேரில் மகா அருவருப்பு நமக்கு உண்டாகவும் வேதாகமத்தில் எழுதியிருக்கிறபடி ஆங்காரத்தினால் கெட்டுப்போன சம்மனசுகளுக்கும் ஆதித்தாய் தகப்பனுக்கும், பாரவோன், நபுக்கோதோனோசோர், அந்தியோக்கியுஸ் என்பவர்களுக்கும் இவர்களைப்போலொத்த மற்ற அநேக

ருக்கும் வந்த பயங்கரமான ஆக்கினைகளை நினைத்துக்கொள்; அர்ச்சியசிஷ்டவர்களாயிருந்த தாவீது எசக்கியாஸ் என்ற அரசர்களில் முந்தினவர் தமது ஜனங்களின் தொகையை எடுத்தெழுதினதினாலும் பிந்தினவர் தமது அரமனையிலுண்டான ஆஸ்தி திரவியங்களையெல்லாம் காண்பித்ததினாலும் இவர்கள் மனதில் வந்த ஆங்காரத்தினிமித்தஞ் சர்வேசுரன் இவர்களை எவ்வளவோ பயங்கரமான விதமாய்த் தண்டித்தாரென்பதை நினைத்துக்கொள்; கடைசியாய் ஆங்காரியைச் சர்வேசுரன் அவனுடைய கெடுதலான புத்திக்கும் அக்கிரமமான ஆசாபாசங்களுக்கும் அசுத்த பாவங்களுக்கும் கைவிட்டுவிடுவாரென்று கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறதை நினைத்துக்கொள் (உரோ. 1). எத்தனையோ சந்நியாசிகள் மேலான அந்தஸ்தைவிட்டுத் துர்மார்க்கராய்ப் போவதற்கு ஆங்காரம் காரணமாயிருந்திருக்கிறது.

மனப்பற்றுதல்.—ஆங்காரத்துக்கு நீ ஒருக்காலும் அடிமையும் பலியுமாகாதிருக்கும்படி அதைச் சரியாய் நிறுத்துப்பார்த்து நாளுக்குநாள் அதை அதிகமதிகமாய் அரோசிக்க ஆண்டவரைப்பார்த்து மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—பரலோகத்தில் நின்று நரகத்தில் தள்ளப்பட்ட கெட்ட சம்மனசுக்களை நினைத்துப் பார்த்து ஆங்காரத்தினால் வரும் எண்ணத்தைத் தள்ளிப்போடு.

3-ம் பிரிவு

ஆங்காரியினுடைய நிர்ப்பாக்கியம்

தியானம்.—ஆங்காரியான சந்நியாசியின் அந்தஸ்து எவ்வளவோ பிரலாபத்துக்குரியது, ஆங்காரிகளான பரிசேயரைக் குறித்து இயேசுநாதர் சொல்லியிருக்கிறதுபோல, அவன் படும் பிரயாசங்களுக்கும், விழிப்பு வருத்தங்களுக்கும் அனந்தம்விசை மோக்ஷத்தில் சம்பாவனையில்லாமல் போகுமென்கிறதினாலே அவன் நிர்ப்பாக்கியவானுமே (மத். 6); மனுஷர்கள்வழியாய் அவன் தேடின மகிமைக்குப்பதிலாய் அவர்களால் நிந்தைப்படுவதினாலே அவன்

நிர்ப்பாக்கியவானாமே; ஆங்காரி சர்வேசுரனுக்கு அருவருப்புள்ளவனாயிருக்கிறதுபோல, மனிதருக்கும் அருவருப்புள்ளவனாயிருப்பானென்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது (எக்கிளேசியா. 10.) மனுஷர்களுக்குள்ளே தான் பெரியவனாய்ப் போகவேணுமென்கிற ஆசை அவனை எப்போதும் உபாதிக்கிறதினாலேயும் அது நிறைவேறாமல் போகுமோவென்று அவன் பயப்படுவதினாலேயும் அடாத சந்தேகங்களுக்கும் வீண் கவலைகளுக்கும் எப்போதும் இடங்கொடுக்கிறதினாலேயும் அவன் நிர்ப்பாக்கியவானாமே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது யோசித்துப்பார்த்த விசனத்திற்குரிய விஷயங்களெல்லாம் மெய்யென்று நீ அநுபவத்தினாலே கண்டிருந்தால், இதில் உனக்கு ஞானப்பிரயோசனம் உண்டாக வழிதேடு. உன் ஆத்தும இரட்சணியத்திற்கும் உத்தமதனத்தில் நீ அபிவிர்த்தியடைகிறதற்கும் உனக்குப் பலத்த சத்துராதியான ஆங்காரத்தோடு யுத்தம் பண்ண எந்நேரமும் விழிப்பாய்ப் பிரயாசப்படு.

சம்பாஷணை.—உன் காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்து ஆங்காரத்தின் கெட்ட சோதனைகளை நீ ஜெயித்து வெற்றியடைய உனக்கு அவர் எப்போதும் உதவியாயிருக்கவேணுமென்று மன்றாடுவாயாக.

பதினாறும் தியானம்

தாழ்ச்சி

அதின் சுபாவமும் அவசியமும்

ஆயத்தச் சிந்தனை.—முந்தினோர் பிந்தினோராகவும் பிந்தினோர் முந்தினோராகவும் இருப்பார்களென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக் கொள்வாயாக (மாற். 10.)

தியானச் சேபம்.—தாழ்ச்சியென்னும் புண்ணியத்தை அறிவதிலும் அதைச் சிநேகிப்பதிலும் அநுசரிப்பதிலும் எந்நேரமும் அபிவிர்த்தியடைய வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

தாழ்ச்சியின் சுபாவம்

தியானம்.—ஆங்காரமானது சகல பாவங்களுக்கும் வேராயிருக்கிறதுபோல, தாழ்ச்சியானது சகல புண்ணியங்களுக்கும் வேரும் அஸ்திவாரமுமாயிருக்கின்றது. அர்ச். பெர்நார்துஸ் இதைத் தெளிவித்துச் சொல்லியிருக்கிறதாவது: மனிதன் தன்னைத்தானே நிந்திக்கிறதுமல்லாமல் பிறருந் தன்னை நிந்திக்க ஆசைப்படும்படி செய்கிற புண்ணியம் அல்லது பிரயாசத்தினால் தேடிக்கொண்ட பழக்கம் தாழ்ச்சியென்று சொல்லப்படும். இதையே வேறுவிதமாய்ச் சொல்வோம்; மனிதன் பாவத்தையும் பாவத்துக்கான நாட்டத்தையுமாத்திரம் தனது சொந்தமாகக் கண்டுணர்ந்து, தன்னையே நிந்தித்து, சகல நன்மைக்கும் ஊற்றாகிய சர்வேசுரனைமாத்திரம் நோக்கி அவரையே மதித்து, அவரைத் தோத்தரித்துப் புகழும்படியாகத் தன்னைச் சகலரும் மறந்து அலட்சியம்பண்ண ஆசிப்பதாகிய, புத்தி மனதின் சாதாரண சார்பே தாழ்ச்சி என்னப்படும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னிடத்தில் தாழ்ச்சி உண்டுமா? இதைச் சரிவரத் தீர்மானிப்பதற்கு, இயேசுநாதர்தாமே தந்திருக்கிற ஒழுங்கை அநுசரி: "கனியினால் மரத்தை அறியலாம்" (மத். 12.) உன் நினைவு, வாக்கு, கிரியைகளைச் சோதித்துப்பார்; முதலாவது உன் நினைவுகள் விஷயமாய்: சர்வேசுரன் உன்பேரில் கொண்டிருக்கிற தீர்மானத்தைப் பார்க்க மனுஷர் உன்னை மதிக்கிறது பெரிதென்றெண்ணுகிறாயோ? சர்வேசுரனுக்குப் பிரியப்படுகிறதைப்பார்க்க மனுஷருக்குப் பிரியப்பட அதிக கவலைப்படுகிறாயோ? நீ உலகத்திலே பெருமைவாய்ந்திருக்கவேணுமென்கிற கருத்தோடு, மற்றவர்களைப்பார்க்க

மேலான அந்தஸ்திலிருக்கவும் மேலான அதிகாரஞ் செலுத்தவும் ஆசைப்படுகிறாயா? இப்பேர்ப்பட்ட நினைவும் ஆசையும் உன்னிடத்திலிருந்தால், தாழ்ச்சியென்கிற புண்ணியம் உன்னிடத்தில் இல்லை. 2-வது, உன் வார்த்தைகள் விஷயமாய்: சிலவேளை உன்பேரில் நீயே குறைவாய்ப் பேசுகிறதினாலுஞ் சந்நியாசிகள் நடுவே உன் தப்பிதங்களைக்குறித்து அடிக்கடி நீ குற்றஞ் சாட்டிக்கொள்ளுகிறதினாலும் சில அலுவல்பார்க்க உனக்குத் திராணியில்லையென்று சொல்வதினாலும் நீ தாழ்ச்சியுள்ளவனென்று நினைக்கிறாய்; ஆனால் அப்போதுதானே பிறர் உன்பேரில் பொல்லாப்புப் பேசி உன்னைக் கண்டித்து அவமானப்படுத்துகிறார்களென்பதினால் நீ முறுமுறுத்து முறைப்பாடு சொல்லுவாயாகில், உன்னிடத்தில் தாழ்ச்சியென்கிற பேர் மாத்திரம் விளங்குகிறதல்லாமல் மெய்யான தாழ்ச்சியில்லையென்பது நிச்சயந்தான். இன்னமும் உன் குற்றத்தை மறைக்கிறதற்காக நீ பதிற்குற்றஞ்சாட்டிப் போக்கும் பொய்யும் சொல்லுவாயாகில், உன்னிடத்தில் சொஞ்சமாகிலுந் தாழ்ச்சியில்லையென்கிறது திருஷ்டாந்தமாகும். 3-வது, உன் கிரிகைகள் விஷயமாய்: அவைகள் மனுஷர் முன்பாக எவ்வளவு நல்லவைகளாயினும், சர்வேசுரன் சமுகத்திலே அவைகளைக் கொண்டு உன் சொந்த மகிமையை மாத்திரம் நீ பாராட்டுவாயாகில், உன்னிடத்தில் தாழ்ச்சியில்லையென்கிறது நிச்சயம். இப்படியிருக்க, நீ நல்ல சந்நியாசியாகிச் சர்வேசுரனுக்குப் பிரியப்படவேணுமென்கிற நம்பிக்கைக்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

மனப்பற்றுதல்.—தாழ்ச்சியுள்ளவர்களாகவும் தாழ்ச்சியிலே நிலைத்திருக்கவுஞ் சர்வேசுரன் நமது புத்தியைத் தெளிவித்துத் தமது தேவ வரப்பிரசாதத்தினாலே நமக்கு மிகவும் ஒத்தாசையாயிருக்க மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—நான் யாதொரு குற்றஞ் செய்தபின், மனத்திடனற்றுப்போகாமல், சர்வேசுரன் சமுகத்திலே என்னைத் தாழ்த்திக்கொள்ள நல்ல சமயங் கிடைத்ததென்று நினைப்பேனாக.

2-ம் பிரிவு

தாழ்ச்சியின் அவசியம்

தியானம்.—விசுவாசத்தைப்போல தாழ்ச்சியும் அவசியம். இதில்லாமல் சர்வேசுரனுக்குப் பிரியப்படக்கூடாது; ஏனென்றால், தாழ்ச்சியில்லாமல்போனால், நமக்கே நாம் ஒரு தெய்வம்போலிருப்போம்; சர்வேசுரன் சமுகத்தில் மிகவும் குற்றமுள்ளவர்களும் அருவருப்புள்ளவர்களுமாவோம். தாழ்ச்சி சகல புண்ணியங்களுக்கும் வேரானதினாலே, அதில்லாவிட்டால், ஸ்திரமான புண்ணியமிராது; தாழ்ச்சியில்லாமல் தேவ வரப்பிரசாதமுமில்லை. ஏனென்றால், அர்ச். யாகப்பர் சொல்லியிருக்கிறதுபோல, தாழ்ச்சியுள்ளவர்களுக்கு மாத்திரஞ் சர்வேசுரன் தேவ வரப்பிரசாதத்தைக் கொடுப்பார் (யாக. 4.) தேவ வரப்பிரசாதமில்லாவிடில் பேறுபலனுள்ள கிரிகைகளுமில்லை. ஆனால், புண்ணியமும் பேறுபலனுமில்லாவிட்டால், நமக்கு மோக்ஷ வாசலும் அடைபட்டிருக்குமே: ஆகையால், தாழ்ச்சியில்லாமல் இரட்சணியமுமில்லை. இதைப்பற்றி இயேசுநாதர்: "நீங்கள் பாலர்களுக்கொத்தவர்களாகாவிட்டால், மோக்ஷ இராச்சியத்திற் பிரவேசிக்கமாட்டீர்கள்" (மத். 18) என்று திருவுளம்பற்றியிருக்கிறார். அப்போஸ்தலர்கள் தங்களுக்குள்ளே யார் பெரியவனென்று அறிய வாக்குவாதஞ்செய்ததினாலே, திவ்விய இரட்சகர் இந்த வாக்கியத்தைத் திருவுளம்பற்றினார். ஆகையால், சிறுபிள்ளைகளுக்கடுத்த தாழ்ச்சியையுங் கபடில்லாமையையுங் குறித்தல்லவோ, விசேஷமாய் இயேசுநாதர் இப்படிப் பேசியிருக்கிறார். இப்படியிருக்கத் தாழ்ச்சியில்லாமல் உத்தமதனத்தை அடையவும் அதில் சற்றாகிலும் வர்த்திக்கவுங் கூடாதென்று சொல்ல அதிக நியாயமுண்டு; ஆனால் நாம் கொடுத்திருக்கிற வார்த்தைப்பாடுகளினாலே உத்தமதனத்தை நாட உடன்பட்டிருக்கிறோம். இன்னமும் தாழ்ச்சியில்லாமற்போனால், பிறருக்கு நாம் பிரயோஜனமற்றவர்களாயிருப்போம் அல்லது சொற்பப் பிரயோஜனமுள்ளவர்களாவோம்; ஆகிலும் அவர்கள் இரட்சணியம்

அடைய நாம் ஒசிதாசையாயிருக்கவேண்டியதாமே. ஆனால் நமது சொந்த மகிமையை நாம் தேடிக்கொண்டு திரிகிற போது, ஆத்துமாக்களுக்காக நாம் படும் பிரயாசத்தை ஆண்டவர் ஆசீர்வதிப்பதெப்படி? ஆகையால் தாழ்ச்சி யில்லாவிட்டால், நமது சபைக்கடுத்த இரண்டு கதிகளை யும் நாம் அடைகிறதற்கு நம்பிக்கையிராது; அதில் நிலைத் திருப்பதும் நிச்சயமில்லை; நாம் தேடவந்த சமாதானத்தை யும் பாக்கியத்தையும் அதில் காணமாட்டோம். என் நுகத் தடியை உங்கள்மேல் சுமந்துகொண்டு நான் சாந்தகுண மும் மனத்தாழ்ச்சியுமுள்ளவனென்று என்னிடத்தில் கற் றுக்கொள்ளுங்கள். அப்போது உங்களாத்துமங்களுக்கு இளைப்பாற்றியைக் கண்டடைவீர்களென்று இயேசுநாதர் சொன்ன வாக்கியத்தில் இதெல்லாம் விளங்கவில்லையோ? (மத். 11).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தாழ்ச்சியானது முழுதும் அவசரமென்று இப்போது நீ நன்றாய்க் கண்டுபிடிக்கிறாயோ? இதைச் சம்பாதிக்கவும் உன்னிடத்தில் இதைப் பலப்படுத்தவும் நீ தேடும் உபாய மென்ன, பட்ட பிரயாசமென்ன? இவைகளை எவ்வளவு அநுகூலத்தோடு உதவிக்கொண்டாய்? தாழ்ச்சியில் என்ன அபிவிர்த்தி அடைந்திருக்கிறாய்? இப்போது கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சர்வேசுரன் சமுகத்திலே நேர்மை யான மனதோடே மறுமொழி தேடுகிறதினால் உனக்கு மெத்த நன்மை உண்டாகும்.

சம்பாஷணை.—தாழ்ச்சிக்கு, நமது சுபாவத்துக்கு அதிக கடினமாயிருக்கும் மெய்யான தாழ்ச்சிக்கு, அதா வது: தாழ்மையான காரியங்களை ஆசையோடு தேடி அநு சரிக்கும் தாழ்ச்சிக்கு உத்தம ஆசானுமாய் ஆச்சரியமான மாதிரிகையுமாயிருக்கிற இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக. தாழ்ச்சியில் நாம் அநுகூலப்பட நமக்கு அவர் மிகவும் உதவிசெய்ய மன்றாடுவோமாக; அவர் மனு ஷாவதாரமெடுத்தபோதும் அவர் பிறந்தபோதும் அந்த ரங்கமான சீவியத்திலிருந்தபோதும் பிரசித்தமாய்ச் சுற்றித் திரிந்து புத்தி பிரசங்கம் சொன்னபோதும் மகா கடின

மான பாடுபட்டபோதும் நமக்காக அவர் அடைந்த வாக் குக்கெட்டாத தாழ்மை, நிந்தைகளைப் பார்த்து நமக்கு இந் தப் புண்ணியத்தைக் கொடுக்க அவரை மன்றாடுவோமாக.

பதினேழாம் தியானம்

தாழ்ச்சியென்கிற புண்ணியத்தின் நன்மைகளும் குணங்களும்

ஆயத்தச் சிந்தனை.—தாழ்ச்சியுள்ளவர்களுக்குச் சர்வேசுரன் தமது வரப்பிரசாதத்தைக் கொடுப்பாரென்று அர்ச். இராயப்பர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருசிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—மிகுந்த தாழ்ச்சி அடைய வரப் பிரசாதங்கேள்.

முதல் பிரிவு

தாழ்ச்சியினால் வரும் நன்மைகள்

தியானம்.—அத்தோடு சகல நன்மையும் எனக்கு வந்ததென்று ஞானத்தைப்பற்றி வேதாகமத்தில் சொல்லி யிருக்கிறதைத் தாழ்ச்சியைக் குறித்துஞ் சொல்லலாம். (ஞானாகமம் 7 அதி.). ஆகையால இந்தப் புண்ணியத்தை அடைந்திருக்கிற சந்நியாசி பாக்கியவான்! இப்பேர்க் கொத்தவன் சகலவித புண்ணியங்களிலுந் துரிதமாயும் நிலைமையாயும் வர்த்திப்பான்; மேலும் இவனுடைய பாக் கியம் மாறாததாயிருக்கும்.

அப்படியே தாழ்ச்சியுள்ள சந்நியாசி சர்வேசுர னுடைய அளவில்லாத மகத்துவத்தையுந் தன்னுடைய நீசத்தனத்தையும் எப்பொழுதும் பரிபூரணமாயறிந்து அவ ராலே தனக்குச் சகல நன்மையும் வந்ததென்று கண்டு பிடிக்கிறதுமல்லாமல் எல்லாத்திலும் அவருக்குப் பிரிய மாய் நடக்க விரும்பி: முதலாவது, தான் செய்யுங் கிரிகை

களிலெல்லாம் நல்ல கருத்துடையவனாயிருந்து அவைகளை முழுதும் பேறுள்ளவைகளாக்குவான்; 2-வது, தேவசிநேகத்தையும், இதோடு பொருந்திய உபத்திரிய வேதனைகளின் பேரில் பற்றுதலையுங் கொண்டிருப்பான்; ஏனெனில் சிநேகமானது சுபாவத்துக்கு வருத்தமான காரியங்களைச் செய்வதினால் நிரூபிக்கப்படுமென்று அர்ச். கிரகோரி பாப்பானவர் சொல்லியிருக்கிறார்; 3-வது, தேவ மகிமையின் பேரில் சுறுசுறுப்புள்ளவனாயிருப்பான்; இது தன்னிடத்திலும் மற்றவர்களிடத்திலும் இருக்க அபேட்சித்துச் சகல மனுஷரையும் இயேசுநாதர் பாதத்திலே கூட்டிவர மனதாயிருப்பான்; 4-வது, தன்னை நம்பாத குணமும் இதற்கடுத்த விமரிசையும் அடக்கவொடுக்கமும் வார்த்தையில் மட்டுத்திட்டமும் உள்ளவனாயிருப்பான்; 5-வது, கீழ்ப்படிதலும் சிரவணமும் இதோடு சேர்ந்திருக்கிற தன் சிரேஷ்டர் மட்டில் கபடற்றதனமும் உடையவனாயிருப்பான்; 6-வது, தனக்கு வரும் இக்கட்டுகளிலே பொறுமையும் அமைதலுமுள்ளவனாயிருப்பான்; இந்த இக்கட்டெல்லாம் தேவ நீதிக்குத் தான் செலுத்தவேண்டிய கடமைக்கு மிகவுங் கீழ்த்தரமாய் அவனுக்குத் தோன்றும்; 7-வது, எவ்வித அலுவலுக்குந் தொழிலுக்கும் தான் சமநிலையுள்ளவனாயிருந்து, எல்லாத்துக்கும் தான் அபாத்திரனென்றும் ஆனால் சர்வேசுரன் உதவியைக்கொண்டு தன்னால் எல்லாம் கூடுமென்றும் இருப்பான்; 8-வது, பிறசிநேகமும் சாந்தகுணமும் பிறர்மட்டில் இரக்கமும் தன்மட்டில் கண்டிப்புமுள்ளவனாயிருப்பான்; 9-வது, கடைசியாய் ஆத்தும சமாதானத்தை அநுபவிப்பான்; அவனிடத்தில் மாறாத பாக்கியம் விளங்கும்; ஆங்காரிக்கு விதனம் வருவிக்கிற மறதி, நிந்தை, அவமானம் அவனுக்கு இன்பமாயிருக்கும். பேர்போன ஒரு மகாத்துமா 'சொன்னதுபோல, அப்பேர்க்கொத்தவன் தான் போகும் இடமெல்லாந் தன்னோடு மோக்ஷத்தைக் கொண்டுபோகிறானென்று சொல்லலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தாழ்ச்சியிலுள்ள இந்த நன்மையெல்லாத்தையுங் கவனமாய் யோசித்துப்பார்த்தால், இயேசுநாதர் சொல்லியிருக்கிற

விலையேறப்பெற்ற முத்துக்கொப்பாய் நாம் இதை மதிப்போம் (மத். 13); சுவிசேஷத்தில் குறிக்கப்பட்ட வியாபாரியைப்போல, இதைச் சம்பாதிக்கிறதற்கு நாம் என்ன கொடுத்தபோதிலும், அதற்குப் போதாதென்றிருப்போம்.

மனப்பற்றுதல்.—தாழ்ச்சிக்கு அஸ்திவாரமான உள்ளிந்திரிய அறிவு என்னை அதிகமதிகமாய்த் தாழ்ச்சியுள்ளவனாக்குகிறதற்கு உதவியாயிருக்கும்படி: என் சர்வேசுரா, உம்மையும் என்னையும் நன்றாய் நான் அறியக்கடவேனாக (அர்ச். அகுஸ்.).

பிரதிக்கினை.—உத்தமமான இந்த மனவல்லயச் செபத்தை அர்ச். அகுஸ்தீனென்பவரோடு அடிக்கடி சொல்லவேணும்.

2-ம் பிரிவு

தாழ்ச்சியின் சுபாவ குணங்கள்

தியானம்.—வழக்கமாய் நேரிடுஞ் சில அபத்தங்களிலும் மாயைகளிலும் நாம் விழாதபடிக்குத் தாழ்ச்சியின் உள் சுபாவத்தை அல்லது விசேஷ குணங்களைக் கவனமாய் யோசித்துப் பார்ப்போமாக.

தாழ்ச்சியானது, உண்மையையும் நீதியையும் மகா தெளிவாய் அறிவதினால் உண்டாகிறது வாஸ்தவமாயினும், அநேகம்பேர் அது நியாயமற்ற பலவந்தமான ஓர் கட்டுப்பாடென்று சொல்லுவார்கள்: சென்மப்பாவத்தினால் நமது புத்தியிலே அலங்கோலை பிரவேசியாமற்போனால், நாமெல்லாரும் இயல்பாகவே தாழ்ச்சியுள்ளவர்களாயிருப்போம்.

இன்னஞ் சிலர் நினைக்கிறதேதென்றால் நமது குற்றங்களை உபாயமாய் அல்லது முழுமையும் மறைக்கவும், நமது மகிமையையுஞ் சுதந்தரத்தையும் பாராட்டி நிலைநிறுத்தவும், நமது சாமர்த்தியத்தை வெளியிற் காண்பிக்கவும், நாமே அதை ஒப்புக்கொள்ளவும் நமது கல்வியைக்கொண்டுங் காரியங்களை நடத்துகிறதிலே நமக்குள்ள சமர்த்தைக்கொண்டும், நமக்குக் கீழ்ப்பட்டவர்கள் நம்மை மதித்து நமக்கு

மரியாதைசெய்ய நாம் ஆசைப்படவும் கூடாதென்று தாழ்ச்சியானது விலக்குகிறதென்று நினைக்கிறார்கள்: இது முற்றிலுந் தப்பறையான எண்ணம். நமது சொந்தப் பிரயோசனத்தையுஞ் சுயமகிமையையுந் தேடாமல், சர்வேசுரனுடைய மகிமையை அல்லது ஆத்துமாக்களின் நன்மையை மாத்திரம் நாடுவோமாகில், மேற்சொன்னவைகளில் ஒன்றுந் தாழ்ச்சிக்கு விரோதமாயிராது.

கடைசியாய் இன்னஞ் சிலர் தாழ்ச்சியுங் கோழைத்தனமும் ஒரே காரியமென்றும் தாழ்ச்சியுள்ளவன் பலத்த காரியங்களையும் பிரபலியமான கிரிகைகளையும் நினைத்து முடிக்க வல்லவனல்லவென்றும் எண்ணுகிறார்கள்: இதுவும் அபத்தம். அதற்கு விரோதமாய் மெய்யாகவே நடப்பதேதென்றால், ஆங்காரியானவன் வருத்தமுள்ள காரியத்தைப் பார்க்கையில், தனக்கு அது அநுகூலமாகாதென்றும் ஆபத்துள்ளதென்றும் பயந்து பின்வாங்குவான்; தாழ்ச்சியுள்ளவனோவெனில், இதெல்லாம் பாராமலும் இதற்கு அஞ்சாமலும் இது தேவசித்தமென்று அறிந்த மாத்திரத்திலே துணிவோடு இதை நடத்த ஆரம்பிப்பான்; அவனுக்கு எந்தக் காரியமும் கூடாததாகத் தோன்றாது; "என்னைப் பலப்படுத்துகிறவரைக்கொண்டு என்னால் எல்லாங் கூடும்" என்று அப்போஸ்தலரோடே தானுஞ் சொல்லலாமென்று நினைப்பான் (பிலி. 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தாழ்ச்சியென்னும் புண்ணியத்தை நீ சரியாய்க் கண்டுபிடிக்கவேணுமானால், கன்னியர்களுக்குள்ளே மகா தாழ்ச்சியுள்ள கன்னிமரியாயைப் பார்; இவள் சர்வேசுரனிடத்தில் அடைந்த விசேஷ வரப்பிரசாதங்களை உலகமறிய வெளிப்படுத்திச் சொன்னதாவது: "வல்லபமுள்ளவர் பெருமையானதை என்னிடத்தில் செய்தருளினார்"; ஆனால் அதின் மகிமையை எல்லாஞ் சர்வேசுரனுக்குச் செலுத்தி "என் ஆத்துமம் ஆண்டவரைத் துதிக்கின்றது" என்றாள். அர்ச். சின்னப்பர் நடக்கையை யோசித்துப் பார்: அவர் அஞ்ஞானிகள் முன்பாகத் தாம் உரோமாபுரியானென்கிற சுதந்தரத்தை அழுத்தமாய்ச் சொல்லிக்காட்டினார். ஆசியாகண்டத்துக் கிறீஸ்துவர்கள் முன்பாக, அவர் தாம் பட்ட எண்ணிறந்த பிரயாசங்களினாலேயுஞ் சர்வேசுரன் தமக்கு வெளிப்படுத்தின மேலான காரியங்களினாலேயும் அவர்கள் தமக்குச் சங்கையும் சிநேகமுங் கீழ்ப்படிதலுங் காண்பிக்க நியாயமுண்டென்று கூறினார்; ஆனால் அவர் இதெல்லாஞ் சுவிசேஷ போதகத்தை முன்னிட்டு மாத்திரம் செய்தார். தம்மைச்சார்ந்த மட்டில், வேதனை, நிந்தை, அவமானங்களை ஒரு வார்த்தை முதலாய் முறைப்பாடாகச் சொல்லாமல் அநுபவித்து, அப்போஸ்தலர்களுக்குள்ளே தம்மைக் கடைசியானவரென்று எண்ணிக்கொண்டார். உனக்கும் சிலவிசை தாழ்ச்சியின்பேரில் இருந்திருக்கக்கூடிய தப்பறையான நினைவுகளெல்லாந் தள்ளிப்போட்டு அந்தப் புண்ணியத்தில் மேன்மையுள்ளவனாயிருக்கப் பிரயாசப்படுவாயாக.

சம்பாஷணை.—பரிசுத்த கன்னியாஸ்திரியோடு சம்பாஷணை செய். நீ தாழ்ச்சியை அறிந்து அதைச் சிநேகிக்க உனக்கு அவள் உதவிசெய்வதினாலே அவளுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லுகிறதுமன்றிப் புத்தியைக்கொண்டும் மனதைக்கொண்டும் தாழ்ச்சியை அநுசரிக்கிறதில் மிகவும் விர்த்தியடைய அவள் உனக்கு வரப்பிரசாதம் அடைந்து தரும்படி கேள்.

பதினெட்டாம் தியானம்

நாம் தாழ்ச்சியை அடைந்து நம்மிடத்தில் அதை நிலைநிறுத்துவதற்கான விசேஷ உபாயங்கள்

ஆயத்தச் சிந்தனை.—இரட்சகர் தம்மைத் தாழ்த்திக்கொண்டதினாலே, சர்வேசுரன் அவரை உயர்த்தினாரென்று அர்ச். சின்னப்பர் இயேசுநாதரைக் குறித்துச் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக (பிலி. 2).

தியானச் சேபம்.—தாழ்ச்சியை அடையவும் என்னிடத்தில் அதை நிலைநிறுத்தவும் வேண்டிய உபாயங்களை எப்போதும் உதவிக்கொள்ளுகிறதற்கு மனத்திடனைக் கேட்பேனாக.

முதல் பிரிவு

தாழ்ச்சிக்கு விரோதமானதைத் தள்ளிப்போடுகிறது அதை அடைகிறதற்கும் நம்மிடத்தில் நிலைநிறுத்துகிறதற்கும் முந்தின உபாயமாம்

தியானம்.—நீ தாழ்ச்சியை அடையவும் உன் சீவிய காலத்துக்கு அது துணையாயிருக்கவும் மிகுந்த ஆசைப்படுவாயாகில், முந்த முந்த உன் நினைவிலும் வாக்கிலும் கிரிகைகளிலும் அதற்கு விரோதமான யாதொன்றும் வராதபடிக்கும், ஆங்காரத்தை எழுப்புகிறதுஞ் சிலாக்கியத்தை உண்டுபண்ணுகிறதுமான ஏதாகிலும் இல்லாதபடிக்கும் கவனித்துக்கொள். ஆகையால் நீ முன் செய்த நற்கிரிகைகளின்பேரில் யோசனை செய்யாதே; உன் புத்தியில் நேரிடும் வியர்த்தமான மனப்பிரீதிக்கும் இடங்கொடாதே; அதற்கு எதிரிடையாய் உன் பாவங்களை நினைத்துக்கொள். ஆங்காரத்துக்கடுத்த சோதனைகளை மனோதாழ்ச்சியின் முயற்சிகளால் எதிர்த்துத் தள்ளிவிடு. கனமான முகாந்திரமின்றி, உன்னைக்குறித்து நன்மையானாலுந் தின்மையென்கிலும் பேசாதே. பெரியோர்கள் உன்னைக் கண்டிக்கும்போது, போக்கு சொல்லாதே; மற்றவர்களோடே சம்பாஷணை செய்யும்போது, உன்னைப் பெரியவனாகக் காண்பியாதே; உன் யோசனையை எல்லாரும் ஒப்புக்கொள்ள வழிதேடாதே; நீ இருக்கும் மேரையிலும் உன் நடக்கையிலுஞ் சிலாக்கியம், பெருமை, விபரீதம், தன்னை மேன்மையாய்க் காண்பித்தல் ஆகிய தாழ்ச்சிக்கு ஒவ்வாத காரியங்களையெல்லாந் தள்ளிப்போடு.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தாழ்ச்சியை அடையத்தக்கதாக இது முந்தின உபாயமென்று தெளிவாய்த் தோன்றுகின்றது; அதைப் பிரமாணிக்கமாய் அநுசரித்தாயோ? தாழ்ச்சியை அடைவதற்கு

இப்பேர்க்கொத்த உபாயமாத்திரம் போதாதென்கிறது மெய்தான்; ஆனால் இவ்வகை உபாயங்களை அசட்டைபண்ணுவோமாகில், மற்ற உபாயங்களும் பலனற்றுப் போகும்.

மனப்பற்றுதல்.—உன்னிடத்தில் எப்போதும் மிகுந்த தாழ்ச்சியிருக்கத்தக்கதாக, உன் ஒன்றுமில்லாததனத்தையும் உன் நீசத்தனத்தையும் நினைத்துக்கொள்ள வரப்பிரசாதங் கேட்பாயாக.

பிரதிக்கினை.—இந்த முகாந்திரத்தைப்பற்றி ஒரு மகாத்துமாவைப்போல் பின்வரும் வசனங்களில் யாதொன்றை நீ அடிக்கடி சொல்லவேணும்: ஆண்டவரே, என்பேரில் இரக்கமாயிரும்.—உமது சமுகத்தில் நிற்க நான் அபாத்திரவானாயிருக்கிறேன்.—என் தாழ்மையன்றி என்னிடத்தில் வேறென்ன இருக்கிறது?

2-ம் பிரிவு

தாழ்ச்சியை அநுசரிக்கிறதற்கான சமயங்களை உதவிக்கொள்வது, இதற்கு இரண்டாம் உபாயமாம்

தியானம்.—தேவ சம்பந்தமான புண்ணியங்களைப்போல நல்லொழுக்கத்துக்குரிய புண்ணியங்கள் நமக்கு இலவசமாய்க் கொடுக்கப்பட்டவைகளல்ல. ஆகையால் அவைகளின் முயற்சிகளை இடைவிடாமல் அநுசரிக்கிறதினாலே நாம் அந்தப் புண்ணியங்களை அடையலாம். அதினாலன்றோ "நிந்தை அவமானமில்லாமல் தாழ்ச்சியுமில்லை" என்பது பிரமாணம். ஆனால் இதில் நமக்குத் தடையாயிருக்கிறதேதென்றால், நமது சுயபட்சத்தை நாம் உள்ளபடியே விரோதிக்க நம்மிடத்தில் பெலனில்லாமலிருக்கிறதும் அடிக்கடி நமது சிரேஷ்டர்கள் நமக்கு அதிக வருத்தம் உண்டாகுமோவென்று அஞ்சி நம்மைத் தாழ்த்தத் துணியாதிருக்கிறதுந்தான். ஆகிலும் சர்வேசுரன் நமதுபேரில் இரக்கமாயிருக்கிறார்; நமக்குத் தாழ்ச்சியுண்டாகும்படி நிந்தை அவமானங்களை அனுப்புவார்; நாம் அவைகளைத் தெரிந்துகொள்ளாமல் சர்வேசுரன் தாமே அனுப்புகிறதி

னால், அவை நமக்கு மெத்தக் கடினமாகவும் அதிக பலனுள்ளவைகளாகவுமிருக்கும். சில சமயத்திலே இக்கட்டும், புத்திக்கலக்கமும், மனக்கவலையும், மிகுந்த கடினமும், இழிவுமான சோதனையும் உண்டாகும்; இதினால் தாழ்ச்சியுள்ள நவசந்நியாசியைப்போல, மற்றவர்களிடத்தில் ஆலோசனையும் ஆறுதலுந் தேடவேண்டியதாயிருக்கும். வேறொரு சமயத்தில் அசவுக்கியமும் பலவீனமும் வியாதியுமுண்டாகி, நமது கடமைகளைச் செலுத்தமுடியாதவர்களாக்கி நாம் இருக்கும் மடத்துக்கு மெத்த அவசரமுள்ளவர்களென்று நினைத்திருக்கிற நம்மை ஒன்றுக்கும் உதவாதவர்களாக்கிவிடும். இன்னமுஞ் சில சமயத்தில் நேரிடும் பிசகினாலும் பற்பல காரணங்களினாலும் நம்முடைய சுயபட்சத்துக்கு மிகவும் வருத்தமான வியாகுலம் உண்டாகும்: நாம் படும் பிரயாசத்துக்கு அநுகூலம் இல்லாமற்போகும்படி நேரிடும்; சிரேஷ்டர் கருத்தை நன்றாய்க் கண்டுபிடியாமல் நாம் ஒரு காரியத்தை நன்றாய்ச் செய்தோமென்றிருக்கையில், சிரேஷ்டர் நம்மைக் கண்டித்துக் கோபிப்பதுமுண்டு; அல்லது நாம் குற்றஞ் செய்யாதிருக்க ஒரு சிரேஷ்டர் வெளித்தோற்றத்தைக்கொண்டு நம்மைப் பிரசித்தமாய்க் கண்டிக்கிறதுமுண்டு; அல்லது நமதுபேரில் சொல்லப்பட்ட ஆவலாதியினாலே சிலகாலம் நமது கீர்த்திக்குக் குறைச்சல் வருகிறதுமுண்டு.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் நமக்கு இதெல்லாம் வரவிடும்போது, நமது நன்மைக்காகவே செய்கிறார். உத்தம தாழ்ச்சி நமக்குண்டாகும்படி இப்பேர்க்கொத்த சமயங்களை நமக்குக் கட்டளையிடுகிறார். இதினால் ஞானப்பிரயோசனம் அடைய வழி தேடுவோமாக; இதினிமித்தம் முறைப்படாமலும் மனந்தளராமலுந் துஷ்டர்களால் ஆகடியம் அநுபவித்த தாவீது இராசாவோடே: தேவரீர் என்னைத் தாழ்த்தினபோது, எனக்கு உபகாரஞ் செய்தீரென்று நாமுஞ் சொல்லுவோமாக (சங். 118).

மனப்பற்றுதல்.—தாவீது இராசாவைப்போலும் மற்ற அநேக மகாத்துமாக்களைப்போலும் நமக்கு வரும்

பொல்லாப்புகளையும் அவமானங்களையும் ஏற்றுக்கொண்டு, ஞானப்பிரயோசனம் அடையவேண்டிய திடனையுந் தைரியத்தையுங் கெஞ்சிக் கேட்போமாக.

பிரதிக்கினை.—மிகவும் வருத்தமான சமயங்களிலே, நிந்தை அவமானப்பட்டு இருகள்ளர் நடுவே சிலுவையில் மரித்த இயேசுநாதரைக் கண்முன்பாகப் பார்க்கிறதுபோல் நினைத்துக்கொள்ளவேணும்.

3-ம் பிரிவு

அடிக்கடி தாழ்ச்சிமுயற்சி செய்கிறது, இதற்கு மூன்றாம் உபாயமாம்

தியானம்.—தாழ்ச்சியில் நிலைத்திருக்கவும் அதில் வர்த்திக்கவும் வெகுவாய் விரும்புகிற சந்நியாசியானவன், சர்வேசுரன் தனக்கு அனுப்பும் நிந்தை அவமானங்களைக் கையேற்றுக்கொள்ளுகிறது போதாதென்று யோசித்து இன்னமும் உச்சாயமாய்த் தன் மனம்பொருந்தி ஒரு நாளைக்கு அநேகம்விசை உள்ளரங்க வெளியரங்க தாழ்ச்சி முயற்சிகளைச் செய்து வருவான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீயும் இவ்வண்ணஞ் செய்வாயாக. முந்தமுந்த மடத்தில் வழங்குந் தாழ்ச்சிக்கடுத்த முயற்சிகளை நீ தவறாமல் செய்கிறதுந் தவிரத் தாழ்ச்சியுள்ள கருத்தோடும் அவைகளைச் செய்வாயாக. பின்னும் மனத்தாழ்ச்சியின் உள்ளரங்க முயற்சிகளை நீ வழக்கமாய்ப் பண்ணுவாயாகில், வெளியரங்கத் தாழ்ச்சி முயற்சிகளும் உனக்கு மகா எளிதாயிருக்கும். கடைசியாய் அர்ச்சியசிஷ்டவர்களைபபோல நீயும் இவைகளில் மிகுந்த ஆறுதல் அடையலாம்.

சம்பாஷணை.—தாழ்ச்சிக்கு நன்மாதிரிகையான நமது திவ்விய இரட்சகரோடு சம்பாஷிப்பாயாக.

பத்தோன்பதாம் தியானம்

இயேசுநாதர் சமாரித்தாளோடு செய்த சம்பாஷணை

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் களைப்பாய் யாக்கோப்புடைய கிணற்றினருகே உட்கார்ந்திருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—உன் களைப்பையும் இளைப்பாற்றியையும் அர்ச்சிக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் களைத்திருந்தது

தியானம்.—இயேசுநாதர் பிரசங்கம் பண்ணிவந்த முதல் வருஷத்தின் துவக்கத்தில், அவருக்கு முன்னோடியாயிருந்த அர்ச். ஸ்நாபக அருளப்பர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டாரென்று சுவிசேஷத்தைக்கொண்டு அறிந்திருக்கிறோம். அவர் தமது பரிசுத்தமான அலுவலை அதிலே முடித்து வேதசாட்சியாய் மரணம் அடையவேண்டியதாயிருந்தது; இயேசுநாதருடைய அலுவலோவெனில், அது முதல் மகா பிரபலியமாய் விளங்கவேண்டியதாயிருந்தது. ஆனால் அவருக்கு யூதேயா நாட்டில் நடந்த உபத்திரவமான சில்லறைகளினிமித்தம் சமாரியா நாட்டின் வழியாய்க் கலிலேயா நாட்டுக்கு மறுபடி போகத் தீர்மானித்தார். இப்பயணம் நெடுந் தூரமுள்ளதும் கடினமுமாயிருந்தது. அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறதுபோல, இயேசுநாதர் சமாரியா நாட்டிலுள்ள சிக்காரென்னும் பட்டணத்துக்கு வந்தார். அங்கே யாக்கோப்புடைய கிணறு இருந்தது. இயேசுநாதர் பிரயாணத்தால் களைத்து வெயிலினாலும் பசியினாலும் தவித்து, அந்தக் கிணற்றின்மேல் உட்கார்ந்தார். அப்போது ஏறக்குறைய மத்தியானவேளையாயிருந்தது (அரு. 4.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீயும் அப்படியே அநேகம்விசை தவித்துக் களைத்துப் பலவீனப்

ட்டுச் சற்றுநேரம் இளைப்பாறவேணுமென்று ஆசிக்கச் மயம் நேரிட்டது, இன்னமும் நேரிடும். ஆனால் அந்தச் மயத்தில், நான் படுங் களைப்பு என் இரட்சகர் பட்ட களைப்புக் கொப்பாயிருக்கிறதென்றுந் தேவமகிமைக்கும் ஆத்தும ஈடேற்றத்துக்கும் பட்ட பிரயாசத்தினால்தானே உண்டானதென்றும் நான் சொல்லக்கூடுமாகில், இது எனக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கும்! இது பாக்கியம்பெற்ற களைப்பாகும். அதினால் பரலோகத்திலே எனக்கு அளவில்லாத பேரின்ப பாக்கியம் உண்டாகும். உலகத்தார் படுங் களைப்புத்தவிப்போவெனில் பிரயோசனமில்லாமற் போம். நான் படும் வருத்தம் முடிந்துபோம்; அதினால் வருஞ் சம்பாவனை முடியாமல் நித்தியமாயிருக்குமென்று அர்ச். அகுஸ்தீனோடு நீயும் சொல்லுவதினால், அவசரமான சமயத்தில் மனந்தளராமல் உறுதிகொள்ளுவாயாக.

மனப்பற்றுதல்.—ஆண்டவருடைய முந்திரிகைத் தோட்டத்தில் களைத்துத் தவிக்குமட்டும் பிரயாசப்பட உன்னை ஒப்புக்கொடு. மேலும் உனக்கு மாட்சிமையும் உதாரமுமுள்ள இருதயம் உண்டாகக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—நாம் படும் பிரயாசத்தில் அற்பப் பலனை முதலாய் இழந்துபோகாதபடிக்குச் சற்றுகிலுஞ் சுயபட்சத்துக்கு இடங்கொடாமல் நமது கருத்தை அடிக்கடி சுத்தப்படுத்துவோமாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் இளைப்பாறினது

தியானம்.—எல்லாத்திலும் நம்மைப்போலொத்த இயேசுநாதர் மெய்யாகவே களைத்து யாக்கோப்புடைய கிணற்றினருகே உட்கார்ந்து இளைப்பாறச் சித்தமானார். ஆனால் அவ்விடத்தில் தண்ணீரெடுக்கவந்த சிக்காரூரின் ஸ்திரீயாகிய ஓர் நிர்ப்பாக்கிய பாவியானவளோடு சம்பாஷணைசெய்து, அந்தச் சமயத்தை ஆச்சரியமானவிதமாய்ப் பிரயோசனமுள்ளதாக்கினார்; ஏனென்றால், அச்சம்பாஷணை

யைக்கொண்டு அவளையும் அந்த ஊரில் அநேகரைய மனந்திருப்பினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவிடத்தில் நமது நேச இரட்சகர் காண்பித்த மாதிரிகை ஏதென்றால், மெய்யான சந்நியாசியானவன் எப்போதும் எவ்விடத்திலுந் தான் இளைப்பாறும் நேரத்திலே முதலாய்த் தன் அந்தஸ்தின் இரண்டு கதிகளாகிய தேவமகிமையையும் ஆத்தும இரட்சணியத்தையுந் தேடவேணுமென்று காண்பிக்கிறார். உன் சகோதரருக்குள்ளே சிலபேரிடத்தில் இப்பேர்ப்பட்ட மாதிரிகையை நீ காணவில்லையோ? அவர்கள் இளைப்பாற்றியாய்ப் பேசும்போதாவது உலாத்தப் போகும்போதாவது மடத்துக்குள்ளிருக்கிறவர்களுக்கும், சமயம் நேரிடும்போது, வெளியிலிருக்கிறவர்களுக்குந் தங்கள் ஞாபகத்திலுள்ள சில சரித்திரத்தை அல்லது சில உவமையைச் சொல்லுவதினால் அவர்களுக்கு எப்பொழுதும் பிரியமாயிருக்கிறதுந்தவிர நன்மாதிரிகையுங் காண்பிப்பார்கள். இதில் நீயும் அவர்களைக் கண்டுபாவிக்கப் பிரயாசப்படுவாயாக.

மனப்பற்றுதல்.—நல்ல கருத்தைக்கொண்டுஞ் சுறுசுறுப்புள்ள தேவ பற்றுதலைக்கொண்டும் நீ இளைப்பாறும் நேரத்தைப் பரிசுத்தமாக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

பிரதிக்கினை.—அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரைப் போல நீயும் பத்தி வருவிக்குஞ் சில புதுமைகளையுஞ் சரித்திரங்களையுந் தேடிவைத்துக்கொள்வாயாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் காண்பித்த சுறுசுறுப்புள்ள பற்றுதல்

தியானம்.—இயேசுநாதர் கிணற்றினருகே உட்கார்ந்திருக்கையில், சமாரித்தாளாகிய ஒரு ஸ்திரீ அங்கே தண்ணீர் எடுக்க வந்தாள். இயேசுநாதர் அவளை நோக்கி: எனக்குப் பானங் கொடுவென்றார். அதற்கவள்: யூதனாயிருக்கிற நீர் சமாரித்தாளாகிய என்னிடத்தில் பானங் கேட்கிறதெப்படி என்றாள். அதற்கு இயேசுநாதர்: எனக்

குப் பானங் கொடுவென்று சொல்லுகிறவர் இன்னாரென்று அறிந்திருப்பாயாகில், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாயாக்கும். அவரும் நித்திய சீவியமட்டும் பாய்கிற சீவிய ஜலத்தை உனக்குக் கொடுத்திருப்பாரென்று அருளிச்செய்தார். அதற்குப்பின் சொன்னதாவது: நீ போய் உன் புருஷனை அழைத்துக்கொண்டு இங்கே வாவென்றார் (அரு. 4). எவ்வளவு உபாயத்தோடும் படிப்படியாகவும், இரட்சகர், அந்த ஸ்திரீயானவள் தன் அந்தஸ்தை உணர்ந்து மனந்திரும்பச் செய்கிறாரென்று பார். முந்த முந்த, அவளெடுக்கவந்த தண்ணீரைக் குறித்துப் பேசித் தேவ இஷ்டப்பிரசாதமாகிற இரட்சணியத்தின் சீவிய ஜலத்தை அவள் அறியவும் ஆசிக்கவுஞ் செய்கிறார்; பின்னும், அவள் தன் துர்நடக்கையை ஒத்துக்கொள்ளும்படியாய்த் தன் புருஷனைக் கூட்டிக்கொண்டுவரக் கட்டளையிடுகிறார்; அதன்பின் தன் சீவியகாலமெல்லாம் அவள் செய்த பொல்லாப்பை அவளுக்கு அறிவித்து, அவள் ஞானக்கண்ணைத் திறக்கவுந் தம்மை நோக்கி: சுவாமி, நீர் தீர்க்கதரிசியாயிருக்கிறீரென்பதைக் காண்கிறேனென்று அவளாய்ச் சொல்லவுஞ் செய்கிறார். கடைசியாய் வாக்களிக்கப்பட்ட மெசியாவைக்குறித்து அவள் கேட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லுகையில், அவளுக்குத் தம்மை முழுதும் வெளிப்படுத்துகிறார். அக்ஷணமே சமாரித்தாள் தன் இரட்சகரை அறிந்ததுமன்றிப் பாவியாயிருந்த அவள் அப்போஸ்தலரைப்போலாகி, உடனே பட்டணத்தில் ஓடிப்போய் ஊராரை இயேசுநாதரண்டையில் கூட்டிவந்து சேர்த்தாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இம்மேரையாயல்லவோ, சர்வேசுரன் உன்மட்டிலும் நடக்கச்சித்தமானார். அவர் படிப்படியாய் உன்னையும் உலகத்திலுண்டான ஆபத்துக்களையும் வீண் சிலாக்கியங்களையும் நீ அறியச் செய்து, இதின் வழியாய்ச் சுவிசேஷத்தின் மேலான யோசனைகளை நீ மதிக்கவுஞ் சிநேகிக்கவும் அநுசரிக்கவும் உன்னை மெள்ளமெள்ள இழுத்துவந்தார். இதினிமித்தம் முழுமனதோடு அவருக்கு நன்றியறிந்த தோத்

திரஞ்செய்து நீ விசாரிக்கவேண்டியவர்களையும் இம்மேரையாய் நடத்திக்கொண்டு போவாயாக. அநேகந்தரவாயில் நல்ல சமயம் பாராமல் ஆத்திரப்படுகிறதினாலே, புகழ்ச்சிக்குரிய சுறுசுறுப்போடே தாங்கள் படும் பிரயாசத்தை வீணாக்கிக்கொள்ளுகிறவர்களும் உண்டு.

சம்பாஷணை.—நமது ஞானஸ்நானப் பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவரோடேயாகிலும், இந்த மாதத்தில் குறிக்கப்பட்ட பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரோடென்கிலுஞ் சம்பாஷணை செய்வோமாக.

இருபதாம் தியானம்

சிக்கார்பட்டணத்துக் குடிகளுடைய விசுவாசமும் இயேசுநாதர் கலிலேயாநாட்டில் செய்த பிரசங்கமும்

ஆயத்தச் சிந்தனை.—என்னை அனுப்பினவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறதே எனக்குப் போசனமென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—எல்லாக் காரியத்திலுஞ் சர்வேசுரனுடைய சித்தத்தை அறிந்து அதை நிறைவேற்ற வரப்பிரசாதங் கேள்.

முதல் பிரிவு

இயேசுநாதருடைய பரம இரகசியமான போசனம்

தியானம்.—சமாரித்தாளானவள் தன் குடத்தை வைத்துவிட்டுத் திரும்பச் சிக்காருருக்குப்போய் ஊராரை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்ன ஒரு மனிதனை நீங்கள் வந்து பாருங்களென்றாள். அப்படியிருக்க அசனத்துக்கு வேண்டியதெல்லாஞ் சேகரித்துவந்த சீஷர்கள் இயேசுநாதரைப் பார்த்து: குருவே, அசனஞ்செய்தருளுமென்று அவரை மன்றாடிக் கட்டாயப்

படுத்திக்கொண்டிருந்தார்கள். அதற்கு இயேசுநாதர் அவர்களை நோக்கி: நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத போசனம் எனக்குண்டு. அப்போசனம் ஏதென்றால், என்னை அனுப்பினவருடைய அலுவலை முடித்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதுதானென்றார் (அரு. 4). அவ்வலுவலாவது: மனுஷரை மீட்டிரட்சித்து அவர்களை அர்ச்சியசிஷ்டவர்களாக்கிச் சிருஷ்டிப்பின் வேலையை பூர்த்தியாக்குகிறதாமே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆச்சரியமான இந்த வசனங்களைக் கவனமாய் யோசித்துப் பார்ப்பாயாகில், பசியுள்ளவன் போசனத்தை மகா ஆவலோடு தேடுவதைப்பார்க்க, இயேசுநாதர் உன்னை அர்ச்சியசிஷ்டவனாக்கத் தேடும் ஆசை எவ்வளவு பெரிதென்று கண்டுபிடிப்பாய். இந்த ஆசையின் வேகத்தையும் சத்தியையும் நீ கண்டுபிடிக்கத்தக்கதாக உலகத்தை மீட்டிரட்சிக்கவும் விசேஷமாய் உன்னை அர்ச்சிக்கவும் இரட்சகர் செய்ததெல்லாத்தையும் ஆராய்ந்துபார். இதற்கு நீ காட்டின நன்றியறிதலென்ன? இதற்கொத்தபிரகாரம் பட்ட பிரயாசமென்ன? மேலும் இயேசுநாதருடைய ஆசைக்கொத்தபடி நீ நடக்கத்தக்கதாக உன்பேரில் சர்வேசுரனுக்குண்டான கருத்தேதென்று அறியவும் அதைச் சரியாய் நிறைவேற்றவும் விசேஷமாய்க் கவனிக்கவேணுமென்று மேற்சொன்ன வாக்கியங்களை உனக்குப் படிப்பிக்கும். இதுவரையில் நீ அதைப்பற்றி எப்படி நடந்தாய்? கடைசியாய்ச் சர்வேசுரனுடைய மகிமைக்கும் பிறர் ஈடேற்றத்துக்கும் அவசரமானபோது, பசி தாகம் நித்திரைக் குறைவு முதலான பலவித இக்கட்டுகளைச் சட்டைபண்ணாமல் எவ்வளவு பிரயாசப்பட்டாலும், அது போதாதென்று மேற்சொன்ன வாக்கியங்களை உனக்குச் சொல்லும். இப்பேர்க்கொத்த தேவ சுறுசுறுப்பு உன்னிடத்திலுண்டோ?

மனப்பற்றுதல்.—நீதியின்பேரில் பசி, தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்களே திருப்தியடைவார்களென்று இயேசுநாதர் திருவுளம்பற்றின அந்

தப் பாக்கியவான்களோடே நீயும் ஒருவனாயிருக்க மன ஆவலோடு கேட்பாயாக (மத். 5).

பிரதிக்கினை.—விசேஷமாய் எதுகாரியத்தில் நீ தேவ சுறுசுறுப்பற்றுப் போனாயென்று பார்த்து அதற்கான அவுழ்தங் கூடின சீக்கிரத்தில் தேடுவாயாக.

2-ம் பிரிவு

சிக்கார் ஊரில் இயேசுநாதர் தங்கியிருந்தது

தியானம்.—அந்த ஊரார் பெண்பிள்ளையின் வார்த்தையைக் கேட்டு ஓடிவந்து இரட்சகரைக் கண்டு, அவருடைய பிரசங்கத்தைக் கேட்டமாத்திரத்திலே, மிகவும் ஆச்சரியப்பட்டு அவர் தங்களிடத்தில் தங்கியிருக்க மன்றாடினார்கள். இயேசுநாதரும் அவர்கள் மன்றாட்டுக்கு இணங்கி அவர்கள் நடுவில் இரண்டுநாள் தங்கியிருந்தார். அப்போது அநேகம் பேர் அவரை விசுவசித்ததுமன்றி, அவர்கள் அந்த ஸ்திரீயை நோக்கி: இப்போது நாங்கள் விசுவசிக்கிறது உன்னுடைய வார்த்தையைப்பற்றியல்ல, நாங்களே அவருடைய வாக்கைக் கேட்டு, அவர் மெய்யாகவே உலக இரட்சகரென்று அறிந்திருக்கிறோமென்றார்கள் (அரு. 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சமாரித்தர்கள் சகல சனங்களுக்குள்ளே முந்தினவர்களாய் இயேசுநாதரை உலக இரட்சகர் என்றறிந்ததினால் அவர்களுக்கு எவ்வளவோ மகிமை! அவரோடு சம்பந்தப்பட்டு, விசுவாசம தேவ இஷ்டப்பிரசாதமாகிய இவைகளின் பொக்கிஷத்தையும், நித்திய ஆநந்தத்தின் அச்சாரத்தையும் அவரிடத்தில் பெற்றுக்கொண்டதினாலே அவர்களுக்கு எவ்வளவோ பாக்கியம்! கொஞ்சநேரம் அவரைத் தரிசித்து அவருடைய புத்தி பிரசங்கங்களைக் கேட்டதினாலல்லவோ, இந்தப் பலன்களெல்லாம் அவர்களுக்குக் கிடைத்தன! ஆ! இயேசுநாதரை மதித்துச் சிநேகிக்கவேணுமானால், அவரை அறிகிறதொன்றே போதும். நாம் எப்போதும் அவரை நன்றாய் அறிந்திருந்தால், ஒருபோதும் அவருக்கு ஏற்காத துரோகஞ் செய்யவேமாட்டோம்:

மனப்பற்றுதல்.—என் இயேசுவே, உம்மை அறிய எனக்குப் படிப்பியும்; என் இருதயத்தில் பேசும்; உமது சிநேகத்தினால் அது பற்றியெரியச்செய்யும்.

பிரதிக்கினை.—இயேசுநாதரை அறியவுஞ் சிநேகிக்கவும் எழுதப்பட்ட ஞான புஸ்தகங்களை முக்கியமாய் வாசிக்கவேண்டும்.

3-ம் பிரிவு

இயேசுநாதர் கலிலேயா நாட்டிற் சுற்றித்திரிந்து பிரசங்கம் பண்ணினது

தியானம்.—இயேசுநாதர் சிக்காரூரைவிட்டு நேராய்க் கலிலேயா நாட்டுக்குப்போய் அதில் வேதத்தைப் பிரசங்கிக்கத் துவக்கித் தாம் செய்த அற்புதங்களினாலே மனிதர்களின் ஞானக்கண்ணைத் திறந்து அவர்கள்பேரில் தமக்குண்டான மேலான அதிகாரத்தைக் காட்டவுந் தமது போதகத்தை ஏற்றுக்கொள்ளவும் எங்குந் தமது கீர்த்தி விளங்கவும் மற்ற இடங்களில் தாம் செய்யப்போகிற பிரசங்கங்களுக்கு இது மாதிரிகையாயிருக்கவுஞ் சித்தமானார். இதைப்பற்றிச் சுவிசேஷகராகிய அர்ச். அருளப்பர் எழுதியிருக்கிறதாவது: அவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுக் கலிலேயா நாட்டுக்குப் போய் அதில் பிரசங்கிக்கத் துவக்கிச் சர்வேசுரனுடைய இராச்சியஞ் சமீபமாயிருக்கிறதென்றுந் தபசு செய்து, சுவிசேஷத்தை விசுவசித்துக்கொள்ளுங்களென்றுஞ் சொல்லுவார். அப்போது அவருடைய கீர்த்தி அந்நாடெங்கும் பரம்பவே, சகலரும் அவரை மகிமைப்படுத்தினார்கள் (அரு., மத். 4; மாற். 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ மற்றவர்களை நடப்பிப்பதும் அல்லது பிரசங்கம்பண்ணுவதும் படித்துக்கொடுப்பதும் புத்திசொல்லுவதுமாகிய இவைகளைச் செய்யவேணுமானால், இதற்குவேண்டிய வல்லமையைச் சர்வேசுரன் உன்னிடத்தில் கேளாத அற்புதமான காரியங்களைக்கொண்டு தேடாமல் குற்றமில்லாத உன் நடக்கையினால் அடையப் பிரயாசப்படு. அவர்கள் சொல்

பவர்களேயன்றிச் செய்பவர்களல்லவென்று இயேசுநாதர் பரிசேயரைக் கண்டித்துச் சொன்னதுபோல, உன்னைப்பற்றியும் மற்றவர்கள் சொல்லாதபடிக்கு விசேஷ எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஆனால் உங்களுக்கு நான் மாதிரிகை காண்பித்தேனென்று அவரைப்போல நீயும் உனக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும் உன் புத்தி பிரசங்கங்களைக் கேட்கிறவர்களுக்கும் சொல்லுந் தன்மையாய் நடந்துகொள்வாயாக (மத். 23, அரு. 13).

சம்பாஷணை.—நமது திவ்விய மாதிரிகையானவரும் இரட்சகருமான இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக.

இருபத்தோராம் தியானம்

கப்பர்நாவூமூரிலிருந்த ஒரு துரைமகனை அற்புதமாய்ச் சௌக்கியப்படுத்தினதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—தகப்பனொருவன் இயேசுநாதர் பாதத்தில் விழுந்து கஸ்தியுடன் மன்றாடுகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—சர்வேசுரனுடைய பராமரிக்கையின்பேரிலும் தயாளத்தின்பேரிலும் மட்டில்லாத நம்பிக்கையைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

தகப்பனொருவன் கஸ்தியுடன் இயேசுநாதரை மன்றாட வருகிறான்

தியானம்.—திவ்விய இரட்சகர் தாம் சர்வேசுரனால் அனுப்பப்பட்டதைச் சகலருக்கும் முன்பாகக் காண்பிக்கவும் மனிதர் இருதயத்தில் விசுவாசத்தை எழுப்பவும் சித்தமாகிச் செய்த முதல் புதுமையானது தன் சனத்தினிடத்தில் அதிகாரமுள்ளவனுமாய்க் கலிலேயா நாட்டில் பேர்போனவனுமாயிருந்த துயரம் நிறைந்த ஒரு தகப்பனினிமித்

தஞ் சம்பவித்தது. இச்சங்கதியை அறிவித்து அர்ச். அருளப்பர் எழுதியிருக்கிறதைக் கேள்: கப்பர்நாவூமூரில் ஒரு சிற்றரசன் இருந்தான். இவன் இயேசுநாதர் யூதேயாவில் நின்று கலிலேயாவுக்கு வருகிறாரென்று அறிந்து அச்சமயத்தில் கானாவூரில் தங்கியிருந்த அவரைக் காணப்போய் வியாதியினால் அவஸ்தையாயிருந்த தன் மகனைச் சொஸ்தப்படுத்தும்படி கப்பர்நாவூமுருக்கு அவர் எழுந்தருளிவர அவரை மன்றாடினான் (அரு. 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உனக்குப் பிரயோசனமாக இவ்விடத்தில் ஒரு யோசனை செய்வாயாக, அதாவது: மேசியாவை அறியத்தக்க பாக்கியம் இந்தத் துரைக்கு எதினால் கிடைத்தது? இவனுக்கு வந்த கஸ்தியினாலல்லவோ? இவன் இக்கஸ்தியினால்தானே ஏவப்பட்டு இயேசுநாதர் பாதத்திலே வந்து விழுந்து தனக்கு இரட்சணியம் அடைந்தான். ஆகையால், சர்வேசுரன் நமக்கு அனுப்பும் கஸ்தி துன்பங்களை நிர்ப்பாக்கியமென்று நினைப்பது அல்லது அவைகளைப்பற்றி முறைப்பாடு சொல்லுவது குற்றமாமே. சிலவிசை நீயும் இப்பேர்க்கொத்த குற்றஞ் செய்ததில்லையோ?

பின்னும் இந்தத் துரை, தன் மகன் அவஸ்தைக்குள்ளாகுந்தனையும் இயேசுநாதரை அடுத்துப்போகாமலிருந்தான். அவன் அப்படிச் செய்தது சரியல்லவென்று, நாம் அவனைக் கண்டித்துச் சொல்லுகிறோம்; ஆனால் நாம் நமது ஆத்தும சரீரத்துக்கு நேரிடும் அவசரங்களிலே நம்மாலான மட்டும் பிரயாசப்பட்டும் பிரயோசனப்படாததினாலும், விசுவாசமில்லாதவர்களைப்போல அடிக்கடி படைக்கப்பட்ட வஸ்துக்களிடத்தில் வீண் ஆறுதலைத்தேடி அதை அடையாததினாலும் மாத்திரங் கடைசியாய்ச் சர்வேசுரனை நினைத்து அவரிடத்தில் போவதினால் அவனைக் கண்டுபாவிக்கிறதில்லையோ? இப்படியிருக்க, சர்வேசுரனும் அப்பேர்க்கொத்த சமயத்திலே நமக்கு உதவிசெய்யத் தாமதித்தால், அது அதிசயமோ?

மனப்பற்றுதல்.—குணப்படுத்துகிறதற்காக நம்மைத் தண்டிக்குஞ் சர்வேசுரனுடைய ஞானத்தைக் கண்டு

ஆச்சரியப்பட்டு, "அவரை வாழ்த்துகிறதுமன்றி, நம்மை முழுதும் அவர் கையில் ஒப்படைத்து உருக்கமுள்ள தகப்பனுக்குரிய அவர் பராமரிக்கைக்கு அமைந்திருப்போமாக!

பிரதிக்கினை.—எல்லாத்துக்குமுன், சர்வேசுரனிடத்தில் என் ஆறுதலைத் தேடவும் பிள்ளையைப்போல கீழ்ப்படிந்து அவர் உதவி சகாயத்துக்குக் காத்துக்கொண்டிருக்கவும் என்னை அப்பியாசப்படுத்துவேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் அந்தத் தகப்பனைக் கண்டித்தது

தியானம்.—கப்பர்நாவுமூரானை அந்தத் துரை இயேசுநாதரால் தன் மகன் ஆரோக்கியமடைவானென்று அவனுக்கிருந்த நம்பிக்கையானது இன்னமும் மெத்த விசுவாசக் குறைவுள்ளதாயிருந்தது. ஏனெனில், இயேசுநாதர் வியாதிக்காரன் அண்டையில் இல்லாததினால் தூரத்திலிருந்து அவனைச் சவுக்கியப்படுத்தக்கூடுமென்று அவன் நம்பவில்லை. இதைப்பற்றி இரட்சகர் அவனைக் கண்டித்துச் சொன்னதாவது: நீங்கள் அற்புதங்களையும் புதுமைகளையும் காணாவிட்டால், விசுவசிக்கமாட்டீர்களென்றார். அந்தத் தகப்பன் தாழ்ச்சியோடு இந்தக் கண்டனையைப் பெற்றுக்கொண்டு மகா சங்கையோடும் நம்பிக்கையோடும் அவரை நோக்கி: ஆண்டவரே, என்மகன் மரிக்குமுன் தேவரீர் எழுந்தருளி வரவேணுமென்று மறுபடியும் விண்ணப்பஞ்செய்தான். மகா உத்தம இத்தகைய பரிசுத்த கருத்துகளினிமித்தம், உன்னத விசுவாச வரத்தையும் அவன் கேட்ட மன்றாட்டையும் அடைந்தான். எப்படியெனில், இயேசுநாதர் அவனை நோக்கி: நீ போகலாம்; உன் மகன் பிழைத்திருக்கிறானென்று அருளிச்செய்தார். அவனும் இயேசுநாதர் தனக்குத் திருவுளம்பற்றின வார்த்தையை விசுவசித்துப் போனான் (அரு. 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் தம்மை மன்றாடின துரையை நடப்பித்தது

போல, நம்மையும் நடப்பித்துக்கொண்டுவருகிறார். அப்படியே நமது மன்றாட்டுக்குக் காதுகொடாதவரைப்போலிருந்து நாம் கேட்கும் வரத்தை நமக்கு அளிக்க அவர் தாமதஞ் செய்வாராகில், நாம் அதின் கனத்தை நன்றாய் அறியவும் அல்லது பொறுமை, தேவசித்தத்துக்கு அமைதல், விசுவாசம், நம்பிக்கையாகிய இவைகளை நாம் அநுசரிக்கிறதற்கான சமயத்தை நமக்குக் கொடுக்கவும் இப்படிச் செய்கிறாரல்லாமல் மற்றப்படியல்ல. ஆகையால் நமக்கு அவர் சகாயஞ் செய்யவேணுமென்று தளராத மனதோடு கேட்டுக்கொண்டு வருவோமாகில், நாம் கேட்டதை அவர் நிச்சயமாய்க் கொடுப்பார்.

மனப்பற்றுதல்.—"ஆண்டவரே, எங்களிடத்தில் விசுவாசத்தை அதிகரித்தருளும். நாங்கள் செபம்பண்ண எங்களுக்குப் படிப்பியு"மென்று அப்போஸ்தலர்களோடுகூட நாமும் முழுமனதோடே சொல்லுவோமாக (லூக். 17 அதி., 11 அதி).

பிரதிக்கினை.—செபந்துவக்குமுன்னும் செபஞ் செய்யும்போதும் அடிக்கடி விசுவாசத்துக்கும் நம்பிக்கைக்கு மடுத்த உணர்வுகளை என்னிடத்தில் எழுப்ப பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

அந்தத் தகப்பனுக்கு இயேசுநாதர் செய்த சகாயங்கள்

தியானம்.—அந்தத் தகப்பன் தன் மகன் அற்புதமாய் ஆரோக்கியமடைந்ததைக் கெட்டியாய் விசுவசித்தாலும், இயேசுநாதர் திருவுளம்பற்றின தெய்வீகமான வார்த்தைப்பாடுகளின் உண்மையைத் தன் கண்களால் பார்க்கும்படி கானாவூரைவிட்டுக் கப்பர்நாவுமூருக்குப்போகத் தீவிரித்தான். அன்று இராத்திரி வழியில் அவன் தங்கியிருந்தது, அவனுக்கு ஓர் வருஷம்போல் தோன்றிற்று. ஆனால் மறுநாள் அவன் ஊழியர்கள் தீவிரமாய் அவனுக்கு எதிராக வந்து அவன் மகன் சொஸ்தமாகிப் பிழைத்

திருக்கிறானென்று சொன்ன செய்தியைக் கேட்டு அவன் அடைந்த சந்தோஷம் இவ்வளவென்று சொல்லுந்தன்மையல்ல. மீளவும் அவர்களை நோக்கி: தன் மகன் சௌக்கியமடைந்த நேரத்தைக் கேட்கவே, அந்த ஊழியர் நேற்று ஏழுமணி நேரத்தில் சுரம் அவனை விட்டுவிட்டதென்றார்கள். "உன் மகன் பிழைத்திருக்கிறான்," என்று இயேசுநாதர் திருவுளம்பற்றின மணிநேரம் அதுதானென்று தகப்பன் அறிந்து அவனும் அவன் குடும்பமுழுவதும் இயேசுநாதரைத் தேவ குமாரனென்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவென்றும் விசுவசித்தார்கள் (அரு. 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய இரட்சகருடைய தயாளத்தையும் உதாரகுணத்தையுங் கண்டு, ஆச்சரியப்படுவோமாக. கஸ்தியோடே வந்த தகப்பன் தன் மகன் ஆரோக்கியமடைய வேணுமென்று கேட்க, உடனே இயேசுநாதர் அவனுக்கு நல்ல ஆரோக்கியங் கட்டளையிட்டார். இது போதாதென்றாற்போல, அந்தத் தகப்பனுக்கும் மகனுக்கும் அவன் வீட்டாரனைவருக்கும் விசுவாசமென்கிற வரத்தைத் தந்ததுமல்லாமல், கடைசிபரியந்தம் விசுவாசத்தில் நிலைமையையும் நித்திய பேரின்ப பாக்கியத்தையுங் கொடுத்தருளினாரென்றும் நம்பத்தகும். இத்தகைய தயாளத்தையும் உதாரத்தையும் நினைப்பதினால் தினந்தோறும் இயேசுநாதர் பேரில் மெய்யான சிநேகம் நம்மிடத்தில் அதிகமதிகமாய் அதிகரிக்கக்கடவது.

சம்பாஷணை.—இந்த வரத்தை இயேசுநாதரிடம் மன்றாடிக் கேட்போமாக.

இருபத்திரேண்டாம் தியானம்

இயேசுநாதர் கப்பர்நாவுமூரில் வாசம்பண்ணினதின் பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் கப்பர்நாவுஞ் செபக்கூடத்தில் பிரசங்கம் பண்ணுகிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—தேவ வரப்பிரசாதத்துக்குக் கீழ்ப்படியும்படி மன்றாடுவோமாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் வாசஞ்செய்யக் கப்பர்நாவுமூரைத் தெரிந்து கொள்ளுகிறார்

தியானம்.—இயேசுநாதர் கானாவூரில் சிலநாள் பிரசங்கம் பண்ணினபிறகு, நசரேத்தூரையுங் கலிலேயா நாட்டைச் சேர்ந்த மற்ற ஊர்களையும்விட்டுத் தாம் வழக்கமாய் வாசம்பண்ணக் கப்பர்நாவுமூரை முக்கியமாய்த் தெரிந்துகொண்டார். அப்படியே இயேசுநாதர் நசரேத்தூரை விட்டுக் கப்பர்நாவுமூரில் வந்து வாசம்பண்ணினாரென்று சுவிசேஷகராகிய அர்ச். மத்தேயுஸ் எழுதிவைத்தார். (மத். 4.) இவ்வூரை விசேஷவிதமாய்த் தெரிந்துகொண்டதேனென்றால், வேதபாரகரெழுதிவைத்த பிரகாரம் கலிலேயா நாட்டிலுள்ள மற்றப் பட்டணங்களுக்குள்ளே கப்பர்நாவுமூர் வெகு ஜனங்கொண்டதாயிருந்ததினாலுங் கலிலேயா அல்லது திபேரியாதென்னுங் கடலில் யோர்தான் நதி விழுமிடத்துக்கருகே இந்த ஊரிருந்ததினிமித்தம் மற்றப் பட்டணங்களிலும் அதைச் சேர்ந்த நாடுகளிலுமிருந்து இதற்கு அநேக ஜனங்கள் வரத்துப்போக்காயிருந்ததினாலும் இதைத் தெரிந்துகொண்டார். ஆகையால் சுவிசேஷத்தின் போதனை பரம்புகிறதற்கும் இயேசுநாதர் தமது சுறுசுறுப்பை விளங்கச் செய்கிறதற்கும் இது விஸ்தாரமான இடமாயிருந்ததுந்தவிர அவர் தமது அளவில்லாத தயவைக் காட்டுகிறதற்குந் தக்க ஸ்தலமாயிருந்தது.

கப்பர்நாவுமூரார் வியாபாரத்தினாலுந் திரவிய சம்பத்தினாலுஞ் சுக செல்வத்தினாலும் வெகு அக்கிரமம் நிறைந்தவர்களாயிருந்ததினாலே, இயேசுநாதருடைய தயவு அவர்களுக்கு மிகவும் அவசரமாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சனங்களுடைய ஆத்தும பிரயோசனமாக அங்கங்கே போய்ப் பிரயாசப்படவேணுமென்று சந்நியாசிகள் சபையிலுண்டான ஒழுங்கு அந்தச் சந்நியாசிகள் எவ்விடத்துக்கும் போகவும் வாசம்பண்ணவுஞ் சமநிலையுள்ளவர்களாயிருக்கவேணுமென்று தெரிவிக்கின்றது. ஆகிலும் அவர்களே ஓரிடத்தைத் தெரிந்துகொள்ள உத்தரவுண்டானால், தங்கள் சுய பிரயோசனத்துக்கடுத்த முகாந்திரங்கள் யாவையுந் தள்ளிப்போட்டு முக்கியமாய் அதிக நன்மை செய்யக்கூடுமான இடத்தில் வாசம்பண்ணத் தெரிந்துகொள்ளவேண்டும். மேற்சொன்னபிரகாரம் இயேசுநாதர் நடந்த விதத்தை யோசித்துப்பார்த்து இந்த ஒழுங்கை எழுதினார்கள். அதினாலே இதை நாம் மிகவும் பாராட்டவேணும். நமது நடக்கையினால் இந்த ஒழுங்கை நாம் கனப்படுத்துகிறோமென்று காண்பித்தோமோ?

மனப்பற்றுதல்.—உலகத்திலுள்ள எவ்விடத்துக்கும் போக நாம் சமநிலையுள்ளவர்களாயிருக்கிறோமென்று சர்வேசுரன் சமுகத்தில் சொல்லுகிறதுமல்லாமல், ஒரே ஆத்தும ஈடேற்றத்தைப்பற்றி உலகமெங்கும் சுற்றித்திரியவேணுமானாலும், நல்ல மனதோடு நம்மை அதற்கு ஒப்புக்கொடுப்போமாக.

பிரதிக்கினை.—யாதோரிடத்தின்பேரிலாகிலும் மடத்தின்பேரிலென்கிலுஞ் சுபாவமாய் உண்டான பற்றுதலைத் தள்ளிப்போடவேணும்.

2-ம் பிரிவு

இயேசுநாதர் கப்பர்நாவுமூரின் செபக்கூடத்தில் பிரசங்கம் பண்ணினது

தியானம்.—இயேசுநாதர் கப்பர்நாவுமூரில் சேர்ந்தவுடனே ஓய்வுநாட்களில் அவ்வூராருடைய செபக்கூடத்தில்

பிரவேசித்து அவர்களுக்கு உபதேசித்துக்கொண்டுவருவார். அவர்களோ அவருடைய போதகத்தைக் குறித்து அதிசயப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் அவர் வேதபாரகரைப்போலல்ல, அதிகாரமுடையவராய் அவர்களுக்கு உபதேசித்தார் (மாற். 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதருடைய போதனையால் சனங்களுக்கு வந்த நன்மைக்கும் வேதபாரகருடைய போதனையால் அவர்களுக்குண்டான நன்மைக்கும் உள்ள வித்தியாசத்தின் காரணத்தைக் கவனித்துப் பார்ப்போமாக. இயேசுநாதர் எஜமானைப்போலவுங் கற்பனை கொடுக்கிறவரைப்போலவும் போதித்ததுமன்றித் தாம் யோதித்ததைத் தாமே அநுசரித்துத் தமது நடக்கையினாலும் வார்த்தைகளினாலுந் தம்மை முழுதும் மறந்தவராய்க் காண்பித்து தமது பரமபிதாவின் மகிமையையும் மனிதர் ஈடேற்றத்தையும்மாத்திரந் தேடிக்கொண்டு வந்தார். வேதபாரகரோவென்றால் தாங்கள் படிப்பித்ததைச் சனங்கள் காணத்தக்கவிதமாய்த் தங்கள் கிரியைகளால் அழித்துப்போட்டதுந் தவிரத் தங்கள் மகிமையையுஞ் சுயபிரயோசனத்தையும்மாத்திரம் நாடித் தேடினார்களென்று தங்கள் நடக்கையினாலுங் காண்பித்தார்கள். புறத்தியாரைப்பற்றி நாம் படும் பிரயாசங்களிலே சிலாக்கியமும் பெருமையும் விளங்கவில்லையோ? இதிப்படியானால், ஆத்துமங்களிடத்தில் நாம் நன்மை செய்கிறது அபூர்வமாயிருக்கும்.

மனப்பற்றுதல்.—நாம் நம்மை இலவலேசமுந் தேடாதிருக்கிறதற்குத் தக்கது சர்வேசுரனுக்கு மகிமையுண்டாகுமென்கிறதினாலே வேதம் போதிக்கிறதிலேயும் பிறசிநேகத்துக்கடுத்த காரியத்திலேயும் விசேஷமாய் நம்மை முழுதும் மறந்துவிட வரப்பிரசாதங் கேட்போமாக.

பிரதிக்கினை.—யாதொரு மனவல்லையச் செபத்தைக் கொண்டு அடிக்கடி நல்ல கருத்தைப் புதுப்பிப்போமாக.

3-ம் பிரிவு

இயேசுநாதர் பசாசு ஆவேசமேறினவனைச் சொஸ்தப்படுத்துகிறார்

தியானம்.—அப்போது அசுத்த பசாசு பிடித்திருந்த ஓர் மனிதன் செபக்கூடத்தில் இருந்தான். அவன் உரத்த சத்தமாய்க் கூவி நசரேனுவாகிய இயேசுவே, உமக்கும் எங்களுக்கும் சம்பந்தமென்ன? எங்களைக் கெடுக்கவந்தீரோ? நீர் இன்னாரென்றுஞ் சர்வேசுரனுடைய பரிசுத்தரென்றும் அறிந்திருக்கிறேனென்றான். ஆனால் இயேசுநாதர் அவனை மிரட்டி: நீ பேசாமல் இம்மனிதனை விட்டுப் போவென்றார். அப்போது அந்த அசுத்தப் பசாசு அவனை வெகுவாய் அலைக்கழித்துப் பலத்த சத்தமிட்டு அவன் சரீரத்தை விட்டுப் புறப்பட்டுப்போனது. அங்கே இருந்தவர்களெல்லாரும் இதைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு ஒருவரையொருவர் நோக்கி: இதேது? நவமான இப்போதகமென்ன? இதோ இவர் அசுத்த அரூபிகளுக்கு முதலாய் அதிகாரத்தோடு கட்டளையிடுகிறார்; அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவென்றார்கள். இதினிமித்தம் அவருடைய கீர்த்தி சீக்கிரத்தில் கலிலேயா நாடெங்கும் பரம்பிற்று (மாற். 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விடத்தில் நாம் அறிவது யாதெனில் முந்த முந்தப் பாவத்தினாலும் விசேஷமாய் மோகபாவத்தினாலுந் தன் இருதயத்தில் பசாசுக்கு இடங்கொடுக்கிறவன் எவ்வளவு நிர்ப்பாக்கியனென்றும், அதினால் நாம் பயந்து எச்சரிக்கையாயிருக்கவேணுமென்றும்; 2-வது, இயேசுநாதரை அடைக்கலமாய்ப் போகிறவர்கள்மட்டில் பசாசினுடைய கோபவெறி எவ்வளவோ பலவீனமுள்ளதென்றும், ஆகையால் நமக்குச் சோதனை வரும் வேளையில் அவரைப் பார்த்துப் பிரார்த்தித்துக்கொள்ளவேணுமென்றும்; 3-வது, இயேசுநாதர் தின்மையில் நின்று எப்படி நன்மை உண்டாகச் செய்கிறாரென்றும் காண்கிறோம். எனென்றால், ஆவேசமேறின பசாசு, நிர்ப்பாக்கியனை அந்த மனுஷனுடைய

கேட்டுக்குச் செய்யத் தொடங்கினதெல்லாஞ் சுவிசேஷம் பரம்புகிறதற்காக நன்மையாயிருந்ததுமல்லாமல், இயேசுநாதருடைய கீர்த்தி எங்கும் வெகு துரிதயில் பரம்பவும் விசுவாசத்தைக் கைக்கொள்ளச் சனங்களை ஆயத்தப்படுத்தவும் உதவியாயிருந்தது. ஆகையால் பசாசு உலகத்தில் பொல்லாப்புச் செய்யச் சர்வேசுரன் உத்தரவு கொடுப்பதின்மட்டில் நாம் இடறலடையாமலிருப்போமாக. அதெல்லாம் நமக்குந் திருச்சபைக்கும் பொது நன்மையாயிருக்கச் செய்வார். மட்டற்ற நம்பிக்கையோடு நாம் செய்யுஞ் செபத்தினால் இப்பாக்கியமான பலாபலன்கள் தீவிரமாய் வரும்படி முயற்சி செய்வோமாக.

சம்பாஷணை.—முந்தின இரண்டு பிரிவுகளில் சொல்லிய மனப்பற்றுதலுக்கொத்தபிரகாரம் இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக.

இருபத்துமூன்றும் தியானம்

இயேசுநாதர் இராயப்பர் வீட்டில் தங்கியிருந்ததும் அவருடைய மாமியாரைச் சொஸ்தப்படுத்தினதும்

ஆயத்தச் சிந்தனை.—வியாதியினால் படுத்திருந்த அர்ச். இராயப்பருடைய மாமியாரை இயேசுநாதர் சௌக்கியப்படுத்துவதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இயேசுநாதர்பேரில் சிநேகத்தையும் உன் ஆத்தும வியாதிகளுக்கெல்லாம் ஆரோக்கியத்தையுங் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் சீமோன் இராயப்பருடைய வீட்டில் தங்கியிருக்கிறார்

தியானம்.—இயேசுநாதர் கப்பர்நாவுமூரின் செபக்கூடத்திலே ஆச்சரியமான புதுமை செய்ததினால் யாவரும் அதிசயப்பட்டிருக்கையில், அவ்வூரிலுள்ள ஐசுவரியவான்

களில் ஒருவனுடைய வீட்டில் அவர் தங்கியிருக்கப் போனால், அவருக்கு ஒரு குறையில்லாமல் வெகு சங்கையும் சவரட்சணையும் நடந்திருக்குமே. அப்படி அவர் செய்யாமல் சுவிசேஷகராகிய அர்ச். மாற்கு சொல்லியிருக்கிறதுபோல, இவர் உடனே செபக்கூடத்தை விட்டுப் புறப்பட்டு இயாகப்பரோடும் அருளப்பரோடுஞ் சீமோன் பெலவேந்திரரென்பவர்களுடைய வீட்டில் அசனம் பண்ணி இளைப்பாறப்போனார். இம்மேரையாய்க் கபடற்றதனத்தின்பேரிலுந் தரித்திரத்தின்பேரிலுந் தமக்குண்டான விசேஷ பட்சத்தைக் காண்பித்தார். அங்கே அவர் போனதற்குப் பிறசிநேகம் வேறொரு முகாந்திரமாயிருந்தது; அதெப்படியென்றால் சீமோனுடைய மாமியார் அகோர காய்ச்சலாய் அங்கே படுத்திருந்தாளென்று சுவிசேஷகராகிய மாற்கு எழுதியிருக்கிறார் (மாற். 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் திவ்விய குருவும் மாதிரிகையுமானவரிடத்தில் விளங்கின இப்பேர்க்கொத்த விசேஷ பிரியம் உன்னிடத்திலும் விளங்குகிறதோ? நீ பயணஞ் செய்யும்பொழுது எந்த விடுதியை விசேஷமாய்த் தெரிந்துகொள்ளுகிறாய்? நீ மனுஷரைச் சந்திக்கப் போகும்போது, விசேஷமாய் யாருடைய வீட்டைத் தேடிக்கொண்டு போகிறாய்? நீ தெரிந்துகொள்ளுகிறதற்கு முகாந்திரம் பிறசிநேகமோ, தேவ சுறுசுறுப்போ, நீ அநுசரிக்கவேண்டிய தரித்திரமோ? அல்லது, விசேஷமாய் நீ தேவ சுறுசுறுப்புக்காவது பிறசிநேகத்துக்காவது அடுத்த யாதொரு கருமத்தைப் பிரசித்தமாக நிறைவேற்றும்போது, சிலவிசை சிலாக்கியமும் தோத்திரப்பிரியமும் அதற்கு முகாந்திரமாயிருக்கிறதில்லையோ? இன்னமும் ஒருவேளை சரீரத்துக்கடுத்த இன்ப சுகம் அல்லது இதிலும் நீசமான வேறே யாதொரு பிரியம் அதற்குக் காரணமாயில்லையோ? இதைப்பற்றி மனத் தைரியத்தோடு நீதானே உன்னை வினவிக் கேட்டு வஞ்சகமில்லாமல் மறுமொழி சொல்லிக்கொள்ளுவாயாக. சிலவேளை இப்பேர்க்கொத்த ஆத்துமசோதனையில் உனக்கு மெய்யான வெட்கமும் இரட்சணியத்துக்கடுத்த பயமும் உண்டாகலாம்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, உலகத்தார் பெருமையாய் எண்ணுகிறதெல்லாத்தையும் நிந்திக்கவுஞ் சகலத்திலும் உம்மை மாத்திரந் தேடவும் எனக்குப் படிப்பித்தருளும்.

பிரதிக்கினை.—நான் செய்யுங் காரியங்களுக்கான முகாந்திரம் ஏதென்று அடிக்கடி கேட்பேனாக.

2-ம் பிரிவு

இயேசுநாதர் சீமோனுடைய மாமியாரைச் சொஸ்தப்படுத்துகிறார்

தியானம்.—இயேசுநாதர் சீமோன் இராயப்பர் வீட்டில் பிரவேசித்த மாத்திரத்திலே, வியாதியாயிருந்தவளை அவருக்குக் காண்பித்து அவளைச் சொஸ்தப்படுத்த மன்றாடினார்கள். அப்போது அவர் அவளண்டையில் வந்து அவள் கையைப் பிடித்துத் தூக்கிச் சுரத்துக்குக் கட்டளையிடவே, உடனே சுரம் அவளைவிட்டு நீங்கினது (மாற். 1; லூக். 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட இவ்வாக்கியங்கள் நாம் அநுசரிக்கத்தக்கதும் நமக்கு ஆறுதல் வருவிப்பதுமான இரண்டு சத்தியங்களை நமக்கு ஞாபகப்படுத்துகின்றன. முதலாவது, பிறசிநேகத்துக்கடுத்த குணங்களுக்குள் வலிய உபகாரஞ் செய்தல் முதல் குணமாமே. இராயப்பருடைய மாமியார் தங்கள் ஒத்தாசையைக் கேட்பாளென்று சீஷர்கள் காத்திராமல், இயேசுநாதர் அந்த வீட்டிற் பிரவேசித்தமாத்திரத்தில், உடனே அவர்கள்தாமே அவளுடைய வியாதியைத் தீர்க்க அவர் புதுமை செய்யவேணுமென்று மன்றாடினார்கள். இரண்டாவது, எவ்வித அவசரமுள்ளவர்களுக்காகவும் நிர்ப்பாக்கியருக்காகவும் பரிந்து பேசுவது சர்வேசுரனுக்குப் பிரியமான காரியமென்றும் அவருடைய இருதயத்தை வெகுவாய் இளகச்செய்கிறதென்றும் அவ்வாக்கியம் ஞாபகப்படுத்துகின்றது. கேட்ட மன்றாட்டு உடனே கிடைத்தது: வியாதிக்காரி அக்ஷணத்திலேதானே சௌக்கியமடைந்தாள்.

சிஷர்களுடைய பிறசிநேகத்தைக் கண்டுபாவிப்போமாக. நம்முடைய நல்ல உபசரணையினால் கஸ்திப்படும் நமது சகோதாருடைய ஆசைகளையும் நமக்குச் சுற்றிலுமிருக்கும் நிர்ப்பாக்கியருடைய அவசரங்களையும் நாமே முந்தி அறிந்துகொள்ளுவோமாக. அப்போது நமக்காக அர்ச்சியசிஷ்டவர்களை நாம் இரந்து மன்றாடும்போது, புறத்தியாருக்கு நாம் செய்த நன்மைக்களவாகவும் அதற்கு மேலாகவும் வரப்பிரசாதங்களை நமக்கு அவர்கள் அடைவார்கள்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் பாதத்தில் விழுந்து சகல நிர்ப்பாக்கியர்களையும் விசேஷமாய் நமது மடத்தில் வியாதியாயிருக்கிறவர்களையும் அவர் இரக்கமாய்ப் பார்க்க வேணுமென்று மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—என் சகோதரரே, "எல்லாத்தையும் பார்க்க ஒருவரோடொருவர் நிலைமையான சிநேகமாயிருங்கள்; ஏனெனில், சிநேகமானது திரளான பாவங்களை மூடும்" என்று அர்ச். இராயப்பர் பூர்வீக கிறீஸ்துவர்களுக்குச் சொன்னதுபோல, உருக்கமும் பொறுமையும் தாராளமும் உதாரமுமான பிறசிநேகம் நம்மிடத்தில் விளங்கச் செய்வோமாக (1 இரா. 4).

3-ம் பிரிவு

சௌக்கியமடைந்தவள் இயேசுநாதருக்கு நன்றியறிந்திருக்கிறாள்

தியானம்.—வியாதிக்காரி ஆரோக்கியமடைந்த மாத்திரத்தில் உடனே எழுந்திருந்து இயேசுநாதருக்கும் அவருடைய சிஷர்களுக்கும் பணிவிடை செய்யத் தீவிரித்தாள் (லூக். 4). எவ்வளவு சந்தோஷமும் சிநேகமும் நன்றியறிதலுமுள்ள கருத்தோடும் கவனமான சுறுசுறுப்போடும் அவள் பந்தி பரிமாறி அவர்களுக்குப் பணிவிடை செய்தாளென்பதை யோசித்துப் பார்ப்போமாக.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அந்த ஸ்திரீயானவள் இயேசுநாதர்மட்டில் ஆவலோடு காண்பித்த நன்றியறிதல் மிகவும் நியாயமும் சுபாவமுமுள்ளதாயிருந்தது. சீவியமும் ஆரோக்கியமும் கைகால் முதலிய அவயவ அசைவும் அவராலல்லவோ அவளுக்குக் கிடைத்தது? தனக்கு உபகாரம் செய்தவருக்கு இவைகளையெல்லாம் ஒப்புக்கொடுக்கிறது மிகவுஞ் சுபாவத்துக்குரியதென்று சொல்வது நியாயந்தானே. நாமும் இதுபோல நடப்போமாக. சர்வேசுரனாலல்லவோ உயிரும் ஆரோக்கியமும் அவயவ அசைவும் நமது ஆத்தும தத்துவங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன? இவைகளையெல்லாம் நம்மாலான மட்டும் மகா சுறுசுறுப்போடுங் கவனத்தோடும் தேவதோத்திரத்திற்காக உதவிக்கொள்ளுவது நீதிக்கும் நன்றியறிந்தனத்துக்கும் ஒத்ததென்பதற்குச் சந்தேகமில்லை. நாம் இப்படி நடந்தோமா? வழக்கமாய் இப்படி நடக்கிறோமா?

சம்பாஷணை.—நமக்குத் திவ்விய மாதிரிகையுமாய் உபகாரியுமாயிருக்கிற இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக.

இருபத்துநான்காம் தியானம்

இயேசுநாதர் சேபத்தியானஞ் செய்வதற்காக பிறசிநேகத்துக்கும் தேவ சுறுசுறுப்புக்குமடுத்த அலுவலை நிறுத்துகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் கப்பர்நாவூரிலிருந்து சேபத்தியானஞ் செய்யத்தக்கதாக வனாந்தரத்துக்குப் போகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—இத்தியானத்துக்குப் பலனாகச் சேபத்தோடு பொருந்தின பிறசிநேகமும் தேவசுறுசுறுப்பும் நமக்குண்டாகக் கேட்போமாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் சகல வியாதியஸ்தர்மட்டிலும் இரக்கத்தைக் காண்பிக்கிறர்

தியானம்.—ஒவ்வுநாளன்று சாயங்காலம் சூரியன் அஸ்தமித்தபிறகு, இயேசுநாதர் அண்டையில் சகல வியாதியஸ்தர்களையும் பசாசு ஆவேசமேறினவர்களையுங் கூட்டிக்கொண்டுவந்ததுந்தவிர, அவ்வூராரனைவருஞ் சீமோனென்பவர் வீட்டுக்கு முன்பாகக் கூடியிருந்தார்கள். அவரோவெனில் ஒவ்வொருவர்பேரிலுந் தமது கரங்களை வைத்து அவர்களெல்லாரையுஞ் சௌக்கியப்படுத்தினர் (லூக். 4; மாற். 1). இயேசுநாதரிடத்தில் விளங்கின தயவு எவ்வளவு பெரிதென்றும் அவரை அண்டிப்போகிறது எவ்வளவு எளிதென்றும் ஆராய்ந்து பார். அவரிடத்தில் விளங்கின நற்குணங்கள் அவர் வேதம்போதித்த நாளெல்லாம் அவரைவிட்டு நீங்கினதில்லை. தகுதியற்ற நேரத்திலுந் தமக்குக் களைப்பான காலத்திலும் துன்பப்பட்டவர்கள் தம்மைச் சூழ்ந்துகொண்டபோதிலும், அற்பமென்கிலும் கோபமில்லாமல் பொறுமையையுந் தயாளத்தையுங் காண்பித்துக்கொண்டுவந்தார். தாம் அவர்களுடைய அலட்டுதல் நிமித்தம் எல்லாரையும் ஒரேநேரத்தில் சௌக்கியப்படுத்தக் கூடுமாயிருந்தாலும், அப்படிச் செய்யாமல் ஒவ்வொருவர்பேரிலும் தமது கரங்களை நீட்டி அவர்களுக்கு ஆறுதல் சொன்னர்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் இவ்விடத்தில் காண்கிற திவ்விய மாதிரிகையை நமது புத்தியில் பதித்துக்கொள்ளப் பிரயாசப்படுவோமாக. மனமிரக்கமும் சிநேகமும் நிறைந்து எப்போதுந் தயவு சாந்தமுள்ளவனய் எல்லாருந் தன்னை எப்போதும் எளிதாய் அண்டிவரச்செய்து பிறர் கஸ்தி துன்பத்தைத் தீர்க்கத் தன் கஸ்தியைப் பாராட்டாத சந்நியாசியையாகிலும் சிரேஷ்டரையென்கிலும் காண்கிறது அரிதான காட்சி! மனுஷரிடத்தில் சுபாவமாயிராத மேலான சாங்கோபாங்கம் இதற்கு அவசரம். இப்பேர்க்கொத்த குணங்களை அடைய நீ பட்ட பிரயாசமென்ன? இதில் எவ்வளவு அநுகூலம் அடைந்தாய்?

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் தமது நேச குமாரனுடைய சாயலாயிருக்கத்தக்கதாக நம்மை முந்திக் குறித்திருக்கிறரென்று அப்போஸ்தலர் சொல்லியிருக்கிறபடி இயேசுநாதருடைய சாயல் நம்மிடத்தில் விளங்க ஆசை காண்பித்து அவருடைய வரப்பிரசாதத்தைக் கேட்போமாக (உரோ. 8).

பிரதிக்கினை.—உன்னிடத்தில் யாதொருவர் சமயம் பார்த்து வரவேணுமென்றிராமல், எந்த நேரத்திலும் தடையில்லாமல் வரும்படி நடந்துகொள்.

2-ம் பிரிவு

இயேசுநாதர் செபத்தியானஞ் செய்யப்போகிறர்

தியானம்.—இயேசுநாதர் அதிகாலையிலெழுந்து கப்பர்நாவூமுரைவிட்டு வனாந்தரமான ஓரிடத்துக்கு புறப்பட்டுப் போய் அங்கே செபம் பண்ணிக்கொண்டிருந்தார் (மாற். 1). நமது திவ்விய இரட்சகர் நமக்கு இவ்விடத்தில் படிப்பிக்கிறதேதென்றல், முந்தமுந்த நாம் யாதொரு நற்கிரிகை செய்தபின், அதினல் நமக்கு பெருமை சிலாக்கியம் வாராதபடி மனுஷர் பார்வைக்கு நம்மை மறைத்துக்கொள்ளவும்; 2-வது, தேவ சுறுசுறுப்புக்கு அல்லது பிறசிநேகத்துக் கடுத்த வேலைகளில் நாம் பிரயாசப்பட்டபிறகு, அதினல் நமக்கு வரும் பராக்குக்கும் இப்பராக்கினல் நேரிடும் பொல்லாப்புக்கும் நாம் தப்பித்துக்கொள்ளும்படி தனித்துச் செபத்தியானம் பண்ணவும்; 3-வது, சர்வேசுரனேடொன்றித்துப் பகலில் நாம் படும் பிரயாசத்துக்குப் புதிதான வலுவுந் தேவ ஆசீர்வாதமும் நமக்குக் கிடைக்கும்படி செபத்தைக்கொண்டும் முக்கியமாய் அதிகாலையில் செய்யுஞ் செபத்தைக்கொண்டும் அந்தந்தக் கிரிகையை நாம் துவக்கவும் தமது மாதிரிகையினல் நமக்குப் படிப்பிக்கிறர்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் படும் பிரயாசத்துக்கு வேண்டிய உதவி சர்வேசுரனல் வர

வேண்டியிருக்கிறது; வீண் பெருமைக்கும் பராக்குக்கும் இடங்கொடுக்கிறதினால் அது அநுகூலமாகாமற்போமென்று நாம் பயந்து நடக்கவேண்டியதாயிருக்கையில், நமது திவ்விய குரு நமக்கு இவ்விடத்தில் படிப்பிக்கிற போதனைக்கு நமது நடக்கை எவ்வளவு ஒத்திருக்கிறதென்று சர்வேசுரன் சமுகத்திலே நேர்மையான மனதோடு நம்மை நாம் விசாரித்துப் பார்ப்போமாக,

மனப்பற்றுதல்.—நமது திவ்விய இரட்சகர் மாதிரிகைக்கொத்த ஒழுங்குகள் ஏற்பட்டிருக்கிற சந்நியாச சபையில் நீ அழைக்கப்பட்டதினால் சர்வேசுரனுக்கு நன்றியறிந்திருப்பாயாக.

பிரதிக்கினை.—இந்த ஒழுங்கில் நீ தவறிப்போனதேதென்று பார்த்து இனிமேல் அதற்கொத்தபிரகாரம் நடக்கப் பிரதிக்கினை செய்துகொள்.

3-ம் பிரிவு

இயேசுநாதர் கலிலேயா நாடெங்குஞ் சுற்றித்திரிகிறார்

தியானம்.—கப்பர்நாவூமூரார் கூட்டமாய்க் கூடி வனாந்தரத்துக்குப் போன இயேசுநாதரைப் பின்சென்று தேடி, அவரண்டையில் வந்து, அவர் தங்களைவிட்டுப் போகாதிருக்கப் பிரயாசப்பட்டார்கள். ஆனால் இயேசுநாதர் அவர்களை நோக்கி: நான் மற்றப் பட்டணங்களுக்குஞ் சர்வேசுரனுடைய இராச்சியத்தைப் பிரசங்கிக்கவேணும்; இதற்காகவே அனுப்பப்பட்டேனென்று சொல்லி, அப்படியே கலிலேயா நாடெங்குஞ் சுற்றித் திரிந்து, அங்குள்ள செபக்கூடங்களில் உபதேசித்து, மோட்ச இராச்சியத்தின் சுவிசேஷத்தையும் பிரசங்கித்து ஜனங்களுக்கிருந்த எவ்வித வியாதி பிணிகளையுஞ் சொஸ்தப்படுத்திக்கொண்டு வந்தார். ஆகையால் சீரியா நாடெங்கும் அவருடைய கீர்த்தி பரம்பினதுமன்றி அநேக ஜனங்கள் அவரைப் பின்சென்று போனார்கள் (மத். 4, லூக். 4.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் வெகுநேரம் செபத்தியானத்திலிருந்தபின்பு, நாம் கண்டு ஆச்சரியப்படும்விதமாய் அவ்விடத்திலுஞ் சுறுசுறுப்போடு வேதத்தைப் போதித்துக்கொண்டு வந்தார். ஆனால் இதிலே நாம் ஆச்சரியப்படுகிறது மாத்திரம் போதாது, அவரைக் கண்டுபாவிக்கவேணும். அவர் பாவனையாய் நம்மால் கூடாத காரியந்தவிர, பிறசினேகத்துக்குந் தேவ சுறுசுறுப்புக்கும் அடுத்த கருமங்களில் வருத்தத்தைப் பாராமல் உதாரமாய்ப் பிரயாசப்படவேணும். இதுவே நமது அலுவல்; இதுவே மேன்மையும் பேறுபலனுமுள்ள காரியம்; ஆனால் இதில் மெத்த வருத்தமுண்டு. இதில் நாம் அநுகூலப்படவேணுமானால், நமது திவ்விய மாதிரிகையானவரைப்போல, நம்மை அனுப்பினவரும் நாம் படும் பிரயாசத்துக்கு வேண்டிய உதவிசெய்கிறவருமான சர்வேசுரனோடு நாம் செபத்தியானத்தினால் அந்நியோந்நியமாய் ஒன்றித்திருக்கவேணும். இந்த அந்நியோந்நிய ஒன்றிப்பானது நம்மிடத்தில் குறையில்லாமலிருக்கிறதோ?.

சம்பாஷணை.—நமது ஆராதனைக்குரிய இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக.

இருபத்தைந்தாம் தியானம்

இயேசுநாதர் உலக காரியத்தின்பேரில் நாம் பற்றுதல் வையாதிருக்கக் கேட்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—தனக்குள்ளதெல்லாத்தையும் வெறுத்துவிடாதவன் எனக்குச் சீஷனாயிருக்கக் கூடாதென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக (லூக். 14.)

தியானச் செபம்.—சர்வேசுரனுக்கும் என் ஆத்தும இரட்சணியத்துக்கும் முழுதும் என்னைக் கையளிக்கிறதற்கு விக்கினமாயிருக்கிறதெல்லாத்தையும் உத்தமபிரகாரமாய் வெறுத்துவிட வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

உலக பெருமையையும், ஆஸ்தி சம்பத்தையும் வெறுத்துவிடுதல்

தியானம்.—இயேசுநாதர் எங்குஞ் சுற்றித் திரிந்து வருகையில், வேதபாரகன் ஒருவன் அவரண்டையில் வந்து: குருவே, நீர் எங்கே போனாலும், உம்மைப் பின்செல்லுவேனென்றான். இயேசுநாதர் அவனை நோக்கி: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுமகனுக்கோவென்றால், தலைசாய்க்க இடமில்லையென்றார் (மத். 8.) இருதய இரகசியங்களையெல்லாம் அறிந்திருக்கிற இயேசுநாதர் சொன்ன மாறுத்தாரத்தின்பேரில் அநேகம் வேதசாஸ்திரிகள் பொதுப்பட வியாக்கியானம் பண்ணியிருக்கிறதாவது: இந்த வேதபாரகன் இயேசுநாதரைப் பின்செல்ல மனதானபோது, முக்கியமாய் உலக ஆஸ்திபாஸ்திகளைத் தன் மனதில் உத்தேசித்து எங்கும் பேர்விளங்கின குருவைப் பின்சென்று போனால், ஒருநாள் மிகவும் ஆஸ்திபந்தனும் மகிமையுள்ளவனும் ஆகலாமென்று நினைத்திருந்தான். ஆனால் இயேசுநாதரிடத்தில் விளங்கின மிகுந்த தரித்திரத்தைக் கண்டு, குருவைப் பார்க்கச் சீஷன் செளக்கியத்தைத் தேடமுடியாதென்று பின் வாங்கிப்போனான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அந்த வேதபாரகனைப்பார்க்க அதிக பாக்கியம்பெற்ற நாம் சுவிசேஷத்துக்கடுத்த தரித்திரமுந் தாழ்ச்சியும் எவ்வளவு விலைபெற்றதென்று அறிந்திருக்கிறோம். உலகம் நமக்குக் கொடுக்கக்கூடுமான ஆஸ்தி, பெருமை எல்லாத்தையுஞ் சர்வேசுரனுடைய உதவியினாலே உதாரமாய் வெறுத்துவிட்டோம். ஆயினும் இனி நமக்குப் பயமில்லையென்று நினைக்கக்கூடாது. சந்நியாச குருக்களான சிலபேர் பொல்லாத கருத்துக்கொண்டு திருச்சபையிலே உயர்ந்த பட்டம் அடையலாமென்கிற நம்பிக்கையினாலும் வெற்றுச் சந்நியாசிகள் முதலாய்க் குருக்களாய்ப் போகலாமென்கிற நினைவினாலும் மோசம்போய்ச் சந்நியாச அந்தஸ்தைத் இழந்துபோனார்களென்றும் சந்நியாச சபைச் சரித்திரங்களிலே

ஆங்காங்கு எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் இப்படி மோசம்போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போமாக.

மனப்பற்றுதல்.—உலக செல்வத்தை வெறுத்து நிற்கிறதிலேயுஞ் சந்நியாசத்துக்கடுத்த தரித்திரந் தாழ்ச்சியைச் சிநேகிக்கிறதிலேயுங் கடைசிபரியந்தம் நிலைத்திருக்க வரப்பிரசாதங் கேட்போமாக.

பிரதிக்கினை.—சர்வேசுரன் நம்மை இந்த அந்தஸ்திற்கு அழைத்த உபகாரத்துக்கு நன்றியறியாமலும் இதில் நிலைத்திருக்க வரங் கேளாமலும் ஒரு நாளாகிலும் இருக்கக்கூடாது.

2-ம் பிரிவு

தாய் தகப்பனை வெறுத்துவிடுதல்

தியானம்.—வேதபாரகன் போனபின், இயேசுநாதர் சொன்ன பிரசங்கங்களைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவனை அப்போஸ்தலனாக அழைக்கச் சித்தமாகி, அவனைப் பட்சமாய்ப் பார்த்து: நீ என்னைப் பின்செல்லென்றார். இவரைப் பின்செல்ல அவனுக்கு நல்ல மனதிருந்தாலும், சிலநாள் தவணை கேட்டு அவன் சொன்னதாவது: ஆண்டவரே, நான் போய் முந்த முந்த என் தகப்பனை அடக்கஞ்செய்ய உத்தரவு தந்தருளுமென்றான் (லூக். 9). இதற்கு அர்த்தமேதென்றால், விருத்தாப்பியமான தன் தகப்பனுக்கு உதவிசெய்யவேணுமென்றும் அவன் சாகுந்தனையும் அவனைவிட்டு வரக்கூடாதென்றுஞ் சொன்னாற்போலாயிற்று. இரட்சகர் அதற்குச் சம்மதியாமல் அவனை நோக்கி: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கஞ் செய்யட்டும்; அதாவது: உலகத்தாருக்கு உலக கவலையிருக்கட்டும், நீயோ சர்வேசுரனுடைய இராச்சியத்தை அறிவிக்கப்போவென்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தாய் தகப்பன்பேரில் உனக்குண்டான பட்சமும் அவர்களது ஆக்ஷேபனைகளும் சர்வேசுரன் உனக்குத் தந்த தேவ அழைத்தலைப் பின்செல்வதில் உனக்கு விக்கினமாயிருக்க

வில்லையாகில், அதைப்பற்றி சர்வேசுரனுக்கு எப்போதும் நன்றியறிந்த தோத்திரஞ்செய். ஆனால் சிலர் இக்காரியத்தில் தவறிப்போனதைப் பார்த்து நீயும் அவர்களைப்போல் அந்த வலையில் அகப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. அவர்கள் தாங்கள் சந்நியாசிகளாய்ப் போனதினால் வீட்டுக் காரியம் நடவாமற் போமென்று தகப்பன் கஸ்திப்படுகிறதையுந் தாயானவள் தன்னைவிட்டுப் பிள்ளை மடத்துக்குப் போனதைப் பார்த்து அழுது பிரலாபிக்கிறதையும் கண்டு மனதுருகி அவர்களுக்கு உதவிசெய்யவேணுமென்று புத்தியில்லாமல் தங்கள் சந்நியாச அந்தஸ்தை விட்டுத் தவறிப் போனார்கள். இதினாலே அவர்களுக்குச் சம்பவித்ததென்னவென்று அறியவேணுமானால் கேள்: அநேகமாய் அவர்கள் தங்கள் தாய் தகப்பனுக்கும் பிரயோசனமில்லாமல், தங்களுக்குந் திருப்தியில்லாமல், மனவேதனை அடைந்து நிர்ப்பாக்கியராய் காலந்தள்ளியிருக்கிறார்கள்.

மனப்பற்றுதல்.—பசாசினுடைய தந்திரங்களிலே நின்று எங்களை இரட்சித்தருளுஞ் சுவாமி.

பிரதிக்கினை.—தாய் தகப்பன் உயிரோடிருந்தாலுஞ் சரி மரித்தாலுஞ் சரி; தினந் தினம் அவர்களுக்காகச் சர்வேசுரனை நோக்கி மன்றாடவேணும். சர்வேசுரனைப் பற்றி, நாம் இவர்கள்பேரில் பற்றுதல் வையாததற்களவாக ஆண்டவர் அவர்கள்பேரில் இரக்கமாயிருப்பாரென்று நிச்சயித்துக்கொள்ளுவோமாக.

3-ம் பிரிவு

உறவின்முறையாரையும் சிநேகிதரையும் வெறுத்துவிடுதல்

தியானம்.—இயேசுநாதராலே அழைக்கப்பட்ட வேறொரு சீஷனைக் குறித்து அர்ச். லூக்காஸ் இவ்விடத்தில் பேசியிருக்கிறார். இவனுங் கெடு கேட்டு: ஆண்டவரே, நான் உம்மைப் பின்செல்லுவேன்; ஆனால் முந்த என் வீட்டிலுள்ள ஆஸ்திபாஸ்தியைக் குறித்து என் உறவின் முறையாரோடு திட்டப்படுத்த உத்தாரந் தந்தருளுமென்றான். இயேசுநாதர் அவனை நோக்கி: கலப்பையின்

மேல் கையை வைத்துக்கொண்டு பின்னிட்டுத் திரும்பிப் பார்க்கிற எவனும் சர்வேசுரனுடைய இராச்சியத்துக்குத் தகுந்தவனல்லவென்று திருவுளம்பற்றினார் (லூக். 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஞானாகமங்களில் அநேக இடத்திலே சொல்லப்படும் இவ்வாக்கியத்தைக்கொண்டு இயேசுநாதர் நமக்குப் படிப்பிக்கிறதேதென்றால், சுவிசேஷத்துக்கடுத்த உத்தம பாதையிலும் ஆத்தும இரட்சணியத்துக்காகப் பிரயாசப்படுந் தொழிலிலும் அவரைப் பின்சென்று நடக்க எல்லாத்தையுந் துறந்துவிட்டவர்கள் தங்கள் உறவின்முறையார், சிநேகிதருடைய அநித்திய நன்மைக்குப் பிரயாசப்படாமலுஞ் சந்நியாசப் பேரைக்கொண்டு தங்களுக்கு மேலான மகிமை வரிசைகளைத் தேட நினையாமலுந் தங்கள் பரிசுத்தமான கதியை நோக்கி முன்னேறிப்போகப் பிரயாசப்படவேணுமென்பதாம். தேவ உதவியினாலே நீ இப்படி நிலைமையாய் நடந்திருந்தால், சந்தோஷமாயிரு. ஆனால் மனுஷரையும் உன்னையும் நம்பாதே.

சம்பாஷணை.—நமக்குக் காவலாயிருக்கிற சம்மனசானவர் நமக்குத் துணையாய் இவ்வுலகத்தில இருந்தாலும், இதின்பேரிலும் இதிலுள்ள இன்ப சுகத்தின்பேரிலும் அற்பமென்கிலும் பற்றுதலில்லாதிருக்கிறதைப் பார்த்து அவரோடு சம்பாஷணை செய்வாயாக.

இருபத்தாறும் தியானம்

இயேசுநாதரும் அவருடைய சீஷரும் புசலில் அகப்பட்டது.

ஆயத்தச் சிந்தனை.—இராயப்பருடைய படகில் இயேசுநாதர் நித்திரை செய்தபோது, அடித்த காற்று அலைகளால் படகு மோதப்பட்டு முழுகிப்போக இருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—தேவ பராமரிக்கையின்பேரில் நிலைமையான நம்பிக்கை வைக்கக் கேட்பாயாக.

முதல் பிரிவு

இயேசுநாதர் இராயப்பருடைய படகில் ஏறியிருந்தும், பெரும் புசலால் அது அலைக்கழிக்கப்பட்டது

தியானம்.—அன்று சாயுங்காலம் இயேசுநாதர் கலிலேயாக் கடலருகே வந்துசேர்ந்து சீஷர்களைப் பார்த்து: அக்கரைக்குப் போவோமாகவென்றார். ஆகையால் ஜனங்களை அனுப்பிவிட்டுப் படகிலேறிப் புறப்பட்டார்கள். யாத்திரை போகையில், இயேசுநாதர் பின்னணியத்தில் ஓர் தலையணையின்மேல் நித்திரை பண்ணிக்கொண்டிருக்க, திடீரென பலத்த புசலுண்டாகிப் படகு அலைகளால் மோதப்பட்டுத் தண்ணீரால் நிரம்பி மூழ்கிப்போகிறதாயிருந்தது (லூக். 8, மத். 8, மாற். 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மூன்று சுவிசேஷகர்களும் ஒன்றும் விடாமல் விபரமாய்ச் சொல்லியிருக்கிற இந்தச் சங்கதியிலே இரண்டு காரியம் விசேஷமாய் நமக்கு ஆச்சரியமாகக் காணப்படுகின்றது; இவ்விரு காரியங்களிலும் நமக்குப் பிரயோசனமான படிப்பினையுண்டு: முதலாவது, இயேசுநாதர் அவ்விடத்தில் பிரசன்னராயிருந்தும், அடித்த புசல் சீஷர்களைக் கடலில் அமிழ்த்திப் போடுவதாயிருந்தது; இரண்டாவது, அகோரமான புசல் அடிக்கும்போது, அவர் அயர்ந்த நித்திரையாய்த் தூங்குகிறார்! இதைக்கொண்டு நாம் அநுசரிக்கத் தக்கதேதென்றால், நாம் ஆத்தும அமரிக்கையில்லாமல் கடின சோதனையாகிற புசலினாலாவது நமது சத்துராதிகளின் மூர்க்கமான பலவந்தத்தினாலாவது அலைக்கழிக்கப் பட்டிருக்கும்போது சர்வேசுரன் நம்மை வெறுப்பாய்த் தள்ளிப்போட்டாரென்று நினைப்பது குற்றமாம். இதுவுந் தவிர நமது திவ்விய குரு நம்மோடிராமலும் நமது இரட்சணியத்தின் பேரில் கவலையில்லாதிருக்கிறாரென்றும் எண்ணினாற்போல், நாம் மனங்கலங்கி மிகவும் பயந்து நடுங்குகிறதுந் தகாதென்று சொல்லவேணும்.

மனப்பற்றுதல்.—நாம் கோழைத்தனமுள்ளவர்களாயிருக்கிறதைப்பற்றியும் வீணாய்ப் பயப்படுகிறதைப்பற்றியும் ஆண்டவரிடத்தில் பொறுத்தல் கேட்போமாக.

பிரதிக்கினை.—நம்மிடத்தில் அக்கிரமமான ஆசாபாசமென்கிற அலைகள் கிளம்பும்போது அல்லது நமக்கு உபத்திரியம் நேரிடும்போது தேவ பராமரிக்கையே தஞ்சமென்று நாம் அதின் அடைக்கலமாய்ப் போகவேணும். அப்போது இயேசுநாதர் தலைசாய்ந்து நித்திரை செய்த தலையணையால் குறிக்கப்பட்ட இளைப்பாற்றியை நாமும் அடையலாம். இதைப்பற்றி அவர் படகின் பின்னணியத்தில் ஓர் தலையணையின்மேல் நித்திரை செய்தாரென்று சுவிசேஷகரான அர்ச். மாற்குஸ் சொல்லியிருக்கிறார் (மாற். 4).

2-ம் பிரிவு

நம்பிக்கையற்றிருந்த சீஷர்களை இயேசுநாதர் கண்டித்தது

தியானம்.—சீஷர்கள் படகு அமிழ்ந்திப்போகாதபடி அதைக் காப்பாற்றுகிறதற்குத் தாங்கள் பட்ட பிரயாசமெல்லாம் வியர்த்தமாய்ப் போனதென்று கண்டு பலத்த சத்தமாய்த் தங்கள் திவ்விய குருவை எழுப்பி: ஆண்டவரே, நாங்கள் சிதைந்துபோகிறோம், எங்களை இரட்சியும்; நாங்கள் சேதப்பட்டுப்போவது உமக்குக் கவலையில்லையோவென்றார்கள். அப்போது இயேசுநாதர் எழுந்திருந்து அவர்களை நோக்கி: அற்ப விசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்களென்றார் (மத். 8, மாற். 4). இயேசுநாதர் தமது நித்திரையை அவர்கள் கலைத்ததினிமித்தங் கோபியாமல் தமது தெய்வீகத்தின்பேரிலுந் தமது பராமரிக்கையின் பேரிலுஞ் சந்தேகப்பட்டதினாலுந் தமது நித்திரையில் அவர்களுக்கு உதவிசெய்யக் கூடாதவர்போல் அவர்கள் நினைத்ததினாலும் இப்படி அவர்களைக் கண்டித்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சீஷர்கள் பாவனையாய் நமக்குத் துன்பமும் அபாயமும் நேரிடும்போது, இயேசுநாதர் அடைக்கலமாய்ப் போவோமாக. ஆனால் அவர்களைப்போல கடைசி சமயத்

திலேமாத்திரம் அவரை வேண்டிக்கொள்ளுகிறது சரியல்ல; நமது ஆத்துமத்தின் மிகுந்த நன்மைக்காக அவர் நமது மன்றாட்டைக் கேட்கத் தாமதிக்கிறபோதும் நாம் படுந் துன்பத்தைப் பாராதவர்போலும் நமது மன்றாட்டைக் கேளாதவர்போலும் நித்திரை செய்கிறவர் மேரையாய் அவர் இருக்கும்போதும் விசேஷமாய் நாம் விசுவாசத்தில் தத்தளியாமலும் அவர் பராமரிக்கையின்பேரில் சந்தேகப்பட்டு அவநம்பிக்கைகொள்ளாமலும் எச்சரிக்கையாயிருப்போமாக. இதிலே நீ தவறிப்போகவில்லையோ? நீ வீணாய்ப் பயந்து தைரியமற்று அநேகந்தரம் தேவ பராமரிக்கைக்கு விரோதமான நினைவுகளுக்கு இடங்கொடுத்ததற்கு இத் தப்பிதங் காரணமல்லவோ?

மனப்பற்றுதல்.—வார்த்தைப்பாடுகொடுத்துச் சர்வேசுரனுடைய திரு ஊழியத்துக்குத் தங்களை முழுதும் வசீகரம் பண்ணினவர்கள்மட்டில் ஆண்டவர் தயாளமாயிருந்து விசேஷவிதமாய்ப் பராமரிப்பாரென்று மாறாத நம்பிக்கையோடிருக்கவேணும்.

பிரதிக்கினை.—நமக்கு அவநம்பிக்கையான சோதனை நேரிடும்போது, சர்வேசுரன் என்னை நடப்பித்துக்கொண்டு வருகிறார்; ஆகையால் எனக்கு ஒன்றுங் குறையிராதென்று தாவீது இராசாவோடே சொல்லவேணும் (சங். 22).

3-ம் பிரிவு

இயேசுநாதர் ஒரே வார்த்தையினால் புசலை அமர்த்துகிறார்

தியானம்.—இயேசுநாதர் தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தவுந் தமது சீஷர்களை நம்பிக்கையில் ஸ்திரப்படுத்தவும் மாத்திரம் இந்தப் புசலை எழுப்பினதினாலே திரும்ப ஒரே வார்த்தையினால் அதை அமர்த்தினார். அதெப்படியெனில், அவர் எழுந்திருந்து காற்றை அதட்டிக் கடலைப்பார்த்து: சத்திக்காதே, அமரிக்கையாயிருவென்றார். உடனே காற்று ஒழிந்து மிகுந்த அமரிக்கையுண்டாயிற்று. சீஷர்களோ மிகுந்த பயங்கரத்தை அடைந்து

ஒருவனொருவனைப்பார்த்து: இவர் எப்படிப்பட்டவரென்று நினைக்கிறாய்? இதோ காற்றுங் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவென்றார்கள் (மாற். 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய குருவின் மகத்துவமுஞ் சர்வ வல்லபமும் இவ்விடத்தில் மகா அலங்காரமாயும் துலக்கமாயும் நமக்கு விளங்குகின்றன. இதை நாம் பார்க்கையில், அவருக்குப் பாத்தியப்பட்டவர்களாய் அவர் படையில் சேர்ந்து, அவர் ஆளுகைக்குள்ளிருந்து யுத்தஞ் செய்வதினால் நாம் பாக்கியவான்களென்றும் மகிமை பெற்றவர்களென்றும் நம்மில் நினையாதவனார்? நம்மை அவர் தம்மண்டையில் அழைத்து நமது அந்தஸ்திலே நாம் நிலைத்திருக்க நமக்கு வரப்பிரசாதங் கொடுத்ததினாலே, அவரை வாழ்த்தி நமஸ்கரிப்போமாக. இனி வருங் காரியத்தின்பேரில் அவநம்பிக்கைப்படாமல் நம்மை முழுதும் அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

சம்பாஷணை.—இப்போது சொல்லிவந்த உருக்கமுள்ள காரியததின்பேரில் நமதாண்டவரோடு நெடுநேரஞ் சம்பாஷணை செய்வோமாக.

இருபத்தேழாம் தியானம்

அர்ச். இராயப்பர் படகினால் குறிக்கப்பட்ட பற்பல அடையாளங்கள்

(மேற்சொன்ன தியானத்தின் தொடர்ச்சி)

ஆயத்தச் சிந்தனை.—சீஷர்கள், படகிலே காற்று முகத்தில் அலைக்கழிக்கப்பட்டதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—திருச்சபையையும் ஆத்துமாக்களையும் ஆண்டு நடப்பிக்கிறதில் சர்வேசுரனுடைய கருத்தை நன்றாய் அறிய வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

அர்ச். இராயப்பருடைய படகு திருச்சபைக்கு அடையாளம்

தியானம்.—இராயப்பருடைய படகு திருச்சபைக்கு அடையாளமாம். இப்படகு இராமுழுதும் அலைகளால் அலைக்கழிக்கப்பட்டதுபோல, திருச்சபையும் நரகத்தினுடையவும் அதைச் சேர்ந்தவர்களுடையவுங் கொடிய மூர்க்கத்தினால் எப்போதும் அலைக்கழிக்கப்படுகிறதுமல்லாமல், உலகம் முடியுந்தனையும் அப்படியே அலைக்கழிக்கப்படும்; இரவு முழுவதும் அதாவது விசுவாசத்தின் நிழல் சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கும் காட்சியின் பிரகாசத்தால் மறையுந்தனையும், அதற்கு இப்பேர்க்கொத்த இடையூறுண்டாகும். அந்தப் படகு அநேகந் தறுவாயில் மூழ்கிப்போகிறதாய்க் காணப்பட்டதுபோல, திருச்சபையும் அநேகவிசை முழுதும் மூழ்கி அமிழ்ந்திப்போகிறதுபோலக் காணப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசியில் கொஞ்சத்துக்குள்ளாக முழுதும் எடுபட்டுப்போமென்று அநேகந் துஷ்டர் தீர்க்கதரிசனம்போல் சொன்னார்கள். அப்படியே அவர்கள் நினைத்தது நிறைவேறுகிறாப்போலுங் காணப்பட்டது. ஆனால் இயேசுநாதர் படகில் நித்திரை செய்ததினாலே அது மோசம் போகக்கூடவில்லை. ஏனென்றால், தமது அளவில்லாத ஞானக் கருத்தின்படி குறிக்கப்பட்ட நேரம் வந்தபோது, அவர் விழித்துக்கொண்டு எல்லாருங் கண்டாச்சரியப்படும்படி, புசலுக்குக் கட்டளையிடவே, அது அமர்ந்துபோனது. இனி வருங்காலத்திலும் திருச்சபைக்கு இப்படியே நடக்கும். அது எப்போதும் மோசம் போகிறாப்போல அலைக்கழிக்கப்பட்டு வருத்தம் அடைந்தாலும், எப்போதும் ஜெயமுள்ளதாய் நித்திய பேரின்பத் துறையில் தெரிந்துகொள்ளப்பட்ட சகலரோடும் போய்ச் சேருந்தனையும் இவ்வுலகமென்கிற கடலில் உண்டாகும் புசல் நடுவே தன் பிரயாணத்தை நடத்திக்கொண்டுபோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது பரிசுத்த தாயாகிய திருச்சபையானது பலத்த பெரும்புசலுக்கொத்த துஷ்டர்களாலே எப்போதும் உபாதிக்கப்பட்டுஞ் சில சமயத்தில் நெருக்கப்பட்டுந் தனக்குள்ள சுதந்தரங்களெல்லாம் பறிக்கப்பட்டுமிருக்கிறதை நாம் காணும்போது, மனந் தத்தளித்து இடறல்படாமலிருப்போமாக. அர்ச். அகுஸ்தீன் சொன்னதுபோல, முந்தமுந்தத் திருச்சபையானது மனுஷரால் உண்டுபண்ணப்படாமல் சர்வேசுரனால் ஸ்தாபிக்கப்பட்டதென்று எப்போதும் நிச்சயமாயிருக்கவும்; 2-வது, திருச்சபையானது தன்னை ஸ்தாபித்தவரும் நானாவித பாடுகள்பட்டுத் தமது பிதாவின் மகிமையில் இம்மேரையாய்ப் பிரவேசிக்க வேண்டியிருந்தவருமான தன் திவ்விய பத்தாவுக்குச் சாயலாயிருக்கவும்; 3-வது, அமரிக்கையினாலும் உலக ஐசுவரியத்தினாலும் அசட்டையாயிருந்து தன்னில் கெடாதிருக்கவும்; 4-வது, தனக்கு விரோதமாய் எழும்புஞ் சத்துராதிகளால் அலைக்கழிக்கப்பட்டும் துன்பதுரிதமென்கிற அக்கினியினால் எப்போதும் சுத்திகரிக்கப்பட்டும், கடைசிபரியந்தம் தனக்குத் துவக்கத்தில் இருந்த திடனையும் சௌந்தரியத்தையும் காப்பாற்றிக்கொண்டுவரவும் இப்படி அது உபாதிக்கப்பட்டும் நெருக்கிடைப்பட்டும் வருவது சர்வேசுரனுடைய சித்தம்.

மனப்பற்றுதல்.—தமது திருச்சபையின்பேரில் சர்வேசுரனுக்குண்டான விமரிசையையும் மேலான ஞானத்தையுங் கண்டு ஆச்சரியப்பட்டு அவரை வாழ்த்தி நமஸ்கரிப்போமாக. உலகத்தினெத்திசையிலுந் திருச்சபை பரம்பி ஜெயமடைய மிகவும் ஆசித்து மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—திருச்சபைக்கு வரும் பலத்த துன்பதுரிதங்களிலே சீஷர்களுடைய நடக்கையைக் கண்டு பாவிக்கவேணும். அதெப்படியென்றால், திவ்விய குருவானவர் காற்றுக்குங் கடலுக்குங் கட்டளையிடும்படிக்கு இடைவிடாமல் அவரை மன்றாடி உதவி கேட்கிறதுமன்றி நம்மாலான பிரயாசப்படவும் வேணும்.

2-ம் பிரிவு

இராயப்பருடைய படது பிரமாணிக்கமுள்ள ஆத்துமத்துக்கு அடையாளம்

தியானம்.—இயேசுநாதரோடு கூடச் சீஷர்கள் ஏறியிருந்ததும் புசலால் அலைக்கழிக்கப்பட்டதுமான படகு பிரமாணிக்கமுள்ள ஆத்துமத்துக்கு அடையாளமென்று அர்ச். அகுஸ்தீன் மறுபடியும் சொல்லியிருக்கிறார். இந்த ஆத்துமஞ் சரீரத்தோடு ஒன்றித்து இவ்வுலகமாகிய புசலுள்ள கடலில் அகப்பட்டுக்கொண்டிருக்குந்தனையும், அதற்கு நீளித்த அமரிக்கையும் அச்சமின்மையுங் கிடையாது. சோதனையாலுண்டாகிற காற்றும் புசலும் உனக்கில்லாத இடமும் நேரமும் இல்லையென்று தோமாஸ் ஆகேம்பிசென்பவர் எழுதிவைத்தார். நீ சமாதானத்தில் கெட்டியாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறேனென்று நினைக்கும்போதும், சில்விசை மகா பத்தி பற்றுதலோடு நன்மைவாங்கின பின்பும், ஞான ஒடுக்கஞ் செய்தபின்பும், இயேசுநாதர் உன் அருகில் அதிகமாயிருக்கும்போதும், திடீரென மனக்கவலையுஞ் சலிப்பும் அசுத்தமான உரூபிகரங்களும், அகோரமான சோதனைகளும் கிளம்பிப், பொங்கி எழும்பும் கடலின் அலைகளைப்போல் உன்பேரில் பாய்ந்து உன்னை மோசப்படுத்தவரும். ஆனால் உன் ஆத்தும நன்மைக்காக இப்பேர்க்கொத்த புசலெழும்ப உத்தாரந் தந்த இயேசுநாதர் அதற்கு ஒரு தவணை கட்டளையிட்டிருக்கிறார். அக்கட்டளையின்படி நீ நினையாத சமயத்திலே அமரிக்கையுஞ் சுபகாலமும் உன் ஆத்துமத்தில் திரும்பவும் பிரவேசித்து ஆண்டவர் எவ்வளவு நல்லவரென்று உன் ஆத்துமத்தில் இரட்டிப்பானவிதமாய்க் காணச்செய்யும். இவ்விதமாய்ப் புசலும் அமரிக்கையுஞ் சோதனையும் ஆறுதலும் அர்ச்சிய சிஷ்டவர்களிடத்தில் அடிக்கடி உண்டாயினவென்று அவர்கள் சரித்திரத்தில் வாசித்து வருகிறோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதில் நாம் அநுசரிக்கத்தக்கதேதென்றால், முதலாவது, நமக்கு உத்தம சமாதானமும் அச்சமின்மையுமுண்டென்று ஒருபோதும் நம்பாதிருக்கவும்; 2-வது, தினந்தோறுந் திடீரென்றாற்போல அகோரமான புசல் எழும்புமென்று நினைக்கவும்; 3-வது, ஆறுதலற்ற வேளையிலேயும் நரகத்தின் மூர்க்கமான யுத்த சமயத்திலேயும் இயேசுநாதர் பிரசன்னராயிருந்து உதவிசெய்வாரென்பதின்பேரில் ஒருபோதுஞ் சந்தேகப்படாமலிருக்கவும்; 4-வது, அப்பேர்ப்பட்ட சமயங்களில் முன்செய்த பிரதிக்கினைகளில் யாதொன்றையும் மாற்றிப்போடாமலிருக்கவும்; 5-வது, சீஷர்களைப்போல, தாழ்ச்சியோடு செய்யும் செபத்தைக்கொண்டு இயேசுநாதரை எழுப்பி நமக்கு உதவிசெய்ய மன்றாடவும்; 6-வது, கடைசியாய்ப் புசலுக்குப்பின், அமரிக்கை உண்டாகும்போது, புசலின்போது நாம் நடந்ததெப்படியென்று விசாரித்துப் பார்க்கவும் வேணும்.

அநுபவத்தினாலும் ஞானத்தில் தேர்ந்த மகாத்துமாக்களாலும் படிப்பிக்கப்பட்ட இவ்வொழுங்குப்பிரகாரம் நடந்தாயோ இல்லையோவென்று பார்த்துச் சரியான பிரதிக்கினை செய்துகொள்ளவேண்டும்.

சம்பாஷணை.—நமது திவ்விய இரட்சகரோடு சம்பாஷணைசெய்வோமாக. விசுவாசத்தின் தூய்மையான பிரகாசத்தினால் நமது புத்தியைத் தெளிவிக்கவும் புறத்தியார் புத்தியையுந் தெளிவித்து விசுவாசத்தில் அவர்களைத் திடப்படுத்தும்படி திருச்சபையை அவர் மேலானவிதமாய் நடப்பித்துவருகிறதை நாம் கண்டுபிடிக்கவும் அவரிடத்தில் வரப்பிரசாதங் கேட்போமாக. மேலும் இத்தியானத்தின் இரண்டாம் பிரிவில் காண்பித்திருக்கும் அநுசரணைக்குரிய தீர்மானத்தின்படி நாம் எப்போதும் நடக்க விசேஷ உதவி செய்யவேணுமென்று ஆண்டவரை மன்றாடுவோமாக.

இருபத்தெட்டாம் தியானம்

இயேசுநாதர் ஜெராசெனிய நாட்டாரிடத்தில் தங்கியிருந்ததும் அவ்விடத்தில் பேய்பிடித்திருந்தவர்களைச் சொஸ்தமாக்கினதும்

ஆயத்தச் சிந்தனை.—அந்நாட்டில் பேய்பிடித்த ஒருவன் வந்து இயேசுநாதர் பாதத்தில் விழுந்தபோது அவர் அவனைப் பிடித்திருந்த பசாசைப் பார்த்து: அசுத்த அரூபியே, நீ இவனை விட்டுப்போவென்று சொல்லுகிற சமயத்தில் அவன் இருந்த மேரையைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—உத்தம விரத்தத்துவத்தின் வரத்தைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

ஜெராசெனிய நாட்டில் அசுத்த பேய்பிடித்த ஒருவனுக்குண்டான நிர்ப்பாக்கியம்

தியானம்.—இயேசுநாதர் பூதியங்களுஞ் சகலவித உலக பொருட்களுந் தமக்குக் கீழ்ப்படிகின்றனவென்று காண்பித்ததுபோல, பொல்லாத பசாசுகளுந் தமக்குக் கீழ்ப்படிகின்றனவென்று காண்பிக்கச் சித்தமானார். அப்படியே ஒரு சமயம் நேரிட்டது; ஜெராசெனிய நாட்டில் உள்ள ஏரிக்கரையின் வேறே பக்கத்தில் சேர்ந்தமாத்திரத்தில், பேய் பிடித்திருந்த இருவர் வந்து அவர் பாதத்தில் விழுந்தார்கள். அவ்விருவரில் ஒருவன் அசுத்த பேய்பிடித்தவனென்று சுவிசேஷகராகிய அர்ச். மாற்குஸ் சொல்லியிருக்கிறார் (மாற். 5.) மேலும் அவன் மகா நிர்ப்பாக்கியமான அந்தஸ்திலிருந்தான். இதைச் சுவிசேஷகர் விபரித்துச் சொல்லியிருக்கிறதைப் பார்க்கையில், காம பாவத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறவனுடைய நிர்ப்பாக்கியத்தை நமக்குக் காண்பிக்கக் கருத்தாயிருந்தாரென்று தோன்றுகிறது. அதெப்படியென்றால், முதலாவது, அவன் மூர்க்கவெறி

கொண்டு அடங்காதவனாய்க் கைகால்களிற் போட்டிருந்த விலங்குகளை முதலாய் முறித்துப்போடுவான். 2-வது, வழிப்போக்கர்மேல் அவன் விழுந்து அலைக்கழித்ததினாலே, அவ்வழிப்போக்கர் யாவரும் பயந்திருந்தார்கள். 3-வது, இயேசுநாதர் அப்பேயை நோக்கி: உன் பேர் என்னவென்று கேட்டபோது, நாங்கள் அநேகம் பேராயிருக்கிறதினாலே என் பேர் சேனையென்று சொல்லிற்று. 4-வது, அவன் வஸ்திரம் அணியாமல் மலைகளிலும் கல்லறைகளிலும் வாசமாயிருந்து கூக்குரலிட்டுக் கூர்மையான கல்லுகளால் தன் சரீரத்தைக் கிழித்துக்கொண்டிருப்பான் (மத். 8, லூக். 8, மாற். 5.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—காமாதுரனுடைய நிர்ப்பாக்கியமான அந்தஸ்தின் அடையாளங்கள் இவைதான்: முந்த முந்த அவன் காமவெறி மூர்க்கமாகிய ஆசாபாசத்தால் அலைக்கழிக்கப்பட்டு ஒருவராலும் அடக்கப்படவும் அமர்த்தப்படவுங் கூடாத விதமாய்த் தன் பேரையுங் கெடுத்துச் சௌக்கியத்தையும் இழந்து கொடுத்த வார்த்தைப்பாட்டையுங் கவனியாமல் தேவதுரோகத்துக்கும் அஞ்சாமல், தீர்வையை அல்லது நரகத்தைச் சேர்ந்த நினைவையுஞ் சட்டைபண்ணாமலிருப்பான். 2-வது, பிறர்பேரில் விழுந்து தன் பாவத்துக்கு அவர்களை உடந்தையாக்கத்திரிவான். அவன் வழியைப் பின்சென்று அவனோடேகூடப் பழகுகிறவர்களுக்கு நிர்ப்பாக்கியம்! 3-வது, காம அசுத்த பசாசுக்குச் சேனையென்கிற பேர் மெய்யாகவே செல்லும்; ஏனென்றால், அது தனியேயிராமல் எண்ணிறந்த பாவங்களைத் தன்னோடு சேர்த்துக்கொள்ளும். 4-வது, கடைசியாய்ப் பேய் பிடித்தவன் வஸ்திரமில்லாமல் தனியாய் அலறிக்கொண்டிருக்கிறதைப் பார்க்கையில், இஸ்பிரீத்து சாந்துவானவர் சொன்னதை மெய்யென்று அறியலாம். அதேதென்றால், மகிமைப் பிரதாபத்துக்கு அழைக்கப்பட்ட மனுஷன் புத்தியில்லாத மிருகத்துக்கொப்பாகி ஜனங்களோடு சேராமலுந் தன்னைத்தானே சகிக்கக்கூடாமலுந் தன் அந்தஸ்தை விட்டுப் புறப்படக் கூடாமலும் அல்லது

புறப்பட மனதில்லாமலும் அதைக்குறித்துப் பிரலாபித்துக்கொண்டு திரிவான் (சங். 48).

மனப்பற்றுதல்.—அசுத்த பசாசின் ஆளுகைக்குள் நீ அகப்படாமலிருந்ததைப்பற்றியும் அல்லது சிலகாலம் நீ அதில் அகப்பட்டிருந்தாலும், அதைவிட்டு முழுதும் விலகிக்கொண்டதைப்பற்றியுஞ் சர்வேசுரனுக்கு எப்பொழுதும் நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக. துர்மாய்கையிலும் பொய்யான அமரிக்கையிலும் நீ ஒருபோதும் அகப்படாதபடிக்கு இயேசுநாதரையும் தேவமாதாவையும் அடைக்கலமாய் நாடிப்போவாயாக.

பிரதிக்கினை.—நாம் எந்த வயதிலும் எந்த அந்தஸ்திலும் இருந்தாலும், ஒருபோதும் நம்மை நம்பாமல் எச்சரிக்கையாயிருப்போமாக.

2-ம் பிரிவு.

பசாசு விட்டுவிலகினபின், அம்மனிதன் அடைந்த பாக்கியம்

தியானம்.—இயேசுநாதர் இந்த நிர்ப்பாக்கியனைக் கண்டிரங்கிப் பலத்த சத்தமாய்: அசுத்தப் பசாசே, இவனை விட்டுப்போவென்று கட்டளையிட்டார். பசாசுகள் தாங்கள் பிடித்திருந்தவனைவிட்டுக் கட்டாயமாய்ப் போக வேண்டியதினாலே, அங்கே மலையில் மேய்ந்துகொண்டிருந்த இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பன்றிகளுக்குட் பிரவேசிக்க உத்தாரங் கேட்டன. அப்படியே இயேசுநாதர் உத்தரவு கொடுத்தார். அப்பன்றிகள் வெறிகொண்டுமிகுந்த வேகமாய் ஓடிக் கடலில் பாய்ந்து அமிழ்ந்தி மாண்டன (மாற். 5). அக்ஷணத்திலேதானே பேய்பிடித்திருந்தவன் சொஸ்தமாகி வேறே மனுஷனாக மாறிச் செம்மறியைப்போலச் சாந்தமும் அமரிக்கையுமுள்ளவனானான். எப்பக்கத்திலுமிருந்து ஓடிவந்த ஜனங்கள் இவன் வஸ்திரம் அணிந்து புத்தி தெளிவுள்ளவனாய் இயேசுநாதரண்டையில் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். இவனோவென்றால், தன் பாக்கியத்தையும் நன்றியறிந்த தனத்தையும் எவ்விதங் காண்பிப்பதென்று அறியாமல் இயேசுநாதருக்குச் சீஷனாய் அவரைப் பின்செல்ல உத்தாரங் கேட்டு மன்றாடினான். ஆனால் இயேசுநாதர் அவன் காண்பித்த நல்ல மனதின்பேரில் சந்தோஷமாயிருந்தாலும் அவனைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ளவில்லை. ஆகிலும் அவனுக்கு வேறொரு அப்போஸ்தல தொழிலைக் கொடுத்து: நீ உன் வீட்டுக்குப் போய் ஆண்டவர் உனக்குச் செய்தருளின பலத்த காரியங்களை யாவருக்கும் அறிவிப்பாயென்று திருவுளம்பற்றினார். அவனும் அப்படியே புறப்பட்டுப் போய் இயேசுநாதர் தனக்குச் செய்த அற்புதங்களைத் தெக்காப்போலென்னும் பத்து ஊராருக்குச் சொல்லவே, எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள் (மாற். 5).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆண்டவர் நமக்குச் செய்தருளின அற்புதங்களையெல்லாம் அடிக்கடி நினைத்து அவருடைய பெருமையையும் உபகாரங்களையும் எங்கும் வெளிப்படுத்தி நன்றியறிந்தவர்களாயிருப்போமாக.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, உமது மகிமையின் அற்புதங்களை வெளிப்படுத்தும்படி என் நாவில் நன்றியறிந்ததனத்தைப் பதிப்பித்தருளும். (சங். 70).

பிரதிக்கினை.—நான் இப்போதிருக்கிற தன்மை தேவ கிருபையால்தான் ஆயிற்றென்று அர்ச். சின்னப்பரோடு சொல்லித் தாழ்ச்சியுள்ள நன்றியறிந்த தனத்தை அடிக்கடி காண்பிப்பேனாக (1 கொரி. 15).

3-ம் பிரிவு.

ஜெராசேனிய நாட்டாரின் துநட்டாட்டம்

தியானம்.—சம்பவித்ததெல்லாம் அறிந்து திரளாயோடிவந்த அந்நாட்டுச் சனங்கள் பன்றி மந்தைகள் காணாமற்போனதினாலே மிகவும் பயந்து, இயேசுநாதர் தங்கள் ஊரை விட்டுப்போக அவரை மன்றாடினார்கள். அசுத்தமும் பாவமுமுள்ள இலாபத்தைப்பற்றிக் கேட்ட இந்த மன்றாட்டுக்குத் தண்டனையாக அவர் உடனே தோணியிலேறித் திரும்பிப் போய்விட்டார். (லூக். 8).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உலோபித்தனத்தாலுண்டாகும் அகோர சோதனையிலேயும் மாய்கையிலேயும் நீ அகப்படாமல் தரித்திர வார்த்தைப்பாட்டினால் தப்பித்துக்கொண்டதற்காக ஆண்டவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய். மேலும் சர்வேசுரனல்லாத எல்லாவற்றையுஞ் சர்வேசுரனண்டைக்கும் அவர் உனக்கு வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிற நித்திய பேரின்ப பாக்கியத்துக்கும் உன்னைக் கூட்டிக்கொண்டு போகாத சகலத்தையும், அதிகமதிகமாய் வெறுத்துவிடுவாயாக.

சம்பாஷணை.—இன்றையத் திருநாளுக்குரிய அர்ச்சியசிஷ்டவரோடு சம்பாஷணை செய்வாயாக.

இருபத்தோன்பதாம் தியானம்.

இயேசுநாதர் கப்பர்நாவுமூருக்குத் திரும்பிவந்து ஒரு திமிர்வாதக்காரனைச் சோஸ்தப்படுத்தினது

ஆயத்தச் சிந்தனை.—திமிர்வாதக்காரனைக் கட்டிலில் வைத்து இயேசுநாதரண்டையில் கொண்டுவந்ததைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—அவனிடத்திலுண்டான விசுவாசம் நம்பிக்கையைக் கேட்பேனாக.

முதல் பிரிவு

திமிர்வாதக்காரனிடத்திலுண்டான துணிவுள்ள விசுவாசம்

தியானம்.—இயேசுநாதர் கப்பர்நாவுமூருக்குத் திரும்பி வந்தபோது, அவ்வூரார் காண்பித்த ஆர்ப்பரிப்பு அவருக்கு ஜெராசெனிய நாட்டார் செய்த அவமானத்துக்குத் தகுந்த பரிகாரமாயிற்று. அவர் ஊரில் பிரவேசித்துத் தாம் இருந்த வீட்டில் சேர்ந்த செய்தியை அவ்வூரார் அறிந்த மாத்திரத்திலே, அவரைக் காணவந்த திரளான சனக் கூட்-

டத்தின் நெருக்கிடையால், வியாதிஸ்தர் அவரண்டையில் சேரும்படி வீட்டுக்குள் பிரவேசிக்கக் கூடாமையாயிருந்தது. அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறதுபோல, திமிர்வாதக்காரனை ஒருவனைக் கட்டிலில் வைத்து நாலுபேர் சுமந்துகொண்டுவந்தார்கள். ஆனால் அவனை உள்ளே கொண்டுபோய் அவர் சமுகத்திலே வைக்க எப்பக்கத்திலும் அவர்களுக்கு வழியில்லாததினால், வீட்டின்மேலேறி ஓட்டைப்பிரித்து அதின்வழியாய்ச் சபைநடுவில் இயேசுநாதர் முன்பாக அவனைக் கட்டிலோடு இறக்கினார்கள் (லூக். 5, மாற். 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தாமதமின்றி இயேசுநாதரண்டையில் சேருகிறதற்கு வியாதிக்காரனெடுத்த உபாயத்தைப் பார்க்கையில், அவனிடத்திலுண்டான விசேஷ துணிவையும் அதை நிறைவேற்றின சுறுசுறுப்பையுங் கண்டு நாம் ஆச்சரியப்படவேண்டியதாயிருக்கிறது. இது இரட்சகருக்குப் பிரியமாயிருந்ததினாலே, அவன் நினைத்தது அநுகூலமாயிற்று. ஆனால் இந்த நினைவு அவனுக்கு எப்படி வந்ததென்றால், தான் பட்ட வியாதியின் வருத்தத்தினாலும், அது தீரவேணுமென்கிற ஆசையினாலும் வந்ததாமே. வியாதி சொஸ்தமாகிறதற்காக மனிதர்கள் எவ்வளவோ பிரயாசப்படுகிறார்கள்? கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிறதுபோல, சரீர வியாதியை அறிவதுபோல் ஆத்தும வியாதியையும் அதின் வருத்தத்தையும் அறிவோமானால், அதற்கு அவுழ்தந்தேடி, மிகவும் பிரயாசப்பட்டுச் சுறுசுறுப்போடும் நிலைமையோடும் நாம் படும் பிரயாசத்துக்குத் தக்கது நமக்கு அநுகூலமுண்டாகும்; சிலவிசை அநேக வருஷமாய் நாம் புண்ணியத்தில் விருத்தியடைகிறதற்கு விக்கினஞ் செய்கிறதும் தீராத வியாதியாகக்கூடியதுமான இந்த ஞானத் திமிர்வாதத்தில் நின்று கடைசியாய் நாம் எழுந்திருப்போம்.

மனப்பற்றுதல்.—உன் ஆத்தும வியாதிகளுக்கு வெகு சீக்கிரத்தில் நல்ல மருந்து கொடுக்கிறதற்காக இவைகளை நீ நன்றாய் அறிய வரப்பிரசாதங் கேள்.

பிரதிக்கினை.—சர்வேசுரன் நமக்கு வருவிக்கும் நல்ல விசாரங்களை உடனே நிறைவேற்றுவோமாக.

2-ம் பிரிவு

திமிர்வாதக்காரன் ஆத்தும ஆரோக்கியமடைந்தது

தியானம்.—இயேசுநாதர் அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, நம்பிக்கையாயிரு; உன் பாவங்கள் உனக்குப் பொறுக்கப்பட்டனவென்றார் (மத். 9). திமிர்வாதக்காரன் சரீர செளக்கியத்தைத் தேட வந்திருக்கையில், இயேசுநாதர் அவன் ஆத்துமத்துக்கு ஆரோக்கியத்தைக் கட்டளையிடுகிறார். அவன் செய்த பாவங்களுக்கெல்லாம், அவன் இருதயத்தில் உத்தம மனஸ்தாபத்தை எழுப்பி அவைகளுக்கெல்லாம் பாவ மன்னிப்பைக் கொடுக்கிறார். ஆனால் சரீரத்துக்கு ஆரோக்கியத்தைக் கட்டளையிடுமுன்னே, இரட்சகர் ஏன் அவன் ஆத்துமத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கச் சித்தமானார்? தாம் சகலத்துக்குமேலாக மனிதருடைய ஆத்துமங்களைச் சொஸ்தமாக்கி இரட்சிக்க வந்தாரென்று காண்பிக்கவும், நமது சரீரநன்மையைப் பார்க்க நாம் அளவற்ற பிரகாரமாய் நமது ஆத்தும இரட்சணியத்தையும் அதின் பரிசுத்தத்தையும் எந்நேரமும் தேடவேணுமென்று நம்மில் ஒவ்வொருவருக்கும் இத்தால் நினைப்பூட்டவும், இப்படிச் செய்யச் சித்தமானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விடத்தில் நமது திவ்விய குரு நமக்கு அறிவிக்கும் போதனையின் ஞானத்தையுங் கனத்தையும் நாமெல்லாருங் கண்டுபிடிக்கிறோம்; ஆனால் இதின்படி நாம் எப்போதும் நடந்து வருகிறோமோ? நமது சரீர செளக்கியத்தைப்பார்க்க நமது ஆத்தும நன்மையின்பேரில் நாம் வழக்கமாய்க் கவலை வைத்திருக்கிறது உண்மையோ? இதின்பேரில் உன் நினைவு வார்த்தை கிரியைகளை நன்றாய் ஆராய்ந்துபார். நீ காலமே விழிக்கும்போது, உன் முதல் நினைவு உன் ஆத்துமத்தைச் சார்ந்ததா அல்லது சரீர சம்பந்தமானதா? பகல் நேரத்

தில் நீ எதை அதிகமாய் நினைக்கிறாய், ஆத்துமத்தையா, சரீரத்தையா? நீ பேசிப் புழங்குகையில் உன் ஆத்தும வியாதியின்பேரிலும் அதற்கான அவிழ்தத்தின் பேரிலும் பேசுகிறதைப் பார்க்க, உன் சரீர வருத்தங்களின்பேரிலும் அவைகளைத் தீர்க்கத்தக்க அவிழ்தங்களின்பேரிலும், அதிகமாய் அடிக்கடி பேசுகிறதில்லையா? கடைசியாய் நீ நடக்கிற வகையில் உன் ஆத்துமத்துக்குக் கேடாக உன் சரீரத்தைப் பேணி அது சுகமடைய எத்தனையோ காரியஞ் செய்கிறாய்?

மனப்பற்றுதல்.—மோசமுள்ள இப்பேர்க்கொத்த குருட்டாட்டத்தை மெய்யென்று ஒத்துக்கொண்டு அழுது வெறுத்துத் தள்ளுவோமாக.

பிரதிக்கினை.—அன்றன்றுள்ள எங்களப்பம் எங்களுக்கு இன்று தாருமென்று நான் சொல்லும்போது, என் ஆத்துமத்தின் அவசரத்தையும் எல்லாத்தையும் பார்க்க அதை நன்றாய் விசாரிக்க என்பேரில் சுமந்திருக்கிற கடனையும் நினைப்பேனாக.

3-ம் பிரிவு

திமிர்வாதக்காரன் சரீர செளக்கியமடைந்தது

தியானம்.—இவன் ஆத்தும ஆரோக்கியமடைந்தவுடனே சரீர செளக்கியத்தையும் அடைந்தான். இப்படி இயேசுநாதர் பிரசித்தமாய்ச் செய்த புதுமையினாலே, தாம் மெய்யாகவே சர்வேசுரனென்றும், வேதபாரகரும் பரிசேயரும் ஆட்சேபித்ததற்கு விரோதமாய்த் தாம் பாவங்களைப் பொறுக்க மெய்யாகவே அதிகாரமுள்ளவரென்றுஞ் சகலருக்கும் விசேஷமாய் அவ்வேதபாரகருக்கும் பரிசேயருக்கும் எண்பிக்கச் சித்தமாகி அவர்களைப் பார்த்து: மனுமகன் பூவுலகில் பாவங்களைப் பொறுக்க அதிகாரமுடையவனாயிருக்கிறானென்று நீங்கள் அறியும்படியாகத் திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்திருந்து உன் கட்டிலை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போவென்று உனக்குக் கற்பிக்கிறேன் என்றார். என்றவுடனே அவன் எழுந்

திருந்து கட்டிலை எடுத்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான் (மத். 9; மாற். 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதைக் கண்ட ஜனங்கள் யாவரும் திகிலடைந்து, மனுஷருக்கு இப்பேர்ப்பட்ட அதிகாரத்தைத் தந்தருளின சர்வேசுரனைத் துதித்தார்கள் (மத். 9). நாமும் அவர்களோடு ஒன்றித்து நமது பாவங்களைப் பொறுக்க இந்த அதிகாரத்தை இயேசுநாதர் குருக்களுக்குக் கொடுத்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக.

சம்பாஷணை.—முந்தின இரண்டு பிரிவில் சொல்லிய மனப்பற்றுதல், பிரதிக்கினைக்கொத்தபிரகாரம் இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக.

முப்பதாம் தியானம்.

அர்ச். மத்தேயுவை அப்போஸ்தலராகத் தெரிந்துகொண்டது

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் அர்ச். மத்தேயுவைப் பார்த்து என்னைப் பின்சென்று வாவென்று சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—என் தேவ அழைத்தலின் கடமைகளை நிறைவேற்றுவதில் பிரமாணிக்கனாயிருக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

அர்ச். மத்தேயு ஆச்சரியமான பிரகாரம் அழைக்கப்பட்டது

தியானம்.—இயேசுநாதர் கப்பர்நாவுமூரைவிட்டுக் கடலுக்கடுத்துப்போகையில், அங்கே அல்பேயு மகனான லேவியென்று சொல்லப்பட்ட மத்தேயு என்பவன் ஆயத்துறையில் உட்கார்ந்திருக்கக் கண்டு அவனை நோக்கி: என்னைப் பின்சென்று வாவென்றார். (மத். 9, மாற். 2). இவன்

தெரிந்துகொள்ளப்பட்ட விஷயத்தில், சகலமும் அபூர்வமானதும் ஆச்சரியத்துக்குரியதுமாயிருக்கின்றது. முதலாவது, தெரிந்துகொள்ளப்பட்ட மனிதன் யாரென்று பார்: உரோமாபுரியாருக்குப் பணவசூல்செய்யும் ஆயக்காரன் தானே; இத்தொழிலினால், அவன் தனது பட்டணத்தாருடைய நிந்தைக்கும் பகைக்குமுரியவனாயிருந்தான். ஆனால் இதில் புரட்டுருட்டுச் செய்வது இலேசானதால் இவன் இலௌகீக சுகபோக ஆசைக்குத் திருப்தி வருவிக்கக்கூடுமான அந்தஸ்திலிருந்தான். மேலும் இயேசுநாதர் இவனை எந்தச் சமயத்தில் அழைத்தார்? ஆயத்துறையில் உட்கார்ந்து அதற்கடுத்த கணக்குகளைப் பார்த்துக்கொண்டிருக்கும் சமயத்திலேதான் அழைத்தார். எவ்விதமாய் அழைத்தார்? அப்பாதையாய்த் தாம் நடந்துபோகையில், இவனைத் தமது கடைக்கண்ணாற் பார்த்து நீ என்னைப் பின்சென்று வாவென்ற ஒரே வார்த்தையினால் அழைத்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் உன்னை அழைத்தபோது, நடந்த பற்பல விசேஷங்களை நினைத்துப் பார்ப்பாயாகில், அவைகளில் அநேக அபூர்வமான காரியங்கள் இருக்கின்றனவென்று நீயே அறியலாம். உன்னைப்பார்க்க நல்லவர்களுந் திறமையுள்ளவர்களுமான அநேகம் பேரிருக்க, அவர்களைத் தெரிந்துகொள்ளாமல் உன்னைமாத்திரம் விசேஷமாய்ச் சர்வேசுரன் தெரிந்துகொண்டதும், இன்னமுஞ் சிலவிசை நீ ஆகாத காரியங்களை நினைத்துக்கொண்டிருக்குஞ் சமயத்திலே தானே, அவர் உன் இருதயத்தில் பேசி உன்னை அழைத்துக்கொண்டதும், அவர் உன்பேரில் வைத்த விசேஷ பட்சத்துக்கு அடையாளமல்லவோ? இதைக்குறித்து நீ என்ன நினைக்கவேணும்?

மனப்பற்றுதல்.—உன் ஆண்டவராகிய சர்வேசுரனுக்கு நீ தோத்திரஞ் செய்யவும் நன்றியறிந்ததனங் காண்பிக்கவும் உனக்குப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவர்களும் உன் காவலான சம்மனசானவரும் உன்னோடு சேர்ந்து ஆண்டவரைத் துதிக்கும்படி அவர்களை மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—என் தேவ அழைத்தலில் காணப்பட்ட வரப்பிரசாதத்தின் அற்புதங்களை நான் ஆறுதலற்றிருக்குஞ் சமயத்தில் நினைத்துக்கொள்வேனாக.

2-ம் பிரிவு

அர்ச். மத்தேயு என்பவரிடத்தில் விளங்கின ஆச்சரியமுள்ள பிரமாணிக்கம்

தியானம்.—அர்ச். மத்தேயு சர்வேசுரன் தன்னை அழைத்ததற்குக் காண்பித்த பிரமாணிக்கமுஞ் சுறுசுறுப்பும் அவருடைய தேவ அழைத்தலில் விளங்கின ஆச்சரியத்தைவிடச் சொற்பமானதல்ல. ஏனென்றால், இயேசுநாதர் தன்னை அழைத்த சத்தத்தைக் கேட்டமாத்திரத்திலே, இவர் உடனே எழுந்திருந்து எல்லாத்தையும் விட்டு அவரைப் பின்சென்றார் (மத். 9.) வேதத்தை மறுதலித்த ஜூலியான் இராயன், இது முழுதும் பொய் அல்லது பயித்தியமென்று சொல்லிக்கொண்டுவந்தான். ஏனெனில் உலக தொல்லையில் அகப்பட்டு, இலௌகீக சுகசெல்வத்தை நாடிப் பண ஆசைகொண்டு திரிந்தவன், ஒருக்ஷணத்துக்குள்ளாக ஞானியும், ஒறுத்தலுள்ளவனும், தன் இலாபத்தைத் தேடாமல் தன்னைத்தானே மறந்தவனுமானது தேவ வரப்பிரசாதத்தின் சர்வ வல்லபமுள்ள அநுக்கிரகத்தினால் நடந்ததொழிய வேறுவிதமாய் நடந்ததென்று சொல்லக்கூடாது. உலகமானது இப்பேர்க்கொத்த தேவ வரப்பிரசாத அற்புதங்களை அடிக்கடி பார்த்திருந்தாலும், இவைகளைக் கண்டுபிடிக்கிறதில்லை; ஏனென்றால் அதனிடத்தில் விசுவாசமில்லாததினாலும், விசுவாசமின்றி இவைகளைக் கண்டுபிடிக்கக் கூடாததினாலும், உலகம் இவைகளைக் கண்டுபிடிக்கக் கூடாதென்று சொல்லவேணும். ஆகிலும் இவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களும் இவைகளைக்கொண்டு விசேஷ நன்மையைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கடைசியிற் சொல்லப்பட்டவர்களுக்குள்ளே நீயும் ஒருவ

னல்லவோ? ஒருவிதத்தில் உன்னையுமல்லாமல் உன் கருத்துக்கு விரோதமாய் உன்னிடத்தில்தானே தேவ வரப்பிரசாதம் நடத்திவந்த அற்புதம் எப்பேர்க்கொத்ததென்று சொல்லத்தகும்? அத்தேவ வரப்பிரசாதத்துக்குக் காது கொடாமல், இலௌகீக நன்மைகளையுஞ் சுக போகங்களையும் நீ தேடிக்கொண்டு திரிகையில், திடீரென்றாற்போல் உன் புத்தியைத் தெளிவித்துச் சர்வேசுரனையிராததும் நித்தியமாயிராததுமான காரியமெல்லாம் வீணானதென்று நீ காணச் செய்ததும், மனம்பொருந்தித் தரித்திரனாய் என்னைப் பின்செல்லுவாயாகில், இம்மையில் ஒன்றுக்கு நூறாகப் பலனையும் மறுமையில் நித்திய சீவியத்தையும் அடைவாயென்று இயேசுநாதர் சொன்ன மேலான போதனையை நீ கண்டுபிடிக்கவும் அதின்பேரில் பிரியப்பட்டு அதை அநுசரிக்கவுஞ் செய்தது தேவ வரப்பிரசாதமாமே (மாற். 10.)

மனப்பற்றுதல்.—சர்வ வல்லபமுள்ளவர் என்னிடத்தில் பலத்த காரியத்தைச் செய்தருளினாரென்று பரிசுத்த கன்னியாஸ்திரி சொன்னதற்கொத்த பிரகாரந் தேவ வரப்பிரசாதமானது என்னிடத்திலும் நிறைவேற்றின பலத்த காரியங்களை நினைத்து அந்த ஆண்டவளோடே நானுஞ் சந்தோஷப்படுவேனாக.

பிரதிக்கினை.—என்னிடத்தில் மனத்தத்தளிப்பான சோதனை உண்டாகும்போது, தேவ வரப்பிரசாத உதவியைக்கொண்டு நான் செய்யக்கூடுமானதை நினைத்துக் கொள்வேனாக.

3-ம் பிரிவு

அர்ச். மத்தேயு என்பவரிடத்தில் விளங்கின ஆச்சரியமான நன்றியறிதல்

தியானம்.—அர்ச். மத்தேயு தேவ வரப்பிரசாதத்தினால் தெளிவடைந்து ஆண்டவர் தன்னை அழைத்ததினால் தனக்கு வந்த விலைமதியாத நன்மையைக் கண்டுபிடித்தார். இதற்காகச் சர்வேசுரன் முன்பாகவும் மனுஷர் முன்பாகவும் பிரசித்தமாய்த் தன்னுடைய நன்றியறிதலைக் காண்

பிக்க வழிதேடி, இயேசுநாதருக்கு உச்சிதமான விருந்து செய்ய நினைத்து, அவரை அழைத்தார். இயேசுநாதரும் அதற்குச் சம்மதித்தார். இதைப்பற்றி அர்ச். லூக்காஸ், லேவியென்பவர் தன் வீட்டில் அவருக்குப் பெரிய விருந்து செய்வித்ததாக எழுதிவைத்தார் (லூக். 5) மேலும் அநேக ஆயக்காரரும் பாவிகளும் அவரோடும் அவருடைய சீஷாக்களோடுங்கூடப் பந்தியில் அமர்ந்திருந்தார்களென்று அர்ச். மாற்கு சொல்லியிருக்கிறார் (மாற். 2.) இந்தப் புதிய சீஷன் தன் குருவுக்கு அவர்களெல்லாரையும் வசப்படுத்தவும், அவர்களில் சிலர், தன்னைப்போல மனம் பொருந்தி சரித்திரத்தை அநுசரிக்கவும் அவர்களை விருந்துக்கு அழைத்தாராம். இப்படியே இயேசுநாதருக்குத் தன் நன்றியறிந்தகனத்தை இருமடங்காய்க் காண்பித்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னைச் சர்வேசுரன் அழைத்த உபகாரத்துக்கு நீ நன்றியறிந்ததனத்தைக் காண்பிக்க ஆசைப்பட்டால், அர்ச். மத்தேயுவைக் கண்டுபாவித்து, அவரைப்போல சர்வேசுரனிடத்தில் மனிதர்களைக் கொண்டுவந்து சேர்க்கவும், அவருக்கு அவர்களை வசப்படுத்தவுங் கிடைக்குஞ் சமயங்களை இழந்துபோகப்படாது; மேலும் பகுத்தறிவும் விமரிசையுமுள்ள உன் பேச்சுகளைக்கொண்டாவது, விசேஷமாய் உன் பரிசுத்த நடக்கையைக்கொண்டாவது அநேகர் சந்நியாச அந்தஸ்தில் உட்படவும் பிரயாசப்படவேணும். நீ இந்தப் பிரகாரமாய் உன் நன்றியறிந்ததனத்தைக் காண்பிக்கிறாயோ?

சம்பாஷணை.—இரட்சகரால் தெரிந்துகொள்ளப்பட்ட புது அப்போஸ்தலரோடே சம்பாஷணை செய். இவரை வாழ்த்தி இவர் உனக்கு உதார மனதையும், இயேசுநாதர்பேரிலும் உன் பரிசுத்த அந்தஸ்தின் உத்தமதனத்தின் பேரிலும், மிகுந்த சிநேகத்தையும் இரந்து மன்றாடக் கேட்பாயாக.

முப்பத்தோராம் தியானம்

நமது தேவ அழைத்தலின் மேன்மையின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—என்னைத் தெரிந்துகொண்டது நீங்களல்ல, நானே உங்களைத் தெரிந்துகொண்டேனென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—நாம் அழைக்கப்பட்ட அந்தஸ்துக்குத் தக்கபிரகாரம் எப்போதும் நடக்க வரப்பிரசாதங் கேட்போமாக.

முதல் பிரிவு

நமது தேவ அழைத்தலின் துவக்கம்

தியானம்.—நமது தேவ அழைத்தலின் துவக்கம் பரலோகத்துக்குரியதும் தெய்வீகமானதுமென்று சொல்லக்கூடும், சொல்லவும் வேணும். ஏனென்றால் வருத்தங்கள் நிறைந்ததுஞ் சகலத்திலும் பலிக்குரியதுமான அந்தஸ்தில் பிரவேசிக்கிறதற்காகத் தந்தை, தாய், ஆஸ்தி, சுகசெல்வம், மனச்சுதந்தரமாகிய மனிதருக்கு அதிக பிரியமான எல்லாவற்றையும் விட்டுவிடுகிறதென்ற நினைவானது நமது உள்ளத்தில் நின்று வரக்கூடுமானதல்ல; இது நமது மனவிருப்பத்துக்கு அதிக விரோதமான காரியம். உலகத்தில் நின்று இந்த நினைவு வந்ததல்ல; ஏனென்றால் உலகம் இதை முழுதும் பயித்தியமென்று எண்ணுகிறது. பசாசானது இதை முழுதும் அருவருக்கிறதினாலே, அதினாலும் இந்த நினைவு வரவில்லை. இதிப்படியாகையில், சர்வேசுரனால்தானே இது வந்ததுமன்றி அவரால் மாத்திரம் வரவுங் கூடுமென்று சொல்லவேண்டும். இதைக்குறித்து இயேசுநாதர் சொல்லியிருக்கிறதைக் கேள்: என்னைத் தெரிந்துகொண்டது நீங்களல்ல, நானே உங்களைத் தெரிந்துகொண்டேனென்றார். மீண்டும் உத்தம விரத்தத்துவத்துக்கடுத்த மேலான புத்தியை எல்லாருங் கண்டுபிடிக்கிறதில்லை, இதற்குக் குறிக்

கப்பட்டவர்கள் மாத்திரம் இதை உணர்ந்துகொள்ளுகிறார்களென்று திருவுளம்பற்றினார் (மத். 19).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதிப்படியாகக்கொள்ள, நமது அழைத்தலின் துவக்கம் மெய்யாகவே பரலோகத்தில் சர்வேசுரன்வரைக்கும் ஏறிப்போயிருக்கின்றது. மேலான இந்த நினைவானது எப்போதும் நமது புத்தியில் இருந்தால், சகலமும் நமது அற்ப ஆசைகளும் கிரியைகளும் முதலாய் நம்மிடத்தில் மகத்தானவைகளும் மேன்மையுள்ளவைகளுமாகும். மேலும் வழக்கமாய்ச் சில சந்நியாசிகள் அற்ப நினைவுள்ளவர்களாய்த் தங்கள் கீர்த்தி, சௌக்கியம், சுகசெல்வங்களை நாடித் தங்கள் சுய பற்றுதலினின்று வெளியேறவும், உதாரமும் மேன்மையுமான யாதொரு புண்ணிய முயற்சியைச் செய்யவுங்கூடாமல் போனதுபோல் நாம் இருக்கமாட்டோம். ஆகிலும் அவர்களிடத்திலுள்ள இப்போர்க்கொத்த நோக்கங்களை உன்னிடத்திலுங் காண்கிறதில்லையோ? அவைகளைத் தடுக்க எவ்விதமாய்ப் பிரயாசப்பட்டாய்?

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுடைய பிள்ளைகளுக்குரிய மேன்மையான நினைவை நாங்கள் விட்டுவிடாதிருக்கச் செய்யுஞ் சுவாமி.

பிரதிக்கினை.—நாம் சன்னஞ் சன்னமாய்க் கெட்டுப் போகாதபடிக்கு, எப்போதும் எச்சரிக்கையாயிருக்க வேணும்.

2-ம் பிரிவு

நமது தேவ அழைத்தலின் கதி

தியானம்.—நமது தேவ அழைத்தலின் கதி ஏது, நாம் சந்நியாசத்தில் ஏன் பிரவேசித்தோமென்று கேட்டால், உலகத்தின் ஆபத்துக்களிலும் மாய்கைகளிலும் அகப்படாதிருக்கவுஞ் சர்வேசுரனுக்கு ஏற்காத குற்றங்களைக் கட்டிக்கொள்ளாதிருக்கவும், நித்திய சீவியத்தை நிச்சயமாயடையவும், நம்மாலானமட்டுஞ் சுவிசேஷத்துக்கடுத்த மேலான புத்திகளை அநுசரித்து இயேசுநாதருக்

கொத்தவர்களாகிப் பரலோகத்திலே உயர்ந்த மகிமை பாக்கிய வரிசையை அடையவும், இவ்வுலகத்தில்தானே நமது பாவத்துக்கு உத்தரிக்கவுங் கடைசியாய் நாம் ஞானிகளாய்ச் சர்வேசுரனுக்குகந்தவர்களும் அர்ச்சியசிஷ்டவர்களுமாகவுஞ் சந்நியாசத்தில் பிரவேசித்தோமல்லாமல் மற்றப்படியல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். பெர்நார்தென்பவர் காலமேதோறுந் தம்மை நோக்கி: பெர்நார்தே, பெர்நார்தே, நீ இங்கே எதற்காக வந்தாயென்று கேட்டுக்கொண்டதுபோல, நாமும் எப்பொழுதும் விசேஷமாய்க் காலமே எழுந்திருக்கும்போது நமது அந்தஸ்தின் மகா மேன்மையான கதிகளை நினைத்துக் கேட்டுக்கொள்வோமாக. அப்போது அவரைப்போல், நாமும் இடைவிடாமல் பத்தியில் வர்த்திக்கிறதுமன்றித் தப்பாமல் சில வருஷத்துக்குள்ளாக மிகுந்த சாங்கோபாங்கத்தை அடைவோம்.

மனப்பற்றுதல்.—என் பரிசுத்தமான அந்தஸ்தின் மேன்மையை நான் எப்போதும் அதிகமதிகமாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

பிரதிக்கினை.—நான் காலமேதோறும் எழுந்திருக்கும்போது, ஏன் உலகத்தை விட்டு விட்டேனென்று நினைத்து, அர்ச். பெர்நார்தென்பவர் வழக்கமாய்ச் செய்த மிகவும் பலனுள்ள முயற்சியை என் சீவியகாலமெல்லாஞ் செய்வதில் பிரமாணிக்கனாயிருக்கப் பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

நமது தேவ அழைத்தலுக்கு வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட சம்பாவனை

தியானம்.—நமது தேவ அழைத்தலின் மேன்மையை நாம் மெத்தவும் பாராட்ட உதவியாயிருக்கக் கூடுமானதேதென்றால், இரட்சகர் அதற்குச் செய்திருக்கிற வாக்குத்தத்தங்களாமே. மற்ற எவ்வித சுகிர்த கிரியைகளுக்குஞ் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பார்க்க, மேற்சொல்லிய

வாக்குத்தத்தங்கள் மகா உச்சிதமானவை; இதைப்பற்றித் தேவ சந்நிதியில் சந்நியாச வார்த்தைப்பாடுகளைக் கொடுத்தல், பேறுபலனிலும் மேன்மையிலும் மற்றெல்லாக் கருமங்களைவிட உன்னதமானதென்று சொல்லவேண்டும். இந்த வாக்குத்தத்தங்களைக் குறித்துச் சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட வாக்கியங்களெல்லாவற்றையும் நீ பற்றும் பற்றாய் யோசித்துப் பார்த்தால், இது தெரியவரும். அப்படியே அர்ச். இராயப்பர் இயேசுநாதரை நோக்கி: இதோ நாங்கள் எல்லாத்தையுந் துறந்துவிட்டு உம்மைப் பின்பற்றி வந்தோமே; எங்களுக்கு என்ன கிடைக்குமென்றதற்கு, இயேசுநாதர் இராயப்பருக்கும் அவரைக் கண்டுபாவிக்கப் போகிற யாவருக்குங் கொடுத்த வாக்குத்தத்தமாவது: மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; மறு உத்தானத்தில் மனுமகன் தனது மகிமைச் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்சென்றவர்களாகிய நீங்களும் இசராயேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுக்கு நடுத்தீர்ப்பவர்களாய்ப் பன்னிரண்டு சிங்காசனங்களில் உட்கார்ந்திருப்பீர்களென்றார். பின்னும் இயேசுநாதர் சொன்னதாவது: என் நாமத்தினிமித்தம் அல்லது சுவிசேஷகராகிய அர்ச். மாற்குஸ் எழுதியிருக்கிறதுபோல, சுவிசேஷத்துக்கடுத்த உத்தமதனத்தினிமித்தம், வீட்டையாவது சகோதரரையாவது சகோதரிகளையாவது தகப்பனையாவது தாயையாவது பெண்சாதியையாவது பிள்ளைகளையாவது நிலங்களையாவது, விட்டுவிட்டவன் இம்மையிலே தானே நூறு மடங்கை அடைகிறதுமல்லாமல் மறுமையில் நித்திய சீவியத்தையும் அடைவானென்றார் (மத். 19, மாற். 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் தியானத்தை எப்போதும் நினைத்துக்கொள்ளுவாயாகில், நீ பாக்கியவான்தான்; ஏனென்றால், சந்நியாசிக்கு மிகவும் விலையேறப்பெற்ற உன் அந்தஸ்தைப் பாராட்டிச் சிநேகித்து, இதில் நிலைமையாயிருக்கிறதற்கு நிச்சயமான அச்சாரத்தை மேற்சொன்ன தேவவாக்கியங்களில் காண்பாய்; மேலும் இதில் புதிதான ஞானவலுவை நீ இடைவிடாமல் அடைவாய்; இதின் வழியாக உனக்கு நேரிடும் விக்கினங்களையெல்லாம் நீ செயிக்கலாம். மீளவும், இலௌகீக சம்பாத்தியத்தை மாத்திரந் தேடித்திரியும் உலகத்தாரால், வீரத்திலும் உதாரத்திலும் நீ தோர்வைப்பட்டாயென்று ஒருபோதும் உன்னைக்குறித்துச் சொல்லக்கூடாததாயிருக்கும்.

சம்பாஷணை—நமது பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்தை அடைகிறதற்குச் சர்வேசுரனுக்குப்பின் உதவியாயிருந்த பரிசுத்த கன்னியாஸ்திரியோடு சம்பாஷணை செய்வோமாக.

முப்பத்திரண்டாம் தியானம்

இயேசுநாதர் ஜயிரேன்பவனின் மகளை உயிர்ப்பித்ததின்பேரில்.

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் ஜயிரென்பவனின் மகள் கையைப்பிடித்து உயிர்ப்பிக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—உயிருள்ள விசுவாசத்தையும் செபத்தில் மட்டற்ற நம்பிக்கையையும் கேட்பாயாக.

முதல் பிரிவு

ஜயிரேன்பவன் செய்த விண்ணப்பம்

தியானம்.—அர்ச். மத்தேயு அழைக்கப்பட்ட மறு நாள் கப்பர்நாவுமூர்ச் செபக்கூடத்தின் தலைவனான ஜயிரென்பவன் இயேசுநாதரண்டையில் வந்து, அவர் பாதத்திலே விழுந்து வணங்கிப் பன்னிரண்டு வயதுள்ள தன் ஏக குமாரத்தி மரண அவஸ்தையாயிருக்கிறதினாலே, தன் வீட்டுக்கு அவர் எழுந்தருளிவர மிகவும் மன்றாடினான் (மத். 9, மாற். 5). இவன் செய்த மன்றாட்டு இயேசுநாதருக்குப் பிரியமாயிருந்ததினாலே புதுமை நடந்தது. இதில் நாம்

ஞானப்பிரயோசனம் அடையத்தக்கதாக இச்செபத்தின் குணங்களை யோசித்துப்பார்ப்போமாக: முந்தமுந்த இது தாழ்ச்சியுஞ் சங்கையும் பொருந்தினதாயிருந்தது; ஏனென்றால் இந்த மன்றாட்டைக் கேட்டவனுடைய வார்த்தையும் அவன் இருந்தவிதமுமே இதற்கு அத்தாட்சியாகும். 2-வது, ஆறுதலற்ற தகப்பன் இருதயத்தில் நின்று இது வந்ததினாலே, இது வேகமுள்ளதும் இரக்கத்தை வருவிப்பதுமாயிருந்தது. 3-வது, நேர்மையும் நம்பிக்கையுமுள்ளதாயிருந்தது. ஏனெனில் ஜயிரென்பவன் தான் படுங் கஸ்தியின் காரணத்தையும் இயேசுநாதரை அண்டி வந்ததின் நோக்கத்தையும் மாத்திரம் அறிவித்துவிட்டு, மற்றதெல்லாம் இரக்கமுள்ள அவருடைய இருதயத்துக்கொத்தபடி யாகட்டுமென்று நம்பிக்கையாயிருந்தான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ செய்யும் மன்றாட்டுகளில் இப்பேர்க்கொத்த குணங்களுண்டோ? அவைகளில் அத்தியந்த தாழ்ச்சியுஞ் சர்வேசுரனுடைய அளவில்லாத மகத்துவத்துக்கு யோக்கியமான உள்ளரங்க வெளியரங்க வணக்கமுங் காணப்படுகிறதோ? உன் நிருவாகத்தையறிந்து அதை நீயே தீர்க்கக்கூடாதென்று உணர்ந்து அம்மன்றாட்டுகளை வேகமான மனதோடே செய்கிறாயோ? தகப்பனண்டையில் ஓடிவரும் பிள்ளைக்கு மிகவும் இயல்பான நேர்மையும் நம்பிக்கையும் அநேகம்விசை அவைகளில் குறைவாயிருக்கிறதில்லையோ? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் மாறுத்தரம் நீயே தேடிப்பார்ப்பாயாகில், சிலர் நான் எப்போதுஞ் செபஞ்செய்தும், அதில் கேட்ட மன்றாட்டு அடையவில்லையென்று சொல்லும் வழக்கமான முறைப்பாட்டுக்குஞ் சிலவிசை நீதானே சொல்லும் முறைப்பாட்டுக்கும் இதில் மறுமொழி காணலாம்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, நாங்கள் செபஞ்செய்ய எங்களுக்குப் படிப்பித்தருளும் (லூக். 11).

பிரதிக்கினை.—நாம் செய்யுஞ் செபங்களில் குறையானதேதென்று பார்த்து அதற்கான அவுழ்தந் தேடுவோமாக.

2-ம் பிரிவு

ஜயிரென்பவனுடைய விசுவாசம்

தியானம்.—ஜயிரென்பவனுடைய விசுவாசத்துக்குப் பலத்த சோதனை நேரிட்டது. அவன் இயேசுநாதரோடுகூடத் திரும்ப வீட்டுக்கு வருகையில், வழியில் ஓர் ஆள் வந்து உம்முடைய குமாரத்தி இறந்துபோனாள்; இனி நீர் அவரை வருத்தப்படுத்தவேண்டாமென்றான். ஜயிரென்பவனோவென்றால், நம்பிக்கை இழந்துபோகாமல் இயேசுநாதரை நோக்கி: என் மகள் இறந்துபோனாள்; ஆகிலும் தேவரீர் வந்து உமது கரத்தை அவள்மேல் நீட்டியருளும்; அப்போது அவள் பிழைப்பாளென்றான். இந்த வார்த்தையை இயேசுநாதர் கேட்டு அவனுக்கு மாறுத்தரமாக நீ பயப்படவேண்டாம்; விசுவாசமாய் மாத்திரமிரு, அதாவது: விசுவாசத்தில் நிலைத்திரு; உன் மகள் பிழைப்பாளென்றார் (லூக். 8; மத். 9). சுவிசேஷத்தில் விவரிக்கப்பட்ட மனமிளகச்செய்யத்தக்க இச்சங்கதியை வாசிக்கையில், ஜயிருடைய விசுவாசத்தையோ அல்லது அவன் மன்றாட்டைக் கேட்டு அவன் விசுவாசத்துக்குச் சம்பாவனையளிக்க இயேசுநாதர் காண்பித்த தீவிரத்தையோ எதைக்கண்டு அதிகமாய் ஆச்சரியப்படவேணுமென்றறியோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்படி ஆச்சரியப்பட்டபின், நாம் கண்டுபாவிக்கவேண்டியதாவது: ஜயிருடைய விசுவாச நம்பிக்கையை அல்லது இவைகளில் அவனுக்கிருந்த நிலைமையைக் கண்டுபாவிப்போமாக; ஏனென்றால் விசேஷமாய் நமக்கு அடிக்கடி இந்த நிலைமைதான் குறைவாயிருக்கின்றது: நமக்கு நேரிடும் அற்ப விக்கினத்தினாலே நம்பிக்கையற்றுப் போகிறோம்; ஜயிரோவெனில் தன் நம்பிக்கை குறைந்துபோவதற்கான காரணங்கள் இருந்த சமயத்தில்தான் அதிக நம்பிக்கைகொண்டான். இதின்பின் அவன் மன்றாட்டைக் கேட்பதில் நமது திவ்விய இரட்சகர் காண்பித்த தீவிரத்தை நாம் கண்டுபாவிக்கவேணும். அதெப்படியென்றால், பிறர் நம்மிடத்தில் கேட்

கும் உபகாரத்தை உடனுக்குடனே செய்வோமாக. உடனே கொடுப்பது இரண்டுவிசை கொடுப்பதற்கொப்பாகுமென்பது சுலோகம். ஒரு காரியத்தை அநேகம் விசை கேட்கும்படி வழிவைத்துக்கொள்வது, சர்வேசுரன் சமுகத்திலும் மனுஷர் முன்பாகவுஞ் சுகிர்த கிரிகையின் பலனைக் குறைக்கிறதாம். நீ இதை நன்றாய் யோசித்துப் பார்த்தால், உன் நடக்கையில் சிலவற்றைச் சீர்படுத்தவேணுமென்று அறிந்துகொள்ளுவாயல்லவோ?

மனப்பற்றுதல்.—விசுவாசமும் அந்நியோந்நிய பிறசிநேகமும் உன்னிடத்தில் அதிகரிக்கக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—ஆண்டவரே, எங்களிடத்தில் விசுவாசத்தை அதிகரித்தருளுமென்று அப்போஸ்தலர்கள் கேட்ட மன்றாட்டை அடிக்கடி சொல்லுவேனாக (லூக். 17).

3-ம் பிரிவு

ஜயிருடைய மன்றாட்டுக்கும் விசுவாசத்துக்கும் பலனாகச் செய்யப்பட்ட புதுமை

தியானம்.—இயேசுநாதர் அவன் வீட்டுக்குள் பிரவேசித்து மரித்தவள் அண்டையில்போய் அவள் கரத்தைப் பிடித்துப் பலத்த சத்தமாய்: சிறுமியே, எழுந்திரு, உனக்குக் கட்டளையிடுகிறேனென்றார். உடனே அவள் ஆத்துமம் திரும்பவந்து அக்ஷணமே உயிர்த்தெழுந்து நடந்தாள். மேலும் அவளுக்குப் போசனங்கொடுக்க இயேசுநாதர் கற்பித்தார். அப்போது அவள் தந்தையும் தாயும் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள் (லூக். 8; மாற். 5).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தப் புதுமையின் செய்தி அந்நாடெங்கும் பரம்பினதென்று அர்ச். மத்தேயு எழுதியிருக்கிறார் (மத். 9). இதில் ஆச்சரியமானதொன்றுமில்லை; ஏனென்றால் செத்தவனை உயிர்ப்பிப்பதைப்பார்க்க, மகா பெரிதும் பிரஸ்தாபத்துக்குரியதுமான அற்புதம் வேறென்ன உண்டு? ஆகிலும் இதைவிட இன்னும் பெரிய புதுமை ஒன்றுண்டென்று அர்ச். பெர்நார்து எழுதிவைத்தார். அதேதென்றால், வெகு

நாளாய்ப் பாவ வழியில் திரிந்தவன் ஞானவிதமாய் உயிர்த்துப் புண்ணியத்தில் நிலைத்திருப்பதாம். சிலவிசை சர்வேசுரன் உன்னிடத்திலும் இத்தகைய புதுமை செய்யவில்லையோ? இன்னம் இதைப்போல பெரிதான புதுமை உண்டென்று அர்ச். பெர்நார்து மறுபடியுஞ் சொல்லியிருக்கிறார். அதென்னவென்றால், தவறிப்போன ஒரு சந்நியாசி பத்தி சுறுசுறுப்புக் குறைவாகிய கல்லறையில் நின்று உயிர்த்தெழுந்து, இனி ஒருக்காலும் அதில் பிரவேசியாதிருப்பதுதான். உனக்கு இவ்வித புதுமை நடக்கவேணுமானால், அதை அடைவதெப்படியென்று அவநம்பிக்கைப்படாதே. நாம் இப்போது கண்டுகொண்டதுபோல், விசுவாச நம்பிக்கையோடு பொருந்தின மன்றாட்டினாலே சகலமும் அடையக்கூடும்.

சம்பாஷணை.—நமது பாவங்களையும் பாராமல் சர்வேசுரன் நமக்குச் செய்தருளின எண்ணிக்கையில்லாத சகாயத்துக்குச் சாட்சியாயிருக்கிற நமது காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்வோமாக.

முப்பத்துமூன்றும் தியானம்

இயேசுநாதர் மூன்றுபேரை அற்புதமாய்க் குணமாக்கினது

ஆயத்தச் சிந்தனை.—பலவித பிணியாளிகள் இயேசுநாதரைச் சூழ்ந்துகொண்டிருக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—இயேசுநாதரை அறிந்து சிநேகிக்கிறதில் விருத்தியடைய வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

பெரும்பாடுள்ளவளான ஓர் ஸ்திரீ அற்புதமாய்க் குணமானது

தியானம்.—ஜயிருடைய மகளை உயிர்ப்பித்த அன்று தானே வேறே மூன்று புதுமைகளால் இயேசுநாதர் தமது

வல்லமையையுந் தயாளத்தையுங் காண்பித்தார். இவைகளின்பேரில் இன்றையத்தினம் தியானஞ் செய்வோமாக. முதலாவது, பன்னிரண்டு வருஷகாலமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ குணமான புதுமையாம். அவள் இயேசுநாதரைக் குறித்துக் கேள்விப்பட்டுத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: நான் அவருடைய வஸ்திரத்தின் விளிம்பைமாத்திரந் தொடுவேனாகில், ஆரோக்கியமாவேனென்று சொல்லி அவரைப் பின்சென்ற சனக்கும்பலின் நடுவே புகுந்து அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். அக்ஷணமே அவள் வியாதியெல்லாம் நீங்கி ஆரோக்கியமடைந்தாள் (மாற். 5; மத். 9). தான் சொஸ்தமடைவதற்கு அந்தப் பெண்பிள்ளை எடுத்த உபாயம் மனிதர் புத்திக்கு அற்பமென்கிலும் ஒத்ததல்ல, அவள்தானே இதைச் செய்யக்கூடுமோ இல்லையோவென்று கொஞ்சநேரந் தன் மனதுக்குள்ளே ஐயுறவுபட்டாளாக்கும். ஆகிலும் இதை நிறைவேற்றினாள். தேவ ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்ததே இவளுக்குப் பாக்கியமாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதை நாம் யோசித்துப் பார்க்கையில், முக்கியமாய் அநுசரிக்கத்தக்கதொன்று தெரியவருகிறது. அதேதெனில், நாம் பத்திக்குரிய காரியத்தை நடத்த யோசித்தபிறகு, அதினால் பற்பல விக்கினங்கள் உண்டாகுமென்பதைப்பற்றி அதை எளிதாய்த் தள்ளிப்போடக்கூடாது. அப்படியே ஞானமுயற்சிகளை எழுதின அர்ச். இஞ்ஞாசியார் சொல்வதாவது: நீ யாதொரு பத்திக்கடுத்த காரியத்தை நினைத்து அதை நிறைவேற்றவேணுமென்றிருக்கையில், அதைவிட்டுவிடவேணுமென்கிற சோதனை அநேகம்விசை உண்டாகும். ஏனெனில் அது விபரீதமும் ஆபத்துள்ளதும் பெருமைசிலாக்கியத்துக்கடுத்ததுமாயிருக்கிறதென்றும் அதை நிறைவேற்றுவது கடினமென்றுங் கூடாததென்றும் உனக்குத் தோன்றும். இவ்வித சோதனை நன்மையைப் பகைக்குஞ் சத்துருவினாலே ஏற்படுகிற பயங்கரத் தோற்றமேயன்றி வேறல்ல; இதை நீ சட்டைபண்ணாமல் முன்செய்த தீர்மானப்படி நடந்துகொள். உலகத்தாருடைய புத்திக்கொத்த

பிரகாரம் நடக்கிறதினால் அற்புதங்களை நாம் அடைகிறதுமில்லை, பலத்த காரியங்களைச் செய்யப்போகிறதுமில்லை.

மனப்பற்றுதல்.—வேண்டிய சமயத்திலே மனுஷர் யோசனையைத் தள்ளிப்போட்டுத் தேவ ஞானத்துக்கொத்த பிரகாரம் நடக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

பிரதிக்கினை.—நல்ல கருத்திலுஞ் செய்த பிரதிக்கினையிலும் நிலைமையாயிருப்பாயாக.

2-ம் பிரிவு

இரண்டு குருடர்கள் அற்புதமாய்ப் பார்வை அடைந்தது

தியானம்.—இயேசுநாதர் ஜயிரென்பவனுடைய வீட்டைவிட்டு தாம் வாசம்பண்ணின இடத்துக்குப் போகையில், இரண்டு குருடர் அவரைப் பின்சென்று: தாவீதின் குமாரனே, எங்கள்பேரில் இரக்கமாயிருமென்று கூப்பிட்டுக்கொண்டுபோனார்கள். இயேசுநாதரோவெனில் இதைக் கவனியாதவர்போல் நடந்துபோனார். ஆனால் அவர் தமது இல்லிடத்தில் சேர்ந்தபோது, அந்தக் குருடரும் அவரண்டையில் நெருங்கி முன்சொன்னதுபோல மன்றாடினார்கள். அப்போது இயேசுநாதர் அவர்களை நோக்கி: நீங்கள் விரும்புகிறதை உங்களுக்குச் செய்ய நான் வல்லவனாயிருக்கிறேனென்று விசுவசிக்கிறீர்களோவென்றார். அதற்கு அவர்கள்: ஆம் ஆண்டவரே, விசுவசிக்கிறோமென்றார்கள். அப்போது அவர்களுடைய கண்களை அவர் தொட்டு உங்கள் விசுவாசத்தின்படியே உங்களுக்காகக்கடவதென்று திருவுளம்பற்றினார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன (மத். 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—முந்தமுந்த, இந்தக் குருடர்கள் பர்வனையாய்த் தேவ வரப்பிரசாதமும் தேவசகாயமுங் கிடைக்கத்தக்க சமயங்களை பயன்படுத்திக்கொள்வோமாக. என் சர்வேசுரா சுவாமி, நான் இதை நிறைவேற்றுவதில் அதிக பிரமாணிக்கமாயிருந்திருந்தால் இப்போது எவ்வளவோ ஞான திரவியங்களை அடைந்திருப்பேன்! 2-வது, ஆண்டவர் நாம் செய்யும் மன்றாட்டு

களைக் கேளாதவர்போலும் அங்கீகரியாதவர்போலுமிருந்தாலும், அந்தக் குருடர்களைப்போல நாம் கேட்கும் மன்றாட்டில் நிலைத்திருப்போமாக; 3-வது, விசேஷமாய் நமது திவ்விய இரட்சகருடைய வல்லபத்தின்பேரிலுந் தயவின்பேரிலும் உயிருள்ள விசுவாச முயற்சிகளை அடிக்கடி புதுப்பிப்பதினால், அவ்விசுவாசத்தை திடப்படுத்துவோமாக. "உங்கள் விசுவாசத்தின்படியே உங்களுக்காகக் கடவது" என்றதினிமித்தம், அவரது உதாரக்கொடைகளை நாம் பெறுவதற்கு இந்த விசுவாசத்தையே பிரதான நிபந்தனையாகவும் பிரமாணமாகவுங் கொண்டிருக்கிறாரென்று தோன்றுகிறது.

மனப்பற்றுதல்.—செபத்தின் பேரில் மெய்யான பற்றுதலைக் கேட்போமாக.

பிரதிக்கினை.—"சுவாமி, கிருபையாயிரு" மென்று பிரார்த்தனையின் துவக்கத்திலே சொல்லப்படும் மன்றாட்டை, அவ்விரு குருடரைப்போல எப்போதும் பத்தியோடே நாமுஞ் சொல்ல வருந்துவோமாக.

3-ம் பிரிவு

பேய்பிடித்தவனும் ஊமையனுமாயிருந்த ஒருவனைச் சொஸ்தப்படுத்தினது

தியானம்.—இவ்விரண்டு குருடர்களை இயேசுநாதர் குணப்படுத்தினவுடனே, பேய்பிடித்திருந்த ஒரு ஊமையை அவரிடத்தில் கூட்டிக்கொண்டுவந்தார்கள் (மத். 9).

பசாசானது இவன் பேசக்கூடாமல் வாயைக் கட்டிப் போட்டதினால், இயேசுநாதரிடம் தன் நிர்ப்பாக்கியத்தை வெளியிட்டு, அவரது இரக்கத்தை மன்றாடவும் வழியில்லாமல், இருவகையில் இவன் நிர்ப்பாக்கியனாயிருந்தான்.

ஆகிலும் இரக்கமுள்ள சிலபேர் இவனுக்காக மன்றாடினதினால், இரட்சகர் இருதயத்தில் இவன்பேரில் இரக்கமுண்டாயிற்று. இயேசுநாதர் பசாசை ஓட்டவே, ஊமையும் பேசினான் (மத். 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பாவசங்கீர்த்தனஞ் செய்யும்போதுந் தியானம் பண்ணும் போதும், அலுவல் கடமையினால் அல்லது பிறசிநேகத்தினால் பேசவேண்டியபோதும் பேசாமல் பசாசின் வினையால் ஊமைபோலிருக்கிறவர்களுடைய நிர்ப்பாக்கியத்தைக் கண்டு பரிதாபப்படுவோமாக. இப்போது சொன்ன பற்பல காரியங்கள் சம்பந்தமாக, நம்மிடத்திலும் குற்றமான தொன்றுமில்லையோ?

மீளவும் புறத்தியாருக்கு வரும் இக்கட்டு உபத்திரவங்களிலே நாம் இரக்கமற்றவர்களும் அசட்டையுள்ளவர்களாயுமிராமல், நம்மாற்கூடினமட்டும் அவர்களுக்கு ஒத்தாசை செய்வோமாக. விசேஷமாய் நமது சகோதரருக்குள்ளே கூச்சத்தினாலும் வேறே முகாந்தரத்தினாலும் பிறர் உதவியைக்கேட்கத் துணியாதிருக்கிறவர்கள்மட்டில் இயேசுநாதர் காண்பித்த தயவுள்ள சிநேகத்தைக் கண்டுபாவிப்போமாக.

சம்பாஷணை.—இந்த மாதக்கடைசியில் கொண்டாடப்படுகிற அர்ச். இராயப்பர், சின்னப்பரோடே சம்பாஷணை செய்வோமாக. என் சகோதரர்களே, நான் இயேசுநாதரைக் கண்டுபாவிக்கிறதுபோல, நீங்களும் என்னைக் கண்டுபாவியுங்களென்று அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்குச் சொன்னதை நினைத்துக்கொண்டு (1 கொ. 4) நாமும் அவர்களைப்போல இயேசுநாதரை உத்தம மேரையாய்க் கண்டுபாவிக்க நமக்கு அவர்கள் வரப்பிரசாதம் அடைந்து தரும்படி அவர்களைப் பார்த்துக் கேட்போமாக.

[வருஷத்தின் முதல் ஆறுமாதத் தியானம் முற்றிற்று]

ஒவ்வொரு மாதத்தின் தலைவெள்ளிக்கிழமையில் செய்யத்தக்க தியானங்கள்

ஜனவரி மாதம்

தலைவெள்ளிக்கிழமைக்குரிய பத்தியின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—பத்தியுள்ள சில கிறீஸ்துவர்கள் இயேசுநாதருடைய திரு இருதயச் சுரூபத்துக்கு முன்பாகக்கூடி அத்திரு இருதயத்துக்கு நிந்தைப்பரிகாரஞ் செய்வதாக உருபிகரித்துக்கொள்ளுவேனாக.

தியானச் செபம்.—தலைவெள்ளிக்கிழமைக்குரிய பத்தியின் கருத்தையும் பிரயோசனத்தையும் அந்தப் பத்தியை அநுசரிக்கத்தக்க வழிகளையும் நன்றாய் அறியும்படி வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

இந்தப் பத்தியின் கருத்து

தியானம்.—தலைவெள்ளிக்கிழமையைப் பத்தியோடு கொண்டாடுவதின் கருத்து ஏதென்றால், முந்தமுந்த ஒவ்வொரு மாதத்தின் துவக்கத்தில் ஆடம்பரமாய் இயேசுநாதருடைய திரு இருதய வணக்கத்தை நினைப்பூட்டுவதினால், இத்திரு இருதய சபையாருக்குள் பத்தி சுறுசுறுப்பை நிலைக்கச்செய்து, இந்தப் பத்தி நாளடைவில் குறைந்து போகாவண்ணம் தடுக்கவும், இன்னமும் இந்த நாளுக்குக் குறிக்கப்பட்ட விசேஷ பத்தி முயற்சிகளை வெகு சிறப்போடு பிரசித்தமாய்ச் செய்வதினால், சகலருடைய இருதயத்திலும் திரு இருதயப்பத்தி திடன்கொண்டு ஓங்கி வளரப்பண்ணவும்; கடைசியாய் அந்தந்த மாதத்தின் முதற் பலனை நமது ஆராதனைக்குரிய இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு வசீகரம்பண்ணி அதற்குக் கைம்மாறாக அத்திரு

இருதயத்தினின்று நவமான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளவும் வேணுமென்பதாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்வளவு உன்னதமும் முக்கியமுமான கருத்துகள் பலிக்கும்படி இவைகளை இன்று மறவாமல் இடைவிடாமல் நமது மனதில் வைத்துக்கொண்டு, இந்த நாளில் வழங்கிவரும் பத்தி முயற்சிகளை இதுமுதல் பிரமாணிக்கமாய் அநுசரித்து வருவோமென்று பிரதிக்கினை செய்துகொள்ளக்கடவோம். மேலும் சகல உத்தமதனத்தையும் சம்பூரணமாய்க் கொண்டிருக்கிறதும், ஒப்பற்ற அலங்கார மகத்துவம் பொருந்தியதுமான திரு இருதயத்தை எப்போதும் நமது கண்முன்பாக வைத்துத் தியானித்துவரப் பிரயாசப்படுவோமாக; ஏனென்றால், இது தெய்வத்தின் இருதயமும், தெய்வ சீவியத்தால் சீவிக்கிற இருதயமுமாம். இதை நாம் அடிக்கடி நினைத்துத் தியானித்து வருவோமாகில், இயேசுநாதர்பேரில் நமக்குள்ள அன்பும் பற்றுதலும் வெகுவாய்ப் பெருகி வளரும்; நமது திவ்விய இரட்சகரின் இருதயத்துக்கு நமது இருதயத்தை ஒத்ததாக்க வேணுமென்கிற ஆசையும் நம்மிடத்தில் ஸ்திரப்படும்.

மனப்பற்றுதல்.—இந்த நாளுக்குரிய பத்தியின் கருத்துகள் பூரணமாய்ப் பலிக்கவேணுமென்று உன் மனதில் வேகமான ஆசையை எழுப்பிக்கொள்.

பிரதிக்கினை.—திரு இருதயத்தின் ஞாபகம் உன்னை விட்டு அகலாதபடி, "இயேசுநாதருடைய மதுரமான இருதயமே, அடியேன் மென்மேலும் உம்மை அதிகமதிகமாய்ச் சிநேகிக்க அநுக்கிரகஞ் செய்தருளும்" என்கிற பத்தியுள்ள மனவல்லயச் செபத்தை இன்று அடிக்கடி சொல்லி வரக்கடவாய்.

2-ம் பிரிவு

இந்தப் பத்தியின் பிரயோசனம்

தியானம்.—முந்தின பிரிவில் சொல்லிக்காண்பித்த நன்மைகளுமன்றித் தலைவெள்ளிக்கிழமைப் பத்தியானது,

கிறீஸ்துவர்கள் அநேக புண்ணிய முயற்சிகளைச் செய்வதற்கும் ஏதுவாயிருக்கின்றது. அந்தப் பத்தியில்லாதே போனால், அவைகளைச் செய்யமாட்டார்கள். அவைகளாவன:—கிறீஸ்துவர்கள் அன்று பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்விய நன்மை வாங்குவார்கள்; தேவநற்கருணையைச் சந்திப்பார்கள்; சற்பிரசாத ஆராதனை ஏற்பட்டிருக்கும் இடங்களில், முறைமுறையாய் வந்து தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் திவ்விய இருதயத்தை ஆராதிப்பார்கள்; தேவ வாக்கியத்தின்பேரில் தியானிப்பார்கள்; திவ்விய இருதயத்துக்குத் தங்களை நேர்ந்து ஒப்புக்கொடுத்து, நிந்தைப்பரிகாரஞ்செய்து இவைபோன்ற நற்கிருத்தியங்களையும் நடத்துவார்கள். சந்நியாசிகளாயிருக்கிற நமக்கோவென்றால், இந்தப் பத்தியானது ஓர் தூண்டுகோல்போல மேற்சொல்லிய புண்ணிய முயற்சிகளைச் செய்துவர நம்மை ஏவுவதுமல்லாமல், நாம் இயேசுநாதரையும் அவருக்கு நாம் கொடுத்த வார்த்தைப்பாடுகளையும் அவர் நமக்குக் காண்பித்த அளவற்ற சிநேகத்தையும் அதற்குப் பதிலாய் நாம் அவர்பேரில் வைக்கவேண்டிய மட்டற்ற பத்தி பற்றுதலையும் நினைவுகூரச்செய்கிறது. மேலும் இயேசுநாதருடைய திரு இருதயத்தைத் தக்கவிதமாய் வணங்கி வருகிறவர்களும், அத்திரு இருதயப் பத்தி பரம்பப் பிரயாசப்படுகிறவர்களும் எம்மாத்திரம் நன்மைகளை அடைவார்களென்றும் நமக்கு நினைப்பூட்டுகிறது. கடைசியாய் ஆராதனைக்குரிய திரு இருதயமானது சகித்துவரும் நிந்தைகளையும் நன்றியறியாமையையும் நமது மனதில் வரப்பண்ணி நமது பத்தி சுறுசுறுப்பை இரட்டிப்பாக்கவும் நாம் புண்ணிய சாங்கோபாங்கத்தை அடைய வீரியமாய்ப் பிரயாசப்படவும் நம்மிடத்தில் ஆசையைத்தூண்டி எழுப்புகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தலைவெள்ளிக்கிழமைப் பத்தியைக் கனமாய் எண்ணிமதிக்கவும் அதைக் கைப்பற்றி அநுசரித்து, நம்மால் கூடியமட்டும்

அதைப் பரப்பவும் பிரயாசப்படவேண்டும். இந்தப் பத்தியின் ஞானப்பிரயோசனங்களையெல்லாம் சகலரும் ஒரேவிதமாய்க் கைக்கொள்ளமாட்டார்களென்பது மெய். நீயும் சிலவேளை இந்தப் பத்தியினால் வெகு ஞான நன்மைகளை அடையாமற் போனதுமன்றி, உன் நடத்தையும் திருந்தாமலிருக்கிறதாக்கும். இப்படியானால் யார்மேல் தப்பிதம்? உன்பேரில் தானன்றோ? ஏனென்றால், திவ்விய இருதயத்தைக்குறித்து நீ செய்த சொற்பக் காரியங்களையும் அசமந்தமாய்ச் செய்துவந்தாயே. இதன்பேரில் உன்னைச் சோதித்துப்பார்.

மனப்பற்றுதல்.—இதுவரையில் உன்னிடத்திலிருந்த அசட்டைத்தனத்துக்காகப் பொறுத்தல்கேட்டு, இனி சுறுசுறுப்பாய் நடக்கும்படி தேவ வரப்பிரசாதத்தை இரந்து மன்றாடு.

பிரதிக்கினை.—இந்த நாளைப் பரிசுத்தமாய்ச் செலவழிக்கும்படி சகலத்திலும் பிரயாசப்படு.

3-ம் பிரிவு

இந்தப் பத்திக்கடுத்த கிருத்தியங்கள்

தியானம்.—இந்த நாளுக்குரிய பத்தியை அநுசரிக்கும்படி நாம் செய்யவேண்டியதென்னவென்றால்,

முதலாவது:—பத்திமான்கள் திரு இருதயத்தை வணங்கும்படி சாதாரணமாய் என்ன செய்வார்களோ அவைகளையே நாமுஞ் செய்யவேண்டும்; ஆனால் நமது அந்தஸ்துக்கு யோக்கியமானபடி அவைகளை மகா பத்தி உருக்கத்தோடு செய்யக்கடவோம்.

இரண்டாவது:—இயேசுநாதருடைய திரு இருதயம் எவ்வளவு சிநேகத்துக்குரியதென்றும் அது அநுபவித்த

துக்க வியாகுலம் எம்மாத்திரமென்றும் அடிக்கடி நினைத்து இந்த நாளை உள்ளடக்கமாய் செலவழிக்கக்கடவோம்.

மூன்றாவது :—வழக்கமான முயற்சிகளுமன்றி, யாதொரு விசேஷ தவமுயற்சியினாலாவது சிலுவைப்பாதை, திவ்விய நற்கருணைச் சந்திப்பு முதலிய பத்தி முயற்சியினாலாவது இந்த நாளை அர்ச்சிக்கக்கடவோம்.

நான்காவது :—நமது அன்புக்குரிய இரட்சகரின் திரு இருதயத்துக்கு மென்மேலும் பிரியப்படும்படி சென்ற மாசத்தைவிட இந்த மாசம் என்ன அதிகமாய்ச் செய்ய வேணுமென்று ஆராய்ந்து பார்க்கக்கடவோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தக் கிருத்தியங்களையெல்லாம் பிரமாணிக்கமாய் நிறைவேற்றும்படி பிரதிக்கினை செய்வதுமன்றி, அவைகளை விவரமாய் விசாரித்துத் தீர்மானித்துக்கொண்டு தீர்மானித்த பிரகாரம் நடக்க வரப்பிரசாதத்தைக் கேட்போமாக.

சம்பாஷணை.—இயேசுநாதர் தமது இருதயத்தின் மேல் நாம் பத்திவைப்பதற்குள்ள முகாந்தரங்களையும் அந்தப் பத்தியின் கருத்துகளையும் நாம் கைக்கொள்ளத் தக்க அளவற்ற பிரயோசனத்தையும் அர்ச். மரிய மர்கரீத் தம்மாளுக்கு வெளிப்படுத்தினதினால், அந்த அம்மாளோடு சம்பாஷணை செய்வோமாக.

பெப்ருவரி-௴

பக்கம்.

தேவநற்கருணையிலே நம்மோடு வாசம்பண்ணும் யேசுநாதருடைய திரு இருதயத்தின்மட்டில் நமக்குள்ள கடமைகள் * 634

மார்ச்சு-௴

இயேசுநாதர் இருதயத்தின் பரிசுத்ததனம் ... 603

ஏப்பிரல்-௴

இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தாழ்ச்சி 607

மே-௴

இயேசுநாதர் திரு இருதயத்தின் ஆவல் ... 625

ஜூன்-௴

இயேசுநாதருடைய திரு இருதய தயாளத்தின் பேரிலும் இரக்கத்தின்பேரிலும் 629

* குறிப்பு.—இந்தத் தியானங்கள், திரு இருதயத் திருநாளுக்கு முந்தின நவநாட்களில் ஏற்கனவே குறிப்பிட்டவைகள் தான். அந்தந்த மாசத்தின் தலைவெள்ளிக்கிழமைக்குக் குறிக்கப்பட்டிருக்கிற தியானத்தை முஸ்திப்புச் செய்தபின், ஜனவரி மாசத்தின் தலைவெள்ளிக்கிழமைக்குக் குறிக்கப்பட்டிருக்கிற தியானத்தின் மூன்றும் பிரிவையும் வாசிப்பது நலமாயிருக்கும்.

மாதாந்தர ஒடுக்கநாளில் செய்யத்தக்க தியானங்கள்

ஜனவரி மாதம்

இந்த ஒடுக்கத்தை நன்றாய்ச் செய்வதற்கான முகாந்தரங்களும் வழிகளும்

ஆயத்தச் சிந்தனை.—நீ உன் விசாரிப்பின் கணக்கை எனக்கு ஒப்புவியென்று ஆண்டவர் என்னைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்வேணுக. (லூக். 16.)

தியானச் செபம்.—கடந்த மாதம் நான் சரியாய் நடந்தேனோ இல்லையோவென்று நன்றாய் அறிய வரப்பிரசாதங் கேட்பேணுக.

முதல் பிரிவு

இந்த ஒடுக்கத்தை நன்றாய்ச் செய்வதற்கான முகாந்தரங்கள்

தியானம்.—மாதத்துக்கொருவிசை ஞான ஒடுக்கஞ் செய்யவேணுமென்று மகாத்துமாக்களும் சந்நியாச சபையை நடப்பித்தவர்களும் படிப்பித்திருக்கிறார்கள். நான் உட்பட்டிருக்கிற சபையும் இது முக்கியமான காரியமென்று நினைக்கின்றது. சர்வேசுரன்தாமே, நித்திய காலத்திலும் இதற்குப் பலத்த வரப்பிரசாதங்களையும் விசேஷமான அநுக்கிரகங்களையும் கட்டளையிட்டிருக்கிறாரென்று நான் விசுவசிக்கவேணும். மேலும், எனது ஆத்தும நன்மையும், மகா முக்கியமான ஆதாயமுமாகிய நித்திய கால பாக்கியத்தைச் சார்ந்த விஷயம் இது. முந்தின ஒடுக்கநாள் முதல், கடந்த மாதமுழுதும் நான் பிறருக்காக மெத்த உழைத்திருக்கிறேன்; என் காரியத்தையே அசட்டை செய்வது எவ்வளவு மதியீனம்! இன்று நான் செய்யும் ஒடுக்கம் எனக்குக் கடைசியாயிருக்கக்கூடும். இதுதான் எனக்குக் கடைசியென்று நான் அறிந்திருந்தால், இதை எவ்விதஞ் செய்வேன்? எவ்வாறாயினும், இது சர்வேசுரன் எனக்குச்செய்த பேருபகாரமானதினிமித்தம், இதைப்பற்றி என்னிடம் கண்டிப்பான கணக்குக் கேட்பார். அவருடைய தேவ பராமரிக்கையின் கிரமத்தில், கனத்த நிர்ப்பாக்கியங்களினின்று இது என்னை வெகுவாய்ப் பாதுகாக்கவேண்டியது. எவ்வாறெனில், கடைசி ஒடுக்கத்தில் நான் செய்த பிரதிக்கினைகளை முழுதும் மறந்துபோகும் நிர்ப்பாக்கியத்தில் நின்றும், நாள்வட்டத்தில் மகா அசட்டையோடு ஞானக்காரியங்களைச்செய்து, ஞானயுத்தத்திலும், என் அந்தஸ்தில் நிலைமையாயிருப்பதற்கு ஆபத்துவிளைவிக்கக்கூடிய சந்தர்ப்பங்களிலும் எனக்கு அவசியமான திடனை ஞான முயற்சிகளில் அடையாமற்போகும் நிர்ப்பாக்கியத்தினின்றும் என்னைக் காப்பாற்ற இந்த ஒடுக்கம் மெத்தவும் பிரயோசனமுள்ளது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மாச ஒடுக்கத்தை உத்தமமேரையாய்ச் செய்கிறதற்கான இந்த முகாந்தரங்களைக் கவனமாய்த் தியானித்துப்பார். போன மாதஞ் செய்த ஒடுக்கத்திலே, உன்னிடத்திலுண்டான குறைகள் எவையென்று பார்த்து அவைகளைச் செய்யாதிருக்கப் பிரதிக்கினைசெய்துகொள். இந்த மாதத்தில் உனக்குப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரை மன்றாடி, இந்தப் பிரதிக்கினையில் பிரமாணிக்கனாயிருக்க வரப்பிரசாதங் கேள்.

மனப்பற்றுதல்.—உனக்குண்டான ஆசை, பயம், நம்பிக்கையைச் சர்வேசுரனுக்குக் காண்பிப்பாயாக.

பிரதிக்கினை.—இந்த ஒடுக்கத்தின் பலனை உறுதிப்படுத்துகிறதில் எவ்வித பிரயாசத்துக்கும் அஞ்சாதே. அதற்கு வேண்டிய நேரத்தை இப்போதுதானே திட்டப்படுத்திக்கொள்.

2-ம் பிரிவு

இந்த ஒடுக்கத்தை நன்றாய்ச் செய்கிறதற்கான வழிகள்

தியானம்.—ஞானத்துக்கு ஆரம்பம் தேவபயமென்று இஸ்பிரீத்துசாந்துவானவர் சொல்லியிருக்கிற பிரகாரம், இதற்கு முந்தின வழி ஏதென்றால், இந்த ஒடுக்கத்தை அநேகம் விசை செய்ததினிமித்தம் இதை நன்றாய்ச் செய்யாமலும், இது பெரிதென்று சரியாய் நினையாமலும், இதின்பேரில் தக்க கவனம் இல்லாமலும் போகுமென்ற பயம்.

இரண்டாம் வழி ஏதென்றால், இன்று சாயுங்காலந் தானே இந்த ஒடுக்கத்தின்பேரில் நமது கவனமெல்லாம் செலுத்தி நமது புத்திக்கு ஞான ஒளிவையும் நமது இருதயத்தில் மனஸ்தாப உருக்கத்தையும் தருவிக்கத்தக்க விசேஷத்தைத் தேடித்தெரிந்துகொண்டு, நாம் செய்யப்போகிற தியானத்தின் பிரிவுகளை இவ்வொடுக்கத்துக்குப் பொருந்தியிருக்கப் பண்ணுகிறதாம்.

மூன்றாம் வழி ஏதென்றால், நித்திரை செய்யுமுன்னே இந்த ஒடுக்கத்தில் மிகுந்த பலன்களைக் கைக்கொள்ளவும், அதிக உத்தமனும் திடனுள்ளவனும் பத்தி சுறுசுறுப்புள்ளவனுமாகவும் தேவ ஊழியத்துக்கும் பிறருக்குச் செய்யவேண்டிய நன்மைக்கும் தகுந்தவனாகவும் தன் இருதயத்தில் மிகுந்த ஆசையையுங் கெட்டியான நம்பிக்கையையும் எழுப்புகிறதாம்.

நான்காம் வழி ஏதென்றால், இந்த நன்மைகளை அடைகிறதற்காக விசேஷ பக்தியோடே பூசை காண்கிறது அல்லது செய்கிறது; இந்தக் கருத்துக்காகத் தேவநற்கருணை வாங்குகிறதுஞ் சில தவமுயற்சிகளை நிறைவேற்றுகிறதுமாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது சொல்லிவந்த உபாயங்களை உதவிக்கொள்ளுகிறது அதிக வருத்தமுள்ளதும் பிரயாசத்துக்குரியதுமல்லவென்று சொல்லவேணும்; ஆகிலும் இவைகளெல்லாம்

மகா முக்கியமும் பிரயோசனமுமானவைகளானதுபற்றி, இவைகளைக் கவனமாய் அநுசரிக்கக்கடவோம்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கின்றது, உமது சித்தத்தின்படியே நடக்க எனக்குப் படிப்பியும் (சங். 107, 142).

பிரதிக்கினை.—இதற்கு முந்தி நான் நன்றாய்ச் செய்த ஒடுக்கங்களில் ஒன்றை நினைத்து இதையும் அதைப்போலக் கவனமாய்ச் செய்வேனாக.

3-ம் பிரிவு

ஆத்தும கணக்கை நன்றாய்ச் செலுத்தத்தக்க ஒழுங்கு

தியானம்.—அந்தந்த மாதஞ் செய்யவேண்டிய ஒடுக்கத்தின் கதி ஏதென்றால், உத்தமனாகிறதுதான். அவனவன் இந்தக் கதியைச் சரியாய் அடைகிறதற்குத் தன்னை நன்றாய் அறியவும் எந்தக் காரியத்தில் தன்னைச் சீர்படுத்திக்கொள்ளவேணுமென்று தெளிவாய்க் கண்டுபிடிக்கவும் பிரயாசப்படவேணும். இது முகாந்தரமாகச் சென்றமாதம் தன் நடக்கை எப்படி இருந்ததென்று ஆராய்ந்து பார்க்கவேணும். அநேகஞ் சந்நியாச மடங்களிலே இவ்வாறு அறிந்தவைகளின் கணக்கைத் தங்கள் ஆத்தும குருவுக்கு ஒப்பிப்பதுமுண்டு; இதுவே மெத்த நல்லதும் பிரயோஜனமுள்ளதுமாம். ஆனால் இதில் பலனடைகிறதற்குச் செய்யவேண்டியதேதென்றால்: 1-வது, இந்த ஆத்தும கணக்கு ஒப்பிக்க நல்ல ஆயத்தஞ் செய்யவேணும்; 2-வது, ஒன்றையும் மறையாமல் முழு நம்பிக்கையோடு தன் ஆத்தும குருவிடத்தில் தன் மனதைத் திறந்து காண்பிக்கவேணும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதை அநுசரிக்கப் பின்செல்லவேண்டிய ஒழுங்கேதென்றால்: 1-வது, தகுமான நேரத்திலும் இடத்திலும் சர்வேசுரன் சமுகத்திலே பராக்கின்றிக் கவனிக்கிறதும்; 2-வது, தன்னை நன்றாயறியவுந் தன்னுள்ளத்தைச் சரியாய்த் திறந்து காண்பிக்கவும், வரப்பிரசாதத்தைக் கேட்கிறதும்; 3-வது, போன மாதத்தில் தான் நடந்ததை ஆராய்ந்து பார்க்கிற

தும்; 4-வது, தெளிவாயுஞ் சுருக்கமாயும் தகுந்த பிரதிக்கினைசெய்துகொள்ளுகிறதும்; 5-வது, தேவமாதாவின் கரங்களால் சர்வேசுரனுக்கு இதை ஒப்புக்கொடுக்கிறதுமாம்.

சம்பாஷணை.—இந்த மாதம் உனக்குப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரோடே சம்பாஷணை செய்வாயாக.

பெப்ருவரி-௴

பக்கம்

நரகத்தின்பேரில்* 321

மார்ச்சு-௴

மரணத்தின்பேரில் 261

ஏப்பிரல்-௴

பாவத்தினால் வந்த பொல்லாப்பின்பேரில் ... 203

மே-௴

தீர்வையின்பேரில் 291

ஜூன்-௴

பாவத்தால்வரும் சேதத்தின்பேரில்... ... 231

* விவரம்:—ஜனவரி மாசத்துக்குக் குறிக்கப்பட்டிருக்கிற தியானத்தின் ஆயத்தச் சிந்தனையையும் தியான செபத்தையும் அதின் மனப்பற்றுதல்களையுஞ் சம்பாஷணையையும் வேறே மாசங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கிற தியானங்களிலும் உதவிக் கொள்ளலாம்.

மாதாந்தர ஆத்தும சோதனை செய்யவும் ஆத்தும கணக்குக் கொடுக்கவும் உதவியான மூவகைக் கேள்விகள்

முதல் வகைக் கேள்விகள்

சந்நியாச அந்தஸ்தின் பொதுவான கடமைகளின் பேரில்

I. சர்வேசுரன் மட்டில்.

1. பாவம், குற்றம், அசட்டைத்தனமெல்லாந் தள்ளி நடக்கிறேனா?
2. நம்பிக்கையோடும் தாராள குணத்தோடும் துன்ப சலிப்புகளில் தைரியத்தோடும் நடக்கிறேனா?
3. மனவல்லயச் செப அப்பியாசத்தினால் தேவ சமூகத்திலிருக்கிறதாக எண்ணி நடக்கிறேனா?

II. சிரேஷ்டர்கள் மட்டிலும், கீழ்ப்படிதல், ஒழுங்குகள் மட்டிலும்.

1. சிரேஷ்டர்கள் மட்டில் உள்வணக்கமும் அன்பும் என்னிடத்தில் உண்டா? வெளியில் அவர்களுக்குச் சங்கை வணக்கங் காண்பிக்கிறேனா? அவர்களிடத்திலும் அவர்களைப்பற்றியும் எவ்விதமாய்ப் பேசிவருகிறேன்?
2. என் புத்தியும் மனமும் அவர்கள் புத்தி மனதுக்கு ஒத்திருக்கச் செய்கிறேனா? அல்லது அவர்கள்மேல் குறைசொல்லி, குற்றம்பிடித்து, முறையிட்டு, வெறுப்பாயிருக்கிறேனா?
3. அவர்களுக்கு நான் சந்தோஷம் வருவிக்கிறேனா? சஞ்சலமாயிருக்கிறேனா? தொந்தரவு வருவிக்கிறேனா?
4. விசுவாசத்தையும் தேவ சிநேகத்தையும் முன்னிட்டு அவர்களுக்குக் கீழ்ப்படிகிறேனா? அல்லது பயத்தையும் உபாய எண்ணங்களையும் பற்றிக் கீழ்ப்படிகிறேனா?

5. மடத்தில் எல்லோருக்கும் ஒத்தபடி நடக்கிறேனா? அல்லது விசேஷித்து ஏதாவது தேடுகிறேனா? அப்படி நான் தேடுவது கிரமமற்றதா?
6. மடத்து ஒழுங்குகளையும், சிரேஷ்டர் கட்டளைகளையும் பரம்பரையான வழக்க முறைமைகளையும் பிரமாணிக்கமாய் அநுசரிக்கிறேனா?

III. புறத்தியார் மட்டில்.

1. அவர்கள் மட்டில் நான் கொள்ளும் எண்ணத்தில் சிநேகம் விளங்குகிறதா அல்லது கடுமை விளங்குகிறதா? அவர்களை இகழ்ந்து அவர்கள் மேல் புறணி பேசுகிறேனா?
2. பிறர் ஈடேற்ற ஆவல் என்னிடத்திலுண்டா? புறத்தியாரோடு விவேக விமரிசையோடு ஊடாடுகிறேனா? என் பிரயாணங்களிலும் ஒருவரைக் கண்டு பேசுவதிலும் பிறருக்கு நன்மாதிரிகையாயிருக்கிறேனா?

IV. சகோதரர் மட்டில்.

1. அவர்களுக்கு அந்நியோந்நிய உதவிசெய்து ஒற்றுமையைக் காக்கிறேனா? அவர்களைப்பற்றிப் பேசும்போதும் யாதோர் தீர்மானஞ் செய்யும் போதும் என்னிடத்தில் தோன்றுவது தயைதாக்ஷணியமா, கடுமையா?
2. அவர்கள்மேல் வெறுப்பும் காய்மகாரமுங் கொண்டு புறணி பேசுகிறேனா? யாதொருவர் மேல் விசேஷ பட்சம் எனக்கில்லையா?
3. சகலருக்கும் நன்மாதிரிகை காண்பிக்கிறேனா? அவர்களுடைய புண்ணிய வர்த்திப்பின்பேரிலும், சபைப் பொது நலத்தின்பேரிலும் ஆவல் வைத்து அதற்காகப் பிரயாசப்படுகிறேனா?

V. தன் அந்தஸ்தின் மட்டில்.

1. என் அந்தஸ்தின்பேரில், மேலான எண்ணம் வைத்து அதைச் சிநேகிக்கிறேனா?

2. என் அந்தஸ்துக்குரிய புண்ணிய சாங்கோபாங்கத்தை அடைய ஆசிக்கிறேனா? அந்த ஆசையை அநுதினமும் காலையில் புதுப்பிக்கிறேனா?

VI. தன் உத்தியோகங்கள் அல்லது அலுவல்களின் மட்டில்.

1. எனக்கு ஒப்பிக்கப்பட்ட அலுவல்களைக் கீழ்ப்படிதலின் பிரகாரம் நிறைவேற்றுகிறேனா? கற்பிக்கப்பட்ட விதமாய்ச் செய்துவருகிறேனா? அல்லது என் புத்திக்குத்தோன்றினபடி செய்கிறேனா?
2. அவைகளை அரை குறையாய்ச் செய்யாமல் முழுதும் செய்கிறேனா? தேவசமுகத்தில் மனச்சாட்சிக்கேற்கச் செய்கிறேனா? அவைகளைச் செய்வதில் என்னிடத்தில் மேலான கருத்துண்டோ?

VII. தன் மட்டில்.

1. சரித்திரம், கீழ்ப்படிதல், கற்பு ஆகிய என் வார்த்தைப்பாடுகளை எவ்விதமாய் அநுசரிக்கிறேன்? சோதனைகளையும் பாவச் சமயங்களையும் நான் செயித்து விலக்குகிற விதம் எப்படி?
2. என்னிடத்தில் ஆசாபாசங்கள் மும்முரமாய் இருக்கின்றனவா? அவைகளைச் செயிப்பது எனக்குக் கஷ்டமாயிருக்கிறதோ? அக்கஷ்டங்கள் எவை?
3. தனி ஆத்தும சோதனை செய்துவருகிறேனா? எதன்பேரில்? எவ்வளவு அநுகூலத்தோடு?
4. என்னிடத்தில் பத்தியுண்டா? பற்பல ஞான முயற்சிகளைப் பிரமாணிக்கமாய் அநுசரிக்கிறேனா? எனக்குள்ள விசேஷ பத்தி என்ன?
5. தாழ்ச்சி, மனஒறுத்தல், சரீரஒறுத்தல் இவைகளை அநுசரித்து வருகிறேனா? பிறருக்கு உதவி செய்வதில் என்னைச் செலவழிக்கவேணுமென்கிற ஆவல் எனக்குண்டா?

6. விசுவாசத்தையும் புத்தி நியாயத்தையும் பின்பற்றி நடக்கிறேனா அல்லது சமயத்துக்குத் தக்காப்போலேயும் சுயமனதை முன்னிட்டும் நடக்கிறேனா?

7. நான் பத்தி வேகமுள்ள சந்நியாசியா அல்லது அசமந்தமுள்ள சந்நியாசியா?

VIII. **தனக்குக் கீழ்ப்பட்டவர்களாகிய மாணக்கர், ஞானப்பிள்ளைகள், வியாதிஸ்தர் முதலியவர்கள் மட்டில்.**

1. அவர்கள் மட்டில் விழிப்பும் விவேகமும், தயை சாந்தமும் உறுதியும் அவர்கள் ஆத்தும நன்மையின்மேல் ஆவலும் பொறுமையுமுள்ளவனாயிருக்கிறேனா?

2. அவர்களுக்கு நன்மாதிரிகை காண்பிக்கிறேனா? அவர்களுக்காகச் சர்வேசுரனையும் அவர்கள் காவல் சம்மனசுவையும் நோக்கி வேண்டிக்கொள்ளுகிறேனா?

இரண்டாம் வகைக் கேள்விகள்

அந்தந்தப் புண்ணியங்களின் வர்த்திப்பின்பேரில்

அடியிற் கண்டவைகளில் முன்னையைப்பார்க்க இப்போது விர்த்தி அடைந்திருக்கிறேனாவென்று பார்க்கக்கடவேன்:

1. இருதயப் பரிசுத்தத்தனத்தில்?

2. சோதனைகளையும் விசேஷ துர்க்குணத்தையும் செயிப்பதில்?

3. யாதொரு பாவத்தையாவது, குற்றத்தையாவது தள்ளுவதிலும் யாதொரு புண்ணியத்தைச் சம்பாதிப்பதிலும்?

4. தாழ்ச்சி, சுயவெறுப்பு, தவஒறுத்தல், ஒழுங்கு அநுசரணை முதலியவைகளில்?

5. தன்னைச் சர்வேசுரனோடு ஒன்றித்தலிலும் வெளிவேலை செய்துகொண்டே உள்ளரங்கமாய்ச் சீவிக்கிறதிலும்?

6. ஞானக்காரியங்களில் கவனம், பத்தியுருக்கம், சுறுசுறுப்பு முதலியவைகளில்?

மூன்றும் வகைக் கேள்விகள்

அந்தந்த ஞானக்கிருத்தியங்களின் பேரில்

அடியில் சொல்லப்படுகிறவைகளில் பிரமாணிக்கமாயிருந்தேனாவென்று பார்க்கக்கடவேன்:

1. காலையில் சுறுசுறுப்போடும் பத்தியோடும் எழுந்திருப்பதற்கு?

2. தியானம் நன்றாய்ப் பண்ணுவதற்கு உதவியாக இரவிலும் கண் விழித்தவுடனும் தியானத் துவக்கத்திலும் செய்யவேண்டியதெல்லாம் செய்வதற்கு?

3. தியானத்தை நன்றாய் ஆயத்தம்பண்ணுவதற்கும் அதைப்பத்தி உருக்கத்தோடும் அநுசரணைக்கேற்ற விதமாயும் செய்வதற்கும்?

4. பூசை காணும்போதும், பாவசங்கீர்த்தனம், தேவநன்மை முதலிய தேவத்திரவிய அநுமானங்களைப் பெறும்போதும் அவைகளுக்கு முன்னும் பின்னும் செய்யவேண்டியதென்று எனக்கு நவசந்நியாசத்தில் கற்பிக்கப்பட்டதும் மிகுந்த பலனோடும் ஆறுதலோடும் நான் அநுசரித்துவந்ததுமானவைகளை இப்போதும் அநுசரிப்பதற்கு?

5. என் அநுதினக் கிரியைகளையும் அவைகளில் வெகு சாதாரணமான கிரியைகளையும் முதலாய் அர்ச்சிக்கும்படி எனக்கு நவசந்நியாசத்தில் காண்பிக்கப்பட்ட வழிகளை அநுசரிப்பதற்கு?

நன்மை வாங்கும் நாட்களில் செய்யத்தக்க சில தியானங்கள்

முதல் தியானம்

தேவநற்கருணை வாங்க ஆயத்தம்

ஆயத்தச் சிந்தனை.—உங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படும் நம்முடைய சரீரம் இது; இதை வாங்கிப் புசியுங்களென்று தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு இயேசுநாதர்சுவாமி சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—தேவநற்கருணை வாங்குகிறதற்குக் கிட்டின ஆயத்தமாகிய உயிருள்ள விசுவாசம், ஆழ்ந்த தாழ்ச்சி, மிகுந்த நம்பிக்கையென்கிற இந்தப் புண்ணியங்கள் உன்னிடத்தில் உண்டாகும்படி மிகுந்த ஆவலோடு பிரார்த்திக்கக்கடவாய்.

முதல் பிரிவு

உயிருள்ள விசுவாசம்

தியானம்.—நீ தேவநற்கருணை வாங்குகையில், உன்னிடத்தில் வெகு பத்தியும் வெகு ஞானப்பலனும் உண்டாகவேணுமென்று ஆசைப்படுகிறாயன்றோ? இதை அடையும்படி தேவநற்கருணை வாங்குமுன், நல்ல ஆயத்தஞ் செய்யவேண்டியது.

தூர ஆயத்தம்: 1-வது, பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறது. இது எப்போதும் பிரயோசனமுள்ளது; சில சமயங்களில் இதைச் செய்வது அவசியம். 2-வது, தேவநற்கருணை வாங்குகிறதற்குத் தகுந்த தியான ஆயத்தம் செய்கிறது. 3-வது, தேவநற்கருணை வாங்கப்போகிறேனென்கிற நினைவோடே நித்திரை கொள்ளுகிறதும், நித்திரையைவிட்டு எழுந்திருக்கிறதும். 4-வது, தேவநற்கருணையைப்

பத்தியோடே வாங்கவேணுமென்கிற ஆசையைத் தன் இருதயத்தில் எழுப்புகிறது. அன்றியும் தான் அடையக்கூடுமான பரிபூரண பலனை இன்னின்ன கருத்துக்காக ஒப்புக்கொடுக்கலாமென்று குறித்துக்கொள்ளுகிறதும் நலம்.

கிட்டின ஆயத்தம்: இதற்கு விசேஷமாய்ச் செய்யவேண்டியதேதென்றால், தேவநற்கருணையிலே இயேசுநாதர்சுவாமி மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறாரென்கிற சத்தியத்தை நமது மனதில் ஸ்திரமாய்ப் பதித்துக்கொண்டு உயிருள்ள விசுவாசத்தை நம்மிடத்தில் எழுப்புகிறது. சகலமும் இதிலேதான் அடங்கியிருக்கிறது. விசுவாசமில்லாவிட்டால், ஓர் அப்பத்துண்டைத்தான் பார்ப்பாய். அப்போது உன்னிடத்தில் என்ன பத்தி உண்டாகும்? ஆனால் உன்னிடத்தில் விசுவாசம் விளங்குமேயாகில், விசுவாசக்கண்ணாலே இயேசுநாதர்சுவாமியைப் பார்ப்பாய், சர்வேசுரனைப் பார்ப்பாய். நீ தேவநற்கருணை வாங்கப் போகும்போது, இயேசுநாதர்சுவாமி உனக்குத் தரிசனையானால், ஆ! என்னென்ன மனப்பற்றுதல்களும் எத்தன்மையான ஆனந்தப் பரவசமும் உன்னிடத்தில் எழும்பமாட்டா? இந்தப் புதுமையினால் உன் இருதயத்தில் என்ன பற்றுதல் எழும்புமோ, அதே பற்றுதல் உயிருள்ள விசுவாசத்தாலும் தப்பாமல் எழும்பும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆகையால், உன் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தி அதை அதிகரிக்கப் பிரயாசப்படு. சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிற ஆறுதலற்ற தகப்பனைப்போல, நீயும் இயேசுநாதர்சுவாமியைப் பார்த்து, ஆண்டவரே, விசுவசிக்கிறேன், நீர் என் சரீரக்கண்ணுக்கு மறைந்திருந்தபோதிலும், சர்வேசுரனும் மனுஷனுமாகிய தேவரீரைத்தான் நான் உட்கொள்ளப் போகிறேனென்று விசுவசிக்கிறேன்; தேவரீர் தேவநற்கருணையில் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறீரென்று எண்பிக்கிறதற்கான பிரசித்தமுள்ள புதுமைகளினிமித்தம் நான் விசுவசிக்கிறதைவிடத் தேவரீர் திருவுளம்பற்றின வார்த்தையினிமித்தமாகவே ஆயிரமடங்கதிகமாய் உறுதியோடு விசுவசிக்கிறேன். இந்தச் சத்தியத்தை ஒப்பிக்கிற

தற்குத் தங்கள் பிராணனைக்கொடுத்த அத்தனை வேதசாட்சிகளைப்போல நானும் என் இரத்தத்தைச் சிந்த ஆயத்தமாயிருக்கிறேன். ஆண்டவரே, விசுவசிக்கிறேன்; என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்து என் விசுவாசத்தை அதிகரித்தருளுமென்று சொல்லுவாயாக (மாற். 9).

மனப்பற்றுதல்.—இப்பேர்ப்பட்ட விசுவாசத்தை வெகு ஆவலோடே கேள்.

பிரதிக்கினை.—தேவநற்கருணையைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் யாதோர் புத்தகத்தை வேளைக்குவேளை வாசி.

2-ம் பிரிவு

ஆழ்ந்த தாழ்ச்சி

தியானம்.—அளவில்லாத பரிசுத்ததனமும் மகிமைப் பிரதாபமும் நிறைந்த சர்வேசுரனாகிய இயேசுநாதர்சுவாமி தேவநற்கருணையிலே மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறாரென்று விசுவசிப்போமாகில், நம்முடைய இருதயத்தில் ஆழ்ந்த தாழ்ச்சி உண்டாகும். இதுவே தேவநற்கருணை வாங்குகிறதற்கான கிட்டின ஆயத்தத்திற்கு வேண்டிய இரண்டாவது புண்ணியம்; இதினால் நாம் இயேசுநாதர் சுவாமிக்கு வெகு பிரியமுள்ளவர்களாவோம்; இப்புண்ணியம் நம்மிடத்தில் விளங்கினால், நாமே நம்முடைய அற்பத்தனத்தையும் முழு நீசத்தனத்தையும் உணர்ந்துகொள்வோம். இந்த உணர்ச்சிக்கு ஒத்தாப்போலேதான் சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிற அந்தச் செந்தூரியனோடு நாமும் தேவநற்கருணை வாங்கப்போகும்போது: ஆண்டவரே, தேவரீர் என் வீட்டில் பிரவேசிக்க நான் பேறுபெற்றவனல்லவென்று சொல்லவேணுமென்பதாகத் திருச்சபை கற்பித்திருக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கடந்துபோன உன் சீவியகாலத்தைப்பற்றிச் சற்றே நினைத்து யோசனைசெய். அதில் எத்தனையோ பாவம், சர்வேசுரன்மட்டில் எத்தனையோ நன்றிகெட்டதனம்! உன்னுடைய தற்காலத்து அந்தஸ்தை யோசித்துப்பார். உன்

ஆத்துமத்தில் எத்தனை மாசு, ஞானக்காரியங்களில் எவ்வளவு அசமந்தம்! சர்வேசுரனுக்கென்று நீ செய்கிற அற்ப சொற்பக்காரியங்களில் முதலாய் எத்தனை குறைச்சல்! இவைகளையெல்லாம் யோசித்தால், நீயே உன் உள்ளத்தில் மிகவும் உணர்ந்து: நல்ல இயேசுவே! தேவரீரிடத்தில் நெருங்கிவர நான் எவ்விதத்திலும் பாத்திரவனல்ல; தேவரீரை நோக்கிப் பார்க்கிறதற்குமுதலாய் நான் அயோக்கியன்; தேவரீரை ஆராதித்து உமக்குமுன் நான் ஒன்றுமில்லாதவனாக என்னை எண்ணிக்கொள்ளுகிறேன். தேவரீரிடத்தில் நான் அண்டிவர எப்படித் துணிவேனென்று சொல்லுவாய்.

மனப்பற்றுதல்.—கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் (4-7) சொல்லியிருக்கிறதுபோல, தன் ஆத்தும நிர்ப்பாக்கியங்களைத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, இப்பேர்ப்பட்ட தாழ்ச்சிக்குரிய உணர்ச்சிகளை எழுப்பிக்கொள்ளுகிறது.

பிரதிக்கினை.—குற்றஞ் சாட்டப்பட்ட ஊழியன் தன்னுடைய நல்ல எசமானுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்யாததினிமித்தம் அவனுடைய சமுகத்தில் வெட்கப்பட்டு நிற்பதுபோல், நீயும் சர்வேசுரனுடைய சமுகத்தில் நிற்பாயாக.

3-ம் பிரிவு

மிகுந்த நம்பிக்கையும் வேகமான ஆசையும்

தியானம்.—வருந்திச் சுமை சுமக்கிறவர்களாகிய அனைவரும் என்னண்டையில் வாருங்கள், நான் உங்களைத் தேற்றரவு பண்ணுவேனென்று இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றின வார்த்தைகளை நாம் யோசிப்போமானால், நம்முடைய பாவங்களினிமித்தம் நம்மிடத்தில் எவ்வளவுதான் பயம் உண்டானபோதிலும், நமக்கு ஆறுதலும் நம்முடைய இருதயத்தில் நம்பிக்கையும் எழும்பும்: நாம் எவ்வளவுக்குப் பலவீனரும் நிர்ப்பாக்கியருமாயிருக்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாய் அடிக்கடி தேவநற்கருணை வாங்க

நமக்கு அதிக முகாந்தரம் உண்டென்று கண்டுகொள்வோம். இயேசுநாதர்சுவாமியிடத்திலிருந்து இவ்வளவு நன்மை அடையலாமென்றும் இவரிடத்திலிருந்துதான் அடையவேணுமென்றும் நினைப்போமாகில், அவரை நமது இருதயத்தில் உட்கொள்ளுகிற நேரம் எப்போது வருமோவென்று ஆவலாய்க் காத்திருப்போம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—நம்முடைய ஆத்துமங்களின் அன்புக்குரிய வைத்தியராகிய இயேசுநாதர்சுவாமி நாம் தேவநற்கருணை வாங்கப் போகும்போது நமது இருதயத்தில் நம்பிக்கையும் ஆசையும் இருக்கவேணுமென்று விசேஷமாய் ஆசிக்கிறார். ஆகையால் நம்பிக்கைக்கும் ஆசைக்கும் அடுத்த முயற்சிகளைச் செய்து சொல்லவேண்டியதாவது: சிநேகத்துக்குரிய மதுர இரட்சகரே, பலவீனரும் நிர்ப்பாக்கியரும் தேவரீரிடத்தில் வரவேணுமென்றும் தேவரீருடைய திருப்பந்தியில் உட்காரவேணுமென்றும் அழைக்கிறீரே; தேவரீருடைய இந்த அழைத்தலைக் கேட்கிற எனக்குத் தேவரீரிடத்தில் நெருங்கி வருகிறதற்கு மற்றவர்கள் எல்லாரையும்விட அதிக சுதந்தரம் உண்டென்று நம்புகிறேன்; ஏனென்றால் நான் புண்ணியத்தில் மெத்த ஏழை, சகலரையும்விட நான் மிகவும் நிர்ப்பாக்கியன். ஆகையினால் நல்ல இயேசுவே! என்னிடத்தில் எழுந்தருளிவாரும்; என் ஆத்தும வியாதியைக் குணமாக்கி என்னை உம்முடைய தேவ வரங்களால் அலங்கரிக்க எழுந்தருளிவாரும். வியாதியாயிருக்கிறவன் வைத்தியன் எப்போது வருவானென்றும், பசியால் வருந்துகிறவன் தன் உபகாரி எப்போது வருவானென்றும், காத்துக்கொண்டிருப்பதுபோல, என் ஆத்துமமும் தேவரீர் எப்போது எழுந்தருளி வருவீரென்று ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறது. ஆ! எழுந்தருளிவாரும், சீக்கிரம் எழுந்தருளிவாரும்; தேவரீர் இல்லாமல் நான் சீவிக்கமுடியாது.

சம்பாஷணை.—தேவமாதாவோடு சம்பாஷணைசெய். அர்ச். கிளாவர் இராயப்பர் தேவமாதாவை நோக்கிச் சொன்னதுபோல, நீயும் சொல்: "ஓ என் நல்ல தாயே! உம்முடைய இருதயத்தில் எரிகிற தேவ சிநேக அக்கினியில் ஒரு பொறி என் இருதயத்தில் விழவிடும், அல்லது உம்முடைய திவ்விய குமாரனும் என்னுடைய இரட்சகருமாகிய இயேசுநாதரை நான் உட்கொள்ளும்படியாக உம்முடைய இருதயத்தைத்தானே எனக்குச் சற்றுநேரம் கொடுத்தருளும்."

இரண்டாம் தியானம்

தேவநற்கருணையைப் பத்தியோடே வாங்குவதற்கான சுகிர்த உபாயங்கள்

தியானம்.—புண்ணியாத்துமாக்கள் அநேகம்பேர் தேவநற்கருணை வாங்கும்போது அநுபவிக்கிற ஞான சந்தோஷமும் ஆழ்ந்த உணர்ச்சியும், நாம் தேவநற்கருணை வாங்கும்போது, நமது ஆத்துமத்தில் பரிச்சேதம் இல்லாமலிருக்கிறதை அல்லது அபூர்வமாயிருக்கிறதைக் காண்பதினால் நமக்கு வெட்கமும் மனவருத்தமும் பயமும் உண்டாகும். ஆகையால் நமதுபேரில் நாமே குற்றஞ் சாட்டுவதற்கு இடமிராதபடிக்கும், மேற்சொன்ன பிரமாணிக்கமுள்ள ஆத்துமாக்கள் அநுபவிக்கிற பாக்கியத்தை நாமும் அநுபவிக்கும்படிக்கும், அப்பேர்ப்பட்டவர்களைச் சுத்த மனதோடே பின்சென்று அவர்கள் தேவ வரப்பிரசாதத்தால் ஏவப்பட்டு அநுசரிக்கிற ஞான முயற்சிகளை நாமும் அநுசரிக்கிறது உத்தமம். அந்த முயற்சிகளாவன:

I. தேவநற்கருணை வாங்குகிறதற்கு முந்தின இராத்திரி

நித்திரை வருமுன் மறுநாள் திவ்விய நன்மை உட்கொள்ளுமட்டும் எவ்வளவு நேரங் காத்திருக்கவேண்டுமென்று கணித்துப்பார்த்து மனதிலே சொல்லத்தக்கதாவது: இத்தனை மணிக்குப்பின் பரலோகத்துக்கும் பூலோகத்துக்குங் கர்த்தராகிய சர்வேசுரன் என் இருதயத்தில் இறங்கி வருவார். சர்வேசுரன் சொல்லிலடங்காத நன்மைத்தனமுள்ளவர்; அவர் என் இருதயத்திலிருக்கையில் எனக்கு

என்ன குறை? இதோ! சம்மனசுக்கள் முதலாய் அநுபவிக்கக்கூடாத பாக்கியத்தை அநுபவிக்கப் போகிறேன். ஆ! என்ன அதிசயம்! அந்தக்ஷணம் உடனே வராமலிருப்பதேன்? இந்த இராத்திரியையாகிலும் செபஞ்செய்து ஆயத்தம்பண்ணுவதில் செலவழிக்கக்கடவேனாக! என் காவலான சம்மனசானவரே, என் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரே, நான் கீழ்ப்படிதலினிமித்தம் நிறைவேற்றக்கூடாத இப்பேர்ப்பட்ட ஆசையை நீங்களே எனக்குப் பதிலாக நிறைவேற்றுங்கள்.

II. காலமே கண் விழிக்கிறபோது

“தீவிரித்து இறங்கிவா, நான் இன்று உன் வீட்டில் தங்கவேணும்” என்று இயேசுநாதர்சுவாமி சக்கேயுஸ் என்பவனுக்குத் திருவுளம்பற்றின வார்த்தைகளை உன்னை நோக்கிச் சொல்லுவதாக நினைத்து, மிகுந்த அக்களிப்போடு சொல்லவேண்டிய மறுமொழியாவது: “என் இயேசுவே, இது எனக்கு அதிக மகிமையும் பாக்கியமுமாம்! இவ்வளவு நீசப்பாவியாகிற அடியேனுக்கு, இத்தகைய விசேஷ தயவு கிடைக்கிறதெப்படி? ஆ! என் ஆத்துமமே, சந்தோஷமாயிரு; உன் நிர்ப்பாக்கியம் நீங்கிப்போம்; திரளான நன்மையையும் ஆனந்தத்தையும் அநுபவிக்கப்போகிறாய்! என் சர்வேசுரா, உமது திவ்விய சிநேகத்தின் சுவாலை என் இருதயத்தில் பற்றியெரியச் செய்தருளும்; இதற்கு நான் அபாத்திரவானானால், அது பாவக்கரையினின்றாகிலும் நீங்கி முழுதும் பரிசுத்தமாகக்கடவது!” இதற்குப்பின் முகங் கழுவுகிறபோதும் உடுக்கிறபோதும், சொல்லவேண்டியதாவது: “என் ஆண்டவரே, என் ஆத்துமத்தை அற்பக் குற்றங்களிலே நின்றும் பரிசுத்தப்படுத்திக் கலியாண வஸ்திரமாகிய புண்ணியங்களால் அலங்கரித்தருளும்!”

III. தேவநற்கருணை வாங்கக் கால்மணி நேரத்துக்கு முன்

நாம் முந்தின தியானத்தில் சொல்லிய பிரகாரம், விசுவாசம், தாழ்ச்சி, நம்பிக்கை, ஆசை ஆகிய இம் முயற்சிகளை

மிகுந்த பத்தி வணக்கத்தோடு செய்யப் பிரயாசப்படவேண்டியது. பின், மகா நேர்மையான கருத்துடன் காவலான சம்மனசானவரையும் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரையும் நோக்கித் திவ்விய போசனம் வாங்கும் இடத்தில் உன்னைக் கூட்டிக்கொண்டுபோக அவர்களை வேண்டிக்கொள்.

IV. தேவநற்கருணை வாங்கும்போது

உன் இருதயந் திடீரெனப் பெத்தலேங் கொட்டிலாக மாறிப்போனதாகவும், அதிலே இயேசுநாதர்சுவாமி பிறந்ததாகவும் உரூபிகரித்துக்கொண்டு பரிசுத்த கன்னிமரியம்மாள், அர்ச். சூசையப்பர், இடையர்கள், சம்மனசுக்கள், இராஜாக்கள் ஆகிய இவர்களோடு அவரண்டையில் சாஷ்டாங்கமாக விழுந்து ஆச்சரியம், ஆராதனை, தாழ்ச்சி, நன்றியறிதல் சந்தோஷம் சிநேகம், நம்பிக்கை, மன்றாட்டு முதலிய முயற்சிகளைச் செய்வாயாக.

V. தேவநற்கருணை வாங்கினபின்

திவ்விய நன்மை வாங்கினபின் வருகிற நேரம், பத்தியுள்ள ஆத்துமாக்கள் அதிக பிரயோசனத்தையும் பலனையும் அடையத்தக்க நேரமென்று அர்ச். திரேசம்மாள் சொல்லியிருக்கிறாள். ஒருமணி நேரம் நன்றியறிந்த தோத்திரம் பண்ணுவதிலே செலவழித்தாலும், அதுமுதலாய் வெகு கொஞ்சமாக அவர்களுக்குத் தோன்றுகின்றது. ஆனால் அவர்கள் அந்நேரத்தை எதிலே செலவழிக்கிறார்களென்றால், மேற்சொன்ன ஞானப்பற்றுதல்களை எழுப்புகிறதுஞ் செப புஸ்தகங்களில் இருக்கிற பற்பல முயற்சிகளைச் செய்கிறதும் பரிபூரண பலன்களை அடைகிறதற்குக் குறிக்கப்பட்ட செபங்களைச் சொல்லுகிறதுந் தங்கள் சந்நியாச வார்த்தைப்பாடுகளையுங் கடைசி ஞான ஒடுக்கத்தில் செய்த பிரதிக்கினைகளையும் புதுப்பிக்கிறதுமாகிய இவைகளிலும், விசேஷமாய்த் தங்களையுந் தங்கள் பஞ்சேந்திரியங்களையும் ஆத்துமத்தின் தத்துவங்களையும் முழுதும்

ஒப்புக்கொடுத்து, இதுவரைக்கும் அவைகளை உபயோகித்ததைப்பார்க்க இனிமேல் உத்தம விதமாய் உபயோகிக்கும்படிக்குத் தக்க உபாயங்களைத் தேடுவதிலுஞ் செலவழிக்கிறார்கள். பத்தி சுறுசுறுப்புள்ள சந்நியாசியோவெனில் தன்னிலே நிற்காமல் தன்னிடத்தில் எரிகிற திவ்விய அக்கினிச் சுவாலையை எங்கும் பற்றவைக்கவும் உலக முழுவதிலும் இயேசுநாதரும் அவர் திரு இரத்தத்தாலே இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களும் செழித்தோங்கவும் ஆவல்கொண்டு சம்மனசுக்களையும் மோட்சத்திலிருக்கிற சகல அர்ச்சியசிஷ்டவர்களையும் தன்னோடுகூட வேண்டிக்கொள்ள அழைப்பான். அவன் செய்யும் செபமாவது: அர்ச். பாப்பானவரும் மேற்றிராணிமார்களும் குருக்களும் அர்ச். பாப்பானவராலே உலகத்தின் ஐந்து கண்டங்களிலே ஆத்தும இரட்சணியத்துக்காக அனுப்பப்பட்டிருக்கிற குருக்களும் சர்வேசுரனுடைய மகிமைக்காகவும் ஆத்தும ஈடேற்றத்துக்காகவும் விரும்புகிறதெல்லாம் நிறைவேறவுஞ் சத்திய திருச்சபையை அறியாத சகல ஜாதி ஜனங்களும் மனந்திரும்பவும், திருச்சபையின் சத்துருக்கள் தாழ்த்தப்படவும், பிரிவினையும் பதிதமதமும் அழியவும், இராசாக்களுக்குள்ளுங் கிறீஸ்துவ அதிபதிகளுக்குள்ளும் அன்னியோன்னிய ஒன்றிப்பும் மெய்யான சமாதானமும் உண்டாகவுந் திருச்சபைக்குப் பரிபூரண செயங் கிடைக்கவும் வேண்டிக்கொள்வான்.

இவ்வண்ணமே தான் வெகு ஆவலோடே கேட்ட மன்றாட்டுக்குச் சர்வேசுரன் காதுகொடுக்குமாறு வல்லபமுள்ள தேவமாதா அண்டையில்போய், ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டு விசுவாசமற்றவர்களாயிருக்கிற இவ்வுலகத்தின் சகல மனுஷர்களையும் அவளுக்குக் காண்பித்து உலகத்தை இரட்சிக்கும்படி அந்த இராக்கினியிடத்திலே வேண்டிக்கொள்வான். இதற்குப்பின் இயேசுநாதர்சுவாமியை நோக்கி, அர்ச். பாப்பானவர் தேவமாதா சென்மப்பாவமில்லாமல் உற்பவித்தாளென்று திருச்சபையிலே பிரபலம்பண்ணின காலந்துவக்கி இற்றைவரையில் அவருடைய திருத்தாயாருக்குச் செய்யப்பட்ட உன்னதமான

வணக்கத்தைக் காட்டி அந்த வணக்கத்தினிமித்தஞ் சகல சனங்களையும் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளும்படி வருந்திக் கேட்பான்.

மூன்றும் தியானம்

கடைசி இராப்போசனம் அல்லது அப்போஸ்தலர்கள் வாங்கின புது நன்மை

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர்சுவாமி தமது அப்போஸ்தலர்கள் மத்தியில் இருப்பதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—உன்னிடத்தில் விசுவாசமும் சிநேகமும் அதிகரிக்கும்படி மன்றாடு.

முதல் பிரிவு

இயேசுநாதர்சுவாமி தேவநற்கருணையை உண்டாக்கினது

தியானம்.—தேவநற்கருணை, குருத்துவம், திவ்விய நன்மைவாங்குதலாகிய இந்த ஆச்சரியங்கள் எவ்விதம் ஏற்பட்டன என்பதைப்பற்றி சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறதாவது: நமது ஆண்டவராகிய இயேசுநாதர்சுவாமி தாம் காட்டிக்கொடுக்கப்படும் அன்றிராத்திரிதானே தமது அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவிப் பந்தியமர்ந்து அப்பத்தை எடுத்துத் தோத்திரம்பண்ணி அதைப் பிட்டுத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்து இதை வாங்கிப் புசியுங்கள்; இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் என் சரீரமாமே; என்னை நினைவுகூர்ந்து இதைச் செய்யுங்கள் என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்துத் தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து எல்லாரும் இதிலே பானஞ் செய்யுங்கள்; ஏனெனில் உங்களுக்காகவும் அநேகருக்காகவும் பாவப் பொறுத்தலினிமித்தஞ் சிந்தப்படும் என் இரத்தம் இதுவே என்றருளிச் செய்தார். அவர்களெல்லோரும் அதிலே பானம்பண்ணினார்கள் (கொரி. 11; மத். 26; லூக். 22; மாற். 14).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த வர்த்தமானங்கள் வெகு நுணுக்கமாய் வருணிக்கப்பட்டிருக்கின்றன; ஆதலால், ஓர் விதத்தில் அவைகள் நமது கண்முன்டாக நடக்கிறாப்போல் தோன்றுகின்றன. அவைகளில் ஆச்சரியமான இரண்டு காரியங்கள் நமது நோக்கத்தை விசேஷமாய்க் கவருகின்றன. இயேசுக்கிறீஸ்துநாதர் தம்மை மனுமக்களுக்குத் திவ்விய போசனமாகக் கொடுப்பதில் காட்டியருளிய அளவிறந்ததும் வாக்குக்கெட்டாததுமான பட்சமும், க்ஷணப்பொழுதில் தெய்வீகத்தின் உயிருள்ள ஆலயமாகவும் ஓர் விதத்தில் தெய்வமாகவும் மாறின அப்போஸ்தலர்களுடைய சொல்லிலடங்காத பாக்கியமுமாம்.

ஆ! என் ஆத்துமமே, இன்னஞ் சிறிது நிமிஷம் பொறு; இயேசுநாதர்சுவாமி கடைசி இராப்போசனத்தில் நிறைவேற்றின சிநேகத்தின் அற்புதத்தை உன்னிடத்திலும் புதுப்பிப்பார்; அப்போஸ்தலர்கள் அடைந்த பாக்கியத்தை நீயும் அடைவாய்! சில நிமிஷந்தான் செல்லும்; அதன்பின், இயேசுநாதர்சுவாமி என் நாவின்மேல் எழுந்தருளிவந்து என்னைப்பார்த்துத் தமது குருவானவர் வாயால் "இதைப் புசி; ஏனெனில் இது என் சரீரம்" என்பார்.

மனப்பற்றுதல்.—விசுவாசம், ஆச்சரியம், தாழ்ச்சி, நம்பிக்கை, ஆசை முதலிய முயற்சிகளை உன்னிடத்தில் பிறப்பித்துக்கொள்.

பிரதிக்கினை.—நீ நன்மை வாங்கப்போகிற இன்றையத் தினத்தில் கடைசி இராப்போசனத்தின் உருபிகரம் இடைவிடாமல் உன் கண்முன்பாக இருக்கப் பிரயாசப்படு.

2-ம் பிரிவு

தேவநற்கருணையை உண்டுபண்ணுமுன் இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றின வாக்கியங்கள்

தியானம்.—தேவநற்கருணையையும் நன்மை வாங்குதலையுஞ் சேர்ந்த தேவதிரவிய அநுமானம், பரம இரகசியங்களுக்கெல்லாம் மேலான பரம இரகசியமுஞ் சகல அற்புதங்

களிலும் மேலான அற்புதமுமாகையால், இயேசுநாதர்சுவாமி தமது அப்போஸ்தலர்கள் அதை விசுவசிக்கும்படி சன்னஞ்சன்னமாய் அவர்களை ஆயத்தப்படுத்தினார். அவர் பிரசங்கிக்க ஆரம்பித்த இரண்டாம் வருஷத்திலேயே இதைப் பிரதான போதகமாகத் தெரிந்துகொண்டாரென்று அறிந்திருக்கிறோம். அதைப்பற்றி அவர், சுவிசேஷகராகிய அர்ச். அருளப்பர் மூலமாய்ச் சொல்லியிருக்கிறதை உற்றுக்கேட்கவேணும், அதாவது: "உங்கள் பிதாக்கள் கானகத்திலே மன்னாவைப் புசித்தும் இறந்துபோனார்கள். மோக்ஷத்தினின்று இறங்கிவந்த சீவனுள்ள அப்பம் நானே; நான் கொடுக்கப்போகிற அப்பமோ உலகத்தின் சீவியமாயிருக்கிற என் மாமிசமாமே," என்றார். இவ்விடத்திலே அர்ச். அருளப்பர் நமது ஆண்டவருடைய வார்த்தைகளைத் தொடர்ந்து சொல்லாமல் நிறுத்திக்கொண்டு அறிவிப்பதாவது: இந்த வார்த்தைகளைக்கேட்ட யூதர்கள் தங்களுக்குள்ளே வாக்குவாதஞ் செய்துகொண்டு, இவன் தன் மாமிசத்தை நமக்கு எப்படிப் புசிக்கக் கொடுக்கக்கூடுமென்றார்கள். அப்போது இயேசுநாதர்சுவாமி அவர்கள் தாம் சொன்னதைச் செவ்வையாகக் கண்டுபிடித்தார்களென்றுந் தப்பி மோசம் போகவில்லையென்றும் உள்ளபடியே, அது தமது மெய்யான போசனந்தானென்றும் அவர்களுக்கு நன்றாய் விளக்கிக் காட்டும்பொருட்டு அவர்களை நோக்கி: மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் மனுமகனுடைய மாமிசத்தைப் புசியாமலும் அவனுடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால், உங்களிடத்தில் சீவியத்தைக் கொண்டிருக்கமாட்டீர்கள். அதேதெனில், என் மாமிசம் மெய்யாகவே போசனமும் என் இரத்தம் மெய்யாகவே பானமுமாயிருக்கிறதென்று திருவுளம்பற்றினதாக எழுதிவைத்தார் (அரு. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அதிசயத்துக்குரிய இவ்வார்த்தைகளைத் திரும்பத்திரும்ப வாசித்து அவைகளைத் தியானிக்கக்கடவோம். அவைகளால் எவ்வளவோ ஞான ஒளியும் எவ்வளவோ இன்பமும் உன்னதமுமான உணர்வுகளும் நம்மிடத்தில் பிறக்கும்!

அதிக உத்தம ஆயத்தத்தோடு தேவநற்கருணை வாங்கி, விசேஷ பலனை அடையவும் இது உதவும்.

மனப்பற்றுதலும் பிரதிக்கினையும்.—முந்தின பிரிவில் செய்தவண்ணம் செய்யவேண்டும்.

3-ம் பிரிவு

தேவநற்கருணையை உண்டாக்கினபின் விளங்கின விசேஷங்கள்

தியானம்.—சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறபடி, இயேசுநாதரிடத்தில் விளங்கின விசேஷங்களாவன: 1-வது, தமது அப்போஸ்தலர்கள்மேல் அதிக உருக்கமான பட்சம். எப்படியென்றால், அவர்களைப் பிள்ளைகளே என்று அழைத்து: பிள்ளைகளே, என்னில் தங்குங்கள், நான் உங்களில் தங்குவேனென்றார். இதற்குமுன் அவர்களை ஒருபோதும் இவ்விதமாய் அழைத்ததில்லை. 2-வது, அவர்களுக்கு அதிகமாய்க் காண்பித்தருளிய திறந்தமனது. இதைப்பற்றி அவர்கள்தானே அவரைநோக்கி: ஆண்டவரே, இதோ இப்போது உவமையன்றி வெளியரங்கமாய்ப் பேசுகிறீரே என்றார்கள் (அரு. 13, 15, 16).

அப்போஸ்தலர்களிடத்தில் காணப்பட்ட விசேஷங்களாவன: 1-வது, அதிகமான ஆத்தும சுத்தி. இதனால் இயேசுநாதர்சுவாமி அவர்களைப்பார்த்து: இப்போது நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்களென்றார் (அரு. 15). 2-வது, ஞானக்காரியங்களின்மட்டில் தேர்ந்த அறிவு. இதைப் பற்றி அவர்களே இயேசுநாதர்சுவாமியை நோக்கி: இப்போது கண்டுபிடிக்கிறோமென்றார்கள் (அரு. 16). 3-வது, அவர்கள் தங்கள் தேவ ஆசாரியன்மட்டில் கொண்ட அதிக பட்சமும் பத்தியுமாம். இதினாலே எல்லாரும் அர்ச். இராயப்பரைப்போல் கூவி: உம்மோடுகூட நான் சாகவேண்டியிருந்தாலும், உம்மை மறுதலியேனென்றார்கள் (மத். 26).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—முந்தின இரண்டு தியானங்களிலும் நாம் சொல்லிக்காட்டின முயற்சிகளை நீ எவ்வளவு சுறுசுறுப்புப் பிரமாணிக்கத்தோடு உதவிக்கொள்வாயோ, அவ்வளவுக்கு இத்தியானத்தில் வெளிப்படுத்திய நல்லுணர்ச்சிகளை உன்னிடத்தில் அநுபவிப்பாய். ஆகையால் பிரமாணிக்கமாய் அவைகளை உதவிக்கொள்.

சம்பாஷணை.—அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரோடு சம்பாஷணை செய். இவர் அடிக்கடி திவ்விய நன்மை வாங்குகையில், மகா சாக்கிரதையாய் ஆயத்தம்பண்ணினபடியால் வெகு ஞானப்பலன்களை அடைந்தார்.

நான்காம் தியானம்

தேவநற்கருணை வாங்குகையில் இயேசுநாதர்சுவாமி நமக்குக் கொடுக்கிற விலையேறப்பெற்ற அச்சாரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—"ஓ! சர்வேசுரனுடைய வரம் எப்பேர்ப்பட்டதென்று நீ அறிவாயானால்" என்று இயேசுநாதர்சுவாமி சொன்னதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—நீ தேவநற்கருணை வாங்கும்போது, இயேசுநாதர்சுவாமி உனக்குக் கொடுக்கிற விலையேறப்பெற்ற அச்சாரங்களை நன்றாய்க் கண்டுபிடிக்கும்படி வரப்பிரசாதத்தைக் கேள்.

முதல் பிரிவு

அணைகடந்த சிநேகத்தின் அச்சாரம்

தியானம்.—ஒரு மனிதன் தன் சிநேகிதன்பேரில் கொண்ட பட்சத்தினிமித்தம் அவனுக்காகத் தன் ஆஸ்தி சம்பத்தெல்லாம் இழந்துபோவதைக் காண்பது அபூர்வம்; இன்னம் அவனைப்பற்றித் தனது சுதந்தரத்தையும் இழந்து, சிறையிலும் அடைபட்டிருப்பதைக் காண்பது அதிலும் அபூர்வமான காட்சி. ஆனால் ஒருவன் மற்றொருவனுக்காக எவ்வித வேதனைகளையும் அநுபவித்துத் தன் உயிரைக்

கொடுத்ததாக ஒருக்காலுங் காணவில்லை. நமது திவ்விய கர்த்தரோவென்றால் நமக்காக இதெல்லாஞ் செய்திருக்கிறார். ஆனால் இதுவெல்லாம் தமது உருக்கமான சிநேகத்தைக் காண்பிக்கப்போதாதென்றாற்போல், தேவநற்கருணையில் தம்மைத்தாமே நமக்குப் போசனமாகக் கொடுக்கவும் நம்மைத் தாமாகமாற்றித் தம்மோடு நாம் ஒரே பொருள் போலாகவுஞ் சித்தமானார். அவர்தாமே அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தில் திருவுளம்பற்றியிருக்கிறதாவது: "என் மாமிசத்தைப் புசிக்கிறவன் என்னில் வசித்திருக்கிறான், நானும் அவனில் வசித்திருக்கிறேன்" (அரு. 6) இதைவிட அதிக மேலானதும் விலையுயர்ந்ததுமான சிநேகத்தின் அச்சாரம் அவர் நமக்குக் கொடுக்கக்கூடுமோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—இயேசுநாதர்சுவாமி சில நிமிஷத்துக்குள் தேவநற்கருணையின் மூலமாக என்னிடத்தில் வந்து, தமது சிநேகத்தின் சொல்லரிய இந்த அச்சாரத்தை எனக்குக் கொடுக்கப் போகிறார். இதற்கு நன்றியறிதலாக நான் என்னத்தைக் கொடுப்பேன்? ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் (அப். நட. 9)? அதற்கு மறுவுத்தரமாக அவர், "நீ நம்மைச் சிநேகித்தால், நம்முடைய கட்டளைகளை அநுசரி" யென்பார் (அரு. 14). அதாவது: நம்மைச் சிநேகிப்பதில் நிலைமையாயிரு; நமது பட்சத்தை இழந்துபோகிறதைவிட, ஓர் அற்பக் குற்றத்தை முதலாய் மனது பொருந்திக் கட்டிக்கொள்வதினால் நமக்கு மனஸ்தாபம் வருவிப்பதைப் பார்க்க, உன் ஆஸ்திசம்பத்தையும் உன் சுதந்தரத்தையும் உன் உயிரையும்முதலாய் விட்டுவிட எப்பொழுதும் தயாராயிரு என்பார். இப்பேர்க்கொத்த நற்கருத்து என்னிடத்தில் எப்பொழுதும் இருந்ததோ? இப்பொழுதும் இருக்கிறதா? வழக்கமாய் இருக்கிறதோ? என் மனசாட்சி சொல்லுகிறதென்ன?

மனப்பற்றுதல்.—நான் இன்று நன்மை வாங்குகையில் இயேசுநாதர்சுவாமி இந்த நற்கருத்தை என்மனதில் ஸ்திரமாய்ப் பதித்தருளும்படி அவரைக் கெஞ்சி மன்றாடுவேனாக.

பிரதிக்கினை.—நான் திவ்விய நன்மை வாங்கி இந்தச் சுகிர்த பலனை அடையும்வரைக்கும் மற்றதெல்லாம் அற்பமென்று எண்ணிக்கொள்ளுவேனாக.

2-ம் பிரிவு

மகிமைக்குரிய உத்தானத்தின் அச்சாரம்

தியானம்.—அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறபிரகாரம், எல்லாரும் உயிர்ப்போமென்பது மெய்யானாலும், எல்லாரும் ஒரே உருபமாய் மாறிப்போகமாட்டோம். ஏனெனில், நீதிமான்களுடைய சரீரம் பிரகாசம், இலகு, அட்சயமுள்ளதாயிருக்கும்; சபிக்கப்பட்ட பாவிகளுடைய சரீரமோவென்றால் அவலக்ஷணமும் பளுவுமாகி, எவ்வித வேதனைகளையும் அநுபவிக்கத் தகுந்ததாயிருக்கும். இவ்விதமாகவே சிலர் மகிமைபெறவும் மற்றவர்கள் நித்தியமாய் வெட்கம் அடையவும் உயிர்ப்பார்கள் (1. கொரி. 15). இத்த இரண்டிலொன்று நம்மெல்லாருக்கும் வருமென்பது நிச்சயம். யாதொருவன் மகிமையோடு உயிர்ப்பதற்கு அடைமானம் பெற்றிருப்பானாகில், அவன் எவ்வளவோ பாக்கியவான்! விலையேறப்பெற்ற இந்த அடைமானம் நம்மெல்லாருக்குந் தேவநற்கருணையில் இருப்பதால் சந்தோஷப்படக்கடவோம். இதினாலேதான் நம்முடைய சரீரத்தில் உத்தானத்தின் வித்து விதைக்கப்பட்டிருக்கின்றது. திருச்சபையானது இதைப் படிப்பிக்கிறதுமல்லாமல் குருவானவர் திவ்விய நன்மை கொடுத்தபின்: "ஓ! இனி நமக்குப் வரப்போகிற மகிமையின் அச்சாரமடங்கிய பரிசுத்த விருந்தே" என்கிற வார்த்தைகளைச் சொல்லும்போதெல்லாம், அவர் வாயினால் திரும்பவும் அதை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. இவ்வார்த்தைகள் "என் மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவியமுண்டு; பின்னுங் கடைசிநாளிலே நான் அவனை உயிர்ப்பிப்பேனென்று" இயேசுநாதர்சுவாமி சொன்ன வாக்கியத்துக்கு ஒத்திருக்கின்றன (அரு. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது ஆத்துமமுஞ் சரீரமும் மகிமையான சீவியத்தையும் நித்திய பாக்கியத்தையும் அநுபவிக்கத் திவ்விய நன்மை காரணமாயிருக்கிறதென்கிற நினைவு நாம் அதை வெகு ஆவலோடு வாங்கச்செய்யும். இதைக்கொண்டு அத்தகைய மகிமையும் பாக்கியமுமுள்ள உயர்ந்தபடியில் ஓர் விதத்தில் அளவில்லாத விதமாய் நம்மால் ஏறக்கூடும். அர்ச். சின்னப்பர் சொல்லுமாப்போல, எவ்விதமாய் ஒரு நட்சத்திரம் மற்றொரு நட்சத்திரத்தைவிட அதிகப் பிரகாசமாய்த் துலங்குகிறதோ, அவ்விதமாகவே மரித்தவர்கள் உயிர்க்கும்பொழுது, ஒரு சரீரம் மற்றொரு சரீரத்தைவிட அதிகமாய்ப் பிரகாசிக்கும் (கொரி. 15).

மனப்பற்றுதல்.—ஆறுதலையுந் தைரியத்தையுந் தருகிற இச்சத்தியங்களின் பேரில் விசுவாச நம்பிக்கை முயற்சி செய்வாயாக.

பிரதிக்கினை.—உனக்கு நன்மை வாங்க உத்தரவு இருக்கும்பொழுது ஒருக்காலுந் தவறாதே.

3-ம் பிரிவு

மோட்சத்தில் நமக்குண்டாகும் மேலான மகிமையின் அச்சாரம்

தியானம்.—திவ்விய நன்மை வாங்குவது நாம் மகிமையோடு உயிர்ப்போமென்பதற்கு அடைமானமாயிருக்கிறதுமன்றி, நாம் மோட்சத்தில் அநுபவிக்கும் மேலான மகிமைக்கும் பாக்கியத்துக்கும் ஓர் அச்சாரமுமாயிருக்கிறது. இது எப்படிச் சம்பவிக்குமென்று கண்டுபிடிக்கிறது எளிதான காரியம். சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறதுபோல, ஒவ்வொருவனுக்கும் தன் நற்கிரியைக்குத் தகுந்ததுபோல மகிமையுஞ் சந்தோஷமும் உண்டாகும் (மத். 16).

ஆனால் நமது நற்கிரியைகளுக்கு மேலான பலனைக் கொடுப்பது தேவ சிநேகம் மாத்திரம்; மேலும் நம்மிடத்தில் விளங்குந் தேவ சிநேகத்துக்குத் தகுந்த பிரகாரம் அப்பலனும் அதிகமாகும். திவ்விய நன்மை வாங்குவதால் நமக்கு நேராய் உண்டாகும் முக்கியமான பலன் தேவசிநேகம் நம்மிடத்தில் அதிகரிக்கிறதாம்; ஆகையால் திரளான பலன்களைச் சம்பாதிப்பதற்கும் மோட்சத்தில் மேலான மகிமையை அடைவதற்கும் அடிக்கடி தேவநன்மை வாங்குகிறதே தவறாத வழியென்பதற்குச் சந்தேகமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மற்ற முகாந்திரங்களோடுகூட இதையும் யோசித்துப் பார்த்தால், உனக்கு உத்தரவு இருக்கிற நாட்களிலெல்லாம் நன்மை வாங்கத் தவறாதபடி அதிகமதிகமாய் ஸ்திரங்கொண்டு உறுதியாயிருப்பாய்.

சம்பாஷணை.—சம்மனசுக்கள் கையால், இரண்டு விசை திவ்விய நன்மை வாங்கப் பாக்கியம் பெற்ற அர்ச். ஸ்தனிஸ்லாசோடு சம்பாஷணை செய்.

ஐந்தாம் தியானம்

தேவநற்கருணையால் உண்டாகும் ஆச்சரியமான பலன்கள்

ஆயத்தச் சிந்தனை.—நீங்கள் மனுமகனுடைய மாமிசத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால், உங்களிடத்தில் சீவியத்தைக்கொண்டிருக்கமாட்டீர்களென்று இயேசுநாதர்சுவாமி சொல்லுகிறதைக் கேட்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேணுக.

தியானச் செபம்.—தேவநற்கருணையால் உண்டாகும் ஆச்சரியமான பலன்களை நன்றாய் அறியவும் விசேஷமாய் அநுபவிக்கவும் வரப்பிரசாதத்தைக் கேட்பேணுக.

முதல் பிரிவு

தேவநற்கருணை நமது ஆத்துமத்தின் பரிசுத்த தனத்தைக் காப்பாற்றி அதிகரிக்கிறது

தியானம்.—தகுந்த ஆயத்தத்தோடு திவ்விய நன்மை வாங்குகிறவர்களிடத்தில், தேவநற்கருணை அநேக அற்பப்

பாவங்களைப்போக்கி சர்வேசுரனுடைய சன்னிதானத்தில் அவர்கள் ஆத்துமத்தை அலங்காரக் குறைவாக்கிக்கொண்டிருந்த அநேக கறைகளை நீக்குமென்பதும் விசுவாச சத்தியம். மேலும் அவர்கள் திரும்பப் பாவத்தில் விழாதபடி," தேவநற்கருணை அவர்களைக் காப்பாற்றுமென்பதும் விசுவாச சத்தியமே. எப்படியென்றால், முதலாவது நமது பாவங்களுக்கு ஊற்றாயிருக்கிற அக்கிரமமான ஆசாபாசங்களின் அகோரத்தையும், மும்முரமான சோதனைகளின் வேகத்தையும் தணிப்பதினாலேயும், இரண்டாவது, பாவத்தின் அவலக்ஷணத்தை அதிகமாய்க் கண்டுபிடிக்கச் செய்து அதின்பேரில் அதிக வெறுப்பைத் தோற்றுவிக்கும் நூதன ஒளியை அவர்களுடைய புத்தியில் பொழிவதினாலேயும், கடைசியாய்ப் பாவத்தைத் தவிர்க்கப் புதுப்பெலனை அவர்களுக்குத் தருவதினாலேயும் காப்பாற்றும். இதினாலன்றோ, உலக சோதனைகள் நடுவில் சீவிக்கும் அநேக கிறீஸ்துவர்களிடத்தில் ஆச்சரியத்துக்குரிய ஆத்தும சுத்தியைக் காண்கிறோம். அவர்கள் தேவநற்கருணையை அடிக்கடி வாங்குவதால் அடைந்த வரப்பிரசாதமிதுவே. அது உன்னிடத்தில் என்ன பலனைப் பிறப்பித்ததென்று யோசித்துப்பார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வாரந்தோறும் வழக்கமாய் நாம் வாங்கிவரும் திவ்விய நன்மையின் முழுப்பலனை நிச்சயமாய் அடையும்படி வாரவாரம் எம்மைப்போல நன்மை வாங்கிவந்த அர்ச். ஞானப்பிரகாசியாரைக் கண்டுபாவிப்போமாக: அவர் வாரத்தின் முதற்பாகத்தை இயேசுநாதருக்குத் தம்முடைய நன்றியறிதலைக் காட்டுவதிலும் வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளாகிய வாரத்தின் இரண்டாம் பாகத்தை மறுபடி நன்மை வாங்குகிறதற்குத் தம்மால் கூடிய ஆயத்தஞ் செய்வதிலும் பத்தியோடு செலவழிக்கப் பிரயாசப்படுவார். நாமும் அவ்விதமாய்ச் செய்தால், அவருக்குத் திவ்விய நன்மை மிகுந்த ஆத்தும பரிசுத்ததனத்தையும் மேலான சாங்கோபாங்கத்தையும் அடையத் தவறாத வழியாயிருந்ததுபோல நமக்கும் இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

மனப்பற்றுதல்.—இவ்வளவு உத்தம மாதிரிகையை உனக்குக் காண்பித்த அர்ச் ஞானப்பிரகாசியாரைத் தோத்தரிப்பாயாக. அவருடைய நல்ல மாதிரிகையைப் பிரமாணிக்கமாய்க் கண்டு பாவிக்கும்படியான வரப்பிரசாதத்தைக் கேள்.

பிரதிக்கினை.—சில வாரமாகிலும் அதை அநுசரிக்கப் பிரயாசப்படு.

2-ம் பிரிவு

தேவநற்கருணை நமது ஆத்துமத்தின் திடனைக் காப்பாற்றி அதிகரிக்கிறது

தியானம்.—தேவநற்கருணை நமது ஆத்துமம் பரிசுத்தமாயும் சர்வேசுரனுடைய பார்வைக்குப் பிரியமானதாயுமிருக்கச் செய்கிறதுமல்லாமல், அதற்கு ஆச்சரியமான திடனையுந் தருகின்றது. இதைக் காட்டுவதற்காகவே நமது ஆண்டவர் அப்பம் இரசம் இவைகளின் குணங்களுக்குள்ளே, தம்மைத்தாமே நமக்குக் கொடுக்கிறார்.

ஆனால் திவ்விய நன்மை நம்முடைய ஆத்துமத்துக்குத் திடனைத் தருகிறதெப்படி? இதைக் கண்டுபிடிக்கிறது கடினமல்ல; ஏனென்றால், சரீரம் ஆத்துமத்தோடு கூடியிருப்பதால் மாத்திரம் பிழைக்கக்கூடுமாப்போலே நமது ஆத்துமம் சிநேகத்தின் வழியாய்ச் சர்வேசுரனோடு ஒன்றித்திருப்பதால் மாத்திரஞ் சுபாவத்துக்கு மேலான விதமாய்ச் சீவனம் பண்ணக்கூடும். இந்த ஒன்றிப்பு எவ்வளவு நெருங்கினதாயிருக்குமோ, அவ்வளவுக்கு ஆத்துமத்துக்கு அதிக பெலன் உண்டாகும். ஆனால் உருகின மெழுகின் இரண்டு துண்டு எப்படி ஒன்றித்துப் போகிறதோ, அதிலும் அதிகமாய் நமது ஆத்துமம் தேவநற்கருணையால் இயேசுநாதரோடு ஒன்றிக்கிறதென்று அர்ச் சிப்பிரியான் என்பவர் வசனித்திருக்கிறார். நமது ஆண்டவரும் "என் மாமிசத்தைப் புசிக்கிறவன் என்னில் வசித்திருக்கிறான், நானும் அவனில் வசித்திருக்கிறேன்" என்று சொல்லுகிறதினால் ஆச்சரியமான இந்த ஒன்றிப்பை நிச்சயம்பண்ணுகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த உபகாரத்துக்காகச் சர்வேசுரனுக்குத் தோத்திரஞ் சொல்லுவோமாக. அடிக்கடி திவ்விய நன்மை வாங்கினதினாலே தான், வருத்தமான அநேக சமயங்களில் நமது தைரியமும் நிலைமையுந் தவறிப்போகவில்லையென்று ஒத்துக்கொண்டு மிகுந்த தாழ்ச்சியோடே நன்றியறிந்திருக்கக் கடவோம். இன்னமும் நமது தேவ அழைத்தலில் நாம் நிலைத்திருக்கச் செய்வதும் இதுவே.

மனப்பற்றுதல்.—நன்றியறிதலையுந் திவ்விய நன்மையின்மட்டில் மதிப்பையும் வேகமான ஆசையையும் நம்மிடத்தில் பிறப்பிக்கக்கடவோம்.

பிரதிக்கினை.—நமக்கு உத்தரவு இருக்கும்போதெல்லாம், உத்தம ஆயத்தத்தோடும் மிகுந்த பத்தி வினயத்தோடும் நன்மை வாங்குவோமாக.

3-ம் பிரிவு

தேவநற்கருணை நமது ஆத்துமத்தை மேன்மைப்படுத்தி உத்தமமாக்குகிறது

தியானம்.—திவ்விய நன்மை வாங்குவதினால் நாம் மேற்சொன்ன இரண்டு பலன்களை அடைவதைப்பார்க்க ஆச்சரியமான வேறொரு பலனை அடைவோம்; அதேதென்றால், நாம் ஒருவிதத்தில் இயேசுநாதராக மாறி அவரோடு ஒரே சீவியமாய்ச் சீவிக்கிறதுந்தவிர, ஒருநாள் மோக்ஷத்தில் அவருக்குச் சரிசமானமாயிருப்போமென்று அர்ச். அருளப்பர் சொன்ன வார்த்தைக் கொத்தபிரகாரம், இப்போதே அவருக்குச் சரியொத்தவர்களாவோம். (அரு. 1. நிரு). அர்ச். தோமாஸென்பவர் ஓர் உவமையைக்கொண்டு இதை நேர்த்தியான விதமாய்த் தெளிவித்திருக்கிறார், அதாவது: ஒரு நல்ல மரத்தின் கிளையைக் கெட்ட மரத்தின் கிளையோடு சேர்த்து ஒட்டினால், அந்த நல்ல கிளை கெட்ட மரத்தின் கைப்பான சாற்றை எடுத்துப் போட்டு, எப்படி நற்கனி கொடுக்கச் செய்கிறதோ,

அப்படியே இயேசுக்கிறீஸ்துநாதரின் சரீரமானது ஓர் விதத்தில் நம்மோடுகூடச் சேர்ந்து ஒட்டியிருக்கிறதினாலே நமது குற்றங்களைத் திருத்தித் தம்மிடத்திலுள்ள நன்மைத்தனத்தையும் நன்மைசெய்யும் வரத்தையும் நமக்குத் தந்து அவர் சுகிர்த பலன்களை விளைவிக்கிறதுபோல் நம்மையும் விளைவிக்கச் செய்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவநற்கருணையில் நமக்காக அடங்கியிருக்கிற அளவிறந்த நன்மைகளை நினைத்துச் சந்தோஷப்படுவோமாக. ஆனால் எவ்வளவு நாம் அதற்கு ஆயத்தம் பண்ணித் தகுந்தவிதமாய் உட்கொள்ளுவோமோ, அவ்வளவுக்கு எப்பொழுதும் அந்நன்மைகளை அடைவோமென்று ஒருக்காலும் மறவாதிருக்கக்கடவோம். இவ்வாயத்தத்துக்கடுத்தவைகள் முந்தின தியானங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நுணுக்கமாய் அநுசரிப்போமாக.

சம்பாஷணை.—நித்திய வார்த்தையானது மாமிசமான சமயத்தில், மிகுந்த மகிமைக்குரிய சுதந்தரங்களாலும் மகா உன்னத இலட்சணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட அர்ச். தேவமாதாவோடு சம்பாஷணை செய்வோமாக.

ஆறும் தியானம்

இயேசுநாதர் தேவநற்கருணை வழியாக நம்மிடத்தில் எழுந்தருளிவரும்போது, அவர் நம்மிடத்தில் செய்து வரும் ஆச்சரியமான புதுமைகளின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—ஆண்டவர் தமது அதிசயத்துக்குரிய செய்கைகளையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து அடக்கினாரென்று தாவீது இராசா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறதைக் கேட்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—தேவநற்கருணையில் அடங்கியிருக்கும் அற்புதங்களைத் தகுந்தபிரகாரமாய் மதிக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

முதல் பிரிவு

சிநேகத்தின் புதுமை

தியானம்.—ஒருவன் தன் சிநேகிதர்களுக்காகத் தன் பிராணனை விடுகிற அன்புக்கு மேற்பட்ட அன்பு எவனிடத்திலும் இல்லையென்று இயேசுநாதர் திருவுளம்பற்றினார் (அரு. 15). இப்பேர்ப்பட்ட அன்பின் அடையாளத்தை அவர் இவ்வுலகத்தில் வந்த நாள் துவக்கி நமக்குக் கொடுக்கத் தீர்மானித்திருந்தார். ஆனால் மரணம் நம்மைவிட்டு அவரைப் பிரிக்கவேண்டியதாயிருந்தது; ஆனால் அதற்கு அவர் சம்மதியாமல், நமக்காக மரணமடைந்தாலும், நம்மோடுகூட உலக முடியுமட்டும் வாசம்பண்ணவும் அதற்காகத் தம்மைப் போசனமாக நமக்குக் கொடுத்துத் தமது மாமிசத்தினாலும் இரத்தத்தினாலும் நம்மைத் திருப்தியாக்கவுஞ் சித்தமானார்; இது மனுஷர்கள் புத்திக்கெட்டாத காரியம். அவர் சிநேகத்துக்குரிய இப்புதுமையெல்லாம் எப்படி நிறைவேற்றினார்? தேவநற்கருணையை ஏற்படுத்தினதினாலே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரனுடைய இந்தச் சிநேகத்தின் புதுமைகள் உன்னிடத்திலும் எத்தனைவிசை புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன? நீயும் எத்தனைவிசை திவ்விய நன்மை உட்கொண்டிருக்கிறாயென்று, உன்னாலே கூடுமானால், கணித்து அதை வாங்கினதினாலே இயேசுநாதர்மட்டில் உனக்கு உண்டான பத்தியும் உதாரமும் எப்பேர்க்கொத்ததென்று உன்னைச் சோதித்துப் பார், அல்லது நீ அவரது ஊழியத்தில் இன்னம் இவ்வளவு அசமந்தமாயும் உதாரகுணமற்றவனாயும் இருக்கிறதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து அறிந்து உன்னைத் திருத்திக்கொள்ள முயற்சி செய்.

மனப்பற்றுதல்.—உன்னைத்தானே தாழ்த்திச் சர்வேசுரனிடத்தில் பொறுத்தலைக் கேள். மேலும் இயேசுநாதர் காண்பித்தருளிய சிநேகத்துக்குப் பிரதிசிநேகம் காண்பிக்க வேகமான ஆசையை உன்னிடத்தில் எழுப்புவாயாக.

பிரதிக்கினை.—நீ அந்தத் திவ்விய பந்திக்குப் போகும்போதெல்லாம், இயேசுநாதர்மட்டில் உனக்குள்ள சிநேகத்தைக் காண்பிக்கும்படி உதாரத்தோடு யாதொரு பலியை அவருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடு.

2-ம் பிரிவு

வல்லமையின் புதுமை

தியானம்.—தேவநற்கருணையில் இயேசுநாதருடைய சிநேகத்தின் புதுமை எப்படி விளங்குகிறதோ, அப்படியே அவருடைய வல்லமையின் புதுமையும் விளங்குகின்றது. ஒரு மனிதன் எவ்வளவுதான் புத்திசாலியாயிருந்தபோதிலும், இந்த வல்லமையைச்சேர்ந்த அற்புதங்களை அவன் புத்தியினால் ஆழ்ந்து பரீக்ஷிக்கக்கூடியவனல்ல. ஏனெனில், இயேசுநாதர் அப்பத்தின் உரூபமாகக் காணப்பட்டபோதிலும், அவர் அப்பமாயிராமல் மோக்ஷத்தில் வீற்றிருக்குஞ் சரீரத்தோடும் ஆத்துமத்தோடும் நம்மிடத்தில் எழுந்தருளிவருகிறாரென்பதும், கணக்கில்லாத சனங்கள் அந்த ஆண்டவரை ஒரே சமயத்தில் யாதொரு குறைவில்லாமல் வாங்கிவருகிறார்களென்பதும், அர்ச்சிக்கப்பட்ட இந்த அப்பத்தை எவ்வளவுதான் சிறு துண்டுகளாகப் பகுத்துப் பிரித்தபோதிலும், அவைகள் ஒவ்வொன்றிலும் இயேசுநாதர் தமது ஆத்தும சரீரத்தோடு முழுமையாய் வீற்றிருக்கிறாரென்பதும், அப்பத்தின் குணங்கள் மாறிப்போக, இயேசுநாதரும் அதிலே இராமல் பிரிந்துபோகிறாரென்பதுமாகிய இவைகளைக் கண்டுபிடிக்கக்கூடுமானவனார்?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த ஆச்சரியமான காரியங்கள் நமது புத்திக்கு எவ்வளவும் எட்டாததாயிருந்தாலும், இவ்விதம் நடப்பது எவ்வளவுங் கூடாததாகத் தோன்றினாலும், இந்தத் தேவ இரகசியத்தின் விஷயத்தில் முழு நிலையுள்ள விசுவாசம் கொண்டிருக்கிறோம். நாம் பார்க்காததை விசுவசிக்கிறதுமல்லாமல் சுவை, ஒளி முதலிய நமது ஐம்பொறிகளின் அத்தாக்ஷிக்கும் விரோதமாய் விசுவசித்திருக்கிறதினாலே நம்முடைய விசுவாசத்தின் பலன் சர்வேசுரனுடைய சன்னிதியில் வெகுவாய் அதிகரிக்குமென்பதற்குச் சந்தேகமில்லை;

இதுவே உத்தமமான விசுவாசமாகும். ஆகையால் தேவநற்கருணைக்கு முன்பாக அல்லது தேவநற்கருணை இருக்கும் இடத்தைப் பார்க்கையில், முழங்காற்படியிட்டு அல்லது பக்தியோடே தலை குனிந்து சங்கை செய்வதினாலாவது, வார்த்தையினாலாவது வாக்குக்கெட்டாத இந்தத் தேவ இரகசியத்தின்மட்டில் நாம் அடிக்கடி விசுவாச முயற்சி செய்து நமது பலன்களைப் பெருக்கி நமது ஞான ஆஸ்தியை அதிகரிக்கும்படி இந்த சமயங்களை உதவிக் கொள்ளுவோமாக.

மனப்பற்றுதல்.—இந்தத் தேவ இரகசியத்தைக் குறித்து விசுவாசம், ஆச்சரியம், ஆராதனை முதலிய முயற்சிகளைச் செய்வேனாக.

பிரதிக்கினை.—என்னிடத்தில் எழுந்தருளி வரும்படியாகச் சர்வேசுரன் இவ்வளவு அதிசயங்களைச் செய்தாரென்று கண்டு நான் அவரைத் தகுந்தவிதமாய் வாங்கும்படி என்னால் கூடிய பிரயாசப்படுவேனாக.

3-ம் பிரிவு

பொறுமையின் புதுமை

தியானம்.—தேவநற்கருணையில் இயேசுநாதர் அநுபவிக்கும் நிந்தை அவமானங்களின்பேரில் யோசனைசெய்கிறவன் எவனும் கண்டுணரும் வேறொரு புதுமை என்னவென்றால், அவருடைய சொல்லிலடங்காத பொறுமையாம். தேவநற்கருணையில் இயேசுநாதர் அநுபவிக்கும் மிகவும் அரோசிகத்துக்குரிய நிந்தை அவமானங்கள் இவ்வளவென்று சொல்லிமுடியாது. அவிசுவாசிகளான துஷ்டர்கள் சிலர் தேவநற்கருணையை எடுத்துக்கொண்டுபோய்ச் சகிக்கக்கூடாத விதமாய் அஃதற்கு அவசங்கை செய்கிறார்கள்; பதிதர்கள் அதைத் தூஷணித்துப் பழித்து வருகிறார்கள்; கத்தோலிக்கரில் முதலாய் எத்தனையோபேர் திவ்விய நன்மையைப் பிறக்கணிக்கிறார்கள்; எத்தனையோபேர் சலிப்போடும் அருவருக்கத்தக்க அசட்டையோடும் அதை வாங்குகிறார்கள்! இன்னமும் எத்தனையோபேர்

சாவான பாவத்தால் பசாசுக்கு வாசஸ்தலமான தங்கள் இருதயத்தில் வேணுமென்று அதை வாங்கத் துணிகிறார்கள்! ஆகிலும் இயேசுநாதர் பழிவாங்காமல் இந்த அவமானங்களையெல்லாம் அநுபவிக்கிறதுமன்றி வெகு வருஷகாலமாய் வெல்லப்படாத பொறுமையோடுஞ் சகித்துக்கொண்டு வருகிறார்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதருடைய ஆச்சரியமான பொறுமையையுஞ் சாந்தகுணத்தையும் எப்போதும் உன் கண் முன்பாக வைத்து, அவைகளைப்பற்றி யோசிப்பாயானால், வியாகுலம் நிறைந்த அவர் இருதயத்துக்குக் கொஞ்சமாகிலும் ஆறுதல் வருவிக்கும்படி அதிக ஊக்கத்தோடும் அநுகூலத்தோடும் உன் எரிச்சலையுந் துடுக்கையும் முன்கோபத்தையும் அடக்கித் திருத்திக்கொள்ளப் பிரயாசப்படுவாய். இன்று தேவநற்கருணை வாங்கும்போது, உதாரமுள்ள சில பிரதிக்கினைகளைச் செய்து அவருக்கு ஒப்புக்கொடு.

சம்பாஷணை.—இயேசுநாதர்சுவாமியோடே உருக்கமாய் சம்பாஷிப்பாயாக.

அநுபந்தத் தியானங்கள்

பெபுருவரி மாதம் 5-ம் தேதி

ஜப்பான் தேசத்து வேதசாட்சிகளான அர்ச். சின்னப்பர், அருளப்பர், இயாகப்பர் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—ஜப்பான் தேசத்து வேதசாட்சிகள் சிலுவையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறதையும் அவர்கள் தலையில் மகிமைப்பிரதாப முடிகளைச் சம்மனசுக்கள் சூட்டப்போகிறதையுங் காண்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேணுக.

தியானச் சேபம்.—சர்வேசுரன் தமது மகிமை தோத்திரத்துக்காக மனத்தாராளமாய்த் தங்களை முழுதும் பரித்தியாகம் பண்ணுகிற ஆத்துமாக்களுக்கு எவ்வளவு உதாரத்தோடு சம்பாவனை அளிக்கிறாரென்று நான் கண்டு உணரும்படி வரப்பிரசாதங் கேட்பேணுக.

முதல் பிரிவு

சர்வேசுரன்பேரில் வேதசாட்சிகளிடத்திலுள்ள மனத்தாராளம்

தியானம்.—பாவங் கட்டிக்கொள்ளாதபடி கொடூர ஆக்கினைகளையெல்லாம் அநுபவித்துப் பிராணனைக் கொடுக்க விரும்புகிற பிரமாணிக்கமுள்ள பிள்ளைகளைத் திருச்சபை எக்காலத்திலும் ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்துக்கொண்டு வருகிறது. இன்று என் வணக்க தோத்திரத்துக்காகக் குறிக்கப்பட்டிருக்கிற இந்த வேதசாட்சிகள் வெற்றிமகிமை அடைந்து முந்நூறு வருஷத்துக்கு மேலாகிறது. ஆண்டவர் அவர்கள் காண்பித்த மாதிரிகையைக்கொண்டு தமது வரப்பிரசாத வல்லமை குறைந்துபோகவில்லையென்று நான் கண்டுகொள்ளச் சித்த

மாயிருக்கிறார். எப்படியென்றால் இத்தேவ வரப்பிரசாதம் பூர்வீக விசுவாசிகளுக்குப் பலந்தந்து அவர்களை வேத விசுவாசத்தில் வீரசூரர்களாயிருக்கச் செய்ததுபோல இக்காலத்திலுஞ் செய்யும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன்மட்டில் வேதசாட்சிகளிடத்திலுள்ள மனத்தாராளம் தேவ ஊழியத்தில் எனக்குள்ள அசமந்தத்தைக் கண்டிக்கிறதுமன்றி அவர்கள் ஜெயங்கொள்ளப் பலத்தைத் தந்த தேவ வரப்பிரசாதமானது எனது திவ்விய கர்த்தருக்கு நான் ஊழியம் பண்ணுவதில் நிறைவேற்றவேண்டிய ஒறுத்தல்களும் உழைப்புகளும் என்னவென்று என் இருதயத்தில் உணர்த்துகின்றது. நான் வேதனைப்பட்டுச் சாகவேணுமென்று என்னை அவர் கேட்கிறதில்லை; ஆனால் நான் என்னைத்தானே வெறுத்து அநுதினம் என் சிலுவையைச் சுமந்துகொண்டு கபாலமலைமட்டும் தமது திரு அடிகளைப் பின்சென்று நடக்கவேணுமென்று கற்பிக்கிறார். சகல சமயங்களிலும் உண்டாகும் இவ்வித ஒறுத்தலை எம்மாத்திரம் உறுதியோடும் பிரமாணிக்கத்தோடுஞ் செய்து வந்தேனென்று பார்க்கக்கடவேன்.

மனப்பற்றுதல்.—எனக்கு வரும் கடினதந்திர சோதனைகளையெல்லாம் மனத்தாராளமாய்ச் செயிப்பதற்கு உதவியான பத்தி, சுறுசுறுப்பு, மனத்திடன், தைரியம் முதலிய வரங்களை இரந்து மன்றாடுவேணுக.

பிரதிக்கினை.—எனக்கு அதிக வருத்தமான காரியங்களில் மன உற்சாகமாய் என்னைச் செயித்துக்கொள்ளுவேணுக.

2-ம் பிரிவு

சர்வேசுரன் வேதசாட்சிகளிடத்தில் விளங்கச்செய்த பராக்கிரமமும் ஞானானந்தமும்

தியானம்.—சர்வேசுரனுடைய கரமானது திருச்சபையின் ஆதித்துவக்கத்திலிருந்த வேதசாட்சிகளுக்குப் பலன் கொடுத்துத் தாங்கினதுபோலவே, இப்போதும்

விசுவாச வீரசூரர்களுக்கு உதவிசெய்து அவர்களை மோக்ஷ ஆனந்தத்தால் பூரிக்கச் செய்கிறதுமன்றி அந்த ஆனந்தத்தின் மதுரமும் இன்பமுங் குறையாமலிருக்கச் செய்கிறது. இதற்கு அத்தாட்சியாக ஜப்பான் தேசத்து வேதசாட்சிகளில் ஒருவர் சொல்லுகிறதாவது: நான் இயேசுக்கிறீஸ்துநாதருக்காகப் பாடுபடுகிறது எனக்கு எவ்வளவோ இன்பமாயிருக்கிறது! இதினால் எனக்குண்டாகிற இன்பம் இம்மாத்திரமென்று உள்ளபடி வெளிப்படுத்தத் தகுந்த வார்த்தைகள் முதலாய் எனக்குத் தென்படவில்லை; இயேசுக்கிறீஸ்துநாதர்மட்டில் எனக்குள்ள சிநேகத்தைப்பற்றி நான் பாடுபடுகிறதினாலேதான் அவருக்குச் சீஷனாயிருக்கத் துவக்குகிறேனென்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தங்களை முழுதும் சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கிறவர்களுக்கு அவர் ஒன்றுக்கு நூறாகச் சம்பாவனை அளிக்கிறாரென்பதாய் அவர் வேதசாட்சிகளிடத்தில் விளங்கச்செய்த பராக்கிரமமும் ஞான ஆனந்தமும் அவர்கள் சொன்ன வார்த்தைகளும் எனக்குப் படிப்பிக்கின்றன. ஆகையால் என்னைச் செயிக்கிறதற்காக நான் உழைத்துப் பிரயாசப்படாததினாலே மனத்தைரியமும் பத்தி பற்றுதலுமுள்ள ஆத்துமங்களுக்கு ஆண்டவர் தப்பாமல் அளித்து வருகிற ஞான ஆறுதல், ஞானப்பிரகாச முதலிய உதவிகள் எனக்குக் கிடையாவண்ணம் விக்கினம் செய்யும்போது எனக்கு நானே எவ்வளவு பகையாளியாயிருக்கிறேன்! என் கடமைகளுக்கு விரோதமாய் நான் தேடுகிற உலக வீண் சந்தோஷங்களைப், பரலோக பாக்கியத்தை முன்னடியே சுகித்து அநுபவிக்கிறதுபோலிருக்கிற தேவ சிநேகத்தின் பரிசுத்த சந்தோஷங்களுக்கு இணையிடலாமோ? இயேசுவின் திரு இருதயமே, என் பலவீனத்தில் என்னை உறுதிப்படுத்தியருளும்; என்னை ஆதரித்து உமது வரப்பிரசாதத்தின் ஏவுதல்களுக்கு நான் சகலத்திலுங் கீழ்ப்படிய எனக்கு உதவிசெய்தருளும்.

சம்பாஷணை.—நமது ஆண்டவரோடு சம்பாஷணை செய்யவேணும். அவர் இஷ்டப்பிரசாதத்துக்குக் காரணராயிருக்கிறதினாலே, அவரை ஆராதித்து ஜப்பான் தேசத்து வேதசாட்சிகள் பெற்றுக்கொண்ட பேறுபலன்களை அவருக்கு ஒப்புக்கொடுப்பேனாக. மேலும் அவருடைய சிநேகத்தைப்பற்றி என்னைத்தானே நான் செயிக்கிறதற்கு வேண்டிய பலத்தை எனக்குத் தந்தருளும்படி அவர்கள் மூலமாய் அவரை மன்றாடுவேனாக.

பெப்ருவரி மாதம் 11-ம் தேதி

முத்திப்பேறுபெற்ற தெ பிறித்தோ அருளானந்தர் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் துறவி, அப்போஸ்தலர், வேதசாட்சியென்கிற மூவித முடி சூட்டப்பட்டவராய்ப் பரலோக மகிமைப்பிரதாபத்தில் வீற்றிருக்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—முத்திப்பேறுபெற்ற அருளானந்தரைப்போல நமது ஆண்டவராகிய இயேசுக்கிறீஸ்துநாதரை அறிந்து சிநேகித்து அவரைக் கண்டுபாவித்து நடக்கவேண்டிய வரப்பிரசாதத்தைக் கேட்பாயாக.

முதல் பிரிவு

தேவ அழைத்தல்

தியானம்.—முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் லுசித்தானியா தேசத்து இராசாவின் அரமனையில் இராசபிரபுக்களோடு வளர்ந்து பாவத்துக்கேதுவான சந்தர்ப்பங்களின் மத்தியில் சீவித்தாலும் மாசற்ற நடக்கையுள்ளவராய் விளங்கினதினாலே, சர்வேசுரனுடைய விசேஷித்த அழைத்தலுக்குப் பேறுபெற்றவரானார். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தமது பெற்றோர்கள் தம்மை அர்ச். சவேரியாருக்கு ஒப்புக்கொடுத்ததினால் அவருடைய சுகிர்த மாதிரிகைகளை அறிந்து அவர் இருந்த அந்தஸ்திலேயே தாமும் இருக்கத் தீர்மானித்ததுமன்றி அவரை முழுதும்

உத்தம விதமாய்க் கண்டுபாவிக்கும்படி அவர் உட்பட்ட சபையிலேயே தாமும் உட்பட்டு அவரைப்போலவே தாமும் பிரயாசப்பட்டு உழைக்க ஏற்பட்டார்

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீயும் உன் பரிசுத்த நடக்கையினால் இப்படிப்பட்ட தேவ அழைத்தலுக்கு வரம்பெற்றாயோ? உன் இளம்பிராயமுதல் எப்படி நடந்துவந்தாய்? சந்நியாசத்தில் உட்பட்ட நாள் துவக்கி நடந்துவருகிற விதமெப்படி? நாம் அர்ச்சியசிஷ்டவர்களுடைய மக்களாயிருக்கிறதினாலே, அவர்களைக் கண்டுபாவித்து அவர்களைப்போல வெகுவாய் உழைக்க முடியாவிட்டாலும், நமக்குக் குறிக்கப்பட்ட அற்ப சொற்ப அலுவல்களையாகிலும் பிரமாணிக்கத்துடன் நிறைவேற்றக் கடவோம்.

மனப்பற்றுதல்.—உன் முழு இருதயத்தோடு சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோஸ்திரஞ்செய்து இதுவரையில் அவர் உனக்கு அளித்த வரப்பிரசாதங்களுக்கு உன்னால் கூடியவரையில் தக்க முயற்சி செய்யவில்லை என்பதினால் தேவபயமும் மனஸ்தாபமும் உன் மனதில் எழுப்பக்கடவாய்.

பிரதிக்கினை.—சர்வேசுரன் முத்திப்பேறுபெற்ற அருளானந்தருக்கு அளித்தருளின மோக்ஷ மகிமைக்காகவும் என்னைச் சந்நியாச அந்தஸ்துக்கு அழைத்ததற்காகவும் அவருக்கு நன்றியறிந்த தோஸ்திரஞ் செய்வேனாக.

2-ம் பிரிவு

அப்போஸ்தலநுக்தரிய அலுவல்

தியானம்.—இந்துதேசத்திலும் விசேஷமாய் மதுரை நாட்டிலும் கிறீஸ்துவ வேதத்தைப் பரம்பச்செய்யும்படி பதினாலு வருஷமாய் அவர் பட்ட துன்பவருத்தங்கள் இம்மாத்திரமென்று சொல்லிமுடியுந் தன்மையல்ல. அவர் மாமிசத்தையும் மச்சத்தையும் முழுதும் விட்டுவிட்டுக் காய், கீரை முதலியவைகளை மாத்திரங் கொஞ்சமாய்ப் புசித்து வருவார். அநேக முறை அகோரமான கடும் வெயிலில் வெற்றுக்காலாய் நடந்து வெகுதூரம் பிரயாணஞ்செய்து, எவ்வித வறுமைக்கும் உள்ளாகி, அஞ்ஞானிகளால் உபத்திரவமடைந்து துஷ்டமிருகங்கள் முதலியஉயிர்ச்சேதத்துக் கேதுவான பற்பல ஆபத்துக்களிலும் அகப்பட்டார். அவர் கொலையுண்ணப்படுவதற்குச் சிறைச்சாலையில் போடப்பட்டு மிலாறுகளால் அடிபட்டுக் கல்களிலும் முள்களிலும் இழுபட்டு, இன்னமும் பற்பலவிதமாய் உபாதிக்கப்பட்டுக் கடைசியாய்ப் பரதேசத்துக்குத் துரத்தப்பட்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ இயேசுக்கிறீஸ்துநாதரையும் அப்போஸ்தலர்களையுங் கண்டுபாவிக்கவும் ஆண்டவருக்கு மகிமை வருத்துவிக்கவும் அநேக பலன்களைச் சம்பாதிக்கவுங் கடைசியாய் மோக்ஷத்தில் மேலான மகிமைமுடி பெற்றுக்கொள்ளவும் இவரைப்போல பாடுபடத் தயாராயிருக்கக்கடவாய்; அர்ச்சியசிஷ்டவர்களுடைய கண்களிலுள்ள கண்ணீர்களை எல்லாம் சர்வேசுரன் துடைத்துவிடுவார். இக்காலத்தின் துன்பதுரிதங்கள் இனி நமக்கு வரப்போகிற மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகளல்ல (உரோ. 8, 18).

மனப்பற்றுதல்.—ஆத்தும இரட்சணியத்துக்காக நீ படப்போகிற பாடுகளெல்லாம் நித்திய பாக்கியத்துக்கு முன்பாக ஒன்றுமில்லை என்பதாக உன் ஆத்துமத்தைத் திடப்படுத்திக்கொள்.

பிரதிக்கினை.—இனிமேற்பட எனக்கு என்ன நேரிட்டாலும், புறத்தியாருடைய வார்த்தைகள் கிரியைகளால் எவ்வித விரோதம் வந்தாலும், எல்லாவற்றையும் பொறுமையாய்ச் சகித்துக்கொள்ள மனதாயிருக்கிறேன். நித்தியத்துக்கு முன்பாக இதெல்லாமென்ன?

3-ம் பிரிவு

வேதசாட்சியாதல்

தியானம்.—முதலாவது, ஆட்களைப் பார்; 2-வது, சொல்லப்படும் வார்த்தைகளைக் கேள்; 3-வது, நடக்கிறவைகள் என்னவென்று ஆராய்ந்துகொள்.

கிறீஸ்துவ வேதத்தில் அநுசரிக்கப்படும் கற்பென்கிற புண்ணியம் தேவ கற்பனையென்று முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அப்போஸ்தலருக்குரிய திடாரிக்கத்துடன் மறவன் தேசத்து இராசாவுக்கு அறிவிக்கும்போது, பிராமணர்களெல்லாரும் அவருக்கு விரோதமாய் எழும்பினார்கள். ஆதலால் அவர் பிடிபட்டு முந்தமுந்த அடியவமானத்துக்குள்ளாகிக் கடைசியாய்த் தலை வெட்டப்பட்டார். அவர் மரித்தபின், அவருடைய கைகால்களை வாங்கி உயர்ந்த ஓர் கம்பத்தில் தூக்கிவைத்தார்கள். ஆகையால் வெகு வீரசூரர்களான வேதசாட்சிகளில் அவரும் ஒருவரானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீயும் உன் கற்பைக் காப்பதற்கு வேதசாட்சியாகக்கடவாயாக. சரீரத்தைக் கொலைப்படுத்துகிறவர்களுக்கு அவ்வளவு அஞ்சவேண்டியதில்லை; சரீரத்தையும் ஆத்துமத்தையுங் கூட நரகத்தில் தள்ள வல்லபமுள்ளவருக்கே பயந்து நடுங்க வேண்டியது. தங்கள் சீவியகாலத்தில் இயேசுக்கிறீஸ்துநாதரை நேசித்து மரணசமயத்திலும் அவரைக் கண்டு பாவித்தவர்களான வேதசாட்சிகள் பாக்கியவான்கள். நீயும் இயேசுக்கிறீஸ்துநாதரைச் சிநேகித்து அவர் பாவனையாக உன் சிலுவையைச் சுமந்துகொள்.

சம்பாஷணை.—முதலாவது, பிதாவாகிய சர்வேசுரனைப்பார்த்துத் திருச்சபையோடுகூடப் பின்வருஞ் செபத்தைச் சொல்: சர்வேசுரா சுவாமி, இந்துதேசத்தில் சத்தியவேதம் பரம்பச்செய்வதற்காக வேதசாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தருக்கு வெல்லப்படாத மனத்துணிவைத் தந்தருளினீரே. இவருடைய சிறந்த வெற்றியைக் கொண்டாடுகிற நாங்களெல்லாரும் அவருடைய விசுவாசத்தின் கீர்த்த மாதிரிகைகளை அநுசரிக்கும்பொருட்டு அவருடைய வேண்டுதலையும் பேறுபலன்களையும் பார்த்து அநுக்கிரகஞ்செய்தருளும். இந்த மன்றாட்டுகளையெல்லாம் எங்கள் ஆண்டவரான இயேசுக்கிறீஸ்துவின் திரு முகத்தைக்குறித்து எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமி ஆமென்சேசு.

இரண்டாவது, இந்துதேசத்தார் மனந்திரும்பும்படி அப்போஸ்தலருக்கு ஆசிரியரும் வேதசாட்சிகளுக்குத் திடனுமான் இயேசுக்கிறீஸ்துநாதருடன் சம்பாஷித்துக் கொள்.

மூன்றாவது, அந்தக் கருத்துடனே அப்போஸ்தலர்களுக்கும் வேதசாட்சிகளுக்கும் இயேசுசபைக்கும் இராக்கினியாயிருக்கும் அர்ச். கன்னிமரியம்மாளுடன் சம்பாஷணை செய்துகொள்.

மார்ச்சு மாதம் 19-ம் தேதி

அர்ச். சூசையப்பர் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். சூசையப்பர் குழந்தை இயேசுநாதரைத் தமது கையிலேந்தி அவருடைய திருத் தாயாரைப் பத்தியோடு பார்த்துக்கொண்டிருக்கிறதைக் காண்கிறதாக உருபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—அர்ச். சூசையப்பரை அதிக மதிகமாய் மதிக்கவுஞ் சிநேகிக்கவும் வரப்பிரசாதங்கேள்.

முதல் பிரிவு

அர்ச். சூசையப்பருடைய உயர்ந்த பட்டமும் விசேஷ வல்லமையும்

தியானம்.—அர்ச். சூசையப்பருடைய உயர்ந்த பட்டத்தையும் விசேஷ வல்லமையையும் நீ கொஞ்சமாகிலும் கண்டுபிடிக்கிறதற்கு நினைக்கவேண்டியதாவது: எல்லாத்திலும் மேலானதும் பரிசுத்தமுள்ளதுமான அந்தஸ்துக்கு நித்தியமாய் அவரை அழைக்கச் சர்வேசுரன் சித்தமானார். அதெப்படியென்றால் இவர் சர்வேசுரனுடைய தாயாருக்கு விரத்த பத்தாவாயிருக்கவும், மனுஷ அவதாரமெடுத்த தேவசுதனுக்கு கைத்தாதையாயிருக்கவும், திருக்குடும்பத்துக்குத் தலைவராயிருக்கவும், சர்வேசுரன் மனுஷ அவதாரமெடுத்த பரம இரகசியத்தை அறிந்தவராயிருக்கவுந்

தெரிந்துகொள்ளப்பட்டார். சர்வேசுரன் ஒருவனை மேலான பட்டத்துக்கு நியமிக்கவேணுமானால், அந்தப் பட்டத்துக்குப் பொருந்தின வரப்பிரசாதங்களை அவனுக்கு எப்போதுங் கொடுப்பாரல்லவோ? அப்படியிருக்க, இஸ்பிரீத்து சாந்துவானவரால் சுவிசேஷத்தில் நீதிமானென்று சொல்லப்பட்ட அர்ச். சூசையப்பர் சர்வேசுரனிடத்தில் பெற்றுக்கொண்ட மிகுதியான வரப்பிரசாதங்களுக்குப் பிரமாணிக்கமாய் நடந்ததினாலே புண்ணிய பேறுபலன்களையும் பரிசுத்ததனத்தின் எண்ணிக்கையில்லாத ஞானப் பொக்கிஷங்களையும் அடையப் பாத்திரவானானார். மேலும் அந்தந்த அர்ச்சியசிஷ்டவர்கள் தங்கள் புண்ணிய பேறுபலன்களுக்குத்தக்கது மோக்ஷானந்த பாக்கியத்தில் உயர்ந்திருக்கவேணுமென்கிறதினாலே, தேவமாதாவுக்குப் பிறகு அர்ச். சூசையப்பர் தேவ சிங்காசனத்தருகில் எவ்வளவோ மகிமை பெற்றிருக்கவேணுமென்பதையும் அவர் நமக்காகச் செய்யும் மன்றாட்டு ஒருவிதத்தில் சர்வ வல்லபமுள்ளதாயிருக்கவேணுமென்பதையும் நீயே யோசித்துக்கொள்ளலாம்! இயேசுநாதர் பூலோகத்தில் சஞ்சரித்தபோது, எல்லாத்திலுஞ் சூசையப்பர் மனம்போல நடந்திருக்க, இப்போது அவர் கேட்கிற மன்றாட்டை இயேசுநாதர் பிறக்கணித்துத் தள்ளுவதெப்படி?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதிப்படியிருக்க, அர்ச். சூசையப்பர்பேரில் நாம் எவ்வளவு நம்பிக்கை வைத்தபோதிலும் அது போதாது; நாம் அவரைப் பார்த்துக் கேட்கும் மன்றாட்டு ஒருபோதும் வியர்த்தமாய்ப் போகாது. இதற்கு அத்தாட்சி அவர் மன்றாட்டினால் அடைந்த அபூர்வமான எண்ணிறந்த சகாயங்களே. அவர் அநேக சகாயங்களைச் செய்தாரென்பதற்கு எத்தனையோபேர் நம்பத்தக்க சாட்சிகளாயிருக்கிறார்கள்! இவர்களுக்குள்ளே ஒரு சாட்சியாகிய அர்ச். தெரேசம்மாள் சொல்லியிருக்கிறதாவது: அர்ச். சூசையப்பரைப் பார்த்து நான் கேட்ட மன்றாட்டுக்களில் ஒன்றாகிலுந் தவறிப்போனதாக எனக்கு ஞாபகமில்லை; அவர் மன்றாட்டைக் கேட்டுச் சர்வேசுரன் எனக்குச் செய்த சகாயங்களை

நான் ஆச்சரியப்படாமல் நினைக்கக்கூடவில்லை. சில அவசரங்களிலே நமக்கு உதவிசெய்யு மற்ற அர்ச்சியசிஷ்டவர்களுக்குச் சர்வேசுரன் வரங்கொடுத்திருக்கிறாரென்பது சரியே; ஆனால் அர்ச். சூசையப்பர் சகலத்திலும் நமக்கு உதவிசெய்கிறாரென்று என் அநுபவத்தினால் அறிந்திருக்கிறேன்; இதினால் இயேசுநாதர் பூலோகத்தில் தாம் அவருக்குக் கீழ்ப்படிந்துவந்ததுபோலே, பரலோகத்திலும் அவர் கேட்கிறதெல்லாத்தையும் அளிக்கச் சித்தமாயிருக்கிறதாகக் காண்பித்தாற்போலாயிற்றென்று அவள் தன்னைப்பற்றி எழுதிய சரித்திரம், 6-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறாள். ஆகையால் நமக்கு நேரிடும் எந்தெந்த அவசரங்களிலும் மட்டற்ற நம்பிக்கையோடே அர்ச். சூசையப்பர் அடைக்கலமாய்ப் போவோமாக.

மனப்பற்றுதல்.—அர்ச். சூசையப்பரை வாழ்த்தி அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, அவர் அடைக்கலமாய்ப் போகவேணும்.

பிரதிக்கினை.—அர்ச். சூசையப்பர்பேரில் யாவருக்கும் பத்தியுண்டாகச் செய்யவேணும். நமக்கு நேரிடும் அவசரங்களில் முழு நம்பிக்கையோடே அவரைப் பிரார்த்திக்கிறதுமல்லாமல், மற்றவர்களும் அவர்பேரில் நம்பிக்கை வைக்கப் பிரயாசப்படவேணும்.

2-ம் பிரிவு

அர்ச். சூசையப்பருக்குக் கிடைத்த வாக்குக்கெட்டாத பாக்கியம்

தியானம்.—அர்ச். சூசையப்பருக்குக் கிடைத்த பாக்கியம் மற்ற மகாத்துமாக்களில் ஒருவருக்காகிலுங் கிடைத்ததுமில்லை, கிடைக்கப்போகிறதுமில்லை; சீவியகாலத்திலும் மரண சமயத்திலும் அவருக்குக் கிடைத்த பாக்கியம் வாக்குக்கெட்டாதது. முப்பது வருஷகாலம் மகா பரிசுத்த கன்னிமரியம்மாள் அவருக்கு உதவியும் பிரியாத துணையுமாயிருந்ததுமல்லாமல், அத்தனை காலமும் இயேசுநாதரும் அவரோடுகூட ஒன்றாய் வாசம்பண்ணி மகா பிரிய நேசத்தோடு ஒன்றித்திருந்தார். மெய்யாகவே, இவர் அந்தக்

குடும்பத்துக்குத் தலைவராயிருந்ததினாலே, அதைச் சவரட்சணை செய்வதற்கான சகலத்தையும் சேகரிக்கும்படி நெற்றி வேர்வை நிலத்தில்விழ உழைத்ததுமன்றி வெகு துன்பத்தையும் அநுபவித்திருந்தார்; ஆனால் அவர் இயேசுநாதரைப்பற்றிப் பிரயாசப்படுகிறேனென்றும் நான் படுங் கஸ்தி வருத்தங்களை இயேசுநாதர் பார்த்திருக்கிறாரென்றும் நினைத்ததினாலே, அவைகளெல்லாம் அவருக்கு வெகு எளிதாகவும் இன்பமாகவுந் தோன்றின. அவருடைய சீவிய காலம் இந்தக் கண்ணீர்க் கணவாயிலே மோக்ஷம்போலிருந்தது! அவருடைய திரு மரணமோ இன்பமும் ஆறுதலும் பூரண நம்பிக்கையும் நிறைந்ததாயிருந்தது! அவர் இயேசுநாதருடையவுங் கன்னிமரியம்மாளுடையவுங் கரங்களிலே மரணமடைந்தாரென்று சொல்வதில் சகலமும் அடங்கிப் போயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். சூசையப்பருக்குக் கிடைத்த பாக்கியம் உனக்குக் கொடுத்துவைக்கவில்லையே என்று எண்ணுகிறாயோ? ஆனால் அந்தப் பாக்கியத்துக்கு நீயும் பங்காளியாயிருக்கிறாயே. நீ வாசம்பண்ணும் மடம் நசரேத்தூரிலிருந்த பாக்கியமான வீட்டுக்கு அடையாளமல்லவோ? மகா பரிசுத்த கன்னிமரியம்மாள் இதில் உனக்கு விசேஷ தாயுந் தஞ்சமுமாயிருக்கிறாளே. இயேசுநாதர் தேவநற்கருணையில் எழுந்தருளி எப்போதும் நீ இருக்கிற மடத்தில் உன்னோடு வாசம்பண்ணுகிறாரே. எந்தெந்த நேரத்திலும் அவரோடு சம்பாஷணை செய்யும் பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கிறதே. அவரைப்பற்றியும் அவர் சமூகத்திலும் நீயும் உழைத்து அநேகங் கஸ்தி துன்பம் அநுபவிக்கிறதில்லையோ? இவைகளுக்கெல்லாம் சம்பாவனையாக நித்திய சீவியத்தைக் கட்டளையிடுவோமென்று உனக்கு அவர் உறுதியாய்ச் சொல்லியிருக்கிறாரல்லவா? நீ சாவை நினைக்கும்போது, சிலவிசை உனக்குண்டாகும் பயத்தைத் தள்ளிப்போட இந்த உறுதிமொழி உனக்குப் போதாதோ? மேலும் நல்ல மரணத்துக்கு விசேஷ பாதுகாவலான அர்ச். சூசையப்பர் உன் அவஸ்தை சமயத்தில் உனக்கு எவ்வித

சகாயத்தையுஞ் செய்வாரென்று நம்பலாம். ஏனென்றால், அவரால் பூலோகத்தில் மிகவுஞ் சிநேகிக்கப்பட்டுப் பரலோகத்திலே அவர் கேட்கும் மன்றாட்டையெல்லாம் அளித்திருக்கிற இயேசுநாதருடைய ஊழியத்திலே நீயும் அவரைப்போல உன் வாலப் பிராயத்தையும் உன் பலத்தையுஞ் செலவழித்தாயல்லவோ? அர்ச். சூசையப்பரோடு உனக்குள்ள இவ்வித ஒற்றுமை தொந்தார்த்தத்தை நீ நினைக்கையில், உன் இருதயம் பூரித்துச் சந்தோஷம் அநுபவிக்க வேணும். இந்த மகாத்துமாவின் வல்லபமுள்ள உதவி உனக்கு அதிகமதிகமாய்க் கிடைக்கத்தக்கதாக அவருடைய திருநாளாகிய இன்றையத்தினம் திரும்பவும் உன்னை அவருக்கு வசீகரம் பண்ணுவாயாக; அவருடைய தாழ்ச்சி, கீழ்ப்படிதல், பொறுமை, இடைவிடாத பிரயாசம், தேவ சித்தத்துக்கு அமைதல், பத்தி ஆகிய இப்புண்ணியங்களைக் கண்டுபாவிக்கிறதில் புதிதாய்ப் பிரயாசப்படுவேனென்று அவருக்கு வார்த்தைப்பாடு கொடுப்பாயாக; அவரைக்குறித்து நீ செய்துவரும் பத்திமுயற்சிகளை அதிக சாக்கிரதையோடு செய்வாயாக, விசேஷமாய் இயேசு மரியே சூசை என் மரண அவஸ்தையில் எனக்கு உதவியாயிருங்களென்கிற நூறுநாள் பலனுள்ள இந்த மன்றாட்டைச் சொல்லி நல்ல மரணத்துக்கு உதவியும் பாதுகாவலுமான அர்ச். சூசையப்பரை அடிக்கடி பிரார்த்தித்துவருவாயாக.

சம்பாஷணை.—அர்ச். சூசையப்பரோடு சம்பாஷணை செய்வாயாக.

மார்ச்சு மாதம் 21-ம் தேதி

மேற்றிசைச் சந்நியாசிகளுக்குப் பிதாப்பிதாவான அர்ச். ஆசீர்வாதப்பர் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—மோக்ஷானந்த மகிமைப் பிரதாபத்தில் அவரைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—அவர் அடைந்த சம்பாவனைக்கு நாம் பங்காளிகளாகிறதற்காக அவர் அநுசரித்த புண்ணியங்களை நாமும் கண்டுபாவிக்க வரப்பிரசாதங் கேட்போமாக.

முதல் பிரிவு

அர்ச். ஆசீர்வாதப்பருடைய புண்ணியமும் அவர் ஸ்தாபித்த சபையும்

தியானம்.—ஆஸ்திக்காரரான தாய்தகப்பனிடத்தில் பிறந்த அர்ச். ஆசீர்வாதப்பர் இளம்பிராயத்திலே உரோமாபுரியிலுள்ள கல்விச்சாலைகளில் படிக்க அனுப்பப்பட்டார். ஆனால் அக்காலத்தில் வாலிபர் கெட்டுப்போகிறதற்கான அக்கிரம நடக்கை மிகுதியாயிருந்ததை அவர் கண்டு பயந்து, தமக்குப் பதினைந்து பிராயம் நடக்கையில் உலகத்தை விட்டு, வனத்திற்சென்று, அவ்விடத்தில் சர்வேசுரனுக்கு ஊழியஞ்செய்யப் பிரதிக்கினை செய்துகொண்டார். உரோமாபுரிக்கு அருகாமையிலிருந்த ஒரு சந்நியாசியார் சுபிளாக்கென்னும் மலைகள் நடுவே, ஏறிப்போக அரிதான ஒரு குகையைக் காண்பித்து, அதில் இவரைப் போயிருக்கச் சொல்லி அங்கே அவருக்கு வேண்டிய சவரட்சணை இரகசியமாய்ச் செய்வதாக வார்த்தைப்பாடு கொடுத்தார். அதில் அவர் சர்வேசுரன் ஒருவராலன்றி வேறொருவராலும் அறியப்படாமல் மூன்று வருஷமாய்ச் செபதபத்தில் காலஞ் செலவழித்தார். கடைசியாய்ச் சுற்றுப்பக்கத்திலுள்ள சில இடையர்கள் அவர் இருக்கும் ஸ்தலத்தைக் கண்டுபிடித்ததால், அதுமுதல் அவர் இருந்த அக்குகையில் நாளுக்குநாள் ஜனங்கள் அதிகமதிகமாய் அவரைக் காண வருவார்கள். அப்போது இளம்பிராயமுள்ள அந்த வனவாசி தேவ பத்தி ஞான மிகுதியினால் வந்த ஜனங்களுக்குச் சர்வேசுரனைக் குறித்தும் வேதத்தின் பலத்த சத்தியங்களைக் குறித்தும் அவர்கள் மனந்திரும்ப வெகு மனத்திடனோடும் உருக்கத்தோடும் பிரசங்கம் பண்ணிக்கொண்டு வருவார். அவரைக் காணவந்தவர்களுள் அநேகம்பேர் அவர் சொல்லும் புத்தி பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பி

அவர் மாதிரிகையைக் கண்டுபாவித்து அவரைச் சிரேஷ்டராகத் தெரிந்துகொண்டு சுவிசேஷத்தின் மேலான புத்திகளை அநுசரிக்கத்தக்கதாக உலகத்தை வெறுத்துவிட்டார்கள். சில காலத்துக்குள்ளாக அவர் பன்னிரண்டு சந்நியாச மடங்களைக் கட்டி ஒவ்வொரு மடத்திலும் ஒரு சிரேஷ்டரோடு பன்னிரண்டு சந்நியாசிகளை வைத்து அந்த மடங்களையெல்லாம் அவர்தாமே மேல்விசாரணை செய்துகொண்டு வந்தார். இதுதான் அர்ச்சியசிஷ்ட ஆசீர்வாதப்பர் உண்டாக்கின பேர்போன சபைக்கும், வீரசூரமான அநேக செய்கைகளைச் செய்து அவர் அடைந்த மேலான சாங்கோபாங்கத்துக்கும் ஆரம்பமாயிருந்தது. இச்செய்கைகளில் ஒன்றை மாத்திரம் எடுத்துக்காட்டுவோம். அதேதெனில், ஒருநாள் கற்புக்கு விரோதமாய் மூர்க்கமான சோதனை அவருக்குண்டானபோது, தமது மேற் போட்டிருந்த வஸ்திரங்களை எடுத்துப்போட்டுத் தமது சர்வாங்கமும் இரத்தம் புறப்படுமட்டும், காஞ்சொறிகளிலும் முட்செடிகளிலும் புரண்டுருண்டு வந்தார். இந்தப் புண்ணியத்துக்குச் சம்பாவனையாகச் சர்வேசுரன் அவருக்குக் கொடுத்த வரங்களுக்குள்ளே விசேஷ வரமாக அவர் சாகுந்தனையுங் கற்புக்கு விரோதமான சோதனை அவருக்கு வராதிருக்கத் தயவுசெய்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் திவ்விய அழைத்தலுக்குக் கீழ்ப்படிந்தபோது, அர்ச். ஆசீர்வாதப்பரைப்போல் உத்தமதனத்தை நாடுங் கடமையை ஏற்றுக்கொண்டோம். அதை அடைகிறதற்கான வழிகள் நமக்குக் குறைவில்லை. ஆயினும், இன்னம் அதற்கு நாம் இவ்வளவு தூரமாயிருப்பதெப்படி? நம்மிடத்தில் தகுந்த உதார குணம் இல்லாததினாலல்லவோ? தேவ ஊழியத்திலே நாம் காண்பித்த வீரத்துவம் அல்லது உதாரமான கிரியைகளென்ன?

மனப்பற்றுதல்.—இதெல்லாம் பார்த்து வெட்கி மனம் நொந்து நம்மைத்தானே பரிசுத்தவிதமாய்த் தாவேஷிக்கவேணும்.

பிரதிக்கினை.—பிரபலியமான ஜெயமடையுங்காலம் வருந்தனையுந் தினந்தோறும் என்பேரில் சொற்ப ஜெயமாகிலும் அடையப் பிரயாசப்படுவேனாக.

2-ம் பிரிவு

அர்ச். ஆசீர்வாதப்பர் புண்ணியத்தில் வர்த்தித்ததும் தாம் உண்டாக்கின சபை வர்த்திக்கச் செய்ததும்

தியானம்.—சர்வேசுரன் வனவாசியாயிருந்த ஆசீர்வாதப்பரை ஆத்துமாக்களை விசாரிக்கத்தக்கவராய்த் தெரிந்துகொண்டபின், புத்தியின் பகுத்தறிதல், மேலான தியானயோகம், தீர்க்கதரிசனம், புதுமை செய்தலாகிய உச்சிதமான இவ்வரங்களை அவருக்குக் கொடுக்கச் சித்தமானார். அவரும் இந்த வரங்களுக்கேற்கப் பிரமாணிக்கமாய் நடந்ததினாலே அவரிடத்தில் விளங்கின நானாவித புண்ணியங்களுஞ் சந்நியாசத்துக்கடுத்த சாங்கோபாங்க வர்த்திப்பும் மிகவும் ஆச்சரியத்துக்குரியவைகளாயிருந்தன. மீளவும் அவருக்கு நேரிட்ட அநியாயமான பற்பல தொந்தரைகளினாலே கசினென்கிற மலையில் வாசம்பண்ணப் போனபிறகு, அவரது சபை விசேஷவிதமாய் ஓங்கி வளர்ந்தது. இம்மலையில் அவர் கட்டின பெரிய மடமும், அவர் ஸ்தாபித்த விவேகமுள்ள ஏற்பாடுகளினாலே அதில் விளங்கின ஆச்சரியமான ஒழுங்கும், அதற்கடுத்தாப்போல் அவருடைய சகோதரியாகிய அர்ச். ஸ்கொலாஸ்திக்கம்மாளின் ஆளுகைக்குள் கூடியிருந்த அநேக கன்னியாஸ்திரீகளின் கூட்டமும் இப்புதுச் சபையை எங்கும் பிரபலியமாக்கின. அச்சீர்மையினுண்டான பெரிய துரைகள் இச்சபையார் பேரில் பட்சம்வைத்து அவர்களுக்கு விஸ்தாரமான நிலங்களைக் கொடுத்ததுந்தவிரத் தங்கள் பிள்ளைகளை அதில் ஞானமுங் கல்வி சாஸ்திரமும் படிக்க அனுப்பினார்கள். அநேக பிரபுக்களும் அரசர்களும் அர்ச். பாப்புமார்களும் அந்தச் சபையை ஆதரித்து அது விர்த்தியாகும்படி பிரயாசப்பட்டு வந்தார்கள். கடுகு விதைக்கொத்த இந்தச் சபை பெரிய ஓர் மரமாகி அதன் கிளைகள் உலகம் எங்குந்

தழைத்து வரவே, துறவற அந்தஸ்தின்பேரில் சகல ஜனங்களுக்கும் பற்றுதலுண்டாகி அதை விசேஷமானவிதமாய்ச் சந்நியாசமென்றும் அதில் உட்பட்டவர்களைச் சந்நியாசிகளென்றுஞ் சொல்லிவருவார்கள். இந்தப் பேர் இதுவரையிலும் நீடித்திருக்கின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் உட்பட்டிருக்கிற சபை அதிகரிக்கவும் பத்தி சுறுசுறுப்பினாலே விளங்கவும் பரிசுத்தத்துக்கடுத்த மிகுந்த பலன்களை அடையவும் இந்தச் சபையின்பேரில் தேவ ஆசீர்வாதமுண்டாகும்பொருட்டு அவரவர் தங்களாலானமட்டும் பிரயாசப்படவேணும். இதுவரையில் நாம் இப்படி நடந்தோமோ? இனிமேல் எப்படி நடக்கவேணும்?

மனப்பற்றுதல்—நமது நல்ல ஆசையும் பிரயாசமும் வியர்த்தமாய்ப் போகாதிருக்கப் பத்தி சுறுசுறுப்போடு பிரார்த்திக்கவேணும்.

பிரதிக்கினை.—பத்தி சுறுசுறுப்பும் உதாரத்தனமும் நம்மிடத்தில் அதிகரிக்கப் பிரயாசப்படுவோமாக.

3-ம் பிரிவு

அர்ச். ஆசீர்வாதப்பருடைய மகிமைப்பிரதாபமும் அவர் உண்டாக்கின சபையின் மகிமைப்பிரதாபமும்

தியானம்.—அர்ச். ஆசீர்வாதப்பருடைய நாமத்துக்கு இவ்விருவகை மகிமைப்பிரதாபம் முடிபோலச் சூட்டப்பட்டிருக்கின்றது, அதாவது: திருச்சபையில் மிகவும் பேர்போன வேதபாரகரும் பாப்புவுமாகிய அர்ச். பெரிய கிறகோரி என்பவரால் தம்முடைய தரும சரித்திரம் எழுதப்பட அவர் பேறுபெற்றதுமல்லாமல் மேற்றிசையின் சந்நியாசிகளுக்குப் பிதாப்பிதாவென்கிற பட்டத்தைப் பின்வந்தவர்கள் வழியாய் அடையவும் பாத்திரவானானார். அன்றியும் அவர் உண்டாக்கின சந்நியாசிகள் சபையானது ஐரோப்பா கண்டத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் எங்கும் ஏக சபையாயிருந்து இதை ஸ்தாபித்தவர் குறித்தபிரகாரம் திருச்சபைக்கும் மனிதருக்கும் எண்ணிக்

யில்லாத நன்மைகளைச் செய்து, பின்னுமுண்டான சந்நியாசிகள் சபைக்கெல்லாம் முன்மாதிரிகையாயிருக்கப் பேர் பெற்றது. அந்தந்தக் காலத்தில் பற்பல தேசத்தாரான துஷ்ட ஜனங்கள் சேர்ந்து சீர்மையெங்குங் கொள்ளையிட்டழித்தார்கள். இப்படி அழிக்கப்பட்ட பட்டணங்களையெல்லாம் இச்சபையார் திரும்பக் கட்டி வைத்ததுமன்றிக் காடுகளாயிருந்த இடங்களைப் பட்டணங்களாக்கித் தரிசான நிலங்களை வெள்ளாண்மைக்கான கழனிகளாக்கினார்கள். கல்வி சாஸ்திரத்துக்கடுத்த பற்பல பிரபந்தங்களைச்செய்து பின் வந்தவர்களுக்கு உபயோகமாகத் தந்திருக்கிறார்கள். மனிதர்கள் மிருகங்களைப்போலத் திரிந்த அநேகம் இடங்களில் மடங்களை உண்டாக்கி அஞ்ஞானிகளைக் கிறீஸ்தவர்களாக்கினார்கள். மேலும் இந்தச் சந்நியாச சபையானது திருச்சபைக்கு அநேகம் பாப்புமார்களையும் மேற்றிராணிமார்களையுஞ் சாஸ்திரிகளையும் வேதபோதகர்களையுங் கொடுத்தது. பின்னும் இச்சபையில் எத்தனையோ சந்நியாசிகளுங் கன்னியாஸ்திரீகளும் அர்ச்சியசிஷ்டவர்களாகிப் பரலோக பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள்! இப்படி இவர்களில் அர்ச்சியசிஷ்டபட்டம் பெற்றவர்கள் ஏறக்குறைய ஆறாயிரம்பேர் இருக்கிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். ஆசீர்வாதப்பரைப்போல நீயும் தேவமகிமையை மாத்திரம் எப்போதும் எவ்விடத்திலுந் தேடி உனக்கும் உன் சுயபட்சத்துக்குஞ் செத்தவனைப் போலிருக்கப் பிரயாசப்படுவாயாகில், பரலோக பேரின்ப பாக்கியத்தில் உனக்குச் சதாகாலமும் பங்கு கிடைக்குமென்பது நிச்சயம். ஏனெனில் தாழ்ச்சியுள்ளவர்களுக்குச் சர்வேசுரன் தமது வரங்களைத் திரளாய்க் கொடுக்கவும் அவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாகிறதற்குப் பலமாய் உதவிசெய்யவுஞ் சித்தமாயிருக்கிறார்.

சம்பாஷணை.—அர்ச். ஆசீர்வாதப்பரோடு சம்பாஷணை செய்.

மார்ச்சு மாதம் 25-ம் தேதி.

அர்ச். கன்னிமரியம்மாளுக்கு மங்களவார்த்தை சொன்ன திருநாள்.

ஆயத்தச் சிந்தனை.—அதிதூதரான அர்ச். காபிரியேல் சம்மனசு மகா பரிசுத்த கன்னிமரியம்மாளுக்கு வார்த்தையானவருடைய மனுஷாவதாரத்தைச் சார்ந்த பிரம இரகசியத்தை அறிவிக்கிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—இவ்வளவு மகத்துவமான திருநாளுக்குத்தகுந்த பத்தி சுறுசுறுப்பு உன்னிடத்திலுண்டாக வரப்பிரசாதங் கேட்பாயாக.

முதல் பிரிவு

பரிசுத்த கன்னியாஸ்திரிக்குச் சர்வேசுரன் செய்த நன்மை

தியானம்.—மங்களவார்த்தை சொன்ன திருநாளில் மகா பரிசுத்த மரியம்மாளுக்கு ஆண்டவர் செய்த உபகாரம் ஏதென்றால், பரமண்டலத்தில் மிகவுமுயர்ந்த பிரபுகளுக்குள் ஒருவரான காபிரியேல் என்னும் அதிதூதனை அவளிடத்தில் ஸ்தானாபதியாக அனுப்பித் தமது நித்திய வார்த்தையானவர் எடுக்கப்போகிற மனுஷீகத்துக்குத் தாயாராய்த் தாம் அவளை நித்தியத்திலுந் தெரிந்துகொண்ட விசேஷத்தை அவளுக்கு அறிவிக்கச் செய்ததுமல்லாமல் தமது இஷ்டப்பிரசாத பரிபூரணத்தையுங் கொடுத்து ஞானதிக்கர் பத்தி சுவாலகருக்கு மேலாகப் புண்ணிய பேறுகளிலும் பரிசுத்ததனத்திலும் அவளை உயர்த்திச் சகல நன்மைகளாலும் அவளை நிரப்பினார். சர்வேசுரன் தாமே மனுஷருக்குள்ளே வாசம்பண்ண வரவேண்டிய பரம இரகசியமாகிய வாக்குக்கெட்டாத மனுஷாவதாரத்தின் பரம் இரகசியத்தை அவளிடத்தில் நிறைவேற்றினார்.

இன்றையதினம் பூசையில் வாசிக்குஞ் சுவிசேஷத்திலே தெய்வீக இரகசியமான இந்த விசேஷங்களெல்லாஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. அக்காலத்தில் காபிரியேல் என்னும் சம்மனசானவர் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தூரில் வாசம்பண்ணின மரியாயியென்னும் நாமமுடைத்தான ஓர் கன்னியாஸ்திரியிடத்தில் சர்வேசுரனால் அனுப்பப்பட்டு அவள் இருந்த இடத்தில் பிரவேசித்துப் பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க, கர்த்தர் உம்முடனே, பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே, நீர் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவீர்; அவருக்கு இயேசுவென்னும் நாமதேயஞ் சூட்டுவீராகவென்றார். பின்னும் மரியாயி தன் கன்னிமையைக் குறித்துத் தான் அடைந்த பயத்தை இவர் நீக்கவே, அவளும் சம்மதித்து: இதோ ஆண்டவருடைய அடிமையானவள் உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவதென்றாள். இப்படிச் சொன்ன மாத்திரத்திலே, வார்த்தையானவர் மாமிசமாகி நமக்குள்ளே சஞ்சரித்தார் (லூக். 1, அரு. 1.).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதை வாசிக்கும்போது நமது அநுசரணைக்குரிய அநேகம் யோசனைகள் இயல்பாய் நமது புத்தியில் உதிக்கின்றன 1-வது, மரியாயி தேவ இஷ்டப்பிரசாதங்களினால் நிரப்பப்பட்டுப் பத்திசுவாலகருக்கு மேலாக உயர்த்தப்பட்டிருந்தாலும், தன் ஒன்றுமில்லாததனத்தைத் தான் எப்போதும் நினைத்து இதோ ஆண்டவருடைய அடிமையானவளென்னும் பேரைத் தனக்குக் கொடுத்துக்கொள்ளுகிறாள். நானோவென்றால், என்னிடத்தில் புண்ணியபேறுபலன்கள் ஒன்றுமில்லாமல், பாவமும் குற்றமும் நிறைந்தவனாயிருக்க, மற்றவர்களுக்கு மேலாக என் நினைவில் என்னை உயர்த்தி வீணான பேராசைக்கு இடங்கொடுத்துக்கொண்டுவருகிறேன். 2-வது, மரியாயி தன்னிடத்தில் செய்யப்பட்ட பலத்த காரியங்களைத் தான் அறிந்திருந்தாலும், எலிசபெத்தம்மாள் அவளைப் புகழ்ந்து கொண்டாடினபோது, அதற்கு மாறுத்தரமாக வல்லபமுள்ளவர் என்னிடத்தில் மகத்துவமானவைகளை செய்தருளினாரென்று சர்வேசுரன் தனக்கு

இலவசமாய்க்கொடுத்த வரங்களை மாத்திரங் காண்பிக்கிறாள். நானோவெனில், என்னிடத்திலுண்டான அற்ப நன்மையை எனக்குச் செல்லுமான பேறுபலனென்று நினைத்து மனுஷர் முன்பாக அதைச் சொல்லிக்காண்பிக்க வழிதேடுகிறேன். 3-வது, மரியாயி சர்வேசுரனுக்குத் தாயார் என்கிற மேலான மகிமையைப் பார்க்கத் தன் கன்னிமையின் பரிசுத்ததனத்தைக் காப்பாற்றிச் சர்வேசுரனுக்குப் பிரியப்பட நினைக்கிறாள். நானோவெனில், சர்வேசுரன் சமுகத்தில் என் ஆத்தும பரிசுத்ததனத்தைப் போக்கடிக்கக் கொஞ்சமாகிலும் பயப்படுகிறதில்லை.

மனப்பற்றுதல்.—இந்நாளில் சர்வேசுரன் நமது பிரியமான தாயாருக்குச் செய்ததெல்லாவற்றையும் அவளுக்கு நினைப்பூட்டி அவளைக் கொண்டாடி ஏழைகளும் நீசப்பாவிகளுமான நமக்கு அவளிடத்தில் நிறைந்திருக்கிற தேவ இஷ்டப்பிரசாதத்தின் சம்பூரணத்தைப் பகிர்ந்துகொடுக்க மன்றாடுவோமாக. மேலும், தேவசுதனை அவளிடம் வருவித்த தாழ்ச்சியை விசேஷமாய் அவளிடமிருந்து கேட்போமாக. இதைக்குறித்து அர்ச். பெர்நார்துஸ் சொல்லியிருக்கிறதாவது: "பரிசுத்த மரியம்மாள் தன் கன்னிமையால் சர்வேசுரனுக்குப் பிரியப்பட்டாலும், அவளிடத்தில் உண்டான தாழ்ச்சியினால் அவரைக் கர்ப்பந்தரித்தாள்."

பிரதிக்கினை.—இன்றைய திருநாளில் என் தாயாருடைய பெருமையெல்லாந் துவக்கினதினாலே, அவள் இவ்வுலகத்தில் சீவித்த நாட்களில் இந்த நாள் அதிக பாக்கியமான நாளென்று அத்திருநாள் அவளுக்கு நினைப்பூட்டுகிறதாக எண்ணி மற்ற நாட்களைப்பார்க்க இன்றையதினம் அவள் என் மன்றாட்டுக்களை மிகவுந் தயவாய்க் கையேற்றுக் கொள்ள மனதாயிருக்கிறாளென்று நினைப்பேனாக. மேலும் எனக்கு மாத்திரமல்ல நான் உட்பட்டிருக்கிற சபைக்கும் இக்கட்டடைந்திருக்கிற என் தாயாராகிய திருச்சபைக்கும் அர்ச். பாப்பானவருக்கும் சகல கிறீஸ்துவர்களுக்கும் நான் மட்டிலடங்காத நம்பிக்கையோடு வெகு நன்மைகளை அவளிடத்தில் கேட்பேனாக.

2-ம் பிரிவு

இந்நாளில் அர்ச். கன்னிமரியம்மாளின் வழியாய்ச் சர்வேசுரன் நமக்குச் செய்த நன்மைகள்

தியானம்.—அர்ச். கன்னிமரியம்மாளின் வழியாய் இன்றையதினஞ் சர்வேசுரன் நமக்குச் செய்த நன்மைகளாவன:—அவர் தமது ஏககுமாரனை நமக்குத் தந்ததினாலே, நமதுபேரில் அவருக்குள்ள அளவில்லாத சிநேகத்தின் அத்தாட்சியை நமக்குக் காண்பிக்கச் சித்தமானார். இதைக்குறித்துச் சுவிசேஷகராகிய அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறதாவது: சர்வேசுரன் உலகத்தை எவ்வளவு சிநேகித்தாரென்றால், தமது ஏக குமாரனாலேயே அது இரட்சிக்கப்படும்பொருட்டு அவர் சாவுக்குரிய மனுஷனாகப் பிறக்கவும் பாடுபடவும் அவரைக் கையளித்தாரென்றார் (அரு. 3). மேலும் கன்னிமுத்திரை கெடாமல், இந்நாளில் தாயாரான மரியாயின் வழியாய் நமக்கு அவரைக் கொடுக்கச் சித்தமானார். இவளிடத்தில் நின்று கிறீஸ்தென்னப்படும் இயேசுநாதர் பிறந்தாரென்று சுவிசேஷகராகிய அர்ச். மத்தேயுஸ் எழுதியிருக்கிறார் (மத். 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் திருநாளின் பலனாகத் திருச்சபை நம்மிடத்தில் தூண்டஆசைப்படும் பற்றுதல்களை நமது இருதயத்தில் எழுப்புவோமாக. அவைகளாவன:—நம்மைச் சிருஷ்டித்த சர்வேசுரனாகிய நமது பரம பிதாவின்மட்டில் சிநேகப்பற்றுதலும், இந்நாளில் மனுஷனாய் அவதரித்த சர்வேசுரனுடைய நித்திய சுதன்பேரில் நன்றியறிந்த பற்றுதலும், இந்நாளில் சர்வேசுரனுக்குத் தாயாரான பரிசுத்த கன்னியாஸ்திரியின் பேரில் பிள்ளைக்கடுத்த பத்தி பற்றுதலுமாம். இந்தப் பற்றுதல்களை அநுஷ்டானத்திலும் காட்டப் பிரயாசப்படுவோமாக: நாம் அர்ச்சியசிஷ்டவர்களாகவேணுமென்னும் நமது பரம பிதாவின் சித்தத்தை மகா பிரமாணிக்கமாய் நிறைவேற்றக் கவனிக்கிறதினால் தேவசிநேக பற்றுதலையும், தாழ்ச்சியைப் பெரிதாய் எண்ணி அதை அநுசரிக்கச் சர்வேசுரனுடைய நித்திய சுதனானவர் தாம் எடுத்த மனுஷீகத்தில் காண்பித்த வாக்குக்கெட்டாத தாழ்மையை நாம் துதிக்கிறதினால் நன்றியறிந்தபற்றுதலையும், சர்வேசுரனுக்கும் நமக்குந் தாயாராயிருக்கிறவளை நமது சத்துவத்துக்குத்தக்கது நாம் கண்டுபாவிக்கிறதினால் அவள்பேரில் நமக்குண்டான பிள்ளைக்கடுத்த பத்தி பற்றுதலையுந் தூண்டிக்கொள்ளலாம்.

சம்பாஷணை.—மகா பரிசுத்த கன்னியாஸ்திரியோடே சம்பாஷணை செய்து, நமது இரட்சணிய வேலையில் அவள் பட்ட பிரயாசத்துக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக. நமது நன்றியறிந்த தோத்திரத்தைத் தமது திருக்குமாரனுக்கு ஒப்புக்கொடுக்கவும், நமது கிரியைகளினால், நாம் செய்த பிரதிக்கினைகளை நிறைவேற்றுவதில் பிரமாணிக்கமும், நமது நன்றியறிந்ததனத்தையும் காண்பிக்க நமக்கு உதவிசெய்யும்படி அவளை மன்றாடுவோமாக.

மே மாதம் 11-ம் தேதி

அர்ச். பிராஞ்சீஸ்கு இயேரேணிமுஸ் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். பிராஞ்சீஸ்கு இயெரோணிமுஸ் பட்டணம், பட்டிக்காடுகளெங்குஞ் சுற்றித் திரிந்து பிரசங்கம் பண்ணுகிறதைப் பார்க்கிறதாக உருபிகரித்துக்கொள்வேனாக.

தியானச்செபம்.—அவரிடத்தில் விளங்கின தாழ்ச்சி, கீழ்ப்படிதல், ஆத்தும இரட்சணிய ஆவல் முதலிய அப்போஸ்தலர்க்குரிய புண்ணியங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுவேனாக.

முதல் பிரிவு

அர்ச். பிராஞ்சீஸ்கு இயெரேணிமுஸ் ஆண்டவருடைய முந்திரிகைத் தோட்டத்தில் உழைக்க ஆயத்தம்பண்ணுதல்

தியானம்.—அர்ச். பிராஞ்சீஸ்கு இயெரோணிமுஸ் ஆண்டவருடைய முந்திரிகைத் தோட்டத்தில் ஊக்கமாய்

உழைக்க எவ்வித ஆயத்தம்பண்ணினுர்? அர்ச். தியோனிசியார் சொல்லுகிறபடி, திவ்விய அலுவல்களில் அதிக திவ்வியமானதாகிய இந்த அலுவலைச் சரியாய் நடத்தும்பொருட்டு உலகத்தில் பரிசுத்த குருவென்று அழைக்கப்பட்ட இவர் இயேசு சபையில் உட்பட்டு ஒரு வருஷம் நவசந்நியாசத்திலிருக்கையில், நசரேத்தூரில் அந்தரங்கமாய்ச் சீவித்து நாற்பதுநாள் வனாந்தரத்தில் சஞ்சரித்த இயேசுநாதர் பாவனையாக மவுனத்தையுஞ் செபத்தியானத்தையுந் தாழ்மையான வேலைகளையுஞ் செய்துவந்தார்.

ஜனங்களுக்கும் பற்பல சபையாருக்கும் புத்தி பிரசங்கஞ் சொல்லுகிறதற்கு முந்தின மணி நேரத்தைத் தம்மைக் கொடூரமாய் அடித்துக்கொள்வதிலுஞ் செபத்தியானஞ் செய்வதிலுஞ் செலவழிப்பார். அவர் எப்பொழுதும் வேதாகமங்களையும் வேதபாரகர் எழுதிவைத்த புத்தகங்களையுங் கவனத்தோடு வாசித்துத் தியானித்ததைக்கொண்டு ஜனங்களுக்குப் புத்தி பிரசங்கங்கள் சொல்வார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—செபத்தியானத்தில் நமது இருதயம் பற்றியெரியும்படி பார்க்கிறோமா? நாம் கேட்ட அல்லது வாசித்த நல்ல புத்திமதிகளின் பிரகாரம் நடந்துவருகிறோமா? புத்தி பிரசங்கஞ் சொல்லாவிட்டாலும், புறத்தியாரோடு பேசிப் பழங்குவதில் நன்மாதிரிகையான வார்த்தைகளைச் சொல்லிவருகிறோமா?

மனப்பற்றுதல்.—இதுவரையில் என் அலுவல்களில் நான் அசட்டையாய் நடந்தேனென்று ஒத்துக்கொண்டு அதின்பேரில் மனஸ்தாபப்பட்டு என் குற்றங்களைப் பரிகரிக்கத் தேவ அநுக்கிரகத்தைக் கேட்பேனாக.

பிரதிக்கினை.—இன்றைக்கு என் இளைப்பாற்றி நேரங்களை நல்ல சந்நியாசிக்குரியவிதமாய்ச் செலவழிக்கிறதெப்படியென்று யோசித்துப் பார்த்து புறத்தியாருக்கு நன்மாதிரிகையாயிருக்கும்படி வேண்டிக்கொள்ளுவேனாக.

2-ம் பிரிவு

அர்ச். பிராஞ்சீஸ்கு இயேறேணிமுஸ் ஆத்துமாக்களை விசாரிப்பதில் நடந்துகொண்ட விதம்

தியானம்.—அவரிடத்திலுள்ள ஆத்தும இரட்சணிய ஆவலுக்கு நேரம் இடம் ஆட்கள் என்னும் வித்தியாசமில்லாததினால், என் பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே எனக்குப் போசனமாயிருக்கிறதென்று இயேசுநாதர் திருவுளம்பற்றினதுபோல, அவருஞ் சொல்லக்கூடியவராயிருந்தார். அவர் பட்டணம் பட்டிக்காடுகளுக்குப் போய் ஜனங்களுக்குப் புத்தி பிரசங்கஞ் சொல்லும்போது, அதிலுங் கீழ்த்தரமான அலுவல்களைச் செய்யும்படிக்குச் சிரேஷ்டர் வரவழைத்தால், அதை விட்டுவிட்டு முழுமனதோடே வருவார். ஜப்பான் தேசமட்டும் போய் ஜனங்களைத் திருப்ப அவருக்கு ஆசையுண்டானாலும், அவரால் கூடாதிருந்ததினால், அடிக்கடி குருக்கள், சந்நியாசிகளுக்குத் தியானங் கொடுப்பதிலுந் தமக்கு அருகாமையிலுள்ள மற்ற ஆத்துமாக்களை இரட்சிப்பதிலுந் தம்மை முழுதுஞ் செலவழித்தார். எளியவர்கள்மட்டில் அவர் எடுத்துக்கொண்ட கவலையால் அவர்கள்பேரில் தமக்குள்ள பட்சத்தை விசேஷித்த விதமாய்க் காண்பித்தார். இவைகளைச் செய்வதில் அவரிடத்திலுள்ள சுத்த கருத்து எப்பேர்க்கொத்ததென்று அவரே அறிவித்திருக்கிறார். எப்படியென்றால், அவர் மரிக்கிறதற்குச் சற்றுநேரத்துக்குமுன் தம்மைச் சூழ்ந்திருந்த சகோதரருக்கு இரண்டொரு வார்த்தைகளைப் புத்தியாகச் சொல்லும்படி தமது சிரேஷ்டர் கேட்டுக்கொண்டதின்பேரில், தாம் சர்வேசுரனுடைய மகிமைக்காகவேயொழியத் தமக்காக ஒன்றும் ஆசியாமலுந் தேடாமலும் இருக்கச் சர்வேசுரன் தமக்கு வரமளித்தாரென்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் எனக்குக் குறித்திருக்கிற நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளப் போகிறேன்; ஏனென்றால், நான் என் ஆறுதலையும் மகிமையையும் அல்ல, என்னை அனுப்பினவருடைய தோத்திரத்தையும் மகிமையையும் மாத்திரந்

தேடினேனென்று அர்ச். பிராஞ்சீஸ்கு இயெரோணிமுஸைப்போல நானும் என் மரணவேளையில் சொல்லக்கூடியவனாயிருக்கிறேனா?

மனப்பற்றுதல்.—ஆத்தும இரட்சணியத்தின்பேரில் அத்தியந்த ஆவல் என் மனதில் உண்டாகச் சர்வேசுரனைக் கெஞ்சி மன்றாடுவேனாக.

பிரதிக்கினை.—தேவநற்கருணை சந்திக்கையிலுஞ் செபமாலை செபிக்கையிலும் பாவிகளைத் திருப்பப் பிரசங்கிகளுக்குப் பலன் தந்தருளும்படி ஆண்டவரை அடிக்கடி வேண்டிக்கொள்ளுவேனாக.

3-ம் பிரிவு

அவர் எவ்வளவு அநுகூலத்தோடே இந்த அலுவலை நடத்தினார்

தியானம்.—இது மெத்த ஆச்சரியமானதும் புத்திக்கெட்டாததுமென்றே சொல்லவேணும். அவர் பற்பல விதமாய் அநேகம் பாவிகளை மனந்திருப்பிக்கொண்டு வந்ததுந்தவிரத் தாம் கொடுக்கும் ஞானத்தியானங்கள் வழியாகப் பிரசித்தமாய்ப் பாவவழியில் நடந்துகொண்டு வந்தவர்களில் ஏறக்குறைய நானூறுபேர் வருஷந்தோறும் மனந்திரும்பச் செய்தார். இப்படி அவரால் திருப்பப்பட்ட பாவிகள் பழையபடி பாவத்தில் விழாமல் நிலைத்து வந்ததாகவுந் தெரியவந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சத்தியவேத போதகர்களான வேலையாட்கள் எவ்வளவு சொற்பமாயிருந்தாலும் அவர்களெல்லாரும் இப்பேர்ப்பட்ட ஆத்தும இரட்சணிய ஆவலாலே ஏவப்பட்டிருந்தால், அவர்கள் எவ்வளவோ மிகுதியான வெள்ளாண்மை அறுப்பார்கள்! சர்வேசுரன் அவர்களுடைய வேலையில் அவர்களுக்கு உதவியாயிருந்து அவர்களை ஆசீர்வதிக்கும்படி நாம் வேண்டிக்கொள்ளக்கடவோம்.

சம்பாஷணை.—அர்ச். பிராஞ்சீஸ்கு இயெரோணிமுஸ் என்பவரோடு சம்பாஷித்துச் சிரேஷ்டர்களுடைய

சித்தத்தின்படி எப்போதும் நடக்கவும் நமது உள்ளத்தில் ஆத்தும இரட்சணியத்தின்மேல் மெத்த ஆவலுண்டாகவும் நமது மகிமையைத் தேடாமல் சர்வேசுரனுடைய மகிமையையே தேடவும் வேண்டிய வரப்பிரசாதத்தை அவரிடத்தில் கேட்போமாக.

ஜூன் மாதம் 16-ம் தேதி

அர்ச். இராசேந்திர அருளப்பர் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். இராசேந்திர அருளப்பர் சில தடவைகளில் பீடத்தண்டையிலுஞ் சில தடவைகளில் எளியவர்கள் நடுவிலும் இருக்கிறதாக உரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—சர்வேசுரனைச் சிநேகிப்பதிலும் ஆத்துமாக்களை இரட்சிப்பதிலும் அர்ச். இராசேந்திர அருளப்பரைக் கண்டு பாவித்து நடக்கவேண்டிய வரப்பிரசாதத்தைக் கேட்பேனாக.

முதல் பிரிவு

இயேசுக்கிறீஸ்துநாதர்மட்டில் அர்ச். இராசேந்திர அருளப்பருக்குள்ள சிநேகம்

தியானம்.—அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியார் உரைத்த வண்ணம் பூக்களுக்கு வாசனையும் விலையேறப்பெற்ற இரத்தினக் கற்களுக்குப் பிரகாசக்காந்தியும் விசேஷித்ததாயிருக்கிறதுபோல, தேவ சிநேக உருக்கமானது சகல புண்ணியங்களிலுஞ் சிறந்ததாயிருக்கிறது. அர்ச்சியசிஷ்டவர்களெல்லாரும் இதை நன்றாய்க் கண்டுணர்ந்து இத்தேவ அக்கினிச்சுவாலை தங்களிடத்தில் இடைவிடாமல் கிளம்பும்படி விடாமுயற்சியோடு பிரயாசப்பட்டு வந்தார்கள். இன்றைக்குத் திருச்சபை கொண்டாடுகிற இந்த அர்ச்சிய

சிஷ்டவரும் இப்பேர்ப்பட்ட தேவ சிநேக உருக்கத்தில் விசேஷித்து விளங்கினார்; இயேசுக்கிறீஸ்துநாதர்மட்டில் அவருக்கு இருந்த சிநேகந்தான் அவர் செய்த புண்ணியங்களுக்கெல்லாம் பலமும் அழகுமாயிருந்தது; திவ்விய இரட்சகருக்கு மகிமை வருவிக்கவேணுமென்கிற கருத்துக்காகவே அவர் அவ்வளவு பிரயாசப்பட்டு உழைத்தார். அவருக்கு ஊழியஞ் செய்வதற்கு வேண்டிய பெலனை அடிக்கடி அவருடைய பாதத்தை அண்டிப்போய்ப் பெற்றுக்கொள்ளுவார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திவ்விய கர்த்தரோடு சம்பாஷிக்கிறது இந்த அர்ச்சியசிஷ்டவருக்கு எவ்வளவோ இன்பமாயிருந்தது! இப்படிப்பட்ட சம்பாஷணையில் தம்மால் சிநேகிக்கப்பட்டவர் தங்கியிருக்குந் தேவநற்கருணைப் பெட்டி முன்பாக இராமுழுதுஞ் செலவழித்தாலும், அவருக்கு வெகு சொற்பமாகத் தோன்றும். ஓ! இவரைப்போல என் ஆத்துமத்தில் நான் பரிசுத்தனுஞ் சுயபட்சமற்றவனுமாயிருந்தால், இயேசுக்கிறீஸ்துநாதரைச் சிநேகிக்கிறதைவிட மெய்யான சந்தோஷம் வேறொன்றுமில்லையென்று கண்டுகொள்வேன். அப்பொழுதுதான் அவர் அத்தனை விசை என்னைத் தயவோடு அழைத்துத் தமது நேசமுள்ள இருதயத்தோடு ஒன்றித்து அதற்கு ஒத்திருக்கும்படி எனக்குத் தந்தருளின வரப்பிரசாதங்கள் எம்மாத்திரம் பேறுபெற்றவைகளென்று சரியாய் அறிந்துகொள்வேன்.

மனப்பற்றுதல்.—திவ்விய கர்த்தர்மேல் என் இருதயத்தில் சிநேகம் எழுப்பி, என்னை முழுதும் அவருக்கு நேர்ந்து ஒப்புக்கொடுத்து, என் நம்பிக்கையெல்லாம் அவர்மேல் வைப்பேனாக.

பிரதிக்கினை.—சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காகவும் ஆத்துமாக்களின் இரட்சணியத்துக்காகவும் நான் செய்யுஞ் செபம் நற்கிரியைகளெல்லாவற்றையும் இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுப்பேனாக.

2-ம் பிரிவு

ஆத்துமாக்களின் இரட்சணியத்தின்மட்டில் அர்ச். இராசேந்திர அருளப்பருக்கு இருந்த ஆவல்

தியானம்.—இயேசுக்கிறீஸ்துநாதரை மிகவுஞ் சிநேகிக்கிறவன் அவர் தமது மரணத்தால் மீட்டுக்கொண்ட ஆத்துமாக்களை இரட்சிப்பதின்பேரில் மிகுந்த ஆசைப்பற்றுதல் வையாமலிருப்பது கூடாத காரியம். ஆகையால் அர்ச். இராசேந்திர அருளப்பரிடத்தில் அதிக பரிசுத்தமான இந்த ஆவல் விசேஷித்தவிதமாய் எரிந்துகொண்டிருந்தது. இதினாலே ஒரு ஆத்துமம் நரகத்தில் விழாதபடி அதை இரட்சிக்க அவருக்குத் தடை விக்கினமாகத் தோன்றினது ஒன்றுமில்லை. எத்தனைகாலம் வருந்தி உழைத்துக் களைத்துப்போனாலும், எவ்வளவு ஆபத்துக்கள், வியாதி துன்ப உபத்திரவங்கள் நேரிட்டாலும், ஒன்றுக்கும் அஞ்சாமல் சிதறிப்போன ஆடுகளைத் தேடிப்பிடித்துக் கிடையில் கொண்டுசேர்ப்பதற்குப் பட்சிபோலப் பறப்பாரென்று அவருடைய சரித்திரத்தை எழுதினவர்கள் சொல்லுகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்பெரிய அர்ச்சியசிஷ்டவரைப்போல நானும் ஆத்துமாக்களை இரட்சிக்கும் அலுவலுக்காக நியமிக்கப்பட்டவனல்ல; ஆயினும் இவர் யாருக்காகப் பிரயாசப்பட்டு உழைத்தாரோ அவரே நமது இரட்சகரும் நமது ஏகசம்பத்துமாயிருக்கிறார். ஆகையால் இவர் இருதயத்தைப்போல என் இருதயந் தேவ சிநேக அக்கினியால் பற்றியெரியாதேபோனாலும், அத்தேவ அக்கினியின் சில பொறிகளாகிலும் அதில் தெறித்து விழுகிறதாக நான் உணரவேண்டாமோ? அப்போஸ்தலர்களைப்போல இந்தமேலான அலுவல்களில் ஈடுபட்டுழைக்க என்னால் முடியாவிட்டாலும், எனக்குச் சமயங் கிடைக்கும்போதெல்லாம், என் திவ்விய இரட்சகருடைய இருதயத்தை அறிந்து சிநேகிக்கும்படி செய்ய நான் துரிதப்படவேண்டியதில்லையா?

சம்பாஷணை.—இயேசுநாதருடைய திரு இருதயத்துடன் சம்பாஷணை செய்து, அர்ச். இராசேந்திர அருளப்பர் செய்த புண்ணியங்களையும் விசேஷமாய் அவரிடத்தில் எரிந்துகொண்டிருந்த தேவ சிநேகத்தையும் அத்திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுப்பேனாக. எனக்குப் பத்தி சுறுசுறுப்பும் தேவ தோத்திரத்துக்காக நான் அநுகூலமாய் உழைக்கும்படி வேண்டிய வரப்பிரசாத உதவியுங் கிடைக்க இப்பெரிய அர்ச்சியசிஷ்டவர் வழியாகக் கெஞ்சிமன்றாடுவேனாக.

ஜூன் மாதம் 21-ம் தேதி

அர்ச். ஞானப்பிரகாசியார் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். ஞானப்பிரகாசியார் மரண சமயத்தில் ஞான சந்தோஷம் நிறைந்தவராயிருக்கிறதைப் பார்க்கிறதாக உரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் சேபம்—அவர் அடைந்த பாக்கியத்தில் நமக்குப் பங்கு கிடைக்கத்தக்கதாக அவர் உதாரத்தைக் கண்டுபாவிக்க வரப்பிரசாதங் கேட்போமாக.

முதல் பிரிவு

உத்தம சாங்கோபாங்கத்தை அடைய அர்ச். ஞானப்பிரகாசியார் உதாரமாய்ப் பட்டபிரயாசம்

தியானம்.—அர்ச்சியசிஷ்டவர்களுடைய மேலான செய்கைகளை நாம் வாசிக்கும்போது, சிலவிசை நாம் மேலெழுந்தவாரியாய் நமக்குள்ளே சொல்லிக்கொள்வதேதென்றால், அவர்கள் அர்ச்சியசிஷ்டவர்களாயிருந்ததினாலே அப்படி நடந்தது ஆச்சரியமல்ல; நான் அவர்களைப்போல அர்ச்சியசிஷ்டவனல்லவென்கிறோம். இப்படிச் சொல்வது அர்ச்சியசிஷ்டவர்கள் தங்களைச் செயிக்கிறதற்காக உதாரகுணத்தோடும் வீரத்துவத்தோடும் பிரயாசப்பட்டு அர்ச்சியசிஷ்டவர்களாகாமல் அவர்கள் பிறக்கும்போதுதானே,

அர்ச்சியசிஷ்டவர்களாய்ப் பிறந்தார்களென்று நாம் நினைக்கிருப்போலாகும். இது சரியல்ல: அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரத்தின் ஒவ்வொரு ஏட்டிலும் அவர் பட்டபிரயாசங்களின் வர்த்தமானங்களை நாம் பார்க்கிறோம். அப்படியே அவர் செபம்பண்ணும்போது, தாம் நினைவினால் பராக்குக்கு இடங்கொடாதபடி ஒரு மணிநேரமாகிலும் பராக்கின்றி இருக்கும் வரைக்கும் அநேக மணிநேரம் அதில் நிலைத்திருப்பார். கோபத்தில் தமக்குண்டான நாட்டத்தைச் செயிக்கத்தக்கதாகத் தமது மனப்பற்றுதல் யாவின்பேரிலும் எந்நேரமும் விழிப்பாயிருந்து தமக்கு அசுப்பிலே முதலாய்க் கோபம்வராதபடி அதை அடக்கிக்கொண்டு வருவார். பெருமை, சிலாக்கியம், சுயபட்சமாகிய எவ்வித தோற்றமுந் தம்மிடத்திலிராதிருக்க மாந்துவா பட்டணத்தின் அரமனையார் கொண்டாடின ஆரவார மகிழ்ச்சியிலே தாம் ஒரு நீசவாகனத்தின்மேல் ஏறி யாவரும் நகைக்கத்தக்க வேஷத்தோடே அங்கே போகத் தீர்மானித்தார். இப்படி அற்பமாசு முதலாயில்லாமல் தமது ஆத்துமத்தைக் காப்பாற்ற இவர் பட்டபிரயாசம் இவ்வளவென்று யாரால் சொல்லக்கூடும்? பெண்பிள்ளைகள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கத் தமது கண்களுக்குக் கொஞ்சமாகிலும் இடங்கொடாமலிருந்ததுமன்றி இடைவிடாத ஒருசந்தி பிடித்தும் இரத்தஞ் சிந்தும்வரையிலும் தம்மை அடித்துக்கொண்டும் இராக்காலத்தில் நெடுநேரம் செபத்தியானத்தில் செலவழித்தும் இப்படித் தபசினால் தமது சரீரத்தை ஒறுத்துவருவார். இதுவுமன்றித் தமது துரைத்தனத்தைவிட்டுச் சந்நியாசத்தில் பிரவேசிக்க இரண்டு வருஷகாலம் இவர் போராடினது எவ்வளவென்று சொல்லக்கூடுமோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது சொல்லிவந்ததைப் பார்க்கையில், ஞானப்பிரகாசியாருடைய அர்ச்சியசிஷ்டதனம் அவருக்கு இயல்பாயிருந்ததென்றும் அவரோடு கூடப்பிறந்ததென்றுஞ் சொல்ல இடமில்லாமல், மகா உதாரகுணத்தோடு தேவ உதவியைக் கொண்டு அவர் பட்டபிரயாசத்தினால் வந்ததென்று ஒப்பித்தாற்போலாயிற்று. நாமும் இவ்வண்ணம் அர்ச்சியசிஷ்டவர்

களாகலாம். இப்படி நினைப்பது நமக்கு எவ்வளவோ ஆறுதலையுந் தைரியத்தையும் வருவிக்கும்.

மனப்பற்றுதல்.—அர்ச்சியசிஷ்டவனாகிறதற்கு உன்னாலான வழிகளையெல்லாம் நீ உதாரமாய்த்தேடி அநுசரிக்கத்தக்கதாக அர்ச்சியசிஷ்ட ஞானப்பிரகாசியார் உனக்குத் திடமுள்ள மனதை அடைந்தருள அவரைப் பிரார்த்தித்துக்கொள்வாயாக.

பிரதிக்கினை.—உனக்கு இக்கட்டான சமயங்களில் இதெல்லாம் நித்திய சம்பாவனைக்கு முன் எவ்வளவோ சொற்பக்காரியமென்று அவரைப்போல நீயும் சொல்லி மனத்திடனைக் காண்பிப்பாயாக.

2-ம் பிரிவு

அர்ச். ஞானப்பிரகாசியார் உத்தம சாங்கோபாங்கத்தை அடையத் தக்கதாக இடைவிடாமல் பட்டபிரயாசம்

தியானம்.—அர்ச். ஞானப்பிரகாசியாருக்குப் பதினெட்டு வயது நடக்கையில், அவர் உரோமாபுரியிலே இயேசு சபையில் உட்பட்டார். அவர் நவசந்நியாசிகள் மடத்தில் பிரவேசித்து அதில் இரண்டு வருஷகாலமிருந்தபோது, தாம் உலகத்தைத் துறந்துவிட்டு அர்ச்சியசிஷ்டவனாகவேணுமென்று நினைத்தபடி எந்நேரமும் பிரயாசப்பட்டுக்கொண்டுவந்தார். அப்படியே அவ்விரண்டு வருஷத்துக்குள்ளாக ஆச்சரியமான பிரகாரமாய்ப் புண்ணியத்தில் வர்த்தித்துக்கொண்டு வந்தார். இதற்குப்பின் மூன்று மாசகாலம் வியாதியாயிருந்து சாகுந்தனையும் புண்ணியத்தில் நிலைமையாயிருந்தார். அவர் மரண அவஸ்தையாயிருக்கும்போது, தாம் தபசியாய் மரணமடையத் தம்மை அஞ்சுதலைக் கயிற்றினால் அடிக்கவுந் தரையில் சாம்பலைப் பரப்பி அதில் கிடத்தவும் அழுகையோடே மன்றாடினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் அர்ச். ஞானப்பிரகாசியாரைப்போல அர்ச்சியசிஷ்டவர்களாகவேணுமென்கிற கருத்தோடு சந்நியாசத்தில் பிரவேசித்தோம். நாம் நம்மைச் செயிக்க மிகவும் பிரயாசப்படத்

துவக்கினோம். மேலும் நமது பிரயாசத்துக்குத்தக்கது ஞானப்பலனை அடைந்தோம்; ஆனால் கொஞ்சங் கொஞ்சமாய் மன உறுதி குறைந்துபோக, அநேகம் வீண் போக்குகள் நிமித்தம் புண்ணியத்தில் தளர்ந்துபோனோம். சிலவிசை ஞான ஒடுக்கத்திலிருந்தபோதும் வார்த்தைப்பாடுகளைப் புதுப்பித்தபோதும் மறுபடி நமக்குச் சற்றே தைரியமுண்டானதால் பிரயாசப்படத் துவக்கினோம்; அதுவும் வெகுநாள் நீடித்ததில்லை. நாம் இத்தனை காலம் உத்தம சாங்கோபாங்கத்தின் பள்ளிக்கூடத்திலிருந்தும் புண்ணியத்தில் அபிவிர்த்தி அடையாமற்போனதற்கு இதுவே காரணம்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் மெய்யென்று ஒத்துக்கொண்டு தேவ கிருபையை இரந்து, தாழ்ச்சியோடே விண்ணப்பஞ்செய்வோமாக.

பிரதிக்கினை.—ஞான ஒடுக்கத்தில் செய்தபிரதிக்கினைகளைத் திரும்ப வாசித்துப் புதிதான பத்தி சுறுசுறுப்போடே அவைகளை அநுசரித்துவருவோமாக.

3-ம் பிரிவு

உத்தம சாங்கோபாங்கத்தை அடைய அர்ச். ஞானப்பிரகாசியார் பட்டபிரயாசத்துக்குக் கிடைத்த சம்பாவனை

தியானம்.—இவர் உதாரமாய்ப் பட்டபிரயாசத்துக்குச் சம்பாவனையாக மேலான தியானவரம், கண்ணீர்சிந்தும் வரம், உத்தமமான கற்புவர முதலிய அநேக விசேஷ வரங்களை அடைந்தார். இவைகளுக்குள்ளே நம்மால் மிகவும் அபேட்சிக்கத்தக்க ஒருவரமுண்டு. அதேதென்றால், சமாதானமுஞ் சந்தோஷமும் ஆச்சரியமான நம்பிக்கையும் நிறைந்த அவருடைய பரிசுத்த மரணத்தின் வரமாமே. அவர் மரணமடைய எட்டு நாளைக்கு முந்திப் புண்ணியவதியான தமது தாயாருக்கு எழுதின கடிதத்தைப் பார்த்தால், இது தெரியவரும். எப்படியெனில், அழுவாரோடு அழுவதும் மகிழ்வாரோடு மகிழ்வதும் பிறசிநேகத்துக்குரிய தாயிருக்க, என் பிரியமுள்ள தாயாரே, சர்வேசுரன் என்னை

மெய்யான பேரின்ப பாக்கியத்தில் அழைத்துக்கொள்ளப் போகிறதினால் என்னிடமாய் உமக்கு அவர் செய்யும் விசேஷ சகாயத்தைப்பற்றி நீர் அடையும் ஆறுதல் மகா பெரிதாயிருக்கும். நான் மகா அசட்டையுள்ளவனாய் இதைத் தேடியிருந்தும், இப்பேர்க்கொத்த மோக்ஷானந்த பாக்கியத்துக்கு என்னை அழைக்க அவர் சித்தமாயிருக்கிறார். நான் சிந்தின கொஞ்சங் கண்ணீருக்கு அவர் சம்பாவனை கொடுக்கத் தயைபுரிகிறார். இத்தகைய கருத்துள்ள விசேஷங்கள் இந்தக் கடிதத்தில் விளங்கினதுமல்லாமல் தமது சிரேஷ்டர்களோடுஞ் சகோதரர்களோடும் அவர் கடைசிவிசை பேசிக்கொண்டிருந்தபோதும், இவ்வித கருத்தைத்தானே காண்பித்தார். இதைக் கேட்டவர்கள் ஆச்சரியப்பட்டு ஒரு அர்ச்சியசிஷ்டவர் மரணமடைகிறதைத் தாங்கள் கூட நின்று பார்க்கிறதுபோலத் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். சர்வேசுரன் தமது பரிசுத்த ஊழியருடைய அர்ச்சியசிஷ்டதனத்தை அநேக புதுமைகளைக் கொண்டு பிரபலியப்படுத்தச் சித்தமானார். இவருடைய தாயார் உயிரோடிருக்கும்போதுதானே இவர் மரித்த பதினாலாம் வருஷம் இவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டங் கொடுத்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச்சியசிஷ்டவர்களைப்போலே நாம் நடப்போமாகில், அவர்கள் அடைந்த பாக்கியத்துக்கு நாமும் பங்காளிகளாயிருப்போம்.

சம்பாஷணை.—அர்ச். ஞானப்பிரகாசியாரோடே சம்பாஷணை செய்வோமாக.

வார்த்தைப்பாடு புதுப்பிப்பதற்குமுன் மூன்று நாள் ஒடுக்கத்தில் செய்யத்தக்க ஞான முயற்சிகள்

ஆயத்த முயற்சி

வார்த்தைப்பாடு புதுப்பிப்பதற்கு முந்தின இந்த மூன்று நாளும் தகுந்தபடி செலவழிப்பதற்கான முகாந்தரங்களும் வழிகளும், I புத்தகம் பக்கம் 786.

முதல் நாள்

முதல் தியானம்: ஆத்தும இரட்சணியத்தின் அவசரம். I புத். பக்கம் 92.

* யோசனை: I புத்தகம் பக்கம் 791. I, II, III, IV, V இலக்கங்கள்.

* ஞானவாசகம்: I புத்தகம் பக்கம் 96 முதல் 100 வரையில்;
,, ,, 27 ,, 31 ,,

2-ம் தியானம்: சாவானபாவம் அற்பப்பாவங்களின் கனம். I புத்தகம் பக்கம் 203.

* விபரம்.—முதலாவது. இந்த நாட்களில் யோசனை அரைமணிநேரமும் ஞானவாசகம் அரைமணி நேரமுஞ் செய்யவும்.

2-வது. இந்த யோசனைகள் சந்நியாசியின் சீர்திருத்தத்துக்கும் புண்ணிய வர்த்திப்புக்கும் ஏதுவாயிருப்பதுமன்றி, தன் ஆத்தும ஸ்திதியை மிகவும் நன்றாய் அறிந்துகொள்வதற்கும் அதின்பேரில் ஆத்தும குருவுக்காவது சிரேஷ்டருக்காவது கணக்குக் கொடுப்பதற்கும் வெகு உதவியாயிருக்கும். இந்த யோசனைகளோடுகூடச் சென்ற எட்டுநாள் ஒடுக்கத்தில் தான் செய்து கொண்ட பிரதிக்கினைகளின்பேரிலுந் தன்னைக் கவனமாய்ச் சோதித்துப் பார்ப்பது நலமாயிருக்கும்.

இரண்டாம் நாள்

முதல் தியானம்: சாவின்பேரில். I புத்தகம் பக்கம் 261.

யோசனை: I புத். பக்கம் 793. VI, VII, VIII இலக்.

ஞானவாசகம்: I புத்தகம் பக்கம் 84 முதல் 88 வரையில்;
" " " 698 " 707 "
" " " 711 " 715 "

2-ம் தியானம்: தீர்வையின்பேரில். I புத்தகம் பக்கம் 291.

மூன்றாம் நாள்

முதல் தியானம்: ஞான அபிவிர்த்தியின்பேரில். I புத்தகம் பக்கம் 638.

யோசனை: I புத்தகம் பக்கம் 794, இரண்டாம் வகைக் கேள்விகள்.

ஞானவாசகம்: I புத். பக்கம் 132 முதல் 145 வரையில்.

2-ம் தியானம்: நமது தேவ அழைத்தலின் மேன்மையின் பேரில். I புத்தகம் பக்கம் 767.

பொருள் அட்டவணை

தேதி பக்கம்

பாயிரம் 5
தியானத்தின் பலனை அடைவதற்கு மிகவும் உதவியான சில குறிப்புகள் 9
தியானத்துக்கு முந்திச் செய்யவேண்டிய செபம்... 12

ஜனவரி மாதம்

1 இந்நாளின் மூன்று விசேஷங்கள் 15
2 இயேசுவென்கிற திருநாமம் 19
3 இயேசுவென்கிற திருநாமங் கொடுக்கப்பட்டது ... 23
4 காலத்தின் மதிப்பு 27
5 காலத்தை நன்றாய் உதவிக்கொள்ளுதல் 32
6 மூன்று இராசாக்கள் திருநாள் 36
7 தேவ வரப்பிரசாத ஏவுதலுக்கு மூன்று இராசாக்கள் கீழ்ப்படிகிறார்கள் 40
8 மூன்று இராசாக்கள் பிரயாணஞ் செய்தபோது, சம்பவித்த மூன்று விசேஷங்கள் 44
9 ஏரோது இராசா புத்தி கலங்கினதும், அவன் கள்ள ஞானமும் 48
10 மூன்று இராசாக்கள் காணிக்கை கொடுத்தது ... 52
11 மூன்று இராசாக்களுக்குக் கிடைத்த பாக்கியம் ... 57
12 மூன்று இராசாக்களை அழைத்த தேவ வரப்பிரசாதம் 61
13 மூன்று இராசாக்கள் தங்கள் இராச்சியத்துக்குத் திரும்பிப்போனது 65
14 பத்தி சுறுசுறுப்பு அதிகமதிகமாயுண்டாவதற்காகத் தினந்தோறும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டிய மூவித யோசனைகள் 68
15 தேவமாதா சுத்திகரச் சடங்கை நிறைவேற்றும்போது அவள் காண்பித்த சுகிர்த புண்ணியங்கள் 72

16 குழந்தை இயேசுநாதரைத் தேவாலயத்தில் காணிக்கை கொடுத்தது 76
17 தேவாலயத்தில் சிமையோனும் குழந்தை இயேசுநாதரும் சந்தித்தது 80
18 இப்போது உமது ஊழியனைச் சமாதானத்தில் போக விடுமென்று சிமையோன் சொன்ன வசனம் ... 84
19 மகாத்துமாவான சிமையோன் சொன்ன தீர்க்கதரிசனம் 88
20 ஆத்தும இரட்சணியத்தின் அவசரம் 92
21 ஆத்தும இரட்சணியம் முக்கியமானதென்பதை உணர்ந்து நடக்கிறோமாவென்று எப்படி அறியக்கூடும் 96
22 திருக்குடும்பம் எஜிப்த்து தேசத்துக்குப் போனது ... 100
23 சூசையப்பரும் தேவமாதாவும் ஆச்சரியமான விதமாய்க் கீழ்ப்படிந்தது 105
24 மூவகைக் கீழ்ப்படிதல் 108
25 திருக்குடும்பம் யூதேயா நாட்டுக்குத் திரும்பிவந்தது 112
26 திருக்குடும்பம் எருசலேம் பட்டணத்தின் தேவாலயத்துக்குப் போனது 116
27 காணமற்போன இயேசுநாதர் தேவாலயத்தில் திரும்பக் கண்டுபிடிக்கப்பட்டது 120
28 இயேசுநாதர் எருசலேம் பட்டணத்திலிருந்து நசரேத்தூரில் வாசம்பண்ணப்போகிறது 124
29 இயேசுநாதருடைய அந்தரங்க சீவிய பரம இரகசியம் 129
30 நல்ல கருத்தின் தன்மையும் முகாந்திரங்களும் ... 132
31 இயேசுநாதர் தமது அந்தரங்க சீவியத்திலே நமக்கு கீழ்ப்படிதலின் மாதிரிகையாயிருக்கிறார் ... 136

பெப்ரவரி மாதம்

1 இயேசுநாதர் தமது அந்தரங்க சீவியத்தில் காண்பித்த அடக்க ஒடுக்கமுஞ் சாந்தகுணமும் பத்தியும் ... 141
2 தேவமாதாவின் சுத்திகரத் திருநாள் 145
3 இயேசுநாதர் ஞானத்திலும் வயதிலும் வரப்பிரசாதத்திலும் வளர்ந்துகொண்டு வருகிறார் 149

விபூதித் திருநாள்

தபசுகாலத்துக்குத் தகுந்த ஆயத்தம் 153
விபூதித் திருநாளுக்குப் பின்வரும் வியாழன் : இயேசுநாதர் ஒலிவேத்தென்கிற பூங்காவனத்தில் பிரவேசித்தது ... 157
விபூதித் திருநாளுக்குப் பின்வரும் வெள்ளி : இயேசுநாதர் ஆத்துமத்தில் பட்ட கஸ்தி 161
விபூதித் திருநாளுக்குப் பின்வரும் சனி : இயேசுநாதர் பூங்காவனத்தில் செய்த செபம் 165

தபசுகாலத்தின் முதல் வாரம்

ஞாயிறு : இயேசுநாதர் பூங்காவனத்தில் மரண அவஸ்தைப் படுகிறார் 169
திங்கள் : தபசுகாலத்தில் விசேஷமாய்ச் செய்யவேண்டிய தபத்தின் அவசரமும் விதமும் ... 173
செவ்வாய் : இயேசுநாதர் தமது சீஷர்களைக் கண்டிக்கிறார். துரோகியான யூதாசுக்கு எதிராகப்போகிறார் 177
புதன் : யூதாஸ் கட்டிக்கொண்ட துரோகம் ... 181
வியாழன் : இயேசுநாதர் பிடிபட்டதும் அப்போஸ்தலர்கள் அவரைக் கைவிட்டு ஓடிப்போனதும் ... 185
வெள்ளி : அன்னாசென்பவனுடைய அரண்மனையிலிருந்து கைப்பாஸ் அரண்மனைக்கு இயேசுநாதரைக் கூட்டிக்கொண்டு போகிறார்கள் ... 190
சனி : கைப்பாஸ் அரண்மனையில் இயேசுநாதர் குற்றஞ் சாட்டப்பட்டு வினவப்படுகிறார். ... 194

தபசுகாலத்தின் 2-ம் வாரம்

ஞாயிறு : இயேசுநாதர் தேவதூஷணக் குற்றஞ் சாட்டப்படுகிறார் 198
திங்கள் : பாவத்தினால் வந்த பொல்லாப்பை நினைத்துச் செய்யவேண்டிய தபசுக்கடுத்த முகாந்திரங்கள் 203

செவ்வாய்: சேவகரும் ஸகப்பாசுடைய ஊழியரும் இயேசுநாதரை ஆகடியம் பண்ணுகிருர்கள் ... 207
புதன்: அர்ச். இராயப்பர் இயேசுநாதரை மும்முறை மறுதலித்தது 211
வியாழன்: அர்ச். இராயப்பர் உத்தம மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினது 215
வெள்ளி: அதிகாரியான போஞ்சுபிலாத்தண்டையில் இயேசுநாதர் தமது பிரஜைகளால் கையளிக்கப்படுகிருர் 219
சனி: யூதாஸ் இஸ்கரியோத்து அவநம்பிக்கையால் தன்னைக் கொலைசெய்துகொள்ளுகிருன் ... 223

தபசுகாலத்தின் 3-ம் வாரம்

ஞாயிறு: பிலாத்துமுன்பாக யூதஜனங்கள் இயேசுநாதர் பேரில் குற்றஞ் சாட்டுகிருர்கள் ... 227
திங்கள்: பாவத்தால் வரும் சேதத்தை நினைத்துத் தபசு செய்யவேண்டிய முகாந்திரங்கள் ... 231
செவ்வாய்: பிலாத்தென்பவனுடைய நீதியாசனத்துக்கு முன்பாக இயேசுநாதர் கேள்வி கேட்கப்படுகிருர் 235
புதன்: பிலாத்தின் நீதியாசனத்துக்கு முன்பாக இயேசுநாதர் காண்பித்த ஆச்சரியமான மவுனம் 240
வியாழன்: ஏரோது இராசாவின் அரமனையில் இயேசுநாதர் அவமானமடைந்தது 244
வெள்ளி: இயேசுநாதரைப் பரபாசென்னும் கள்ளனோடே ஒரே வரிசையாக நிறுத்திப் பரபாசை விடுதலையாக்கினது 248
சனி: பிலாத்தென்பவன் யூதர்களுடைய கொடிய மூர்க்கத்தினின்று இயேசுநாதரைத் தப்பித்துவிடப் பார்க்கிருன் 253

தபசுகாலத்தின். 4-ம் வாரம்

ஞாயிறு: இயேசுநாதரைக் கற்றூணில் கட்டி அடித்தது 257
திங்கள்: மரணத்தை நினைத்துத் தபசுசெய்யவேண்டிய முகாந்திரங்கள் 261
செவ்வாய்: இயேசுநாதர் முண்முடி சூட்டப்பட்டு மகா நிந்தை அவமானம் அடைந்தது ... 265
புதன்: பிலாத்து ஜனங்களுக்கு இயேசுநாதரைக் காண்பித்து இதோ! மனிதன் என்றுன் ... 269
வியாழன்: இயேசுநாதரை கடைசிவிசை கேள்வி கேட்டதும் பிலாத்து பயந்து தன் பலவீனத்தைக் காண்பித்தது 273
வெள்ளி: இயேசுநாதர் சிலுவை மரணம் அடைய அநியாயமாய்த் தீர்வையிடப்பட்டு சர்வேசுரன் சித்தத்துக்கு அமைந்திருக்கிருர் ... 278
சனி: இயேசுநாதர் சிலுவை சுமந்துபோகையில் குப்புறவிழுகிருர், சிரேனேயூரானுகிய சீமோன் சிலுவையைத் தாங்கிக்கொண்டு போகிருர் ... 282

தபசுகாலத்தின் 5-ம் வாரம்

ஞாயிறு: பத்தியுள்ள ஸ்திரீகள் இயேசுநாதரைக் கண்டு அழுததும், அவருடைய திருத் தாயார் எதிர்கொண்டு சந்தித்ததும் 287
திங்கள்: தீர்வையை நினைத்து தபசு செய்யவேண்டிய முகாந்திரங்கள் 291
செவ்வாய்: இயேசுநாதருக்கு கபாலமலையில் பிச்சுக் கலந்த இரசத்தைக் குடிக்கக் கொடுத்து அவர் வஸ்திரத்தை உரிகிருர்கள் 295
புதன்: இயேசுநாதர் இரு கள்ளர் நடுவே சிலுவையில் அறையப்படுகிருர் 299
வியாழன்: இயேசுநாதர் சிலுவையில் அறையுண்டிருக்கும்போது திருவுளம்பற்றின முதல் வாக்கியம் 303
வெள்ளி: வியாகுலமாதாவின் திருநாள் 308
சனி: இயேசுநாதர் சிலுவையிலிருந்து திருவுளம்பற்றின இரண்டாம் வாக்கியம் 312

தபசுகாலத்தின் 6-ம் வாரம்

குருத்து ஞாயிறு: இயேசுநாதர் சிலுவையிலே கை விடப்பட்டு வஸ்திரமெல்லாம் உரியப்பட்டுத் தூஷணிக்கப்படுகிறார் 317

திங்கள்: நரகத்தை நினைத்துத் தவஞ்செய்யவேண்டிய முகாந்திரங்கள் 321

செவ்வாய்: இயேசுநாதர் சிலுவையில் திருவுளம்பற்றின மூன்றும் வாக்கியம்.—தமது தாயாரை நமக்கு மாதாவாகக் கட்டளையிடுகிறார் ... 325

புதன்: இயேசுநாதர் சிலுவையில் திருவுளம்பற்றின நாலாம், ஐந்தாம் வாக்கியங்கள் ... 329

வியாழன்: இயேசுநாதர் சிலுவையில் திருவுளம்பற்றின ஆறும் வாக்கியம் 334

வெள்ளி: இயேசுநாதர் சிலுவையில் திருவுளம்பற்றின கடைசி வாக்கியமும் திருமரணமும் ... 338

சனி: இயேசுநாதருடைய திருச்சரீரம் கல்லறையில் அடக்கப்பட்டது 342

பாஸ்குத் திருநாள்

ஞாயிறு: நமது ஆண்டவராகிய இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினது 347

பாஸ்குத் திருநாளுக்கடுத்த திங்கள்: இயேசுநாதருடைய மகிமை சோபனம் நிறைந்த திருச்சரீரத்தினுடைய ஆச்சரியமுள்ள விசேஷ வரங்கள் ... 351

பாஸ்குத் திருநாளுக்கடுத்த செவ்வாய்: இயேசுநாதருடைய மகிமையுள்ள சரீரத்தில் பதிந்திருந்த ஐந்து திருக்காயங்களின் பேரில் 356

பாஸ்குத் திருநாளுக்கடுத்த புதன்: இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினதினால் வந்த பலன் ... 360

பாஸ்குத் திருநாளுக்கடுத்த வியாழன்: இயேசுநாதருடைய உத்தானம் நமது ஞான உத்தானத்துக்கு மாதிரிகையாம் 364

பாஸ்குத் திருநாளுக்கடுத்த வெள்ளி: இயேசுநாதரை அடக்கஞ்செய்த கல்லறை மகிமை அடைந்ததின்பேரில் 368

பாஸ்குத் திருநாளுக்கடுத்த சனி: இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினதற்கு முந்தியும் பிந்தியும் தேவமாதாவிடத்தில் விளங்கின மனப்பற்றுதல் 372

பாஸ்குத் திருநாளுக்குப்பின் முதல் வாரம்

ஞாயிறு: பத்தியுள்ள ஸ்திரீகள் இயேசுநாதருடைய கல்லறையைப் பார்க்கப் போகிறார்கள் ... 376

திங்கள்: நமது ஆண்டவராகிய இயேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினாரென்று ஒரு சம்மனசு பத்தியுள்ள ஸ்திரீகளுக்கு அறிவிக்கிறார் ... 380

செவ்வாய்: இயேசுநாதர் மரியமதலேனாளுக்கு காட்சி கொடுக்கிறார் 384

புதன்: மரியாயென்னும் பேர்கொண்ட வேறே இரண்டு ஸ்திரீகளுக்கு இயேசுநாதர் காட்சி கொடுக்கிறார் 388

வியாழன்: இராயப்பரும் அருளப்பருமாகிய இரண்டு அப்போஸ்தலர்களும் கல்லறையைப் பார்க்கப் போகிறார்கள் 392

வெள்ளி: இயேசுநாதர் அர்ச். இராயப்பருக்குத் தரிசனையாகிறார் 396

சனி: இயேசுநாதர் எம்மாவுஸென்னும் ஊர் சீஷர்களுக்குக் காட்சி கொடுக்கிறார் ... 401.

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 2-ம் வாரம்

ஞாயிறு: "நான் நல்ல மேய்ப்பனாயிருக்கிறேன்" ... 405

திங்கள்: இயேசுநாதர் எம்மாவுஸென்னும் ஊரரான இரண்டு சீஷர்களைக் கடிந்து அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறார் 409

செவ்வாய்: சீஷர்கள் இயேசுநாதரைத் தங்கள் இல்லத்தில் தங்கியிருக்க மன்றாடுகிறார்கள் ... 413

புதன்: அர்ச். சூசையப்பர் அடைக்கலத் திருநாள் ... 417

வியாழன்: இயேசுநாதர் சீஷர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார் 422

வெள்ளி : இயேசுநாதர் கூடியிருந்த அப்போஸ்தலர்களுக்குஞ் சீஷர்களுக்கும் காட்சி கொடுக்கிறார் ... 426
சனி : இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்கு அளித்த சமாதானத்தின்பேரில் ... 430

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 3-ம் வாரம்

ஞாயிறு : இயேசுநாதர் வேதம்போதிக்கும் அலுவலையும் தமது ஞானத்தையும் பாவங்களைப் பொறுக்கும் அதிகாரத்தையும் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கிறார் 434
திங்கள் : முந்தின ஞாயிற்றுக்கிழமைப் பூசையின் சுவிசேஷத்தின்பேரில் 438
செவ்வாய் : அப்போஸ்தலரான அர்ச். தோமையார் அவிசுவாசப்பட்டது 443
புதன் : இயேசுநாதர் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் அநேக சீஷர்களுக்கும் முன்பாகத் தோமையாருக்குத் தரிசனையாகிறார் 447
வியாழன் : தோமையார் மனந்திரும்பி விசுவாச உச்சாரணஞ் செய்கிறார் 451
வெள்ளி : இயேசுநாதர் திபேரியாதென்னும் கடற்கரையில் காட்சிகொடுக்கிறார் 455
சனி : புதுமையாய் மீன்பிடித்ததும் அர்ச். அருளப்பர் இயேசுநாதரைக் கண்டறிந்ததும் ... 459

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 4-ம் வாரம்

ஞாயிறு : இன்றையத்தினம் வாசிக்கும் சுவிசேஷத்தின் பேரில் 463
திங்கள் : இயேசுநாதர் அற்புதமாய் மீன்கள் அகப்படச் செய்தபின், சீஷர்களுக்கு வேறொரு அற்புதமான காரியத்தைச் செய்கிறார் ... 467
செவ்வாய் : இயேசுநாதர் அர்ச். இராயப்பருடைய மனதைச் சோதித்துத் திருச்சபைக்கு அவரைத் தலைவராக ஏற்படுத்துகிறார் 472

புதன் : இராயப்பர் சிலுவையில் அறையப்பட்டு மரணமடையப்போகிறதை இயேசுநாதர் அவருக்கு முந்தி அறிவித்ததும் அவரிடத்திலுள்ள வீணான ஆசையைக் கண்டித்ததும் 476
வியாழன் : ஐந்நூறு சீஷர்களுக்கு இயேசுநாதர் காட்சி கொடுக்கிறார் 481
வெள்ளி : உலகமெங்கும் போய்ப் பிரசங்கித்து ஞானஸ்நானம் கொடுக்க இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களை அனுப்புகிறார் ... 485
சனி : திருச்சபையை ஏற்படுத்தினதின்பேரில் ... 489

பாஸ்குத் திருநாளுக்குப்பின் 5-ம் வாரம்

ஞாயிறு : இன்றையத்தினம் வாசிக்கும் சுவிசேஷத்தின் பேரில் 494
திங்கள் : கர்த்தர் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போன திருநாளுக்குமுன் மூன்று நாள் செய்யும் பொதுச் செபத்தின்பேரில் 498
செவ்வாய் : இயேசுநாதர் மோக்ஷத்திற்கு ஆரோகணமாகிறதற்கு முந்திக் கடைசிவிசை காட்சி கொடுத்ததின்பேரில் 502
புதன் : இயேசுநாதர் கொடுத்த காட்சியின்பேரில் பொது யோசனை 506
வியாழன் : நமது ஆண்டவராகிய இயேசுக்கிறீஸ்துநாதர் மோக்ஷத்துக்கு எழுந்தருளின திருநாள் ... 510

இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்கு முந்தின நவநாள்

முதல் நாள் : இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்கு முந்திச் செய்யவேண்டிய நவநாளும் இதற்கான முகாந்திரங்களும் 515
2-ம் நாள் : நவநாள் செய்யவேண்டிய விதம் 519
3-ம் நாள் : இன்றைக்கு வாசிக்குஞ் சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறதுபோல, இயேசுநாதரைப்பற்றி இஸ்பிரீத்து சாந்துவானவராலும் அப்போஸ்தலர்களாலுஞ் சொல்லப்பட்ட சாட்சி ... 523

4-ம் நாள் : அப்போஸ்தலர்களும் சீஷர்களும் செபத்துக்கு மாதிரிகையாயிருக்கிறார்கள் 527
5-ம் நாள் : துரோகியான யூதாசுக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்கிறார்கள் 532
6-ம் நாள் : இஸ்பிரீத்துசாந்துவின் வரங்கள் நமக்கு மகா அவசரம் என்பதின்பேரில் 536
7-ம் நாள் : முந்தின தியானத்தில் அடங்கிய விஷயங்களின் தொடர்ச்சி 540
8-ம் நாள் : இஸ்பிரீத்துசாந்துவானவர் எழுந்தருளி வருவதற்கு விசேஷ முகாந்திரங்கள் ... 544
9-ம் நாள் : இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்கு முந்தின நாளில் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் எழுந்தருளி வருகிறதற்குச் செய்ய வேண்டிய கிட்டின ஆயத்தம் 548

இஸ்பிரீத்துசாந்துவின் திருநாள்

ஞாயிறு : இஸ்பிரீத்துசாந்துவின் திருநாள்—இத்திருநாளுக்கடுத்த பரம இரகசியங்கள் ... 552
திங்கள் : இஸ்பிரீத்துசாந்து திருநாளின் பரம இரகசியமான விசேஷங்கள் 556
செவ்வாய் : இந்தத் திருநாளின் பரம இரகசியத்தில் இஸ்பிரீத்துசாந்துவானவர் உதவிக்கொண்ட அடையாளங்கள் 560
புதன் : அப்போஸ்தலர்களிடத்தில் இஸ்பிரீத்துசாந்துவினால் செய்யப்பட்ட அற்புதங்கள் ... 564
வியாழன் : அர்ச். இராயப்பர் செய்த முதல் பிரசங்கம் ... 569
வெள்ளி : முந்தின கிறிஸ்துவர்களிடத்தில் இஸ்பிரீத்துசாந்துவின் அநுக்கிரகத்தினால் உண்டான அற்புதமுள்ள பரிசுத்ததனம் 573
சனி : ஜனசமுதாயம் இஸ்பிரீத்துசாந்துவினால் அடைந்த அற்புதமுள்ள மாற்றம் ... 578

அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள்

ஞாயிறு : அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள்—அர்ச். தமதிரித்துவத்தின் மூன்றுட்கள் நமக்கு அளித்த உபகாரங்கள் 582
திங்கள் : அர்ச். தமதிரித்துவத்தோடு கிறீஸ்துவனுக்குண்டான சம்பந்தம் 586
செவ்வாய் : சிலுவை அடையாளத்தினால் நினைப்பூட்டித் தியானிக்கத்தகும் அர்ச். தமதிரித்துவத்தின் உபகாரங்கள் 590

இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு நவநாள் தியானம்

1-ம் நாள் : திரு இருதயப் பத்திக்குரிய பொருள் ... 594

தேவநற்கருணைத் திருநாள்

2-ம் நாள் : தேவநற்கருணை உண்டுபண்ணினதில் விளங்கின இயேசுநாதருடைய இருதய சிநேகம் ... 599
3-ம் நாள் : இயேசுநாதர் இருதயத்தின் பரிசுத்ததனம் ... 603
4-ம் நாள் : இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தாழ்ச்சி 607
5-ம் நாள் : இயேசுநாதருடைய திரு இருதயத்தின் கீழ்ப்படிதல் 612
6-ம் நாள் : இயேசுநாதர் திரு இருதயத்தின் சாந்தகுணம் 616
7-ம் நாள் : இயேசுநாதர் திரு இருதயத்தின் உதாரத்தனம் 621
8-ம் நாள் : இயேசுநாதர் திரு இருதயத்தின் ஆவல் ... 625
9-ம் நாள் : இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தயாளமும் இரக்கமும் 629

இயேசுநாதருடைய திரு இருதயத்தின் திருநாள்

தேவநற்கருணையிலே நம்மோடு வாசம்பண்ணும் இயேசுநாதருடைய திரு இருதயத்தின்மட்டில் நமக்குண்டான கடமைகள் ... 634

இடையில் சேரும் மாதத்தியானங்கள்

1 ஞான அபிவிர்த்தியின் முகாந்திரங்களும் அடையாளங்களும் வழிகளும் 638
2 இயேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றதும் அவருடைய பிரசித்தமான சீவியமும் 642
3 இயேசுநாதர் இஸ்பிரீத்துசாந்துவினால் வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்படுகிறார் ... 646
4 சுவிசேஷத்தில் குறிப்பாய்க் கூறியிருக்கிற மூன்று சோதனைகள் 650
5 சோதனைகளின்பேரில் பொதுத்தியானம்... ... 655
6 இயேசுநாதர் தமது முன்னோடியான ஸ்நாபக அருளப்பரால் வெளிப்படுத்தப்பட்டு மிகவும் பாராட்டப்படுகிறார் 659
7 இயேசுநாதர் சீஷர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறார் ... 664
8 இயேசுநாதர் நத்தானாயேலோடு சம்பாஷணை செய்தது 668
9 கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரிலே நடந்த கலியாணத்திற் செய்த முதலாவது புதுமையால் இயேசுநாதர் தம்மை வெளிப்படுத்துகிறார் 672
10 இயேசுநாதர் தமது தாயாரைவிட்டுப் பிரிந்துபோகிறார். தமது சீஷர்களுந் தம்மைப்போல் எல்லாத்தையும் விட்டுவிடக் கேட்கிறார் 677
11 தமது தேவ பிதாவினுடைய வீட்டின்பேரில் இயேசுநாதருக்குண்டான சுறுசுறுப்புள்ள பற்றுதல் ... 681
12 தேவ மகிமைப் பிரதாபத்தின்பேரிலுண்டான சுறுசுறுப்புள்ள பற்றுதல் 686
13 நீக்கோதேமென்பவர் இரவில் இயேசுநாதரைச் சந்திக்கப்போனது 690
14 ஸ்நாபக அருளப்பருடைய சீஷர்களின் காய்மகாரம் 694
15 ஆங்காரமும் அதினால் வரும் பொல்லாத வினைகளும்... 698
16 தாழ்ச்சி; அதின் சுபாவமும் அவசியமும் ... 702
17 தாழ்ச்சியென்கிற புண்ணியத்தின் நன்மைகளுங் குணங்களும் 707

18 நாம் தாழ்ச்சியை அடைந்து நம்மிடத்தில் அதை நிலைநிறுத்துவதற்கான விசேஷ உபாயங்கள் ... 711
19 இயேசுநாதர் சமாரித்தாளோடு செய்த சம்பாஷணை... 716
20 சிக்கார் பட்டணத்துக் குடிகளுடைய விசுவாசம் ... 729
21 கப்பர்நாவூமூரிலிருந்த ஒரு துரைமகனை அற்புதமாய்ச் சௌக்கியப்படுத்தினது 724
22 இயேசுநாதர் கப்பர்நாவூமூரில் வாசம்பண்ணினது ... 729
23 இயேசுநாதர் இராயப்பர் வீட்டில் தங்கியிருந்ததும் அவருடைய மாமியாரைச் சொஸ்தப்படுத்தினதும்... 733
24 இயேசுநாதர் செபத்தியானஞ் செய்வதற்காகப் பிறசிநேகத்துக்குந் தேவ சுறுசுறுப்புக்குமடுத்த அலுவலை நிறுத்துகிறார் 737
25 இயேசுநாதர் உலக காரியத்தின்பேரில் நாம் பற்றுதல் வையாதிருக்கக் கேட்கிறார் 741
26 இயேசுநாதரும் அவருடைய சீஷரும் புசலில் அகப்பட்டது 745
27 அர்ச். இராயப்பர் படகினால் குறிக்கப்பட்ட பற்பல அடையாளங்கள்... 749
28 இயேசுநாதர் ஜெராசெனிய நாட்டாரிடத்தில் தங்கியிருந்ததும் அவ்விடத்தில் பேய்பிடித்திருந்தவர்களைச் சொஸ்தமாக்கினதும் 754
29 இயேசுநாதர் கப்பர்நாவூமூருக்குத் திரும்பிவந்து ஒரு திமிர்வாதக்காரனைச் சொஸ்தப்படுத்தினது ... 758
30 அர்ச். மத்தேயூவை அப்போஸ்தலராகத் தெரிந்துகொண்டது 762
31 நமது தேவ அழைத்தலின் மேன்மை 767
32 இயேசுநாதர் ஜயீரென்பவனின் மகளை உயிர்ப்பித்தது 771
33 இயேசுநாதர் மூன்றுபேரை அற்புதமாய்க் குணமாக்கினது 775

598029

ஒவ்வொரு மாதத்தின் தலைவெள்ளிக்கிழமையில் செய்யத்தக்க தியானங்கள்

ஜனவரி: தலைவெள்ளிக்கிழமைக்குரிய பத்தியின்பேரில் ... 780

பெப்ரவரி: தேவநற்கருணையிலே நம்மோடு வாசம்பண்ணும் இயேசுநாதருடைய திரு இருதயத்தின்மட்டில் நமக்குண்டான கடமைகள் ... 634

மார்ச்சு: இயேசுநாதர் இருதயத்தின் பரிசுத்ததனம் ... 603

ஏப்பிரல்: இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தாழ்ச்சி 607

மே: இயேசுநாதர் திரு இருதயத்தின் ஆவல் 625

ஜூன்: இயேசுநாதருடைய திரு இருதயத்தின் தயாளமும் இரக்கமும் 629

மாத ஒடுக்கத்தில் செய்யத்தக்க தியானங்கள்

ஜனவரி: இந்த ஒடுக்கத்தை நன்றாய்ச் செய்வதற்கான முகாந்திரங்களும் வழிபாடுகளும் ... 786

பெப்ரவரி: நரகத்தின்பேரில் 321

மார்ச்சு: மரணத்தின்பேரில் 261

ஏப்பிரல்: பாவத்தினால் வந்த பொல்லாப்பின்பேரில் ... 203

மே: தீர்வையின்பேரில் 291

ஜூன்: பாவத்தால் வருஞ் சேதத்தின்பேரில் ... 231

மாதாந்தர ஆத்தும சோதனை செய்யவும் ஆத்தும கணக்குக் கொடுக்கவும் உதவியான மூவகைக் கேள்விகள் 791

நன்மை வாங்கும் நாட்களில் செய்யத்தக்க தியானங்கள்

1 தேவநற்கருணை வாங்க ஆயத்தம் 796

2 தேவநற்கருணையைப் பத்தியோடே வாங்குவதற்கான சுகிர்த உபாயங்கள் 801

3 கடைசி இராப்போசனம் 805

4 தேவநற்கருணை வாங்குகையில் இயேசுநாதர்சுவாமி நமக்குக் கொடுக்கிற விலையேறப்பெற்ற அச்சாரங்கள் 809

5 தேவநற்கருணையால் உண்டாகும் ஆச்சரியமான பலன்கள் 813

6 இயேசுநாதர் தேவநற்கருணை வழியாக நம்மிடத்தில் எழுந்தருளி வரும்போது, அவர் நம்மிடத்தில் செய்துவரும் ஆச்சரியமான புதுமைகள் 817

அநுபந்தத் தியானங்கள்

ஜப்பான் தேசத்து வேதசாட்சிகளான அர்ச். சின்னப்பர், அருளப்பர், இயாகப்பர் திருநாள் (பெப்ரவரி-௴ 5-ம் ௳) 822

முத்திப்பேறுபெற்ற தெ பிறித்தோ அருளானந்தர் (பெப்ரவரி-௴ 11-ம் ௳) 825

அர்ச். சூசையப்பர் திருநாள் (மார்ச்சு-௴ 19-ம் ௳) ... 829

அர்ச். ஆசீர்வாதப்பர் திருநாள் (மார்ச்சு-௴ 21-ம் ௳) ... 833

அர்ச். கன்னிமரியம்மாளுக்கு மங்களவார்த்தை சொன்ன திருநாள் (மார்ச்சு-௴ 25-ம் ௳) 839

அர்ச். பிராஞ்சீஸ்கு இயெரோணிமுஸ் திருநாள் (மே-௴ 11-ம் ௳) 843

அர்ச். இராசேந்திர அருளப்பர் திருநாள் (ஜூன்-௴ 16-ம் ௳) 847

அர்ச். ஞானப்பிரகாசியார் திருநாள் (ஜூன்-௴ 21-ம் ௳ ... 850

மூன்று நாள் ஒடுக்கத்தில் செய்யத்தக்க ஞான முயற்சிகள் 855